திருக்குறள்

தெளிவுரை

டாக்டர் நாவலர்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., டி. லிட்.

திருக்குறள்

நாவலர் தெளிவுரை

உரையாசிரியர் :

டாக்டர் **நாவலர் இரா. நெடுஞ்செழியன்**
எம்.ஏ., டி.லிட்.

வெளியீட்டாளர் :

நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை,

கே ரிசார்ட், எண். 1, டாக்டர் எம். டி. கே. குத்தாலிங்கம் சாலை,
கூனிமேடு (அஞ்சல்), ரங்கநாதபுரம், இ. சி. ஆர்., தமிழ்நாடு - 604 303.
Email : dr.nnet2000@gmail.com Mobile : 98409 05195

நூல் விவரம்

நூல் தலைப்பு		திருக்குறள் - நாவலர் தெளிவுரை
உரிமை		இரா. நெடுஞ்செழியன் மதிவாணன்
உரையாசிரியர்		டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., டி.லிட்.
வெளியீட்டாளர்		நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை
மொழி		தமிழ்
பதிப்பு எண்		முதற் பதிப்பு - 1991 ஐந்தாம் பதிப்பு - 2011 ஆறாம் பதிப்பு - 2021
புத்தக அளவு		14 x 21 செ.மீ
அச்சு எழுத்தின் அளவு	:	12 புள்ளிகள்
மொத்தப் பக்கங்கள்		688 + 40 = 728
நூலாக்கம்		ஸ்ரீ துர்க்கா பிரிண்டர்ஸ் கீழ்க்கட்டளை, சென்னை - 600 117
பொருள்		திருக்குறளுக்கான புதிய தெளிபொருள் விளக்கவுரை
விலை		700/-

ஆறாம் பதிப்பின் பதிப்புரை

"வள்ளுவர் நெறிக்கும், தமிழர் பண்பாட்டிற்கும் உலகியல் நடைமுறைக்கும், பகுத்து அறியும் ஆராய்ச்சி அறிவுக்கும் ஏற்ற முறையில், உண்மைப் பொருள் விளக்கம் காணும்பொருட்டு" மேற்கொண்ட முயற்சியின் விளைவே நாவலர் அவர்களின் இத்திருக்குறள் தெளிவுரை நூலாகும். இம்முயற்சிக்கு, நாவலரின் மாணவப் பருவந்தொட்டே அமைந்த, திருக்குறளிலான அவர்தம் ஆழ்ந்த புலமையும், ஈடுபாடும் அடிப்படையாக ஒளிர்வதாகும். திருக்குறள் உரையாசிரியர்கள் வரிசையில் இவ்வுரை, நாவலருக்குப் பெருமைமிகு இடத்தைப் பெற்றுத் தந்துள்ளதாகும். நாவலர் படைத்துள்ள அரிய ஆராய்ச்சி முன்னுரை இந்நூலுக்குரிய தனிச் சிறப்பாகும்.

இந்நூலின் முதற்பதிப்பு 1991ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றது. தமிழ் ஆர்வலர்கள் தொடர்ந்து வேண்டி வந்ததற்கிணங்க, இதன் ஆறாம் பதிப்பினை நாவலர் அவர்களின் நூற்றாண்டினைச் சிறப்பிக்கும் வகையில் வெளியிடப்படுகின்றது. இப்பதிப்பு முற்றிலும் புதிய அச்சுருக்கொண்டு அமைந்துள்ளதாகும். இந்நூலைச் சிறப்புற அச்சிட்டு அளித்த ஸ்ரீ துர்க்கா பிரிண்டர்ஸ் அச்சகத்திற்கு எம் நன்றி உரியவாகுக. தமிழ்கூறு நல்லுலகம் தொடர்ந்து இதனைப் போற்றிப் பயன்கொள்ளும் என நம்புகின்றோம்.

இரா. நெடுஞ்செழியன் மதிவாணன்
தலைவர், நாவலர் நெடுஞ்செழியன்
கல்வி அறக்கட்டளை

அக்டோபர் - 2021
சென்னை.

உள்ளுறை

பொருள்	பக்கம்
முன்னுரை	vi
அதிகார அகர வரிசை	XXXV
அறத்துப்பால்	1
பொருட்பால்	185
இன்பத்துப்பால்	531
திருக்குறள் முதற்குறிப்பு அகர வரிசை	673

முன்னுரை

திருக்குறள், தண்டமிழ் நாட்டில் தலைசிறந்து விளங்கிய, நன்னெறிச் சான்றோர்களில், அறிவிலும், ஆற்றலிலும், தகுதியிலும், திறமையிலும் நனி சிறந்து விளங்கிய சீரியோரான திருவள்ளுவப் பெருந்தகையாரால் இயற்றப்பட்டது. அது உலகம் உய்யும் பொருட்டு, உயர்நெறி காட்ட வந்த ஒரு பெரும் பொது அறநூலாகும்.

திருக்குறள் சிறப்பு

திருக்குறள், ஒரு குறிப்பிட்ட நாட்டினர்க்கோ, சமயத்தினர்க்கோ, இனத்தினர்க்கோ, வகுப்பினர்க்கோ, குழுவினர்க்கோ, நிறத்தினர்க்கோ, மொழியினர்க்கோ, இயக்கத்தினர்க்கோ உரிமையுடைய ஒரு நூல் அன்று. அது, உலகம் தழுவிய மக்கள் எல்லோராலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளத்தக்கதாய்ப், போற்றுவதற்குரியதாய்ப், பின்பற்றத் தக்கதாய் அமைந்த பெற்றியினையுடையதாகும்.

திருக்குறள், உலக மக்கள் அனைவர்க்கும் பொதுப்படையாக அமைந்த 'பொது நூல்' என்று பெயர்பெற்றது. உலகோர் போற்றிப் புகழுவதற்குரிய 'பொதுமறை நூல்' என்னும் பெருமையுடையது. மக்களின் வாழ்வியலைப்பற்றிக் கூற வந்த 'வாழ்வியல் நூல்' என்னும் சிறப்புடையது. எல்லா மக்களுக்கும் வாழ்க்கை வழிகாட்டியாகத் திகழக்கூடிய 'வாழ்க்கை வழிகாட்டி நூல்' என்னும் பெருமை பெற்றது. மக்கள் அனைவர்க்கும் அறநெறி கூறவந்த 'அறநெறி நூல்' என்னும் புகழ்பெற்றது. எல்லார்க்கும் அன்புநெறியை அறிவுறுத்த வந்த 'அன்பு நெறி நூல்' என்னும் சிறப்புப்பெற்றது. மக்கள் பலர்க்கும் நீதி நெறிமுறைகளைத் தெளிவுபடுத்த வந்த 'நீதிநூல்' என்னும் பெருமைக்குரியது. உலகோர்க்குப் பண்பாடுகளைப் புகட்ட வந்த 'பண்பாட்டு நூல்' என்னும் பெயர்பெற்றது. அனைவர்க்கும் பொருளியல் விளக்கம் தரவந்த 'பொருளியல் நெறி நூல்' என்னும் சிறப்புக்குரியது. நாட்டு மக்கள் அனைவர்க்கும் அரசியல் நெறிமுறைகளை அறிவுறுத்த வந்த, 'அரசியல் நெறிநூல்' என்னும் பெருமை வாய்ந்தது. உலகோர்க்கு ஒழுக்க மேம்பாடுகளைக் கற்பிக்க வந்த 'ஒழுக்க நூல்' என்னும் புகழ் வாய்ந்தது. மக்களுக்கு இன்பவியலைப் பற்றிக் கூறவந்த 'இன்பவியல் நெறிநூல்' என்னும் சிறப்புப் பெற்றது. அறிஞர் பெருமக்களால் என்றும் அழியாச் சிறந்த இலக்கியமாகப் புகழுவதற்குரிய 'பேரிலக்கிய நூல்' என்னும் பெருமை வாய்ந்தது.

தமிழகம் வள்ளுவப் பெருந்தகையாரைப் பெற்றெடுத்து, உலகத்திற்கே தந்தது என்றும், அந்தச் செயலுக்குக் கைம்மாறாக வான்புகழைத் தமிழகம் உலகத்திடமிருந்து பெற்றுக்கொண்டது என்றும், புதுமைக்கவிஞர் பாரதியார் பெரிதும் வியந்து, "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாடியுள்ளார்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள், "தெள்ளுதமிழ் நடை சின்னஞ்சிறிய இரண்டடிகள், அள்ளு தொறுஞ்சுவை உள்ளு தொறும் உணர்வாகும் வண்ணம், கொள்ளும் அறம்-பொருள்- இன்பம் அனைத்தும் கொடுத்த திருவள்ளுவனைப் பெற்ற தாற்பெற்ற தேபுகழ் வையகமே!" என்று புகழ்ந்துரைத்துள்ளார்.

சங்ககாலத் தமிழ் இலக்கிய நூல்கள் எல்லாம், ஆசிரியப் பாக்களாலும், வஞ்சிப்பாக்களாலும், கலிப்பாக்களாலும், பரிபாடலாலும், நேரிசை, இன்னிசை, பாஃறொடை வெண்பாக்களாலும் விரிந்தும், பரந்தும், நெடியனவாக நீண்டும் திகழ்வனவாகும். ஆனால், திருக்குறளோ மிகச் சுருங்கிய அளவில், ஏழு சீர்களைக் கொண்டதாக, ஒன்றேமுக்கால் அடியில் விளங்கும் குறட்பாக்களையே கொண்ட தாகும். படிப்போர் உள்ளத்தில் ஒவ்வொரு குறளின் சொல்லும், பொருளும், அவற்றின் சுவையும், பயனும் எளிதாக, என்றென்றும் படிய வேண்டும் என்ற சீரிய குறிக்கோளுடன்தான், வள்ளுவப் பெருந்தகையார், திருக்குறளைக் குறள் வெண்பாவினாலேயே இயற்றித் தந்துள்ளார்.

'திரு' என்ற சொல் தமிழில் பத்தொன்பது வகையான பொருள்களை உணர்த்தும் சிறந்த ஒரு சொல்லாகும் என்பர். பத்தொன்பது வகையான சிறந்த பண்புகளையும் உள்ளடக்கிய அடைமொழியைப் பிற்காலத்தவர் குறளுக்கு இட்டிருப்பதற்குக் காரணமே, அதன் தன்னேரில்லாத் தனிச்சிறப்புக் கருதியேயாகும். திருக்குறளுக்கு முதலில் 'முப்பால்' என்ற பெயரும், பின்னரே 'அறம்', 'திருக்குறள்', 'பொதுமறை', 'பொய்யாமொழி' போன்ற பெயர்களும் ஏற்படலாயின என்று ஆராய்ச்சி அறிஞர்கள் கூறியுள்ளனர்.

திருக்குறளின் அமைப்பு

குறளாசிரியரின் இயற்பெயரும், நூலின் இயற்பெயரும் திட்டவட்டமாகவும், தெளிவாகவும், ஐயப்பாட்டிற்கு இடமில்லாமலும் தெரியக்கூடவில்லை என்றாலும், 'திருவள்ளுவர்' என்பதுதான் நூலாசிரியரின் பெயர் என்பதும், 'திருக்குறள்' என்பதுதான் நூலின்

பெயர் என்பதும், வழிவழித் தலைமுறையாகக் கூறப்பட்டு வந்திருப்பதனால், அந்தப் பெயர்களை அடிப்படையாகக் கொண்டுதான் குறளின் உண்மையான பொருளைக் கண்டறிய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திருக்குறளில் காணப்படும் 3 பால்கள், 9 இயல்கள், 133 அதிகாரங்கள், ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பத்துப்பத்து குறட்பாக்கள் என்ற பகுப்பு முறையையும், அமைப்பு முறையையும் திருவள்ளுவரே வகுத்துத் தந்திருக்க இயலாது என்ற கருத்தினைப் பல ஆராய்ச்சி வல்லுநர்கள், தெள்ளத்தெளிவாகக் காரணகாரிய விளக்கங்களோடு அறுதியிட்டு உறுதியாகக் கூறியுள்ளனர். அந்தக் கருத்துதான் பகுத்து அறிந்து ஆராயும் அறிவுடையோர் பலராலும் ஒப்பமுடிந்த ஒரு கருத்தாகவும் இருந்துவருகிறது.

சங்க காலத்தில் எழுந்த நூல்களுள், தொல்காப்பிய இலக்கண நூலைத் தவிர்த்து ஏனைய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் ஆகிய அனைத்தும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகு வெவ்வேறு காலக்கட்டங்களில் சில பெரும் புலவர்களின் அரும் முயற்சியால் தொகுக்கப்பட்ட நூல்களேயாகும். சங்க காலத்தைச் சார்ந்த சான்றோர் பலர், பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு சூழ்நிலைகளை ஒட்டி, அவ்வப்போது, இயற்றி வைத்துவிட்டுச் சென்ற செய்யுட்களில் அழிந்து சிதைந்தன போக, மறைந்து ஒழிந்தன போக, கண்ணிற்படாமல் காணாமற் போனவை போக, எஞ்சியிருந்தனவற்றை மட்டும் தொகுக்கும் முயற்சியில், சில சான்றோர்கள் ஈடுபட்டதன் காரணமாகத்தான் தொகை நூல்கள் அனைத்தும், நமக்குப் பெறற்கரிய இலக்கியக் கருவூலங்களாகப் பெறப்பட்டுப் பயன்பட்டு வருகின்றன.

அவ்வாறு தொகை நூல்கள் தொகுக்கப்பட்ட காலப்பகுதியில் தான், திருவள்ளுவரால் இயற்றப்பட்டு, அவரால் வழங்கப்பட்டு, விட்டுச்சென்ற குறட்பாக்களில் எஞ்சி நின்ற 1330 குறட்பாக்களை யாரோ ஒரு பெரும் புலவர் பெரிதும் முயன்று தொகுத்துள்ளார் என்று கொள்ள வேண்டியிருக்கிறது. பால், இயல் ஆகியவற்றின் பகுப்பு - அமைப்பு முறையும், குறட்பாக்களின் பகுப்பு - அமைப்பு முறையும், உரையாசிரியருக்கு உரையாசிரியர், வேறுபட்டு விளங்குவதைக்கொண்டே, இந்தப் பகுப்பு - அமைப்பு முறைகளை வள்ளுவரே செய்திருக்க முடியாது என்ற முடிவுக்கு வரவேண்டிய இன்றியமையாமை ஏற்படுகிறது.

திருவள்ளுவர் இயற்றிய குறட்பாக்களுக்கு எப்படியோ ஒருவிதக் கட்டுக்கோப்பான அமைப்பு, எல்லாரும் ஒரு படியாகப் பயன்படுத்தத்தக்க முறையில் வேண்டப்படுகின்ற காரணத்தினாலும், பரிமேலழகர் உருவாக்கித் தந்துள்ள கட்டுக்கோப்பான அமைப்பு நிலைபெற்ற ஒன்றாக நின்று நிலைத்து வருவதன் காரணத்தினாலும், பரிமேலழகரால் வடிவமைப்புக் கொடுக்கப்பட்டுள்ள திருக்குறளை, அவரது உரைவளம் முழுவதையும் அப்படியே ஏற்றுக்கொள்ள இயலாவிட்டாலும், வடிவமைப்பு என்ற அளவில் மட்டும் ஏற்றுக்கொண்டு, ஒவ்வொரு குறளுக்கும் உண்மையான, தெளிவான, திட்பமான பொருள் உரையைக் கண்டறிவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கின்றது.

உரையாசிரியர்கள்

திருக்குறள் தோன்றி ஆயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னர் தோன்றிய அதன் உரைகள்தாம் நமக்குக் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. தொல்காப்பிய இலக்கண நூலுக்கும், சங்க இலக்கியங்களுக்கும் உரையாசிரியர்கள் தோன்றிய காலக் கட்டங்களில்தான் திருக்குறளுக்கும் உரையாசிரியர்கள் தோன்றி யிருக்கக்கூடும். இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் திருக்குறளுக்கு என்று உரையாசிரியர்கள் தோன்றினார்களா? அவர்கள் உரை ஏதும் எழுதினார்களா? என்று அறிந்து கொள்ளுவதற்கான வரலாற்றுக் குறிப்புகள் எவையும் இன்றைய நிலையில் கிடைக்கப்பெறவில்லை.

திருக்குறளுக்கு உரை எழுதிய பழம்பெரும் உரையாசிரியர்கள் பத்துப்பேர்கள் ஆவார்கள் என்று ஆராச்சியாளர்கள் கூறுகின்றனர். அவர்கள் தருமர், மணக்குடவர், தாமத்தத்தர், நச்சர், பருதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காலிங்கர், பரிமேலழகர் ஆகிய பத்துப்பேர்கள் என்றும், அவர்களின் உரைகளில் மணக்குடவர், பருதி, பரிப்பெருமாள், காலிங்கர், பரிமேலழகர் ஆகிய ஐவருடைய உரைகளைத்தவிர, ஏனையோர் உரைகள் எவையும் கிடைக்கப் பெறவில்லை என்றும் கூறுகின்றனர்.

அதற்குப்பின்னர் எழுந்த சோமேசர் முதுமொழி வெண்பா, முருகேசர் முதுநெறி வெண்பா, சிவசிவ வெண்பா, இரங்கேச வெண்பா, வடமலை வெண்பா போன்ற 21 வெண்பா நூல்களையும் குறளுக்குச் செய்யுள் வடிவில் எழுதப்பட்ட உரைகளாகக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

கி.பி. 18, 19, 20-ஆம் நூற்றாண்டுகளில், பல்வேறு தமிழ் அறிஞர் பெருமக்கள், திருக்குறளுக்குத் தனித்தனியாகப் பழைய உரைகளை அப்படியே தழுவி உரையெழுதியிருக்கின்றனர்; சிலர் சிற்சில குறட்பாக்களைப் பொறுத்துப் பழைய உரைகளை மறுத்தும், அவற்றை மாற்றி அமைத்தும், அவற்றிற்குப் புத்தம் புதிய உரைகளைத் தந்துமிருக்கின்றனர்; சிலர் பகுத்தறியும் ஆராய்ச்சி அறிவுக்கு ஏற்புடைத்தான முறையில், உண்மைப் பொருள் உரையைக் கண்டறிந்து, தெளிவான - திட்பமான முறையில், உலகியல் வாழ்க்கை நெறிக்கு ஒப்பமுடிந்த வகையில், திருக்குறளுக்கான உரையை வழங்கியுள்ளார்கள்.

பரிமேலழகர்

திருக்குறளுக்கு எழுதப்பட்ட பழம்பெரும் உரைகளில், பலராலும் தொடர்ந்து பயிலப்பட்டு வருகின்ற உரை, பரிமேலழகர் உரையாகவே இருந்து வருகின்றது. திருக்குறளின் பழம்பெரும் உரையாசிரியர்களுள், பரிமேலழகரே, காலத்தால் இறுதியாகத் தோன்றியவர் என்றும், கி.பி.13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார் என்றும் ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுகின்றனர். அவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது அவரது பெயராலும், காஞ்சிபுரம் வரதராசப்பெருமாள் கோவிலிலுள்ள கல்வெட்டு ஒன்றில் காணப்படும் குறிப்புகளின் வாயிலாகவும், அவரது குறளுரைகளில் வைணவக் கருத்துக்கள் ஆங்காங்கு ஆதிக்கம்பெற்று முதன்மையுற்று மிளிர்வதன் மூலமும் அறிந்துகொள்ள இயலுவதாகின்றது.

பரிமேலழகர், தமிழ்மொழியின் இலக்கிய இலக்கண நூல்களையும், வடமொழியின் இலக்கிய இலக்கண நூல்களையும் ஐயந்திரிபு அற முற்றும் தெளிவுறக் கற்றறிந்தவர் என்பதை அவரது உரையின் வளத்தால் நன்கு அறிந்துகொள்ளலாம். அவர் தமது உரையில் 230-க்கும் மேற்பட்ட இலக்கிய, இலக்கணச் செய்யுள்களை மேற்கோள்களாகக் காட்டுகிறார் என்றால், அவரது தமிழ் இலக்கிய, இலக்கணப் புலமை தெளிவாக உணரப்படும். ஒவ்வொரு குறளுரையிலும் அவர் இலக்கண அமைதியைச் செம்மையுறக் கூறிச்செல்லும் பாங்கு தனிச் சிறப்புடையதாகும்.

அதோடு மட்டுமல்லாமல், அவர் சமயவியல், தருக்கவியல், அரசியல், பொருளியல், மருத்துவஇயல், உளவியல், இசையியல் போன்ற துறைகளிலும் தேர்ந்த அறிவு பெற்று விளங்கியிருந்திருக்கிறார் என்பதும் பல உரை விளக்கங்களிலிருந்து தெளிவாகப் புலனாகின்றது.

பரிமேலழகரின் உரையின் தன்மை

பரிமேலழகர், குறட்பாக்களின் உண்மைப் பொருள் விளக்கத்திற்கு எந்த வகையிலும் பொருந்தாத முறையில் சிற்சில கருத்துக்களை ஆங்காங்குக் கூறியிருந்தாலும், இலக்கிய நயம் மிளிரப், பொருள் ஆழம் தோன்றக், காரண காரிய விளக்கம் ஒளிர, இலக்கண நுட்பம் தெளிவுறப், பற்பல குறட்பாக்களைப் பொறுத்து அவர் எடுத்துக்கூறியுள்ள கருத்துக்கள் மிகவும் சிறப்புடையனவாகும். பரிமேலழகரது உரைக்கு முன்னால் சில பழம்பெரும் உரைகள்கூட நிற்கமுடியாமல் போய்விட்டன; அவற்றில் சில மறைந்தொழிந்தன; சில வழக்காறு அற்றுப் போயின; சில பெருமை பெற முடியாமல் இருக்கின்றன.

என்றாலும், மதியின் கண் மறு இருப்பதுபோல, பரிமேலழகரின் வடமொழி நூலாரின் கொள்கைப்பற்றும், வைணவ சமயப்பற்றும், வர்ணாச்சிரம சனாதன தருமப்பற்றும் சார்ந்த கருத்துக்கள், வள்ளுவர் வற்புறுத்திய சான்றோர் மரபுகளுக்கும், பொதுப் பண்பாட்டிய லுக்கும், உலகியலுக்கும், உண்மையியலுக்கும், பொது அறத்திற்கும் முரண்பாடான முறையில் அவரால், உரையின் சிற்சில பகுதிகளில் வேண்டுமென்றே திணிக்கப்பட்டிருக்கின்றன என்பது மட்டும் உண்மை.

மேற்கண்ட காரணம் பற்றித்தான், பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்கள், "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்கு உணர" வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர் குறிப்பிட்டுள்ள மறு என்பது, பரிமேலழகர் தம் உரையில் புகுத்தியுள்ள, எவராலும் ஒப்புக்கொள்ள இயலாத, வட நூலாரின் சில கொள்கைகளைப் பற்றியதாகும். பரிமேலழகரால் புகுத்தப்பட்ட மாசுவும், மறுவும் அறவே நீக்கப்பட வேண்டும் என்பதுதான் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களின் பேராவலாகும். அந்த மறுவை நீக்கிவிட்டுத் திருக்குறளின் மெய்ப்பொருளைக் காணும் முயற்சியே இந்த உரை விளக்கப் படைப்பின் முக்கிய நோக்கமாகும்.

உரைகளில் மாறுபாடும் வேறுபாடும்

திருக்குறளுக்குப் பொருள் விளக்கம் கூற முயன்ற உரையாசிரியர்கள் பலரும், தத்தம் உரைகளில் ஒருவருக்கொருவர் மாறுபட்ட பொருள்களையும், வேறுபட்ட கருத்துக்களையும் சிற்சில குறட்பாக்களைப் பொறுத்துக் கூறியிருக்கின்றனர். அவரவர்

அறிவுக்கும், உணர்வுக்கும் பொருத்தமானவை எனப்படுகின்ற பொருள்களையும், கருத்துக்களையும் வழங்கியிருக்கின்றனர். அதே முறையில்தான் நானும் இந்நூலில், என்னுடைய அறிவுக்கும், உணர்வுக்கும் பொருத்தமானவை என்று படுகின்ற பொருள்களையும், கருத்துக்களையும் வழங்கியுள்ளேன். திருக்குறளுக்கு உரைகள் பல உள என்றாலும், அவற்றையெல்லாம் முறைப்படி ஆராய்ந்து, வள்ளுவரின் உள்ளக்கிடக்கையைத் தெளிவாகக் கூறுகின்ற உரையினைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டியது படிப்போரின் நீங்காக் கடமையாகும்.

பரிமேலழகர், பிற பழைய உரையாசிரியர்களின் கருத்திலிருந்து மாறுபட்டு நின்று, உரை கூறியுள்ளார். அவற்றில் சில வருமாறு:

"அஃது உரையன்று என்பதற்குப் பாடமே கரியாயிற்று."

- (பரி. உரை: கு.208)

"பிறரெல்லாம் இதனை உயிரெச்சம் எனப் பாடம் திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்."

- (பரி. உரை: கு.501)

"அவர், உடன் என்பதனை முற்றும்மைப் பொருட்டாக்கியும், குடி என்பதனை ஆகு பெயராக்கியும் இடர்ப்படுப."

- (பரி. உரை: கு.632)

"மாறு கொள உரைத்தார்."

- (பரி. உரை: கு.817)

"பொருட்டொடர்பு படாமல் உரைத்தார்."

- (பரி. உரை: கு.870)

"ஓர் பொருட் சிறப்பில்லாமை அறிக."

- (பரி. உரை: கு.1043)

"அவ்வுரைதானே அக்கூடாமைக்குக் கரியாயிற்று."

- (பரி. உரை: கு.1268)

பிற உரையாசிரியர்களின் கருத்திலிருந்து தாம் வேறுபட்டு நிற்பதையும் பரிமேலழகர் கூறுகிறார். அவற்றில் சில வருமாறு:

"இதனைப் பூமேல் நடந்தான் என்பதோர் பெயர் பற்றிப் பிறிதோர் கடவுட்கு ஏற்றுவாரும் உளர்."

- (பரி. உரை: கு.3)

"அறவாழி என்பதைத் தரும சக்கரமாக்கி, அதனையுடைய அந்தணன் என்று உரைப்பாரும் உளர்."

- (பரி. உரை: கு.8)

''அணிமாயை முதலாக உடையன எனவும், கடையிலா அறிவை முதலாகவுடையன எனவும் உரைப்பாரும் உளர்.''

- (பரி. உரை: கு.9)

''விருந்து இன்றியே ஒருகால் தான் உண்டலைச் சாவா மருந்து என்பார் உளர்.''

- (பரி. உரை: கு.82)

''செய்யாமைச் செய்த உதவி என்று பாடம் ஓதி மறித்து உதவ மாட்டாமையுள்ள இடத்துச் செய்த உதவி என்று உரைப்பாரும் உளர்.''

- (பரி. உரை: கு.101)

மேலே எடுத்துக்காட்டாகச் சுட்டிக்காட்டியிருப்பதைப் போன்று, மொத்தத்தில் 96 குறட்பாக்களுக்கான உரைகளில், பிற உரையாசிரியர்களின் கருத்துக்களை ஏற்காமல், பரிமேலழகர் மாறுபட்டும் வேறுபட்டும் நின்று, தமக்கு ஏற்புடையதாகத் தோன்றுகின்ற கருத்தின் வழிச்சென்று, குறள்களுக்கு உரை எழுதியுள்ளார்.

பரிமேலழகரைப் போன்றே, அவருக்குப் பின்னால் மிக அண்மைக் காலத்தில் வந்த உரையாசிரியர்கள், பற்பல குறளுரைகளைப் பொறுத்து அவரோடு ஒத்த கருத்துடையவர்களாக இருந்தாலும், சிலர் சிற்சில குறள்களைப் பொறுத்து, அவரிடமிருந்து மாறுபட்டும், வேறுபட்டும் நின்று, தத்தமக்கு ஏற்புடையதாகத் தோன்றுகின்ற கருத்தின் வழியிற் சென்று, குறள்களுக்கு உரைகள் எழுதியுள்ளார்கள். அவர்களில் குறிப்பாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பன்மொழிப்புலவர் கா.அப்பாத் துரையார், புலவர் குழந்தை, தேவநேயப் பாவாணர், புலவர் ச.கு.ஆதித்தர், சிந்தனைச் செம்மல் கு.ச.ஆனந்தன் போன்றோர் வள்ளுவப் பெருந்தகையாரின் உள்ளக்கிடக்கையை உள்ளவாறு அறிந்து, இயல்பான உலகியல் நெறிமுறைக்கு முரண்படாத வகையில், குறட்பாக்களுக்கு மெய்ப்பொருள் காணும் நோக்கோடு, உரைகள் கண்டு எழுதியிருக்கின்றனர். அந்த உரைகளின் சிறப்பான நோக்கத்தையும், கருத்துக்களையும் மனத்தில் கொண்டுதான் நானும், குறளின் உண்மைப் பொருளை நிலைநாட்டும் குறிக்கோளோடு, இந்தப் புதிய உரை விளக்க நூலை வெளிக்கொண்டு வர முற்பட்டுள்ளேன்.

மேலை, கீழை நாடுகளில் தமிழ்ப்பற்றுள்ள அறிஞர்கள் பலரும் தத்தம் மொழிகளில் திருக்குறளை மொழிபெயர்த்து, அவற்றிற்குச்

சுருக்கமான முறையில் உரைகள் சில எழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

வள்ளுவரின் கோட்பாடுகளுக்கு மாறுபாடான கருத்துக்கள்

வள்ளுவர் கோட்பாடுகளுக்கு முற்றிலும் மாறுபாடான கருத்துக்கள் சிலவற்றைப் பரிமேலழகர், தம் உரையில் புகுத்தியுள்ளார் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளைச் சுட்டிக்காட்ட இயலும்.

பரிமேலழகர், திருக்குறளுக்கு உரை எழுதத் துவங்கும்போதே, எடுத்த எடுப்பிலேயே,

"அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கிய ஒழித்தலும் ஆம்"

என்றும்,

"ஒழுக்கமாவது, அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளினின்று, அவ்வவற்றிற்கோதிய அறங்களில் வழுவாது ஒழுகுதல்"

என்றும்,

"அதுதான் (அவ்வொழுக்கம்) நால்வகை நிலைத்தாய் வருணந் தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பு இயல்புகள் ஒழித்து, எல்லோர்க்கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி இல்லறம், துறவறம் என இருவகை நிலையால் கூறப்பட்டது"

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வடமொழியாளராகிய மனு, தமது சாத்திரத்தில் கூறுகின்ற 'தருமம்' என்பது வேறு; வள்ளுவப் பெருந்தகையார் திருக்குறளில் கூறுகின்ற 'அறம்" என்பது வேறு. மனுவின்படி, மனிதகுலம் நான்கு வருணத்தாராகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வருணத்திற்கும் ஒவ்வொரு வகையான சட்ட விதியின் கீழ் நீதி கூறும் தன்மையதே 'தருமம்' ஆகும். ஆனால், வள்ளுவரின் கருத்துப்படி, மனிதகுலம் அனைத்திற்கும் அன்புநெறி, அருள்நெறி, அறிவுநெறி, பண்புநெறி, ஒழுக்க நெறி போன்றவற்றின் கீழ் விதிக்கப்பட்ட கடமையைக் கூறும் தன்மையதே 'அறம்' ஆகும்.

(1) எல்லா மக்களுக்கும் பிறப்பு என்பது ஒரே தன்மையதாகத் தான் அமையும்; பிறப்பைப் பொறுத்து ஏற்றத்தாழ்வு இல்லை என்னும் கருத்துப்பட,

"பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்" (குறள்:972)

என்று கூறுவது வள்ளுவரின் அறம் ஆகும். ஆனால்,

"பிராமணன் முதல் வருணத்தான் ஆனதாலும், பிரமாவின் முகமாகிய உயர்ந்த இடத்தில் பிறந்ததனாலும், எல்லா வருணத்தாருடைய பொருள்களையும் தானம் வாங்குவதற்குரிய தலைவனாகிறான்."

- (மனு த.சா.அ.1 சு.100)

என்றும்,

"சூத்திரன் பிராமணர்களைத் திட்டினால், அவன் தாழ்ந்த இடமான காலில் பிறந்தவனாகையால், அவன் நாக்கை அறுக்க வேண்டும்."

- (மனு த.சா.அ.8 சு.270)

என்றும்,

"பிராமணனுக்கு மங்கலத்தையும், சத்திரியனுக்கு வலுவையும், வைசியனுக்குப் பொருளையும், சூத்திரனுக்குத் தாழ்வையும் காட்டுகிற பெயரை இட வேண்டும்"

- (மனு த.சா.அ.2 சு.31)

என்றும் கூறுவது மனுவின் தருமம் ஆகும்.

(2) கல்லாதவர்கள் உயர்ந்த குடியில் பிறந்தவராக இருந்தாலும், தாழ்ந்த குடியில் பிறந்த கற்றவர்களைப் போலப் பெருமை யுடையவராகக் கருதப்பட மாட்டார்கள் என்னும் கருத்துப்பட, "மேல்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும், கற்றார் அனைத்திலர் பாடு" (குறள்:409) என்று கூறுவது வள்ளுவரின் அறம் ஆகும். ஆனால்,

"பிராமணர் இந்த மனு நூலைப் படிக்கலாம்; மற்ற வருணத்தார்க்கு ஓதுவிக்கக்கூடாது"

- (மனு த.சா.அ.1 சு.103)

என்றும்,

"சூத்திரன் பக்கத்தில் இருக்கும் போது, வேதம் ஓதக்கூடாது"

- (மனு த.சா.அ.1 சு.99)

என்றும் கூறுவது மனுவின் தருமம் ஆகும்.

'வேதத்தை கேட்கிற சூத்திரனது காதுகளில் ஈயத்தையும், மெழுகையும் உருக்கிவிட வேண்டும். வேதத்தைச் சொல்லுகிற சூத்திரனது நாக்கை அறுத்தெறிய வேண்டும்; பொருளை உணர்ந்து வைத்திருக்கிற நெஞ்சைப் பிளக்க வேண்டும்''

- (வேதம்)

என்பது மனு ஆதரிக்கின்ற பிற நூலாகிய வேதத்தின் தருமம் ஆகும்.

(3) ஒருவர் தாம் தேடிய பொருளைப் பிறர்க்குக் கொடுக்காமல், தாம் மட்டும் தனியாக இருந்து உண்ணுதல் என்பது, வறுமையால் இரத்தலைக்காட்டிலும் கொடிது ஆகும் என்னும் கருத்துப்பட, ''இரத்தலின் இன்னாதது மன்ற நிரப்பிய தாமே தமியர் உணல்'' (குறள்:229) என்று கூறுவது வள்ளுவரின் அறம் ஆகும்.

ஆனால்,

''சூத்திரனுக்கு மிஞ்சிய சோற்றையும், ஓமம் பண்ணிய மிச்சத்தையுங்கூடக் கொடுக்கலாகாது''

- (மனு த.சா.அ.4 சு.80)

என்று கூறுவது மனுவின் தருமம் ஆகும்.

(4) பசுவின் நாவறட்சியைப் போக்க, நீர் தாரீர் என்று பிறரை நோக்கி இரந்து கேட்டாலும், அப்படி இரத்தலைவிட இழிவான செயல் வேறொன்றும் இல்லை என்னும் கருத்துப்பட, ''ஆவிற்கு நீர் என்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளி வந்தது இல்'' (குறள்:1066) என்பது வள்ளுவரின் அறம் ஆகும்.

ஆனால்,

''பிராமணர் நாள்தோறும் பிச்சைக்காக ஊருக்குள் புகுந்து சுற்றிவர வேண்டும்''

- (மனு த.சா.அ.6 சு.43)

என்பது மனுவின் தருமம் ஆகும்.

(5) உலகத்தார், பல தொழில்களைச் செய்து பார்த்து, அலைந்து திரிந்து சுழன்று வந்தாலும், இறுதியில், ஏர்த்தொழிலின் பின்னேதான் நிற்க வேண்டியிருக்கிறது; அதனால், எவ்வளவு துன்பமுற்றாலும் உழவுத் தொழில்தான் தலைசிறந்த தொழிலாகத் திகழ்கின்றது என்னும் கருத்துப்பட, ''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால், உழந்தும் உழவே தலை'' (குறள்:1031) என்று கூறுவது வள்ளுவரின் அறம் ஆகும்.

ஆனால்,

"பயிர்த்தொழில் நல்ல தொழில் என்று நினைக்கிறார்கள். அந்தத் தொழில் பெரியோர்களால் மிகவும் இகழப் பட்டதாகும்"

- (மனு த.சா.அ.10 சு.84)

என்று கூறுவது மனுவின் தருமம் ஆகும்.

(6) ஒருவன் எப்பொழுதும் பொய் சொல்லாமல் இருப்பானே யானால், அவன் வேறு அறங்களைக்கூட எப்பொழுதும் செய்ய வேண்டியதில்லை; அதுவே எல்லா அறங்களின் பயனையும் தரும் என்னும் கருத்துப்பட, "பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற, செய்யாமை, செய்யாமை நன்று" (குறள்:297) என்று கூறுவது வள்ளுவரின் அறம் ஆகும்.

ஆனால்,

"பல மனைவிகளையுடையவன் அவர்களின் புணர்ச்சிக்காகவும், பசு மாடுகளின் புல்லுக்காகவும், பிராமணரைக் காப்பாற்றவும் பொய் சொன்னால் குற்றமில்லை"

- (மனு த.சா.அ.8 சு.112)

என்று கூறுவது மனுவின் தருமம் ஆகும்.

(7) உயிர்களைக் கொன்றும், நெய் முதலிய பொருள்களைச் சொரிந்தும் ஆயிரம் வேள்விகளைச் செய்வதைவிட, ஓர் உயிரின் உயிரைப் போக்கி, அதன் ஊனை உண்ணாமல் இருத்தல் நல்லது ஆகும் என்னும் கருத்துப்பட, "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன், உயிர்செகுத்து உண்ணாமை நன்று" (குறள்:259) என்று கூறுவது வள்ளுவரின் அறம் ஆகும்.

ஆனால்,

"ஒரு பிராமணன், தன்னைப் புலால் உண்ண வேண்டும் என்று பிறர் கேட்டுக்கொள்ளும் போதும், விதிப்படி சிரார்த்தத்தில் வரிக்கப்பட்ட போதும் கொல்லப்பட்ட விலங்குகளின் இறைச்சியை உண்ணலாம்"

என்றும்,

"அஜீ கர்த்தர் என்னும் முனிவர் நூறு பசுக்களை வாங்கிக்கொன்று வேள்வி செய்து, தமது பசியைத் தீர்த்துக் கொண்டார். அப்படிச் செய்தும் அவருக்குப் பாவம் நேரிடவில்லை"

- (மனு த.சா.அ.10 சு.105)

என்றும் கூறுவது மனுவின் தருமம் ஆகும்.

(8) கொலையின் மூலம் நன்மையாக ஆகின்ற ஆக்கமானது பெரிதாக இருந்தாலும், சிறந்த சான்றோர்களால் அப்படிப்பட்ட ஆக்கமானது மிக இழிவானதாகவே கருதப்படும் என்னும் கருத்துப்பட, "நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும் சான்றோர்க்குக் கொன்று ஆகும் ஆக்கம் கடை" (குறள்:328) என்று கூறுவது வள்ளுவரின் அறம் ஆகும்.

ஆனால்,

"உண்ணத்தக்க உயிர்களை நாள்தோறும் கொன்று உண்டாலும், பாவத்தைப் பிராமணன் அடையமாட்டான். பிரமனாலேயே உண்ணத்தக்கவையும், கொல்லத் தக்கவையும் படைக்கப்பட்டிருக்கின்றன"

- (மனு த.சா.அ.5 சு.30)

என்று கூறுவது மனுவின் தருமம் ஆகும்.

(9) எந்த ஒரு பொருளைப் பற்றி, எவரெவர் என்ன சொல்லக் கேட்டாலும், கேட்டவாறு அப்படியே அதனை ஏற்றுக்கொண்டு விடாமல், அந்தப் பொருளினுடைய உண்மையான பொருளைக் கண்டறிவதே அறிவுடைமையாகும் என்னும் கருத்துப்பட, "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள்:423) என்று கூறுவது வள்ளுவரின் அறம் ஆகும்.

ஆனால்,

"வேதத்தைச் சுருதி என்றும், தரும சாத்திரத்தை சுமிருதி என்றும், அறியத்தக்கன. அவ்விரண்டையும் ஆராய்ச்சி செய்து மறுப்பவன் நாத்திகன் ஆவான்"

என்று கூறுவது மனுவின் தருமம் ஆகும்.

(10) குற்றம் இன்னதென்று ஆராய்ந்து பார்த்து, யார் பக்கமும் சாயாமல், நடுவு நிலைமை பொருந்துமாறு நின்று, யாரிடத்திலும் குற்றத்திற்கான தண்டனையை ஆராய்ந்து, அதற்கு ஏற்றபடி நீதி வழங்குவதே அரசனது செங்கோல் முறையாகும் என்னும் கருத்துப்பட, "ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும் தேர்ந்து செய்வஃதே முறை" (குறள்:541) என்று கூறுவது வள்ளுவரின் அறம் ஆகும்.

ஆனால்,

"பிராமணன் பொருளை அபகரித்த சூத்திரனைச் சித்திரவதை செய்து கொல்லுக. ஆனால், பிராமணன் சூத்திரனுடைய பொருளை அவன் விருப்பப்படிக் கொள்ளையிடலாம்"

- (மனு த.சா.அ.9 சு.248)

என்றும்,

"பிராமணன் எத்தகைய குற்றங்களைச் செய்தாலும், அவனைத் தூக்கில் போடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும், அவனது தலையை மட்டும் மொட்டை அடித்து விட்டுவிட்டால் போதுமானது. அதுவே அவனுக்குத் தூக்குத் தண்டனையைக் கொடுப்பதற்கு ஒப்பாகும். மற்ற வருணத்தாருக்குக் கொலையே உரிய தண்டனையாகும்"

- (மனு த.சா.அ.8 சு.379)

என்றும்,

"கொடிய குற்றம் செய்தாலும் பிராமணனைக் கொல்லாமலும், மற்ற எத்தகைய துன்பத்திற்கும் ஆளாக்காமலும் அவனுடைய பொருளை அவனுக்குக் கொடுத்து, அயலூருக்கு அனுப்ப வேண்டும்"

- (மனு த.சா.அ.8 சு.380)

என்றும்,

"அரசனானவன், எத்தகைய குற்றத்திற்கும் பிராமணனைக் கொல்ல நினைக்கக்கூடாது"

- (மனு த.சா.அ.8 சு.381)

என்றும் கூறுவது மனுவின் தருமம் ஆகும்.

இவை மட்டுமல்லாமல்,

"பெண் போகம், புலால் உண்ணல், கள் குடித்தல் ஆகிய இவை, மனிதர்களுக்கு இயற்கையான குணங்களாகையால், இவைகளைக் குறித்து விதிகள் அவசியமில்லை"

என்றும்,

"நான்கு வருணத்தாரின் பெண்களையும் பிராமணன் மட்டும் அவன் விரும்பியவாறு திருமணம் முடித்துக் கொள்ளலாம்"

என்றும்,

"விவாகக் காலங்களில் பொய் சொல்லலாம்" என்றும், "தனது நாயகன் இறந்துவிட்டால், அல்லது புத்திரப் பேற்றை விரும்புகின்ற பெண்ணானவள், ருது காலத்தில் உடம்பில் நெய்யைப்

பூசிக்கொண்டு, தன் கணவனது சகோதரரை அல்லது அந்தக் குலத்தில் பிறந்த யாரையேனும் புணர்ந்துகொள்ளலாம்''

என்றும்,

''பிராமணன் பெற்ற தாய் ஒருத்தியைத் தவிர மற்ற பெண்களையெல்லாம் புணரலாம்''

என்றும் வடமொழியாளரின் சுருதிகளும், சுமிருதிகளும் கூறியிருக்கும் தருமங்கள் போன்றவை அனைத்தும், வள்ளுவருக்கு அறவே உடன்பாடில்லாத கருத்துக்களாகும்.

பரிமேலழகர் எழுதிய உரை, பல பொதுப்படையான குறள்களைப் பொறுத்துச் சிறப்பாக வரவேற்கத்தக்கதாக இருந்த போதிலும், மனு முதலிய நூல்கள் விதித்தன செய்தலையும், விலக்கியவற்றை ஒழித்தலையும் வலியுறுத்தும் வகையிலும், சமய உணர்வோடும், சனாதன உணர்வோடும், அயலாரின் கொள்கைப் பற்றோடும் எழுதிய உரைப்பகுதிகள் அனைத்தும் புறக்கணித்து ஒதுக்கப்பட வேண்டியவைகளாகவே இருக்கின்றன. வள்ளுவர் நெறிக்கும், தமிழர் பண்பாட்டிற்கும், உலகியல் நடைமுறைக்கும், பகுத்து அறியும் ஆராய்ச்சி அறிவுக்கும் ஏற்ற முறையில், உண்மைப் பொருள் விளக்கம் காணும் பொருட்டு, மேற்கொண்டுள்ள முயற்சிதான் இவ்வுரை விளக்கப்படைப்பாகும்.

வள்ளுவரின் கோட்பாடுகள்

திருக்குறள் முழுவதும் இழைந்தோடும் ஒரு பொதுக்கருத்து, பொது அறம் பேணப்பட வேண்டும் என்பதேயாகும். அதனால்தான் திருக்குறளுக்கு 'அறம்' என்று ஒரு பெயரும் உண்டு. மனித வாழ்க்கையானது, தொல்லைகளும், துயரங்களும் அற்ற முறையில், மகிழ்ச்சிகரமான வகையில் இன்ப முடிவு காணும் நோக்கத்தோடு, இயற்கையோடு இயைந்த உலகியல் தன்மைக்கு ஏற்பச் சீர்பெற்றுச் செம்மையாகத் திகழ வேண்டும் என்பது திருவள்ளுவப் பெருந்தகையாரின் உள்ளக்கிடக்கையாகும். இயற்கையான நிகழ்வுக்கோ, உலகியல் நடைமுறைக்கோ, பகுத்து அறிந்து பார்க்கும் அறிவுக்கோ, உண்மைக்கோ முரண்பாடான கருத்துக்களுக்கு அவர் எந்த ஓர் இடத்திலும் ஆதரவு அளிக்கவே இல்லை. பயன்படாத சமயக் கோட்பாடுகளுக்கும், வடமொழியாளரின் கற்பனையான புராணக் கதைகளுக்கும், அறிவு ஆராய்ச்சிக்குப் பொருந்தி வராத கற்பனைக் கடவுட் கொள்கைக்கும், அயலார் நூல்கள் கூறும் பொருந்தாத தருமங்களுக்கும், தமிழர் பண்பாட்டிற்கு ஒத்துவராத

சாத்திரங்களுக்கும், சுருதிகளுக்கும், சுமிருதிகளுக்கும், வேதத்திற்கும் அவர் மதிப்பு அளிக்கவேயில்லை.

பல குறட்பாக்களின் மூலம் வள்ளுவர், வடமொழியாளராகிய அயலார் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், குறிக்கோள் களையும் திட்டவட்டமாகவே மறுத்துள்ளார். குறள் படிப்போர்க்குப் பொருள் விளக்கத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்ற முறையிலும், சில பழைய வைதிகச் சமயச் சார்புடைய சொற்றொடர்களையும், மரபுவழியில் வந்த சில நூல் வழக்குச் சொற்றொடர்களையும், உலக வழக்குச் சொற்றொடர்களையும், வழக்கத்தில் இருந்து வந்த சில புராணக் கற்பனைக் கதைப்போக்குகளையும், வழக்கத்திலிருந்த சில சமயக்கற்பனைக் கருத்துக்களையும், வள்ளுவர் சிற்சில இடங்களில் குறிப்பிட்டிருக்கக்கூடும் என்றாலும், அவற்றையெல்லாம், அவர் தம் கொள்கைகளாக ஏற்றுக்கொண்டார் என்று கொள்வதற்கில்லை; எடுத்துக்காட்டுக்களாகவே குறிப்பிட்டுள்ளார்.

பொதுப்படையாகவும், ஊன்றியும் பார்த்தால், வள்ளுவர் அறிவாராய்ச்சிக்கும், நடைமுறையியலுக்கும், உலகியலுக்கும் ஒத்த முறையிலேயேதான் எல்லாச் சொற்களையும், கருத்துக்களையும் வழங்கியுள்ளார்.

ஆதி பகவன் (குறள்:1)

ஆதி பகவன் - ஆவதற்குக் காரணமான அறிவன். ஆதல், ஆதி என்பன போன்றவை தொழிற் பெயர்ச் சொற்கள் ஆகும். மனித சமூகம் ஒவ்வொரு துறையிலும் முன்னேறுவதற்கு அடிப்படைக் காரணமான அறிவன் என்று பொருள்படும். 'பகவன்' என்பதற்கு அறிவன், ஆசிரியன், அருகன், புத்தன் போன்ற பல பொருள்களும் அகராதியில் உண்டு. இங்குக் கொள்ள வேண்டிய பொருள் 'அறிவன்' என்பதேயாகும். இரண்டாவது குறளில், 'அறிவன்' என்ற சொல்லையே வள்ளுவர் பயன்படுத்தியிருப்பது நோக்கத்தக்கது.

வாலறிவன் (குறள்:2)

வாலறிவன் - துய்மையான அறிவுபடைத்த அறிவன் என்று பொருள்படும். அந்தச் சொல் தேர்ந்த அறிவுபடைத்த சான்றோனைக் குறிக்கும்.

"அறன் அறிந்து மூத்த அறிவுடையோர் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல்." - (குறள்:441)

''வாலறிவன் வள்ளுவரும்'' என வள்ளுவரைப்பற்றி வள்ளுவ மாலையில் வருவதைக் காணலாம்.

மலர்மிசை ஏகினான் (குறள்:3)

மலர்மிசை ஏகினான் - ஒவ்வொருவருடைய மனமாகிய மலர் மீது பொருந்தியிருந்து வாழக்கூடிய அறிவாற்றலிற் சிறந்தவனாகிய அறிவன். மலர் - உள்ளத்தை அல்லது இதயத்தைக் குறிக்கும் உருவகச் சொல். மிசை - மேல் ஏகுதல் - எழுதல்; அதாவது பொருந்தியிருத்தல்; அதாவது உயர்ந்து இருத்தல். உள்ளத்தில் உயர்ந்து நிற்கும் அறிவன் அல்லது சான்றோன் என்று பொருள்படும். இது, கற்பனையாகக் கொள்ளப்படும் கடவுளைக் குறிப்பிடாது.

வேண்டுதல் வேண்டாமை இலான் (குறள்:4)

வேண்டுதல் வேண்டாமை இலான் - உலகத்தாரின் நன்மை கருதி ஆக்கப் பணிகளில் தோய்ந்த, தனி விருப்பும் வெறுப்பும் இல்லாத அறிவாற்றலில் சிறந்தவனாகிய அறிவன் அல்லது சான்றோன்; தனக்கென்று வாழாமல் பிறர்க்கு என்று வாழும் அறிவன் அல்லது சான்றோன். இது கற்பனைக் கடவுளை உணர்த்தாது.

இறைவன் (குறள்:5,10,690,733,778)

இறைவன் - மூத்த அறிவன். 'இறைவன்' என்ற சொல் தலைவன், மூத்தோன், அரசன், கடவுள், தந்தை ஆகியவற்றைக் குறிக்கும் பல பொருள்களையுடைய ஒரு சொல் என்பர். வள்ளுவர், மூத்த அறிவாற்றலிற் சிறந்தவனாகிய அறிவன், அரசன், தலைவன் என்ற பொருளிலேயேதான் ஆங்காங்கு அந்தச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இது வைதிகர்களால் கற்பனை செய்யப்பட்ட கடவுளைக் குறிப்பதாகாது.

பொறிவாயில் ஐந்து அவித்தான் (குறள்:6)

பொறிவாயில் ஐந்து அவித்தான் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகள் வாயிலாகச் செல்லும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்ற ஐம்புலன்களையும் அடக்கியவனும், அறிவாற்றலிற் சிறந்தவனுமாகிய அறிவன் அல்லது சான்றோன். வைதிகர்களால் கற்பனையாகக் கற்பிக்கப்பட்ட கடவுளுக்கு இந்தச் சொற்றொடர் பொருந்தி வராது.

தனக்கு உவமை இல்லாதான் (குறள்:7)

தனக்கு உவமை இல்லாதான் - தனக்கு ஒப்புவமையாக வேறு எவரையும் கொண்டிருக்காதவன் என்று போற்றப்படக் கூடியவனும், அறிவாற்றலிற் சிறந்தவனுமாகிய அறிவன் அல்லது சான்றோன். இது வைதிகர்களின் கற்பனைக் கடவுளைக் குறிப்பதாகாது.

அறஆழி அந்தணன் (குறள்:8)

அறஆழி அந்தணன் - அறக்கடலாக விளங்கும் செந்தண்மை யையுடைய அறிவாற்றலிற் சிறந்தவனாகிய அறிவன் அல்லது சான்றோன்; அந்தணன் - செந்தண்மையை உடையவன். "அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டொழுகலான்" (குறள்: 30). இது வைதிகர்களால் கற்பனை செய்யப்பட்ட கடவுளை உணர்த்தாது.

எண் குணத்தான் (குறள்:9)

எண் குணத்தான் - மதிப்பு நிறைந்த பண்புகளையுடைய வனாகிய அறிவன்; அதாவது நிரம்பிய பல பண்புகளையுடைய அறிவன். 'எண்' என்பதற்கு எண்ணம், ஆலோசனை, மனம், மதிப்பு, அறிவு போன்ற பொருள்கள் உண்டு. வைதிகர்களால் கற்பிக்கப்பட்ட கற்பனைக் கடவுளுக்கு இது பொருந்தி வராது.

தெய்வம் (குறள்:43,50,55,619,702,1023)

'தெய்வம்' என்பது, 'தேய்' என்ற வினையிலிருந்து பிறந்த சொல் என்பர். தேய் - தேய்வு - தெய்வு - தெய்வம் - தேவன் - தேவி - தேவர் என்று விரிவடைகிறது.

'தெய்யென் கிளவி கொள்ளலும் கோறலும்' என்ற மூதுரைப்படி பார்த்தால், 'தெய்' என்பது உட்கொள்ளுதலும், கொல்லுதலும் அதாவது அழித்தலும் ஆகும். கடல் பொங்கி நாட்டைக் கொள்ளுதலும், காட்டுத் தீ ஏற்பட்டு அழித்துக்கொல்லுதலும், புயற்காற்று வீசி அழித்தலும் ஆகும். அழிவுத் தொழிலைச் செய்யும் இயற்கைக்கு, மனிதன் முதலில் துவக்கக் காலத்தில் பெரிதும் அஞ்சினான். பாதுகாப்பிற்காகப் புகலிடமும் தேடினான். இயற்கை அழிவை நினைந்து வணங்கி, வழிபட்டால் அழிவினின்றும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள இயலும் என்றும் கருதினான். தன்னைப் பாதுகாத்துக் காப்பாற்றுகின்ற மேலோரை வணங்கி, வழிபடவும் தொடங்கினான். நாளடைவில் மனிதன், தனது

அச்சத்திற்கும், ஆசைக்கும் காரணமாக விளங்குகின்ற இயற்கைப் பொருள்களையும், இயற்கை ஆற்றல்களையும் வணங்கி வழிபடத் துவங்கினான். காலப்போக்கில் அப்படியெல்லாம் வழிபாடு செய்யப்படுகின்ற ஒன்று 'தெய்வம்' என்று அழைக்கப்பெறலாயிற்று.

பிற்காலங்களில், அறிவுக்குப் பொருந்தாத கற்பனைக் கதைகள் பல, 'தெய்வம்' என்பதன் பெயரால் ஏற்பட்டுவிட்டன. வள்ளுவர் தெய்வம் என்ற சொல்லை மேலோர், உயர்ந்தோர், வான்புகழ் கொண்ட மேலானவர், புகழ் உலகம் எய்திய மேலானவர், இயற்கை ஆற்றல், இயற்கைச் சூழ்நிலை என்ற பொருள்களிலேதான் ஆங்காங்குப் பயன்படுத்துகின்றார்.

'தெய்வம்' - ஒப்புயர்வற்றது, அதற்கு ஈடானது ஒன்றில்லை, எல்லாம் வல்லது, எதையும் செய்ய வல்லது, உயிர்களையெல்லாம் ஆட்டி வைப்பது, அதனால் முடியாதது எதுவும் இல்லை என்பன போன்ற வைதிகக் கற்பனைக் கருத்துக்களை, ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் .... தெய்வத்துள் வைக்கப்படும்'' (குறள்:50), ''உணர்வானைத் தெய்வத்தோடு ஒப்பக் கொளல்'' (குறள்:702), ''தெய்வத்தால் ஆகாது எனினும்'' (குறள்:619), ''தெய்வம் தொழாஅள்'' (குறள்:55) போன்ற குறட்பாக்களின் கருத்துக்களே மறுத்துரைப்பனவாக அமைந்திருக்கின்றன.

தேவர் (குறள்:1073)

'தேவர்' என்ற சொல் மேலானவர்; சிறப்புக்குரியவர், பெருமைக்குரியவர், வான்புகழ் கொண்டவர் என்ற பொருள்களைக் கொண்டதாகும். தெய்வம் - பண்புப்பெயர்; தேவன் - ஆண்பால் பெயர்; தேவி - பெண்பால் பெயர்; தேவர் - பலர்பால் பெயர்.

தேவர், உயர்வு பற்றிச் சீரியோரைக் குறிக்கும் ஒரு சொல். அது, அரசரையும், மேலோரையும் குறிக்கக்கூடிய சொல் என்பது. 'இராசராச தேவர்', 'சோழ தேவர்', 'திரிபுவன தேவர்', 'மெய்கண்ட தேவர்', 'சிறுத்தொண்ட தேவர்', 'திருத்தக்க தேவர்', 'தோலாமொழித் தேவர்' என்று குறிக்கப்பெறுவதால் அறியலாம். வள்ளுவர், 'தேவர்' (குறள்:1073) என்ற சொல்லை மேலானவர் என்ற பொருள் ஏற்படும்படியாகத்தான் பயன்படுத்துகிறார்.

வானோர் (குறள்:18,346)

வானோர் - வான்புகழ் கொண்ட மேலானவர்; வானத்தவர் என்று அழைக்கப்படுபவரும் அவரேயாவர். மக்கள் உயிரோடு உலாவும்

உலகத்தை 'நில உலகம்' என்றும், புகழோடு நின்று நிலைபெறும் நிலையைப் 'புகழ் உலகம்' என்றும் கூறுவர். புகழ் உலகத்தை, 'வான் உலகம்' என்றும், 'மேல் உலகம்' என்றும், 'புத்தேள் உலகம்' என்றும் அழைப்பது உண்டு. சிறப்புக்குரிய, பெருமைக்குரிய மேலானவர் நிலைத்துப் பெற்றிருக்கும் புகழை, 'வான்புகழ்' என்று சொல்லுவது மரபு. ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்ற பாரதியாரின் கூற்று நோக்கத்தக்கது.

புத்தேள் (குறள்:58,213,234,290,966,1323)

புத்தேள் - புதுமை; புதியவர். 'புத்தேள்' என்பது புத்தாள் என்பதன் திரிபுச் சொல் என்பர். புது + ஆள் = புத்தாள்; புது + ஆடை = புத்தாடை; புது + ஆண்டு = புத்தாண்டு; புத்தோடு, புதுப்பானை என்பனவும் அவ்வாறே அமைந்தனவாகும். நில உலகத்தைவிட்டு மறைந்து, புகழ் உலகத்தே நிலைத்து நிற்பவர்கள் புதுமை பெறுகிறார்கள். புதிய புகழ்வாழ்வு எய்துகின்றனர். புகழ் உலகம் எய்திய மறைந்த மேலோர்கள், 'புத்தேளிர்' எனக் கருதப்படுவார்கள்.

இந்திரன் (குறள்:25)

'இந்திரன்' என்ற சொல், 'இந்திறன்' என்ற சொல்லின் திரிபாகும் என்று கூறுவர். இந்திறன் - இனிய திறமையையுடையவன்.

ஐம்புலன்களை அடக்கியவனும், மிக உயர்ந்தவனுமாகிய வான்புகழ் கொண்டவனே, 'விசும்புளார் கோமான்' என்று கருதப்படுகிறான் என்பர்.

'இந்திறன்' என்ற சொல், 'இந்திரன்' என்று திரிபுற்றதற்கு , 'ற'கர 'ர'கரப் போலி என்று கூறுவர்.

'ஐந்திறம்' என்பது 'ஐந்திரம்' என்று பாடவேறுபாடு அடைந்ததைப் போன்று, 'இந்திறன்' என்பது, 'இந்திரன்' என்று ஆகியிருக்கிறது என்று கூறுவர். ''பழைய ஓலைச் சுவடிகளில், வல்லின 'ற'கரத்திற்கும், இடையின 'ர'கரத்திற்கும் வேறுபாடு காண்டல் அரிது. இவ்வறியாநிலையில், ஐந்திறம் என்பது, ஐந்திரம் என எழுதப்பட்டிருக்கிறது. அதில் வியப்பு இல்லை'' ('தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்' - பக்.18-19) என்று பண்டித அ.கி.நாயுடு அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அதுபோல, 'இந்திறன்' என்ற சொல்லும் 'இந்திரன்' என்று ஆகியிருக்கக்கூடும்.

சோழ மன்னர்களில், அறிவும், ஆற்றலும், பெயரும், புகழும் கொண்டவனாய் இருந்து, அரசு துறந்து, ஐம்புலன்களையும் அடக்கித்

தவக்கோலம் பூண்டு, அறநெறி புகட்டிய அறிவனாக விளங்கிய முன்னோன் ஒருவனே, 'இந்திரன்' என்று அழைக்கப்பட்டான் என்றும், அவன் பெயரால்தான் பூம்புகாரில், இந்திர விழா ஆண்டுதோறும் சிறப்பாக எடுக்கப்பட்டது என்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவர். வடமொழியாளரின் புராணக் கற்பனைக் கதைப்படி, ஐம்புலனையும் அடக்காமல், ஒழுக்கக் கேடனாக விளங்கிய தேவேந்திரனை, வள்ளுவர் குறிப்பிடவில்லை என்பதை மட்டும் தெளிவாக உணரலாம்.

செய்யவள் (குறள்:84,167);
தாமரையினாள் (குறள்:167); தவ்வை (குறள்:167);
முகடி (குறள்:617,936)

செய்யவள் - இளையவள்; செல்வ மகள்; திருமகள்.

தாமரையினாள் - திருமகள்;

தவ்வை - மூத்தவள்; வறுமையாள்; மூதேவி.

முகடி - மூதேவி; வறுமையாள்; பாழ்படுத்துபவள்.

செல்வத்தைத் திருமகள் என்றும், செய்யவள் என்றும், தாமரையினாள் என்றும் உருவகப்படுத்திக் கூறுவதும், வறுமையை, மூத்தவள் என்றும், மூதேவி என்றும், தவ்வை என்றும், முகடி என்றும் உருவகப்படுத்திக் கூறுவதும் நூல் வழக்கு ஆகும். இலட்சுமி, மூதேவி பற்றிய கற்பனைப் புராணக் கதைகளின் அடிப்படையில், வள்ளுவர் ஏதொன்றும் கூறவில்லை.

பேய் (குறள்:565); அலகை (குறள்:850)

அச்சத்தின் உருவெளித் தோற்றத்தைத்தான், 'பேய்' என்றும், 'அலகை' என்றும் கூறுவது. பேய் என்பது உலக வழக்கு; அலகை என்பது நூல் வழக்கு ஆகும். பேய் என்றோ, அலகை என்றோ உயிருள்ள பொருள் எதுவும் உண்மையில் இல்லை.

பேய்த்தன்மை - அறிவின்மை; பேய்த்தேர் - கானல் நீர்; பேய்ப் பார்வை - மருட்பார்வை; பேய் மகன் - கெட்டவன்; பேய் வித்தை - சூன்ய வித்தை; இப்படியாகத் தீய பண்பினைக் குறிக்கும் ஒன்றாகத்தான், 'பேய்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

கூற்று (குறள்:326,765,1083)
கூற்றம் (குறள்:269,894,1085)

'கூற்று' என்றாலும், 'கூற்றம்' என்றாலும், உயிர் வேறு, உடல் வேறு என்று கூறுபடுத்துகின்ற ஒன்று; அதாவது, சாவு என்றுதான்

பொருள்படும். அதனை ஆண் பாலாக உருவகப்படுத்தி, 'கூற்றுவன்' என்று சொல்லுவதும் உண்டு. எருமைக்கடா மீது ஏறி, உயிரைப் பறிக்க வருகிறவன் எமன் என்பதெல்லாம், வடநூலார் கட்டிய கற்பனைக் கதையாகும். 'கூற்று' என்பதற்கு, 'எமன்' என்று பொருள் கொள்வது பொருந்தி வராது.

காமன் (குறள்:1197)

காதல் வேட்கையின்போது, பெண்பாலை வருத்துகின்ற ஆண்பால் தன்மையைக் 'காமன்' என்று உருவகப்படுத்திச் சொல்லுவது நூல் வழக்கு ஆகும்.

அணங்கு (குறள்:918,1081,1082)

காதல் வேட்கையின்போது, ஆண்பாலை வருத்துகின்ற பெண்பால் தன்மையை, 'அணங்கு' என்று உருவக்கப்படுத்திச் சொல்லுவது நூல் வழக்கு ஆகும்.

ஊழ் (குறள்:371,372,380,620)

'ஊழ்' என்பதற்குப் பழைய உரையாசிரியர்கள் பலரும், 'பழவினை', 'விதி', 'முற்பிறவியின் பயன்' என்றே பொருள் கொண்டிருக்கின்றனர்.

'ஊழ்' என்பதற்கு, உள்ளிருந்து இயற்கையாகத் தானே வெளிப்படும் இயற்கைப் பண்பறிவு, இயற்கை அறிவு முறை, இயற்கை முறை, உலகியல் முடிவு, முதிர்வு, முதிர்ச்சி, மலர்ச்சி, பண்பு என்று பலவகையான பொருள்கள் உண்டு.

'ஊழி' - இயற்கையாக உலகு முதிர்வுறும் காலம்; இயற்கையாக உலகம் முடிவுறும் காலம். 'ஊழித்தீ' - இயற்கையாகப் பெருகிக் காணப்படும் வடவைத்தீ. 'ஊழ்த்தல்' - வெளிப்படுதல்; விரிதல்; மலர்தல்; முதிர்தல்; சிறத்தல். 'ஊழ்க்கும்' - வெளிப்படும்; மலரும்; சிறக்கும்; முதிரும். 'ஊழற்சதை' - பெருகித் தளர்ந்து காணப்படும் சதை. 'ஊழல் நிலம்' - சேறு பெருகி நின்று காணப்படும் நிலம்.

'ஊழ்' என்ற சொல்லை வள்ளுவர் பழவினை - விதி - முற்பிறவியின் பயன் என்ற முறையில் எந்த ஓர் இடத்திலும் கையாளவே இல்லை. 'ஊழ்' என்ற சொல்லைச் சங்க கால இலக்கியங்கள் பலவும், எப்படிப்பட்ட பொருளில் பயன்படுத்தி வந்தனவோ, அதே பொருளில்தான் வள்ளுவரும் அந்தச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

'ஊழின் உருப்ப' (புறம்:237); 'ஊழ் மாறுபெயரும்' (புறம்:283); 'பழம் ஊழ்த்து' (புறம்:381); 'இணர்ஊழ்த்தும்' (குறள்:650); 'ஊழ்மலர் ஒழிமுகை' (மலைபடுகடாம்:130); 'கழை வளர் நெல்லின் அரிஉலை ஊழ்த்து' (மலைபடு:180); 'கமழும் பூவும் உண்டோர் மறந்தமை, கல்லாப் பழனும் ஊழ் இறந்து' (மலைபடு:262, 263); 'குறியவும் நெடியவும் ஊழ் இழிபு' (மலைபடு:288); 'கலைநின்று விளிக்கும் கானகம் ஊழ் இறந்து' (மலைபடு:405); 'உருகெழு தாயம் ஊழின் எய்தி பெற்றவை மகிழ்தல் செய்யான்' (பட்டினப்பாலை:227, 228); 'கிளிகடி மரபின ஊழ்ஊழ் வாங்கி' (குறிஞ்சிப் பாட்டு:44); 'காழிற்சுட்ட கோழுன் கொழுங்குறை, ஊழின் ஊழின் வாய்வெய்து ஒற்றி' (பொருநராற்றுப் படை:105, 106); 'ஊழ் அடிமுட்டமும்' (குறிஞ்சிப்பாட்டு:258); என்ற அடிகள் 'இயற்கை முறையாக வெளிப்பட்ட', 'இயற்கை முறையாக அமைந்த', 'இயற்கை முறையாகத் தோன்றிய' என்ற பொருள்களைத்தான் குறிக்கின்றன.

'இயற்கை அறிவு' என்பது ஒவ்வொருவருக்கும், வழிவழித் தலைமுறையாக, இயற்கையாகவே படிந்திருக்கும் பண்பின் வழிப்பட்ட இயற்கையான அறிவாகும். 'நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன் உண்மையறிவே மிகும்' (குறள்:373).

'செயற்கை அறிவு' என்பது, ஒவ்வொருவரும் சுற்றறிதல், கேட்டறிதல், ஆராய்ந்தறிதல், பட்டு நுகர்ந்தறிதல் (அனுபவ அறிவு) போன்ற தம் முயற்சிகள் மூலம் பெறும் செயற்கையான அறிவாகும்.

'ஆகு ஊழ்' என்பது விரும்பத்தக்க வகையில், நன்மை பயப்பதாக அமைந்து, இயற்கை முறையாக வெளிப்படும் நற்பண்பறிவு.

'போகு ஊழ்' என்பது, வெறுக்கத்தக்க வகையில், தீமை பயப்பதாக அமைந்து, இயற்கை முறையாக வெளிப்படும் தீய பண்பறிவு.

வினை

'வினை' என்ற சொல்லை 'செயல்', 'தொழில்', 'போர்', 'முயற்சி', 'துன்பம்' என்ற பொருள்களிலேயேதான் வள்ளுவர் பயன்படுத்தி யுள்ளார். செயல் என்ற பொருளிலே மட்டும் 59 குறட்பாக்களில் வினை என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

'நல்வினை' என்பதற்கு நற்செயல் என்றும், 'தீவினை' என்பதற்கு தீய செயல் என்றும் வள்ளுவர் பொருள் கொள்ளுகிறாரேயல்லாமல்,

'புண்ணியம்-பாவம்' என்றோ, 'மோட்சம் - நரகம்' என்றோ கொள்ளவில்லை. வினை என்பதற்குப் 'பழவினை', 'ஊழ்வினை', 'விதிப்பயன்' என்றும் வள்ளுவர் கொள்ளவில்லை.

'இருள்சேர் இருவினை' குறள்:5 (அறியாமை சேர்ந்த பெருந்துன்பம்); 'ஒல்லும் வகையான் அறவினை' குறள்:33 (அறவினை - அறச்செயல்); 'தம்தம் வினையான் வரும்' - குறள்:63 (செயலின் பயனால் வந்து சேரும்); 'வினைக்கண் வினை கெடல் ஓம்பல்' - குறள்:612 (தொழிலில் முயற்சி இல்லாதிருத்தலை ஒழிக்க வேண்டும்) என்ற குறள்கள் நோக்கத்தக்கன.

அளறு (குறள்:255,835,919)

'அளறு' என்பதை நரகம் என்றோ, 'மேல் உலகம்' என்பதைச் சொர்க்கம் என்றோ வள்ளுவர் கொள்ளவே இல்லை. 'அளறு' என்பதற்கு அவர் பெருந்துன்பத்தில் ஆழ்தல் என்றுதான் பொருள் கொண்டுள்ளார். அளறு - குழைசேறு; குழைந்த சேறு; அதாவது சேற்றில் அழுந்துதல்; அதாவது பெருந்துன்பத்திற்கு ஆளாகுதல் என்று பொருள்படும்.

மேல் உலகம் - மேலோர் உலகம்; அதாவது வான்புகழ் கொண்ட மேலோரின் புகழ் உலகம்.

ஒருமை (குறள்:126,398,835); இருமை (குறள்:23); எழுமை (குறள்:107,126,398,538,835)

'ஒருமை' என்பது, ஒரு தன்மை; ஒரு நிலை என்று பொருள்படும்.

'இருமை' என்பது, இரு தன்மை; இருநிலை; இரண்டு தலைமுறைகள் என்று பொருள்படும்.

'எழுமை' என்பது, ஏழ் தன்மை; ஏழ்நிலை ஏழ் தலைமுறைகள்; பலநிலை; பல தலைமுறைகள் என்று பொருள்படும்.

மேற்கண்ட இந்தப் பொருள்களிலேதான் வள்ளுவர் அந்தச் சொற்களைக் கையாண்டுள்ளார்.

இம்மை (குறள்:98,1042,1315);
மறுமை (குறள்:98,459,904,1042)

'இம்மை' என்பது, இந்த நிலை; இந்த வாழ்வு என்று பொருள்படும்.

'மறுமை' என்பது, மறுநிலை; மறுவாழ்வு; புது வாழ்வு என்ற பொருள்படும்.

எழுபிறப்பு (குறள்:62)

'எழுபிறப்பு' என்பது வாழ்க்கையில் பலவிதமாகவும் தோற்றங் கொள்ளும் பலநிலைகள் என்றும், பல தலைமுறைகள் என்றும் பொருள்படும்.

பிறப்பு - தோற்றம். எழுபிறப்பு - பல தோற்றங்கள்.

ஒருவன் தன் வாழ்வில் எத்தனையோ துறைகளிலும், நிலைகளிலும் தோற்றங் கொள்ளக்கூடும். ''பழி பிறங்காப் பண்புடை மக்களைப் பெறின், எழுபிறப்பும் தீயவை தீண்டா?'' (குறள்:62) என்றால், ஒருவன் தன் வாழ்வில், பழி இல்லாத நல்ல பண்புடைய மக்களைப் பெற்றிருப்பானேயானால், தான் பெறும் பல்வேறு நிலைகளில் எந்த ஒரு தோற்றங் கொண்டாலும் அவனை, எந்த வகையிலும் துன்பங்கள் தீண்டா என்பதாகும்.

தென்புலத்தார் (குறள்:43)

'தென்புலத்தார்' என்பது தென்புலத்தைச் சேர்ந்த அறிவாளர் களைக் குறிப்பதாகும். தென்புலம் - தென்னாடு; வடபுலம் - வடநாடு. புலம் - அறிவு; புலமை - அறிவுடைமை; தென்புலத்தார் - தமிழ் அறிஞர்கள்; அதாவது, தமிழ்ப் புலவர்கள். தென்மொழி - தமிழ்மொழி; வடமொழி - சமற்கிருத மொழி.

தமது புலமையால், சமுதாயத்திற்கு நன்மை செய்து வாழ்கின்ற தமிழ்ப் புலவர்களைச் சமுதாய மக்கள் பாதுகாக்க வேண்டியது, அவர்களது தலையாய கடமையாகும் என்பதை வலியுறுத்த வந்த வள்ளுவர் 'தென்புலத்தார் .... ஓம்பல் தலை' (குறள்:43) என்கிறார்.

'தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்'' (புறம்-9)

என்ற செய்யுளடிகளுக்குப் பொருள் கூறவந்த உரையாசிரியர், 'பாணர்க்கு மட்டுமல்லாமல், படித்தவர்க்கும் உதவி செய்யும் கடமையை உன் மக்களும் கொள்ள வேண்டும்'' என்று உரை விளக்கம் தருகிறார்.

'தென்புலத்தார்' என்பதற்கு, வடநூலார் கருத்துப்படி கற்பனையாகக் கூறப்படும் 'பிதிரர்' என்ற பொருள் வள்ளுவருக்கு உடன்பாடான கருத்து அன்று; தென்புலத்து அறிவாளர்கள் என்பதுதான், வள்ளுவருக்கு உடன்பாடான கருத்து ஆகும்.

மெய்ப்பொருள் காண வேண்டும்

பல்வேறுபட்ட காலக்கட்டங்களில் தோன்றிய நூற்றுக்கணக்கான உரையாசிரியர்கள், திருக்குறளுக்கு ஒருவருக்கொருவர் மாறுபட்ட பொருள்களையும், வேறுபட்ட கருத்துக்களையும் கொண்ட உரைகளை வழங்கி வந்திருக்கின்றனர். எவ்வளவு மிகவான உரைகள் வந்தாலும், அவற்றையெல்லாம் படித்தறிந்து, ஏற்பனவற்றைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, படிப்போர்க்கு முழுக்க முழுக்க இருக்கிறது. அவற்றை ஏற்பதும், ஏற்காமல் விடுவதும் அவரவர் மன வளத்தையும், மன உறுதியையும், பகுத்தறிந்து பார்க்கும் அறிவுத் தெளிவையும், திட்பத்தையும், புதுமை, பயன்மை, உலகியல் தன்மை, உண்மை ஆகியவற்றை வரவேற்கும் பாங்கையும் பொருத்தனவாகும். ''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பது அறிவு'' (குறள்:423) என்றும், ''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பது அறிவு'' (குறள்:355) என்றும் வள்ளுவப் பெருந்தகையார் கூறிய தன்மையில் உரைகளைப் படிப்போர் ஆராய்ந்து பார்க்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

''ஒருவர் கூறும் பொதுப்படையான கருத்தை மறுக்கவும், ஏற்காமல் கூட இருக்கவும் எவருக்கும் உரிமை உண்டு. ஆனால், அவர் அந்தக் கருத்தைக் கூறக்கூடாது என்று தடுத்து நிறுத்துகின்ற உரிமை எவருக்கும் இல்லை'' என்று பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டிருப்பது சிந்திக்கத் தக்கதாகும்.

எப்பொழுதும், குறளையும், குறளாசிரியரின் தெளிவான, திட்பமான, நுட்பமான, நயமான, பொது அறநோக்கையும், உண்மையான உள்ளக் கிடக்கையையும் அடிப்படையாகக் கொண்டு, அவற்றின் பேரிலேயே உரையைத் துருவிப் பார்க்க வேண்டும்.

திருக்குறளின் நுட்பமான உண்மைப் பொருளைப் படித்தறிய விரும்புவோர், ''கற்பவை, கசடு அறக் கற்க'' (குறள்:391) வேண்டும் என்ற முறையிலும், ''கசடு அறச் சொல் தெரிதல்'' (குறள்:717) வேண்டும் என்ற முறையிலும், ''தேறுக தேறும் பொருள்'' (குறள்:509) என்ற முறையிலும், ''நுண்பொருள் காண்பது அறிவு'' (குறள்:424) என்ற முறையிலும், ''தீது ஒரீஇ, நன்றின்பால் உய்ப்பது அறிவு'' (குறள்:422) என்ற முறையிலும், ''மெய்ப்பொருள் காண்பது அறிவு'' (குறள்:423,355) என்ற முறையிலும் ஆராய்ந்து பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

திருக்குறளுக்கு உரைகள் பல பழையனவாகவும், புதியனவாகவும் வந்திருந்த போதிலும், நான் இந்நூலின் மூலம் உரை விளக்கம் தர முன்வந்திருப்பதற்குக் காரணம், குறட்பாக்களின் உண்மைப் பொருளைப் பகுத்து ஆராய்ந்து பார்க்கும் கண்ணோட்டத்தோடு இனிய, எளிய, நல்ல, தெளிவான தமிழ்நடையில் உணர்த்துவதன் மூலம், கீழ்க் காணப்படும் கருத்துக்களுக்கு நல்ல தெளிவுநிலை ஏற்பட வேண்டும் என்பதேயாகும்.

வள்ளுவரின் உள்ளக்கிடக்கை

திருவள்ளுவர், எந்த ஒரு பொருளைப் பற்றிக் கூறுவது என்றாலும் உலகியலுக்கு ஒத்த முறையில் (உலகம் தழீஇயது ஒட்பம்'' - குறள்:425), உலக மக்கட் சமுதாயத்தோடு பொருந்திய வகையில் ('உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு' - குறள்:426), இயற்கை நிகழ்வுக்கு முரண்படாத முறையில் ('இயற்கை அறிந்து செயல்' - குறள்:637) முதலிலிருந்து இறுதிவரையில் கூறிச் செல்கிறார். நடைமுறைக்கு அப்பாற்பட்ட கருத்துகளுக்கு அவர் எந்த ஒரு நிலையிலும் இடம் அளித்ததில்லை. கற்பனைக் கடவுட் கொள்கைக்கோ, கற்பனைக் கட்டுக்கதைகளுக்கோ, உலகியலுக்குப் புறம்பான கருத்துக்களுக்கோ, இயற்கை நிகழ்வுக்கு மாறுபாடான கற்பனைச் செய்திகளுக்கோ, பண்டைத்தமிழர் போற்றி வந்த உயர்ந்த நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும் மாறுபட்ட அயலாரான வடமொழியாளரின் கொள்கைகளுக்கோ, சாதி-சமய- இன வேறுபாட்டுக் கொள்கைகளுக்கோ அவர் எந்த ஒரு நிலையிலும், சிறிதுகூட ஆதரவு கொடுக்கவில்லை.

வடமொழியிலுள்ள 'வேதங்கள்', மனுதரும சாத்திரம்', 'அர்த்த சாத்திரம்', சுக்கிர நீதி', 'காம சூத்திரம்' போன்ற நூல்களுக்கும் திருக்குறளுக்கும் எந்தவிதமான தொடர்பும் அறவே இல்லை. திருக்குறள் அவற்றிற்கெல்லாம் முற்றிலும் மாறுபட்டு விளங்கும், பொது அறம் போற்றும் தனித் தமிழர் பண்பாட்டுத் தனிப்பெரும் நூலாகவே திகழ்ந்து வருகிறது.

திருக்குறளின் குறிக்கோளும் கொள்கையும்

திருக்குறள் தனி மனிதனின் வாழ்க்கைக்கும், சமூகப் பொது வாழ்க்கைக்கும் வழிகாட்டும் நூல்; நல்லன எவை, அல்லன எவை என்பதைச் சுட்டிக்காட்டும் நூல்; கடமைகளை வலியுறுத்தும் நூல்; அறத்திற்கு விளக்கந்தந்து அதற்கு ·ஆக்கம் பயக்கும் நூல்;

நற்பண்புகளையும், நற்செயல்களையும் வரையறுக்கும் நூல்; தீய பண்புகளையும், தீய செயல்களையும் வெறுத்து ஒதுக்கும் நூல்; சால்பினை வற்புறுத்தும் நூல்; ஒழுக்கத்திற்கும், ஒப்புரவிற்கும் உயர்வு தரும் நூல்; அறிவுக்கும், ஆற்றலுக்கும் மதிப்பு அளிக்கும் நூல்; முயற்சிக்கும், ஊக்கத்திற்கும் ஆக்கந்தரும் நூல்; உழைப்பையும், உற்பத்திப் பெருக்கத்தையும் வலியுறுத்தும் நூல்; மனித குலம் முழுவதும் ஒன்றே என்பதை வலியுறுத்தும் நூல்; சிறந்த காதலின்ப வாழ்வைப் போற்றும் நூல்; கற்பனைக் கடவுட் கொள்கையையும், அது தொடர்பான கட்டுக்கதைகளையும் ஏற்காத நூல்; கர்ம பலனையும், யாகம் செய்தலையும் ஆதரிக்காத நூல்; புகுந்துவிட்ட அயலார் கொள்கைகள் பலவற்றையும் மறுக்கும் நூல்; உலகியல் வாழ்வுக்கு அப்பாற்பட்ட எதையும் வலியுறுத்தாத நூல்.

இற்றைக்காலத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் எல்லோரும், திருக்குறளின் உண்மையான பொருள் விளக்கங்களைப் பகுத்து அறிந்து பார்க்கும் நெறியில் நின்று, படித்துப் புரிந்து கொண்டு, அறிந்துகொண்டவைகளைத் தத்தம் வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்திலேதான் நான், இந்த உரை விளக்கப் படைப்பினைத் தர முன்வந்துள்ளேன்.

நான் உரை எழுதும்போது, எனக்கு ஏற்பட்ட சில ஐயப்பாடு களையும், அறியா நிலைகளையும் போக்கிக்கொள்ளவும், உண்மை நிலையைத் தெளிவுபடுத்திக் கொள்ளவும், பரிமேலழகரின் உரை, பேராசிரியர் கா.சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் உரை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் உரை, டாக்டர் மு.வரதராசன் அவர்களின் உரை, புலவர் குழந்தை அவர்களின் உரை, சிந்தனைச் செம்மல் கு.ச.ஆனந்தன் அவர்களின் உரை விளக்கம் ஆகியவை, அவ்வவ் இடங்களில் எனக்குப் பெரிதும் துணை நின்றன என்பதை நன்றியுணர்வோடு குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நாளுக்குநாள் நிலைகுலைந்து, சீரழிந்து, சிதைந்து, சிறுமைப் பட்டுக் கொண்டிருக்கும் மக்களினம், உயர்ந்த, சிறந்த மனிதப் பண்பாடுகளை அறிந்து, உணர்ந்து, தெளிந்து, தேர்ந்து, மேம்பாடு எய்தி, உலகியல் நடைமுறைக்கு ஏற்ற, அறிவாராய்ச்சிக்கு ஒத்த, இனிய வாழ்வு வாழ, வழிகாட்டும் ஒரு பெரும் அறநூல் திருக்குறளேயாகும். மக்களினமானது அஞ்சாமை, அடக்க முடைமை, அருளுடைமை, அழுக்காறாமை, அறிவுடைமை, அன்புடைமை, ஆள்வினையுடைமை, இன்னா செய்யாமை,

ஈகைத்தன்மை, ஊக்கம் உடைமை, ஒழுக்கமுடைமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, கொல்லாமை, சான்றாண்மை, சிற்றினம் சேராமை, செங்கோன்மை, சொல்வன்மை, நடுவு நிலைமை, நாணுடைமை, பண்புடைமை, பிறனில் விழையாமை, புறங்கூறாமை, பெரியாரைப் பிழையாமை, பெருமை, பொச்சாவாமை, பொறையுடைமை, வாய்மை, வினைத்தூய்மை, வெகுளாமை, வெஃகாமை, வெருவந்த செய்யாமை போன்ற உயர்ந்த பண்புகளை உலகியல் நடைமுறைக்கு ஏற்ற வகையிலும், இயற்கை அறிவியல் ஏற்புமுறைக்கு ஒத்த தன்மையிலும் உணர வேண்டும்; வள்ளுவர் வகுத்த அறநெறியின் உண்மைப் பொருளை, உள்ளது உள்ளவாறு, உலகியலுக்கு ஏற்ற முறையில் மக்களினம் உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதுதான், இந்தக் குறள் விளக்க உரையின் தலையாய நோக்கமாகும். தமிழன்பர்கள் இந்த உரையைப் பயின்று, ஏற்ற வகையில் பயன்பெறுவார்களாக!

இந்தத் திருக்குறள் நல்லுரையை அழகாகவும், அருமையாகவும் அச்சமைப்புச் செய்துகொடுத்த, சென்னை, தேனாம்பேட்டை, வள்ளி லேசர் கிராபிக்ஸ் நிறுவனத்தினர்க்கும், இதனைச் சிறப்பாகவும், செம்மையாகவும் அச்சியற்றி நூல் வடிவம் ஆக்கித்தந்த ஜெயமாலிகா அச்சக நிறுவனத்தினர்க்கும், இதனைப் பூரிப்போடு வெளியிட முன்வந்த நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளையினர்க்கும் என் உளங்கனிந்த நன்றியை உலகைப் பெருக்கோடு உரிமை யாக்குகிறேன்.

இரா.நெடுஞ்செழியன்
01.10.1991

அதிகார அகர வரிசை

எண் - அதிகார எண்

அடக்கம் உடைமை	13
அமைச்சு	64
அரண்	75
அருள் உடைமை	25
அலர் அறிவுறுத்தல்	115
அவர்வயின் விதும்பல்	127
அவா அறுத்தல்	37
அவை அஞ்சாமை	73
அவை அறிதல்	72
அழுக்காறாமை	17
அறன் சிறப்பு	4
அறிவன் சிறப்பு	1
அறிவுடைமை	43
அன்புடைமை	8
ஆள்வினை உடைமை	62
இகல்	86
இடனறிதல்	50
இடுக்கண் அழியாமை	63
இரவு	106
இரவு அச்சம்	107
இல்வாழ்க்கை	5
இறைமாட்சி	39
இன்சொல் கூறல்	10
இன்னா செய்யாமை	32
ஈகை	23
உட்பகை	89
உழவு	104
உறுப்புநலன் அழிதல்	124
ஊக்கம் உடைமை	60
ஊடல் உவகை	133
ஊழ்	38

ஒப்புரவு அறிதல்	22
ஒழுக்கம் உடைமை	14
ஒற்றாடல்	59
கண்ணோட்டம்	58
கண் விதுப்பு அழிதல்	118
கயமை	108
கல்லாமை	41
கல்வி	40
கள்ளாமை	29
கள் உண்ணாமை	93
கனவுநிலை உரைத்தல்	122
காதற் சிறப்பு உரைத்தல்	113
காலம் அறிதல்	49
குடி செயல்வகை	103
குடிமை	96
குறிப்பு அறிதல் (இ)	110
குறிப்பு அறிதல் (பொ)	71
குறிப்பு அறிவுறுத்தல்	128
குற்றங் கடிதல்	44
கூடா ஒழுக்கம்	28
கூடா நட்பு	83
கேள்வி	42
கொடுங்கோன்மை	56
கொல்லாமை	33
சான்றாண்மை	99
சிற்றினம் சேராமை	46
சுற்றந்தழால்	53
சூது	94
செங்கோன்மை	55
செய்ந்நன்றி அறிதல்	11
சொல் வன்மை	65
தகைஅணங்கு உறுத்தல்	109
தவம்	27
தனிப்படர் மிகுதி	120
தீ நட்பு	82
தீவினை அச்சம்	21

துறந்தார் சிறப்பு	3
துறவு	35
தூது	69
தெரிந்து செயல்வகை	47
தெரிந்து தெளிதல்	51
தெரிந்து வினையாடல்	52
நடுவு நிலைமை	12
நட்பு	79
நட்பு ஆராய்தல்	80
நலம்புனைந்து உரைத்தல்	112
நல்குரவு	105
நன்றியில் செல்வம்	101
நாடு	74
நாண் உடைமை	102
நாணுத்துறவு உரைத்தல்	114
நிலையாமை	34
நிறை அழிதல்	126
நினைந்தவர் புலம்பல்	121
நெஞ்சொடு கிளத்தல்	125
நெஞ்சொடு புலத்தல்	130
பகைத்திறம் தெரிதல்	88
பகைமாட்சி	87
பசப்புறு பருவரல்	119
படர்மெலிந்து இரங்கல்	117
படைச் செருக்கு	78
படைமாட்சி	77
பண்புஉடைமை	100
பயன்இல சொல்லாமை	20
பழைமை	81
பிரிவு ஆற்றாமை	116
பிறன்இல் விழையாமை	15
புகழ்	24
புணர்ச்சி மகிழ்தல்	111
புணர்ச்சி விதும்பல்	129
புலவி	131
புலவி நுணுக்கம்	132

புலால் மறுத்தல்	26
புல்லறிவாண்மை	85
புறங்கூறாமை	19
பெண் வழிச்சேறல்	91
பெரியாரைத் துணைக்கோடல்	45
பெரியாரைப் பிழையாமை	90
பெருமை	98
பேதைமை	84
பொச்சாவாமை	54
பொருள் செயல்வகை	76
பொழுதுகண்டு இரங்கல்	123
பொறை உடைமை	16
மக்கட்பேறு	7
மடியின்மை	61
மருந்து	95
மன்னரைச் சேர்ந்து ஒழுகல்	70
மானம்	97
மெய்யுணர்தல்	36
வரைவின் மகளிர்	92
வலி அறிதல்	48
வாய்மை	30
வாழ்க்கைத் துணைநலம்	6
வான் சிறப்பு	2
விருந்தோம்பல்	9
வினைசெயல்வகை	68
வினைத்திட்பம்	67
வினைத்தூய்மை	66
வெஃகாமை	18
வெகுளாமை	31
வெருவந்த செய்யாமை	57

○

பால்		இயல்	அதிகாரங்கள்
அறத்துப்பால்			
	1	பொது இயல்	1 - 4
	2	இல்லற இயல்	5 - 24
	3	துறவற இயல்	25 - 37
	4	ஊழ் இயல்	38
பொருட்பால்			
	5	அரசு இயல்	39 - 63
	6	அங்க இயல்	64 - 95
	7	ஒழிபு இயல்	96 - 108
இன்பத்துப்பால்			
	8	களவு இயல்	109 - 115
	9	கற்பு இயல்	116 - 133

1. அறிவன் சிறப்பு

அறிவன் சிறப்பு என்பது, அறியாமை உலகத்திலிருந்து அகன்று, அறிவுடைய - பயன்படும் உலகத்திற்கு மக்களை அழைத்து வருவதற்கு முன்னோடியாக இருந்து, அறிவாலும், ஆற்றலாலும், பண்பாலும் சிறந்து விளங்கி, வழிகாட்டக் கூடிய அறிவனின் சிறப்புப்பற்றிக் கூறுதல் எனப்படும்.

1. அகர முதல எழுத்துஎல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

எழுத்து எல்லாம், அகரம், முதல; உலகு, ஆதிபகவன், முதற்றே.

(பொழிப்புரை): மனித முயற்சியினாலான எழுத்துக்கள் எல்லாம், அகர எழுத்தை முதன்மையாக உடையன; அது போல, உலகியலின் அடிப்படை, முயற்சியால் முன்னேற்றம் ஆவதற்குக் காரணமான அறிவனை, முதன்மையாக உடையது.

எழுத்துக்களெல்லாம் அகர எழுத்தை எப்படி முதன்மையான எழுத்தாகக் கொண்டிருக்கின்றனவோ, அப்படியே, உலகியலும், முன்னேற்றம் ஆவதற்குக் காரணமான அறிவனை, முதன்மையான முன்னோடியாகக் கொண்டிருக்கின்றது. இது தலைமை பற்றி வந்த எடுத்துக்காட்டு உவமை.

எழுத்துக்களெல்லாம் எப்படி மனித முயற்சியால் உண்டானவையோ, அப்படியே, செயற்கை உலகியலின் சிறப்புகளும் அறிவுடைய மனித முயற்சியால் உண்டானவையாகும்.

அகரம் என்ற முதல் எழுத்து மற்ற எழுத்துக்களையெல்லாம் படைக்கவோ, உருவாக்கவோ, ஆட்டி வைக்கவோ இல்லை; மற்ற எழுத்துக்களெல்லாம் உருவாவதற்கு, அது அடிப்படையாக, முதன்மையாக அமைந்திருக்கிறது; அதுபோல அறிவாற்றல் பண்புமிக்க அறிவர், உலகியல் வளர்ச்சியைப் படைக்கவோ, உருவாக்கவோ, ஆட்டி வைக்கவோ இல்லை; உலகியல் வளர்ச்சியுற, அவர்கள் அடிப்படையாக, முதன்மையான காரணமாக அமைந்திருக்கின்றனர்.

ஆதி பகவன் - ஆவதற்குக் காரணமான அறிவன். ஆதல், ஆதி போன்றவை தொழில்பெயர்ச் சொற்கள் ஆகும். ஆதல் - ஆவது; மனித சமூகம் ஒவ்வொரு துறையிலும் முன்னேறுவதற்கு அடிப்படைக் காரணமான அறிவன் என்று பொருள்படும்.

பகவன் என்பதற்கு அறிவன், ஆசிரியன், அருகன், புத்தன் போன்ற பல பொருள்கள் உண்டு. இங்குக் கொள்ள வேண்டிய பொருள், அறிவன் என்பதேயாகும். இரண்டாவது குறளில், வால் அறிவன் என்று வள்ளுவர் பயன்படுத்தியிருப்பது, கூர்ந்து நோக்கத்தக்கது. பகவு + அன் = பகவன்; பகவு - பகுத்தறிதல்; பகவன் - பகுத்தறிபவன்; அதாவது அறிவன். அறிவன் என்பது, அறிவிற் சிறந்தோனைக் குறிக்கும்.

இக்குறட்பாவிற்கு உரை எழுத வந்த பரிமேலழகர், ''உலகம் ஆதிபகவன் ஆகிய முதலை உடைத்து'' என்று உரை எழுதிவிட்டு, ''ஆதிபகவன் என்னும் இரு பெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன் முடிவு'' என இலக்கணம் கூறியதுடன், ''காணப்பட்ட உலகத்தால், காணப்படாத கடவுட்கு உண்மை கூற வேண்டுமாதலின், முதற் கடவுளது உண்மை கூறப்பட்டது'' என்று விளக்கமும் தந்துள்ளார்.

ஆதிபகவன் என்ற சொற்றொடர், இரு பெயரொட்டுப் பண்புத்தொகையாக உள்ளபடியே இருந்திருக்குமேயானால், 'ஆடித்திங்கள்', 'சாரைப்பாம்பு' என்பன போன்று, வல்லின ஒற்று மிகுந்து, 'ஆதிப்பகவன்' என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால், வள்ளுவர் அப்படிக் குறிப்பிடவில்லை. 'ஆதிபகவன்' என்றுதான் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தமிழ் இலக்கண நூலையே பின்பற்றிக் குறட் பாக்களைப் புனைந்த வள்ளுவர், தமிழ் இலக்கணத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு, பரிமேலழகர் கருத்துப்படி, 'வடநூல் மரபு' என்ற முறையில், வடமொழியின் இலக்கணத்தை ஒருபோதும் கையாண்டிருக்க வழியில்லை. 'ஆதி பகவன்' என்பதற்குத் தமிழ் இலக்கணப்படி, 'ஆதி ஆகிய பகவன்' என்று பொருள் ஏற்படாது. 'ஆவதற்குக் காரணமான பகவன் அல்லது அறிவன்' என்றுதான் பொருள் ஏற்படும்.

தமிழ்மொழிக்கே சிறப்பாக அமைந்திருப்பது புணரியலாகும். ஓர் ஒற்றுக் கூடினாலும், குறைந்தாலும் சொற்றொடரின் பொருள் வேறுபட்டுவிடும். 'ஆபயன்' என்பதற்கும், 'ஆப்பயன்' என்பதற்கும் வேறுபாடு உண்டு. அவை முறையே, 'ஆகின்ற பயன்' என்றும், 'ஆவினுடைய பயன்' என்றும் பொருள் வேறுபட்டனவாகும். 'நாட்டு கொடியை' (நாட்டு கொடியை) என்றும், 'நாட்டுக்கொடியை' (நாட்டினுடைய கொடியை) என்னும் இரு சொற்றொடர்களும் பொருள் வேறுபட்டு நிற்பனவாகும்.

உலகு என்பது உலகம், உலகியல், உலகுயிர்கள், உயர்ந்தோர், நாடு, ஒழுக்கம் என்ற பல பொருள்களைக் கொண்டது. இங்கு 'உலகியல்' என்ற பொருளைத்தான் கொள்ள வேண்டும்.

வள்ளுவத்தின் அடிப்படை, அதன் அறிவனை (அதாவது திருவள்ளுவரை), முதன்மையாக உடையது.

பௌத்தத்தின் அடிப்படை, அதன் அறிவனை (அதாவது புத்தரை), முதன்மையாக உடையது.

சமணத்தின் அடிப்படை, அதன் அறிவனை (அதாவது அருகரை), முதன்மையாக உடையது.

பொதுவுடைமைத் தத்துவத்தின் அடிப்படை, அதன் அறிவனை (அதாவது காரல் மார்க்ஸை), அடிப்படையாக உடையது.

மேற்கண்டவாறு ஒவ்வொரு ஆக்க நிகழ்வின் முன்னேற்றத் திற்கும் காரணமாக விளங்கும் அறிவர்களின் சிறப்புக்குரிய பொதுப்பண்புகளைத்தான், திருவள்ளுவர் முதல் அதிகாரத்தின் குறட்பாக்களில், பொதுப்படையாகக் கூறுகிறார்.

மக்களினத்தின் ஒவ்வொரு பிரிவினரும் - கொள்கையினரும் - கோட்பாட்டினரும் தத்தம் விருப்பத்திற்கு இணங்கத் தமக்கு ஏற்புடைய, அறிவாற்றலுடைய ஆன்றோரையோ, தத்துவத்தையோ தாம் வழிபடுவதற்குரிய எடுத்துக்காட்டாகக் கொண்டுள்ளனர். எனவேதான், உலகப் பொது அறநூல் பகர முன்வந்த வள்ளுவப் பெருந்தகையார், எந்தவொரு பிரிவினரும் வழிபடும் முழுமுதற் பொருளையோ, ஆன்றோரையோ சுட்டிக்காட்டாமல், எல்லாவிதக் கொள்கையினரும் - கோட்பாட்டினரும் - குறிக்கோளினரும் பொதுவாக ஏற்றுக்கொள்ளும் வகையில், 'ஆதி பகவன்' என்று பொதுப்படையாகவே குறிப்பிட்டுள்ளார்.

திருக்குறளின் முதல் அதிகாரத்தில் உள்ள பத்துக் குறட் பாக்களிலும் 'கடவுள்' என்ற சொல்லே இடம் பெறவில்லை. 'பகவன்', 'அறிவன்', 'மலர்மிசை ஏகினான்', 'வேண்டுதல் வேண்டாமை இலான்', 'இறைவன்', 'ஐந்தவித்தான்', 'தனக்குவமை இல்லாதான்', 'எண்குணத்தான்' என்ற சொற்கள்தாம் இடம் பெற்றிருக்கின்றன. கடவுளை வாழ்த்துதல் - வணங்குதல் - வழிபடுதல் என்ற முறையில் எந்தக் கருத்தும் சொல்லப்படவில்லை.

அருவும் உருவும் அற்ற, மனம் மொழி மெய்களைக் கடந்த ஒன்றுதான் 'கடவுள்' என்பர், தத்துவவாதிகள். கட + உள் = கடவுள்;

மனம் மொழி மெய்களைக் கடந்த நிலையினுள் மறைந்துள்ள ஒன்று. அப்படிக் கடந்து மறைந்திருக்கக்கூடிய ஒன்றன் 'தாள் தொழுதல்', 'தாள் சேர்தல்', 'அடி சேர்தல்', அந்த ஒன்று, 'ஐந்து பொறிகளை அடக்குதல்', 'ஐம்புலன்களை அடக்குதல்', 'செந்தண்மையைக் கொண்டிருந்தல்', 'எண்ணிறந்த பண்புகளைக் கொண்டிருத்தல்' போன்ற சொற்றொடர்கள் நடைமுறைக்குப் பொருந்தி வராதனவாகும். மக்களிலே மிகச் சிறந்து விளங்கும் அறிவாற்றல் மிக்க சான்றோர்க்கு மட்டுமே பொருந்தி வரக்கூடியனவாகும்.

சமயவாதிகள் போக்கில் கூறாது, உலகியல் வாழ்க்கை முறையைக் கூறி, அதன் உண்மைப் பொருள் இதுவென்று கூறியவர் வள்ளுவர் என்னும் கருத்துப்பட, 'சமயக் கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறிப் பொருள் இது என்ற வள்ளுவன்' என்று கல்லாடர் கூறியிருப்பது, போற்றி வரவேற்கத்தக்கதாகும்.

நூல் இயற்றும்போது, கடவுள் வாழ்த்தை முதலில் தொடங்கி விட்டுப் பின்னர்தான் நூற்பொருளைப் பற்றிக்கூற வேண்டும் என்ற மரபோ, விதிமுறையோ தொல் காப்பியத்தில், எந்த ஓர் இடத்திலும் குறிப்பிடப்படவே இல்லை. தொல்காப்பிய இலக்கணப் பெருநூலின் தொடக்கத்திலேகூட, 'கடவுள் வாழ்த்து' காணப்படவில்லை. சங்க கால நூல்கள் எவையும், 'கடவுள் வாழ்த்தோடு' தொடங்கப் பட்டதாகக் குறிப்புகள் எவையும் உறுதியாக இல்லை. வள்ளுவர் இயற்றிய குறட்பாக்களைத் 'திருக்குறள்' என்ற நூல் வடிவில் பிற்காலத்தில் தொகுத்தவர்தான், 'கடவுள் வாழ்த்து' என்ற தலைப்பினை இட்டிருக்க வேண்டும் என்று எண்ணுவதில் தவறேதுமில்லை.

(கருத்துரை): எழுத்துக்களுக்கெல்லாம், அகரம் என்ற எழுத்து, எப்படி முதன்மையாக அமைந்திருக்கிறதோ, அதுபோல, அறிவால் வளர்ந்துவரும் உலகத்திற்கும், ஆவதற்குக் காரணமான அறிவாற்றல் மிக்க ஆன்றோர், முதன்மையாக அமைந்திருக்கிறார்கள். (1)

**2. கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.**

வால் அறிவன், நற்றாள், தொழாஅர், எனின், கற்றதனால், ஆய, என்பயன்கொல்?

(பொ-ரை): தூய்மையான அறிவாற்றலிற் சிறந்தோரின் அடியொற்றிப் பணிந்து நின்று, அவரது அறிவுரையின்படி ஒழுகா

விட்டால், ஒருவர் என்னதான் கற்றிருந்தாலும், என்ன பயன் உண்டாக இயலும்? ஒரு பயனும் உண்டாகாது.

வால் அறிவன் - துய்மையான அறிவாற்றலிற் சிறந்தோர்; 'நற்றாள் தொழுதல்' என்பது அடியொற்றிப் பணிந்து நின்று நல்லறிவுரைகளைப் பின்பற்றி வாழ்தல் என்று பொருள்படும்.

'கொழுநன் தொழுது எழுவாள்' (குறள் - 55)

கணவனுக்கு ஏற்றபடி அவனைப் பின்பற்றி ஒழுகும் மனைவி.

'கைகூப்பி எல்லா உயிரும் தொழும்' (குறள் - 260)

எல்லா உயிர்களும் அன்பு காட்டி இருக்கும்.

'ஒளி தொழுது ஏத்தும் உலகு' (குறள் - 970)

உயர்ந்தோர் புகழைப் போற்றிப் பாராட்டுவர்.

'ஏனைய, மன்னுயிர் எல்லாம் தொழும்' (குறள் - 268)

மற்ற உயிர்கள் எல்லாமும் அவருடைய பெருமையை உணர்ந்து அன்பு செலுத்தும்.

தொழுதல் என்பது வணங்குதல், வழிபடுதல், பின்பற்றுதல், பணிதல், போற்றுதல், பாராட்டுதல், அன்பு செலுத்துதல் என்று பல பொருள்படும்.

"அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்." (குறள் - 441)

என்பது வள்ளுவர் வாக்கு. 'வால் அறிவன்' என்ற சொற்றொடர் வைதிகர்களின் கற்பனைக் கடவுளைக் குறிப்பதாகாது.

(க-ரை): ஆவதற்குக் காரணமான தூய்மையான அறிவாற்றலிற் சிறந்தோரின் அறிவுரையின்படி நடப்பதே, ஒருவன் தான் கற்ற கல்வியினால் எதிர்பார்க்கப்படும் பயன் என்று கருதப்படும். (2)

3. மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ் வார்.

மலர்மிசை ஏகினான், மாண் அடி, சேர்ந்தார், நிலமிசை, நீடு வாழ்வார்.

(பொ-ரை): மக்கள் மனமாகிய மலர்மீது பொருந்தியிருந்து வாழக்கூடிய, அறிவாற்றலிற் சிறந்த சான்றோரின் அறிவுரைகளைப் பின்பற்றி வாழ்பவர்கள், உலகின்கண் நிலைபெற்று, இன்புற்று வாழ்வார்கள்.

மலர் என்பது மனம் அல்லது நெஞ்சத்தைக் குறிக்கும் உருவகச் சொல்; **மிசை** - மேல்; **ஏகுதல்** - எழுதல்; பொருந்தியிருத்தல்; ஏகோபித்தல் - ஒன்றுபடுத்தல்; **மலர்மிசை ஏகினான்** - உள்ளத்தில் பொருந்தியிருந்து வாழும் அறிவாற்றலில் சிறந்த சான்றோர்; நிலைபெற்று வாழ்தல் - துன்பத்திற்கு இடமின்றி இன்பமுற்று நீண்ட காலம் வாழ்தல்.

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்." (குறள் - 294)

என்பது வள்ளுவர் வாக்கு.

'உள்ளத்தில் உளன்' என்பதும், 'மலர்மிசை ஏகினான்' என்பதும் ஒரே பொருளை உணர்த்துவனவாகும். **மாண் அடி சேர்தல்** - சிறந்த வகையில் அடியொற்றி நடத்தல்; அதாவது சான்றோரைப் பின்பற்றி நடத்தல். 'மலர்மிசை ஏகினான்' என்ற சொற்றொடர், வைதிகர்களால் கற்பனையாகக் கற்பிக்கப்பட்ட கடவுளைக் குறிக்காது.

(க-ரை): மக்களின் நெஞ்சங்களில் நீங்காமல் நிறைந்து வாழக்கூடிய அறிவாற்றலிற் சிறந்த சான்றோரின் அறிவுரைகளைப் பின்பற்றி வாழ்பவர்கள், உலகத்தில் நீண்ட காலம் இன்புற்று வாழ்வார்கள். (3)

**4. வேண்டுதல்வேண் டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.**

வேண்டுதல் வேண்டாமை இலான், அடி சேர்ந்தார்க்கு, யாண்டும், இடும்பை இல.

(பொ-ரை): தன்னலம் அற்ற முறையில் தீமை பயக்கும் விருப்பும் வெறுப்பும் இல்லாமல், அறிவாற்றலிற் சிறந்து வாழும் சான்றோர் காட்டிய வழியில், அவரைப் பின்பற்றி நடுவு நிலையோடு நடப்பவர்களுக்கு, எந்தக் காலத்திலும் துன்பம் ஏற்படுவது இல்லை.

வேண்டுதல் வேண்டாமை - தீமை பயக்கும் விருப்பும் வெறுப்பும் இல்லாத தன்மை; **அடி சேர்ந்தார்** - காட்டிய வழியில் பின்பற்றிச் செல்வோர்; **இடும்பை** - துன்பம்; **வேண்டுதல் வேண்டாமை இலான்** - நடுநிலையாளர் - அதாவது சான்றோர்.

'அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம்' (குறள்-368)

அவா இல்லாதவர்களுக்குத் துன்பம் என்பது இல்லை.

'வெஃகாமை வேண்டும் பிறன் கைப்பொருள்' (குறள்-178)

பிறருடைய கைப்பொருளை விரும்பாதிருக்க வேண்டும்.

'வெஃகின் விறல் ஈனும்' (குறள்-180)

பொருளை விரும்பினால், அது அழிவைத் தரும்.

'வேண்டாமை என்னும் செருக்கு' (குறள்-180)

பொருளை விரும்பாமல் வாழும் பெருமை வெற்றியைத் தரும்.

'நகையும் உவகையும் கொல்லும் சினம்' (குறள்-304)

வெறுப்பின் விளைவான சினம் முகமலர்ச்சியையும், அக மகிழ்ச்சியையும் அழிக்கும்.

'தன்னையே கொல்லும் சினம்' (குறள்-305)

வெறுப்பின் விளைவான சினம் ஒருவன் தன்னையே அழித்துவிடும்.

'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி' (குறள்-306)

வெறுப்பின் விளைவான சினம் ஒருவன் தன்னைச் சேர்ந்தவரையே அழிக்கும் நெருப்பு ஆகும்.

'சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை' (குறள்-310)

வெறுப்பின் விளைவான சினத்தை அடியோடு துறந்தவர், துறந்தவர்க்கு ஒப்பாவர்.

என்று வள்ளுவர் விருப்புக்கும், வெறுப்புக்கும் கூறியுள்ள விளக்கங்கள் நோக்கத் தக்கனவாகும்.

''சமன்செய்து சீர்தூக்கும்கோல்போல் அமைந்து ஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.'' (குறள்-118)

என்பது வள்ளுவர் வாக்கு. 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்ற சொற்றொடர், வைதிகர்களின் கற்பனைக் கடவுளை உணர்த்தாது.

(க-ரை): தன்னலம் அற்ற முறையில் தீமை பயக்கும் விருப்பும் வெறுப்பும் இல்லாத வகையில், அறிவாற்றலிற் சிறந்த சான்றோர் காட்டிய வழியில், அவரைப் பின்பற்றி நடப்பவர்களுக்கு, எக்காலத்திலும், எவ்விடத்திலும் துன்பம் ஏற்படுவது இல்லை. (4)

ரு. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இறைவன், பொருள்சேர் புகழ், புரிந்தார் மாட்டு, இருள் சேர், இருவினையும், சேரா.

(பொ-ரை): அறிவாற்றலிற் சிறந்த மக்களின் ஒரு பெருந் தலைவரின் பொருள் பொருந்திய புகழை விரும்பி, அவரது அறிவுரையின்படி வாழ்பவரிடத்து, அறியாமையால் உண்டாகும் பெருந்துன்பங்கள் எவையும் வந்து சேரா.

இருள் - அறியாமை; **இருவினை** - பெருந்துன்பங்கள்; இருநிலம் - பெரிய நிலம் என்பது போல; இரு என்பது இரண்டு என்ற எண்ணிக்கையைக் குறிக்காது; 'பெரிய' என்ற உரிச்சொல்லையே குறிக்கும். **இறைவன்** - தலைவன்.

'இறைவன்' என்ற சொல் வைதிகர்களின் கற்பனைக் கடவுளைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படவேயில்லை. 'இறை', 'இறைவன்' ஆகிய சொற்கள் அரசு, அரசன், தலைமை, தலைவன் என்ற பொருள்களிலேதான், திருக்குறளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. 'இறைவன்' என்ற சொல், தலைவனையும், அரசனையும் மட்டுமே முதலில் குறித்து வந்த சொல்லாகும். அது நாளடைவில், மக்களால் கற்பிக்கப்பட்டு, வணங்கப்பட்ட கற்பனைக் கடவுளுக்கும் பயன்படுத்தப்பட்டது. அரசன் வாழ்ந்த அரண்மனையைக் குறித்த கோயில் என்ற சொல்லே, பின்னர் கற்பனைக் கடவுள் நிலை நாட்டப்பட்ட இடத்தையும் குறிக்கும் சொல்லாக ஆயிற்று.

'மக்கட்கு, இறையென்று வைக்கப்படும்' (குறள்-388)

இறை என்பது தலைவன் என்ற பொருளில் வருகிறது.

'இறைகாக்கும் வையகம் எல்லாம்' (குறள்-547)

இறை என்பது அரசன் என்ற பொருளைக் குறிக்கிறது.

'ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து' (குறள்-541)

இறை புரிந்து என்பது அரசனது நடுநிலைத் தன்மையைக் குறிக்கிறது.

'இறை கடியன் என்றுரைக்கும் இன்னாச் சொல்' (குறள்-564)

இறை என்பது அரசனைக் குறிக்கிறது.

'இறைவற்கு, இறையொருங்கு நேர்வது நாடு' (குறள்-733)

இறைவற்கு இறை என்பது அரசனுக்குச் செலுத்தும் இறைப் பொருள் என்று பொருள்படும்.

'இறைவற்கு, உறுதி பயப்பதாம் தூது' (குறள்-690)

இறைவற்கு என்பது அரசனுக்கு என்று பொருள்படும்.

'இறைவன், செறினும் சீர்குன்றல் இலர்' (குறள்-778)

இறைவன் என்பது அரசனைக் குறிக்கும்.

(க-ரை): அறிவாற்றலிற் சிறந்த ஒரு பெருந்தலைவர் அறிவுறுத்தியபடி, ஒருவர் நடந்து கொள்வாரேயானால், அவரது வாழ்க்கையில் பெரிய துன்பங்கள் எவையும் வந்து சேரா. (5)

**6. பொறிவாயில் ஐந்துஅவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.**

பொறிவாயில், ஐந்து, அவித்தான், பொய்தீர், ஒழுக்க நெறிநின்றார், நீடுவாழ்வார்.

(பொ-ரை): ஐம்பொறிகள் வாயிலாகச் செல்லும் ஐம்புலன் களையும் கட்டுப்படுத்தி அடக்கக்கூடிய, அறிவாற்றலிற் சிறந்த சான்றோரது பொய்ம்மையல்லாத உண்மையான ஒழுக்க நெறியைக் கடைப்பிடிப்பவர்கள், உலகத்தில் நன்னிலை பெற்று நீண்ட காலம் வாழ்வார்கள்.

'ஐம்பொறிகள்' என்பன, மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவையாகும். 'ஐம்புலன்கள்' என்பன, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவையாகும்.

ஐந்து புலன்களின் ஆவல்களையும் வெல்ல வேண்டும் என்னும் கருத்துப்பட, ''அடல் வேண்டும் ஐந்தன்புலத்தை'' (குறள்-343) என்றார் வள்ளுவர்.

ஐந்து புலன்களால் ஆகும் ஆவல்களை ஒழித்தவனுடைய வல்லமை என்னும் கருத்துப்பட, ''ஐந்தவித்தான் ஆற்றல்'' (குறள்-25) என்றார்.

அறிவு என்னும் அங்குசக் கருவியால், ஐம்புலன்களாகிய யானைகளை அடக்கிக் காக்கவல்லவன் என்னும் பொருள்பட ''உரன் என்னும் தோட்டியால் ஓர் ஐந்தும் காப்பான்'' (குறள்-24) என்றார்.

ஒரு நிலையில், ஆமை போல ஐம்புலன்களையும் அடக்கி ஆளவல்லவனானால், என்னும் பொருள்பட ''ஒருமையுள் ஆமை போல் ஐந்து அடக்கல் ஆற்றின்'' (குறள்-126) என்றார்.

பொய்தீர் ஒழுக்கம் - பொய்ம்மை நீங்கிய உண்மையான ஒழுக்க நெறி. ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் ஒழுகுவானேயானால், அப்படிப்பட்டவன் உலகில் உள்ளவர்களின் உள்ளங்களில் எல்லாம் இடம்பெற்று இருப்பவனாவான் என்னும் கருத்துப்பட, ''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார், உள்ளத்துள் எல்லாம் உளன்'' (குறள்-294) என்று கூறியுள்ளார்.

'ஐந்து அவித்தான்' என்ற சொற்றொடர், வைதிகர்களின் கற்பனைக் கடவுளை உணர்த்துவது அன்று.

(க-ரை): ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி அடக்கிய, அறிவாற்றலிற் சிறந்த சான்றோரின் உண்மையான ஒழுக்க நெறியை, அவர்கள் அறிவுறுத்தியபடி கடைப்பிடித்து ஒழுகுபவர்கள், உலகத்தில் நீண்ட காலம் வாழ்வார்கள். (6)

7. தனக்குஉவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது.

தனக்கு உவமை, இல்லாதான், தாள் சேர்ந்தார்க்கு, அல்லால், மனக்கவலை, மாற்றல், அரிது.

(பொ-ரை): தமக்கு ஒப்புவமையாக எவரும் இல்லை எனப் போற்றப்படும் அறிவாற்றலிற் சிறந்த சான்றோரின், அறிவுரைகளைப் பின்பற்றுபவர்க்கு மட்டுமே அல்லாமல், மற்றவர்க்கு, அவர்தம், மனத்தின்கண் தோன்றும் கவலைகளை மாற்றுவது என்பது இயலாத ஒரு செயலாகும்.

தாள் சேர்தல் - பின்பற்றி நடத்தல்; **கவலை** - துன்பம்; நோய்.

சான்றோர்க்கு விளக்கம் கூற வந்த வள்ளுவர், கடமைகள் இவை என்பதை அறிந்து சான்றாண்மையை மேற்கொண்டு நடப்பவர்களுக்கு, நல்லவை எல்லாம் இயல்பான கடமைகள் ஆகும் என்று உயர்ந்தோர் கூறுவார்கள் என்னும் பொருள் தோன்ற, "கடன் என்ப நல்லவை எல்லாம், கடன் அறிந்து, சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு" (குறள்-981) என்றார்.

சான்றோரின் நலம் என்று கூறப்படுவது, அவர்களுடைய பண்புகளின் நலமேயாகும் என்பதை, "குணநலம் சான்றோர் நலனே" (குறள்-982) என்றார்.

சான்றாண்மைக்குக் கடல் என்று புகழப்படுகின்றவர், ஊழிக் காலத்தில் வேறுபாடுகளே நேர்ந்தாலும், தாம் வேறுபடாமல் இருப்பர் என்பதை, "ஊழி பெயரினும் தாம் பெயரார், சான்றாண்மைக்கு, ஆழி எனப்படுவார்" (குறள்-989) என்றார்.

சான்றோரின் துணையைத் தேர்ந்து பெறவேண்டும் என்று கூற வந்த வள்ளுவர், அறம் உணர்ந்தவராய்த், தம்மைவிட மூத்தவராய் உள்ள அறிவுடைய சான்றோரின் துணையைக் கொள்ளும் வகையை அறிந்து, ஆராய்ந்துகொள்ள வேண்டும் என்பதை, "அறன் அறிந்து

மூத்த அறிவுடையார் கேண்மை, திறன் அறிந்து தேர்ந்து கொளல்'' (குறள்-441) என்றார்.

நேர்ந்துள்ள துன்பத்தை நீக்கவும், இனித் துன்பம் நேராதபடி முன்கூட்டியே காக்கவும் வல்ல தன்மையையுடைய சான்றோரைப் போற்றிப் பின்பற்றிக் கொள்ள வேண்டும் என்பதை, ''உற்ற நோய் நீக்கி உறாஅமை முற்காக்கும், பெற்றியார்ப் பேணிக் கொளல்'' (குறள்-442) என்றார்.

சான்றோர்களைப் போற்றி அவர்களைத் தாம் பின்பற்றுவதற் குரியவராகக் கொண்டு ஒழுகுதல், அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அருமையானதாகும் என்பதை, ''அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்'' (குறள்-443) என்றார்.

தம்மைக் காட்டிலும் அறிவாற்றலில் சிறந்த சான்றோரை உரியவராகக் கொண்டு, அவர்களைப் பின்பற்றி நடத்தல், வல்லமைகள் எல்லாவற்றிலும் சிறந்த வல்லமையாகும் என்பதை, ''தம்மில் பெரியார் தமரா ஒழுகுதல், வன்மையுள் எல்லாம் தலை'' (குறள்-444) என்றார்.

ஒருவருக்கு ஏற்படும் மனத் துன்பத்தைப் போக்குவதற்கான எளிய வழி, சான்றோர்களின் அறிவுரைகளைப் பின்பற்றி அவர் நடத்தலாகும். சான்றோர் என்பதற்கு விளக்கம் கூற வந்த வள்ளுவர், செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்யக்கூடிய திறமை பெற்றவர் என்னும் கருத்துபட, ''செயற்கரிய செய்வார் பெரியர்'' (குறள்-26) என்றார்.

தக்க சான்றோரின் அறிவுரைகளின்படி நடக்கும் கூட்டத்தில் சேர்ந்தொழுக வல்ல ஒருவனுக்கு அவனுடைய பகைவர்கூட எவ்விதத் தீங்கையும் செய்ய இயலாது என்னும் கருத்துப்பட, ''தக்கார் இனத்தானாய்த் தானொழுக வல்லானைச் செற்றார் செயக்கிடந்தது இல்'' (குறள்-446) என்றும் குறிப்பிட்டுள்ளார். ''தனக்கு உவமை இல்லாதான்' என்ற சொற்றொடர் வைதிகர்களின் கற்பனைக் கடவுளைச் சுட்டிக்காட்டாது.

(க-ரை): அறிவாற்றலிற் சிறந்த சான்றோரின் அறிவுரைகளைப் பின்பற்றி நடப்பவர்க்கு மட்டுந்தான் மனத் துன்பங்கள் நீங்கும்; மற்றவர்களுக்கு மற்ற எந்த வகையிலும் அவை நீங்கா என்பதாம்.(7)

8. அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறஆழி நீந்தல் அரிது.

அறஆழி, அந்தணன், தாள் சேர்ந்தார்க்கு, அல்லால், பிறஆழி, நீந்தல், அரிது.

(பொ-ரை): அறக்கடலாக விளங்கும் செந்தண்மையையுடைய, அறிவாற்றலிற் சிறந்த சான்றோரைப் பின்பற்றி, அவரோடு பொருந்தி நிற்பவர்களுக்கு மட்டுமே அல்லாமல், மற்றவர்களுக்கு எல்லாம், மற்ற துன்பக் கடல்களை நீந்திக் கரை சேருவது என்பது, அரிதான ஒரு செயலாகும்.

ஆழி - கடல்; **அறஆழி அந்தணர்** - அறக்கடலாக விளங்கும் மிகுந்த அறம்பூண்டவர். பிற கடல்கள் என்பதனை, 'பிற ஆழி' என்று சுட்டிக்காட்டுவதால், 'அற ஆழி' என்பது அறச் சக்கரம் என்று பொருள்படாது. **அந்தணன்** - செந்தண்மையுடையவன்.

"அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்" (குறள்-30)

என்ற வள்ளுவர் வாக்கு நோக்கத்தக்கது. சான்றோர்களைப் பொதுவாக அறக்கடல், அன்புக்கடல், அருட்கடல், அறிவுக்கடல், பண்புக்கடல் என்று சொல்லுவது உலக மரபு.

பிற ஆழி - அறமல்லாத பிற கடல்கள்; அதாவது, துன்பக்கடல், துயரக்கடல், தீமைக்கடல், தொல்லைக்கடல் போன்றவையாகும். 'அற ஆழி அந்தணன்' என்ற சொற்றொடர், வைதிகர்களின் கற்பனைக் கடவுளை உணர்த்தாது.

(க-ரை): அறநெறி மிகுந்த, அறிவாற்றலில் சிறந்தோராகிய செந்தண்மை பூண்டவரைப் பொருந்தி நின்று, அவர் காட்டிய வழியில் செல்லுகின்றவர்கள் மட்டுந்தான், துன்பங்களைக் கடந்து, இன்பநிலை எய்த முடியும்; மற்றவர்களால் அந்த நிலையை எய்த முடியாது என்பதாம். (8)

9. கோள்இல் பொறியில் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை.

எண் குணத்தான், தாளை வணங்காத் தலை, கோள்இல் பொறியில், குணம் இலவே.

(பொ-ரை): எண்ணிலடங்கா நிறைந்த பண்புகள் பலவற்றையும் உடைய, அறிவாற்றலிற் சிறந்த சான்றோரைப்போற்றிப் புகழ்ந்து வணங்காதவர்கள், ஐம்புலன்களையும் இழந்த ஐம்பொறிகளைப் போலப் பயனற்றவர்களாகவே கருதப்படுவார்கள்.

பொறி - ஐம்பொறிகள்; **கோளில் பொறி** - ஐம்புலன்களையும் இழந்த ஐம்பொறிகள்; அதாவது கேளாக் காது, காணாக் கண், பேசா வாய், நுகரா மூக்கு, உணரா உடல் ஆகியவையாகும். எண் என்பதற்கு எளிய அல்லது எளிமை என்ற பொருளும் உண்டு. 'எண் பொருளவாக' (குறள்-424) - எளிய பொருளுடையவனாக; 'எண்பதத்தான்' (குறள்-548) - எளிய செவ்வியுடையவனாய்; 'எண்பொருள்' (குறள்-760) - எளிய பொருள்; 'எண்பதத்தால்' (குறள்-991) எளிய செவ்வியுடன் இருப்பதால்; 'எண் குணத்தான்' என்ற சொற்றொடர் வைதிகர்கள் கற்பனையாகக் கற்பித்த கடவுளைக் குறிக்காது.

(க-ரை): எண்ணிலடங்கா நிறைந்த பல பண்புகளையும், அறிவாற்றல் சிறப்பினையும் உடைய சான்றோரைப் போற்றிப் புகழ்ந்து, அவர்களின் அறிவுரைகளைப் பின்பற்றி நடக்காதவர்கள், ஐம்புலன்களையும் இழந்து காணப்படும் ஐம்பொறிகளைப் போலவே கருதப்படுவார்கள். (9)

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடி சேராதார்.

இறைவன் அடி சேராதார், பிறவிப் பெருங்கடல், நீந்தார், சேர்ந்தார், நீந்துவர்.

(பொ-ரை): (சேர்ந்தார் - சொல்லெச்சம்) அறிவாற்றலிற் சிறந்த சான்றோராகிய ஒரு பெருந்தலைவரைப் பின்பற்றி நடக்காதவர்கள், வாழ்க்கை என்னும் பெருங்கடலைக் கடக்க மாட்டாமல், இடையிலேயே அழிந்து போய்விடுவார்கள்; ஆனால், பின்பற்றி நடப்பவர்கள், கடந்து கரையேறுவார்கள்.

இறைவன் - தலைவன்; அதாவது அறிவாற்றலிற் சிறந்த சான்றோன். இறைவன் என்ற சொல், மக்களில் சிறந்த தலைவரையும், நாடாளும் மன்னனையும் குறிக்கும். இறைவன் என்ற சொல் தொடக்கக் காலத்தில் குழுத் தலைவனையும், அரசனையும் மட்டுமே உணர்த்தி வந்த சொல். காலப்போக்கில், கற்பனைக் கடவுளுக்கும் பயன்படுத்தப்பட்டது.

கோயில் என்பது முதலில் அரசன் வாழ்ந்த அரண்மனையைக் குறித்த சொல்; நாளடைவில் கற்பனைக் கடவுள் நிலை நாட்டப்பட்ட இடத்தையும் குறிப்பதாயிற்று.

'இருவினையும் சேரா இறைவன்' (5), 'இறைவன் அடி சேராதார்' (10), 'இறையென்று வைக்கப்படும்' (388) ஆகிய குறள்களில் இறைவன் என்ற சொல் 'தலைவன்' என்ற பொருளிலேயே வருகிறது.

'இறைபுரிந்து யார் மாட்டும்' (541), 'இறை காக்கும் வையகம் எல்லாம்' (547), இறைகடியன்' (564), 'இறைவற்கு உறுதி பயப்பதாம் தூது' (690), 'இறைவற்கு' (733), 'இறைவன்' (778) ஆகிய குறட்பாக்களில் வரும் 'இறைவன்' என்ற சொல், அரசனைக் குறிப்பதாகவே அமைகிறது; வைதிகர் சொல்லும் கற்பனைக் கடவுளை உணர்த்தாது.

(க-ரை): அறிவாற்றலிற் சிறந்த சான்றோராகிய ஒரு பெருந்தலைவரைப் பின்பற்றி நடப்பவர்கள், வாழ்க்கையின் துன்பங்களையெல்லாம் கடப்பவர்கள் ஆவார்கள்; அப்படி நடக்காதவர்கள், வாழ்க்கையில் துன்பங்களிலேயே அமிழ்ந்து, அழிந்து போய்விடுவார்கள். (10)

2. வான் சிறப்பு

வான் சிறப்பு என்பது, மழையினது பயனை உணர்த்தி, அதன் சிறப்புப்பற்றிக் கூறுதல் எனப்படும்.

**1. வான்நின்று உலகம் வழங்கி வருதலான்
தான்அமிழ்தம் என்றுஉணரப் பாற்று.**

வான்நின்று, உலகம் வழங்கி வருதலால், தான் அமிழ்தம், என்று, உணரப்பாற்று.

(பொ-ரை): மழையினால் உலகத்து உயிர்கள் எல்லாம் நிலைபெற்று வாழ்ந்து வருவதால், அம்மழையே, உலகத்து உயிர்களுக்குச் சாவா மருந்தான அமிழ்தம் என்று உணரப்படத் தக்கதாகும்.

அமிழ்தம் - சுவை உணவு; **பாற்று** - தன்மை உடையது.

(க-ரை): உலகத்து உயிர்களுக்கெல்லாம் உணவாக விளங்கும் மழையே உயிர் வாழ்க்கை நிலைபெற்றுத் திகழ்வதற்கு, இன்றியமை யாததாக இருப்பதாகும். (11)

**2. துப்பார்க்குத் துப்புஆய துப்புஆக்கித் துப்பார்க்குத்
துப்புஆய தூஉம் மழை.**

துப்பார்க்குத், துப்புஆய, துப்புஆக்கித் துப்பார்க்குத், துப்புஆய தூஉம், மழை.

(பொ-ரை): உண்பவர்களுக்கு விரும்பும் உணவுப் பொருள்களை உற்பத்தியாக்கித் தருவதோடு, தன்னைப் பருகுபவர்களுக்குத் தானும் ஓர் உணவாக அமைவது, மழையேயாகும்.

து - உண்; **துப்பு** - உணவு.

(க-ரை): உணவுப் பொருள்களை விளைவிக்கவும், உண்ணும் நீர் பருகுகிறவர்களுக்கு ஓர் உணவாக அமையவும் பயன்படுவது மழையேயாகும். (12)

**3. விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து
உள்நின்று உடற்றும் பசி.**

விண்இன்று, பொய்ப்பின், விரிநீர், வியன்உலகத்து, பசி, உள்நின்று, உடற்றும்.

(பொ-ரை): பருவமழை பெய்ய வேண்டிய காலத்தில் பெய்யாது பொய்த்துப் போனால், பரந்த கடலால் சூழப்பட்ட பெரிய உலகமாக இருந்தாலும், பசியானது உடலின் உள்ளே நிலைத்து நின்று உயிர்களையெல்லாம் வாட்டிக் கொண்டேயிருக்கும்.

விண் - மழையை உணர்த்துகிறது; **பொய்ப்பின்** - இல்லாது போனால்; பசி நிலைபெற்று வருத்தும் என்பது உணவுத் தட்டுப்பாட்டை உணர்த்தும்.

(க-ரை): பருவமழை பெய்ய வேண்டிய காலத்தில் பெய்யாது பொய்த்துப் போனால், உலகில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு, உயிர்களெல்லாம் பசியால் பெரிதும் வாடும். (13)

4. ஏரின்உழாஅர் உழவர் புயல் என்னும்
வாரி வளம்குன்றிக் கால்.

புயல், என்னும் வாரி, வளம் குன்றிக்கால், உழவர், ஏரின் உழார்.

(பொ-ரை): மழை என்னும் வருவாயின் வளம் குன்றிப் போய்விட்டால், உணவுப் பொருள்களை உற்பத்தியாக்கும் உழவர்களும் ஏர்கொண்டு உழவுத் தொழிலைச் செய்ய முன்வர மாட்டார்கள்.

குன்றிக்கால் - குன்றியபோது; **வளம்** - வருவாயின் பெருக்கு.

(க-ரை): மழையானது பெய்யாது பொய்த்துப் போனால், உழவர்கள் உழவுத் தொழிலைச் செய்ய இயலாது; அதனால் உணவுப் பொருள்கள் உற்பத்தி ஆகா; அதன்மூலம் வருவாய்ப் பெருக்கம் பெரிதும் குறைந்து போய்விடும். (14)

5. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

கெடுப்பதூஉம், கெட்டார்க்குச், சார்வாய், மற்று ஆங்கே, எடுப்பதூஉம், எல்லாம் மழை.

(பொ-ரை): பெய்யாமல் மக்களின் நல்வாழ்வைக் கெடுக்கவல்லதும் மழையாகும்; அது பெய்யாத காரணத்தினால், நிலைகெட்டுப் போய்க் கிடக்கும் மக்களுக்குத் துணையாகப் பெய்து, அவர்களைக் காப்பாற்றுவதும் அந்த மழையேயாகும்.

சார்வு - துணை; **மற்றுஆங்கே** - முன்போலவே; **கெடுப்பது** - அழிப்பது; **எடுப்பது** - தூக்கிவிடுவது.

(க-ரை): மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கும், தீய வாழ்வை எய்துவதற்கும் மழையே முக்கிய காரணமாக அமையும். (15)

6. விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

விசும்பின், துளிவீழின், அல்லால், மற்று ஆங்கே, பசும்புல், தலைகாண்பு, அரிது.

(பொ-ரை): வானத்திலிருந்து மழையின் துளிவீழ்ந்தால் ஒழிய, உலகத்தில் வளரும் பசும்புல்லின் தலை நுனியைக் காண்பது என்பதுகூட அரிதாகிவிடும்.

விசும்பு - வானம்; அதாவது மேகம்; **காண்பு** - காண்பது; **மற்று** - அசை.

(க-ரை): மழை பொழியாவிட்டால் உலகத்தில் பசும்புல் முளை காண்பதுகூட அருமையாகிவிடும். (16)

7. நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்துஎழிலி
தான்நல்காது ஆகி விடின்.

தடிந்து எழிலி, தான் நல்காது, ஆகிவிடின், நெடுங்கடலும், தன்நீர்மை, குன்றும்.

(பொ-ரை): முகிலினம் மின்னிப் பெருமழையாகப் பெய்து, நீரைக் கொடுக்காவிட்டால், பெரிய கடலின் நீர் வளங்கூடக் குன்றிப் போய்விடும்.

தடித்து - மின்னல்; **தடிந்து** - மின்னி.

(க-ரை): மழையானது பெய்யாவிட்டால் கடலின் நீர் வளமும், கடலில் வாழும் உயிரினங்களின் நல்வாழ்வும் குன்றிப் போய்விடும். (17)

8. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

வானம் வறக்கு மேல், வானோர்க்கும், ஈண்டு, சிறப்பொடு, பூசனை செல்லாது.

(பொ-ரை): மழை பெய்யாது போகுமேயானால், இவ்வுலகில், மறைந்த வான்புகழ் கொண்ட உயர்ந்தோர்க்காக நடைபெறும் விழாவும் நடைபெறாது; அவர்களுக்கான வழிபாடும் நடைபெறாது.

பூசனை - வழிபாடு; **வானோர்** - மறைந்த வான்புகழ் பெற்ற பெருமக்கள்.

(க-ரை): மழை பொய்த்துப் போகுமேயானால், அதனால் ஏற்படும் வறட்சி காரணமாக, மறைந்த வான்புகழ் கொண்ட உயர்ந்தோர்க்கு நடைபெறும் வழிபாடும், திருவிழாவும் ஒருசேர நடைபெறா. (18)

9. தானம்தவம் இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்காது எனின்.

வானம், வழங்காது எனின், வியன் உலகம், தானம், தவம் இரண்டும் தங்கா.

(பொ-ரை): மழை பொழியவில்லை என்றால் இந்தப் பரந்த உலகத்தில், ஏனையோர் பொருட்டுச் செய்யப்படும் தானமும், தம்பொருட்டுச் செய்யப்படும் தவமும் நடைபெறாமல் போய்விடும்.

தானம் - இல்லாதவர்க்குத் தன்னால் இயன்றதைக் கொடுத்தல்; **தவம்** - மன அடக்கம் கொள்ளுதல்.

(க-ரை): மழையானது பெய்யவில்லை என்றால், இல்லறத்திற்குரிய தானமும் நடைபெறாது; துறவறத்திற்குரிய தவமும் இனிது நடைபெறாது. (19)

10. நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

நீர் இன்று, அமையாது, உலகுஎனின், யார் யார்க்கும், ஒழுக்கு, வான்இன்று, அமையாது.

(பொ-ரை): எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலகியல் வாழ்க்கை ஈடேறாது என்றால், அந்த நீரும் மழையில்லாமல் கிடைக்கப் பெறாது.

ஒழுக்கு - தண்ணீர்; **வான்** - மழை.

(க-ரை): மழை இல்லாமல் உலகில் நீரில்லை; குடிநீர் இல்லாமல் ஒழுக்க நெறியில் நின்று மக்கள் ஒருநாளும் உயிர் வாழ முடியாது. (20)

3. துறந்தார் சிறப்பு

துறந்தார் சிறப்பு என்பது, பொதுநல நோக்கோடு, இல்லற நலம் முழுவதையும் துறந்து, மனித சமூகத்தின் முன்னேற்றத் திற்கான நோன்புகள் பலவற்றையும் நோற்றுத் தன்னலம் துறந்து வாழ்தல் எனப்படும்.

1. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

ஒழுக்கத்து நீத்தார், பெருமை, விழுப்பத்து, வேண்டும், பனுவல் துணிவு.

(பொ-ரை): நல் ஒழுக்கத்திலே நிலைத்து நின்று, பல்வேறு வகையான தீயவொழுக்கம் எல்லாம் துறந்தவர்களின் சிறப்பை, எல்லாவற்றிலும் மேலாக வைத்துப் போற்ற வேண்டும் என்பது, நூல்கள் எல்லாவற்றினுடைய முடிந்த முடிவாகும்.

பெருமை - சிறப்பு; **துணிவு** - உறுதியாகக் கொள்ளுதல்; அதாவது முடிவு கட்டுதல்.

(க-ரை): சான்றோரின் சிறந்த நூல்களெல்லாம், துறந்தாரின் பெருமையையே, பெருமைகள் எல்லாவற்றுள்ளும் சிறந்த ஒன்றாகக் கூறும். (21)

2. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண்டு அற்று.

துறந்தார் பெருமை, துணைக்கூறின், வையத்து, இறந்தாரை, எண்ணிக்கொண்டு அற்று.

(பொ-ரை): உயிரோடு இருக்கும்போதே பல்வேறுவிதமான பற்றுக்களையெல்லாம் துறந்து வாழ்பவர்களின் சிறப்பை அளவிட்டுக் கூற முற்படுவோமாயின், அது உலகில் இறந்த பிறகே பற்றுக்களை விடவேண்டி வந்தவர்கள் என்று குறிப்பிடக்கூடியவர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கும் என்று எண்ணிப் பார்ப்பதன்மூலம் தெளிவுபட்டுவிடும்.

(க-ரை): தம் வாழ்நாளில் எதையும் துறக்காமல் இறந்து போனவர்களின் எண்ணிக்கையை மட்டும் எடுத்துக்கொண்டு, வாழ்நாளில் எல்லாவற்றையும் துறந்து வாழ்பவர்களின் எண்ணிக்கை

யோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போதுதான், துறந்தாரின் சிறப்பு எவ்வளவு பெருமையுடையது என்பது புலப்படும். (22)

3. இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.

இருமை, வகைதெரிந்து, ஈண்டு, அறம்பூண்டார், பெருமை, உலகு, பிறங்கிற்று.

(பொ-ரை): நன்மை, தீமை எனும் இரண்டின் பாகுபாடுகளை ஆராய்ந்தறிந்து, இவ்வுலகத்தில் மிகுதியான அறத்தை மேற்கொள்ளும் சீரியோரின் சிறப்பே, உலகில் மிகச் சிறந்தது ஆகும்.

ஈண்டுதல் - இவ்வுலகத்தில் மிகுதல்; **ஈண்டறம்** - இவ் வுலகத்தில் மிக்க அறம்; **இருமை** என்பது 'நன்மை', 'தீமை' ஆகிய இரண்டு தன்மைகளைக் குறிப்பதாகும். பாவ புண்ணியம், பிறப்பு - வீடுபேறு, இப்பிறப்பு - மறுபிறப்பு போன்ற கற்பனைக் கூற்றுகளைக் குறிப்பதாகாது.

உலகியல் வாழ்வில் ஒருவரால், 'நன்மை', 'தீமை'களைப் பற்றித்தான் ஆராய்ந்தறிய இயலுமே அல்லாமல், கண்ணாலும், கருத்தாழத்தாலும் அறிய இயலாத கற்பனை 'வீடுபேற்றைப்' பற்றி ஆராய்ந்து பார்க்க இயலாது. உலகியல் வாழ்க்கையின் செம்மைக்கு உதவி புரிவதுதான் அறநெறி வழிப்பட்ட வாழ்க்கையாகும். அறச்செயல் எப்பொழுதுமே நல்வழி பயப்பதாகும். அறநெறியில் சிறந்து விளங்குபவர்தான், நன்மை புரிவதிலே நாட்டமுடையவராக இருக்க முடியும்.

உலகில் நின்று நிலவக்கூடிய பெருமையைத்தான் வள்ளுவர் சுட்டிக்காட்டுகிறாரே ஒழிய, கற்பனையான உலகின் பெருமையைப் பற்றி அன்று.

(க-ரை): நன்மை, தீமைகளின் பாகுபாடுகளை நன்கு ஆராய்ந்தறிந்து, இவ்வுலகத்தில் நன்மைகளையே மிகுதியாக மேற்கொள்ளும் சீரியோரின் சிறப்பே உலகில் சிறந்ததாகும். (23)

4. உரன்என்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்குஓர் வித்து.

உரன் என்னும், தோட்டியான், ஓர் ஐந்தும் காப்பான், வரன் என்னும், வைப்பிற்கு, ஓர் வித்து.

(பொ-ரை): அறிவு என்னும் அங்குசத்தால், ஐம்பொறிகள் என்னும் யானைகள் ஐந்தினையும், ஐம்புலன்கள் மேல் செல்லாமல் காக்கும் துறவி, துறவறம் என்னும் நிலத்திற்கு ஏற்ற ஒப்பற்ற விதையாவான்.

உரன் வலிமை; அதாவது மன உறுதி; **தோட்டி** - குத்துக்கோல்; அதாவது அங்குசம்; **வைப்பு** - நிலம்.

(க-ரை): துறவறத்தில் ஈடுபட்டிருக்கும் சிறந்த துறவிக்கு அடிப்படையாக விளங்குவது ஐம்பொறிகளின் புலன் அடக்கப் பண்பேயாகும். (24)

**5. ஐந்துஅவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திறனே சாலுங் கரி.**

ஐந்துஅவித்தான், ஆற்றல், அகல்விசும்புளோர் கோமான், இந்திறனே, சாலுங், கரி.

(பொ-ரை): ஐந்து புலன்களாலாகும் அவாக்களைக் கட்டுப் படுத்தி அடக்கியவனுடைய வல்லமைக்குப் பரந்த வான்புகழ் கொண்டோரில் மிக உயர்ந்தோனாகக் கருதப்படும் - இனிய திறமை மிக்க அறிவாற்றலில் சிறந்த சான்றோனாகக் கருதப்படும் அறிவனே தக்க சான்று ஆவான்.

சாலும் - பொருந்தும்; **சான்று** - சாட்சி; **அகல் விசும்புளார் கோமான்** - பரந்த வான்புகழ் கொண்டோரில் மிக உயர்ந்தோர்; **இந்திரன் - இந்திறன்** - இனிய திறமைமிக்க அறிவன்; 'ற'கர 'ர'கரப் போலியாகவும் கொள்ளப்படும்; பாட வேறுபாடாகவும் கருதப்படும்.

ஐம்புலன்களை அடக்கியவர்களில் மிகச் சிறந்தவரும், வான்புகழ் கொண்டவர்களில் மிக உயர்ந்தவருமான ஒரு சீரியோரே 'விசும்புளார் கோமான்' என்று குறிப்பிடப் பெறுகின்றார். 'இந்திறன்' என்ற சொல், பிற்காலத்தின் 'இந்திரன்' என்று திரிபுற்றதாக ஒரு வழக்கு உண்டு.

'ஐந்திறம்' என்பது, 'ஐந்திரம்' என்று பாட வேறுபாடு அடைந்து, உருக்குலைந்தது போன்று, 'இந்திறன்' என்பது 'இந்திரன்' என்று உருக்குலைந்திருக்கிறது பிற்கால ஏடுகளில்.

பண்டித அ.கி.நாயுடு அவர்கள், 'தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்' என்ற நூலில் பக்கம் 18-19-இல், ''பழைய ஓலைச் சுவடிகளில் வல்லின 'ற'கரத்திற்கும், இடையின 'ர'கரத்திற்கும்

வேறுபாடு காண்டல் அரிது. இவ்வறியா நிலையில், ஐந்திறம் என்பது ஐந்திரம் என எழுதப்பட்டிருக்கிறது. அதில் வியப்பு இல்லை'' என்று குறிப்பிட்டுள்ளார். அதுபோல, 'இந்திறன்' என்ற சொல்லும், 'இந்திரன்' என்று ஆகியிருக்கக்கூடும்.

வடமொழியாளரின் கற்பனைப் புராணக் கதைப்படி, ஐம்புலன்களையும் அடக்கமாட்டாமல், அகலிகையைப் புணர்ந்து, கௌதம முனிவரால் சாபமிடப்பட்டு, அருவருப்பான தோற்றத்தைப் பெற்று, உலாவிய இழிமகனான இந்திரனை, இக்குறளோடு பொருத்திப் பொருள் கூறுவது எந்த வகையிலும் பொருந்தி வராது.

ஐம்புலன்களையும் அடக்கிய ஆற்றல் மிகுந்த ஒருவரின் வலிமைக்கு அந்த இந்திரனை உவமையாகக் கொண்டு, வள்ளுவப் பெருந்தகையார் கூறுவார் என்று எண்ணுவதற்கே இடமில்லை.

(க-ரை): ஐந்து புலன்களால் ஏற்படும் அவாக்களை அடக்கக்கூடிய வல்லமைக்கு, பரந்த வான்புகழ் கொண்டோரில் உயர்ந்தவராக விளங்கும் இனிய அறிவாற்றலில் சிறந்த சான்றோரே சான்று ஆவர். (25)

6. செயற்குஅரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்குஅரிய செய்கலா தார்.

செயற்குஅரிய, செய்வார், பெரியர்; சிறியர், செயற்குஅரிய செய்கலாதார்.

(பொ-ரை): செய்வதற்கு அரியனவாகிய செயல்களைச் செய்பவர் பெரியோர் ஆவர்; செய்வதற்கு அரியனவாகிய செயல்களைச் செய்ய முடியாதவர் சிறியோர் ஆவர்.

செயற்கரிய - பிறர் எளிதில் செய்ய முடியாத செயல்கள்; அதாவது ஒழுக்கத்தைப் பேணுதல், ஐம்பொறிகளை அடக்குதல், பொதுத்தொண்டு புரிதல் போன்றன.

(க-ரை): செயல்களில், அரிய பெருமை கொண்டவை, இழிந்த சிறுமை படைத்தவை ஆகியவற்றைக் கொண்டே, பெரியவர் யார்? சிறியவர் யார்? என்பதைக் கணக்கிட்டுவிடலாம். (26)

7. சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று, ஐந்தின், வகை தெரிவான் கட்டே, உலகு.

(பொ-ரை): சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புலன்களின் வகைகளை ஆராய்ந்து அறியக்கூடிய வல்லமை படைத்தவனிடத்தே அமைந்ததுதான், இந்த உலகம் ஆகும்.

வகை - ஒவ்வொரு பொருளின் தனித்தன்மை; **கட்டே** - கண்ணதே.

(க-ரை): ஐம்புலன்களின் தன்மையை ஆராய்ந்து அறிந்த துறவிகளே உலக மக்களின் உள்ளத்தை ஆண்டு, அதனைக் கட்டுப்படுத்த வல்லவராவார்கள். (27)

8. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

நிறைமொழி மாந்தர், பெருமை, நிலத்து, மறைமொழி, காட்டிவிடும்.

(பொ-ரை): உண்மை நிறைந்த மொழியினையுடைய துறவிகளின் சிறப்பை உலகத்தில் என்றும் அழியாமல் உறுதியாக இருந்து, வைத்துப் போற்றுதலுக்குரிய அவர்களின் அறநூல்களின் கருத்துக்களே உணர்த்திவிடும்.

நிறைமொழி - உண்மை நிறைந்த மொழி; **மறைமொழி** - திருமறைகளிலுள்ள அதாவது வாழ்க்கைக்கு வழிகாட்டும் பெருநூல்களிலுள்ள நன்மொழி; **மாந்தர்** - துறவிகள்; மறைபொருள் - உட்பொருள்; **மறையோர்** - வாழ்க்கை வழிகாட்டிகள்; **மறை** - உறுதிச்சொல்; உள்ளத்தில் மறைவாக என்றென்றும் வைத்துக் காப்பாற்றக்கூடிய நற்கருத்துக்கள் மறைமொழி எனப்படும். ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி'' என்பது, தொல்-பொருள் - 490.

(க-ரை): உண்மை நிறைந்த மொழியினையுடைய துறவிகளின் சிறப்பை, அவர்கள் இயற்றி வைத்துச் சென்றுள்ள வாழ்க்கை வழிகாட்டும் நூல்களின் நற்கருத்துக்களே உலகிற்கு உணர்த்திவிடும். (28)

9. குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

குணம் என்னும், குன்றுஏறி நின்றார், வெகுளி, கணமேயும், காத்தல், அரிது.

(பொ-ரை): பண்பு என்னும் குன்றுஏறி நிற்கும் துறவிகள் போன்ற பெரியோர்களின் சினம், சிறுநொடிப் பொழுதுதான் நிலைத்துநிற்கும் என்றாலும், அந்தச் சினத்தைத் தடுத்தல் என்பது மற்றவர் யாருக்கும் இயலாத செயலாகும்.

குணம் - பண்பு; **குன்று** - மலை; **வெகுளி** - சினம்; **கணமேயும்** - சிறுநொடிப் பொழுதேனும்.

(க-ரை): பண்பு நிறைந்த துறவிகளுக்குச் சினம் பெரும்பாலும் வராது; அப்படியே சிறுநொடிப்பொழுது வந்தாலும், அதனை வேறு யாரொருவராலும் தடுத்து நிறுத்த இயலாது. (29)

10. அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

எவ்வுயிர்க்கும், செந்தண்மை, பூண்டொழுகலான், அறவோர், மற்று, அந்தணர், என்போர்.

(பொ-ரை): எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளுடையவராய் நடந்துகொள்வதால்தான், அறவோர் அந்தணர் என்று அழைக்கப்படுகின்றனர்.

அந்தணர் - அழகிய அருள் உடையார்; அதாவது அருளுடைய துறவிகளைக் குறிக்கும். ஒரு குறிப்பிட்ட வகுப்பாரைக் குறிக்காது. 'அந்தணர்' என்ற சொல் 'பார்ப்பாரை'க் குறிக்காது. 'பார்ப்பார்' என்றால் திருமறை பார்ப்பார், நாழிகை பார்ப்பார், நிமித்தம் பார்ப்பார் என்றே பொருள்படும்.

(க-ரை): துறவிகள் உயிர்களிடத்திலெல்லாம் அருளுடைய வராய் நடத்தலால், அவர்கள் அந்தணர் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்றனர். (30)

4. அறன் சிறப்பு

அறன் சிறப்பு என்பது, பல்வேறு வகையான அறங்களை யெல்லாம் பொதுவகையாலும், தனித்த வகையாலும் சிறப்பித்து வலியுறுத்திக் கூறுதல் எனப்படும்.

**1. சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தின்ஊங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு.**

சிறப்பு ஈனும்; செல்வமும் ஈனும், உயிர்க்கு, அறத்தின் ஊங்கு, ஆக்கம், எவனோ.

(பொ-ரை): அறமானது சிறப்பையும் நல்கும்; செல்வத்தையும் நல்கும். ஆகையினால், மக்களுக்கு அத்தன்மை வாய்ந்த அறத்தைவிட ஆக்கம் பயப்பது வேறு என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை!

சிறப்பு - மதிப்பு; **ஈனும்** - நல்கும்; **ஆக்கம்** - செல்வம்.

(க-ரை): மக்களுக்கு அறத்தைவிட ஆக்கம் பயக்கும் பேறு வேறொன்றும் இல்லை. (31)

**2. அறத்தின்ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்குஇல்லை கேடு.**

அறத்தின் ஊங்கு, ஆக்கமும் இல்லை; அதனை, மறத்தலின் ஊங்கு, கேடு இல்லை.

(பொ-ரை): ஒருவருக்கு அறத்தைவிடச் சிறந்த ஆக்கம் பயப்பது வேறொன்றும் இல்லை; அப்படிப்பட்ட அறத்தை மறப்பதைக் காட்டிலும், கேடு தரக்கூடியதும் வேறொன்றுமில்லை.

மறத்தல் - அறத்தை மறத்தல்; **அறம்** - நன்மை; **மறம்** - தீமை.

(க-ரை): ஒருவருக்கு அறத்தைவிட ஆக்கம் தருவது வேறொன்றும் இல்லை; அதனை மறப்பதைக்காட்டிலும் கேடு தருவதும் பிறிதொன்றும் இல்லை. (32)

**3. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.**

அறவினை, ஒல்லும் வகையான், ஓவாதே, செல்லும் வாய் எல்லாம், செயல்.

(பொ-ரை): ஒருவர் அறச்செயலைச் செய்யக்கூடிய வகைகளிலெல்லாம், செல்லும் இடங்களிலெல்லாம், எக்காரணங் கொண்டும் கைவிடாமல், போற்றிச் செய்ய வேண்டும்.

ஒல்லும் - இயலும்; **ஓவாதே** - இடைவிடாது; **செல்லும் வாய்** - செய்யும் வழி.

(க-ரை): ஒருவர் அறச்செயல்களை எல்லா இடங்களிலும், எல்லா வகைகளிலும், எப்பொழுதும் கைவிடாமல் செய்துவர வேண்டும். (33)

4. மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற.

மனத்துக்கண், மாசுஇலன், ஆதல், அனைத்து அறன், பிற, ஆகுல நீர பிற.

(பொ-ரை): மனத்துக்கண் குற்றமில்லாதவனாக ஒருவன் இருத்தல் ஒன்றே அறம் ஆகும். மனத்தூய்மையில்லாமல் செய்யப் படுபவை அனைத்தும் ஆரவாரத் தன்மையைக் கொண்டனவாகும்.

மாசு - குற்றம்; **ஆகுலம்** - ஆரவாரம்; **பிற** - சொல்லாலும், செயலாலும், கோலத்தாலும்.

(க-ரை): குற்றமற்ற மனத்துடன் இருப்பதே அறமாகும். மற்றபடியான சொல், செயல், கோலம் எல்லாம் பிறருக்காகச் செய்யப்படும் வெற்று ஆரவாரமாகும். (34)

5. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல், நான்கும், இழுக்கா, இயன்றது அறம்.

(பொ-ரை): பொறாமை, பேராசை, கொடுஞ்சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடம் அளிக்காமல், அவற்றை நீக்கிச் செய்கின்ற செயலே அறமாகும்.

இன்னா - துன்பம்; **இன்னாச்சொல்** - பிறர்க்குத் துன்பம் தரும் சொல்; **இழுக்கா** - இல்லாமல்.

(க-ரை): அறம் பேணுபவர்களிடம் பொறாமை, பேராசை, கொடுஞ்சினம், கடுஞ்சொல் ஆகியவை இருக்கக்கூடாது. (35)

**6. அன்றுஅறிவாம் என்னாது அறம்செய்க மற்றுஅது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.**

அன்று அறிவாம், என்னாது, அறம் செய்க, மற்றுஅது, பொன்றுங்கால், பொன்றாத் துணை.

(பொ-ரை): பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று கருதாமல், அறத்தை உடனே உடனுக்குடன் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யப்படும் அறம்தான், இறக்கும்போதுகூட அழியாத் துணையாக உதவிபுரியும்.

பொன்றுதல் - இறத்தல்; **பொன்றா** - அழியா.

(க-ரை): இளமையிலிருந்தே அறத்தைப் பேணும் நல்லொழுக்கத்தை ஒருவன் கடைப்பிடித்து வந்தால், அதனால் ஏற்படும் நன்மையும், புகழும் அவன் இறந்த பிறகும்கூட நிலைத்து நிற்கும். (36)

**7. அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தா னிடை.**

சிவிகை பொறுத்தானோடு, ஊர்ந்தான் இடை, இது, அறத்தாறு, என வேண்டா.

(பொ-ரை): பல்லக்கைச் சுமந்து செல்பவனுக்கும், அதில் வீற்றிருப்பவனுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைச் சுட்டிக்காட்டி, இந்த நிலையானது, அறம் செய்யாமைக்கும், செய்தமைக்கும் உள்ள அறநெறிப் பயனின்மை, பயன் ஆகியவற்றை உணர்த்துவதாகும் என்று கூறக்கூடாது.

சிவிகை - பல்லக்கு; **பொறுத்தான்** - சுமந்து செல்பவன்; **பொறுத்தல்** - சுமத்தல்; பல்லக்கில் வீற்றிருத்தல் ஆகியவை, பாவ புண்ணியங்களின் விளைவு என்னும் வைதிக அயலார் கொள்கையை, வள்ளுவர் இக்குறளில் மறுக்கிறார். **அறத்தாறு** (அறத்தின் பயன்) என்பது வேறு; திறத்தாறு (திறமையின் பயன்) என்பது வேறு. மடாதிபதிகள், கார் முதலாளிகள், மாளிகைவாசிகள், வசதியான நடிகை நடிகர்கள், கள்ள வணிகர் ஆகிய அனைவரும் 'அறம் புரிந்தவர்கள்' என்றும், அவர்களுக்குக் கீழே முறையே பணிபுரியும் எடுபிடிகள், கார் ஓட்டுநர்கள், மாளிகைக் காவல்காரர், வேலைக்காரர், ஊழியர்கள் ஆகிய அனைவரும் 'அறம் புரியாதவர்கள்' என்றும் கொள்வது எப்படிப் பொருந்தும்?

வள்ளுவர் அறத்தின் சிறப்பியல்புகளைக் குறள்கள் 8, 31, 32, 35, 36, 38, 39, 46, 93, 96, 185, 249, 288, 296, 297, 501, 1018, 1047 ஆகியவற்றில் தெள்ளத் தெளிவாக விளக்குகிறார். திறத்தின் வகைகளையும், கூறுபாடுகளையும் 'ஊக்கம் உடைமை' (அதி.60), 'மடி இன்மை' (அதி.61), 'ஆள்வினை உடைமை' (அதி.62) ஆகியவற்றிலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

துன்பம் என்பது அறம் செய்யாதவர்க்கு மட்டுந்தான் வரும் என்பதில்லை; அறம் செய்வோர்க்கும் அது கேடு உண்டாக்கும் என்பதை, 'நன்றிக்கண் தங்கியான் வாழ்வு', 'சீருடைச் செல்வர் சிறுதுனி (வறுமை)', 'கேடும் பெருக்கமும் இல்அல்ல', 'நயனுடையான் நல்கூர்ந்தான் ஆதல்', 'ஒப்புரவினால் வரும் கேடு எனினும்' என்பன போன்ற வள்ளுவரின் வாய்மொழிச் சொற்களே சான்று பகரும்.

'அறத்தாறு', 'திறத்தாறு' ஆகிய இரண்டையும் போட்டுக் குழப்பக்கூடாது என்பது வள்ளுவர் கொள்கை.

(க-ரை): பல்லக்கைச் சிலர் சுமக்க, அது அவர்கள் 'பாவம் செய்ததையும்', அதன்மேல் ஒருவன் வீற்றிருக்க, அது, அவன் 'புண்ணியம் செய்ததையும்' காட்டும் என்பதை உணர்த்தி, இதுதான் அறநெறித் தத்துவம் என்று ஒருபோதும் கூறக்கூடாது. (37)

**8. வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அஃதுஒருவன்
வாழ்நாள் வழி அடைக்கும் கல்.**

ஒருவன், வீழ்நாள் படாஅமை, நன்று, ஆற்றின், அஃது, வாழ்நாள், வழிஅடைக்கும், கல்.

(பொ-ரை): ஒருவன் அறம் செய்யாமல் கழியும் நாள் ஏற்படாமல், நல்லறத்தையே செய்து வருவானாயின், அதுவே, அவன் வாழ்நாளில் தீமை வரக்கூடிய வழியை அடைக்கும் கல்லாகும்.

வீழ்நாள் படுதல் - நல்லறம் செய்யாமல் நாட்கள் கழிதல்; **நன்று** - நன்மை, அதாவது நல்லறம்.

(க-ரை): நாள்தோறும் ஒருவன் நன்மையே செய்து பழகினால், அப்பழக்கம் அவனுக்குத் தீமை செய்ய இடம் கொடுக்காது. (38)

**9. அறத்தான் வருவதே இன்பம்மற்று எல்லாம்
புறத்த புகழும் இல.**

அறத்தான் வருவதே, இன்பம், மற்று, எல்லாம், புறத்த, புகழும் இல.

(பொ-ரை): அறநெறிவொழுக்கத்தில் வாழ்வதன் விளைவாக வருவதே இன்பமாகும்; அறமல்லாமல் வருவனவெல்லாம், இன்பம் பயக்காதவை; அவற்றால் புகழும் இல்லை.

அறத்தால் - அறநெறி ஒழுக்கத்தால்; **புறத்த** - அறமல்லாத செயல்களைச் செய்வதால்.

(க-ரை): அறநெறி ஒழுக்கத்தில் வாழ்பவன் இன்பத்தையும், புகழையும் எளிதில் பெறுவான். (39)

**10. செயற்பாலது ஓரும் அறனே ஒருவற்கு
உயற்பாலது ஓரும் பழி.**

ஒருவற்கு, செயற்பாலது, ஓரும், அறனே; உயற்பாலது ஓரும், பழி.

(பொ-ரை): ஒருவன் வாழ்நாளில் முயன்று செய்யத் தக்கது அறமேயாகும்; தன்னைத்தானே காத்துக்கொள்ள, அவன் செய்யாமல் தவிர்க்க வேண்டியது பழியாகும்.

ஓரும் - அசை; **உயல்** - நீக்கல்; **பழி** - பிறர் பழிக்கத்தக்க தீமை.

(க-ரை): ஒருவன் எப்பொழுதும் முயன்று செய்ய வேண்டியது நன்மையாகும்; அவன் தவிர்க்க வேண்டியது தீமையாகும். (40)

5. இல்வாழ்க்கை

இல்வாழ்க்கை என்பது, இல்லாளோடு கூடி வாழும் இல்லறத்தின் சிறப்பினைக் கூறுதல் எனப்படும்.

**1. இல்வாழ்வான் என்பான் இயல்புஉடைய மூவர்க்கும்
நல்ஆற்றின் நின்ற துணை.**

இல்வாழ்வான், என்பான், இயல்புஉடைய, மூவர்க்கும், நல்ஆற்றின், நின்ற துணை.

(பொ-ரை): இல்லற வாழ்வில் வாழ்பவனாகச் சொல்லப் படுகின்றவன், இயல்பாகவே அவனுடைய ஆதரவைப் பெற வேண்டிய நிலையிலுள்ள பெற்றோர்க்கும், தன் மனைவிக்கும், தான் பெற்றெடுத்த மக்களுக்கும் ஆகிய மூன்று சாரார்க்கும் நல்வழியில் நின்று நிலையான உதவி செய்ய வேண்டிய துணையாவான்.

இயல்புஉடைய - இயல்பாகவே ஆதரவு பெற வேண்டிய; **நல் ஆறு** - நல்ல வழி; **இயல்பு** என்ற சொல்லுக்கு உழுவலன்பு பொருந்திய, தகுதி பொருந்திய, முறைமை பொருந்திய என்ற பொருள்களும் உண்டு.

இயல்பு உடைய மூவர் என்னும்போது, இயல்பாகவே முறைமையோடு பொருந்திய மூவர் என்று பொருள்படும்.

துணை - ஆதரவு தந்து தீர வேண்டிய கட்டாய நிலையில் இருப்பவன்.

இல்வாழ்க்கையில் இருக்கும் ஒருவன், கட்டாயம் ஆதரவு அளித்துத் தீரவேண்டிய நிலையில் இருப்பவர்கள், இயல்பாக அவனது பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூன்று சாராருமேயாவார்கள்.

இல்வாழ்வான், பிரம்மச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி என்ற மூன்று சாரார்க்குத் துணையாக இருக்க வேண்டும் என்பது வள்ளுவர் கொள்கை அன்று. அது பொருந்தியும் வராது.

'இல்லறம்', 'துறவறம்' ஆகிய இரண்டை மட்டுமே ஏற்றுக் கொண்டுள்ள தமிழர் கொள்கைக்கு ஏற்ப, வள்ளுவர், இல்வாழ்வான் துறவிக்குத் துணையாக இருக்க வேண்டியதை 42-வது குறளில் வலியுறுத்தியுள்ளார்.

(க-ரை): இல்வாழ்க்கையின் நல்வாழ்வுக்காகப் பாடுபடும் பெற்றோர்கள், தன் மனைவி, தான் பெற்றெடுக்கும் மக்கள் ஆகிய மூன்று சாரார்க்கும் துணையாக இருக்க வேண்டியது இல்வாழ்வானின் பொறுப்பாகும். (41)

**2. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.**

துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும், இல்வாழ்வான், என்பான், துணை.

(பொ-ரை): துறவியர்க்கும், வறுமையால் உண்ண உணவின்றி வாடுவோர்க்கும், வயதால் காலங்கடந்து வாழும் முதியோர்க்கும் இல்லற வாழ்வை நடத்துகின்றவன் துணையாவான்.

துவ்வாதவர் - உண்ண உணவின்றித் தவிப்பவர்; 'இறந்தார்' என்றது காலம் இறந்து ஆதரவு இழந்து தவிக்கும் முதியோர் என்பதைக் குறிக்கும்.

(க-ரை): தாமாக வாழ முடியாத துறவிகள், வறுமையாளர், பாதுகாப்போர் இல்லாத காலங்கடந்த முதியோர் என்னும் மூவர்க்கும் உதவியாக இருக்க வேண்டியது இல்வாழ்வானது கடமையாகும். (42)

**3. தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றுஆங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.**

தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்என்று, ஆங்கு, ஐம்புலத்து, ஆறு, ஓம்பல் தலை.

(பொ-ரை): தென்புலத்தைச் சேர்ந்த அறிவாளர்கள், வழிபடக்கூடிய மேலோர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐந்து தரத்தாரையும், அறவழியில் நின்று, தனது பொருளால் காப்பாற்றிக் கொள்ள வேண்டியது, இல்வாழ்வானது தலையான கடமையாகும்.

தெய்வம் - மேன்மை; வழிபடுவதற்குரிய மேலானவர்; **ஒக்கல்** - சுற்றத்தார்; ஒருவர் தம் வருமானத்தை ஆறு பங்காக்கி, ஒரு பங்கை அரசுக்கு இறையாகச் செலுத்திவிட்டு, மீதியுள்ள ஐந்து பங்கை ஐந்து தரத்தார்க்கும் பயன்படுத்த வேண்டும் என்பது, பண்டைத் தமிழரின் வழக்கமாகும்.

(க-ரை): அறிவாளர்கள், வழிபடுவதற்குரிய மேலோர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐந்து தரத்தாரையும்

இல்வாழ்வோன் என்பான் தன்பொருள் கொண்டு காப்பாற்றிக் கொள்ள வேண்டிய கடப்பாடுடையவன் ஆவான். (43)

4. பழிஅஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

பழிஅஞ்சிப் பாத்தூண், உடைத்து, ஆயின், வாழ்க்கை, வழிஎஞ்சல், எஞ்ஞான்றும், இல்.

(பொ-ரை): பொருள் திரட்டும்போது, பழிக்கு அஞ்சிச் சேர்த்தும், அதனைச் செலவு செய்யும்போது பகுத்துக் கொடுத்து உண்டும் செயலாற்றும் தன்மை உடையதாயின், வாழ்க்கையின் நெறிமுறை எப்பொழுதும் குறைவதில்லை.

பழி - குற்றம்; **பாத்தூண்** - பிறர்க்குப் பங்கிட்டு உண்ணுவது; **வாழ்க்கை வழிஎஞ்சல்** - வாழ்க்கையை நடத்துவதற்கு வழியாகிய செல்வம் குறைதல்.

(க-ரை): பிறர்க்குக் கொடுத்து வாழும் பண்புடைய இல் வாழ்வானின் செல்வம் ஒருபோதும் குறையாது. தேவைப்படும் போது அவனுக்குப் பிறர் உதவுவர். (44)

5. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

இல்வாழ்க்கை, அன்பும், அறனும் உடைத்து ஆயின், அது, பண்பும், பயனும்.

(பொ-ரை): இல்வாழ்க்கையானது, யார் மாட்டும் அன்பு காட்டுதலையும், அறஞ்செய்தலையும் உடையதாகத் திகழுமாயின், அதுவே முறையாக ஒருவனது வாழ்க்கையின் பண்பாகவும், பயனாகவும் அமையும்.

அன்பும் அறனும் என்பன காரணம்; பண்பும் பயனும் என்பன விளைவு.

(க-ரை): ஒருவனது இல்வாழ்க்கையில் காட்டப்படும் அன்பு, அதன் பண்பாகும்; செய்யப்படும் அறம், அதன் பயனாகும். (45)

6. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்.

அறத்தாற்றின், இல்வாழ்க்கை, ஆற்றின், புறத்தாற்றின், போஒய்ப், பெறுவது, எவன்.

(பொ-ரை): ஒருவன் அறநெறியில் நின்று இல்வாழ்க்கையை நடத்தி வருவானேயானால், அவன் இல்லறத்திற்குப் புறம்பான நெறிகளில் போய்ப் பெறக்கூடியது என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை!

அறத்தாறு - அறநெறி; **புறத்தாறு** இல்லறத்திற்குப் புறம்பான நெறி.

(க-ரை): ஒருவன் அறத்தின் வழியே இல்வாழ்க்கையைச் செலுத்தி வருவானாயின், அவன் அதற்குப் புறம்பான துறவற வழியில் போய்ப் பெறக்கூடியது எதுவுமில்லை. (46)

7. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

இயல்பினான், இல்வாழ்க்கை, வாழ்பவன், என்பான், முயல்வாருள், எல்லாம், தலை.

(பொ-ரை): நல்ல முறையில் அறநெறியில் நின்று இல்லற வாழ்வு நடத்துகிறவன் என்று சொல்லப்படுபவன், முயற்சியுடன் வாழ்வார் எவரைக்காட்டிலும் மேம்பட்டவன் ஆவான்.

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்தல் - நல்ல முறையில் குடும்பம் நடத்துதல்; **முயல்வார்** - மேன்மேலும் பொருளீட்டி வாழ்பவர்.

(க-ரை): நல்ல முறையில் குடும்பம் நடத்துபவன், முயற்சியுடன் துறவறங் கொள்வாரைவிடச் சிறந்தவன் ஆவான். (47)

8. ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

ஆற்றின் ஒழுக்கி, அறன் இழுக்கா, இல்வாழ்க்கை, நோற்பாரின், நோன்மை, உடைத்து.

(பொ-ரை): பிறரையும் அறநெறியில் நடக்கச் செய்து, தானும் அறநெறி தவறாது வாழ்கின்றவனின் இல்வாழ்க்கையானது, தவம் செய்வோர் நிலையைவிட, மிகவும் வல்லமை வாய்ந்த ஒன்றாகும்.

(க-ரை): பிறரையும் ஊக்குவித்துத் தானும் அறத்தின் நெறி தவறாது நடத்துபவனின் இல்வாழ்க்கை துறவிகளின் வாழ்வைவிட வலிமை மிக்கது ஆகும். (48)

9. அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

அறன் எனப்பட்டதே, இல்வாழ்க்கை, அஃதும், பிறன் பழிப்பது, இல்லாயின், நன்று.

(பொ-ரை): அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்வாழ்க்கையேயாகும். அவ்வில்வாழ்க்கையும் வேறொருவரால் பழிக்கப்படும் குற்றம் இல்லாமல் திகழுமேயானால், அது மேலும் நன்மை பயக்கும்.

(க-ரை): அறம் என்று அறிவுடையோர் சிறப்பித்துச் சொல்லுவது இல்வாழ்க்கையைத்தான்; அதுவும் பிறரால் பழிக்கப் படாததாக இருத்தல் வேண்டும். (49)

10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

வையத்துள், வாழ்வாங்கு, வாழ்பவன், வான்உறையும், தெய்வத்துள், வைக்கப்படும்.

(பொ-ரை): உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நிலைத்துநின்று வாழ்பவன், மறைந்த பிறகும் வானளாவிய புகழ் படைத்த மேலானவர்களில் ஒருவனாக வைத்து எப்பொழுதும் மதிக்கப்படுவான்.

வையம் - உலகம்; **வாழ்வாங்கு** - வாழும் வகை; **வானுறையும் தெய்வம்** - மறைந்த வானமளாவிய புகழ் கொண்ட; புகழ் உலகத்திற்குரிய மேலோர்.

(க-ரை): நல்ல முறையில் இல்வாழ்க்கையை அறநெறிப்படி நடத்துபவன், என்றென்றும், மறைந்த பிறகும்கூட பிறர் நினைவில் வைத்து மதிக்கப்படுவான். (50)

6. வாழ்க்கைத் துணைநலம்

வாழ்க்கைத் துணைநலம் என்பது, இல்லற வாழ்க்கைக்குத் துணையாக விளங்கும் இல்லாளது நலம் பயக்கும் தன்மைகளைக் கூறுதல் எனப்படும்.

1. மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

மனைத்தக்க, மாண்புஉடையள், ஆகித், தற்கொண்டான், வளத்தக்காள், வாழ்க்கைத் துணை.

(பொ-ரை): இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்பு உடையவளாகித் தன்னை இல்லாளாகக் கொண்டவனது பொருள் வளத்துக்குத் தக்கபடி, வாழ்க்கையை நடத்துபவளே, நல்ல வாழ்க்கைத் துணைவி ஆவாள்.

மனை - மனையறம்; அதாவது இல்லறம்; **வளத்தக்காள்** - பொருள் வளத்திற்கு ஏற்றபடி செலவு செய்பவள்.

(க-ரை): கணவரின் வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்து வாழ்க்கையை நடத்துபவளே, நல்ல வாழ்க்கைத் துணைவி ஆவாள். (51)

2. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.

மனைமாட்சி, இல்லாள்கண், இல்லாயின், வாழ்க்கை, எனைமாட்சித்து, ஆயினும், இல்.

(பொ-ரை): இல்வாழ்க்கைக்குத் தக்க நற்பண்பு இல்லாளிடத்தில் இல்லாமற் போகுமேயானால், ஒருவனது வாழ்க்கை வேறு வகையில் எவ்வளவு பெருமையுடையதாக இருந்தாலும், பயன் எதுவும் ஏற்படுவதற்கு இல்லை.

மனைமாட்சி - இல்லறத்திற்கு வேண்டிய நல்லொழுக்கம்; **எனைமாட்சித்து ஆயினும்** - எவ்வளவு பெருமை உடையதாக இருப்பினும்.

(க-ரை): நல்லொழுக்கம் உடைய மனைவியைப் பெறாதவனின் குடும்பம், பிற வகையில் எவ்வளவு பெருமையுடையதாக இருந்தாலும், பிறரால் மதிக்கப்பட மாட்டாது. (52)

**3. இல்லதுஎன் இல்லவள் மாண்பானால் உள்ளதுஎன்
இல்லவள் மாணாக் கடை.**

இல்லவள், மாண்பு ஆனால், இல்லது என்? இல்லவள், மாணாக் கடை, உள்ளது என்?

(பொ-ரை): மனைவி நற்பண்பு உடையவளாக இருந்தால், ஒருவனுடைய வாழ்க்கையில் இல்லாததுதான் என்ன? அவள் நற்பண்பு இல்லாதவளாக இருந்தால், அவனது வாழ்க்கையில் இருப்பதுதான் என்ன?

மாண்பு - நற்பண்பு; நற்செய்கை உடையதாதல்.

(க-ரை): நல்ல மனைவி வாய்க்கப் பெறாதவனுக்கு என்ன வசதி இருந்தும், இல்லாதவனாகவேதான் கருதப்படுவான்; நல்ல மனைவியைப் பெற்றவனே இன்புற்று வாழ்வான். (53)

**4. பெண்ணின் பெருந்தக்க யாஉள கற்புஎன்னும்
திண்மை உண்டாகப் பெறின்.**

கற்பு என்னும், திண்மை, உண்டாகப் பெறின், பெண்ணின், பெருந்தக்க, யாஉள?

(பொ-ரை): இல்வாழ்வு நடத்தும் ஒரு பெண்ணிற்குக் கற்பு என்னும் மனஉறுதி இருந்தால், அந்தப் பெண்ணைவிடப் பெருமையுடையவை, இவ்வுலகில் வேறு என்ன இருக்கின்றன? ஒன்றுமில்லை!

கற்பு என்னும் திண்மை இல்லறத்தில் காதலன்பு காரணமாகக் கொள்ளப்படும் மனஉறுதி; இந்த மனவுறுதி ஆண், பெண் இரு சாராரிடமும் எதிர்பார்க்கப்படும் நற்பண்பாகும்.

(க-ரை): கற்பு என்னும் மனவுறுதியைக் கொண்ட மனைவியைவிட, ஒருவனுக்கு, மேம்பட்ட பொருள்கள் வேறு எவையும் இல்லை. (54)

**5. தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை.**

தெய்வம், தொழாள், கொழுநன், தொழுதெழுவாள், பெய் எனப், பெய்யும் மழை.

(பொ-ரை): வான்புகழ் கொண்ட மேலான ஒருவர் என்ற காரணத்திற்காக வேறு எவரையும் பின்பற்றி நடக்காமல், தன்

கணவனை மட்டுமே எண்ணி, அவனுக்கு ஏற்றபடி அவனைப் பின்பற்றி நடப்பவள், பெய்ய வேண்டும் என்று விரும்பும் காலத்தே பெய்யும் மழையைப் போன்றவள் ஆவாள்.

தெய்வம் - மேன்மை; வான்புகழ் கொண்ட மேலானவர்; **தொழுதெழுதல்** - வழிபட்டு ஒத்து நடத்தல்; அதாவது பின்பற்றி நடத்தல். எதிர்பார்க்கும் பருவத்தில் பெய்யும் மழை பெரும் பயனைப் பொதுவாக விளைவிக்கும். அதுபோல, கணவன் தன் துணைவியிடம் எதைஎதை, எவ்வெப்போது எதிர்பார்க்கிறானோ, அவற்றை, அந்த அந்தக் காலகட்டத்தில் துணைவியானவள் செய்து முடிப்பாளேயானால், அவளால் அவனுக்குப் பெரும்பயன் விளையும். அதனால்தான் ‘கொழுநன் தொழுதெழுவாளுக்குப் ‘பெய்எனப் பெய்யும் மழையை’ உவமையாகக் கூறுகிறார்.

நல்ல மனைவி வேறு எவரையும் வழிபட வேண்டிய இன்றியமையாமை இல்லை; அவள் தன் கணவனை மட்டுமே வழிபட்டால் போதுமானது. நல்ல துணைவிக்குக் கணவன்தான் பற்றுக்கோடு; ‘தெய்வம்’ பற்றுக்கோடு அன்று.

(க-ரை): கணவனுக்கு ஏற்ற இல்வாழ்க்கைத் துணைவியாக இருந்து, அவன் எதிர்பார்ப்புக்கு ஒத்தபடி நடப்பவளே, சிறந்த மனைவியாவாள். (55)

6. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

தற்காத்து, தற்கொண்டான், பேணித், தகைசான்ற, சொல் காத்து, சோர்பு இலாள், பெண்.

(பொ-ரை): தன்னையும் கற்புநெறியில் காத்துக்கொண்டு, தன் கணவனையும் காத்துத், தகுதியோடு அமைந்த தன் புகழையும் காத்து, மனவுறுதி தளராமல் வாழ்கின்றவளே மனைவியாவாள்.

தற்கொண்டான் பேணுதல் - கணவனுக்கு உணவு தந்தும், அவனிடம் அன்பு காட்டியும், அவனுக்கு இன்பம் ஊட்டியும் அவனைக் காப்பாற்றுதல்; **சோர்வு இன்மை** - வறுமையிலும் மனந்தளராமை.

(க-ரை): கற்பினில் சிறந்து நின்று, தன்னையும் காத்துக் கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றித் தன் புகழையும் காத்து வருபவளே போற்றத்தக்க மனைவியாவாள். (56)

**7. சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.**

சிறைகாக்கும், காப்பு, எவன் செய்யும்?, மகளிர், நிறைகாக்கும், காப்பே, தலை.

(பொ-ரை): கற்புக் கெடாமல் இருப்பதற்காக, மகளிரைச் சிறை வைத்துக் காவல்காக்கும் முறை என்ன உருவான பலனை உண்டாக்க முடியும்? அவர்கள் மனஉறுதி என்னும் தன்மையால், தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளும் காப்பே, தலையாய காவலாகும்.

சிறை - காவல் சிறை; **நிறை** - மன உறுதி.

(க-ரை): மகளிரின் கற்பைச் சிறைக்காவல் மூலம் காக்கும் காவல்முறை ஒரு பயனையும் தராது; அவர்கள் தம் மனஉறுதியால் தான் கற்பைக் காத்துக்கொள்ள வேண்டும். (57)

**8. பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.**

பெற்றான், பெறின், பெண்டிர், புத்தேளிர், வாழும் உலகு, பெருஞ்சிறப்புப் பெறுவர்.

(பொ-ரை): கணவனைப் போற்றி, உரிய கடமையை முறைப்படிச் செய்தால், பெண்கள், வான்புகழ் கொண்டோர் பெயர் நிலவிடும் புகழ் உலகின் பட்டியலில், உயர்ந்த இடச்சிறப்பினைப் பெறுவர்.

பெற்றான் - பெண்ணை மனைவியாகப் பெற்றவன்; அதாவது கணவன்; **புத்தேளிர் வாழும் உலகம்** - வான்புகழ் கொண்டோர் இடம் பெறும் புகழ் உலகம்; **புத்தேள்** என்பது, 'புத்தாள்' என்பதன் திரிபுச் சொல்லாகும். புத்தாடை, புத்தாண்டு, புதுப்பானை என்ற சொற்களைப் போன்று வருவது.

நில உலகத்தை விட்டு மறைந்த பிறகு, சிலர் புகழ் உலகத்தில்நிலைத்து நிற்கும் புகழுடையோர் ஆகின்றனர். அவர்கள் புதிய புகழ்வாழ்வை எய்தி, புதுமை பெறுகின்றனர். ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும், தெய்வத்துள் வைக்கப் படும்'' என்ற குறளின் கருத்து நோக்கத்தக்கது. வானுறையும் தெய்வம் என்பது புகழுடைய பெரியோரைக் குறிக்கும். புகழ் உலகத்தில் என்றும் நின்று நிலவும் மேலோர், 'புத்தேளிர்' எனக் கருதப்படுவர்.

(க-ரை): தம்மைப் பெற்ற கணவரை உரிய முறையில் போற்றிக் கடமையைச் செய்யும் மகளிர் பெரும் புகழை எய்துவர். (58)

**9. புகழ்புரிந்த இல்இல்லோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.**

புகழ்புரிந்த, இல்இல்லோர்க்கு, இகழ்வார் முன், ஏறுபோல், பீடுநடை, இல்லை.

(பொ-ரை): கற்பின்மூலம் புகழைக் காக்க விரும்பும் மனைவியைப் பெறாதவர்க்குத் தம்மைப் பழித்துப்பேசும் பகைவர்முன், காளையாகிய ஏறு போல நடக்கும் பெருமிதமான நடை இருக்க இடமில்லை.

இல்இல்லோர் - மனைவியைப் பெறாதவர்; **ஏறு** - காளை.

(க-ரை): இல்லறப் புகழைக் காக்கத் தவறிய மனைவியை உடைய கணவனால், பகைவர் இகழ்ந்து பேசும்போது, தலைநிமிர்ந்து நடக்க முடியாது. (59)

**10. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.**

மங்கலம், மனைமாட்சி, என்ப, மற்று, அதன், நன்கலம், நன்மக்கட்பேறு.

(பொ-ரை): இல்வாழ்க்கைக்கு மங்கலம், மனைவியின் நல்லொழுக்கமேயாகும் என்று பெரியோர் கூறுவர்; அதற்கு நல்ல அணிகலன், நல்ல மக்களைப் பெறுதலேயாகும் என்றும் கூறுவர்.

மங்கலம் - பொலிவு; **நன்கலம்** - அணிகலன்.

(க-ரை): ஓர் இல்லற வாழ்க்கைக்கு நல்ல மனைவியும், நல்ல மக்களும் முறையே பொலிவும், அணிகலனும் ஆவார்கள். (60)

7. மக்கட்பேறு

மக்கட்பேறு என்பது, இல்வாழ்க்கையின் பயனாகிய பெற்றெடுக்கும் குழந்தைகளின் சிறப்புப்பற்றிக் கூறுதல் எனப்படும்.

**1. பெறுமவற்றுள் யாம்அறிவ தில்லை அறிவுஅறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.**

பெறுமவற்றுள், அறிவு அறிந்த, மக்கட்பேறு அல்ல பிற, யாம் அறிவது இல்லை.

(பொ-ரை): நாம் பெறும் பேறுகளில், அறிய வேண்டியவைகளை அறியக்கூடிய நல்ல மக்களைப் பெறுவதைவிடச் சிறந்த பேறு, வேறொன்றும் இருப்பதாக நாம் கண்டதில்லை.

பேறு - அடையும் பயன்; குழந்தைகள், உடல் நலம், கல்வி, செல்வம் போன்றவைகளெல்லாம் பேறுகளாகும்.

(க-ரை): ஒருவன் பெறக்கூடிய பேறுகளில் அறிவுடைய நல்ல குழந்தைகளைப் பெறுவதைவிட, சிறந்த பேறு வேறு எதுவும் இருக்க முடியாது. (61)

**2. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.**

பழிபிறங்காப், பண்புடை, மக்கட் பெறின், எழுபிறப்பும் தீயவை, தீண்டா.

(பொ-ரை): ஒருவர், குற்றமற்ற நல்ல பண்புடைய மக்களைப் பெற்று வளர்த்தால், அவரது வாழ்க்கையில் பல்வேறு நிலைகளிலும் தீமைகள் வந்து சேரா.

எழுபிறப்பு - வாழ்க்கையில் எழுகின்ற பல்வேறு நிலைகள்; **பழிபிறங்கா** - பழி பொருந்தாத; குற்றமற்ற; **தீண்டா** - வந்து சேரா.

(க-ரை): நல்ல பண்புள்ள மக்களைப் பெற்றெடுத்த குடும்பம் வாழ்க்கையின் பல்வேறு நிலைகளிலும் துன்பம் அடையாமல் பிறருடைய மதிப்பைப் பெறும். (62)

**3. தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.**

தம்மக்கள், தம்தம் வினையான் வரும், அவர் பொருள், தம் பொருள், என்ப.

(பொ-ரை): தம்முடைய மக்கள், அவரவர் செல்வமுயற்சியால் பெறும் அவரது பொருள், தமது முதுமைக் காலத்தில் பயன் படுவதாலும், அவர்கள் உறுதுணையாக இருப்பதாலும் அவர்கள் தம்முடைய பொருள் ஆவர் என்று உரிமை கொண்டாடுவர் பெற்றோர் என்று அறிவுடையோர் கூறுவார்கள்.

வினை - தொழில்; **வருதல்** - சேருதல்.

(க-ரை): பெற்றோர்க்கு அவர்கள் பெற்றெடுக்கும் நல்ல மக்களே பெருஞ்செல்வமாகும். (63)

4. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

தம் மக்கள், சிறுகை, அளாவிய கூழ், அமிழ்தினும், ஆற்ற, இனிதே.

(பொ-ரை): தம்முடைய குழந்தைகள் சிறிய கைகளால் துளாவிய கூழ் பெற்றோர்க்கு அமிழ்தைவிட மிக இனிமை யுடையதாக இருக்கும்.

அமிழ்து - சுவை உணவு; **அளாவிய** - துளாவிய; **கூழ்** - மாவால் காய்ச்சிய கூழ்.

(க-ரை): குழந்தைகளின் கைப்பட்ட கூழ், பெற்றோர்க்கு அமிழ்தைக் காட்டிலும் இனிமையானதாகவே தோன்றும். (64)

5. மக்கள்மெய் தீண்டல் உடற்கு இன்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

மக்கள், மெய்தீண்டல், உடற்கு இன்பம்; மற்று அவர், சொற்கேட்டல், செவிக்கு, இன்பம்.

(பொ-ரை): தம் குழந்தைகளின் மெய்யைத் தீண்டுதல் பெற்றோரின் உடலுக்கு இன்பம் தரும்; அவர்தம் மழலைச் சொற்களைக் கேட்டல், செவிக்கு இன்பம் பயக்கும்.

மக்களின்சொல் - மழலை.

(க-ரை): பெற்றோர்க்குக் குழந்தைகளை அணைத்தலால் உடற்கு இன்பம் ஏற்படும்; அவர்களின் மழலைச் சொற்களைக் கேட்பதால் செவிக்கு இன்பம் ஏற்படும். (65)

**6. குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.**

தம் மக்கள், மழலைச்சொல், கேளாதவர், குழல்இனிது, யாழ் இனிது, என்ப.

(பொ-ரை): தம் குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்டு, அவற்றின் இனிமையை நுகராத பெற்றோரே, குழலிசை இனிமையானது, யாழிசை இனிமையானது என்று கூறுவர்.

குழல் - புல்லாங்குழல்; **யாழ்** - மகர யாழ் முதலியன.

(க-ரை): புல்லாங்குழலின் ஓசையைவிட, யாழின் இசையை விட குழந்தைகளின் மழலைச் சொற்கள் பெற்றோர்க்கு மிக்க இன்பத்தைப் பயக்கும். (66)

**7. தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.**

தந்தை, மகற்கு, ஆற்றும் நன்றி, அவையத்து, முந்திஇருப்பச் செயல்.

(பொ-ரை): தந்தை தன் மகனுக்குச் செய்யக்கூடிய நல்லுதவியானது, அவனைக் கற்றறிந்தோர் அவையில், யாவர்க்கும் முன்னிலையில் தலைவனாக வீற்றிருக்கும்படிச் செய்ய, அவனைக் கல்வியில் வல்லவனாக ஆக்குதலே ஆகும்.

நன்றி - உதவி; **முந்தி இருப்ப** - யாவர்க்கும் முன்பாகத் தலைவனாக இருக்கும்படிச் செய்வது.

(க-ரை): தம்முடைய மக்களைச் சிறந்த கல்வி கற்றோராக ஆக்குவதே பெற்றோர்கள் தம் மக்களுக்குச் செய்யும் பெரும் உதவியாகும். (67)

**8. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.**

தம் மக்கள், அறிவுடைமை, தம்மின், மாநிலத்து, மன்னுயிர்க்கு எல்லாம், இனிது.

(பொ-ரை): தம் மக்களின் அறிவுடைமை, பெற்றோர் தமக்கு இன்பம் பயப்பதைக் காட்டிலும், இம்மாபெரும் உலகத்தில் வாழும் மக்களுக்கு எல்லாம் இன்பம் பயப்பதாகும்.

தம்மின் - பெற்றோரின்; **மன்னுயிர்** - மக்கள்.

(க-ரை): தம்மைவிடத் தம்முடைய மக்கள் அறிவுடையவராய் இருத்தல் பெற்றோர்க்கும், பிறர்க்கும் இன்பம் தருவதாகும். (68)

9. ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்.

தன் மகனைச், சான்றோன், எனக்கேட்ட தாய், ஈன்ற பொழுதின், பெரிது, உவக்கும்.

(பொ-ரை): தன் மகனைச் சிறந்த அறிவுடையவன் என்று பிறர் சொல்லக் கேட்ட தாய், அவனைப் பெற்றெடுத்த காலத்தில் தான் பெற்ற மகிழ்ச்சியைவிடப் பெரிதும் மகிழ்வாள்.

உவத்தல் - மகிழ்தல்; **கேட்ட தாய்** - அறிவுடையோர் சொல்லக்கேட்ட தாய்.

(க-ரை): தன் மகன் அறிவுடையோன் என்று அறிவுடையார் சொல்லக் கேட்கும் தாய் பெரிதும் மகிழ்ச்சி அடைவாள். (69)

10. மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்எனும் சொல்.

மகன், தந்தைக்கு, ஆற்றும் உதவி, இவன் தந்தை, என் நோற்றான் கொல், எனும் சொல்.

(பொ-ரை): மகன் தந்தைக்குச் செய்யக்கூடிய கைம்மாறாவது, இவன் தந்தை இவனை மகனாய்ப் பெற்று வளர்க்க எப்படிப்பட்ட பெருமுயற்சி செய்தானோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லேயாகும்.

நோற்றல் - தவம் செய்தல்; பெருமுயற்சி செய்தல்; **சொல்** - புகழ்ந்து சொல்லும் சொல்.

(க-ரை): சிறந்த அறிவொழுக்கமுடையவராதலே, மக்கள் தம்மைக் கல்வியறிவுடையவராக்கிய பெற்றோர்க்குச் செய்யும் எதிருதவியாகும். (70)

8. அன்புடைமை

அன்புடைமை என்பது, ஒருவன் தனக்கு நெருங்கிய தொடர்பு உடையவர்களிடத்தில் பேரன்பு கொண்டிருத்தல் எனப்படும்.

**1. அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.**

அன்பிற்கும், அடைக்கும்தாழ், உண்டோ? ஆர்வலர், புன்கணீர், பூசல் தரும்.

(பொ-ரை): அன்பை அடைத்து வைக்கக்கூடிய தாழ்ப்பாளும் யாதொன்றும் இருக்க இயலுமோ? தம் அன்பரது துன்பத்தைக் கண்டவுடன், ஒருவருடைய கண்களிலிருந்து வெளிப்படுகின்ற சிறு கண்ணீர்த் துளிகளேகூட, அவரிடத்திலுள்ள அன்பைப் பலரும் அறியச் செய்துவிடும்.

தாழ் - தாழ்ப்பாள்; **ஆர்வலர்** - அன்பர்; **பூசல்** - பலரறிதல்.

(க-ரை): ஒருவர் அன்புடையவராக இருப்பாரேயானால், அந்த அன்பை அவரால், பிறர் அறியாமல் மறைத்து அடைத்து வைக்க முடியாது. (71)

**2. அன்பிலார் எல்லாம் தமக்குஉரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.**

அன்பிலார், எல்லாம், தமக்கு உரியர்; அன்புடையார், என்பும், பிறர்க்கு, உரியர்.

(பொ-ரை): அன்பு இல்லாதவர், எல்லாப் பொருளையும் தமக்கே உரிமை கொண்டாடி உயிர் வாழ்வர்; அன்பு உடையவர், அப்பொருள்கள் மட்டுமல்லாமல், தம் உடம்பையும் பிறர்க்கு உரிமை ஆக்குவர்.

எல்லாம் - இடம், பொருள், ஆள், வீடு, காடு, கழனி முதலிய செல்வம் எல்லாம்; **என்பு** - உடம்பு.

(க-ரை): அன்புடையவர்கள் தம் உயிர், உடல், உடைமை ஆகியவற்றைப் பிறர்க்குக் கொடுத்து உதவுவார்கள்; ஆனால், அன்பில்லாதவர்கள் எதையும் பிறர்க்குக் கொடுத்து உதவ மாட்டார்கள். (72)

3. அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

ஆர்உயிர்க்கு, என்போடு, இயைந்த தொடர்பு, அன்போடு, இயைந்த வழக்கு, என்ப.

(பொ-ரை): அருமையான நம் உயிர்கட்கு உடம்போடு பொருந்திய நட்பு எப்படியோ, அப்படியே அன்போடு பொருந்திய செயலின் உறவும் ஆகும் என்பர் அறிவுடையோர்.

வழக்கு - செயல்; **ஆருயிர்** - அருமையான உயிர்; **என்பு** - உடம்பு.

(க-ரை): கட்புலனுக்குத் தெரியாத உயிருக்கும், கட்புலனுக்குத் தெரிந்த உடம்புக்கும் எப்படிப்பட்ட தொடர்போ, அப்படிப்பட்ட தொடர்பு, வாழ்க்கையில் அன்புக்கும், செயலுக்கும் இடையே இருக்க வேண்டும். (73)

4. அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு.

ஆர்வம் உடைமை, அன்பு ஈனும்; அது நண்பு என்னும், நாடாச் சிறப்பு, ஈனும்.

(பொ-ரை): பிறரிடம் நாம் காட்டும் அன்பு, அவரை நம்மீது விருப்பம் உடையவராக ஆக்கும்; அவ்விருப்பம் நட்பு என்னும் மிக்க சிறப்பினை நாளடைவில் நல்கும்.

ஈனும் - உண்டாக்கும்; **நண்பு** - நட்பு.

(க-ரை): பிறரிடம் காட்டும் அன்பு, நாளடைவில் நட்பாக மலரும் தன்மையுடையது. (74)

5. அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

வையகத்து, இன்புற்றார், எய்தும் சிறப்பு, அன்புற்று, அமர்ந்த, வழக்கு, என்ப.

(பொ-ரை): உலகில் இன்பம் உற்றவர் அடையும் சிறப்பு, அன்பு உடையவராக ஒன்றியிருந்து செயல்படும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர் அறிவுடையோர்.

வழக்கு - செயல்; பயன்.

(க-ரை): தம் குடும்பத்தாரிடத்திலும், பிறரிடத்திலும் அன்பு உடையவர்களே, வாழ்க்கையில் இன்பத்தையும், பெருஞ் சிறப்பையும் பெறுவார்கள். (75)

6. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

அறத்திற்கே, அன்பு சார்பு, என்ப, அறியார் மறத்திற்கும், அஃதே, துணை.

(பொ-ரை): அறம் செய்வதற்கு மட்டுமே அன்பு துணையாக இருக்கும் என்று உயர்ந்தோர் கூறுவார்கள்; ஆராய்ந்து பார்த்தால், அறியாதார் செய்யும் தீமையை நீக்குவதற்கும் அதுதான் துணையாக இருக்கும்.

அறம் - கடமை; நன்மை; **மறம்** - அறமல்லாதமறச் செயல்; தீமை.

(க-ரை): அன்பானது நன்மையை உருவாக்கவும், தீமையைப் போக்கவும் உறுதுணையாக இருக்கும். (76)

7. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

என்புஇல் அதனை, வெயில்போலக், காயுமே, அன்பு இல் அதனை, அறம்.

(பொ-ரை): எலும்பு இல்லாத புழுவை, வெயில் எப்படி வாட்டி வருத்துமோ, அப்படியே அன்பு இல்லாதவர்களை, அறநெறியானது வாட்டி வருத்தும்.

என்பு - எலும்பு; **வெயில்** - வெய்யில்.

(க-ரை): அன்பில்லாதவர்களை, அறநெறியைப் பின்பற்றி நடக்கும் உயர்ந்தோர்கள் தம்மோடு சேர்த்துக் கொள்ளாது, வெறுத்து ஒதுக்கியே வைத்துவிடுவார்கள். (77)

8. அன்புஅகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று.

அன்பு அகத்து, இல்லா, உயிர் வாழ்க்கை, வன்பாற்கண், வற்றல் மரம், தளிர்த்தற்று.

(பொ-ரை): உள்ளன்பு இல்லாதவர்கள் உயிரோடு வாழும் வாழ்க்கையானது, நீர் வளமற்ற பாலை நிலத்தில், பட்டுப்போன மரம் தளிர்த்தாற் போன்றதாகும்.

அகத்தில் - உள்ளத்தில்; **வன்பாற்கண்** - வன்மையான பாலை நிலத்தின் கண்; **வற்றல்** - வறண்டு போன.

(க-ரை): அன்பே நல்வாழ்வுக்குக் காரணம்; ஆகையால், அன்பில்லாதவர்களுடைய வாழ்க்கை வறட்சியாகவே காணப்படும். (78)

9. புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.

யாக்கை, அகத்து உறுப்பு, அன்பு இலவர்க்கு, புறத்து உறுப்பு, எல்லாம், எவன் செய்யும்?

(பொ-ரை): உடம்பில் உள் உறுப்பாகிய அன்பு இல்லாதவர்களுக்கு, உடம்பின் வெளி உறுப்புகளெல்லாம் இருந்தும் பிறர்க்கு அவற்றால் என்ன நன்மை ஏற்படும்? ஒன்றும் ஏற்படாது.

புறத்து உறுப்பு - உடம்பின் வெளியே உள்ள உறுப்பு; **அகத்து உறுப்பு** - உள்ளத்தில் இருக்கக்கூடிய உறுப்பு; **யாக்கை** - உடம்பு.

(க-ரை): ஒருவரின் உள்ளத்திலே அன்பு இல்லையென்றால், அவருக்கு உடலுறுப்புகள் இருந்தாலும், பிறரின் துன்பம் காணும்போது, அவை யாதொரு உதவியும் செய்ய முன்வரா. (79)

10. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

அன்பின் வழியது, உயிர்நிலை, அஃதுஇலார்க்கு, என்பு தோல், போர்த்த உடம்பு.

(பொ-ரை): அன்போடு பொருந்தி இயங்கும் உடம்பே, உயிர்நிலை பெற்றிருக்கும் உடம்பாகும்; அப்படிப்பட்ட அன்பு இல்லாதவர்களுக்கு உள்ள உடம்பு, எலும்பின் மேல் தோல் போர்த்திய வெற்றுடம்பேயாகும்.

என்பு - எலும்பு; **உயிர்நிலை** - உடம்பு.

(க-ரை): அன்புடையவர்களே உயிர் உடையவர்களாகக் கருதப்படுவார்கள்; அன்பு இல்லாதவர்கள் இறந்த பிணம் போன்றே எண்ணப்படுவார்கள். (80)

9. விருந்து ஓம்பல்

விருந்து ஓம்பல் என்பது, இல்லம் நோக்கி விருந்தினராய் வருபவர்களை அன்புடன் வரவேற்று, விருந்து அளித்துப் போற்றுதல் எனப்படும்.

**1. இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.**

இருந்து ஓம்பி, இல்வாழ்வது, எல்லாம், விருந்து ஓம்பி, வேளாண்மை, செய்தல் பொருட்டு.

(பொ-ரை): வீட்டின்கண் இருந்து ஒருவர் பொருள்களைப் போற்றி வாழ்க்கை நடத்துவதெல்லாம், வரும் விருந்தினரை வரவேற்றுப் போற்றி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தற் பொருட்டேயாகும்.

ஓம்பி - போற்றி; **விருந்து** - விருந்தினர்; **வேளாண்மை** - வேண்டிய உதவிகளைச் செய்தல்.

(க-ரை): வீடு தேடிவரும் விருந்தினரைப் போற்றுதலே, இல்வாழ்வோரின் சிறந்த கடமையாகும். (81)

**2. விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்துஎனினும் வேண்டற்பாற்று அன்று.**

விருந்து, புறத்ததாத், தான் உண்டல், சாவா மருந்து, எனினும், வேண்டற்பாற்று, அன்று.

(பொ-ரை): வீடு தேடி வந்த விருந்தினர், வெளியே உட்கார்ந்திருக்கத் தான் மட்டும் வீட்டுக்குள்ளே இருந்து உணவு உண்ணுவது என்பது, அப்படி உண்ணுவது, சாவாமைக்குக் காரணமாகும் மருந்தே என்றாலும், அந்தச் செயல் விரும்பத்தக்கது அன்று.

புறத்ததா - வீட்டுக்கு வெளிப்புறத்தில்; **சாவாமருந்து** - இறவாமைக்குக் காரணமாக அமையக்கூடிய மருந்து.

(க-ரை): வீடு தேடி வந்த விருந்தினரைக் காத்திருக்க வைத்து விட்டு, ஒருவன்தான் மட்டுமே உண்ணுதலை, அறிவுடையோர் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். (82)

**3. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.**

வருவிருந்து, வைகலும், ஓம்புவான், வாழ்க்கை, பருவந்து, பாழ்படுதல், இன்று.

(பொ-ரை): நாள்தோறும் வீடுநோக்கி வருகைதரும் விருந்தினரைப் போற்றி வாழ்பவனின் வாழ்க்கை, வறுமையுற்றுத் துன்பத்தால் வருந்தி, ஒருநாளும் கெட்டுப் போவது என்பது இல்லை.

வைகலும் - நாள்தோறும்; **ஓம்புதல்** - போற்றிக் காப்பாற்றுதல்; **பருவருதல்** - துன்புறுதல்.

(க-ரை): விருந்தினரை எப்பொழுதும் போற்றி வாழ்பவனது வாழ்க்கையானது, கெட்டுப் போவதில்லை; அவனுக்குப் பிறருடைய உதவி எப்போதும் இருந்துகொண்டே இருக்கும். (83)

4. அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்.

நல்விருந்து, முகன்அமர்ந்து, ஓம்புவான், இல், செய்யாள், அகன் அமர்ந்து உறையும்.

(பொ-ரை): நல்ல விருந்தினராக வீடு தேடி வருபவரை, முகமலர்ச்சியோடு போற்றி வரவேற்கின்றவனுடைய வீட்டில், செல்வம் என்னும் திருமகள் மனமகிழ்ச்சியோடு வாழ்வாள்.

முகன்அமர்ந்து - முகம் இனியனாய்; **அகன்அமர்ந்து** - மனம் மகிழ்ந்து; **செய்யாள்** - செல்வம்; திருமகள் என்று பெண்பாலில் வைத்துச் செல்லப்பட்டது.

(க-ரை): முகமகிழ்ச்சியோடு விருந்தினரைப் போற்றுபவன் வீட்டில் எப்பொழுதும் செல்வம் கொழிக்கவே செய்யும். (84)

5. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்.

விருந்துஓம்பி, மிச்சில், மிசைவான், புலம், வித்து, மிடல் வேண்டும், கொல்லோ?

(பொ-ரை): வந்த விருந்தினரை உண்பித்து, மிஞ்சிய உணவைத் தான் உண்பவனது நிலத்தில், விதைத்த விதைக்கு வேலி போட்டா காக்க வேண்டும்? (ஊராரே கண்காணிப்பாராதலால்) வேண்டுவதில்லை!

வித்து - விதை; பயிர்; **மிடல்** - மிடர்; வேலி; **புதல்** - புதர்; பந்தல் - பந்தர் என்பன போல ரகர லகரப் போலி, **மிச்சில்** - மிஞ்சிய உணவு; **மிசைதல்** - உண்ணுதல்.

(க-ரை): விருந்தினரை முதலில் கவனித்துவிட்டுப் பிறகு மீதப்பட்ட உணவை உண்ணுகிறவன் நிலத்தை, ஊராரே பாதுகாப்பார்கள்; ஆடு, மாடு போன்ற விலங்குகளை மேய விடமாட்டார்கள். (85)

6. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

செல்விருந்து, ஓம்பி, வருவிருந்து, பார்த்திருப்பான், வானத்தவர்க்கு, நல்விருந்து.

(பொ-ரை): வந்து செல்லும் விருந்தினரைப் போற்றி உண்பித்து, இனிவரக் கூடிய விருந்தினரை எதிர்நோக்கி இருப்பவன், வான்புகழ் கொண்டோர் பட்டியலில் அவன் மறைந்த பிறகும் ஒரு விருந்தினனாக இருப்பான்.

செல்விருந்து - வந்துசெல்லும் விருந்தினர்; **வருவிருந்து** - வரக்கூடிய விருந்தினர்.

(க-ரை): எப்பொழுதும் விருந்தோம்புவனுடைய புகழ், அவன் மறைந்த பிறகும்கூட நிலைத்து நிற்கும். (86)

7. இனைத்துணைத்து என்பது ஒன்றுஇல்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

வேள்விப்பயன், இனைத்துணைத்து, என்பது, ஒன்று, இல்லை; விருந்தின், துணைத்துணை.

(பொ-ரை): விருந்தோம்புதலாகிய விரும்பிச் செய்கின்ற செயலின் பயன், இவ்வளவு அளவினையுடையது என்று அளந்து பார்த்துக்கூறக் கூடியது அன்று; விருந்தினரின் உவந்து ஏற்கும் தகுதியின் அளவே அதற்கு ஏற்ற அளவாகும்.

வேள்வி - விருந்தோம்பலாகிய விரும்பிச் செய்கின்ற செயல்; **இனைத்துணைத்து** - இன்ன அளவினது; **விருந்தின் துணைத் துணை** - விருந்தினரது தகுதியின் அளவே அதற்கு அளவு.

(க-ரை): விருந்தினர் விருந்தை எந்த அளவுக்கு உவந்து ஏற்கின்றார்களோ, அந்த அளவுதான் விருந்தினரின் தகுதி அமையும். (87)

8. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

விருந்துஓம்பி, வேள்வி தலைப்படாதார், பரிந்து ஓம்பிப், பற்று அற்றேம், என்பர்.

(பொ-ரை): விருந்தினரைப் போற்றி விருந்தோம்பல் என்னும் செயலைச் செய்யாதவர்கள், தாம் ஈட்டிய பொருளை வருந்திக் காத்து வைத்துப் பின்னர் அந்தப் பொருளை இழக்கும்போதுதான், பொருளாசையை விட்டுவிட்டோம் என்று கூறுவார்கள்.

வேள்வி - விருந்தோம்பல் செய்தல்.

(க-ரை): விருந்தோம்பலைச் செய்து மகிழாதவர்கள், பயனில்லாமல் செல்வத்தை வைத்திருந்து, அதனை இழக்கும்போது தான் வருந்துவார்கள். (88)

**9. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.**

உடைமையுள் இன்மை, விருந்தோம்பல், ஓம்பா மடமை, மடவார்கண், உண்டு.

(பொ-ரை): செல்வம் உள்ள காலத்திலும் ஒருவன் வறுமையிலே இருக்கிறான் எனப்படுவது என்னவென்றால், விருந்தோம்பல் என்னும் செயலைப் போற்றாத அறியாமையாகும்; அது அறிவற்றவர்களிடத்தில் மட்டும் இருப்பதாகும்.

மடமை - அறிவின்மை; **மடவார்** - அறிவில்லாதவர்.

(க-ரை): விருந்தினரை வரவேற்றுப் போற்றாதவன், மிகுந்த செல்வம் உடையவனாக இருந்தாலும், அவன் வறியவன் என்றேதான் உலகத்தாரால் கருதப்படுவான். (89)

**10. மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.**

அனிச்சம், மோப்பக், குழையும்; விருந்து, முகம்திரிந்து, நோக்கக், குழையும்.

(பொ-ரை): மிக மெல்லியதாகிய அனிச்சப்பூ, முகர்ந்து பார்த்தவுடன் வாடிவிடும்; அதுபோல, ஒருவர் முகமலர்ச்சி வேறுபட்டு நோக்கியவுடன், விருந்தினர் முகம் வாடிப் போய்விடுவார்கள்.

மோப்ப - முகந்து பார்க்க; **குழைதல்** - வாடுதல்; **அனிச்சம்** - ஒரு வகையான நீர்ப் பூ.

(க-ரை): ஒருவர் முக மலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்பதுதான், விருந்தினர்க்கு எப்போதும் மகிழ்ச்சியைத் தரும். (90)

10. இன்சொல் கூறல்

இன்சொல் என்பது, உள்ளத்தின் கண்ணே உவகையை வெளிப்படுத்துவனவாகிய இனிய சொற்களை இனிமையாகச் சொல்லுதல் எனப்படும்.

1. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

ஈரம் அளைஇப், படிறு இலவாம், செம்பொருள் கண்டார், வாய்ச்சொல், இன்சொலால்.

(பொ-ரை): அன்பு கலந்து, வஞ்சனை இல்லாது, மெய்யான அறப்பொருள் கண்டவர்களின் வாயினின்று வரும் சொல்லே, இன்சொல்லாக இருக்கும்.

ஈரம் - அன்பு; **அளைஇ** - அளாவி; அதாவது கலந்து; **படிறு** - வஞ்சனை; **இலவாம்** - இல்லாது; **செம்பொருள்** - அறப்பொருள்.

(க-ரை): பிறரிடம் வஞ்சனை ஏதும் கொள்ளாமல், உள்ளன்போடு, உண்மையாகப் பேசுவதே இன்சொல்லாகும். (91)

2. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

முகன்அமர்ந்து, இன்சொலன், ஆகப்பெறின், அகன்அமர்ந்து, ஈதலின், நன்றே.

(பொ-ரை): ஒருவன், முகம் மலர்ந்து, இன்சொல் உடையவனாகத் திகழ்வானேயானால், அதுவே, அவன் மனம் உவந்து ஒருவருக்கு ஒன்றைக் கொடுப்பதைவிட நன்மை பயப்பதாக அமையும்.

அகன்அமர்ந்து - உள்ளம் மகிழ்ந்து; **முகன்அமர்ந்து** - முகம் மலர்ந்து.

(க-ரை): கொடையைப் பெறுவதைக் காட்டிலும், இன் சொல்லைக் கேட்பதே ஒருவனுக்குப் பெருமகிழ்ச்சியை அளிக்கும். (92)

3. முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்.

முகத்தான் அமர்ந்து, இனிது நோக்கி, அகத்தானாம், இன்சொலினதே அறம்.

(பொ-ரை): ஒருவரை முகங்கொடுத்துக் காணும்போது, இனிமையாகப் பார்த்து, உள்ளத்தோடு ஒன்றாய்ப் பொருந்திய இனிய சொற்களைக் கூறும் தன்மையே அறமாகும்.

முகத்தான் அமர்ந்து - முகமலர்ந்து; **அகம்** - மனம்.

(க-ரை): ஒருவரிடம் இனிய சொற்களைச் சொல்லுதலே அவருக்குச் செய்யக்கூடிய அறச் செயலாகும். (93)

**4. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.**

யார்மாட்டும், இன்புறூஉம், இன்சொலவர்க்கு, துன்புறூஉம், துவ்வாமை, இல்லாகும்.

(பொ-ரை): எவரிடத்திலும் இன்பம் பயக்கும் இனிய சொற்களைச் சொல்லுபவருக்குத் துன்பத்தைத் தரும் வறுமை என்பது இல்லாமற் போகும்.

துவ்வாமை - உணவு இன்மையால் உண்ணாதிருத்தல், அதாவது வறுமை.

(க-ரை): இன்சொல் சொல்லுவார்க்கு எல்லோரும் நண்பர்களாவார்கள்; ஆகையினால் அவர்கள் எண்ணியது இனிது ஈடேறும். ஆகவே அவர்களுக்கு வறுமை ஏற்பட வழியில்லை. (94)

**5. பணிவுஉடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணிஅல்ல மற்றுப் பிற.**

பணிவுஉடையன், இன்சொலன், ஆதல், ஒருவற்கு, அணி, மற்றுப் பிற, அல்ல.

(பொ-ரை): பிறரிடத்தில் பணிவுடையோனாகவும், எவரிடத்திலும் இன்சொல் சொல்லுபவனாகவும் ஆவதே, ஒருவனுக்குச் சிறந்த அணிகலனாகும்; மற்ற அணிகலன்களெல்லாம் சிறப்பித்துச் சொல்லப்படும் அணிகள் ஆகா.

பணிவுடையவன் - பணிவாக நடந்து கொள்பவன்; **அணி** - அணிகலன்.

(க-ரை): இன்சொல்லே ஒருவனுக்குச் சிறந்த அணிகலனாக விளங்குவதாகும். (95)

6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

நல்லவை நாடி, இனிய சொலின், அல்லவை தேய, அறம் பெருகும்.

(பொ-ரை): பிறர்க்குப் பயன்தரும் நன்மையை ஆராய்ந்து, ஒருவன் இனிய சொற்களையே சொல்லுவானேயானால், தீமைகள் அகல அவனிடம் அறம் பெருகும்.

அல்லவை - தீமைகள், **தேய** - அகல; **நல்லவை** - நன்மைகள்.

(க-ரை): ஒருவன் இனிய சொற்களையே சொல்லுவானே யானால், அவனுடைய தீமைகள் அகலவும், நன்மைகள் பெருகவும் வழி ஏற்படும். (96)

7. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

பயன்ஈன்று, பண்பின் தலைப்பிரியாச் சொல், நயன் ஈன்று, நன்றி பயக்கும்.

(பொ-ரை): பிறர்க்குப் பயனைத் தந்து, நல்ல பண்பிலிருந்து நீங்காத இனிய சொற்கள், ஒருவருக்கு இன்பத்தையும் தரும்; நன்மையையும் பயக்கும்.

நயன் - இன்பம்; **நன்றி** - நன்மை; **தலைப்பிரியா** - நீங்காத.

(க-ரை): இனிய சொற்கள் ஒருவருக்கு எப்பொழுதும் நன்மையையும் பயக்கும்; இன்பத்தையும் தரும். (97)

8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

சிறுமையுள், நீங்கிய இன்சொல், இம்மையும், மறுமையும், இன்பம் தரும்.

(பொ-ரை): பிறர்க்குத் துன்பந்தரும் சிறுமையிலிருந்து நீங்கிய இனிய சொற்கள், இப்போதும் சரி, பிற்போதும் சரி ஒருவருக்கு இன்பத்தையே தரும்.

இம்மையும், மறுமையும் - இப்போதும், மறுபோதும் அதாவது பிற்போதும்.

(க-ரை): இனிய சொற்கள் இப்போதும் சரி, பின்னர் எப்போதும் சரி இன்பம் பயக்கும். (98)

**9. இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.**

இன்சொல், இனிது ஈன்றல், காண்பான், வன்சொல் வழங்குவது, எவன்கொலோ?

(பொ-ரை): இனிய சொற்கள் இன்பம் தருவதைக் காண்கிறவன், அவற்றிற்கு நேர்மாறான, கடுஞ்சொற்களை வழங்குவது, என்ன பயன் கருதியோ? (ஒரு பயனையும் தராது என்க.)

ஈன்றல் - தருதல்; **வன்சொல்** - கடுஞ்சொல்.

(க-ரை): பிறர்கூறும் இனிய சொற்களைக் கேட்டறிந்து, ஒருவன் இன்பம் பெறுதலைக் கண்ட பிறகு, அவன் பிறரிடம் இன் சொற்களையே பயன்படுத்த வேண்டும். (99)

**10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.**

இனிய உளவாக, இன்னாத கூறல், கனிஇருப்பக் காய், கவர்ந்தற்று.

(பொ-ரை): இனிய சொற்கள் தன்னிடத்தே இருக்கும்போது, அவற்றைக் கூறாமல், ஒருவன் கடுஞ்சொற்களைக் கூறுதல், சுவையுள்ள பழங்கள் இருக்கும்போது, அவற்றை விட்டுவிட்டுச் சுவையற்ற காய்களைப் பறித்துத் தின்ன விரும்புவதை ஒக்கும்.

இனிய - இனிய சொற்கள்; **இன்னாத** - கடுஞ்சொற்கள்.

(க-ரை): இன்சொல் ஒருபுறம் இருக்க ஒருவன் வன்சொல் கூறுதல், இனிய கனி இருக்கும்போது, அதனை விட்டுவிட்டு இன்னாத காயை விரும்புவதைப் போன்றதாகும். (100)

11. செய்ந்நன்றி அறிதல்

செய்ந்நன்றி என்பது, பிறர் தனக்குச் செய்த நன்மைகளை ஒருவன் என்றென்றும் மறவாமல் இருந்து, அவரிடம் உரிய அன்புகாட்டி வருதல் எனப்படும்.

**1. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.**

செய்யாமல் செய்த உதவிக்கு, வையகமும், வானகமும், ஆற்றல், அரிது.

(பொ-ரை): பிறன் ஒருவன் குறிப்பறிந்து, வெளிப்படையாக உதவி செய்வதாகக் காட்டிக்கொள்ளாமல், ஒருவர், அவனுக்கு, அவ்வப்போது, செய்துவரும் உதவிக்கு, மண்ணகத்தையும், விண்ணகத்தையும்கூடக் கைம்மாறாக ஈடுசெய்ய முடியாது.

செய்யாமல் செய்த உதவிக்கு - வெளிப்படையாக உதவி செய்வதாகக் காட்டிக்கொள்ளாமல் ஒருவர் அவ்வப்போது செய்துவரும் உதவிக்கு; **ஆற்றல் அரிது** - கைம்மாறாக ஈடுசெய்ய முடியாது.

'செய்யாமற் செய்த உதவி' என்ற சொற்றொடர், தாயுமானவர் குறிப்பிடும் 'தூங்காமல் தூங்கி', 'சேராமல் சேர்ந்து', 'பாராமல் பார்த்து' என்பன போலவும், இராம நாடகத்தில் அருணாசலக் கவிராயர் குறிப்பிடும் 'கொல்லாமற் கொல்ல' என்பது போலவும், நடைமுறை வழக்கில் குறிப்பிடப்படும், 'சொல்லாமற் சொல்லி', 'திட்டாமற் திட்டி', 'அடிக்காமல் அடித்து' என்பன போலவும், வெளிப்படையாகத் தெரியாமல், ஆனால், செயல்பட்டு நிற்பதாகும். 'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு, என் ஆற்றுங் கொல்லோ உலகு' (குறள்-211) என்று உதவி பற்றி வள்ளுவர் கூறுவது நோக்கத்தக்கது.

(க-ரை): விளம்பரத்தை விரும்பாமல், ஆரவாரமில்லாமல் பிறன் ஒருவனின் குறிப்பறிந்து, ஒருவர், அவ்வப்போது, உதவி செய்து வருவது என்பது, ஈடு செய்ய முடியாத ஒரு பேருதவியாகும். (101)

**2. காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.**

காலத்தினால், செய்த நன்றி, சிறிது எனினும், ஞாலத்தின், மாணப் பெரிது.

(பொ-ரை): ஒருவன் இடர்ப்படும் காலத்தில், பிறனொருவன் செய்த உதவி, அளவில் மிகச் சிறியதாக இருந்தாலும், அதனால் ஏற்பட்ட பயனை ஆராய்ந்தால், அது உலகத்தைவிட மிகப் பெரியதாகவே இருக்கும்.

நன்றி - உதவி; **ஞாலம்** - உலகம்.

(க-ரை): பருவமல்லாத காலத்தில் உதவி செய்யாத உலகத்தைவிட, காலமல்லாத காலத்திலும் உதவி செய்கின்றவன்தான், பெருமையில் மிக்கவனாவான். (102)

**3. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.**

பயன்தூக்கார், செய்த உதவி, நயன் தூக்கின், நன்மை, கடலின் பெரிது.

(பொ-ரை): ஒருவன், தனக்கு எதிர்காலத்தில் இத்தகைய பயன் கிடைக்கும் என்று ஆராயாமல், அவன் பிறர்க்குச் செய்த உதவியை ஆராய்ந்து பார்த்தால், அதனால் ஏற்படும் நன்மை, கடலைவிடப் பெரியதாகவே இருக்கும்.

தூக்குதல் - ஆராய்தல்; **நயன்** - உதவி.

(க-ரை): மழையின் மூலம் நீர்ப்பயனை எதிர்பார்த்து வாழும் கடலைவிட, பின்வரும் எதிர்ப்பயனை நோக்காமல் உதவி செய்பவன்தான் பெருமையிலே சிறப்புடையவன் ஆவான். (103)

**4. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.**

தினைத்துணை, நன்றி செயினும், பயன் தெரிவார், பனைத்துணையாக், கொள்வர்.

(பொ-ரை): ஒருவன், தினை அளவு சிறிய உதவியைச் செய்த போதிலும், அதன் பயனை ஆராய்ந்து தெரிந்து கொண்டவர்கள், அதனையே பனையளவு பெரியதாகக் கொண்டு போற்றவே செய்வார்கள்.

தினை - சிறிய அளவுக்கு எடுத்துக்காட்டு; **பனை** - பெரிய அளவுக்கு எடுத்துக்காட்டு.

(க-ரை): உதவியின் பயனை நன்கு அறிந்தவர்கள் சிறிய உதவியாக இருந்தாலும், அதனைப் பெரியதோர் உதவியாகவே கொள்வார்கள். (104)

5. உதவி வரைத்துஅன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

உதவி, உதவி வரைத்து, அன்று; உதவி செயப்பட்டார், சால்பின் வரைத்து.

(பொ-ரை): ஒருவன் செய்த உதவி, அந்த உதவியின் அளவைப் பொறுத்தது அன்று; அந்த உதவியைப் பெற்றவரின் பண்பின் அளவைப் பொறுத்ததே ஆகும்.

வரைத்து - அளவைப் பொறுத்தது; **செயப்பட்டார்** - செய்யப்பட்டார்; **சால்பு** - பண்பின் மேன்மை.

(க-ரை): ஓர் உதவியைப் பெற்றவர் தன்மைக்கு ஏற்றவாறே, அந்த உதவி சிறிய உதவியா? அல்லது பெரியதோர் உதவியா? என்பது மதிப்பிடப்படும். (105)

6. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்புஆயார் நட்பு.

மாசற்றார் கேண்மை, மறவற்க; துன்பத்துள், துப்புஆ யார், நட்பு, துறவற்க.

(பொ-ரை): குற்றமற்றவரின் நட்புறவை ஒருவன் எந்த ஒரு நேரத்திலும் மறத்தல் கூடாது; துன்பம் வந்த காலத்தில், தனக்கு உறுதுணையாய் நின்று உதவி புரிந்தவரது நட்புறவை, எந்த ஒரு நிலையிலும் விட்டுவிடக்கூடாது.

மறவற்க - மறவாதீர்; **துறவற்க** - விட்டுவிடாதீர்; **மாசற்றார்** - குற்றமற்றவர்; **கேண்மை** - நட்பு; **துப்பு** - உதவி.

(க-ரை): குற்றமற்றவரின் நட்பையும், காலத்தே உதவி செய்தவர்களையும் எந்த ஒரு காலத்திலும் மறக்கக்கூடாது. (106)

7. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

தங்கண், விழுமம், துடைத்தவர் நட்பு, எழுமை, எழுபிறப்பும், உள்ளுவர்.

(பொ-ரை): தமக்கு ஏற்பட்ட துன்பத்தை நீக்கியவர்களின் நட்புறவைச் சான்றோர்கள், ஏற்றம் மிகுந்த தம் வாழ்வின் எல்லா நிலைகளிலும், நினைத்துப் போற்றுவார்கள்.

விழுமம் - துன்பம்; **எழுமை** - பிறப்பின் எல்லா நிலைகள்; சில இடங்களில் ஏழு தலைமுறைகள் என்றும் பொருள்படும்.

(க-ரை): தமக்கு ஏற்பட்ட துன்பத்தைப் போக்கியவர்களின் நட்பை, உயர்ந்தோர்கள், வாழ்வின் எல்லா நிலைகளிலும் மறக்காமல் போற்றி வாழ்வார்கள். (107)

8. நன்றி மறப்பது நன்றுஅன்று நன்றுஅல்லது
அன்றே மறப்பது நன்று.

நன்றி மறப்பது, நன்று அன்று; நன்று அல்லது, அன்றே மறப்பது, நன்று.

(பொ-ரை): பிறர் ஒருவர் தனக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லது அன்று; அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது நல்லது ஆகும்.

நன்றி - நன்மை; **நன்றுஅல்லது** - தீமை.

(க-ரை): பிறர் செய்த நன்மையை ஒருபோதும் மறக்காமல், தீமையை மட்டும் அப்போதே மறந்துவிட வேண்டும். (108)

9. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

கொன்று அன்ன, இன்னா செயினும், அவர் செய்த, ஒன்று நன்று, உள்ளக் கெடும்.

(பொ-ரை): முன்பு தனக்கு உதவி செய்தவர், பின்பு கொலைக்கு ஒத்த தீமைகளைச் செய்தாலும், அவர் முன்பு செய்த அந்த ஓர் உதவியை நினைத்துப் பார்த்தால், அத்தீமைகளால் ஏற்படும் துன்பம் நீங்கிவிடும்.

கொன்றன்ன - கொலைக்கு ஒத்த; **இன்னா** - துன்பம்.

(க-ரை): ஒருவர் செய்தது ஒரு நன்மைதான் என்றாலும், அந்த நன்மையை நினைத்துக் கொண்டால், அவரது தீமைகளால் ஏற்படும் துன்பங்களெல்லாம்கூட அகன்றுபோய் விடும். (109)

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுஉண்டாம் உய்வுஇல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

எந்நன்றி கொன்றார்க்கும், உய்வு உண்டாம், செய்ந்நன்றி, கொன்றமகற்கு, உய்வு இல்லை.

(பொ-ரை): எவ்வகைப்பட்ட அறங்களை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைத்துக் கொள்ளுவதற்கு வழிஉண்டாகும்; ஆனால், ஒருவர் செய்த உதவியை மட்டும் மறந்தவனுக்கு, எப்பொழுதுமே நல்ல பிழைப்பு இல்லை.

உய்வு - பிழைப்பு; அதாவது நல்வாழ்வு.

(க-ரை): செய்ந்நன்றி மறந்து வாழ்பவனுக்கு எப்பொழுதும் நல்வாழ்வு இருக்காது. (110)

12. நடுவு நிலைமை

நடுவு நிலைமை என்பது, பகைவர், நொதுமலர், நண்பர் என்ற மூவகைத் திறத்தாருள் எவரொருவர் பக்கமும் சேராமல், நடுநிலைமையில் நின்று, அறவுணர்வோடு நடந்துகொள்ளுதல் எனப்படும்.

1. தகுதி எனஒன்று நன்றே பகுதியான்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.

பகுதியான் பாற்பட்டு, ஒழுகப் பெறின், தகுதி, என ஒன்று, நன்றே.

(பொ-ரை): பல்வேறு வகைப்பட்ட திறத்தினரான மக்களிடையே ஒன்றியிருந்து பழகும்படி நேரிட்டால், நடுவுநிலைமை என்று சொல்லப்படும் தகுதியோடு நடந்து கொள்ளுதல் ஒன்று மட்டுமே ஒருவருக்கு நன்மை பயப்பதாகும்.

தகுதி - நடுவுநிலைமை; **நன்று** - நன்மை; **பகுதியான்** - பல்வேறு வகைப்பட்ட திறத்தினர்; **பாற்பட்டு** - ஒன்றியிருந்து பழகும்படி நேரிடுதல்.

(க-ரை): ஒருவர் பலதிறப்பட்ட மக்களிடையே பழகும்போது, நடுவுநிலைமை என்ற நெறிமுறையைக் கடைப்பிடித்தால், அதுவே சிறந்த நன்மையை அவருக்குப் பயக்கும். (111)

2. செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.

செப்பம் உடையவன், ஆக்கம், சிதைவு இன்றி, எச்சத்திற்கு, ஏமாப்பு உடைத்து.

(பொ-ரை): நடுவு நிலைமையுடையவனுடைய செல்வம், அழிவில்லாமல், அவனுடைய வழிவழித் தலைமுறையினர்க்கும் உறுதியான பாதுகாப்பு உடையதாக அமையும்.

செப்பம் - நடுவு நிலைமை; **ஆக்கம்** - செல்வம்; **சிதைவு** - அழிவு; **எச்சம்** - வழிவழித் தலைமுறையினர்; **ஏமாப்பு** - பாதுகாப்பு.

(க-ரை): நடுவு நிலைமையுடையவனது செல்வமானது அவனுக்கு மட்டுமல்லாமல், அவன் வழியில் வரும் தலைமுறை யினர்க்கும் பயன்படுவதாக இருக்கும். (112)

3. நன்றே தரினும் நடுவுஇகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

நன்றே தரினும், நடுவு இகந்து, ஆம், ஆக்கத்தை, அன்றே, ஒழியவிடல்.

(பொ-ரை): தீமை தராமல், நன்மையே பயப்பதானாலும், நடுவு நிலைமை தவறுவதால், உண்டாகும் செல்வத்தை, அத்தகைய செல்வம் வரத் தொடங்கும் அந்த நேரத்திலேயே கைவிட்டு விடுதல் வேண்டும்.

நன்று - நன்மை; **நடுவு** - நடுவு நிலைமை; **இகந்து** - நீக்கப்படுதல்; அதாவது தவறுதல்; **ஆக்கம்** - செல்வம்.

(க-ரை): நடுவு நிலைமை தவறிச் செல்வத்தை ஒருவன் சேர்க்கக்கூடாது; அப்படியே நடுவுநிலைமை தவறுதலால் செல்வம் சேருமாயின், அந்தச் செல்வத்தை அப்பொழுதே ஒழித்துவிட வேண்டும். (113)

4. தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.

தக்கார், தகவிலர், என்பது, அவரவர், எச்சத்தால், காணப்படும்.

(பொ-ரை): ஒருவர் நடுவுநிலைமை உடையவர் என்பதும், நடுவுநிலைமை இல்லாதவர் என்பதும், முறையே, அவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழாலும், பழியாலும் கண்டறியக்கூடும்.

தக்கார் - நடுவுநிலைமை உடையவர்; **தகவிலர்** - நடுவு நிலைமை அற்றவர்; **எச்சம்** - எஞ்சி நிற்பது.

(க-ரை): ஒருவர் நடுவுநிலைமையோடு வாழ்ந்தவரா? அல்லது வாழாதவரா? என்பதை, அவருக்குப் பின்னும் நின்று நிலவும் புகழாலும், பழியாலும் முறையே அறிந்துகொள்ளலாம். (114)

5. கேடும் பெருக்கமும் இல்அல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி.

கேடும், பெருக்கமும், இல்அல்ல, நெஞ்சத்துக் கோடாமை, சான்றோர்க்கு, அணி.

(பொ-ரை): கேடு ஏற்படுவதும், ஆக்கம் ஏற்படுவதும், உலகத்தில் இல்லாதவை அல்ல; ஆகையினாலே, உள்ளத்தில் நடுவுநிலைமை தவறாமல் இருத்தலே, சான்றோர்க்கு அழகாகும்.

கோடாமை - ஒரு பக்கம் சாயாமை; அதாவது நடுவுநிலைமை தவறாமை.

(க-ரை): இன்ப நிலை, துன்ப நிலை ஆகிய இரண்டிலும் நடுவுநிலைமை தவறாது இருத்தல்தான், சான்றோர்களின் சிறந்த பண்பாகும். (115)

6. கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின்.

தன்நெஞ்சம், நடுஒரீஇ, அல்ல செயின், கெடுவல் யான், என்பது, அறிக.

(பொ-ரை): ஒருவனின் உள்ளம், நடுவுநிலைமையிலிருந்து நீங்கி, நடுநிலையல்லாத செயல்களைச் செய்ய நினைக்குமேயானால், நான் கெட்டொழியப் போகிறேன் என்று, அவனே அறுதியிட்டுக் கூறுகிறான் என்பதாக அறியவேண்டும்.

நடு - நடுவுநிலைமை; **ஒரீஇ** - நீங்கி; **செயின்** - செய்தால்.

(க-ரை): நடுவுநிலைமை தவறுகிறவன், கெட்டுப் போவது என்பது உறுதியான ஒன்றாகும். (116)

7. கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

நடுவாக, நன்றிக்கண், தங்கியான், தாழ்வு, உலகம், கெடுவாக, வையாது.

(பொ-ரை): நடுவுநிலைமையுடன் அறநெறியில் நின்று, நிலையாக வாழ்கின்ற ஒருவன் தாழ்வானாயின், அவனுடைய கேட்டை, உலகத்தார் ஒரு கேடாக என்றுமே கொள்ளமாட்டார்கள்.

கெடுவாக - தீமை பயக்கும் கேடாக; **வையாது** - வைத்துக் கருதாது; **நன்றிக்கண்** - நடுவுநிலைமையில்.

(க-ரை): நடுவுநிலைமை உடையவன், வறுமையினால் தாழ்ந்து போவானேயானாலும், அவன் தாழ்ந்துவிட்டதாக உலகத்தார் கொள்ளமாட்டார்கள். (117)

8. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

சமன்செய்து, சீர்தூக்கும், கோல்போல், அமைந்து, ஒரு பால், கோடாமை, சான்றோர்க்கு, அணி.

(பொ-ரை): தாம் முதலில் சமனாக இருந்து, பிறகு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல் போல் அமைந்து, ஒரு பக்கமாக எப்பொழுதும் சாயாமல், நடுவுநிலைமையைக் காப்பாற்றி வருவதே, சான்றோர்க்கு அழகாகும்.

சமன் - சமமாக; **கோல்** - துலாக்கோல்; தராசு; **ஒருபால்** - ஒரு பக்கமாக; **கோடாமை** - சாயாதிருத்தல்; **அணி** - அழகு.

(க-ரை): துலாக்கோல்போல் சமமாக நின்று, ஏதொன்றிலும் தீர்ப்பு வழங்குவதுதான், சான்றோர்க்கான அழகான பண்பாகும். (118)

**9. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.**

உள்கோட்டம், இன்மை, ஒருதலையா, பெறின், சொற் கோட்டம், இல்லது, செப்பம்.

(பொ-ரை): உள்ளத்தின்கண் கோணுதல் இல்லாமையை உறுதியாக ஒருவன் பெற்றால், பின்னர் அவனது சொல்லின்கண் கோணுதல் இல்லை என ஏற்படும்; அதுவே, நடுவுநிலைமைத் தன்மையாகும்.

சொற்கோட்டம் - சொல்லில் கோணுதல்; **இல்லது** - இல்லாதிருத்தல்; **செப்பம்** - நடுவுநிலைமை; **உள்கோட்டம்** - மனத்தில் கோணுதல்; **ஒருதலையா** - உறுதிப்பாடாக.

(க-ரை): ஒருவனது மனத்திலும், சொல்லிலும் கோணுதல் இல்லாத நிலைமையே நடுவுநிலைமையாகும். (119)

**10. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்.**

பிறவும், தமபோல், பேணிச்செயின், வாணிகம் செய்வார்க்கு, வாணிகம்.

(பொ-ரை): பிறர் பொருளையும் தம் பொருள் போல் எண்ணி, நடுவுநிலைமையோடு வாணிகம் செய்தால், அதுவே வாணிகம் செய்வார்க்கு நல்ல ஊதியம் தருவதாக அமையும்.

பிறவும் தமபோல் - பிறர் பொருளையும் தமது பொருளைப் போல; **செயின்** - எண்ணிச் செய்தால்.

(க-ரை): பிறர் பொருளையும் தனது பொருளைப் போலவே எண்ணி ஒருவன் வாணிகம் செய்தால், அவனுக்கு நல்ல ஊதியம் கிடைப்பது உறுதி. (120)

13. அடக்கம் உடைமை

அடக்கம் உடைமை என்பது, ஒருவன் தனது மனம், மொழி, மெய் ஆகியவற்றைத் தீய வழிகளிலும், முறை யல்லாத நெறிகளிலும் செல்லாதபடி, அவற்றைத் தடுத்து நிறுத்தி, அறவழிகளில் மட்டுமே செலுத்தி அடக்கமாக இருத்தல் எனப்படும்.

1. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்.

அடக்கம், அமர் அருள், உய்க்கும்; அடங்காமை, ஆர்இருள், உய்த்துவிடும்.

(பொ-ரை): அடக்கமானது, ஒருவன் விரும்புகின்ற அருளை அவனுக்குக் கொடுக்கவல்லது; அடக்கமின்மையானது நிறைந்த துன்பத்தைக் கொடுத்துவிடும்.

அமர் - விரும்புகின்ற; **உய்க்கும்** - செலுத்தும்; கொடுக்கும்; தரும்; **ஆர்இருள்** - நிறைந்த துன்பம்.

(க-ரை): ஒருவருக்கு அடக்கம் எப்பொழுதும் அருளையும், அடங்காமை துன்பத்தையும் தரும். (121)

2. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனின்ஊங்கு இல்லை உயிர்க்கு.

அடக்கத்தை, பொருளா, காக்க; உயிர்க்கு, அதனின் ஊங்கு, ஆக்கம், இல்லை.

(பொ-ரை): ஒருவன் அடக்கத்தைச் சிறந்த பொருளாக எண்ணி அதனைப் பாதுகாக்க வேண்டும்; உயிர்களுக்கு அவ்அடக்கத்தைவிட மேலான ஆக்கம் தரும் செல்வம் வேறொன்றும் இல்லை.

பொருளைக் காக்க - சிறந்த பொருளாக எண்ணிக் காக்க வேண்டும்; **ஆக்கம்** - செல்வம்.

(க-ரை): ஒருவனுக்கு அடக்கத்தைவிடச் சிறந்த செல்வம் வேறொன்றும் இருக்க முடியாது. (122)

3. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்.

அறிவு அறிந்து, ஆற்றின், அடங்கப் பெறின், செறிவு அறிந்து, சீர்மை, பயக்கும்.

(பொ-ரை): அடக்கம் என்பது அறிவுடைமையாகும் என்பதை அறிந்து, ஒருவன் நல்வழியில் அடக்கமாக நடந்து கொண்டால், அவனுடைய அடக்கத்தை, உலகோர் அறிந்து, அவனுக்கு மேன்மையான நிலையை அளிப்பர்.

அறிவு - அறிவுடைமை; **ஆற்றுதல்** - நல்ல வழியில் நடத்தல்; **சீர்மை** - மேன்மை.

(க-ரை): அடக்கமாக வாழ்தலே அறிவுடைமையாகும் என்பதை ஒருவன் அறிந்து, அடங்கி நடப்பானேயானால், உலகத்தார் அவனை மிக மேலாகவே மதிப்பார்கள். (123)

**4. நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.**

நிலையில், திரியாது, அடங்கியான், தோற்றம், மலையினும், மாணப் பெரிது.

(பொ-ரை): தன் ஒழுக்க நிலையிலிருந்து மாறுபடாமல், அடக்கமாய் நடப்பவனுடைய உயர்ந்த தோற்றப்பொலிவு, மலையின் உயர்ச்சியைக் காட்டிலும் மிகவும் பெரியதாகக் கருதப்படும்.

நிலையில் - தன் ஒழுக்க நிலையில்; **திரியாது** - மாறுபடாது; **தோற்றம்** - தோற்றப் பொலிவு; **மாண** - மிகவும்; மலை என்பது மதிப்பின் உயர்வுக்கு எடுத்துக்காட்டு.

(க-ரை): இயல்பாகவே அசைகின்ற மனிதன், தன் ஒழுக்க நிலையில் மாறுபடாது இருப்பானேயானால், அவனது தோற்றப் பொலிவு, இயல்பாகவே அசையாத மலையின் தோற்றத்தைவிடப் பெரிதாகும். (124)

**5. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.**

பணிதல், எல்லார்க்கும் நன்றாம், அவருள்ளும், செல்வர்க்கே, செல்வம், தகைத்து.

(பொ-ரை): அடக்கமாய் நடத்தல், பொதுவாக வறியர் செல்வர் என்னும் யாவர்க்குமே நலம் பயப்பதாகும்; அவர்களுக்குள்ளும்,

செல்வம் மிகுந்தவர்களிடத்திலே அடக்கம் இருந்துவிட்டால், அவர்களின் மற்றொரு செல்வமாக அது சிறப்பித்துச் சொல்லப்படும் தகுதியைப் பெற்றுவிடுகிறது.

பணிதல் - அடக்கத்துடன் வாழ்தல்; **தகைத்து** - தகுதியை உடையது.

(க-ரை): அடக்கம் பொதுவாக எல்லோர்க்கும் நலம் பயக்கும்; அது, செல்வரிடத்தில் இருக்குமேயானால், அது அவருக்குக் கூடுதலாகத் தனியொரு செல்வமாக அமைந்துவிடும். (125)

6. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

ஐந்து அடக்கல், ஆமைபோல், ஒருமையுள், ஆற்றின், எழுமையும், ஏமாப்பு, உடைத்து.

(பொ-ரை): தன் ஓட்டுக்குள் ஐந்து உறுப்புகளையும் அடக்கிக் கொள்ளும் ஆமைபோல், ஒருவன் தன் வாழ்வின் ஒரு நிலையில் ஐம்பொறிகளையும் அடக்கியாளுவதில் வல்லவனாகத் திகழ்ந்தால், அச்செயல், எல்லா நிலைகளிலும் தீமைகள் அணுகாமல் பாதுகாக்கும் சிறப்பினை உடையதாக அமையும்.

ஒருமை - ஒரு நிலையில்; **எழுமை** - எதிர்காலத்தில் ஏற்படும் எல்லா நிலைகளிலும்.

(க-ரை): ஐம்பொறிகளின் அடக்கவுணர்வே, ஒருவனுக்கு என்றென்றும் எல்லா நிலைகளிலும் துன்பங்கள் அணுகாமல் இருப்பதற்குக் காரணமாக அமையும். (126)

7. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.

யாகாவார், ஆயினும், நாகாக்க; காவாக்கால், சொல் இழுக்கப்பட்டுச், சோகாப்பர்.

(பொ-ரை): ஒருவர் தாம் காக்க வேண்டியவைகளில், எவற்றைக் காக்கத் தவறினாலும், தம் நாவை மட்டுமாவது கட்டாயம் காக்க வேண்டும்; அப்படிக் காக்கத் தவறினால், அவர் சொல் குற்றத்தில் அகப்பட்டுக் கொண்டு, பெரிதும் துன்பப்படுவார்.

யா - எவற்றையும்; **காவார்** - காக்கத் தவறுபவர்; **சோகாத்தல்** - துன்புறுதல்; **இழுக்கு** - குற்றம்.

(க-ரை): ஒருவருக்கு நாவடக்கமே சிறந்த அடக்கமாகும்; நாவை அடக்காவிட்டால், சொற்குற்றத்தில் அவர் அகப்பட்டு வருந்த வேண்டி வரும். (127)

**8. ஒன்றாயினும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகாது ஆகி விடும்.**

ஒன்றுஆயினும், தீச்சொல், பொருட்பயன், உண்டாயின், நன்றுஆகாது, ஆகிவிடும்.

(பொ-ரை): நல்ல சொற்களைச் சொல்லும்போது, அவற்றில் ஒரு சொல் தீய சொல்லாக இருந்து, அதன் பொருளால் பிறர்க்குத் துன்பமாகிய பயன் விளையுமேயானால், பிற நல்ல சொற்களால் ஏற்படக்கூடிய நன்மையும் தீதாகிவிட்டதாகக் கருதப்படும்.

தீச்சொல் - தீமை பயக்கும் சொல்; **நன்று ஆகாது** - தீது.

(க-ரை): நல்ல சொற்களிடையே ஒரு தீய சொல்லைக் கலந்து பேசினாலும், அதனால் பேச்சிலுள்ள பிற நன்மைகளும் தீயவையாகக் கருதப்பட்டுவிடும். (128)

**9. தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.**

தீயினால், சுட்ட புண்; உள்ஆறும்; நாவினால், சுட்ட வடு, ஆறாதே.

(பொ-ரை): தீயினால் சுட்ட புண் உடலின் புறத்தே வடுவை உண்டாக்கினாலும், மனத்தின் உள்ளே ஆறிவிடும்; ஆனால் நாவினால் தீய சொற்களைக் கூறுவதன் மூலம் மனத்தைச் சுட்ட புண் உள்ளத்தின்கண் எப்போதும் ஆறாமல் இருக்கும்.

உள் - மனத்தின் உள்; **வடு** - புண்.

(க-ரை): தீயினால் சுட்ட புண்ணினால் ஏற்பட்ட துன்பம் மனத்தைவிட்டு நீங்கிவிடும்; ஆனால், கடுஞ்சொல்லால் ஏற்பட்ட மனப்புண், ஒருபோதும் நீங்காது. (129)

**10. கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.**

கதம் காத்துக், கற்றுஅடங்கல், ஆற்றுவான், செவ்வி, அறம், ஆற்றின் நுழைந்து பார்க்கும்.

(பொ-ரை): சினம் ஏற்படாமல் காத்துக்கொண்டு, கற்க வேண்டியவற்றையெல்லாம் கற்று, அடக்கத்தை மேற்கொள்ளும் வல்லமையுடையவனைக் காணும் காலத்தை, அறமானது அவனைச் சென்றடையும் வழியை ஆராய்ந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்.

கதம் - சினம்; **காத்து** - அடக்கிக் காத்து; **கற்றுஅடங்கல்** - கல்வி கற்று அடக்கங்கொண்டு; **செவ்வி** - காணுங்காலம்.

(க-ரை): சினம் இல்லாமல் அடக்கத்தோடு ஆற்றல் பெற்று விளங்குபவரை அறமானது தழுவி நிற்கும். (130)

14. ஒழுக்கம் உடைமை

ஒழுக்கம் உடைமை என்பது, உயர்ந்தோரால் அறிவுறுத்தப்பட்ட, மக்களின் பழக்கவழக்கப் பண்பாட்டின் அடிப்படையில், அறநெறியில் நின்று நடந்துகொள்ளுதல் எனப்படும்.

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

ஒழுக்கம், விழுப்பம், தரலான், ஒழுக்கம், உயிரினும், ஓம்பப்படும்.

(பொ-ரை): ஒழுக்கம், ஒருவருக்கு மேன்மை தருவதாக அமைந்திருப்பதால், அந்த ஒழுக்கமே, உயிரைக் காட்டிலும் மிகச் சிறந்ததாகப் போற்றிக் காக்கப்படும்.

ஒழுக்கம் - நன்னடக்கை; **விழுப்பம்** - மேன்மை; சிறப்பு; **ஓம்பப்படும்** - போற்றிக் காக்கப்படும்.

(க-ரை): ஒருவனுக்குப் பெருஞ்சிறப்பு ஏற்படுவதால், ஒழுக்கம் உயிரைக் காட்டிலும் சிறந்ததாகப் போற்றிக் காக்கப்பட வேண்டிய ஒன்றாகும். (131)

2. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்துஓம்பித்
தேரினும் அஃதே துணை.

பரிந்து ஓம்பி, ஒழுக்கம், காக்க; தெரிந்து ஓம்பித் தேரினும், அஃதே துணை.

(பொ-ரை): வருந்திப் போற்றியாவது ஒருவன் ஒழுக்கத்தைக் காக்க வேண்டும்; பண்புகள் பலவற்றையும் ஆராய்ந்து பார்த்துத் தெளிவாகக் கண்டாலும், அவ்வொழுக்கமே, ஒருவனுக்கு உற்ற துணையாக விளங்கும்.

பரிந்து ஓம்பி - வருந்திப் போற்றி; **தேரினும்** - ஆராய்ந்து தெளிந்தாலும்.

(க-ரை): ஒருவனுடைய நல்வாழ்வுக்கு, ஒழுக்கமே எப்பொழுதும் ஏற்ற துணையாக இருக்கும். (132)

3. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

ஒழுக்கம் உடைமை, குடிமை, இழுக்கம், இழிந்த பிறப்பாய் விடும்.

(பொ-ரை): நல்லொழுக்கம் உடையவராக ஒருவர் வாழ்வதே, உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையை உணர்த்துவதாகும்; ஒழுக்க மின்மை, தாழ்ந்த குடிப்பிறப்பின் தன்மையை உணர்த்துவதாகி விடும்.

குடிமை - உயர்குடித் தன்மை; **இழிந்த பிறப்பு** - தாழ்ந்த குடித்தன்மை; **இழுக்கம்** - தீய ஒழுக்கம்.

(க-ரை): நல்லொழுக்கம், தீயொழுக்கம் ஆகியவற்றைக் கொண்டே, முறையே மக்களின் உயர்வு, தாழ்வுக் குடிப்பிறப்பு நிலைகள் மதிப்பிடப்படும். (133)

4. மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்புஒழுக்கம் குன்றக் கெடும்.

பார்ப்பான், மறப்பினும், ஓத்து, கொளல் ஆகும்; பிறப்பு ஒழுக்கம், குன்றக், கெடும்.

(பொ-ரை): அறநெறி நூல்களைக் கற்று ஆராய்ந்து பார்ப்பவன், அவற்றையெல்லாம் மறந்துவிட்டாலும், மீண்டும் கற்றுத் தெரிந்துகொண்டு விடலாம்; ஆனால், உயர்குடி மகனின் பிறப்புக்கே உரிய ஒழுக்கம் குறைந்து போகுமேயானால், அவன் கெட்டொழிந்தே போவான்.

ஓத்து - வழிகாட்டும் நெறி நூல்; பண்டை நாளில் பார்ப்பான் என்றால், நூல்களைப் பார்ப்பவன்; நாழிகைக் கணக்கைப் பார்ப்பவன்; காலக்கணக்குப் பார்ப்பவன்; பருவநிலை பார்ப்பவன்; நிமித்திகம் பார்ப்பவன் என்று பொருள்; ஒரு வகுப்பினரைக் குறிக்காது; **பிறப்பு ஒழுக்கம்** - மக்கட் பிறப்புக்கேயுரிய ஒழுக்கம்.

(க-ரை): ஒருவன் தான் கற்றதை மறந்துவிடுவானேயானால், அதனை அவன் மீண்டும் கற்றுக்கொள்ளலாம்; ஆனால், மக்கட் பிறப்புக்கேயுரிய ஒழுக்கம் கெடுமேயானால், அதை அவன் மீண்டும் தேடிக்கொள்ள முடியாது. (134)

5. அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

அழுக்காறு, உடையான்கண், ஆக்கம், போன்று, ஒழுக்கம், இலான்கண், உயர்வு, இல்லை.

(பொ-ரை): பொறாமை உடையவனிடத்தில் செல்வம் எவ்வாறு நிலைபெறாமல் போகுமோ, அவ்வாறே ஒழுக்கம் இல்லாதவனிடத்தில் சிறப்பு நிலைபெறாமல் போகும்.

அழுக்காறு - பொறாமை; **ஆக்கம்** - செல்வம்; **உயர்வு** - சிறப்பு.

(க-ரை): பொறாமை உள்ளவனிடத்தில் செல்வம் நிலை பெறாது; அதுபோல, ஒழுக்கமின்மை உள்ளவனிடத்தில் சிறப்பு நிலைபெறாது. (135)

6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து.

இழுக்கத்தின் ஏதம், படுபாக்கு, அறிந்து, உரவோர், ஒழுக்கத்தின், ஒல்கார்.

(பொ-ரை): ஒழுக்கம் தவறுதலால் குற்றம் உண்டாவதை அறிந்து, மனவலிமையுடைய சான்றோர்கள், நல்லொழுக்கத்திலிருந்து ஒருகாலும் தளர்ந்து போகமாட்டார்கள்.

ஒல்குதல் - சுருங்குதல் - குறைதல்; **உரவோர்** - மனவலிவு உடையவர்கள்; **ஏதம்** - குற்றம்; **படுபாக்கு** - உண்டாகிவிடுதல்.

(க-ரை): ஒழுக்கம் கெட்டால் இழிவு உண்டாகும் என்பதை அறிந்து, அறிவுடையோர் ஒழுக்கந் தவறமாட்டார்கள். (136)

7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி.

ஒழுக்கத்தின், எய்துவர், மேன்மை, இழுக்கத்தின், எய்தாப் பழி, எய்துவர்.

(பொ-ரை): யாரொருவரும் ஒழுக்கத்தால் மேம்பாட்டையே அடைவார்கள்; ஒழுக்கத்திலிருந்து தவறுதன்மூலம், அடையக்கூடாத பெரும் பழியை ஒவ்வொருவரும் அடைவார்கள்.

இழுக்கம் - ஒழுக்கத்திலிருந்து தவறுதல்; **எய்தா** - அடைய முடியாத; அடையக்கூடாத.

(க-ரை): ஒருவருக்கு நல்லொழுக்கம் எப்பொழுதும் மேம்பாட்டையே தரும்; தீய ஒழுக்கம் எப்பொழுதும் கீழ்மையையே பயக்கும். (137)

**8. நன்றிக்கு வித்தாகும் நல்ஒழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.**

நல்ஒழுக்கம், நன்றிக்கு வித்தாகும்; தீயொழுக்கம், என்றும், இடும்பை தரும்.

(பொ-ரை): நல்லொழுக்கம், எப்பொழுதும் நன்மைக்கு அடிப்படைக் காரணமாகவே அமையும்; தீயொழுக்கம், எப்பொழுதும் துன்பத்தையே தரும்.

நன்றிக்கு - நன்மைக்கு; **வித்தாகும்** - விதை போன்று அடிப்படைக் காரணமாகும்; **தீ** - தீய; **இடும்பை** - துன்பம்.

(க-ரை): ஒருவருக்கு நல்லொழுக்கம் இன்பத்தையும், தீயொழுக்கம் துன்பத்தையும் தரும். (138)

**9. ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்.**

தீய, வழுக்கியும், வாயால் சொலல், ஒழுக்கம் உடையவர்க்கு, ஒல்லாவே.

(பொ-ரை): தீய சொற்களைத் தவறியும் தம் வாயால் சொல்லுதல் என்பது, நல்லொழுக்கம் உடையோர்க்கு ஒரு நாளும் பொருந்தி வராது.

ஒல்லாவே - பொருந்தாது; **வழுக்கியும்** - தவறியும்.

(க-ரை): நல்லொழுக்கம் உடையவர்கள் ஒருநாளும் மறந்தும் தீயவற்றைப் பற்றிப் பேச மாட்டார்கள். (139)

**10. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.**

உலகத்தோடு, ஒட்ட ஒழுகல், பலகற்றும், கல்லார், அறிவிலாதார்.

(பொ-ரை): பல நூல்களைக் கற்றிருந்த போதிலும், உலகத்தின் உயர்ந்த பெருமக்களோடு சார்ந்து ஒழுகும் முறையைக் கற்றுக் கொள்ளாதவர்கள், அறிவில்லாதவராகவே கருதப்படுவார்கள்.

உலகத்தோடு - உலக மக்களோடு; **ஒட்ட** - ஒன்றுபட்டு, சார்ந்து.

(க-ரை): கூடி வாழும் மக்களின் பழக்கவழக்கங்களுக்கு ஏற்ப நடந்துகொள்ளத் தெரியாதவர்கள், பல நூல்களைக் கற்றிருந்த போதிலும், உலக நடைமுறையைக் கல்லாதவரேயாவார்கள். (140)

15. பிறன்இல் விழையாமை

பிறன்இல் விழையாமை என்பது, ஒருவன் காம மயக்கங் கொண்டு, அறநெறிகளையெல்லாம் விட்டு, ஒழுக்கங் கெட்டுப் பிறனுக்குரிய இல்லாளை விரும்பாதிருத்தல் எனப்படும்.

**1. பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்.**

பிறன் பொருளாள், பெட்டு ஒழுகும், பேதைமை, ஞாலத்து, அறம், பொருள், கண்டார்கண், இல்.

(பொ-ரை): பிறன் ஒருவனுக்கு உரிமையுடைய மனைவியை விரும்பி, அவளைத் தாம் அடைய நினைக்கும் அறியாமை, உலகத்தில் அறநூல்களையும், பொருள் நூல்களையும் உண்மையாக ஆராய்ந்து அறிந்தவர்களிடம் இருப்பது இல்லை.

பிறன் - பிறன் ஒருவனுக்கு; **பொருளாள்** - உரிமையுடையவள்; **பெட்டு ஒழுகும்** - விரும்பி நடந்துகொள்ளுகின்ற; **பேதைமை** - அறியாமை; **ஞாலம்** - உலகம்.

(க-ரை): ஒருவன், பிறன் ஒருவனுக்குரிய மனைவியை விரும்புதல் அறிவுடைய செயலோ, அறச்செயலோ ஆகாது.

பெண்ணுக்குரிய கற்புநிலை 'வாழ்க்கைத் துணைநலம்' என்னும் தலைப்பின் கீழும், ஆணுக்குரிய கற்புநிலை 'பிறன்இல் விழையாமை' என்னும் இந்தத் தலைப்பின் கீழும் வலியுறுத்தப் பட்டுள்ளன. (141)

**2. அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல்.**

அறன்கடை நின்றாருள், எல்லாம், பிறன்கடை, நின்றாரின், பேதையார், இல்.

(பொ-ரை): அறநெறியை விட்டுவிட்டுத் தீயநெறியில் நின்றவர்கள் எல்லாருள்ளும், பிறன் ஒருவனுடைய மனைவியை விரும்பி, அவனுடைய வீட்டு வாயிலில் சென்று நின்றவர்களைப் போன்ற அறிவிலிகள், எவரும் இருக்க மாட்டார்கள்.

அறன்கடை - தீய நெறி; **பிறன் கடை** - பிறனுடைய வீட்டு வாயில்; **பேதையார்** - அறவிலிகள்.

(க-ரை): பிறனுக்குரிய மனைவியை விரும்புகிறவன் கொடியவர்களெல்லாரைக் காட்டிலும் மிகக் கொடியவன் ஆவான். (142)

**3. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தார்இல்
தீமை புரிந்தொழுகு வார்.**

தெளிந்தார், இல், தீமைபுரிந்து ஒழுகுவார், விளிந்தாரின் வேறு அல்லர், மன்ற.

(பொ-ரை): ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல், தம்மை நல்லவர் என்று நம்பியவருடைய மனைவியிடத்தே விருப்பங்கொண்டு, தீய செயலைச் செய்து ஒழுகுபவர், இறந்தவர்களைக் காட்டிலும் வேறுபட்டவர் அல்லர்; இறந்தவராகவே கருதப்படுவார்.

விளிதல் - இறத்தல்; **தெளிந்தார்** - நல்லவரென்று நம்பியவர்; **தீமை** - தீய செயல்; அதாவது காம விருப்பங்கொண்டு செய்யும் தீய செயல்.

(க-ரை): தம்மை நம்பியவர் வீட்டில், அந்த வீட்டிற்குரிய இல்லாளிடம் தகாத செயல்களைச் செய்பவர், செத்த பிணத்திற்கு ஒப்பானவர் ஆவார். (143)

**4. எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறன்இல் புகல்.**

தினைத்துணையும், தேரான், பிறன்இல்புகல், எனைத்துணையர், ஆயினும், என்னாம்.

(பொ-ரை): தினை அளவுகூடத் தம் பிழையை ஆராய்ந்து பார்க்காமல், பிறன் ஒருவனுடைய மனைவியை விரும்பிச் செல்லுதல், அவர் எவ்வளவு மதிப்புடையவராக இருந்தாலும், என்ன ஏற்படும் என்று பார்த்தால், எவராலும் மதிக்கப்பட மாட்டார் என்பது புலனாகும்.

எனைத்துணையர் ஆயினும் எவ்வளவு மதிப்பு உடையவராக இருந்தாலும்; **தினைத்துணை** - தினை அளவு; **பிறன் இல்புகல்** - பிறன் மனைவியை விரும்பிச் செல்லுதல்.

(க-ரை): பிறனுடைய மனைவியை விரும்புகிறவன் எவ்வளவு பெரிய சிறப்பு உடையவனாக இருந்தாலும், அவனை எவரும் சிறிதுகூட மதிக்கமாட்டார்கள். (144)

**5. எளிதென இல்இறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.**

எளிது என, இல் இறப்பான், எஞ்ஞான்றும், விளியாது, நிற்கும் பழி, எய்தும்.

(பொ-ரை): அடைதல் எளியது என்று எண்ணிப் பிறன் ஒருவனுடைய மனைவியிடம் முறைதவறிச் செல்கின்றவன், எந்தக் காலத்திலும் அழியாமல் நிலைத்து நிற்கக்கூடிய பழியை எய்துவான்.

விளியாது - கெடாமல்; மறையாமல்; **இல்இறப்பான்** - பிறன் மனைவியிடம் முறை தவறிச் செல்லுகிறவன்.

(க-ரை): பிறன் மனைவியை விரும்புகிறவன், எந்நாளும் அழியாத பெரும் பழிக்கு ஆளாவான். (145)

**6. பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண்.**

இல்இறப்பான்கண், பகை, பாவம், அச்சம், பழி, என நான்கும் இகவாவாம்.

(பொ-ரை): பிறன் ஒருவனுடைய மனைவியிடம் முறை தவறிச் செல்கிறவனிடத்துப் பகை, தீமை, அச்சம், பழி ஆகிய நான்கும் எப்பொழுதும் நீங்காமல் இருப்பனவாகும்.

பாவம் - தீமை புரிதல்; **இகவாவாம்** - நீங்காமல் இருப்பன வாகும்; **இல்** - பிறனுடைய இல்லாள்; **இறப்பான் கண்** - முறை கடந்து செல்லுபவனிடத்தில்.

(க-ரை): பகை, தீமை, அச்சம், பழி போன்ற குற்றங்கள், பிறனுடைய மனைவியினிடத்தே முறை கடந்து செல்லுபவனை விட்டு ஒருபோதும் நீங்கா. (146)

**7. அறன்இயலான் இல்வாழ்வான் என்பான் பிறன்இயலாள்
பெண்மை நயவா தவன்.**

அறன்இயலான், இல் வாழ்வான், என்பான், பிறன்இயலாள், பெண்மை, நயவாதவன்.

(பொ-ரை): அறநெறிப்படி இல்வாழ்க்கையை நடத்து கின்றவன் என்று சொல்லப்படுபவன் யாவன் என்றால், பிறன் ஒருவனுடைய மனைவியது பெண்மை இன்பத்தை விரும்பாதவன் ஆவான்.

அறன் இயலான் - அறநெறியில் நின்று; **பிறன் இயலாள்** - பிறனுக்கு உரிய மனைவியின்; **பெண்மை** - பெண்மை இன்பம்; **நயவாதவன்** - விரும்பாதவன்.

(க-ரை): பிறனுடைய மனைவியை நோக்காதவனே, அறநெறிப்படி இல்வாழ்வு நடத்துபவன் ஆவான். (147)

8. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு.

பிறன்மனை, நோக்காத, பேராண்மை, சான்றோர்க்கு, அறன் ஒன்றோ; ஆன்ற ஒழுக்கு.

(பொ-ரை): பிறன் ஒருவனுடைய மனைவியை விரும்பி நோக்காத பேராண்மை என்பது, சான்றோர்க்கு வெறும் அறம் மட்டும் ஆகாது; சிறந்த ஒழுக்கமுமாகும்.

பேராண்மை - சிறந்த ஆண்மைப் பண்பு; **அறம் ஒன்றோ** - அறம் ஒன்று மட்டுமா?; **ஆன்ற** - மேலான; **ஒழுக்கு** - ஒழுக்கம்.

(க-ரை): அறமும், ஒழுக்கமும் உடைய சான்றோர்கள் பிறனுக்குரிய மனைவியை மனத்தாலும் நினைக்க மாட்டார்கள்.(148)

9. நலக்குரியார் யார்எனின் நாமநீர் வைப்பின்
பிறற்குஉரியாள் தோள்தோயா தார்.

நாமநீர் வைப்பின், நலக்கு உரியார் யார் எனின், பிறற்கு உரியாள், தோள்தோயாதார்.

(பொ-ரை): அச்சம் தரும் கடலால் சூழப்பட்ட உலகத்தில், நன்மை எய்துவதற்குத் தகுதியானவர் யார் என்றால், பிறன் ஒருவனுக்கு உரிமையுடையவளது தோளைத் தீண்டாதாராவார்.

நாமநீர் - அச்சம் தரும் கடல்; **வைப்பு** - உலகம்; **நலக்குரியார்** - நன்மை எய்துவதற்கு உரியவர்கள்.

(க-ரை): பிறனுடைய மனைவியை விரும்பாதவரே பல்வேறு நன்மைகளையும் பெறுவர். (149)

10. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

அறன் வரையான், அல்லசெயினும், பிறன் வரையாள், பெண்மை, நயவாமை, நன்று.

(பொ-ரை): ஒருவன் அறநெறியைக் கடைப்பிடிக்காமல், அறமல்லாதவற்றையெல்லாம் செய்தாலும், பிறன் ஒருவனுக்கு உரிமையுடையவளது பெண் இன்பத்தை விரும்பாமல் இருப்பது நலம் பயக்கும்.

அறன்வரையான் - அறநெறியைக் கடைப்பிடிக்காதவன்; **பிறன்வரையாள்** - பிறனுடைய உரிமைக்கு உரியவள்; **நயவாமை** - விரும்பாமை; **நன்று** - நல்லது.

(க-ரை): ஒருவன் அறமல்லாத செயல்களைச் செய்தாலும், பிறனுடைய மனைவியை விரும்பாமல் இருப்பதுதான் அவனுக்கு நன்மை பயக்கும். (150)

16. பொறை உடைமை

பொறை உடைமை என்பது, ஒருவர், பகை காரண மாகவோ, அறியாமை காரணமாகவோ, பொறாமை காரணமாகவோ தமக்குத் துன்பம் இழைத்தால், தாமும் அதற்காக அத்துன்பத்தை அவர்க்குத் திருப்பி இழைக்காமல், பொறுத்துக்கொள்ளுதல் எனப்படும்.

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

அகழ்வாரைத் தாங்கும், நிலம்போலத், தம்மை, இகழ்வார்ப், பொறுத்தல், தலை.

(பொ-ரை): தன்னைத் தோண்டுபவர்களாக இருந்தாலும், அவர்களைப் பொறுமையுடன் தாங்கிக்கொள்ளும் நிலம் போலத் தம்மை இகழ்பவர்களாக இருந்தாலும், அவர்களைப் பொறுத்துக் கொள்ளுதல் ஒருவரின் தலையாய பண்பாகும்.

அகழ்தல் - தோண்டுதல்; **தலை** - தலையாய பண்பாகும்.

(க-ரை): பழிக்குப் பழி தீர்த்துக்கொள்ளாமல், பிறர் இகழ்ந்தாலும் அதனைப் பொறுத்துக்கொள்ளுதல்தான் உயர்ந்த பண்பாகும். (151)

2. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

இறப்பினை, என்றும், பொறுத்தல்; அதனை, மறத்தல், அதனினும், நன்று.

(பொ-ரை): பிறர் இழைக்கும் தீங்கை எப்பொழுதும் பொறுத்துக்கொள்ள வேண்டும்; அந்தத் தீங்கை நினைவில் அறவே கொள்ளாமல், மறந்துவிடுதல், அப்படிப் பொறுத்தலைக் காட்டிலும் மிக்க நல்லதாகக் கொள்ளப்படும்.

இறப்பு - அளவுக்கு மிஞ்சியது; அதாவது குற்றம்; தீங்கு.

(க-ரை): பிறர் செய்த தீங்கை ஒருவர் பொறுத்துக் கொள்ளுதலைக் காட்டிலும், அதனை மறந்துவிடுதல் அதனினும் மிகவும் நல்லது. (152)

**3. இன்மையுள் இன்மை விருந்துஒரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.**

இன்மையுள் இன்மை, விருந்து ஒரால், வன்மையுள், வன்மை, மடவார்ப் பொறை.

(பொ-ரை): ஒருவனுக்கு வறுமையுள்ளும் வறுமை மிக்கது, தேடி வரும் விருந்தினரைப் போற்றமுடியாமல் நீக்குதலாகும்; அதுபோல, வல்லமையுள்ளும் வல்லமையானது, அறியாதார் தேடிச்செய்த குற்றத்தை ஒருவன் பொறுத்துக் கொள்ளுதலாகும்.

இன்மை - வறுமை; **ஒரால்** - நீக்குதல்; **வன்மை** - வல்லமை; **மடவார்** - அறிவில்லாதார்; **பொறை** - பொறுத்துக் கொள்ளுதல்.

(க-ரை): அறிவிலிகள் செய்த குற்றத்தை, ஒருவர் பொறுத்துக் கொள்வதே மிக்க வல்லமையான செயலாகும். (153)

**4. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறைஉடைமை
போற்றி ஒழுகப் படும்.**

நிறைஉடைமை, நீங்காமை, வேண்டின், பொறைஉடைமை, போற்றி, ஒழுகப்படும்.

(பொ-ரை): ஒருவன், நிறைந்த சான்றாண்மையுடையவனாக இருக்கும் தன்மை தன்னைவிட்டு நீங்காமல் இருக்க வேண்டும் என்று விரும்புவானேயானால், அவன் பொறுமையைப் போற்றி என்றென்றும் காப்பாற்றி வர வேண்டும்.

நிறையுடைமை - நிறைந்த சான்றாண்மை உடைமை; **போற்றி** - காப்பாற்றி.

(க-ரை): பொறையுடைமை உடையவர்களுக்கே சான்றாண்மை என்னும் சிறந்த பண்பு அமையும். (154)

**5. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.**

ஒறுத்தாரை, ஒன்றாக, வையாரே; பொறுத்தாரைப், பொன்போல் பொதிந்து, வைப்பர்.

(பொ-ரை): அறியாமல் நீங்கு இழைத்தவர்களை மன்னித்துப் பொறுத்துக்கொள்ளாமல் அவர்களைத் தண்டித்தவர்களை, உலகத்தார் ஒருபொருளாக மதிக்கமாட்டார்கள்; ஆனால், பொறுத்துக்

கொண்டவர்களை, உலகத்தார் என்றும் பொன்னைப் போற்றுவதைப் போல, மனத்தில் வைத்துப் போற்றுவார்கள்.

ஒறுத்தாரை - தண்டித்தவர்களை; **ஒன்றாக** - மதிக்கப்படும் ஒரு பொருளாக; **வையார்** - உலகத்தார் வைக்கமாட்டார்கள்; **பொதிந்து** - மனத்தில் வைத்து.

(க-ரை): அறியாமல் கேடு இழைத்தவர்களைப் பொறுத்துக் கொள்ளாமல் தண்டித்தவர்களை, உலகத்தார் ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார்கள்; ஆனால், பொறுத்துக் கொண்டவர்களை என்றும் மதிப்பார்கள். (155)

6. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்.

ஒறுத்தார்க்கு, ஒருநாளை, இன்பம்; பொறுத்தார்க்குப் பொன்றும், துணையும், புகழ்.

(பொ-ரை): தமக்கு அறியாது தீங்கு செய்தவர்களைத் தண்டித்தவர்களுக்கு, அந்த ஒரு நாள் மட்டும் இன்பம் ஏற்படும்; ஆனால், அந்தத் தீங்கைப் பொறுத்துக் கொண்டவர்களுக்கு, அவர்கள் இறக்கும் வரையிலும்கூடப் புகழ் நிலைத்து நிற்கும்.

பொன்றுதல் - இறத்தல்; **ஒருநாளை இன்பம்** - ஒருநாள் மட்டும், தண்டித்துவிட்டோம் என்ற செருக்கால் ஏற்படும் இன்பம்.

(க-ரை): தீங்கு செய்தவர்களைத் தண்டித்தால், அந்தப் பொழுதில் மட்டும் செருக்கை நிறைவேற்றிய இன்பம் ஏற்படும். அப்படித் தண்டிக்காமல் பொறுத்துக்கொண்டால், வாழ்நாள் முழுவதும் பிறர் புகழ்வதால் ஒருவருக்கு இன்பம் ஏற்படும். (156)

7. திறன்அல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து அறன்அல்ல செய்யாமை நன்று.

திறன்அல்ல, தன்பிறர் செய்யினும், நோநொந்து, அறன் அல்ல, செய்யாமை, நன்று.

(பொ-ரை): தகுதியற்ற தீங்கான செயல்களைத் தனக்குப் பிறர் செய்தபோதிலும், அவற்றையே திருப்பிச் செய்தால் அவர்களுக்கு உண்டாகக்கூடிய துன்பத்தை நினைத்து வருந்தி, அறமல்லாத செயல்களை அவர்களுக்குத் திரும்பச் செய்யாமலிருப்பது நல்லது ஆகும்.

திறன் அல்ல - தகுதியற்ற, அதாவது செய்யக்கூடாத தீங்கான செயல்கள்; **நோ** - துன்பம்; **நொந்து** - வருந்தி; **நன்று** - நல்லது.

(க-ரை): பழிக்குப்பழி செய்து பிறரை வருத்தாமலிருப்பது நல்ல பண்பான செயலாகும். (157)

8. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

மிகுதியான், மிக்கவை, செய்தாரைத் தாம்தம், தகுதியான், வென்றுவிடல்.

(பொ-ரை): பல்வேறு வகையான வலிமைகளையும் கொண்டு, செருக்கினால் தமக்குத் தீங்கான செயல்களைச் செய்தவரைத் தாம், தம்முடைய பொறுமை என்னும் பண்பினால் வென்றுவிட வேண்டும்.

மிகுதியான் - மிகுதியான செருக்குக் கொண்டு; **மிக்கவை** - தீங்கான செயல்களை; **தகுதி** - பொறுமை என்னும் பண்பு.

(க-ரை): பிறர் மிதமிஞ்சிய செருக்கினால் செய்த தீங்குகளையும் ஒருவர் பொறுத்துக் கொள்ளுதலே பொறையுடைமையாகும். (158)

9. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோக்கிற் பவர்.

இறந்தார்வாய், இன்னாச்சொல், நோக்கிற்பவர், துறந்தாரின், தூய்மை உடையர்.

(பொ-ரை): நல்ல நெறிமுறைகளையெல்லாம் மீறி நடந்து கொள்பவரின் வாயிலிருந்து வெளிப்படும் கொடிய சொற்களைப் பொறுத்துக் கொள்ளுபவர், தீயவற்றையெல்லாம் துறந்த தூய துறவிகளைப் போல், தூய்மையான பண்புடையவர்கள் ஆவார்கள்.

இறந்தார் - நல்ல நெறிமுறைகளை மீறி நடந்து கொள்பவர்; **நோக்கிற்பவர்** - பொறுத்துக்கொள்பவர்.

(க-ரை): இல்லறத்திலிருந்து பொறுமையை மேற் கொள்பவர்கள், நல்ல துறவிகளைப் போன்று தூய பண்புடையவர்கள் ஆவார்கள். (159)

10. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

உண்ணாது, நோற்பார், பிறர்சொல்லும் இன்னாச்சொல், நோற்பாரின் பின், பெரியர்.

(பொ-ரை): உணவு உட்கொள்ளாமல் நோன்பு இருப்பவர்கள், பிறர் சொல்லும் கொடுஞ்சொற்களைப் பொறுத்துக் கொள்பவர்களுக்கு அடுத்த நிலையில்தான், பெரியவர்களாக வைத்து எண்ணப் படுவார்கள்.

நோற்பார் - நோன்பு இருப்பவர்; அதாவது தவம் செய்பவர்; **இன்னாச்சொல்** - கொடுஞ்சொல்.

(க-ரை): பசி முதலியவற்றைப் பொறுப்பதைவிட, தீய சொற்களைப் பொறுத்துக்கொள்வதே சிறந்த பொறையுடைமையாகும். (160)

17. அழுக்காறாமை

அழுக்காறாமை என்பது, பிறருடைய ஆக்கம், பெருமை, புகழ், சிறப்பு, உயர்வு முதலியன கண்டு மனம் பொறாது இருக்கும் பொறாமையை ஒருவன் கொள்ளா திருத்தல் எனப்படும்.

1. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.

ஒருவன், தன் நெஞ்சத்து, அழுக்காறு, இலாத இயல்பு, ஒழுக்காறாக் கொள்க.

(பொ-ரை): ஒருவன் தன் மனத்தின்கண், பொறாமை இல்லாமல் வாழும் தன்மையைத் தனக்கு உரிய ஒழுக்க நெறியாகக் கொண்டு என்றும் திகழ வேண்டும்.

அழுக்காறு - பொறாமை; **ஆறு** - நெறி; **ஒழுக்கு** - ஒழுக்கமுடைய.

(க-ரை): ஒருவன் பொறாமை இல்லாமல் வாழுவதே நல்ல ஒழுக்க நெறியாகும். (161)

2. விழுப்பேற்றின் அஃதுஒப்பது இல்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.

யார்மாட்டும், அழுக்காற்றின், அன்மை பெறின், விழுப் பேற்றின், அஃது ஒப்பது இல்லை.

(பொ-ரை): ஒருவன் எவரிடத்திலும் பொறாமை இல்லாதிருக்கப் பெறுவானேயானால், அவன் பெறத்தக்க மேலான பேறுகளில், அந்த நிலைக்கு ஒப்பான பேறு, வேறொன்றும் இருப்பதற்கு இல்லை.

விழுப்பேறு - சீரிய செல்வம்; **பேறு** - அடையும் பயன்கள்.

(க-ரை): பிறரிடம் பொறாமையைக் கொள்ளாதிருத்தலைவிடச் சிறந்தபேறு ஒருவருக்கு வேறொன்றும் இல்லை. (162)

3. அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்
பேணாது அழுக்கறுப் பான்.

பிறன் ஆக்கம், பேணாது, அழுக்கறுப்பான், அறன்ஆக்கம், வேண்டாதான், என்பான்.

(பொ-ரை): பிறன் ஒருவனது செல்வச் செழிப்புக் கண்டு மகிழ்ச்சியடையாமல், மனம் பொறாமல், பொறாமைப் படுபவன்தான், அறத்தின்மூலம் பெறக்கூடிய பொருளை விரும்பாதவன் என்று கருதப்படுவான்.

அறன் - அறம் என்பது; **ஆக்கம்** - செல்வம்; **அழுக்கறுத்தல்** - பொறாமை கொள்ளுதல்.

(க-ரை): பிறருடைய செல்வச் செழிப்புக் கண்டு பொறாமைப் படுபவன், அறத்தின் மூலம் வரும் பொருளின் நன்மையைப் பெற மாட்டான். (163)

4. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

இழுக்கு ஆற்றின், ஏதம், படுபாக்கு, அறிந்து, அழுக்காற்றின், அல்லவை, செய்யார்.

(பொ-ரை): அறமல்லாத பொறாமை போன்ற தீய வழியில் துன்பம் நேரிடுதலை அறிந்து, அறிவுடையோர்கள், பொறாமை காரணமாக அறமல்லாதவற்றை ஒருபோதும் செய்ய முன்வர மாட்டார்கள்.

அழுக்காறு - பொறாமை; **இழுக்கு** - அறமல்லாதவை; அதாவது தீயவை; **ஏதம்** - குற்றம்; **படுபாக்கு** - படுதல், உண்டாதல்.

(க-ரை): பொறாமை காரணமாகத் துன்பம் ஏற்படுவதை அறிந்த அறிவுடையார், அறமல்லாத தீய செயல்களைச் செய்ய மாட்டார்கள். (164)

5. அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடுஈன் பது.

ஒன்னார், வழுக்கியும், கேடு ஈன்பது, அழுக்காறு உடையார்க்கு, அது சாலும்.

(பொ-ரை): பகைவர்கள் தீங்கு செய்யத் தவறினாலும், தவறாமல் கேட்டினை ஒருவனுக்குத் தருவது பொறாமையேயாகும். பொறாமை உடையவர்களுக்கு, வேறு பகைவரே வேண்டாம்; ஏனெனில், கேடு பயப்பதற்குப் பொறாமைப்படும் செயல் ஒன்றே போதுமானது.

சாலும் - பொருந்தும்; போதுமானது; **ஒன்னார்** - பகைவர்; **வழுக்கியும்** - தவறினாலும்; **கேடு ஈன்பது** - கேடு தருவது.

(க-ரை): பகைவரைவிடப் பொறாமை ஒருவருக்கு மிகவான கேட்டைத் தரும். (165)

6. கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்.

கொடுப்பது, அழுக்கறுப்பான், சுற்றம், உடுப்பதூஉம், உண்பதூஉம், இன்றிக்கெடும்.

(பொ-ரை): பிறர்க்குக் கொடுக்கப்படும் பொருள் உதவியைக் கண்டு பொறாமை கொள்ளுகிறவன் மட்டுமல்லாமல், அவனுடைய சுற்றத்தாரும், உடுக்க உடையும், உண்ண உணவும் இல்லாமல் கெட்டுப் போவார்கள்.

கொடுப்பது - பிறர்க்குக் கொடுப்பது; **அழுக்கறுப்பான்** - பொறாமைப்படுபவன்; **சுற்றம்** - உறவினர்.

(க-ரை): பிறர்க்குக் கொடுத்துதவி செய்வோரைக் கண்டு பொறாமைப்படுபவர்கள் மட்டுமல்லாமல், அவர்களது சுற்றத்தாரும் கெட்டொழிந்து போவார்கள். (166)

7. அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள் தவ்வையைக் காட்டி விடும்.

அழுக்காறு உடையானைச், செய்யவள், அவ்வித்துத், தவ்வையைக், காட்டிவிடும்.

(பொ-ரை): பொறாமை உடையவனைச் செல்வத்தின் உருவகமாகக் கற்பனையாகக் கூறப்படும் திருமகள் கண்டு பொறாமைப்பட்டு, வறுமையின் உருவகமாகக் கற்பனையாகக் கூறப்படும் மூத்த மகளுக்கு அவனை அடையாளங் காட்டிவிட்டு, அவனைவிட்டு நீங்கிவிடுவாள்.

அவ்வித்து - பொறாமைப்பட்டு; **அழுக்காறு உடையானை** - பொறாமை உடையானை; **செய்யவள்** - கற்பனை வடிவான திருமகள்; அதாவது செல்வம்; **தவ்வை** - கற்பனை வடிவான மூதேவி; அதாவது வறுமை. கற்பனை வடிவாகக் கூறப்படும் செய்யவள், தவ்வை என்பன நூல் வழக்கு ஆகும்.

(க-ரை): பொறாமைக்காரன் எப்பொழுதும் செல்வம் இழந்து, வறுமையில் உழலுவான். (167)

**8. அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.**

அழுக்காறு, என ஒரு பாவி, திருச்செற்றுத், தீயுழி, உய்த்துவிடும்.

(பொ-ரை): பொறாமை எனப்படும் ஒப்பற்ற தீய சக்தி (பாவி) ஒருவனுடைய செல்வத்தையும் கெடுத்து, அவனையும் தீய வழியில் செலுத்திவிடும்.

பாவி - தீய சக்தி; **திருச்செற்று** - செல்வத்தை அழித்து; **தீய** - தீய இடத்தில்; தீய வழியில்; **உய்த்துவிடும்** - செலுத்திவிடும்.

(க-ரை): பொறாமை ஒருவனுடைய செல்வத்தையும் அழித்து, அவனையும் தீய வழியில் கொண்டுபோய் விட்டுவிடும். (168)

**9. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.**

அவ்விய நெஞ்சத்தான், ஆக்கமும், செவ்வியான் கேடும், நினைக்கப்படும்.

(பொ-ரை): பொறாமை கொண்ட நெஞ்சம் படைத்த தீயோனது செல்வ நிலையும், பொறாமையில்லாத நல்லவனது வறுமை நிலையும் அறிவுடையோரால் ஆராய்ந்து பார்க்கத்தக்கவையாகும்.

அவ்விய - பொறாமை கொண்ட; **ஆக்கம்** - செல்வம்; **செவ்வியான்** - நல்ல உள்ளம் படைத்தவன்; நல்லவன்.

(க-ரை): பொறாமையுடையவன் ஆக்கம் பெறுவதும், பொறாமையில்லாதவன் கேடு அடைவதும் இல்லை. மாறாக நடந்தால், அந்த நிலை அறிவுடையோரால் ஆராயத்தக்கதாக இருக்கும். (169)

**10. அழுக்கற்று அகன்றாரும் இல்லை அஃதுஇல்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.**

அழுக்கற்று, அகன்றாரும், இல்லை, அஃதுஇல்லார், பெருக்கத்தின், தீர்ந்தாரும், இல்.

(பொ-ரை): பொறாமைப்பட்டு, அதன்மூலம் பெருக்கத்தை அடைந்தவர் எவரும் உலகத்தில் இல்லை; பொறாமை அற்றவராய் இருந்து, அதனால் பெருக்க நிலையிலிருந்து அழிந்து போனவர் எவரும் உலகத்தில் இல்லை.

அழுக்கற்று - பொறாமையினைக் கொண்டு, **அகன்றார்** - பெருக்கம் பெற்றார்.

(க-ரை): பொறாமைப்பட்டுச் செல்வரானவரும் இல்லை; பொறாமையில்லாமல் வறியரானவரும் இல்லை. (170)

18. வெஃகாமை

வெஃகாமை என்பது, பிறருடைய பொருளை வஞ்சித்துக் கவர்ந்து கொள்ளக் கருதாது இருத்தல் எனப் படும்.

**1. நடுவுஇன்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.**

நடுவுஇன்றி, நன்பொருள், வெஃகின், குடிபொன்றிக், குற்றமும், ஆங்கே தரும்.

(பொ-ரை): நடுவுநிலையில் நில்லாது, பிறர்க்குரிய நல்ல பொருளை, ஒருவன் தனக்குரிய பொருளாகக் கவர்ந்துகொள்ள விரும்புவானேயானால், அவனுடைய குடியும் கெட்டுப்போய்க், குற்றங்களும் அப்பொழுதே அவனை வந்து சேர்ந்துவிடும்.

நடுவு - நடுவுநிலைமை; **வெஃகின்** - கவர்ந்துகொள்ள விரும்பினால்; **பொன்றி** - அழிந்து.

(க-ரை): பிறருடைய நல்ல பொருளை ஒருவன் வஞ்சனையால் கவர்ந்துகொள்ள நினைத்தால், அவனது குடியும் கெட்டுப்போய், அவனிடம் பல குற்றங்களும் வந்து சேரும். (171)

**2. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவுஅன்மை நாணு பவர்.**

நடுவுஅன்மை, நாணுபவர், வெஃகி, படுபயன், பழிப்படுப, செய்யார்.

(பொ-ரை): நடுவுநிலைமை அல்லாதவற்றையெல்லாம் கண்டு நாணி ஒதுங்குகின்றவர்கள், பிறர்க்குரிய பொருளைக் கவருவதன் மூலம் கிடைக்கக்கூடிய பயன்களை விரும்பிப் பழிதரும் செயல்களை ஒருபோதும் செய்யமாட்டார்கள்.

படு - பிறருடைய பொருளைக் கவருவதன் மூலம் கிடைக்கக் கூடிய; **வெஃகி** - விரும்பி; **பழிப்படுவ** - பழிக்கப்படும் செயல்கள்; **நடுவு** - நடுவுநிலைமை; **அன்மை** - இல்லாதவை.

(க-ரை): நடுவுநிலைமையில் நிற்கக்கூடிய நல்லவர்கள் பிறருடைய பொருளைக் கவர எந்த நாளும் நினைக்கமாட்டார்கள். (172)

3. சிற்றின்பம் வெஃகி அறன்அல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

மற்றுஇன்பம், வேண்டுபவர், வெஃகி, சிற்றின்பம், அறன் அல்ல, செய்யாரே.

(பொ-ரை): அறத்தால் கிடைக்கும் நிலைத்த நல்லின்பத்தை விரும்புகின்றவர்கள், பிறர் பொருளைக் கவருவதால் வரும் நிலையில்லாத, சிறுபொழுது மட்டுமே கிடைக்கக்கூடிய இன்பத்தை விரும்பிக் குற்றமான செயல்களை ஒருபோதும் செய்ய மாட்டார்கள்.

மற்றின்பம் - அறத்தால் கிடைக்கும் நிலையான நல்லின்பம்; **வெஃகி** - விரும்பி; **அறன்அல்ல** - குற்றமான.

(க-ரை): அறத்தால் கிடைக்கக்கூடிய நிலையான இன்பத்தை விரும்புபவர்கள், பிறருடைய பொருளைக் கவருவதன் மூலம் கிடைக்கக்கூடிய நிலையற்ற சிற்றின்பத்தை ஒருபொழுதும் விரும்ப மாட்டார்கள். (173)

4. இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மைஇல் காட்சி யவர்.

புலம்வென்ற, புன்மைஇல், காட்சியவர், இலம்என்று, வெஃகுதல், செய்யார்.

(பொ-ரை): ஐம்புலன்களையும் அடக்கியாளுவதில் வென்ற குற்றமற்ற அறிவினையுடையவர்கள், தாம் வறுமையுற்றோம் என்று எண்ணி வருந்துகின்ற நிலையிலுங்கூடப் பிறருடைய பொருளை ஒருநாளும் கவர விரும்பமாட்டார்கள்.

புலம்வென்ற - ஐம்புலன்களையும் அடக்கியாளுவதில் வென்ற; **புன்மை** - குற்றம்; **இல்** - அற்ற; **காட்சியவர்** - அறிவுடையார்; **இலம்** - பொருளின்றி வறுமையுறுதல்; **என்று** - என்று எண்ணி.

(க-ரை): அறிவுடைய சான்றோர்கள் பொருளற்ற வறுமை நிலையிலுங்கூடப் பிறருடைய பொருளைக் கவர எப்போதும் விரும்பமாட்டார்கள். (174)

5. அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

யார்மாட்டும், வெஃகி, வெறிய செயின், அஃகி, அகன்ற, அறிவு, என் ஆம்?

(பொ-ரை): எல்லோரிடத்திலும் பொருளைக் கவர்ந்துகொள்ள விரும்பி, அறிவற்ற செயல்களை அறிவுடையோன் செய்வானே யானால், அவனது கற்று நுணுகி ஆராய்ந்து அறிந்து பெற்ற விரிந்த அறிவால், ஏற்படக்கூடிய பயன்தான் என்ன? ஒன்றுமில்லை.

வெஃகி - விரும்பி; **வெறிய** - அறிவுக்குப் புறம்பான அறிவற்ற செயல்கள்; **அஃகி** - நுண்ணியதான.

(க-ரை): பிறருடைய பொருளை அறிவுடைய ஒருவன் வஞ்சித்துக் கவருவானேயானால், அவன் கற்றாய்ந்து பெற்ற பகுத்தறிவால் எந்த ஒரு பலனும் ஏற்படாது. (175)

6. அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப் பொல்லாத சூழக் கெடும்.

அருள் வெஃகி, ஆற்றின்கண், நின்றான், பொருள் வெஃகி, பொல்லாத சூழக், கெடும்.

(பொ-ரை): அருட்பண்பை விரும்பி அறநெறியில் நின்று ஒழுகுபவன், பொருளை விரும்பி, அதனைப் பெறுவதற்கான தீய வழிகளைப் பின்பற்ற எண்ணுவானேயானால், அவன் எப்படியும் கெட்டுப் போய்விடுவான்.

வெஃகி - விரும்பி; **ஆற்றின்கண்** - நல்ல அறநெறியில்; **பொல்லாத** - தீய வழிகள்; **சூழ** - எண்ண; **கெடும்** - கெட்டொழிவான்.

(க-ரை): அறநெறியில் நிற்பவன், பிறருடைய பொருளைக் கவர எண்ணுவானேயானால், அவன் கெட்டொழிவான் என்பது மட்டும் உறுதி. (176)

7. வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின் மாண்டற்கு அரிதாம் பயன்.

வெஃகிஆம், ஆக்கம், வேண்டற்க; பயன், மாண்டற்கு, அரிதாம்.

(பொ-ரை): பிறருடைய பொருளை வஞ்சித்துக் கவர்ந்து, அதனால் ஏற்படும் செல்வத்தை ஒருவன் விரும்பக்கூடாது; அப்படிப்பட்ட செல்வத்தின் பயனை நுகரும்போது, அவனுக்கு நன்மையாக அமைவது என்பது, அரிதாகவே இருக்கும்.

வெஃகி - விரும்பி; **ஆக்கம்** - செல்வம்; **விளைவயின்** - பயனை நுகரும்போது; **மாண்டற்கு அரிது** - நன்மையான தன்மை உடையதாக இருக்காது.

(க-ரை): பிறர் பொருளை வஞ்சித்துக் கொண்ட செல்வம், அப்படி வஞ்சித்துக் கொண்டவருக்கு நல்ல பயனைத் தராது. (177)

8. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை வேண்டும் பிறன்கைப் பொருள்.

அஃகாமை, செல்வத்திற்கு, யாதுஎனின், பிறன் கைப்பொருள், வெஃகாமை, வேண்டும்.

(பொ-ரை): ஒருவனுடைய செல்வத்திற்கு யாதொரு குறைவும் ஏற்படாமல் இருக்க ஏற்ற வழி என்னவென்றால், பிறருக்கு உரிமையான பொருளை அவன் கவர்ந்துகொள்ள விரும்பாமலிருக்க வேண்டும் என்பதேயாகும்.

அஃகாமை - குறைந்து போகாமலிருக்க; **யாது எனின்** - வழி எதுஎன்றால்; **கைப்பொருள்** - உரிமையான பொருள்.

(க-ரை): ஒருவனுடைய நல்ல செல்வம் குறையாமல் இருக்க வேண்டுமானால், அவன் பிறருடைய பொருளை வஞ்சித்துக் கவர்ந்துகொள்ள விரும்பாமல் இருக்க வேண்டும். (178)

9. அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும் திறன்அறிந்து ஆங்கே திரு.

அறன்அறிந்து, வெஃகா, அறிவுடையார், திறன்அறிந்து, திரு, ஆங்கே, சேரும்.

(பொ-ரை): அறநெறிகளையெல்லாம் முழுதுற அறிந்து, அவற்றின்படி பிறருடைய பொருளை விரும்பாமல் வாழுகின்ற அறிவுடையவர்களின் தகுதி அறிந்து, செல்வமானது அவர்களிடம் போய்ச் சேரும்.

அறன் - அறநெறிகளையெல்லாம்; **வெஃகா** - பிறர் பொருளை விரும்பாத; **திரு** - செல்வம் ; **திறன்அறிந்து** - சேர வேண்டிய இடமென்று அறிந்து.

(க-ரை): பிறருடைய பொருளைக் கவர விரும்பாதவர்களைப் பலரும் உற்ற நண்பர்களாகக் கொள்வார்களாதலால், அவர்கள் செய்யும் எந்த முயற்சியும் வெற்றியடைந்து, செல்வமும் அவர்களிடம் மிகவாகச் சேரும். (179)

10. இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும் வேண்டாமை என்னும் செருக்கு.

எண்ணாது வெஃகின், இறல்ஈனும்; வேண்டாமை, என்னும் செருக்கு, விறல்ஈனும்.

(பொ-ரை): ஏற்படும் விளைவை எண்ணிப் பார்க்காமல், பிறருடைய பொருளை ஒருவன் கவர்ந்துகொள்ள விரும்புவானே யானால், அது அவனுக்கு அழிவையே தரும்; அப்பொருளை விரும்பாமல் வாழும் பெருந்தன்மை ஒருவனுக்கு வெற்றியையே தரும்.

எண்ணாது - ஏற்படும் விளைவை எண்ணிப் பார்க்காமல், **வெஃகின்** - பிறர் பொருளை வஞ்சித்துக்கொள்ளக் கருதின்; **இறல்** - அழிவு என்பதனை; **ஈனும்** - கொடுக்கும்; **செருக்கு** - பெருந்தன்மை; **விறல்** - வெற்றியினை.

(க-ரை): ஒருவன் பிறர்பொருளைக் கவர நினைப்பது, எப்பொழுதும் அழிவையே தரும்; கவர நினையாமை, என்றும் வெற்றியையே பயக்கும். (180)

19. புறங்கூறாமை

புறங்கூறாமை என்பது, பிறர் இல்லாத இடத்தில், அவரைப் பற்றி இழித்தும், பழித்தும், இல்லாததுகளையும், பொல்லாதது களையும் புனைந்தும், குற்றங்களையும், குறைகளையும், கற்பனையாகத் தொகுத்தும் கூறாதிருத்தல் எனப்படும்.

1. அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது.

அறம்கூறான், அல்ல செயினும், ஒருவன், புறங்கூறான், என்றல் இனிது.

(பொ-ரை): ஒருவன் அறத்தைப் பற்றிப் போற்றிப் புகழ்ந்து சொல்லாதவனாய், அறமல்லாத தீயவற்றைச் செய்தாலும், மற்றொருவனைப் பற்றிப் புறங்கூறாமல் இருக்கிறான் என்று உலகோரால் சொல்லப்படுதல் நல்லதே பயக்கும்.

அல்லசெயினும் - அறமல்லாத தீயவற்றைச் செய்தாலும்; **என்றல்** - என்று உலகோரால் சொல்லப்படுதல்; **இனிது** - நல்லது.

(க-ரை): ஒருவன் அறமல்லாத தீயவற்றைச் செய்தலைக் காட்டிலும், பிறரைப் பற்றிப் புறங்கூறுதல் கொடிய குற்றமாகக் கருதப்படும். (181)

2. அறன்அழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறன்அழீஇப் பொய்த்து நகை.

புறன் அழீஇப், பொய்த்து, நகை, அறன் அழீஇ, அல்லவை செய்தலின், தீதே.

(பொ-ரை): ஒருவனைக் காணாதவிடத்து, அவனைப் பற்றி இல்லாதது பொல்லாததுகளை இழிவாகச் சொல்லியும், அவனை நேரில் காணும்போது, பொய்யாகச் சிரித்துப் பேசியும் செய்யும் செயல்கள், அறத்தை அழித்து, அறமல்லாத தீயவற்றைச் செய்தலைக் காட்டிலும் மிகவும் தீதானவையாகும்.

அறன் அழீஇ - அறத்தை அழித்து இழிவாகப் பேசி, **புறன் அழீஇ** - ஒருவனைக் காணாத போது இழிவாகப் பேசி; **பொய்த்து நகை** - ஒருவனைக் கண்டபோது பொய்யாகச் சிரித்துப் பேசுதல்.

(க-ரை): ஒருவனைக் காணாதபோது அவனைப் பற்றிப் புறங்கூறிப் பேசிவிட்டு, அவனை நேரில் காணும்போது பொய்யாகச் சிரித்துப் பேசுதல் என்பது, கொடுமையிலும் கொடுமையாகும். (182)

3. புறங்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும்.

புறங்கூறிப், பொய்த்து, உயிர் வாழ்தலின், சாதல், அறம் கூறும், ஆக்கம், தரும்.

(பொ-ரை): ஒருவன், புறங்கூறிப் பொய்யாகச் செயல்புரிந்து, உயிர்வாழ்வதைக் காட்டிலும், அவ்வாறு செய்யாமல், வசதியின்றி, வறுமைஎய்தி, இறந்துபடுதல், அறநூல்கள் சொல்லுகின்ற எல்லா ஆக்கத்தையும்கூட அவனுக்குத் தருவதாக அமையும்.

அறம்கூறும் - அறநூல்கள் கூறுகின்ற, **ஆக்கம்** - நற்பயன்.

(க-ரை): ஒருவன் புறங்கூறி இழிந்த வாழ்வு வாழ்வதைக் காட்டிலும், அவன் செத்துமடிதல் எல்லா வகையிலும் சிறந்ததாக அமையும். (183)

4. கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல்.

கண்நின்று, கண் அறச், சொல்லினும், முன்இன்று, பின் நோக்காச் சொல், சொல்லற்க.

(பொ-ரை): ஒருவனின் கண்ணெதிரே நின்று கண்ணோட்டம் சிறிதும் இல்லாமல், கடுஞ்சொற்களைக் கூறினாலும், கூறலாமேதவிர, நேரில் ஒருவனைக் காணாதவிடத்துப் பின்பு வருவதான தீமைகளை எண்ணிப் பார்க்காமல், பழிச் சொற்களை யாரொருவரும் கூறக்கூடாது.

கண்நின்று - கண்முன்னே நின்று; **கண்அற** - கண்ணோட்டம் சிறிதும் இல்லாமல்; **பின்நோக்கா** - பின்னர் வருவதான தீமைகளை எண்ணிப் பார்க்காமல்; **சொல்** - பழிச்சொற்கள்.

(க-ரை): ஒருவன் பிறரைப் பற்றி நேரில் குற்றங்குறைகளைச் சுமத்தினாலும் சுமத்தலாமே ஒழிய, புறங்கூறும் பழிச்சொற்களை மட்டும் மறைவாக ஒருநாளும் சொல்லக்கூடாது. (184)

5. அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையால் காணப் படும்.

அறம் சொல்லும், நெஞ்சத்தான், அன்மை, புறஞ்சொல்லும், புன்மையால், காணப்படும்.

(பொ-ரை): ஒருவன் அறத்தை நினைக்கின்ற மனத்தை உடையவன் அல்லன் என்பதை, அவன் மற்றவனைப் பற்றிப் புறங்கூறுகின்ற அவனது இழிந்த பண்பால் எளிதாக அறிந்து கொள்ளலாம்.

அன்மை - அறத்தன்மை இல்லை என்பதை; **புன்மையால்** - இழிந்த பண்பால்.

(க-ரை): ஒருவனின் புறங்கூறும் இழிந்த பண்பிலிருந்து, அவன் அறச்சிந்தனை உடையவன் அல்லன் என்பதை, எளிதில் உணர்ந்து கொள்ளலாம். (185)

**6. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.**

பிறன்பழி கூறுவான், தன் பழியுள்ளும், திறன் தெரிந்து, கூறப்படும்.

(பொ-ரை): பிறன் ஒருவனைப் பற்றி ஒருவன் புறங் கூறுகின்றான் என்றால், அவன் செய்த பழிகள் பலவற்றுள்ளும், அவன் வருந்தக்கூடிய கொடும்பழிகள் அனைத்தும் பிறரால் நன்கு ஆராய்ந்தறியப்பட்டுப் பின் ஒருவனால் அவை வெளிப்படையாகக் கூறப்படும்.

தன்பழியுள்ளும் - தன்னுடைய பழிகள் பலவற்றுள்ளும், **திறன்** - தான் வருந்தக்கூடிய கொடும்பழிகள் அனைத்தும், **தெரிந்து** - ஆராய்ந்து அறியப்பட்டு.

(க-ரை): ஒருவன் பிறர்மீது வீண்பழி ஒன்றனைக் கூறினால், பிறர் அவன்மீது பல பெரும்பழிகளை வெளிப்படையாகவே கூறுவார்கள். (186)

**7. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.**

நகச்சொல்லி, நட்புஆடல் தேற்றாதவர், பகச்சொல்லி, கேளிர் பிரிப்பர்.

(பொ-ரை): பிறர் மகிழும்படியாக இனிமையாகப் பேசி, நட்புறவு கொள்ளுதலானது நன்மை பயக்கும் என்பதை

அறியாதவர்கள், தம்மைவிட்டு நீங்கும்படியான அளவுக்கு நண்பர்களைப் பற்றிப் புறங்கூறிப் பின்னர் அவர்களைவிட்டுப் பிரிந்து போய்விடுவார்கள்.

நக - பிறர் மகிழும்படி; **சொல்லி** - இனிமையாகப் பேசி; **தேற்றாதவர்** - நன்மை பயக்கும் என்பதை அறியாதவர்கள்; **பகச்சொல்லி** - நீங்கும்படியான அளவுக்குப் புறங்கூறி.

(க-ரை): நண்பர்களோடு கொள்ளும் நட்புறவினால் ஏற்படும் நன்மையை அறியாதவர்கள்தாம், நண்பர்களைப் பற்றிப் புறங்கூறிப் பின்னர் அவர்களைவிட்டுப் பிரிந்து போய்விடுவார்கள். (187)

8. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு.

துன்னியார் குற்றமும், தூற்றும், மரபினார், ஏதிலார் மாட்டு, என்னைகொல்?

(பொ-ரை): மிக நெருங்கிய நண்பர்களின் குற்றத்தையும் புறங்கூறித் தூற்றக்கூடிய இயல்புடையவர்கள், நட்புக்கொள்ளாத அயலாரைப் பொறுத்து எவ்வாறு நடந்துகொள்வார்களோ? (இதைவிட மிக இழிவாகவே நடந்துகொள்வார்கள் என்பது தெளிவு).

துன்னியார் - நெருங்கிப் பழகுபவர்கள்; **ஏதிலார்** - தொடர்பில்லாத பிறர்.

(க-ரை): மிக நெருங்கிய நண்பர்கள் பற்றியே கூடப் புறங்கூறித் தூற்றித் திரியும் இயல்பினை உடையவர்கள், சிறிதுகூடத் தொடர்பில்லாத பிறரைப் பற்றி மிகமிக இழிவாகப் புறங்கூறிப் பேச ஒருபோதும் தயங்கமாட்டார்கள். (188)

9. அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை.

புறன்நோக்கிப், புன்சொல், உரைப்பான், பொறை, வையம், அறன்நோக்கி, ஆற்றுங்கொல்!

(பொ-ரை): பிறன் ஒருவன் நேரில் இல்லாததைத் தெரிந்தும், புறங்கூறுபவனுடைய உடற்சுமையைச் சுமத்தலேகூட தனக்குரிய அறம் என்றுதான், இவ்வுலகம் எண்ணி இயங்குகின்றது போலும்.

புறன்நோக்கி - பிறன் ஒருவன் நேரில் இல்லாததைத் தெரிந்து; **புன்சொல் உரைப்பான்** - புறஞ்சொல் கூறுபவன்; **பொறை** - உடற்சுமை.

(க-ரை): புறங்கூறித் திரிபவன் எதற்கும் பயன்படாதவனாய், நிலத்திற்கே ஒரு சுமையாகத்தான் காணப்படுவான். (189)

10. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

ஏதிலார் குற்றம்போல், தம்குற்றம், காண்கில், பின், மன்னும் உயிர்க்கு, தீதுண்டோ?

(பொ-ரை): அயலாருடைய குற்றத்தைக் காண்பதைப்போல, ஒவ்வொருவரும் தத்தம் குற்றத்தையும் காண முற்படுவாராயின், பின்னர் நிலைபேறுடைய மக்களின் உயிர் வாழ்க்கைக்குத் துன்பமும் உண்டாகுமோ? உண்டாகாது.

ஏதிலார் - எந்தவகையிலும் தொடர்பில்லாத அயலார்; **மன்** - நிலைபேறுடைய; **உயிர்க்கு** - மக்களின் உயிர்வாழ்க்கைக்கு.

(க-ரை): பிறர் குற்றத்தைக் காண்பதைப் போல், தம் குற்றத்தையும் எண்ணிப் பார்த்தாலே, ஒருவருக்குப் புறங்கூறும் பழக்கம் ஏற்படாது. (190)

20. பயன்இல சொல்லாமை

பயன்இல சொல்லாமை என்பது, ஒருவன் தனக்கும், பிறர்க்கும் யாதொரு பயனையும், எந்தவொரு வகையிலும், எந்தவொரு விதத்திலும் பயக்காத சொற்களைச் சொல்லாமலிருத்தல் எனப்படும்.

**1. பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.**

பல்லார் முனியப், பயன்இல, சொல்லுவான், எல்லாரும், எள்ளப்படும்.

(பொ-ரை): கேட்பவர் பலரும் வெறுத்துச் சினங் கொள்ளும்படியாகப் பயனில்லாத சொற்களைச் சொல்லிக் கொண்டே இருப்பவன், பிறர் எல்லோராலும், எப்போதும், எள்ளி நகையாடப் படவே செய்வான்.

முனிய - வெறுத்துச் சினங்கொள்ளுமாறு; **பயன்** - யாதொரு பயனும்; **இல** - இல்லாத சொற்களை; **எள்ளப்படும்** - எள்ளி நகையாடப்படுவான்.

(க-ரை): பயனில்லாத சொற்களைச் சொல்லிக்கொண்டே இருப்பவன், எல்லோராலும், எப்பொழுதும் எள்ளி நகையாடப் படுவான். (191)

**2. பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல
நட்டார்கண் செய்தலின் தீது.**

பயன்இல, பல்லார் முன், சொல்லல், நயன்இல, நட்டார் கண், செய்தலின், தீது.

(பொ-ரை): ஒருவன் பயனில்லாத சொற்களைப் பலர் முன்பு சொல்லுதல், தன்னுடைய நண்பர்களிடத்தில் அவர்களுக்கு நன்மை பயக்காத வெறுக்கத்தக்க செயல்களைச் செய்வதைக் காட்டிலும், தீமை பயப்பதாகும்.

நட்டார்கண் - நண்பர்களிடத்தில்; **நயன்இல** - நன்மை பயக்காத வெறுக்கத்தக்க செயல்கள்.

(க-ரை): நண்பர்களுக்கு வெறுக்கத்தக்கன செய்பவன் எப்படி இகழப்படுவானோ, அதைவிட மிகவாக ஒருவன் இகழப்படுவான், அவன் பலர் முன்னிலையில் பயனில்லாத சொற்களைக் கூறினால். (192)

3. நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித்து உரைக்கும் உரை.

பயன்இல, பாரித்து உரைக்கும் உரை, நயன்இலன், என்பது, சொல்லும்.

(பொ-ரை): ஒருவன் பயனில்லாதவற்றைப் பற்றியெல்லாம் விரிவாகச் சொல்லும் சொற்கள், அவன் எந்தவகையிலும் பயனற்றவனே ஆவான் என்பதை உலகிற்குத் தெரிவித்துவிடும்.

பாரித்து - விரிவாக; **நயன்இலன்** - பயனற்றவன் ஆவான்.

(க-ரை): ஒருவன் பயனற்றவன் என்பதை, அவன் விரிவாகப் பேசும் வெற்று ஆரவாரப் பேச்சே உலகிற்கு உணர்த்திவிடும். (193)

4. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லார் அகத்து.

பயன்சாராப், பண்பில் சொல், பல்லார் அகத்து, நயன் சாரா, நன்மையின், நீக்கும்.

(பொ-ரை): பயனோடு பொருந்திவராத பண்பற்ற சொற்களைப் பலரிடத்திலும் சொல்லுதல், அறத்தோடு பொருந்தி வராதவையாகி, அவனை நன்மையிலிருந்து நீங்கிப் போகவே செய்யும்.

நயன்சாரா - பயனோடு பொருந்தி வராத; **இல்** - இல்லாத; **பயன்சாரா** - அறத்தோடு பொருந்தி வராத.

(க-ரை): பயனற்ற, பண்பற்ற, நலமற்ற சொற்களை ஒருவன் சொல்லுதல், அறத்தோடு ஒருநாளும் பொருந்தி வராது. (194)

5. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல
நீர்மை உடையார் சொலின்.

பயன்இல, நீர்மை உடையார், சொலின், சீர்மை, சிறப்பொடு நீங்கும்.

(பொ-ரை): பயனில்லாச் சொற்களை, உயர்ந்த பண்புடைய வர்கள் சொல்லுவார்களேயானால், அவர்களது பெருமையும், சிறப்பும் அவர்களைவிட்டு விரைவில் நீங்கிவிடும்.

நீர்மை உயர்ந்த பண்பு; தன்மை; **சீர்மை** - பெருமை; **சிறப்பு** - மதிப்பு.

(க-ரை): பெருந்தன்மையுடையவர்கள் பயனில்லாத சொற் களைச் சொல்லுவார்களேயானால், அவர்களது பெருந்தன்மையும், சிறப்பும் அறவே போய்விடும். (195)

6. பயன்இல்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்.

பயன்இல், சொல் பாராட்டுவானை, மகன்எனல், மக்கள், பதடி எனல்.

(பொ-ரை): நற் பயனில்லாத சொற்களைப் பல தடவைகள் சொல்லிக்கொண்டே இருக்கின்ற ஒருவனைத் தகுதிவாய்ந்த ஒரு மனிதன் என்று சொல்லவே கூடாது; மக்களுள் பிறந்த ஒரு பதர் என்றே அவனைச் சொல்ல வேண்டும்.

பயன் - நற்பயன்; **இல்** - இல்லாத; **மகன் எனல்** - மனிதன் என்று கூறாதே; **பதடி** - பதர்; **எனல்** - என்று கூறுவாயாக.

(க-ரை): நெல்மணிகளுக்குள் கலந்திருக்கும் பதர் எவ்வாறு நீக்கப்பட வேண்டிய ஒன்றோ, அவ்வாறே, மனித சமுதாயத்தவரில், பயனற்ற சொற்களைத் திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டிருப் பவனும், மக்கட் கூட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டியவனாவான். (196)

7. நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயன்இல சொல்லாமை நன்று.

சான்றோர், நயன்இல, சொல்லினும், சொல்லுக; பயன்இல, சொல்லாமை, நன்று.

(பொ-ரை): சான்றோர் எனப்படுபவர்கள் அறமல்லாத தீய சொற்களைச் சொன்னாலும் சொல்லலாமேயல்லாமல், அவர்கள் பயனற்ற சொற்களைச் சொல்லாமல் இருத்தலே, அவர்களுக்கு என்றும் உரிய நன்மையைப் பயக்கும்.

நயன்இல - அறமல்லாத தீயசொற்கள்; **சான்றோர்** - அறிவு நிறைந்த பெரியோர்கள்.

(க-ரை): அறிவு சான்ற பெரியோர்கள், தீய சொற்களைத் தப்பித் தவறிச் சொன்னாலும், பயனற்ற சொற்களை ஒருகாலும் சொல்லக்கூடாது. (197)

8. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

அரும்பயன், ஆயும், அறிவினார், பெரும்பயன், இல்லாத சொல், சொல்லார்.

(பொ-ரை): அரிய பயன்மிகு பொருள்களை ஆராய்ந்தறிய வல்ல அறிவினை உடைய அறிஞர் பெருமக்கள், மிக்க பயன்இல்லாத சொற்களை, ஒருபோதும் சொல்லமாட்டார்கள்.

அரும்பயன் - அரிய பயன்மிகு பொருள்களை; **ஆயும்** - ஆராயக்கூடிய.

(க-ரை): அரியவற்றையெல்லாம் ஆராய்ந்தறியக்கூடிய வல்லமை பெற்ற அறிவுடையார், பயனில்லாத சொற்களை ஒருபோதும் சொல்லமாட்டார்கள். (198)

9. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்.

மருள்தீர்ந்த, மாசறு, காட்சியவர், பொருள்தீர்ந்த, பொச்சாந்தும், சொல்லார்.

(பொ-ரை): மயக்கமில்லாத குற்றமற்ற அறிவினை உடையவர்கள், மறந்தும் பொருளில்லாத சொற்களை, ஒருபோதும் சொல்ல மாட்டார்கள்.

மருள் - மயக்கம்; **தீர்ந்த** - நீங்கிய; அதாவது இல்லாத; **பொச்சாந்தும்** - மறந்தும்; **மாசு** - குற்றம்; **அறு** - இல்லாத; **காட்சியவர்** - அறிவினை உடைய சான்றோர்கள்.

(க-ரை): அறிவுடைய சான்றோர்கள் மறந்தும் பயனளிக்காத சொற்களை ஒருபோதும் சொல்லமாட்டார்கள். (199)

10. சொல்லுக சொல்லில் பயன்உடைய சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல்.

சொல்லில் பயனுடைய, சொல்லுக; சொல்லில் பயன்இலாச்
சொல், சொல்லற்க.

(பொ-ரை): சொற்கள் பலவற்றுள் பயன் அளிக்கக்கூடிய சொற்களை மட்டுமே தேர்ந்தெடுத்துச் சொல்ல வேண்டும்; சொற்களில் நல்ல பயன்ஏதும் அளிக்காத சொற்களை, ஒருபோதும் சொல்லவே கூடாது.

சொல்லில் - சொற்கள் பலவற்றுள்; **பயன்இல** - நல்ல பயன்ஏதும் அளிக்காத சொற்கள்.

(க-ரை): சொற்கள் பலவற்றுள்ளும் பயன் அளிக்கக்கூடிய சொற்களை மட்டுந்தான் தேர்ந்தெடுத்துச் சொல்ல வேண்டுமே ஒழிய, பயன்ஏதும் அளிக்காத சொற்களை எக்காரணங்கொண்டும், ஒருபோதும் ஒருவர் சொல்லக்கூடாது. (200)

21. தீவினை அச்சம்

தீவினை அச்சம் என்பது, பிறர்க்கு ஒருவர் தம் மனம், மொழி, மெய்யால் துன்பத்தையும், தொல்லையையும், குற்றத்தையும் ஏற்படுத்தும் தீமைகளைச் செய்ய அஞ்சுதல் எனப்படும்.

1. **தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்**
 தீவினை என்னும் செருக்கு.

தீவினை என்னும், செருக்கு, தீவினையார், அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர்.

(பொ-ரை): தீய செயல்களைச் செய்தலாகிய செருக்கைப் பெற, தீவினை உடையவர்கள் ஒருபோதும் அஞ்சமாட்டார்கள்; அத்தகைய செருக்கினைக் கொள்ளாத சீரியோர் மட்டுமே அப்படிப்பட்ட செயல்களைச் செய்ய அஞ்சுவார்கள்.

தீவினை - தீய செயல்; **என்னும்** - எனப்படும்; **செருக்கு** - ஆணவம்; மிகுகளிப்பு; **விழுமியோர்** - சீரியோர்.

(க-ரை): தீய செயல்களைச் செய்வோர், அப்படிப்பட்ட செயல்களைச் செய்து மிகுகளிப்பினைப் பெற ஒருபோதும் அஞ்ச மாட்டார்கள்; ஆனால், சீரியோர் அப்படிப்பட்ட செயல்களைச் செய்ய எப்போதும் அஞ்சுவார்கள். (201)

2. **தீயவை தீய பயத்தலால் தீயவை**
 தீயினும் அஞ்சப் படும்.

தீயவை, தீய பயத்தலால், தீயவை, தீயினும், அஞ்சப்படும்.

(பொ-ரை): தீய செயல்கள் தீமையைத் தருதலால், அத்தீய செயல்களைத் தீயைவிடக் கொடுமை வாய்ந்தனவாக எண்ணி, அவற்றிற்கு ஒருவர் மிகவாக அஞ்ச வேண்டும்.

தீயவை - தீய செயல்கள்.

(க-ரை): தீய செயல்கள், தீயைக் காட்டிலும் பல மடங்கு கொடுமை வாய்ந்தனவாகும்; தீயானது ஒரு தரந்தான் துன்பந்தரும்; ஆனால், தீய செயல்களோ தொடர்ந்து துன்பங்களைத் தந்து கொண்டேயிருக்கும். (202)

3. அறிவினுள் எல்லாம் தலைஎன்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.

தீய, செறுவார்க்கும், செய்யாவிடல், அறிவினால் எல்லாம், தலை, என்ப.

(பொ-ரை): தம்மை வருத்துவோர்க்கும் தீங்கு இழைக்காமல் இருத்தலை, அறிவுத்திறன்கள் எல்லாவற்றிலும் தலையான அறிவுத்திறன் ஆகும் என்று அறிவுடையோர் கூறுவார்கள்.

செறுவார்க்கும் - தம்மை வருத்துவோர்க்கும்; **தலை** - தலைமையான அறிவுத்திறன்; **என்ப** - என்று அறிவுடையோர் கூறுவார்கள்.

(க-ரை): தமக்குத் துன்பம் இழைப்போர்க்கும், துன்பம் செய்யாமையே சிறந்த அறிவுடைமையாகும். (203)

4. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.

பிறன்கேடு, மறந்தும் சூழற்க; சூழின், சூழ்ந்தவன் கேடு, அறம் சூழும்.

(பொ-ரை): பிறன் ஒருவனுக்குக் கெடுதலைத் தரும் தீய செயல்களை, ஒருவன் மறந்தும் நினைத்துப் பார்க்கக் கூடாது; மாறாக, ‘அப்படியே நினைத்துப் பார்த்தால், எண்ணியவனுக்குக் கேட்டினை விளைவிக்க, அறமானது எண்ணிவிடும்.

சூழற்க - நினைத்துப் பார்க்காதிருக்க வேண்டும்; **சூழ்ந்தவன்** - நினைத்தவன்.

(க-ரை): பிறர்க்குத் தீமை செய்ய நினைப்பவன், தீமையை அடைந்தே தீருவான். (204)

5. இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலன்ஆகும் மற்றும் பெயர்த்து.

இலன்என்று, தீயவை, செய்யற்க; செய்யின், மற்றும் பெயர்த்து, இலன் ஆகும்.

(பொ-ரை): ஒருவன் தான் ஒரு வறியவன் என்று எண்ணி, தன் வறுமையைப் போக்கக் கருதிப் பிறன் ஒருவனுக்குத் தீங்கினை இழைக்க முயலாமல் இருக்க வேண்டும்; மீறித் தீங்கினை

இழைத்தால், மறுபடியும் அவன் வறியவனாகி முன்பே போல் வருந்தத்தான் வேண்டியிருக்கும்.

இலன் - தான் ஒரு வறியன்; **என்று** - என்று எண்ணி; **பெயர்த்து** - மீண்டும்; **இலன்** - வறியவன்; **ஆகும்** - ஆவான்.

(க-ரை): ஒருவன் தன்னுடைய வறுமையைப் போக்கிக் கொள்ள வேண்டிகூட, பிறன் ஒருவனுக்குத் தீமை செய்யக்கூடாது; மீறித் தீமையை இழைத்தால், அவன் மீண்டும் வறியவனாகி வருந்த வேண்டி வரும். (205)

6. தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.

நோய்ப்பால, தன்னை, அடல் வேண்டாதான், தீப்பால, தான், பிறர்கண், செய்யற்க.

(பொ-ரை): துன்பங்களை விளைவிக்கும் தீய செயல்கள் தன்னை வாட்டி வருத்துதலை விரும்பாத ஒருவன், முதலில் அத்தகைய தீமைகளைப் பிறர்க்குச் செய்யாமல் இருக்க வேண்டும்.

நோய்ப்பால - துன்பங்களைத் தரும் தீய செயல்கள்; **அடல்** - வாட்டி வருத்துதலை; **தீப்பால** - தீய தன்மையுடைய செயல்களை.

(க-ரை): துன்பங்கள் தன்னை வருத்துவதை விரும்பாத ஒருவன், எக்காரணங்கொண்டும் பிறர்க்குத் தீங்கு இழைக்கக்கூடாது.. (206)

7. எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்.

எனைப்பகை உற்றாரும், உய்வர், வினைப்பகை, வீயாது, பின்சென்று, அடும்.

(பொ-ரை): எவ்வளவு பெரிய பகையுடையவர்களும் எப்படியேனும் தப்பிப் பிழைத்துவிடுவார்கள்; ஆனால், ஒருவன் தீயவற்றைச் செய்வதால், அதன் விளைவாக ஏற்படும் பகை, அவனைவிட்டு நீங்காமல், அவன்பின் தொடர்ந்து சென்று, அவனை வருத்திக் கொண்டேயிருக்கும்.

எனைப்பகை - எப்படிப்பட்ட பெரிய பகையினை; **உய்வர்** - எப்படியேனும் தப்பித்துக்கொள்வர்; **தீவினை** - தீய செயல் என்னும்

பகை; **வீயாது** - அவனைவிட்டு நீங்காமல்; **அடும்** - அவனைக் கொல்லும்; அதாவது அவனை வருத்தும்.

(க-ரை): தீய செயல்களைச் செய்வோர், தப்பாது கெட்டு ஒழிந்து போவார்கள் என்பது உறுதி. (207)

8. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று.

தீயவை, செய்தார், கெடுதல், நிழல், தன்னை, வீயாது, அடி உறைந்தற்று.

(பொ-ரை): பிறர்க்குத் தீய செயல்களைச் செய்தவர்கள் கேட்டினை அடைதல் என்பது, ஒருவனுடைய நிழல், அவனை விடாமல் தொடர்ந்து வந்து, அவனது கால்களின் அடியிலேயே தங்கியிருத்தலைப் போன்றதாகும்.

வீயாது - விடாமல் தொடர்ந்து வந்து; **அடி உறைந்தற்று** - கால்களின் அடியிலே தங்கியிருத்தலைப் போன்றதாகும்.

(க-ரை): பிறர்க்குத் தீங்கினை இழைப்பவர்கள் கெடுவார்கள் என்பது உறுதியான ஒன்றாகும். (208)

9. தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்துஒன்றும்
துன்னற்க தீவினைப் பால்.

தன்னைத்தான், காதலன், ஆயின், எனைத்துஒன்றும், தீவினைப்பால், துன்னற்க.

(பொ-ரை): ஒருவன் தனக்கு அழிவு வராதபடி, தன்னைத் தானே காக்க விரும்பி வாழ்க்கையை நடத்துபவனாயின், தீய செயல்களுள் எவ்வளவு சிறியதொன்று என்றாலும், எத்தகைய தீய செயலையும் பிறர்க்குச் செய்யாதிருக்க வேண்டும்.

காதலன் ஆயின் - விரும்பி வாழ்க்கையை நடத்துபவனாகில்; **தீவினைப்பால்** - தீய செயல்களுள்; **எனைத்தொன்றும்** - எவ்வளவு சிறியதொன்று என்றாலும்; **துன்னற்க** - பிறர்க்குச் செய்யாதிருக்க வேண்டும்.

(க-ரை): தனக்கு அழிவு ஏற்படாமல், தன்னைத்தானே காத்துக் கொள்ள விரும்புபவன், பிறர்க்குத் தீய செயலைச் செய்யாதிருக்க வேண்டும். (209)

**10. அருங்கேடன் என்பது அறிக மருங்குஓடித்
தீவினை செய்யான் எனின்.**

மருங்குஓடித், தீவினை, செய்யான், எனின், அருங்கேடன், என்பது, அறிக.

(பொ-ரை): ஒருவன் பிறன் ஒருவனுக்குத், தவறான வழியில் சென்று தீமைகளை இழைக்காமல் இருப்பானேயானால், அவன் கேடு எதுவும் இல்லாதவன் என்பதை அறிந்து கொள்ளலாம்.

மருங்குஓடி - தவறான வழியில் சென்று; **அருங்கேடன்** - கேடு எதுவும் இல்லாதவன்.

(க-ரை): தவறான வழியில் சென்று, பிறர்க்குத் தீங்கு இழைக்காதவனுக்குக் கேடு எதுவும் ஏற்படாது. (210)

22. ஒப்புரவு அறிதல்

ஒப்புரவு அறிதல் என்பது, உலகத்தின் போக்கை உணர்ந்து, இல்லாதவர்களுக்கு உள்ளவர்கள் உதவி செய்து, உலக வாழ்வை ஒழுங்குபடுத்திச் சமன்செய்தல் எனப்படும்.

**1. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு.**

மாரிமாட்டு, உலகு, என், ஆற்றும் கொல்லோ?, கடப்பாடு, கைம்மாறு, வேண்டா.

(பொ-ரை): தமக்குப் பேருதவி புரியும் மழைக்கு, உலகத்தார் என்ன எதிர் உதவிகளைச் செய்கின்றனர்? ஒன்றுமில்லை! அதுபோல, மழை போன்ற பண்புடையவர்கள் பிறர்க்குத் தாம் செய்யும் உதவிகளுக்கு, எதிர் உதவிகளை எப்பொழுதும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

உலகம் - உலகத்தார்; **கடப்பாடு** - ஒப்புரவு.

(க-ரை): எதிர் உதவிகளை எதிர்பார்க்காமல், பிறர்க்கு உதவுவதே உயர்ந்த மக்களின் கடப்பாடாகும். (211)

**2. தாள்ஆற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.**

தாள்ஆற்றித், தந்த பொருள் எல்லாம், தக்கார்க்கு, வேளாண்மை, செய்தற்பொருட்டு.

(பொ-ரை): ஒப்புரவாளன் ஒருவன், பெரிதும் முயன்று ஈட்டிய பொருள் எல்லாம், தகுதியுடைய பிறர்க்கு உதவி புரிவதற்காகவே ஆகும்.

தாள்ஆற்றி - முயற்சி செய்து; **தக்கார்** - தகுதியுடையவர்; **வேளாண்மை** - உதவி.

(க-ரை): ஒருவன் பொருள் சேர்ப்பதன் பயனே, தகுதியுடையவர்க்கெல்லாம் உதவி செய்வதற்காகவே ஆகும்.(212)

**3. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.**

ஒப்புரவின், நல்ல பிற, புத்தேள் உலகத்தும், ஈண்டும், பெறல் அரிதே.

(பொ-ரை): பிறர்க்கு உதவி செய்யும் பண்பாகிய ஒப்புரவைக் காட்டிலும், நல்லனவாகிய வேறு பண்புகளை, மறைந்த வானளாவிய புகழ்கொண்டோர் புகழ் உலகத்திலும் சரி, சாதாரண மக்கள் வாழும் மண்ணுலகத்திலும் சரி, காணப்பெறுதல் என்பது அரிதாகும்.

புத்தேள் - வான்புகழ் கொண்டோரின் புகழ் உலகம்.

(க-ரை): ஒப்புரவைவிட நல்லதொரு பண்பை எங்கும் காண இயலாது. (213)

**4. ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.,**

ஒத்தது அறிவான், உயிர் வாழ்வான், மற்றையான், செத்தாருள், வைக்கப்படும்.

(பொ-ரை): ஒப்புரவை நன்கு அறிந்து, அதனைக் காப்பாற்றிப் பிறர்க்கு உதவியாக வாழ்க்கையை நடத்துகின்றவன், உள்ளபடியே உயிர் வாழ்கின்றவன் என்று கருதப்படுவான்; ஒப்புரவுப் பண்பு இல்லாதவன், அவன் உயிருடன் இருந்தாலும், இறந்து போனவர்களில் ஒருவனாகவே வைத்துக் கருதப்படுவான்.

ஒத்தது - ஒப்புரவு.

(க-ரை): ஒப்புரவு உடையவன் உயிர் வாழ்பவனாகவும், அஃதில்லாதவன் உயிருடன் இருந்தும், இறந்தவருள் ஒருவனாகவும் எப்பொழுதும் கருதப்படுவான். (214)

**5. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகுஅவாம்
பேரறி வாளன் திரு.**

உலகுஅவாம், பேரறிவாளன் திரு, ஊருணி, நீர், நிறைந்தற்றே.

(பொ-ரை): ஒப்புரவு செய்தலை விரும்பும் பேரறிவு படைத்த ஒருவனுடைய செல்வம், ஊரார் குடிநீர் பருகுகின்ற குளமானது நீரால் நிறைந்திருப்பது போன்றதாகும்.

உலகு - ஒப்புரவு; **அவாவுதல்** - விரும்புதல்; **ஊருணி** - ஊராரின் குடிநீர்க் குளம்.

(க-ரை): ஊருணி எப்படி ஊர் மக்கள் எல்லோர்க்கும் பொதுவாகப் பயன்படுமோ, அப்படியே பேரறிவாளனின் செல்வமும், மக்கள் எல்லோர்க்கும் பயன்படுவதாகும். (215)

**6. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின்.**

செல்வம், நயன் உடையான்கண், படின், பயன்மரம், உள்ளூர்ப் பழுத்தற்றால்.

(பொ-ரை): பெருஞ்செல்வமானது ஒப்புரவு என்னும் நற்பண்பு உடையவனிடம் போய்ச் சேருமேயானால், அது, ஊரின் நடுவே உள்ள பயன்மிகுந்த ஒரு மரத்தின் பழங்கள், பழுத்திருப்பதைப் போன்றதாகும்.

நயன் - ஒப்புரவு.

(க-ரை): ஊரின் நடுவே இருக்கும் பழுத்த நல்ல மரம் எல்லா மக்களுக்கும் பயன்படுவதைப் போல, ஒப்புரவு உடையவனின் செல்வமும், எல்லோர்க்கும் பயன்படுவதாகும். (216)

**7. மருந்துஆகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.**

செல்வம், பெருந்தகையான்கண், படின், மரத்துத், தப்பா, மருந்து ஆகி, அற்றால்.

(பொ-ரை): மிகுந்த செல்வமானது, ஒப்புரவு என்னும் பெருந்தன்மை உடையவனிடம் போய்ச் சேருமேயானால், அது ஒரு நல்ல மரத்தின் எல்லாப் பகுதிகளும், மருந்தாகி எல்லோர்க்கும் பயன்படுவது போன்றதாகும்.

தப்பா மரம் - பிறர்க்குப் பயன்படுவதிலிருந்து தப்பாத மரத்தின்; அதாவது நல்ல மரத்தின்; **மருந்தாகி** - எல்லாப் பகுதிகளும் மருந்தாகி.

(க-ரை): ஒப்புரவாளனின் மிகுந்த செல்வம், ஒரு நல்ல மரத்தின் எல்லாப் பகுதிகளும் மக்களுக்கு மருந்தாகப் பயன்படுவது போன்றதாகும். (217)

**8. இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடன்அறி காட்சி யவர்.**

கடன்அறி காட்சியவர், இடன்இல், பருவத்தும், ஒப்புரவிற்கு ஒல்கார்.

(பொ-ரை): ஒப்புரவுப் பண்பை உணர்ந்து, அதன்படி நடத்தலாகிய தம்முடைய கடமையை, நன்கு அறிந்த அறிவுடையார்,

செல்வம் சுருங்கிய காலத்திலும், எந்த வகையிலும் ஒப்புரவு செய்வதற்குத் தயங்கமாட்டார்கள்.

கடன் - ஒப்புரவு என்னும் கடமை; **இடன்** - செல்வம்; **இடன்இல் பருவம்** - வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய செல்வம் இல்லாத வறுமைக் காலம்.

(க-ரை): ஒப்புரவு என்னும் கடமையை உணர்ந்த அறிவுடையார், தாம் வறுமையுற்ற காலத்திலும், ஒப்புரவு செய்யத் தவறமாட்டார்கள். (218)

9. நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர
செய்யாது அமைகலா ஆறு.

செய்யாது, அமைகலா ஆறு, செயும் நீர, நயன் உடையான், நல்கூர்ந்தான், ஆதல்.

(பொ-ரை): ஒருவன் பிறர்க்கு உதவிகளைச் செய்ய முடியாமல் வருந்துகின்ற நிலைதான், ஒப்புரவு உடையவன் வறுமை உடையவனாக ஆகிவிட்டான் என்பதை உணர்த்தும் அறிகுறியாகும்.

நயன் - ஒப்புரவு; **நல்கூர்தல்** - வறுமையுறுதல்; **செயும்நீர** - செய்யுந் தன்மைய; அதாவது ஒப்புரவு.

(க-ரை): ஒப்புரவு உடையவன் வறுமையுற்று வருந்துகின்ற நிலையிலும், பிறர்க்கு உதவி செய்தலையே விரும்பி இருப்பான். (219)

10. ஒப்புரவி னால்வரும் கேடுஎனின் அஃதுஒருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து.

ஒப்புரவினால், வரும் கேடு, எனின், அஃது, ஒருவன், விற்றுக், கோள்தக்கது, உடைத்து.

(பொ-ரை): ஒப்புரவு செய்வதனால் ஒருவனுக்குப் பெருங்கேடு வரும் என்றால், அக்கேடானது, அவன் தன்னைத்தானே விற்றாவது, வாங்கிக் கொள்ளக்கூடிய அளவுக்குத் தகுதி படைத்ததாகும்.

கேடுவரும் எனில் - பெருங்கேடு வரும் என்றால்; **விற்று** - தன்னை விற்றாவது; **கோள்தக்கது** - வாங்கிக் கொள்ளக்கூடிய தகுதியுடையதாகும்.

(க-ரை): ஒப்புரவு செய்வதனால் கேடு வரும் என்றால், அதனை ஒரு கேடாகக் கொள்ள மாட்டார்கள் உயர்ந்தோர் எனப்படுபவர்கள். (220)

23. ஈகை

வறுமையுற்று இரந்து வருவோர் யாவர்க்கும், இல்லை என்று சொல்லாமலும், ஒரு வரையறை செய்யாமலும், ஒருவன் தன் விருப்பப்படி பொருளை வாரிக் கொடுத்தல் எனப்படும்.

1. வறியார்க்கு ஒன்றுஈவதே ஈகைமற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

வறியார்க்கு, ஒன்று ஈவதே, ஈகை; மற்றுஎல்லாம், குறிஎதிர்ப்பை, நீரது உடைத்து.

(பொ-ரை): இல்லாதவர்களுக்குத் தேவைப்படும் ஒரு பொருளை, அவர்க்குக் கொடுப்பதே கொடை என்று சிறப்பித்துச் சொல்லப்படும்; மற்றவர்களுக்குக் கொடுப்பனவெல்லாம், ஏதோ ஒரு பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையை உடையனவாகும்.

குறியெதிர்ப்பு - அளந்து வாங்கி அவ்வளவே திருப்பிக் கொடுப்பது.

(க-ரை): இல்லாதவர்களுக்குப் பயனை எதிர்பார்க்காமல் பொருளைக் கொடுப்பதுதான் ஈகை ஆகும். மற்ற கொடுக்கல் எல்லாம், பயனை எதிர்பார்க்கும் தன்மையனவாகும்; அவை ஈகை ஆகா. (221)

2. நல்ஆறு எனினும் கொளல்தீது மேல்உலகம்
இல்எனினும் ஈதலே நன்று.

நல்ஆறு, எனினும், கொளல்தீது; மேல் உலகம், இல்எனினும், ஈதலே, நன்று.

(பொ-ரை): பிறரிடமிருந்து பொருளை இரந்து பெற்றுக் கொள்ளுதல், நல்ல நெறியாகும் என்று குறிப்பிட்ட கொள்கை யுடையார் எவரேனும் கூறினாலும், அப்படிப் பெற்றுக் கொள்ளுதல், தீமையானதேயாகும்; பிறர்க்கு விரும்பிப் பொருளைக் கொடுப்பதால், மறைந்த வான்புகழ் கொண்டோரின் புகழ் உலகம் பின்னர் கிடைக்காது என்று அக்கொள்கையுடையார் கூறினாலும், பிறர்க்குக் கொடுத்தல் எப்பொழுதும் நன்மையே பயக்கும்.

நல்ஆறு எனினும் - நல்லநெறியாகும் என்று குறிப்பிட்ட கொள்கையுடையார் கூறினாலும். இக்குறளில் அயலார் கொள்கையை வள்ளுவர் மறுக்கிறார்.

(க-ரை): எப்பொழுதும் பிறரிடமிருந்து ஒரு பொருளை இரந்து பெறுதல் தீதாகும்; பிறர்க்கு ஒரு பொருளை விரும்பிக் கொடுத்தல் நல்லதாகும். (222)

3. இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள.

இலன்என்னும், எவ்வம், உரையாமை, ஈதல், குலன்உடையான் கண்ணே, உள.

(பொ-ரை): இரந்து வருபவனிடம், தான் வறுமையுடையவன் என்னும் துன்பந்தரும் சொல்லைக் கூறாது கொடுப்பது என்பது, உயர்ந்த குடிப்பிறந்தவனிடம் மட்டுமே இருக்கும் பண்பாகும்.

இலன் - வறியன்; **எவ்வம்** - துன்பம்.

(க-ரை): உயர்ந்த குடியில் பிறந்தவர்கள், தம் வறுமையைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், அதுபற்றி ஏதொன்றும் சொல்லாமல், பிறர்க்குப் பொருளைக் கொடுத்துக் கொண்டே யிருப்பார்கள். (223)

4. இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு.

இரந்தவர், இன்முகம், காணும் அளவு, இரக்கப்படுதல், இன்னாது.

(பொ-ரை): பொருள்வேண்டி இரக்கும் இரவலரின் மகிழ்ச்சி கலந்த முகத்தைக் காணும் வரையிலும், ஈவோர்க்கு, இரவலரைப் பார்த்து இரக்கப்படுதலும் ஒரு துன்பமாகவே அமையும்.

(க-ரை): இரவலரின் இனிய முகத்தைக் காணும் வரையில் ஈவோர், மனம் அமைதி பெறாமல், இரக்கப்பட்டுத் துன்பம் எய்துவர். (224)

5. ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

ஆற்றுவார் ஆற்றல், பசி ஆற்றல், அப்பசியை, மாற்றுவார், ஆற்றலின் பின்.

(பொ-ரை): நோன்பு நோற்பாரின் வலிமையானது, தம்முடைய பசியைப் பொறுத்துக் கொள்ளுதலாகும். பிறரின் கொடிய பசியை உணவு கொடுத்து நீக்குவோரின் வலிமையோடு ஒப்பிட்டுப்

பார்த்தால், மேற்கூறப்பட்ட வலிமை, அடுத்து வைத்து எண்ணக் கூடியதாகவே அமையும்.

(க-ரை): தம் பசியைப் பொறுத்துக் கொள்பவர்களைவிடப் பிறரின் பசியைப் போக்குபவர்களே சிறந்தவராவார்கள். (225)

6. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

அற்றார், அழிபசி தீர்த்தல், அஃது, ஒருவன், பெற்றான், பொருள்வைப்புழி.

(பொ-ரை): பொருள் வசதியற்ற வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும்; அதுதான், பொருள் பெற்ற ஒருவன், தன் பொருளைச் செலவு செய்வதற்கு ஏற்ற வாய்ப்புள்ள சிறந்த வழியாக அமையும்.

(க-ரை): பிறர் பசியைப் போக்க, ஒருவன் தன் பொருளைச் செலவிடுவது, அவனுக்கு எய்ப்பினில் வைப்பாக என்றும் கொள்ளப்படும். (226)

7. பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

பாத்தூண், மரீஇயவனைப் பசி என்னும், தீப்பிணி, தீண்டல், அரிது.

(பொ-ரை): தனக்குரிய உணவைப் பலரோடும் பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவனைப் பசி என்று சொல்லப்படும் கொடிய நோய், வாட்டி வருத்தச் செய்யாது.

பாத்தல் - பகிர்தல்; **தீண்டுதல்** - பற்றுதல்.

(க-ரை): தன்னுடைய உணவைப் பலர்க்கும் பகிர்ந்து கொடுத்து உண்பவனுக்குப் பலரும் உதவி செய்ய முன்வருவராதலால், பசி என்னும் நோய், அவனை எப்பொழுதும் வாட்டுதல் இல்லை.(227)

8. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்து இழக்கும்வன் கணவர்.

தாம்உடைமை, வைத்து, இழக்கும், வன்கணவர், ஈத்துஉவக்கும் இன்பம், அறியார் கொல்.

(பொ-ரை): தாம் திரட்டி வைத்திருக்கும் பெரும் பொருளைப் பிறர்க்கு எந்த வகையிலும் கொடுக்காமல், பதுக்கி வைத்திருந்து,

பின்னர் எக்காரணம் பற்றியோ இழந்துவிடும், வன்கண்மை உடையவர்கள், பிறர்க்குக் கொடுத்து, அதனால் அவர்க்கு உண்டாகக்கூடிய மகிழ்ச்சியினால், தாம் அடையக்கூடிய இன்பத்தை வாழ்நாளில் கண்டறியார்களோ? ஒருபோதும் கண்டறிந்திருக்க மாட்டார்கள்.

வன்கண்மை - அருளின்மை.

(க-ரை): ஈவது மூலம் ஏற்படும் இன்பத்தை, ஒருவர் அறிந்திருந்தால், பொருளைச் சேர்த்துவைத்துப் பின்னர் அது பாழ்பட்டுப் போக இடமளிக்க மாட்டார். (228)

9. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

நிரப்பிய, தாமே, தமியர் உணல், இரத்தலின், இன்னாது, மன்ற.

(பொ-ரை): தேடி வைத்த பொருளைப் பிறர்க்கு ஈயாமல், தாமே தமியராய் இருந்து உண்ணுவது என்பது. வறுமையால் இரத்தலைக் காட்டிலும், மிகக் கொடுமை வாய்ந்ததாகும்.

நிரப்பிய - தேடி வைத்த.

(க-ரை): தம்முடைய பொருளைக் கொண்டு, ஒருவர், தாமே தமியராய் இருந்து உண்ணுதல், இரத்தலைக் காட்டிலும் கொடிய செயலாகும். (229)

10. சாதலின் இன்னாதது இல்லை இனிதுஅதூஉம்
ஈதல் இயையாக் கடை.

சாதலின் இன்னாதது, இல்லை; ஈதல், இயையாக் கடை, அதூஉம் இனிது.

(பொ-ரை): இறப்பதைக் காட்டிலும் துன்பந்தருவது, வேறொன்றும் இல்லை. ஆனால், வறியவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுக்க முடியவில்லை என்ற நிலை ஏற்படும்போது, உயர்ந்தோர்க்கு அந்த நிலையைவிட இறந்தால்கூட இனிதாகவே அமையும்.

(க-ரை): இறத்தலைவிட, ஈய முடியாமலிருக்கும் நிலையே, உயர்ந்தோர்க்கு மிகவான துன்பத்தைத் தரக்கூடியதாகும். (230)

24. புகழ்

புகழ் என்பது, பிறர் நல்ல எண்ணத்துடன் பாராட்டிப் போற்றும் பெருமையோடு ஒருவர் வாழ்தல் எனப்படும்.

1. ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

ஈதல், இசைபட வாழ்தல், அது அல்லது, உயிர்க்கு, ஊதியம் இல்லை.

(பொ-ரை): வறியவர்களுக்கு எப்போதும் ஈய வேண்டும்; அதன்மூலம் புகழ் ஏற்பட, இனிது வாழ வேண்டும்; அப்படிப்பட்ட புகழ் அல்லாமல், உயிர்களுக்கு வேறு எதுவும் வாழ்க்கையின் ஊதியமாக அமைவது இல்லை.

ஈதல் - வறியவர்க்குக் கொடுத்தல்; **இசை** - புகழ்; **ஊதியம்** - மிகு வருவாய்.

(க-ரை): புகழ்பட வாழ்தலே, மக்களின் உயிர் வாழ்க்கையின் குறிக்கோளாக அமையும் ஊதியம் ஆகும். (231)

2. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்.

உரைப்பார், உரைப்பவை எல்லாம், இரப்பார்க்கு, ஒன்று ஈவார்மேல், நிற்கும் புகழ்.

(பொ-ரை): புகழ்ந்து பேசுபவர்கள் பொதுவாகச் சிறப்பித்துச் சொல்லுவனவெல்லாம், இரந்து வருபவர்களுக்கு, அவர்கள் வேண்டும் ஒரு பொருளைக் கொடுக்கும் கொடையாளரைப் பொறுத்து, ஏற்படுகின்ற புகழேயாகும்.

இரப்பார் - இல்லாமையால் இரந்து வருபவர்; **ஈவார்** - கொடுப்பவர்.

(க-ரை): கொடையாளரின் புகழே எவராலும் எப்பொழுதும் சிறப்பித்துப் பேசப்படும். (232)

3. ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதுஒன்று இல்.

உயர்ந்த, புகழ்அல்லால், உலகத்து, ஒன்றா, பொன்றாது, நிற்பது, ஒன்று இல்.

(பொ-ரை): உயர்ந்த பெரும்புகழ் அல்லாமல், உலகத்தில் ஒப்பற்ற ஒரு பெரும் பொருளாக, அழியாமல், நிலைத்து நிற்கக் கூடியது, வேறு ஒன்றும் இல்லை.

ஒன்றா - இணையின்றி; **பொன்றுதல்** - அழிதல்.

(க-ரை): உலகத்தில் உயர்ந்த புகழைவிட, பெறுதற்கு அருமையானது என்று சொல்லக்கூடிய பொருள், வேறு எதுவும் இல்லை. (233)

**4. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.**

நிலவரை, நீள்புகழ், ஆற்றின், புத்தேள் உலகு, புலவரைப் போற்றாது.

(பொ-ரை): நிலவுலகில் ஈதல் மூலம் நெடுங்காலம் நீடித்து நிலைக்கவல்ல புகழை ஒருவர் நிலைநாட்டுவாரேயானால், அவர் மறைந்த பிறகு, மறைந்த வான்புகழ் கொண்டோரின் புகழ் உலகிலும் அறிவில் சிறந்து நிற்போர் கூட பெற இயலாத புகழை, அந்த ஒருவர் பெறுவார்.

நிலவரை - நில உலகம்; **புலவர்** - அறிவிற் சிறந்தவர்; **புத்தேள் உலகு** - மறைந்த வானளாவிய புகழ் கொண்டோரின் புகழ் உலகம்; **புலவரைப் போற்றாது** - அறிவிற் சிறந்து நிற்போர் கூடப் பெற முடியாத.

(க-ரை): ஈதல் மூலம் புகழை நிலைநாட்டியவர்களின் புகழ், அவர்கள் மறைந்த பிறகும் அறிவாளிகளைவிடப் புகழ் உலகிலும் நின்று நிலவும். (234)

**5. நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது.**

நத்தம்போல் கேடும், உளதாகும் சாக்காடும், வித்தகர்க்கு அல்லால், அரிது.

(பொ-ரை): புகழைப் பெருக்குவதன்மூலம் துயர் அடைவதும், புகழை நிலைநிறுத்திச் சாவை அணைப்பதும் ஆகிய செயல்களை ஆற்றல் மிக்கவர் மட்டுமே செய்ய இயலும்; மற்றவர்களால் செய்ய இயலாது.

நத்தம் - புகழ் பெருகுதல்; **சாக்காடு** - சாவு; **வித்தகம்** - ஆற்றல் மிக்கவர்.

(க-ரை): துயருற்றாலும் ஈந்து புகழை வளர்த்தலும், உலகில் புகழை நிலைநாட்டி இறத்தலும் ஆற்றல்மிக்கவர்கள் மட்டுமே செய்யக்கூடிய செயல்கள் ஆகும்; அவை பிறரால் ஆகா. (235)

6. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதுஇலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

தோன்று, இன், புகழொடு, தோன்றுக; அஃதுஇலார், தோன்றலின், தோன்றாமை, நன்று.

(பொ-ரை): ஒருவர் தாம் புக விரும்புகின்ற துறையில் புகழோடு விளங்க முடியும் என்றால், அந்தத் துறையில் தோன்ற வேண்டும்; அதற்கான அறிவுத்திறனும், ஆற்றல் திறனும், வாய்ப்பும் இல்லாதவர்கள் அந்தத் துறையில் புகுவதைவிடப் புகாமலிருப்பது நல்லது.

தோன்றுஇன் - தோன்றுகின்ற இடம்; அதாவது தோன்றுகின்ற துறை.

(க-ரை): ஒவ்வொருவரும் எந்தத் துறையில் புகழோடு விளங்குவதற்குரிய அறிவாற்றல் திறன்களைப் பெற்றிருக்கிறார் களோ, அவர்கள் அந்தந்தத் துறைகளில் மட்டுமே தோன்றுவது நலம் பயக்கும். (236)

7. புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்.

புகழ்பட வாழாதார், தம், நோவார், தம்மை, இகழ்வாரை, நோவது, எவன்?

(பொ-ரை): தமக்குப் புகழ் உண்டாகும்படியாக வாழ முடியாதவர்கள், அந்த நிலை கண்டு பிறர் இகழும்போது, அந்த இகழ்ச்சி தம்மால்தான் வந்தது என்று தம்மை நொந்துகொள்ளாமல், தம்மை இகழ்பவரை நொந்துகொள்வது எதற்காக? அது பொருத்தமாக அமையாது.

நோவது - நொந்து கொள்ளுதல்; **எவன்** - ஏன், எதற்கு?

(க-ரை): ஒருவன் பிறரால் பழிக்கப்படாமல், ஈதல் புரிந்து, அதன்மூலம் புகழ்பெற்றுப் புகழுடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டுமேயல்லாமல், பழிப்பவரை நொந்துகொள்ளுதல் பொருத்தம் உடையது ஆகாது. (237)

8. வசைஎன்ப வையத்தார்க்கு எல்லாம் இசைஎன்னும்
எச்சம் பெறாஅ விடின்.

எச்சம் என்னும் இசை, பெறாஅவிடின், வையத்தார்க்கு எல்லாம், வசை, என்ப.

(பொ-ரை): தம் வாழ்நாளுக்குப் பின்னும் எஞ்சி நிற்பதாகிய புகழைப் பெறாவிட்டால், உலகத்தார் எல்லோர்க்கும், அப்படிப்பட்ட வாழ்க்கை, பழிப்புக்குரியதாகும் என்று அறிவுடையோர் கூறுவர்.

வசை - பழிப்பு; **எச்சம்** - மிச்சம்.

(க-ரை): தம் வாழ்நாளில் புகழை நிலைநாட்டாதவர்களின் வாழ்க்கை, என்றும் பிறரால் பழிப்புக்கு உரியதாகவே அமையும்.(238)

9. வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

இசையிலா, யாக்கை, பொறுத்த நிலம், வசையிலா, வண் பயன், குன்றும்.

(பொ-ரை): புகழைப் பெறாமல், வாழ்க்கையையே வீணே கழித்தவனைச் சுமந்த அவனது நிலத்தில், பழுதில்லாத நல்ல விளைவு கூட ஏற்படாமல், அவனது போக்கால் குறைந்துபோய் விடும்.

இசையிலா யாக்கை - புகழைப்பெற முடியாதவனுடைய உடம்பு, **வசையிலா வண்பயன்** - வசையில்லாத அதாவது பழுது இல்லாத நல்ல விளைவு.

(க-ரை): புகழைப் பெற முடியாதவனுடைய நிலத்தில், அவனது பொறுப்பற்ற போக்கின் காரணமாக நல்ல விளைவுகூட மிகவும் குறைந்து போய்விடும். (239)

10. வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்.

வசை ஒழிய, வாழ்வாரே, வாழ்வார், இசைஒழிய, வாழ்வாரே, வாழாதவர்.

(பொ-ரை): தம்முடைய வாழ்க்கையில் பழிப்பு நீங்க வாழ்பவரே, உயிரோடு வாழ்பவர் ஆவார்; புகழ் நீங்க வாழ்பவர், உயிருடன் வாழினும், உள்ளபடியே வாழாதவர் ஆவார்.

வாழ்வார் - உயிரோடு வாழ்பவர்; **வாழாதவர்** - வாழ்வின் பயனை அடைய முடியாதவர்.

(க-ரை): பழிப்பில்லாமல் புகழுடன் வாழ்வதே வாழ்வாகும்; புகழில்லாமல் வாழ்வது, வாழ்க்கை ஆகாது. (240)

25. அருள் உடைமை

அருள் உடைமை என்பது, எல்லா உயிர்களிடத்திலும், அவற்றோடு தொடர்பு ஏதும் இல்லாத நிலையிலும், இரக்க அன்பு காட்டி நடத்தல் எனப்படும்.

**1. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.**

பொருள்செல்வம், பூரியார் கண்ணும் உள; அருள்செல்வம், செல்வத்துள் செல்வம்.

(பொ-ரை): பொருள்களாகிய செல்வங்கள் கீழோரிடத்திலும் இருக்கின்றன; சீரியோரிடத்தில் மட்டுமே உள்ள அருளாகிய செல்வமே, செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்த செல்வமாகும்.

அருள் - இரக்க அன்பு; **பூரியார்** - கீழோர்.

(க-ரை): செல்வங்களிலெல்லாம் மிகச் சிறந்த செல்வம் அருள் உடைமையேயாகும். கீழோரிடத்திலும் காணப்படும் மற்ற செல்வங்கள் எல்லாம், சிறப்பித்துச் சொல்லப்படும் செல்வங்கள் ஆகா. (241)

**2. நல்ஆற்றால் நாடி அருள்ஆள்க பல்ஆற்றால்
தேரினும் அஃதே துணை.**

நல்ஆற்றால், நாடி, அருள் ஆள்க; பல் ஆற்றால், தேரினும் அஃதே துணை.

(பொ-ரை): நல்ல வழிகளால் ஆராய்ந்து பார்த்து, ஒவ்வொருவரும் அருள்உடையவர்களாக ஆக வேண்டும். பல வழிகளால் ஆராய்ந்து பார்த்தாலும், அருள் உடைமையே வாழ்க்கைக்குத் துணையாக அமைந்திருக்கின்றது.

ஆறு - வழி; **நாடி** - ஆராய்ந்து; **தேர்தல்** - ஆராய்தல்.

(க-ரை): ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும், அருள் உடைமையே துணையாக இருந்துவரக் கூடியதாகும். (242)

**3. அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.**

இருள்சேர்ந்த, இன்னா உலகம், புகல், அருள்சேர்ந்த, நெஞ்சினார்க்கு, இல்லை.

(பொ-ரை): அறியாமையாகிய இருள் பொருந்திய துன்ப உலகில் புகுதல் என்பது, அருள் பொருந்திய நெஞ்சம் உடைய உயர்ந்தவர்களுக்கு என்றும் ஏற்படுவது இல்லை.

இருள்சேர்ந்த - அறியாமையாகிய இருள் பொருந்திய; **இன்னா உலகம்** - துன்பந்தரும் உலகம்.

(க-ரை): அருளுடைய நெஞ்சம் படைத்தாரைத் துன்பங்கள் ஒருபோதும் அணுகா. (243)

**4. மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வாற்கு இல்என்ப
தன்உயிர் அஞ்சும் வினை.**

மன்னுயிர் ஓம்பி, அருள் ஆள்வாற்கு, தன்உயிர், அஞ்சும் வினை, இல், என்ப.

(பொ-ரை): நிலைபெற்றுள்ள மற்ற உயிர்களையெல்லாம் காத்து, அவற்றிடம் அருள் காட்டுபவனுக்குத் தனது உயிரைப் பற்றி அஞ்சும் தொழில் இல்லை என்று அறிவுடையோர் கூறுவர்.

அஞ்சும்வினை - அஞ்சும் தொழில்; அதாவது அஞ்ச வேண்டிய வேலை.

(க-ரை): பிற உயிர்களுக்குத் தீமை செய்யாமல், அவற்றை யெல்லாம் காப்பாற்றுகிறவர்க்கு, எவரும் தீமை செய்யமாட்டார். ஆதலால், அருளுடையவர்கள் தம் உயிரைப்பற்றி அஞ்ச வேண்டியதில்லை. (244)

**5. அல்லல் அருள்ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி.**

அருள் ஆள்வார்க்கு, அல்லல் இல்லை; வளி வழங்கும், மல்லல் மாஞாலம், கரி.

(பொ-ரை): அருள் உடையார்க்குத் துன்பம் இல்லை என்பதைக் காற்று உலாவுகின்ற வளம் பொருந்திய பெரிய உலகத்தினரே நன்கு அறிவார்கள்; அவர்களே இதற்கு ஏற்ற சான்றும் ஆவர்.

அல்லல் - துன்பம்; **வளி** - காற்று; **கரி** - சான்று.

(க-ரை): அருளுடையார்க்கு எப்பொழுதும் துன்பம் இல்லை என்பதை எங்கும் உள்ள உலகத்தினர் எக்காலத்திலும் அறிவார்கள். (245)

6. பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி அல்லவை செய்துஒழுகு வார்.

அருள்நீங்கி, அல்லவை செய்து, ஒழுகுவார், பொருள்நீங்கி, பொச்சாந்தார், என்பர்.

(பொ-ரை): அருள் அறவே இல்லாதவராய், அறமல்லாத செயல்களைச் செய்து நடப்பவர்கள், அறத்தையும் இழந்து, தம் வாழ்க்கையின் கடமையையும் மறந்தவர்கள் ஆவார்கள் என்று அறிவுடையோர் கூறுவர்.

அல்லவை - அறமல்லாதவை; அதாவது தீமைகள்; **பொச்சாத்தல்** - மறத்தல்.

(க-ரை): அருளின்றித் தீமைகளைச் செய்வோர், தாம் கடைப்பிடிக்க வேண்டிய அறத்தையும் இழப்பர்; செய்ய வேண்டிய கடமையையும் மறப்பர். (246)

7. அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள்இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

பொருள் இல்லார்க்கு, இவ்உலகம், இல்லாகி யாங்கு, அருள் இல்லார்க்கு, அவ்உலகம், இல்லை.

(பொ-ரை): பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலக வாழ்வு இல்லாதவாறு போல, அருள் இல்லாதவர்களுக்குப் புகழ் உலகில் இடமும், பெருமையும் இல்லை.

இவ்வுலகம் - வாழும் இந்த உலகம்; **அவ்உலகம்** - இறந்த பின் எய்தும் புகழ் உலகம்.

(க-ரை): இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருள் வேண்டும்; புகழ் உலகம் எய்த அருள் வேண்டும். (247)

8. பொருள்அற்றார் பூப்பர் ஒருகால் அருள்அற்றார் அற்றார்மற்று ஆதல் அரிது.

பொருள் அற்றார், ஒருகால், பூப்பர்; அருள் அற்றார், அற்றார்; மற்று, ஆதல் அரிது.

(பொ-ரை): பொருள் இல்லாதவர்கள் எப்பொழுதேனும் ஒரு காலத்தில் பொருள் உண்டாகப் பெறுவார்கள்; அருளை இழந்தவர்கள் அதனை அறவே இழந்தவர்களேயாவர்; அவர்கள் ஒருபோதும் அதனை மீண்டும் பெற முடியாது.

அற்றார் - இழந்தவர்; இல்லாதவர்; **பூப்பர்** - பொருளைப் பெறுவர்.

(க-ரை): ஒருவனுடைய பயனுடைய வாழ்க்கைக்கு அருளே அடிப்படையாகும்; அருள் இல்லாவிட்டால் வாழ்க்கையில் பயன்இல்லை. (248)

**9. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.**

அருளாதான், செய்யும் அறம், தேரின், தெருளாதான், மெய்ப்பொருள், கண்டற்றால்.

(பொ-ரை): அருள் இல்லாதவன் செய்யும் அறச்செயலை ஆராய்ந்து பார்த்தால், அது, அறிவுத் தெளிவு இல்லாதவன் ஒரு நூலின் உண்மைப் பொருளைக் கண்டுவிட்டது போன்றதாக இருக்கும்.

தெருளாதான் - அறிவுத் தெளிவு இல்லாதவன்; **தேரின்** - ஆராய்ந்து பார்த்தால்.

(க-ரை): அறிவுத் தெளிவு இல்லாதவன், நூலின் உண்மைப் பொருளை எப்படிக் கண்டறிய முடியாதோ, அப்படியே, அருளில்லாதவனும் உண்மையான அறச்செயலைச் செய்ய முடியாது. (249)

**10. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து.**

தான், தன்னின், மெலியார்மேல், செல்லும்இடத்து, வலியார்முன், தன்னை, நினைக்க.

(பொ-ரை): ஒருவன் தன்னைக்காட்டிலும் மெலிந்தார் மேல் அருளில்லாமல் வெகுண்டு பாய்ந்து செல்லும்போது, தன்னைக் காட்டிலும் வலியார் முன்பு, தான் அஞ்சி நிற்கும் நிலையை நினைத்துப் பார்க்க வேண்டும்.

வலியார் - வலிவுள்ளவர்; **மெலியார்** - வலிவிழந்தவர்.

(க-ரை): பிறரால் தனக்குத் துன்பம் நேரிடும்போது, தனக்கு என்ன நிலை ஏற்படுகிறதோ, அதுதான் தன்னால் பிறர்க்குத் துன்பம் நேரிடும்போது ஏற்படும் என்பதை, ஒருவன் நினைத்துப் பார்க்க வேண்டும். (250)

26. புலால் மறுத்தல்

புலால் மறுத்தல் என்பது, புலால், கொலைக்குக் காரணமாக அமைவதாலும், அது அருளுடைமைக்கு மாறுபட்டதாகையாலும், அதை உண்ணாமல் வெறுத்தொதுக்குதல் எனப்படும்.

**1. தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.**

தன் ஊன், பெருக்கற்குத், தான், பிறிது ஊன், உண்பான், எங்ஙனம், அருள் ஆளும்?

(பொ-ரை): ஒருவன் தனது உடம்பை வளர்த்துக் கொள்வதற்காக, அவன் வேறோர் உயிரின் உடம்பை உண்ணுகிறான் என்றால், அவன் எவ்வாறு அருளுடையவனாக இருக்க முடியும்? இருக்க முடியாது.

ஊன் - உடல் தசை; **பிறிது** - பிற உயிர்.

(க-ரை): தன்னுடைய உடம்பை வளர்த்துக் கொள்வதற்கு, மற்றோர் உயிரின் உடம்பை உண்ணுவது அருளுடைமையாகாது. (251)

**2. பொருள்ஆட்சி போற்றாதார்க்கு இல்லை அருள்ஆட்சி
ஆங்குஇல்லை ஊன்தின் பவர்க்கு.**

பொருள் ஆட்சி, போற்றாதார்க்கு, இல்லை; அருள் ஆட்சி, ஆங்கு, ஊன் தின்பவர்க்கு, இல்லை.

(பொ-ரை): பொருளுடையவர்க்கு இருக்கும் சிறப்பு, அப்பொருளைப் பேணிக் காப்பாற்றாதவர்களுக்கு இல்லை; அதுபோல, அருளுடையவர்க்கு இருக்கும் சிறப்பு, அருளற்ற புலால் உண்பார்க்கு இல்லை.

போற்றுதல் - பேணிக் காப்பாற்றுதல்; **பொருளாட்சி** - பொருளை ஆளுதல்; **அருளாட்சி** - அருளை ஆளுதல்.

(க-ரை): அருளுடைமையால் ஏற்படும் சிறப்பு, ஊன் தின்பார்க்கு இல்லாமற் போகும். (252)

**3. படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றுஊக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம்.**

படைகொண்டார், நெஞ்சம்போல், ஒன்றன் உடல்சுவை, உண்டார், மனம், நன்று ஊக்காது.

(பொ-ரை): கொலைக் கருவியைக் கையில் கொண்டவரின் மனம், அருளை நோக்காமல், செய்யும் கொலையையே நோக்குவதைப் போல, வேறோர் உயிரின் உடலைச் சுவைத்து உண்டவரின் மனம் அருளை நோக்காமல், தின்னும் ஊனையே நோக்கும்.

நன்று - அருள்; **ஊக்காது** - அருளை நோக்காது.

(க-ரை): ஊன் உண்பவர் அருளுடையவராக ஆதல் என்பது அரிதிலும் அரிதாகும். (253)

**4. அருள்அல்லது யாதுஎனின் கொல்லாமை கோறல்
பொருள்அல்லது அவ்வூன் தினல்.**

அருள் அல்லது, யாது எனின், கொல்லாமை; கோறல், அவ்ஊன் தினல், பொருள் அல்லது.

(பொ-ரை): அருள் என்பது எது என்றால், எந்த ஓர் உயிரையும் கொல்லாமலிருப்பதாகும்; அருளற்ற தன்மை எது என்றால், உயிரைக் கொல்லுதலாகும்; ஆதலால், கொல்லுதலால் கிடைக்கும் ஊனைத் தின்னுதல் அறம் ஆகாது.

கோறல் - கொல்லுதல்; **தினல்** - தின்னுதல்.

(க-ரை): உயிரைக் கொன்று ஊனைத் தின்பது அறம் ஆகாது. (254)

**5. உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு.**

உள்ளது, உயிர்நிலை, உண்ணாமை; ஊன் உண்ண அளறு, அண்ணாத்தல், செய்யாது.

(பொ-ரை): சில உயிர்கள் இன்னும் சில உடம்பின் கண் நிலை பெற்றிருக்கக் காரணம், ஊன் உண்ணாமை என்னும் அறம் உள்ளதால் ஆகும்; அவ்வறத்தை விடுத்து ஒருவன் ஊன் உண்பானாயின், அவனை விழுங்கிய தீமைச்சேறு, அவனை வெளிப்படுத்த, வாயைத் திறக்காது.

நிலை - நிலைத்திருத்தல்; **அண்ணாத்தல்** - வாய் திறத்தல்; **அளறு** - தீமைச் சேறு; 'காமச்சேறு', 'துன்பச் சேறு' என்பது போல.

(க-ரை): அருளுடைமையை எண்ணிப் பாராது, ஒருவன் ஊன் உண்பானாயின், அவன் துன்பச் சேறு என்னும் மீளாத் துயரத்தில் அழுந்திப் போய்விடுவான். (255)

**6. தினற்பொருட்டால் கொல்லாது உலகுஎனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.**

தினல் பொருட்டால், உலகு கொல்லாது, எனின், விலைப் பொருட்டால், ஊன் தருவார், இல்.

(பொ-ரை): ஊன் உண்ணும் பொருட்டு உலகத்தார் உயிர்களைக் கொல்லாதிருப்பார்களேயானால், விற்பனை செய்யும் பொருட்டு ஊன் விற்பவர் எவரும் இல்லாமற் போய்விடுவர்.

தினல் - தின்னுதல்; **ஊன்** - புலால்.

(க-ரை): ஊன் உண்ணுபவர் எவரும் இல்லாமற்போனால், ஊனை விற்பனை செய்வாரும் இல்லாமற் போவர். (256)

**7. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்அது உணர்வார்ப் பெறின்.**

புலால், பிறிதுஒன்றன், புண்; அது உணர்வார்ப், பெறின், உண்ணாமை, வேண்டும்.

(பொ-ரை): ஊன் என்பது வேறோர் உயிரின் உடற் புண்ணாகும்; இந்த உண்மையை ஒருவர் உணர்வாராயின், அந்த ஊனை அவர் உண்ணாதிருக்க வேண்டும்.

பிறிதொன்றன் புண் - வேறோர் உயிரின் உடற்புண்; **உணர்தல்** - ஆராய்ந்தறிதல்.

(க-ரை): ஊன் என்பது மற்றோர் உயிரின் உடற் புண்ணாகும் என்பதை, ஒருவர் உணருவாராயின், அவர் அந்த ஊனை உண்ண விரும்பமாட்டார். (257)

**8. செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.**

செயிரின் தலைப்பிரிந்த காட்சியார், உயிரின் தலைப்பிரிந்த ஊன், உண்ணார்.

(பொ-ரை): குற்றமற்ற அறிவுடையவர்கள், ஓர் உயிரினிடத்திலிருந்து பிரிந்துவந்த உடம்பாகிய ஊனை, ஒரு போதும் உண்ண மாட்டார்கள்.

செயிர் - குற்றம்; **காட்சி** - அறிவு; **தலைப்பிரிதல்** - நீங்கிய, அற்ற.

(க-ரை): குற்றமற்ற அறிவுடையவர்கள், உயிரைவிட்டு நீங்கிய ஓர் உடம்பின் ஊனை உண்ணமாட்டார்கள். (258)

9. அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

அவிசொரிந்து, ஆயிரம், வேட்டலின், ஒன்றன், உயிர் செகுத்து, உண்ணாமை, நன்று.

(பொ-ரை): உயிர்களைக் கொன்றும், நெய் முதலிய பொருள்களைச் சொரிந்தும், ஆயிரம் வேள்விகள் செய்தலைவிட, ஓர் உயிரின் உயிரைப் போக்கி அதன் ஊனை உண்ணாமலிருத்தல் நல்லது ஆகும்.

அவி - உயிர்ப் பொருளும், நெய் போன்ற உயிரற்ற பொருளும்; **வேட்டல்** - வேள்வி செய்தல்; **செகுத்தல்** - கொல்லுதல்.

(க-ரை): உயிர்களை வதைக்கும் ஆயிரம் வேள்விகள் செய்தலைவிட, ஓர் உயிரைப் போக்கி, அதன் ஊனை உண்ணாமலிருப்பது நன்மை பயக்கும். (259)

10. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

கொல்லான், புலாலை மறுத்தானை, எல்லா உயிரும், கைகூப்பித், தொழும்.

(பொ-ரை): எந்த ஓர் உயிரையும் கொல்லாதவனாய்ப், புலாலையும் உண்ணாதவனாய் வாழ்கின்றவனை, உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் போற்றி நிற்கும்.

கைகூப்பித் தொழுதல் - போற்றுதல்.

(க-ரை): உயிரைக் கொல்லாதவனாய், ஊனை உண்ணாத வனாய் வாழ்கின்றவனிடத்தில், எல்லா உயிர்களும் அன்புடன் பழகும். (260)

27. தவம்

தவம் என்பது, மனவடக்கம் கொள்ளுதல், தனக்கு நேரிடும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்ளுதல், பிற உயிர்களைக் காப்பாற்றுதல், அன்பு நெறிகளையும், அருள் நெறிகளையும் கடைப்பிடித்தல், இவை குறித்து நோன்பு நோற்றல் எனப்படும்.

1. உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.

உற்ற நோய், நோன்றல், உயிர்க்கு உறுகண், செய்யாமை, அற்றே, தவத்திற்கு உரு.

(பொ-ரை): தனக்கு ஏற்படும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதலும், பிற உயிர்களுக்குத் துன்பங்களைச் செய்யா திருத்தலும் ஆகிய அவ்வளவே தவத்தின் வடிவமாகும்.

நோய் - துன்பம்; **நோன்றல்** - பொறுத்தல்; **உரு** - தவம்.

(க-ரை): ஒருவன் தனக்கு ஏற்படும் துன்பங்களைப் பொறுத்தலும், பிற உயிர்களுக்குத் துன்பங்கள் செய்யாதிருத்தலுமே தவத்தின் இலக்கணமாகும். (261)

2. தவமும் தவம்உடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதுஇலார் மேற்கொள் வது.

தவமும், தவம் உடையார்க்கு, ஆகும்; அதனை, அஃதுஇலார், மேற்கொள்வது, அவம்.

(பொ-ரை): தவம் மேற்கொள்ளல் என்பது, தவஒழுக்கம் உடையார்க்கு மட்டுமே பொருந்துவதாகும்; தவ ஒழுக்க மில்லாதவர்கள் தவத்தை மேற்கொள்வது என்பது பயன்இல்லாத செயலாகும்.

தவம் உடையார் - தவ ஒழுக்கம் உடையார்; **அவம்** - வீண்.

(க-ரை): தவ ஒழுக்கம் உடையார் மட்டுமே தவத்தை மேற்கொள்வதால், உரிய பயன் ஏற்பட வழியுண்டு. (262)

3. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்.

துறந்தார்க்குத், துப்புரவு வேண்டி, மற்றையவர்கள், தவம், மறந்தார் கொல்.

(பொ-ரை): துறந்தவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்ய விரும்பும் காரணத்தால், இல்வாழ்வோர் தவம் செய்தலை மறந்தனர் போலும்.

துப்புரவு - நுகர்ச்சி; அதாவது உதவிகள்; அவை உணவு, உடை, மருந்து, உறையுள் முதலியன.

(க-ரை): இல்லறத்திலிருந்து கொண்டு துறந்தார்க்கு உதவிகள் செய்வது சிறந்தது எனினும், அதைவிடச் சிறந்தது, இல்லறத்தில் இருந்துகொண்டே இயன்ற அளவு தவம் செய்தலும் ஆகும். (263)

4. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்.

ஒன்னார்த் தெறலும், உவந்தாரை, ஆக்கலும், எண்ணின், தவத்தான், வரும்.

(பொ-ரை): பகைவரைக் கெடுத்தலும், நண்பரை ஆக்கலும் ஆகிய செயல்களைச் செய்ய தவஞ்செய்வோர் நினைப்பாராயின், அவை தவத்தின் மூலம் கிடைக்கும் வலிமையால் நடைபெறும்.

ஒன்னார் - பகைவர்; **தெறல்** - கெடுத்தல்; **உவந்தார்** - நண்பர்.

(க-ரை): தீமை செய்வோரைக் கெடுத்தலும், நன்மை செய்வோரை உயர்த்தலும், தவஞ்செய்வோர் எண்ணிய அளவில், அவர்களின் வலிமையால் ஏற்பட இயலும். (264)

5. வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

வேண்டிய, வேண்டியாங்கு, எய்தலால், செய்தவம், ஈண்டு, முயலப்படும்.

(பொ-ரை): விரும்பியவற்றை விரும்பியவாறே ஒருவர் தவம் செய்தல் மூலம் அடைய முடியுமாகையால், செயக்கூடிய தவம் இவ்வுலகில் அறிவுடையோரால் முயன்று மேற்கொள்ளப்படும்.

செய்தவம் - செயக்கூடிய தவம்; **ஈண்டு** - இல்லற நிலை.

(க-ரை): வேண்டியவற்றை வேண்டியவாறே தவத்தின் மூலம் அடைய முடியுமாதலால், தக்கதாய தவம் அறிவுடையோரால் மட்டுமே முயன்று மேற்கொள்ளப்பட முடியும். (265)

**6. தவம்செய்வார் தம்கருமம் செய்வார்மற்று அல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு.**

தவம் செய்வார், தம் கருமம் செய்வார், மற்று அல்லார், ஆசையுட்பட்டு, அவம் செய்வார்.

(பொ-ரை): தவம் செய்பவர்களே தமக்குரிய கடமையைச் செய்பவராவார்கள்; அவர் ஒழிந்த மற்றவர்கள் எல்லாம் ஆசை வலையில் சிக்குண்டு, பயனில்லாதவற்றைச் செய்பவராவார்கள்.

அவம் செய்வார் - பயனில்லாதவற்றைச் செய்பவர்கள்.

(க-ரை): தவம் செய்பவர் மட்டுமே தம் கடமையைச் செய்பவராவார்; அவர் அல்லாத மற்றவர்கள் ஆசையில் அகப்பட்டு வீணான செயல் செய்பவராவர். (266)

**7. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.**

சுடச்சுடரும், பொன்போல், நோற்கிற்பவர்க்கு, துன்பம், சுடச்சுட, ஒளிவிடும்.

(பொ-ரை): தீயிலிட்டுச் சுடச்சுட மாசுநீங்கி ஒளிவீசுகின்ற பொன்னேபோல், தவம் செய்பவர்களைத் துன்பம் வருத்த வருத்த, தீமை நீங்கி அவர்களுக்கு அறிவு மிகும்.

சுடரும் - ஒளிவீசும்; **ஒளி** - அறிவு; **நோற்கிற்பவர்** - தவம் செய்வோர்.

(க-ரை): தீயிலிட்டுச் சுடச்சுட பொன்னின் ஒளிவீசும்; அதுபோல, தவம் செய்வோரைத் துன்பம் வருத்த வருத்த அவர்களின் அறிவு ஒளிமிகும். (267)

**8. தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்.**

தன் உயிர், தான் அறப்பெற்றானை, ஏனைய, மன்னுயிர் எல்லாம் தொழும்.

(பொ-ரை): தவச் சிறப்பினால் தன்னுடைய உயிர், தான் என்னும் பற்றுகள் நீங்கப் பெற்றவனைப் பிற நிலைபெற்ற மக்களெல்லோரும் போற்றிப் புகழுவார்கள்.

தான் அறுத்தல் - தான் என்னும் செருக்கினை நீக்குதல்.

(க-ரை): 'தான்' என்னும் செருக்கு அற்று வாழும் தவம் செய்வோனை, உலக மக்களெல்லோரும் போற்றிப் புகழுவார்கள். (268)

**9. கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு.**

நோற்றலின், ஆற்றல், தலைப்பட்டவர்க்கு, கூற்றம், குதித்தலும், கைகூடும்.

(பொ-ரை): தவம் செய்வதன் மூலம் பெறத்தக்க ஆற்றலைப் பெற்றவர்களுக்குக் கூற்றுவனை (இறப்பை) வென்று நிற்றலும்கூடக் கைகூடும்.

நோற்றல் - தவம் செய்தல்; **கூற்றம்** - இறப்பு; சாவு; **குதித்தலும்** - வென்று நிற்றலும்.

(க-ரை): தவம் செய்வோர் தவத்தால் உடல் வலிமையும், உள்ள வலிமையும் பெற்று, நீண்ட நாள் இறப்பையும் வென்று வாழ முடியும். (269)

**10. இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.**

இலர், பலர், ஆகிய காரணம், நோற்பார் சிலர், நோலாதவர், பலர்.

(பொ-ரை): உலகத்தில் ஆற்றல் உள்ளவர்கள் சிலராகவும், ஆற்றல் அற்றவர்கள் பலராகவும் இருக்கக் காரணம், தவஞ் செய்வார் சிலராகவும், தவஞ் செய்யாதவர் பலராகவும் இருப்பதேயாகும்.

நோற்பார் - தவஞ் செய்வார்; **நோலாதவர்** - தவஞ் செய்யாதவர்.

(க-ரை): தவம் செய்யும் சிலர் ஆற்றல் உள்ளவர்களாகவும், தவம் செய்யாத பலர் ஆற்றலற்றவர்களாகவும் உலகில் இருப்பது இயல்பேயாகும். (270)

28. கூடா ஒழுக்கம்

கூடா ஒழுக்கம் என்பது, மனவலிமை இல்லாமையால், காம இன்பத்தை விரும்புதல் போன்ற தீய ஒழுக்கங்களை மேற்கொள்ளக்கூடாது என்பதை வலியுறுத்துதல் எனப்படும்.

**1. வஞ்ச மனத்தான் படிற்றுஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.**

வஞ்ச மனத்தான், படிற்று ஒழுக்கம், பூதங்கள் ஐந்தும், அகத்தே நகும்.

(பொ-ரை): கள்ள மனத்தை உடையவனது தீய ஒழுக்கத்தை, அவனது உடம்பகத்தே அமைந்துள்ள மூலப் பொருள்கள் ஐந்தும் கண்டு தமக்குள்ளே எள்ளி நகைக்கும்.

படிற்று ஒழுக்கம் - பொய் ஒழுக்கம்; அதாவது தீய ஒழுக்கம். **பூதங்கள் ஐந்து** - நிலம், நீர், தீ, காற்று, வெளி என்ற ஐந்து மூலப் பொருள்கள்; பூதங்கள் ஐந்தும் அகத்தே நகைக்கும் என்பது நகைச்சுவை தோன்றக் கூறப்பட்டதாகும்.

(க-ரை): தீய ஒழுக்கத்தை உடைய கள்ள மனத்தை உடையவன், பின்னர் தன்னிலை பற்றி நினைந்து பார்க்கும் போது, அவனே வெட்கப்பட வேண்டி வரும். (271)

**2. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்.**

தன் நெஞ்சம், தான் அறி, குற்றப்படின், வான்உயர் தோற்றம், எவன் செய்யும்?

(பொ-ரை): ஒருவனுடைய நெஞ்சம் அவன் நன்கு அறிந்த ஒரு குற்றத்தின் கண்ணேயே படிந்திருக்குமாயின், அவனுடைய மிக உயர்ந்த துறவுக்கோலங்கூட என்ன பயனை விளைவிக்க முடியும்? ஒரு பயனையும் விளைவிக்க முடியாது!

வானுயர் - வானத்தைப் போல் மிக உயர்ந்த; **நெஞ்சம் தான் அறி குற்றப்படின்** - தனக்குக் குற்றம் என்று தெரிந்தே அதனைச் செய்தல்.

(க-ரை): கூடா ஒழுக்கமின்றி இருப்பதே, துறவியர்க்கு மேன்மை பயப்பதாகும். (272)

**3. வலிஇல் நிலைமையான் வல்உருவம் பெற்றம்
புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று.**

வலிஇல், நிலைமையான், வல்உருவம், பெற்றம், புலியின் தோல், போர்த்து, மேய்ந்தற்று.

(பொ-ரை): மனத்தைத் தன் வழிப்படுத்தும் வல்லமை இல்லாதவன், வலிய மேற்கொண்ட தவக்கோலமானது, பசுவானது புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு பயிரை மேய்வது போன்றதாகும்.

வல் உருவம் - வலியப் புனைந்து கொள்ளும் தவக்கோலம்; **பெற்றம்** - பசு.

(க-ரை): மனத்தை அடக்கும் வல்லமையற்றவன், துறவுக்கோலம் பூண்டு நடிக்கக் கூடாது. (273)

**4. தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.**

தவ மறைந்து, அல்லவை செய்தல், புதல்மறைந்து, வேட்டுவன், புள்சிமிழ்த்தற்று.

(பொ-ரை): ஒருவன் தவக்கோலத்தில் மறைந்து நின்று கொண்டு, தவத்திற்கு மாறாகத் தீய ஒழுக்கத்தில் ஈடுபடுதலானது, வேடன் புதரில் மறைந்து நின்று கொண்டு, பறவைகளை வலைவைத்துப் பிடிப்பது போன்றதாகும்.

அல்லவை - தவத்திற்கு மாறான தீய ஒழுக்கச் செயல்கள்; **புதல்** - புதர்; **புள்** - பறவை; **சிமிழ்த்தல்** - வலைவைத்துப் பிடித்தல்.

(க-ரை): ஒருவன் தவக்கோலத்தில் இருந்து கொண்டு, தீய ஒழுக்கங்களில் ஈடுபடுதல் கூடாது. (274)

**5. பற்றுஅற்றேம் என்பார் படிற்றுஒழுக்கம் எற்றுஎற்றுஎன்று
ஏதம் பலவும் தரும்.**

பற்று அற்றேம், என்பார், படிற்று ஒழுக்கம், எற்று, எற்று என்று, ஏதம் பலவும், தரும்.

(பொ-ரை): ''யாம் பற்றுக்களைத் துறந்துவிட்டோம்'' என்று சொல்லுகின்றவரின் பொய்யொழுக்கமானது, பிறர் கண்டு பழித்துரைக்கும்போது, ''என்ன செய்துவிட்டோம்!'' ''என்ன செய்துவிட்டோம்!'' என்று, தாமே இரங்கும்படியாகப் பல துன்பங்களைத் தரும்.

படிற்றொழுக்கம் - பொய்யொழுக்கம் ; **ஏதம்** - துன்பம்.

(க-ரை): பற்றுக்களையெல்லாம் துறந்துவிட்டதாகப் பொய்யாகக் கூறித் தீயொழுக்கத்தில் ஈடுபடும் துறவியர்க்குத், துன்பங்கள் பல கட்டாயம் வந்தே தீரும். (275)

6 நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து.
வாழ்வாரின் வன்கணார் இல்.

நெஞ்சின் துறவார், துறந்தார் போல், வஞ்சித்து, வாழ்வாரின், வன்கணார், இல்.

(பொ-ரை): மனத்தில் பற்றுக்களைத் துறக்காமல், துறந்தவர்களைப் போலப் பிறரை ஏமாற்றி வாழ்பவர்களைவிட மிகக் கொடியவர்கள் வேறு எவரும் இருக்க முடியாது.

வஞ்சித்து - ஏமாற்றி; **வன்கணார்** - கொடியவர்.

(க-ரை): பொய்த் துறவிகளைவிடக் கொடியவர்கள், வேறுயாரும் இருக்க மாட்டார்கள். (276)

7. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து.

புறம்குன்றி, கண்டு அனையரேனும், அகம்குன்றி, மூக்கின், கரியார் உடைத்து.

(பொ-ரை): புறத்தே குன்றிமணி போல சிலர் தவக்கோலம் பூண்டு செம்மையானவராய்க் காணப்பட்டாலும், அகத்தே குன்றிமணியின் மூக்குப்போல், கறுத்திருப்பவரைத்தான் இவ்வுலகம் கொண்டிருக்கிறது.

குன்றி - குன்றி மணி; **கரியர்** - கறுப்பர்.

(க-ரை): போலித் துறவியின் வெளித் தோற்றங்கண்டு ஏமாந்துவிடக் கூடாது. (277)

8. மனத்தது மாசுஆக மாண்டார்நீர் ஆடி
மறைந்துஒழுகும் மாந்தர் பலர்.

மனத்தது, மாசுஆக, மாண்டார் நீர்ஆடி, மறைந்து ஒழுகும் மாந்தர், பலர்.

(பொ-ரை): மனத்தின்கண் மாசு இருக்க, தவத்தால் மாண்புபெற்ற பெரியோரின் தன்மைகளைப் பூண்டு, தீய வழிகளில் மறைந்து ஒழுகும் மாந்தர் உலகத்தில் பலர் உள்ளனர்.

மாண்டார் - மாண்பு பெற்றார்; **நீர்** - தன்மை; **ஆடி** - ஆண்டு; மேற்கொண்டு.

(க-ரை): துறவிக்கோலம் பூண்டு, தீய வழிகளில் வஞ்சகமாய் வாழ்வோர், உலகில் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். (278)

9. கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன வினைபடு பாலால் கொளல்.

கணை கொடிது; யாழ்கோடு செவ்விது; ஆங்கு அன்ன, வினைபடு பாலால், கொளல்.

(பொ-ரை): அம்பு நேராக இருப்பினும் அது செயலால் கொடியது ஆகும்; யாழின் தண்டு வளைந்திருப்பினும், அது செயலால் செவ்விது ஆகும்; அதுபோல, தவஞ்செய்வோரையும் கொடியவர் - செவ்வியர் என்பதை அவர்களது தோற்ற வடிவைக் கொண்டு அளவிடாமல் அவர்கள் செய்யும் செயலின் தன்மையால் அறிந்து கொள்ள வேண்டும்.

கணை - அம்பு: **கோடு** - தண்டு.

(க-ரை): துறவிகளின் தோற்றங்கண்டு மயங்காமல், அவரது பண்புகளை, அவர்களின் செயல் வகைகளைக் கொண்டு அவர்கள் கொடியவர்களா? நல்லவர்களா? என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். (279)

10. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்து விடின்.

உலகம் பழித்தது, ஒழித்துவிடின், மழித்தலும், நீட்டலும், வேண்டா.

(பொ-ரை): உலகத்தார் துறவறத்திற்கு ஆகாது எனப்பழிக்கும் தீயொழுக்கத்தை நீக்கிவிட்டால், தலைமொட்டை அடித்தலும், சடை வளர்த்தலும் ஆகிய புறக்கோலங்களைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டியதில்லை.

மழித்தல் - தலையை மொட்டை அடித்தல்; **நீட்டல்** - சடை வளர்த்தல்.

(க-ரை): துறவிகளுக்குப் புறத்தோற்றம் எப்படி அமைந்தாலும், அகஒழுக்கம் நல்லொழுக்கமாக அமைய வேண்டும் என்பதுதான் முக்கியம். (280)

29. கள்ளாமை

கள்ளாமை என்பது, பிறர்க்குரிய பொருளை வஞ்சனையாகவும், மறைமுகமாகவும், கள்ளத்தனமாகவும் கவர்ந்து கொள்ளக் கருதாது இருத்தல் எனப்படும்.

1. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்துஒன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

எள்ளாமை, வேண்டுவான், என்பான், எனைத்து ஒன்றும், கள்ளாமை, தன்நெஞ்சு, காக்க.

(பொ-ரை): பிறரால் இகழப்படாமல் வாழ வேண்டும் என்று விரும்புகின்றவன், யாதொரு பொருளையும் பிறரிடமிருந்து வஞ்சித்துக் கொள்ள நினைக்காமல், தன் நெஞ்சைத் தானே நன்கு காத்துக் கொள்ள வேண்டும்.

எள்ளாமை - இகழாமை; **எனைத்துஒன்றும்** - யாதொரு பொருளையும்.

(க-ரை): வஞ்சக எண்ணத்தோடு பிறர்பொருளைக் களவாடுகின்றவனை, ஒழுக்கத்தில் உயர்ந்தோர் எப்பொழுதும் இகழவே செய்வார்கள். (281)

2. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

உள்ளத்தால், உள்ளலும் தீதே; பிறன் பொருளைக், கள்ளத்தால், கள்வேம், எனல்.

(பொ-ரை): பிறர்க்குரிய பொருளைக் களவாட ஒருவன் தன் உள்ளத்தினால், நினைத்துப் பார்ப்பதுகூடத் தீதாகும்; ஆகையினாலே, பிறர்பொருளை அவர் அறியாதபடி 'வஞ்சித்துக் களவாடிக் கொள்வோம்' என்று ஒருவன் எண்ணாமலிருக்க வேண்டும்.

உள்ளல் - நினைத்தல்; **கள்வேம்** - களவாடிக் கொள்வோம்.

(க-ரை): பிறருடைய பொருளைக் களவாடிக் கவர்ந்து கொள்ளலாம் என்று ஒருவன் நினைப்பதே குற்றமாகும். (282)

3. களவினால் ஆகிய ஆக்கம் அளவுஇறந்து
ஆவது போலக் கெடும்.

களவினால், ஆகிய ஆக்கம், அளவுஇறந்து, ஆவதுபோலக், கெடும்.

(பொ-ரை): ஒருவருக்குக் களவினால் உண்டாகிய செல்வம், மேலும்மேலும் பெருகிக் கொண்டே போவதுபோல் தோன்றினாலும், அது இருக்க வேண்டிய அளவையும் கடந்து, கெட்டொழிந்து போய்விடும்.

ஆக்கம் - செல்வம்; **அளவுஇறந்து** - அளவு கடந்து.

(க-ரை): ஒருவர் களவாடிக் கொண்டுவந்து சேர்க்கும் பெரும்பொருள், நாளடைவில் கரைந்து ஒழிந்து போய்விடும். (283)

4. களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

களவின்கண், கன்றிய காதல், விளைவின்கண், வீயா, விழுமம் தரும்.

(பொ-ரை): பிறருடைய பொருளைக் களவாடும்போது, ஒருவனுக்கு மிகுந்த விருப்பம் ஏற்படக்கூடும்; அதனால் எதிர்விளைவு நேரிடும்போது, நீங்காத் துன்பமும் ஏற்படும்.

கன்றிய - மிகுந்த; **விளைவு** - களவு காரணமாகத் தண்டிக்கப்படுதல்.

(க-ரை): களவாடுவதில் ஒருவனுக்கு இன்பம் ஏற்பட்டாலும், அதன் விளைவு அவனுக்குப் பெருந்துன்பத்தையே கொடுக்கும். (284)

5. அருள்கருதி அன்புடையர் ஆதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

பொருள்கருதிப், பொச்சாப்புப் பார்ப்பார்கண், அருள்கருதி, அன்புடையர் ஆதல், இல்.

(பொ-ரை): பிறருடைய பொருளைக் களவாட நினைத்து, அவர்க்கு மறதி ஏற்படும் நிலையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்க்கு, அருளுடைமையை எண்ணி உயிர்களிடம் அன்புடையவராக விளங்கும் பண்பு இருக்காது.

பொச்சாப்பு - மறதி.

(க-ரை): களவு செய்யும் பழக்கம் உடையவர்களுக்குப் பிறரிடம் அன்புகாட்டும் பண்பு இருக்காது. (285)

**6. அளவின்கண் நின்றுஒழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்.**

களவின்கண், கன்றிய காதலவர், அளவின்கண், நின்று ஒழுகல், ஆற்றார்.

(பொ-ரை): பிறருடைய பொருளைக் களவாடிக் கொள்வதில், மிக்க விருப்பம் உடையவர்கள், நேர்மை நெறியின்கண் நின்று ஒழுக மாட்டார்கள்.

அளவு - வரையறை செய்யப்பட்ட ஒழுக்கம்; நேர்மை.

(க-ரை): பிறர் பொருளைக் களவாடும் எண்ணங் கொண்டவர்கள், ஒருபோதும் நேர்மையாய் நடந்து கொள்ள மாட்டார்கள். (286)

**7. களவென்னும் கார்அறிவு ஆண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.**

அளவு என்னும், ஆற்றல் புரிந்தார்கண், களவு என்னும், கார் அறிவு, ஆண்மை, இல்.

(பொ-ரை): நேர்மை என்னும் பெருமையை விரும்பினவரிடத்தில், பிறர் பொருளைக் களவாடுதல் என்னும் இருண்ட அறிவு இருப்பது இல்லை.

ஆற்றல் - பெருமை; **புரிதல்** - விரும்புதல்; **கார் அறிவு** - வஞ்சக அறிவு; இருண்ட அறிவு.

(க-ரை): நேர்மையை விரும்புகின்ற உயர்ந்த அறிவுடையோரிடம் களவாடும் பண்பு இருக்காது. (287)

**8. அளவுஅறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
களவுஅறிந்தார் நெஞ்சில் கரவு.**

அளவு அறிந்தார், நெஞ்சத்து, அறம்போல, களவு அறிந்தார், நெஞ்சில், கரவு நிற்கும்.

(பொ-ரை): நேர்மையை அறிந்தாரது நெஞ்சில் அறம் நிற்பதைப் போல, களவு செய்யத் தெரிந்தவர் நெஞ்சில் வஞ்சனை நிற்கும்.

அறம் - அறவுணர்ச்சி; **கரவு** - வஞ்சனை.

(க-ரை): களவு செய்வோர் நெஞ்சில், எப்பொழுதும் வஞ்சகம் இருந்துகொண்டேதான் இருக்கும். (288)

9. அளவுஅல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

களவு அல்ல, மற்றைய தேற்றாதவர், அளவு அல்ல செய்து, ஆங்கே வீவர்.

(பொ-ரை): களவு அல்லாத வேறு எந்த நல்ல வழிகளையும் அறியாதவர், நேர்மையல்லாத செயல்களைச் செய்து, அப்பொழுதே கெட்டொழிந்து போவர்.

வீவர் - கெட்டழிவர்.

(க-ரை): களவு செய்பவர்கள் எப்பொழுதும் தகாத செயல்களைச் செய்து துன்பமுற்று அழிந்து போவார்கள். (289)

10. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு.

கள்வார்க்கு, உயிர்நிலை, தள்ளும்; கள்ளார்க்குப், புத்தேள் உலகு, தள்ளாது.

(பொ-ரை): கள்ளத்தொழில் கொண்டோர்க்கு அவர்களது உடம்பும் தண்டனை காரணமாகக் கெட்டுப் போகும்; களவு செய்யாதோர் மறைந்த பின்னரும் வான் அளாவிய புகழ்உடையோர் உலகம் புகுவர்.

உயிர்நிலை - உடம்பு, **புத்தேள் உலகு** - புகழுடையோரின் புகழ் உலகம்.

(க-ரை): திருடுவோர் உடம்பு தண்டனையால் கெட்டுப்போக நேரிடும்; திருடாதாரைப் பிறர் எப்பொழுதும் போற்றிப் புகழ்வர். (290)

30. வாய்மை

வாய்மை என்பது, நடந்ததை நடந்தவாறும், உள்ளதை உள்ளவாறும், எண்ணியதை எண்ணியவாறும், பொய்ம்மைக்கு அறவே இடந்தராது எடுத்துரைத்தல் எனப்படும்.

1. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்.

வாய்மை எனப்படுவது, யாது எனின், யாது ஒன்றும், தீமை இலாத, சொலல்.

(பொ-ரை): உண்மை என்று எல்லோராலும் சிறப்பித்துச் சொல்லப்படுவது எதை என்றால், பிறர்க்குச் சிறிதுகூடத் தீங்கு உண்டாக்காத சொற்களைச் சொல்லுதல் என்பதே ஆகும்.

வாய்மை - உண்மை; **தீமை இலாத** - தீங்கு உண்டாக்காத சொற்களை.

(க-ரை): உண்மையானது, பிறர்க்குத் தீமை தராதாயின், அதனைக் கூறலாம்; தீமை பயக்குமாயின் அதனைக் கூறக்கூடாது. (291)

2. பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்.

புரை தீர்ந்த, நன்மை பயக்கும் எனின், பொய்ம்மையும் வாய்மை இடத்த.

(பொ-ரை): குற்றம் நீங்கிய நன்மையைப் பிறர்க்கு விளைவிக்குமேயானால், பொய்யான சொற்களும்கூட, உண்மைச் சொற்களுக்கு உரிய இடத்தில் வைத்து எண்ணப்படும்.

புரை - குற்றம்; **தீர்ந்த** - நீங்கிய; ‘பொய்ம்மை’ இலக்கணப்படிப் பொய்ம்மைதான் என்றும், அந்தப் பொய்ம்மை பிறர் ஒருவருக்குக் குற்றமற்ற நன்மையைப் பயக்கும்போது, அதன் சிறப்புக் கருதி, உண்மையாக வைத்துக் கணக்கில் கொள்ளப்படும் என்பதாகும்.

(க-ரை): ஒரு பொய்யானது பிறர்க்குக் குற்றமற்ற நன்மையைச் செய்யுமேயானால், அந்த இடத்தில் மட்டும் உண்மை பேசுவோர் அப்படிப்பட்ட பொய்யையும் பயன்படுத்தலாம். (292)

**3. தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.**

தன் நெஞ்சு, அறிவது, பொய்யற்க, பொய்த்தபின், தன் நெஞ்சே, தன்னைச்சுடும்.

(பொ-ரை): ஒருவன் தன் நெஞ்சம் அறிந்த ஓர் உண்மையை, மறைத்துப் பொய் சொல்லக்கூடாது; அவன் அப்படிப் பொய் சொல்லியபிறகு, அதனைக் குறித்து, அவன் நெஞ்சமே அவனைப் பெரிதும் வருத்தும்.

நெஞ்சு அறிவது - உளமார அறிந்த உண்மையை; **சுடும்** - வாட்டி வருத்தும்.

(க-ரை): ஒருவன் மனமாரப் பொய் சொல்லக்கூடாது; மீறிச் சொன்னால், அவனது மனமே அவனை வாட்டி வதைக்கும். (293)

**4. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.**

உள்ளத்தால், பொய்யாது ஒழுகின், உலகத்தார், உள்ளத்துள் எல்லாம், உளன்.

(பொ-ரை): ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் பேசாமல் நடப்பானேயானால், அப்படிப்பட்டவன் உலகத்தார் எல்லோருடைய உள்ளங்களிலும் இடம்பெற்று இருப்பான்.

ஒழுகுதல் - வாழ்க்கையை ஒழுங்காக நடத்துதல்; உள்ளத்தில் இடம் பெறுவான் என்றால், போற்றிப் புகழப்படுவான் என்று பொருள்.

(க-ரை): உண்மையைப் பேசி, உண்மையாகவே நடப்பவனை, உலகத்தார் என்றென்றும் போற்றிப் புகழவே செய்வர். (294)

**5. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய்வாரின் தலை.**

மனத்தொடு, வாய்மை, மொழியின், தவத்தொடு, தானம் செய்வாரின், தலை.

(பொ-ரை): ஒருவன் மனமார உண்மையைச் சொல்லு வானாயின், அவன், தானத்தையும், தவத்தையும் ஒருங்கே செய்வோரைக் காட்டிலும், சிறந்தவனாகத் திகழ்வான்.

மனத்தொடு வாய்மை - மனதார உண்மை; **தவம்** - நோற்றல்; **தானம்** - கொடை.

(க-ரை): மனதார உண்மை பேசுபவனே, உலகில் மிக உயர்ந்தவனாகக் கருதப்படுவான். (295)

6. பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.

பொய்யாமை அன்ன, புகழ் இல்லை; எல்லா அறமும், எய்யாமை, தரும்.

(பொ-ரை): ஒருவனுக்குப் பொய் சொல்லாமையைப் போன்ற புகழ் வேறு ஒன்றும் இல்லை; அந்த நிலையே, அவனுக்கு எல்லாவிதமான அறங்களையும் நீங்காமல் கொண்டு வந்து சேர்க்கும்.

அன்ன - போன்ற; **எய்யாமை** - நீங்காமை.

(க-ரை): உண்மை பேசுதல், ஒருவனுக்குப் புகழை மட்டுமல்லாமல், எல்லா அறங்களையும் கொடுக்கும். (296)

7. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

பொய்யாமை, பொய்யாமை ஆற்றின், அறம்பிற, செய்யாமை, செய்யாமை நன்று.

(பொ-ரை): ஒருவன் எப்பொழுதும் பொய்யாமையாகிய அறத்தைப் போற்றிக் கடைப்பிடித்து வருவானேயானால், அவன் எப்பொழுதும் மற்ற அறங்களைச் செய்யாவிட்டாலும்கூட, அவன் நன்மையையே அடைவான்.

ஆற்றுதல் - செய்தல்; கடைப்பிடித்தல்; **நன்று** - நன்மை.

(க-ரை): ஒருவன் பொய்யாமையாகிய அறத்தைக் கடைப் பிடித்தால், மற்ற அறங்களெல்லாம் அதனுள் தாமே அடங்கிவிடும். (297)

8. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

புறந்தூய்மை, நீரான், அமையும்; அகந் தூய்மை, வாய்மையால், காணப்படும்.

(பொ-ரை): உடம்பு தூய்மையாக ஆதல், தண்ணீரால் ஏற்படும்; மனம் தூய்மையாக ஆதல், ஒருவன் சொல்லும் உண்மையால் உண்டாகும்.

புறம் - உடம்பு; **அகம்** - உள்ளம்; அதாவது மனம்.

(க-ரை): ஒருவன் பேசும் உண்மையிலிருந்து, அவனது மனத்தூய்மையை அறிந்துகொள்ளலாம். (298)

9. எல்லா விளக்கும் விளக்குஅல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

எல்லா விளக்கும், விளக்கு அல்ல, சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு.

(பொ-ரை): புறத்து இருள் போக்கும் எல்லாச் சுடர் விளக்குகளும் விளக்குகள் ஆகா; பெரியோர்களுக்கு அகத்திருளைப் போக்கும் பொய்யாமையாகிய விளக்கே சிறந்த விளக்கு ஆகும்.

விளக்கு - சுடர்விளக்கு; **சான்றோர்** - பெரியோர்.

(க-ரை): ஒவ்வொருவரின் மனத்தின் உரிய ஒளியாக விளங்குவது உண்மையேயாகும். (299)

10. யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்துஒன்றும்
வாய்மையின் நல்ல பிற.

யாம் மெய்யாக், கண்டவற்றுள், வாய்மையின், நல்ல பிற, எனைத்து ஒன்றும், இல்லை.

(பொ-ரை): யாம் உண்மையாகக் கண்ட அறங்களுள், உண்மையைச் சொல்லுதலைக் காட்டிலும், சிறந்தனவாகக் கூறத்தக்க பிற அறங்கள், வேறு எவையும் இல்லை.

(க-ரை): உண்மையைச் சொல்லுதலே, எல்லா அறங்களிலும் மிகச் சிறந்த அறமாகும். (300)

31. வெகுளாமை

வெகுளாமை என்பது, ஒருவர் சினங்கொள்ளுவதற்குத் தக்க காரணம் இருந்தபோதிலும், அவர் அந்தக் காரணத்தைப் பொருட்படுத்தாமல், உயர்ந்த பண்பின் அடிப்படையில், சினங்கொள்ளாமல் இருத்தல் எனப்படும்.

1. செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்லிடத்துக் காக்கின்என் காவாக்கால் என்.

செல்இடத்துக், காப்பான், சினம் காப்பான், அல் இடத்துக், காக்கின் என்? காவாக்கால் என்?

(பொ-ரை): சினம் செல்லுமிடத்தில், அது வெளிப்படாமல், தடுத்து நிறுத்திக் கொள்பவனே, சினம் வராமல் தடுத்துக் கொள்பவனாவான். சினம் செல்லாதவிடத்தில், அதனை வெளிப் படுத்தாமல், அவன் தடுத்து நிறுத்தினால்தான் என்ன? அல்லது தடுத்து நிறுத்தாமல் விட்டால்தான் என்ன? இரண்டும் ஒன்றுதான்.

செல்லிடம் - செல்லுமிடம்; அதாவது தன்னைக் காட்டிலும் மெலிந்தவரிடம்; **அல்லிடம்** - செல்லாதவிடம்; அதாவது தன்னைக் காட்டிலும் வலிமையானவரிடம்.

(க-ரை): தன்னைவிட மெலிந்தார்மேல் சினங்கொள்ளாமல், அதனை அடக்கிக் கொள்வதுதான் ஒருவருக்கு உயர்ந்த பண்பாகும். (301)

2. செல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும் இல்அதனின் தீய பிற.

செல்லாஇடத்துச் சினம், தீது; செல்இடத்தும், அதனினும் தீய, பிற இல்.

(பொ-ரை): தன்னால் யாதொன்றும் செய்ய முடியாத இடமாகிய வலியார்மேல் சினங் கொள்வதனால் ஒருவனுக்குத் தீங்குதான் உண்டாகும்; செல்லுமிடமாகிய தன்னைவிட மெலியார்மேல் சினங்கொள்வது என்பதைப் பார்க்கிலும், தீங்கு பயப்பது வேறொன்றும் இல்லை.

செல்லா இடம் - வலியார்; **செல்லிடம்** - மெலியார்; **தீது** - தீங்கு.

(க-ரை): ஒருவன் வலியார்மேல் பாய்ந்தாலும், மெலியார் மேல் பாய்ந்தாலும், சினங்கொள்வது என்பது கொடிது ஆகும். (302)

3. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.

யார்மாட்டும், வெகுளியை, மறத்தல்; அதனான், தீய பிறத்தல், வரும்.

(பொ-ரை): ஒருவன் யாரொருவரிடத்திலும் சினங் கொள்ளாமல், அந்தச் சினத்தை அறவே மறந்துவிட வேண்டும்; இல்லையென்றால், அந்தச் சினத்தினால் தீமையான விளைவுகள்தாம் ஏற்படும்.

வெகுளி - சினம்; **தீய** - தீமையான விளைவுகள்.

(க-ரை): சினங்கொள்வதால், ஒருவருக்கு எப்பொழுதும் பல தீங்குகள்தாம் உண்டாகும். (303)

4. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

நகையும், உவகையும், கொல்லும், சினத்தின், பகையும், பிற உளவோ.

(பொ-ரை): முகத்தில் வெளிப்படும் சிரிப்பையும், அகத்தில் உண்டாகும் மகிழ்ச்சியையும் அழிக்கின்ற சினத்தைவிட, ஒருவனுக்குப் பகையான பொருள் வேறு ஏதேனும் ஒன்று உண்டோ? ஒன்றும் இல்லை.

நகை - சிரிப்பு; **உவகை** - அகமகிழ்ச்சி.

(க-ரை): சினமானது எப்போதும் ஒருவனது சிரிப்பையும், அகமகிழ்ச்சியையும் போக்கும்; பகையை உண்டாக்கும். எனவே, சினம் அறவே கூடாது. (304)

5. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

தன்னைத்தான், காக்கின், சினம்காக்க; காவாக்கால், தன்னையே, கொல்லும், சினம்.

(பொ-ரை): ஒருவன் தன்னைத்தானே காத்துக்கொள்ள எண்ணுவானேயானால், தனக்குச் சினம் வராமல் காத்துக்கொள்ள

வேண்டும்; அப்படிக் காத்துக் கொள்ளாவிட்டால், அந்தச் சினமே அவனைக் கொன்றுவிடும்.

(க-ரை): சினம் வராமல் தன்னைக் காத்துக் கொள்பவனே, துன்பம் வராமல் காத்துக்கொள்பவன் ஆவான். (305)

**6. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.**

சினம் என்னும், சேர்ந்தாரைக் கொல்லி, இனம் என்னும், ஏமப் புணையைச், சுடும்.

(பொ-ரை): சினம் என்னும் சேர்ந்தாரை ஒழிக்கும் நெருப்பு, ஒருவனுடைய இனம் என்னும் இன்பத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

கொல்லி - கொல்லும் தொழிலை உடையது; அதாவது நெருப்பு; **இனம்** - சுற்றம்; **புணை** - தெப்பம்.

(க-ரை): சினமானது, ஒருவன் தன்னையும் அழித்து, அவனைச் சேர்ந்த சுற்றத்தாரையும் அழித்தொழிக்கும். (306)

**7. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்துஅறைந்தான் கைபிழையா தற்று.**

சினத்தைப், பொருள் என்று, கொண்டவன், கேடு நிலத்து அறைந்தான் கை, பிழையாதற்று.

(பொ-ரை): சினத்தைத் தனக்குரிய பண்பாகக் கொண்டவன் கெடுதல் என்பது, நிலத்தை நோக்கிக் கையால் அறைந்தவனின் கையானது, எப்படித் தப்பாது துன்புறுமோ, அப்படியே தப்பாது ஆகும்.

கேடு - கெடுதல்; **பிழையாதற்று** - தப்பாததைப் போல்.

(க-ரை): நிலத்தை நோக்கிக் கையால் அறைந்தவன் கை கெடுவது எப்படி உறுதியானதோ, அப்படியே சினம் கொண்டவன் கெடுவது என்பதும் உறுதியானதாகும். (307)

**8. இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.**

இணர்எரி, தோய்வு அன்ன, இன்னா செயினும், புணரின், வெகுளாமை, நன்று.

(பொ-ரை): கொழுந்துவிட்டு எரியும் தீயினால் சுடுவது போன்ற துன்பங்களை ஒருவன் தொடர்ந்து செய்தாலும், அவன் தன்

குற்றம் உணர்ந்து வருந்திப் பின்னர் உறவு கொள்ள வருவானே யானால், அவனைச் சினந்து கொள்ளாமலிருப்பது நல்லது.

இணர் - பூங்கொத்து; **இணர்எரி** - கொத்துக் கொத்தாகச் சுடர்விட்டு எரிதல்; அதாவது கொழுந்துவிட்டு எரிதல்; **புணர்தல்** - தான்செய்த குற்றத்திற்கு வருந்திப் பின்னர் உறவுகொள்ள வருதல்.

(க-ரை): தொடர்ந்து துன்பஞ் செய்தார், பின்னர் வருந்தி உறவுகொள்ள வந்தால், அவர்களைச் சினந்துகொள்ளாமல், சேர்த்துக் கொள்வதே பண்பாகும். (308)

9. உள்ளிய எல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.

உள்ளத்தால், வெகுளி, உள்ளான், எனின், உள்ளிய எல்லாம், உடன் எய்தும்.

(பொ-ரை): ஒருவன் தன் உள்ளத்தால், சினத்தைப் பற்றி நினைக்காது இருப்பானேயானால், அவன் நினைத்த நன்மைகளை எல்லாம் ஒருங்கே அடையப் பெறுவான்.

உள்ளிய எல்லாம் - நினைத்தவற்றை எல்லாம்; **உள்ளான்** - நினைக்காது இருப்பானேயானால்; **வெகுளி** - சினம்.

(க-ரை): சினமற்றவன் பொதுவாக எல்லோர்க்கும் நண்பனாக இருப்பானாதலால், அவன் எண்ணியவற்றையெல்லாம் ஒருங்கே பெறுவது என்பது எளிதாகும். (309)

10. இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

இறந்தார், இறந்தார் அனையர்; சினத்தைத், துறந்தார், துறந்தார், துணை.

(பொ-ரை): சினத்தில் அளவு கடந்தவர், உயிருடன் காணப்பட்டாலும், செத்தவரைப் போன்றே கருதப்படுவார்; சினத்தை அறவே துறந்தவர், துறந்தவர்களுக்கு ஒப்பாகக் கருதப்படுவார்.

இறந்தார் - சினத்தில் அளவு கடந்தவர்; **இறந்தார்** - செத்தார்; **துறந்தார்** - சினத்தை அறவே துறந்தவர்; **துறந்தார்** - துறவிகள்.

(க-ரை): சினம் மிகுந்தவர் கெட்டொழிவர்; சினமற்றவர் பெருமை பெறுவர். (310)

32. இன்னா செய்யாமை

இன்னா செய்யாமை என்பது, தனக்கு ஒரு பயன் நோக்கியோ, பகையுணர்ச்சி கருதியோ, சினம் காரணமாகவோ, பொறாமை காரணமாகவோ, போட்டியுணர்வு காரணமாகவோ, ஐயப்பாடு காரணமாகவோ, ஒருவன் பிறர்க்குத் துன்பமான வற்றைச் செய்யாதிருத்தல் எனப்படும்.

1. சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

சிறப்பு ஈனும் செல்வம், பெறினும், பிறர்க்கு, இன்னா, செய்யாமை, மாசற்றார், கோள்.

(பொ-ரை): பெருஞ்சிறப்பைத் தருகின்ற அழியாத செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும், பிறர்க்குத் துன்பஞ் செய்யாதிருத்தலே குற்றமற்றவர்களின் கொள்கையாகும்.

ஈனும் - தருகின்ற; **மாசற்றார்** - குற்றமற்றவர்; **கோள்** - கொள்கை.

(க-ரை): செல்வச் செருக்கால் பிறர்க்குத் துன்பம் செய்யக்கூடாது என்பது மாசற்ற பெரியோரின் நீங்காக் கொள்கையாகும். (311)

2. கறுத்துஇன்னா செய்தஅக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசுஅற்றார் கோள்.

கறுத்து இன்னாசெய்த, அக்கண்ணும், மறுத்து இன்னா, செய்யாமை, மாசுஅற்றார், கோள்.

(பொ-ரை): ஒருவன் வெகுண்டு தமக்குத் துன்பம் செய்த போதிலும், திரும்ப அவனுக்கு எவ்விதத் துன்பத்தையும் செய்யாமலிருப்பதுதான், குற்றமற்ற உயர்ந்தோரின் கொள்கையாகும்.

கறுத்து - வெகுண்டு; **மறுத்து** - மீண்டும்; அதாவது திரும்பவும்; **மாசுஅற்றார்** - குற்றமற்றவர்; **கோள்** - கொள்கை.

(க-ரை): தீமைக்குத் தீமை என்று திரும்பச் செய்யாமலிருப்பது தான் மாசற்ற பெரியோர்களின் கொள்கையாகும். (312)

3. செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்.

செய்யாமல், செற்றார்க்கும், இன்னாத, செய்த, பின், உய்யா, விழுமம் தரும்.

(பொ-ரை): ஒருவன் தான் ஒரு குற்றமும் செய்யாதிருக்கும் நிலையில், தனக்குத் துன்பம் இழைத்தவர்களுக்குத் தான் எதிர்க் கெடுதி செய்வானேயானால், அந்தச் செயலானது, அவனுக்குத் தப்பிப் பிழைக்க முடியாத துன்பத்தைத் தரும்.

செற்றார் - பகைவர்; அதாவது துன்பம் கொடுப்போர்; **உய்யா** - தப்பமுடியாத; **விழுமம்** - துன்பம்.

(க-ரை): தான் கெடுதி செய்யாத நிலையில், கெடுதி செய்தார்க்குத் திரும்பக் கெடுதி செய்தால், அதனால் ஒருவனுக்குக் கேடுதான் வந்துசேரும். (313)

4. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல்.

இன்னா செய்தாரை, ஒறுத்தல், அவர் நாண, நன்னயம், செய்து, விடல்.

(பொ-ரை): தனக்குத் துன்பம் கொடுத்தவரைத் தண்டித்தலாவது, அவர் வெட்கப்படும்படியாக நல்ல நன்மைகளை அவர்க்குச் செய்து, அவர் செய்த தீமையையும், தான் செய்த நன்மைகளையும் மறந்துவிடுதலாகும்.

ஒறுத்தல் - தண்டித்தல்; **நாண** - வெட்கப்படும்படியாக; **நன்னயம்** - நல்ல நன்மைகளை.

(க-ரை): தீமை செய்தவர்க்கும், அவர் வெட்கிப் போகும் படியாக நன்மைகளைச் செய்து, அவரை நல்லவராக ஆக்க வேண்டும். (314)

5. அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை.

பிறிதின் நோய், தம்நோய் போல், போற்றாக் கடை, அறிவினால், ஆகுவது உண்டோ?

(பொ-ரை): பிற உயிர்களுக்கு ஏற்படும் துன்பங்களைத் தனக்கு உண்டாகும் துன்பங்களாக எண்ணி, அவ்வுயிர்களைக் காப்பாற்றா விட்டால், ஒருவன் தான் பெற்றுள்ள அறிவினால் ஆகக்கூடிய பயன் யாது? ஒன்றுமில்லை!

பிறிதின் - பிற உயிர்கள்; **நோய்** - துன்பம்; **போற்றாக்கடை** - காப்பாற்றாத இடத்து.

(க-ரை): பிற உயிர்க்கு உண்டாகும் துன்பத்தைத் தனக்கு உண்டாகியிருப்பதைப் போல் எண்ணி, அத்துன்பத்தை நீக்கி, அவ்வுயிர்களையும் காப்பாற்றுவதே ஒருவன் பெற்றுள்ள அறிவின் பயனாகும். (315)

6. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்.

இன்னா எனத், தான் உணர்ந்தவை, பிறன் கண், செயல் துன்னாமை, வேண்டும்.

(பொ-ரை): ஒருவன், துன்பம் தருபவையென்று தான் கண்டு அறிந்தவற்றை, மற்றவனிடத்தில் செய்யாமலிருக்க வேண்டும்.

இன்னா - துன்பம்; **துன்னாமை** - செய்யாமை.

(க-ரை): ஒருவன் தீயவை என்று தான் அறிந்தவற்றைப் பிறர்க்குச் செய்யக்கூடாது. (316)

7. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான்ஆம்
மாணாசெய் யாமை தலை.

எனைத்தானும், எஞ்ஞான்றும், யார்க்கும், மனத்தான் ஆம், மாணா, செய்யாமை, தலை.

(பொ-ரை): எவ்வகையாலும் எப்பொழுதும், எவர்க்கும், மனமறிய துன்பந்தரும் செயல்களைச் செய்யாதிருத்தலே சிறந்ததாகும்.

எனைத்தானும் - எவ்வகையிலும்; **எஞ்ஞான்றும்** எப்பொழுதும்; **மாணா** - மாட்சிமையில்லாத துன்பச் செயல்.

(க-ரை): மனம் அறியத் துன்பந்தரும் செயல்களை எந்த ஒரு நிலையிலும், யாரொருவருக்கும் செய்யாதிருத்தலே சிறந்ததாகும். (317)

8. தன்உயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ
மன்உயிர்க்கு இன்னா செயல்.

தன் உயிர்க்கு, இன்னாமை, தான் அறிவான், மன்உயிர்க்கு, இன்னா செயல், என்கொலோ?

(பொ-ரை): தனக்குப் பிறர் இழைக்கும் துன்பத்தை நன்கு அறிந்த ஒருவன், பிற உயிர்களுக்கு அத்தகைய துன்பங்களைச் செய்தல் என்ன காரணம் பற்றியோ? அவ்வாறு செய்வது தகாது என்க.

மன் உயிர் - நிலைபெற்ற உயிர்.

(க-ரை): தனக்குப் பிறரால் துன்பம் நேரிடுவதைப் போன்றே தன்னால் பிறர்க்குத் துன்பம் ஏற்படும் என்பதை உணர்ந்து, பிறர்க்குத் துன்பம் இழைக்காமல் இருக்க வேண்டும். (318)

**9. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.**

பிறர்க்கு இன்னா, முற்பகல் செய்யின், தமக்கு இன்னா, பிற்பகல் தாமே வரும்.

(பொ-ரை): பிறர்க்குத் துன்பமானவற்றை முற்பகலில் ஒருவர் செய்தால், அவருக்குத் துன்பம் பிற்பகலில் தாமாகவே வந்து சேரும்.

செய்யின் - செய்தால்.

(க-ரை): முற்பகலில் பிறர் ஒருவருக்குத் துன்பம் கொடுத்தால், பிற்பகலில் தமக்குத் துன்பம் தானாகவே வந்து சேரும். (319)

**10. நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோய்இன்மை வேண்டு பவர்.**

நோய் எல்லாம், நோய் செய்தார், மேலவாம்; நோய் இன்மை, வேண்டுபவர், நோய் செய்யார்.

(பொ-ரை): துன்பம் எல்லாம் முன்பு பிறர்க்குத் துன்பஞ் செய்தார் மீதே சேர்வனவாகும்; ஆதலால், பின்பு துன்பப்படாமல் வாழ விரும்புவர்கள் இப்பொழுது பிறர்க்குத் துன்பம் செய்ய மாட்டார்கள்.

நோய் - துன்பம்.

(க-ரை): பின்பு துன்புறாமல் இருக்க விரும்புபவர்கள் இப்பொழுது பிறர்க்குத் துன்பம் செய்யக்கூடாது. (320)

33. கொல்லாமை

கொல்லாமை என்பது, எந்த ஓர் உயிரையும் கொல்லாது இருத்தல் எனப்படும்.

1. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

அறவினை, யாதுஎனில், கொல்லாமை, கோறல், பிறவினை, எல்லாம் தரும்.

(பொ-ரை): அறச்செயல் என்பது யாதென்றால், எந்த ஓர் உயிரையும் கொல்லாதிருத்தலாகும்; கொல்லுதல் என்பது, அறமல்லாத செயல்கள் எல்லாவற்றையும் உருவாக்கும்.

அறவினை - அறச்செயல்; **கோறல்** கொல்லுதல்; **பிறவினை** - அறமல்லாத செயல்கள்.

(க-ரை): கொல்லாமை அறச்செயலாகும்; கொல்லுதல் எல்லாவிதத் துன்பங்களையும் தரும். (321)

2. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

பகுத்து உண்டு, பல்உயிர் ஓம்புதல், நூலோர், தொகுத்தவற்றுள், எல்லாம், தலை.

(பொ-ரை): கிடைத்த உணவைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு, அப்படிப் பல உயிர்களையும் காப்பாற்றுதல் என்பது, அறநூலோர் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையாய அறம் ஆகும்.

ஓம்புதல் - காப்பாற்றுதல்; **நூலோர்** - அறநூலோர்.

(க-ரை): கிடைத்த உணவை எல்லா உயிர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தல் என்பது அறங்களிலெல்லாம் தலைசிறந்த அறமாகும். (322)

3. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்று அதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

ஒன்றாக நல்லது, கொல்லாமை, மற்று, அதன் பின்சார, நன்று, பொய்யாமை.

(பொ-ரை): இணையில்லாத நல்ல ஓர் அறமாகக் கருதப் படுவது கொல்லாமையாகும்; அதற்கு அடுத்த நல்ல அறமாக வைத்துக் கருதத்தக்கது பொய்யாமையாகும்.

பின்சார - அடுத்து.

(க-ரை): அறங்கள் பலவற்றுள்ளும் முதலாவது அறம் கொல்லாமை ஆகும்; இரண்டாவது அறம் பொய்யாமை ஆகும். (323)

**4. நல்ஆறு எனப்படுவது யாதெனின் யாதுஒன்றும்
கொல்லாமை சூழும் நெறி.**

நல்ஆறு, எனப்படுவது, யாது எனின், யாதுஒன்றும், கொல்லாமை, சூழும் நெறி.

(பொ-ரை): நல்ல நெறி என்று சொல்லப்படுவது எது என்று கேட்டால், எந்த ஓர் உயிரையும் கொலை செய்யாமை என்னும் அறத்தைப் போற்றி நிற்கும் நெறியேயாகும்.

ஆறு - நெறி; **சூழும்** - போற்றி நிற்கும்.

(க-ரை): எந்த ஓர் உயிரையும் கொல்லாதிருத்தலே போற்றிப் பாதுகாக்கக்கூடிய நல்ல அறநெறி முறையாகும். (324)

**5. நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.**

நிலைஅஞ்சி, நீத்தாருள், எல்லாம், கொலை அஞ்சிக், கொல்லாமை, சூழ்வான் தலை.

(பொ-ரை): தீமை நிறைந்த சூழ்நிலையைக் கண்டு அஞ்சி, அதனைவிட்டு நீங்கியவர்கள் எல்லாருள்ளும், கொலை செய்வதற்கு அஞ்சிக் கொல்லாமை என்னும் அறத்தைப் போற்றுகின்றவன், தலைசிறந்தவனாவான்.

நிலை - தீமை நிறைந்த சூழ்நிலை; **நீத்தார்** - நீங்கியவர்; துறந்தவர்; **சூழ்தல்** - போற்றுதல்; **தலை** - தலைசிறந்தவன்.

(க-ரை): தீமை நிறைந்த சூழ்நிலைக்கு அஞ்சி, அதனைவிட்டு நீங்கியவருள் கொலைக்கு அஞ்சிக் கொல்லாமையைப் போற்றி வருபவரே, தலைசிறந்தவராவார். (325)

**6. கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிர்உண்ணும் கூற்று.**

கொல்லாமை, மேற்கொண்டு, ஒழுகுவான், வாழ்நாள் மேல், உயிர்உண்ணும் கூற்று, செல்லாது.

(பொ-ரை): கொலை செய்யாமை என்னும் அறத்தை மேற்கொண்டு நடந்து கொள்பவனது வாழ்நாளின் மேல், உயிரைக் கொண்டு செல்லுவதாகக் கற்பனையாக உருவகப்படுத்திக் கூறப்படும் சாவு என்ற கூற்றுவன்கூட, அவனது உயிரைப் பறிக்கச் செல்ல மாட்டான்.

கூற்று - உயிரைக்கொண்டு போவதாகக் கற்பனையாக உருவகப்படுத்திக் கூறப்படும் சாவு என்ற கூற்றுவன்.

(க-ரை): கொல்லாமை என்னும் அறத்தை உடையவனின் உயிருக்கு யாராலும் எவ்விதத் தீங்கும் ஏற்படாது. (326)

**7. தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்உயிர் நீக்கும் வினை.**

தன்உயிர் நீப்பினும், தான்பிறிது, இன்உயிர், நீக்கும் வினை, செய்யற்க.

(பொ-ரை): ஒருவனின் உயிர் போகக்கூடியதாக இருந்தாலும், அந்த நிலை பிற உயிர்களுக்கு ஏற்படாமல் இருப்பதற்கு வேண்டி, அவன் வேறோர் உயிரைப் போக்கும் ஒரு செயலை ஒருபோதும் செய்யக்கூடாது.

நீப்பினும் - நீங்கிப் போவதேயானாலும்; **வினை** - செயல்.

(க-ரை): தன்னுடைய உயிரைக் காக்க வேண்டிகூட ஒருவன் பிற உயிர்களைக் கொல்லும் செயலில் ஈடுபடக்கூடாது. (327)

**8. நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.**

நன்றுஆகும் ஆக்கம், பெரிது எனினும், சான்றோர்க்குக், கொன்று, ஆகும் ஆக்கம், கடை.

(பொ-ரை): வேள்விக் கொலையின்மூலம் நன்மையாக ஆகின்ற ஆக்கமானது, பெரிதாகவே அமையும் என்று அயலார் கூறினாலும், அப்படிப்பட்ட எந்தவிதக் கொலையால் வரும் ஆக்கமும், சிறந்த பண்பாளர்களால் மிக இழிவானதாகவே கருதப்படும்.

ஆக்கம் - செல்வம்; **கடை** - இழிவானது.

(க-ரை): வேள்விக் கொலையினால் பெருஞ்செல்வம் வரும் என்றாலும், அத்தகைய கொலையால் வரும் எப்படிப்பட்ட செல்வத்தையும் சான்றோர்கள் மிக இழிவான ஒன்றாகவே கருதுவார்கள். (328)

9. கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர் புன்மை தெரிவார் அகத்து.

கொலைவினையர், ஆகிய மாக்கள், புன்மை தெரிவார்; அகத்து, புலைவினையர்.

(பொ-ரை): கொலை செய்வதைத் தொழிலாகக் கொண்ட மக்கள்தம் இழிவான செயலை, ஆராய்ந்து அறிந்த பெரியோர்களின் உள்ளத்தில், அந்த மக்கள் புலைத்தொழிலைச் செய்பவராகத்தான் கருதப்படுவார்கள்.

கொலைவினையர் - கொலையைத் தொழிலாகக் கொண்டவர்கள்; **புலைவினையர்** - புலைத் தொழிலைச் செய்பவர்கள்; **புன்மை** - இழிவு; **அகத்து** - உள்ளத்தில்.

(க-ரை): கொலையைத் தொழிலாகக் கொண்டவர்களைப் புலைத்தொழில் செய்யும் இழிந்த மக்கள் என்றுதான் அறிவுடைய பெரியோர்கள் கருதுவார்கள். (329)

10. உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின் செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

செயிர் உடம்பின், செல்லாத், தீ வாழ்க்கையவர், உயிர் உடம்பின், நீக்கியார், என்ப.

(பொ-ரை): நோய் பொருந்திய உடம்புடன் வறுமை மிகுந்த இழிந்த வாழ்க்கையை உடையவர்களைப், பல உயிர்களைப் பல உடம்புகளிலிருந்து நீக்கினவர்கள் என்று குற்றஞ் சாட்டுவர் பெரியோர்.

செயிர் - குற்றம்; அதாவது இந்த இடத்தில் நோய்; **என்ப** - என்று பெரியோர் குற்றஞ்சாட்டுவர்.

(க-ரை): உயிரைக் கொன்று உண்பவர்கள், கொடிய நோய்க்கு ஆளாகி, இழிந்த வாழ்க்கை வாழ்வார்கள் என்று அறிவுடையோர் குற்றஞ்சாட்டுவார்கள். (330)

34. நிலையாமை

நிலையாமை என்பது, செல்வம், இளமை, யாக்கை, உயிர் வாழ்க்கை, இன்பம், துன்பம், அழகு போன்றவை நிலையுடையன அல்ல என்பதை உணர்த்துதல் எனப்படும்.

1. நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறிவு ஆண்மை கடை.

நில்லாதவற்றை, நிலையின, என்று உணரும், புல் அறிவு, ஆண்மை, கடை.

(பொ-ரை): நிலையற்றவைகளையெல்லாம், நிலைத்து நிற்கக்கூடியன என்று உணருகின்ற புன்மையான அறிவினை உடையவராக ஒருவர் இருத்தல், அவரது இழிவான நிலையைக் குறிப்பிடுவதாக இருக்கும்.

நிலையின - நிலைத்து நிற்கக்கூடியன; **என்று** - என்பதாக **புல்லறிவாண்மை** - புன்மையான அறிவினை உடையவராக இருத்தல்; **கடை** - இழிவானது.

(க-ரை): நிலையற்றவைகளையெல்லாம், நிலைத்து நிற்கக்கூடியன என்று நினைக்கும் புன்மையான அறிவை ஒழித்துவிட்டு, ஒருவன், உண்மையை உணரும் தெளிவான அறிவைப் பெற வேண்டும். (331)

2. கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

பெருஞ்செல்வம், கூத்தாட்டு அவைக்குழாத்தற்றே, போக்கும், அது விளிந்தற்று.

(பொ-ரை): ஒருவருக்குப் பெருஞ்செல்வம் வந்து சேர்தல், கூத்தாடும் அவையில் வந்து கூடும் மக்கட் கூட்டம் போன்றது; அச்செல்வத்தினது போக்கும், கூத்து முடிந்தவுடன் அந்த மக்கட் கூட்டம் கலைந்து போய்விடுவது போன்றதாகும்.

குழாத்தற்று - மக்கட் கூட்டம் வந்து கூடுவது போன்றதாகும்; **போக்கு** - செல்வம் ஒருவனை விட்டுப் போவது, **விளிந்தற்று** - கூத்து முடிந்தவுடன் கலைந்துபோவது போன்றது.

(க-ரை): கூத்தாடும் அவைக்களத்தில், மக்கட் கூட்டம் முதலில் வந்து சேருவதும், இறுதியில் கலைந்து போவதும் போன்றது, செல்வம் ஒருவனிடம் வருங்காலத்தில் வந்து, போகும் காலத்தில் அடியோடு போய்விடும் என்பதும் ஆகும். (332)

3. அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

செல்வம், அற்கா, இயல்பிற்று; அது பெற்றால், அற்குப, ஆங்கே, செயல்.

(பொ-ரை): செல்வமானது நிலைத்து நிற்காத இயல்பை உடையதாகும்; அத்தகைய செல்வத்தை ஒருவன் பெற்றால், செய்யக்கூடிய நிலையான அறச்செயல்களை அவன் பெற்ற அப்பொழுதே செய்ய வேண்டும்.

அற்கா - நிலைத்து நிற்காத; **இயல்பிற்று** - இயல்பை உடையது; **அற்குப** - செய்யக்கூடிய நிலையான அறச்செயல்களை; **ஆங்கே செயல்** - பெற்ற அப்பொழுதே செய்ய வேண்டும்.

(க-ரை): செல்வம் நிலையில்லாத ஒன்று ஆகையால், முயற்சியால் ஒருவன் அந்தச் செல்வத்தைப் பெற்றவுடன், செய்யக் கூடிய அறச் செயல்களையெல்லாம் செய்துவிட வேண்டும். (333)

4. நாள்என ஒன்றுபோல் காட்டிஉயிர் ஈரும்
வாள்அது உணர்வார்ப் பெறின்.

உணர்வார்ப் பெறின், நாள் என, ஒன்றுபோல் காட்டி, உயிர்ஈரும், வாள் அது.

(பொ-ரை): வாழ்க்கையின் உண்மைத் தன்மையை அறிந்து உணரக்கூடியவர்கள், நாள் என்கின்ற சிறு கால அளவு போலத் தன்னைக் காட்டிக்கொண்டு, உயிர் உடம்பில் தங்கும் காலமாகிய ஆயுளைச் சிறிதுசிறிதாக அறுத்துக் குறைவுபடுத்துகின்ற வாளாக அந்த நாள் அமையக்கூடியதாகும் என்பதைத் தெளிவாக அறிவார்கள்.

ஒன்றுபோல் - காலத்தின் சிறு அளவு போல; **காட்டி** - தன்னைக் காட்டிக்கொண்டு; **ஈரும்** - அறுத்துச் செல்லும்; **உணர்வார்** - உண்மையினை அறிந்து கொள்வார்.

(க-ரை): வாழ்க்கையின் உண்மை நிலையை ஆராய்ந்து அறியக்கூடிய அறிவுடையோர், ஒவ்வொரு நாளையும், உடம்பின்

வாழ்வை அறுத்துக் குறைத்துக்கொண்டு வரும் வாள் என்று கருதுவார்கள்.

உயிரோடு கூடி வாழும் வாழ்வை ஒவ்வொரு நாளும் குறைப்பதால், அந்த நாள் உடம்பை அறுக்கும் வாள் எனப்பட்டது. உடம்பின் இளமை குறையும் என்ற நிலையாமை இதனால் உணர்த்தப்பட்டது. (334)

5. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

நாச்செற்று, விக்குள், மேல்வாராமுன், நல்வினை, மேற்சென்று, செய்யப்படும்.

(பொ-ரை): ஒருவர் பேச முடியாதபடி, நாவைத் தடுத்து, விக்குளானது எழுவதற்கு முன்பாகவே, அதாவது ஒருவரைச் சாவு நெருங்குவதற்கு முன்பாகவே, நல்ல அறச்செயல்கள் அனைத்தும் அவரால் விரைவாகச் செய்து முடிக்கப்பட வேண்டும்.

நாச்செற்று - பேச முடியாதபடி நாவைத் தடுத்து; **விக்குள்** - விக்குளானது; **மேல் வாராமுன்** - எழுவதற்கு முன்பாகவே; **நல்வினை** - நல்ல அறச்செயல்.

(க-ரை): ஒருவரைச் சாவானது நெருங்குவதற்கு முன்பாகவே, செய்ய வேண்டிய நல்ல அறச் செயல்களையெல்லாம், அவர் செய்து முடித்துவிட வேண்டும். (335)

6. நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் உலகு.

நெருநல் உளன் ஒருவன், இன்று இல்லை, என்னும், பெருமை, உடைத்து, இவ்உலகு.

(பொ-ரை): நேற்று ஒருவன் இருந்தான்; அவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை என்னும் பெருமையை உடையது இவ்வுலகம்.

நெருநல் - நேற்று; **பெருமை** - சிறப்பு.

(க-ரை): உலக வாழ்வு என்பது நிலையானது அன்று. அது என்றும் நிலையற்றதாகும். (336)

7. ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

ஒருபொழுதும், வாழ்வது அறியார், கருதுப, கோடியும் அல்ல, பல.

(பொ-ரை): ஒருசிறுபொழுதுகூட வாழ்க்கையின் தன்மையை ஆராய்ந்து அறியமாட்டாதவர்கள், வீணாக எண்ணுவனவோ ஒரு கோடி அளவினவாக மட்டுமன்று, அதற்கு மேலும் பல கோடி எண்ணங்களைக் கொண்டனவாக இருக்கும்.

வாழ்வது - வாழ்க்கையின் தன்மைகளை; **அறியார்** - அறியமாட்டாதவர்கள்.

(க-ரை): உயிரானது எந்த நேரத்தில் உடம்பை விட்டுப் போகும் என்பதை அறியமாட்டாதவர்கள், எண்ணிறந்த எண்ணங்களை எண்ணி எண்ணி, அவற்றை நிறைவேற்ற முடியாமல் ஏங்குவார்கள். (337)

8. குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.

உடம்போடு உயிரிடை, நட்பு, குடம்பை, தனித்து ஒழியப், புள் பறந்தற்றே.

(பொ-ரை): உடம்போடு உயிருக்கு இருக்கும் உறவானது, தான் வாழ்ந்த கூடு தனியே இருக்க, அதனைவிட்டு விட்டு, வேறு இடத்திற்குப் பறவையானது பறந்து போய்விடுவது போன்றதாகும்.

குடம்பை - கூடு அல்லது முட்டை; **புள்** - பறவை; **நட்பு** - உறவு.

(க-ரை): கூட்டிலிருந்து பறவை திடீரென்று பறந்து போய்விடுவதைப் போன்று, உடம்பிலிருக்கும் உயிரும் சொல்லாமல் என்றேனும் ஒருபோதில் போய்விடும். (338)

9. உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

சாக்காடு, உறங்குவது போலும்; பிறப்பு, உறங்கி விழிப்பது போலும்.

(பொ-ரை): ஒருவனுக்கு இறப்பு என்பது, அவன் மீளா உறக்கம் கொள்வது போன்றதாகும்; பிறப்பு என்பது அவன் தூங்கி எழும்போது ஏற்படும் விழிப்புப் போன்றதாகும்.

சாக்காடு - இறப்பு; 'உறங்கி விழிப்பதற்கும்', 'இயல்பாகவே விழிப்பதற்கும்' வேறுபாடு இருப்பதால், 'விழிப்பது போலும் பிறப்பு' என்னாது, 'உறங்கி விழிப்பது போலும் பிறப்பு' என்று கூறப்பட்டது.

(க-ரை): உலகில் பிறத்தலும், இறத்தலும் இயற்கை என்பதையும், வாழ்க்கை நிலையானது அன்று, அது நிலையாமையை உடையது என்பதையும் உணர வேண்டும். (339)

**10. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு.**

உடம்பினுள், துச்சில் இருந்த, உயிர்க்கு, புக்கில், அமைந்தின்று கொல்லோ.

(பொ-ரை): உடம்பின் ஒரு பக்கம் ஒதுக்கமாகவே குடியிருந்து வரும் உயிருக்கு, எப்போதும் நிலையாகக் குடிபுகுந்து வாழும் இல்லம் ஒன்று, இதுவரையில் அமைந்திடவில்லை போலும்.

துச்சில் - ஒரு பக்கம் ஒதுக்கமாகவே; **புக்கில்** - குடிபுகுந்து வாழும் இல்லம்; **அமைந்தின்று கொல்** - அமைந்திடவில்லை போலும்.

(க-ரை): உடம்பில், உயிரானது ஒரு பக்கமாக ஒதுங்கித் தற்காலிகமாகத்தான் குடியிருந்து வருகிறது; அதற்கு நிலையான குடியிருப்பு ஏற்பட வழியில்லை. (340)

35. துறவு

துறவு என்பது, ஒருவன் தன்னலங் கருதாது, பொதுநலம் பேணும் நோக்கோடு, அவாக் கொள்ளுதல் முதலான அகப் பற்றையும், செல்வம் சேர்த்தல் முதலான புறப்பற்றையும் அறவே துறந்து, அறநெறியில் நின்று வழுவாது வாழ்தல் எனப்படும்.

1. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

யாதனின், யாதனின், நீங்கியான், அதனின், அதனின், நோதல், இலன்.

(பொ-ரை): ஒருவன், எல்லாவற்றையும், ஒருங்கே துறக்கா விட்டாலும், எந்த எந்தப் பொருள்களிடமிருந்து பற்று நீங்கியவனாக இருக்கிறானோ, அவன் அந்த அந்தப் பொருள்களினால், துன்பம் அடைதல் என்பது இல்லை.

யாதனின் - எந்தஒரு பொருளின்; **நீங்கியான்** - பற்று நீங்கியவனாக; **நோதல்** - துன்பம் அடைதல்; **அதனின் அதனின்** - அந்த அந்தப் பொருள்களிடமிருந்து.

(க-ரை): ஒருவன் எந்த எந்தப் பொருள்களிடத்துப் பற்றுவிட்டவனாகிறானோ, அவனுக்கு அந்த அந்தப் பொருள்களின் மூலம் துன்பம் ஏற்படுவதில்லை. (341)

2. வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல.

வேண்டின், உண்டாகத், துறக்க; துறந்தபின், ஈண்டு, இயற்பால, பல.

(பொ-ரை): ஒருவனுக்குத் துன்பம் இல்லாத நிலைமை ஏற்பட வேண்டுமானால், எல்லாவிதப் பொருள்களும் இருக்கும் காலத்திலேயே அவன் துறந்துவிட வேண்டும்; துறந்தபின் இவ்வுலகில் அவன் பெறக்கூடிய உயர்ந்த இன்பங்கள் பலவாகும்.

ஈண்டு - இவ்வுலகில்; **இயற்பால** - பெறக்கூடிய உயர்ந்த இன்பங்கள்; **பல** - பலவாகும்; **வேண்டின்** - துன்பம் இல்லாத

நிலைமை ஏற்பட வேண்டுமானால்; **உண்டாக** - எல்லாவிதப் பொருள்களும் இருக்கும் காலத்திலேயே.

(க-ரை): எல்லாப் பொருள்களையும் முற்றுந் துறப்பதால் ஏற்படக்கூடிய உயர்ந்த இன்பங்கள் பலவாகும். (342)

3. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு.

ஐந்தன் புலத்தை, அடல்வேண்டும்; வேண்டிய எல்லாம், ஒருங்கு, விடல் வேண்டும்.

(பொ-ரை): ஐந்து பொறிகளுக்கு உரியவையான ஐந்து புலன்களையும், ஒருவன் அடக்கிவெல்ல வேண்டும்; அந்த நிலையில், ஐம்புலன் நுகர்ச்சிக்கு உரிய பொருள்களை எல்லாம், அவன் ஒருங்கே விட்டுவிட வேண்டும்.

ஐந்தன் - ஐந்து பொறிகளுக்கு உரிய; **புலத்தை** - ஐந்து புலன்களையும்; **அடல் வேண்டும்** - அடக்கி வெல்ல வேண்டும்; **ஒருங்கு** - ஒரு சேர; **விடல் வேண்டும்** - விட்டுவிடல் வேண்டும்.

(க-ரை): ஐந்து புலன்களையும் அடக்கி வென்று, பொருள்களின் மீதுள்ள பற்றையும் துறப்பதே, உண்மையான துறவாகும். (343)

4. இயல்பாகும் நோன்பிற்கு ஒன்றுஇன்மை உடைமை மயல்ஆகும் மற்றும் பெயர்த்து.

ஒன்று இன்மை, நோன்பிற்கு, இயல்பாகும்; உடைமை, மயல் ஆகும், மற்றும் பெயர்த்து.

(பொ-ரை): யாதொரு பொருட்பற்றும் இல்லாமலிருத்தல், தவம் செய்வதன் இயல்பாகும்; ஏதேனும் ஒரு பற்றுடையவராக இருந்துவிட்டால், மீண்டும் பொருள்மீது ஆவல் கொண்டு மயங்குவதற்கு வழி ஏற்பட்டுவிடும்.

நோன்பு - தவம்; **ஒன்று** - ஒரு பொருட்கண் பற்று; **மற்றும்** - மீண்டும்; **மயல்** - மயக்கம்.

(க-ரை): யாதொரு பொருளின்மீதும் எந்தவிதப் பற்றும் இல்லாமையே துறவின் முக்கிய இலக்கணமாகும். (344)

5. மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை.

பிறப்புஅறுக்கல், உற்றார்க்கு, உடம்பும், மிகை, மற்றும், தொடர்ப்பாடு எவன்கொல்?

(பொ-ரை): தீமையின் தோற்றங்களை நீக்க முயலுகின்றவர்களுக்கு, உடம்பே மிகையானதொரு பொருளாக இருக்க, அதற்கு மேல், வேறு பொருள்களோடு தொடர்புகொள்ள வேண்டிய இன்றியமையாமை, அவர்களுக்கு என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை!

பிறப்பறுக்கல் - தீமையின் தோற்றங்களை நீக்கல்; **உற்றார்** - உரியவர்; **தொடர்ப்பாடு** - வேறு பொருள்களோடு தொடர்பு கொள்ளுதல்.

(க-ரை): தன் உடம்பின் மீதுகூடப் பற்று வைக்காதவன்தான், உண்மையான துறவி ஆவான். (345)

6. யான்எனது என்னும் செருக்கு அறுப்பான்வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்.

யான், எனது என்னும், செருக்கு, அறுப்பான், வானோர்க்கு, உயர்ந்த உலகம், புகும்.

(பொ-ரை): யான் என்னும் அகப்பற்றையும், எனது என்னும் புறப்பற்றையும் நீக்குபவன், வேறு பல வகைகளில் இயல்பான வான்புகழ் கொண்டவர்களைக் காட்டிலும், மேலானதொரு புகழ் உலகத்தை அடைவான்.

யான் என்னும் செருக்கு - யான் என்னும் அகப்பற்று, **எனது என்னும் செருக்கு** - எனது என்னும் புறப்பற்று; **அறுப்பான்** - நீக்குபவன்; **வானோர்க்கு** - வான்புகழ் கொண்டோர்க்கு; **உயர்ந்த உலகம்** - அவர்களைக் காட்டிலும் மேலானதொரு புகழ் உலகம்; **புகும்** - அடைவான்.

(க-ரை): அகப்பற்றையும், புறப்பற்றையும் அறவே துறந்தார், இயல்பான வேறுவகைகளில் வான்புகழ் கொண்டோரைக் காட்டிலும், மேலானதொரு புகழ் உலகத்தை அடைவார்கள். (346)

7. பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப் பற்றி விடாஅ தவர்க்கு.

பற்றினைப், பற்றி, விடாஅதவர்க்கு, இடும்பைகள், பற்றி, விடாஅ.

(பொ-ரை): அகப்பற்று, புறப்பற்று ஆகிய இருவகைப் பற்றுக்களையும் இறுகப்பற்றிக்கொண்டு அவற்றை விடாதவரை, துன்பங்களும் இறுகப் பற்றிக்கொண்டு, அவர்களை விடமாட்டா.

பற்றினை - அகப்பற்று; புறப்பற்று ஆகிய இருவகைப் பற்றுக்களை; **பற்றி** - இறுகப்பற்றிக்கொண்டு; **இடும்பைகள்** - துன்பங்கள்.

(க-ரை): 'யான்' - 'எனது' என்னும் இருவகை அகப்பற்று, புறப்பற்றுக்களைக் கொண்டவர்கள், அவரவர் வாழ்க்கைக்கு ஏற்றவாறு அப்பற்றுக்களால் துன்புறுவார்கள். (347)

8. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

துறந்தார், தீரத், தலைப்பட்டார்; மற்றையவர், மயங்கி, வலைப்பட்டார்.

(பொ-ரை): முற்றுந் துறந்தவர்களே, உயர்ந்த நிலையை எய்தியவர் ஆவார்கள்; அப்படித் துறக்காதவர்கள், துன்ப வலையில் அகப்பட்டவராவார்கள்.

தீரத்துறந்தார் - முற்றுந் துறந்தவர்கள்; **தலைப்பட்டார்** - உயர்ந்த நிலையை எய்தியவர்கள் ஆவார்கள்; **மயங்கி வலைப் பட்டார்** - மயங்கித் துன்பவலையில் அகப்பட்டார்.

(க-ரை): முற்றுந் துறந்தவர்கள் இன்பத்தைப் பெறுவார்கள்; அப்படித் துறக்க முடியாதவர்கள் துன்பத்தை அடைவார்கள். (348)

9. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்.

பற்றுஅற்ற கண்ணே, பிறப்பு அறுக்கும்; மற்று, நிலையாமை, காணப்படும்.

(பொ-ரை): அகப்பற்று, புறப்பற்று ஆகிய இருவகைப் பற்றுக்களையும் விட்ட உடனேயே, அந்தப் பற்றற்ற தன்மை, துன்பங்களின் தோற்றத்தை நீக்கித் தொடர்ந்து அவை தோன்றாமல் செய்துவிடும்; அப்படி நிகழாதபோது, தீமையின் தோற்றம், அழிவு ஆகியவற்றைப் பொறுத்து, நிலையாமை காணப்படும்.

பற்று - அகப்பற்று, புறப்பற்று ஆகிய இருவகைப் பற்று; **அற்றகண்** - நீங்கியபொழுது; **பிறப்பறுக்கும்** - தீமைகளின்

தோற்றங்களை நீக்கும்; **மற்று** - அப்படி நிகழாதபோது; **நிலையாமை** - தீமையின் தோற்றம், அழிவு என்னும் நிலையாமை.

(க-ரை): ஒருவன் பற்றுக்களை விட்ட உடனேயே, அந்த நிலை, துன்பங்களின் தோற்றத்தை நீக்கும்; அதோடு அத்துன்பங்கள் தொடர்ந்து தோற்றம் பெறாமலும் செய்துவிடும். (349)

10. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

பற்றற்றான், பற்றினைப், பற்றுக; பற்று விடற்கு, அப்பற்றைப், பற்றுக.

(பொ-ரை): ஒரு பொருளிலும் பற்றில்லாத அறிவாற்றலிற் சிறந்தோனது அன்பை, ஒருவன் தன் மனத்தில் பற்றிக்கொள்ள வேண்டும்; இருவகைப் பற்றுக்களையும் ஒழிப்பதற்கு, அவன் அந்த அன்பையே உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும்.

பற்றுஅற்றான் - ஒரு பொருளிலும் பற்றில்லாத அறிவுடையோன்; **பற்றினை** - அன்பை; **பற்றுக** - மனத்தில் பற்றிக் கொள்க.

(க-ரை): முற்றுந் துறந்த அறிவாற்றலிற் சிறந்தோரது அன்பே, பற்றை நீக்குவதற்கு ஒருவருக்கு உறுதுணையாக அமைகிறது. (350)

36. மெய்யுணர்தல்

மெய்யுணர்தல் என்பது, உலகில் உள்ளவற்றையெல்லாம் உள்ளபடியே கண்டறிந்து, ஒருவன், தனது பழுத்த பகுத்தறிவினைக் கொண்டு ஆராய்ந்து பார்த்துத் தெளிவடைந்து, உண்மையை உணர்தல் எனப்படும்.

**1. பொருள்அல்ல வற்றைப் பொருள்என்று உணரும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு.**

பொருள் அல்லவற்றைப், பொருள் என்று, உணரும், மருளான், மாணாப் பிறப்பு, ஆம்.

(பொ-ரை): மெய்ப்பொருள் அல்லாதவற்றை, மெய்ப் பொருள்தான் என்று தவறாக எண்ணும் மயக்க அறிவினை யுடையவன், சிறப்பில்லாத உயிர் வாழ்வு வாழ்பவன் என்று பிறரால் கருதப்படுவான்.

பொருள் அல்லவற்றை - மெய்ப்பொருள் அல்லாதவற்றை; **மருளான்** - மயக்க அறிவுடையான்; **மாணாப் பிறப்பு** - சிறப்பில்லாத வாழ்வினை உடையவன்.

(க-ரை): பொய்யான ஒரு பொருளைத் தவறாக மெய்யான ஒரு பொருள்தான் என்று எண்ணுகிறவன், இழிந்த மனிதனாகவே கருதப்படுவான். (351)

**2. இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.**

மருள்நீங்கி, மாசறு காட்சியவர்க்கு, இருள்நீங்கி, இன்பம் பயக்கும்.

(பொ-ரை): மயக்கத்திலிருந்து விலகிக், குற்றமற்ற மெய்யுணர்வு உடையவர்களுக்கு, அம்மெய்யுணர்ச்சி, துன்பத்தை நீக்கி, இன்பத்தை அளிக்கும்.

மருள் - மயக்கம்; **நீங்கி** - விலகி; **மாசறு** - குற்றமற்ற; **காட்சியவர்க்கு** - மெய்யுணர்வு உடையவர்க்கு; **இருள்நீங்கி** - துன்பத்தை நீக்கி.

(க-ரை): மயக்கமற்ற மெய்யறிவினர் அறியாமை என்னும் துன்பம் நீங்கப்பெற்று, இன்பம் பெறுவது இயல்பு. (352)

3. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து.

ஐயத்தின் நீங்கி, தெளிந்தார்க்கு, வையத்தின், வானம், நணியது உடைத்து.

(பொ-ரை): ஐயப்பாட்டிலிருந்து நீங்கி, மெய்யுணர்வு பெற்றவர்களுக்குக், குறைந்த அளவே பார்வையில்படும் இந்த நடைமுறை உலகத்தைவிட, பரந்த அளவு பார்வையில்படும் இயற்கைப் பெருவெளியே கூட மிக நெருக்கத்தில் இருப்பதாகவே கருதப்படும்.

தெளிந்தார் - மெய்யுணர்வு பெற்றவர்; **வையம்** - உலகம்; **வானம்** - பரந்து காணப்படும் இயற்கைப் பெருவெளி; **நணியது** - நெருக்கத்தில்.

(க-ரை): மெய்யுணர்வு பெற்றவர்களுக்குச் சுருங்கிய அளவில் கண்ணில்படும் நடைமுறை உலகத்தைவிடப், பரந்த அளவில்படும் இயற்கைப் பெருவெளியே மிக நெருக்கமாக இருப்பதாகக் கொள்ளப்படும். (353)

4. ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.

மெய்யுணர்வு, இல்லாதவர்க்கு, ஐயுணர்வு, எய்தியக் கண்ணும், பயம் இன்றே.

(பொ-ரை): மெய்யுணர்வு இல்லாதவர்கள், ஐந்து புலன்களின் உணர்வுகளை அடக்கி வென்றிருந்த போதிலும், அதனால், அவர்களுக்கு நிலைத்த பலன் ஏதும் ஏற்படுவது இல்லை.

ஐயுணர்வு - ஐந்து புலன்களின் உணர்வு; **பயம்** - பலன்; **இன்று** - இல்லை.

(க-ரை): ஒருவருக்கு மெய்யுணர்வு இல்லை என்றால், அவர் ஐந்து புலன்களையும் அடக்கிவென்று, நின்றாலும் அதனால், அவருக்கு ஒரு பலனும் ஏற்படாது என்பது தெளிவு. (354)

5. எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

எப்பொருள், எத்தன்மைத்து, ஆயினும், அப்பொருள், மெய்ப்பொருள் காண்பது அறிவு.

(பொ-ரை): எந்தப் பொருள், எப்படிப்பட்ட வகையில் தோன்றினாலும், அதனுடைய தோற்றத்தை மட்டும் கொண்டு மயங்காமல், அந்தப் பொருளின் மெய்யான பொருளைக் கண்டறிவதுதான், உண்மையான அறிவாகும்.

எப்பொருள் - எந்தப் பொருள்; **மெய்ப்பொருள்** - மெய்யான பொருளை; **காண்பது அறிவு** - கண்டறிவதுதான் உண்மையான அறிவாகும்.

(க-ரை): பொருளின் வெளித்தோற்றத்தை மட்டும் கொண்டல்லாமல், அதனுடைய மெய்யான பொருளை ஆராய்ந்து கண்டறிவதுதான், உண்மையான அறிவாகும். (355)

6. கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றுஈண்டு வாரா நெறி.

ஈண்டு, கற்று, மெய்ப்பொருள், கண்டார், மற்று, ஈண்டு வாராநெறி, தலைப்படுவர்.

(பொ-ரை): இவ்வுலகத்தில் கற்க வேண்டியவைகளை யெல்லாம் கற்று, உண்மைப் பொருளை நன்கு அறிந்தவர்கள், மீண்டும் இல்லற நெறிக்கு வாராத அளவுக்குத் தூய துறவற நெறியை அடைவார்கள்.

ஈண்டு - இவ்வுலகத்தில்; **கற்று** - கற்க வேண்டியவைகளை யெல்லாம் கற்று; **மற்று ஈண்டுவாரா** - மீண்டும் இல்லற நெறிக்கு வாராத; **நெறி** - தூய துறவற நெறியை; **தலைப்படுவர்** - அடைவர்.

(க-ரை): இல்வாழ்க்கையில் இருக்கும்போது, அறநூல்களை யெல்லாம் கற்றுத்தேர்ந்து, உண்மைப் பொருளைக் கண்டறிந்து, தூய துறவற நெறியைப் பின்பற்றியவர்கள், மீண்டும் பொருள்பற்றோடு இல்லற வாழ்க்கைக்குத் திரும்பி வரமாட்டார்கள். (356)

7. ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

உள்ளம், உள்ளது, ஓர்த்து, ஒருதலையா உணரின், பேர்த்து, பிறப்பு, உள்ள வேண்டா.

(பொ-ரை): ஒருவன் உள்ளமானது, உண்மைப் பொருளை ஆராய்ந்து, உறுதியாக அதனை உணருமானால், பின்னர்

வாழ்க்கையில் மாறிவரும் துன்பங்களைப் பற்றி அவன் எண்ண வேண்டியதில்லை.

ஓர்த்து - ஆராய்ந்து; **பேர்த்து** - மாறி; **பிறப்பு** - வாழ்க்கையின்; **வேண்டா** - துன்பங்களைப் பற்றி எண்ண வேண்டியதில்லை.

(க-ரை): ஒருவன் வாழ்க்கையின் உண்மைப் பொருளை ஆராய்ந்து அதில் உறுதியாக இருப்பானேயானால், வாழ்க்கையில் மாறிவரும் துன்பங்களைப் பற்றி அவன் எண்ண வேண்டியதில்லை. (357)

**8. பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎன்னும்
செம்பொருள் காண்பது அறிவு.**

பிறப்பு என்னும், பேதைமை நீங்கச், சிறப்பு என்னும், செம்பொருள், காண்பது, அறிவு.

(பொ-ரை): ஒருவனின் பிறப்புடன் சேர்ந்து தோன்றும் அறியாமை நீங்க வேண்டுமானால், அவனுக்குச் சிறப்பு அளிக்கவல்லது என்று கூறப்படுகின்ற உண்மை என்னும் பொருளைக் காண முயலுவதே, அறிவுடைமையாகும்.

பிறப்பு என்னும் பேதைமை - பிறப்புடன் சேர்ந்து பிறக்கக் கூடியது என்று கூறப்படுகின்ற அறியாமை; **சிறப்பு என்னும் செம்பொருள்** - மனிதனுக்குச் சிறப்பு அளிக்கக் கூடியது என்று சொல்லப்படுகின்ற உண்மைப் பொருள்.

(க-ரை): ஒருவனிடம் இயற்கையாகவே காணப்படுகின்ற அறியாமை நீங்க வேண்டுமானால், அவன் தனக்குச் சிறப்புத்தரும் மெய்யுணர்வு பெறவேண்டும். (358)

**9. சார்புஉணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றுஅழித்துச்
சார்தரா சார்தரு நோய்.**

சார்பு உணர்ந்து சார்புகெட, ஒழுகின், சார்தரு நோய், மற்று அழித்துச், சார்தரா.

(பொ-ரை): ஒருவன் தன்னைச் சாரக்கூடிய பொருள்களின் தன்மைகளை மெய்யுணர்வின் மூலம் அறிந்து, அவற்றின்மேல் பற்றுக்கொள்ளாமல் நடப்பானாயின், அவனைச் சாரக்கூடிய துன்பங்கள், அவனது உணர்வினை அழித்துச் சாரமாட்டா.

சார்பு - சாரக்கூடிய பொருள்கள்; **உணர்ந்து** - மெய்யுணர்வின் மூலம் அறிந்து; **ஒழுகின்** - நடந்தால்; **சார்தரு நோய்** - சாரக்கூடிய துன்பங்கள்; **மற்றுஅழித்து** - உணர்வினை அழித்து.

(க-ரை): ஒருவர் தாம் பற்றுக்கொள்ளும் பொருள்களை உணர்ந்து, அவற்றின் மீதுள்ள பற்றுக்களை நீக்கினால், அவருக்கு வாழ்க்கையில் துன்பங்கள் இல்லை. (359)

10. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

காமம், வெகுளி, மயக்கம், இவைமூன்றன், நாமம் கெட, நோய் கெடும்.

(பொ-ரை): காம விருப்பு, கடுஞ் சினம், மயக்க அறிவு ஆகிய இக்குற்றங்கள் மூன்றினுடைய பெயர்களும் கெட்டொழியும்படியாக நடந்து கொண்டால், துன்பங்கள் பலவும் வராமல் கெட்டழிந்துவிடும்.

காமம் - காம விருப்பு; **வெகுளி** - கடுஞ்சினம்; **மயக்கம்** - மயக்க அறிவு; **நாமம்** - பெயர்; **நோய்** - துன்பம்.

(க-ரை): காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றையும் ஒருவர் அடியோடு மறந்தால் அவரை விட்டுத் துன்பங்கள் அறவே நீங்கிவிடும். (360)

37. அவா அறுத்தல்

அவா அறுத்தல் என்பது, ஒருவர், தமக்கும் பிறர்க்கும் பலவகைகளிலும் தீங்கு பயக்கும் ஆசைகளைத், தம்மைவிட்டு அறவே நீங்கும்படியாக ஒழிக்க முற்படுதல் எனப்படும்.

1. அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்புஈனும் வித்து.

எல்லா உயிர்க்கும், எஞ்ஞான்றும், தவாஅப், பிறப்பு ஈனும், வித்து, அவா என்ப.

(பொ-ரை): எல்லா உயிர்களுக்கும், எப்பொழுதும் கெடாத துன்பத்தை விளைவிக்கும் விதையே, அவாதான் என்று, ஆன்றோர்கள் சொல்லுவார்கள்.

எஞ்ஞான்றும் - எப்பொழுதும்; **தவாஅ** - கெடாத; வழுவாத; **பிறப்பு** - துன்பம்; பிறந்தை; **வித்து** - விதை; **என்ப** - என்று ஆன்றோர் சொல்லுவர்.

(க-ரை): ஒருவரின் துன்பங்கள் அனைத்திற்கும், அவாதான் அடிப்படைக் காரணமாகும். (361)

2. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

வேண்டுங்கால், பிறவாமை, வேண்டும்; மற்றுஅது, வேண்டாமை, வேண்ட வரும்.

(பொ-ரை): ஒருவன் ஒன்றை வேண்டும்போது, துன்பமில்லாத நிலைமையையே வேண்டுவான்; அத்துன்பமில்லாத நிலைமையும், அவன் அவாவின்மையை விரும்புவதன் மூலந்தான் வரும்.

வேண்டுங்கால் - ஒன்றைவேண்டும்போது; **பிறவாமை** - துன்பமில்லாத நிலைமையை; **வேண்டும்** - வேண்டுவான்; **மற்றது** - அத்துன்பமில்லாத நிலைமையும்; **வேண்டாமை** - அவாவின்மை.

(க-ரை): ஒருவன் துன்பம் இல்லாத நிலைமையை விரும்புவானாகில், முதலில் அவன் அவாவின்மையை விரும்ப வேண்டும். (362)

3. வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்.

வேண்டாமை, அன்ன விழுச்செல்வம், ஈண்டு இல்லை; யாண்டும், அஃதுஒப்பது, இல்.

(பொ-ரை): அவாவின்மையைப் போன்றதொரு சிறந்த செல்வம், அதனைக் கொண்டிருப்பவன் தன்னிடத்தில் இல்லை; வேறு எங்கும்கூட அதற்கு ஈடான ஒன்று இல்லை.

வேண்டாமை - அவாவின்மை; **விழுச்செல்வம்** - சிறந்த செல்வம்; **ஈண்டு இல்லை** - ஒருவன் தன்னிடத்தில் இல்லை; **யாண்டும்** - வேறுஎங்கும்கூட; **அஃதுஒப்பது** - அதற்கு ஈடானது.

(க-ரை): ஒருவருக்கு அவாவின்மை போன்றதொரு சிறந்த செல்வம், வேறு எதுவும் எங்கும் இல்லை (363)

4. தூஉய்மை என்பது அவாஇன்மை மற்றது வாஅய்மை வேண்ட வரும்.

தூஉய்மை, என்பது, அவா இன்மை; மற்றது, வாஅய்மை, வேண்ட, வரும்.

(பொ-ரை): தூய்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, அவாஇன்மை ஆகும்; அவாஇன்மையானது, உண்மையை விரும்புவதன்மூலம் வருவதாகும்.

தூய்மை - மனத்தூய்மை; **வாய்மை** - உண்மை.

(க-ரை): ஒருவன் உண்மையை விரும்பினால், அவா அற்றுப் போகும்; அவா ஒருவனிடம் அற்றுப்போனால் மனத்தூய்மை உண்டாகும். (364)

5. அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார் அற்றாக அற்றது இலர்.

அற்றவர் என்பார், அவா அற்றார்; மற்றையார், அற்றாக அற்றது, இலர்.

(பொ-ரை): பற்று அற்றவர்கள் எனப்படுபவர்கள், ஆசைகளை விட்டவர்களே ஆவார்கள்; ஆனால், ஆசைகளை விடாதவர்கள், பற்றுக்களை அவ்வளவாக விட்டவர்கள் ஆக மாட்டார்கள்.

அற்றவர் - பற்று அற்றவர்; **என்பார்** - எனப்படுபவர்கள்; **அவா** - ஆசைகளை; **அற்றார்** - விட்டவர்கள்; **மற்றையார்** - பிறரெல்லாம்; **அற்றாக அற்றதுஇலர்** - அவ்வளவாகப் பற்று அற்றவர் அல்லர்.

(க-ரை): மனதாரத் துறவாதவர்கள் துறவிகள் ஆக மாட்டார்கள்; ஆசைகள் அற்றவரே உண்மைத் துறவிகள் ஆவர். (365)

6. அஞ்சுவது ஓரும் அறனே ஒருவனை
வஞ்சிப்பது ஓரும் அவா.

ஒருவனை, வஞ்சிப்பது, ஓரும் அவா; அஞ்சுவது, ஓரும் அறனே.

(பொ-ரை): ஒருவனை வஞ்சித்துக் கெடுப்பது அவாவே ஆகும்; ஆதலால், அந்த அவாவிற்கு அஞ்சி வாழ்வதே அவனது அறம் ஆகும்.

வஞ்சிப்பது - வஞ்சித்துக் கெடுப்பது; **'ஓரும்'** - இரண்டும் அசைகள்.

(க-ரை): அவாவினை அஞ்சி நீக்குவதே, அறிவு, அறம் மேற்கொண்டோரின் நீங்காக் கடமையாகும். (366)

7. அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

அவாவினை, ஆற்ற அறுப்பின், தவாவினை, தான் வேண்டும், ஆற்றான், வரும்.

(பொ-ரை): ஒருவன் அவாவினை முற்றிலும் நீக்கக் கூடியவனாக இருந்தால், அவன் கெடாமைக்கு ஏதுவான நற்செயல், அவன் விரும்புகின்ற வழியில் தானே ஏற்படும்.

ஆற்றஅறுப்பின் - முற்றிலும் நீக்கக்கூடியவன்; **தவா** - கெடாமைக்குக் காரணமான; **வினை** - செயல்; **வேண்டும்** - விரும்புகின்ற; **ஆற்றான்** - வழியில்; **வரும்** - தானேவரும்.

(க-ரை): ஒருவனிடம் ஆசை முற்றிலும் நீங்கினால், அறமானது சிறப்புற்று விளங்கும். (367)

8. அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம் அஃதுஉண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.

அவா இல்லார்க்குத், துன்பம் இல்லாகும்; அஃது உண்டேல், தவாஅது, மேன்மேல், வரும்.

(பொ-ரை): ஆசை அற்றவர்களுக்கு ஒரு துன்பமும் இல்லை; ஆசை ஒன்று ஏற்பட்டுவிட்டாலோ, துன்பங்கள் எல்லாம், ஒன்றன்பின் ஒன்றாக, ஒழியாமல், மேலும்மேலும் வந்து கொண்டுதானிருக்கும்.

அஃது - ஆசை ஒன்று; **உண்டேல்** - ஏற்பட்டுவிட்டால்; **தவாஅது** - ஒழியாமல்.

(க-ரை): ஆசை இல்லாதவர்க்குத் துன்பம் இல்லை; ஆசையுள்ளவர்களுக்கோ என்றால், துன்பங்கள் மேலும் மேலும் வந்து கொண்டிருக்கும். (368)

9. இன்பம் இடையறாது ஈண்டும் அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

துன்பத்துள், அவா என்னும், துன்பம், கெடின், இன்பம், இடையறாது, ஈண்டும்.

(பொ-ரை): துன்பங்கள் எல்லாவற்றிற்கும் காரணமாகிய அவா என்னும் துன்பம் கெட்டு ஒழிந்துபோனால், இவ்வுலக வாழ்க்கையில் ஒருவருக்கு இன்பமானது இடைவிடாமல் வரும்.

ஈண்டு - இவ்உலக வாழ்க்கையில்; **கெடின்** - கெட்டு ஒழிந்து போனால்.

(க-ரை): ஒருவருக்கு அவா, அவரைவிட்டு நீங்கிவிடுமே யானால், இன்பமானது, அவரது வாழ்க்கையில், எப்பொழுதும் இடைவிடாமல் பெருகிக் கொண்டேயிருக்கும். (369)

10. ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

ஆரா இயற்கை அவா, நீப்பின், அந்நிலையே, பேரா, இயற்கை, தரும்.

(பொ-ரை): ஒருகாலும் நிறைவுபெறாத இயற்கைத் தன்மையையுடைய அவாவினை, ஒருவன் ஒழிப்பானேயானால், ஒழித்த அந்த நிலையே அவனுக்கு, எப்பொழுதும் மாறாத தன்மையையுடைய இயற்கை இன்பத்தைத் தரும்.

ஆரா - ஒருகாலும் நிறைவுபெறாத; **இயற்கை** - இயற்கைத் தன்மையையுடைய; **நீப்பின்** - நீக்குவானேயானால்; **பேரா** - எப்பொழுதும் மாறாதிருக்கும்.

(க-ரை): துன்பத்திற்குக் காரணமான ஆசை முழுவதையும் அறவே நீக்குவதுதான், இன்பத்திற்குக் காரணமான உண்மையான துறவுக்கு இலக்கணமாகும். (370)

38. ஊழ்

ஊழ் என்பது, வழிவழித் தலைமுறையாக, ஒவ்வொருவரிடமும் இயற்கையாகவே படிந்துபடிந்து, தலைமுறைக்குத் தலைமுறை தொடர்ந்து வந்து கொண்டிருக்கக்கூடிய பரம்பரை இயற்கைப் பண்பறிவானது, அவ்வப்போது, இடம், பொருள், காலம், சுற்றுச் சார்பு, தொடர்பு போன்றவற்றின் சூழ்நிலைக்கு ஏற்ப, அவர்களின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டு, அவர்களையும் மீறித், தாமாகவே உள்ளிருந்து வெளிப்பட்டு விடக்கூடிய, ஒருவிதமான, இயற்கைமுறையாகவே அமையும் பண்பறிவு, எனப்படும்.

**1. ஆகுஊழால் தோன்றும் அசைவுஇன்மை கைப்பொருள்
போகுஊழால் தோன்றும் மடி.**

கைப்பொருள், ஆகு ஊழால், அசைவு இன்மை, தோன்றும்; போகு ஊழால், மடி, தோன்றும்.

(பொ-ரை): ஒருவனுடைய கைப்பொருள் உண்டாவதற்குக் காரணமாக இருந்து, தானாக வெளிப்பட்டு இயற்கை முறையாகத் தோன்றும் இயற்கைப் பண்பறிவின் முனைப்பினால், முயற்சி உண்டாகும்; அது, குறைவதற்குக் காரணமாக இருந்து, இயற்கை முறையாகத் தானாக வெளிப்பட்டுத் தோன்றும் இயற்கைப் பண்பறிவின் முனைப்பினால், சோம்பல் உண்டாகும்.

ஊழ் - உள்ளிருந்து தானே இயற்கை முறையாக வெளிப்படும் இயற்கைப் பண்பறிவின் முறைமை; உலகியல், இயற்கைமுறை, உலகியல்முடிவு, முடிவு, இயற்கைமுடிவு, முறை, இயற்கைமுறை, முதிர்வு, முதிர்ச்சி, மலர்ச்சி போன்றவை, ஏற்கத்தக்க பொருள்கள் ஆகும்; ஊழ்த்தல் என்பது வெளிப்படுதல்; விரிதல்; மலர்தல்; முதிர்தல் என்பது சிறத்தல் போன்ற பொருள்களைத் தருவது; ஊழ்க்கும் என்பது, வெளிப்படும்; மலரும்; சிறக்கும்; முதிரும் என்று பொருள்படும்; ஊழற்சதை என்பது, பெருகி நின்று, தளர்ந்து, காணப்படும் சதை; ஊழல் நிலம் என்பது, பெருகி நின்று காணப்படும் சேற்றுநிலம்; ஊழி என்பது, உலகம் முதிர்வுறும் காலத்தைக் குறிப்பதாகும்; ஊழித் தீ என்பது, பெருகி, வளர்ந்து, காணப்படும் வடவைத் தீ.

வள்ளுவர் குறிப்பிடுகின்ற 'ஊழ்' என்ற சொல்லுக்கும், வைதிகச் சமயவாதிகள் கூறுகின்ற 'விதி', 'பழவினை', 'முற்பிறப்பு வினை', 'தலையெழுத்து' என்ற சொற்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. வள்ளுவர் கூறுவது உண்மை நெறியின்பாற்பட்டது. சமயவாதிகள் கூறுவது கற்பனைக் கருத்துக்களின் பாற்பட்டது.

விதி, பழவினை, ஊழ்வினை போன்ற சொற்கள் வள்ளுவரின் குறட்பாக்களில், எந்த ஓர் இடத்திலும் பயன்படுத்தப்படவேயில்லை.

இயற்கை முறையாக அமையும் 'இயற்கைப் பண்பறிவு' என்பது, வழிவழித் தலைமுறையாக, ஒவ்வொருவருக்கும் இயற்கையாகவே படிந்திருக்கும் இயற்கைப் பண்பின் வழிப்பட்ட அறிவாகும்.

"நுண்ணிய நூல் பலகற்பினும் மற்றுந்தன்,
உண்மை அறிவே மிகும்." (குறள் - 373)

செயற்கை அறிவு என்பது, ஒவ்வொருவரும் கற்றறிதல், கேட்டு அறிதல், ஆராய்ந்தறிதல், பட்டறிதல் போன்ற அவர்தம் முயற்சிகள் மூலம் பெறும் செயற்கையான அறிவாகும்.

ஆகு ஊழ் என்பது, நன்மை பயக்கும் வகையில் இயற்கை முறையாக அமையும் இயற்கைப் பண்பறிவு ஆகும். **போகுஊழ்** என்பது, தீமைபயக்கும் வகையில் இயற்கைமுறையாக அமையும் இயற்கைப் பண்பறிவு ஆகும். **அசைவுஇன்மை** - முயற்சி; **மடி** - சோம்பல்.

(க-ரை): ஒருவனுக்கு இயற்கை முறைப்படி வெளிப்படும் இயற்கைப் பண்பறிவு, நன்மை பயப்பதாக அமைந்தால், அதனால் (ஆகும் ஊழால்) அவனுக்கு முயற்சி உண்டாகும்; அவனுக்கு இயற்கை முறைப்படி வெளிப்படும் இயற்கைப் பண்பறிவு தீமை பயப்பதாக அமைந்தால், அதனால் (போகும் ஊழால்) அவனுக்குச் சோம்பல்தான் உண்டாகும். (371)

2. பேதைப் படுக்கும் இழவுஊழ் அறிவகற்றும் ஆகல்ஊழ் உற்றக் கடை.

இழவு ஊழ், பேதைப், படுக்கும்; ஆகல்ஊழ், உற்றக் கடை, அறிவு அகற்றும்.

(பொ-ரை): ஒருவனின் கைப்பொருளைக் கெடுக்கக்கூடியதாக அமையும், அவனுடைய இயற்கைப் பண்பறிவானது, அவனுக்கு அறியாமையைத்தான் உண்டாக்கும்; அவனின் கைப்பொருளை மேலும் ஆக்கக்கூடியதாக அமையும், அவனுடைய இயற்கைப்

பண்பறிவானது, அது பொருந்திய இடத்தில், அவனது அறிவை மேலும் விரிவுபடுத்தும்.

இழவு ஊழ் - கைப்பொருளைக் கெடுக்கக்கூடிய இயற்கைப் பண்பறிவு; **ஆகல்ஊழ்** - கைப்பொருளை ஆக்கக்கூடிய, இயற்கைப் பண்பறிவு; **பேதை** - அறியாமை; **படுக்கும்** - உண்டாக்கும்; **உற்றக்கடை** - பொருந்திய இடத்தில்; **அறிவகற்றும்** - அறிவை விரிவுபடுத்தும்.

'ஊழ்' என்பது இயற்கைமுறையாக உள்ளிருந்து வெளிப்படும் இயற்கைப் பண்பறிவு ஆகும் என்று மேலே சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. "ஊழின் உருப்ப" - புறம் 237 (முறையாக வெளிப்பட்டு வெய்தான) என்றும், "ஊழ் மாறுபெயரும்" - புறம் 283 (முறையாக வெளிப்பட்டு மாறுபட்டு நீங்கும்) என்றும், "பழம் ஊழ்த்து" - புறம் 381 (பழுத்துக் கனிந்து வெளிப்பட்டு) என்றும், வரும் சங்ககாலச் செய்யுட்களின் சொற்றொடர்களும் கூர்ந்து நோக்கத்தக்கனவாகும்.

(க-ரை): ஒருவனுக்கு அவனைக் கெடுக்கக்கூடிய இயற்கை முறையாக வெளிப்படும் இயற்கைப் பண்பறிவு அவனிடம் இருந்தால், (இழவு ஊழ்), அவனுக்கு அறியாமையைத் தரும்; அவனை மேலும் சீராக்கக்கூடிய இயற்கை முறையாக வெளிப்படும் இயற்கைப் பண்பறிவு அவனிடம் இருந்தால், அது (ஆகல் ஊழ்) அவனுக்கு அகன்ற அறிவைத் தரும். (372)

**3. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்.**

நுண்ணிய, நூல் பல, கற்பினும், மற்றும், தன், உண்மை அறிவே, மிகும்.

(பொ-ரை): ஒருவன் நுட்பமான பல்வேறு வகைப்பட்ட நூல்களைக் கற்றறிந்திருந்த போதிலும், அதற்குப் பிறகும், அவனது உண்மையான உள்ளறிவே, அதாவது இயற்கை முறையாக வெளிப்படும் இயற்கைப் பண்பறிவே, முன்வந்து மேம்பட்டு நிற்கும்.

நுண்ணிய - நுட்பமான; **உண்மை அறிவே** - இயற்கைப் பண்பறிவே; **மிகும்** - முன்வந்து மேம்பட்டு நிற்கும்.

(க-ரை): ஒருவன் பல்வேறு வகையான நூல்களைக் கற்றறிந்திருந்த போதிலும், அவ்வப்போது, அவனுடைய இயல்பான

தலைமுறையின் வழிவந்த இயற்கை முறையாக வெளிப்படும் இயற்கைப் பண்பறிவு எதுவோ, அதுவே, முன் வந்து, மேலோங்கி, நிற்கும். (373)

4. இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

உலகத்து இயற்கை, இரு வேறு; திரு, தெள்ளியர், ஆதலும், வேறு வேறு.

(பொ-ரை): இந்த உலகத்தின் இயல்பே, இரண்டு வேறுபட்ட தன்மைகளை, அடிப்படையாகக் கொண்டிருப்பதாகும்; ஒருவர் செல்வம் உடையவராக ஆவதற்குரிய இயற்கை முறையாக வெளிப்படும் இயற்கைப் பண்பறிவைப் பெற்றிருத்தலும், அறிவுடையவராக ஆவதற்குரிய இயற்கைப் பண்பறிவைப் பெற்றிருத்தலும் வேறுவேறு தன்மைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பனவாகும்.

உலகத்து இயற்கை - உலகத்தின் இயல்பு; **திரு** - செல்வம்; **தெள்ளியர்** - அறிவுடையார்.

(க-ரை): அறிவுடைமை, செல்வமுடைமை என்ற இரண்டு வேறுபட்ட தன்மைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பது, உலகத்தின் இயல்பாக இருந்து வருகிறது. ஒருவர் அறிவுடைய வராகவும், வேறொருவர் செல்வமுடையவராகவும் இருப்பதற்கு, இரண்டு வேறுபட்ட இயற்கை முறையாக வெளிப்படும் இயற்கைப் பண்பறிவுகள் அடிப்படைத் தன்மைகளாக அமைந்திருக்கின்றன.(374)

5. நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.

செல்வம் செயற்கு, நல்லவை, எல்லாஅம், தீயவாம்; தீயவும், நல்லவாம்.

(பொ-ரை): செல்வத்தைத் திரட்ட முற்படும்போது, ஒருவனுக்கு முன்பு நல்லவனாய் இருந்து வந்தனவெல்லாம், அவனுடைய போகக்கூடிய இயற்கை முறையாக வெளிப்படும் இயற்கைப் பண்பறிவின் (போகும்ஊழ்) காரணமாகத் தீயனவாக முடியும்; முன்பு தீயனவாக இருந்தனவெல்லாம், அவனுடைய ஆகக்கூடிய இயற்கைப் பண்பறிவின் (ஆகும்ஊழ்) காரணமாக, நல்லனவாகவே முடியும்.

நல்லவை - நல்லன; **தீயவாம்** - போகும் ஊழ் காரணமாகத் தீயனவாக முடியும்; **தீய** - தீயன; **நல்லவாம்** - ஆகும் ஊழ் காரணமாக நல்லனவாக முடியும்.

(க-ரை): ஒருவனுக்கு, ஆகக்கூடிய இயற்கை முறையாக வெளிப்படும் இயற்கைப் பண்பறிவின் காரணமாகத் தீயன வெல்லாம், நல்லவையாக முடியும் என்பதும், போகக்கூடிய இயற்கைப் பண்பறிவின் காரணமாக நல்லனவெல்லாம், தீயவையாக முடியும் என்பதும் உலகியல் இயல்புகளாகும். (375)

6. பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம.

பால்அல்ல, பரியினும், ஆகாவாம்; தம, உய்த்துச் சொரியினும், போகா.

(பொ-ரை): ஒருவன் தனக்கு உரிமையில்லாத பொருள்களை, எவ்வளவுதான் வருந்திக் காப்பாற்றினாலும், சில நேரங்களில், அவை நில்லாமல், இயற்கைச் சூழ்நிலை காரணமாக, உரிய வழியில் போய்விடும்; அவன், தனக்கு உரிமையுடைய பொருள்களைக், கொண்டு போய் வெளியே கொட்டி வைத்தாலும், சில நேரங்களில், அவை இயற்கைச் சூழ்நிலைகாரணமாக, அவனை விட்டுப் போகா.

பால்அல்ல - தனக்கு உரிமையில்லாத பொருள்கள்; **பரியினும்** - வருந்திக் காப்பாற்றினாலும்; **ஆகாவாம்** - நில்லாமல் இயற்கைச் சூழ்நிலை காரணமாக உரிய வழியில் போய் விடும்; **தம** - தமக்கு உரிமை உடைய பொருள்கள்; **உய்த்துச் சொரியினும்** - கொண்டு போய் வெளியே கொட்டி வைத்தாலும்; **போகா** - இயற்கைச் சூழ்நிலை காரணமாக, அவனை விட்டுப் போகா.

(க-ரை): ஒருவன் தனக்கு உரிமையில்லாத பொருள்களைக் காப்பாற்றினாலும், அவை, சில நேரங்களில், இயற்கைச் சூழ்நிலை காரணமாக, முறைப்படி அவனைவிட்டுப் போய்விடும்; தனக்கு உரிமை உடைய பொருள்களைக் காப்பாற்றாமல், வெளியே கொட்டி வைத்தாலும், சில நேரங்களில், அவை, இயற்கைச் சூழ்நிலையின் காரணமாக, முறைப்படி, அவனை விட்டு அகன்று போகா. (376)

7. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

வகுத்த, வகுத்தான், வகை அல்லால், கோடி தொகுத்தார்க்கும், துய்த்தல், அரிது.

(பொ-ரை): உலகியல் வாழ்க்கையை நடத்துபவர்கள், அதனை ஆராய்ந்தறிந்து வகுத்து முறைப்படுத்திய அறிவாற்றலிற் சிறந்த சான்றோரின் வழிவகைகளைப், பின்பற்றினால் அல்லாமல், அவர்கள் கோடிக்கணக்கில் பொருளைத் தொகுத்து வைத்திருந்தாலும், அதன் பயனை நுகர்தல் என்பது, அரிதான ஒரு செயலாகும்.

வகுத்த வகுத்தான் - வாழ்க்கை நெறியை வகுத்து முறைப்படுத்திய அறிவாற்றலிற் சிறந்த சான்றோரின் வழிவகைகளை; 'வகுத்தார்' என்றுதான் காலிங்கராயர் பாடவேறுபாடாகக் கூறியுள்ளார். அப்படித்தான் இருந்திருந்திருக்க வேண்டும் என்று எண்ணிடவும் இடமிருக்கிறது.

'வகுத்தான்' என்று கொண்டு பிற உரையாசிரியர்கள் சிலர் 'தெய்வம்' என்றும், 'விதானம் பண்ணினவன்' என்றும், 'முன்னஞ் செய்தார்' என்றும், 'முன்வினை ஊழ்' என்றும் பல்வேறுபட்ட பொருள்களைத் தந்திருக்கின்றனர், அவையெல்லாம் உலகியல் நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்துவராத பொருள்களாகும்.

எதையும் ஆராய்ந்து அறிந்து, வகுத்து, வகைப்படுத்திக் காட்டும் திறமை சான்றோர்க்கு உண்டு என்பதை,

"இருமை வகைதெரிந்து ஈண்டு அறம்பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு" (குறள் - 23)

நன்மை தீமை என்னும் இரண்டின் வகைப்பாடுகளை ஆராய்ந் தறிந்து, மிகுதியான அறத்தை மேற்கொள்ளும் சிறப்பே உலகில் மிகச் சிறந்தது ஆகும் என்றும்,

"சுவை ஒளிஊறு ஓசை நாற்றமென்று ஐந்தின்,
வகைதெரிவான் கட்டே உலகு" (குறள் - 27)

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புலன்களின் வல்லமை படைத்த சான்றோரிடத்தே அமைந்ததுதான் இந்த உலகம் ஆகும் என்றும் வள்ளுவர் கூறியிருப்பது நோக்கத்தக்கதாகும். **கோடி தொகுத்தார்** - பொருளைக் கோடிக்கணக்கில் தொகுத்தார்; **துய்த்தல்** - நுகர்தல்; **அரிது** - அரிதான ஒரு செயல்.

(க-ரை): ஒருவன் எவ்வளவுதான் கோடிக்கணக்கில் பொருளைச் சேர்த்து வைத்திருந்தாலும், வாழ்க்கை நெறியை வகுத்து முறைப் படுத்திய அறிவாற்றலிற் சிறந்த சான்றோரின் வழிவகைகளை, அவன் பின்பற்றி நடக்காவிட்டால், அவன் அந்தப் பொருளின் பயனை நுகர முடியாது. (377)

**8. துறப்பார்மன் துப்புரவு இல்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்.**

உறற்பால, ஊட்டா, கழியும், எனின், துப்புரவு இல்லார், துறப்பார், மன்.

(பொ-ரை): தமக்கு வரக்கூடிய துன்பங்கள் எவையும் தம்மை வருத்தாமல் நீங்கிவிடும் என்றால், நுகர்வதற்குரிய பொருள்ஏதும் இல்லாத வறுமையுற்ற நிலையில், ஒருவர் இயற்கை முறையாக வெளிப்படும் இயற்கைப் பண்பறிவின் காரணமாகத் துறவறத்தை மேற்கொள்வார்.

உறற்பால - வரக்கூடிய துன்பங்கள்; துன்பங்கள் - காமம், வெகுளி, மயக்கம் போன்றவை; **ஊட்டா** - வந்து வருத்தாமல்; **கழியும்** - நீங்கிவிடும் என்றால்; **துப்புரவு** - நுகர்வதற்குரிய பொருள் ஏதும்; **இல்லார்** - வறுமையுற்ற நிலையில் இருப்போர்; **துறப்பார்** - துறவறத்தை மேற்கொள்வார்; **மன்** - ஒழியிசை. விருப்பு, சினம், மயக்கம் போன்ற குற்றங்கள் அடியோடு கெடுமாறு ஒருவன் ஒழுகினால், துன்பங்கள் அவனிடம் வராமல் கெட்டொழியும் என்பதை,

''காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்'' (குறள் - 360)

என்று வள்ளுவர் கூறுகிறார். துன்பங்கள் கெட்டொழிய அவா நீக்கப்படல் வேண்டும். ஒருபோதும் நிரம்பாத தன்மையை உடைய அவாவை ஒருவன் ஒழித்துவிட்டால், ஒழித்த அந்த நிலையே எப்போதும் மாறாதிருக்கும் இயல்பான இன்பவாழ்வைத் தரும் என்பதை,

''ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே,
பேரா இயற்கை தரும்'' (குறள் - 370)

என்று குறிப்பிட்டுள்ளார்.

துன்பங்களை ஒழிப்பதற்கு அவா அறுத்தல், அதன் காரணமாகத் துறவறத்தை மேற்கொள்ளல், அதன் விளைவாகப் பேரா இயற்கையைப் பெறுதல் ஆகியவை வலியுறுத்தப்பட்டுள்ளன.

(க-ரை): இயற்கைமுறையாக வெளிப்படும் இயற்கைப் பண்பறிவின் காரணமாகப் பொருள்களின் மீது ஆவல் அற்றவர்கள், வறுமையுற்றாலும், ஓர் இடையூறும் இல்லாத நிலையில், துறவறத்தை மேற்கொண்டு பேரா இயற்கையைப் (உறுதியான இயல்பான இன்பநிலையை) பெறுவார்கள். (378)

**9. நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவது எவன்.**

நன்று ஆங்கால், நல்லவாக், காண்பவர், அன்று ஆங்கால், அல்லற்படுவது, எவன்.

(பொ-ரை): நல்லவை உண்டாகும்போது, அவற்றை நல்லவை என்று கருதி இன்பம் பெறுகின்றவர்கள், தீயவை உண்டாகும்போது, அவதியுற்றுக் கலங்குவது எதற்காகவோ? கலங்குவது கூடாது என்பதாம்.

நன்று - நல்லவை; **ஆங்கால்** - உண்டாகும்போது; **நல்லவாக் காண்பர்** - நல்லவை என்று கருதி இன்பம் துய்ப்பவர்கள்; **அன்று** - தீயவை; **ஆங்கால்** - உண்டாகும்போது; **அல்லல்** - துன்பம்.

''தீதும் நன்றும் பிறர்தர வாரா'' - புறநானூற்றுப் பாடலின் கூற்று.

ஒருவன் தீமை பெறுவதற்கும், நன்மை அடைவதற்கும் அவனுடைய செயல்களின் விளைவுகளே காரணமாகும்.

''பிறர்க்கு இன்னா முற்பகல்செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்'' (குறள் - 319)

என்பது வள்ளுவர் வாக்கு. முற்பகல் என்பது பகற்பொழுதின் முன்பகுதி அல்லது வாழ்க்கையின் முற்பகுதி; பிற்பகல் என்பது பகற்பொழுதின் பின்பகுதி அல்லது வாழ்க்கையின் பிற்பகுதி.

''நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம்'' - குறள் 320. (துன்பம் எல்லாம் துன்பம் செய்தவரையே சார்வனவாகும்) என்ற வள்ளுவரின் வாக்கு நோக்கத்தக்கது.

ஒருவனுடைய மனப்போக்கைப் பொறுத்துத்தான் அவனது செயல் நன்மையாகவும், தீமையாகவும் முடிகிறது.

(க-ரை): ஒருவனுக்கு நல்லவை இன்பம் பயப்பதும், தீயவை துன்பம் பயப்பதும் உலக இயற்கையாகும்; மனிதனின் இயல்பான பண்பின் அடிப்படையில், துன்பம் ஏற்படும்போது, அதுகண்டு, கலங்கக்கூடாது. (379)

**10. ஊழிற் பெருவலி யாவுள மற்றுஒன்று
சூழினும் தான்முந் துறும்.**

மற்று ஒன்று சூழினும், தான் முந்துறும் ஊழின், பெருவலி, யாவுள.

(பொ-ரை): பொதுவாக, ஒருவன், தன்னுடைய இயற்கை முறையாக வெளிப்படும் இயற்கைப் பண்பறிவை மாற்ற, வேறொரு செயற்கை அறிவைக்கொண்டு ஆராய்ந்து பார்த்தாலும், அந்த இயற்கைப் பண்பறிவின் வலிமையே, முன்னே வந்து நிற்கக்கூடியதாகும்; ஆதலால், அவனுடைய இயற்கைப் பண்பறிவைக் காட்டிலும், மிக்க வலிமையுடையவை பொதுவாக எவையுள்ளன? ஒன்றுமில்லை!

'மற்று ஒன்று' என்றது செயற்கை அறிவை. ஒவ்வொரு வரிடத்திலும் இயற்கைப் பண்பறிவு என்றும், செயற்கை அறிவு என்றும் இரண்டுவித அறிவுகளும் அமைந்திருப்பது மேலே 371ஆம் குறள் உரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இங்கு 'மற்று ஒன்று' என்று வள்ளுவர் குறிப்பிட்டிருப்பது, செயற்கை அறிவைப் பற்றியது என்று கொள்ள வேண்டும்.

மனிதனின் இயற்கைப் பண்பறிவின் வலிமையை, அவனது செயற்கை அறிவால் வெல்ல இயலாது என்று இந்தக் குறளில் (380) கூறியுள்ள வள்ளுவர், அதே மனிதன் தன்னுடைய முயற்சி யாற்றலைக் கொண்டு கடுமையாக உழைத்தால், அந்த இயற்கைப் பண்பறிவை (ஊழை) புறமுதுகுகாட்டி ஓட வைக்க முடியும் என்பதை,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர்" (குறள் - 620)

சோர்வு இல்லாமல், சலிப்பில்லாமல், கடுமையான முயற்சியில் ஈடுபட்டு உழைப்பவர்கள், தமது இயற்கை முறையாக வெளிப்படும் இயற்கைப் பண்பறிவு (ஊழ்) இடையூறாக வந்து நிற்குமேயானால், அதனைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்வார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதாவது இயற்கைப் பண்பறிவை (ஊழை) பொதுவாகச் செயற்கை அறிவால் வெல்ல முடியாவிட்டாலும், கடுமையான முயற்சி ஆற்றலின் மூலம் சிறப்பாக வெல்ல முடியும். வைதிகச் சமயத்தாரின் கருத்துக்களெல்லாம், வள்ளுவரின் இந்தக் கூற்றின் மூலம் தவிடுபொடியாகின்றன.

பெருவலி - மிக்க வலியுடையவை; **சூழினும்** - ஆராய்ந்தாலும்.

(க-ரை): பொதுவாக ஒருவனுடைய இயற்கை முறையாக வெளிப்படும் இயற்கைப் பண்பறிவின் வலிவைக் காட்டிலும், மிக்க வலிமையுடைய செயற்கையறிவு பொதுவாக வேறொன்றும் இல்லை. (380)

39. இறைமாட்சி

இறைமாட்சி என்பது, நாட்டின் ஆட்சித் தலைவனான அரசனின் நற்பண்புகள், நற்செயல்கள் ஆகியவற்றின் மாட்சிமைப்பட்ட தன்மைகளைப் பற்றிக் கூறுதல் எனப்படும்.

**1. படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.**

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண், ஆறும், உடையான், அரசருள் ஏறு.

(பொ-ரை): படையும், குடிமக்களும், பொருள்களும், அமைச்சரும், நண்பர்களும், கோட்டையும் ஆகிய ஆறு உறுப்புகளையும் செம்மையாக உடையவனே, அரசர்களுள் ஆண்சிங்கம் போன்றவன் ஆவான்.

கூழ் - பொருள்; **நட்பு** - நண்பர்; **ஏறு** - ஆண் சிங்கம்.

(க-ரை): படை, குடி, பொருள், அமைச்சு, நட்பு, கோட்டை என்னும் ஆறு உறுப்புகளையும் நன்கு அடையப் பெற்றவனே, சிறந்த அரசனாவான். (381)

**2. அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு.**

வேந்தற்கு இயல்பு, அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், இந்நான்கும், எஞ்சாமை.

(பொ-ரை): ஓர் அரசனுக்கு இயல்பான பண்பானது, அச்சமில்லாமையும், ஈகைத் தன்மையும், அறிவுடைமையும், ஊக்கமுடைமையும் ஆகிய இந்த நான்கு பண்புகளும், எப்பொழுதும் அவனை விட்டு நீங்காமலிருத்தலேயாகும்.

இயல்பு - இயல்பான பண்பு; **எஞ்சாமை** - எப்பொழுதும் நீங்காதிருத்தல்.

(க-ரை): அச்சமின்மை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய நான்கு பண்புகளும், ஓர் அரசனுக்கு எப்பொழுதும் நீங்காமலிருத்தலே, இயல்பான தன்மையாகும். (382)

**3. தூங்காமை கல்வி துணிவுஉடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு.**

நிலன் ஆள்பவர்க்குத், தூங்காமை, கல்வி, துணிவுஉடைமை, இம்மூன்றும், நீங்கா.

(பொ-ரை): நிலத்தை ஆளும் அரசர்க்குக், காலந்தாழ்த்தாமை, கல்வியறிவுடைமை, துணிவென்னும் ஆண்மையுடைமை ஆகிய இந்த மூன்று தன்மைகளும், எக்காலத்திலும் நீங்காமல் இருக்க வேண்டியவைகளாகும்.

தூங்காமை - காலந்தாழ்த்தாமை, அதாவது செயல்களில் விரைவுகாட்டும் தன்மை; **ஆள்பவர்** - ஆளும் அரசர்.

(க-ரை): நாட்டை ஆளும் அரசனுக்குக் காலந்தாழ்த்தாமை, கல்வியறிவுடைமை, துணிவுடைமை என்னும் மூன்று பண்புகளும், எப்பொழுதும் இருக்க வேண்டியவைகளாகும். (383)

4. அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா மானம் உடையது அரசு.

அறன் இழுக்காது, அல்லவை நீக்கி, மறன் இழுக்கா, மானம் உடையது, அரசு.

(பொ-ரை): ஆட்சிக்குரிய அறநெறி தவறாது, அறமல்லாத வற்றையெல்லாம் நீக்கி, வீரத்திலிருந்து சிறிதும் குறைவுபடாத மானத்தை உடையவனே, சிறந்த அரசன் ஆவான்.

இழுக்காது - தவறாது; **அல்லவை** - அறமல்லாதவை; **மறன்** - வீரம்; **இழுக்கா** - தவறாத; குறைவுபடாத.

(க-ரை): அறநெறி தவறாது, குற்றங்களை நீக்கி, வீரத்திலிருந்து குறைவுபடாமல், மானத்தை உடையவனாக இருப்பவனே சிறந்த அரசனாவான். (384)

5. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு.

இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த வகுத்தலும், வல்லது, அரசு.

(பொ-ரை): பொருள்வரும் வழிகளை உண்டாக்கிக் கொள்ளுதலும், அப்படிவரும் பொருள்களை ஒருவழிச் சேர்த்தலும், அவ்வாறு சேர்த்ததைப் பாதுகாத்தலும், அப்படிக் காத்ததைப் பகுத்து நாடு - மக்கள் - கலை வாழ, வளர நல்ல வழிகளில் செலவு செய்தலும் ஆகிய இவைகளில் வல்லவனே அரசன் ஆவான்.

இயற்றல் - உண்டாக்கல்; **ஈட்டல்** - சேர்த்தல்; **வகுத்தல்** பகுத்தளித்தல்.

(க-ரை): பொருள்வரும் வழிகளை உருவாக்கி, அந்தப் பொருள்களைச் சேர்த்துக் காத்து, நல்லமுறையில் பகுத்தளிப்பவனே சிறந்த அரசன் ஆவான். (385)

**6. காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.**

மன்னன், காட்சிக்கு எளியன், கடுஞ்சொல்லன், அல்லனேல், நிலம், மீக்கூறும்.

(பொ-ரை): அரசனானவன், யாவர்க்கும் காண்பதற்கு எளிமையுடையவனாய்க், கடுஞ்சொல் சொல்லாதவனாய் இருந்தால், அவனை மிகவும் நல்லவன் என்று, அவனுடைய நாட்டின் குடிமக்கள் புகழ்வார்கள்.

காட்சிக்கு - யாவரும் காண்பதற்கு; **நிலம்** - நாட்டின் குடிமக்கள்; **மீக்கூறும்** - மிகவும் புகழ்வார்கள்.

(க-ரை): அரசனானவன் எளிதில் காண்பதற்கு உரியவனாகவும், கடுஞ்சொல் சொல்லாதவனாகவும் இருப்பானேயானால், அவனை, அவனுடைய குடிமக்கள் மிகவும் புகழ்வார்கள். (386)

**7. இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் உலகு.**

இன்சொலால், ஈத்துஅளிக்க வல்லார்க்குத், தன்சொலால், இவ்உலகு, தான் கண்டனைத்து,

(பொ-ரை): இனிய சொற்களுடன், வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்துக் காப்பாற்றவல்ல அரசனுக்கு, அவனது புகழோடு பொருந்திய சொல்லாற்றலாலேயே, இவ்வுலகம், அவன் கருதுகின்ற அளவுக்கு அவனுடையதாக ஆகும்.

ஈத்தளிக்க வல்லார்க்கு - கொடுத்துக் காப்பாற்றவல்ல அரசனுக்கு; **தன்சொலால்** - தனது புகழுடன் பொருந்திய சொல்லாற்றலாலேயே.

(க-ரை): இனிய சொல்லும், பிறர்க்குக் கொடுத்துக் காப்பாற்றும் தன்மையும் கொண்ட அரசனுக்கு, இவ்வுலகமானது அவன் நினைத்தபடிக் கட்டுப்பட்டு நடக்கும். (387)

**8. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்.**

முறைசெய்து, காப்பாற்றும், மன்னவன், மக்கட்கு, இறை என்று, வைக்கப்படும்.

(பொ-ரை): நீதி நெறிமுறைப்படி ஆட்சி செய்து, மக்களைக் காப்பாற்றுகின்ற மன்னவன், மக்கட்குத் தலைவன் என்று போற்றப்பட்டு, மதிக்கப்படுவான்.

முறைசெய்து - அறநெறி, நீதி நெறிமுறைப்படி ஆட்சி செய்து; **இறை** - தலைவன்.

(க-ரை): தலைவன் என்று மக்களால் போற்றப்பட்டு மதிக்கப்படுபவனே, நாட்டுக்குரிய நல்ல அரசனாவான். (388)

9. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

செவிகைப்பச், சொற்பொறுக்கும், பண்புடை, வேந்தன், கவிகைக் கீழ், உலகு தங்கும்.

(பொ-ரை): தக்கவர்கள், காது வெறுக்கும்படியாகச் சொல்லும் கடுஞ்சொற்களைப், பொறுத்துக் கொள்ளும் நற்பண்புடைய அரசனது குடையின்கீழ், உலகமேகூடத் தங்கி இருக்கும்.

கைப்ப - வெறுக்கும்படியாக; **கவிகை** - குடை.

(க-ரை): பொதுநன்மையின் பொருட்டுப் பெரியோர்கள் சொல்லும் கடுஞ்சொற்களானாலும், அவைகளைச் செவியாரக் கேட்டு நடப்பவனுக்கு, இவ்வுலகமானது, எப்பொழுதும் அடங்கியே நடக்கும். (389)

10. கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி.

கொடை, அளி, செங்கோல், குடி ஓம்பல், நான்கும், உடையானாம், வேந்தர்க்கு, ஒளி.

(பொ-ரை): கொடை கொடுத்தல், முகம் மலர்ந்து இனியவை கூறல், செங்கோல் புரிதல், தளர்குடிகளைப் பாதுகாத்தல் ஆகிய நான்கையும் உடைய அரசன், அரசர்களுக்கு எல்லாம் ஒளிதரும் விளக்குப் போன்றவன் ஆவான்.

நான்கும் - நான்கு பண்புகளையும்; **ஒளி** - விளக்கு.

(க-ரை): கொடை, இன்சொல், செங்கோல், குடியோம்பல் ஆகிய நான்கையும் உடைய அரசன், எப்பொழுதும் அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன் ஆவான். (390)

40. கல்வி

கல்வி என்பது, கற்க வேண்டிய நூல்கள், கலைகள் ஆகியவற்றைக் கற்று, அவற்றின் சிறப்பையும், பயனையும் உணர்தல் எனப்படும்.

**1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.**

கற்பவை, கசடுஅறக், கற்க; கற்றபின், அதற்குத் தக, நிற்க.

(பொ-ரை): ஒருவன் கற்க வேண்டியவற்றைத் தன்னுடைய குற்றம் குறைகள் நீங்கும் அளவுக்கும், கற்பவைகளிலுள்ள குற்றம் குறைகளை நீக்கியும் கற்க வேண்டும்; அவ்வாறு கற்றபின், அக்கல்வி அறிவுறுத்தும் நெறியின்கண் நிற்க வேண்டும்.

கசடு - குற்றம்; **அற** - நீங்க, நீக்கி.

(க-ரை): ஒருவன் கற்க வேண்டியவைகளைத் தன் குற்றம் குறைகள் நீங்கும் அளவுக்கும், கற்பவைகளிலுள்ள குற்றம் குறைகளை நீக்கியும் கற்க வேண்டும்; அதன்பின் கற்றபடி நடப்பதே கல்வியின் பயனாகும். (391)

**2. எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு.**

எண் என்ப, ஏனை எழுத்துஎன்ப, வாழும் உயிர்க்கு, இவ்விரண்டும், கண் என்ப.

(பொ-ரை): எண்ணப்படுபவை என்றும், மற்று எழுதப் படுபவை என்றும் சொல்லப்படும் இந்த இரண்டும், வாழுதற்குரிய மக்களுக்குக் கண்களாகும் என்று கூறுவர் அறிவுடையோர்.

எண்என்ப - எண்ணப்படுபவை என்று சொல்லப்படுவன; அதாவது சிந்தனை வடிவில் இருப்பவை; கோட்பாடு என்று கொள்ளப்படும்; **எழுத்துஎன்ப** - எழுதப்படுபவை என்று சொல்லப்படுவன; அதாவது செயல் வடிவத்தில் இருப்பவை; நடைமுறை என்று கொள்ளப்படும்; **உயிர்க்கு** - மக்களுக்கு.

(க-ரை): சிந்திக்கப்படுபவை (கோட்பாடு), செயலாற்றப் படுபவை (நடைமுறை) ஆகிய இரண்டும் கல்வியின் முக்கியப் பயன்களாகும். (392)

**3. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.**

கண் உடையர், என்பவர், கற்றோர்; முகத்து, இரண்டு, புண் உடையர், கல்லாதவர்.

(பொ-ரை): கண் உடையவர்கள் என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவர்கள் கற்றவர்களே ஆவார்கள்; முகத்தில் இரண்டு புண்களை உடையவர்கள் கல்லாதவர்கள் என்றே கருதப்படுவார்கள்.

கண்ணுடையர் - கண்களை உடையவர்கள்; **புண்உடையர்** - கண்களாகிய புண்களை உடையவர்கள்.

(க-ரை): கண்பெற்றோரின் கடமை கற்றறிவது ஆகும்; கற்காவிட்டால், அது புண் என்றுதான் பெயர் பெறும். (393)

**4. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.**

உவப்பத், தலைக்கூடி, உள்ளப் பிரிதல், அனைத்தே புலவர் தொழில்.

(பொ-ரை): யாவரும் மகிழும்படியாக ஒருவரோடொருவர் கூடியிருந்து, இனி என்று கூடுவோம் என்று நினைக்கும்படி நீங்குதலாகிய தன்மையைக் கொண்டதே, கற்றோரது செயலாகும்.

உவப்ப - மகிழும்படி; **தலைக்கூடி** - ஒருவரோடொருவர் கூடியிருந்து; **தொழில்** - செயல்.

(க-ரை): பேரன்போடு ஒன்று கூடி மகிழ்வதும், பெரு வருத்தத்தோடு பிரிந்து செல்வதும் கற்றோரது பண்புகளாகும். (394)

**5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.**

உடையார்முன், இல்லார்போல், ஏக்கற்றும், கற்றார்; கல்லாதவர், கடையரே.

(பொ-ரை): செல்வரிடம் வறியர் நிற்பதைப் போல, கற்றவர் முன் ஏங்கித் தாழ்மையாக நடந்து, கற்க வேண்டியவற்றைக் கற்பவரே உயர்ந்தோராவார்கள்; அப்படிக் கற்காதவர்கள் இழிந்தவர்களே யாவார்கள்.

உடையார் - செல்வர்; **இல்லார்** - வறியர்; **ஏக்கற்றும்** - ஏங்கித் தாழ்ந்து நின்று; **கடையர்** - இழிந்தவர்.

(க-ரை): செல்வர்முன் வறியர் தமக்கு வேண்டியதை விரும்பி நிற்பதைப் போல, ஆசிரியரிடம் கல்வியை விரும்பி நின்று ஒருவர் கற்க வேண்டும். (395)

**6. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.**

தொட்டனைத்து, மணற்கேணி, ஊறும்; மாந்தர்க்கு, கற்றனைத்து, அறிவு, ஊறும்.

(பொ-ரை): மணலில் தோண்டிய கிணற்றில், தோண்டுகின்ற அளவுக்குத்தான் நீர் சுரக்கும்; அதுபோல, மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்குத்தான் அறிவும் வளர்ச்சியுறும்.

மணற்கேணி - மணலில் தோண்டுகின்ற கிணறு; **தொட்டு அனைத்து** - தோண்டுகின்ற அளவு; **ஊறும்** - நீர் சுரக்கும்.

(க-ரை): மணற்கேணியில் தோண்டுகின்ற அளவிற்கே நீர் சுரப்பதைப்போல, மக்களுக்கு, அவர்கள் கற்கும் அளவிற்கே அறிவு வளரும். (396)

**7. யாதானும் நாடுஆமால் ஊர்ஆமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.**

யாதானும், நாடு ஆம்ஆல், ஊர் ஆம்ஆல், ஒருவன், சாம்துணையும், கல்லாதவாறு, என்.

(பொ-ரை): கற்றவனுக்கு எந்த ஒரு நாடும் அவனது சொந்த நாடாகும்; எந்த ஓர் ஊரும் அவனது சொந்த ஊராகும்; அப்படி யிருப்பதை அறிந்த பிறகும், ஒருவன் இறப்புவரும் வரையிலும்கூட, கல்லாமலேயே காலங்கழிக்கிறான் என்றால், அவன் தகுதிதான் என்னவோ?

யாதானும் நாடுஆமால் - கற்றவனுக்கு எந்த ஒருநாடும் அவனுடைய நாடாகும்; **ஊர்ஆமால்** - அவனுடைய ஊராகும்; **சாந்துணையும்** - இறப்புவரும் வரையிலும்.

(க-ரை): கற்றவனுக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு இருப்பதைக் கண்ணாரக் கண்டும், ஒருவன் சாகிற வரையிலும் கற்காமல் இருப்பது, வியப்புக்குரியதாகும். (397)

**8. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

ஒருமைக்கண், தான், கற்றகல்வி, ஒருவற்கு, எழுமையும், ஏமாப்பு, உடைத்து.

(பொ-ரை): ஒருவன் தன் வாழ்க்கையின் ஒருநிலையில், தான் கற்ற கல்வியானது, அவனுக்கு எல்லா நிலைகளிலும் சென்று பாதுகாப்பாக உதவுதலை உடையதாகும்.

ஒருமைக்கண் - வாழ்க்கையின் ஒருநிலையில்; **எழுமையும்** - எல்லா நிலைகளிலும், **ஏமாப்பு** - பாதுகாப்பாக; **உடைத்து** - உடையது.

(க-ரை): ஒருவன் தன் வாழ்க்கையின் ஒரு நிலையில் கற்ற கல்வி, அவனுக்கு எல்லா நிலைகளிலும் பாதுகாப்பாகவும், உதவியாகவும் அமையும். (398)

9. தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

தாம், இன்புறுவது, உலகு இன்புறக்கண்டு, கற்றறிந்தார், காமுறுவர்.

(பொ-ரை): தாம் இன்பம் பெறுவதற்குக் காரணமான கல்வியால், உலகத்தாரும் இன்பம் பெறுதலைக் கண்டு, கற்றறிந்த சான்றோர்கள், அந்தக் கல்வியை மேலும்மேலும் கற்க விரும்புவார்கள்.

இன்புறுதல் - இன்பம் பெறுதல்; **காமுறுவர்** - விரும்புவர்.

(க-ரை): கல்வியால் தாம் இன்பம் பெறுதலைப் போல, உலகத்தாரும் இன்பம் பெறுவதைக் காணும் கற்றவர்கள், மேலும் மேலும் கற்கவே விரும்புவார்கள். (399)

10. கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை.

ஒருவற்குக், கேடுஇல், விழுச்செல்வம், கல்வி; மற்றையவை, மாடுஅல்ல.

(பொ-ரை): ஒருவருக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும்; கல்வியைத் தவிர மற்ற செல்வங்களெல்லாம், அத்தகைய சிறப்புமிக்க செல்வம் ஆகாது.

கேடு - அழிவு; **இல்** - இல்லாத; **விழுச்செல்வம்** - சிறந்த செல்வம்; **மாடு** - செல்வம்.

(க-ரை): ஒருவருக்குக் கல்வியைத் தவிர சிறந்ததொரு செல்வம், வேறுஎதுவும் இல்லை. (400)

41. கல்லாமை

கல்லாமை என்பது, குற்றம், குறை, இழிநிலை போன்ற வற்றிற்குக் காரணமாக அமையும் கல்விகற்காமையைப் பற்றிக் கூறுதல் எனப்படும்.

1. அரங்குஇன்றி வட்டாடி அற்றே நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல்.

நிரம்பிய நூல் இன்றிக், கோட்டி, கொளல், அரங்கு இன்றி, வட்டாடி அற்றே.

(பொ-ரை): ஒருவன் தன் அறிவு நிரம்புவதற்குக் காரணமான நூல்களைக் கற்றறியாமல், அறிவுடையோர் அவையின்கண் ஒன்றைச் சொல்லுதல், சூதாடுவதற்குரிய அரங்கினை அமைத்துக் கொள்ளாமல், சூதாடு கருவியை மட்டும் உருட்டுவது போன்றதாகும்.

கோட்டிகொளல் - அறிவுடையோர் அவையில் ஒன்றைச் சொல்லுதல்; **அரங்குஇன்றி** - சூதாடுகின்ற அரங்குஇல்லாமல்; **வட்டு** - சூதாடுகருவி; பகடைக்காய்.

(க-ரை): கற்றறிந்தார் அவையில் புகுந்து கல்லாதார் ஒன்றைச் சொல்லுவது, எப்போதும் பொருத்தமாக இருக்காது. (401)

2. கல்லாதான் சொல்கா முறுதல் முலைஇரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று.

கல்லாதான், சொல் காமுறுதல், முலை இரண்டும், இல்லாதாள், பெண் காமுற்றற்று.

(பொ-ரை): கல்லாத ஒருவன் கற்றவர் அவையில் ஒன்றைச் சொல்ல விரும்புதல், இரண்டு முலைகளும் இல்லாத பெண் ஒருத்தி, காதல் இன்பத்தினைப் பெற விருப்பப்பட்டது போன்றதாகும்.

காமுறுதல் - விரும்புதல்; **பெண் காமுற்றற்று** - பெண் தன்மையை அதாவது காதல் இன்பத்தினைப் பெற விருப்பப்பட்டது போன்றதாகும்.

(க-ரை): முலை இரண்டும் இல்லாதவளுடைய பெண்மையை ஆடவர் விரும்பாதது போல, கல்லாதவனின் சொல்லை, கற்றறிந்தோர் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். (402)

**3. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.**

கற்றார் முன், சொல்லாதிருக்கப் பெறின், கல்லாதவரும், நனி நல்லர்.

(பொ-ரை): கற்றவர்கள் முன்னிலையில் யாதொன்றையும் சொல்லாமல் இருக்கும் தன்மையைப் பெற்றிருப்பார்களேயானால், கல்வி கற்காதவர்களும்கூட மிகவும் நல்லவர்களாகவே கருதப் படுவார்கள்.

நனி - மிகவும்; **நல்லர்** - நல்லவராவர்.

(க-ரை): கற்றார் முன்னிலையில் கல்லாதவர்கள் யாதொன்றும் பேசாமலிருந்தாலே, அவர்கள் நல்லவர்களாகக் கருதப்படுவார்கள்.

(403)

**4. கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்
கொள்ளார் அறிவுடை யார்.**

கல்லாதான், ஒட்பம், கழிய, நன்று ஆயினும், அறிவுடையார், கொள்ளார்.

(பொ-ரை): நூல்களைக் கற்காதவனுடைய இயற்கை அறிவு, ஒரோவழி மிக நன்றாக அமைந்திருந்த போதிலும், கற்றறிவாளர்கள், அதனைச் சிறந்த அறிவாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஒட்பம் - ஒண்மை, அறிவுடைமை; **கழிய** - மிக; **நன்றாயினும்** - ஒரோவழி நன்றாக அமைந்திருந்தாலும்; **கொள்ளார்** - ஏற்றுக் கொள்ளமாட்டார்.

(க-ரை): கல்வி இல்லாதவனுடைய அறிவு, சில நேரங்களில் மிகச் சிறப்புடையதாகப் பார்வைக்குத் தோன்றினாலும், அறிவுடையவர்கள், அதனை மனமார ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

(404)

**5. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.**

கல்லா ஒருவன், தகைமை தலைப்பெய்து, சொல்லாடச், சோர்வுபடும்.

(பொ-ரை): கல்வி கற்காத ஒருவன், அறிவாளி என்று தன்னைத்தானே மதித்துக் கொள்ளும் மதிப்பு, கற்றவர்முன் சென்று, உரையாடும்போது, கெட்டுவிடும்.

தகைமை - அறிவாளி என்று தன்னைத்தானே மதிக்கும் மதிப்பு; **தலைப்பெய்து** - கற்றவர்முன் சென்று; **சோர்வுபடும்** - கெட்டுவிடும்.

(க-ரை): கல்வி இல்லாத ஒருவன், தன்னை ஒரு அறிவாளிபோல் காட்டிக் கொள்ளும் மதிப்பு, அவன் கற்றவரோடு கலந்து பேசும்போது கெட்டுவிடும். (405)

6. உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனையர் கல்லா தவர்.

கல்லாதவர், உளர்என்னும், மாத்திரையர், அல்லால், பயவாக், களர் அனையர்.

(பொ-ரை): கல்லாதவர்கள், உலகத்தில் உயிரோடு இருக்கின்றனர் என்று சொல்லப்படும் அளவினரேயல்லாமல், மற்றபடி அவர்கள் ஏதொன்றுக்கும் பயன்படாத களர்நிலம் போன்றவர்கள் ஆவார்கள்.

மாத்திரையர் - அளவினர்; **அல்லால்** - அல்லாமல்; **பயவா** - ஒன்றுக்கும் பயன்படாத; **களர்அனையர்** - களர்நிலம் போன்றவர்.

(க-ரை): கல்லாதவர்கள் ஒன்றுக்கும் பயன்படாத களர்நிலம் போலப், பெயருக்கு மனிதர்கள் என்று இருப்பவர்களேயல்லாமல், அவர்களால் யாருக்கும் ஒருபயனும் இல்லை. (406)

7. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று.

நுண்மாண், நுழைபுலம், இல்லான், எழில்நலம், மண்மாண், புனைபாவை, அற்று.

(பொ-ரை): நுட்பமானதாய், மாட்சிமையுடையதாய், நூல்களில் நுழைந்து பார்க்கும் ஆராய்ச்சி அறிவு இல்லாதவனுடைய எழுச்சியான தோற்றமும், அழகும், மண்ணினால் சிறப்பாக வனையப் பெற்ற பதுமையினுடைய எழுச்சியான தோற்றமும், அழகும் போன்றனவாகும்.

நுண் - நுட்பமாகிய; **மாண்** - மாட்சிமையுடைய; **நுழை புலம்** - நூல்களில் நுழைந்து ஆராயும் அறிவு; **எழில்நலம்** - தோற்றப் பொலிவும், அழகும்; **புனைபாவை** - வனையப்பட்ட பதுமை; **அற்று** - போன்றது.

(க-ரை): கல்வியறிவு இல்லாதவனுடைய தோற்றமும், அழகும், மண் பதுமையின் தோற்றமும், அழகும் போன்றனவாகும். பார்வைக்கு நன்றாகக் காணப்படும் கல்லாதவன் செயலுக்குப் பயன்படமாட்டான். (407)

8. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.

கல்லார்கண், பட்ட, திரு, நல்லார்கண், பட்ட, வறுமையின், இன்னாதே.

(பொ-ரை): கல்வி கற்காதவர்களிடத்தில் சேர்ந்திருக்கின்ற செல்வமானது, நன்கு கற்றவர்களிடத்தில் உண்டாகியிருக்கின்ற வறுமையினைக் காட்டிலும், மிக்க துன்பத்தைத் தருவதாகும்.

பட்டதிரு - சேர்ந்திருக்கின்ற செல்வம்; **இன்னாது** - துன்பம் தருவதாகும்.

(க-ரை): கற்றவர்களிடத்தே காணப்படும் வறுமையைக் காட்டிலும், கல்லாதவர்களிடத்தில் இருக்கும் செல்வம், மிக்க துன்பத்தைத் தரும். (408)

9. மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்துஇலர் பாடு.

கல்லாதார், மேற்பிறந்தார் ஆயினும், கீழ்ப்பிறந்தும் கற்றார், அனைத்துஇலர், பாடு.

(பொ-ரை): கல்லாதவர்கள் உயர்ந்த குடியில் பிறந்தவர்களானாலும், தாழ்வான குடியில் பிறந்த கற்றவர்களைப் போல, பெருமை உடையவர்களாக ஒருபோதும் கருதப்பட மாட்டார்கள்.

மேற்பிறந்தார் - உயர்ந்தகுடியில் பிறந்தவர்கள்; **கீழ்ப் பிறந்தும்** - தாழ்வான குடியில் பிறந்தவர்கள்; **கற்றார்அனைத்து** - கற்றவர்களைப் போல; **பாடுஇலர்** - பெருமை உடையவர் ஆக மாட்டார்கள்.

(க-ரை): குடிப்பிறப்பைவிட கல்வியே ஒருவரின் பெருமைக்குக் காரணமாக அமையும். (409)

10. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

விலங்கொடு, மக்கள் அனையர்; இலங்குநூல், கற்றாரோடு, ஏனையவர்.

(பொ-ரை): விலங்குகளோடு மக்களை ஒப்பிட்டுப் பார்த்தால், எப்படிக் காணப்படுவார்களோ, அப்படியே, கல்லாதவர்களோடு அறிவு விளங்குவதற்குக் காரணமான நூல்களைக் கற்றவர்களை ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்களும் காணப்படுவார்கள்.

இலங்குநூல் - அறிவு விளங்குவதற்குக் காரணமான நூல்கள்; **ஏனையவர்** - கல்லாதவர்.

(க-ரை): விலங்குகளுக்கும் மக்களுக்கும் உள்ள வேறுபாடே, நூல்களைக் கல்லாதவர்க்கும், கற்றவர்க்கும் உள்ள வேறுபாடாகும்.

(410)

42. கேள்வி

கேள்வி என்பது, கேட்டறிய வேண்டியவைகளைக் கேட்டுப் பயன்பெற வேண்டி, மிகக் கற்றறிந்த சான்றோரிடம், கற்றவராயினும், கல்லாதவராயினும் அவற்றைக் கேட்டறிதல் எனப்படும்.

**1. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.**

செல்வத்துள் செல்வம், செவிச்செல்வம்; அச்செல்வம், செல்வத்துள் எல்லாம், தலை.

(பொ-ரை): செல்வங்களுள் எல்லாம் சிறப்பான செல்வமானது, செவியின் மூலமாக வரும் கேள்விச் செல்வமாகும்; அச்செல்வமானது, பிற செல்வங்கள் எல்லாவற்றைக் காட்டிலும், முதன்மையானதாகும்.

செவிச்செல்வம் - செவியின் மூலம் வரும் கேள்விச் செல்வம்; **தலை** - முதன்மை.

(க-ரை): நிலையில்லாத பிற செல்வங்கள் பலவற்றைக் காட்டிலும், நிலையான கேள்விச் செல்வமானது சிறந்ததாகும்.(411)

**2. செவிக்குஉணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.**

செவிக்கு, உணவு, இல்லாத போழ்து, சிறிது, வயிற்றுக்கும், ஈயப்படும்.

(பொ-ரை): செவிக்கு உணவாகிய கேள்வி இல்லாத நேரத்தில்தான், வயிற்றுக்கும் சிறிதளவு உணவு வழங்கும் நிலை ஏற்படும்.

செவிக்கு உணவு - செவிக்கு உணவாகிய கேள்வி; **ஈயப்படும்** - வழங்கும்நிலை ஏற்படும்.

(க-ரை): வயிற்றுக்கு இடப்படும் உணவைக் காட்டிலும், செவிக்கு அளிக்கப்படும் கேள்வியானது மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகும். (412)

**3. செவியுணவிற் கேள்வி உடையார் அவியுணவின்
ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து.**

செவி உணவில், கேள்வி உடையார், நிலத்து, அவிஉணவின், ஆன்றாரோடு, ஒப்பர்.

(பொ-ரை): செவியுணவாகிய கேள்வியறிவினை மிகுதியாக உடையவர்கள், உலகத்தில் நோற்றலின் காரணமாகக் குறைந்த அளவு உணவினையுடைய, நிறைந்த அறிவினையுடைவர்க்கு ஒப்பான வராவார்கள்.

அவிதல் - குறைதல்; **அவிஉணவு** - வினைத்தொகை; ஆன்றோர்கள் புலனடக்கத்தோடு நோற்பார்கள் ஆதலால் குறைந்த அளவு உணவையே உட்கொள்வார்கள்; **நிலத்து** - உலகத்தில்.

(க-ரை): கேள்விச் செல்வத்தை மிகுதியாக உடையவர்கள், புலனடக்கம் கொண்ட ஆன்றோர்க்கு ஒப்பாக மதிக்கப்படுவார்கள்.
(413)

**4. கற்றிலன் ஆயினும் கேட்க அஃதுஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை.**

கற்றிலின், ஆயினும், கேட்க; அஃது, ஒருவற்கு, ஒற்கத்தின், ஊற்றாம், துணை.

(பொ-ரை): ஒருவன் கற்கவேண்டிய நூல்களை யெல்லாம் கற்காத கல்லாதவனாக இருந்தாலும், அவன் அவற்றின் பொருளைக் கற்றிந்தார் சொல்லக் கேட்க வேண்டும்; அந்தக் கேள்வியறிவு அவனுக்குத் தளர்ச்சி வரும்போது, ஊன்றுகோல் போன்று துணையாக நிற்கும்.

ஒற்கம் - தளர்ச்சி; தளர்ச்சி என்பது ஒருவனுக்கு வறுமையின் காரணமாகவோ, அறியாமையின் காரணமாகவோ, துன்பம் துக்கம் ஏற்படும்போதோ மனம் தளர்வதன் மூலம் உண்டாவது.

(க-ரை): ஒருவன் கற்க வேண்டிய நூல்களைத் தானே கற்காவிட்டாலும், கேள்வியறிவு உடையவனாக அவன் இருந்தால், அதுவே, அவனுக்குத் தக்க நேரத்தில் பெருந்துணையாக அமையும்.
(414)

**5. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.**

இழுக்கல், உடையுழி, ஊற்றுக்கோல், அற்றே, ஒழுக்கம் உடையார், வாய்ச்சொல்.

(பொ-ரை): வழுக்குதலை உடைய இடத்தில், நடக்கும்போது, ஊன்றுகோலானது ஒருவருக்கு உதவுவதுபோல, நல்லொழுக்கம் உடையவர்களின் வாயிலிருந்து பிறக்கின்ற சொற்கள் ஒருவர் இடர்ப்படும்போது பெரிதும் உதவும்.

இழுக்கல் உடையுழி - வழுக்குதல் உடைய இடத்தில் நடக்கும்போது; **ஊற்றுக்கோல்** - ஊன்றுகோல்; **அற்றே** - போன்று உதவும்.

(க-ரை): வழுக்குநிலத்தில் நடப்பதற்கு ஊன்றுகோல் ஒருவருக்கு எப்படிப் பயன்படுகிறதோ, அப்படியே நல்லொழுக்க முடையவர்களின் வாய்ச்சொற்கள், ஒருவர் தம் துன்ப நிலையைச் சமாளிக்க முற்படும்போதும், பெரிதும் பயன்படுவனவாகும். (415)

6. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்.

எனைத்தானும், நல்லவை, கேட்க; அனைத்தானும், ஆன்ற பெருமை, தரும்.

(பொ-ரை): எவ்வளவு சிறியனவே ஆனாலும், நல்ல உறுதிப் பொருள்களை ஒருவன் கேட்டறிதல் வேண்டும்; அப்படிக் கேட்டறிவது அவ்வளவு சிறிய அளவினது என்றாலும், நிறைந்த பெருமையினையே அவனுக்குத் தருவதாகும்.

எனைத்தானும் - அளவில் சிறியனவே ஆனாலும்; **நல்லவை** - நல்ல உறுதிப் பொருள்களை; **அனைத்தானும்** - அவ்வளவு சிறிய அளவினது என்றாலும்; **ஆன்ற** - நிறைந்த.

(க-ரை): சிறிய பொருளேயானாலும், நல்ல பொருள் பற்றிய கேள்வியறிவு வேண்டும். அதுவே, ஒருவருக்கு மிகுந்த பெருமையைத் தரும். (416)

7. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து ஈண்டிய கேள்வி யவர்.

இழைத்து உணர்ந்து, ஈண்டிய, கேள்வியவர், பிழைத்து உணர்ந்தும், பேதைமை, சொல்லார்.

(பொ-ரை): நுட்பமாக ஆராய்ந்தறிந்து, நிரம்பிய கேள்வியறிவினை உடையவர்கள், தாம் தவறாகச் சிலவற்றை

உணர்ந்தபோதிலும், தம்முடைய அறியாமையை வெளிப்படுத்தும் சொற்களைச் சொல்லமாட்டார்கள்.

இழைத்துணர்ந்து - நுட்பமாக ஆராய்ந்தறிந்து; **ஈண்டிய** - நிரம்பிய; **பிழைத்து** - தவறாக; **பேதைமை** - அறியாமையை வெளிப்படுத்தும் சொற்கள்.

(க-ரை): சிறந்த கல்வி கேள்வியறிவுடையவர்கள் தப்பித் தவறித் தவறாகச் சிலவற்றை உணர்ந்தபோதிலும், அறிவுக்குப் பொருந்திவராத சொற்களைச் சொல்லவே மாட்டார்கள். (417)

**8. கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.**

கேள்வியால், தோட்கப்படாத, செவி, கேட்பினும், கேளாத், தகையவே.

(பொ-ரை): நல்ல கேள்வியறிவால் துளைக்கப்படாத செவிகள், பிற ஓசைகளை இயற்கையாகக் கேட்டறிந்தாலும், அவை செவிட்டுத்தன்மை உடையனவாகவே கருதப்படும்.

தோட்கப்படாத - துளைக்கப்படாத; **கேட்பினும்** - பிற ஓசைகளை இயற்கையாகத் கேட்டறிந்தாலும்; **கேளாத்தகையவே** - செவிடாம் தன்மையை உடையனவே.

(க-ரை): ஆன்றோர் அறிவுரைகளைக் கேட்டுப் பழக்கப்பட்ட செவிகளே உள்ளபடியே கேட்கும் செவிகளாகும்; மற்றவை கேளாச் செவிகளே. (418)

**9. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது.**

நுணங்கிய, கேள்வியர், அல்லார், வணங்கிய, வாயினர் ஆதல், அரிது.

(பொ-ரை): நுண்ணிய கேள்வியறிவுடையரல்லாதவர்கள், பணிவான மொழியினையுடையவராகுதல் என்பது, இயலாத தொன்றாகும்.

நுணங்கிய - நுண்ணிய; நுட்பமான; **வணங்கிய** - பணிவான; **வாயினர்** - மொழியினையுடையவர்.

(க-ரை): சிறந்த கேள்வியறிவுடையவர்களே பணிவாகப் பேசுவார்கள்; அல்லாதவர்களால் பணிவாகப் பேச இயலாது. (419)

10. செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

செவியின், சுவை உணரா, வாயுணர்வின் மாக்கள், அவியினும், வாழினும், என்.

(பொ-ரை): செவிகளால் நுகரக்கூடிய கேள்வியறிவின் சுவையை உணராமல், வாயால் நுகரக்கூடிய உணவின் சுவையை மட்டும் உணர்பவர்கள், இறந்துபட்டாலும், உலகத்தார்க்கு அதனால் எந்தவிதக் கேடும் இல்லை; அவர்கள் வாழ்ந்தாலும் உலகத்தார்க்கு எந்தவித நன்மையும் இல்லை.

செவியின் சுவை - செவிகளால் நுகரக்கூடிய கேள்வியறிவின் சுவை; **வாயுணர்வு** - வாயால் நுகரக்கூடிய உணவின் சுவை; **அவியினும்** - இறந்தாலும்.

(க-ரை): கேள்வியறிவு இல்லாதவர்கள், இறந்தாலும், உயிரோடு இருந்தாலும் இரண்டும் ஒன்றுதான்; அவர்களால் யாருக்கும் எவ்விதப் பலனுமில்லை. (420)

43. அறிவுடைமை

அறிவுடைமை என்பது, ஒருவன் கல்வி கேள்விகளினால் அறிவுடைமை ஆவது பற்றியும், அதனால் அவன் பயன் பெறுவது பற்றியும், அவன் உண்மை அறிவுடையவனாக ஆவது பற்றியும் கூறுதல் எனப்படும்.

**1. அறிவுஅற்றம் காக்கும் கருவி செருவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்.**

அறிவு, அற்றம் காக்கும், கருவி; செருவார்க்கும், உள்அழிக்கல், ஆகா, அரண்.

(பொ-ரை): அறிவானது, ஒருவருக்கு அழிவுவராமல் காக்கக்கூடிய படைக் கருவியாகும்; அதுவே, பகைவர் உள்ளே புகுந்து அழிக்கமுடியாத அரணாக விளங்குவதுமாகும்.

அற்றம் - அழிவு; **செருவார்** - பகைவர்; **அரண்** - கோட்டை.

(க-ரை): அறிவு ஒருவருக்கு அழிவு வராமல் காக்கும் படைக் கருவியாகவும், பகைவரால் அழிக்க முடியாத கோட்டையாகவும் திகழ்வதாகும். (421)

**2. சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.**

சென்ற இடத்தால், செலவிடா, தீது, ஒரீஇ, நன்றின்பால், உய்ப்பது, அறிவு.

(பொ-ரை): ஒருவன் தன் மனத்தை, அது செல்லக் கருதிய இடத்திற்கு எல்லாம் செல்லவிடாமல், அதனைத் தீமையினின்றும் நீக்கி, நன்மையின்பால் செலுத்துவதே, அறிவுடைமையாகும்.

ஒரீஇ - நீக்கி; **நன்றின்பால்** - நன்மையின்பால்; **உய்ப்பது** - செலுத்துவது.

(க-ரை): மனம் போனபடி தீமை வழியில் செல்லாது, அதனைவிட்டு நீங்கி, நன்மை வழியில் செல்லுவதே ஒருவனுக்கு அறிவுடைமையாகும். (422)

**3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

எப்பொருள், யார், யார்வாய்க் கேட்பினும், அப்பொருள், மெய்ப்பொருள், காண்பது, அறிவு.

(பொ-ரை): எந்த ஒரு பொருளைப் பற்றி, எவரெவர் என்ன என்ன சொல்லக் கேட்டாலும், கேட்டவாறு அப்படியே ஏற்றுக் கொண்டுவிடாமல், அந்தப் பொருளினுடைய உண்மையான பொருளைக் கண்டறிவதே அறிவுடைமையாகும்.

எப்பொருள் - எந்த ஒரு பொருளைப் பற்றி; **மெய்ப்பொருள்** - உண்மையான பொருளை; **காண்பது** - கண்டறிவது.

(க-ரை): யாரொருவர் எந்தப் பொருள் பற்றிப் பேசினாலும், அதன் உண்மையான பொருளைக் கண்டறிவதே அறிவுடைமை யாகும். (423)

**4. எண்பொருள் ஆகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு.**

தான், எண்பொருள் ஆகச், செலச்சொல்லிப், பிறர்வாய், நுண்பொருள், காண்பது, அறிவு.

(பொ-ரை): ஒருவன், தான் சொல்லும் அரிய பொருளையும், கேட்கும் பிறர் மனத்தில் பதியுமாறு எளிதாகக் கூறிப், பிறர்கூறும் நுட்பமான பொருளையும், ஆராய்ந்து கண்டறிய வல்லதே அறிவுடைமையாகும்.

எண்பொருள் ஆக - பிறர் மனத்தில் பதியுமாறு எளிதாகக் கூறி, **நுண்** - நுட்பமான; **பொருள்** - பொருள்களை.

(க-ரை): ஒருவன் தான் பிறர்க்கு எளிதில் விளங்கும்படியாக அவரிடம் பேசிப், பிறருடைய பேச்சின் நுட்பமான பொருளைக் கண்டறிவதே அறிவுடைமையாகும். (424)

**5. உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு.**

உலகம், தழீஇயது, ஒட்பம்; மலர்தலும், கூம்பலும், இல்லது, அறிவு.

(பொ-ரை): உலகத்திலுள்ள உயர்ந்தோரையெல்லாம் நட்பாக்கிக் கொள்வது, ஒருவருக்குச் சிறந்த அறிவுடைமையாகும்; பின்னர் அந்த நட்பு விரிதலும், சுருங்கலும் இன்றி அதனை ஒரே நிலையில் வைத்துக் கொண்டிருக்க உதவுவது அறிவுடைமையாகும்.

உலகம் - உலகத்திலுள்ள உயர்ந்தோரை; **தழீஇயது** - நட்பாக்கிக் கொள்வது; **ஒட்பம்** - அறிவுடைமை; **மலர்தல்** - விரிதல்; **கூம்பல்** - சுருங்கல்.

(க-ரை): உயர்ந்தோரிடம் கொள்ளும் நட்பு, எப்பொழுதும் ஒரே நிலையில் இருக்க, ஒருவருக்குப் பயன்படுவது, அறிவுடைமையாகும். (425)

**6. எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.**

உலகம், எவ்வது உறைவது, உலகத்தோடு, அவ்வது, உறைவது, அறிவு.

(பொ-ரை): உயர்ந்தோர் எவ்வாறு நடந்துவருகின்றனரோ, அவர்களோடு பொருந்தி, ஒருவன் தானும் அவ்வாறே நடந்து கொள்வதுதான், அறிவுடைமையாகும்.

உலகம் - உயர்ந்தோர்; **எவ்வ** - எவ்வாறு; **உறைவது** - நடந்து கொள்வது.

(க-ரை): உயர்ந்தோரின் ஒழுக்கநெறியோடு ஒருவன் ஒத்து நடப்பதே, அறிவுடைமையாகும். (426)

**7. அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃதுஅறி கல்லா தவர்.**

ஆவது அறிவார், அறிவுடையார்; அஃது, அறிகல்லாதவர், அறிவிலார்.

(பொ-ரை): எதிர்காலத்தில் ஆகக்கூடியதை முன் அறிய வல்லவர்களே, அறிவுடையவர்கள் ஆவார்கள்; அப்படி முன் கூட்டியே அறியமாட்டாதவர்கள், அறிவில்லாதவர்கள் ஆவார்கள்.

ஆவது - ஆகக்கூடியது; **அறிவார்** - முன் அறிய வல்லார்.

(க-ரை): வரக்கூடியதை முன்னரே அறிய வல்லவர்கள் அறிவுடையவர்கள் ஆவார்கள்; அவ்வாறு அறியமாட்டாதவர்கள் அறிவில்லாதவர்கள் ஆவார்கள். (427)

**8. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.**

அஞ்சுதல், அஞ்சாமை, பேதைமை; அஞ்சுவது, அஞ்சல், அறிவார், தொழில்.

(பொ-ரை): அஞ்ச வேண்டியவைகளுக்கு அஞ்சாதிருத்தல், அறிவில்லாமையாகும்; அஞ்ச வேண்டியவைகளுக்கு அஞ்சுதல், அறிவுடையோரின் செய்கையாகும்.

அஞ்சுவது - அஞ்ச வேண்டியவை; **பேதைமை** அறிவில்லாமை; **தொழில்** - செய்கை.

(க-ரை): அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாதிருத்தல் அறிவில்லாமை யையும், அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுதல் அறிவுடைமையையும் காட்டுவனவாகும். (428)

9. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

எதிரதாக், காக்கும், அறிவினார்க்கு, அதிர, வருவதோர் நோய், இல்லை.

(பொ-ரை): எதிர்காலத்தில் வரக்கூடிய கெடுதிகளை முன்னரே அறிந்து, தம்மைக் காத்துக் கொள்ளக்கூடிய அறிவுடையவர்களுக்கு, அவர்கள் நடுங்கும்படியாக வரும் துன்பம், யாதொன்றும் இல்லை.

எதிரதா - எதிர்காலத்தில் வரக்கூடிய கெடுதிகளை முன்னரே அறிந்து; **அதிர** - நடுங்கும்படியாக; **நோய்** - துன்பம்.

(க-ரை): பின்வருவதை முன்னறிந்து காத்துக் கொள்ளக்கூடிய அறிவுடையோர்க்கு, யாதொரு துன்பமும் வராது. (429)

10. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார், என் உடையரேனும், இலர்.

(பொ-ரை): அறிவுடையோர் வேறுஒன்றும் இல்லாதவர் களாக இருந்தாலும், அவர்கள் எல்லாம் உடையவர்களாகவே உயர்ந்தோரால் கருதப்படுவார்கள்; அறிவில்லாதவர்கள் பிறஎல்லாம் உடையவர்களாக இருந்தாலும், அவர்கள் ஏதொன்றும் இல்லாதவர்களாகவே உயர்ந்தோரால் கருதப்படுவார்கள்.

உடையார் - உடையவர்களாகவே கருதப்படுவார்கள்; **இலர்** - இல்லாதவர்களாகவே கருதப்படுவார்கள்.

(க-ரை): அறிவுடையவர்கள் பிறஎல்லாம் இல்லாவிட்டாலும், உடையவர்களாகவும், அறிவில்லாதவர்கள் பிற எல்லாம் உடையவர்களாக இருந்தாலும், இல்லாதவர்களாகவுமே உயர்ந் தோரால் கருதப்படுவார்கள். (430)

44. குற்றங்கடிதல்

குற்றங்கடிதல் என்பது, அறிவுடையோரால், குற்றம் எனக் கடிந்தொதுக்கப்பட்டவை, தன்னிடம் நிகழாமல், ஒருவன் அவற்றை அறிந்து நீக்குதல் எனப்படும்.

1. செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

செருக்கும், சினமும், சிறுமையும், இல்லார், பெருக்கம், பெருமித நீர்த்து.

(பொ-ரை): இறுமாப்பும், வெகுளியும், இழிவான ஒழுக்கமும் இல்லாதவர்களுடைய செல்வமானது, பிறரால் மதிக்கப்படும் பெருந்தன்மையை உடையதாகும்.

செருக்கு - இறுமாப்பு; **சினம்** - வெகுளி; **சிறுமை** - இழிவான ஒழுக்கம்; **பெருக்கம்** - செல்வம்; **பெருமிதம்** - மதிக்கத்தக்க பெருந்தன்மை; **நீர்த்து** - தன்மையை உடையது.

(க-ரை): செருக்கு, சினம், சிறுமை ஆகிய குற்றங்கள் இல்லாதவர்களுடைய செல்வம், பிறரால் பெரிதும் மதிக்கப்படும். (431)

2. இவறலும் மாண்புஇறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு.

இவறலும், மாண்பு இறந்த மானமும், மாணா, உவகையும், இறைக்கு, ஏதம்.

(பொ-ரை): ஈயாத தன்மையும், நன்னெறி நீங்கிய மானமும், மிதமிஞ்சிய களியாட்டமும் அரசனுக்குக் குற்றங்களாகும்.

இவறல் - ஈயாத் தன்மை; **மாண்புஇறந்த மானமும்** - நன்னெறி நீங்கிய மானமும்; **மாணா** - அளவுகடந்த; **உவகை** - மகிழ்ச்சி; களியாட்டம்; **ஏதம்** - குற்றம்; **இறை** - அரசன்.

(க-ரை): ஈயாத தன்மை, முறைகெட்ட மானம், மிதமிஞ்சிய களியாட்டம் ஆகிய மூன்றும் அரசனிடம் இருக்கக்கூடாத குற்றங்களாகும். (432)

3. தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

பழிநாணுவார், தினைத்துணையாம், குற்றம், வரினும், பனைத்துணையாக், கொள்வர்.

(பொ-ரை): பழிக்கு நாணமுற்று அஞ்சுபவர்கள், தினையளவு சிறியதான குற்றம் தம்மிடம் ஏற்பட்டாலும், அதனைப் பனையினளவு பெரியதாகவே கருதுவார்கள்.

தினை - சிறிய அளவுக்கு எடுத்துக்காட்டு; **பனை** - பெரிய அளவுக்கு எடுத்துக்காட்டு.

(க-ரை): மிகச் சிறிய அளவு குற்றம் தம்மிடம் ஏற்பட்டாலும், அதனை மிகப்பெரிய அளவினதாக எண்ணுவது, பெரியோர்கள் இயல்பாகும். (433)

4. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை.

அற்றம் தரூஉம் பகை, குற்றமே; குற்றமே, பொருளாகக், காக்க.

(பொ-ரை): ஒருவனுக்கு முடிவைத் தரும் பகை குற்றமே யாகும்; ஆதலால், அக்குற்றத்தைச் செய்யாமலிருப்பதையே ஒரு நோக்கமாகக் கொண்டு, அவன், தன்னைத்தானே காத்துக் கொள் வேண்டும்.

அற்றம் தரூஉம் - முடிவினைத் தரும்; **பொருளாக** - இனிக் குற்றத்தைச் செய்யாமலிருப்பதையே ஒரு நோக்கமாகக் கொண்டு.

(க-ரை): குற்றம் ஒருவனுக்கு அழிவைத் தருவதால், அவன் குற்றம் எதுவும் சேராமல், தன்னைத்தானே காத்துக் கொள்ள வேண்டும். (434)

5. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

வருமுன்னர்க், காவாதான், வாழ்க்கை, எரிமுன்னர், வைத்தூறு போலக், கெடும்.

(பொ-ரை): குற்றம் ஏற்படுவதற்கு முன்னதாகவே, அது வராமல், தன்னைக் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கையானது, நெருப்பின் முன்னர் வைத்த வைக்கோல் குவியல் போல, அழிந்து போய்விடும்.

வருமுன்னர் - குற்றம் ஏற்படுவதற்கு முன்னதாக; **வைத்தூறு** - வைக்கோல் குவியல்; **கெடும்** - அழிந்து போய்விடும்.

(க-ரை): குற்றம் நேர்வதற்குமுன், தன்னைக் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கையானது, தீ முன்பட்ட வைக்கோல் குவியல் எப்படி எரிந்து அழிந்துவிடுமோ, அப்படியே அழிந்து போய்விடும். (435)

**6. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.**

தன்குற்றம், நீக்கிப், பிறர் குற்றம், காண்கில், இறைக்கு, என் குற்றம், ஆகும்?

(பொ-ரை): தன்னுடைய குற்றத்தை முதலில்கண்டு நீக்கிக் கொண்டு, பிறருடைய குற்றத்தினைப் பின்னர் காண முற்படு வானாயின், அரசன் ஒருவனுக்கு என்ன குற்றம் உண்டாக முடியும்? ஒன்றுமில்லை.

நீக்கி - முதலில்கண்டு நீக்கிக்கொண்டு; **காண்கிற்பின்** - பின்னர் காணமுற்படுவானாயின்; **இறை** - அரசன்.

(க-ரை): முதலில் தன் குற்றத்தை நீக்கிக் கொண்டு, பிறகு பிறர் குற்றத்தைப் பார்ப்பவன், குற்றமற்றவனாக இருப்பான். (436)

**7. செயற்பால செய்யாது இவறியான் செல்வம்
உயர்பால தன்றிக் கெடும்.**

செயற்பால, செய்யாது, இவறியான், செல்வம், உயர்பாலது, அன்றிக், கெடும்.

(பொ-ரை): செய்ய வேண்டிய நன்மைகளைச் செய்யாமல், செட்டுச் செய்து, பொருளைச் சேர்த்து வைத்திருப்பவனுடைய செல்வம், நிலைத்திருக்கும் தன்மை இல்லாமல், பயனின்றிக் கெட்டொழியும்.

செயற்பால - செய்ய வேண்டிய நன்மைகளை; **செய்யாது** - செய்யாமல்; **இவறியான்** - செட்டுச் செய்து சேர்த்துவைக்கும்; **உயர்பால** - நிலைத்திருக்கும் தன்மை.

(க-ரை): செய்ய வேண்டியவற்றைச் செய்யாது, சேமித்து வைக்கும் பொருள், பின்னர் யாருக்கும் பயனின்றி அழிந்து போய்விடும். (437)

**8. பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன்று அன்று.**

பற்றுள்ளம், என்னும், இவறன்மை, எற்றுள்ளும், எண்ணப் படுவது, ஒன்று, அன்று.

(பொ-ரை): பொருளினை விடாமல் பற்றிக் கொண்டிருக்கும் மனப்பான்மை என்னும் ஈயாத் தன்மையானது, எல்லாக் குற்றங்களுள்ளும் ஒன்றாக வைத்து எண்ணப்படாமல், தனியொரு பெருங்குற்றமாகவே கருதப்படும்.

பற்றுள்ளம் - பொருளினைவிடாமல் பற்றிக் கொண்டிருக்கும் மனப்பான்மை; **இவறன்மை** - ஈயாத் தன்மை; **எற்றுள்ளும்** - எந்தக் குற்றங்களுள்ளும்.

(க-ரை): பொருளை வைத்துக் கொண்டு ஈயாமை என்பது, குற்றங்களிலெல்லாம் தனியொரு பெருங்கொடிய குற்றமாகவே கருதப்படும். (438)

9. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

எஞ்ஞான்றும், தன்னை, வியவற்க; நன்றி பயவா வினை, நயவற்க.

(பொ-ரை): எந்த ஒரு காலத்திலும், ஒருவன், தன்னை மிக உயர்ந்தவனாக எண்ணி, வியந்து புகழ்ந்து பேசுதல் கூடாது; நன்மை பயக்காத செயல்களை அவன் விரும்பவுங் கூடாது.

எஞ்ஞான்றும் - எந்த ஒரு காலத்திலும்; **வியவற்க** - வியந்து புகழ்ந்து பேசுதல் கூடாது; **நயவற்க** - விரும்பக்கூடாது.

(க-ரை): தன்னைத் தானே புகழ்தலும், நன்மை தராத செயல்களை விரும்புதலும், ஒருவனுக்குக் குற்றங்களாகவே அமையும். (439)

10. காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்.

காதல, காதல், அறியாமை, உய்க்கிற், பின், ஏதிலார் நூல், ஏதில.

(பொ-ரை): ஒருவன், தான் விரும்பும் பொருள்களிடத்துத் தனக்குள்ள விருப்பத்தைப் பகைவர் அறியாதவண்ணம் நுகர வல்லவனானால், அவை மூலமாகத் தன்னை வஞ்சிக்கக் கருதும் பகைவர் சூழ்ச்சியானது, பயன்படாமல் பழுதாகிவிடும்.

காதல - விரும்பும் பொருள்கள்; **அறியாமை** விருப்பத்தினைப் பகைவர் அறியாத வண்ணம்; **உய்க்கிற்பின்** - நுகரவல்லவனானால்; **ஏதிலார்** - பகைவர்; **நூல்** - வஞ்சிக்கக் கருதும் எண்ணம்; **ஏதில** - பழுதாகிவிடும்.

(க-ரை): ஒருவன் தான் விரும்புவதைப், பகைவர் அறிந்து கொள்ள முடியாமல், நுகருவானேயானால், அந்தப் பகைவர், அவனை ஏதொன்றும் செய்ய முடியாது. (440)

45. பெரியாரைத் துணைக்கோடல்

பெரியாரைத் துணைக்கோடல் என்பது, ஒருவன் தன்னைக் காட்டிலும் முதிர்ந்த அறிவுடையோரும், தீய நெறிகளை விலக்கி நன்னெறியில் செல்லும் பண்புடையோரும், எல்லா வகைகளிலும் சிறந்து விளங்கும் சான்றோரும் ஆகிய பெரியோர்களைத் தனக்குத் துணையாகக் கொள்ளுதல் எனப்படும்.

1. அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல்.

அறன் அறிந்து, மூத்த அறிவுடையார், கேண்மை, திறன் அறிந்து, தேர்ந்துகொளல்.

(பொ-ரை): அறத்தின் சிறப்பை நன்கு அறிந்தவராய்த், தன்னைவிட மூத்தவராய் உள்ள அறிவுடையவர்களின் நட்பைப் பெறும் வகையினை அறிந்து, ஆராய்ந்து அதனைக் கொள்ள வேண்டும்.

அறன் - அறத்தின் சிறப்பினை; **கேண்மை** - நட்பை; **திறன் அறிந்து** - பெறும்வகை அறிந்து; **தேர்ந்து** - ஆராய்ந்து; **கொளல்** - கொள்ள வேண்டும்.

(க-ரை): பெரியோர்களின் நட்பைப் பெறும் வகைஅறிந்து, அதனைக் கொள்ள வேண்டும். (441)

2. உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

உற்றநோய், நீக்கி, உறாஅமை, முற்காக்கும், பெற்றியார், பேணிக் கொளல்.

(பொ-ரை): ஒருவன் தனக்கு நேர்ந்த துன்பங்களை நீக்கி, இனிமேல் வரக்கூடிய துன்பங்களை வராமல் முன்அறிந்து காக்கவல்ல தன்மையுடையாரைப் போற்றி, அவர்களைத் தனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.

உற்றநோய் - நேர்ந்த துன்பம்; **உறாஅமை** - இனிமேல் துன்பங்கள் வராமல்; **பெற்றியார்** - தன்மையுடையார்; **பேணி** - காப்பாற்றி; **கொளல்** - கொள்ள வேண்டும்.

(க-ரை): ஒருவன் தனக்கு வந்த துன்பத்தையும் போக்கி, இனித் துன்பம் வராமல் காக்கும் தன்மையையுடைய பெரியோர்களைத் துணையாகக் கொள்ள வேண்டும். (442)

3. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

பெரியாரைப் பேணித், தமராக் கொளல், அரியவற்றுள் எல்லாம், அரிதே.

(பொ-ரை): அறிவாற்றல் மிகுந்த பெரியோர்களைப் போற்றி, அவர்களைத் தனக்கு உற்றாராகக் கொள்ளுதல், ஒருவன், பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் மிக அருமையான ஒன்றாகும்.

பேணி - போற்றி; **தமரா** - உற்றாராக; **கொளல்** - கொள்ளுதல்; **அரியவற்றுள்** - அரிய பேறுகள்; **அரிது** - அருமையானது.

(க-ரை): அறிவாற்றலிற் சிறந்த பெரியோர்களை, ஒருவன், உற்றார்களாகக் கொள்ளுதல், அவன் பெறக்கூடிய பேறுகளிலெல்லா வற்றிலும் சிறந்ததொரு பேறாகும். (443)

4. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

தம்மின், பெரியார், தமரா, ஒழுகுதல், வன்மையுள் எல்லாம், தலை.

(பொ-ரை): அறிவாற்றலினால் தம்மைக்காட்டிலும் பெரியோராய் இருப்பவர்களைத், தமக்கு உற்றாராகக் கொண்டு, அவர் வழிநடத்தல், ஒருவருக்கு வலிமைகள் எல்லாவற்றையும் விடத், தலைசிறந்த வலிமையாக அமையும்.

தம்மின் - அறிவாற்றலில் தம்மைக் காட்டிலும்; **தமரா** - தமக்கு உற்றாராக; **ஒழுகுதல்** - நடத்தல்; **வன்மையுள்** - வலிமைகளுள்; **தலை** - தலைசிறந்தது; முதன்மையானது.

(க-ரை): அறிவாற்றல் மிக்க பெரியோர்கள் உற்றாராக இருத்தல், ஒருவருக்குச் சிறந்த வலிமையாகும். (444)

5. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

சூழ்வார் கண்ணாக, ஒழுகலான், மன்னவன், சூழ்வாரைச், சூழ்ந்து, கொளல்.

(பொ-ரை): சூழ உள்ள பெரியோர்களான அமைச்சர்களைக் கண்களாகக் கொண்டு, தன் ஆட்சியை நடத்துவதால், அரசனானவன், அப்படிப்பட்ட அமைச்சர்களை நன்றாக ஆராய்ந்து, தனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.

சூழ்வார் - சூழஉள்ள பெரியோர்களான அமைச்சர்கள்; **ஒழுகலான்** - தன் ஆட்சியை நடத்துவதால்; **சூழ்ந்து கொளல்** - ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.

(க-ரை): அரசனானவன் கண் போன்ற அமைச்சரை ஆராய்ந்து, தனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும். (445)

**6. தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல்.**

தக்கார் இனத்தனாய்த், தான், ஒழுக வல்லானைச் செற்றார், செயக்கிடந்தது, இல்.

(பொ-ரை): தக்க அறிவுடையோர் கூட்டத்தை உடையவனாய்த், தானும் அறிவோடு ஒழுக வல்லவனுக்குப், பகைவர்கள் செய்யக்கூடிய துன்பம் ஏதொன்றும் இல்லை.

தக்கார் - தக்க அறிவுடையார்; **இனத்தனாய்** - கூட்டத்தை உடையவனாய்; **செற்றார்** - பகைவர்; **செயக்கிடந்தது** - செய்யக்கூடிய துன்பம்; **இல்** - இல்லை.

(க-ரை): தக்க அறிவுடைய பெரியோர்களைத் துணையாகக் கொண்ட ஒருவனைப் பகைவர் ஏதொன்றும் செய்துவிட முடியாது. (446)

**7. இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்.**

இடிக்கும் துணையாரை, ஆள்வாரை, கெடுக்கும், தகைமையவர், யாரே?

(பொ-ரை): குற்றங் கண்டவிடத்துக் கடிந்து கூறும் தகுதி படைத்த பெரியோர்களைத், தனக்குத் துணையாகக் கொண்டு வாழ்பவனைக், கெடுக்கும் வல்லமை உடையவர்கள் யார் இருக்கின்றனர்? ஒருவருமில்லை!

இடிக்கும் குற்றம் கண்டவிடத்துக் கடிந்துரைக்கும்; **தகைமையவர்** - வல்லமை உடையவர்.

(க-ரை): குற்றம் கண்டவிடத்துக் கடிந்து உரைக்கக்கூடிய தகுதி படைத்த பெரியோர்களைத் துணையாகப் பெற்றவனை, வெல்லக்கூடிய பகைவர் எவருமில்லை. (447)

8. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

இடிப்பாரை இல்லாத, ஏமரா மன்னன், கெடுப்பார், இலானும், கெடும்.

(பொ-ரை): தவறுகண்டவிடத்துக் கடிந்து அறிவுரை கூறக்கூடிய பெரியோரின் துணையில்லாத, பாதுகாவலற்ற அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர் எவரும் இல்லாவிட்டாலும், அந்த நிலையிலேயே கெட்டுப்போவான்.

இடிப்பார் - தவறு கண்டவிடத்துக் கடிந்து அறிவுரை கூறும்; **ஏமரா** - பாதுகாவலற்ற.

(க-ரை): இடித்துரைப்பாரைப் பக்கத்திலே கொண்டிராத அரசன், பகைவர் கெடுக்காத நிலையிலும், தானே தன்னுடைய நிலையில் கெட்டுப் போவான். (448)

9. முதல்இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்புஇலார்க்கு இல்லை நிலை.

முதல் இலார்க்கு, ஊதியம் இல்லை; மதலையாம், சார்பு இலார்க்கு, நிலை இல்லை.

(பொ-ரை): முதலீடு இல்லாத வணிகர்க்கு அதனால் கிடைக்ககூடிய மிகுவருவாய் இல்லை; அதுபோன்று, கட்டடத்தைத் தாங்கும் தூண்போல தம்மைத் தாங்கக்கூடிய துணைவரில்லாத வர்க்கு, உறுதியான நிலைபேறு இல்லை.

முதல்இலார்க்கு - முதலீடு இல்லாத வணிகர்க்கு; **ஊதியம்** - மிகுவருவாய்; **மதலை** - கட்டடத்தைத் தாங்கும் தூண்; **சார்புஇலார்க்கு** - துணைவர் இல்லாதவர்க்கு; **நிலைஇல்லை** - நிலைபேறு இல்லை.

(க-ரை): முதலீடு செய்யாத வணிகர்க்கு மிகுவருவாய் இல்லாததுபோல, தம்மைத் தாங்கக்கூடிய பெரியோராகிய துணை இல்லாதவர்க்கு, உறுதியான நிலைபேறு இல்லை. (449)

10. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

நல்லார், தொடர், கைவிடல், பல்லார், பகை கொளலின், பத்தடுத்த, தீமைத்தே.

(பொ-ரை): ஒருவர் நல்லவராகிய பெரியோர்களின் நட்பைக் கைவிடுதல் என்பது, பலருடைய பகையைத் தேடிக் கொள்வதைக் காட்டிலும், பத்துமடங்கு தீமையுடையதாகும்.

பகைகொளலின் - பகையைத் தேடிக் கொள்வதைக் காட்டிலும்; **நல்லார்** - நல்லவராகிய பெரியோர்களின்; **தொடர்பு** - நட்பு.

(க-ரை): ஒருவன், பெரியோர்களின் நட்பை விட்டுவிடுதல் என்பது, பலருடைய பகையைத் தேடிக் கொள்வதைக் காட்டிலும், அந்தச் செயல் பலமடங்கு தீமையைப் பயப்பதாகும். (450)

46. சிற்றினம் சேராமை

சிற்றினம் சேராமை என்பது, தீமைகள் பலவற்றிற்குக் காரணமாக அமையும், அறிவாலும், சிந்தனையாலும், பண்பாலும் சொல்லாலும், செயலாலும் இழிந்தவராகக் காணப்படும் கூட்டத்தினரோடு சேராது இருத்தல் எனப்படும்.

1. சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

பெருமை, சிற்றினம், அஞ்சும்; சிறுமைதான், சுற்றமாச், சூழ்ந்து, விடும்.

(பொ-ரை): பெரியோர்கள், கீழ்மக்களின் கூட்டத்தைக் கண்டு அஞ்சுவார்கள்; ஆனால், சிறியோர்களோ அந்தக் கூட்டத்தைத் தம் சுற்றமாக் கருதிச் சூழ்ந்து கொள்ளுவார்கள்.

பெருமை - பெரியோர்கள்; **சிற்றினம்** - கீழ்மக்களின் கூட்டம்; **சுற்றமா** - உற்றாராக.

(க-ரை): கீழ்மக்கள் கூட்டத்தோடு பெரியோர்கள் சேரமாட்டார்கள்; ஆனால் சிறியோர்களோ, அந்தக் கூட்டத்தோடு சேர்ந்து உறவு கொண்டாடுவார்கள். (451)

2. நிலத்துஇயல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்பு அதுஆகும் அறிவு.

நிலத்து இயல்பான், நீர் திரிந்து, அற்றாகும், மாந்தர்க்கு, அறிவு, இனத்து இயல்பு, அது ஆகும்.

(பொ-ரை): தான்சேர்ந்த நிலத்தினுடைய தன்மைக்கு ஏற்ப நீரானது, தனது தன்மையில் வேறுபட்டு, அந்த நிலத்திற்குரிய தன்மையதாகிவிடும்; அதுபோலவே, மக்களின் அறிவும், தாம் சேர்ந்த இனத்தின் தன்மைக்கு ஒப்ப, தன் தன்மையில் மாறுபட்டு, அந்த இனத்தின் தன்மையதாகிவிடும்.

நிலத்துஇயல்பான் - தான்சேர்ந்த நிலத்தினுடைய தன்மைக்கு ஏற்ப; **திரிந்து** - மாறுபட்டு; **இனத்தியல்பு** - தான் சேர்ந்த இனத்தின் தன்மைக்கு.

(க-ரை): நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு நீரின் நிறம், சுவை போன்றவை மாறுபடுவது போல, மக்களின் தன்மையும், அவரவர்கள் சேரும் இனத்தைப் பொறுத்து அமையும். (452)

**3. மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தான்ஆம்
இன்னான் எனப்படும் சொல்.**

மாந்தர்க்கு உணர்ச்சி, மனத்தான் ஆம்; இன்னான், எனப்படும் சொல், இனத்தான் ஆம்.

(பொ-ரை): மக்களுக்கு இயற்கையான அறிவு, அவரவர் மனத்தின் இயல்பிற்கு ஏற்றவாறு, உண்டாகும்; 'இவன் இப்படிப்பட்டவன்' என்று கூறப்படும்சொல், அவரவர் சேரும் இனத்தின் இயல்பிற்கு ஏற்றவாறு உண்டாகும்.

உணர்ச்சி - இயற்கை அறிவு; **மனத்தான் ஆம்** - மனத்தின் காரணமாக உண்டாகும்; **இன்னான்** - இவன் இப்படிப்பட்டவன் என்ற சொல்; **இனத்தான்ஆம்** - இனத்தின் காரணமாக உண்டாகும்.

(க-ரை): ஒருவன் நல்லவன் என்றோ, கெட்டவன் என்றோ பெயரெடுப்பது, அவன் சேருகின்ற இனத்தைப் பொறுத்து அமைகிறது. (453)

**4. மனத்துஉளது போலக் காட்டி ஒருவற்கு
இனத்துஉளது ஆகும் அறிவு.**

அறிவு, மனத்து, உளதுபோலக், காட்டி, ஒருவற்கு, இனத்து, உளது ஆகும்.

(பொ-ரை): ஒருவனது இயற்கையான அறிவு, அவன் மனத்திலிருந்து தோன்றியதுபோலக் காட்டிக் கொண்டாலும், உண்மையில், அது அவன் சேர்ந்த இனத்தின் வழியாக உண்டானதாகும்.

அறிவு - இயற்கையான அறிவு; **மனத்துஉளது போல** - மனத்திலிருந்து தோன்றியது போல; **இனத்து** - அவன் சேர்ந்த இனத்தின் வழியாக.

(க-ரை): பொதுவாக, ஒருவனது இயற்கை அறிவு, அவனது இனப் பழக்கத்தால் உண்டாவதாகும். (454)

**5. மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம்தூய்மை தூவா வரும்.**

மனம் தூய்மை, செய்வினை தூய்மை, இரண்டும், இனம் தூய்மை, தூவா வரும்.

(பொ-ரை): ஒருவனது மனத் தூய்மை, செயலின் தூய்மை ஆகிய இவ்விரண்டும், அவன் சேர்ந்துள்ள இனத்தின் தூய்மையைப் பற்று கோடாகக் கொண்டு வருவனவாகும்.

இனம் - ஒருவன் சேர்ந்துள்ள இனத்தின்; **தூவா** - காரணமாகக் கொண்டு.

(க-ரை): ஒருவனது மனத்தூய்மையும், அவனது செயல் தூய்மையும், அவன் சேர்ந்துள்ள இனத்தின் தூய்மையைப் பொறுத்தே ஏற்படும். (455)

6. மனம்தூயார்க்கு எச்சம்நன்று ஆகும் இனம்தூயார்க்கு இல்லை நன்றுஆகா வினை.

மனம் தூயார்க்கு, எச்சம், நன்று ஆகும்; இனம் தூயார்க்கு, நன்று, ஆகாவினை, இல்லை.

(பொ-ரை): மனம் தூய்மையானவர்களுக்கு வாழ்க்கையில் எஞ்சி நிற்பவை புகழ் முதலிய நன்மைகள் ஆகும்; சேர்ந்த இனம் தூய்மையானவர்களுக்கு, நன்மையாகாத செயல் ஏதொன்றும் இல்லை.

எச்சம் நன்று ஆகும் - புகழ் முதலிய நன்மைகள் ஆகும்; **நன்றுஆகா** - நன்மையாகாத; **வினை** - செயல்.

(க-ரை): நல்ல மனத்தூய்மையுடையவர்க்கு நற்புகழ் உண்டாகும்; நல்லினம் சேர்ந்தோர்க்குச் செயலெல்லாம் நல்லனவாகும். (456)

7. மனநலம் மன்உயிர்க்கு ஆக்கம் இனநலம் எல்லாப் புகழும் தரும்.

மன்உயிர்க்கு, மன நலம், ஆக்கம்; இனநலம், எல்லாப் புகழும், தரும்.

(பொ-ரை): நிலைபெற்ற உயிர்களுக்கு மனநலமானது நல்ல ஆக்கத்தைக் கொடுக்கும்; ஒருவனுக்கு அவன் சேர்ந்த இனநலம் அதனோடு எல்லா வகையான புகழையும் தரும்.

மன் - நிலைபெற்ற; **உயிர்க்கு** - உயிர்களுக்கு; **ஆக்கம்** - பொருளாக்கம்; **நலம்** - நன்றாக இருத்தல்.

(க-ரை): இனத்தின் நலமானது ஒருவனுக்கு மனநலத்தோடு, எல்லாவகையான புகழையும் தரும். (457)

8. மனநலம் நன்குஉடையர் ஆயினும் சான்றோர்க்கு இனநலம் ஏமாப்பு உடைத்து.

மனநலம், நன்கு உடையர், ஆயினும், சான்றோர்க்கு, இனநலம், ஏமாப்பு உடைத்து.

(பொ-ரை): மனத்தின் நலத்தை இயற்கையிலேயே உறுதியாக உடையவரானாலும், சான்றோர்க்கு, அவர்சேர்ந்த இனத்தின்நலம், மேலும் பாதுகாப்பான வலிமையாதலை உடையதாகும்.

நன்குஉடையர் ஆயினும் - இயற்கையிலேயே உறுதியாக உடையவராயினும்; **ஏமாப்பு** - பாதுகாப்பான வலிமை யுடையதாதலை.

(க-ரை): மனநலத்தைக் காட்டிலும் இனநலம், ஒருவருக்குச் சில நேரங்களில் சிறந்த வலிமையைத் தருவதாகும். (458)

**9. மனநலத்தின் ஆகும் மறுமைமற்று அஃதும்
இனநலத்தின் ஏமாப்பு உடைத்து.**

மனநலத்தின், மறுமை ஆகும்; மற்று, அஃதும், இனநலத்தின், ஏமாப்பு, உடைத்து.

(பொ-ரை): ஒருவனது மனத்தின் நலத்தால், அவன் மறைந்தபிறகும் புகழ் உண்டாகும்; அம் மனநலமும் அவனது இனநலத்தால் பாதுகாப்பான வலிமையை உடையதாகும்.

மறுமை - மறுவாழ்வு அதாவது புகழ்வாழ்வு; ஒருவன் மறைந்தபிறகும் நிலைபெற்று நிற்கும் புகழ்; **ஏமாப்பு** - பாதுகாப்பான வலிமை.

(க-ரை): ஒருவனது மனநலத்தினால் உண்டாகும் நீடித்த புகழ் அவனது இனநலத்தால் மேலும் வலிமை பெறும். (459)

**10. நல்லினத்தின் ஊங்கும் துணைஇல்லை தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.**

நல்இனத்தின், ஊங்கும், துணை இல்லை; தீ இனத்தின், அல்லல், படுப்பதூஉம், இல்.

(பொ-ரை): ஒருவனுக்கு நல்ல இனத்தைப் பார்க்கிலும் துணை செய்வது வேறு ஒன்றும் இல்லை; தீய இனத்தைக் காட்டிலும் துன்பந்தருவது மற்று ஏதொன்றும் இல்லை.

ஊங்கும் - மேம்பட்ட; **அல்லல்படுப்பதூஉம்** துன்பப்படுத்துவதும்; இல் - இல்லை.

(க-ரை): ஒருவனுக்கு நல்லஇனம் துணை செய்யும் என்பதும், தீயஇனம் துன்பந்தரும் என்பதும் இயல்பான நிகழ்ச்சிகளாகும். (460)

47. தெரிந்து செயல்வகை

தெரிந்து செயல்வகை என்பது, ஒருவன் தான் செய்யப் போகும் செயல்பற்றி, நன்கு ஆராய்ந்து அறிந்து, நன்னெறியில் நின்று, செயலாற்றும் திறம் பற்றிக் கூறுதல் எனப்படும்.

**1. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.**

அழிவதூஉம், ஆவதூஉம், ஆகி, வழிபயக்கும், ஊதியமும், சூழ்ந்து, செயல்.

(பொ-ரை): ஒரு வினையைத் தொடங்கும்முன், அதற்கு ஆகும் செலவினையும், அதனால் உண்டாகும் ஆக்கத்தையும் கணக்கிட்டு, அது தரும் மிகு வருவாயையும் நன்கு ஆராய்ந்து பார்த்து, அந்த வினையைச் செய்ய வேண்டும்.

அழிவதூஉம் - ஆகும் செலவையும்; **ஆவதூஉம்** உண்டாகும் ஆக்கத்தையும்; **ஆகி** - கணக்கிட்டுக் கணித்து; **வழிபயக்கும் ஊதியமும்** - அதுதரும் மிகுவருவாயையும்; **சூழ்ந்து** - ஆராய்ந்து பார்த்து.

(க-ரை): ஒருவன் வினையைத் தொடங்குவதற்கு முன், அதன் செலவு, வரவுக் கணக்குகளையும், அதனால் ஏற்படும் மிகு வருவாயையும் ஆராய்ந்து பார்த்து, அந்த வினையைத் தொடங்க வேண்டும். (461)

**2. தெரிந்த இனத்தொடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்.**

தெரிந்த இனத்தொடு, தேர்ந்து, எண்ணிச், செய்வார்க்கு, அரும்பொருள், யாதொன்றும், இல்.

(பொ-ரை): தக்கவர்கள் என்று தேர்ந்தெடுத்த நண்பர்கள் கூட்டத்தோடு கலந்து, செய்ய வேண்டியதை ஆராய்ந்து, தாமும் நன்றாக எண்ணிப் பார்த்து, ஒரு செயலைச் செய்ய வல்லவர்களுக்குச், செய்வதற்கு அருமையான செயல் என்று, யாதொன்றும் இல்லை.

தெரிந்தஇனம் - தேர்ந்தெடுக்கப்பட்ட நண்பர்கள் கூட்டம்; **தேர்ந்து** - ஆராய்ந்து; **அரும்பொருள்** - அருமையான செயல்; **இல்** - இல்லை.

(க-ரை): துணை நிற்பவர்களோடு ஆராய்ந்து, பின்னர் தாமும் எண்ணிப் பார்த்துச், செயலாற்றும் ஒருவருக்கு ஆகாத செயல் என்று ஒன்றுமில்லை. (462)

3. ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.

ஆக்கம் கருதி, முதல் இழக்கும், செய்வினை, அறிவுடையார், ஊக்கார்.

(பொ-ரை): மேல்வரும் மிகு ஊதியத்தைக் கருதிப், போட்ட முதலையும் இழக்கக்கூடிய வினையை, அறிவுடையவர்கள் ஒருபோதும் செய்ய முயலமாட்டார்கள்.

ஆக்கம் - மேல்வரும் மிகு ஊதியம்; **செய்வினை** - தொழில்; **ஊக்கார்** - செய்ய முயலமாட்டார்.

(க-ரை): மிகுவருவாய் மட்டுமல்லாமல், முதலையும் சேர்த்து இழக்கக்கூடிய ஒரு வினையைச் செய்ய, அறிவுடையோர் ஒருபோதும் முயலமாட்டார்கள். (463)

4. தெளிவுஇ லதனைத் தொடங்கார் இளிவுஎன்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர்.

இளிவு என்னும், ஏதப்பாடு, அஞ்சுபவர், தெளிவுஇல் அதனைத், தொடங்கார்.

(பொ-ரை): தமக்கு இழிவு என்கின்ற குற்றம் வந்து சேரக்கூடாது என்று அஞ்சுபவர்கள், நன்மை பயக்கும் என்று தெளிவாகத் தெரியாத தொழிலைச், செய்யத் தொடங்கமாட்டார்கள்.

இளிவு - இழிவு; **ஏதப்பாடு** - குற்றம்; **தெளிவிலதனை** - நன்மை பயக்கும் என்ற தெளிவில்லாத தொழிலை.

(க-ரை): பிறரால் இகழப்படும் குற்றத்திற்கு அஞ்சுபவர்கள், ஆராயாமல், நன்மை பயக்காத ஒரு வினையைத் துவங்கமாட்டார்கள். (464)

**5. வகைஅறச் சூழாது எழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு.**

வகைஅறச், சூழாது, எழுதல், பகைவரைப், பாத்திப், படுப்பதோர், ஆறு.

(பொ-ரை): செய்யக்கூடிய வகைகளையெல்லாம் முற்றும் ஆராயாமல், பகைவர்மேல் ஒருவன் போரிடச் செல்லுதல், பகைவர்களை, அவர்கள் வளரும் நிலத்திலேயே நிலை பெறச் செய்யக்கூடிய ஒரு வழியாகும்.

வகைஅறச் சூழாது - வகைகளை எல்லாம் முற்றும் ஆராயாமல்; **எழுதல்** - போரிடச் செல்லுதல்; **பாத்தி** - வளரும் நிலப்பகுதி; **ஆறு** - வழி.

(க-ரை): வெல்லும் வகைகளை நன்கு ஆராயாமல், போருக்கு எழுபவன், பகைவரை மேலும் வலிவுடையவராக ஆக்குபவ னாவான். (465)

**6. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.**

செய்தக்க அல்ல, செயக் கெடும்; செய்தக்க, செய்யாமை யானும், கெடும்.

(பொ-ரை): ஒருவன் செய்யத் தகாதவற்றையெல்லாம் செய்தாலும் கெட்டொழிவான்; செய்யத்தக்கவற்றை யெல்லாம் செய்யாமல் விட்டாலும் கெட்டொழிவான்.

செய்தக்க அல்ல - செய்யத் தகாதவை; **செய்தக்க** - செய்யத்தக்கவை; **கெடும்** - கெட்டொழிவான்.

(க-ரை): ஒருவன் செய்வன செய்ய வேண்டும்; அல்லன நீக்க வேண்டும்; இல்லையேல் அவன் கெட்டொழிவான். (466)

**7. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.**

கருமம், எண்ணித், துணிக; துணிந்தபின், எண்ணுவம், என்பது இழுக்கு.

(பொ-ரை): செய்யத் தகுந்த வினையையும், செய்து முடிக்கும் வழிகளையும், பயனையும் ஆராய்ந்த பிறகே, அதனைத் தொடங்க

வேண்டும்; தொடங்கியபின், அவற்றையெல்லாம் ஆராய்ந்து கொள்ளலாம் என்பது குற்றமாகும்.

கருமம் - தொழில்; **துணிந்தபின்** - தொடங்கிய பின்; **எண்ணுவம்** - ஆராயலாம்; **இழுக்கு** - குற்றம்.

(க-ரை): ஒரு தொழிலைத் தொடங்கும் முன்பே, அதன் இயல்பு, வழிமுறை, பயன் ஆகியவை பற்றி ஆராய வேண்டும்; தொடங்கிய பின்னர், ஆராய்ந்து பார்க்கலாம் என்று எண்ணுவது தவறாகும். (467)

8. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

ஆற்றின், வருந்தா வருத்தம், பலர்நின்று, போற்றினும், பொத்துப்படும்.

(பொ-ரை): முறைப்படியான வழியில் தொடங்கிச் செய்யப்படாத முயற்சி, பலர் துணையாக நின்று அதனைக் காப்பாற்றினாலும், அது குற்றங்குறையுடையதாகவே முடியும்.

ஆறு - வழி; **வருத்தம்** - முயற்சி; **போற்றினும்** - காப்பாற்றி னாலும்; **பொத்துப்படும்** - குற்றங்குறையுடையதாகவே முடியும்.

(க-ரை): முடிக்கும் வழியை எண்ணாமல், ஒருவன் ஒரு முயற்சியில் திடீரென்று ஈடுபட்டால், அது இறுதியில் குற்ற முடையதாகவே முடியும். (468)

9. நன்றுஆற்றல் உள்ளும் தவறுஉண்டு அவரவர்
பண்புஅறிந்து ஆற்றாக் கடை.

அவர்அவர், பண்புஅறிந்து, ஆற்றாக்கடை, நன்று, ஆற்றல் உள்ளும், தவறு உண்டு.

(பொ-ரை): அவரவர் பண்புகளை நன்கு ஆராய்ந்து அறிந்து, அவற்றிற்கு ஏற்பச் செயல்களைச் செய்யாவிட்டால், நல்லவற்றைச் செய்யும்போதுகூடத் தவறு உண்டாகிவிடும்.

நன்று - நன்மை; **ஆற்றாக்கடை** - செய்யாவிட்டால்.

(க-ரை): நன்மை செய்வதானாலும், ஒருவர், பிறருடைய பண்புகளை ஆராய்ந்து அறிந்து செய்ய வேண்டும்; இல்லை எனில், தவறு ஏற்பட்டுவிடும். (469)

10. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு.

தம்மொடு கொள்ளாத, உலகு, கொள்ளாது; எள்ளாத, எண்ணிச், செயல் வேண்டும்.

(பொ-ரை): தம்முடைய நிலைமைக்குப் பொருந்தாத செயல்களை உயர்ந்தோர் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்; ஆதலால், உயர்ந்தோர் இகழாத செயல்களை எப்போதும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்.

கொள்ளாத - பொருந்தாத செயல்களை; **உலகு** - உயர்ந்தோர்; **கொள்ளாது** - ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்; **எள்ளாத** - இகழாத; **எண்ணி** - ஆராய்ந்து.

(க-ரை): ஒவ்வொருவரும் தம் தகுதி, திறமைக்கு ஏற்ற செயல்களையே செய்ய முற்பட வேண்டும். (470)

48. வலி அறிதல்

வலி அறிதல் என்பது, ஒருவன் தான் செய்யும் செயல்கள் அனைத்தையும், வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்கு ஏற்ற, எல்லாவகையான வலிமைகளையும், ஆராய்ந்து அறிதல் எனப்படும்.

1. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

வினை வலியும், தன் வலியும், மாற்றான் வலியும், துணை வலியும், தூக்கிச், செயல்.

(பொ-ரை): ஒருவன்தான் எடுத்துக் கொள்ளக் கருதும் செயலின் வலியையும், தனது வலியையும், தனது பகைவருடைய வலியையும், இருவர்க்கும் துணையாக நிற்பவரின் வலியையும் சீர்தூக்கிப் பார்த்துத், தன் சார்புடைய மொத்த வலிமை, மிகுமாயின், தான் மேற்கொள்ளும் செயலைப் பின்னர் செய்ய முயல வேண்டும்.

வினை - எடுத்துக்கொள்ளக் கருதும் செயல்; **மாற்றான்** - பகைவன்; **துணை** - இருசாரார்க்கும் துணையாக நிற்பவரின்; **தூக்கி** - சீர்தூக்கி.

(க-ரை): ஒருவன் தனக்குரிய செயலின் வலிமை, தன் வலிமை, துணை வலிமை ஆகிய வலிமைகள் பகைவரது வலிமையைக் காட்டிலும் சிறப்பாக அமைந்தால் மட்டுமே, அவன் அந்தச் செயலைச் செய்ய முற்பட வேண்டும். (471)

2. ஒல்வது அறிவது அறிந்துஅதன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்.

ஒல்வது அறிவது, அறிந்து, அதன்கண் தங்கிச், செல்வார்க்குச், செல்லாதது, இல்.

(பொ-ரை): செய்யக்கூடிய செயலைக் குறித்து, ஒருவர் அறிய வேண்டியவற்றையெல்லாம் அறிந்து, அவற்றிலே தம் முழுக் கவனத்தையும் செலுத்தி, மேற்கொண்டு, முயலுபவருக்கு, முடியாதது என்று ஒன்றுமில்லை.

ஒல்வது - செய்யக்கூடிய செயலை; **தங்கி** - முழுக் கவனத்தையும் செலுத்தி; **செய்வார்க்கு** - முயல்வார்க்கு; **செல்லாதது** - முடியாதது என்று; **இல்** - எதுவும் இல்லை.

(க-ரை): ஒருவன் தான் செய்ய வேண்டிய செயலைப் பற்றி, அறிய வேண்டுவனவற்றையெல்லாம் அறிந்து, செயலாற்றும் முயற்சியிலே இறங்குவானேயானால், அவனால் முடியாதது என்று, ஏதொன்றும் இல்லை. (472)

3. உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

உடைத், தம் வலி, அறியார், ஊக்கத்தின், ஊக்கி, இடைக்கண், முரிந்தார், பலர்.

(பொ-ரை): தம்முடைய இயல்பான வலிமையை அறியாமல், மன ஊக்கத்தினாலே ஒரு செயலைச் செய்யத் தொடங்கிப், பின்னர் அதனை முடிக்க முடியாமல் இடையில் கெட்டழிந்தவர்கள் பலராவார்கள்.

உடைத்தம் வலி - இயல்பான தமக்குள்ள வலிமையை; **ஊக்கத்தின்** - மன ஊக்கத்தினால்; **ஊக்கி** - செய்யத் தொடங்கி; **இடைக்கண்** - இடையில்; **முரிந்தார்** - கெட்டழிந்தவர்கள்.

(க-ரை): ஒருவர் தம் வலியறிந்தே ஒரு செயலைச் செய்யத் தொடங்க வேண்டும்; தம் வலியை அறிந்து கொள்ளாமல் தொடங்கினால், இடையிலேயே அவர் கெட்டொழிவார். (473)

4. அமைந்துஆங்கு ஒழுகான் அளவுஅறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

அமைந்துஆங்கு ஒழுகான், அளவு அறியான், தன்னை வியந்தான், விரைந்து கெடும்.

(பொ-ரை): பிறரோடு ஒத்து நடக்காமல், தன்னுடைய வலிமையின் அளவையும் அறியாமல், தன்னைத் தானே புகழ்ந்து கொண்டு, பிறரைப் பகைத்து வாழும் ஒருவன், விரைவில் கெட்டுப் போவான்.

ஆங்குஅமைந்து ஒழுகான் - பிறரோடு ஒத்து நடக்காமல்; **அளவு** - தன் வலிமையின் அளவை; **வியந்தான்** - புகழ்ந்து கொண்டவன்.

(க-ரை): தன்னுடைய வலிமையை அறியாமல், தன்னைத் தானே பெரிதாக எண்ணிக் கொண்டு, பிறரைப் பகைத்துக் கொண்டு வாழ்பவன் விரைவில் கெட்டொழிவான். (474)

**5. பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.**

பீலிபெய் சாகாடும், அப்பண்டம், சாலமிகுத்துப், பெயின், அச்சு இறும்.

(பொ-ரை): மிக மெல்லியதான மயிலிறகு ஏற்றப்பட்ட வண்டியேயானாலும்கூட, அவ்இறகுகளை அளவுக்கு மீறி மிகுதியாக வண்டியில் ஏற்றினால், அவ்வண்டியின் அச்சு ஒரு கட்டத்தில் முறிந்து போய்விடும்.

பீலி - மயில்இறகு; **பெய்** - ஏற்றப்பட்ட; **சாகாடும்** - வண்டியும்; **இறும்** - முறியும்; **சால** - மிகவும்; **மிகுத்துப் பெயின்** - மிகுதியாக ஏற்றினால்.

(க-ரை): வலிமையற்ற பலர் ஒன்று சேர்ந்தால், அவர்களுக்குப் புதியதொரு பொதுவலிவு தானே ஏற்பட்டுவிடும். (475)

**6. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்குஇறுதி யாகி விடும்.**

நுனிக் கொம்பர், ஏறினார், அஃதுஇறந்து ஊக்கின், உயிர்க்கு, இறுதியாகிவிடும்.

(பொ-ரை): ஒரு மரக்கிளையின் நுனிவரை ஏறிச் சென்றவர், அதற்கு அப்பாலும் ஏற முயலுவாரேயானால், அம்முயற்சி, அவரது உயிர்க்கு அழிவைத் தந்துவிடும்.

கொம்பர்நுனி - ஒரு மரக்கிளையின் கொம்பினது நுனி வரை; **ஏறினார்** - ஏறிச் சென்றவர்; **இறந்து** - கடந்து; **ஊக்கின்** - அப்பாலும் ஏற முயன்றால்; **இறுதி** - முடிவு.

(க-ரை): ஒருவன் தன் வலிமையின் அளவுக்கே செயல்பட வேண்டும்; அதையும் மீறிச் செயல்பட்டால், அவன் இடையில் அழிந்தே போவான். (476)

**7. ஆற்றின் அளவுஅறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.**

ஆற்றின், அளவு அறிந்து, ஈக; அது, பொருள்போற்றி, வழங்கும், நெறி.

(பொ-ரை): ஈதல்நெறியில் நிற்கக்கூடிய ஒருவன், தனது பொருள் வருவாயின் அளவினை அறிந்து, அதற்குத் தக்கபடி,

பிறர்க்குக் கொடுக்க வேண்டும்; அதுதான் பொருளினைப் பேணி ஒழுகும் வழியாகும்.

ஆற்றின் - ஈதல்நெறியில் நின்று; **அளவுஅறிந்து** - தனது வருவாயின் அளவினை அறிந்து; **ஈக** - கொடுக்க வேண்டும்; **நெறி** - வழி.

(க-ரை): ஒருவன் தனது பொருளின் வலிமையையறிந்து, அதற்குத் தக்கப்படி, செலவு செய்ய வேண்டும். (477)

8. ஆகாறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை.

போகாறு, அகலாக் கடை, ஆகாது, அளவு இட்டிது, ஆயினும், கேடு இல்லை.

(பொ-ரை): ஒருவனது பொருள் போகும் செலவு வழி விரிவடையாதிருந்தால், அவனது பொருள்வரும் வருவாய் வழி சிறியதாக இருந்தாலும், அதனால் அவனுக்குக் கேடொன்றும் இல்லை.

போகுஆறு - பொருள்போகும் செலவு வழி; **ஆகுஆறு** - பொருள்வரும் வருவாய் வழி; **இட்டிது** - சிறியதாக; **ஆயினும்** - இருந்தாலும்.

(க-ரை): ஒருவன் தன் வருவாய் வலிமையின் அளவு அறிந்து, அதற்குள்ளாகவே செலவு செய்ய வேண்டும். (478)

9. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

அளவுஅறிந்து, வாழாதான், வாழ்க்கை, உளபோல, இல்லாகித், தோன்றாக், கெடும்.

(பொ-ரை): தனக்குள்ள பொருளின் அளவைத் தெரிந்து கொண்டு, அதற்கு ஏற்ப வாழாதவனுடைய வாழ்க்கையானது, முதலில் வசதி உள்ளதுபோலத் தோற்றமளித்துப், பின்னர் அந்தத் தோற்றமும் இல்லாமல், கெட்டுப் போய்விடும்.

அளவு - தனக்குள்ள பொருளின் அளவை; **உளபோல** - உள்ளது போலத் தோற்றமளித்து; **இல்லாகி** - உண்மையில் ஏதொன்றும் இல்லாமல்; **கெடும்** - கெட்டுப் போய்விடும்.

(க-ரை): வரவுக்கு ஏற்ற செலவு செய்யத் தவறுபவனுடைய வாழ்க்கை, முதலில் இருப்பதுபோல் காணப்பட்டுப், பின்னர், அதன்

சாயலே இல்லாமல் மறைந்து போய் இறுதியில் அடியோடு கெட்டுப்போய்விடும். (479)

**10. உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை
வளவரை வல்லைக் கெடும்.**

உளவரை தூக்காத, ஒப்புரவு ஆண்மை, வளவரை, வல்லைக் கெடும்.

(பொ-ரை): ஒருவன் தனக்குள்ள பொருளின் அளவை எண்ணிப் பார்க்காமல் செய்த உதவியின் மிகுதிப் பாட்டால், அவனது செல்வத்தின் அளவு, இயல்பாகவே விரைவில் குறைந்து போகும்.

உளவரை - தனக்குள்ள பொருளின் அளவை; **தூக்காத** - ஆராய்ந்து பார்க்காமல்; எண்ணிப் பார்க்காமல்; **ஒப்புரவாண்மை** - உதவியின் மிகுதியான தன்மையால்; **வளவரை** - ஒருவனது செல்வத்தின் அளவு; **வல்லை** - விரைவில்; **கெடும்** - குறைந்து விடும்.

(க-ரை): கொடையளிப்பது நல்லதுதான் என்றாலும், ஒருவன் தனக்குள்ள பொருளின் அளவுஅறிந்து, அதற்கு ஏற்பப், பிறர்க்கு உதவிபுரிதல் வேண்டும். (480)

49. காலம் அறிதல்

காலம் அறிதல் என்பது, ஒருவன் ஒரு செயலைச் செய்யத் தொடங்குவதற்குமுன், அல்லது அந்தச் செயலில், அவன் இறங்குவதற்குமுன், அந்தச் செயலைக் குற்றங் குறையறச் செய்து முடிப்பதற்கேற்றபடி, எல்லாவகையான காலச் சூழ்நிலைகளும் பொருத்தமாக அமைந்திருக் கின்றனவா என்று கண்டறிதல் எனப்படும்.

**1. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.**

காக்கை, கூகையைப், பகல் வெல்லும்; இகல் வெல்லும் வேந்தர்க்குப், பொழுது, வேண்டும்.

(பொ-ரை): காக்கையானது, தன்னைவிட வலிமையுள்ள கோட்டானைப், பகற்பொழுதில் வென்றுவிடும்; அதுபோல, பகைவர்களை வெல்லக் கருதும் வேந்தர்களுக்கு, அதற்கு ஏற்றகாலம் இன்றியமையாது வேண்டப்படுவதாகும்.

கூகை - கோட்டான்; **இகல்** பகைமை கொண்ட பகைவர்களை; **பொழுது** - ஏற்றகாலம்.

(க-ரை): வலிவுமிக்க பகைவனாக இருந்தாலும், அவன் வலிவுகுறையும் காலம் பார்த்து, அவன் மீது படையெடுத்துச் சென்றால், உறுதியாக வெல்ல முடியும். (481)

**2. பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.**

பருவத்தோடு, ஒட்ட ஒழுகல், திருவினைத், தீராமை, ஆர்க்கும் கயிறு.

(பொ-ரை): ஒருவன் ஒரு வினையை, அதற்கு ஏற்ற காலத்தோடு பொருந்தியவாறு செய்தலானது, செல்வம் அவனை விட்டு நீங்காமல் அதனைப் பிணிக்கும் கயிறுபோல்வதாகும்.

பருவத்தோடு - ஒரு தொழிலைச் செய்வதற்கு ஏற்ற காலத்தோடு; **ஒட்ட** - பொருந்தியவாறு; **ஒழுகல்** - செய்தொழுக லானது; **திருவினை** - செல்வத்தை; **ஆர்க்கும்கயிறு** - பிணிக்கும் கயிறு.

(க-ரை): ஒருவன் காலத்திற்கு ஏற்றபடி முயற்சி செய்து, வினைபுரிந்தால், செல்வம் அவனைவிட்டு ஒருபோதும் நீங்காது. (482)

**3. அருவினை என்ப உளவோ கருவியால்
காலம் அறிந்து செயின்.**

கருவியால், காலம் அறிந்து, செயின், அருவினை, என்ப, உளவோ.

(பொ-ரை): வினைசெய்வதற்குரிய தக்க கருவிகளோடு, ஏற்ற காலத்தையும் அறிந்து, ஒருவன் செயல்புரிவானேயானால், அவனால் செய்வதற்கு அரிய வினைகள் என்பனவும் உளவோ? இல்லை!

கருவியால் - செய்வதற்குரிய கருவிகளோடு; **அரு** - அரிய; **வினை** - தொழில்; **என்ப** - என்பன; **உளவோ** - உண்டோ.

(க-ரை): தக்க கருவிகளைக் கொண்டு, செய்யும் முறையோடு ஏற்ற காலத்தை அறிந்து எதையும் செய்தால், முடியாதசெயல், என்று ஒன்றுமில்லை. (483)

**4. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.**

காலம் கருதி, இடத்தான், செயின், ஞாலம், கருதினும், கைகூடும்.

(பொ-ரை): ஒருவன் செய்யும் வினையைத் தகுதியான காலத்தை அறிந்து, ஏற்றதோர் இடத்தொடும் பொருந்தச் செய்வானேயானால், அவன் இவ்வுலகத்தையே ஆளக் கருதினாலும் அது கைகூடும்.

காலம்கருதி - தகுதியான காலத்தை அறிந்து; **இடத்தால்** - ஏற்றதோர் இடத்தொடு பொருந்த; **ஞாலம் கருதினும்** உலகத்தையே ஆளக் கருதினாலும்.

(க-ரை): தக்க காலத்தையும், ஏற்ற இடத்தையும் ஆராய்ந்து பார்த்து வினைசெய்பவன், உலகம் முழுவதையுங்கூட ஆள முடியும்; அப்படிப்பட்டவனால் முடியாதது என்று ஒன்றுமிருக்காது. (484)

**5. காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்.**

கலங்காது, ஞாலம், கருதுபவர், காலம், கருதி, இருப்பர்.

(பொ-ரை): இவ்வுலகம் முழுவதையும் தமதாகக் கைப்பற்றக் கருதுவோர், அதனைக் கொள்ளுவதற்கு ஏற்ற காலத்தை எண்ணி, மனக்கலக்கம் இல்லாது அது வருமளவும் காத்துக் கொண்டிருப்பார்கள்.

ஞாலம் - உலகம்; **கலங்காது** - மனக்கலக்கம் இல்லாமல்; **இருப்பர்** - காத்துக் கொண்டிருப்பர்.

(க-ரை): நினைத்த செயலை வெற்றிகரமாக முடிக்க வேண்டுமானால், அதற்கு ஏற்றகாலம் வரும் வரையிலும், பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். (485)

**6. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து.**

ஊக்கம் உடையான், ஒடுக்கம், பொருதகர், தாக்கற்குப், பேரும், தகைத்து.

(பொ-ரை): ஊக்கம் உடையவன் பகைமேல் படையெடுத்துச் செல்லாது, காலம் பார்த்து ஒதுங்கியிருத்தலானது, போர் செய்யும் ஆட்டுக்கடா, எதிராட்டின்மேல் நன்றாகப் பாய்வதற்காகப், பின்னே கால்வாங்கும் தன்மையை ஒத்ததாகும்.

ஒடுக்கம் - காலம் பார்த்து ஒதுங்கியிருத்தல்; **பொரு** - போர் செய்கின்ற; **தகர்** - ஆட்டுக்கடா; **தாக்கற்கு** - எதிரியைத் தாக்குதற்கு; **பேரும்** - பெயர்ந்து செல்லும்; **தகைத்து** - தன்மையது.

(க-ரை): ஏற்றகாலம் வரும் வரையில் ஒதுங்கியிருந்து, பின்னர் தக்க நேரத்தில் எதிரியின் மேல் படையெடுத்தல், ஒருவருக்கு உறுதியான வெற்றியைத் தரும். (486)

**7. பொள்ளென ஆங்கே புறம்வேரார்; காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.**

ஒள்ளியவர், பொள்ளென, ஆங்கே, புறம்வேரார்; காலம் பார்த்து, உள்வேர்ப்பர்.

(பொ-ரை): அறிவுடையோர் பகைவர்கள் தீமை செய்தவுடனேயே விரைவில் வெளிப்படையாகச் சினங்கொள்ள மாட்டார்கள்; அவர்களை வெல்லுவதற்குரிய காலத்தை எதிர் பார்த்திருந்து, அதுவரையிலும் உள்ளுக்குள்ளேயே வெகுண் டிருப்பார்கள்.

ஒள்ளியவர் - அறிவுடையோர்; **ஆங்கே** - பகைவர் தீமை செய்த அப்பொழுதே; **பொள்ளென** - விரைவாக; **புறம்** -

வெளிப்படையாக; **வேரார்** - சினங்கொள்ளமாட்டார்கள்; **உள்வேர்ப்பர்** - உள்ளுக்குள்ளேயே வெகுண்டிருப்பர்.

(க-ரை): பகைவர் தீமை செய்தவுடனேயே, சினந்து, விரைந்து, பகைமேல் காலம் பாராது செல்லுதலானது, ஒருவருக்கு முழு வெற்றியைத் தராது. (487)

8. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை.

செறுநரைக் காணின், சுமக்க; இறுவரை காணின், கிழக்காம் தலை.

(பொ-ரை): தமக்கு வெல்லுங்காலம் வரும்வரையிலும், பகைவரைக் கண்டால், மிகப் பணிவுடன் இருத்தல் வேண்டும்; அப்பகைவர்க்கு முடிவுகாலம் வரும்போது, அவர்கள் தலைகீழாகக் கெடுவார்கள்.

செறுநர் - பகைவர்; **சுமக்க** - வெல்லும் காலம்வரும் வரையிலும் மிகப்பணிவுடன் இருத்தல் வேண்டும்; **இறுவரை** - முடிவுகாலம்; **கிழக்காம் தலை** - பகைவர் தலைகீழாகக் கெடுவர்.

(க-ரை): பகைவர் ஏற்பட்டாலும், தமக்கு உரிய காலம் வரும் வரையிலும் ஒருவர் மிகப் பணிவாக இருத்தல் வேண்டும்; அப்படியிருந்தால், பகைவர்க்கு முடிவுகாலம் வந்து, அவர்கள் தலைகீழாகக் கவிழ்வார்கள். (488)

9. எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்.

எய்தற்கு, அரியது, இயைந்தக்கால், அந்நிலையே, செய்தற்கு அரிய, செயல்.

(பொ-ரை): ஒருவன், தனக்குக் கிடைத்தற்கு அரிய காலம் வந்து வாய்க்குமேயானால், அந்த நிலையிலேயே அவன் செய்தற்கரிய செயல்களையெல்லாம் செய்து முடிக்க வேண்டும்.

எய்தற்கு - கிடைத்தற்கு; **அரியது** - அரிய காலம்; **இயைந்தக்கால்** - வந்து வாய்க்குமேயானால்; **செயல்** - செய்து முடிக்க வேண்டும்.

(க-ரை): ஒருவன் தனக்குக் கிடைத்தற்கரிய காலம் வந்து கிட்டுமேயானால், அப்பொழுதே, அவன், செய்ய வேண்டிய செயல்களையெல்லாம் செய்து முடித்துவிட வேண்டும். (489)

**10. கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்
குத்துஒக்க சீர்த்த விடத்து.**

கூம்பும் பருவத்து, கொக்கு ஒக்க; சீர்த்த இடத்து, மற்றுஅதன், குத்து ஒக்க.

(பொ-ரை): ஒருவன் ஒடுங்கி இருக்க வேண்டிய காலத்தில், கொக்கினைப் போல் அடங்கி இருக்க வேண்டும்; ஏற்றகாலம் வாய்க்கும்போது, கொக்கு எவ்வாறு தப்பாது மீனைக் குத்துகிறதோ, அவ்வாறே குறிப்பிட்ட செயலைத் தவறாமல் செய்து முடித்துவிடல் வேண்டும்.

கூம்வும் பருவத்து - ஒடுங்கி இருக்க வேண்டிய காலத்தில்; **சீர்த்தவிடத்து** - ஏற்றகாலம் வாய்க்கும்போது.

(க-ரை): ஒடுங்கியிருக்க வேண்டிய காலத்தில், ஒருவன், கொக்கைப்போல் அடங்கியிருக்க வேண்டும்; மீனைக் காணும்போது கொக்கு அதனைக் குத்தி எடுத்து விடுவதைப் போல, செயலைச் செய்வதற்கான காலம்வரும்போது, அவன் அதனைச் செய்து முடித்துவிடல் வேண்டும். (490)

50. இடனறிதல்

இடனறிதல் என்பது, வலிமைகளையும், காலத்தையும், அறிந்து வினையை மேற்கொள்ளுபவன், தான் வெல்லுவதற்கான முறையில், செயலாற்றுவதற்கேற்ற இடத்தினை அறிதல் எனப்படும்.

**1. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது.**

முற்றும், இடம்கண்ட பின், அல்லது, எவ்வினையும், தொடங்கற்க; எள்ளற்க.

(பொ-ரை): பகைவரை முற்றுகை இடுவதற்கு ஏற்ற, தக்கதோர் இடத்தைக் கண்டபின் அல்லாமல், யாதொரு செயலையும் ஒருவர் தொடங்காதிருக்க வேண்டும்; அதேநேரம் பகைவரை இகழ்ந்து பேசாது இருக்கவும் வேண்டும்.

முற்றும் - பகைவரை முற்றுகையிடுவதற்கு ஏற்ற; **இடம்** - தக்க இடத்தை; **எள்ளற்க** - பகைவரை இகழ்ந்து பேசாதிருக்க வேண்டும்.

(க-ரை): முற்றுகைக்கு ஏற்ற இடங்கண்ட பிறகே, செயலைச் செய்யத் தொடங்கிப், பகைவரை வெல்ல வேண்டும்; அதுவரையில் பகைவரை இகழ்ந்துபேசாது இருக்க வேண்டும். (491)

**2. முரண்சேர்ந்த மொய்ம்பின் அவர்க்கும் அரண்சேர்ந்துஆம்
ஆக்கம் பலவும் தரும்.**

முரண் சேர்ந்த, மொய்ம்பின் அவர்க்கும், அரண்சேர்ந்து ஆம், ஆக்கம், பலவும் தரும்.

(பொ-ரை): பிற அரசர்களோடு மாறுபாடு கொள்ளக்கூடிய வலிமையுடையவர்களானாலும், அரணோடு சேர்ந்து நின்று செய்யும் போரானது, பலவித நன்மைகளையும் தருவதாகும்.

முரண்சேர்ந்த - பிற அரசர்களோடு மாறுபாடு கொள்ளக்கூடிய; **மொய்ம்பினவர்க்கும்** - வலிமையுடையவர்க்கும்; **அரண்சேர்ந்து** - கோட்டையினைச் சேர்ந்து; **ஆக்கம்** - ஆக்கத்தைத்தரும் போர்ச் செயலானது.

(க-ரை): அரசன்மிக்க வலிமையுடையவனாக இருந்தாலும், கோட்டை வலிவோடு கூடிய போர்தான், அவனுக்குப் பலவிதமான நன்மைகளைப் பயக்கும். (492)

3. ஆற்றாரும் ஆற்றி அடுப இடன்அறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்.

இடன்அறிந்து, போற்றிப், போற்றார்கண், செயின், ஆற்றாரும், ஆற்றி, அடுப.

(பொ-ரை): தமக்கு ஏற்ற இடமறிந்து, தம்மைக் காத்துக் கொண்டு, பகைவர்மேல் போர் தொடுப்பாரானால், அவர் வலிமையில்லாதவராக இருந்தாலும், வலிமையுடையவராகி வெல்வார்.

இடன்அறிந்து - ஏற்றஇடம் அறிந்து; **போற்றார்** - பகைவர்; **போற்றி** - தம்மைக் காத்துக் கொண்டு; **ஆற்றார்** - வலிமை யில்லாதவர்; **ஆற்றி** - வலிமையுடையவராகி; **அடுப** - வெல்லுவார்.

(க-ரை): தமக்கு ஏற்ற இடத்தைத் தேடிக் கொண்டு, தம்மையும் காத்துக் கொண்டு, பகைவர்மேல் போர் புரிந்தால், வலியற்றவரும் கூட, வலிமையுடையவராகி வெல்லுவார். (493)

4. எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன்அறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

இடன்அறிந்து, துன்னியார், துன்னிச்செயின், எண்ணியார், எண்ணம் இழப்பர்.

(பொ-ரை): போர்செய்வதற்கு ஏற்ற இடத்தை ஆராய்ந்து அறிந்து, அந்த இடத்தைப் பற்றிக் கொண்டவர்கள், அதனை விட்டுவிடாது, வெல்லுவதற்கு முயற்சி செய்தால், அவர்களை எதிர்த்து வெற்றி பெறக்கருதும் பகைவர், தம் எண்ணத்தினை இழந்துவிடுவார்கள்.

இடன் - போர் செய்வதற்கு ஏற்ற இடத்தை; **அறிந்து** - ஆராய்ந்து அறிந்து; **துன்னியார்** - போர் தொடுத்தவர்கள்; **துன்னிச் செயின்** - போரில் வெற்றி பெறுவதற்கு முயற்சி செய்தால்; **எண்ணியார்** - வெல்லக் கருதும் பகைவர்.

(க-ரை): ஏற்ற இடத்தை அறிந்து, அந்த இடத்தை விட்டுவிடாது, தொடர்ந்து போர் தொடுத்தால், பகைவர்கள் கட்டாயம் தோற்றுப் போவார்கள். (494)

5. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

முதலை, நெடும்புனலுள் வெல்லும்; புனலின் நீங்கின், அதனைப், பிற, அடும்.

(பொ-ரை): முதலையானது ஆழமுள்ள நீரிலிருக்கும் போது பிற உயிர்களைக் கொன்று வென்று நிற்கும்; அந்த நீரை விட்டு அது வெளிவரும்போது, அதனை மற்ற உயிர்கள் எளிதில் கொன்றுவிடும்.

நெடும்புனல் - ஆழமுள்ள நீரில்; **புனலின் நீங்கின்** - நீரை விட்டு வெளியேறும்போது; **பிற** - பிற உயிர்கள்.

(க-ரை): ஒருவரைப் பகைவர் எதிர்த்து நிற்க முடியாத இடத்தில் அவர் வெல்லுவார். போர் தொடுப்போர் எதிர்த்துப் போரிட முடியாத இடத்தில் பகைவர் வெல்வர். (495)

6. கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து.

கால்வல் நெடுந்தேர், கடல் ஓடா; கடல் ஓடும், நாவாயும், நிலத்து ஓடா.

(பொ-ரை): நிலத்தின்கண் ஓடக்கூடிய நல்ல உருளைகளைக் கொண்ட வலிய நெடிய தேர்கள் கடலின்கண் ஓடமாட்டா; கடலின்கண் ஓடக்கூடிய மரக்கலங்கள் நிலத்தின்கண் ஓடமாட்டா.

கால்வல் நெடுந்தேர் - நல்ல உருளைகளைக் கொண்ட வலிய நெடியதேர்; **நாவாய்** - மரக்கலம்.

(க-ரை): நெடுந்தேர் கடலில் ஓடாது; மரக்கலம் நிலத்தில் ஓடாது; ஆகையினால், வினை மேற்செல்லுபவர்கள் இடமறிந்து அவ்வினையைச் செய்ய வேண்டும். (496)

7. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்.

எஞ்சாமை எண்ணி, இடத்தால் செயின், அஞ்சாமை அல்லால், துணை வேண்டா.

(பொ-ரை): வினை செய்வதற்குரிய வழிவகைகளெல்லாம் குறைவில்லாதபடி, அவற்றை எண்ணிப் பார்த்து, இடத்தொடு பொருந்த, குறிப்பிட்ட வினையை ஒருவர் செய்தால், அவ்வினை வெற்றிபெற, அஞ்சாமையைத் தவிர அவருக்கு வேறு துணை எதுவும் வேண்டுவதில்லை.

எஞ்சாமை - வினை செய்வதற்குரிய வழிவகைகளெல்லாம் குறைவில்லாதபடி; **இடத்தால்** - இடத்தொடு பொருந்த; **செயின்** - செய்தால்; **அஞ்சாமை** - மனவுறுதி.

(க-ரை): நன்கு ஆராய்ந்து தேர்ந்தெடுத்த இடத்தொடு பொருந்த நின்று, ஒருவர் மனவுறுதியோடு வினையை மேற் கொண்டால், அவர் வெற்றி பெறுவது உறுதி. (497)

**8. சிறுபடையான் செல்இடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.**

சிறுபடையான், செல்இடம், உறுபடையான், சேரின், ஊக்கம்,அழிந்துவிடும்.

(பொ-ரை): சிறிய படையை உடையவன் ஆனாலும், அவனுக்குச் செல்வாக்கு உள்ள இடத்திற்குப், பெரும்படையினை யுடையவன் சென்றால், அவன் தனது ஊக்கம் அழிந்து கெட்டொழிவான்.

செல்இடம் - செல்வாக்கு மிகுந்த இடம்; **சேரின்** - சென்றால்; **உறுபடையான்** - பெரும் படையினையுடையவன்.

(க-ரை): தனக்கு ஏற்ற இடமா என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்ளாமல், தனது பெரிய படையின் வலிமையை மட்டுமே கருத்திற்கொண்டு வினைமேல் செல்பவன், உறுதியாகத் தோற்றழிவான். (498)

**9. சிறைநலனும் சீரும் இலர்எனினும் மாந்தர்
உறைநிலத்தோடு ஒட்டல் அரிது.**

சிறைநலனும், சீரும், இலர் எனினும், மாந்தர், உறைநிலத்தோடு, ஒட்டல், அரிது.

(பொ-ரை): மக்களானவர்கள் கோட்டைப் பாதுகாப்பும், பிற சிறப்புகளும் இல்லாதவர்களாக இருந்தாலும், அவர்கள் நிலையாய் வாழுகின்ற இடத்திற்குப் பகைவர் சென்று, அவர்களைத் தாக்குதல் என்பது கடினமான செயலாகும்.

சிறைநலன் - கோட்டைப் பாதுகாப்பு; **சீர்** - பிற சிறப்புகள்; **உறைநிலம்** - நிலையாய் வாழுகின்ற இடம்; **ஒட்டல்** - தாக்குதல்; **அரிது** - கடினமான செயல்.

(க-ரை): மக்கள் நிலைத்து வாழுகின்ற இடத்தில், கோட்டைப் பாதுகாப்பும், பிற சிறப்புகளும் இல்லை என்றாலும், அவர்களைப் பகைவர் வெல்ல முடியாது. (499)

**10. கால்ஆழ் களரின் நரிஅடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு.**

கண் அஞ்சா, வேல்ஆள், முகத்த களிறு, கால் ஆழ் களரின், நரி, அடும்.

(பொ-ரை): பாகருக்கு அஞ்சி அடங்காது, வேல் கொண்டு எதிர்க்கும் ஆட்களைக் கொம்பால் குத்தியெடுக்கும் யானையானது, அதன் கால்கள் அழுந்தி அமிழத்தக்க சேற்று நிலத்தில், அகப்பட்டுக் கொண்டால், அதனை நரியானது எளிதில் கொன்றுவிடும்.

கண்ணஞ்சா - பாகருக்கு அஞ்சியடங்காது; **வேலாள்** - வேல்கொண்டு எதிர்க்கும் ஆட்கள்; **முகத்த** - கொம்பால் குத்தியெடுக்கும் யானை; **களர்** - சேற்றுநிலம்; **அடும்** - கொல்லும்.

(க-ரை): வலிமையும், பெருமையும் உடையோரானாலும், தமக்கு ஒத்துவராத இடத்திற்கு வினைமேல் செல்வார்களானால், அவ்வலிமையாலும், பெருமையாலும் பயன் ஏதுமின்றி, மிகச் சிறியராலும்கூட, அவர்கள், தோற்கடிக்கப்படுவார்கள். (500)

51. தெரிந்து தெளிதல்

தெரிந்து தெளிதல் என்பது, ஒருவன் தன் அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரிய துணைவர்களைக் கொள்ளுவதில், அவர்களின் அறிவு, ஆற்றல், பண்பாடு, செயல்திறன் போன்ற தகுதி, திறமைகளை யெல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்துத், தெரிந்து தெளிவாகுதல் எனப்படும்.

1. அறம்பொருள் இன்பம் உயிர்அச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும்.

அறம், பொருள், இன்பம், உயிர் அச்சம், நான்கின், திறம் தெரிந்து, தேறப்படும்.

(பொ-ரை): அறம், பொருள், இன்பம், உயிர் காரணமாக ஏற்படும் அச்சம் என்னும் இந்த நான்கு வகைகளாலும், ஆராய்ந்து பார்த்த பின்னரே, ஒருவனை, ஒரு வினைக்கு உரியவனாகத் தெளிய வேண்டும்.

திறம்தெரிந்து - ஆராய்ந்து பார்த்து; **தேறப்படும்** - தெளிய வேண்டும்.

(க-ரை): அறம், பொருள், இன்பம், உயிரச்சம் ஆகியவற்றின் காரணமாக, எக்காரணங்கொண்டும் கடமை தவறாமல், செயலாற்றக் கூடியவனையே, வினையில் அமர்த்த வேண்டும். (501)

2. குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு.

குடிப்பிறந்து, குற்றத்தின் நீங்கி, வடுப்பரியும், நாணுடையான் கட்டே, தெளிவு.

(பொ-ரை): உயர்குடியில் பிறந்து, குற்றங்களினின்றும் நீங்கி, பழிதரும் செயல்களைச் செய்வதற்கு அஞ்சும் நாணமுடைய வனையே நம்பி, ஒருவன் தெளிவு பெற வேண்டும்.

குடிப்பிறந்து - உயர்குடியில் பிறந்து; **வடுப்பரியும்** - பழிதரும் செயல்களைச் செய்வதற்கு அஞ்சும்; **தெளிவு** - தெளிவு பெற வேண்டும்.

(க-ரை): உயர்குடியில் பிறந்து, குற்றமற்றவனாய்ப், பழிக்கு அஞ்சும் நாணமுடையவனாய் இருக்கும் ஒருவனையே, வினைக்கு ஏற்றவன் என்று தெளிவு பெற வேண்டும். (502)

3. அரியகற்று ஆசுஅற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு.

அரிய கற்று, ஆசு அற்றார் கண்ணும், தெரியும்கால், வெளிறு, இன்மை, அரிதே.

(பொ-ரை): கற்றற்கரிய நூல்களைக் கற்றுத் தேர்ந்து, குற்றமில்லாதவர்கள் என்று கருதப்படுவோரிடத்தும் ஆராயும் போது, அறியாமை முற்றிலும் இல்லாதிருத்தல் என்பது, அருமையேயாகும்.

அரிய - கற்றற்கரிய; **ஆசு** - குற்றங்கள்; **அற்றார்** - இல்லாதவர்கள்; **தெரியுங்கால்** - ஆராயும்போது; **வெளிறு** - அறியாமை; **இன்மை** - இல்லாதிருத்தல் என்பது; **அரிதே** - அருமையே.

(க-ரை): நன்கு கற்றறிந்து, குற்றமற்றவர்களாய் விளங்கு வோரிடத்தில்கூட, அறியாமை என்பது இருக்குமாதலால், அவர்களைப் பொறுத்தும் ஆராய்தல் வேண்டி ஏற்படும். (503)

4. குணம்நாடிக் குற்றமும்நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

குணம் நாடிக், குற்றமும்நாடி, அவற்றுள் மிகை நாடி, மிக்க, கொளல்.

(பொ-ரை): ஒருவனுடைய குணங்களையும் ஆராய்ந்து, அவனுடைய குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றுள் மிகுதியாக இருப்பவை எவை என்றும் ஆராய்ந்து, அப்படி மிகுதியாக இருப்பதை மட்டும் வைத்துக் கொண்டு, அவன் எப்படிப்பட்டவன் என்பதைத் தெரிந்து தெளிவு கொள்ளுதல் வேண்டும்.

மிகை - மிகுதியாக இருப்பதை; **நாடி** - ஆராய்ந்து; **மிக்க** - மிகுந்திருப்பதை வைத்து; **கொளல்** - கொள்ளுதல் வேண்டும்.

(க-ரை): உலகத்தார் ஒவ்வொருவரிடத்திலும் குணம், குற்றம் ஆகிய இரண்டும் இருப்பது இயற்கையாதலால், அவற்றுள், மிகுதியானதை மட்டும் வைத்து, ஒருவரை, அவர் எப்படிப்பட்டவர் என்பதைத் தெளிய வேண்டும். (504)

**5. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.**

பெருமைக்கும், ஏனைச் சிறுமைக்கும், கட்டளைக் கல், தத்தம் கருமமே.

(பொ-ரை): மக்களின் நற்பண்புகளால் ஏற்படும் பெருமைக்கும், தீய பண்புகளால் ஏற்படும் சிறுமைக்கும் உரிய காரணங்களை அளந்துகாட்டக்கூடிய உரைகல்லாக இருப்பவை, அவரவர்களுடைய செயல்களே ஆகும்.

கருமம் - செயல்கள்; **கட்டளைக்கல்** - உரைகல்.

(க-ரை): ஒருவனுடைய செயல்களைக் கொண்டே, அவனது பெருமையையும், சிறுமையையும் தெளிவுபடுத்திக் கொள்ள முடியும். (505)

**6. அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றுஅவர்
பற்றுஇலர் நாணார் பழி.**

அற்றாரைத் தேறுதல், ஓம்புக; மற்றுஅவர், பற்றுஇலர்; பழி நாணார்.

(பொ-ரை): சுற்றத்தார் இல்லாதவர்களை நம்பி, ஒருவர் தெளிவடையக் கூடாது; அவர்கள் உலகத்தாரோடு எந்தவிதத் தொடர்பும் இல்லாதவராவார்கள்; மேலும் பழிக்கு நாணவும் மாட்டார்கள்.

அற்றார் - சுற்றத்தார் இல்லாதவர்; **தேறுதல்** - நம்பித் தெளிவடைதல்; **ஓம்புக** - நீக்குக; **பற்றுஇலர்** - உலகத்தாரோடு எந்தவிதத் தொடர்பும் இல்லாதவராவர்.

(க-ரை): சுற்றம் இல்லாதவர்கள் உலகத்தோடு தொடர்பும் இல்லாமலும், பழிக்கும் நாணாமலும் இருப்பவர்களாதலால், அவர்களை ஒருபோதும், எவரொருவரும் நம்பக்கூடாது. (506)

**7. காதன்மை கந்தா அறிவுஅறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும்.**

காதன்மை, கந்தா, அறிவுஅறியார்த், தேறுதல், பேதைமை, எல்லாம், தரும்.

(பொ-ரை): அன்புடைமை காரணமாக, அறிய வேண்டுவன வற்றை யெல்லாம் அறியாமலிருப்பவரை நம்புதல், ஒருவருக்கு அறியாமை எல்லாவற்றையும் உண்டாக்கும்.

காதன்மை - அன்புடைமை; **கந்தா** - காரணமாக; **தேறுதல்** - நம்புதல்; **பேதைமை** - அறியாமை.

(க-ரை): அன்பு காரணமாக அறிவில்லாதவனைத் தேர்ந்தெடுப்பது அறியாமையாகும்; அவ்வறிவின்மையால் அவர் செய்யும் செயல்கள் நன்மைகள் பயக்கா. (507)

8. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.

பிறனைத் தேரான், தெளிந்தான், வழிமுறை, தீரா, இடும்பை தரும்.

(பொ-ரை): அயலானை ஆராய்ந்து பார்க்காமல், ஒருவன் தெளிந்தானேயானால், அதன் விளைவு, அவனுக்கு மட்டுமேயல்லாமல், அவன் வழிவழித் தலைமுறையினராக வருவோர்க்கும், நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

பிறனை - அயலானை; **தேரான்** - ஆராய்ந்து பார்க்காமல்; **தீரா** - நீங்காத; **இடும்பை** - துன்பத்தை.

(க-ரை): தனக்கு எந்த வகையிலும் தொடர்பில்லாத அயலானை, ஒருவன் ஆராய்ந்து பார்க்காமல், துணையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டால், அதனால், அவனுக்கு மட்டுமல்லாமல், அவனது வருங்காலத் தலைமுறையினர்க்கும் நீங்காத் துன்பம் ஏற்படும். (508)

9. தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்.

யாரையும், தேராது தேறற்க; தேர்ந்த பின், தேறும் பொருள், தேறுக.

(பொ-ரை): யாரையும் ஆராய்ந்து பார்க்காமல் ஒருவர் நம்புதல் கூடாது; அப்படி ஆராய்ந்து பார்த்தபின், நம்பத்தக்கவைகளை ஐயுறாது நம்புதல் வேண்டும்.

தேராது - ஆராய்ந்து பார்க்காமல்; **தேறற்க** - நம்பக்கூடாது; **தேறும்பொருள்** - நம்பத்தக்கவைகளை; **தேறுக** - நம்புதல் வேண்டும்.

(க-ரை): ஆராய்ந்து பார்க்காமல் யாரையும் வினைக்கு அமர்த்தக்கூடாது; ஆராய்ந்து பார்த்து வினைக்கு அமர்த்தியபிறகு, அவர் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். (509)

**10. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.**

தேரான் தெளிவும், தெளிந்தான் கண், ஐயுறவும், தீரா, இடும்பை தரும்.

(பொ-ரை): ஒருவனை ஆராய்ந்து பார்க்காமல் நம்புதலும், ஆராய்ந்து பார்த்து நம்பப்பட்டவனிடத்து ஐயப்படுதலும், நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

தேரான் - ஆராய்ந்து பார்க்காமல்; **தெளிதல்** - நம்புதல்; **தீரா** - நீங்காத; **இடும்பை** - துன்பத்தை.

(க-ரை): ஆராய்ந்து பார்க்காமல் ஒருவனை நம்பவுங் கூடாது; ஆராய்ந்து பார்த்து நம்பப்பட்டவனை ஐயப்படவுங் கூடாது; மாறாக அப்படிச் செய்தால், அவை நீங்காத துன்பத்தை ஒருவருக்குக் கொடுக்கும். (510)

52. தெரிந்து வினையாடல்

தெரிந்து வினையாடல் என்பது, யார் யார், எந்தஎந்த வினைகளை, எவ்வெவ்வாறு, தம்முடைய அறிவுத்திறன், ஆற்றல்திறன் கொண்டு சிறப்பாகவும், செம்மையாகவும், வெற்றிகரமாகவும் செய்து முடிப்பார்கள் என்பதைக் கண்டறிந்து, அந்தஅந்த வினைகளை, அவரவரைக் கொண்டு செய்வித்தல் எனப்படும்.

1. நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்.

நன்மையும், தீமையும், நாடி, நலம்புரிந்த, தன்மையான், ஆளப்படும்.

(பொ-ரை): நன்மையையும், தீமையையும் ஆராய்ந்து பார்த்து, நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்பையுடையவனே, வினைக்கு உரியவனாக ஆக்கப்படுவான்.

நலம்புரிந்த தன்மையான் - நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்பையுடையவன்; **ஆளப்படும்** - அமர்த்தப் படுவான்; ஆக்கப்படுவான்.

(க-ரை): நல்லன தீயனவற்றை ஆராய்ந்து பார்த்துத், தீயனவற்றை விலக்கி, நல்லனவற்றை மட்டுமே ஏற்று வினை செய்வோனையே, வேலையில் அமர்த்த வேண்டும். (511)

2. வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை.

வாரி பெருக்கி, வளம்படுத்து, உற்றவை, ஆராய்வான், வினை செய்க.

(பொ-ரை): பொருள்வரும் வழிகளையெல்லாம் விரிவு படுத்தி, அப்பொருளால், பயன்படக்கூடிய செல்வங்கள் பலவற்றையும் வளர்த்து, அவற்றுக்கு நேரக்கூடிய இடையூறு களையும் ஆராய்ந்து பார்த்து, அவற்றை நீக்க வல்லவனே, செயல் செய்ய முனைய வேண்டும்.

வாரி - பொருள் வரக்கூடிய வழிகளை; **வளம்படுத்து** - செல்வங்கள் பலவற்றையும் வளர்த்து; **உற்றவை** - அவற்றுக்கு நேரக்கூடிய இடையூறுகள்; **வினை** - செயல்.

(க-ரை): பொருளைத் திரட்டுவதற்கான வழிகளை வளர்த்து, அவற்றால் செல்வங்களைப் பெருக்கி, அவற்றுக்கு நேரும் இடையூறுகளையும் நீக்கி, அதன் பிறகே ஒருவன் செயல் செய்ய முற்பட வேண்டும். (512)

3. அன்புஅறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

அன்பு, அறிவு, தேற்றம், அவா இன்மை, இந்நான்கும், நன்குடையான் கட்டே, தெளிவு.

(பொ-ரை): அன்புடைமை, அறிவுடைமை, மனங்கலங்காத தன்மை, அவா இல்லாமை ஆகிய நான்கு நலன்களையும் செம்மையாக உடையவனிடத்தில், வினையை ஒப்படைக்கும் தெளிவு ஒருவருக்கு இருத்தல் வேண்டும்.

தேற்றம் - மனங்கலங்காத தன்மை; **நன்குடையான் கட்டே** - செம்மையாக உடையவனிடத்தில்.

(க-ரை): அன்பு, அறிவு, மனங்கலங்காத தன்மை, அவா இல்லாமை ஆகிய நான்கு நலன்களும் யாரிடத்தில் நன்கு அமைந்திருக்கின்றனவோ, அவரிடத்தில் மட்டுமே, குறிப்பிட்ட வினையை ஒப்படைக்க வேண்டும். (513)

4. எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையால்
வேறாகும் மாந்தர் பலர்.

எனைவகையால், தேறியக் கண்ணும், வினைவகையால், வேறாகும், மாந்தர், பலர்.

(பொ-ரை): எல்லாவிதமான வகைகளினாலும் ஆராய்ந்து தெளிந்த பிறகும், செயலை முறையாகச் செய்யும் போது, அச்செயலின் இயல்பால் மனம் வேறுபடும் மக்கள், உலகத்தில் பலராகவே இருந்து வருகிறார்கள்.

எனை - எல்லாவிதமான; **வகையால்** - வகைகளினால்; **தேறியக் கண்ணும்** - ஆராய்ந்து தெளிந்த பிறகும்; **வேறாகும்** - மனம் வேறுபடும்; **மாந்தர்** - மக்கள்.

(க-ரை): செயலுக்குத் தகுந்தபடி அவாவுக்கு ஆளாகி மனம் வேறுபடும் மக்கள் பலர் உலகத்தில் இருப்பதால், செயல் செய்யும் போதே, தெளிந்து செயல் ஒப்படைக்கப்பட்டவரை, அவ்வப்போது ஆராய்ந்து வரவேண்டும். (514)

**5. அறிந்துஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தான்என்று ஏவற்பாற் றன்று.**

வினை, அறிந்து, ஆற்றிச், செய்கிற்பாற்கு, அல்லால், தான் சிறந்தான், என்று, ஏவற்பாற்றன்று.

(பொ-ரை): செயல்செய்யும் வழிகளை அறிந்து, வரும் இடையூறுகளை யெல்லாம் தாங்கிக் கொண்டு, ஒரு செயலைச் செய்து முடிக்கும் வல்லமையுடையவனை அல்லாமல், மற்றொருவன் தன்னிடத்து அன்பிற் சிறந்தவன் என்று கருதி, அச்செயலைச் செய்யுமாறு அவனை ஏவக்கூடாது.

ஆற்றி - வரும் இடையூறுகளையெல்லாம் தாங்கி; **செய்கிற்பாற்கு அல்லால்** - செய்து முடிக்கும் வல்லமை யுடையவனை அல்லாமல்; **சிறந்தான்** - அன்பிற் சிறந்தான்; **ஏவற்பாற்றன்று** - செயலைச் செய்யுமாறு ஏவக்கூடாது.

(க-ரை): செய்யக்கூடிய வழிகளை அறிந்து, துன்பங்களை யெல்லாம் பொறுத்துக் கொண்டு செய்பவனைத் தவிர, தன்னிடத்தில் அன்புடையவன் என்று கருதி, வேறு யாரொருவரையும் வினையில் அமர்த்தக்கூடாது. (515)

**6. செய்வானை நாடி வினைநாடி காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்.**

செய்வானை நாடி, வினைநாடி, காலத்தோடு, எய்த உணர்ந்து, செயல்.

(பொ-ரை): செயல் செய்பவனது திறத்தை ஆராய்ந்து, செய்யப்படும் செயலையும் ஆராய்ந்து, காலத்தின் இயல்பையும் அவற்றோடு பொருந்துமாறு ஆராய்ந்து, செயலைச் செய்ய ஏவுதல் வேண்டும்.

செய்வான் - செயல் செய்பவன்; **வினை** - செயல்; **நாடி** - ஆராய்ந்து; **எய்தஉணர்ந்து** - பொருந்த ஆராய்ந்து.

(க-ரை): செயல் செய்பவன், செயல், காலம் ஆகிய மூன்றையும் ஆராய்ந்து பார்த்த பிறகே, வினைசெய்ய ஏற்ற ஒருவனை அமர்த்த வேண்டும். (516)

**7. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.**

இதனை, இதனால், இவன்முடிக்கும், என்று ஆய்ந்து, அதனை, அவன்கண், விடல்.

(பொ-ரை): இச்செயலை, இன்ன வழியைக் கொண்டு, இன்னவன் முடிப்பான் என்று ஆராய்ந்து, பின்னர் அச்செயலை அன்னவனிடம் மட்டுமே ஒப்படைக்க வேண்டும்.

இதனை - இச்செயலை; **இதனால்** - இன்ன வழியைக் கொண்டு; **இவன்** - இன்னவன்; **ஆய்ந்து** - ஆராய்ந்து.

(க-ரை): ஒரு செயலை, அதனைச் செய்து முடிப்பதற்கு ஏற்ற தகுதியுடையவனிடத்தில், மட்டுமே ஒப்படைக்க வேண்டும். (517)

8. வினைக்குஉரிமை நாடிய பின்றை அவனை அதற்குரியவன் ஆகச் செயல்.

வினைக்கு, உரிமை, நாடிய பின்றை, அவனை, அதற்கு உரியவன், ஆகச் செயல்.

(பொ-ரை): ஒருவன் ஒரு செயலைச் செய்வதற்கு உரியவனாக இருப்பதை ஆராய்ந்து அறிந்த பிறகு, அவனை அச்செயலுக்கு உரிமையுடையவனாக ஆக்க வேண்டும்.

வினை - செயல்; **நாடியபின்றை** - ஆராய்ந்து அறிந்தபிறகு.

(க-ரை): ஒரு செயலைச் செய்வதற்கு ஏற்றவன் என்று ஒருவனைக் கண்டறிந்த பிறகு, அவனை அச்செயலுக்கு உரியவனாக ஆக்கிவிட வேண்டும். (518)

9. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக நினைப்பானை நீங்கும் திரு.

வினைக்கண், வினையுடையான், கேண்மை, வேறாக, நினைப்பானை, திரு நீங்கும்.

(பொ-ரை): தான் மேற்கொண்ட செயலில், எப்பொழுதும் முயற்சியுடையவனது உறவை, வேறுபாடாக நினைக்கும் தலைவனை விட்டுச் செல்வம் நீங்கிவிடும்.

வினைக்கண் - மேற்கொண்ட செயலில்; **வினையுடையான்** - எப்பொழுதும் முயற்சி உடையவனது; **கேண்மை** - உறவு; **வேறாக நினைப்பானை** - வேறுபாடாக நினைக்கும் தலைவனை; **திரு** - செல்வம்.

(க-ரை): பிறருடைய பேச்சைக் கேட்டுச் செயலில் முயற்சியுடையானை வேறாகத் தலைவனானவன் எண்ணினால், அதனால் அவன் செல்வம் வரவரக் குறைந்து போய்விடும். (519)

10. நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு.

வினைசெய்வான், கோடாமை, உலகு, கோடாது; மன்னன், நாள்தோறும், நாடுக.

(பொ-ரை): அரச வேலையில் அமர்ந்தோர் மனங்கோணாது கடமை ஆற்றுவாரானால், குடிமக்களும் மனங்கோணாமல் வாழுவார்கள்; ஆதலால், அரசன் அவர்களது நிலையை நாள்தோறும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

வினைசெய்வான் அரசவேலையில் அமர்ந்தோர்; **கோடாமை** - மனங்கோணாது; **உலகு** - குடிமக்கள், **நாடுக** - ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

(க-ரை): அரச வேலையில் ஈடுபட்டிருப்போர் மனங் கோணாது பணியாற்றினால் தான், குடிமக்களும் மனத்தாங்கல் இல்லாமல் வாழ்வார்கள்; ஆதலால், அரசன் அவர்களின் நிலைமையை நாள்தோறும் ஆராய்ந்து பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும். (520)

53. சுற்றந்தழால்

சுற்றந்தழால் என்பது, ஒருவன் தன்னைச்சுற்றி, அன்பு காரணமாகவும், அலுவல் காரணமாகவும், உறவு காரண மாகவும் தழுவி நிற்கும் சுற்றத்தார்கள், எக்காரணங் கொண்டும், தன்னைவிட்டு நீங்காமல் இருக்க, அவர்களைத் தழுவிக் கொள்ளுதல் எனப்படும்.

**1. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.**

பற்றற்ற கண்ணும், பழைமை பாராட்டுதல், சுற்றத்தார் கண்ணே, உள.

(பொ-ரை): ஒருவன் செல்வமெல்லாம் இழந்து வறியவனாக ஆனபோதிலும்கூட, அவனுக்கும் தமக்கும் இருந்த பழைய உறவை நினைவுபடுத்திப் பார்த்துப், பாராட்டிப் பேசும் பண்புகள், சுற்றத்தாரிடம் மட்டுமே காணப்படும்.

பற்று - செல்வம்; **அற்றகண்ணும்** - இழந்து வறியவனாக ஆனபோதும்; **பாராட்டுதல்** - நினைவுபடுத்திப் பாராட்டும் பண்புகள்; **உள** - காணப்படும்.

(க-ரை): வறுமையுற்ற நிலையிலும் ஒருவனை மறக்காது, அன்புகாட்டும் பண்பு, சுற்றத்தாரிடம் மட்டுமேதான் காணப்படும். (521)

**2. விருப்புஅறாச் சுற்றம் இயையின் அருப்புஅறா
ஆக்கம் பலவும் தரும்.**

விருப்பு அறாச், சுற்றம், இயையின், அருப்பு அறா, ஆக்கம் பலவும், தரும்.

(பொ-ரை): அன்பு நீங்காத சுற்றம் ஒருவனுக்கு அமைந்து விடுமேயானால், அதுவே, மேன்மேலும் வளர்ச்சி குன்றாத செல்வங்கள் பலவற்றையும் அவனுக்குக் கொடுக்கும்.

விருப்பு - அன்பு; **அறா** - நீங்காத; **இயையின்** - அமைந்து விடுமேயானால்; **அருப்புஅறா** - வளர்ச்சி குன்றாத; **ஆக்கம்** - செல்வம்.

(க-ரை): அன்புடைய சுற்றத்தை உடையவர்களுக்கு, மேன்மேலும் நன்மைகள் பலவும் உண்டாகும். (522)

**3. அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடுஇன்றி நீர்நிறைந் தற்று.**

அளவளாவு, இல்லாதான், வாழ்க்கை, குளவளாக், கோடுஇன்றி, நீர் நிறைந்தற்று.

(பொ-ரை): சுற்றத்தாரோடு மனங்கலந்து பழகி வாழாதவன் வாழ்க்கையானது, ஒரு குளத்தின் பரப்பு, கரையில்லாமலேயே நீர் நிறைந்தது போன்றதாகும்.

அளவளாவு இல்லாதான் - மனங்கலந்து பழகி வாழாதவன்; **குளவளா** - குளத்தின் பரப்பானது; **கோடுஇன்றி** - கரையில்லாமல்.

(க-ரை): கரையில்லாத குளம் நீர் நிறைந்தாலும் எப்படி நீரில்லாமல் வறண்டு பாழ்பட்டுக் கிடக்குமோ, அதுபோல, சுற்றத்தார் இருந்தாலும், அன்போடு கலந்து பழகாவிட்டால், ஒருவனது வாழ்க்கையும் பாழ்பட்டுப் போய்விடும். (523)

**4. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வம்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.**

செல்வம், தான் பெற்றத்தால், பெற்ற பயன், சுற்றத்தால், சுற்றப்பட, ஒழுகல்.

(பொ-ரை): ஒருவன் செல்வம் பெற்றதனால் பெறும் பயன் என்னவென்றால், அவன் தன் சுற்றத்தால் சூழப்படுமாறு, அவர்களைத் தழுவிக் கொண்டு வாழ்தலேயாகும்.

சுற்றம் - சுற்றத்தார்; **சுற்றப்பட** - சூழப்படுமாறு; **ஒழுகல்** - தழுவிக் கொண்டு வாழ்தல்.

(க-ரை): ஒருவன் செல்வம் பெற்றிருப்பதனால் ஆகும் பயனானது, அவன் அச்செல்வத்தால் சுற்றத்தாரை யெல்லாம் என்றும் தழுவிக் கொண்டு வாழ வேண்டும் என்பதாகும். (524)

**5. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்.**

கொடுத்தலும், இன்சொலும், ஆற்றின், அடுக்கிய, சுற்றத்தால், சுற்றப்படும்.

(பொ-ரை): ஒருவன் சுற்றத்தார்க்கு வேண்டுவன கொடுத்தலும், இனிய சொற்களைச் சொல்லுதலும் ஆகிய இரண்டையும் செய்யும் ஆற்றல் உடையவனானால், அடுத்தடுத்துத் தொடர்ந்து பெருகிவரும் சுற்றத்தார் பலராலும், அவன் சூழப்படுவான்.

கொடுத்தலும் - சுற்றத்தார்க்கு வேண்டுவன கொடுத்தலும்; **இன்சொலும்** - இனிய சொற்களைச் சொல்லுதலும்; **ஆற்றின்** - செய்யும் ஆற்றல் உடையவனானால்; **அடுக்கிய** - அடுத்தடுத்துத் தொடர்ந்து பெருகிவரும்.

(க-ரை): கொடைத் தன்மையையும், இனிய சொற்களையும் உடையவனைச், சுற்றத்தார் பலரும், எப்பொழுதும் அன்புடன் சூழ்ந்து கொண்டே இருப்பார்கள். (525)

**6. பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல்.**

பெருங்கொடையான், வெகுளி பேணான், அவனின் மருங்குடையார், மாநிலத்து, இல்.

(பொ-ரை): ஒருவன் பெருங்கொடையாளியாகவும், சினமற்றவனாகவும் இருப்பானேயானால், அவனைப் போல மிக்க சுற்றத்தாரை உடையவர்கள், இந்த மிகப்பெரிய உலகத்தில் வேறு எவரும் இருக்கமாட்டார்கள்.

பேணான் வெகுளி - சினமற்றவனாய்; **மருங்குடையார்** - கிளை என்னும் சுற்றத்தாரை உடையவர்கள்.

(க-ரை): பெருங்கொடையாளியாகவும், சினமற்றவனாகவும் இருக்கும் ஒருவனைச் சுற்றத்தார் நெருங்கி வாழ்வதைப் போல, உலகத்தில் வேறு எவரோடும் நெருங்கி வாழ மாட்டார்கள். (526)

**7. காக்கை கரவா கரைந்துஉண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.**

காக்கை, கரவா, கரைந்து, உண்ணும்; அன்ன நீரார்க்கே, ஆக்கமும், உள.

(பொ-ரை): காக்கைகள் தமது இரையை மறைத்து வைக்காமல், தம் இனத்தைக் கூவி அழைத்து, அவ்வினத்தோடு சேர்ந்திருந்து உண்ணும்; அப்படிப்பட்ட இயல்பு உடையவர்க்கே, ஆக்கம் பலவும் ஏற்படும்.

கரவா - மறைத்துவைத்து உண்ணாமல்; **கரைந்து** - தம் இனத்தைக் கூவி அழைத்து; **ஆக்கம்** - செல்வம்.

(க-ரை): காக்கை எப்படித் தன் இனத்தைச் சேர்த்துக் கொண்டு உணவு உண்ணுகிறதோ, அப்படிப்பட்ட இயல்புடைய மக்களும், தம் சுற்றத்தார்களையெல்லாம் அணைத்துக்கொண்டு, உணவு அளித்து மகிழ்வர்; அப்படிப்பட்டவர்களுக்குத்தான் ஆக்கம் பலவும் உண்டாகும். (527)

8. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.

வேந்தன், பொது நோக்கான், வரிசையா நோக்கின், அது நோக்கி, வாழ்வார், பலர்.

(பொ-ரை): அரசனானவன் எல்லோரையும் ஒரே தன்மையாக நோக்காமல், அவரவர் தகுதிக்கு ஏற்ப நோக்கிச், செய்ய வேண்டுவன வற்றைச் செய்தால், அந்தச் சிறப்புக் கருதி, அவனை விடாது, சூழ்ந்து வாழுகின்ற சுற்றத்தார் பலர் ஆவார்கள்.

பொதுநோக்கான் - எல்லோரையும் ஒரே தன்மையாக நோக்காமல்; **வரிசையா** - அவரவர் தகுதிக்கு ஏற்ப; **வாழ்வார்** - வாழ்கின்ற சுற்றத்தார்.

(க-ரை): அவரவர் தகுதிக்கு ஏற்ப நடந்து கொள்பவனைச், சுற்றத்தார் பலரும் சூழ்ந்து வாழ்வார்கள். (528)

9. தமர்ஆகித் தன்துறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும்.

தமர் ஆகித், தன் துறந்தார், சுற்றம், அமராமைக், காரணம் இன்றி, வரும்.

(பொ-ரை): முன்பு சுற்றத்தாராய் இருந்து, பின்னர் ஏதோவொரு காரணத்தால் பிரிந்து போனவர்கள், அப்படிப் பிரிந்து போனதற்கு ஏற்பட்ட காரணம் நீங்கிவிட்டால், மீண்டும் அவர்களே வந்து உறவினராவார்கள்.

தமராகி - முன்பு சுற்றத்தாராயிருந்து; **தன்துறந்தார்** - ஏதோ ஒரு காரணத்தால் பிரிந்து போனவர்கள்; **அமராமை** - முன்பு பொருந்தாமைக்கு; **காரணம்இன்றி** - காரணம் இல்லாததால்.

(க-ரை): சுற்றத்தார், முன்பு தம்மைவிட்டுப் பிரிந்து போவதற்கு ஆன காரணம் பின்னர் இல்லாதநிலை ஏற்படும் போது, பிரிந்துபோன சுற்றத்தார் தாமாகவே மறுபடியும் வந்து சுற்றமாவார்கள். (529)

10. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன் இழைத்திருந்து எண்ணிக் கொளல்.

உழைப்பிரிந்து, காரணத்தின், வந்தானை, வேந்தன், இழைத்திருந்து, எண்ணிக் கொளல்.

(பொ-ரை): தன்னிடமிருந்து ஒரு காரணமுமில்லாமல் பிரிந்து சென்று, மீண்டும் ஒரு காரணம் பற்றி வந்தவனை, அரசன், அவன் விரும்பிய உதவியைச் செய்து, பின் ஆராய்ந்து பார்த்து, அவனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

உழைப்பிரிந்து - தன்னிடமிருந்து ஒரு காரணமுமில்லாமல் பிரிந்து சென்று; **இழைத்திருந்து** - மீண்டும் பிரியாதிருக்க அவன் விரும்பிய உதவியைச் செய்து; **எண்ணிக் கொளல்** - ஆராய்ந்து பார்த்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(க-ரை): ஒரு காரணமுமின்றிப் பிரிந்து போனவர்கள், ஒரு காரணம் பற்றித் திரும்பி வந்தால், அவர்கள் விரும்பிய உதவியைச் செய்து, அவர்களை மீண்டும் சுற்றமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்; இல்லையேல், அவர்கள் பகைவரோடு போய்ச் சேர்ந்து கொள்வார்கள். (530)

54. பொச்சாவாமை

பொச்சாவாமை என்பது, மகிழ்ச்சிகரமான செயல்கள், தற்காத்தல், பகையழித்தல், செய்ய வேண்டிய கடமைகளை ஆற்றுதல் போன்றவற்றில் ஈடுபடும்போது, சோர்வுபடாமல், மறதி கொள்ளாதிருத்தல் எனப்படும்.

**1. இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியின் சோர்வு.**

சிறந்த, உவகை மகிழ்ச்சியின், சோர்வு, இறந்த வெகுளியின், தீதே.

(பொ-ரை): செல்வமிகுதி போன்றவற்றால் ஏற்படும் பெருமிதக் களிப்பால் ஒருவனுக்கு வரும் மறதியானது, அவனுக்கு ஏற்படும் அளவு கடந்த சினத்தைக் காட்டிலும், மிகவான தீமையைப் பயப்பதாகும்.

இறந்த - அளவுகடந்த; **வெகுளி** - சினம்; **உவகை மகிழ்ச்சி** - பெருமிதக் களிப்பு; **சோர்வு** - மறதி.

(க-ரை): ஒருவனுக்கு ஏற்படும் மறதி, அவனுக்கு ஏற்படும் அளவுகடந்த சினத்தைக் காட்டிலும், மிகவான தீமையைப் பயப்பதாகும். (531)

**2. பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.**

நிச்சநிரப்பு, அறிவினைக், கொன்றாங்கு, புகழைப், பொச்சாப்புக், கொல்லும்.

(பொ-ரை): நாள்தோறும் தொடர்ந்துவரும் வறுமையானது, ஒருவனுடைய அறிவை அழிப்பதுபோன்று, ஒருவனுடைய புகழை, அவனுடைய மறதியானது, அழித்துவிடும்.

நிச்சநிரப்பு - நாள்தோறும் தொடர்ந்து வருகின்ற வறுமை; **பொச்சாப்பு** - மறதி; **கொன்றுவிடும்** - அழித்துவிடும்.

(க-ரை): வறுமையானது ஒருவனுடைய அறிவை அழித்து விடுவதுபோல, அவனுடைய மறதி, அவனது புகழை அழித்துவிடும். (532)

3. பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுஉலகத்து
எப்பால்நூ லோர்க்கும் துணிவு.

பொச்சாப்பார்க்கு, புகழ்மை, இல்லை; அது, உலகத்து, எப்பால், நூலோர்க்கும், துணிவு.

(பொ-ரை): எப்பொழுதும் மறதி உடையவர்களுக்குப் புகழுடைமை என்பது இல்லை; அந்த உண்மையானது, உலகத்தில் எப்படிப்பட்ட நூற்கொள்கை உடையவர்க்கும் ஒப்பமுடிந்த முடிவாகும்.

பொச்சாப்பார்க்கு - மறதி உடையவர்களுக்கு; **புகழ்மை** - புகழுடைமை; **துணிவு** - ஒப்பமுடிந்த முடிவு.

(க-ரை): மறதியுடையோர் புகழுடன் வாழமாட்டார்கள் என்பது, எல்லாவித நெறிமுறைகளையும் கடைப்பிடிக்கும் அறிஞர்கள் அனைவரும் கண்டறிந்த முடிவாகும். (533)

4. அச்சம் உடையார்க்கு அரண்இல்லை ஆங்குஇல்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.

அச்சம் உடையார்க்கு, அரண் இல்லை; ஆங்கு, பொச்சாப்பு உடையார்க்கு, நன்கு, இல்லை.

(பொ-ரை): அகத்திலே அச்சம் உடையவர்களுக்குப், புறத்திலே காவற்கோட்டை இருந்தாலும், அதனால், பயன்எதுவும் இல்லை; அதுபோல, அகத்திலே மறதி உடையவர்களுக்குப், புறத்திலே நல்ல நிலைகள் வாய்த்திருந்தாலும், அவற்றால் பயன்எதுவும் ஏற்படுவதில்லை.

அரண் - காவற்கோட்டை; **பொச்சாப்பு** - மறதி; **நன்கு** - நல்ல நிலைகள்.

(க-ரை): அச்சம் உடையவர்களின் காவற்கோட்டை எப்படி அழிந்துபட்டுவிடுமோ, அதுபோல, மறதியுடையவர்களின் நல்ல நிலைகளும், நாளடைவில் அழிந்துபோய்விடும். (534)

5. முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை
பின்ஊறு இரங்கி விடும்.

முன்னுறக், காவாது, இழுக்கியான், பின்ஊறு, தன் பிழை, இரங்கிவிடும்.

(பொ-ரை): துன்பம் வருவதை முன்கூட்டியே அறிந்து தன்னைக் காத்துக் கொள்ளாமல், மறந்து சோர்வடைந்தவன், பின்பு துன்பம் வந்து சேரும்போது, தன் பிழையை எண்ணி, மனம் வருந்திக் கவலைப்படுவான்.

முன்னுற - முன்கூட்டியே; **இழுக்கியான்** - மறந்து சோர்வடைந்தவன்; **பின்னூறு** - பின்பு துன்பம் வரும்போது; **இரங்கி** - வருந்திக் கவலைப்படுவான்.

(க-ரை): ஒருவன் தன்னை முன்கூட்டியே காத்துக் கொள்ள மறந்து, சோர்வில் வாழும்போது துன்பம் வந்து சேர்ந்தால், தன்னுடைய குற்றத்தை எண்ணி, அவன் வருந்திக் கவலைப்பட வேண்டிவரும். (535)

6. இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அதுஒப்பது இல்.

இழுக்காமை, யார்மாட்டும், என்றும், வழுக்காமை, வாயின், அதுஒப்பது, இல்.

(பொ-ரை): மறவாமை என்னும் பண்பு யாரிடத்திலும், எக்காலத்திலும், தவறாது வாய்த்திருக்குமேயானால், அதற்கு ஒப்ப அவர்க்கு நன்மை தருவது, வேறொன்றும் இல்லை.

இழுக்காமை - மறவாமை என்னும் பண்பு; **வழுக்காமை** - தவறாது; **வாயின்** - வாய்த்து இருக்குமேயானால்; **இல்** - இல்லை.

(க-ரை): மறவாமை என்னும் பண்பு எல்லோரிடத்திலும், எல்லாக் காலத்திலும் தவறாது பொருந்தியிருக்குமேயானால், அதனைவிட அவர்களுக்கு நன்மை பயப்பது வேறொன்றும் இருக்க முடியாது. (536)

7. அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின்.

பொச்சாவாக், கருவியால், போற்றிச், செயின், அரிய என்று, ஆகாத இல்லை.

(பொ-ரை): மறதியில்லாத மனத்தால் எதையும் எண்ணிச் செயலாற்றினால், ஒருவருக்குச் செய்து முடிக்க அருமையானது என்று சொல்லக்கூடிய செயல், யாதொன்றும் இருக்க முடியாது.

பொச்சாவா - மறதியில்லாத; **கருவியால்** - மனத்தால்; **போற்றி** - எண்ணி; **செயின்** - செயலாற்றினால்.

(க-ரை): ஒருவர் மறதியில்லாமல், எதையும் எண்ணிச் செய்தால், அவர் செய்வதற்கு அருமையானது என்று சொல்லக்கூடிய செயல், யாதொன்றும் இருக்க முடியாது. (537)

8. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.

புகழ்ந்தவை, போற்றிச், செயல்வேண்டும்; செய்யாது, இகழ்ந்தார்க்கு, எழுமையும், இல்.

(பொ-ரை): சான்றோர்கள், சிறந்த கடமைகள் என்று புகழ்ந்து சொல்லியவைகளைப் போற்றிச் செய்ய வேண்டும்; அப்படிச் செய்யாது மறந்தவர்களுக்கு, வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும், நன்மை ஏற்படுவது இல்லை.

புகழ்ந்தவை - சான்றோர்கள் சிறந்த கடமைகள் என்று புகழ்ந்து சொல்லியவை; **இகழ்ந்தார்** - மறந்தவர்கள்; **எழுமையும்** - வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும்; **இல்** - இல்லை.

(க-ரை): செய்யத்தக்கவை என்று சான்றோர்கள் புகழ்ந்து கூறியவைகளைக் கடைப்பிடிக்க மறந்தவர்களுக்கு, எப்பொழுதுமே நன்மை இல்லை. (538)

9. இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

தாம், தம் மகிழ்ச்சியின், மைந்துறும் போழ்து, இகழ்ச்சியின், கெட்டாரை, உள்ளுக.

(பொ-ரை): ஒருவர், தாம் தமக்குண்டான மகிழ்ச்சியினாலே செருக்குக்கொண்டு கடமைகளை மறந்திருக்கும்போது, முன்பு அப்படிப்பட்ட மிகுந்த மகிழ்ச்சியினால் உண்டாகிய மறதியால் அழிந்துபோனவர்களை, நினைத்துப் பார்க்க வேண்டும்.

மைந்துறும்போழ்து - செருக்குக்கொண்டு இருக்கும்போது; **இகழ்ச்சியின்** - மறதியில்; **கெட்டாரை** - அழிந்தவர்களை; **உள்ளுக** - நினைத்துப் பார்க்க வேண்டும்.

(க-ரை): ஒருவர் மகிழ்ச்சியால் செருக்குற்றுக், கடமைகளை மறந்திருக்கும்போது, முன்பு மறதியால் அழிந்துபோனவர்களின் வரலாற்றை, நினைத்துப் பார்க்க வேண்டும். (539)

10. உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

தான், உள்ளியது, உள்ளப் பெறின், மற்றும், உள்ளியது, எய்தல், எளிதுமன்.

(பொ-ரை): ஒருவன், தான் அடையக் கருதும் பொருளைச், சோர்வில்லாமல், நினைத்துக் கொண்டே இருப்பானாகில், அவன் கருதிய அப்பொருளை அடைதல் என்பது, எளிதான ஒரு செயலாகும்.

உள்ளியது - அடையக் கருதும் பொருள்; **உள்ளப்பெறின்** - நினைத்துக் கொண்டே இருந்தால்; **எய்தல்** - அடைதல்.

(க-ரை): ஒருவன், மறதிக்கு இடங்கொடுக்காமல், அவன் அடையக் கருதிய பொருளையே நினைத்துக் கொண்டு இருப்பானாகில், அவன் அந்தப் பொருளை அடைதல் என்பது எளிதான செயலாகும். (540)

55. செங்கோன்மை

செங்கோன்மை என்பது, அரசனானவன் அன்பு, ஆதரவு, பற்று, பதவி, வலிவு, வளம் போன்றவற்றின் காரணமாகத், தான் யாரொருவர் பக்கமும் சாயாமல், ஆட்சிக்கோல் ஏந்திச், செம்மையாக முறைசெய்தல் எனப்படும்.

1. ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.

ஓர்ந்து, கண்ணோடாது, இறைபுரிந்து, யார்மாட்டும், தேர்ந்து செய்வஃதே, முறை.

(பொ-ரை): குற்றம் இன்னதென்று ஆராய்ந்து பார்த்து, யார் பக்கமும் சாயாமல், நடுவுநிலைமை பொருந்துமாறு நின்று, யாரிடத்திலும் குற்றத்திற்குரிய தண்டனையை ஆராய்ந்து, அதற்கு ஏற்றபடி நீதி வழங்குவதே, அரசனது செங்கோல் முறையாகும்.

ஓர்ந்து - குற்றம் இன்னதென்று ஆராய்ந்து பார்த்து; **கண்ணோடாது** - யார்பக்கமும் சாயாமல்; **இறைபுரிந்து** - நடுவுநிலைமை பொருந்துமாறு நின்று; **தேர்ந்து** - குற்றத்திற்குரிய தண்டனையை ஆராய்ந்து; **செய்வதேமுறை** - நீதிவழங்குவதே அரசனது செங்கோல் முறையாகும்.

(க-ரை): அரசன், ஒருவன் செய்த குற்றத்தையும் ஆராய்ந்து, அந்தக் குற்றத்திற்குரிய தண்டனையையும் ஆராய்ந்து, யார் பக்கமும் சாயாமல், நடுவு நிலைமையோடு இருந்து, அவனுக்கு நீதி வழங்குவதே, செங்கோல் முறையாகும். (541)

2. வான்நோக்கி வாழும் உலகுஎல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.

உலகுஎல்லாம், வான்நோக்கி, வாழும்; குடி, மன்னவன், கோல்நோக்கி, வாழும்.

(பொ-ரை): உலகத்திலுள்ள உயிர்களெல்லாம், மழையை எதிர்பார்த்து வாழும்; அதுபோல, குடிமக்கள் எல்லோரும், அரசனது செங்கோல் ஆட்சியை எதிர்பார்த்து வாழ்வார்கள்.

வான் - மழையை; **நோக்கி** - எதிர்பார்த்து; **கோல்** - செங்கோல் ஆட்சியை; **குடி** - குடிமக்கள்.

(க-ரை): உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் எப்படி மழையை எதிர்பார்த்து வாழ்கின்றனவோ, அப்படியே, குடி மக்கள் எல்லோரும், அரசனது செங்கோல் ஆட்சியை எதிர்பார்த்து வாழ்கிறார்கள். (542)

3. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

அந்தணர் நூற்கும், அறத்திற்கும், ஆதியாய், நின்றது, மன்னவன் கோல்.

(பொ-ரை): செந்தண்மை பூண்ட அறவோர்கள் போற்றிடும் அற நூல்களும், அறநெறிகளும் நிலைபெற அடிப்படைக் காரணமாக இருக்க வேண்டியது, அரசனது செங்கோல் ஆட்சி முறையாகும்.

அந்தணர் - செந்தண்மைபூண்ட அறவோர்; **நூல்** - அற நூல்; **அறம்** - அறநெறி; **ஆதியாய்** - அடிப்படைக் காரணமாக; **கோல்** - செங்கோல் ஆட்சி முறை; 'அந்தணர் என்போர் அறவோர்' - (குறள் - 30.)

(க-ரை): அறவோர்களின் அறநூல்களும், அறநெறிகளும் காப்பாற்றப்பட வேண்டுமாயின் அரசனது செங்கோல் ஆட்சிமுறை அவற்றிற்கு அடிப்படையாக அமைய வேண்டும். (543)

4. குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

குடிதழீஇ, கோல் ஓச்சும், மாநில மன்னன், அடிதழீஇ, உலகு நிற்கும்.

(பொ-ரை): தன் குடிமக்களை யெல்லாம் அணைத்துக் கொண்டு செங்கோல் ஆட்சிமுறை செலுத்தும் பெருநில மன்னனுக்கு ஆதரவாக, அவனைத் தழுவி, இவ்உலகத்தார்களே நிற்பார்கள்.

கோல் - செங்கோல் ஆட்சி; **உலகு** - உலகத்தார்.

(க-ரை): குடிமக்களைத் தழுவி, செங்கோல் ஆட்சி புரியும் மன்னனை, உலக மக்கள் அனைவரும் விரும்பிப் போற்றி அவன் வழிபட்டு நிற்பார்கள். (544)

5. இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.

இயல்புளிக், கோல் ஓச்சும், மன்னவன், நாட்ட, பெயலும், விளையுளும் தொக்கு.

(பொ-ரை): நீதி நூல்முறைப்படி செங்கோல் செலுத்தும் அரசன் நாட்டில் இருப்பதானது, பருவ காலத்து மழையும், குன்றாத விளைச்சலும் ஒருசேர இருப்பது போன்றதாகும்.

இயல்புளி - நீதிநூல் முறைப்படி; **கோல்** - செங்கோல்; **ஓச்சும்** - செலுத்தும்; **பெயல்** - பருவகாலத்து மழை; **விளையுள்** - குன்றாத விளைச்சல்; **தொக்கு** - ஒரு சேர இருப்பது.

(க-ரை): பருவமழையும், குன்றாத விளைச்சலும் ஒரு சேர நாட்டில் இருப்பது எப்படியோ, அப்படிப்பட்டதுதான், நீதிமுறைப் படி செங்கோல் ஆட்சி செலுத்தும் மன்னனது ஆட்சி, நாட்டில் இருப்பதும் ஆகும். (545)

**6. வேல்அன்று வென்றி தருவது மன்னவன்
கோல்அதூஉம் கோடாது எனின்.**

மன்னவன், வேல் அன்று, வென்றி தருவது; கோல், கோடாது எனின், அதூஉம்.

(பொ-ரை): அரசனது நல்லாட்சி முறைக்கு வெற்றி தேடித்தருவது, அவனது வேற்படை அன்று; அவனது ஆட்சிக் கோலானது கோணாமல், செம்மையானதாக இருக்குமேயானால், அதுவே அவனது ஆட்சிமுறைக்கு வெற்றியைத் தரும்.

வேல் - வேற்படை; **கோல்** - செங்கோல்; **கோடாது** - கோணாமல்.

(க-ரை): அரசன் ஒருவனது ஆட்சிமுறைக்கு உண்மையான வெற்றியை ஈட்டித்தருவது அவனது வேற்படை அன்று; அவனது செங்கோலேயாகும். (546)

**7. இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.**

வையகம் எல்லாம், இறை காக்கும்; முட்டாச் செயின், அவனை, முறைகாக்கும்.

(பொ-ரை): உலகத்தையெல்லாம் அரசனானவன் காப்பாற்று வான்; அவன் தன் செங்கோலை முறைதவறாமல் செலுத்துவானேயானால், அந்தச் செங்கோலே அவனைக் காப்பாற்றும்.

வையகம் - உலகம்; **இறை** - அரசன்; **முறை** - செங்கோல்; **முட்டாச் செயின்** - செங்கோலை முறைதவறாமல் செலுத்துவானே யானால்.

(க-ரை): அரசன் குடிமக்களை யெல்லாம், தன் செங்கோலின் துணை கொண்டு காப்பாற்றினால், அச்செங்கோலே, அவ்வரசனைக் காப்பாற்றும். (547)

8. எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும்.

எண்பதத்தான், ஓரா, முறை செய்யா, மன்னவன், தண்பதத்தான், தானே கெடும்.

(பொ-ரை): முறைவேண்டி வந்தவர்கள் தன்னை எளிதில் பார்க்க முடியாத நிலையில் இருந்து கொண்டு, அவர்கள் கூறுபவற்றை நன்கு ஆராய்ந்து முறைசெய்யாத அரசன், தாழ்ந்த நிலைமை அடைந்து, தானே கெட்டுப் போவான்.

எண்பதத்தான் - முறை வேண்டி வந்தவர்கள் எளிதில் பார்க்க முடியாதபடி; **ஓரா** - ஆராயாத; **முறை** - நீதி; **செய்யா** - வழங்காத; **தண்பதத்தான்** - தாழ்ந்த நிலையை அடைந்து.

(க-ரை): தன் குடிமக்களுக்குக் காட்சிக்கு எளிமை யுடையவனாக இல்லாமலும், அவர்களின் குறைகேட்டு நன்கு முறை செய்ய இயலாதவனாகவும் இருக்கும் அரசன், தாழ்ந்த நிலையை அடைந்து, தானே கெட்டொழிவான். (548)

9. குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று வேந்தன் தொழில்.

வேந்தன், குடிபுறங்காத்து, ஓம்பிக், குற்றம்கடிதல், வடு அன்று, தொழில்.

(பொ-ரை): அரசனானவன், குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்துத் தானும் வேண்டுவன உதவி, அவர்களைப் பேணி, அவர்கள் குற்றம் செய்தால், அதற்காக அவர்களைத் தண்டித்து, அக்குற்றத்தை நீக்குதல் வேண்டும்; அப்படித் தண்டித்தல் அரசனுக்கு இழுக்கு ஆகாது; அது அவனது கடமையாகும்.

புறங்காத்து - பிறர் வருத்தாமல் காத்து; **ஓம்பி** - வேண்டுவன உதவிப் பேணி; **கடிதல்** - கண்டித்தல்; **வடுஅன்று** - பழியாகாது; **தொழில்** - கடமை.

(க-ரை): குடிமக்களைப் பாதுகாத்தலும், அவர்கள் குற்றம் செய்தால், அதற்காக அவர்களைத் தண்டித்தலும், அரசனது கடமைகளாகும். தண்டித்தல் என்பது, அரசனுக்குப் பழி பயப்பது ஆகாது. (549)

10. கொலையின் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்.

வேந்து, கொலையின் கொடியாரை, ஒறுத்தல், பைங்கூழ், களை கட்டதனோடு, நேர்.

(பொ-ரை): குடிமக்களைக் காப்பாற்ற அரசனானவன், கொலைக்குற்றம் செய்யும் கொடியவர்களைக் கொலைத் தண்டனை மூலம் தண்டித்தல், பயிரைக் காப்பாற்ற உழவன் களையைக் களைவதற்கு ஒப்பான செயலாகும்.

ஒறுத்தல் - தண்டித்தல்; **பைங்கூழ்** - பயிர்; **களைகட்டு** - களையைக் களைந்து எடுத்தல்.

(க-ரை): கொலைக்குற்றம் புரிந்தோரை அரசன் கொலைத் தண்டனை மூலம் ஒழித்தல் என்பது, பயிரைப் பாதுகாக்க உழவன் களையைக் களையும் செயலுக்கு ஒப்பானதாகும். (550)

56. கொடுங்கோன்மை

கொடுங்கோன்மை என்பது, அரசனானவன் நீதி வழங்காமை, அன்பு செலுத்தாமை, குடிமக்களைக் காவாமை, குடிமக்களின் குறை கேளாமை, குடிமக்களை ஆராயாது தண்டித்தல், குடிமக்களுக்குத் துன்பம் இழைத்தல், அல்லவை செய்தல், நடுவு நிலைமை தவறுதல் போன்ற கொடிய செயல்களைத் தான் ஏந்திய கோலின் துணைகொண்டு செய்தல் எனப்படும்.

1. கொலைமேற்கொண் டாரின் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்துஒழுகும் வேந்து.

அலைமேற்கொண்டு, அல்லவை, செய்துஒழுகும், வேந்து, கொலை, மேற்கொண்டாரின், கொடிதே.

(பொ-ரை): பொருளை விரும்பிக் குடிமக்களை வருத்தும் தொழிலை மேற்கொண்டு, அறமல்லாதவற்றைச் செய்யும் நாடாளும் அரசனானவன், பகைமை பற்றிக் கொலைத் தொழிலை மேற்கொண்டு ஒழுகுவாரைக் காட்டிலும், மிகவும் கொடியவனாவான்.

அலைமேற்கொண்டு - பொருளை விரும்பிக் குடிமக்களை வருத்தும் தொழிலை மேற்கொண்டு; **அல்லவை** - அறமல்லாத வற்றை; **கொலை** - பகைமைபற்றிக் கொலைத் தொழிலை; **கொடிது** - கொடியவனாவான்.

(க-ரை): பொருளை ஈட்ட விரும்பிக் குடிமக்களை வாட்டி வருத்தி வதைக்கும் மன்னவன், கொலைத் தொழிலைச் செய்வோரைக் காட்டிலும் மிகக் கொடியவனாவான். (551)

2. வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.

கோலொடு நின்றான், இரவு, வேலொடு நின்றான், இடு என்றது, போலும்.

(பொ-ரை): ஆட்சிக்கோல் ஏந்தி நிற்கும் அரசன் வரைமுறையின்றிக் குடிமக்களிடம் வரிப்பொருளைப் பெறுதல் என்பது, வேலைத் தாங்கி நின்று வழிப்பறி செய்யும் கள்வன்,

வழிப்போவோனிடம் கையிலுள்ள பொருளையெல்லாம் கொடு என்று கேட்பது போன்றதாகும்.

கோல் - ஆட்சிக்கோல்; **இரவு** - குடிமக்களிடம் பொருளைப் பெறுதல்; **வேலொடு நின்றான்** - வேலைத்தாங்கி நின்று வழிப்பறி செய்யும் கள்வன்.

(க-ரை): அரசன் குடிமக்களிடம் வரைமுறையின்றிப் பொருளைப் பறித்தல் என்பது, வழிப்பறி செய்யும் கள்வன், வழிப்போக்கனிடம் உள்ள பொருளையெல்லாம் கொள்ளை யடிப்பதைப் போன்றதாகும். (552)

3. நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்.

நாள்தொறும், நாடி, முறைசெய்யா, மன்னவன், நாடு, நாள்தொறும், கெடும்.

(பொ-ரை): நாள்தோறும் நிகழும் குற்றங் குறைகளை ஆராய்ந்து பார்த்து, அவற்றிற்குத் தக்கபடி முறைசெய்யாத அரசனுடைய நாடானது, நாளுக்கு நாள், கெட்டொழிந்து போய்விடும்.

நாடி - நாட்டின் குற்றங்குறைகளை ஆராய்ந்து பார்த்து; **முறைசெய்யா** - அவற்றிற்குத் தக்கபடி முறைசெய்யாத; **கெடும்** - கெட்டொழியும்.

(க-ரை): குற்றங்குறைகளை நாள்தோறும் ஆராய்ந்து பார்த்து முறைசெய்யாத மன்னனுடைய நாடானது, நாளுக்கு நாள் சீர்கெட்டுப் போய்விடும். (553)

4. கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு.

கோல்கோடிச், சூழாது, செய்யும் அரசு, கூழும், குடியும், ஒருங்கு இழக்கும்.

(பொ-ரை): பின்விளைவுதனை எண்ணாமல், செங்கோல் ஆட்சிமுறை தவற, ஆராய்ந்து பார்க்காமல், எதையும் செய்யக்கூடிய அரசனானவன், தன் செல்வத்தையும், தன் குடிமக்களையும் ஒருசேர இழப்பான்.

கோல்கோடி - செங்கோல் ஆட்சிமுறை தவற; **சூழாது** - ஆராய்ந்து பார்க்காமல்; **கூழ்** - செல்வம்.

(க-ரை): எதையும் ஆராயாது, முறை தவற ஆட்சி செய்யும் அரசன், நாளடைவில் தன் செல்வத்தையும், தன் குடிமக்களையும் ஒருங்கு இழந்து தானும் கெட்டொழிவான். (554)

5. அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

அல்லற்பட்டு, ஆற்றாது, அழுதகண்ணீர், அன்றே, செல்வத்தைத், தேய்க்கும், படை.

(பொ-ரை): அரசனது கொடுங்கோன்மையால், துன்பப்பட்டுப் பொறுக்க முடியாமல் குடிமக்கள் அழுது சிந்திய கண்ணீர் அல்லவா, அவனது செல்வச் செழிப்புமிக்க ஆட்சியை அழிக்கும் கருவியாகும்.

அல்லற்பட்டு - துன்பப்பட்டு; **ஆற்றாது** - பொறுக்க முடியாமல்; **செல்வத்தை** - செல்வச் செழிப்புமிக்க ஆட்சியை; **படை** - கருவி.

(க-ரை): குடிமக்கள், அரசனது கொடுங்கோன்மையால் துன்பப்பட்டுப் பொறுக்க முடியாத நிலையை அடைந்தால், அந்த நிலையே, அவனது ஆட்சியை அழித்துவிடும். (555)

6. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதுஇன்றேல்
மன்னாவாம் மன்னர்க்கு ஒளி.

மன்னர்க்கு, மன்னுதல்,செங்கோன்மை; அஃதுஇன்றேல், மன்னர்க்கு, ஒளி, மன்னாவாம்.

(பொ-ரை): அரசர்களுக்குப் புகழானது நிலைபெறுதல் என்பது, அவர்கள் செங்கோல் செலுத்தும் முறையினால் ஆகும்; அச்செங்கோல் முறை இல்லையானால், பிறவற்றால் அம்மன்னர்க்கு வரும் புகழும் நிலைபெறாமல் போய்விடும்.

மன்னுதல் - புகழ் நிலைபெறுதல்; **ஒளி** - புகழ்; **மன்னாவாம்** - நிலைபெறாமல் போகும்.

(க-ரை): கொடுங்கோல் அரசர்க்கு, நிலைத்த புகழ் ஒருபோதும் ஏற்படாது. (556)

7. துளிஇன்மை ஞாலத்திற்கு எற்றுஅற்றே வேந்தன்
அளிஇன்மை வாழும் உயிர்க்கு.

துளிஇன்மை, ஞாலத்திற்கு, எற்று, அற்றே, வேந்தன், அளிஇன்மை, வாழும், உயிர்க்கு.

(பொ-ரை): மழை இல்லாமையானது உலகத்தில் வாழும் உயிர்களுக்கெல்லாம் எத்தகைய துன்பத்தைத் தருமோ, அத்தகைய துன்பத்தை அரசனது அருளில்லாமையானது, குடிமக்களுக்குத் தரும்.

துளி இன்மை - மழை இல்லாமை; **ஞாலத்திற்கு** - உலகத்திற்கு; **அளிஇன்மை** - அருள்இல்லாமை; **உயிர்க்கு** - குடிமக்களுக்கு.

(க-ரை): மழை இல்லாமை உயிர்களுக்கு எல்லாம் துன்பத்தைத் தரும்; அதுபோல, அரசனது அருள் இல்லாமை குடிமக்களுக்கு எல்லாம் துன்பத்தைத் தரும். (557)

8. இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

முறைசெய்யா, மன்னவன், கோல், கீழ்ப்படின், இன்மையின், உடைமை, இன்னாது.

(பொ-ரை): முறைசெய்யாத அரசனின் கொடுங்கோல் ஆட்சியின் கீழ் வாழ்ந்தால், அப்படி வாழ்வோர்க்குப் பொருள் இல்லாத வறுமை நிலையைவிட, செல்வம் உடைமை கூடத் துன்பம் தருவது ஆகும்.

கோற்கீழ் - கொடுங்கோல் ஆட்சியின் கீழ்; **படின்** - வாழ்ந்தால்; **இன்மையின்** - பொருள்இல்லாத வறுமை நிலையைவிட; **இன்னாது** - துன்பம் தருவது.

(க-ரை): முறை செய்யாத கொடுங்கோல் ஆட்சியின் கீழ் வாழ்ந்தால், செல்வம் உடையவர்களும், வறியவர்களைக் காட்டிலும், மிகவான துன்பத்தை அடைவார்கள். (558)

9. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

மன்னவன், முறைகோடி, செய்யின், உறைகோடி, வானம் பெயல், ஒல்லாது.

(பொ-ரை): அரசனானவன், செங்கோல் நெறிமுறை தவறி நாட்டை ஆட்சி செய்வானேயானால், அந்த நாட்டில் பருவமழை தவறி, மேகம் மழை பொழியாதபோது, ஏற்படும் துன்பம் உண்டாகும்.

முறைகோடி - செங்கோல் நெறிமுறை தவறி; **செய்யின்** - நாட்டை ஆட்சி செய்வானேயானால்; **உறை** - பருவ மழை; **கோடி** - தவறி; **வானம்** - மேகம்; **பெயல் ஒல்லாது** - மழை பொழியாத போது.

(க-ரை): அரசனது செங்கோல் ஆட்சிமுறை இல்லாது போனால், பருவமழை தவறிப் போவதால் உண்டாகும் துன்பம், குடிமக்களுக்கு ஏற்படும். (559)

**10. ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.**

காவலன், காவான், எனின், ஆபயன், குன்றும்; அறுதொழிலோர், நூல் மறப்பர்.

(பொ-ரை): அரசன் முறைப்படி நாட்டைக் காக்கவில்லையானால், குடிமக்களின் முயற்சியால் ஆகும் பயன்கள் குன்றிப் போகும்; அறுதியிட்ட முக்கிய தொழிலுடையோர், தம் தொழிலுக்குரிய நூல் அறிவையெல்லாம் மறந்துவிடுவார்கள்.

ஆபயன் - குடிமக்களின் முயற்சியில் ஆகும் பயன்கள்; ஆபயன் - வினைத்தொகை; ஆவின் பயன் என்று பொருள் தரும் 'ஆப்பயன்' என்பது பாடமன்று; அது பொருந்தி வராது. **அறுதொழிலோர்** - அறுதியிட்ட முக்கியத் தொழில்களையுடையோர்; அறுதொழில் - வினைத்தொகை; அறுதி செய்யப்பட்ட தொழில், வரையறை செய்யப்பட்ட தொழில் எனப் பொருள்படும். அறுதி செய்யப்பட்ட தொழில்களாவன: கல்வி கற்பித்தல், உழவுத் தொழில் செய்தல், நெசவுத் தொழில் செய்தல், சிற்பத் தொழில், தச்சுத் தொழில், கொல்லுத் தொழில் போன்ற முக்கியத் தொழில்களைக் குறிக்கும்; **நூல்** - நூல் அறிவையெல்லாம்; **மறப்பர்** - மறந்து விடுவார்கள்.

(க-ரை): அரசனானவன் நாட்டை முறைப்படி காக்கவில்லையானால், முயற்சியினால் ஆகும் பயன்களும் குன்றும்; முக்கியத் தொழில்களைச் செய்வோர் நூல் அறிவையெல்லாம் மறந்து விடுவார்கள். (560)

57. வெருவந்த செய்யாமை

வெருவந்த செய்யாமை என்பது, அரசனானவன், குடிமக்கள் அஞ்சி நடுங்கக்கூடிய செயல்களையும், தனக்கே அச்சம் விளைவிக்கக்கூடிய செயல்களையும் செய்யாதிருத்தல் எனப்படும்.

1. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.

தக்காங்கு, நாடித், தலைச்செல்லா, வண்ணத்தால், ஒத்தாங்கு, ஒறுப்பது, வேந்து.

(பொ-ரை): ஒருவன் குற்றம் செய்தால், அதனை நடுநிலைமையோடு இருந்து ஆராய்ந்து, மேலும் அப்படிப்பட்ட குற்றத்தை அவன் செய்யாமலிருக்கும் பொருட்டுக் குற்றத்திற்கு ஏற்றபடி அவனைத் தண்டிப்பவனே வேந்தனாவான்.

தக்காங்கு - ஒருவன் குற்றத்தைச் செய்தால், அதனை நடுநிலைமையோடு இருந்து; **நாடி** - ஆராய்ந்து; **தலைச் செல்லா வண்ணத்தால்** - மேலும் அப்படிப்பட்ட குற்றத்தைச் செய்யாமல் இருக்கும்பொருட்டு; **ஒத்தாங்கு** - குற்றத்திற்கு ஏற்றபடி; **ஒறுப்பது** - தண்டிப்பது.

(க-ரை): ஒருவன் குற்றம் செய்தால், அதனை நடு நிலைமையோடு இருந்து ஆராய்ந்து, மீண்டும் அத்தகைய குற்றத்தை அவன் செய்யாதபடி, அவனது குற்றத்துக்கு ஏற்றபடி, அவனைத் தண்டிப்பது அரசனது கடமையாகும். (561)

2. கடிதுஓச்சி மெல்ல எறிக நெடிதுஆக்கம்
நீங்காமை வேண்டு பவர்.

ஆக்கம், நெடிது, நீங்காமை வேண்டுபவர், கடிது ஓச்சி, மெல்ல எறிக.

(பொ-ரை): தம் ஆட்சியின் ஆக்கம் நெடுங்காலம் தம்மிடமே இருத்தலை விரும்புவோர், குற்றவாளிகளைத் தண்டிக்கும்போது, கடுமையாக இருப்பதாகத் தொடங்கித் தண்டனை வழங்கும்போது, மென்மையாக, அளவு கடவாமல், இயற்ற வேண்டும்.

ஆக்கம் - தம் ஆட்சியின் ஆக்கம்; **நெடிது** - நீண்ட காலம்; **கடிதுஓச்சி** - குற்றவாளிகளைத் தண்டிக்கும்போது கடுமையாக இருப்பதாகத் தொடங்கி; **மெல்ல எறிக** - தண்டனை வழங்கும் போது, மென்மையாக, அளவுகடவாமல், இயற்ற வேண்டும்.

(க-ரை): அரசனானவன் குற்றவாளிகளைத் தண்டிக்கும்போது, தொடக்கத்தில் மிகக் கடுமையாக இருந்து, தண்டனை வழங்கும் போது, குறைந்த அளவு தண்டனையைக் கொடுக்க வேண்டும். (562)

**3. வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.**

வெருவந்த செய்து, ஒழுகும், வெங்கோலன், ஆயின், ஒருவந்தம், ஒல்லைக், கெடும்.

(பொ-ரை): அரசனானவன், குடிமக்கள் அஞ்சத்தக்க கொடுமைகளைச் செய்யும் கொடுங்கோலனாக இருப்பானேயானால், அவன் உறுதியாக விரைவில் கெட்டுப் போவான்.

வெருவந்த - குடிமக்கள் அஞ்சத்தக்க கொடுமைகளை; **வெங்கோலன்** - கொடுங்கோலன்; **ஒருவந்தம்** - உறுதியாக; **ஒல்லை** - விரைவாக; **கெடும்** - கெடுவான்.

(க-ரை): குடிமக்களை அச்சுறுத்தும் கொடுமைகளைச் செய்யும் கொடுங்கோல் அரசன், உறுதியாக விரைவில் கெட்டொழிவான்.(563)

**4. இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்.**

இறைகடியன், என்றுஉரைக்கும், இன்னாச்சொல், வேந்தன், உறைகடுகி, ஒல்லைக், கெடும்.

(பொ-ரை): "நம் அரசன் கொடியவன் ஆவான்" என்று தன் குடிமக்களாலேயே தூற்றப்படும் பழிச்சொற்களையுடைய அரசன், தன் வாழ்நாள் குறைந்து, விரைவில் கெட்டழிவான்.

இறை - அரசன்; **கடியன்** - கொடியவன்; **இன்னாச்சொல்** - பழிச்சொற்களையுடைய; **உறைகடுகி** - ஆயுள் குறைந்து; **ஒல்லை** - விரைவாக; **கெடும்** - கெட்டொழிவான்.

(க-ரை): அரசன் கொடுங்கோலனாக இருப்பானேயானால், அவன், குடிமக்களால் பழி தூற்றப்பட்டு, ஆயுட்காலம் குறைந்து, விரைவாகக் கெட்டழிந்து போவான். (564)

**5. அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண்டு அன்னது உடைத்து.**

அருஞ்செவ்வி, இன்னா முகத்தான், பெருஞ்செல்வம், பேஎய்கண்டு, அன்னது, உடைத்து.

(பொ-ரை): தன்னைக் காண வேண்டி வருவோர்க்குக் காணமுடியாதபடி அருமையுடையவனாகவும், காண்பவர்க்கு இனிமையில்லாத முகத்தை உடையவனாகவும் இருப்பவனது பெருஞ்செல்வம், அச்சந்தரும் பொருளைக் காண்பது போன்றதோர் அச்சந்தருதலை உடையதாகும்.

அருஞ்செவ்வி - தன்னைக் காண வருவோர்க்குக் காண முடியாதபடி அருமையுடையவனாகவும்; **இன்னா முகத்தான்** - இனிமையில்லாத முகத்தை உடையவனாகவும்; **பேஎய்** - அச்சந்தரும் பொருள்; பேயிருள் என்பது அச்சந்தரும் இருள் எனப்படும்; பேய்க் காய்ச்சல் என்பது அச்சந்தரும் காய்ச்சல் எனப்படும்; அச்சத்தைப் பேய் என்று கூறுவது உலக வழக்கு. ஒருவனுடைய அச்சமே அவன் நினைக்கும் உருவெளித் தோற்றமாகி, அவனை அச்சுறுத்தும்; பேய் பிடித்தல் என்பது அச்ச நோய் கொள்ளுதல் எனப்படும்; பேய் என்பது, பொய்த் தோற்றம் என்பதைப் பேய்க்கரும்பு, பேய்ச்சுரை, பேய்த்தேர் போன்ற சொற்களால் அறியலாம்.

(க-ரை): எளிதில் காணமுடியாதபடி அருமையையும், இனிமையற்ற முகத்தையும் உடையவனது பெருஞ்செல்வமானது, அவனது அச்சந்தரும் கடுந்தோற்றத்தின் விளைவால் அழிந்துவிடும். (565)

**6. கடுஞ்சொல்லன் கண்இலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடுஇன்றி ஆங்கே கெடும்.**

கடுஞ்சொல்லன், கண்இலன், ஆயின், நெடுஞ்செல்வம், நீடுஇன்றி, ஆங்கே, கெடும்.

(பொ-ரை): கடுமையான சொற்களை உடையவனும், இரக்கப்பண்பு இல்லாதவனும் ஆன அரசனது பெரிய வளமான ஆட்சிகூட, நீடித்தல் இன்றி, அப்பொழுதே விரைந்து அழிந்துவிடும்.

கண்இலன் - இரக்கப்பண்பு இல்லாதவன்; **நெடுஞ்செல்வம்** - பெரியவளமான ஆட்சி; **நீடுஇன்றி** - நீடித்தல் இன்றி; **கெடும்** - அழிந்துவிடும்.

(க-ரை): அரசனானவன் கடுஞ்சொற்களை உடையவனாய், இரக்கப்பண்பு இல்லாதவனாய் இருப்பானேயானால், குடிமக்கள் அவனை விரும்பாதநிலையில், அவனது ஆட்சி விரைவில் அழிந்துபோய்விடும். (566)

7. கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்.

கடுமொழியும், கையிகந்த தண்டமும், வேந்தன், அடுமுரண், தேய்க்கும், அரம்.

(பொ-ரை): கடுமையான சொல்லும், அளவுகடந்த தண்டனையும் அரசனது பகைவரை வெல்லும் வெற்றிக்குக் காரணமான வலிமையைத் தேய்க்கும் அரம் ஆகும்.

கையிகந்த - அளவுகடந்த; **அடுமுரண்** - பகைவரை வெல்லும் வெற்றிக்குக் காரணமான வலிமையை; **தேய்க்கும்** - குறைக்கும்.

(க-ரை): கடுஞ்சொல்லும், அளவுகடந்த தண்டனையும் குடிமக்களின் வெறுப்பை ஈட்டித்தரும் ஆகையால், அதன் மூலம் அரசனது வலிமை குறைந்துபோகும். (567)

8. இனத்துஆற்றி எண்ணாத வேந்தன் சினத்துஆற்றிச்
சீறின் சிறுகும் திரு.

இனத்துஆற்றி, எண்ணாத, வேந்தன், சினத்துஆற்றிச், சீறின், திரு, சிறுகும்.

(பொ-ரை): அமைச்சர் முதலான தன் ஆட்சிச் சுற்றத்துடன் பொருந்தியிருந்து ஆராயாத அரசனானவன் தவறு நேரும்போது, அச்சுற்றத்தின்மீது சினங்கொண்டு சீறுவானேயானால், அவனது வளமிக்க அரசும் சுருங்கிவிடும்.

இனத்து - ஆட்சிச்சுற்றத்துடன்; **ஆற்றி** - பொருந்தியிருந்து; **எண்ணாத** - ஆராயாத; **சினத்துஆற்றி** - தவறுநேரும்போது; **சீறின்** - சீறுவானேயானால்; **திரு** - வளமிக்க அரசும்; **சிறுகும்** - சுருங்கிவிடும்.

(க-ரை): அரசன், தன் சுற்றமாகிய அமைச்சர் முதலாயினோரை ஆராயாது, தவறு நேரும்போது அவர்கள்மீது சினங்கொண்டு சீறினால், அவ்வரசனது வளமிக்க அரசும் நாளடைவில் சுருங்கி விடும். (568)

9. செருவந்த போழ்தின் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

செருவந்த போழ்தின், சிறைசெய்யா, வேந்தன், வெரு வந்து, வெய்து, கெடும்.

(பொ-ரை): போர் வருவதற்கு முன்பே, தக்க பாதுகாப்புச் செய்துகொள்ளாத அரசன், போர் வரும்போது, தற்காப்பு இல்லாமல், அதற்கு அஞ்சி, விரைவில் கெட்டொழிவான்.

செரு - போர்; **சிறைசெய்யா** - தக்க பாதுகாப்பினைச் செய்துகொள்ளாத; **வெருவந்து** - அஞ்சி; **வெய்துகெடும்** - விரைவில் கெட்டொழிவான்.

(க-ரை): முன்கூட்டியே பாதுகாப்பை அமைத்துக்கொள்ளாத அரசன், போர் வரும்போது, தற்காப்புக்கு வழியில்லாமல், அஞ்சி அழிந்துபோவான். (569)

10. கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுஅல்லது
இல்லை நிலக்குப் பொறை.

கடுங்கோல், கல்லார்ப், பிணிக்கும்; நிலக்குப் பொறை, அது அல்லது, இல்லை.

(பொ-ரை): கொடுங்கோல் மன்னன், கல்லாத முரடர்களைத் தனக்குத் துணையாகச் சேர்த்துக் கொள்ளுவான்; நிலத்துக்குப் பெருஞ்சுமை அப்படிப்பட்ட அரசனேயாவானேயல்லாமல், வேறு யாரும் இல்லை.

நிலக்கு - நிலத்துக்கு; **பொறை** - பெருஞ்சுமை.

(க-ரை): கல்லாதவர்களைத் தன் துணையாகக் கொண்டிருக்கும் கொடுங்கோல் அரசனைக் காட்டிலும், வேறொருவர் நிலத்திற்குப் பெருஞ்சுமையாக ஆகமாட்டார்கள். (570)

58. கண்ணோட்டம்

கண்ணோட்டம் என்பது, கண்ணால் காணப்படுபவர் யாவரேயாயினும், அவரிடம் அன்பு, இரக்கம்காட்டி, அவர்க்கு அருள்செய்தல் எனப்படும்.

**1. கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டுஇவ் வுலகு.**

கண்ணோட்டம், என்னும், கழிபெருங் காரிகை, உண்மையான், இவ்வுலகு, உண்டு.

(பொ-ரை): அன்பால் இரக்கப்படுகின்ற கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற மிகச் சிறப்பு வாய்ந்த அழகு இருக்கின்ற காரணத்தால்தான், இந்த உலகமானது அழியாமல் நிலைபெற்று இருக்கிறது.

கண்ணோட்டம் - அன்பால் இரக்கப்படும் பண்பு; **காரிகை** - அழகு; **உண்மையான்** - இருக்கின்ற காரணத்தால்.

(க-ரை): கண்ணோட்டமுள்ளவர்கள் வாழும் இடத்தில், அச்சமின்றி வாழ வகை ஏற்படுகிறது; அதனால், உலகம் நிலைபெற்று இருக்க வழி கிடைக்கிறது. (571)

**2. கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.**

உலகியல், கண்ணோட்டத்து, உள்ளது; அஃதிலார், உண்மை, நிலக்குப், பொறை.

(பொ-ரை): உலக நடைமுறையானது, கண்ணோட்டம் இருப்பதால்தான் நிகழ்கின்றது; கண்ணோட்டமில்லாதவர்கள் உயிரோடு இருப்பது, நிலத்திற்குப் பெருஞ்சுமையேயல்லாமல் வேறு இல்லை.

உலகியல் - உலக நடைமுறையானது; **அஃதிலார்** - கண்ணோட்டமில்லாதவர்கள்; **உண்மை** - உயிரோடு இருப்பது; **நிலக்கு** - நிலத்துக்கு; **பொறை** - பெருஞ்சுமை.

(க-ரை): கண்ணோட்டமில்லாதவர்கள் உலகில் உயிரோடு வாழ்வது என்பது, நிலத்திற்குப் பெருஞ்சுமையே அல்லாமல் வேறு பயனில்லை. (572)

**3. பண்என்னாம் பாடற்கு இயைபுஇன்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.**

பாடற்கு, இயைபு இன்றேல், பண் என்ஆம்? கண்ணோட்டம், கண், இல்லாத, கண் என்ஆம்?

(பொ-ரை): பாடலோடு பொருந்தி வராவிட்டால், இசையினால் என்ன பயன் ஏற்பட இயலும்? ஒரு பயனும் இல்லை. அதுபோல, கண்ணோட்டம் என்னும் பண்பு கண்ணுக்கு இல்லாவிட்டால், கண்ணால் என்ன பயன் ஏற்பட இயலும்? ஒரு பயனும் இல்லை!

இயைபு இன்றேல் - பொருந்தி வராவிட்டால்; **பண்** - இசை; **என்னாம்** - என்ன பயன் ஏற்பட இயலும்.

(க-ரை): பாடலோடு பொருந்தி வராத இசை, பயனற்று விளங்குவதைப் போல, கண்ணோட்டத்தோடு பொருந்தி வராத கண்ணும், பயனற்று விளங்குவதாகும். (573)

**4. உளபோல் முகத்துஎவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்.**

அளவினால், கண்ணோட்டம், இல்லாத கண்; முகத்து, உளபோல், எவன் செய்யும்?

(பொ-ரை): வேண்டப்படும் அளவுக்குக் கண்ணோட்டம் இல்லாத கண்கள், முகத்தில் உள்ளவைபோலத் தோன்றினாலும், அதுதவிர வேறு என்ன பயனைச் செய்யும்? ஒரு பயனையும் செய்யா!

அளவினால் - வேண்டப்படும் அளவுக்கு; **முகத்துஉள போல்** - முகத்தில் உள்ளவை போலத் தோன்றினாலும்; **எவன்செய்யும்** - வேறு என்ன பயனைச் செய்யும்.

(க-ரை): தேவைப்படும் அளவுக்குக் கண்ணோட்டத்தைச் செலுத்தாத கண்கள், முகத்தில் இருக்கின்றன என்பதைத் தவிர, அவற்றால் வேறு என்ன பயன் ஏற்பட இயலும்? ஒரு பயனும் ஏற்படாது! (574)

**5. கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதுஇன்றேல்
புண்என்று உணரப் படும்.**

கண்ணிற்கு, அணிகலம், கண்ணோட்டம்; அஃதுஇன்றேல், புண்என்று, உணரப்படும்.

(பொ-ரை): ஒருவனது கண்களுக்கு அழகினைத் தரும் இயற்கையான அணிகலன், கண்ணோட்டமாகும்; அந்தக் கண்ணோட்டம் இல்லையென்றால், அந்தக் கண்களானவை, புண்கள் என்றே கருதப்படும்.

அணிகலன் - அழகினைத் தரும் இயற்கையான பொன்னணி; **உணரப்படும்** - கருதப்படும்; கண் துயர் விளைவிக்கும் ஒன்றாகக் கருதப்படும் நிலையில் புண் எனப்பட்டது.

(க-ரை): கண்ணோட்டமுடைய கண்ணைத்தான் கண் என்று சொல்லவேண்டும்; இல்லையென்றால், அந்தக் கண்ணைப் புண் என்றுதான் சொல்ல வேண்டும். (575)

6. மண்ணோடு இயைந்த மரத்துஅனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர்.

கண்ணோடு இயைந்து, கண்ணோடாதவர், மண்ணோடு இயைந்த, மரத்து, அனையர்.

(பொ-ரை): இரக்க அன்போடு காணுவதற்குரிய கண்களைக் கொண்டிருந்தும், அவற்றிற்குரிய கண்ணோட்டம் இல்லாதவர்கள், மண்ணோடு பொருந்தி நிற்கும் மரத்திற்கு ஒப்பானவர்கள் ஆவார்கள்.

கண்ணோடு - இரக்க அன்போடு காணுவதற்குரிய கண்களை; **அனையர்** - ஒப்பானவர் ஆவர்.

(க-ரை): உலகில் கண்ணோட்டம் இல்லாமல் வாழ்பவர்கள், அசையாமல் நிற்கும் மரத்திற்கு ஒப்பானவர்கள் ஆவார்கள். (576)

7. கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல்.

கண்ணோட்டம், இல்லவர், கண்ணிலர்; கண்ணுடையார், கண்ணோட்டம், இன்மையும் இல்.

(பொ-ரை): கண்ணோட்டம் இல்லாதவர்கள், நல்ல கண்ணுடையவராகக் கருதப்பட மாட்டார்கள்; நல்ல கண்ணுடையவர் என்பவர்கள், கண்ணோட்டம் இல்லாமலிருக்க மாட்டார்கள்.

இல்லவர் - இல்லாதவர்; **இன்மையும் இல்** - இல்லாமலிருக்க மாட்டார்கள்.

(க-ரை): நல்ல கண்ணுடையவர் என்பவர்கள், கண்ணோட்டம் உடையவராகவே இருக்க வேண்டும். (577)

8.. கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு உரிமை உடைத்துஇவ் வுலகு.

கருமம், சிதையாமல், கண்ணோட வல்லார்க்கு, இவ்வுலகு, உரிமை, உடைத்து.

(பொ-ரை): முறை செய்தலாகிய தன்னுடைய கடமை கெடாமல் கண்ணோட்டம் செலுத்தும் வல்லமையுடைய அரசனுக்கு, இந்த உலகமே உரிமையுடையதாகிறது.

கருமம் - முறை செய்தலாகிய தன்னுடைய கடமை; **சிதையாமல்** - கெடாமல்; **உரிமை உடைத்து** - உரிமை உடையதாகும்.

(க-ரை): நீதி வழங்கும் தன்னுடைய கடமை கெடாமல், கண்ணோட்டம் செய்யும் அரசனுக்கு, உலகமே உரிமையுடையதாக அமைகிறது. (578)

9. ஒறுத்துஆற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப் பொறுத்துஆற்றும் பண்பே தலை.

ஒறுத்து ஆற்றும், பண்பினார் கண்ணும், கண்ணோடிப், பொறுத்துஆற்றும், பண்பே, தலை.

(பொ-ரை): தம்மைத் தண்டித்து வருத்துகின்ற இயல்பு உடையவர்களிடத்திலும், கண்ணோட்டம் செலுத்தி, அவர்களின் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளும் பண்புடைமையே மிக உயர்ந்ததாகும்.

ஒறுத்துஆற்றும் - தம்மைத் தண்டித்து வருத்துகின்ற; **பண்பினார் கண்ணும்** - இயல்புடையவர்களிடத்திலும்; **பொறுத்து ஆற்றும்** - குற்றத்தினைப் பொறுத்துக் கொள்ளும்; **தலை** - உயர்ந்ததாகும்.

(க-ரை): தீமை செய்தவர்களிடத்திலும் கண்ணோட்டம் காட்டுதல் என்பது உயர்ந்த பண்பாகும். (579)

10. பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்.

நஞ்சு, பெயக்கண்டும், நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர், உண்டு, அமைவர்.

(பொ-ரை): தம்முடைய நண்பரிடம் உள்ளது நைந்துபோன பழந்தான் என்றாலும், அதனை உண்ணுமாறு, அவர் அன்பின் காரணமாக வழங்கியிருப்பதைக் கண்டுகொண்ட பிறகும், விரும்பத் தக்க நாகரிகம் என்னும் கண்ணோட்டத்தை விரும்புபவர்கள், அதனை உதறித் தள்ளிவிடாமல், உண்டு மனநிறைவே பெறுவார்கள்.

நஞ்சு - நைந்துபோன பழம் என்பதைக் குறிக்கும், 'நச்சு' அல்லது 'விடம்' என்பதை இங்குக் குறிக்காது. 'தனிப்பாடல் திரட்டில்' காளமேகப் புலவர், பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும் பொருந்துமாறு, இருபொருள்பட, 'நஞ்சிருக்கும், தோல் உரிக்கும்'' என்று தொடங்கும் செய்யுளில், 'நஞ்சு' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். பழத்தின் நைந்த தன்மையைக் குறித்து, 'நஞ்சு' என்கிறார். இந்தக் குறட்பாவைப் பொறுத்தவரையில், 'நைந்து போன பழம்' என்றுதான் பொருள்கொள்ள வேண்டும்.

ஒருவர், பிறரிடம் அன்புகொண்டு, இரக்கங்காட்டி, அவர்க்கு அருள் செய்வதுதான், 'கண்ணோட்டம்' என்று கொள்ளப்படும்.

ஒருவர், தம்மிடம் இருக்கும் பழம் நைந்துபோன ஒன்றுதான் என்றாலும், அதனை உண்ணுமாறு, அன்புடன் வேண்டிக் கொடுக்கும்போது அதனை வேண்டாம் என்று உதறித் தள்ளிவிட்டு விடுவது கண்ணோட்டம் ஆகாது. அன்புடன் வழங்குவதை ஏற்று, அவரிடம் இரக்கங்காட்டி, அவருக்கு மகிழ்ச்சி ஊட்டினால்தான், அப்படிப்பட்ட செயல், கண்ணோட்டமாக அமைய முடியும்.

எனவேதான், வள்ளுவர் நைந்த பழம் என்பதை, நாகரிகம் உடையவர் கண்டுகொண்ட பிறகும், அதனை உதறித் தள்ளிவிடாது, அன்புடன் உண்டு, மன நிறைவு பெறுவர் என்கிறார்.

வள்ளுவர் கூறும் நட்பு இலக்கணப்படி, உண்மையான நண்பர் யாரும், அவரால் விரும்பப்படும் மற்றொரு நண்பருக்கு, 'நஞ்சி'னைத் (விடத்தினை) தர மாட்டார்; தரவும் கூடாது. அப்படியே தந்தாலும் அவர் நண்பர் ஆக மாட்டார்; பகைவர் ஆவார்.

ஒருவர் கொடுப்பது விடம் என்று தெரிந்தால், தெளிவான அறிவுடைய எவரும் அதை உண்ணமாட்டார்; அப்படி உண்ணுவதை நாகரிகமாகவும் கொள்ள மாட்டார்.

'நஞ்சு' (விடம்) உண்டவர் சாவார் என்பதுதான் உண்மை. அதற்குப் பின் அவர் உயிர் வாழமாட்டார். செத்த பிறகு நாகரிகம் என்னும் கண்ணோட்டத்தோடு வாழ வழியும் இல்லை.

நண்பராகப் பழகி, நஞ்சினைப் (விடத்தை) பெய்பவரின் நட்பை மதித்து, அந்த நஞ்சினை உண்டு மடியுமாறு வள்ளுவர் சொல்லுவார் என்றோ, அதனை நாகரிகம் என்று கூறுவார் என்றோ கொள்வதற்கு இல்லை.

நயத்தக்க - விரும்பத்தக்க; **நாகரிகம்** - நாகரிகம் என்னும் கண்ணோட்டம்.

(க-ரை): விரும்பத்தக்க நாகரிகம் என்னும் கண்ணோட்டத்தை வேண்டுபவர்கள், தம் நண்பர்கள் அன்புடன் விரும்பிக் கொடுக்கும் எந்த உணவையும் உதறித் தள்ளிவிடாமல், அதனை உண்டு, மனநிறைவு பெறுவார்கள். (580)

59. ஒற்றாடல்

ஒற்றாடல் என்பது, பகைவர், நொதுமலர், நண்பர் ஆகிய மூன்று திறத்தாரிடத்திலும் நிகழ்ந்தவற்றையும், நிகழப் போவனவற்றையும் மறைந்து நின்று உளவு அறியும் ஒற்றர் மூலம் அறிதல், ஒற்றரை ஆளுதல், ஒற்றரின் திறமை பற்றிப் பகர்தல் ஆகியவற்றைப்பற்றிக் கூறுதல் எனப்படும்.

1. ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்.

ஒற்றும், உரைசான்ற நூலும், இவைஇரண்டும், மன்னவன், கண், தெற்று என்க.

(பொ-ரை): உளவு அறிதல், புகழ்மிக்க அரசியல் அறநூல் அறிதல் ஆகிய இரண்டும், தனக்குரிய இரண்டு கண்களாகும் என்பதை அரசனானவன் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஒற்று - உளவுஅறிதல்; **உரைசான்ற நூல்** - புகழ்மிக்க அரசியல் அறநூல்; **கண்** - தனக்குரிய கண்கள் என்பதை; **தெற்றென்க** - தெரிந்துகொள்ள வேண்டும்.

(க-ரை): உளவு அறிதலும், அரசியல் அறநூல் அறிதலும் அரசனானவனுக்கு இரண்டு கண்களாக விளங்குபவையாகும்.(581)

2. எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்அறிதல் வேந்தன் தொழில்.

எல்லார்க்கும், எல்லாம், நிகழ்பவை, எஞ்ஞான்றும், வல்அறிதல், வேந்தன், தொழில்.

(பொ-ரை): எல்லோரிடத்திலும் நிகழ்பவை எல்லாவற்றையும், எல்லாக் காலத்திலும், ஒற்றரைக் கொண்டு விரைவாக அறிதல், அரசனுக்குரிய இன்றியமையாத தொழிலாகும்.

எல்லாம் - எல்லாவற்றையும், **எஞ்ஞான்றும்** - எல்லாக் காலத்திலும்; **வல்அறிதல்** - விரைவாக அறிதல்.

(க-ரை): நாட்டில் நிகழ்பவை அனைத்தையும் நாள்தோறும் ஒற்றரைக் கொண்டு விரைவாக அறிந்துகொள்ள வேண்டியது அரசனின் முக்கியக் கடமையாகும். (582)

**3. ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்தது இல்.**

ஒற்றினால், ஒற்றிப், பொருள்தெரியா, மன்னவன், கொற்றம், கொளக்கிடந்தது, இல்.

(பொ-ரை): ஒற்றர்களைக் கொண்டு, எல்லோரிடத்திலும் நிகழ்வனவற்றையெல்லாம் அறிந்துகொண்டு, அதனால் அடையும் பயனை ஆராய்ந்தறியாத அரசன், வெற்றி பெறுவதற்குரிய வழியே இல்லை.

பொருள் தெரியா - அடையும் பயனை ஆராய்ந்தறியாத; **கொற்றம்** - வெற்றி; **கொளக்கிடந்தது இல்** - பெறுவதற்குரிய வழியே இல்லை.

(க-ரை): நாட்டில் எல்லோரிடத்திலும் நடப்பனவற்றை, ஒற்றர்களைக்கொண்டு அறிந்து, அதனால் ஏற்படும் பலனை உணராத அரசன், ஆட்சிபுரிவதிலும், போர்புரிவதிலும் வெற்றி பெறுவதற்கு வழியே இல்லை. (583)

**4. வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று.**

வினை செய்வார், தம் சுற்றம், வேண்டாதார், என்றாங்கு, அனைவரையும், ஆராய்வது, ஒற்று.

(பொ-ரை): உளவு வேலையைச் செய்யும் ஒற்றர், அரசருடைய சுற்றத்தார், அரசருடைய பகைவர் என்று சொல்லப்படும் எல்லோரையும் வேறுபாடு பார்க்காமல் ஆராய வேண்டும்; அப்படிப்பட்டவரே ஒற்றர் ஆவார்.

வினை செய்வார் - உளவுவேலை செய்யும் ஒற்றர்; **வேண்டாதார்** - பகைவர்; **ஒற்று** - ஒற்றர் ஆவார்.

(க-ரை): ஒற்றர்கள், அரசர்க்குச் சுற்றத்தாராக இருப்போரையும், பகைவர்களாக இருப்போரையும் வேறுபாடு பார்க்காமல் ஆராய வேண்டும்; அப்படிப்பட்டவர்களே உண்மையான ஒற்றர்கள் ஆவார்கள். (584)

**5. கடாஅ உருவொடு கண்அஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று.**

கடாஅ உருவொடு, கண் அஞ்சாது, யாண்டும், உகாஅமை, வல்லதே, ஒற்று.

(பொ-ரை): பிறர் ஐயப்படாத உருவத்துடன், ஒருகால் ஐயப்பட்டு நோக்கினால், அந்த நோக்குக்கு அஞ்சாது நின்று, அவர்கள் எவ்வளவு வருத்தினாலும், எப்பொழுதும் நெஞ்சில் உள்ளவற்றை வெளிப்படுத்தாத வல்லமை உடையவனே ஒற்றனாவான்.

கடாஅ உருவொடு - பிறர் ஐயப்படாத உருவத்துடன்; **கண் அஞ்சாது** - பிறர் ஐயப்பட்டு நோக்கினால், அந்நோக்குக்கு அஞ்சாமல்; **யாண்டும்** - பிறர் எவ்வளவு வருத்தினாலும்; **உகாஅமை** - நெஞ்சில் உள்ளவற்றை வெளிப்படுத்தாத; **வல்லது** - வல்லமை உடையவனே; **ஒற்று** - ஒற்றனாவான்.

(க-ரை): பிறர் ஐயப்படாத தோற்றத்தையும், அஞ்சாத பண்பையும் கொண்டு, எவ்வளவு வருத்தினாலும் மனத்தில் உள்ளவற்றை வெளியிடாதவனே ஒற்றனாவான். (585)

6. துறந்தார் படிவத்தர்ஆகி இறந்து ஆராய்ந்து
என்செயினும் சோர்விலது ஒற்று.

துறந்தார், படிவத்தர், ஆகி, இறந்து ஆராய்ந்து, என் செயினும், சோர்விலது, ஒற்று.

(பொ-ரை): துறவிக்கோலம் தாங்கியவனாகிப், புகுவதற்கு அரிய இடங்களையெல்லாம் கடந்து, உட்புகுந்து, எல்லாவற்றையும் ஆராய்பவனாய்ப் பிறர் எவ்வளவு நயப்படுத்தினாலும், துன்பப் படுத்தினாலும், அதனால் சோர்வடைந்து, தன்னை இன்னானென்று வெளிப்படுத்திக் கொள்ளாதவனே ஒற்றனாவான்.

துறந்தார் படிவத்தர் ஆகி - துறவிக்கோலம் தாங்கியவனாகி; **இறந்து** - புகுவதற்கு அரிய இடங்களையெல்லாம் கடந்து உட்புகுந்து; **ஆராய்ந்து** - எல்லாவற்றையும் ஆராய்பவனாய்; **என்செயினும்** - பிறர் எவ்வளவு நயப்படுத்தினாலும், துன்பப் படுத்தினாலும்; **ஒற்று** - ஒற்றனாவான்; துறவிக்கோலம் பூண்டவரைப் பொதுவாக யாரும் ஐயப்பட மாட்டார்கள்.

(க-ரை): மாற்று வடிவம் தாங்கிப் புகுவதற்கு அரிய இடங்களுக்கெல்லாம் சென்று, எல்லாவற்றையும் ஆராய்பவனும், பிறர் ஐயப்பட்டுப் பிடித்து எத்தகைய துன்பம் இழைத்தாலும், தன்னை யார் என்று வெளிப்படுத்திக் கொள்ளாதவனும் ஆகிய ஒருவனே ஒற்றனாவான். (586)

7. மறைந்தவை கேட்கவற்று ஆகி அறிந்தவை ஐயப்பாடு இல்லதே ஒற்று.

மறைந்தவை, கேட்கவற்று, ஆகி, அறிந்தவை, ஐயப்பாடு இல்லதே, ஒற்று.

(பொ-ரை): பிறர் மறைவாகச் செய்யும் செயல்களை, அவர்களுக்கு வேண்டியவர்களைக் கொண்டு கேட்டறிய வல்லவனாய் அமைந்து, அவ்வாறு அறிந்தவைகளை, ஐயத்திற்கு இடமின்றித் தீர அறிந்துகொள்ளுவதில் வல்லமையுடையவனே ஒற்றனாவான்.

மறைந்தவை - பிறர் மறைவாகச் செய்யும் செயல்களை; **கேட்கவற்று** - வேண்டியவர்களைக்கொண்டு கேட்டறிய வல்லவனாய்.

(க-ரை): பிறர் மறைவாகச் செய்யும் செயல்களை, அவர்களுக்கு வேண்டியவர்கள் மூலம் கேட்டறிந்து, அவற்றின் உண்மை நிலையை அறிந்து கொள்வதில் வல்லமையுடையவனே ஒற்றனாவான். (587)

8. ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றும்ஓர் ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

ஒற்று ஒற்றித், தந்த பொருளையும், மற்றும் ஓர், ஒற்றினால், ஒற்றிக்கொளல்.

(பொ-ரை): ஓர் ஒற்றன் உளவாக அறிந்துவந்து அறிவித்த செய்தியினைப் பின்னும் வேறோர் ஒற்றனைக் கொண்டு அறிந்து வரச்செய்து, இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து, உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒற்று - ஒற்றன்; **ஒற்றித்தந்த** - உளவாக அறிந்துகொண்டு வந்த; **பொருள்** - செய்தி.

(க-ரை): ஓர் ஒற்றன்மூலம் கண்டறிந்த செய்தியினை, மற்றோர் ஒற்றன் மூலம் தனியாகக் கண்டறியச் செய்து, இரண்டு செய்திகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டும். (588)

9. ஒற்றுஒற்று உணராமை ஆள்க உடன்மூவர் சொல்தொக்க தேறப் படும்.

ஒற்று ஒற்று, உணராமை, ஆள்க; உடன்மூவர், சொல் தொக்க, தேறப்படும்.

(பொ-ரை): ஓர் ஒற்றனை மற்றோர் ஒற்றன் அறியாதபடி ஆள வேண்டும்; அப்படிப்பட்ட ஒற்றர் மூவர் கூறும் செய்திகள் ஒத்திருக்குமேயானால், அவை உண்மையானவை என்று தெளிவு பெறலாம்.

உணராமை - அறியாதபடி; **உடன்மூவர்** - ஒருபொருள் பற்றி வெவ்வேறாக அனுப்பப்பட்ட மூவர்; **தொக்க** - ஒத்திருக்குமே யானால்; **தேறப்படும்** - உண்மை என்று தெளியப்படும்.

(க-ரை): ஒரு பொருள் பற்றி வெவ்வேறாக அனுப்பப்பட்ட மூன்று ஒற்றர்கள் கூறும் செய்திகள் ஒத்திருக்குமேயானால், அவை உண்மையானவைதாம் என்பது தெளிவுபட்டுவிடும். (589)

10. சிறப்புஅறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தான் ஆகும் மறை.

ஒற்றின் கண், சிறப்பு அறிய, செய்யற்க; செய்யின், மறை புறப்படுத்தான், ஆகும்.

(பொ-ரை): அரசன் ஒற்றனுக்குச் செய்யும் சிறப்பைப் பிறர் அறியுமாறு செய்யக்கூடாது; அப்படிச் செய்தால், மறைத்து வைக்க வேண்டிய ஒன்றை அவன் தானே வெளிப்படுத்தியவன் ஆவான்.

மறை - மறைத்து வைக்க வேண்டிய ஒன்று; **புறப்படுத்தான்** - தானே வெளிப்படுத்தியவன்.

(க-ரை): அரசன் ஒற்றர்களுக்குச் செய்யும் சிறப்பை, மறைவாகச் செய்ய வேண்டுமேயல்லாமல், பிறர் அறியுமாறு செய்யக்கூடாது. (590)

60. ஊக்கம் உடைமை

ஊக்கம் உடைமை என்பது, மனத்தளர்ச்சியின்றிக் குறிப்பிட்ட செயலை மேற்கொண்டு, உள்ள எழுச்சியோடு ஈடுபடுதல் எனப்படும்.

1. உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதுஇல்லார்
உடையது உடையரோ மற்று.

உடையர், எனப்படுவது, ஊக்கம், அஃதுஇல்லார், மற்று உடையது, உடையரோ.

(பொ-ரை): ஒருவர் ஒன்றைப் பெற்றிருக்கின்றார் என்று சொல்லுவதற்குரிய சிறப்புடையது ஊக்கமேயாகும். அவ்வூக்கம் இல்லாதவர்கள், பிற பொருள்களை உடையவர்களாக இருந்தாலும், அவர்கள் உடையர் என்று சொல்லத்தக்கவர்கள் ஆவார்களோ என்றால், ஆகமாட்டார்கள்.

உடையர் - ஒன்றைப் பெற்றிருக்கின்றவர்; **மற்று உடையது** - பிற பொருள்களை உடையவர்களாக இருந்தாலும்.

(க-ரை): ஊக்கம் உடையவர்கள்தாம், ஒன்றை உடையவர்கள் என்று சொல்லப்படுவார்கள்; பிற பொருள்களை உடையவர்கள் எல்லோரும், அப்படிக் கருதப்பட மாட்டார்கள். (591)

2. உள்ளம் உடைமை உடைமை பொருள்உடைமை
நில்லாது நீங்கிவிடும்.

உள்ளம் உடைமை, உடைமை; பொருள் உடைமை, நில்லாது, நீங்கி விடும்.

(பொ-ரை): ஒருவருக்கு ஊக்கமுடைமையே நிலையான உடைமையாகும்; மற்றப் பொருளுடைமையானது, அது போல நிலைபெற்று நில்லாமல், அகன்று போய்விடும்.

உள்ளம் - ஊக்கம்; **நில்லாது** - நிலைபெற்று நில்லாமல்.

(க-ரை): ஒருவருக்கு ஊக்கமுடைமைதான், நிலைபெற்று நிற்கும் பொருளாகும்; மற்ற பொருளுடைமையோ என்றால், நிலைபெற்று நில்லாமல், அவரைவிட்டு அகன்று போய்விடும். (592)

3. ஆக்கம் இழந்தேம்என்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார்.

ஒருவந்தம், ஊக்கம், கைத்துடையார், ஆக்கம், இழந்தேம் என்று, அல்லாவார்.

(பொ-ரை): உறுதியாக ஊக்கத்தைத் தம் கைப்பொருளாக உடையவர்கள், செல்வத்தை இழக்க நேர்ந்தாலும், அச்செல்வத்தை இழந்துவிட்டோமே என்று எண்ணி மனங்கலங்க மாட்டார்கள்.

ஒருவந்தம் - உறுதியாக, **கைத்துஉடையார்** - தமது கைப்பொருளாக உடையவர்கள்; **ஆக்கம்** - செல்வம்; **அல்லாவார்** - மனம் கலங்க மாட்டார்கள்.

(க-ரை): ஊக்கம் என்னும் உறுதியான கைப்பொருளை உடையவர்கள் தம்முடைய பெருஞ்செல்வத்தை இழக்க நேர்ந்தாலும், அச்செல்வத்தை இழந்துவிட்டோமே என்று நினைத்து மனங்கலங்க மாட்டார்கள். (593)

4. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவுஇலா
ஊக்கம் உடையான் உழை.

அசைவுஇலா, ஊக்கம், உடையான் உழை, ஆக்கம், அதர்வினாய்ச், செல்லும்.

(பொ-ரை): தளர்ச்சி இல்லாத ஊக்கமுடையவன் இருக்கும் இடத்திற்குச் செல்வமானது, வழிகேட்டுக் கொண்டு, தானே போய்ச் சேரும்.

அசைவுஇலா - தளர்ச்சி இல்லாத; **உழை** - இருக்கும் இடத்திற்கு; **ஆக்கம்** - செல்வம்; **அதர்வினாய்** - தானே வழிகேட்டுக் கொண்டு; **செல்லும்** - போய்ச் சேரும்.

(க-ரை): தளராத ஊக்கமுடையவனிடத்தில், செல்வமானது, தானே வந்து குவியும். (594)

5. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

மலர்நீட்டம், வெள்ளத்து, அனைய, மாந்தர்தம் உயர்வு, உள்ளத்து, அனையது.

(பொ-ரை): நீர்ப் பூக்களுடைய தண்டுகளின் நீளமானது, அவை நிற்கும் நீரின் ஆழத்தின் அளவை ஒத்திருக்கும்; அதுபோல,

மக்களின் உயர்வான தன்மையானது, அவர்களின் ஊக்கத்தின் அளவை ஒத்திருக்கும்.

மலர் - நீர்ப்பூக்கள்; **நீட்டம்** - தண்டுகளின் நீளம்; **உள்ளத்து** - ஊக்கத்தின்; **அனையது** - ஒத்திருக்கும்.

(க-ரை): நீர்ப்பூக்களின் தண்டுகள், நீரின் ஆழத்தின் அளவே நீண்டிருக்கும். அதுபோல, மக்களின் உயர்வு, அவர்கள் கொண்டிருக்கும் ஊக்கத்தின் அளவே அமைந்திருக்கும். (595)

6. உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் மற்றுஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

உள்ளுவது எல்லாம், உயர்வு உள்ளல், மற்றுஅது, தள்ளினும், தள்ளாமை, நீர்த்து.

(பொ-ரை): ஒருவர் நினைப்பதை எல்லாம் உயர்வானவை பற்றியே நினைக்க வேண்டும்; அவ்வாறு உயர்வானவையாக நினைத்தவைகளெல்லாம் கைகூடாமல் போனாலும்கூட, அப்படி நினைப்பதைக் கைவிடக்கூடாது.

உள்ளுவது - நினைப்பது; **உயர்வு உள்ளல்** - உயர்வானவை யாகவே நினைக்க வேண்டும்; **தள்ளினும்** - கைகூடாமற் போனாலும்; **தள்ளாமைநீர்த்து** - அப்படி நினைக்கும் தன்மையைக் கைவிடக்கூடாது.

(க-ரை): ஒருவர் நினைப்பதை எல்லாம் உயர்வாகவே நினைக்க வேண்டும்; அப்படி நினைப்பது கைகூடாமற் போனாலும், நினைப்பதை ஒருபோதும் கைவிட்டுவிடக்கூடாது. (596)

7. சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதைஅம்பின்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு.

புதைஅம்பின் பட்டுப்பாடு, களிறு, ஊன்றும், உரவோர், சிதைவிடத்து, ஒல்கார்.

(பொ-ரை): தன் உடலை மறைக்கும் அளவுக்கு அம்புகள் பாய்ந்து புண்பட்டபோதும், யானையானது, தன் பெருமையை நிலைநிறுத்தும்; அதுபோல, ஊக்கமுடையவர்கள் தாம் கருதிய உயர்வுக்குச் சிதைவு வந்தபோதிலும், மனம் தளராது தம் பெருமையை நிலைநிறுத்துவார்கள்.

புதைஅம்பின்பட்டு - தன் உடலை மறைக்கும் அளவுக்கு அம்புகள் பாய்ந்து புண்பட்டபோதும்; **களிறு** - யானை; **ஊன்றும்**

- தன் பெருமையினை நிலைநிறுத்தும்; **உரவோர்** - ஊக்க முடையவர்கள்; **சிதைவிடத்து** - தாம் கருதிய உயர்வு சிதைந்த போதிலும்; **ஒல்கார்** - மனம் தளராது பெருமையினை நிலை நிறுத்துவர்.

(க-ரை): உடல் முழுவதும் அம்புகளால் தைக்கப் பெற்றுப் புண்பட்டபோதிலும், யானையானது, தன் பெருமையை நிலைநாட்டும்; அதுபோல, ஊக்கமுடையவர்களின் உயர்வான எண்ணங்கள், சிதைந்து போனாலும், அதனால் மனம் தளராமல், அவர்கள் தம் பெருமையை நிலைநிறுத்துவார்கள். (597)

**8. உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு.**

உள்ளம் இலாதவர், உலகத்து, வள்ளியம், என்னும் செருக்கு, எய்தார்.

(பொ-ரை): ஊக்கம் இல்லாதவர்கள், 'இவ்வுலகத்தில் யாம் ஈகைப்பண்பு உடையேம்' என்று, தம்மைத்தாமே மதித்து மகிழும் மகிழ்ச்சியை ஒருபோதும் அடையமாட்டார்கள்.

உள்ளம் - ஊக்கம்; **வள்ளியம்** - யாம் ஈகைப்பண்பு உடையேம்; **செருக்கு** - தம்மைத்தாமே மதித்து மகிழும் மகிழ்ச்சி; **எய்தார்** - அடையமாட்டார்கள்.

(க-ரை): ஊக்கம் இல்லாதவர்களிடத்தில் ஈகைப் பண்பு இருக்காது; அவர்கள் ஈகை புரிந்தோம் என்று செருக்கு அடைய வழியே இல்லை. (598)

**9. பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.**

யானை, பரியது, கூர்ங்கோட்டது, ஆயினும், புலிதாக்குறின், வெரூஉம்.

(பொ-ரை): யானையானது, மற்ற விலங்குகளைக் காட்டிலும் பெரிய உடம்பினையும், கூர்மையான கொம்புகளையும் உடையதுதான் என்றாலும், புலியானது தன்னைத்தாக்க வந்தால், ஊக்கமின்மையால் அது அஞ்சி நடுங்கும்.

பரியது - பெரிய உடம்பை உடையது; **கூர்ங்கோட்டது** - கூர்மையான கொம்புகளையுடையது; **தாக்குறின்** - தாக்க வந்தால்; **வெரூஉம்** - அஞ்சி நடுங்கும்.

(க-ரை): யானையானது, பெரிய உடம்பையும், கூரிய கொம்புகளையும் உடையதாக இருந்தாலும், புலி தாக்க வந்தால், எப்படி அஞ்சமோ, அப்படியே அரசன் உடல் வலிவும், படைக் கருவிகளும் கொண்டிருந்தாலும், ஊக்கமில்லாவிட்டால், பகைவர் தாக்க வரும்போது அஞ்ச வேண்டி வரும். (599)

10. உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கைஅஃது இல்லார்
மரமக்கள் ஆதலே வேறு.

உரம், ஒருவற்கு, உள்ள வெறுக்கை, அஃது இல்லார், மரம், மக்கள், ஆதலே, வேறு.

(பொ-ரை): ஒருவற்கு வலிமை என்பது ஊக்க மிகுதியேயாகும்; அவ்வூக்கம் இல்லாதவர்கள் மரங்களாவார்கள்; மரங்களுக்கும் மக்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், மக்களுக்குள்ள தனி வடிவமேயாகும்.

உரம் - வலிமை; **வெறுக்கை** - மிகுதி; **வேறு** - வேறுபாடு என்னவென்றால்; **மக்கள் ஆதலே** - மக்களுக்குள்ள தனியான வடிவத்தில் இருப்பதே.

(க-ரை): ஒருவற்கு ஊக்க மிகுதிதான் வலிமையாகும்; அவ்வூக்கம் இல்லாதவர்கள் மரங்களுக்கு ஒப்பாவார்கள். (600)

61. மடியின்மை

மடியின்மை என்பது, வினையை மேற்கொண்டு செய்யும்போது, சோம்பல் இல்லாமல் செய்தல் எனப்படும்.

**1. குடிஎன்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும்
மாசுஊர மாய்ந்து கெடும்.**

குடி என்னும், குன்றாவிளக்கம், மடி என்னும், மாசு ஊர, மாய்ந்துகெடும்.

(பொ-ரை): ஒருவனது பிறந்த குடியாகிய அணையாத விளக்கு, அவனது சோம்பலாகிய மாசு அடர்ந்து படியுமேயானால், அதன் ஒளி மங்கி அணைந்து கெட்டுப் போய்விடும்.

குன்றா - அணையாத; **மடி** - சோம்பல்; **மாசு** - இருள் என்னும் மாசு; **ஊர** - அடர்ந்து படிய; **மாய்ந்து** - ஒளி மங்கி அணைந்து கெட்டுப் போய்விடும்.

(க-ரை): ஒருவன் பிறந்த குடியானது, எவ்வளவு சிறந்ததாக இருந்தாலும், அவன் சோம்பல் கொண்டவனாக இருப்பானேயாகில், அவனது குடி, நாளடைவில் மங்கி மறைந்து போய்விடும். (601)

**2. மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.**

குடியைக், குடியாக, வேண்டுபவர், மடியை, மடியா, ஒழுகல்.

(பொ-ரை): தாம் பிறந்த குடியை, மேலும் உயரும் சிறந்த குடியாக ஆக்க விரும்புகின்றவர்கள், சோம்பலை அழித்து, முயற்சியோடு வாழ வேண்டும்.

குடியை - தாம் பிறந்த குடியை; **குடியாக** - மேலும் உயரும் சிறந்த குடியாக; **மடியை** - சோம்பலை; **மடியா** - அழித்து; **ஒழுகல்** - வாழ வேண்டும்.

(க-ரை): ஒருவர் தாம் பிறந்த குடியை உயர்த்த வேண்டுமானால், சோம்பலை அறவேவிட்டு, முயற்சியுடன் வாழ முற்பட வேண்டும். (602)

**3. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து.**

மடி, மடிக்கொண்டொழுகும், பேதை, பிறந்தகுடி, தன்னினும் முந்து, மடியும்.

(பொ-ரை): அழிக்கும் தன்மையையுடைய சோம்பலைத் தன்னிடத்திலே கொண்டிருக்கும் அறிவில்லாதவன் பிறந்த குடியானது, அவன் அழிவதற்கு முன்பே, தானே அழிந்துவிடும்.

மடிதல் - அழிதல்; **பேதை** - அறிவில்லாதவன்; **மடியும்** - அழியும்.

(க-ரை): சோம்பலைத் தனது பண்பாகக் கொண்டிருக்கும் அறிவில்லாதவன் பிறந்த குடியானது, அவன் அழிவதற்கு முன்பே அழிந்துவிடும். (603)

4. குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றுஇ லவர்க்கு.

மடிமடிந்து, மாண்டஉஞற்று, இலவர்க்கு, குடி மடிந்து, குற்றம் பெருகும்.

(பொ-ரை): சோம்பலிலே வீழ்ந்தழுந்தி, சிறந்த முயற்சி சிறிதுகூட இல்லாதவர்களின் குடியின் பெருமையும் அழிந்துபோகும்; குற்றங்களும் பெருகிவிடும்.

மடிமடிந்து - சோம்பலிலே வீழ்ந்தழுந்தி; **மாண்ட** - சிறந்த; **உஞற்றிலவர்க்கு** - முயற்சி இல்லாதவர்களுக்கு.

(க-ரை): சோம்பலிலே அழுந்தி, முயற்சி சிறிதுகூட இல்லாத வர்களின் குடியின் பெருமையும் அழிந்துபோகும்; குற்றங்களும் பெருகிவிடும். (604)

5. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

நெடுநீர், மறவி, மடி, துயில், நான்கும், கெடுநீரார், காமக் கலன்.

(பொ-ரை): காலந்தாழ்த்துதல், மறதி, சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம் ஆகிய நான்கும் அழியும் இயல்புடையார், தாமே விரும்பி ஏறிச் செல்லும் மரக்கலன்களாகும்.

நெடுநீர் - காலந்தாழ்த்துதல்; **மறவி** - மறதி; **மடி** - சோம்பல்; **துயில்** - அளவுக்கு மீறிய தூக்கம்; **கெடுநீரார்** - கெடுகின்ற இயல்புடையார்; **காமக்கலன்** - விரும்பி ஏறிச் செல்லும் மரக்கலன்கள்.

(க-ரை): காலந் தாழ்த்துதல், மறதி, சோம்பல், அளவு கடந்த தூக்கம் ஆகிய நான்கும், ஒருவரை அழிவுக்குக் கொண்டுபோய் விட்டுவிடும். (605)

6. படிஉடையார் பற்றுஅமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது.

படிஉடையார், பற்று, அமைந்தக் கண்ணும், மடியுடையார், மாண்பயன், எய்தல், அரிது.

(பொ-ரை): இவ்வுலகத்தை ஆளும் பேரரசரின் செல்வ மெல்லாம், தாமாகவே வந்து கிடைத்தபோதிலும்கூட, சோம்பலை உடையவர்கள் அச்செல்வத்தால் சிறந்த பயனை அடைதல் என்பது முடியாத செயலாகும்.

படிஉடையார் - இவ்வுலகத்தை ஆளும் பேரரசர்; **பற்று** - செல்வமெல்லாம்; **அமைந்தக்கண்ணும்** - தாமாகவே வந்து கிடைத்தபோதிலும்; **மடியுடையார்** - சோம்பலையுடையார்; **மாண்** - சிறந்த.

(க-ரை): பேரரசருடைய பெருஞ்செல்வம் கிடைத்தபோதிலும் சோம்பலை உடையவர்கள், அந்தச் செல்வத்தால் எவ்விதப் பயனையும் அடைய முடியாது. (606)

7. இடிபுரிந்து எள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றுஇ லவர்.

மடிபுரிந்து, மாண்ட உஞற்று, இலவர், இடிபுரிந்து, எள்ளும்சொல், கேட்பர்.

(பொ-ரை): சோம்பலை விரும்பி மேற்கொண்டு, சிறந்த முயற்சி இல்லாதவர்களாய் வாழ்கின்றவர்கள், பிறர் கண்டித்தும், இழித்தும் பேசும் சொற்களைக் கேட்க வேண்டிய நிலையை அடைவார்கள்.

மடிபுரிந்து - சோம்பலை விரும்பி மேற்கொண்டு; **மாண்ட** - சிறந்த; **உஞற்று** - முயற்சி; **இலவர்** - இல்லாதவர்களாய்; **இடிபுரிந்து** - கண்டித்து; **எள்ளும்** - இகழ்ந்தும்.

(க-ரை): சோம்பலை விரும்பி மேற்கொண்டு, சிறந்த முயற்சிகளை மேற்கொள்ளாமல் வாழ்கிறவர்களைப் பிறர் கண்டித்தும், இழித்தும் பேசவே செய்வார்கள். (607)

8. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்.

மடிமை, குடிமைக்கண், தங்கின், தன் ஒன்னார்க்கு, அடிமை, புகுத்திவிடும்.

(பொ-ரை): சோம்பலானது, ஒரு நல்ல குடியில் பிறந்தவனிடம் வந்து நிலைபெறுமாயின், அதுவே, அவனை அவனுடைய பகைவர்களிடம் அடிமையாக்கிவிடும்.

மடிமை - சோம்பல்; **குடிமைக்கண்** - நல்ல குடியில் பிறந்தவனிடம்; **தங்கின்** - நிலைபெறின்; **ஒன்னார்க்கு** - பகைவர்க்கு.

(க-ரை): நல்ல உயர்ந்த குடியில் பிறந்தவனிடம் சோம்பலானது வந்து நிலைபெற்றுவிடுமாயின், பின்னர் அதுவே, அவனைப் பகைவர்களுக்கு அடிமைப்படுத்தி விடும். (608)

9. குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.

ஒருவன், மடியாண்மை, மாற்றக், குடியாண்மையுள், வந்த, குற்றம், கெடும்.

(பொ-ரை): ஒருவன், சோம்பலானது தன்னை ஆட் கொண்டிருப்பதை அகற்றிவிட்டால், அவனது குடியைப் பொறுத்தும், ஆண்மையைப் பொறுத்தும் ஏற்பட்ட குற்றங்கள் அனைத்தும் அவனை விட்டு நீங்கிவிடும்.

மடி - சோம்பல்; **ஆண்மை** - தன்னை ஆட்கொண்டிருப்பதை; **மாற்ற** - அகற்றிவிட்டால்; **கெடும்** - நீங்கிவிடும்.

(க-ரை): ஒருவன் சோம்பலை அகற்றிவிட்டு வாழ்வானே யானால், அவனைச் சார்ந்த குற்றங்கள் பலவும் அகன்றுவிடும். (609)

10. மடிஇலா மன்னவன் எய்தும் மடிஅளந்தான்(று)
ஆஅயது எல்லாம் ஒருங்கு.

மடிஅளந்து, ஆன்று, ஆயது, எல்லாம் ஒருங்கு, மடிஇலா, மன்னவன், எய்தும்.

(பொ-ரை): சோம்பலை அடைந்ததன் காரணமாகவே, பிற அரசர்கள் பலரையும் விட்டு முன்பு நீங்கிய செல்வத்தையெல்லாம், சோம்பல் இல்லாத அரசன் ஒருங்கே அடைவான் என்பது திண்ணம்.

அளத்தல் - கலத்தல்; **மடிஅளந்து** - சோம்பலைக் கலந்து; சோம்பலை அடைந்து; 'எய்தும் அடிஅளந்தான்' அன்று; எய்தும் மடி அளந்தான் என்பதுதான் சரி; **ஆன்று** - நீங்கி; முடிந்தது - முடிந்தாயது என்பதுபோல, ஆன்றது - ஆன்றாயது ஆயது; **ஆன்றது** - நீங்கிய செல்வத்தைக் குறிக்கும்.

(க-ரை): சோம்பல் இல்லாத அரசன், சோம்பலின் காரணமாகப் பிற அரசர்கள் பலரையும் விட்டு முன்பு நீங்கிய செல்வத்தை யெல்லாம் ஒருசேரப் பெறுவான் என்பது உறுதி. (610)

62. ஆள்வினை உடைமை

ஆள்வினை உடைமை என்பது, ஒருவன் இடைவிடாத மெய்ம்முயற்சி உடையவனாக இருத்தல் எனப்படும்.

**1. அருமை யுடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.**

அருமையுடைத்து, என்று, அசாவாமை, வேண்டும்; முயற்சி, பெருமை, தரும்.

(பொ-ரை): ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்து முடித்தல் என்பது, கடினமானது என்று எண்ணி, ஒருவர் மனந்தளராது இருத்தல் வேண்டும்; இடைவிடா முயற்சியானது, அவருக்கு அச்செயலைச் செய்வதற்கேற்ற பெருமைக்குரிய வலிமையைத் தரும்.

அருமையுடைத்து - ஒரு செயலைச் செய்து முடித்தல் என்பது கடினமானது; **என்று** - என்று எண்ணி; **அசாவாமை** - மனந்தளராது; **பெருமை** - பெருமைக்குரிய வலிமையை.

(க-ரை): ஒருவர் ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்வது கடினமானது என்று கருதி, மனத்தளர்ச்சி அடையக்கூடாது; அவர் விடாமுயற்சியில் ஈடுபட்டால், அதுவே, அவருக்கு அச்செயலைச் செய்து முடித்தற்கேற்ற வலிமையைத் தரும். (611)

**2. வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.**

வினைக்குறை, தீர்ந்தாரின், உலகு; தீர்ந்தன்று, வினைக்கண், வினைகெடல், ஓம்பல்.

(பொ-ரை): முயற்சியில்லாமல் ஒரு வினையைக் குறையாக விட்டவரை, இவ்வுலகமானது கைவிட்டுவிடும். ஆகவே, செய்யப்படும் வினையில் வினை கெடுவதற்குக் காரணமான, முயற்சியில்லாமல் இருத்தலை, நீக்குதல் வேண்டும்.

வினைக்குறை - முயற்சியில்லாமல் ஒரு வினையைக் குறையாக; **தீர்ந்தாரை** - விட்டவரை; **தீர்ந்தன்று** - விட்டுவிடும்; **வினைக்கண்** - செய்யப்படும் வினையில்; **ஓம்பல்** - நீக்குதல்.

(க-ரை): முயற்சி செய்யாமல் வினையை அரை குறையாக விட்டவரை இந்த உலகம் கைவிட்டுவிடும்; ஆகவே, வினையில் ஈடுபடுவோர் முயற்சி வலிவோடு அதனைச் செய்ய வேண்டும். (612)

3. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு.

வேளாண்மை, என்னும் செருக்கு, தாளாண்மை, என்னும் தகைமைக்கண், தங்கிற்றே.

(பொ-ரை): பிறர்க்கு உதவி செய்தல் என்னும் பெருமித மேம்பாடு, முயற்சி என்னும் உயர்ந்த பண்பு உடையவரிடத்தே மட்டும் நிலை பெற்றிருப்பதாகும்.

வேளாண்மை - பிறர்க்கு உதவி செய்தல்; **செருக்கு** - பெருமித மேம்பாடு; **தாளாண்மை** - முயற்சி; **தகைமைக்கண்** - உயர்ந்த பண்பு உடையவரிடத்தே; முயற்சியுடையவர்கள்தாம் பெரும்பொருள் ஈட்டி எல்லோர்க்கும் உதவ இயலும்.

(க-ரை): முயற்சியுடையவர்கள்தாம் பிறர்க்கு உதவி செய்து, பெருமித மேம்பாட்டு உணர்வோடு இருக்க இயலும். (613)

4. தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

தாளாண்மை, இல்லாதான், வேளாண்மை; பேடிகை, வாளாண்மை, போலக், கெடும்.

(பொ-ரை): முயற்சியுடைமை இல்லாதவன், பிறர்க்கு உதவி செய்பவனாக இருத்தல் என்பது, போர்ப்படையைக் கண்டால் அஞ்சுகின்ற பேடியானவன், தன் கையில் வாளை எடுத்து ஆளுந்தன்மையைப் போல, நடைபெறாமல் போகும்.

தாளாண்மை - முயற்சியுடைமை; **வேளாண்மை** - பிறர்க்கு உதவி செய்தல்; **பேடி** - போர்ப்படைக்கு அஞ்சுகின்ற ஆண்மை யற்றவன்.

(க-ரை): வீரம் இல்லாத பேடி எப்படி வாளை எடுத்துப் போரிட முடியாதோ, அப்படியே முயற்சியில்லாதவன் தன் பொருளைக் கொண்டு பிறர்க்கு உதவி செய்ய இயலாது. (614)

5. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்துஊன்றும் தூண்.

துன்பம் விழையான், வினை விழைவான், தன்கேளிர், துன்பம், துடைத்து, ஊன்றும் தூண்.

(பொ-ரை): ஒருவன் தன்னுடைய இன்பத்தை விரும்பாதவனாய்த், தான் மேற்கொண்ட வினையை முயற்சியுடன் செய்து முடிக்க விரும்புகின்றவனானால், அவன் தன்னுடைய சுற்றத்தாரின் துன்பத்தை நீக்கி, அவர்களை நிலைபெறுத்தும் தூணாவான்.

விழையான் - விரும்பாதவனாய்; **கேளிர்** - சுற்றத்தார்; **துடைத்து** - நீக்கி; **ஊன்றும்** - நிலைபெறுத்தும்.

(க-ரை): ஒருவன் தன்னுடைய இன்பத்தைப் பற்றிக் கவலைப் படாமல், மேற்கொண்ட வினையைச் செய்துமுடிக்கும் முயற்சி உடையவனானால், அவன், தன் சுற்றத்தாரின் துன்பத்தைப் போக்கி, அவர்களைக் காப்பாற்றும் தகுதி படைத்தவனாவான். (615)

6. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

முயற்சி, திருவினை, ஆக்கும்; முயற்றின்மை, இன்மை, புகுத்திவிடும்.

(பொ-ரை): ஒருவனது முயற்சி, அவனது செல்வத்தைப் பெருகச் செய்யும்; அம்முயற்சியில்லாமை, அவனுக்கு வறுமையைச் சேர்த்துவிடும்.

திருவினை - செல்வத்தை; **ஆக்கும்** - பெருகச் செய்யும்; **இன்மை** - வறுமையை; **புகுத்திவிடும்** - சேர்த்துவிடும்.

(க-ரை): ஒருவனது முயற்சி அவனுக்குச் செல்வத்தைக் கொடுக்கும்; அம்முயற்சியில்லாமை அவனை வறுமையில் கொண்டு போய் விட்டுவிடும். (616)

7. மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்.

மாமுகடி, மடி உளாள், தாமரையினாள், மடியிலான், தாள் உளாள், என்ப.

(பொ-ரை): கரிய மூத்தவள் என்று கற்பனை உருவக வடிவமாகக் கூறப்படும் வறுமை, சோம்பல் உடையவனிடம் இருக்கும்; செய்ய இளையவள் என்று கற்பனை உருவக வடிவமாகக் கூறப்படும் செல்வம், முயற்சி உடையவனிடத்தில் இருக்கும் என்று உயர்ந்தோர் கூறுவார்கள்.

மாமுகடி - கரியமூத்தவள்; அதாவது வறுமை; **மடி** - சோம்பல்; **தாள்** - முயற்சி; **தாமரையினாள்** - செய்யவள்; செய்ய இளையவள்; அதாவது செல்வம். வறுமையைக் 'கரிய மூத்தவள்' என்றும், 'மூதேவி' என்றும், செல்வத்தைச் 'செய்ய இளையவள்' என்றும், 'திருமகள்' என்றும், 'தாமரையினாள்' என்றும் கற்பனையாகச் சொல்லுவது நூல் மரபாகும்.

(க-ரை): சோம்பல் எப்பொழுதும் வறுமையை உண்டாக்கும்; முயற்சி மட்டுமே செல்வத்தை உண்டாக்கும். (617)

8. பொறிஇன்மை யார்க்கும் பழிஅன்று அறிவுஅறிந்து
ஆள்வினை இன்மை பழி.

பொறி இன்மை, யார்க்கும், பழிஅன்று; அறிவு அறிந்து, ஆள்வினை, இன்மை பழி.

(பொ-ரை): பயனைத் தரும் 'விதி' ஒருவருக்கு இல்லாம லிருப்பது பழியாகும் என்று சில சமயநெறியினர் கூறுவது சரியன்று; அந்தக் கற்பனைக் கருத்துப்படி எவர்க்கும் பழி ஏற்படுவது இல்லை; அறிய வேண்டியவற்றை அறிந்து, முயன்று வினை செய்யா திருத்தலே, அவருக்குப் பெரும் பழியாகும்.

பொறி - 'பயன்தரும் விதி' என்பது கற்பனைக் கருத்து; பயன்தரும் விதி ஒருவருக்கு இல்லாமலிருப்பது, பழி பயப்பதாகும் என்பது வைதிகச் சமயத்தார் கொள்கை. அந்தக் கொள்கை, வள்ளுவருக்கு ஏற்புடையது அன்று; ஆகவேதான், அதனால் ஒன்றும் பழி ஏற்பட்டுவிடாது என்று குறிப்பிடுகிறார்.

(க-ரை): ஒருவருக்கு விதியால் பழி ஏற்படும் என்பது கற்பனை; அது உண்மை அன்று; அறிய வேண்டுவனவற்றை அறிந்து, முயன்று தொழில் செய்யாதிருத்தலே பழியைத் தரும். (618)

9. தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

தெய்வத்தால், ஆகாது, எனினும், முயற்சி, தன் மெய்வருத்தக், கூலி தரும்.

(பொ-ரை): வைதிகர்களின் கற்பனைப்படி தெய்வம் விதித்த விதியானது, கருதிய பயனைத் தரவில்லையே என்று ஒருவன் கவலைப்பட வேண்டியதில்லை; என்றாலும் முயற்சியானது, அவன்

தன் உடம்பை வருத்திய வருத்தத்தின் அளவுக்கு அவனுக்குக் கூலி கொடுக்கும்; முயற்சி வீண் போகாது.

தெய்வத்தான் - வைதிகர்களின் கற்பனைப்படி தெய்வம் விதித்த 'விதி'; **ஆகாது எனினும்** - கருதிய பயன் ஏற்படாது என்பது உண்மை என்றாலும்; இங்கு வள்ளுவர் அயலார் கொள்கையை மறுக்கிறார்.

(க-ரை): வைதிகர்களின் கற்பனைக் கருத்துப்படி விதியினால் எந்தப் பயனும் ஏற்படாது; அதற்காகக் கவலைப்படக்கூடாது; ஒருவர் முயற்சியோடு உழைத்தால், உழைப்புக்கு ஏற்ற பலன் கிட்டும். (619)

10. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர்.

உலைவு இன்றித், தாழாது, உஞற்றுபவர், ஊழையும், உப்பக்கம், காண்பர்.

(பொ-ரை): தளர்வு இல்லாமலும், தாழ்வு இல்லாமலும், தாம் மேற்கொண்ட வினையில் தொடர்ந்து முயற்சி செய்வோர், இயற்கைப் பண்பறிவின் அடிப்படையில் வெளிப்படும் முனைப்புத் தன்மை யையும், புறங்காட்டி ஓடச் செய்பவராவார்கள்.

ஊழ் என்பது வெளிப்படுகின்ற ஒன்று என்று பொருள்படும். **உலைவு** - தளர்வு; **இன்றி** - இல்லாமல்; **தாழாது** - தாழ்வு இல்லாமல்; **உஞற்றுபவர்** - வினையில் முயற்சி செய்வோர்; **உப்பக்கம் காண்பர்** - புறங்காட்டி ஓடச் செய்வார்; **ஊழ்** - இயற்கையாக வெளிப்படும் பண்பறிவு.

(க-ரை): தளர்வு இல்லாமலும், தாழ்வு இல்லாமலும் தாம் மேற்கொண்ட வினையில் தொடர்ந்து முயன்று பாடுபடுபவர்கள், இயற்கைப் பண்பறிவின் அடிப்படையில் வெளிப்படும் முனைப்புத் தன்மையையும் புறங்காட்டி ஓடச் செய்யும் வல்லமை படைத்தவ ராவர். (620)

63. இடுக்கண் அழியாமை

இடுக்கண் அழியாமை என்பது, ஒருவன் வினையில் ஈடுபடும்போது, சூழ்நிலை காரணமாகவோ, பொருளின்மை காரணமாகவோ, மெய்வருத்தத்தின் காரணமாகவோ, வேறு ஏதேனும் ஒரு காரணம் பற்றியோ துன்பம் வந்துசேர்ந்தால், அதற்காக மனங்கலங்காது இருத்தல் எனப்படும்.

1. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்.

இடுக்கண் வருங்கால் நகுக, அதனை அடுத்து ஊர்வது, அஃதுஒப்பது, இல்.

(பொ-ரை): துன்பம் வரும்போது, உள்ளுக்குள் சிரித்து மகிழ வேண்டும்; அத்துன்பத்தை நெருங்கி, அதனை எதிர்க்கவல்லது, அம்மகிழ்ச்சியைப் போன்று, வேறு எதுவும் இல்லை.

இடுக்கண் - துன்பம்; **நகுக** - உள்ளுக்குள் சிரித்து மகிழ வேண்டும்; **அதனை** - அத்துன்பத்தை; **அடுத்தூர்வது** - நெருங்கி எதிர்க்கவல்லது; **அஃதுஒப்பது** - அம்மகிழ்ச்சியைப் போன்றது.

(க-ரை): ஒருவன் தனக்குத் துன்பம் வந்தால், உள்ளுக்குள் சிரித்து மகிழ்ந்து அத்துன்பத்தை மறக்க வேண்டும்; துன்பத்தை நெருங்கி நின்று எதிர்க்கவல்லது அம்மகிழ்ச்சி ஒன்றேயாகும். (621)

2. வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

வெள்ளத்து அனைய, இடும்பை, அறிவுடையான், உள்ளத்தின், உள்ளக், கெடும்.

(பொ-ரை): வெள்ளம் போன்று அளவற்றதாய்த் துன்பம் வந்தாலும், அறிவுடைய ஒருவன், தன் உள்ளத்திலே அதனை நீக்கும் எளிய வழியை எண்ணிய அளவிலே, அத்துன்பமானது கெட்டொழியும்.

இடும்பை - துன்பம்; **உள்ள** - நீக்கும் எளிய வழியை எண்ணிய அளவிலே.

(க-ரை): எவ்வளவு பெரிய துன்பம் வந்தாலும், அறிவுடையவன், தன் உள்ளத்திலே அதனை நீக்கும் எளிய வழியை நினைத்த அளவிலேயே, அந்தத் துன்பம் கெட்டொழிந்து போகும்.(622)

**3. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.**

இடும்பைக்கு, இடும்பை, படாஅதவர், இடும்பைக்கு, இடும்பை, படுப்பர்.

(பொ-ரை): துன்பம் வந்தபோது அதற்காகத் துன்பப் படாதவர்கள், அந்தத் துன்பத்திற்கே துன்பத்தை உண்டாக்கி விடுவர்.

இடும்பை - துன்பம்; **படுப்பர்** - உண்டாக்கி விடுவர்.

(க-ரை): துன்பம் வந்தபோது அதற்காக மனங்கலங்காதவர்கள், அத்துன்பத்தையே அழித்து வென்றுவிடுவார்கள். (623)

**4. மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.**

மடுத்தவாய் எல்லாம், பகடு அன்னான், உற்ற இடுக்கண், இடர்ப்பாடு, உடைத்து.

(பொ-ரை): தடங்கல் ஏற்படும் இடங்களிலெல்லாம் கூடத் தளர்வில்லாமல் வண்டியை இழுத்துச் செல்லும் எருதினைப்போல, வினை முயற்சியை விடாது நடத்தும் வல்லவனை அடைந்த துன்பமானது, தானே துன்பப்படுதலை உடையதாகும்.

மடுத்தவாய் எல்லாம் - தடங்கல் ஏற்படும் இடங்களில் எல்லாம்; **பகடு** - எருது; **உற்ற இடுக்கண்** - அடைந்த துன்பம்; **இடர்ப்பாடு** - துன்பப்படுதலை.

(க-ரை): தடைபட்ட இடங்களிலெல்லாம் தளராது வண்டியை இழுத்துச் செல்லும் எருதினைப் போல, விடாமுயற்சியோடு வினை செய்ய வல்லவனை நெருங்கும் துன்பமானது தானே துன்பப்பட்டு அழிந்து போகும். (624)

**5. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்.**

அடுக்கி வரினும், அழிவிலான், உற்ற இடுக்கண், இடுக்கட் படும்.

(பொ-ரை): ஒன்றன்மேல், ஒன்றாக அடுக்கிப் பல துன்பங்கள் வந்தபோதிலும், அவற்றைக்கண்டு மனங்கலங்காதவனை அடைந்த துன்பம், தானே துன்பப்பட்டு மறைந்தொழியும்.

அடுக்கிவரினும் - ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிப் பல துன்பங்கள் வந்தபோதிலும்; **அழிவிலான்** - மனங்கலங்காதவன்; **இடுக்கண்** - துன்பம்.

(க-ரை): தொடர்ந்து பல துன்பங்கள் வந்தாலும், அவற்றைக் கண்டு மனங்கலங்காதவனை அடையும் துன்பம் தானே அழிந்தொழியும். (625)

6. அற்றேம்என்று அல்லற் படுபவோ பெற்றேம்என்று ஓம்புதல் தேற்றா தவர்.

பெற்றேம்என்று, ஓம்புதல், தேற்றாதவர், அற்றேம் என்று, அல்லல் படுபவோ?

(பொ-ரை): செல்வம் வந்து சேர்ந்த காலத்தில், 'பொருள் பெற்றோம்' என்று போற்றி வைத்தலைப்பற்றி ஆர்வங் காட்டாதவர்கள், வறுமை ஏற்படும் காலத்தில், 'பொருள் அற்றேம்' என்று எண்ணித் துன்பப்படுவார்களோ? படமாட்டார்கள்.

பெற்றேம் - செல்வம் பெற்றுள்ளோம்; **ஓம்புதல் தேற்றாதவர்** - போற்றி வைத்தலைப் பற்றி அறியாதவர்கள்; ஆர்வங் காட்டாதவர்கள்; **அற்றேம்** - பொருளின்றி வறியரானோம்; **அல்லற்படுபவோ** - துன்பப்படுவார்களோ?

(க-ரை): செல்வம் சேர்ந்த காலத்தில், அதைச் சேர்த்து வைத்துப் பாதுகாக்காமல், ஈயும் தன்மையைக் கொண்டவர்கள், வறுமையுறும் காலத்தில் துன்பப்படுவார்களோ என்றால், துன்பப்படமாட்டார்கள்! (626)

7. இலக்கம் உடம்புஇடும்பைக்கு என்று கலக்கத்தைக் கையாறாக் கொள்ளாதாம் மேல்.

மேல், உடம்பு, இடும்பைக்கு, இலக்கம், என்று, கலக்கத்தைக், கையாறாக், கொள்ளாதாம்.

(பொ-ரை): அறிவுடையவர்கள், உடம்பானது துன்பத்திற்கு இலக்கமானது என்பதை உணர்ந்து, தாம் அடைந்த துன்பத்தைத் துன்பமாகக் கொள்ளமாட்டார்கள்.

இடும்பைக்கு - துன்பத்திற்கு; **இலக்கம்** - இலக்கமானது; **கலக்கத்தை** - துன்பத்தை; **கையாறா** - துன்பமாக; **மேல்** - அறிவுடையவர்கள்.

(க-ரை): துன்பமுறுதல் இயல்பு என்பதை அறிந்த அறிவுடையவர்கள், துன்பம் வரும்போது வருந்தமாட்டார்கள். (627)

8. இன்பம் விழையான் இடும்பை இயல்புஎன்பான் துன்பம் உறுதல் இலன்.

இன்பம், விழையான், இடும்பை, இயல்பு, என்பான், துன்பம் உறுதல், இலன்.

(பொ-ரை): இன்பத்தை விரும்பாதவனாய்த் துன்பம் இயல்பானது என்று தெளிவாக அறிபவன், துன்பம் வந்தபோதிலும் துன்பம் அடைவது இல்லை.

விழையான் - விரும்பாதவன்; **இடும்பை** - துன்பம்; **உறுதல்** - அடைதல்.

(க-ரை): இன்பத்தை விரும்பாமல், துன்பம் இயல்பானது என்று கருதுகின்றவன், எப்பொழுதும் துன்பம் அடைவது இல்லை. (628)

**9. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்.**

இன்பத்துள் இன்பம், விழையாதான், துன்பத்துள் துன்பம், உறுதல், இலன்.

(பொ-ரை): இன்பம் வந்த காலத்தில் அந்த இன்பத்தை விரும்பிப் போற்றாதவன், துன்பம் வந்த காலத்தில் அந்தத் துன்பத்திற்காக வருந்தமாட்டான்.

விழையாதான் - விரும்பிப் போற்றாதவன்; **துன்பம்** - துன்பத்திற்காக; **உறுதல்இலன்** - வருந்தமாட்டான்.

(க-ரை): இன்பத்தை மனத்தால் விரும்பாதவன், துன்பத்திற்காக மனம் வருந்தமாட்டான். (629)

**10. இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு.**

இன்னாமை, இன்பம், எனக்கொளின், தன் ஒன்னார், விழையும் சிறப்பு, ஆகும்.

(பொ-ரை): தனக்கு வரும் துன்பத்தையே ஒருவன் இன்பமாகக் கருதிக் கொள்வானேயானால், அவனுடைய பகைவரும் விரும்புஞ் சிறப்பு அவனுக்கு ஏற்படும்.

இன்னாமை - துன்பம்; **ஒன்னார்** - பகைவர்; **விழையும்** - விரும்பும்.

(க-ரை): தனக்கு வரும் துன்பத்தையே இன்பமாகக் கருதும் ஆற்றலுள்ள ஒருவனைப் பகைவரும் மதிப்பார்கள். (630)

64. அமைச்சு

அமைச்சு என்பது, அமைச்சனின் பண்புகள், ஆற்றல்கள், பொறுப்புகள், கடமைகள் போன்றவை பற்றிய இலக்கணம் கூறுதல் எனப்படும்.

**1. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.**

கருவியும், காலமும், செய்கையும், செய்யும் அருவினையும், மாண்டது, அமைச்சு.

(பொ-ரை): வினை செய்வதற்குரிய கருவிகளையும், ஏற்ற காலத்தையும் செய்து முடிப்பதற்கான வழிமுறைகளையும், செய்ய வேண்டிய அரிய செயல்களையும் நன்கு மாட்சிமைப்பட ஆராய்ந்து அறிய வல்லவனே சிறந்த அமைச்சனாவான்.

செய்கையும் - செய்து முடிப்பதற்கான வழிமுறைகளையும்; **செய்யும் அருவினையும்** - செய்ய வேண்டிய அரிய செயல் களையும்; **மாண்டது** - மாட்சிமைப்பட ஆராய வல்லவன்.

(க-ரை): சிறந்த அமைச்சன் என்று கருதப்படுபவன், கருவி, காலம், வழிமுறை, செய்ய வேண்டிய செயல்கள் ஆகியவற்றை நன்கு பொருத்தமாக ஆராய்ந்து அறிய வல்லவனாக இருக்க வேண்டும். (631)

**2. வன்கண் குடிகாத்தல் கற்றுஅறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு.**

வன்கண், குடிகாத்தல், கற்று, அறிதல், ஆள்வினையோடு, ஐந்துடன், மாண்டது, அமைச்சு.

(பொ-ரை): வீரத்தன்மையும், குடிமக்களை நன்கு பாதுகாத்தலும், நீதி நூல்களைக் கற்றலும், செய்யத்தக்கதை அறிதலும், விடாமுயற்சியும் ஆகிய ஐந்து பண்புகளுடனே மாட்சிமைப்பட்டு விளங்குபவனே அமைச்சனாவான்.

வன்கண் - வீரத்தன்மை; **கற்று** - நீதி நூல்களைக் கற்றல்; **அறிதல்** - செய்யத் தக்கதை அறிதல்; **ஆள்வினை** - முயற்சி; **மாண்டது** - மாட்சிமைப்பட்டவன்.

(க-ரை): வீரத்தன்மை, குடிகாத்தல், நீதிநூல்களைக் கற்றல், செய்யத்தக்கதை அறிதல், விடாமுயற்சி ஆகிய ஐந்து பண்புகளுடன் பொருந்தி வாழ்பவனே அமைச்சனாவான். (632)

**3. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு.**

பிரித்தலும், பேணிக் கொளலும், பிரிந்தார்ப் பொருத்தலும், வல்லது, அமைச்சு.

(பொ-ரை): பகைவர்களுக்குத் துணையாய் இருப்பவர்களை அவர்களிடமிருந்து பிரித்தலும், தமக்குத் துணையாக இருப்பவரைத் தம்மைவிட்டுப் பிரிந்து போகாமல் காத்துக் கொள்ளுதலும், தம்மைவிட்டு ஏதோ ஒரு காரணம் பற்றி முன்னர்ப்பிரிந்து போனவர்களை மீண்டும் தம்மோடு சேர்த்துக் கொள்ளுதலும் ஆகியவற்றைச் செய்வதில், வல்லமையுடையவனே அமைச்சனாவான்.

வல்லது - வல்லமையுடையவன்; **அமைச்சு** - அமைச்சனாவான்.

(க-ரை): பகைவர்க்குத் துணையாக இருப்பவர்களைப் பிரித்தல், தம்மோடு இருப்பவரைப் பிரியாமல் காத்துக் கொள்ளுதல், முன்பு தம்மைவிட்டுப் பிரிந்தவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ளுதல் ஆகிய பணிகளைத் திறம்படச் செய்பவனே அமைச்சனாவான். (633)

**4. தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு.**

தெரிதலும், தேர்ந்துசெயலும், ஒருதலையாச், சொல்லலும், வல்லது, அமைச்சு.

(பொ-ரை): செய்ய வேண்டிய செயல்களை ஆராய்தலும், அவற்றிற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து செய்தலும், துணிவாக அறிவுரைகளையும், கருத்துக்களையும் சொல்லுதலும் ஆகிய இவற்றில் வல்லமையுடையவனே அமைச்சனாவான்.

தெரிதலும் - செய்ய வேண்டிய செயல்களை ஆராய்தலும்; **தேர்ந்து செயலும்** - வழிமுறைகளை ஆராய்ந்து செய்தலும்; **ஒரு தலையாச் சொல்லலும்** - துணிவாகக் கருத்துக்களைச் சொல்லுதலும்.

(க-ரை): செயல்களை ஆராய்தல், வழிமுறைகளை ஆராய்ந்து செய்தல், துணிவாக அறிவுரைகளையும், கருத்துக்களையும் சொல்லுதல் ஆகியவற்றில் வல்லவனே அமைச்சனாவான். (634)

**5. அறன்அறிந்து ஆன்றுஅமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்
திறன்அறிந்தான் தேர்ச்சித் துணை.**

அறன்அறிந்து, ஆன்றுஅமைந்த சொல்லான், எஞ்ஞான்றும், திறன்அறிந்தான், தேர்ச்சித், துணை.

(பொ-ரை): அறங்களை அறிந்தவனாய், அறிவால் நிறைந்து அமைந்த சொல்லை உடையவனாய் இருந்து, எப்பொழுதும் வினைசெய்வதற்குத் திறன்களை அறிந்த அமைச்சனே, மன்னனுக்கு எதையும் ஆராய்ந்து கூறக்கூடிய துணையாவான்.

ஆன்றுஅமைந்த - அறிவால் நிறைந்து அமைந்த; **தேர்ச்சித் துணை** - மன்னனுக்கு ஆராய்ந்து கூறக்கூடிய துணைவனாவான்.

(க-ரை): அறங்களை அறிந்தவனும், சிறந்த சொல்லாற்றலை உடையவனும், வினையாற்றுவதற்குரிய திறன்களை அறிந்தவனும் ஆன அமைச்சனே, அரசனுக்கு ஆராய்ந்து கூறுவதற்கு ஏற்ற துணைவனாவான். (635)

**6. மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை.**

மதிநுட்பம், நூலோடு உடையார்க்கு, முன்நிற்பவை, அதிநுட்பம், யாவுள.

(பொ-ரை): இயற்கையான அறிவு நுட்பத்தோடு, நூலறிவையும் ஒருங்கே உடைய அமைச்சர்களுக்கு எதிராக நிற்கக்கூடிய மிக நுட்பமான சூழ்ச்சிகளாக உள்ளவை எவை இருக்கின்றன? ஒன்றுமில்லை.

மதிநுட்பம் - இயற்கையான அறிவுநுட்பத்தோடு; **அதிநுட்பம்** - மிக நுட்பமான சூழ்ச்சிகளாக உள்ளவை; **முன்நிற்பவை** - எதிராக நிற்கக்கூடியவை; **யாவுள** - எவை இருக்கின்றன.

(க-ரை): இயற்கையான அறிவோடு, நூலறிவையும் கொண்டுள்ள அமைச்சர்களுக்கு எதிராக நிற்கக்கூடிய சூழ்ச்சித் திறன்கள் எவையும் இல்லை. (636)

**7. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்.**

செயற்கை, அறிந்தக் கடைத்தும், உலகத்து இயற்கை, அறிந்து, செயல்.

(பொ-ரை): வினைகள் இயற்றும் முறைகளை நூல்களின் வாயிலாக நன்கு அறிந்திருந்தபோதிலும், அவற்றைச் செய்யுங் காலத்தில், அவ்வப்போது நடைபெறும் உலக நடைமுறைகளையும் அறிந்து, அவற்றிற்குப் பொருந்துமாறு செய்ய வேண்டும்.

செயற்கை அறிந்தக் கடைத்தும் - வினைகள் இயற்றும் முறைகளை நூல்கள் வாயிலாக அறிந்திருந்த போதிலும்; **உலக இயற்கை** - உலக நடைமுறைகளை.

(க-ரை): வினைகள் செய்யும் முறைகளை நூல்கள் வாயிலாக நன்கு அறிந்திருந்தபோதிலும், அவ்வப்போது உலக நடைமுறை களையும் அறிந்து, அவற்றிற்கு ஏற்பச் செயல்களைச் செய்ய வேண்டும். (637)

8. அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.

அறிகொன்று, அறியான், எனினும், உறுதி கூறல், உழையிருந்தான், கடன்.

(பொ-ரை): அறிவுரை கூறுவோரின் அறிவுரைகளையும் ஏற்காமல், அதனை அழித்துத் தானும் அறியாதவனாய் அரசன் இருந்தான் என்றாலும், அவனுக்கு உறுதியான நன்மைகளை எடுத்துக்கூறுதல், பக்கத்திலிருக்கும் அமைச்சனானவனின் கடமையாகும்.

அறிகொன்று - அறிவுறுத்துவோரின் அறிவுரைகளை ஏற்காமல் அதனை அழித்து; **அறியான்** - தானும் அறியாதவனாய்; **உழையிருந்தான்** - பக்கத்திலிருக்கும் அமைச்சன்.

(க-ரை): அரசன் அறிவுறுத்துவோரின் அறிவுரைகளையும் ஏற்காதவனாய்த், தானும் அறியாதவனாய் இருந்தாலும், அவனுக்கு உறுதியான நன்மைகளை எடுத்துக்கூற வேண்டியது அமைச்சனின் கடமையாகும். (638)

9. பழுதுஎண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்ஓர்
எழுபது கோடி யுறும்.

பக்கத்துள், பழுது எண்ணும், மந்திரியின், எழுபது கோடி, தெவ்ஓர், உறும்.

(பொ-ரை): அரசனுக்கு அருகில் இருந்துகொண்டே அவனுக்குத் தீங்கு செய்ய நினைக்கும் அமைச்சனைக் காட்டிலும்,

எழுபதுகோடி பகைவர்கள் பக்கத்தில் இருப்பதுகூடப் பொறுக்கத் தக்கதாகும்.

பழுது - தீங்கு; **தெவ்** - பகைவர்; **உறும்** - பொறுக்கத் தக்கதாகும்; எழுபது கோடி என்பது பெரும் எண்ணிக்கையை உணர்த்துவதாகும்.

(க-ரை): அரசனுக்குப் பல கோடி வெளிப் பகையைக் காட்டிலும், ஓர் உட்பகை மிகக் கொடியதாகும். (639)

10. முறைபடச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்.

திறப்பாடு, இலாஅதவர், முறைப்படச் சூழ்ந்தும், முடிவிலவே செய்வர்.

(பொ-ரை): எடுத்துக்கொண்ட செயல்களை முடித்தற்குரிய திறனில்லாத அமைச்சர்கள், அவற்றைச் செய்யும் முறைகளை நன்கு அறிந்து தெரிந்து வைத்திருந்தும், செய்யும்போது செய்து முடிக்க முடியாமல் அரைகுறையாகவே செய்துவிட்டு விடுவார்கள்.

திறப்பாடுஇலாஅதவர் - எடுத்த செயலை முடித்தற்குரிய திறனில்லாதவர்கள்; **முறைப்படச் சூழ்ந்து** - செய்யும் முறைகளை நன்கு தெரிந்து வைத்திருந்தும்; **முடிவிலவே** - முடிக்க முடியாமல் குறையாகவே செய்துவிடுவர்.

(க-ரை): செயல்களை முடிக்கும் திறனில்லாத அமைச்சர்கள், செய்யும் முறைகளை நன்கு தெரிந்திருந்தாலும், எடுத்துக்கொண்ட செயலை அரைகுறையாகவே முடிக்காமல் விட்டுவிடுவார்கள். (640)

65. சொல் வன்மை

சொல்வன்மை என்பது, ஒருவர் எண்ணிய எண்ணங்கள் ஈடேறுகின்ற வகையிலும், சொல்லுவனவற்றைப் பிறர் தெளிவாகவும், நுட்பமாகவும் புரிந்துகொள்ளுகின்ற வகையிலும் சொற்களைத் திறம்படச் சொல்லும் ஆற்றலைப் பெற்றிருத்தல் எனப்படும்.

**1. நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று.**

நாநலம், என்னும்நலன், உடைமை, அந்நலம், யாநலத்து, உள்ளதூஉம், அன்று.

(பொ-ரை): நாவன்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படும் நலம், ஒருவனுக்கு உண்மையான உடைமையாகும்; அந்நலம், பிற எல்லா நலங்களினுள்ளும் அடங்கிக் காணப்படுகின்ற ஒன்று அன்று; அவற்றையெல்லாம்விட மேலான ஒன்று ஆகும்.

நாநலம் - நாவன்மை; சொல்வன்மை; சொல்லாற்றல்; **உடைமை** - செல்வம்; சொல்வன்மையே ஒருவகைச் செல்வமாகும்.

(க-ரை): நாவன்மை என்பது, ஒருவருக்கு அமையும் சிறந்த செல்வமாகும்; மற்ற நலங்களெல்லாவற்றையும் காட்டிலும் நாநலம் மேலான ஒன்றாகும். (641)

**2. ஆக்கமும் கேடும் அதனால் வருதலான்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.**

ஆக்கமும், கேடும், அதனால், வருதலான், சொல்லின் கண், சோர்வு, காத்து ஓம்பல்.

(பொ-ரை): ஒருவனுக்கு ஆக்கமும், கெடுதியும் அவன் சொல்லுகின்ற சொல்லால் ஏற்படுவதால், தன்னுடைய சொல்லில் தவறுதல் ஏற்படாமல் அவன் போற்றிக் காத்துக்கொள்ள வேண்டும்.

அதனால் - சொல்லுகின்ற சொல்லால்; **சோர்வு** - தவறுதல்; **காத்தோம்பல்** - போற்றிக் காத்துக் கொள்ளுதல்.

(க-ரை): ஒருவனுக்கு ஆக்கம் ஏற்படுவதும், கேடு வருவதும் அவன் சொல்லுகின்ற சொல்லைப் பொறுத்து ஏற்படுவனவாகும்;

ஆகவே, தன்னுடைய சொல்லில் தவறு ஏற்படாமல், தன்னைத்தானே அவன் காத்துக்கொள்ள வேண்டும். (642)

3. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

கேட்டார்ப், பிணிக்கும் தகையவாய்க், கேளாரும், வேட்ப, மொழிவதாம், சொல்.

(பொ-ரை): நேரில் கேட்டவர்களின் மனத்தைக் கவர்ந்து கொள்ளும் தன்மையை உடையதாய், நேரில் கேட்காதவரும் விரும்பிக் கேட்குமாறு சொல்லப்படுவதே, சிறந்த சொல்வன்மை யாகும்.

கேட்டார் - நேரில் கேட்டவர்கள்; **பிணிக்கும்** - மனத்தைக் கவரும்; **தகையவாய்** - தன்மையை உடையதாய்; **கேளார்** - நேரில் கேட்காதவர்; பகைவர் என்றும் கொள்ளலாம்; **சொல்** - சொல் வன்மை.

(க-ரை): சொல் வன்மையானது, கேட்பவர்களின் மனத்தைக் கவரக்கூடியதாகவும், கேளாதவர்கள் கேட்க வேண்டும் என்ற விருப்பங்கொள்ளுமாறு செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும். (643)

4. திறன்அறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனின்ஊங்கு இல்.

திறன் அறிந்து, சொல்லைச், சொல்லுக; அதனின் ஊங்கு, அறனும், பொருளும், இல்.

(பொ-ரை): கேட்பவரது மனநிலை அறிந்து, சொல்லக் கருதும் சொல்லை, முறையாகச் சொல்ல வேண்டும்; அவ்வாறு சொல்வதைக் காட்டிலும் சிறந்த அறமோ, பொருளோ வேறொன்றுமில்லை.

திறன்அறிந்து - கேட்பவரது மனநிலை அறிந்து; **ஊங்கு** - சிறந்த; மேம்பட்ட.

(க-ரை): எப்பொழுதும் கேட்பவரது மனநிலை அறிந்து சொல்லுவது சிறந்ததாகும். (644)

5. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.

சொல்லை, வெல்லும் சொல், பிறிதோர் சொல், இன்மை, அறிந்து, அச்சொல்லைச், சொல்லுக.

(பொ-ரை): ஒருவர், தாம் சொல்லக் கருதிய சொல்லை, வெல்லக்கூடிய சொல், வேறொன்றும் இல்லை என்பதைத் தெளிவாக அறிந்த பிறகே, அச்சொல்லைச் சொல்ல வேண்டும்.

வெல்லும் சொல் - வெல்லக்கூடிய சொல்; **இன்மை அறிந்து** - வேறொன்றும் இல்லை என்பதைத் தெளிவாக அறிந்த பிறகு.

(க-ரை): ஒருவர் தம்முடைய சொல்லை வேறொரு சொல் வெல்ல முடியாமல் இருப்பதை நன்கு ஆராய்ந்து அறிந்த பிறகே, அந்தச் சொல்லைச் சொல்ல வேண்டும். (645)

**6. வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்.**

தாம், வேட்பச், சொல்லிப், பிறர்சொல், பயன்கோடல், மாட்சியின், மாசற்றார், கோள்.

(பொ-ரை): தாம் சொல்லுவதைப் பிறர் பின்னும் கேட்க விரும்பும்படியாகச் சொல்லிப், பிறர் சொல்லும்போது, அவர்களது சொல்லின் பயனை ஆராய்ந்து தெரிந்துகொள்ளுதல், சிறந்த பண்புகளைக் கொண்ட மாசற்றாரின் கொள்கையாகும்.

பயன்கோடல் - பயனை ஆராய்ந்து தெரிந்து கொள்ளுதல்; ***மாட்சி*** - சிறந்த பண்புகளைக் கொண்ட மாண்புடைமை; **மாசற்றார்** - குற்றமற்றார்; **கோள்** - கொள்கை.

(க-ரை): பிறர் விரும்பும்படி சொல்லிப், பிறருடைய சொற்களின் கருத்தை அறிவதே சிறந்த பண்புடைய அறிஞர்களின் கொள்கையாகும். (646)

**7. சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.**

சொலல்வல்லன், சோர்விலன், அஞ்சான், அவனை, இகல் வெல்லல், யார்க்கும், அரிது.

(பொ-ரை): ஒருவன், தான் எண்ணியதைப் பிறர்க்குத் தக்க முறையில் சொல்லுவதில் வல்லவனாகி, அப்படிச் சொல்லுவதில் தளர்ச்சி இல்லாதவனாய், யார்க்கும், எதற்கும் அஞ்சாதவனாய், இருப்பானேயானால், அவனைச் சொற்போரில் மாறுபட்டு வெல்லுவது என்பது, எவர்க்கும் முடியாததாகும்.

சோர்விலன் - தளர்ச்சி இல்லாதவனாய்; **இகல்** - சொற்போரில் மாறுபட்டு; **அரிது** - முடியாததாகும்.

(க-ரை): ஒருவன் சொல்லில் வல்லவனாய்ச், சோர்வு இல்லாதவனாய், யார்க்கும் அஞ்சாதவனாய் இருப்பானேயானால், அவனைப் பேச்சில் மாறுபட்டு வெற்றியடைவது என்பது எவர்க்கும் முடியாததாகும். (647)

8. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

நிரந்து, இனிது, சொல்லுதல், வல்லார்ப் பெறின், ஞாலம், விரைந்து, தொழில் கேட்கும்.

(பொ-ரை): சொல்லுகின்ற கருத்துக்களை வரிசைப்படுத்தி, அவற்றை இனிமையாகச் சொல்லும் வல்லமையை ஒருவர் பெற்றிருந்தால், உலகத்தார், அவரது ஏவலைக் கேட்டு, அதனை விரைவாக நிறைவேற்றுவார்கள்.

நிரந்து - சொல்லுகின்ற கருத்துக்களை வரிசைப்படுத்தி; **வல்லார்** - வல்லமையுடையார்; **ஞாலம்** - உலகத்தார்; **தொழில் கேட்கும்** - ஏவலைக்கேட்டு நிறைவேற்றுவார்கள்.

(க-ரை): ஒருவர், தாம் சொல்லுகின்ற கருத்துக்களை வரிசைப் படுத்தி, இனிமையாகப் பேசும் ஆற்றலைப் பெற்றிருந்தால், மக்கள் அவர் கூறுகிறபடி நடந்துகொள்வார்கள். சொல்லாற்றலுக்கு அத்தகைய மதிப்பு உண்டு. (648)

9. பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.

மாசுஅற்ற, சில சொல்லல், தேற்றாதவர், பலசொல்லக், காமுறுவர், மன்ற.

(பொ-ரை): குற்றமற்றனவாகச் சில சொற்களைத் தெளிவாகச் சொல்லத் தெரியாதவர்கள், பல சொற்களைத் திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டு இருக்கவே விரும்புவார்கள்.

மாசு அற்ற - குற்றம் அற்ற; **சில** - சில சொற்களை; **தேற்றாதவர்** - சொல்லத் தெரியாதவர்கள்; **காமுறுவர்** - விரும்புவார்கள்; **மன்ற** - அசைச்சொல்.

(க-ரை): எதையும் சில சொற்களால் தெளிவுபடுத்தத் தெரியாதவர்கள்தாம், பல சொற்களைத் திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். (649)

**10. இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது
உணர விரித்துரையா தார்.**

கற்றது, உணர, விரித்து, உரையாதார், இணர்ஊழ்த்தும், நாறா மலர், அனையர்.

(பொ-ரை): தாம் கற்ற நூல்களின் பொருள்களைப் பிறர் அறியுமாறு, விரிவாகவும் தெளிவாகவும் உரைக்க முடியாதவர்கள், கொத்தினிடத்தில் மலர்ந்தும், மணங்கமழாத மலரைப் போன்றவர்கள் ஆவார்கள்.

உணர - பிறர் அறியுமாறு; **விரித்துரையாதார்** - விரிவாகவும், தெளிவாகவும் உரைக்க முடியாதவர்கள்; **இணர்** - கொத்தாக; **ஊழ்த்தும்** - மலர்ந்தும்; **ஊழ்த்தல்** - மலர்தல்; வெளிப்படுதல்; **நாறா** - மணம் கமழாத.

(க-ரை): தாம் கற்ற நூல்களின் பொருளைப் பிறர் தெளிவாக உணரும் வகையில் எடுத்துரைக்க முடியாதவர்கள், கொத்தாக மலர்ந்த மணம் வீசாத மலரைப் போன்றவர்கள் ஆவார்கள். (650)

66. வினைத்தூய்மை

வினைத்தூய்மை என்பது, செய்யப்படும் செயல்கள் பொருளையும், அறத்தையும், புகழையும் பயக்கவல்ல நற்செயல்களாகவும், குற்றங் குறையற்றனவாகவும், தூய்மை யானவையாகவும் இருத்தல் வேண்டும் எனப்படும்.

1. துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்.

துணை நலம், ஆக்கம், தரூஉம்; வினைநலம், வேண்டிய எல்லாம், தரும்.

(பொ-ரை): ஒருவனுக்குத் துணைவர்களால் உண்டாகும் நன்மை, செல்வத்தை மட்டும் கொடுக்கும்; ஆனால், அவன் செய்யும் நல்ல வினையினால் உண்டாகும் நன்மை, அவன் விரும்பும் எல்லாவற்றையும் கொடுக்கும்.

துணைநலம் - துணைவர்களால் உண்டாகும் நன்மை; **ஆக்கம்** - செல்வம்; **வினைநலம்** - செய்யும் நல்ல வினையின் நன்மை.

(க-ரை): ஒருவனுக்கு நல்ல துணைவர்களால் செல்வம் மட்டும் ஏற்படும்; ஆனால், அவன் செய்யும் நல்ல வினையினால், அவனுக்கு அவன் விரும்பும் எல்லா நன்மைகளும் கிடைக்கும். (651)

2. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

புகழொடு, நன்றி பயவா, வினை, என்றும், ஒருவுதல் வேண்டும்.

(பொ-ரை): ஒருவன், தனக்குப் புகழையும், நன்மையையும் பயக்காத, தூய்மை அற்ற வினைகளை எந்த ஒரு காலத்திலும் செய்யாமல், அவற்றை விட்டொழித்துவிட வேண்டும்.

நன்றி - நன்மை; **பயவா** - பயக்காத; **ஒருவுதல்** - விட்டுவிடுதல்; நீக்குதல்.

(க-ரை): ஒருவன் தனக்குப் புகழையும், நன்மையையும் தராத தூய்மை அற்ற செயல்களை, எந்த ஒரு காலத்திலும் செய்யக்கூடாது. (652)

**3. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னும் அவர்.**

ஆஅதும், என்னும் அவர், ஒளிமாழ்கும் செய்வினை, ஓஒதல் வேண்டும்.

(பொ-ரை): மேலாக உயர வேண்டும் என்று எண்ணி, அதற்காக முயலுபவர், தம்முடைய புகழ் கெடுவதற்குக் காரணமான செயல்களைச் செய்யாதிருக்க வேண்டும்.

ஆஅதும் - மேலாக உயர வேண்டும்; **ஒளி** - புகழ்; **மாழ்கும்** - கெடுவதற்குக் காரணமான; **செய்வினை** - செயல்களை; **ஓஒதல்** - செய்யாதிருத்தல்; தவிர்த்தல்.

(க-ரை): மேலாக உயர வேண்டும் என்று கருதுபவர்கள், தங்களுடைய புகழ் கெடும்படியான செயல்களைச் செய்யக்கூடாது. (653)

**4. இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.**

நடுக்கற்ற, காட்சியவர், இடுக்கண் படினும், இளிவந்த செய்யார்.

(பொ-ரை): கலங்காத, தெளிந்த அறிவினையுடையவர்கள், துன்பத்தில் உழல நேரிட்டாலும், அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, இழிவான செயல்களை, ஒருபோதும் செய்ய மாட்டார்கள்.

நடுக்கற்ற - கலங்காத; **காட்சியவர்** - தெளிந்த அறிவினை யுடையவர்; **இடுக்கண்** - துன்பம்; **இளிவந்த** - இழிவான செயல்களை; **செய்யார்** - செய்யமாட்டார்.

(க-ரை): கலக்கமில்லாத, தெளிவான அறிவினை யுடையவர்கள், துன்பம் அடைய நேரிட்டாலும், அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக இழிவான செயல்களை ஒருபோதும் செய்ய மாட்டார்கள். (654)

**5. எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றுஅன்ன செய்யாமை நன்று.**

எற்றுஎன்று, இரங்குவ, செய்யற்க; செய்வானேல், மற்று அன்ன, செய்யாமை, நன்று.

(பொ-ரை): என்ன தவறு செய்துவிட்டோம் என்று எண்ணிக் கவலைப்படுவதற்கு ஏதுவாகிய செயல்களை ஒருவன் செய்யக் கூடாது; ஒருகால் தப்பித்தவறி அவன் செய்துவிட்டாலும், அத்தகைய செயல்களை மீண்டும் செய்யாதிருத்தல் நல்லது பயக்கும்.

எற்றென்று இரங்குவ - என்ன தவறு செய்துவிட்டோம் என்று எண்ணிக் கவலைப்படுவதற்கு ஏதுவாகிய; **மற்று அன்ன** - அத்தகைய செயல்களை.

(க-ரை): பிற்பாடு தான் எண்ணிக் கவலைப்படுவதற்குக் காரணமான செயல்களை, ஒருவன் செய்யாதிருக்க வேண்டும். தப்பித் தவறிச் செய்துவிட்டாலும், மீண்டும் அத்தகைய செயல்களைச் செய்யக்கூடாது. (655)

6. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

ஈன்றாள், பசிகாண்பான், ஆயினும், சான்றோர், பழிக்கும், வினை, செய்யற்க.

(பொ-ரை): தன்னைப் பெற்ற தாயின் பசிமிகுதியைக் கண்டு, வருந்த வேண்டிய நிலைமை ஏற்பட்டாலும், அறிவுடைச் சான்றோர்கள் பழிப்பதற்குக் காரணமான இழிவான செயல்களை ஒருவன் ஒருபோதும் செய்யக்கூடாது.

பசி - பசியின் மிகுதியை; **சான்றோர்** - அறிவுநிறைந்த பெரியோர்; **வினை** - இழிவான செயல்களை.

(க-ரை): தன்னைப் பெற்ற தாய் பசியினால் வாடினாலும், அதைக்கண்டு வருந்தி, அப்பசியை நீக்குவதற்காக, ஒருவன் இழிவான செயல்களை ஒருநாளும் மேற்கொள்ளக்கூடாது. (656)

7. பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.

பழிமலைந்து, எய்திய ஆக்கத்தின், சான்றோர், நல்குரவே, தலை.

(பொ-ரை): பழிகளை மேற்கொண்டு, இழிசெயல் செய்து, பெறும் பெருஞ்செல்வத்தைக் காட்டிலும், தூய்மையோடு இருந்து, சான்றோர் பெறும் கொடிய வறுமையேகூட மேலானதாகவே இருக்கும்.

மலைந்து - சுமந்துகொண்டு; மேற்கொண்டு; **ஆக்கம்** - செல்வம்; **கழிநல்குரவு** - மிகுந்த வறுமை; கொடிய வறுமை; **தலை** - மேலானது.

(க-ரை): பழிகளைச் செய்து பெருஞ்செல்வம் ஈட்டுவதை விடத் தூய்மையாய் இருந்து, கொடிய வறுமையை நுகர்வது மேலானதாகும். (657)

8. கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

கடிந்த, கடிந்து ஒரார், செய்தார்க்கு, அவைதாம், முடிந்தாலும், பீழை தரும்.

(பொ-ரை): சான்றோர்கள், செய்யத் தகாத செயல்கள் என்று விலக்கி வைத்தவைகளை, விலக்கி வைக்க நினைக்காமல் பொருள் கருதிச் செய்பவர்களுக்கு, அவை ஒருகால் நிறைவேறினாலும், பின்னர் அவை துன்பத்தையே கொடுக்கும்.

கடிந்த - சான்றோர்கள் செய்யத்தகாதவை என்று விலக்கி வைத்தவை; **ஒரார்** - நீக்கார்; **பீழை** - துன்பம்.

(க-ரை): பெரியோர்களால் செய்யத்தகாதவை என்று விலக்கி வைக்கப்பட்ட தீய செயல்களை, ஒருவன் செய்தால், அவனுக்குத் துன்பந்தான் ஏற்படும். (658)

9. அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

அழக்கொண்ட எல்லாம், அழப்போம்; நற்பாலவை, இழப்பினும், பிற்பயக்கும்.

(பொ-ரை): பிறர் அழ அழ, ஒருவன் தான் சேர்த்துக்கொண்ட பொருள்களெல்லாம் அவன் அழ அழ அவனை விட்டுப் போய்விடும்; நல்ல செயல்களின் மூலம் வந்த பொருள்களை ஒருவன் இழக்கும்படி நேரிட்டாலும், அவை பின்பு வந்து சேர்ந்து அவனுக்குப் பயனைத் தரும்.

அழக்கொண்ட - பிறர் அழுமாறு தான் சேர்த்துக் கொண்ட; **எல்லாம்** - பொருள்கள் எல்லாம்; **அழப்போம்** - சேர்த்தவன் தான் அழுமாறு போய்விடும்; **நற்பாலவை** - நல்ல செயல்களின்மூலம் வந்த பொருள்கள்; **பிற்பயக்கும்** - பின்பு வந்து சேர்ந்து பயனைத் தரும்.

(க-ரை): பிறர் அழும்படியாக ஒருவன் கொண்ட செல்வம், அவன் அழும்படியாகத் திரும்பப் போய்விடும்; நல்ல வழியில் வந்த செல்வத்தை இழக்க நேரிட்டாலும், அது மீண்டும் வந்து பயனைத் தரும். (659)

10. சலத்தால் பொருள்செய்துஏ மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்துஇரீஇ யற்று.

சலத்தால், பொருள்செய்து, ஏமார்த்தல், பசுமட்கலத்துள், நீர் பெய்து இரீஇயற்று.

(பொ-ரை): தீய செயல்களால் பொருள் சேர்த்து, அதனைக் கொண்டு ஒருவன் தனக்குப் பாதுகாப்புச் செய்து கொள்ளுதல் என்பதானது, பச்சை மண்ணாலான கலத்திற்குள் நீரை ஊற்றி வைத்து, அதனைக் காத்தலோடு ஒக்கும்.

சலத்தால் - தீய செயல்களால்; **ஏமார்த்தல்** - பாதுகாத்தல்; **பசு மண்கலம்** - பச்சை மண்ணாலான கலம்; **பெய்து** - ஊற்றி; **இரீஇயற்று** - பாதுகாத்தலோடு ஒக்கும்.

(க-ரை): தீய செயல்களின் மூலம் பொருள் திரட்டி, அதனைப் பாதுகாத்தல் என்பது, பச்சை மண் கலத்தில் நீரை ஊற்றி வைத்து, அதனைக் காப்பதற்கு ஒப்பாகும். (660)

67. வினைத்திட்பம்

வினைத்திட்பம் என்பது, ஒருவர் செய்ய வேண்டிய நல்ல வினைகளைச் செய்து முடித்தற்கு உரிய மனஉறுதியைக் கொண்டு இருத்தல் எனப்படும்.

1. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

வினைத்திட்பம் என்பது, ஒருவன், மனத்திட்பம், மற்றைய எல்லாம், பிற.

(பொ-ரை): ஒருவன் செய்யும் வினையில் ஏற்படும் திண்மை என்பது, அவனது மனத்தின்கண் உள்ள திண்மையைப் பொறுத்ததே யாகும்; மற்றவையெல்லாம் அவ்வினையை முடித்தற்குரிய திண்மையாகா.

திட்பம் - திண்மை; மற்றைய என்பது, பொருள், கருவி, துணைவர் போன்ற திண்மைகளைக் குறிக்கும்.

(க-ரை): ஒருவனது மனத்தின்கண் உள்ள திண்மையைப் பொறுத்துத்தான், அவன் செய்யும் வினையானது திண்மை பெறும். (661)

2. ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள்.

ஊறு ஒரால், உற்றபின் ஒல்காமை, இவ்விரண்டின், ஆறு என்பர், ஆய்ந்தவர், கோள்.

(பொ-ரை): ஒருவருக்கு இடையூறு வருவதற்கு முன்பே அதனை நீக்குதல், அவ்இடையூறு வந்தவிடத்து மனம் தளராது இருத்தல், ஆகிய இரண்டின் வழியே நடத்தல் என்பதானது, வினைத்திட்பம் பற்றி ஆராய்ந்தவரின் கொள்கையாகும்.

ஊறு - இடையூறு; **ஒரால்** - நீக்குதல்; **ஒல்காமை** - மனம் தளராது இருத்தல்; **ஆறு** - வழி; **ஆய்ந்தவர்** - வினைத்திட்பம் பற்றி ஆராய்ந்தவர்; **கோள்** - கொள்கையாகும்.

(க-ரை): தீய செயல்களைச் செய்யாமல் அவற்றை நீக்குதலும், மேற்கொண்ட செயல் முடியாவிட்டால் அதற்காக மனந்தளராது இருத்தலும் அறிவுடையாரின் கொள்கைகளாகும். (662)

3. கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்கின்
எற்றா விழுமம் தரும்.

கடைக்கொட்கச், செய்தக்கது, ஆண்மை; இடைக்கொட்கின், எற்றா, விழுமம் தரும்.

(பொ-ரை): ஒருவன் செய்யும் வினையை, முடிவில் மட்டுமே வெளிப்படும்படியாகச் செய்யும் தன்மையே ஆண்மையாகும். அது இடையிலேயே வெளிப்பட்டுவிட்டால், அவனுக்கு நீங்காத துன்பத்தைத் தரும்.

கடை - வினைமுடிவு; **கொட்க** - தெரியுமாறு; **இடை** - இடையில்; **கொட்கின்** - வெளிப்பட்டுவிட்டால்; **எற்றா** - நீங்காத; **விழுமம்** - துன்பம்.

(க-ரை): ஒரு வினையானது ஏதேனும் ஒரு முடிவுக்கு வரும்வரை வெளியில் தெரியாமல் அதனைச் செய்ய வேண்டும்; இடையில் தெரிந்தால், அதற்கு இடையூறு வந்து, அது நடைபெறாமல் போனாலும் போகக்கூடும். (663)

4. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

சொல்லுதல், யார்க்கும் எளிய, சொல்லியவண்ணம் செயல், அரியவாம்.

(பொ-ரை): இவ்வினையை இவ்வாறு செய்துமுடிக்கலாம் என்று சொல்லுதல், எவர்க்கும் எளிமையான ஒரு செயலாகும்; ஆனால், சொல்லியபடி செய்து முடித்தல் என்பது அருமையான செயலாகும்.

எளிய - எளிமையான செயலாகும்; **அரிய** - அருமையான செயலாகும்.

(க-ரை): எச்செயலைப் பற்றியும் சொல்லுதல் எளிதாகவே இருக்கும்; ஆனால், அதனைச் செய்து முடிப்பது என்பது மிக அரியதாகவே அமையும். (664)

5. வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறுஎய்தி உள்ளப் படும்.

வீறு எய்தி மாண்டார், வினைத்திட்பம், வேந்தன்கண், ஊறு எய்தி, உள்ளப்படும்.

(பொ-ரை): செயல் திறமையால் பெருமையுற்று மாட்சிமைப் பெற்றவரின் வினைத்திட்பமானது, நாட்டை ஆளும் அரசனிடத்தில் எட்டுகின்ற நிலையைப் பெற்று, அவனாலும் மதிக்கப்பட்டுத் திகழும்.

வீறு எய்தி - செயல்திறமையால் பெருமையுற்று; **மாண்டார்** - மாட்சிமைப் பெற்றார்; **ஊறு எய்தி** - உறுதலைச் செய்து; அதாவது எட்டுகின்ற நிலையைப் பெற்று.

(க-ரை): செயல்திறமையால் பெருமை பெற்று உயர்ந்தோரின் வினைத்திட்பத்தை, நாட்டை ஆளும் அரசனும் போற்றி மதிப்பான். (665)

6. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

எண்ணியார், திண்ணியர் ஆகப் பெறின், எண்ணிய, எண்ணியாங்கு எய்துப.

(பொ-ரை): எண்ணியவர்கள், தாம் செய்ய எண்ணிய செயல்களைச் செய்வதில் உறுதியுடையவர்களாக இருந்தால், அவர்கள் எண்ணியவற்றை எண்ணியபடியே அடைவார்கள்.

திண்ணியராக - உறுதியுடையவராக; **எய்துப** - அடைவார்கள்.

(க-ரை): ஒரு செயலைச் செய்ய எண்ணுபவர்கள் உறுதி யுடையவர்களாக இருந்தால், அவர்கள் எண்ணியபடியே அந்தச் செயல் நிறைவேறும். (666)

7. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

உருள்பெருந்தேர்க்கு, அச்சாணி, அன்னார், உடைத்து, உருவு கண்டு, எள்ளாமை வேண்டும்.

(பொ-ரை): உருளுகின்ற பெரிய தேருக்கு அமைந்த சிறிய அச்சாணிபோல, உருவில் சிறியராய் அமைந்து செயல் முடித்தலில் மிக வல்லமையுடையராய் இருப்பவர்களை இவ்வுலகம் பெற்றிருக்கிறது. ஆகவேதான், ஒருவரது உருவத்தைக் கண்டு மற்றவர்கள் அவரை இகழாதிருக்க வேண்டும்.

அச்சாணி அன்னார் - அச்சாணி போன்றவர்கள்; **உடைத்து** - இவ்வுலகம் பெற்றிருக்கிறது; **எள்ளாமை** - இகழாதிருத்தல்.

(க-ரை): பெருந்தேர் நிலைத்து ஓடுவதற்குச் சிறிய அச்சாணி காரணமாக இருப்பதைப்போல, உருவத்தால் சிறியவர்கள் பெருஞ் செயலைச் செய்து முடிப்பவர்களாக இருப்பார்கள்; ஆகவேதான் எப்பொழுதும் ஒருவரின் உருவத்தைக் கண்டு எள்ளி நகையாடக் கூடாது. (667)

**8. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்.**

கலங்காது, கண்ட, வினைக்கண், துளங்காது, தூக்கம், கடிந்து, செயல்.

(பொ-ரை): மனக்கலக்கம் இல்லாமல், நன்கு ஆராய்ந்து தெளிந்து செய்யத் துணிந்த வினையைச் சோர்வில்லாமல், காலத்தாழ்வு ஏற்படுதலை நீக்கி, அதனை விரைந்து செய்ய வேண்டும்.

கலங்காது - மனக்கலக்கம் இல்லாமல்; **கண்ட** - ஆராய்ந்து தெளிந்து செய்யத் துணிந்த; **துளங்காது** - சோர்வில்லாமல்; **தூக்கம் கடிந்து** - காலந்தாழ்வு ஏற்படுதலை நீக்கி.

(க-ரை): ஒருவன் நன்கு எண்ணிச் செய்யத் துணிந்த செயலைச் சிறிதும் மனந்தளர்ச்சியும், காலத்தாழ்வும் இல்லாமல், செய்துமுடிக்க வேண்டும். (668)

**9. துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை.**

துன்பம், உறவரினும், இன்பம், பயக்கும்வினை, துணிவு ஆற்றிச், செய்க.

(பொ-ரை): முதலில் துன்பமானது மிகுதியாக வந்த போதிலும், முடிவில் இன்பத்தைத் தரக்கூடிய வினையை ஒருவன், தனக்குள்ள துணிவைப் பயன்படுத்திக்கொண்டு செய்து முடிக்க வேண்டும்.

உறவரினும் - மிகுதியாக வந்தபோதிலும்; **துணிவுஆற்றி** - துணிவைப் பயன்படுத்திக்கொண்டு.

(க-ரை): முதலில் பெருந்துன்பம் ஏற்படும் என்றாலும், முடிவில் இன்பத்தைத் தரும் வினையை ஒருவன் செய்து முடிக்க வேண்டும். (669)

**10. எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு.**

வினைத்திட்பம் வேண்டாரை, எனைத்திட்பம், எய்தியக் கண்ணும், உலகு, வேண்டாது.

(பொ-ரை): தாம் செய்யும் வினையிடத்துத் திண்மையை விரும்பி மேற்கொள்ளாதவர்கள், வேறு எப்படிப்பட்ட வலிமைகள் பலவற்றைப் பெற்றிருந்தாலும், உயர்ந்தோர், அவர்களை ஒருபோதும் மதிக்கவே மாட்டார்கள்.

வினைத்திட்பம் - வினையிடத்துத் திண்மையை; **வேண்டார்** - விரும்பி மேற்கொள்ளாதவர்கள்; **எனைத் திட்பம்** - வேறு எல்லாவகையான திண்மைகளையும்.

(க-ரை): வினையிடத்துத் திண்மையை விரும்பி மேற்கொள்ளாதவர்கள், வேறு எப்படிப்பட்ட வல்லமைகள் பலவற்றையும் பெற்றிருந்தாலும், உயர்ந்தோர் அவர்களை ஒருபோதும் மதிக்கவே மாட்டார்கள். (670)

68. வினை செயல்வகை

வினை செயல்வகை என்பது, ஒருவன் மனஉறுதியோடு வினையைச் செய்யும் திறத்தைப் பற்றிக் கூறுதல் எனப்படும்.

1. சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

சூழ்ச்சி முடிவு, துணிவு எய்தல்; அத்துணிவு, தாழ்ச்சியுள் தங்குதல், தீது.

(பொ-ரை): ஆய்வு செய்தலின் முடிவான தன்மை என்பது, ஒருவன் உறுதியைப் பெறுதலாகும்; அவ்வாறு உறுதி பெற்றபின், வினையைச் செய்யாமல் காலந்தாழ்த்தி நிற்பது குற்றமாகும்.

சூழ்ச்சி - ஆய்வு செய்தல்; ஆலோசனை செய்தல்; **துணிவு எய்தல்** - உறுதியைப் பெறுதல்; **தாழ்ச்சியுள் தங்குதல்** - காலந்தாழ்த்தி நிற்பது; **தீது** - குற்றமாகும்.

(க-ரை): ஒருவன் ஆய்வு செய்து ஒரு முடிவுக்கு வருவது என்பது, அவனது உறுதியைக் காட்டுவதாகும். அவ்வாறு உறுதி பெற்றபின், வினையைச் செய்து முடிப்பதில், காலந்தாழ்த்துவது என்பது கூடாது. (671)

2. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

தூங்கிச் செயற்பால, தூங்குக, தூங்காது, செய்யும் வினை, தூங்கற்க.

(பொ-ரை): காலந்தாழ்த்திச் செய்ய வேண்டிய செயல்களைக் காலந்தாழ்த்தியே செய்ய வேண்டும்; காலந்தாழ்த்தாது செய்ய வேண்டிய செயல்களைக் காலந்தாழ்த்தாது விரைந்து செய்து முடிக்க வேண்டும்.

தூங்கிச் செயற்பால - காலந்தாழ்த்திச் செய்ய வேண்டிய செயல்களை; **தூங்குக** - காலந்தாழ்த்தியே செய்ய வேண்டும்; **தூங்காது** - காலந்தாழ்த்தாது.

(க-ரை): காலந்தாழ்த்திச் செய்ய வேண்டிய செயல்களைக் காலந்தாழ்த்தியும், விரைந்து செய்துமுடிக்க வேண்டிய செயல்களை விரைந்தும் செய்ய வேண்டும். (672)

**3. ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.**

ஒல்லும்வாய் எல்லாம், வினை நன்றே; ஒல்லாக்கால், செல்லும்வாய், நோக்கிச், செயல்.

(பொ-ரை): இயலும் இடங்களிலெல்லாம், சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, வினையைச் செய்து முடிப்பது நல்லது; அப்படி இயலாத இடங்களில், செய்து முடிக்கக்கூடிய வேறு வழிகளைக் கடைப்பிடித்துக் கருதிய வினையைச் செய்ய வேண்டும்.

ஒல்லும் வாய் - இயலும் இடங்கள்; **ஒல்லாக்கால்** - இயலாத இடங்களில்; **செல்லும்வாய்** - செய்து முடிக்கக்கூடிய வேறு வழிகளை; **நோக்கி** - கடைப்பிடித்து; **செயல்** - செய்ய வேண்டும்.

(க-ரை): வினையை முடிக்கும் வழி எது என்று ஆராய்ந்து பார்த்து, அதனை ஏற்றதொரு வழியில் செய்து முடிக்க வேண்டும்.(673)

**4. வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.**

வினை, பகை, என்று இரண்டின், எச்சம், நினையுங்கால், தீஎச்சம் போலத், தெறும்.

(பொ-ரை): ஒருவன் செய்யத் தொடங்கும் வினை, களையத் தொடங்கும் பகை ஆகிய இரண்டினையும் அரைகுறையாக விடுவதால் ஏற்படும் குறையானது, ஆராய்ந்து பார்க்குமிடத்துச் சுடர் அணைந்த பின்னும் அவியாதிருக்கும் நெருப்பின் குறையைப் போல, பிறகு அவனுக்குத் தெரியாமல் வளர்ந்து அவனையே கெடுப்பதாகும்.

எச்சம் - செய்யாமல் விடப்படும் குறை; **தீயெச்சம்** - நெருப்பின் குறை; **தெறும்** - அழிப்பதாகும்; கெடுப்பதாகும்.

(க-ரை): செய்யத் தொடங்கிய வினையையும், களையத் தொடங்கிய பகையையும் எப்பொழுதும் அரைகுறையாக விட்டு விடக்கூடாது. அப்படிக் குறையாக விடப்பட்டுவிட்டால், அவை, எரிந்து அவிந்த நெருப்பின் குறையைப்போல, பிறகு தெரியாமல் வளர்ந்து அழிக்கும். (674)

**5. பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.**

பொருள், கருவி, காலம், வினை, இடனொடு, ஐந்தும், இருள்தீர, எண்ணிச், செயல்.

(பொ-ரை): வேண்டப்படும் பொருள், ஏற்ற கருவி, தக்க காலம், மேற்கொள்ளும் வினை, உரிய இடம் ஆகிய ஐந்தினையும் குற்றமற ஆராய்ந்தறிந்த பிறகே கருதிய செயலை ஒருவன் செய்ய வேண்டும்.

இருள்தீர - குற்றமற; **எண்ணிச்செயல்** - ஆராய்ந்தறிந்து கருதிய செயலைச் செய்ய வேண்டும்.

(க-ரை): ஒரு செயலைச் செய்து முடிக்க விரும்புகின்ற ஒருவன் பொருள், கருவி, காலம், வினை, இடம் ஆகிய ஐந்தையும் பழுதில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். (675)

6. முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

முடிவும், இடையூறும், முற்றியாங்கு, எய்தும், படுபயனும், பார்த்துச் செயல்.

(பொ-ரை): ஒருவன் ஒரு வினையைச் செய்து முடிப்பதற்குரிய முயற்சியும், அதனைச் செய்யும்போது வரும் இடையூறும், வினை முடிந்தால் ஏற்படக்கூடிய பெரும்பயனும் ஆகியவற்றையெல்லாம் ஆராய்ந்து கணக்கிட்டுப் பார்த்து, குறிப்பிட்ட வினையைச் செய்ய முற்பட வேண்டும்.

படுபயனும் - பெரும்பயனும்; **பார்த்து** - கணக்கிட்டுப் பார்த்து; **செயல்** - செய்ய வேண்டும்.

(க-ரை): ஒருவன் ஒரு செயலைச் செய்ய முற்படும்போது, எடுக்கப்படும் முயற்சி, வரக்கூடிய இடையூறு, கிடைக்கக்கூடிய பெரும்பயன் ஆகியவற்றையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்த பிறகே, அந்தச் செயலைச் செய்ய முன்வர வேண்டும். (676)

7. செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளங் கொளல்.

செய்வினை, செய்வான், செயல்முறை, அவ்வினை, உள் அறிவான், உள்ளங், கொளல்.

(பொ-ரை): செய்ய வேண்டிய செயலைச் செய்ய முயல்பவன், அதனைச் செய்யும் முறை என்னவென்றால், அப்படிப்பட்ட செயலை

முன்பு செய்து, அதன் உண்மைத் தன்மையை நன்கு உணர்ந்தவனது கருத்தினைத் தெரிந்து கொள்ளுதலாகும்.

செய்வினை - செய்ய வேண்டிய செயல்; **செயல்முறை** - செய்ய வேண்டிய முறை என்னவென்றால்; **உள்அறிவான்** - முன்பு செய்து அதன் உண்மைத் தன்மையை நன்கு அறிந்தவன்; **உள்ளம்** - கருத்தினை.

(க-ரை): ஒரு வினையைச் செய்ய முற்படுபவன், முன்பு அப்படிப்பட்ட வினையைச் செய்து பழக்கப்பட்டவனது கருத்தினை, முதலில் அறிந்துகொள்ள வேண்டும். (677)

**8. வினையான் வினைஆக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.**

வினையான், வினைஆக்கிக் கோடல், நனைகவுள், யானையால், யானை, யாத்து, அற்று.

(பொ-ரை): ஒரு வினை செய்யும்போதே, அதனோடு ஒத்த மற்றொரு வினையையும் அதனைக்கொண்டு செய்து முடித்துக் கொள்ளுதல் வேண்டும்; அவ்வாறு செய்தல், வெறி நீரால் நனைந்த கன்னத்தையுடைய ஒரு யானையைக் கொண்டு, மற்றொரு யானையைக் கட்டுக்குள் பிடிப்பது போன்றதாகும்.

வினையான் - செய்கின்ற ஒரு வினையைக் கொண்டு; **வினையை ஆக்கிக்கோடல்** - மற்றொரு வினையைச் செய்துகொள்ள வேண்டும்; **நனைகவுள்** - வெறி நீரால் நனைந்த கன்னத்தையுடைய; **யாத்தற்று** - கட்டுக்குள் பிடிப்பதற்கு ஒப்பானது.

(க-ரை): ஒரு யானையைக்கொண்டு மற்றொரு யானையைப் பிடிப்பது போன்று, ஒரு செயலைச் செய்யும் போதே, அச்செயலைக் கொண்டு, மற்றொரு செயலையும் செய்து முடித்துக்கொள்ள வேண்டும். (678)

**9. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்.**

ஒட்டாரை, ஒட்டிக் கொளல், நட்டார்க்கு, நல்ல செயலின், விரைந்ததே.

(பொ-ரை): ஒருவர், தம் பகைவரோடு கூடாதவரைத் தம்மோடு சேர்த்துக் கொள்ளுதல் என்பது, தம் நண்பர்களுக்கு

நல்லவற்றைச் செய்தலைக் காட்டிலும், விரைவாகச் செய்வதற்குரிய பணியாகும்.

ஒட்டாரை - பகைவரோடு கூடாதவரை; **ஒட்டிக்கொளல்** - தம்மோடு சேர்த்துக் கொள்ளுதல்; **நட்டார்க்கு** - நண்பர்களுக்கு; **நல்ல செயலின்** - நல்லவற்றைச் செய்வதைக் காட்டிலும்.

(க-ரை): ஒருவர் தம் நண்பர்களுக்கு நன்மைகளைச் செய்வதைக் காட்டிலும், தம் பகைவரோடு கூடாமல் இருப்பவரைத் தம்மோடு விரைவாக நண்பர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். (679)

10. உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

உறைசிறியார், உள்நடுங்கல், அஞ்சிக், குறைபெறின், பெரியார்ப் பணிந்து, கொள்வர்.

(பொ-ரை): ஆளும் பகுதியைச் சிறியதாகக் கொண்ட வலிமை குறைந்தவர்கள், தம்மைவிட வலியவர்கள் எதிர்த்து வரும்போது, தம்மவர் நடுங்குவது கண்டு அஞ்சி, தாம் எண்ணுகிற பலன் கிடைக்குமானால், அவ்வலியவர்களைப் பணிந்தும் ஏற்றுக்கொள்ள ஒருப்படுவார்கள்.

உறை - ஆளும் இடம்; **சிறியார்** - வலிமை குறைந்தவர்கள்; **குறைபெறின்** - உடன்பாடு செய்துகொள்ள இசைவார்களானால்; **பெரியார்** - வலிமை மிக்கவர்கள்.

(க-ரை): வலிமை குறைந்தவர்கள், வலிமை மிக்கவர்களை எதிர்த்து அழிவதைவிட, உடன்பாடு செய்துகொள்வதன் மூலம், எண்ணுகின்ற பலன் கிடைக்குமேயானால், அவர்களைப் பணிந்தும் ஏற்றுக்கொள்ள முற்படுவார்கள். (680)

69. தூது

தூது என்பது, ஓர் அரசனால் அயல் அரசனிடம் அனுப்பி வைக்கப்படும் தூது செல்வோரின் பண்புகள், திறமைகள், செயல்கள் போன்றவற்றைக் கூறுதல் எனப்படும்.

**1. அன்புஉடைமை ஆன்றகுடிப் பிறத்தல் வேந்துஅவாம்
பண்புஉடைமை தூதுஉரைப்பான் பண்பு.**

அன்புஉடைமை, ஆன்ற குடிப் பிறத்தல், வேந்து அவாம், பண்புஉடைமை, தூது உரைப்பான், பண்பு.

(பொ-ரை): தன்னைச் சார்ந்தவர்களிடத்தில் அன்புடையவனாக இருத்தலும், சிறந்த நற்குடியில் பிறந்தவனாக இருத்தலும், அரசன் விரும்பக்கூடிய பண்புடையவனாக இருத்தலும் ஆகிய இவை, தூது சென்று செய்தி சொல்லுவோனுக்கு இருக்க வேண்டிய தகுதிகளாகும்.

ஆன்றகுடி - சிறந்த நற்குடியில், **அவாம்** - விரும்பக்கூடிய; **பண்பு** - தகுதிகளாகும்.

(க-ரை): தூது செல்லுபவன், அன்புடைமை, நற்குடியில் பிறந்திருத்தல், வேந்தனால் விரும்பப்படுதல் ஆகிய தகுதிகளைப் பெற்றவனாக இருக்க வேண்டும். (681)

**2. அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுஉரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று.**

அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை, மூன்று, தூது உரைப்பார்க்கு, இன்றியமையாத.

(பொ-ரை): தன்னரசனிடத்தில் அன்புடைமையும், தான் ஆவன அறியும் அறிவுடைமையும், தான் ஆராய்ந்து அறிந்து சொல்லும் சொல்வன்மையும் ஆகிய மூன்றும், தூது சென்று உரைப்பார்க்கு இருக்க வேண்டிய, இன்றியமையாத பண்புகளாகும்.

அன்பு - தன்னரசனிடத்தில் அன்புடைமை; **அறிவு** - ஆவன அறியும் அறிவு; **மூன்று** - மூன்று முக்கியப் பண்புகளாகும்.

(க-ரை): அன்புடைமை, அறிவுடைமை, சொல் வன்மை ஆகிய மூன்றும், தூது சென்று உரைப்போர்க்கு இருக்க வேண்டிய முக்கியமான மூன்று பண்புகளாகும். (682)

**3. நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.**

வேலாருள், வென்றி, வினையுரைப்பான், பண்பு, நூலாருள், நூல்வல்லன், ஆகுதல்.

(பொ-ரை): வேலைத்தாங்கி நிற்கும் வேற்றரசனிடம் சென்று, தன்னரசனுக்கு வெற்றியைத் தேடித் தரக்கூடிய செய்தியை உரைக்கும் தூதுவனின் இலக்கணமாவது, நீதிநெறி முறை நூல்களை அறிந்தவர்களுள், தான் மிகுந்த வல்லவனாக விளங்குதல் ஆகும்.

வேலாருள் - வேலைத்தாங்கி நிற்கும் வேற்றரசர்களிடம்; **வென்றியுரைப்பான்** - தன்னரசனுக்கு வெற்றிச் செய்தியைத் தரக்கூடிய தூது சொல்பவன்; **நூலாருள்** - நீதி நெறிமுறை நூல்களை அறிந்தவர்களுள்; **நூல் வல்லன்** - நூல்களைக் கற்றுத்தேர்ந்த வல்லவனாக விளங்குபவன்.

(க-ரை): வேற்றரசனிடம் தூது சென்று, தன் அரசனுக்கு வெற்றி ஏற்படும் வகையில் செய்தியைச் சொல்லும் தூதுவன், நீதி நெறிமுறை நூல்களை அறிந்தவர்களுள் எல்லோரைக்காட்டிலும் வல்லவனாக இருக்க வேண்டும். (683)

**4. அறிவுஉரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.**

அறிவு, உரு, ஆராய்ந்த கல்வி, இம்மூன்றன், செறிவுடையான், வினைக்கு, செல்க.

(பொ-ரை): இயற்கை அறிவும், கண்டார் விரும்பக்கூடிய தோற்றப் பொலிவும், ஆராய்ந்து உணர்ந்து கற்ற கல்வியும் ஆகிய இந்த மூன்றும் நிறைந்திருக்கும் தன்மையை உடையவனே, தூது உரைக்கும் வினைக்குச் செல்லுதல் வேண்டும்.

அறிவு - இயற்கை அறிவு; **உரு** - கண்டார் விரும்பக்கூடிய தோற்றப் பொலிவு; **ஆராய்ந்த கல்வி** - ஆராய்ந்து உணர்ந்து கற்ற கல்வி; **செறிவுஉடையான்** - நிறைந்திருக்கும் தன்மையை உடையவன்; **வினைக்கு** - தூது உரைக்கும் செயலுக்கு.

(க-ரை): பகுத்தறிவு, தோற்றப் பொலிவு, ஆராய்ச்சிக் கல்வி ஆகிய மூன்றும் உடையவனே, தூது செல்லத் தகுதி படைத்தவனாவான். (684)

**5. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது.**

தொகச் சொல்லித், தூவாத நீக்கி, நகச் சொல்லி, நன்றி பயப்பதாம், தூது.

(பொ-ரை): சொல்லுவதைத் தொகுத்துச் சுருங்கச் சொல்லியும், கடுஞ்சொற்களை விலக்கியும், கேட்போர் மனம் மகிழுமாறு சொல்லியும், தனது அரசனுக்கு நன்மையை உண்டாக்குபவனே தூதனாவான்.

தொகச்சொல்லி - தொகுத்துச் சொல்லி; **தூவாத** - கடுஞ் சொற்களை; **நீக்கி** - விலக்கி; **நகச்சொல்லி** - கேட்போர் மனம் மகிழுமாறு சொல்லி; **நன்றி** - நன்மையை.

(க-ரை): சுருக்கமாகக், கடுஞ் சொல்லின்றி, இனிமையாகக் கேட்போர் மகிழுமாறு சொல்லித் தனது அரசனுக்கு நன்மையை உருவாக்குபவனே, தூதுவனாவான். (685)

**6. கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவதாம் தூது.**

கற்றுக்கண், அஞ்சான், செலச்சொல்லி, காலத்தால், தக்கது, அறிவதாம், தூது.

(பொ-ரை): சொல்ல வேண்டியதை நன்கு அறிந்து, பகைவரின் சினப் பார்வைக்கு அஞ்சாது, சொல்லுவதை அவர் மனத்தில் பதியும்படியாகச் சொல்லிக் கால நிலைமைக்குத் தக்கபடி பேசிச் செயலை முடிக்கத்தக்க வழியினை நன்கு அறிபவனே தூதுவன் ஆவான்.

கற்று - சொல்ல வேண்டியதை நன்கு அறிந்து; **கண் அஞ்சான்** - பகைவரின் சினப்பார்வைக்கு அஞ்சாதவனாய்; **செலச்சொல்லி** - சொல்லுவதைப் பகைவர் மனத்தில் பதியும்படியாகச் சொல்லி; **காலத்தால் தக்கது** - காலத்திற்குத் தக்கபடிப் பேசி.

(க-ரை): சொல்ல வேண்டியதை அறிந்து, பகைவர்க்கு அஞ்சாது, காலத்திற்குத் தக்கபடிப் பேசிச் செயலை முடிக்க வல்லவனே தூதுவன் ஆவான். (686)

**7. கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.**

கடன்அறிந்து, காலம் கருதி, இடன் அறிந்து, எண்ணி, உரைப்பான், தலை.

(பொ-ரை): வேற்று அரசரிடம் தான் நடந்துகொள்ள வேண்டிய முறையை அறிந்து, அவருடைய எளிய செவ்வியைப் பார்த்து, அவரிடம் சொல்லுவதற்கேற்ற இடத்தையும் அறிந்து, முன்கூட்டியே நன்கு சிந்தித்துச் சொல்ல வேண்டியதைச் சொல்ல வல்லவனே, தூதுவர்களில், மிகச் சிறந்தவனாவான்.

கடன் அறிந்து - வேற்று அரசனிடம் தான் நடந்துகொள்ள வேண்டிய முறையை அறிந்து; **காலம்கருதி** - பகையரசரின் எளிய செவ்வியைப் பார்த்து; **இடன் அறிந்து** - பகையரசரிடம் சொல்லுவதற்கேற்ற இடத்தையும் அறிந்து; **எண்ணி** - முன்கூட்டியே சிந்தித்து.

(க-ரை): வேற்றரசரிடம் நடந்துகொள்ளும் முறையையும், காலத்தையும், இடத்தையும் ஆராய்ந்து அறிந்து, சொல்ல வேண்டியதைச் சொல்பவனே தூதுவன் ஆவான். (687)

8. தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

தூய்மை, துணைமை, துணிவுடைமை, இம்மூன்றின், வாய்மை, வழியுரைப்பான், பண்பு.

(பொ-ரை): மனத்தூய்மையுடைமை, தக்கபடி அரசனுக்குத் துணையாக இருத்தல், உள்ளத்தில் துணிவுடைமை ஆகிய மூன்றையும் உண்மையாகக் கொண்டிருத்தல், தூது சென்று உரைப்பவனின் தகுதிகளாகும்.

தூய்மை - மனத்தூய்மை; **துணைமை** - துணையாக இருத்தல்; **துணிவுடைமை** - உள்ளத்தில் துணிவுடைமை; **வாய்மை** - உண்மையாக; **பண்பு** - தகுதிகளாகும்.

(க-ரை): தகுதிபெற்ற தூதுவனாக இருப்பவன், மனத்தூய்மை யுடையவனாகவும், அரசனுக்கு ஏற்ற துணையாக இருப்பவனாகவும், உள்ளத்தில் துணிச்சல் உடையவனாகவும் இருக்க வேண்டும். (688)

9. விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

வடுமாற்றம், வாய் சோரா, வன்கண் அவன், வடுமாற்றம், வேந்தர்க்கு, உரைப்பான்.

(பொ-ரை): குற்றம் குறையுடைய சொற்களை வாய் தவறியும் சொல்லாத மனஉறுதி படைத்தவனே, தன்னரசன் சொல்லியனுப்பிய சொல்லை, வேற்றரசனுக்குச் சென்று உரைக்கும் தூதுவன் ஆவான்.

வடுமாற்றம் - குற்றம் குறையுடைய சொற்களை; **வாய்சோரா** - வாய் தவறியும் சொல்லாத; **வன்கணவன்** - மனவுறுதி படைத்தவன்; **விடுமாற்றம்** - தன்னரசன் சொல்லியனுப்பிய சொல்லை.

(க-ரை): வேற்றரசனிடம் சென்று வாய் தவறியும் குற்றங் குறையுடைய சொற்களைச் சொல்லாத மனவுறுதி படைத்தவனே தூதுவன் ஆவான். (689)

10. இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது.

இறுதி பயப்பினும், எஞ்சாது, இறைவற்கு, உறுதி பயப்பதாம், தூது.

(பொ-ரை): தான் சொல்லும் செய்தி, தன்னுயிருக்கு முடிவைத் தருவதாக இருந்தாலும், அதற்காக அஞ்சி அதனை விட்டுவிடாமல், தன் அரசனுக்கு நன்மையைத் தரும் செய்தியை, வேற்றரசனிடம் சொல்லுபவனே தூதுவன் ஆவான்.

இறுதி பயப்பினும் - தன்னுயிருக்கு முடிவைத் தருவதாக இருந்தாலும்; **எஞ்சாது** - அதற்காக அஞ்சி விட்டுவிடாமல்; **உறுதி பயப்பது** - தன் அரசனுக்கு நன்மை பயக்கும் செய்தியைச் சொல்லுபவன்; **தூது** - தூதுவன் ஆவான்.

(க-ரை): தன் உயிருக்கு இறுதிமுடிவு ஏற்படுவதாக இருந்தாலும், அதற்காக அஞ்சிடாமல், வேற்றரசனிடம் சொல்ல வேண்டியதைச் சொல்லத் துணிந்தவனே தூதுவன் ஆவான். (690)

70. மன்னரைச் சேர்ந்து ஒழுகுதல்

மன்னரைச் சேர்ந்து ஒழுகுதல் என்பது, அரசரோடு சேர்ந்து இருந்து பழகக்கூடிய அமைச்சனின் பண்புகள், திறமைகள், செயல்முறைகள் பற்றிக் கூறுதல் எனப்படும்.

1. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

இகல்வேந்தர்ச், சேர்ந்து ஒழுகுவார், அகலாது, அணுகாது, தீக்காய்வார், போல்க.

(பொ-ரை): மாறுபாடு கொள்ளும் மன்னரோடு சேர்ந்து பணிபுரியும் அமைச்சர்கள், அவரைவிட்டு மிகவும் விலகிப் போகாமலும், மிகவும் நெருங்கிவிடாமலும், தீயினிடத்துக் குளிர் காய்பவர்கள் போன்று இருத்தல் வேண்டும்.

இகல்வேந்தர் - மாறுபாடு கொள்ளும் மன்னரோடு; **சேர்ந்தொழுகுவார்** - சேர்ந்து பணிபுரியும் அமைச்சர்கள்; **அகலாது** - மிகவும் விலகிப் போய்விடாமலும்; **அணுகாது** - மிகவும் நெருங்கி விடாமலும்.

(க-ரை): தம்முடன் அடிக்கடி மாறுபாடு கொள்ளும் அரசரோடு சேர்ந்து பணிபுரியும் அமைச்சர்கள், தீக்காய்வாரைப் போல, அவ்வரசரைவிட்டு விலகிப் போகவும் கூடாது; அவரோடு மிக நெருங்கியிருத்தலும் கூடாது. (691)

2. மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய ஆக்கம் தரும்.

மன்னர் விழைப, விழையாமை, மன்னரான், மன்னிய, ஆக்கம் தரும்.

(பொ-ரை): தமது அரசர் விரும்புகின்றவைகளையெல்லாம், அமைச்சரானவர்கள் தாம் விரும்பாதிருத்தல், அரசரால் நிலையான ஆக்கத்தை அவர்க்குப் பெற்றுத் தரும்.

விழைப - விரும்புகின்றவைகளையெல்லாம்; **விழையாமை** - விரும்பாதிருத்தல்; **மன்னிய** - நிலையான; **ஆக்கம்** - செல்வம் முதலிய வசதிகள்.

(க-ரை): நிலையான ஆக்கத்தை விரும்பும் அமைச்சர்கள், தம்முடைய அரசர் விரும்புகின்றவைகளையெல்லாம் தாமும் விரும்பாமல் இருக்க வேண்டும். (692)

3. போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது.

போற்றின், அரியவை, போற்றல்; கடுத்தபின், தேற்றுதல், யார்க்கும், அரிது.

(பொ-ரை): அமைச்சரானவர்கள் தம்மைக் காத்துக் கொள்ள விரும்பினால், அரசன் பொறுத்தற்கு அரிய குற்றங்கள் தம்மிடம் நிகழாமல் தம்மைத்தாமே காத்துக்கொள்ள வேண்டும்; அவை தம்மிடம் நேர்ந்து, அரசன் சினந்துகொண்ட பின், அவனைத் தெளிவித்தல் என்பது, யார்க்கும் கடினமான ஒரு செயலாகும்.

போற்றின் - தம்மைக்காத்துக் கொள்ள விரும்பினால்; **அரியவை** - பொறுத்தற்கு அரிய குற்றங்கள்; **போற்றல்** - தம்மிடம் நிகழாமல் தம்மைத்தாமே காத்துக்கொள்ள வேண்டும்; **கடுத்த பின்** - அரசன் சினந்துகொண்ட பின்; **தேற்றுதல்** - தெளிவித்தல்; **அரிது** - கடினமாகும்.

(க-ரை): அமைச்சர்கள் அரசனுக்குச் சினம் ஏற்படாத வகையில், குற்றம் ஏதும் புரியாமல் இருந்து, தம்மைத்தாமே காத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். (693)

4. செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து.

ஆன்ற, பெரியார் அகத்து, செவிச்சொல்லும், சேர்ந்த நகையும், அவித்து, ஒழுகல்.

(பொ-ரை): அமைச்சரானவர்கள், சிறப்புமிகுந்த பேரரசர்களின் எதிரில் இருக்கும்போது, அவர் முன்பாக மற்றொருவர் செவியினுள் ஏதாவது ஒன்றை மறைவாகச் சொல்லுதலையும், அவரோடு சேர்ந்து சிரித்தலையும் தவிர்த்து, நடந்துகொள்ள வேண்டும்.

ஆன்ற பெரியார் - சிறப்புமிகுந்த பேரரசர்; **அகத்து** - எதிரில் இருக்கும் போது; **அவித்து** - தவிர்த்து; **ஒழுகல்** - நடந்துகொள்ள வேண்டும்.

(க-ரை): அமைச்சர்கள், பேரரசர்களின் முன்னிலையில் விற்றிருக்கும்போது, மற்றவர் காதுக்குள் மறைவாகச் சொல்லுதலையும், அவரோடு சேர்ந்து சிரித்தலையும் தவிர்க்க வேண்டும். (694)

5. எப்பொருளும் ஓரார் தொடரார்மற்று அப்பொருளை விட்டக்கால் கேட்க மறை.

மறை, எப்பொருளும் ஓரார், தொடரார், மற்று, அப்பொருளை, விட்டக்கால், கேட்க.

(பொ-ரை): அமைச்சரானவர்கள், அரசன் பிறரோடு மறைவாகப் பேசிக் கொண்டிருக்கும்போது, யாதொரு பொருளையும் செவிகொடுத்து உற்றுக் கேட்காமலும், அதுபற்றி அவனிடம் வினவாமலும் இருந்து, அம்மறை பொருளினைப் பற்றி அவனே சொன்னால் மட்டுமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

மறை - அரசன் பிறருடன் மறைவாகப் பேசும்போது; **ஓரார்** - செவிகொடுத்து உற்றுக் கேட்காமல்; **தொடரார்** - அதுபற்றி வினவாமல்; **அப்பொருள்** - அம்மறைபொருளை; **விட்டக்கால்** - அவனே சொன்னால் மட்டுமே.

(க-ரை): அரசன் பிறருடன் மறைவாகப் பேசிக் கொண்டிருக்கும்போது, அமைச்சரானவர்கள் அதை ஒட்டுக் கேட்கக்கூடாது; அரசனிடம் அதுபற்றி வினவவும் கூடாது; அரசனே அதுபற்றிச் சொன்னால் மட்டுமே கேட்டுக்கொள்ள வேண்டும். (695)

6. குறிப்புஅறிந்து காலம் கருதி வெறுப்பில வேண்டுப வேட்பச் சொலல்.

குறிப்பு அறிந்து, காலம் கருதி, வெறுப்பில, வேண்டுப, வேட்பச், சொலல்.

(பொ-ரை): அமைச்சர்கள், அரசனது மனக்குறிப்பை அறிந்துகொண்டு, ஏற்ற காலத்தைத் தெரிந்து, அவனுக்கு வெறுப்பு விளையாதனவாயும், அவனால் விரும்பத்தக்கனவாயும் உள்ள செய்திகளை மட்டுமே அவன் விரும்பும் வகையில் சொல்ல வேண்டும்.

குறிப்பு - அரசனுடைய மனக்குறிப்பினை; **காலம் கருதி** - ஏற்ற காலத்தைத் தெரிந்து; **வெறுப்பில** - வெறுப்பு விளையாதன; **வேண்டுப** - விரும்பத்தக்கன; **வேட்ப** - அரசன் விரும்புமாறு.

(க-ரை): அமைச்சர்கள், அரசனுடைய மனக்குறிப்பையும், ஏற்ற காலத்தையும் அறிந்து, அவனுக்கு வெறுப்புத் தராதவைகளையும், அவன் விரும்புகின்றவற்றையும் மட்டுமே அவன் மனம் மகிழும் வகையில் சொல்ல வேண்டும். (696)

7. வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல்.

வேட்பன சொல்லி, வினையில கேட்பினும், எஞ்ஞான்றும், சொல்லா விடல்.

(பொ-ரை): அரசன் விரும்புகின்ற பயனுள்ளவற்றை மட்டும் சொல்லிப் பயனில்லாதவற்றை அவனே விரும்பிக் கேட்டபோதிலும், அமைச்சர்கள் எப்போதும் சொல்லாமல் விட்டுவிடுதல் வேண்டும்.

வேட்பன - அரசன் விரும்புகின்ற பயனுள்ளவை; **வினையில** - பயனில்லாதவற்றை; **கேட்பினும்** - விரும்பிக் கேட்டாலும்; **சொல்லாவிடல்** - சொல்லாமல் விட்டுவிடுதல் வேண்டும்.

(க-ரை): அமைச்சரானவர்கள், அரசனுக்குப் பயனுள்ளவற்றை மட்டும் சொல்லிப் பயனில்லாதவற்றைச் சொல்லாமல் விட்டுவிட வேண்டும். (697)

8. இளையர் இனமுறையர் என்றுஇகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும்.

இளையர், இனமுறையர், என்று இகழார், நின்ற ஒளியோடு, ஒழுகப்படும்.

(பொ-ரை): அமைச்சரானவர்கள், அரசர் தமக்கு இளையரானவர் என்றும், தமக்கு இன்ன முறையினையுடையவரென்றும் கூறி அவரை இகழாமல், அவருடைய நிலைக்கு ஏற்றவாறு அமைந்த புகழுடன் பொருந்துமாறு நடந்து கொள்ள வேண்டும்.

இளையர் - தமக்கு வயதில் இளையர்; **இனமுறையர்** - தமக்கு இன்ன உறவின் முறையினர்; **ஒளி** - புகழ்; **ஒழுகுதல்** - நடந்து கொள்ளுதல்.

(க-ரை): அமைச்சரானவர்கள், அரசரைத் தமக்கு இளையர் என்றும், உறவின் முறையினர் என்றும் கூறி இழிவுபடுத்தாமல், அவரது புகழுக்கு ஏற்ப அடக்கமாய் நடந்துகொள்ள வேண்டும். (698)

**9. கொளப்பட்டேம் என்றுஎண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்குஅற்ற காட்சி யவர்.**

துளக்கு அற்ற, காட்சியவர், கொளப்பட்டேம், என்று எண்ணிக், கொள்ளாத, செய்யார்.

(பொ-ரை): மாறுதலில்லாத தெளிந்த அறிவினையுடைய அமைச்சர்கள், தாம் அரசரால் பெரிதும் விரும்பப்பட்டவர்கள் ஆவோம் என்று எண்ணி, அவர் விரும்பாதவற்றை ஒருகாலும் செய்யமாட்டார்கள்.

துளக்குஅற்ற - மாறுதல் இல்லாத; **காட்சியவர்** - அறிவினையுடையவர்கள்; **கொள்ளாத** - விரும்பாதவற்றை; **செய்யார்** - செய்யமாட்டார்கள்.

(க-ரை): தெளிவான அறிவினையுடைய அமைச்சர்கள், தாம் அரசரால் மிகவும் விரும்பப்பட்டவர்கள் என்று சொல்லிக்கொண்டு, அரசர் விரும்பாதவற்றைச் செய்யமாட்டார்கள். (699)

**10. பழையம் எனக்கருதிப் பண்புஅல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.**

பழையம், எனக்கருதிப், பண்பு அல்ல, செய்யும், கெழுதகைமை, கேடு தரும்.

(பொ-ரை): தாம் அரசனுக்கு நெடுங்காலமாகவே வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று கருதி, அமைச்சரானவர்கள், தகாதனவற்றைச் செய்யும் பழைமை வாய்ந்த உரிமை உறவு, அவர்க்குக் கேட்டினைப் பயக்கும்.

பழையம் - நெடுங்காலமாகவே வேண்டியவர்களாக இருக்கிறோம்; **பண்பு அல்ல** - தகாதன; **கெழுதகைமை** - பழைமை வாய்ந்த உரிமை; **கேடு** - தீமை.

(க-ரை): தாம் அரசனுக்கு நெடுங்காலமாகவே மிகவும் வேண்டியவர்கள் என்ற உரிமையில், அமைச்சர்கள் தகாத செயல்களைச் செய்தால், அவையே அவர்களுக்குத் தீமையினைத் தரும். (700)

71. குறிப்பு அறிதல்

குறிப்பு அறிதல் என்பது, அமைச்சரானவர்கள் மன்னர் மனத்திலும், பிறர் மனத்திலும் உள்ளவற்றை அவர்கள் கூறாமலேயே, குறிப்பால் அறிந்துகொள்ளுதல் எனப்படும்.

**1. கூறாமை நோக்கிக் குறிப்புஅறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி.**

கூறாமை நோக்கிக், குறிப்பு அறிவான், மாறாநீர் வையக்கு, எஞ்ஞான்றும், அணி.

(பொ-ரை): பிறருடைய மனக்கருத்தினை, அவர் கூறாமலேயே, அவர் முகத்தை நோக்கி ஆராய்ந்து அறிய வல்லவன், வற்றாத நீரையுடைய கடலால் சூழப்பெற்ற இவ்வுலகிற்கு, எப்பொழுதும் ஓர் அணிகலன் போன்றவன் ஆவான்.

குறிப்பு - பிறருடைய மனக் கருத்தினை; **கூறாமை** - கூறாமலேயே; **அறிவான்** - அறியவல்லவன்; **மாறா** - வற்றாத; **வையக்கு** - உலகத்திற்கு; **அணி** - அணிகலன்.

(க-ரை): பிறர் சொல்லாமலேயே அவருடைய மனக் கருத்தினை, அவர் முகத்தைப் பார்த்த அளவிலே அறிந்துகொள்ளும் ஆற்றல் உள்ளவன், இவ்வுலகத்தாரிடையே ஓர் அணிகலன் போன்று திகழக்கூடியவன் ஆவான். (701)

**2. ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்.**

ஐயப்படாஅது, அகத்தது, உணர்வானை, தெய்வத்தோடு, ஒப்பக் கொளல்.

(பொ-ரை): பிறருடைய மனத்திலுள்ளதை ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல் அறியக்கூடிய வல்லவனைப், போற்றத்தக்க மேன்மையானவருக்கு ஈடாக வைத்து மதிக்க வேண்டும்.

அகத்தது - பிறருடைய மனத்தில் உள்ளதை; **உணர்வானை** - அறியக்கூடிய வல்லவனை; **தெய்வம்** - போற்றத்தக்க மேன்மையான பொருள்; தெய்வத்தமிழ் என்றால் போற்றத்தக்க மேன்மையான தமிழ் என்று பொருள்; **ஒப்பக்கொளல்** - ஈடாகக் கொள்ள வேண்டும்.

(க-ரை): பிறருடைய மனத்திலுள்ளதை ஐயப்பாட்டிற்குச் சிறிதும் இடமில்லாமல் அறியக்கூடிய வல்லமை படைத்தவனை, மிக மேன்மையாக வைத்து மதிக்க வேண்டும். (702)

**3. குறிப்பின் குறிப்புஉணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.**

குறிப்பின், குறிப்பு உணர்வாரை, உறுப்பினுள், யாது கொடுத்தும், கொளல்.

(பொ-ரை): பிறரின் முகம், கண் போன்றவற்றின் குறிப்புகளைக் கொண்டு, அவரின் உள்ளக்குறிப்பை அறிய வல்லாரை, அரசனானவன், தன் அரச உறுப்புகளுள் அவர் விரும்பி ஏற்பதொன்றைக் கொடுத்தாயினும், அவரைத் தனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.

குறிப்பின் - பிறரின் முகம், கண் போன்றவற்றின் குறிப்புகளைக் கொண்டு; **உறுப்பினுள்** - அரச உறுப்புகளுள்; **யாது கொடுத்தும்** - அவர் விரும்பி ஏற்பதொன்றைக் கொடுத்தேனும்; **கொளல்** - தனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.

(க-ரை): பிறருடைய முகக் குறிப்பினைக்கொண்டே அவரது உள்ளக் குறிப்பினை அறியவல்லாரை, அரசன் தன்னிடத்திலுள்ள எந்த ஒரு பதவியைக் கொடுத்தேனும் அவரைத் தன் துணையாகக் கொள்ள வேண்டும். (703)

**4. குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை
உறுப்புஓ ரனையரால் வேறு.**

குறித்தது, கூறாமைக், கொள்வாரோடு, ஏனை உறுப்பு, ஓர் அனையரால், வேறு.

(பொ-ரை): பிறர் மனத்தில் கருதியதை, அவர் சொல்லாமலேயே அறியவல்லவர்களோடு, அவ்வாறு குறிப்புணர மாட்டாதவர்கள், கை, கால் முதலிய உடலுறுப்புகளினால் ஒரு தன்மையராக வெளித்தோற்றத்தில் காணப்பட்டாலும், இருசாராரும் அறிவால் வேறுபட்டவரேயாவார்கள்.

குறித்தது கூறாமை - பிறர் மனத்தில் கருதியதை, அவர் சொல்லாமலேயே; **கொள்வாரோடு** - அறிய வல்லவர்களோடு; **ஏனை** - அவ்வாறு குறிப்புணர மாட்டாதவர்கள்; **உறுப்பு** - கை,

கால் போன்ற உறுப்புகளால்; **ஓர் அனையர்** - ஒரு தன்மையர் ஆனாலும்; **வேறு** - அறிவால் வேறுபட்டவர்கள் ஆவார்கள்.

(க-ரை): பிறருடைய உள்ளக்குறிப்பை அறியக்கூடியவரும், அறியமாட்டாதவர்களும் ஆகிய இருசாராரும் கை, கால் போன்ற உறுப்புகளைப் பொறுத்து ஒரே தன்மையர் என்றாலும், அறிவால் வேறுபட்டவர்களே ஆவார்கள். (704)

**5. குறிப்பின் குறிப்புஉணரா ஆயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்.**

உறுப்பினுள் கண், குறிப்பின், குறிப்பு உணரா, ஆயின், என்ன பயத்தவோ?

(பொ-ரை): ஒருவனது உடல் உறுப்புகளுள் சிறந்து விளங்கும் கண்களானவை, பிறரின் முகம், கண் போன்றவற்றின் குறிப்புகளைக் கொண்டு, அவரது மனக்கருத்தை உணர்ந்தறிய முடியாவிட்டால், வேறு என்ன பயனைச் செய்ய இயலும்? ஒன்றையும் செய்ய இயலாது.

உறுப்பினுள் - உடலுறுப்புகளில் சிறந்த; **குறிப்பின் குறிப்பு** - முகக் குறிப்பினைக்கொண்டு உள்ளக் குறிப்பினை; **உணரா ஆயின்** - உணர்ந்தறிய முடியாவிட்டால்.

(க-ரை): முகக்குறிப்பின்மூலம் உள்ளக் குறிப்பினை உணர முடியாத கண்களால் பயனில்லை. (705)

**6. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.**

அடுத்தது, காட்டும், பளிங்குபோல், நெஞ்சம் கடுத்தது, முகம் காட்டும்.

(பொ-ரை): தன்னையடுத்துக் காணப்படும் பொருளின் உருவத்தைத் தானே கொண்டுவந்து காட்டக்கூடிய பளிங்குக் கண்ணாடி போல், ஒருவனது நெஞ்சில் மிகுந்து காணப்படும் எண்ணத்தை, அவனது முகமானது தானே வெளிக்கொண்டு வந்து காட்டிவிடும்.

அடுத்தது - தன்னை அடுத்துக் காணப்படும்; **பளிங்கு** - பளிங்குக் கண்ணாடி; **கடுத்தது** - மிகுந்து காணப்படும் எண்ணத்தை.

(க-ரை): தன் எதிரில் உள்ளதைக் கண்ணாடி எவ்வாறு காட்டுகிறதோ, அவ்வாறே ஒருவனது நெஞ்சத்தில் உள்ளதை அவனது முகம் காட்டிவிடும். (706)

**7. முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும்.**

உவப்பினும், காயினும், தான்முந்துறும், முகத்தின், முதுக் குறைந்தது உண்டோ.

(பொ-ரை): ஒருவன் ஒன்றை விரும்பினாலும், வெறுத்தாலும், அவனுடைய முகம் முற்பட்டு அந்த உணர்வை வெளிப்படுத்தி விடும். அம்முகத்தைவிட அறிவுமிக்கது வேறு உண்டோ?

உவப்பினும் - விரும்பினாலும்; **காயினும்** - வெறுத்தாலும்; **முந்துறும்** - முற்பட்டு நிற்கும்; **முதுக்குறைந்தது** - அறிவுமிக்கது; முதுக்குறைவு - அறிவு மிகுதல்.

(க-ரை): ஒருவன் மனத்தில் தோன்றும் விருப்பு, வெறுப்பை முதலில் பிறர் அறியச் செய்வது, முகமேயாகும். பின்னர் தான் உள்ளக்குறிப்பு அறிவிக்கும். ஆதலால், இந்த வகையில் முகத்தைவிட அறிவுமிக்க பொருள் வேறொன்றும் இல்லை. (707)

**8. முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின்.**

அகம்நோக்கி, உற்றது, உணர்வார்ப், பெறின், முகம் நோக்கி, நிற்க அமையும்.

(பொ-ரை): அரசனானவன், அவனது மனத்திலுள்ள குறையினைக் குறிப்பால் அறிந்து அதனை நீக்கவல்ல அமைச்சரைப் பெற்றால், அவன் அத்தகையோரின் முகத்தை நோக்கி நிற்றலே, அவனது இடரை ஒழித்தற்குப் போதுமானதாகும்.

அகம் - மனத்தில் உள்ளதை; **நோக்கி** - குறிப்பால் அறிந்து; **உற்றது** - அரசன் உற்ற குறையினை; **உணர்வார்** - அறிந்து நீக்கவல்ல; **பெறின்** - அமைச்சரைப் பெற்றால்; **நிற்க அமையும்** - நிற்றலே போதுமானதாகும்.

(க-ரை): அரசன், தன் உள்ளக்குறிப்பினை அறிந்து, தனது குறையைப் போக்கக்கூடிய அமைச்சரைப் பெற்றிருப்பானேயானால், அவருடைய முகத்தை அவன் பார்த்துக்கொண்டிருந்தாலே, அவனது குறைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டுவிடும். (708)

**9. பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்.**

கண்ணின் வகைமை, உணர்வார்ப், பெறின், பகைமையும், கேண்மையும், கண் உரைக்கும்.

(பொ-ரை): அரசனானவன், பார்வையின் வேறுபாட்டுத் தன்மைகளை அறியவல்ல அமைச்சர்களைப் பெற்றிருந்தால், வேற்றரசரின் பகைமையையும், நட்பையும் அவர்களது கண்களே அறிவிக்க, அதன்மூலம் தெரிந்துகொள்ளலாம்.

கண்ணின் - பார்வையின்; **வகைமை** - வேறுபாட்டுத் தன்மைகளை; **பகைமையும்** - பகைமை எண்ணத்தையும்; **கேண்மையும்** - நட்புத் தன்மையினையும்; **கண் உரைக்கும்** - கண்கள் அறிவிக்க, அதன்மூலம் தெரிந்துகொள்ளலாம்.

(க-ரை): அரசன், பார்வையின் வேறுபாடுகளை அறியக்கூடிய அமைச்சர்களைப் பெற்றிருப்பானேயானால், வேற்றரசர்களுடைய கண்களின் மூலம் அவர்கள் பகைவர்களா? அல்லது நண்பர்களா? என்பதை எளிதில் அறிந்துகொள்ள இயலும். (709)

**10. நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்அல்லது இல்லை பிற.**

நுண்ணியம், என்பார், அளக்குங்கோல், காணுங்கால், கண் அல்லது, பிற இல்லை.

(பொ-ரை): தாம் நுண்ணறிவுடையவர்கள் என்று தம்மைக் கருதிக்கொள்ளும் அமைச்சர்கள், பிறரின் மனக்கருத்தை அளந்தறிவதற்குரிய கோலாகப் பயன்படுத்துவன எவை என்று ஆராய்ந்து பார்த்தால், அவை, அவரது கண்களைத் தவிர வேறில்லை.

நுண்ணியம் - தாம் நுண்ணறிவுடையவர்கள்; **என்பார்** - என்று கருதிக்கொள்ளும் அமைச்சர்கள்; **அளக்கும்கோல்** - பிறர் மனக்கருத்தினை அளந்தறிவதற்குரிய அளவுகோல்; **காணுங்கால்** - ஆராய்ந்து பார்த்தால்.

(க-ரை): அமைச்சர்களுக்குப் பிறரின் மனக்கருத்தினை அளந்து பார்ப்பதற்குரிய அளவுகோலாகத் திகழ்பவை அவர்களுடைய கண்களைத்தவிர, வேறு எவையும் இல்லை. (710)

72. அவை அறிதல்

அவை அறிதல் என்பது ஒருவன், சான்றோரும், பிறரும் குழுமியுள்ள அவையில் பேசும்போது, அந்த அவையினரின் நிலைமை, இயல்பு, உணர்வு போன்றவற்றை நன்கு அறிந்து பேசுதல் எனப்படும்.

1. அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்.

சொல்லின் தொகை, அறிந்த, தூய்மையவர், அவை அறிந்து, ஆராய்ந்து, சொல்லுக.

(பொ-ரை): சொற்களைத் தொகுத்துரைப்பதனால் ஏற்படும் பயனை அறிந்த தூய்மையானவர்கள், அவையின் தன்மையினை அறிந்து, அதற்கு ஏற்றவாறு ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

சொல்லின் தொகை - சொற்களைத் தொகுத்துரைப்பதனால் ஏற்படும் பயனை; **அவைஅறிந்து** - அவையின் தன்மையை அறிந்து; **சொல்லுக** - சொல்ல வேண்டும்.

(க-ரை): அவையில் பேசும்போது, தூய்மையான அறிவாளர்கள், அவையோரின் தன்மையினை அறிந்து, அதற்கு ஏற்றாற்போல், ஆராய்ந்து, தொகுத்து உரைக்க வேண்டும். (711)

2. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்.

சொல்லின் நடை, தெரிந்த, நன்மையவர், இடைதெரிந்து, நன்கு உணர்ந்து, சொல்லுக.

(பொ-ரை): சொற்களின் நடைமுறைப் போக்கினை ஆராய்ந்தறிந்த நல்லறிவாளர்கள், அவையின் நேரம், நிலைமை ஆகியவற்றை ஆராய்ந்து தெரிந்து, நன்றாக உணர்ந்து சொல்ல வேண்டும்.

நடை - நடைமுறைப் போக்கினை; **நன்மையவர்** நன்மையையுடைய நல்லறிவாளர்கள்; **இடை** - நேரம், நிலைமை போன்றவற்றை.

(க-ரை): அவையில் பேசும் நல்லறிவாளர்கள், அவையின் நேரம், நிலைமை போன்ற செவ்வியை அறிந்து, நன்கு தெளிவாகச் சொல்ல வேண்டும். (712)

**3. அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்.**

அவை அறியார், சொல்லல், மேற்கொள்பவர், சொல்லின், வகை அறியார், வல்லதூஉம், இல்.

(பொ-ரை): அவையின் தன்மையினை அறியாமல், ஒன்றனைச் சொல்லத் தொடங்குவோர், சொற்களின் வகை முறையினை நன்கு அறியமாட்டாதவர்கள் ஆவார்கள் என்பது மட்டுமல்லாமல், கற்றுத் தேறிய கலையிலும் வல்லமையுடையவராக மாட்டார்கள்.

சொல்லின் வகையறியார் - சொற்களின் வகைமுறையினை அறியமாட்டாதவர்கள்; **வல்லதூஉம் இல்** - கற்றுத்தேறிய கலையில் வல்லமையுடையவராக மாட்டார்கள்.

(க-ரை): அவையின் தன்மையை அறியாமல் ஒன்றைச் சொல்ல முற்படுவோர்க்கு சொல்லின் வகையும் தெரியாது, கற்றுத்தேறிய கலையிலும் வல்லமை இருக்காது. (713)

**4. ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல்.**

ஒளியார்முன், ஒள்ளியர், ஆதல், வெளியார்முன், வான் சுதை, வண்ணம், கொளல்.

(பொ-ரை): அறிவில் மிக்கவர்கள் கூடியுள்ள அவையில் பேசுவோர், தம்மையும் அறிவிற் சிறந்தவராய்க் காட்டிக்கொள்ள வேண்டும்; அறிவில்லாதவர்கள் கூடியுள்ள அவையில் வெண்மையான நிறத்தைக் கொண்ட சுண்ணாம்பைப் போல், தாமும் அறிவில்லாதவர்போல் இருக்க வேண்டும்.

ஒளியார் - அறிவில் மிக்கவர்கள்; **ஆதல்** - தம்மையும் காட்டிக்கொள்ள வேண்டும்; **வெளியார்** - அறிவில்லாதவர்கள்; **வான்சுதை** - சுண்ணாம்பு; வெண்மை நிறம் அறிவில்லாமைக்கு எடுத்துக்காட்டு.

(க-ரை): பேசுவோர், அறிவுடையோர் கூடியுள்ள அவையில் தம்மையும் அறிவிற் சிறந்தவராகவும், அறிவில்லாதவர்கள் கூடியுள்ள அவையில் தம்மையும் அறிவற்றவராகவும் காட்டிக்கொள்ள வேண்டும். (714)

**5. நன்றுஎன்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.**

முதுவருள், முந்துகிளவாச், செறிவு, நன்று, என்றவற்றுள்ளும், நன்றே.

(பொ-ரை): தம்மைக் காட்டிலும் சிறந்த அறிஞர்கள் கூடிய அவையில், அவர்களுக்கு முன் இருந்துகொண்டு பேசாத அடக்கமானது, நல்ல பண்புகள் என்று சொல்லப்பட்ட எல்லாவற்றையும்விட மிக நல்ல பண்பாகும்.

முதுவருள் - தம்மைக்காட்டிலும் சிறந்த அறிஞர்கள் கூடிய அவையில்; **முந்துகிளவா** - முன்இருந்து கொண்டு பேசாத; **செறிவு** - அடக்கமான பண்பு; **நன்று** - நல்ல பண்பு.

(க-ரை): தம்மைக்காட்டிலும் சிறந்த அறிஞர்கள் கூடியுள்ள அவையில், ஒருவர், ஏதொன்றையும் பேசாமல் அடக்கமாக இருக்கும் பண்பானது, மிகச் சிறந்த பண்பு என்று போற்றப் படுவதாகும். (715)

**6. ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுஉணர்வார் முன்னர் இழுக்கு.**

வியன்புலம், ஏற்று உணர்வார், முன்னர், இழுக்கு, ஆற்றின், நிலைதளர்ந்தற்றே.

(பொ-ரை): பரந்த நூல்களைக் கற்று உணர்ந்தோர் முன்னிலையில், ஒருவன் குற்றம் உண்டாகும்படிச் சொல்லுதலானது, நல்ல ஒழுக்க நெறியில் நிற்கும் ஒருவன், அதனின்றும் நிலை தளர்ந்து வீழ்வது போன்றதாகும்.

வியன்புலம் ஏற்று உணர்வார் - பரந்த நூல்களைக் கற்று உணர்ந்தோர்; **இழுக்கு** - குற்றம் உண்டாகும்படிச் சொல்லுதல்; **ஆற்றின்** - நல்ல ஒழுக்க நெறியில் நின்ற ஒருவன்; **தளர்ந்தற்றே** - தளர்ந்து வீழ்வது போன்றது.

(க-ரை): கற்றறிந்த சீரியோர் முன்னிலையில் ஒருவன் குற்றம் ஏற்படச் சொல்லுதல் என்பது, நல்ல ஒழுக்கமுடையவன், அதிலிருந்து தவறி வீழ்வதைப் போன்றதாகும். (716)

**7. கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடுஅறச்
சொல்தெரிதல் வல்லா ரகத்து.**

கசடுஅறச், சொல்தெரிதல், வல்லார் அகத்து, கற்றறிந்தார், கல்வி, விளங்கும்.

(பொ-ரை): வழுவில்லாமல் சொற்களின் பொருளை அறிய வல்லவர்கள் நிறைந்த அவையின்கண், பல நூல்களையும் கற்றறிந்த ஒருவர் பேசினால், அவரது கல்வியின் தேர்ச்சி, நன்கு விளக்கம் அடையும்.

கசடு அற - வழுவில்லாமல்; **குற்றம்** - குறைகள் நீங்க; **சொல் தெரிதல் வல்லார்** - சொற்களின் பொருளை அறிய வல்லவர்கள்; **அகத்து** - அவையில்; **விளங்கும்** - விளக்கம் அடையும்.

(க-ரை): சொற்களின் பொருளை உணர்ந்த அறிவில் சீரியோர் கூடியுள்ள அவையில், கற்றறிந்த ஒருவர் பேசினால், அவரது கல்வியின் சிறப்பு யாவர்க்கும் விளங்கும். (717)

8. உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று.

உணர்வது, உடையார்முன், சொல்லல், வளர்வதன், பாத்தியுள், நீர் சொரிந்தற்று.

(பொ-ரை): நற்கருத்துக்களைத் தாமே அறியவல்ல அறிவுடையவர்களின் முன்னிலையில், கற்றறிந்தவர் ஒன்றைச் சொல்லுதல் என்பது, பயிர் தானாக வளரக்கூடிய பாத்தியில், தண்ணீரை ஊற்றுவது போன்றதாகும்.

உணர்வது - நற்கருத்துக்களைத் தாமே உணரவல்ல அறிவினை; **சொல்லல்** - கற்றறிந்தவர் ஒன்றைச் சொல்லுதல்; **வளர்வதன்** - பயிர் தானே வளர்கின்ற.

(க-ரை): தேர்ந்த அறிவினை உடையவர்கள் நிறைந்த அவையில், கற்றறிந்தவர் ஒன்றைச் சொல்லுதல், தானே வளரும் பயிரையுடைய பாத்தியில், நீரைப் பாய்ச்சுவதைப் போன்றதாகும். (718)

9. புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார்.

நல்லவையுள், நன்கு, செலச்சொல்லுவார், புல்லவையுள், பொச்சாந்தும், சொல்லற்க.

(பொ-ரை): நல்லவர்கள் கூடியுள்ள அவையில், நல்ல கருத்துக்களை, நன்கு அவரது மனத்திற் பதியுமாறு சொல்லக்கூடிய

வல்லமை படைத்தவர்கள், அற்பர்கள் கூடியுள்ள அவையில், அவற்றை மறந்தும் சொல்லாதிருக்க வேண்டும்.

நல்லவையுள் - நல்லவர்கள் கூடியுள்ள அவையில்; **நன்கு செலச் சொல்லுவார்** - நன்கு அவரது மனத்தில் பதியுமாறு சொல்லக்கூடிய வல்லமை படைத்தவர்கள்; **புல்லவையுள்** - அற்பர்கள் கூடியுள்ள அவையில்; **பொச்சாந்தும்** - மறந்தும்; **சொல்லற்க** - சொல்லாதிருக்க வேண்டும்.

(க-ரை): நல்லவர்கள் அவையில், அவர்களின் மனத்திற் பதியுமாறு கருத்துக்களைச் சொல்லக்கூடிய வல்லவர்கள், அற்பர்கள் அவையில் எதையும் பேசாமல் இருக்க வேண்டும். (719)

10. அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தம்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்.

தம்கணத்தர், அல்லார்முன், கோட்டி கொளல், அங்கணத்துள், உக்க, அமிழ்து அற்றால்.

(பொ-ரை): நல்லறிவுடையோர், தம்மைப் போன்ற இனத்தவரல்லாதார் அடங்கிய கூட்டத்தில் ஒன்றைக் கூறுவதை மேற்கொள்ளாதிருக்க வேண்டும்; அப்படி ஏதேனும் கூறினால், அது, தூய்மையில்லாத முற்றத்தில் சிந்திய அமிழ்தத்தைப் போன்றதாகும்.

தம்கணத்தர் - தம்மைப்போன்ற இனத்தவர்கள்; **கோட்டி** - பேசுபவை; **கொளல்** - மேற்கொள்ளாதிருக்க வேண்டும்; **அங்கணம்** - முற்றம்; அழகான கட்டுக்கோப்பான இடம்; **உக்க** - சிந்திய; **அமிழ்தம்** - தீஞ்சுவை உணவு.

(க-ரை): நல்லறிவுடையோர், அறிவில்லாதவர்கள் அடங்கிய கூட்டத்தில் ஏதொன்றையும் பேசக்கூடாது; அப்படி ஏதாவது பேசினால், அது, தூய்மையற்ற முற்றத்தில் சிந்திய அமிழ்தத்தைப் போன்று வீணாக ஆகிவிடும். (720)

73. அவை அஞ்சாமை

அவை அஞ்சாமை என்பது, சான்றோர்கள் நிறைந்த அவையில், தகுதியும், திறமையும், வாய்ந்த ஒருவர் பேச முற்படும்போது, அந்த அவையைக் கண்டு அவர் அஞ்சாது பேசுதல் எனப்படும்.

**1. வகை அறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.**

சொல்லின் தொகை, அறிந்த, தூய்மையவர், வகைஅறிந்து, வல்லவை, வாய்சோரார்.

(பொ-ரை): சொற்களைத் தொகுத்துரைக்கும் முறையினை நன்கு அறிந்த தூய்மையான அறிவுடையோர், கற்றவர் அவை, கல்லாதவர் அவை என்ற வேறுபாட்டினை உணர்ந்து, கல்வியில் வல்லவர்கள் நிறைந்த அவையில் பேசும்போது, அச்சத்தால் பிழைபடப் பேசமாட்டார்கள்.

சொல்லின் தொகை - சொற்களைத் தொகுத்துரைக்கும் முறையினை; **தூயவர்** - தூய்மையான அறிவுடையோர்; **வகை** - கற்றவர் அவை, கல்லாதவர் அவை என்ற வேறுபாட்டினை; **வல்லவை** - கல்வியில் வல்லவர்கள் அவை; **வாய் சோரார்** - பிழைபடப் பேசமாட்டார்கள்.

(க-ரை): கற்றறிந்த சீரியோர் பலர் நிரம்பிய அவையில் பேசும்போது, அவைகளின் வேறுபாட்டினை நன்கு அறிந்த கல்வியில் வல்லுநர்கள், ஒருபோதும் பிழைபடப் பேசமாட்டார்கள். (721)

**2. கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்செல்லு வார்.**

கற்றார்முன், கற்ற, செலச்சொல்லுவார், கற்றாருள், கற்றார், எனப்படுவர்.

(பொ-ரை): கற்றவர்கள் நிறைந்த அவையின்கண், தாம் கற்றவற்றை அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு சொல்ல வல்லவர்கள், கற்றவர்கள் எல்லோரைக் காட்டிலும், நன்கு கற்றவர்கள் என்று பெரியோர்களால் புகழ்ந்து சொல்லப்படுவார்கள்.

கற்ற - தாம் கற்றவைகளை; **செலச்சொல்லுவார்** கேட்பவர்கள் மனம் ஏற்றுக்கொள்ளுமாறு சொல்லவல்லவர்கள்.

(க-ரை): கற்றறிந்தவர்களே ஏற்றுக்கொள்ளுமாறு தாம் கற்றவைகளையெல்லாம் சொல்ல வல்லவர்கள், கற்றவர்களி லெல்லாம் நன்கு கற்றவர் என்று பெரியோரால் புகழ்ந்து பேசப் படுவார்கள். (722)

3. பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர்.

பகைஅகத்துச், சாவார், எளியர்; அவைஅகத்து, அஞ்சாதவர், அரியர்.

(பொ-ரை): பகைவர் இருக்கும் போர்க்களத்திற்குச் சென்று அஞ்சாது போரிட்டு இறக்கக்கூடியவர்கள் பலராவார்கள்; ஆனால், கற்றவர்கள் நிறைந்த அவைக்களத்தில் நின்று பேசக்கூடியவர்கள் சிலரேயாவார்கள்.

பகையகம் - பகைவர் இருக்கும் போர்க்களம்; **எளியர்** - எளிமையாகப் பலராவார்; **அவையகம்** - கற்றோர்கள் நிறைந்த அவைக்களம்; **அரியர்** - அருமையாகச் சிலரேயாவார்கள்.

(க-ரை): போர்க்களம் சென்று அஞ்சாது போரிட்டு இறப்பவர்கள் பலர் இருக்கிறார்கள்; ஆனால், கற்றோர் நிறைந்த அவைக்களம் புகுந்து அஞ்சாது பேசக்கூடியவர்கள் மிகச் சிலரே இருக்கிறார்கள். (723)

4. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்.

கற்றார்முன், கற்ற, செலச்சொல்லித், தாம், கற்ற, மிக்காருள், மிக்க கொளல்.

(பொ-ரை): கற்றவர்கள் நிறைந்த அவையின்கண், தாம் கற்றவற்றை அவர்கள் ஏற்குமாறு எடுத்துச் சொல்லித், தம்மைக் காட்டிலும் மிகுதியாகக் கற்றவர்களிடமிருந்து மிகுதியாகத் தெரிய வேண்டியவைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

கற்ற - தாம் கற்றவற்றை; **செலச்சொல்லி** - அவர்கள் ஏற்குமாறு எடுத்துச்சொல்லி; **தாம் கற்ற** - தாம் கற்றதைவிட; **மிக்கார்** - மிகுதியாகக் கற்றவர்கள்.

(க-ரை): கற்றவர்கள் நிறைந்த அவையில் அவர்கள் ஏற்குமாறு ஒருவர் தாம் கற்றவற்றைச் சொல்ல வேண்டும்; அவர்களிடத்தில் மிகுதியாகக் கற்றுக்கொள்ள வேண்டியதைக் கற்றுக்கொள்ள வேண்டும். (724)

5. ஆற்றின் அளவுஅறிந்து கற்க அவைஅஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு.

அவை அஞ்சா, மாற்றம், கொடுத்தல், பொருட்டு, ஆற்றின், அளவு அறிந்து, கற்க.

(பொ-ரை): கற்றோர்கள் அவையில் பேசும்போது, கேட்கப் படும் கேள்விக்கு அஞ்சாமல், மறுமொழி சொல்லுவதற்கு ஏற்ற வகையில், பேசுபவர் சொற்பொருள் இலக்கண நெறியில், அளவை நூல்களை நன்கு அறிந்துணர்ந்து கற்க வேண்டும்.

ஆற்றின் - சொற்பொருள் இலக்கண நெறியில்; **அளவு** - அளவை நூல்களை; **அறிந்து** - அறிந்துணர்ந்து; **மாற்றம்** - கேட்கப்படும் கேள்விக்கு மறுமொழி; **கொடுத்தற் பொருட்டு** - சொல்லுதல் பொருட்டு.

(க-ரை): கற்றோர் அவையில் பேசும்போது, கேட்கப்படும் கேள்விக்கு ஏற்ற மறுமொழியைச் சொல்லுவதற்குப் பேசுபவர், சொற்பொருள் இலக்கண நூல்களையும், அளவை நூல்களையும் நன்கு கற்று அறிந்து கொண்டிருக்க வேண்டும். (725)

6. வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடுஎன்
நுண்அவை அஞ்சு பவர்க்கு.

வன்கண்ணர் அல்லார்க்கு, வாளொடு, என்? நுண் அவை, அஞ்சுபவர்க்கு, நூலொடு, என்?

(பொ-ரை): மனத்திண்மை இல்லாதவர்களுக்குப் போர் செய்வதற்கான வாளுடன் என்ன தொடர்பு இருந்துதான் என்ன பயன்? ஒரு பயனுமில்லை! அதுபோல, நுண்ணறிவு படைத்தோர் நிறைந்த அவையைக் கண்டு அஞ்சுபவர்களுக்கு, நூல்களுடன் என்ன தொடர்பு இருந்துதான் என்ன பயன்? ஒன்றுமில்லை.

வன்கண்ணர் அல்லார் - மனத்திண்மை இல்லாதவர்கள்; **நுண் அவை** - நுண்ணறிவு படைத்தோர் நிறைந்த அவை.

(க-ரை): மனத்திண்மை இல்லாதவர்கள் வாளை ஏந்தினாலும் எந்தப் பயனும் ஏற்படாது; அதுபோல, அறிவு படைத்தோர்

அவையைக் கண்டு அஞ்சுபவர்கள் எந்த நூலைப் படித்தாலும், எந்த ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை. (726)

7. பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து அஞ்சு மவன்கற்ற நூல்.

அவைஅகத்து, அஞ்சும் அவன், கற்ற நூல், பகை அகத்துப், பேடிகை, ஒள்வாள்.

(பொ-ரை): கற்றோர் அவைக்களத்தில் நின்று, அதனைக் கண்டு அஞ்சுபவன் கற்ற நூலானது, பகைவரின் போர்க்களத்தில் நின்று, அதனைக்கண்டு நடுங்கும் பேடியின் கையில் உள்ள கூரிய வாளை ஒக்கும்.

அவையகத்து - கற்றோர் அவைக்களத்தில்; **பகையகத்து** - பகைவரின் போர்க்களத்தில்; **பேடிகை** - பேடியின் கையில் உள்ள; **ஒள்வாள்** - கூரிய வாள்.

(க-ரை): போர்க்களத்தின் நடுவே நின்று அதனைக்கண்டு அஞ்சும் பேடியின் கையிலுள்ள வாள் எப்படி எதற்கும் பயன் படாதோ, அப்படியே, கற்றோர் அவையின் நடுவே நின்று அதனைக் கண்டு அஞ்சுபவன் கற்ற நூலும் எதற்கும் பயன்படாததாகும்.(727)

8. பல்லவை கற்றும் பயம்இலரே நல்லவையுள் நன்கு செலச்சொல்லா தார்.

நல்அவையுள், நன்கு, செலச்சொல்லாதார், பல்லவை, கற்றும் பயம் இலரே.

(பொ-ரை): நல்லோர் நிறைந்த அவையில் நல்ல கருத்துக்களை, அவர்கள் ஏற்குமாறு சொல்ல முடியாதவர்கள், பல நூல்களைக் கற்றறிந்திருந்தாலும், அவர்கள் எந்த வகையிலும் உலகிற்குப் பயனில்லாதவர்களேயாவார்கள்.

நல்லவையுள் - நல்லோர் நிறைந்த அவையில்; **செலச் சொல்லாதார்** - அவர்கள் ஏற்குமாறு கருத்துக்களைச் சொல்ல முடியாதவர்கள்; **பல்லவை** - பல நூல்களை; **பயன் இலரே** - பயனில்லாதவரேயாவர்.

(க-ரை): நல்ல அறிவுடையோர் கூடியுள்ள அவையில், அவர்கள் ஏற்குமாறு கருத்துக்களைச் சொல்ல முடியாதவர்கள், பல நூல்களைக் கற்றறிந்திருந்தபோதிலும், அதனால் எந்த ஒரு பலனும் ஏற்படுவது இல்லை. (728)

9. கல்லா தவரின் கடைஎன்ப கற்றறிந்தும்
நல்லா ரவைஅஞ்சு வார்.

கற்றுஅறிந்தும், நல்லார் அவை, அஞ்சுவார், கல்லாதவரின், கடை என்ப.

(பொ-ரை): நூல்களைக் கற்று அதன் பயன்களைத் தெரிந்திருந்த போதிலும், நல்லறிவுடையோர் நிறைந்த அவையைக் கண்டு அஞ்சுபவர்கள், கல்லாதவர்களைக் காட்டிலும் மிக இழிந்தவராவார்கள் என்று மேலோர் சொல்லுவார்கள்.

நல்லாரவை - நல்லறிவு படைத்தோர் அவை; **கடை** - இழிந்தவர்; **என்ப** - என்று மேலோர் சொல்லுவார்கள்.

(க-ரை): பல நூல்களைக் கற்றறிந்திருந்த போதிலும், அறிவுடையோர் அவையைக் கண்டு அஞ்சுபவர்கள், கல்லாதவர் களைவிட மிக இழிந்தவர்களாகவே கருதப்படுவார்கள்.

(729)

10. உளர்எனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச் சொல்லாதார்.

களன் அஞ்சிக், கற்ற, செலச் சொல்லாதார், உளர் எனினும், இல்லாரொடு, ஒப்பர்.

(பொ-ரை): கற்றார் அவைக்கு அஞ்சித் தாம் கற்றவற்றை அவர்கள் ஏற்குமாறு சொல்ல முடியாதவர்கள், உயிரோடுதான் வாழ்கின்றார்கள். என்றாலும், அவர்கள் உண்மையில் இறந்தவர் களுக்கு ஒப்பாகவே கருதப்படுவார்கள்.

களன் - கற்றார் அவைக்களம்; **கற்ற செலச் சொல்லாதார்** - தாம் கற்றவற்றைக் கேட்பவர்கள் ஏற்குமாறு செல்ல முடியாதவர்கள்; **உளர் எனினும்** - உயிரோடு வாழ்கின்றார்கள் என்றாலும்; **இல்லாரோடு** - இறந்தவர்களோடு; **ஒப்பர்** - ஒப்பாவர்.

(க-ரை): கற்றார் அவையில் தாம் கற்றவற்றை அவர்கள் ஏற்குமாறு எடுத்துச் சொல்ல முடியாதவர்கள், உயிரோடுதான் வாழ்கின்றார்கள் என்றாலும், அவர்கள் இறந்தவர்களுக்கு ஒப்பாகவே கருதப்படுவார்கள். (730)

74. நாடு

நாடு என்பது, ஒரு நல்ல நாட்டின் இயல்புகளையும், சிறப்புகளையும் கூறுதல் எனப்படும்.

**1. தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச்
செல்வரும் சேர்வது நாடு.**

தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்வுஇலாச் செல்வரும், சேர்வது, நாடு.

(பொ-ரை): தவறாது விளையும் விளைநிலங்களும், பொதுநலம் பேணும் சான்றோர்களும், குறைபாடு இல்லாத செல்வர்களும் ஒருங்கு சேர்ந்து இருப்பதே நாடாகும்.

தள்ளா - தவறாது; தப்பாது; குறையாது; **தக்கார்** - பொதுநலம் பேணும் சான்றோர்கள்; **தாழ்வுஇலா** - குறைபாடு இல்லாத; **சேர்வது** - ஒருங்குசேர்ந்து இருப்பது நாடாகும்.

(க-ரை): தவறாத விளையுளும், தக்காரும், குறைபாடு இல்லாத செல்வரும் ஒருங்கே அமைந்திருப்பதுதான், நாடு என்று பெயர் பெறும். (731)

**2. பெரும்பொருளால் பெட்டக்கது ஆகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.**

பெரும் பொருளால், பெட்டக்கது, ஆகி, அருங்கேட்டால், ஆற்ற விளைவது, நாடு.

(பொ-ரை): மிகுந்த பொருள்வளம் உடையதாகவும், பிற நாட்டாரால் விரும்பத்தக்கதாகவும், எந்தவிதமான கேடும் இல்லாததாகவும், மிகுந்த விளைச்சலுடையதாகவும் அமைந்திருப்பதே சிறந்த நாடாகும்.

பெரும்பொருளால் - மிகுந்த பொருள்வளம் உடைய தாகவும்; **பெட்டக்கது ஆகி** - பிற நாட்டாரால் விரும்பத்தக்கதாக; **அருங்கேட்டால்** - எந்தவிதமான கேடும் இல்லாததாகவும்; **ஆற்ற** - மிக்க; **விளைவது** - விளைச்சலையுடையது.

(க-ரை): பெரும்பொருள் உடையதாகவும், பிற நாட்டாரால் விரும்பத்தக்கதாகவும், கேடு இல்லாததாகவும், மிகுந்த விளைச்சலை உடையதாகவும் அமைந்திருப்பதே சிறந்த நாடாகும். (732)

3. பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு இறைஒருங்கு நேர்வது நாடு.

பொறை ஒருங்கு, மேல் வருங்கால், தாங்கி, இறைவற்கு, இறை ஒருங்கு, நேர்வது நாடு.

(பொ-ரை): தான் தாங்கித் தீர வேண்டிய அளவுக்குப் புதிய சுமைகள் தன்னிடம் வந்து சேருமேயானால், அவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு, தன் அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரிக்கட்டண வகைகள் முழுவதையும் செலுத்தும் திறம்படைத்ததே நாடு ஆகும்.

பொறை - சுமை; **மேல்வருங்கால்** - தன்னிடம் வந்து சேரும்போது; **இறை** - நிலவரி போன்ற வரிக்கட்டண வகைகள்; **நேர்வது** - செலுத்தும் திறம் படைத்தது.

(க-ரை): நாடு என்று சொல்லப்படுவது, தாங்க வேண்டிய புதிய சுமைகளையும் தாங்கிக்கொண்டு, அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரிக் கட்டண வகைகளையும் முறைப்படி செலுத்த வேண்டியதாகும். (733)

4. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராது இயல்வது நாடு.

உறுபசியும், ஓவாப் பிணியும், செறு பகையும், சேராது இயல்வது, நாடு.

(பொ-ரை): மிக்க பசியும், நீங்காத நோயும், தாக்கி அழிவு செய்யும் பகையும் ஆகிய இம்மூன்றும் தன்னிடம் வந்து சேராமல், இனிது நடைபெறுவதே நாடாகும்.

உறுபசி - மிக்க பசி; **ஓவாப்பிணி** - நீங்காத நோய்; **செறு பகை** - அழிவு செய்யும் பகை; **இயல்வது** - இனிது நடைபெறுவது.

(க-ரை): மிக்க பசி, நீங்காத நோய், அழிவு செய்யும் பகை ஆகியவை தன்னை நெருங்காமல் இனிமையாக நடைபெறுவதே நாடாகும். (734)

5. பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்துஅலைக்கும் கொல்குறும்பும் இல்லது நாடு.

பல்குழுவும், பாழ் செய்யும், உட்பகையும், வேந்து அலைக்கும், கொல்குறும்பும், இல்லது, நாடு.

(பொ-ரை): மாறுபட்ட கொள்கைகளையுடைய பலவகையான குழுக்களும், உடன் இருந்தே அரசனைக் கெடுக்கும் உட் பகைவர்களும், அரசனைத் துன்புறுத்தும் கொலைத் தொழிலை யுடைய குறுநில மன்னர்களும் இல்லாமலிருப்பதே நாடாகும்.

பாழ்செய்யும் - உடன்இருந்தே கெடுக்கும்; **வேந்து அலைக்கும்** - அரசனைத் துன்புறுத்தும்; **கொல்குறும்பும்** - கொலைத் தொழிலையுடைய குறுநில மன்னர்களும்.

(க-ரை): பல மாறுபட்ட குழுக்களும், உட்பகையும், கொலைத் தொழிலைக்கொண்ட குறுநில மன்னர்களும் இல்லாமலிருப்பதே நாடாகும். (735)

6. கேடுஅறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
நாடுஎன்ப நாட்டின் தலை.

கேடு அறியாக், கெட்ட இடத்தும், வளம் குன்றா, நாடு, நாட்டின் தலை, என்ப.

(பொ-ரை): பகைவரால் கெடுதலை அறியாததாகவும், அப்படியே ஒருகால் கெட்டாலும், தன் வளத்தில் எப்படியும் குறையாததாகவும் இருக்கின்ற நாடே, எல்லா நாடுகளிலும் முதன்மையானதென்று அறிவுடையோர் கூறுவர்.

கேடு அறியா - பகைவரால் கெடுதலை அறியாததாய்; **வளங்குன்றா** - தன் வளத்தில் குறையாததாய்; **தலை** - முதன்மை யானதென்று.

(க-ரை): பகைவரால் கெடுக்க முடியாததாயும், அப்படியே கெடுக்கப்பட்டாலும் தன் வளத்தில் குறையாததாயும் இருக்கும் நாடே நாடுகள் எல்லாவற்றிலும் தலைசிறந்த நாடாகக் கருதப்படும். (736)

7. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்அரணும் நாட்டிற்கு உறுப்பு.

இருபுனலும், வாய்ந்த மலையும், வருபுனலும், வல்அரணும், நாட்டிற்கு உறுப்பு.

(பொ-ரை): நில ஊற்றும், வான்மழையும் ஆகிய இருவகை நீர் வளமும், செழிப்பு வாய்ந்த மலைகளும், அம்மலைகளிலிருந்து பெருகிவரும் ஆற்று நீர்வளமும், வலிமைமிக்க கோட்டையும் ஒரு நாட்டிற்குச் சிறந்த உறுப்புகளாகும்.

இருபுனல் - ஊற்று நீர், மழைநீர் ஆகிய இருவகை நீர்; **வருபுனல்** - பெருகிவரும் ஆற்று நீர் வளம்; **வல் அரண்** - வலிமையான கோட்டை.

(க-ரை): ஊற்று நீர், மழை நீர், மலைகள், ஆற்று நீர், வலிவான கோட்டை ஆகியவை ஒரு நாட்டிற்குச் சிறந்த உறுப்புகளாகும். (737)

8. பிணிஇன்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து.

பிணிஇன்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம், இவ்ஐந்து, நாட்டிற்கு, அணி என்ப.

(பொ-ரை): நோய் இல்லாமை, பொருள் வளம், விளைவு மிகுதி, இன்ப வாழ்வு, நல்ல பாதுகாப்பு ஆகிய இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு தருவனவாகும் என்று அறிவுடையோர் கூறுவர்.

ஏமம் - நல்ல பாதுகாப்பு; **அணி** - அழகு; **என்ப** - என்று அறிவுடையோர் கூறுவர்.

(க-ரை): நோய் இல்லாமை, செல்வம், விளைவு, இன்ப வாழ்வு, நல்ல பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகு தருவனவாகும். (738)

9. நாடுஎன்ப நாடா வளத்தன நாடுஅல்ல
நாட வளந்தரும் நாடு.

நாடா வளத்தன, நாடு என்ப; நாட, வளந்தரும் நாடு, நாடு அல்ல.

(பொ-ரை): முயற்சி செய்து தேடாமலேயே நல்ல வளத்தைத் தரும் நாடுகளே சிறந்த நாடுகள் ஆகும் என்று அறிவுடையோர் கூறுவர். முயற்சி செய்து தேடினால் மட்டுமே வளத்தைத் தரும் நாடுகள், நல்ல நாடுகள் ஆகமாட்டா.

நாடா - முயற்சி செய்து தேடாமலேயே; **நாட** - முயற்சி செய்து தேடினால் மட்டுமே.

(க-ரை): முயற்சி செய்யாமலேயே நல்ல வளத்தைத் தரக்கூடிய நாடுகள்தாம் சிறந்த நாடுகள் ஆகும் என்று சிறப்பித்துச் சொல்லப் படும். (739)

10. ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
வேந்துஅமைவு இல்லாத நாடு.

வேந்து, அமைவு, இல்லாத நாடு, ஆங்கு அமைவு, எய்தியக் கண்ணும், பயம் இன்றே.

(பொ-ரை): அரசனோடு பொருந்தி வராத வாழ்வு இல்லாத நாடானது, கூறப்படும் நற்பண்புகள் எல்லாவற்றையும் அடைந் திருந்தாலும், அவற்றால் பயன் எதும் இல்லாமற் போகும்.

வேந்து அமைவு - அரசனோடு பொருந்தி வராத வாழ்வு; **ஆங்கு** - கூறப்பட்ட நற்பண்புகள் பலவும்; **பயம் இன்றே** - பயன் இல்லை.

(க-ரை): ஒரு நாட்டில் எல்லாவிதமான சிறப்புகள் இருந்தாலும், அந்த நாடு அரசனோடு பொருந்தி வராவிட்டால், பயன் ஏதும் ஏற்படாது. (740)

75. அரண்

அரண் என்பது, நகருக்குப் பாதுகாப்பாக அமையும் கோட்டையின் விளக்கம், அதன் சிறப்பு, அதன் இலக்கணம் ஆகியவைபற்றிக் கூறுதல் எனப்படும்.

**1. ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்.**

ஆற்றுபவர்க்கும், அரண், பொருள், அஞ்சித் தற் போற்று பவர்க்கும், பொருள்.

(பொ-ரை): வலிமையினால் பகைவர் மேல் படையெடுத்துச் செல்பவர்களுக்கும், கோட்டையானது சிறந்த பொருளாகப் பயன்படுவதாகும்; பகைவர்களுக்கு அஞ்சித், தம்மைப் பாதுகாத்துக் கொள்ளப் புகலிடம் புகுபவர்களுக்கும் அது சிறந்த பொருளாகப் பயன்படுவதாகும்.

ஆற்றுபவர் - வலிமையினால் பகைவர் மேல் படையெடுத்துச் செல்லுபவர்கள்; **அஞ்சி** - பகைவர்க்கு அஞ்சி; **தற்போற்றுபவர்** - தம்மைப் பாதுகாத்துக்கொள்ளப் புகலிடம் புகுபவர்கள்; **பொருள்** - கோட்டையானது பயன்படும் பொருளாகும்.

(க-ரை): கோட்டையானது பகைவர்மேல் படையெடுத்துச் செல்லும் அரசன் தனக்குப் பயன்படுவதாகும்; பகைவர்க்கு அஞ்சிப் புகலிடம் புகுபவர்களுக்கும் பயன்படுவதாகும். (741)

**2. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்.**

மணிநீரும், மண்ணும், மலையும், அணி நிழல்காடும், உடையது, அரண்.

(பொ-ரை): ஆழமான நீர் நிறைந்த அகழ், வெட்ட வெளியான பரந்த நிலம், உயர்ந்த மலை, அழகிய குளிர்ந்த நிழல் தரும் அடர்ந்த காடு ஆகிய இந்நான்கினையும் உடையதே அரணாகும்.

மணி நீர் - ஆழமான நீரையுடைய அகழ்; ஆழமான நீர் மணிபோல் நீல நிறமாகத் தோன்றும்; **மண்** - வெட்டவெளியான பரந்த நிலம்; போர்ப்படைகளைக் குவிப்பதற்குத் தேவைப்படும்; **மலை** - உயர்ந்த மலை; உயர்ந்த மலையைப் பகைவர்கள் கடந்து

வருவது கடினம்; **அணி நிழல் காடு** - அழகிய குளிர்ந்த அடர்ந்த காடு; அடர்ந்து விளங்கும் காடு எப்பொழுதும் குளிர்ச்சியையும், அழகையும் தரும்; படைகள் தங்குவதற்குப் பயன்படும்.

(க-ரை): ஆழ்ந்த அகழ், பரந்த நிலம், உயர்ந்த மலை, அடர்ந்த காடு ஆகியவைகளை உடையது அரணாகும். (742)

**3. உயர்வுஅகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவுஅரண் என்றுஉரைக்கும் நூல்.**

உயர்வு, அகலம், திண்மை, அருமை, இந்நான்கின், அமைவு, அரண்என்று, நூல் உரைக்கும்.

(பொ-ரை): நல்ல உயரத்தையும், பரந்த அகலத்தையும், சிறந்த வலிமையையும், பகைவர்கள் நெருங்க முடியாத அருமையையும் நிறைவாக உடையதே கோட்டையாகும் என்று நூலோர் கூறுவர்.

திண்மை - சிறந்த வலிமை; **அருமை** - பகைவர்கள் நெருங்க முடியாத அருமை; **அமைவு** - நிறைவு; **நூல்** - நூலோர்.

(க-ரை): நல்ல உயரம், அகலம், வலிமை, அருமை ஆகியவற்றை ஒருங்கே கொண்டிருப்பதுதான் கோட்டையாகும். (743)

**4. சிறுகாப்பின் பேர்இடத்தது ஆகி உறுபகை
ஊக்கம் அழிப்பது அரண்.**

சிறுகாப்பின், பேர்இடத்தது, ஆகி, உறுபகை, ஊககம், அழிப்பது, அரண்.

(பொ-ரை): பகைவரை எதிர்த்துக் காக்க வேண்டிய இடம் சிறியதாகவும், உள்ளே அகன்ற இடத்தை உடையதாகவும், தன்னை நெருங்கும் பகைவரது மனஎழுச்சியை அழிப்பதாகவும் உள்ளதே கோட்டை ஆகும்.

சிறுகாப்பின் - பகைவரை எதிர்த்துக் காக்க வேண்டிய இடம் சிறியதாகவும்; **பேரிடத்ததாகி** - உள்ளே அகன்ற இடத்தை உடையதாகவும்; **உறுபகை** - தன்னை நெருங்கும் பகைவர்; **ஊக்கம்** - மன எழுச்சியை.

(க-ரை): பகைவரை எதிர்த்துக் காக்க வேண்டிய இடம் சிறியதாகவும், உள்இடம் பெரியதாகவும், பகைவரால் அழிக்க முடியாததாகவும் இருப்பது கோட்டை ஆகும். (744)

**5. கொளற்குஅரிதாய்க் கொண்டகூழ்த்து ஆகி அகத்தார்
நிலைக்குஎளிதாம் நீரது அரண்.**

கொளற்கு அரிதாய்க், கொண்டகூழ்த்து ஆகி, அகத்தார் நிலைக்கு, எளிதாம், நீரது, அரண்.

(பொ-ரை): பகைவர்கள் கைப்பற்றுவதற்கு அரியதாகவும், பல்வகை உணவுப்பொருள்களையும் தன்னகத்தே கொண்டதாகவும், உள்ளிருந்து போர்புரிவோர் எளிதாகப் போர்புரிவதற்கு ஏற்ற தன்மையை உடையதாகவும் அமைந்திருப்பதே கோட்டையாகும்.

கொளற்கு - பகைவரால் கைப்பற்றுவதற்கு; **கொண்ட கூழ்த்து** - பல்வகை உணவுப் பொருள்களையும் தன்னகத்தே கொண்டதாகவும்; **அகத்தார்** - உள்ளிருந்து போர்புரிவோர்; **நிலைக்கு எளிதாம்** - எளிதாகப் போரிடுவதற்கு ஏற்ற.

(க-ரை): பகைவர்கள் பிடித்தற்கு அரியதாகவும், பல்வகை உணவுப் பொருள்களையும் கொண்டதாகவும், உள்ளிருந்து போர்புரிவதற்கு ஏற்ற தன்மையுடையதாகவும் கோட்டையானது இருக்க வேண்டும். (745)

**6. எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துஉதவும்
நல்லாள் உடையது அரண்.**

எல்லாப் பொருளும், உடைத்தாய், இடத்து உதவும், நல்ஆள், உடையது, அரண்.

(பொ-ரை): அகத்தில் உள்ளார்க்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் உடையதாகவும், புறத்தேயுள்ள பகைவரால் போர் நெருக்கடி ஏற்படும்போது, அதனை எதிர்த்து உதவவல்ல நல்ல வீரர்களை உடையதாகவும் இருப்பதே கோட்டையாகும்.

எல்லாப் பொருளும் - அகத்தில் உள்ளவர்க்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும்; **இடத்து** - பகைவரால் போர் நெருக்கடி ஏற்படும்போது; **நல்லாள்** - நல்ல வீரர்களை.

(க-ரை): தன்னகத்தே எல்லாப் பொருள்களையும் உடையதாகவும், போர் ஏற்படும்போது, தன்னைக் காக்கவல்ல நல்ல வீரர்களை உடையதாகவும் இருப்பதே கோட்டையாகும். (746)

**7. முற்றியும் முற்றாது எறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற்கு அரியது அரண்.**

முற்றியும், முற்றாது, எறிந்தும், அறைப்படுத்தும், பற்றற்கு, அரியது, அரண்.

(பொ-ரை): பகைவர்கள் முற்றுகையிட்டுச் சூழ்ந்தும், அப்படி முற்றுகையிடாமலேயே நேரிடையாகப் போர்புரிந்தும், வஞ்சனை யால் கீழறையுண்டாக்கியும் கைப்பற்றுவதற்கு இயலாமல் இருப்பதே கோட்டையாகும்.

முற்றியும் - முற்றுகையிட்டுச் சூழ்ந்தும்; **முற்றாது எறிந்தும்** - முற்றுகையிடாமல் நேரிடையாகப் போர் புரிந்தும்; **அறைப்படுத்தும்** - வஞ்சனையால் கீழறை உண்டாக்கியும்; **பற்றற்கு** - கைப்பற்றுவதற்கு.

(க-ரை): பகைவர்கள் முற்றுகையிட்டாலும், முற்றுகை யிடாமல் போரிட்டாலும், வஞ்சனையால் எதிர்த்தாலும் அவர்களால் கைப்பற்ற முடியாமல் இருப்பதே கோட்டையாகும். (747)

**8. முற்றுஆற்றி முற்றி யவரையும் பற்றுஆற்றிப்
பற்றியார் வெல்வது அரண்.**

முற்று ஆற்றி, முற்றியவரையும், பற்று ஆற்றிப், பற்றி யார், வெல்வது, அரண்.

(பொ-ரை): படைப் பெருமையால், முற்றுகையிட வல்லவராகி முற்றுகை இட்டவரையும், தன்னைப்பற்றி நின்று காக்கவல்ல அகத்தோர்கள், தாம் பற்றி நின்ற இடத்தைவிடாமல், நின்று போர் செய்து வெல்லுவதற்கு ஏற்றது கோட்டையாகும்.

முற்றுஆற்றி - படைப்பெருமையால் முற்றுகையிட வல்லவராகி; **முற்றியவர்** - முற்றுகை இட்டவர்; **பற்றியார் பற்று ஆற்றி** - அகத்தார் தாம்பற்றி நின்ற இடத்தை விடாமல் பற்றி நின்று.

(க-ரை): பகைவர்கள் முற்றுகையிட்ட போதிலும், அகத்தே நிற்பவர்கள், தாம் நின்ற இடத்தில் இருந்துகொண்டே, போர் செய்து, பகைவர்களை அழிக்க ஏற்றதாக அமைந்திருப்பது கோட்டையாகும். (748)

**9. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறுஎய்தி மாண்டது அரண்.**

முனைமுகத்து, மாற்றலர், சாய, வினைமுகத்து, வீறு எய்தி, மாண்டது, அரண்.

(பொ-ரை): போரின் தொடக்கத்திலேயே, பகைவர்கள் அழியும்படியாக, உள்ளிருப்போர் போர் செய்யும் திறன்களினால், தனிச்சிறப்புப் பெற்று விளங்கும் பெருமையுடையது கோட்டையாகும்.

முனைமுகத்து - போரின் தொடக்கத்திலேயே; **மாற்றலர்** - பகைவர்கள்; **சாய** - அழியும்படியாக; **வினைமுகத்து** உள்ளிருப்போர் போர் செய்யும் திறன்கள்; **வீறுஎய்தி** தனிச்சிறப்புப் பெற்று; **மாண்டது** - பெருமையுடையது.

(க-ரை): போரின் தொடக்கத்திலேயே பகைவர்கள் அழியும் படியாக, உள்ளிருப்போர் போர் செய்யும் திறமைகளினால், தனிச்சிறப்புப் பெற்று விளங்குவது கோட்டையாகும். (749)

10. எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்.

எனைமாட்சித்து, ஆகியக் கண்ணும், வினைமாட்சி, இல்லார்கண், அரண், இல்லது.

(பொ-ரை): ஒரு கோட்டையானது, எவ்வளவு சிறப்புகளை உடையதாக இருந்தபோதிலும், உள்ளிருப்போர், போர்த் திறமை இல்லாதவர்களாக இருந்தால், அவர்களுக்கு அந்தக் கோட்டை பயனில்லாததாகவே அமையும்.

எனைமாட்சித்து - எவ்வளவு சிறப்புகளை உடையதாக இருந்த போதிலும்; **வினைமாட்சி** - உள்ளிருப்போர் போர்த் திறமை.

(க-ரை): கோட்டையானது, எவ்வளவு சிறப்புகளை உடையதாக இருந்தபோதிலும், உள்ளிருந்து போரிடும் வீரர்கள் திறமையற்றவர்களாக இருந்தால், அவர்களுக்கு அந்தக் கோட்டையினால் எந்தப் பயனும் ஏற்படாது. (750)

76. பொருள் செயல்வகை

பொருள் செயல்வகை என்பது, பொருளின் தன்மையையும், அதன் திறத்தையும், அதன் சிறப்பையும், அதனை ஈட்டும் முறையையும் கூறுதல் எனப்படும்.

1. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள்அல்லது இல்லை பொருள்.

பொருள் அல்லவரைப், பொருளாகச் செய்யும், பொருள் அல்லது, பொருள், இல்லை.

(பொ-ரை): ஒரு பொருளாக மதிக்கத்தகாதவர்களையும், ஒரு பொருளாக மதிக்கத்தக்கவராகச் செய்யக்கூடியது, பொருள் அல்லாமல், சிறப்புடைய பொருள் என்று வேறொன்றும் இல்லை.

பொருளல்லவரை - ஒரு பொருளாக மதிக்கத்தகாதவர்களை; **பொருளாகச் செய்யும்** - மதிக்கத்தக்கவராகச் செய்யக்கூடிய.

(க-ரை): மதிக்கத்தகாதவரையும், மதிக்கத்தக்கவராக ஆக்குவது பொருளேயாகும்; அப்படிச் செய்யக்கூடியது பொருளைத்தவிர, வேறு ஒன்றும் இல்லை. (751)

2. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

இல்லாரை, எல்லாரும், எள்ளுவர்; செல்வரை, எல்லாரும், சிறப்புச் செய்வர்.

(பொ-ரை): நல்லவர்களாக இருந்தாலும், பொருளில்லாத வறியவர்களை எல்லோரும் இகழ்வார்கள்; தீயவர்களாக இருந்தாலும், பொருளையுடைய செல்வர்களை, எல்லோரும் போற்றிப் புகழ்வார்கள். (இது இயல்பான உலக மக்களின் இயற்கைப் பண்பாகும்.)

இல்லாரை - பொருளில்லாத வறியவர்களை; **எள்ளுவர்** - இகழ்வர்; **செல்வரை** - பொருளுடைய செல்வர்களை; **செய்வர் சிறப்பு** - போற்றுவார்கள்.

(க-ரை): பொதுவாக, உலகிலுள்ள இயல்பான மக்கள், பொருளில்லாத வறியவர்களை இகழவே செய்வார்கள்; பொருள் மிகுந்த செல்வர்களைப் போற்றிப் புகழவே செய்வார்கள். (752)

**3. பொருள்என்னும் பொய்யா விளக்கம் இருள்அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.**

பொருள் என்னும், பொய்யா விளக்கம், எண்ணிய, தேயத்துச் சென்று, இருள் அறுக்கும்.

(பொ-ரை): செல்வம் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் தூங்கா விளக்கானது, தன்னை உடையவர்கள் நினைத்த இடத்திற்குச் சென்று, அங்கு ஒருவன் தனக்கு உள்ள இடுக்கண்களை அழிக்கும்.

பொருள் - செல்வம்; **பொய்யா விளக்கம்** - தூங்கா விளக்கு; **எண்ணிய தேயத்து** - ஒருவன் தான் நினைத்த இடத்திற்கு; **இருள்** - இடுக்கண்களை; **அறுக்கும்** - அழிக்கும்.

(க-ரை): ஒருவன் செல்வத்தை உடையவனாக இருப்பானே யானால், அவன் எந்த ஓர் இடத்திற்குச் சென்றாலும், அதனைக் கொண்டு அவனது துன்பங்களைப் போக்கிக் கொள்ள முடியும். (753)

**4. அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதுஇன்றி வந்த பொருள்.**

திறன் அறிந்து, தீது இன்றி, வந்த பொருள், அறன் ஈனும், இன்பமும் ஈனும்.

(பொ-ரை): பொருளை ஈட்டுவதற்குரிய வழி அறிந்து, யாரொருவருக்கும் கேடு விளைவிக்காமல், நல்ல வழியில் தேடிய பொருளானது, அறத்தையும் கொடுக்கும்; இன்பத்தையும் கொடுக்கும்.

திறன் அறிந்து - பொருளை ஈட்டுவதற்குரிய வழி அறிந்து; **தீதுஇன்றி** - யாரொருவருக்கும் கேடு விளைவிக்காமல்; **வந்த பொருள்** - தேடியதன்மூலம் வந்த பொருள்.

(க-ரை): யாரொருவருக்கும் கேடு விளைவிக்காமல், நல்ல வழியில் ஈட்டிய செல்வமானது, ஒருவருக்கு அறத்தையும் கொடுக்கும்; இன்பத்தையும் கொடுக்கும். (754)

**5. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.**

அருளொடும், அன்பொடும், வாராப், பொருள்ஆக்கம், புல்லார், புரளவிடல்.

(பொ-ரை): அருள்நெறியின் மூலமும், அன்புநெறியின் மூலமும் வந்தடையாத செல்வக் குவியலை ஏற்று ஒருவர் இன்புறாமல், அது தீமையானது என்று எண்ணி, அவர் அதனை நீக்கிவிட வேண்டும்.

பொருளாக்கம் - செல்வக் குவியல்; **புல்லார்** - ஏற்று இன்புறாமல்; **புரளவிடல்** - நீக்கிவிட வேண்டும்.

(க-ரை): அருளொடும், அன்பொடும் பெறப்படாத செல்வத்தை, ஒருவர் ஏற்று மகிழாமல், அதனை நீக்கிவிட வேண்டும். (755)

6. உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

உறுபொருளும், உல்குபொருளும், தன் ஒன்னார்த், தெறு பொருளும், வேந்தன் பொருள்.

(பொ-ரை): முறைப்படி அரசுக்கு வந்து சேரும் இறைப் பொருளும், சுங்க வரியாக வரும் பொருளும், பகையரசர்களை வெல்லுவதன் மூலம் திறையாகக் கொள்ளும் பொருளும் அரசனுக்குரிய பொருள்களாகும்.

உறுபொருள் - முறையாக அரசுக்கு வந்து சேரும் இறைப்பொருளும்; **உல்கு** - சுங்கவரியாக; **ஒன்னார்** - பகைவர்களை; **தெறுபொருள்** - வெல்லுவதன் மூலம் திறையாகக் கொள்ளும் பொருள்.

(க-ரை): முறைப்படி வரிகள் மூலம் வரும் பொருள், சுங்க வரிகள் மூலம் வரும் பொருள், பகைவர் செலுத்தும் திறைப்பொருள் ஆகியவை அரசனுக்குரிய பொருள்களாகும். (756)

7. அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு.

அருள் என்னும், அன்பு ஈன்குழவி, பொருள் என்னும், செல்வச் செவிலியால், உண்டு.

(பொ-ரை): அன்பினால் பெறப்படும் அருள் என்னும் குழந்தையானது, பொருள் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் செல்வமாகிய செவிலித் தாயால் வளர்வதாகும்.

அன்புஈன் - அன்பினால் பெறப்படும்; தொடர்பு பற்றிச் செல்வது அன்பு; தொடர்பு பற்றாது செல்வது அருள்; **குழவி** - குழந்தை; **செவிலியால்** - செவிலித் தாயால்.

(க-ரை): அன்பினால் பெற்றெடுக்கப்படும் அருள் என்னும் குழந்தை, பொருள் என்னும் செவிலித்தாயால் வளர்வதாகும்.(757)

8. குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்துஒன்று உண்டாகச் செய்வான் வினை.

தன்கைத்து, ஒன்று உண்டாக, வினை செய்வான், குன்று ஏறியானை, போர் கண்டற்று, ஆல்.

(பொ-ரை): தன் கையில் பொருளை வைத்துக் கொண்டு ஒருவன் ஒரு வினையைச் செய்தல் என்பது, மலைக்குன்றின் மேல் ஏறி ஒளிந்து நிற்கும் எதிரியை, நாற்புறமும் சூழ்ந்து நின்று, எதிர்த்துப் போரில் எளிதில் வெல்லுவது போன்றதாகும்.

தன்கைத்து ஒன்று உண்டாக - தன்கையிலே பொருளை வைத்துக்கொண்டு; **குன்று ஏறியானை** - மலைக்குன்றின் மேல் ஏறி ஒளிந்து நிற்பவனை; ஏறியான் என்பது,தேறியான், பற்றியான், முற்றியான், இயற்றியான், ஆற்றியான் போன்ற சொல்; **கண்டற்றால்** - நாற்புறமும் சூழ்ந்து நின்று போரில் வெல்லுவது போன்றதாகும்.

(க-ரை): தன் கையில் பொருளை வைத்துக்கொண்டு, ஒருவன் ஒரு தொழிலைச் செய்தல் என்பது, மலைக்குன்றின் மேல் ஏறி ஒளிந்து நிற்கும் எதிரியை எளிதில் போரில் வெல்லுவது போன்றதாகும். (758)

9. செய்க பொருளைச் செறுநர் செருக்குஅறுக்கும் எஃகுஅதனிற் கூரியது இல்.

பொருளைச் செய்க; செறுநர், செருக்கு அறுக்கும் எஃகு, அதனில், கூரியது, இல்.

(பொ-ரை): சிறப்பு வேண்டுவோர், பொருளை ஈட்ட வேண்டும்; பகைவர்களின் செருக்கை அழிக்கும் படைக்கலம், அப்பொருளைப் போலக் கூர்மையுடையது வேறொன்றும் இல்லை.

செறுநர் - பகைவர்; **எஃகு** - படைக்கலம்; **கூரியது** - கூர்மையுடையது.

(க-ரை): தமக்குச் சிறப்பு வேண்டுவோர் பொருளை ஈட்ட வேண்டும்; பகைவரின் செருக்கை அழிக்கும் படைக்கலம்

அதுவேயாகும்; அதனைப் போலக் கூர்மையான படைக்கலம் வேறொன்றும் இல்லை. (759)

**10. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.**

ஒண்பொருள் காழ்ப்ப, இயற்றியார்க்கு, ஏனை இரண்டும், ஒருங்கு, எண் பொருள்.

(பொ-ரை): நன்னெறியில் வந்த பொருளை மிகுதியாக ஈட்டியவர்களுக்கு, மற்றைய அறமும், இன்பமுமாகிய இரண்டும் ஒரு சேர எளிதாக வந்து சேரும் பொருள்களாகத் திகழும்.

ஒண் பொருள் - நன்னெறியில் வந்த பொருள்; **காழ்ப்ப** - மிகுதியாக; **இயற்றியார்க்கு** - ஈட்டியவர்களுக்கு; **எண் பொருள்** - எளிமையாக வந்தடையும் பொருள்கள்.

(க-ரை): நல்ல வழியில் மிகுதியான பொருளை ஈட்டியவர் களுக்கு, அறமும், இன்பமும் எளிமையாக வந்து சேரும் பொருள்களாகத் திகழும். (760)

77. படைமாட்சி

படைமாட்சி என்பது, போர்ப்படையின் தன்மை, அதன் சிறப்பு, அதனால் ஏற்படும் நன்மை ஆகியவை பற்றிக் கூறுதல் எனப்படும்.

**1. உறுப்புஅமைந்து ஊறுஅஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை.**

உறுப்பு அமைந்து, ஊறு அஞ்சா, வெல்படை, வேந்தன், வெறுக்கையுள், எல்லாம், தலை.

(பொ-ரை): நால்வகைப் படைக்குரிய உறுப்புகளால் நிறைந்திருந்து, போரின்கண் உண்டாகும் துன்பத்திற்கு அஞ்சாது நின்று, பகைவர்களை வெல்லும் படையானது, அரசனுடைய செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலையாய செல்வமாகும்.

உறுப்பு அமைந்து - நால்வகைப் படைக்குரிய உறுப்புகளால் நிறைந்திருந்து; **ஊறு அஞ்சாது** - போரின்கண் ஏற்படும் துன்பத்திற்கு அஞ்சாது; **வெல்படை** - பகைவர்களை வெல்லும் படை; **வெறுக்கையுள் எல்லாம்** - செல்வங்கள் எல்லாவற்றுள்ளும்.

(க-ரை): நால்வகைப் படைக்குரிய உறுப்புகளால் அமைந்து, போர்க்களத்தில் துன்பம் உறுவதற்கு அஞ்சாமல், பகைவர்களை வெல்லும் திறன்கொண்ட படையானது, அரசனுடைய மிகச்சிறந்த செல்வமாகும். (761)

**2. உலைவிடத்து ஊறுஅஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக்கு அல்லால் அரிது.**

உலைவிடத்து, ஊறு அஞ்சா, வன்கண், தொலைவிடத்துத், தொல்படைக்கு அல்லால், அரிது.

(பொ-ரை): தனக்கு வலிமை குன்றியபோதும், போரில் அழிவு வந்துவிட்டால் இடையூறுகளுக்கு அஞ்சாது போர் செய்யும் வீரம், தொன்றுதொட்டு வரும் மூலப்படைக்கு அல்லாமல், பிற படைகளுக்கு உண்டாவது அரிதாகும்.

தொலைவிடத்து - தனக்கு வலிமை குன்றியபோதும்; **தொலைதல்** - போரில் அழிந்து படை சுருங்குதல்; **ஊறு** - துன்பம் உறுதல்; காயம்படுதல்; **வன்கண்** - வீரம்; **தொல்படை** -

மூலப்படை; மூலப்படை - வீரன் மகன் வீரனாக வரும் படை; மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப் படை, பகைப்படை என்று படைகள் ஆறு வகைகளாகச் சொல்லப் படும். அவற்றுள், மூலப்படையே சிறப்புடையதாகும். கூலிப்படை - போர்க் காலத்தில் மட்டும் கூலிக்காகச் சேர்க்கும்படை; காட்டுப்படை - காட்டு விலங்குகளையும், காட்டு மறவர்களையும் கொண்ட படை; பகைப்படை - பகைவரிடமிருந்து பிரிந்து வரும் படை.

(க-ரை): தான் அளவில் குறைந்து, போரில் கேடு வந்த போதிலும், போர் செய்ய அஞ்சாது வீரத்தை நிலைநாட்டும் தன்மை, அரசனது மூலப்படைக்கு மட்டுமே உண்டு. (762)

3. ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.

எலிப்பகை, ஒலித்தக்கால், நாகம், என்னாம்? உயிர்ப்பக் கெடும்.

(பொ-ரை): எலிகள் எல்லாம் பகை மிகுந்து ஒன்று திரண்டு கடல்போல ஒலித்து ஓசையிட்டாலும், நாகப் பாம்புக்கு என்ன துன்பம் ஏற்படும்? ஒன்றும் ஏற்படாது! அந்நாகப்பாம்பு மூச்சுவிட்ட அளவிலேயே, அவ்எலிகளெல்லாம் கெட்டழிந்து போய்விடும்.

எலிப்பகை - எலிகள் எல்லாம் பகை மிகுந்து; **உவரி** - கடல் போன்று; **ஒலித்தக்கால்** - ஒலித்து ஓசையிட்டாலும்; **என்னாம்** - நாகப்பாம்புக்கு என்ன துன்பம் ஏற்படும்? **உயிர்ப்ப** - மூச்சுவிட; **கெடும்** - கெட்டொழியும். இது பிறிது மொழிதல் அணி.

(க-ரை): எலிகள் பல கடல் போல ஒன்று திரண்டு ஓசையிட்டாலும், நாகப்பாம்பு அதற்காக அஞ்சாது. ஆனால், நாகப்பாம்பு மூச்சுவிடுமேயானால், எலிக்கூட்டம் ஒரேயடியாகக் கெட்டழிந்து போய்விடும்.

வீரமில்லாதவர்கள் பலர் திரண்டு எவ்வளவு கூச்சலிட்டாலும், அதற்கு வீரன் அஞ்சான்; வீரன் வெகுண்டெழுவானேயானால், வீரமில்லாதவர்கள் அனைவரும் ஓடி ஒளிவர். (763)

4. அழிவின்று அறைபோகாது ஆகி வழிவந்த
வன்கண் அதுவே படை.

அழிவுஇன்று, அறை போகாது, ஆகி, வழிவந்த, வன்கண் அதுவே, படை.

(பொ-ரை): போரின்கண் அழிவு ஏற்படாததாகவும், பகைவரால் வஞ்சித்துப் பிரிக்க முடியாததாகவும் தொன்றுதொட்டு வருகின்ற வீரமுமுடையதே சிறந்த படையாகும்.

அழிவின்று - போரின்கண் அழிவு இல்லாததாக; **அறை போகாது** - பகைவரால் வஞ்சித்துப் பிரிக்க முடியாததாகவும்; **வழிவந்த** - தொன்றுதொட்டு வருகின்ற; **வன்கண்** - வீரமுடையது.

(க-ரை): போர்முனையில் அழிவுபடாததாய்ப் பகைவரின் வஞ்சனையால் பிரிக்க முடியாததாய்த் தொன்றுதொட்டு வீரமுமுடையதாக இருந்துவருவதே சிறந்த படையாகும். (764)

**5. கூற்றுஉடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை.**

கூற்று, உடன்று, மேல்வரினும், கூடி எதிர்நிற்கும், ஆற்றல் அதுவே, படை.

(பொ-ரை): சாவே உருக்கொண்டு வெகுண்டு எதிர்த்துப் போர்புரிய வந்தாலும், ஒன்றாகத் திரண்டு எதிர்நின்று போர் செய்யும் வல்லமையுடையதே படையாகும்.

கூற்று - உடலையும், உயிரையும் கூறுபடுத்தும் சாவைக் கூற்று என்றும் அல்லது கூற்றுவன் என்றும் உயிருடையது போல் கூறுதல் என்பது நூல் மரபாகும்; **ஆற்றலதுவே** - வல்லமையுடையதே.

(க-ரை): சாவே உருக்கொண்டு வெகுண்டு எழுந்து எதிர்த்துப் போர்புரிய வந்தாலும், துணிவோடு எதிர்த்து நின்று போரிட வல்லது சிறந்த படையாகும். (765)

**6. மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.**

மறம், மானம், மாண்ட வழிச்செலவு, தேற்றம், என நான்கே, படைக்கு, ஏமம்.

(பொ-ரை): வீரமும், மானமும், புகழ்பெற்ற வீரர்களான முன்னோர்கள் சென்ற நல்வழியில் நடத்தலும், அரசனுடைய நம்பிக்கையைப் பெறுதலும் ஆகிய நான்கு பண்புகளுமே, ஒரு படைக்குப் பாதுகாப்பாய் அமைந்தனவாகும்.

மறம் - வீரம்; **மாண்ட வழிச்செலவு** - புகழ்பெற்ற வீரர்களான முன்னோர்கள் சென்ற நல்வழியில் நடத்தல்; **தேற்றம்** - அரசனுடைய நம்பிக்கையைப் பெறுதல்; **ஏமம்** - பாதுகாப்பு.

(க-ரை): வீரம், மானம், புகழ்பெற்ற வீரர்கள் சென்ற வழியில் நடத்தல், அரசனின் நம்பிக்கையைப் பெறுதல் ஆகிய நான்கும் ஒரு படையைப் பாதுகாக்கும் சிறந்த பண்புகளாகும். (766)

7. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து.

தலைவந்த, போர் தாங்கும், தன்மை அறிந்து, தார் தாங்கிச், செல்வது, தானை.

(பொ-ரை): தன்னை எதிர்த்து வந்த பகைவரின் போரைத் தாங்கி, அதனை வெல்லும் தன்மையை அறிந்து, அவருடைய முன்னணிப்படை தன்மேல் வராமல் தடுத்து, அதனை எதிர்த்துப் போரிடச் செல்வதே படையாகும்.

தலைவந்த - தன்னை எதிர்த்து வந்த பகைவரின்; **போர் தாங்கும்** - போரைத் தாங்கி; **தன்மை அறிந்து** - அதனை வெல்லும் தன்மை அறிந்து; **தார்தாங்கி** - முன்னணிப்படை (தூசிப்படை) தன் மேல் வராது தடுத்து; **செல்வது** - அதனை எதிர்த்துப் போரிடச் செல்வது.

(க-ரை): பகைவரின் போரை விலக்குகின்ற வழிமுறையினை அறிந்துகொண்டு, அவரது படைத்தாக்குதல், தன் மேல் வராமல் தடுத்துக்கொண்டு, பின்னர், தான் அப்படையின்மேல் போரிடச் செல்வது சிறப்புக்குரிய படையாகும். (767)

8. அடல்தகையும் ஆற்றலும் இல்எனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும்.

தானை, அடல்தகையும், ஆற்றலும், இல் எனினும், படைத் தகையால், பாடு, பெறும்.

(பொ-ரை): படையானது, போர் செய்கின்ற சிறந்த வீரத்தையும், பகைவர் தன்மேல் படையெடுத்து வந்தால் எதிர்த்து நிற்கும் வலிமையையும் பெற்றிருக்கவில்லை என்றாலும், தனது தோற்றப் பொலிவினாலேயே பெருமையினைப் பெறும்.

தானை - படையானது; **அடல்தகையும்** - போர் செய்கின்ற வீரத்தையும்; **ஆற்றலும்** - பகைவர் படையெடுத்து வந்தால், எதிர்த்து நிற்கும் வலிமையையும்; **பாடுபெறும்** - பெருமையினைப் பெறும்.

(க-ரை): படையானது போர் செய்கின்ற வீரத்தையும், பகைவரை எதிர்த்து நிற்கும் வலிமையையும் கொண்டிருக்கவில்லை

என்றாலும், அது, தனது தோற்றப் பொலிவினாலேயே பெருமை எய்தும். (768)

**9. சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை.**

சிறுமையும், செல்லாத் துனியும், வறுமையும், இல்லாயின், படை, வெல்லும்.

(பொ-ரை): தன் அளவில் குறைதலும், அரசனிடம் நீங்காத வெறுப்பும், வறுமையும் இல்லாதிருக்குமானால், படையானது பகைவரை வெல்லும் ஆற்றலுடையதாகும்.

சிறுமையும் - அளவில் குறைதலும்; **செல்லாத்துனியும்** - அரசனிடம் நீங்காத வெறுப்பும்.

(க-ரை): தன் அளவில் குறைதலும், அரசனிடம் வெறுப்பும், வறுமையும் இல்லாதிருந்தால், அந்தப் படையானது பகைவரை வென்றுவிடும். (769)

**10. நிலைமக்கள் சால உடைத்துஎனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்.**

நிலைமக்கள், சால உடைத்து, எனினும், தலைமக்கள், இல்வழி, தானை இல்.

(பொ-ரை): போரில் நிலைத்து நின்று போரிடும் வீரர்களை மிகுதியாக உடையது என்றாலும், தலைமை தாங்கி நடத்தும் படைத்தலைவர்கள் இல்லாவிட்டால் படையானது நிலைபெறாது.

நிலைமக்கள் - போரில் நிலைத்து நின்று போரிடும் வீரர்களை; **சால** - மிகுதியாக; **தலைமக்கள்** - தலைமை தாங்கும் படைத்தலைவர்கள்; **இல்வழி** - இல்லாவிட்டால்; **தானைஇல்** - படையானது நிலைபெறாது.

(க-ரை): போரில் நிலைத்து நிற்கும் வீரர்களை மிகுதியாகப் பெற்றிருந்தாலும், தலைமை தாங்கும் படைத்தலைவர்கள் இல்லாவிட்டால், படையானது நிலைத்து நிற்காது. (770)

78. படைச் செருக்கு

படைச்செருக்கு என்பது, படையினது வீரமிகுதியினைக் கூறுதல் எனப்படும்.

**1. என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்ஐ
முன்நின்று கல்நின் றவர்.**

தெவ்விர், என் ஐ, முன் நின்று, கல் நின்றவர், பலர்; என் ஐ முன், நில்லன் மின்.

(பொ-ரை): பகைவர்களே! என்னுடைய தலைவன் எதிரே நின்று போர் செய்து தோற்று வீழ்ந்து நடு கல்லாயினார் பலராவார்கள்; ஆதலால், என்னுடைய தலைவன் எதிரே நிற்காதீர்கள்; நீங்கிவிடுவீர்களாக!

தெவ்விர் - பகைவர்களே; **ஐ** - தலைவன்; **நின்று** - நின்று போர் செய்து; **கல் நின்றவர்** - நடு கல்லாயினார்.

(க-ரை): பகைவர்களே! என் தலைவனை எதிர்த்து நின்று, இறந்துபோய், நடு கல்லாய் நின்றவர்கள் பலராவார்கள். ஆதலால், என் தலைவன் முன் போர் செய்யாது நீங்குவீர்களாக! (771)

**2. கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.**

கானமுயல், எய்த அம்பினில், யானை, பிழைத்த, வேல் ஏந்தல், இனிது.

(பொ-ரை): காட்டின்கண் ஓடும் முயலைக் குறி தவறாமல் எய்யும் அம்பைக் காட்டிலும், வெட்டவெளியில் நின்ற யானையின் மீது குறி தவறும்படி வீசினாலும், அப்படிப்பட்ட வேலை ஏந்துதலே இனியதாகும்.

கானமுயல் - காட்டின்கண் ஓடும் முயல்; **எய்த அம்பினில்** - குறி தவறாமல் எய்யும் அம்பைக் காட்டிலும்; **பிழைத்த வேல்** - குறி தவறும்படி வீசிய வேல்; பிறிதுமொழிதல் அணி.

(க-ரை): முயலின்மீது தப்பாது வீசுகின்ற அம்பைக்காட்டிலும், யானையின் மீது வீசிய வேல் தப்பியது என்றாலும், அப்படிப்பட்ட வேலை ஏந்துதல் சிறந்ததாகும்; எதிர்த்து நிற்கும் வீரப்படையுடன்

போரிட வேண்டுமேயொழிய, தோற்றோடுகின்ற படையைத் துரத்துதல், வீரர்க்கு அழகன்று. (772)

3. பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றுஅதன் எஃகு.

தறுகண், பேராண்மை, என்ப; ஒன்று உற்றக்கால், ஊராண்மை, மற்றுஅதன், எஃகு.

(பொ-ரை): பகைவரைக் கண்ணோடாது எதிர்க்கும் வீரத்தை, மிக்க ஆண்மையாகும் என்று உயர்ந்தோர் கூறுவார்கள்; பகைவர்க்கு ஒரு தாழ்வு நேரிடும்போது, கண்ணோடி அத்தாழ்வு தீர உதவி செய்தலை, அந்தப் பேராண்மையின் கூர்மை என்று சொல்லுவார்கள்.

தறுகண் - பகைவரை எதிர்க்கும் வீரத்தை; **ஒன்று உற்றக்கால்** - பகைவர்க்கு ஒரு தாழ்வு நேரிடும்போது; **ஊராண்மை** - கண்ணோடி உதவி செய்தல்; **எஃகு** - கூர்மை.

(க-ரை): பகைவரை ஒருவர் எதிர்க்கும் வீரத்தைப் பேராண்மை என்பர்; பகைவர்க்குத் தாழ்வு நேரும்போது இரக்கங் காட்டி உதவி செய்தலைப் பெரும் பேராண்மை என்பர். (773)

4. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

கைவேல், களிற்றொடு, போக்கி, வருபவன், மெய்வேல், பறியா, நகும்.

(பொ-ரை): தன் கையிலிருந்த வேலினைத் தன்னை எதிர்த்து வந்த யானையின்மேல் எறிந்துவிட்டு, வேறு வேலைத் தேடி வருகின்ற நிலையில், வீரன் தன் மார்பில் பாய்ந்திருக்கும் வேலைப் பறித்தெடுத்து, அப்பொழுது அது கிடைத்ததற்காகப் பெரிதும் மகிழ்வான்.

கைவேல் - கையிலிருந்த வேல்; **களிற்றொடு** - தன்னை எதிர்த்து வந்த யானை மீது; **போக்கி** - எறிந்துவிட்டு; **மெய்வேல்** - தன் மார்பில் பாய்ந்திருக்கும் வேலைப் பார்த்து; **பறியா நகும்** - பறித்தெடுத்து மகிழ்வான்.

(க-ரை): தன் கையிலிருந்த வேலினை யானையின் மேல் எறிந்துவிட்டு, வேறு வேல் தேடுகிற வீரன், தன் மார்பிலேயே வேல் பாய்ந்திருப்பதைப் பார்த்து மகிழ்ந்து, அதனைப் பறித்து எடுத்துக் கொண்டு பயன்படுத்துவான். (774)

5. விழித்தகண் வேல்கொண்டு எறிய அழித்துஇமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு.

விழித்தகண், வேல்கொண்டு எறிய, அழித்து, இமைப்பின், வன்கணவர்க்கு, ஓட்டு அன்றோ?

(பொ-ரை): பகைவரை வெகுண்டு நோக்கிய தம் கண்கள், அப்பகைவர் வேலினைக்கொண்டு எதிர்த்து எறியும் போது, அதற்கு அஞ்சி மூடித்திறக்குமேயானால், அதுவே, ஆண்மை நிறைந்த வீரர்க்கும் புறங்கொடுத்தோடுவதைப் போன்றதாகும்.

விழித்த கண் - பகைவரை வெகுண்டு நோக்கிய கண்கள்; **அழித்து இமைப்பின்** - மூடித் திறக்குமாயின்; **வன்கணவர்க்கு** - ஆண்மை நிறைந்த வீரர்க்கு; **ஓட்டு அன்றோ** - புறங்கொடுத்து ஓடுதலோடு ஒக்கும் அல்லவா?

(க-ரை): பகைவர்கள் வேலினைக்கொண்டு எதிர்த்து எறியும்போது, ஆண்மை நிறைந்த வீரர்களின் கண்கள் அதற்கு அஞ்சி மூடித் திறக்குமேயானால், அதுவே, புறங்கொடுத்ததாகக் கருதப்படும். (775)

6. விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து.

தன்நாளை எடுத்து, விழுப்புண் படாத, நாள் எல்லாம், வழுக்கினுள் வைக்கும்.

(பொ-ரை): வீரனானவன், கழிந்த தன் வாழ்நாள்களை யெல்லாம் எடுத்துப்பார்த்து, அவற்றுள் முகத்திலும் மார்பிலும் புண்படாத நாள்களை எல்லாம், வீணாகக் கழிந்த நாள்களாக எண்ணி, அவற்றை எடுத்து வைத்து வருந்துவான்.

தன் நாளை - கழிந்த தன் வாழ்நாள்களையெல்லாம்; **எடுத்து** - எடுத்துப்பார்த்து; **விழுப்புண்** - முகத்திலும் மார்பிலும் படுகின்ற புண்; **வழுக்கினுள்** - வீணாகக் கழிந்த நாள்களாக எண்ணி; **வைக்கும்** - எடுத்து வைப்பான்.

(க-ரை): வீரனானவன், தன் முகத்திலும், மார்பிலும் புண்படுகின்ற நாள்களெல்லாம் பயன்படுகின்ற நாள்கள் என்றும், அப்படி விழுப்புண் படாத நாள்களெல்லாம் பயன்படாத நாள்கள் என்றும் கருதுவான். (776)

**7. சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.**

சுழலும், இசை வேண்டி, வேண்டா உயிரார், கழல் யாப்புக், காரிகை, நீர்த்து.

(பொ-ரை): சூழ்ந்து பரவி நிற்கக்கூடிய புகழை விரும்பி, உயிர் வாழ்தலை விரும்பாத வீரர்கள், வீரக்கழலைக் காலில் கட்டிக் கொள்ளுதல், தனி அழகினைத் தரும் தன்மையுடையதாகும்.

சுழலும் இசை - சூழ்ந்து பரவி நிற்கக்கூடிய புகழை; **வேண்டி** - விரும்பி; **வேண்டா உயிரார்** - உயிர் வாழ்தலை விரும்பாத வீரர்கள்; **கழல்** - வீரக்கழலை; **யாப்பு** - காலில் கட்டிக்கொள்ளுதல்; **காரிகை** - அழகினைத்தரும்; **நீர்த்து** - தன்மையையுடையது.

(க-ரை): உயிரைவிடப் புகழையே பெரிதெனக் கருதும் வீரர்கள், தம்முடைய காலில் வீரக்கழலை அணிவதே தனி அழகு பயப்பதாகும். (777)

**8. உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர்.**

உறின், உயிர் அஞ்சா, மறவர், இறைவன் செறினும், சீர்குன்றல், இலர்.

(பொ-ரை): போர் மூளுமாயின், தம் உயிர்க்கும் அஞ்சாமல் போர்புரியச் செல்லும் வீர மறவர்கள், தம் தலைவனான அரசன் போர் வேண்டாம் என்று சினந்து கொண்டாலும், வீரத்தில் குறையாது முனைந்து நிற்பர்.

உறின் - போர்மூளுமேயானால்; **செறினும்** - போர் வேண்டாம் என்று சினந்துகொண்டாலும்; **சீர்குன்றல்** - வீரத்தில் குறைதல் என்பது; **இலர்** - இல்லை.

(க-ரை): தம் உயிர்க்கும் அஞ்சாமல் போர் புரியும் வீர மறவர்கள், போர் மூண்டு விடுமேயானால், தம்முடைய அரசன் தடுத்தாலும், அப்பொழுதும் வீரத்தில் குறையாமல் முனைந்து நிற்பார்கள். (778)

**9. இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர்.**

இழைத்தது, இகவாமை, சாவாரை, பிழைத்தது, ஒறுக்கிற்பவர், யாரே?

(பொ-ரை): தாம் கூறிய சூளுரை தப்பாமல் இருக்க வேண்டிப் போருக்குச் சென்று இறக்கவல்ல வீரமறவர்களை, அவர்கள் சூளுரையில் தவறினார்கள் என்று சொல்லிப் பழித்துப் பேசக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்? ஒருவரும் இருக்க முடியாது.

இழைத்தது - தாம் கூறிய சூளுரை; **இகவாமை** - தப்பாமல் இருக்க வேண்டி; **பிழைத்தது** - சூளுரையில் தவறினார்கள் என்று சொல்லி; **ஒறுக்கிற்பவர்** - பழித்துப் பேசக்கூடியவர்கள்.

(க-ரை): தாம் கூறிய சூளுரையின்படி, போர்க்களம் புகுந்து, இறக்கும் வீர மறவர்களை, யார்தான் பழித்துப் பேச முடியும்? ஒருவரும் பேச முடியாது! (779)

10. புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து.

புரந்தார், கண், நீர்மல்கச், சாகில், பின், சாக்காடு, இரந்து, கோள்தக்கது, உடைத்து.

(பொ-ரை): தம்மைக் காத்த அரசரின் கண்களில் நீர் பெருகும் படியாகப் போரிலே தாம் சாக முடிந்தால், அத்தகைய சாவானது, இரந்தேனும் வீரரால் கொள்ளத்தக்க தகுதியினை உடையதாகும்.

புரந்தார்கண் - தம்மைக்காத்த அரசரின் கண்களில்; **சாக்காடு** - சாவு; **இரந்து** - பிச்சையாகக் கேட்டாவது; **கோள்** - கொள்ள; **தக்கது** - தகுதியினை.

(க-ரை): செய்ந்நன்றி நினைந்து, அரசரின் கண்களில் நீர் பெருகும்படியாகப் போரிலே வீரன் ஒருவன் சாகக்கூடுமானால், அத்தகைய சாவானது, பிச்சையெடுத்தாவது அவ்வீரனால் பெற்றுக் கொள்ளத்தக்கதாகும். (780)

79. நட்பு

நட்பு என்பது, அன்பின் அடிப்படையில் ஒருவரோ டொருவர் உறவு கொள்ளும் நட்பினது தன்மையையும், அதன் சிறப்பையும், அதன் பயனையும் பற்றிக்கூறுதல் எனப்படும்.

1. செயற்குஅரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்குஅரிய யாவுள காப்பு.

நட்பின், செயற்கு அரிய, யாஉள? அதுபோல், வினைக்கு அரிய, காப்பு, யாஉள?

(பொ-ரை): நட்பைப்போல ஒருவன் தனக்குச் செய்து கொள்ளுவதற்கு அருமையான செயல்கள் என்று எவை இருக்கின்றன? ஒன்றுமில்லை! அந்நட்பினைப் போல, எதிரிகளின் செயலைத் தடுப்பதற்குரிய அருமையான பாதுகாப்புகள் எவை இருக்கின்றன? ஒன்றுமில்லை!

செயற்குஅரிய - தனக்குச் செய்துகொள்ளுவதற்கு அருமையான செயல்கள்; **வினைக்கு அரிய காப்பு** - எதிரிகளின் செயலைத் தடுப்பதற்குரிய அருமையான பாதுகாப்புகள்.

(க-ரை): ஒருவனுக்கு நட்பைப்போல அருமையானது வேறொன்றும் இல்லை; அந்நட்பினைப்போல எதிரிகளின் செயலைத் தடுப்பதற்குரிய பாதுகாப்பும் வேறொன்றும் இல்லை. (781)

2. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு.

நீரவர் கேண்மை, பிறைமதி, நிறைநீர; பேதையார், நட்பு, பின்நீர.

(பொ-ரை): அறிவுடையோர்களுடன் கொள்ளும் நட்பு பிறைமதி வளருவதைப் போல அன்றாடம் வளரும் தன்மையதாகும்; அறிவில்லாதவர்களுடன் கொள்ளும் நட்பு முழுமதி குறைவதைப் போல, அன்றாடம் குறையும் தன்மையதாகும்.

நீரவர் - அறிவுடையோர்களுடன்; **கேண்மை** - நட்பு; **நிறைநீர** - வளரும் தன்மையதாகும்; **பிறை** - பிறைமதி; **மதி** - முழுமதி; **பேதையார்** - அறிவில்லாதவர்கள்; **மதிப்பின்நீர** - முழுமதி பின்னர் குறைவதைப்போல குறையும் தன்மையது.

(க-ரை): ஒருவர் அறிவுடையோர்களுடன் கொள்ளும் நட்பு பிறைமதிபோல், பின்னர் வளர்ந்துகொண்டே போகும்; அறிவில்லாதவர்களுடன் கொள்ளும் நட்பு முழுமதி போல் இருந்து, பின்னர் குறைந்துகொண்டே இருக்கும். (782)

3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

நவில்தொறும், நூல் நயம், போலும், பண்புடையாளர் தொடர்பு, பயில்தொறும்.

(பொ-ரை): நல்ல நூல்களின் இனிய பொருள் நுட்பங்களைப் படிக்கப்படிக்க அவை இன்பம் பயத்தலைப் போன்று, நற்பண்புடையோர்களுடன் கொள்ளும் நட்பும் பழகப்பழக இன்பம் பயப்பதாகும்.

நூல் நயம் - நல்ல நூற்களின் இனிய பொருள் நுட்பங்கள்; **நவில்தொறும்** - படிக்கும்தொறும்; **பண்புடையாளர்** - நற்பண்புடையாளர்கள்; **தொடர்பு** - நட்பு; **பயில்தொறும்** - பழகும்தொறும்.

(க-ரை): நல்ல நூல்களின் இனிய பொருள் நுட்பங்களைப் படிக்கப்படிக்க, அவை எவ்வாறு இன்பம் பயக்குமோ, அவ்வாறே நற்பண்பாளர்களுடன் கொள்ளும் நட்பும், பழகப் பழக இன்பம் பயப்பதாகும். (783)

4. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.

நட்டல், நகுதல், பொருட்டு, அன்று, மிகுதிக்கண்; மேற்சென்று, இடித்தல், பொருட்டு.

(பொ-ரை): ஒருவரோடொருவர் நட்புக் கொள்ளுதல் என்பது, சிரித்துப்பேசி மகிழ்வதன் பொருட்டு மட்டும் அன்று; நண்பர் தகாத செயலைச் செய்யத் தொடங்கும்போது, முற்பட்டுச் சென்று, கண்டித்து அறிவுரை கூறுவதற்கும் ஆகும்.

நட்டல் - ஒருவரோடொருவர் நட்புக் கொள்ளுதல்; **நகுதல்** - சிரித்துப் பேசி மகிழ்தல்; **மிகுதிக்கண்** - நண்பர் தகாத செயலைச் செய்யத் தொடங்கும்போது; **இடித்தல் பொருட்டு** - கண்டித்து அறிவுரை கூறும் பொருட்டு.

(க-ரை): ஒருவரோடொருவர் நட்புக் கொள்ளுதல் சிரித்துப் பேசி மகிழ்வதற்காக மட்டும் அன்று; நண்பர் தகாத செயலைச் செய்யத் தொடங்கும்போது, அவரைக் கண்டித்துத் திருத்துதற் பொருட்டும் ஆகும். (784)

5. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.

புணர்ச்சி, பழகுதல், வேண்டா; உணர்ச்சிதான், நட்பாம், கிழமை தரும்.

(பொ-ரை): ஒருவரோடொருவர் நட்பாவதற்குக் கூடி வாழும் தொடர்பும், நெருங்கிய பழக்கமும் வேண்டுவதில்லை; இருவர்க்கும் உண்டாகும் மனம் ஒத்த உணர்ச்சியே நட்பாகிய உரிமையைத் தருவதாகும்.

புணர்ச்சி - கூடி வாழும் தொடர்பு; **பழகுதல்** - நெருங்கிய பழக்கம்; **உணர்ச்சிதான்** - இருவர்க்கும் உண்டாகும் மனம் ஒத்த உணர்ச்சியே; **கிழமை** - உரிமையை.

(க-ரை): இருவர் தமக்குள் நட்பாவதற்குத் தொடர்பும், பழக்கமும் வேண்டுவதில்லை; இருவர்க்கும் உண்டாகும் மனம் ஒத்த உணர்ச்சியே போதுமானது. (785)

6. முகநக நட்பது நட்புஅன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.

முகநக, நட்பது, நட்பு அன்று, அகநக, நெஞ்சத்து, நட்பது, நட்பு.

(பொ-ரை): அகம் மலராமல், முகம் மட்டும் மலரும்படியாக, ஒப்புக்காக, நட்புச்செய்வது உண்மையான நட்பு ஆகாது; அகமும் மலரும்படியாக, உள்ளன்போடு நெஞ்சார நட்புச்செய்வதே, உண்மையான நட்பாகும்.

முகநக - முகம்மட்டும் மலரும்படியாக; **நட்பது** - ஒப்புக்காக நட்புச் செய்வது; **அகநக** - அகம் மலரும்படியாக.

(க-ரை): ஒருவர் அகமும், முகமும் மலர நெஞ்சார நட்புச் செய்வதே உண்மையான நட்பாகும். (786)

7. அழிவி னவைநீக்கி ஆறுஉய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.

அழிவின் அவை நீக்கி, ஆறு உய்த்து, அழிவின்கண், அல்லல், உழப்பதாம், நட்பு.

(பொ-ரை): அழிவைத்தருகின்ற தீய வழிகளிலிருந்து தன் நண்பனை நீக்கி, அவனை நல்ல நெறியில் நடக்கச்செய்து, கேடு வருங்காலத்தில் அவன் உடனிருந்து துன்பத்தை நுகர்வதே ஒருவன் கொள்ளக்கூடிய நட்புக்குரிய தன்மையாகும்.

அழிவினை - அழிவைத் தருகின்ற தீய வழிகளிலிருந்து; **ஆறு உய்த்து** - நல்ல நெறியில் நடக்கச்செய்து; **அழிவின்கண்** - கேடு வரும்போது; **அல்லல்** - துன்பத்தை; **உழப்பதாம்** - நுகர்வதாம்.

(க-ரை): ஒருவன் தன் நண்பனைத் தீயவழியில் செல்ல விடாது தடுத்து, அவனை நல்ல வழியில் செலுத்தி, அவனுடைய துன்பத்தில் பங்குகொள்ளுவதே நட்புக்குரிய இலக்கணமாகும். (787)

8. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

உடுக்கை இழந்தவன், கைபோல, ஆங்கே, இடுக்கண், களைவதாம், நட்பு.

(பொ-ரை): இடுப்பிலிருந்து ஆடை அவிழப் பெற்றவனின் கை, அதனைச் சீர் செய்வதற்கு, உடனே சென்று உதவுவதுபோல, ஒருவன் தன் நண்பனுக்குத் துன்பம் வந்தால், அப்பொழுதே சென்று, அத்துன்பத்தைப் போக்குவதே நட்புக்கு அறிகுறியாகும்.

உடுக்கை - ஆடை; **இழந்தவன்** - இடுப்பிலிருந்து அவிழப் பெற்றவன்; **இடுக்கண்** - துன்பத்தை; **களைவதாம்** - போக்குவதே. இழிந்தவன் என்ற ஒரு பாட வேறுபாடு உண்டு என்பர்.

(க-ரை): இடுப்பிலிருந்து அவிழும் ஆடையை எப்படி ஒருவனது கையானது உடனே சென்று அதனைச் சீர்படுத்த உதவுகிறதோ, அப்படியே நண்பனுக்குத் துன்பம் நேரிட்டால், ஒருவன் உடனே சென்று அதனைப்போக்க முயல்வதுதான் நட்பின் தன்மையாகும். (788)

9. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்புஇன்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

நட்பிற்கு, வீற்றிருக்கை, யாதெனில், கொட்புஇன்றி, ஒல்லும் வாய், ஊன்றும், நிலை.

(பொ-ரை): நட்புக்குரிய சிறந்த இருப்பிடம் எது என்றால், எப்பொழுதும் மனவேறுபாடில்லாமல், ஒருவன் தன்னால் இயலும் வழிகளிலெல்லாம் உதவிபுரிந்து, தன் நண்பனைத் தாங்கும் மனவலிமை பொருந்திய நிலையாகும்.

வீற்றிருக்கை - சிறந்த இருப்பிடம்; **கொட்புஇன்றி** - மனவேறுபாடு இல்லாமல்; **ஒல்லும்வாய்** - தன்னால் இயலும் வழிகளிலெல்லாம்; **ஊன்றும்** - தாங்கும்; **நிலை** - மனவலிமை நிலை.

(க-ரை): எப்பொழுதும் தன் நண்பனோடு மன வேறுபாடில்லாமல், தன்னால் இயலும் வழிகளிலெல்லாம் உதவுவதே, நட்பின் சிறந்த அறிகுறியாகும். (789)

10. இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு.

எமக்கு, இனையர்இவர், யாம் இன்னம், என்று, புனையினும், நட்பு, புல்லென்னும்.

(பொ-ரை): எமக்கு இவர் இப்படிப்பட்ட நண்பர், யாம் இவருக்கு இத்தன்மையேம் என்று ஒருவரையொருவர் தம்மையே புகழ்ந்து பேசிக்கொண்டாலும், நட்பானது சிறுமைப்பட்டுப் போய்விடும்.

இனையர் இப்படிப்பட்ட நண்பர்; **புனையினும்** - ஒருவரைவிடயொருவர் தம்மையே புகழ்ந்து பேசினாலும்; **புல்லென்னும்** - சிறுமைப்பட்டுப் போய்விடும்.

(க-ரை): நண்பர்கள் தமக்குள் ஒருவரைவிட ஒருவர் மேலானவர் என்று புனைந்து பேசிக்கொண்டாலும், நட்பானது பெருமை குன்றிப் போய்விடும். (790)

80. நட்பு ஆராய்தல்

நட்பு ஆராய்தல் என்பது, ஒருவருடைய பண்பு, திறமை, சிறப்பு, செயல்கள் போன்றவற்றை ஆராய்ந்தறிந்த பின்னரே, அவரோடு நட்புக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிக் கூறுதல் எனப்படும்.

1. நாடாது நட்டலின் கேடுஇல்லை நட்டபின்
வீடுஇல்லை நட்புஆள் பவர்க்கு.

நட்பு ஆள்பவர்க்கு, நட்டபின், வீடு இல்லை; நாடாது, நட்டலின், கேடு இல்லை.

(பொ-ரை): நட்பு உடையவர்களுக்கு, நட்புச் செய்த பின், அதனை விடுதல் என்பது இயலாது; ஆதலால், ஆராயாது நட்புச் செய்தலைக்காட்டிலும், கேடு பயப்பது வேறொன்றுமில்லை.

நட்பு ஆள்பவர்க்கு - நட்பு உடையவர்களுக்கு; **வீடு இல்லை** - விடுதல் என்பது இல்லை; **நாடாது** - ஆராயாது; **நட்டலின்** - நட்புச் செய்தலைக் காட்டிலும்.

(க-ரை): ஒருவரோடு நட்புக் கொண்டபின் அதனை விடுவது என்பது முடியாத ஒரு செயலாகும். எனவே, நன்கு ஆராய்ந்து அறிந்த பிறகே நட்புக்கொள்ள வேண்டும். (791)

2. ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்.

ஆய்ந்து ஆய்ந்து, கொள்ளாதான், கேண்மை, கடைமுறை, தான்சாம், துயரம் தரும்.

(பொ-ரை): பலகாலும், பலமுறைகளிலும் ஆராய்ந்து ஆராய்ந்து பார்த்து நட்புக் கொள்ளாதவனின் நட்பு, முடிவில் அவன்தானே சாவதற்குக் காரணமான துன்பத்தினை உண்டாக்கி விடும்.

கேண்மை - நட்பு; **கடைமுறை** - முடிவில்; **தான்சாம்** - தானே சாவதற்குக் காரணமான; **துயரம்** - துன்பத்தை.

(க-ரை): ஒருவன் ஆராய்ந்து பார்க்காமல் தீயவனோடு நட்புக் கொள்வானேயானால், அந்நட்பே அவன் சாவதற்குக் காரணமாக அமைந்துவிடும். (792)

**3. குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்துயாக்க நட்பு.**

குணனும், குடிமையும், குற்றமும், குன்றா இனனும், அறிந்து, நட்பு, ஆக்க.

(பொ-ரை): ஒருவன், பிறருடைய சிறந்த பண்பையும், உயர்ந்த குடிப்பிறப்பையும், குற்றங்குறைகளையும், தரங்குறையாத சுற்றத்தாரையும் ஆராய்ந்து அறிந்த பிறகே, அவரோடு நட்புக்கொள்ள வேண்டும்.

குணனும் - சிறந்த பண்பையும்; **குடிமையும்** - உயர்ந்த குடிப்பிறப்பையும்; **குற்றமும்** - குற்றங்குறைகளையும்; **குன்றா இனனும்** - தரங்குறையாத சுற்றத்தாரையும்; **நட்பு யாக்க** - நட்புக்கொள்ள வேண்டும்.

(க-ரை): ஒருவன், பிறருடைய பண்பு, குடிப்பிறப்பு, குற்றங் குறைகள், தரங்குறையாத சுற்றத்தார் ஆகியவை பற்றி நன்கு ஆராய்ந்து அறிந்து தெளிந்த பிறகே, அவரோடு நட்புக்கொள்ள வேண்டும். (793)

**4. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.**

குடிப்பிறந்து, தன்கண், பழி நாணுவானைக், கொடுத்தும், நட்பு, கொளல் வேண்டும்.

(பொ-ரை): உயர்ந்த குடியில் பிறந்து, தன்பால் பழி வரக்கூடாது என்று அஞ்சி நாணுகின்றவனை, அவன் வேண்டும் சீரிய பொருள் எதையேனும் கொடுத்தாவது, அவனது நட்பை எப்படியேனும் ஒருவன் பெற்றுக்கொள்ள வேண்டும்.

குடிப்பிறந்து - உயர்ந்த குடியில் பிறந்து; **தன்கண் பழி** - தன்பால் பழிவரக்கூடாது என்று; **நாணுவானை** - நாணுகின்றவனை; **கொடுத்தும்** - வேண்டும் எதையேனும் கொடுத்தாவது; **கொளல் வேண்டும்** - எப்படியேனும் கொள்ள வேண்டும்.

(க-ரை): தன்மீது பழிவரக்கூடாது என்று அஞ்சி நாணுகின்ற உயர்ந்த குடிப்பிறந்தவனது நட்பை எப்படியேனும் பெற்றுக்கொள்ள ஒருவன் பெரு முயற்சி செய்ய வேண்டும். (794)

**5. அழச்சொல்லி அல்லது இடித்து வழக்குஅறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்.**

அல்லது, அழச்சொல்லி, இடித்து, வழக்கு அறிய, வல்லார் நட்பு, ஆய்ந்து கொளல்.

(பொ-ரை): முறையல்லாதவற்றை ஒருவர் செய்யக்கருதினால், அழும்படியாகச் சொல்லி அவற்றை விலக்கியும், மீறிச் செய்தால், மீண்டும் செய்யாதபடி அவரைக் கண்டித்துரைத்தும், உயர்ந்தோர் வழக்கு இன்னதென்று அறிந்து, அதனை அறிவிக்க வல்லாருடைய நட்பை, ஆராய்ந்து ஒருவன் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அல்லது - முறையல்லாதவற்றைச் செய்யக் கருதினால்; **அழச்சொல்லி** - அழும்படியாகச் சொல்லி, அவற்றை விலக்கியும்; **இடித்து** - தவறு செய்தால், செய்யாதபடி கண்டித்துரைத்தும்; **வழக்கு அறிய வல்லார்** - உயர்ந்தோர் வழக்கு இன்னதென்று அறிந்து, அதனை அறிவிக்க வல்லார்.

(க-ரை): ஒருவர் முறையல்லாதவற்றைச் செய்ய முயன்றால், அதைத் தடுத்தும், மீறிச் செய்தால் அவரைக் கண்டித்துரைத்தும், உலக வழக்கு அறிந்து அதனை அறிவிக்க வல்லமை படைத்தாருடைய நட்பை, ஒருவன் ஆராய்ந்து பெற்றுக்கொள்ள வேண்டும். (795)

6. கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

கேட்டினும், ஓர் உறுதி, உண்டு, கிளைஞரை, நீட்டி அளப்பதோர், கோல்.

(பொ-ரை): ஒருவருக்குக் கேடு வரும்போதும்கூட, அதனால் ஒருவகையான உறுதி பயக்கும் நன்மை ஏற்படுவது உண்டு; எப்படி என்றால், நண்பரின் இயல்புகளைச் செவ்வையாக அளந்து பார்ப்பதற்கு, அக்கேடே ஓர் அளவுகோலாக அமைந்துவிடுகிறது.

ஓர் உறுதி - ஒருவகையான உறுதி பயக்கும் நன்மை; **கிளைஞரை** - நண்பரின் இயல்புகளை; **கோல்** - அளவுகோல்.

(க-ரை): ஒருவருக்குக் கேடு உண்டாகும்போதும்கூட, அதனால் ஒரு நன்மை ஏற்படுவது உண்டு; அப்பொழுதுதான் நண்பர்களின் இயல்புகளைத் தெள்ளத்தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. (796)

7. ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்.

ஒருவற்கு ஊதியம், என்பது, பேதையார் கேண்மை, ஒரீஇ விடல்.

(பொ-ரை): ஒருவருக்கு நன்மை பயக்கும் ஊதியம் என்று சொல்லப்படுவது எதுவென்றால், அறிவற்றவர்களது நட்பினை ஒழித்து, அவர்களை விட்டு அறவே நீங்கிவிடுதலாகும்.

ஊதியம் - நன்மை பயக்கும் வருவாய்; **பேதையார்** - அறிவில்லாதவர்கள்; **கேண்மை** - நட்பினை; **ஒரீஇ** - ஒருவி, நீக்கி.

(க-ரை): ஒருவருக்கு நன்மை பயக்கும் ஊதியம் என்ன வென்றால், அறிவற்றவர்களின் நட்புறவை நீக்கிவிட்டு வாழ்தலே யாகும். (797)

8. உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றுஅறுப்பார் நட்பு.

உள்ளம் சிறுகுவ, உள்ளற்க; அல்லற்கண், ஆற்று அறுப்பார் நட்பு, கொள்ளற்க.

(பொ-ரை): ஒருவர், தம் ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களைச் செய்ய நினைக்காதிருக்க வேண்டும்; அதுபோலத் துன்பம் வரும்போது, தம்மைக் கைவிடுவாரது நட்பைக் கொள்ளாதிருக்க வேண்டும்.

உள்ளம் - ஊக்கம்; **சிறுகுவ** - குறைவதற்குக் காரணமான செயல்களை; **அல்லற்கண்** - துன்பம் வரும்போது; **ஆற்று அறுப்பார்** - கைவிடுவார்.

(க-ரை): ஒருவர் தம் ஊக்கம் குறைவதற்கான செயல்களைச் செய்ய நினைக்கக்கூடாது; தமக்குத் துன்பம் வரும்போது தம்மை விட்டுவிட்டுப் போய்விடுவாரது நட்பினைக் கொள்ளக்கூடாது. (798)

9. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்.

கெடுங்காலைக், கைவிடுவார் கேண்மை, அடுங்காலை, உள்ளினும், உள்ளம், சுடும்.

(பொ-ரை): ஒருவன் தான் கெடுங்காலத்தில் தன்னை விட்டு நீங்கக்கூடியவரது நட்பினைப் பிறர் தன்னைக் கொல்ல வரும்போது நினைத்துக்கொண்டாலும், நினைத்த தன் உள்ளத்தை, அந்நட்பானது அப்படிக் கொல்லுகிறவனைக் காட்டிலும் மிகவும் வாட்டி வதைக்கும்.

கெடுங்காலை - ஒருவன் தான் கெடுகின்ற காலத்தில்; **கேண்மை** - நட்பு; **அடுங்காலை** - பிறர் தன்னைக் கொல்ல வரும்போது; **உள்ளினும்** - நினைத்துக் கொண்டாலும்; **சுடும்** - வாட்டி வதைக்கும்.

(க-ரை): ஒருவன் தான் கெடும்போது, அவனை விட்டு நீங்கக்கூடியவரது நட்பினை, அவனைப் பிறர் கொல்ல வரும்போது, அவன் நினைத்துக்கொண்டாலும், அந்த நினைப்பு அவனது உள்ளத்தைச் சுட்டுப் பொசுக்கும். (799)

10. மருவுக மாசற்றார் கேண்மைஒன்று ஈத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

மாசற்றார் கேண்மை, மருவுக, ஒப்பிலார் நட்பு, ஒன்று ஈத்தும், ஒருவுக.

(பொ-ரை): குற்றமற்றவர்களது நட்பினையே ஒருவர் தழுவிக் கொள்ள வேண்டும்; தமக்கு நிகரில்லாதவர்களுடைய நட்பினை, அவர்கள் விரும்பும் ஒரு பொருளைக் கொடுத்தாயினும் விட்டுவிட வேண்டும்.

மாசற்றார் - குற்றமற்றவர்கள்; **கேண்மை** - நட்பு; **மருவுக** - தழுவிக்கொள்ள வேண்டும்; **ஒப்பிலார்** - தமக்கு நிகரில்லாதவர்கள்; **ஒருவுக** - விட்டுவிட வேண்டும்.

(க-ரை): ஒருவர், குற்றமற்றவர்களது நட்பினைத் தேடிப் பெற்றுக்கொள்ள வேண்டும்; தமக்கு ஈடில்லாதவர்களுடைய நட்பினை எப்பாடுபட்டேனும் விட்டுவிட வேண்டும். (800)

81. பழைமை

பழைமை என்பது, நண்பர்களது உரிமையைப் போற்றி, அவர்களுடைய நட்பைக் காத்து, அவர்களது தொடர்பினால் ஏற்பட்ட பழைமையைப் பாராட்டி மகிழ்தல் எனப்படும்.

**1. பழைமை எனப்படுவது யாதுஎனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.**

பழைமை எனப்படுவது, யாது எனின், கிழமையை, யாதும், கீழ்ந்திடா, நட்பு.

(பொ-ரை): பழைமை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது எது என்றால், பழைமையான நண்பர்கள் உரிமையின் காரணமாகச் செய்தவைகளைச் சிறிதுகூட விலக்காமல், அப்படியே ஏற்றுக் கொள்ளும் நட்புரிமையாகும்.

யாதுஎனின் - எது என்றால்; **கிழமையை** - பழைமையான நண்பர்கள் உரிமையின் காரணமாகச் செய்தவைகளை; **கீழ்ந்திடா** - விலக்காமல் ஏற்றுக்கொள்ளும்.

(க-ரை): எது பழைமை என்று வினவினால், பழைமையான நண்பர்கள் உரிமையோடு செய்தவைகளை விலக்காமல், அப்படியே ஏற்றுக்கொள்ளக்கூடிய நட்புரிமையாகும். (801)

**2. நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றுஅதற்கு
உப்பாதல் சான்றோர் கடன்.**

நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை, மற்று அதற்கு, உப்பாதல், சான்றோர் கடன்.

(பொ-ரை): ஒருவரது நட்புக்கு உறுப்பு எது என்றால், பழைமையான நண்பரின் உரிமையைப் பாராட்டுவதேயாகும்; அந்த உரிமைக்கு உடன்பட்டவராக இருத்தல், சான்றோர்களின் முறையான கடமையாகும்.

கெழுதகைமை - பழைமையான நண்பர்களின் உரிமையைப் பாராட்டுதல்; **உப்பாதல்** - உடன்பட்டவராக இருத்தல்.

(க-ரை): ஒருவரது நட்புக்கு அடையாளம் எதுவென்றால், பழைமையான நண்பர்களின் உரிமையைப் பாராட்டுதல்; அதுதான், சான்றோர்க்குரிய முறையான கடமையாகும். (802)

**3. பழகிய நட்பு எவன்செய்யும் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை.**

கெழுதகைமை, செய்தாங்கு, அமையாக் கடை, பழகிய நட்பு, எவன் செய்யும்.

(பொ-ரை): பழைமையான நண்பர்கள் உரிமையோடு செய்த செயல்களைத் தாமே செய்தாற் போல, உடன்பட்டு இருக்காவிட்டால், பழகிய பழைய நட்பு, என்ன பயனைத் தர முடியும்? ஒரு பயனையும் தர இயலாது.

கெழுதகைமை - பழைமையான நண்பர்கள் உரிமையோடு செய்த செயல்களை; **செய்தாங்கு** - தாமே செய்தாற் போல; **அமையாக்கடை** - உடன்பட்டு இருக்காவிட்டால்.

(க-ரை): பழைமையான நண்பர்கள் செய்த செயல்களோடு ஒருவன் ஒத்துப் போகாவிட்டால், பழகிய நட்பானது பயனற்றதாக ஆகிவிடும். (803)

**4. விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையான்
கேளாது நட்டார் செயின்.**

கெழுதகையான், கேளாது, நட்டார் செயின், விழைதகையான், வேண்டி இருப்பர்.

(பொ-ரை): பழகிய உரிமையால், தம்மைக் கேளாமலேயே, தமது செயலினை நண்பர் செய்துவிடுவாரானால், அவர் செயல் செய்யும் உரிமையைத் தாம் விரும்பும் காரணத்தால், அவர் செய்யும் செயலையும் சான்றோர் விரும்பி வாளா இருப்பர்.

கெழுதகையான் - பழகிய உரிமையால்; **நட்டார்** - நண்பர்; **விழைதகையான்** - செயல் செய்யும் உரிமையைத் தாம் விரும்பும் காரணத்தால்; **வேண்டி இருப்பர்** - விரும்பி இருப்பர்.

(க-ரை): தமது நண்பர் உரிமையால் தம்மைக் கேளாது ஒரு செயலைச் செய்தால், அதனை விரும்பிச் சான்றோர் ஏற்றுக் கொள்ளவே செய்வர். (804)

**5. பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுஉணர்க
நோதக்க நட்டார் செயின்.**

நோதக்க, நட்டார் செயின், பேதைமை, ஒன்றோ, பெருங் கிழமை, என்று உணர்க.

(பொ-ரை): தாம் வருந்தத்தக்க செயல்களைத் தம் நண்பர்கள் செய்வார்களேயானால், அதற்குக் காரணம், அவர்களது அறியாமையாக இருத்தல் வேண்டும்; அல்லது மிகுந்த உரிமையாக இருத்தல் வேண்டும் என்பதாக ஒருவர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

நோதக்க - வருந்தத்தக்க செயல்களை; **நட்டார்** - நண்பர்கள்; **பேதைமை** - அறியாமையாக; **பெருங்கிழமை** - மிகுந்த உரிமையாக.

(க-ரை): ஒருவர், தமது நண்பர்கள் தகாத செயல்களைச் செய்தால், அறியாமையாலோ, மிகுந்த உரிமையாலோ செய்துள்ளார்கள் என்று கொள்ள வேண்டுமேயல்லாமல், அன்பில்லாமல் செய்தனரென்று கொள்ளக்கூடாது. (805)

**6. எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.**

எல்லைக்கண் நின்றார், தொல்லைக்கண் நின்றார், தொடர்பு, தொலைவிடத்தும், துறவார்.

(பொ-ரை): நட்பினைப் போற்றி அதன் வரம்பினுள் நிற்பவர்கள், பழைமை பாராட்டும் தமது பழைய நண்பரின் தொடர்பை, அவரால் கேடுவந்த காலத்திலும்கூட விடமாட்டார்கள்.

எல்லைக்கண் நின்றார் நட்பினைப்போற்றி அதன் வரம்பினுள் நிற்பவர்கள்; **தொல்லைக்கண் நின்றார்** - பழைமை பாராட்டும் பழைய நண்பர்கள்; **தொலைவிடத்தும்** - அவரால் கேடுவந்த காலத்திலும்; **துறவார்** - விடமாட்டார்கள்.

(க-ரை): நட்பின் அருமை தெரிந்தவர்கள், பழைய நண்பரால் தமக்குக் கேடு வருவதாக இருந்தாலும், அவரது நட்பை விட மாட்டார்கள். (806)

**7. அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.**

அன்பின் வழிவந்த, கேண்மையவர், அழிவந்த செய்யினும், அன்பு அறார்.

(பொ-ரை): அன்புடன் தொன்றுதொட்டு வந்த நட்பினைக் கொண்டவர்கள், தம் அழிவுக்குக் காரணமானவைகளை நண்பர்கள் செய்தாலும், அவர்களிடம் தாம் கொண்ட அன்பிலிருந்து நீங்க மாட்டார்கள்.

அன்பின் வழிவந்த - அன்புடன் தொன்றுதொட்டு வந்த; **கேண்மையவர்** - நட்பினைக் கொண்டவர்கள்; **அழிவந்த** - தம் அழிவுக்குக் காரணமானவைகளை; **செய்யினும்** - நண்பர்கள் செய்தாலும்; **அன்புஅறார்** - அன்பிலிருந்து நீங்க மாட்டார்கள்.

(க-ரை): தொன்றுதொட்டு அன்புடன் நட்பைக் கொண்டவர்கள், தமக்குப் பழைய நண்பர்களால் கேடு ஏற்பட்டாலும், அவர்கள் மீது கொண்டுள்ள அன்பை ஒருபோதும் விட்டுவிட மாட்டார்கள். (807)

8. கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாள்இழுக்கம் நட்டார் செயின்.

கேள் இழுக்கம், கேளாக், கெழுதகைமை, வல்லார்க்கு, நட்டார், இழுக்கம் செயின், நாள்.

(பொ-ரை): நண்பர்கள் செய்யும் பிழையைப் பிறர் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளாத உரிமையினை அறிய வல்லவர் களுக்கு, அந்த நண்பர்கள் குற்றத்தினைச் செய்வாரானால், அந்த நாள்தான் நல்ல நாளாகும்.

கேள் - நண்பர்கள்; **இழுக்கம்** - குற்றத்தினை; **கெழுதகைமை** - உரிமையினை; **நட்டார்** - நண்பர்கள்; **இழுக்கம் செயின்** - குற்றத்தினைச் செய்வாரானால்; **நாள்** - நல்ல நாளாகும்; நண்பர் தமக்கு ஒரு குற்றத்தினைச் செய்வதால், தம்மிடம் தமது நண்பருக்குள்ள உரிமையை அறியும்படி செய்யப்படுகின்றது என்று பொருள். அந்த நாள் நல்ல நாளாகிறது.

(க-ரை): பழைய நண்பர்கள் செய்யும் பிழையைப் பிறர் கூறினால் ஏற்றுக் கொள்ளாதவர்கள், அந்த நண்பர்கள் தமக்கே பிழையைச் செய்வாரானாலும், அந்தப் பிழையையும் பொறுத்துக் கொள்வார்கள். (808)

9. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு.

கெடாஅ வழிவந்த, கேண்மையார், கேண்மை, விடாஅர், உலகு விழையும்.

(பொ-ரை): அன்புகெடாது தொன்று தொட்டு வந்த நண்பரோடு கொண்டிருந்த நட்பினை அவர் குற்றம் கருதியும் விடாதவரை, இவ்வுலகத்தாரே நட்புகொள்ள விரும்புவார்கள்.

கெடாஅ - அன்பு கெடாது; **வழிவந்த** - தொன்றுதொட்டு வந்த; **கேண்மையார்** - நண்பரது; **விடாஅர்** - குற்றம் செய்த போதிலும் கைவிடாதவரை; **உலகு** - உலகத்தார்; **விழையும்** - விரும்புவார்கள்.

(க-ரை): தொன்றுதொட்டு நண்பரோடு கொண்டிருந்த நட்பினை, அந்த நண்பர் குற்றம் செய்தார் என்ற காரணத்திற்காக அவரைக் கைவிடாதவரை, உலகத்தார் அன்பு செலுத்திப் போற்றுவார்கள். (809)

**10. விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்.**

பழையார்கண், பண்பின், தலைப்பிரியாதார், விழையார், விழையப்படுப.

(பொ-ரை): பழைமையான நண்பர்கள் குற்றம் செய்தாலும், அவர்களிடத்தில் அன்பு செலுத்தும் பண்பிலிருந்து நீங்காதவர்கள், அவர்தம் பகைவர்களாலும் விரும்பப்படுவார்கள்.

பழையார்கண் - பழைமையான நண்பர்கள்; **பண்பின்** - அன்பு செலுத்தும் பண்பிலிருந்து; **தலைப்பிரியாதார்** நீங்காதவர்கள்; **விழையார்** - பகைவர்களாலும்; **விழையப்படுப** - விரும்பப்படுவார்கள்.

(க-ரை): பழைய நண்பர்கள் குற்றம் செய்தாலும் அதனைப் பொருட்படுத்தாது, அவர்களிடத்தில் அன்புகாட்டும் பண்புடையவர் களைப் பகைவர்களுங்கூட விரும்புவார்கள். (810)

82. தீ நட்பு

தீ நட்பு என்பது, தீய பண்புகளையுடைய கொடிய குற்றங்களைச் செய்யக்கூடிய தீயோரின் நட்பு, கொள்ளத்தக்கது அன்று என்பது பற்றிக் கூறுதல் எனப்படும்.

1. பருகுவார் போலினும் பண்புஇலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது.

பருகுவார் போலினும், பண்பு இலார் கேண்மை, பெருகலின், குன்றல் இனிது.

(பொ-ரை): அன்பினால் தம்மை விழுங்குவார்போல் பார்ப்பதற்குத் தோன்றினாலும், நற்பண்பு இல்லாதவர்களுடன் ஒருவர் கொள்ளும் நட்பு, வளர்வதைக் காட்டிலும் குறைதல் நல்லதாகும்.

பருகுவார் போலினும் - அன்பினால் விழுங்குவார் போல் பார்ப்பதற்குத் தோன்றினாலும்; **கேண்மை** - நட்பு; **பெருகலின்** - வளருவதைக் காட்டிலும்; **குன்றல்** - குறைதல்; **இனிது** - நல்லது.

(க-ரை): தீய பண்புடையவர்கள், அன்புடையவர்கள் போலத் தம்மைத்தாமே காட்டிக்கொண்டாலும், அவர்களுடன் ஒருவர் கொள்ளக்கூடிய நட்பு, வளருவதைவிடக் குறைவது நல்லதாகும். (811)

2. உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்புஇலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்.

உறின் நட்டு, அறின் ஒரூஉம், ஒப்புஇலார், கேண்மை, பெறினும், இழப்பினும், என்.

(பொ-ரை): தமக்குப் பயனுள்ளபோது நட்பினை மேற்கொண்டு, பயனில்லாதபோது நீங்கி விடுகின்ற, பழகுவதற்கு ஏற்ற தகுதியில்லாதவருடைய நட்பினை, ஒருவர் பெறுவதால் உண்டாகும் நன்மைதான் என்ன? ஒன்றுமில்லை! அதனை இழப்பதால் உண்டாகக்கூடிய தீமைதான் என்ன? ஒன்றுமில்லை!

உறின் - பயனுள்ளபோது நட்பினை மேற்கொண்டு; **அறின்** - பயனில்லாதபோது; **ஒரூஉம்** - நீங்கிவிடுகின்ற; **ஒப்புஇலார்** - பழகுவதற்கு ஏற்ற தகுதியில்லாதவர்கள்; **கேண்மை** - நட்பினை; **பெறினும்** - பெறுவதாலும்; **இழப்பினும்** - இழப்பதாலும்.

(க-ரை): தமக்குப் பயன் ஏற்படும்போது நண்பராக உடன் இருந்துவிட்டுப் பயன் ஏற்படாதபோது நீங்கிவிடுகின்றவர்களின் நட்பினை, ஒருவர் பெற்றாலும் நன்மையில்லை; இழந்தாலும் தீமை இல்லை. (812)

**3. உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்.**

உறுவது, சீர்தூக்கும் நட்பும், பெறுவது கொள்வாரும், கள்வரும், நேர்.

(பொ-ரை): நட்பினால் கிடைக்கும் பயனை அளந்து பார்க்கும் நண்பரும், கொடுப்பாரின் அன்பைக் கொள்ளாது, அவரது பொருளைக் கொள்ளைகொள்ளும் விலைமகளிரும், பிறரின் கேடு நோக்காது, அவர்தம் செல்வத்தைக் கவரும் கள்வரும் தமக்குள் நிகராவார்கள்.

உறுவது - நட்பினால் கிடைக்கும் பயனை; **சீர்தூக்கும்** - அளந்து பார்க்கும்; **நட்பும்** - நண்பரும்; **பெறுவது கொள்வாரும்** - கொடுப்பாரின் அன்பைக் கொள்ளாமல், அவரது பொருளைக் கொள்ளை கொள்ளும் விலைமகளிரும்; **கள்வரும்** - பிறர் கேடு நோக்காது அவர்தம் செல்வத்தைக் கவரும் கள்வரும்; **நேர்** - நிகராவார்கள்.

(க-ரை): நட்பினால் கிடைக்கும் பயனை மட்டும் அளந்து பார்க்கும் நண்பரும், பொருளைப் பெறும் விலைமகளிரும், செல்வத்தைக் கவரும் கள்வரும் ஒரே தன்மையராவார்கள். (813)

**4. அமரகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை.**

அமரகத்து, ஆற்று அறுக்கும், கல்லாமா, அன்னார், தமரின், தனிமை, தலை.

(பொ-ரை): போர் வரும்போது போர்க்களத்தில், தன் மீது இருப்போரைக் கீழே வீழ்த்திவிட்டு ஓடிப்போகும் போர்த் திறனைச் சரியாக அறிந்துகொள்ளாத குதிரையைப் போன்றவர்கள், உற்றார் போன்றிருந்து செய்யும் நட்பு கொள்ளும் தன்மையைவிட, ஒருவர் தனிமையாக இருப்பதே பெருமைக்குரியதாகும்.

அமரகத்து - போர்க்களத்தில்; **கல்லாமா** - குதிரை; **அன்னார்** - போன்றவர்கள்; **தமரின்** - உற்றார் போன்றிருந்து செய்யும் நட்பின் தன்மையைவிட; **தலை** - பெருமைக்குரியதாகும்.

(க-ரை): போர்க்களத்தில் போர் நடந்துகொண்டிருக்கும்போது கீழே தள்ளிவிட்டு ஓடிப்போய்விடும் குதிரையைப் போன்றவர்களின் நட்பை, ஒருவர் பெறுவதைக்காட்டிலும், தனிமையாக இருப்பதே சாலச் சிறந்ததாகும். (814)

**5. செய்துஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று.**

செய்து, ஏமம், சாராச், சிறியவர், புன்கேண்மை, எய்தலின், எய்தாமை, நன்று.

(பொ-ரை): நட்பினைச் செய்து கொண்டிருந்தாலும், அதற்குப் பாதுகாப்பாக அமையாத கீழ்மக்களின் தீய நட்பானது, ஒருவருக்கு ஏற்படுவதைக்காட்டிலும், ஏற்படாமல் இருப்பதே நல்லது.

செய்து - நட்பினைச் செய்துகொண்டிருந்தாலும்; **ஏமம் சாரா** - அதற்குப் பாதுகாப்பாக அமையாத; **சிறியவர்** - கீழ்மக்கள்; **புன்கேண்மை** - தீ நட்பு; **எய்தலின்** - ஏற்படுவதைக் காட்டிலும்.

(க-ரை): ஒருவர் கீழ்மக்களோடு நட்பினைச் செய்து கொண்டாலும், அவர்களின் தீ நட்பின் தன்மை அதற்குப் பாதுகாப்பாக அமையாது; இந்த நிலையில், அவர்களோடு நட்பு ஏற்படுவதைவிட, ஏற்படாமல் இருப்பதே நல்லது. (815)

**6. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும்.**

பேதை, பெருங்கெழீஇ நட்பின், அறிவுடையார், ஏதின்மை, கோடி உறும்.

(பொ-ரை): அறிவில்லாதவர்களின் மிகச் செறிந்த நட்பினைக் காட்டிலும் அறிவுடையவர்களுடைய பகைமையானது, கோடி மடங்கு நன்மை பயப்பதாகும்.

பேதை - அறிவில்லாதவர்களின்; **பெருங்கெழீஇ** - மிகச் செறிந்த; **கெழீஇ** - கெழுமிய, செறிந்த, பொருந்திய; **ஏதின்மை** - பகைமை; கோடி என்பது மிகப்பல என்பதைக் குறிப்பதாகும்; **உறும்** - நல்லது பயக்கும்.

(க-ரை): அறிவில்லாதவர்களுடன் ஒருவர் கொள்ளும் நட்பு, அவருக்கு எல்லாத் தீமைகளையும் தரும்; அறிவுடையவர்களின் பகையானது ஒருவருக்கு ஒரு தீமையையும் உண்டாக்காது. (816)

7. நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்துஅடுத்த கோடி உறும்.

நகைவகையராகிய, நட்பின், பகைவரால், பத்து அடுத்த, கோடி, உறும்.

(பொ-ரை): அகஅன்பில்லாமல் வீணாக நகைத்துப் பேசிக் கொண்டு மட்டும் இருக்கும் இயல்பினரின் நட்பால் ஏற்படும் நன்மையைக் காட்டிலும், பகைவர்களால் வரும் துன்பங்கள் பத்துக் கோடி மடங்கு நல்லவைகளாகவே இருக்கும்.

நகைவகையர் - வீணாக நகைத்துப் பேசிக்கொண்டு மட்டும் இருக்கும் இயல்பினர்; **பத்து அடுத்த கோடி** - பத்துக் கோடி மடங்கு; பல கோடி என்று பொருள்; **உறும்** - நல்லவையாகவே இருக்கும்.

(க-ரை): அன்பில்லாமல் வீணாக நகைத்துப் பேசிப் பேசியே காலத்தைப் போக்கும் இயல்பினரின் நட்பைவிட, பகைவரால் ஏற்படும் துன்பங்கள் பல மடங்கு நல்லவையாகவே இருக்கும். (817)

8. ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

ஒல்லும் கருமம், உடற்றுபவர், கேண்மை, சொல்லாடார், சோர விடல்.

(பொ-ரை): எளிதில் முடியக்கூடிய செயலையும் முடியாதபடி கெடுப்பவரின் நட்பை, ஒருவர் அவருக்கு அறிவித்துச் சொல்லாமலேயே, அதனைத் தளரும்படியாகச் செய்து, இறுதியில் விட்டுவிட வேண்டும்.

ஒல்லும் - தம்மால் முடியக்கூடிய; **கருமம்** - செயலையும்; **உடற்றுபவர்** - முடியாதபடி கெடுப்பவரின்; **கேண்மை** - நட்பை; **சொல்லாடார்** - அவருக்கு அறிவித்துச் சொல்லாமலேயே; **சோர** - தளரும்படியாக; **விடல்** - விட்டுவிட வேண்டும்.

(க-ரை): எளிதில் முடியக்கூடிய செயலையும் முடியாதபடி கெடுப்பவரின் நட்பை, அவர் அறியாமலேயே ஒருவர் விட்டுவிட வேண்டும். (818)

9. கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

வினைவேறு, சொல்வேறு, பட்டார், தொடர்பு, கனவினும், இன்னாது, மன்னோ.

(பொ-ரை): சொல்லும் சொல் எதிர்பார்ப்பதற்கு வேறாகவும், செய்யும் செயல் வேறொன்றாகவும் கொண்டிருப்பவருடைய நட்பானது, ஒருவற்குக் கனவிலும் துன்பத்தைத் தருவதாகும்.

பட்டார் - கொண்டிருப்பவர்; **தொடர்பு** - நட்பானது; **இன்னாது** - துன்பத்தைத் தருவதாகும். மன் ஓ என்பது அசை.

(க-ரை): சொல்லும் சொல்லையும், செய்யும் செயலையும் வெவ்வேறாகக் கொண்டிருப்பவரின் நட்பானது, ஒருவற்குக் கனவிலும்கூட துன்பத்தைத் தருவதாகும். (819)

**10. எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு.**

மனைக்கெழீஇ, மன்றில் பழிப்பார், தொடர்பு, எனைத்தும், குறுகுதல், ஓம்பல்.

(பொ-ரை): தனியாக வீட்டில் இருக்கும்போது தம்மோடு நெருங்கிப்பழகிப் பொருந்தியிருந்துவிட்டுப் பலர் கூடும் பொது மன்றத்தில், தம்மைப் பழித்துப் பேசுபவருடைய நட்பானது, எவ்வாறேனும் தம்மை அணுகுதலை ஒருவர் நீக்கிவிட வேண்டும்.

மனை - வீட்டில் இருக்கும்போது; **கெழீஇ** - நெருங்கிப் பழகிப் பொருந்தியிருந்துவிட்டு; **மன்றில்** - தம்மைப் பலர் கூடும் பொது மன்றத்தில்; **தொடர்பு** - நட்பானது; **எனைத்தும்** - எவ்வாறேனும்; **குறுகுதல்** - தம்மை அணுகுதலை; **ஓம்பல்** - நீக்கிவிட வேண்டும்.

(க-ரை): வீட்டில் தனியே நெருங்கிப் பழகிவிட்டுப் பலர் கூடும் மன்றத்தில் பழித்துப் பேசுபவருடைய நட்பானது, தம்மை அண்டாதபடி ஒருவர், அதனை விலக்கிவிட வேண்டும். (820)

83. கூடா நட்பு

கூடா நட்பு என்பது, மனத்தால் கூடாமல், புறத்தால் கூடுவார்போல் நடித்து ஒழுகுவாரின் நட்பின் இழிதன்மை, சிறப்பின்மை, பயனற்ற தன்மை போன்றவற்றைக் கூறுதல் எனப்படும்.

1. சீர்இடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

நேரா நிரந்தவர் நட்பு, சீர் இடம், காணின், எறிதற்குப் பட்டடை.

(பொ-ரை): மனத்தால் கூடாமல், புறத்தே நண்பர்கள் போல நடிப்பவரது நட்பானது, கேடு இழைப்பதற்கு ஏற்ற வாய்ப்பான இடம் கிடைத்தால், இரும்பைத் துண்டாக வெட்டுவதற்குத் துணை செய்யும் பட்டடைக்கல் போன்று அமைவதாகும்.

நேரா - மனத்தால் கூடாமல்; **நிரந்தவர்** - புறத்தே நண்பர்கள் போல் நடிப்பவர்; **எறிதற்கு** - கேடு இழைப்பதற்கு; **பட்டடைக்கல்** - இரும்பைத் துண்டாக வெட்டுவதற்குத் தாங்கலாய் இருக்கும் ஒருவிதக் கல்.

(க-ரை): மனத்தால் நட்புச் செய்யாமல், புறத்தே நண்பர்களைப் போல நடிப்பவர்களது நட்பானது, வாய்ப்புக் கிடைக்கும்போது, இரும்பை வெட்டத் துணை போகும் பட்டடைக்கல் போன்று விளங்குவதாகும். ·(821)

2. இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

இனம் போன்று, இனம் அல்லார் கேண்மை, மகளிர், மனம்போல, வேறுபடும்.

(பொ-ரை): தமக்கு நெருங்கிய உற்றார்போல நடிக்கும் உற்றாரல்லாதவர்களோடு ஒருவர் கொள்ளும் நட்பானது, விலைமகளிரின் மனம்போல, உள்ளொன்றும் புறம் வேறொன்றுமாக வேறுபட்டு இருப்பதாகும்.

இனம் போன்று - நெருங்கிய உற்றார் போன்று; **இனம் அல்லார்** - நடிக்கும் உற்றார் அல்லாதவர்களுடைய; **கேண்மை** - நட்பானது; **மகளிர்** - விலைமகளிர்; **வேறுபடும்** - உள்ளொன்றும் புறமொன்றுமாக வேறுபடும்.

(க-ரை): உற்றார்போல நடிக்கும் உற்றாரல்லாதவர்களுடைய நட்பானது, எப்பொழுதும் விலைமகளிரின் மனம் போல உள்ளும், புறமும் வேறுபட்டே இருக்கும். (822)

3. பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது.

பல நல்ல, கற்றக் கடைத்தும், மனம் நல்லர் ஆகுதல், மாணார்க்கு அரிது.

(பொ-ரை): நல்லனவாகிய பற்பல நூல்களைக் கற்றறிந்திருந்த போதிலும், உள்ளன்பால் மாட்சிமையடையாதவர்கள், மனம் திருந்தி நல்லவர்களாக ஆகுதல் என்பது மிக அரிதான ஒரு செயலாகும்.

பலநல்ல - நல்லனவாகிய பற்பல நூல்களை; **கற்றக் கடைத்தும்** - கற்றறிந்திருந்தபோதிலும்; **மாணார்** - உள்ளன்பால் மாட்சிமைப் படாதவர்; **மனம்நல்லர்** - மனம் திருந்திய நல்லவர்.

(க-ரை): உள்ளன்பால் மாட்சிமைப்படாதவர்கள் நல்ல நூல்கள் பலவற்றைக் கற்றறிந்திருந்த போதிலும், மனம் திருந்திய நல்லவர்களாக ஆகுதல் என்பது ஒருகாலும் இயலாது. (823)

4. முகத்தின் இனிய நகாஅ அகத்துஇன்னா
வஞ்சரை அஞ்சப் படும்.

முகத்தின், இனிய நகாஅ, அகத்து இன்னா, வஞ்சரை, அஞ்சப் படும்.

(பொ-ரை): முகத்தினால் மட்டும் இனிமையாக நகைத்துப் பேசி, நெஞ்சினால் எப்பொழுதும் கேடு செய்ய நினைக்கும் வஞ்சகர்களைக்கண்டு ஒருவர் அஞ்சி ஒதுங்கிவிட வேண்டும்.

முகத்தின் - முகத்தினால் மட்டும்; **நகாஅ** - நகைத்துப் பேசி; **அகத்து** - நெஞ்சினில்; **இன்னா** - கேடு செய்ய நினைக்கும்; **வஞ்சரை** - வஞ்சகர்களை.

(க-ரை): வெளிப்படையாகச் சிரித்துப் பேசி, உள்ளுக்குள் கேடு செய்ய நினைக்கும் வஞ்சகர்களை, ஒருவர் அஞ்சி ஒதுக்கிவிட வேண்டும். (824)

5. மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறல்பாற் றன்று.

மனத்தின், அமையாதவரை, எனைத்து ஒன்றும், சொல்லினால், தேறல், பாற்றன்று.

(பொ-ரை): மனத்தினால் தம்முடன் பொருந்திப் பழகாதவர் களை, எந்த ஒரு செயலிலும், அவர்கள் சொல்லுவதை வைத்துக் கொண்டு, தேர்ந்து தெளிவுபெறுதல் என்பது முறையானதாகாது.

அமையாதவரை - பொருந்திப் பழகாதவர்களை; **எனைத் தொன்றும்** - எந்த ஒரு செயலிலும்; **சொல்லினால்** - அவர் சொல்வதை வைத்துக்கொண்டு; **தேறல்பாற்று அன்று** - தேர்ந்து தெளிவுபெறுதல் என்பது முறையானது ஆகாது.

(க-ரை): தம்மோடு மனத்தினால் ஒத்து வராதவர்களின் சொற்களை வைத்துக்கொண்டு, அவர்களது செயலில் எந்தத் தெளிவையும் ஒருவர் பெற முடியாது. (825)

**6. நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும்.**

நட்டார்போல், நல்லவை சொல்லினும், ஒட்டார் சொல், ஒல்லை, உணரப்படும்.

(பொ-ரை): நண்பர்கள்போல் நன்மையானவற்றைச் சொன்ன போதிலும், பகைவர்கள் சொல்லும் சொற்களின் உண்மைத்தன்மை, மிக விரைவில் ஒருவரால் உணரப்படும்.

நட்டார்போல் - நண்பர்களைப்போல்; **ஒட்டார்** - பகைவர்கள்; **சொல்** - சொல்லும் சொற்கள்; **ஒல்லை** - விரைவாக.

(க-ரை): நண்பர்களைப்போல் நடித்து நல்லவற்றைச் சொன்னாலும், பகைவர்கள் கூறும் சொற்களின் உண்மைத் தன்மை விரைவில் ஒருவருக்குத் தெரிந்துவிடும். (826)

**7. சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்.**

வில் வணக்கம், தீங்கு குறித்தமையான், ஒன்னார்கண், சொல் வணக்கம், கொள்ளற்க.

(பொ-ரை): வில்லினது வளையும் தன்மையானது தீமை யுண்டாக்குவதையே குறிக்கின்றதானபடியால், அதனை நல்லதென்று கொள்ள முடியாது; அதுபோல, பகைவர்களிடத்தில் காணப்படும் சொல்லினது வணக்கத்தையும், நல்லதென்று கொள்ளக்கூடாது.

வணக்கம் - வளையும் தன்மையானது; **தீங்கு** - தீமை யுண்டாக்குவதையே; **குறித்தமையான்** - குறிக்கின்றபடியால்; **ஒன்னார்கண்** - பகைவர்களிடத்தில்; **சொல் வணக்கம்** - சொல்லினது வணக்கம்; **கொள்ளற்க** - கொள்ளக்கூடாது.

(க-ரை): வில்லினது வணக்கம் எப்படித் தீமை குறிக்கின்ற ஒன்றோ அப்படியே, பகைவரின் சொல்லினது வணக்கமும் தீமையைக் குறிக்கின்றதாகும்; எனவே, அதனை ஒருவர் ஏற்றுக்கொள்ளக் கூடாது. (827)

8. தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.

தொழுதகையுள்ளும், படை ஒடுங்கும், ஒன்னார், அழுத கண்ணீரும், அனைத்து.

(பொ-ரை): பகைவர்கள் தொழுது வணங்குவதற்காகக் குவிக்கும் கைகளுக்குள்ளும் கொலைக்கருவி மறைந்திருக்கும்; அப்பகைவர்கள் அழுகின்ற கண்ணீரும்கூட, அவ்வாறே அவர்களது கொலைக்கருத்து மறைந்திருக்கும் இடமாகும்.

தொழுதகையுள்ளும் - தொழுது வணங்குவதற்காகக் குவிக்கும் கைகளுக்குள்ளும்; **படை** - கொலைக்கருவி; **ஒடுங்கும்** - மறைந்திருக்கும்.

(க-ரை): பகைவர்கள் தொழுது வணங்கினாலும், அவர்களது குவிக்கின்ற கைகளுக்குள் கொலைக்கருவி மறைந்திருக்கும் என்பதை ஒருவர் மறந்துவிடக்கூடாது; அவர்கள் அழுதாலுங்கூட, அவர்கள் சிந்துகின்ற கண்ணீரும் அவர்களுடைய கொலைக்கருத்து மறைந்திருக்கும் இடமாகும். (828)

9. மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று.

மிகச்செய்து, தம் எள்ளுவாரை, நகச்செய்து, நட்பினுள், சாப்புல்லற் பாற்று.

(பொ-ரை): பகைமை தோன்றாமல் புறத்தே மட்டும் நட்பினை மிகுதியாகச் செய்துகாட்டி, அகத்தே தம்மை இகழ்கின்ற பகைவர்களைத் தாமும் அவ்வாறே நட்புறவில் இருந்து, புறத்தே அவர்கள் மகிழும்படியாகச் செய்து, உள்ளுக்குள் அந்த நட்பினைச் சாகும்படிச் செய்தல் வேண்டும்.

மிகச்செய்து - புறத்தே மட்டும் நட்பினை மிகுதியாகச் செய்து காட்டி; **தம் எள்ளுவாரை** - அகத்தே தம்மை இகழ்கின்ற பகைவர்களை; **நட்பினுள்** - அவர்களைப்போல நட்புறவில் இருந்து; **நகச்செய்து** - புறத்தே அவர் மகிழும்படியாகச் செய்து; **சாப்புல்லற் பாற்று** - உள்ளுக்குள் நட்பானது சாகும்படியாகச் செய்தல் வேண்டும்.

(க-ரை): புறத்தே நட்பினைச் செய்துகாட்டி, அகத்தே இகழ்கின்ற பகைவரை, ஒருவர் தாமும் அவரைப் புறத்தே மகிழும் படியாக நட்பினைச் செய்து, அகத்தே அந்த நட்பினைச் சாகும்படியாகச் செய்ய வேண்டும். (829)

10. பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு அகநட்பு ஒரீஇ விடல்.

பகைநட்பாம், காலம் வருங்கால், முகம் நட்டு, அகநட்பு, ஒரீஇ விடல்.

(பொ-ரை): தமது பகைவர் தமக்கு நண்பராக நடக்கும் காலம் வந்தால், தாமும் அவரோடு முகத்தால் மட்டும் நட்புச் செய்து, அகத்தால் அந்த நட்பு ஏற்படாமல், அதனை நீக்கிப் பின்னர் அம்முக நட்பையும் விட்டுவிட வேண்டும்.

முகம்நட்டு - முகத்தால் மட்டும் நட்புச் செய்து; **அகம்** - மனத்தால்; **நட்புஒரீஇ** - அந்த நட்பு ஏற்படாமல் அதனை நீக்கி; **விடல்** - பின்னர் அந்த முகநட்பையும் விட்டுவிட வேண்டும்.

(க-ரை): தம் பகைவர் தம்மோடு நட்புச் செய்யும் காலம் வந்தால், ஒருவர் புறத்தால் மட்டும் நட்புச் செய்து, அகத்தால் நட்புச் செய்யாது, பின்னர் அந்தப் புற நட்பையும் விட்டுவிட வேண்டும். (830)

84. பேதைமை

பேதைமை என்பது, அறிவு இல்லாதவர்களின் யாதொரு அறிவும் இல்லாத தன்மையைக் கூறுதல் எனப்படும்.

1. பேதைமை என்பதுஒன்று யாதெனின் ஏதங்கொண்டு ஊதியம் போக விடல்.

பேதைமை என்பது, ஒன்று, யாது எனின், ஏதம் கொண்டு, ஊதியம், போகவிடல்.

(பொ-ரை): அறியாமை என்று சொல்லப்படும் ஒன்று எது என்றால், ஒருவன் தனக்கு கேடு தருவனவற்றையெல்லாம் கைக்கொண்டு, நன்மை தருவனவற்றையெல்லாம் கைவிடுதலாகும்.

பேதைமை - அறியாமை; **ஏதம்** - கேடு தருவனவற்றை யெல்லாம்; **கொண்டு** - கைக்கொண்டு; **ஊதியம்** - நன்மை தருவனவற்றையெல்லாம்.

(க-ரை): அறியாமை என்று சொல்லப்படும் ஒன்று எது என்றால், ஒருவன் கேடு பயப்பனவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு, நன்மை பயப்பனவற்றையெல்லாம் விட்டு விடுதலாகும். (831)

2. பேதைமை யுள்எல்லாம் பேதைமை காதன்மை கையல்ல தன்கண் செயல்.

பேதைமையுள் எல்லாம், பேதைமை, தன்கண், கைஅல்ல, காதன்மை, செயல்.

(பொ-ரை): அறியாமைகளிலெல்லாம், மிக்கதான அறியாமை எது என்றால், ஒருவன் தன்னால் இயலாத பணிகளில் மிக்க விருப்பத்தினைக்கொண்டு, அவற்றைச் செய்தலாகும்.

பேதைமை - அறியாமை; **கையல்ல** - இயலாத பணிகளில்; **காதன்மை** - மிக்க விருப்பத்தினைக்கொண்டு.

(க-ரை): அறியாமைகளிலெல்லாம் மிகவான அறியாமை எதுவென்றால், ஒருவன் தன்னால் முடியாத பணிகளில், விருப்பங் கொண்டு, அவற்றைச் செய்ய முற்படுதலாகும். (832)

**3. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.**

நாணாமை, நாடாமை, நாரின்மை, யாதொன்றும், பேணாமை, பேதை, தொழில்.

(பொ-ரை): வெட்கப்பட வேண்டியதற்கு வெட்கப் படாமையும், தேடி அடைய வேண்டியதைத் தேடாமையும், அன்பு செய்வதற்கு உரியவரிடம் அன்பு செய்யாமையும், போற்ற வேண்டியவைகளைப் போற்றாமையும் அறிவற்றவனின் செயல் களாகும்.

நாணாமை - வெட்கப்படாமை; **நாடாமை** - தேடாமை; **நாரின்மை** - அன்பு செய்யாமை; **பேணாமை** - போற்றாமை; **பேதை** - அறிவற்றவன்; **தொழில்** - செயல்கள்.

(க-ரை): நாண வேண்டியதற்கு நாணாமையும், தேட வேண்டியதைத் தேடாமையும், அன்பு செலுத்த வேண்டியவரிடத்தில் அன்பு செலுத்தாமையும், போற்ற வேண்டியதைப் போற்றாமையும் அறிவற்றவனின் செயல்களாகும். (833)

**4. ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல்.**

ஓதி உணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும், தான் அடங்காப், பேதையின், பேதையார் இல்.

(பொ-ரை): சிறந்த நூல்களைக் கற்றும், அவற்றின் பயன்களை நன்கு உணர்ந்தும், மற்றவர்களுக்கு அவற்றை எடுத்துக்கூறியும், தான் மட்டும் முறையாக அடங்கி ஒழுகாத அறிவற்றவனைவிட, வேறு அறிவிலிகள் உலகத்தில் இல்லை என்று கூறலாம்.

ஓதி - சிறந்த நூல்களைக் கற்றும்; **உணர்ந்தும்** - அவற்றின் பயன்களை நன்கு உணர்ந்தும்; **தான் அடங்கா** - தான்மட்டும் அடங்கி ஒழுகாத; **பேதையின்** - அறிவற்றவனைவிட; **பேதையார்** - அறிவிலிகள்.

(க-ரை): ஒருவன், நூல்களைக் கற்றும், அவற்றின் பயன்களை உணர்ந்தும், அவற்றைப் பிறர்க்கு எடுத்துக்கூறியும், தான் அவற்றின்படி ஒழுகாவிட்டால், அவனைவிட அறிவிலிகள் வேறு யாரும் உலகத்தில் இருக்கமாட்டார்கள். (834)

**5. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு.**

பேதை, எழுமையும், தான்புக்கு, அழுந்தும் அளறு, ஒருமைச் செயல் ஆற்றும்.

(பொ-ரை): அறிவற்றவன், தன் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் தான் புகுந்து துய்க்கக்கூடிய துன்பங்கள் எல்லாவற்றையும் தனது ஒரு நிலையிலேயே, அறியாமையின் காரணமாகச் செயல்படுவதன் மூலம் பெற்றுவிடுகிறான்.

பேதை - அறிவற்றவன்; **எழுமையும்** - வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும்; **புக்கு** - புகுந்து; **அழுந்தும்** - துய்க்கக்கூடிய; **அளறு** - துன்பங்கள் எல்லாவற்றையும்; துன்பங்களை மிகுதியாகத் தரும் ஒன்றை அளறு என்றும், நரகம் என்றும் சொல்லுவது நூல் மரபாகும்; **ஒருமை** - வாழ்க்கையின் ஒரு நிலையிலேயே; **செயலாற்றும்** - செயல்படுவதன்மூலம்.

(க-ரை): அறிவற்றவன், தன் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் துய்க்கக்கூடிய துன்பங்கள் பலவற்றையும், தன்னுடைய அறியாத செயலின் காரணமாக, ஒரு நிலையிலேயே பெற்று விடுவான். (835)

**6. பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.**

கை அறியாப் பேதை, வினைமேற் கோளின், ஒன்றோ, பொய்படும், புனைபூணும்.

(பொ-ரை): செயலினை முறைப்படி செய்யும் வகை தெரியாத அறிவற்றவன், ஒரு தொழிலைச் செய்யத் தொடங்குவானேயானால், அத்தொழிலும் கெட்டுவிடும்; அவனும் குற்றவாளியாகி விலங்கு பூட்டப்பெறுவான்.

கையறியா - செயலினை முறைப்படி செய்யும் வகை தெரியாத; **பேதை** - அறிவற்றவன்; **வினைமேற்கொளின்** - ஒரு தொழிலைச் செய்யத் தொடங்குவானேயானால்; **பொய்படும்** - அத்தொழிலும் கெடும்; **புனைபூணும்** - விலங்கு பூட்டப் பெறுவான்.

(க-ரை): செயலினைச் செய்வதற்கான வகை தெரியாத அறிவற்றவன், ஒரு தொழிலைச் செய்ய முற்படுவானேயானால், அத்தொழிலும் கெட்டுப்போகும்; அவனும் குற்றவாளியாகி விலங்கு பூட்டப்பெறுவான். (836)

**7. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை.**

பேதை, பெருஞ்செல்வம், உற்றக்கடை, ஏதிலார் ஆரத், தமர்பசிப்பர்.

(பொ-ரை): அறிவற்றவன் மிகுந்த செல்வத்தைப் பெறும் நிலை ஏற்படுமேயானால், அதனால் எவ்விதத் தொடர்பும் இல்லாத அயலார், நிறையப் பயனைப் பெறத், தொடர்புடைய சுற்றத்தார்கள் மட்டும் பசியால் வருந்துவார்கள்.

பேதை - அறிவற்றவன்; **உற்றக்கடை** - பெறும் நிலை ஏற்படுமேயானால்; **ஏதிலார்** - ஒரு தொடர்பும் இல்லாத அயலார்; **ஆர** - நிறையப் பயனைப்பெற; **தமர்** - சுற்றத்தார்கள்; **பசிப்பர்** - பசியால் வருந்துவார்கள்.

(க-ரை): அறிவற்றவன் பெருஞ்செல்வத்தைப் பெறும் நிலை ஏற்படுமேயானால், அயலார் அதனை நன்கு பயன்படுத்திக் கொள்வார்கள்; ஆனால் சுற்றத்தார்கள் அதனால் எந்தப் பயனையும் பெறாமல், பசியால் வருந்திக் கொண்டிருப்பார்கள். (837)

**8. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கைஒன்று உடைமை பெறின்.**

பேதை, தன் கை ஒன்று, உடைமை, பெறின், மையல் ஒருவன், களித்தற்றால்.

(பொ-ரை): அறிவற்றவன், தனது கையில் ஒரு பொருளை தனக்கேயுரிய உடைமையாகப் பெற்றுவிடுவானேயானால், அது, இயல்பாகவே பித்துப்பிடித்த ஒருவன், மேலும் கள்ளை உண்டு களித்தாற் போன்றதாக அமையும்.

பேதை - அறிவற்றவன்; **தன்கை** - தனது கையில்; **ஒன்று** - ஒரு பொருளை; **உடைமை** - தனக்கேயுரிய உடைமையாக; **மையல் ஒருவன்** - இயல்பாகவே பித்துப்பிடித்த ஒருவன்; **களித்தற்றால்** - கள்ளையுண்டு களித்தாற் போன்றது.

(க-ரை): இயல்பாகவே பித்துக்கொண்டவன் மேலும் கள்ளை உண்ணுவானேயானால், எப்படிக் களியாட்டம் போடுவானோ, அப்படியே, அறிவற்றவன் தன் கையில் உடைமையாக ஒரு பொருள் கிடைத்துவிடுமேயானால், அவனும் பெரும் களியாட்டம் போடுவான். (838)

**9. பெரிதுஇனிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதுஒன்று இல்.**

பிரிவின் கண், பீழை தருவது, ஒன்று இல், பேதையார் கேண்மை, பெரிது இனிது.

(பொ-ரை): கூடிப்பிரியும்பொழுது, துன்பம் ஒன்றும் தருவதில்லையாதலால், அறிவற்றவர்களோடு ஒருவர் கொள்ளும் நட்பும், மிகவும் இனிமையுடையதாகவே இருக்கும்.

பிரிவின்கண் - கூடிப்பிரியும்பொழுது; **பீழை** - துன்பம்; **தருவது ஒன்று இல்** - தருவதில்லையாதலால்; **பேதையார்** - அறிவற்றவர்கள்; **கேண்மை** - நட்பு; **பெரிதுஇனிது** - மிகவும் இனிமையுடையதாகும்.

(க-ரை): ஒருவர் அறிவற்றவர்களோடு நட்புக் கொண்டால், பிரியும்போது துன்பம் ஒன்றும் ஏற்படுவதில்லையாதலால், அத்தகைய நட்பு, இனிமை பயப்பதாகவே இருக்கும். (839)

**10. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.**

சான்றோர் குழாஅத்துப், பேதை புகல், கழாஅக்கால், பள்ளியுள், வைத்தற்றால்.

(பொ-ரை): அறிவுமிக்க சான்றோர்கள் கூடியிருக்கும் அவையின்கண், அறிவற்றவன் நுழைதல் என்பது, தூய்மையற்ற கழுவாத கால்களைத் தூய படுக்கையின்கண் வைத்தாற் போன்றதாகும்.

குழாஅத்து - அவையின்கண்; **பேதை** - அறிவற்றவன்; **புகல்** - நுழைதல்; **கழாஅக்கால்** - தூய்மையற்ற கழுவாத கால்கள்; **பள்ளியுள்** - தூய படுக்கையின்கண்; **வைத்தற்றால்** - வைத்தாற்போன்றது.

(க-ரை): துய்மையற்ற கழுவாத காலைத் தூய படுக்கையில் வைத்தால் எப்படிப் பழுதுபடும் நிலை இருக்குமோ, அப்படியே சான்றோர்களுடைய அவையின்கண் அறிவற்றவன் நுழைதலும் பழுதுபடும் நிலையை ஏற்படுத்தும். (840)

85. புல்லறிவாண்மை

புல்லறிவாண்மை என்பது, புல்லிய அறிவினை ஆளுந் தன்மையையுடைய சிற்றறிவினன், தன்னைப் பேரறிவு உடையவனாக நினைத்துக்கொண்டு, உயர்ந்தோர் கூறும் அறிவுரைகளை ஏற்றுக்கொள்ளாமலிருத்தல் எனப்படும்.

1. அறிவுஇன்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை
இன்மையா வையாது உலகு.

அறிவு இன்மை, இன்மையுள் இன்மை, பிறிது இன்மை, உலகு, இன்மையா, வையாது.

(பொ-ரை): அறிவில்லாமையே இல்லாமைகள் பல வற்றுள்ளும் மிகக்கொடிய இல்லாமையாகும்; மற்ற இல்லாமைகளை யெல்லாம், உயர்ந்தோர் அதைப்போன்ற இல்லாமையாகக் கருதமாட்டார்கள்.

அறிவுஇன்மை - அறியாமையே; **இன்மையுள்** - இல்லாமைகள் எல்லாவற்றுள்ளும்; **பிறிதுஇன்மை** - மற்ற இல்லாமைகளெல்லாம்; **இன்மையா** - இல்லாமையாக; **உலகு** - உலகத்தார்; **வையாது** - கருதமாட்டார்கள்.

(க-ரை): இல்லாமைகள் எல்லாவற்றுள்ளும் கொடிய இல்லாமை என்பது அறியாமையேயாகும்; மற்ற வகையான இல்லாமைகளையெல்லாம் இல்லாமையாகக் கருதமாட்டார்கள் உயர்ந்தோர். (841)

2. அறிவிலான் நெஞ்சுஉவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம்.

அறிவிலான், நெஞ்சு உவந்து, ஈதல், பிறிது, யாதும் இல்லை, பெறுவான் தவம்.

(பொ-ரை): புல்லறிவுடையவன் மனம் உவந்து ஒரு பொருளை ஒருவனுக்குக் கொடுத்தற்குக் காரணம், வேறொன்றும் இல்லை; அதற்குக் காரணம் அந்தப் பொருளைப் பெறுகின்றவனுடைய நற்செயலேயாகும் (கொடுப்பவனுடைய நற்பண்பு ஆகாது).

ஈதல் - கொடுத்தற்குக் காரணம்; **பிறிதுயாதும் இல்லை** - வேறொன்றும் இல்லை; **பெறுவான்** - பொருளைப் பெறுகின்றவனுடைய; **தவம்** - நற்செயல்.

(க-ரை): புல்லறிவுடையவன் மனமுவந்து ஒரு பொருளை ஒருவனுக்குக் கொடுக்கிறான் என்றால், அதற்குக் காரணம், அந்தப் பொருளைப் பெறுகின்றவனுடைய நற்செயலேயல்லாமல் கொடுப்பவனுடைய நற்பண்பு ஆகாது. (842)

**3. அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது.**

அறிவிலார், தாம் தம்மைப், பீழிக்கும் பீழை, செய்தல், செறுவார்க்கும் அரிது.

(பொ-ரை): அறிவில்லாதவர்கள் தாமே தம்மைத் துன்பப் படுத்திக்கொள்ளும் துன்பத்தைப் போல் செய்தல் என்பது, அவர்களது பகைவர்களுக்குங்கூட அரிதான ஒரு செயலாகும்.

பீழிக்கும் - துன்பப்படுத்திக்கொள்ளும்; **பீழை** - துன்பத்தைப் போல்; **செறுவார்க்கும்** - பகைவர்களுக்கும்; **அரிது** - அரிதான ஒரு செயலாகும்.

(க-ரை): அறிவில்லாதவர்கள், தமக்குத்தாமே செய்து கொள்ளும் துன்பத்தைப்போல், அவர்களது பகைவர்களாலும்கூட, அவர்களுக்குச் செய்ய முடியாது. (843)

**4. வெண்மை எனப்படுவது யாதுஎனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு.**

வெண்மை, எனப்படுவது, யாதுஎனின், ஒண்மை, உடையம்யாம், என்னும் செருக்கு.

(பொ-ரை): புல்லறிவுடைமை என்று சொல்லப்படுவது எது என்று கேட்டால், ஒருவர், தம்மைத்தாமே நல்லறிவுடையவர் என்று எண்ணிக்கொள்ளும் அகந்தையுணர்வேயாகும்.

வெண்மை - புல்லறிவுடைமை; **ஒண்மை** - நல்லறிவுடைமை; **செருக்கு** - அகந்தை.

(க-ரை): புல்லறிவுடைமை என்று சொல்லப்படுவது எது என்றால், ஒருவர் தம்மைத்தாமே நல்லறிவுடையவர் என்று நினைத்துக்கொள்ளும் அகந்தையேயாகும். (844)

**5. கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடுஅற
வல்லதூஉம் ஐயம் தரும்.**

கல்லாத, மேற்கொண்டு, ஒழுகல், கசடுஅற, வல்லதூஉம், ஐயம் தரும்.

(பொ-ரை): புல்லறிவாளர்கள், தாம் கல்லாதனவற்றையும் கற்றவர்கள் போலக் காட்டிக்கொண்டு நடத்தலானது, அவர்கள் குற்றமறக் கற்ற நூலிருக்குமேயானால், அதைப்பற்றியும் பிறர்க்கு ஐயத்தை உண்டாக்கிவிடும்.

மேற்கொண்டு - கற்றவராகக் காட்டிக்கொண்டு; **ஒழுகல்** - நடத்தலானது; **கசடுஅற** - குற்றம் நீங்க; **வல்லதூஉம்** - கற்ற நூலிருக்குமேயானால் அதைப் பற்றியும்.

(க-ரை): புல்லறிவாளர்கள் தாம் கற்காதவற்றையும் கற்றவர்கள் போலக் காட்டிக்கொண்டு நடத்தலானது, அவர்கள் நன்கு கற்ற நூலிருக்குமேயானால், அதைப்பற்றியும் மற்றவர்களுக்கு ஐயத்தை உண்டாக்கிவிடும். (845)

**6. அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி.**

தம்வயின், குற்றம், மறையா வழி, அற்றம் மறைத்தலோ, புல்லறிவு.

(பொ-ரை): ஒருவர், தம்மிடத்திலுள்ள குற்றங் குறைகளை அறிந்து, அவற்றை நீக்காமல், ஆடையால் அவர்தம் மறைத்தற்குரிய உறுப்புகளை மட்டும் மறைத்துக்கொள்வது என்பது புல்லறிவாகும்.

தம்வயின் - தம்மிடத்திலுள்ள; **குற்றம்** - குற்றம் குறைகளை; **மறையாவழி** - நீக்காமல்; **அற்றம்** - மறைத்தற்குரிய உறுப்புகளை; **மறைத்தலோ** - ஆடையால் மறைத்துக்கொள்வது.

(க-ரை): ஒருவர் தம்மிடமுள்ள குற்றங்குறைகளை நீக்காமல், மறைத்தற்குரிய உறுப்புகளை மட்டும் ஆடையால் மறைத்துக் கொள்வது என்பது புல்லறிவாகும். (846)

**7. அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.**

அருமறை, சோரும், அறிவிலான், தனக்குத், தானே, பெருமிறை, செய்யும்.

(பொ-ரை): அறிவுடையோர் கூறும் அரிய அறிவுரைப் பொருளைப் போற்றிக் காக்காமல் கைவிடும் புல்லறிவாளன், தனக்குத்தானே, பெருந்துன்பத்தைச் செய்து கொள்வான்.

அருமறை - அரிய அறிவுரைப் பொருளை; **சோரும்** - போற்றிக் காக்காமல் கைவிடும்; **பெருமிறை** - பெருந்துன்பத்தை; **செய்யும்** - செய்துகொள்வான்.

(க-ரை): அறிவுடையோரின் அரிய அறிவுரைப் பொருளைப் போற்றிக் காக்காமல் கைவிடும் புல்லறிவாளன், தனக்குத்தானே பெருந்துன்பத்தைத் தேடிக்கொள்வான். (847)

8. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்.

ஏவவும் செய்கலான், தான் தேறான், அவ்வுயிர், போஒம் அளவும், ஓர் நோய்.

(பொ-ரை): புல்லறிவாளன் செய்ய வேண்டியவற்றைச் செய்யும்படியாக நல்லறிவாளர்கள் கட்டளையிட்டாலும், அவன் அவற்றைச் செய்யமாட்டான்; தானும் அவற்றை அறியமாட்டான்; அத்தகையவன், உலகத்தைவிட்டு நீங்கும் வரை பொறுக்க முடியாத ஒரு நோயாகவே இருப்பான்.

ஏவவும் - செய்ய வேண்டியவற்றைச் செய்யும்படியாக நல்லறிவாளர்கள் கட்டளையிட்டாலும்; **செய்கலான்** - செய்ய மாட்டான்; **தான்தேறான்** - தானும் அறியமாட்டான்; **போஒம்** - உலகத்தைவிட்டு நீங்கும் வரை; **நோய்** - நோயாகவே இருப்பான்.

(க-ரை): புல்லறிவாளன், செய்ய வேண்டியவற்றை அறிவுடையோர் கூறினாலும் செய்யமாட்டான்; தானும் அறிய மாட்டான்; அப்படிப்பட்டவன் உலகத்திற்கு அவன் சாகும் வரை ஒரு நோய் போல் இருப்பான். (848)

9. காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு.

காணாதான் காட்டுவான், தான் காணான், காணாதான், கண்டானாம், தான் கண்டவாறு.

(பொ-ரை): அறிவில்லாதவனை அறிவுடையவனாக ஆக்க முயலும் ஒருவன், அவனே அறிவில்லாதவனாக ஆகும்படி நேரிடும்;

அறிவில்லாதவன், தான் அறிந்த அளவில், தானே அறிந்தவனென்று முடிவு செய்து கொள்வான்.

காணாதான் அறிவில்லாதவன்; **காட்டுவான்** அறிவுடையவனாக ஆக்க முயலும் ஒருவன்; **தான் காணான்** - அவனே அறிவில்லாதவனாக ஆகும்படி நேரிடும்; **கண்டவாறு** - தான் அறிந்த அளவில்; **கண்டானாம்** - அறிந்தவனென்று முடிவு செய்து கொள்வான்.

(க-ரை): அறிவில்லாத புல்லறிவாளர்க்கு நல்லறிவு புகட்டுதல் என்பது எவராலும், எவ்வகையிலும் முடியாததொரு செயலாகும்.
(849)

**10. உலகத்தார் உண்டுஎன்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்.**

உலகத்தார், உண்டு என்பது, இல் என்பான், வையத்து, அலகையா, வைக்கப்படும்.

(பொ-ரை): அறிவால் உயர்ந்தோர் காரண காரிய விளக்கத்தோடு உண்டு என்று நிலைநாட்டுகின்ற ஒன்றை, ஒரு காரணமும் காட்டாமல் இல்லை என்று சொல்கின்ற ஒருவன், இந்த உலகில், அச்சத்தின் உருவெளித் தோற்றமாகக் கருதப்படுவான்.

உலகத்தார் - அறிவால் உயர்ந்தோர்; **வையத்து** - உலகில்; **அலகையா** - அச்சத்தின் உருவெளித் தோற்றமாக; அச்சத்தின் உருவெளித் தோற்றத்தை அலகை என்பது நூல் வழக்கு; பேய் என்பது உலக வழக்கு. **வைக்கப்படும்** - கருதப்படுவான்.

(க-ரை): அறிவால் சிறந்தோர் காரண காரிய விளக்கத்தோடு உண்டு என்று நிலைநாட்டிய ஒன்றை, ஒரு காரணமும் காட்டாமல் இல்லை என்று ஒரேயடியாக மறுத்துரைப்பவன். உலகத்தாரால் எப்பொழுதும் அச்சப்படுவதற்குரிய ஒருவனாகவே கருதப்படுவான்.
(850)

86. இகல்

இகல் என்பது, இருவர் தமக்குள்ளே பகைமைப் பண்பு காரணமாக ஏற்படும் மன மாறுபாடு பற்றிய தன்மைகளைக் கூறுதல் எனப்படும்.

**1. இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்
பண்புஇன்மை பாரிக்கும் நோய்.**

எல்லா உயிர்க்கும், பகல் என்னும், பண்பு இன்மை, பாரிக்கும் நோய், இகல் என்ப.

(பொ-ரை): எல்லா மக்களுக்கும், ஒருவரோடொருவர் சேராமையாகிய தீய பண்பை வளர்க்கின்ற குற்றமயமான நோயானது, மன மாறுபாடேயாகும் என்று நூல் வல்லார் கூறுவர்.

எல்லா உயிர்க்கும் - எல்லா மக்களுக்கும்; **பகல்** - ஒருவரோடொருவர் சேராமை; **பகல்** - பகுத்தல்; பகுப்பு; கூடாமை; **பண்பின்மை** - பண்பற்ற தன்மையை; அதாவது தீய பண்பை; **பாரிக்கும்** - வளர்க்கின்ற; **நோய்** - குற்றமயமான நோயானது; **இகல்** - மன மாறுபாடு; **என்ப** - என்று நூல் வல்லார் கூறுவர்.

(க-ரை): மக்களை ஒன்று சேரவிடாமல் தடுக்கின்ற தீய பண்பு எதுவென்றால், மன மாறுபாடு என்று சொல்லப்படுகின்ற ஒருவிதக் குற்றவுணர்வேயாகும். (851)

**2. பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை.**

பகல் கருதிப், பற்றா செயினும், இகல் கருதி, இன்னா செய்யாமை, தலை.

(பொ-ரை): தன்னோடு ஒன்றுபட்டுக்கூடாது இருத்தலை நினைத்து, ஒருவன் வெறுப்பான செயல்களைச் செய்தாலும், அவனோடு கொண்டுள்ள மாறுபாட்டை நினைத்து மற்றொருவர் அவனுக்குத் துன்பம் தரும் தீமையினைச் செய்யாதிருத்தல் உயர்ந்த பண்பாகும்.

பகல் - தன்னோடு ஒன்றுபட்டுக்கூடாமையை; **கருதி** - நினைத்து; **பற்றா** - வெறுப்பான செயல்களைச் செய்தாலும்; **இகல்** - மன மாறுபாடு; **இன்னா** - துன்பந்தரும் தீமையினை; **தலை** - சிறந்ததாகும்.

(க-ரை): ஒருவரோடு ஒன்று சேராதவன் வெறுப்பான செயல்களை அவருக்குச் செய்தான் என்றாலும், அவனோடு கொண்டிருக்கும் மாறுபாடு காரணமாக, அவர் அவனுக்குத் துன்பந் தரும் தீமைகளைப் புரியாமலிருப்பது சிறந்த பண்பாகும். (852)

3. இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்
தாவில் விளக்கம் தரும்.

இகல் என்னும், எவ்வ நோய், நீக்கின், தவல் இல்லாத், தாவில், விளக்கம் தரும்.

(பொ-ரை): மன மாறுபாடு என்று சொல்லப்படுகின்ற துன்பம் தருகின்ற நோயினை, ஒருவன் தன் மனத்தைவிட்டு நீக்கி விடுவானாகில், அந்த நிலை அழிவு இல்லாததற்குக் காரணமான பழுதில்லாத புகழை அவனுக்குக் கொடுக்கும்.

இகல் - மன மாறுபாடு; **எவ்வம்** - துன்பம்; **தவல் இல்லாத** - அழிவு இல்லாததற்குக் காரணமான; **தாவில்** - பழுதில்லாத; **விளக்கம்** - புகழை.

(க-ரை): ஒருவன் மன மாறுபாட்டைத் தன் மனத்தை விட்டு நீக்கி விடுவானேயானால், அந்த நிலை அவனுக்கு நீடித்த பழுதில்லாத புகழைக் கொடுக்கும். (853)

4. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

இகல் என்னும், துன்பத்துள் துன்பம், கெடின், இன்பத்துள், துன்பம் பயக்கும்.

(பொ-ரை): மாறுபாடு என்று கூறப்படும், துன்பங்கள் எல்லாவற்றிலும் மிகக் கொடிய துன்பமானது ஒருவனுக்கு இல்லையானால், அதுவே அவனுக்கு இன்பங்கள் எல்லாவற்றிலும் சிறந்த இன்பத்தைத் தருவதாகும்.

இகல் - மாறுபாடு; **கெடின்** - இல்லை என்றால்.

(க-ரை): மிக்க துன்பத்தைத் தரும் மாறுபாடு ஒருவனுக்கு இல்லையென்றால், அதுவே அவனுக்குச் சிறந்த இன்பத்தைத் தருவதாகும். (854)

5. இகல்எதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகல்ஊக்கும் தன்மை யவர்.

இகல், எதிர், சாய்ந்து ஒழுக, வல்லாரை, மிகல்ஊக்கும், தன்மையவர், யாரே.

(பொ-ரை): தன் மனத்தில் மாறுபாடு உண்டானால் அதற்கு இடங்கொடுக்காமல், எதிர்த்து நடந்துகொள்ளக் கூடிய வல்லமை யுடையவர்களை வெல்லுவதற்கு எண்ணக்கூடிய தன்மை யுடையவர்கள் யார் இருக்கிறார்கள்? ஒருவரும் இருக்க முடியாது!

இகல் - மாறுபாடு மனத்தில் ஏற்படும்போது; **எதிர்சாய்ந்து** - ஏற்காமல் அதனை எதிர்த்து; **மிகல் ஊக்கம்** - வெல்லுவதற்கு எண்ணும் தன்மையுடையவர்கள்.

(க-ரை): தம் மனத்தில் மாறுபாடு ஏற்படும்போதே, அதனை எதிர்த்து அழிக்கக்கூடிய வல்லவர்களை, யார் ஒருவரும் எதிர்த்து வெல்ல முடியாது. (855)

6. இகலின் மிகல்இனிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து.

இகலின், மிகல் இனிது, என்பவன், வாழ்க்கை, தவலும், கெடலும், நணித்து.

(பொ-ரை): எதிர்த்து மாறுபாடு கொள்வதால், வெல்லுதல் இனியது ஆகும் என்று கருதுகின்றவனுடைய வாழ்க்கையானது, விரைவில் துன்பத்திற்கும் அழிவுக்கும் ஆட்படுவதாகும்.

இகலின் - எதிர்த்து மாறுபாடு கொள்வதால்; **மிகல்** - வெல்லுதல்; **தவலும்** - துன்பப்படுதலும்; **கெடலும்** - அழிதலும்; **நணித்து** - விரைவில் நடைபெறக் கூடியனவாகும்.

(க-ரை): எதிர்த்து மாறுபாடு கொள்வதன் மூலம் வெல்லுவது எளிதாகும் என்று கருதுகின்றவனுடைய வாழ்க்கையானது, விரைவில் துன்பமுற்று அழிந்து போய்விடும். (856)

7. மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர்.

இகல்மேவல், இன்னா, அறிவின் அவர், மிகல்மேவல், மெய்ப்பொருள், காணார்.

(பொ-ரை): மாறுபாட்டினை விரும்பும் தீய அறிவினை யுடையவர்கள், வெற்றி தரக்கூடிய நீதி நூல் கருத்துக்களை நன்கு அறியமாட்டார்கள்.

இகல்மேவல் - மாறுபாட்டினை விரும்பும்; **இன்னா அறிவினர்** - தீய அறிவினையுடையவர்கள்; **மிகல்மேவல்** - வெற்றி தரக்கூடிய; **மெய்ப்பொருள்** - நீதி நூல் கருத்துக்களை; **காணார்** - அறியமாட்டார்கள்.

(க-ரை): வெற்றி தரக்கூடிய நீதி நூல்களை நன்கு அறியாத தீய அறிவினர்தாம், மன மாறுபாட்டினை விரும்புவார்கள். (857)

8. இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு.

இகலிற்கு, எதிர்சாய்தல், ஆக்கம்; அதனை மிகல் ஊக்கின், கேடு ஊக்குமாம்.

(பொ-ரை): மனத்தின்கண் மாறுபாடு தோன்றும்போது, அதனை எதிர்த்து நீக்குதல், ஒருவனுக்கு ஆக்கம் தரும்; ஆனால், அந்த மாறுபாட்டை மிகுதியாக வளர்த்தால், அவனுக்குக் கேடுதான் மிகும்.

இகலிற்கு - மனத்தின்கண் மாறுபாடு தோன்றும்போது; **எதிர்சாய்தல்** - அதனை எதிர்த்து நீக்குதல்; **மிகல் ஊக்கின்** - மிகுதியாக வளர்த்தால்; **ஊக்கும்** - மிகும்.

(க-ரை): ஒருவன் மனத்தின்கண் மாறுபாட்டை நீக்குதல், அவனுக்கு ஆக்கம் பயக்கும்; அந்த மாறுபாட்டை மிகுதியாக வளர்த்தால், அவனுக்குக் கேடுதான் மிகும். (858)

9. இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு.

ஆக்கம் வருங்கால், இகல் காணான், அதனை, கேடு தரற்கு, மிகல் காணும்.

(பொ-ரை): ஒருவன் தனக்கு ஆக்கம் வரும்போது, மாறுபாட்டினை நினைத்திருக்க மாட்டான்; ஆனால், அவன் தனக்குக் கேட்டினைத் தேடிக்கொள்ளும்போது, மாறுபாட்டினை மிகுவாக நினைப்பான்.

இகல்காணான் - மாறுபாட்டினை நினைத்திருக்கமாட்டான்; **கேடுதரற்கு** - கேட்டினைத் தேடிக் கொள்வதற்கு; **மிகல்காணும்** - மிகுதியாக நினைப்பான்.

(க-ரை): ஒருவன் மன மாறுபாட்டினைக் கொள்ளாதபோது, அவனுக்கு ஆக்கம் ஏற்படும்; அவன் மன மாறுபாட்டினை நினைக்கும்போது, அவனுக்குக் கேடு ஏற்படும். (859)

**10. இகலான்ஆம் இன்னாத எல்லாம் நகலான்ஆம்
நன்னயம் என்னும் செருக்கு.**

இகலான் ஆம், இன்னாத எல்லாம்; நகலான் ஆம், நன்னயம், என்னும் செருக்கு.

(பொ-ரை): ஒருவனுக்கு மன வேறுபாடு என்ற ஒன்றினாலேயே துன்பம் தருவன எல்லாம் உண்டாகும்; அதற்கு மாறாக, நட்பு ஒன்றினாலேயே, நல்ல பயன் என்று சொல்லப்படுகின்ற பெருமகிழ்ச்சி உண்டாகும்.

இகலான் - மன மாறுபாடு என்ற ஒன்றினாலேயே; **இன்னாத** - துன்பம் தருவன; **ஆம்** - உண்டாகும்; **நகலான்** - நட்பு ஒன்றினாலேயே, **நல்நயம்** - நல்ல பயன்; **செருக்கு** - பெரு மகிழ்ச்சி.

(க-ரை): ஒருவனுக்கு மன மாறுபாடு என்று ஒன்று மட்டும் இருந்தாலும், அவனுக்கு எல்லாத் துன்பங்களும் ஏற்படும். அவனுக்கு நட்பு என்ற ஒன்று இருந்துவிட்டால், பெருமகிழ்ச்சியை உண்டாக்கும் நல்ல பயன் உண்டாகும். (860)

87. பகைமாட்சி

பகைமாட்சி என்பது, ஒருவன் தனக்கு நன்மை பயக்கும் பகையை ஆராய்ந்து, அதற்குரிய வழியில் ஏற்றுக்கொண்டு, செயலாற்றுதல் எனப்படும்.

1. வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை.

வலியார்க்கு, மாறு ஏற்றல், ஓம்புக; மெலியார்மேல், பகை, ஓம்பா, மேக.

(பொ-ரை): ஒருவர், தம்மைவிட வலிமை உள்ளவர்களுக்குப் பகையாக நின்று எதிர்ப்பதை விட்டுவிட வேண்டும்; தம்மைவிட மெலியவர்கள் மேல் பகையாக இருப்பதை விடாமல் விரும்பி மேற்கொள்ள வேண்டும்.

வலியார்க்கு - தம்மைவிட வலிமை உள்ளவர்களுக்கு; **மாறு ஏற்றல்** - பகையாக நின்று எதிர்ப்பதை; **ஓம்புக** - விட்டுவிட வேண்டும்; **பகை** - பகையாக இருப்பதை; **ஓம்பா** - விடாமல்; **மேக** - விரும்பி மேற்கொள்ள வேண்டும்.

(க-ரை): ஒருவர் தம்மைவிட மிக்க வலிமை கொண்டவர் களோடு பகை கொள்ளக்கூடாது; தம்மைவிட மெலியவர்களாக இருந்தால், அவர்கள்மேல் பகை கொண்டு எதிர்த்துப் போரிட முயலலாம். (861)

2. அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு.

அன்புஇலன், ஆன்ற துணைஇலன், தான் துவ்வான், ஏதிலான் துப்பு, என்பரியும்?

(பொ-ரை): ஒருவன், தன்னைச் சார்ந்தவரிடத்தில் அன்பில்லாதவனாகவும், வலிமையான துணையில்லாதவனாகவும், தானும் வலிமையில்லாதவனாகவும் இருந்தால், அவன், தன்னை எதிர்த்துவரும் பகைவனுடைய வலிமையை, எவ்வாறு அழிக்க முடியும்? ஒரு வகையிலும் அழிக்க இயலாது.

அன்பிலன் - தன்னைச் சார்ந்தவர்களிடத்தில் அன்பு இல்லாதவனாகவும்; **ஆன்ற** - வலிமையான; **துவ்வான்** -

வலிமையில்லாதவனாகவும்; **ஏதிலான்** - பகைவனுடைய; **துப்பு** - வலிமையினை; **பரியும்** - அழித்தொழிப்பான்.

(க-ரை): ஒருவன் அன்பு இல்லாதவனாகவும், வலிமையான துணையில்லாதவனாகவும், தானும் வலிமையற்றவனாகவும் இருந்தால், அவன் தன்னுடைய பகைவனுடைய வலிமையை, ஒரு வகையிலும் அழிக்க முடியாது. (862)

3. அஞ்சும் அறியான் அமைவுஇலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு.

அஞ்சும், அறியான், அமைவு இலன், ஈகலான், பகைக்கு, தஞ்சம், எளியன்.

(பொ-ரை): ஒருவன் அஞ்சுகின்றவனாகவும், அறிவற்ற வனாகவும், பொருந்தி வாழும் பண்பு இல்லாதவனாகவும், பிறர்க்கு ஒன்றும் ஈயாதவனாகவும் இருந்தால், அவன் பகைவரால் வெல்லப்படுவதற்கு மிகவும் எளியவன் ஆவான்.

அஞ்சும் - அஞ்சுகின்றவனாகவும்; **அறியான்** - அறிவற்ற வனாகவும்; **அமைவு இலன்** - பொருந்தி வாழும் பண்பு இல்லாதவனாகவும்; **ஈகலான்** - பிறர்க்கு ஒன்றும் ஈயாதவனாகவும்; **தஞ்சம்** - மிகவும்.

(க-ரை): ஒருவன் அஞ்சுகின்றவனாகவும், அறிவற்ற வனாகவும், பண்பு இல்லாதவனாகவும், ஈயாதவனாகவும் இருந்தால், அவனைப் பகைவர்கள் மிகவும் எளிதில் வென்று விடுவார்கள். (863)

4. நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது.

வெகுளி நீங்கான், நிறை இலன், எஞ்ஞான்றும், யாங்கணும், யார்க்கும், எளிது.

(பொ-ரை): ஒருவன் சினம் நீங்காதவனாகவும், பிறர் அறியாமல் மனத்தில் மறைத்து வைக்க வேண்டியவற்றை மறைத்து வைக்காதவனாகவும் இருந்தால், அவனை வெல்லுதல் என்பது, எப்பொழுதும், எவ்விடத்திலும், எவர்க்கும் எளிதாகும்.

வெகுளி நீங்கான் - சினம் நீங்காதவனாய்; **நிறையிலன்** - மனத்தில் மறைத்து வைக்க வேண்டியவற்றை மறைத்து வைக்காதவனாய்.

(க-ரை): ஒருவன் சினத்தை விடாதவனாகவும், மறை பொருளை மறைத்துக் காப்பாற்றாதவனாகவும் இருந்தால்,

அவனைப் பகைவர் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், எளிதில் வென்றுவிடுவர். (864)

**5. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது.**

வழிநோக்கான், வாய்ப்பன செய்யான், பழி நோக்கான், பண்பு இலன், பற்றார்க்கு, இனிது.

(பொ-ரை): ஒருவன் செயல்களைச் செய்யக்கூடிய நல்ல வழியை நோக்காதவனாகவும், பொருத்தமான செயல்களைச் செய்யாதவனாகவும், தன்மேல் வரக்கூடிய பழியைக் கருதிப் பார்க்காதவனாகவும், நல்ல பண்பு இல்லாதவனாகவும் இருந்தால் அவன், பகைவர்களுக்கு வெல்லுவதற்கு ஏற்ற இனிமை பயப்பவனாவான்.

வழிநோக்கான் - செயல்களைச் செய்யக்கூடிய நல்ல வழியை நோக்காதவனாய்; **வாய்ப்பன செய்யான்** - பொருத்தமான செயல்களைச் செய்யாதவனாய்; **பற்றார்க்கு** - பகைவர்க்கு; **இனிது** - இனிமை பயப்பவனாவான்.

(க-ரை): நல்ல வழியை நோக்காதவனாகவும், பொருத்தமான செயல்களைச் செய்யாதவனாகவும், தன் பழியைக் கருதாத வனாகவும், நல்ல பண்பு அற்றவனாகவும், ஒருவன் இருந்தால், அவனை வெல்லுவது என்பது பகைவர்களுக்கு இனிமை தரும் ஒரு செயலாகும். (865)

**6. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும்.**

காணாச் சினத்தான், கழிபெரும் காமத்தான், பேணாமை, பேணப்படும்.

(பொ-ரை): ஏதொன்றையும் பாராத சினத்தை உடையவனும், மிகப்பெரிய காம இச்சையுடையவனும் ஆகியவனது பகையை, ஒருவன் விரும்பி ஏற்றுக்கொள்ளுதல் நல்லது.

காணாத - ஏதொன்றையும் பாராத; **கழிபெரும்** - மிகப்பெரிய; **பேணாமை** - பகைமை; **பேணப்படும்** - விரும்பிக் கொள்ளப்படும்.

(க-ரை): ஏதொன்றையும் பார்க்காமல் சினங்கொள்ளுபவனும், மிகுந்த காம இச்சைக் கொள்ளுபவனும் ஆகியவனது பகைமையை, ஒருவன் விரும்பி ஏற்றுக்கொள்ளலாம். (866)

7. கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்துஇருந்து மாணாத செய்வான் பகை.

அடுத்துஇருந்து, மாணாத செய்வான், கொடுத்தும், பகை, கொளல் வேண்டும், மன்ற.

(பொ-ரை): வினையைத் தொடங்கியிருந்தும் வெல்லுவதற்கு இயலாதவற்றையெல்லாம் செய்து கொண்டிருக்கக்கூடிய எதிரி யானவன் வலியடைவதற்குமுன், சில பொருளைக் கொடுத்தேனும் அவன் பகையை உறுதியாகப் பெற்று, அவனைப் போர்க்களத்தை அடையச் செய்து வெல்ல வேண்டும்.

அடுத்துஇருந்து - வினையைத் தொடங்கியிருந்தும்; **மாணாத செய்வான்** - வெல்லுவதற்கு இயலாதவற்றையெல்லாம் செய்து கொண்டிருக்கக்கூடிய எதிரியின்; **கொடுத்தும்** - சில பொருளைக் கொடுத்தேனும்; **மன்ற** - உறுதியாக.

(க-ரை): போருக்கு ஆயத்தமாகாமல் இருக்கிற எதிரிக்கு, ஒருவர் சில பொருளைக் கொடுத்தாகிலும், அவனது பகையை உறுதியாக விரைவாகப் பெற்று, அவனை வென்றுவிட வேண்டும். (867)

8. குணன்இலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு இனன்இலனாம் ஏமாப்பு உடைத்து.

குணன் இலனாய்க், குற்றம் பலவாயின், இனன் இலனாம், மாற்றார்க்கு, ஏமாப்பு, உடைத்து.

(பொ-ரை): ஒருவன் நற்பண்பு ஒன்றும் இல்லாதவனாகிக் குற்றங்கள் பலவற்றையும் உடையவனானால், அவன் துணை ஏதும் இல்லாதவனாவான்; அந்த நிலைமையே, பகைவர்க்கு உதவியுடையதாக அமைந்துவிடும்.

குணம் - நற்பண்பு ஒன்றும்; **இலனாய்** - இல்லாதவனாகி; **இனன் இலனாம்** - துணை ஏதும் இல்லாதவனாவான்; **மாற்றார்** - பகைவர்; **ஏமாப்பு** - துணையாதல்.

(க-ரை): ஒருவன் நற்பண்பு இல்லாதவனாக இருந்து, குற்றங்களும் பல உடையவனாக இருப்பானேயானால், அவனுக்குத் துணை ஏதும் ஏற்படாது; அந்த நிலைமை பகைவர்களுக்கு உதவி புரிவதாக அமைந்துவிடும். (868)

9. செறுவார்க்குச் சேண்இகவா இன்பம் அறிவுஇலா அஞ்சும் பகைவர்ப் பெறின்.

அறிவு இலா, அஞ்சும், பகைவர்ப், பெறின், செறுவார்க்கு, இன்பம், சேண் இகவா.

(பொ-ரை): அறிவில்லாதவராகவும், அஞ்சுகின்ற தன்மையை உடையவராகவும் உள்ள பகைவர்களைப் பெற்றுவிட்டால், அவர்களை வெல்லுபவர்களுக்கு மேலான இன்பங்கள் நீங்காமல் இருக்கும்.

அறிவுஇலா - அறிவில்லாதவர்களாகவும்; **செறுவார்க்கு** - வெல்லுகிறவர்களுக்கு; **சேண்இன்பம்** - மேலான இன்பங்கள்; **இகவா** - நீங்காமல் இருக்கும்.

(க-ரை): பகைவர்கள் அறிவற்றவர்களாகவும், அஞ்சுகின்றவர் களாகவும் இருப்பார்களேயானால், அவர்களை வெல்லுகிறவர் களுக்கு நிறைவான இன்பம் கிடைக்கும். (869)

10. கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும் ஒல்லானை ஒல்லாது ஒளி.

கல்லான், வெகுளும், சிறுபொருள், ஒல்லானை, எஞ்ஞான்றும், ஒளி ஒல்லாது.

(பொ-ரை): போர் செய்யும் முறையைக் கல்லாத எதிரியைப் பகைத்துக் கொள்ளும் ஓர் எளிய முயற்சியைச் செய்ய மாட்டாத ஒருவனிடம், எந்த ஒரு காலத்திலும் புகழ் வந்து சேராது.

கல்லான் - போர் செய்யும் முறையைக் கல்லாத எதிரியை; **வெகுளும்** - பகைத்துக்கொள்ளும்; **சிறுபொருள் ஒல்லானை** - எளிய முயற்சியைக்கூடச் செய்ய மாட்டாத ஒருவனிடம்; **ஒளி** - புகழ்; **ஒல்லாது** - அடையாது, சேராது.

(க-ரை): போர் செய்யும் முறைகளைக் கற்றுக்கொள்ளாத ஓர் எதிரியைப் பகைத்துக்கொள்ளும் சிறு முயற்சியைக்கூட ஒருவன் செய்யவில்லை என்றால், அவனிடம் புகழானது எந்தக் காலத்திலும் வந்து அடையாது. (870)

88. பகைத்திறம் தெரிதல்

பகைத்திறம் தெரிதல் என்பது, பகைவர்களையும், அவர்களது திறங்களையும், அவர்களிடம் நடந்துகொள்ள வேண்டிய வகைகளையும், முறைகளையும் ஆராய்ந்து அறிதல் எனப்படும்.

**1. பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று.**

பகை என்னும், பண்பில் அதனை, ஒருவன் நகையேயும், வேண்டற்பாற்று, அன்று.

(பொ-ரை): பகை என்று சொல்லப்படும் பண்பற்ற தீமை பயக்கின்ற ஒன்று, ஒருவன் சிரித்துப் பேசும் விளையாட்டுப் பாங்காகக்கூட, விரும்பக்கூடிய தன்மையையுடையதன்று.

பண்பிலது - பண்பற்ற தீமை பயக்கின்ற ஒன்று; **நகையேயும்** - சிரித்துப் பேசும் விளையாட்டுப்பாங்காகக்கூட; **வேண்டற் பாற்றன்று** - விரும்பத்தக்கதன்று.

(க-ரை): பகை என்னும் தீமை பயக்கின்ற பண்பை, ஒருவன் விளையாட்டாகக்கூடக் கைக்கொள்ளக்கூடாது. (871)

**2. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.**

வில்ஏர், உழவர், பகை, கொளினும், சொல்ஏர் உழவர், பகை, கொள்ளற்க.

(பொ-ரை): வில்லை ஏராக உடைய உழவராகிய போர் வீரர்களின் பகையை ஒருவர் கொண்டபோதிலும், சொல்லை ஏராக உடைய உழவராகிய கற்றறிஞர்களின் பகையைக் கொள்ளக்கூடாது.

வில்லேர் உழவர் - வில்லை ஏராக உடைய உழவராகிய போர் வீரர்கள்; **சொல்லேர் உழவர்** - சொல்லை ஏராக உடைய உழவராகிய கற்றறிஞர்கள்.

(க-ரை): ஒருவர் போர் வீரர்களின் பகையைக் கொண்ட போதிலும், புலவர்களின் பகையை ஒருநாளும் கொள்ளக்கூடாது. (872)

**3. ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்.**

தமியனாய்ப், பல்லார் பகை, கொள்பவன், ஏமுற்றவரினும், ஏழை.

(பொ-ரை): எவனொருவன், தான் தன்னந்தனியாக இருந்து, பலருடைய பகையையும் தேடிக் கொள்கிறானோ, அவன் பித்துப் பிடித்தவரைக்காட்டிலும், அறிவில்லாதவனாகவே கருதப்படுவான்.

தமியனாய் - தான் தன்னந்தனியாக இருந்து; **ஏமுற்றவரின்** - பித்துப்பிடித்தவரைக் காட்டிலும்; **ஏழை** - அறிவில்லாதவனாகக் கருதப்படுவான்.

(க-ரை): ஒருவன், தன்னந்தனியாகவே இருந்து பலருடைய பகையையும் கொள்வானேயானால், அவன் பித்துக் கொண்டவரைக் காட்டிலும் அறிவில்லாதவனாவான். (873)

**4. பகைநட்பாக் கொண்டுஒழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு.**

பகை நட்பாக் கொண்டு ஒழுகும், பண்புடையாளன், தகைமைக்கண், உலகு தங்கிற்று.

(பொ-ரை): வேண்டியபோது, பகைவர்களையும், நண்பர்களாக ஆக்கிக்கொண்டு, நடக்கவல்ல பண்புடையாளனின் பெருமை யினிடத்து, இவ்வுலகமானது, அடங்கி நிற்கும் தன்மையது ஆகும்.

பகை - பகைவர்களையும்; **நட்பா** - நண்பர்களாக; **கொண்டு** - ஆக்கிக்கொண்டு; **ஒழுகும்** - நடக்கவல்ல; **தகைமைக்கண்** - பெருமையினிடத்து; **தங்கிற்று** - அடங்கி நிற்பதாகும்.

(க-ரை): வேண்டியபோது, பகைவர்களையும் நண்பர்களாக ஆக்கிக்கொண்டு வாழும் பண்புடையவன் ஒருவனின் பெருமையை, இவ்வுலகத்தார் போற்றிப் புகழ்வார்கள். (874)

**5. தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கஅவற்றின் ஒன்று.**

தன்துணை இன்றால், பகை இரண்டால், தான் ஒருவன், அவற்றின் ஒன்று, இன்துணையாக், கொள்க.

(பொ-ரை): தனக்கு உதவி செய்யக்கூடிய துணைவரும் இல்லாமல், பகைவர்களும் இரண்டு பிரிவினராக இருந்தால், தனி

ஒருவனாக இருக்கும் அவன், அப்பகைப் பிரிவினருள் ஒரு பிரிவினரை, அந்த நேரத்திற்குத் தனக்கு ஏற்ற இனிய துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

தன்துணை - தனக்கு உதவி செய்யக்கூடிய துணைவர்கள்; **இன்றால்** - இல்லாமல்; **இன்துணையா** - ஒரு பிரிவினரை அந்த நேரத்திற்குத் தனக்கு ஏற்ற இனிய துணையாக; **கொள்க** - கொள்ளுதல் வேண்டும்.

(க-ரை): ஒருவன், தனக்குத் துணைவர்கள் எவரும் இல்லாமல் இருந்து, பகைவர்கள் இரண்டு பிரிவினராக இருந்தால், அவர்களுள் ஒரு பிரிவினரை, அவன், தனக்கு ஏற்ற இனிய துணையாக ஆக்கிக்கொள்ள வேண்டும். (875)

6. தேறினும் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல்.

தேறினும், தேறாவிடினும், அழிவின்கண், தேறான், பகாஅன், விடல்.

(பொ-ரை): இதற்கு முன்பு பகைவனைப் பற்றி ஆராய்ந்து ஒருவன் தெளிந்திருந்தாலும், தெளியாவிட்டாலும், வேறு வினையின் காரணமாக அழிவு ஏற்படுங்காலத்தில், அப்பகைவனோடு நட்புச்செய்து ஆனால் கூடாமலும், பகைத்து ஆனால் பிரியாமலும் இருத்தல் நலமாகும்.

தேறினும் - பகைவனைப் பற்றி ஆராய்ந்து தெளிந்திருந்தாலும்; **தேறாவிடினும்** - தெளியாவிட்டாலும்; **அழிவின்கண்** - வேறு வினையின் காரணமாக அழிவு ஏற்படும்போது; **தேறான்** - நட்புச் செய்து கூடாமலும்; **பகாஅன்** - பகைத்து நீங்காமலும்; **விடல்** - நடுவாக இருத்தல்.

(க-ரை): பகைவனைப் பற்றி ஒருவன் தெளிந்தாலும், தெளிவடையாவிட்டாலும், வேறு காரணம் பற்றித் தனக்கு அழிவு ஏற்படும்போது, அப்பகைவனோடு நட்புடன் சேராமலும், அவனைவிட்டுப் பகைத்து நீங்காமலும் இடைநிலையில் இருக்க வேண்டும். (876)

7. நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து.

நொந்தது அறியார்க்கு, நோவற்க; மென்மை, பகைவர், அகத்து, மேவற்க.

(பொ-ரை): ஒருவன், தான் துன்பம் உற்றதை எந்த வகையிலும் அறியாதவர்களுக்குத் தனது துன்பத்தைப்பற்றிச் சொல்லாதிருக்க வேண்டும்; தான் வலிமையற்றிருப்பதை, அதனை எதிர்பார்க்கும் பகைவரிடத்தில் தானே வலிந்து வெளிப்படுத்தாது இருக்க வேண்டும்.

நொந்தது - தான் துன்பம் உற்றதை; **நோவற்க** - துன்பத்தைப் பற்றிச் சொல்லக்கூடாது; **மென்மை** - தனது வலிமையற்ற தன்மையை; **மேவற்க** - தானே வலிந்து வெளிப்படுத்தாது இருக்க வேண்டும்.

(க-ரை): ஒருவன், தான் துன்பப்பட்டதை, அதனை அறியாதாரிடம் எக்காரணம் கொண்டும் சொல்லக்கூடாது; தனது வலிமையற்ற தன்மையைப் பகைவர்க்குத் தானே வலிந்து தெரியப்படுத்தக்கூடாது. (877)

8. வகைஅறிந்து தன்செய்து தன்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு.

வகை அறிந்து, தன் செய்து, தன்காப்ப, பகைவர்கண், பட்ட செருக்கு, மாயும்.

(பொ-ரை): ஒருவன் வினை செய்யும் வகையினை அறிந்து, அதற்கு ஏற்பத் தன்னை வலிமையும், வளமும் படுத்திக்கொண்டு, தன்னையும் காத்துக் கொள்வானாயின், அவனது பகைவர்களிடத்தில் ஏற்படும் அகந்தையானது, தானாகவே அழிந்தொழியும்.

வகை அறிந்து - வினை செய்யக்கூடிய வகையினை அறிந்து; **தன்செய்து** - தன்னை வலிமையும், வளமும் படுத்திக்கொண்டு; **தன்காப்ப** - தன்னையும் காத்துக் கொள்ளுவானாயின்; **செருக்கு** - அகந்தை; **மாயும்** - அழியும்.

(க-ரை): ஒருவன் வினை செய்யும் முறையையும் அறிந்து, தன்னை வலிமையும், வளமையும் படுத்திக்கொண்டு, தன்னையும் காத்துக்கொள்வானாகில், அவனுடைய பகைவரின் அகந்தை தானே அழியும். (878)

9. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

முள்மரம், இளைதாக, கொல்க; காழ்த்த இடத்து, களையுநர், கை கொல்லும்.

(பொ-ரை): முள்ளையுடைய மரத்தை, அது சிறு செடியாக இருக்கும்போதே களைந்தெறிய வேண்டும்; காழ்ப்பு ஏறி அது முதிர்ந்துவிடும்போது களையத் தொடங்கினால், களைவோரது கைகளையே வாட்டி வருத்தச் செய்யும்.

இளைதாக - சிறு செடியாக இருக்கும்போதே; **கொல்க** - களைந்தெறிய வேண்டும்; **காழ்த்தவிடத்து** - காழ்ப்பு ஏறி முதிர்ந்து விடும்போது; **கைகொல்லும்** - கைகளை வாட்டி வருத்தும்.

(க-ரை): முட்செடியை இளம் பருவத்திலேயே களைந்தெறிய வேண்டும்; இல்லையாயின் முற்றும்போது அதனைக் களைய முற்பட்டால், அது கையைக் குத்தி வருத்தும். அதுபோலப், பகைவர் வலிமையடைவதற்கு முன்னரே அவரை வெல்ல வேண்டும்; இல்லையாயின் வலிவடைந்தபின் அவர்களை வெல்லுவது என்பது மிகக்கடினம் ஆகும். (879)

10. உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.

செயிர்ப்பவர், செம்மல், சிதைக்கலாதார், உயிர்ப்ப, உளர் அல்லர், மன்ற.

(பொ-ரை): தம்முடன் பகைக்கும் பகைவருடைய அகந்தையை அழிக்கக்கூடியவராக இருந்தும், அழிக்க முடியாதவர்கள், மூச்சு விடுகின்ற அளவுக்குக்கூட உறுதியாக உயிரோடு இருப்பவர்கள் அல்லர்.

செயிர்ப்பவர் - தம்முடன் பகைக்கும் பகைவருடைய; **செம்மல்** - அகந்தையை; **உயிர்ப்ப** - மூச்சு விடுகின்ற அளவிற்குக் கூட; **மன்ற** - உறுதியாக; **உளர்** - உயிரோடு இருப்பவர்கள்.

(க-ரை): பகைவருடைய அகந்தையை அழிக்க முடிந்தும், அழிக்காமல் இருப்பவர்கள், இறுதி வரையில் உயிரோடு இருப்பார்கள் என்று கூற முடியாது. (880)

89. உட்பகை

உட்பகை என்பது, ஒருவன் புறத்தே நட்புடையவன் போலக் காட்டிக்கொண்டு, புறப்பகைக்குத் துணை செய்தும், புறப்பகை வெல்லுவதற்கு இடமளித்தும், உடனிருந்தே கெடுக்கும் தன்மையைக் கூறுதல் எனப்படும்.

**1. நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்.**

நிழல், நீரும், இன்னாத, இன்னா; தமர்நீரும், இன்னாசெயின், இன்னாவாம்.

(பொ-ரை): இனிமை பயக்கும் நிழலும், நீரும் நோய் செய்வனவாக இருக்குமேயானால், அவை தீயனவே ஆகும்; அதுபோல, உட்பகையினராக விளங்கும் சுற்றத்தாரின் தன்மைகள், துன்பம் தருமேயானால், அவையும் தீயனவே ஆகும்.

இன்னாத - நோய் செய்வனவாக இருக்குமேயானால்; **இன்னா** - அவை தீயனவாகவே கருதப்படும்; **தமர்** - உட்பகையான சுற்றத்தாரின்; **நீரும்** - தன்மைகளும்; **இன்னாசெயின்** - துன்பம் தருமேயானால்; **இன்னாவாம்** - தீயனவேயாகும்.

(க-ரை): நிழலும், நீரும் பார்ப்பதற்கு இனிமை தந்தாலும், நோய் செய்வனவாக இருந்தால், அவை துன்பம் தரும்; அதுபோல உட்பகை கொண்ட சுற்றத்தார் பார்ப்பதற்கு உறவினராகக் காணப் பட்டாலும், அவர்கள் துன்பம் தருபவர்களாகவே இருப்பார்கள்.(881)

**2. வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.**

வாள்போல் பகைவரை, அஞ்சற்க; கோள்போல் பகைவர், தொடர்பு, அஞ்சுக.

(பொ-ரை): வாளைப் போன்று வெளிப்பட்டு நிற்கும் பகைவர்களுக்கு ஒருவர் அஞ்ச வேண்டுவதில்லை; ஆனால், உறவினரைப் போன்று மறைந்து நிற்கும் பகைவர்களது நட்பிற்கு அஞ்சுதல் வேண்டும்.

வாள்போல் - வாளைப்போன்று வெளிப்பட்டு நிற்கும்; **அஞ்சற்க** - அஞ்ச வேண்டியதில்லை; **கேள்போல்** - உறவினரைப் போன்று மறைந்து நிற்கும்; **அஞ்சுக** - அஞ்சுதல் வேண்டும்.

(க-ரை): வாளைப்போன்று வெளிப்படையாகத் தோன்றும் பகைவர்களுக்கு ஒருவர் அஞ்ச வேண்டியதில்லை. ஆனால், உறவினரைப் போன்று மறைந்து நின்று பழகும் பகைவர்களுக்கு அஞ்ச வேண்டும். (882)

3. உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

உட்பகை, அஞ்சித், தற்காக்க; உலைவிடத்து, மட்பகையின், மாணத், தெறும்.

(பொ-ரை): ஒருவன், உட்பகைக்கு அஞ்சித் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும்; அப்படிக் காத்துக்கொள்ளாவிட்டால், தனக்கு ஒரு தளர்ச்சி வரும்போது, குயவன் மட்கலத்தினை அறுக்கின்ற கருவிபோலத் தப்பாமல் உட்பகையினர் கெடுத்துவிடுவார்கள்.

உலைவிடத்து - தனக்கு ஒரு தளர்ச்சி வரும்போது; **மட்பகையின்** - குயவன் மட்கலத்தினை அறுக்கின்ற கருவிபோல; **மாண** - தப்பாமல்; **தெறும்** - உட்பகையினர் கெடுத்துவிடுவார்கள்.

(க-ரை): ஒருவன் உட்பகைக்கு அஞ்சித் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும்; அப்படிக் காக்காவிட்டால், மட்பாண்டத்தை அறுக்கும் கருவியைப்போல், உட்பகையானது கெடுத்து விடும். (883)

4. மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா
ஏதம் பலவும் தரும்.

மனம், மாணா, உட்பகை, தோன்றின், இனம் மாணா, ஏதம், பலவும், தரும்.

(பொ-ரை): மனம் திருந்தாமல், ஒருவனுக்கு உட்பகை உண்டாகிவிட்டால், அது அவனது சுற்றம், அவனுக்குச் சார்பாகச் சீர்படாமைக்கு ஏதுவாகிய குற்றங்கள் பலவற்றையும் தந்துவிடும்.

மாணா - திருந்தாத; **இனம்** - சுற்றம்; **மாணா** - சீர்படாமைக்கு ஏதுவாகிய; **ஏதம்** - குற்றங்கள்.

(க-ரை): மனம் திருந்தாத உட்பகையானது, ஒருவனுக்கு ஏற்பட்டுவிடுமானால், அதுவே அவனது சுற்றத்தாரைப் பகைவராக்கும் குற்றத்தைத் தந்துவிடும். (884)

5. உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவும் தரும்.

உறல்முறையான், உட்பகை, தோன்றின், இறல்முறையான், ஏதம் பலவும், தரும்.

(பொ-ரை): உறவின் முறையினரோடு ஒருவனுக்கு உட்பகையானது தோன்றிவிடுமானால், அது அவனுக்கு இறக்கும் வகையான குற்றங்கள் பலவற்றையும் கொடுத்துவிடும்.

உறல் - உறவின்; **முறையான்** - முறையினரோடு; **இறல் முறையான்** - இறக்கும் வகையான; **ஏதம்** - குற்றங்கள்.

(க-ரை): ஒருவனுக்கு நெருங்கிய உறவின் முறையினரோடு உட்பகையானது ஏற்பட்டு விடுமேயானால், அது அவனுக்கு இறக்கும்படியான குற்றங்கள் பலவற்றையும் தந்துவிடும். (885)

6. ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது.

ஒன்றாமை, ஒன்றியார்கண் படின், பொன்றாமை, ஒன்றல், எஞ்ஞான்றும், அரிது.

(பொ-ரை): உட்பகையானது, ஒருவன் தனக்கு உட்பட்டிருப்பவரிடத்திலேயே தோன்றிவிடுமேயானால், அந்த உட்பகையால், அவன் அழியாமல் இருத்தல் ஆகும் என்பது எப்பொழுதும் அரிதாகும்.

ஒன்றாமை - உட்பகையானது; **ஒன்றியார்** - உட்பட்டு இருப்பவரிடத்திலே; **கண்படின்** - தோன்றிவிடுமானால்; **பொன்றாமை** - அழியாதிருத்தல், இறவாதிருத்தல்; **ஒன்றல்** - ஆகும் என்பது; **அரிது** - அரிதாகும்.

(க-ரை): ஒருவன் தனக்கு உட்பட்டு இருப்பவரிடத்திலேயே உட்பகையானது தோன்றிவிடுமேயானால், அதனால் அவன் அழிந்து போவான் என்பது உறுதி. (886)

7. செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி.

செப்பின், புணர்ச்சிபோல், கூடினும், உட்பகை, உற்றகுடி, கூடாதே.

(பொ-ரை): செப்பும் அதன் மூடியும் சேர்ந்திருப்பதைப் போல், வெளித்தோற்றத்திற்குக் கூடிக் காணப்பட்டாலும், உட்பகையானது ஏற்பட்டுள்ள குடியிலுள்ளவர்கள் மனத்தால் ஒன்றுகூட மாட்டார்கள்.

(க-ரை): செப்பும் அதன் மூடியும் சேர்ந்திருப்பதைப் போல, உட்பகை உண்டான குடியிலுள்ளவர்கள் வெளித் தோற்றத்திற்குக் கூடியிருப்பதைப் போல் காணப்பட்டாலும், உள்ளபடியே அவர்கள் மனத்தால் ஒன்று கூடியிருக்க மாட்டார்கள். (887)

8. அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது உட்பகை உற்ற குடி.

உட்பகை, உற்றகுடி, அரம் பொருத, பொன்போலப், பொருது, உரம் தேயும்.

(பொ-ரை): உட்பகை பொருந்திய குடியானது, அரத்தினால் தேய்க்கப்படும் இரும்பினைப்போல, அவ்வுட்பகையால் தேய்க்கப்பட்டுத் தனது வலிமையை இழந்துவிடும்.

அரம் பொருத - அரத்தினால் தேய்க்கப்பட்ட; **பொன்போல** - இரும்பினைப் போல; **பொருது** - தேய்க்கப்பட்டு; **உரம் தேயும்** - வலிமை இழந்துவிடும்.

(க-ரை): எப்படி அரத்தால் தேய்க்கப்படும் இரும்பானது தேய்ந்து போகுமோ அப்படியே உட்பகையால் தாக்கப்பட்ட குடியும் நாளடைவில் தனது வலிமையை இழந்துவிடும். (888)

9. எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும் உட்பகை உள்ளதாம் கேடு.

எட்பகவு அன்ன, சிறுமைத்தே ஆயினும், கேடு, உட்பகை, உள்ளதாம்.

(பொ-ரை): உட்பகையானது எள்ளினது பிளவினை ஒத்த மிக்க சிறிய அளவை உடையதாகவே இருந்தாலும், ஒரு குடியையே அழிக்கவல்ல கேடு, அவ்வுட்பகையின் உள்ளே இருப்பதாகும்.

எட்பகவு - எள்ளினது பிளவினை; **அன்ன** - ஒத்த; **சிறுமைத்தே** - மிகச்சிறிய அளவை உடையதாக; **ஆயினும்** - இருந்தாலும்; **கேடு** - கேடானது; **உட்பகை உள்ளதாம்** - உட்பகையின் உள்ளே இருப்பதாகும்.

(க-ரை): ஒரு குடியில் ஏற்படும் உட்பகையானது எள்ளினது பிளவைக் காட்டிலும் மிகச் சிறியதாகவே இருந்தபோதிலும், அதுவே போதும் அந்தக் குடியை அழித்து ஒழிக்க. (889)

**10. உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று.**

உடம்பாடு இலாதவர், வாழ்க்கை, குடங்கருள், பாம்போடு, உடன் உறைந்தற்று.

(பொ-ரை): மனப்பொருத்தம் இல்லாதவருடன் ஒருவர் கூடி வாழ்கின்ற வாழ்க்கையானது, ஒரு சிறு குடிசைக்குள், பாம்புடன் சேர்ந்து வாழ்வதைப் போன்றதாகும்.

உடம்பாடு - மனப்பொருத்தம்; **குடங்கருள்** - சிறு குடிசைக்குள்; **உறைந்தற்று** - வாழ்வதைப் போன்றது.

(க-ரை): ஒரு சிறு குடிசைக்குள் பாம்புடன் சேர்ந்து வாழ்வது எவ்வளவு அச்சம் நிறைந்ததோ, அவ்வளவு அச்சம் நிறைந்தது மனப்பொருத்தம் இல்லாதவரோடு ஒருவர் கூடி வாழ்வது என்பதும் ஆகும். (890)

90. பெரியாரைப் பிழையாமை

பெரியாரைப் பிழையாமை என்பது, அறிவாலும், ஆற்றலாலும், ஆண்டாலும், தகுதியாலும், திறமையாலும், பெருமையாலும், புகழாலும் சீரியோர்களாய் விளங்கும் பெரியோர்களுக்குத் தவறு இழைக்காமலும், அவர்களை மதிக்கத் தவறாமலும் இருத்தல் எனப்படும்.

**1. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை.**

ஆற்றுவார் ஆற்றல், இகழாமை, போற்றுவார், போற்றலுள் எல்லாம், தலை.

(பொ-ரை): சிறந்த ஆற்றல் மிக்கவர்களின் ஆற்றலை இகழாதிருத்தலே, தமக்கு தீமை வராமல் காத்துக்கொள்ளுபவர், தம்மைப் போற்றிக் காக்கும் காவல்கள் எல்லாவற்றுள்ளும் தலைசிறந்த ஒன்றாகும்.

ஆற்றுவார் - சிறந்த ஆற்றல் மிக்கவர்களின்; **போற்றுவார்** - தமக்குத் தீமை வராமல் காத்துக்கொள்பவர்; **போற்றலுள்** - தம்மைப் போற்றிக் காக்கும் காவல்கள்; **தலை** - தலைசிறந்த ஒன்றாகும்.

(க-ரை): ஆற்றல் மிக்க பெரியோர்களின் ஆற்றலை ஒருவர் இகழாதிருத்தலே, அவர் தம்மைக் காத்துக்கொள்ளுவதற்கான தலைசிறந்த வழியாகும். (891)

**2. பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்.**

பெரியாரைப், பேணாது ஒழுகின், பெரியாரால், பேரா, இடும்பை தரும்.

(பொ-ரை): ஆற்றல் மிகுந்த பெரியோர்களை நன்கு போற்றி மதிக்காது ஒருவர் நடப்பாரேயாகில், அந்த நடத்தை அப் பெரியோர்களால் அவருக்கு நீங்காத துன்பங்களைக் கொடுப்பதாக அமைந்துவிடும்.

பெரியாரை - ஆற்றல் மிகுந்த பெரியோர்களை; **பேணாது** - நன்கு போற்றி மதிக்காமல்; **ஒழுகின்** - நடப்பாரேயாகில்; **பேரா** - நீங்காத; **இடும்பை** - துன்பங்களை.

(க-ரை): ஆற்றல் மிக்க பெரியோர்களைப் போற்றி மதிக்காது ஒருவர் நடப்பாரேயானால், அப்பெரியோர்களால் அவருக்கு நீங்காத பெருந்துன்பங்கள் ஏற்படும். (892)

3. கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின் ஆற்று பவர்கண் இழுக்கு.

கெடல் வேண்டின், அடல் வேண்டின், ஆற்றுபவர்கண், கேளாது, இழுக்கு, செய்க.

(பொ-ரை): ஒருவன், தானே கெட விரும்புவானேயானால், பகைவர்களை அழிக்க விரும்பி அப்பொழுதே அதைச் செய்து முடிக்கவல்ல பெரியோர்களுக்கு, யாருடைய அறிவுரையையும் கேட்காது, குற்றத்தினை அவன் செய்வானாக.

அடல் வேண்டின் - பகைவர்களை அழிக்க விரும்பி; **ஆற்றுபவர்கண்** - அப்பொழுதே செய்து முடிக்கவல்ல பெரியோர் களுக்கு; **கேளாது** - யாருடைய அறிவுரையையும் கேட்காது.

(க-ரை): ஒருவன் தானே கெட்டுப்போக விரும்புவானே யானால், அப்படிப்பட்டவன் பகைவர்களை நினைத்த அளவில் உடனே அழிக்கவல்ல பெரியோர்களுக்குக் குற்றத்தினைச் செய்வானாக. ஆகவே, நன்றாக வாழ விரும்புகின்றவன், பெரியோர்களுக்குக் குற்றம் இழைக்கக் கூடாது. (893)

4. கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு ஆற்றாதார் இன்னா செயல்.

ஆற்றுவார்க்கு, ஆற்றாதார், இன்னா செயல், கூற்றத்தைக், கையால், விளித்தற்று, ஆல்.

(பொ-ரை): ஆற்றல் மிக்கவர்களுக்கு ஆற்றல் அற்றவர்கள் துன்பங்களைச் செய்தல் என்பது, உயிரைக் கொள்ளக்கூடிய சாவை, ஒருவன் தன் கையினை அசைத்துக்காட்டி, அழைப்பதற்கு ஒப்பாகும்.

ஆற்றுவார்க்கு - ஆற்றல் மிக்கவர்களுக்கு; **ஆற்றாதார்** - ஆற்றல் அற்றவர்கள்; **இன்னாசெயல்** - துன்பங்களைச் செய்தல்; **கூற்று** - சாவு; கூற்று என்பது உயிரையும், உடலையும் கூறுபடுத்துகின்ற ஒன்று; கூற்று, கூற்றுவன் என்பன செய்யுள் வழக்கு; சாவு என்பது உலக வழக்கு.

(க-ரை): வலிவற்றவர்கள் வலிவுடையவர்களுக்குத் துன்பத்தைச் செய்தல் என்பது, சாவைத் தாமே வேண்டி வரவழைத்துக் கொள்வது போன்றதாகும். (894)

5. யாண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்.

வெந்துப்பின் வேந்து, செறப்பட்டவர், யாண்டுச் சென்று, யாண்டும், உளர் ஆகார்.

(பொ-ரை): மிகுந்த வலிமை பொருந்திய வேந்தனால் வெகுளப்பட்டவர்கள், அவனிடமிருந்து தப்பி எங்கே சென்றாலும், எந்தவோரிடத்திலும் அவர்கள் உயிருடன் வாழ மாட்டார்கள்.

வெம் - வெய்ய; **துப்பின்** - வலிமை பொருந்திய; **செறப்பட்டவர்** - வெகுளப்பட்டவர்கள்; **உளர் ஆகார்** - உயிருடன் வாழ மாட்டார்கள்.

(க-ரை): வலிமை மிகுந்த அரசனால் மிகவும் சினந்துகொள்ளப் பட்டவர்கள், அவனிடமிருந்து தப்பி, எங்கே சென்று வாழ முயன்றாலும், அவர்கள் எந்த ஓர் இடத்திலும் உயிர் வாழ முடியாது. (895)

6. எரியாற் சுடப்படினும் உய்வுஉண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

எரியால், சுடப்படினும், உய்வுஉண்டாம், பெரியார்ப், பிழைத்து, ஒழுகுவார், உய்யார்.

(பொ-ரை): ஒருவர் நெருப்பினால் சுடப்பட்டாலும், ஒருகால் உயிர் பிழைத்து வாழ முடியும்; ஆனால் ஆற்றல் மிக்க பெரியோர் களுக்குத் தவறு இழைத்து நடப்பவர், எவ்வழியிலும் உயிர் தப்பி வாழ முடியாது.

உய்வு உண்டாம் - உயிர் தப்பி வாழ முடியும்; **பிழைத்து ஒழுகுவார்** - தவறு இழைத்து நடப்பவர்; **உய்யார்** - உயிர் தப்பி வாழ முடியாது.

(க-ரை): ஒருவர், தீயினால் சுடப்பட்டாலும்கூட அவர் ஒருகால் உயிர் தப்பி வாழ முடியும்; ஆனால், பெரியோர்களுக்குத் தவறு இழைப்பாரேயானால் அவர், எந்த நிலையிலும் உயிர் தப்பி வாழ முடியாது. (896)

7. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்
தகைமாண்ட தக்கார் செறின்.

தகைமாண்ட, தக்கார், செறின், வகைமாண்ட வாழ்க்கையும், வான்பொருளும், என்னாம்.

(பொ-ரை): தகுதியால் மாட்சிமைப்பட்ட பெரியோர்கள், ஒருவனைச் சினந்துகொண்டால், அவனுடைய பலவகையாலும் மாட்சிமைப் பெற்ற வாழ்க்கையும், பெருஞ்செல்வமும் என்ன பயனுடையனவாகும்? ஒரு பயனும் தரா; அவை அனைத்தும் கெடும்.

தகைமாண்ட - தகுதியால் மாட்சிமைப்பட்ட; **தக்கார்** - பெரியோர்கள்; **செறின்** - சினந்துகொண்டால்; **வகை மாண்ட** - பலவகையாலும் மாட்சிமை பெற்ற; **வான் பொருளும்** - பெருஞ் செல்வமும்; **என்னாம்** - என்ன பயனுடையனவாகும்.

(க-ரை): தகுதியால் சிறந்த பெரியோர்கள் ஒருவனைச் சினந்துகொண்டாலும், அவனது வகைவகையான வாழ்க்கையும், பெருஞ்செல்வமும்கூட எதற்கும் பயன்படாது கெட்டொழிந்து போகும். (897)

8. குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து.

குன்றுஅன்னார், குன்ற மதிப்பின், நிலத்து, நின்றுஅன்னார், குடியொடு, மாய்வர்.

(பொ-ரை): மலைபோன்ற பெருமைமிக்க பெரியோர்கள், கெட வேண்டும் என்று நினைப்பாரானால், உலகத்தில் நிலைபெற்று நிற்கும் பெருஞ்செல்வர்களுங்கூடத் தம் குடியோடு அழிவார்கள்.

குன்றன்னார் - மலை போன்ற பெருமைமிக்க பெரியோர்கள்; **குன்ற** - கெட வேண்டும் என்று; **மதிப்பின்** - நினைப்பாரேயானால்; **நின்றன்னார்** - நிலைபெற்று நிற்கக்கூடிய பெருஞ்செல்வர்களும்; **மாய்வர்** - அழிவார்கள்.

(க-ரை): மிகப்பெருமை வாய்ந்த பெரியோர்கள் கெட வேண்டும் என்று நினைத்துவிடுவார்களேயானால், அவ்வளவிலேயே, நிலைத்து வாழக்கூடிய பெருஞ்செல்வர்களுங்கூட அழிந்து போய் விடுவார்கள். (898)

9. ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

ஏந்திய கொள்கையார் சீறின், வேந்தனும், இடை முரிந்து, வேந்து கெடும்.

(பொ-ரை): உயர்ந்த கொள்கையையுடைய பெரியோர்கள் சினந்து கொள்வார்களேயானால், அரசனும் இடையிலே நிலை குலைந்து, அரசையும் இழந்து கெட்டுப்போவான்.

ஏந்திய - உயர்ந்த; **கொள்கையார்** - கொள்கைகளையுடைய பெரியோர்கள்; **சீறின்** - சினந்துகொண்டால்; **இடை முரிந்து** - இடையிலே நிலைகுலைந்து; **வேந்து** - அரசை இழந்து; **கெடும்** - கெடுவான்.

(க-ரை): உயர்ந்த கொள்கைகளையுடைய பெரியவர்கள் சினந்து கொள்வார்களேயானால், அரசனும் நிலைகுலைந்து, அரசு இழந்து கெட்டுப் போவான். (899)

10. இறந்துஅமைந்து சார்புடைய ராயினும் உய்யார்
சிறந்துஅமைந்த சீரார் செறின்.

சிறந்துஅமைந்த, சீரார் செறின், இறந்து, அமைந்த, சார்புடையராயினும், உய்யார்.

(பொ-ரை): சிறந்த பெருமையோடு கூடிய பெரியோர் வெகுளுவார்களானால், அளவுகடந்து அமைந்துள்ள நல்ல துணை களை உடையவர்களானாலும், உயிர் தப்பிப் பிழைக்க முடியாது.

சீரார் - பெரியோர்கள்; **சீறின்** - வெகுளுவார்களானால்; **இறந்து அமைந்த** - அளவுகடந்து அமைந்துள்ள; **சார்பு** - துணைகளை; **உய்யார்** - உயிர் தப்பிப் பிழைக்க முடியாது.

(க-ரை): சிறந்த பெருமையோடு கூடிய பெரியோர்கள் சினந்து கொள்வார்களேயானால், அளவில்லாத துணைகளை உடையவர் களுங்கூட உயிர் தப்பிப் பிழைக்க முடியாது. (900)

91. பெண்வழிச் சேறல்

பெண்வழிச் சேறல் என்பது, மனையாளைக் கண்டு அஞ்சுதல், அவள் சொல்லும் ஆகாதவற்றையெல்லாம் செய்தல், அறநெறிகளையெல்லாம் சாராத மிகுந்த காதல் மயக்கத்தினால், அவள் கூறியதையெல்லாம் செய்தல் போன்ற பெண்ணேவல் செய்து ஒழுகும் கணவரின் தன்மைகளைக் கூறுதல் எனப்படும்.

**1. மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது.**

மனைவிழைவார், மாண்பயன், எய்தார்; வினைவிழைவார், வேண்டாப் பொருளும், அது.

(பொ-ரை): இன்பம் காரணமாக மனைவியை விரும்பி, அவளது ஏவல் கேட்டு நடப்பவர்கள், மாட்சிமைப்பட்ட இல்லறப் பயனை அடையமாட்டார்கள்; ஒருவினையைச் செய்ய முயலுபவர் களைத் தடுக்கக்கூடிய வேண்டாத பொருளும், அந்த ஏவல் செய்து ஒழுகுதலேயாகும்.

மனை - இன்பம் காரணமாக மனைவியை; **விழைவார்** - விரும்பி அவளது ஏவல் கேட்டு நடப்பவர்கள்; **மாண்பயன்** - மாட்சிமைப்பட்ட இல்லறப் பயனை; **எய்தார்** - அடையமாட்டார்கள்; **வினைவிழைவார்** - ஒரு வினையைச் செய்ய முயலுபவர்கள்; **அது** - அந்த ஏவல் செய்து ஒழுகுதலே.

(க-ரை): மனைவியைப் பெரிதும் விரும்பி, அவளது ஏவல் கேட்டு நடப்பவர்கள், இல்லறப் பயனை எய்த முடியாது; அந்தத் தன்மை, அவர்களை வினையைச் செய்யவும் விடாது. (901)

**2. பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.**

பேணாது, பெண்விழைவான், ஆக்கம், பெரியதுஓர், நாண் ஆக, நாணும் தரும்.

(பொ-ரை): ஒருவன், தனது ஆண்மையைப் போற்றிக் காப்பாற்றாமல், மனைவியினது பெண்மையைப் பெரிதும் விரும்பி இருப்பானேயானால் அவன் பெற்றிருக்கும் ஆக்க நிலைமையானது, ஆடவர்க்கெல்லாம் பெரியதொரு நாணந் தருவதாக அமைந்து, பின் அவனுக்கும் நாணத்தினைத் தரும்.

பேணாது - தனது ஆண்மையைப் போற்றிக் காப்பாற்றாமல்; **பெண் விழைவான்** - மனைவியினது பெண்மையை விரும்பி இருப்பவன்; **ஆக்கம்** - பெற்றிருக்கும் நிலைமை; **பெரியதோர் நாணாக** - ஆடவர்களுக்கெல்லாம் பெரியதொரு நாணந் தருவதாக அமைந்து; **நாணுத்தரும்** - தனக்கும் நாணத்தினைத் தரும்.

(க-ரை): ஒருவன் தனது ஆண்மையைப் போற்றிக் காப்பாற்றாமல், மனைவியை விரும்பி, அவளது ஏவல்படி நடப்பானேயானால், அவன் ஆடவர் இனத்தையே நாணம் அடையும்படியாகச் செய்வது மட்டுமல்லாமல், தானும் நாணத்தினைத் தேடிக்கொள்பவன் ஆவான். (902)

3. **இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும்.**

இல்லாள்கண், தாழ்ந்த இயல்பின்மை, நல்லாருள், நாணும், எஞ்ஞான்றும் தரும்.

(பொ-ரை): ஒருவன் தன் மனைவியினிடத்தில் தாழ்ந்து அஞ்சிக்கிடக்கும் தகுதியற்ற தன்மையானது, அவன் நல்லவர் களிடத்தில் செல்லும்போது, நாணம் அடைதலை எந்தக் காலத்திலும் அவனுக்குத் தருவதாகும்.

தாழ்ந்த - தாழ்ந்து அஞ்சிக்கிடக்கும்; **இயல்பின்மை** - தகுதியின்மை; **நாணு** - நாணம் அடைதலை; **தரும்** - அவனுக்குத் தருவதாகும்.

(க-ரை): மனைவியினிடத்தில் தாழ்ந்து அஞ்சிக் கிடக்கும், தகுதியையிழந்த ஒருவன், நல்லாரிடத்தில் செல்லுவானேயானால், அங்கும் அவன் நாணித் தலைகுனிய வேண்டி வரும். (903)

4. **மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறுஎய்தல் இன்று.**

மனையாளை, அஞ்சும், மறுமைஇலாளன், வினையாண்மை, வீறு எய்தல், இன்று.

(பொ-ரை): தனது மனைவிக்கு அஞ்சி நடக்கின்ற மறு வாழ்வு இல்லாதவனுக்கு, ஒரு தொழிலில் ஆளுந்தன்மை இருந்தபோதிலும், நல்லோரால் போற்றப்படுதலை அவன் பெறுதல் என்பது, இல்லையாகும்.

மறுமையிலாளன் - மறுவாழ்வு இல்லாதவனுக்கு; **வீறு எய்தல்** - நல்லோரால் போற்றப்படுதல்; **இன்று** - இல்லை.

(க-ரை): மனைவிக்கு அஞ்சி நடக்கின்ற மறுவாழ்வு அற்றவன், என்ன தொழில் செய்தாலும், அவன் நல்லோரால் போற்றப்படுதல் என்பது இல்லை. (904)

**5. இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்மற்று எஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்.**

இல்லாளை, அஞ்சுவான், நல்லார்க்கு, நல்ல செயல், எஞ்ஞான்றும், மற்று அஞ்சும்.

(பொ-ரை): மனைவிக்கு அஞ்சி நடப்பவன், நல்லவர்களுக்கு நல்லனவற்றைச் செய்வதற்கு, எந்தக் காலத்திலும் அஞ்சுபவனாவான்.

அஞ்சுவான் - அஞ்சி நடப்பவன்; **நல்ல** - நல்லனவற்றை; **செயல்** - செய்வதற்கு.

(க-ரை): மனைவிக்கு அஞ்சி நடப்பவன், நல்லவர்களுக்கு நல்ல செயல்களைச் செய்வதற்கு, எந்தக் காலத்திலும் அஞ்சிக் கொண்டேயிருப்பான். (905)

**6. இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமைஆர்தோள் அஞ்சு பவர்.**

இல்லாள், அமைஆர்தோள், அஞ்சுபவர், இமையாரின், வாழினும், பாடுஇலரே.

(பொ-ரை): மனைவியின் மூங்கிலையொத்த தோள்களுக்கு அஞ்சி நடப்பவர்கள், எப்பொழுதும் அயராது பணியாற்றும் பெரியோர்களைப்போல வாழ்ந்தாலும், பெருமைக்குரியவர்கள் ஆகமாட்டார்கள்.

அமைஆர்தோள் - மூங்கிலையொத்த தோள்களுக்கு; **அஞ்சுபவர்** - அஞ்சி நடப்பவர்கள்; **இமையாரின்** - எப்பொழுதும் அயராது பணியாற்றும் பெரியோர்களைப் போல; **வாழினும்** - வாழ்ந்தாலும்; **பாடுஇலர்** - பெருமைக்குரியவர்கள் ஆகமாட்டார்கள்.

(க-ரை): தனது மனைவிக்கு அஞ்சி வாழ்பவர்கள், சீரிய பெரியோர்களைப்போல வாழ்ந்தாலும், பெருமைக்குரியவர்களாக ஆகமாட்டார்கள். (906)

**7. பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின் நாண்உடைப்
பெண்ணே பெருமை உடைத்து.**

பெண் ஏவல், செய்துஒழுகும், ஆண்மையின், நாண்உடைப், பெண்ணே, பெருமை, உடைத்து.

(பொ-ரை): மனைவியின் ஏவல் தொழிலை ஏற்று, அதன்படி நடக்கின்ற ஆண் மகனது ஆண்மையைக் காட்டிலும், இயல்பாகவே நாணமுடைய பெண் மகளது பெண்மையே பெருமையுடையதாகும்.

பெண் - மனைவியின்; **ஆண்மையின்** - ஆண் மகனது ஆண்மையைக் காட்டிலும்; **பெண்ணே** - பெண் மகளது பெண்மையே.

(க-ரை): மனைவியின் ஏவல் தொழிலை ஏற்று நடக்கின்ற ஓர் ஆண்மகனைக் காட்டிலும், நாணமுடைய ஒரு பெண்ணே பெருமை யுடையவள் ஆவாள். (907)

**8. நட்டார் குறைமுடியார் நன்றுஆற்றார் நல்நுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர்.**

நல்நுதலாள், பெட்டாங்கு, ஒழுகுபவர், நட்டார், குறைமுடியார், நன்று ஆற்றார்.

(பொ-ரை): அழகான நெற்றியையுடைய மனைவியின் விருப்பத்தின்படியே நடப்பவர்கள், நண்பர்களுக்கு உள்ள குறைகளையும் செய்து முடிக்க மாட்டார்கள்; நல்ல அறச் செயல்களையும் செய்ய மாட்டார்கள்.

நல்நுதலாள் - அழகான நெற்றியுடைய மனைவியின்; **பெட்டாங்கு** - விருப்பத்தின்படியே; **ஒழுகுபவர்** - நடப்பவர்கள்; **நட்டார்** - நண்பர்கள்; **குறை** - குறைகளை; **முடியார்** - செய்து முடிக்க மாட்டார்கள்; **நன்று** - அறச்செயல்களையும்; **ஆற்றார்** - செய்ய மாட்டார்கள்.

(க-ரை): மனைவியின் விருப்பப்படியே நடப்பவர்கள், தமது நண்பர்களது குறைகளையும் போக்க மாட்டார்கள்; நல்ல அறச்செயல்களையும் செய்ய மாட்டார்கள். (908)

**9. அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல்.**

பெண் ஏவல், செய்வார்கண், அறவினையும், ஆன்ற பொருளும், பிறவினையும், இல்.

(பொ-ரை): தன் மனைவியின் ஏவலைக் கேட்டுச் செயல் புரிவோரிடம் அறச் செயல்களைச் செய்தலும், அமைந்த பொருள் திரட்டும் முயற்சியில் ஈடுபடுதலும், மற்ற கடமைகளைச் செய்தலும் ஆகிய செயல்களுக்கு இடமில்லை.

அறவினையும் - அறச்செயல்களைச் செய்தலும்; **ஆன்ற பொருளும்** - அமைந்தபொருள் தேடும் முயற்சியில் ஈடுபடுதலும்; **பிறவினையும்** - மற்ற கடமைகளைச் செய்தலும்.

(க-ரை): மனைவியின் ஏவல் கேட்டு நடப்பவர்களிடத்தில் அறச்செயல்களைச் செய்தல், பொருள் திரட்டுதல், பிற கடமைகளைச் செய்தல் போன்ற செயல்களைக் காண முடியாது. (909)

**10. எண்சேர்ந்த நெஞ்சத் திடன்உடையார்க்கு எஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல்.**

எண் சேர்ந்த, நெஞ்சம், திடன்உடையார்க்கு, பெண் சேர்ந்தாம், பேதைமை, இல்.

(பொ-ரை): ஆராய்ச்சி பொருந்திய உள்ளத்தினையும், மன உறுதியையும் உடையவர்களுக்கு, மனைவியின் ஏவலுக்கு இணங்கும் அறியாமை, எக்காலத்திலும் உண்டாவது இல்லை.

எண் சேர்ந்த - ஆராய்ச்சி பொருந்திய; **நெஞ்சத்து** - உள்ளத்தினை; **திடன்** - திடம்; அதாவது மன உறுதி; ''வாளினைத் தொழுவதல்லால் வணங்குதல் மகளிர் ஊடல் நாளினும் உளதோ என்றான்'' என்று இரண்யன் கூற்றாகவும், ''மாதர் வலிய நெடும்புலவியினும் வணங்காத மகுட நிரைவயங்க'' என்று இராவணன் கூற்றாகவும் இராமர் கதையில் கம்பர் கூறியிருப்பது நோக்கத்தக்கது; **பெண் சேர்ந்தாம்** - மனைவியின் ஏவலுக்கு இணங்கும்; **பேதைமை** - அறியாமை.

(க-ரை): எதனையும் ஆராய்ந்து பார்க்கும் உள்ளத்தினையும், மனஉறுதியையும் உடையவர்களுக்கு, மனைவியின் ஏவல் கேட்டு நடக்கும் அறியாமை இருப்பதில்லை. (910)

92. வரைவின் மகளிர்

வரைவின் மகளிர் என்பது, தம் இன்பத்திற்கு உரியவர் இன்னாரென்ற வரைமுறையில்லாது, தமது நலத்திற்கு விலை கொடுப்பார் யாவர்க்கும் தம்மை விற்கத் துணியும் பொது மகளிரின் அல்லது விலைமகளிரின் தன்மைகளைப்பற்றிக் கூறுதல் எனப்படும்.

1. அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார் இன்சொல் இழுக்குத் தரும்.

அன்பின் விழையார், பொருள்விழையும், ஆய்தொடியார், இன்சொல், இழுக்குத் தரும்.

(பொ-ரை): ஒருவனை அன்பின் காரணமாக விரும்பாமல், அவன் தரும் பொருள் காரணமாகவே விரும்புகின்ற, ஆய்ந்தெடுத்த வளையல்களையுடைய விலைமகளிரின் இனிய சொற்களானவை, அவனுக்குப் பின்னர் துன்பத்தையே கொடுப்பனவாகும்.

அன்பின் விழையார் - அன்பு காரணமாக விரும்பாமல்; **பொருள் விளையும்** - ஒருவன் தரும் பொருள் காரணமாகவே விரும்புகின்ற; **ஆய்தொடியார்** - ஆராய்ந்தெடுத்த வளையல்களை யுடைய விலைமகளிர்; **இன்சொல்** - இனிய சொற்கள்; **இழுக்கு** - துன்பத்தை.

(க-ரை): ஒருவனை அன்பு காரணமாக விரும்பாமல், அவன் தரும் பொருள் காரணமாக விரும்புகின்ற விலைமகளிரின் இனிய சொற்கள், அவனுக்குப் பின்னர் துன்பத்தையே கொடுக்கும். (911)

2. பயன்தூக்கிப் பண்புஉரைக்கும் பண்புஇல் மகளிர் நயன்தூக்கி நள்ளா விடல்.

பயன்தூக்கிப், பண்பு உரைக்கும், பண்புஇல் மகளிர், நயன்தூக்கி, நள்ளா விடல்.

(பொ-ரை): தமக்குக் கிடைக்கக்கூடிய பயனை அளந்து பார்த்து, அதற்கு ஏற்றாற்போல் இனிய பண்பான சொற்களை ஒப்புக்காகச் சொல்லும் பண்பற்ற விலைமகளிரின் நடத்தையை ஆராய்ந்தறிந்து, அவர்களோடு பொருந்தாமல், அவர்களை விட்டுவிட வேண்டும்.

பயன் - தமக்குக் கிடைக்கக்கூடிய பயனை; **தூக்கி** - ஆராய்ந்தறிந்து; **நள்ளா** - அவர்களோடு பொருந்தாமல்; **விடல்** - விட்டுவிட வேண்டும்.

(க-ரை): தமக்குக் கிடைக்கக்கூடிய பயனை எதிர்பார்த்து, அதற்கு ஏற்ப ஒப்புக்காக இனிய சொற்களைச் சொல்லும் பண்பற்ற விலைமகளிரை ஒரு போதும் ஒருவர் தம்மோடு சேர்த்துக்கொள்ளக் கூடாது. (912)

3. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில் ஏதில் பிணந்தழீஇ யற்று.

பொருள்பெண்டிர், பொய்ம்மை முயக்கம், இருட்டு அறையில், ஏதில் பிணம், தழீஇ யற்று.

(பொ-ரை): கொடுப்பவர்களை விரும்பாமல், பொருளையே விரும்பும் விலைமகளிரின் பொய்யன்பு காட்டித் தழுவும் தழுவலானது, இருண்ட அறையில், ஒருவர் முன்பின் அறிந்திராத பிணத்தைத் தழுவுவது போன்றதாகும்.

பொருட் பெண்டிர் - பொருள் கொடுப்பவர்களை விரும்பாமல், பொருளையே விரும்பும் விலைமகளிரின்; **பொய்ம்மை முயக்கம்** - பொய்யன்பு காட்டித் தழுவுதல்; **ஏதில் பிணம்** - முன்பின் அறிந்திராத அயலாரது பிணம்; **தழீஇ யற்று** - தழுவியது போன்றதாகும்; மணமாகாத வயதுக்கு வந்த பெண், மடிந்து விடுவாளேயானால், கன்னி கழித்தற் பொருட்டுக் கூலிக்கு ஆள் பிடித்து, இருட்டறையில், அந்தப் பெண்ணோடு அவனைத் தழுவிக் கிடக்கும்படிச் செய்தல், பழங்காலத்தில் சிலர் மேற்கொண்ட வழக்கமாகும்.

(க-ரை): ஆளை விரும்பாமல், அவர் தரும் பொருளையே விரும்பும் விலைமகளிரின் பொய்யன்பு காட்டித் தழுவலானது, இருண்ட அறையில், முன்பின் அறிந்திராத பிணத்தோடு ஒருவர் தழுவிக் கிடத்தலைப் போன்றதாகும். (913)

4. பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள் ஆயும் அறிவி னவர்.

அருள்பொருள், ஆயும் அறிவினவர், பொருள் பொருளார், புன்நலம், தோயார்.

(பொ-ரை): அருளாகிய அரும்பொருளை ஆராயும் அறிவுடையோர், செல்வப் பொருள் ஒன்றை மட்டுமே பொருளாக மதிக்கும் விலைமகளிரின் இழிவான இன்பத்தை விரும்பி ஏற்கமாட்டார்கள்.

அருட்பொருள் - அருளாகிய அரும்பொருளை; **பொருட் பொருளார்** - செல்வப்பொருள் ஒன்றை மட்டும் விரும்பும் விலைமகளிரின்; **புன்னலம்** - இழிவான இன்பத்தை; **தோயார்** - விரும்பி ஏற்கமாட்டார்கள்.

(க-ரை): அருட் செல்வத்தை ஆராயும் அறிவுடையோர், பொருட்செல்வம் ஒன்றை மட்டுமே விரும்பும் விலைமகளிரின் இழிவான இன்பத்தை விரும்பமாட்டார்கள். (914)

**5. பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர்.**

மதிநலத்தின், மாண்ட, அறிவினவர், பொதுநலத்தார், புன்நலம், தோயார்.

(பொ-ரை): இயற்கையான அறிவு நலத்தோடு மாட்சிமைப் பட்ட கற்றறிவுடையவர்கள், பொருள் தருவார் எல்லோர்க்கும் இன்பம் தரும் பொதுமகளிரின் இழிவான இன்பத்தில் ஒருபோதும் திளைக்க மாட்டார்கள்.

மதிநலத்தின் - இயற்கையான அறிவுநலத்தோடு; **மாண்ட** - மாட்சிமைப்பட்ட; **அறிவினவர்** - கற்றறிவுடையவர்கள்; **பொதுநலத்தார்** - பொருள் தருவார் எல்லோர்க்கும் இன்பம்தரும் பொதுமகளிர்; **புன்னலம்** - இழிவான இன்பத்தில்; **தோயார்** - திளைக்க மாட்டார்கள்.

(க-ரை): இயற்கையறிவோடு கற்றறிவினையும் உடைய சீரியோர்கள், பொதுமகளிரின் இழிந்த இன்பத்தில் ஒருபோதும் திளைக்கமாட்டார்கள். (915)

**6. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.**

தகை செருக்கிப், புன்நலம், பாரிப்பார் தோள், தன் நலம், பாரிப்பார், தோயார்.

(பொ-ரை): ஆடல், பாடல், அழகு போன்றவைகளால் செருக்குற்றுத், தம்முடைய இழிவான இன்பத்தை, விலை

கொடுப்பார் யாருக்கும் பரப்புகின்ற விலைமகளிரது தோள்களில், தமது புகழினை உலகில் பரப்பும் சீரியோர்கள் திளைக்கமாட்டார்கள்.

தகைசெருக்கி - ஆடல், பாடல், அழகு முதலியவைகளால் செருக்குற்று; **புன்னலம்** - இழிவான இன்பத்தை; **பாரிப்பார்** - விலை கொடுப்பார் யாருக்கும் பரப்புகின்ற விலைமகளிரது; **தந்நலம்** - தமது புகழை; **பாரிப்பார்** - உலகில் பரப்புகின்ற சீரியோர்கள்; **தோயார்** - திளைக்கமாட்டார்கள்.

(க-ரை): ஆடல், பாடல், அழகு போன்றவைகளால் செருக்குற்றுத் திகழும் விலைமகளிரின் இழிவான இன்பத்தில், புகழ் பரப்பும் பெரியோர்கள் திளைக்கமாட்டார்கள். (916)

**7. நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சில்
பேணிப் புணர்பவர் தோள்.**

பிற நெஞ்சில், பேணிப், புணர்பவர் தோள், நிறைநெஞ்சம், இல்லவர், தோய்வர்.

(பொ-ரை): இன்பம் அல்லாத பிறவாகிய பொருளை, நெஞ்சால் விரும்பி, உடம்பால் மட்டுமே கூடும் பொதுமகளிரின் தோளை, உறுதிப்பாடு கொண்ட நெஞ்சத்தைப் பெறாதவர்கள் மட்டுமே தோய்வார்கள்.

பிற நெஞ்சில் பேணி - இன்பமல்லாத பிறவாகிய பொருளை நெஞ்சால் விரும்பி; **புணர்பவர்** - உடம்பால் மட்டுமே கூடும் பொதுமகளிரின்; **நிறை நெஞ்சம்** - உறுதிப்பாடு கொண்ட நெஞ்சத்தை; **இல்லவர்** - பெறாதவர்கள்.

(க-ரை): பொருளை மட்டுமே மனத்தால் விரும்பி உடலால் கூடும் பொதுமகளிரோடு, உறுதியான நெஞ்சம் இல்லாதவர்கள் மட்டுமே கூடித் திளைப்பார்கள். (917)

**8. ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்குஎன்ப
மாய மகளிர் முயக்கு.**

ஆயும் அறிவினர், அல்லார்க்கு, மாய மகளிர் முயக்கு, அணங்கு என்ப.

(பொ-ரை): ஆராய்ந்து அறியும் அறிவில்லாதவர்கள், வஞ்சனை நிறைந்த பொதுமகளிரைத் தழுவிக்கூடுதல் என்பது, அணங்கின் முயக்கம் போன்றிருப்பதாகும் என்று கூறுவர்.

மாய - வஞ்சனை நிறைந்த; **மகளிர்** - பொதுமகளிரை; **முயக்கு** - தழுவிக்கூடுதல்; **அணங்கின் முயக்கம்** - மிக்க இன்பம் தரும் முயக்கம்; **அணங்கு** - தன் வடிவழகால் ஆடவரை வருத்தும் பெண்; அணங்கு என்பது வருத்தத்தை உணர்த்துவதும் ஆகும்; 'தகையணங் குறுத்தல்' (109-ஆவது அதிகாரம்) - அழகு தன்னை வருத்துதலை வற்புறுத்திக் கூறுதல்; ஆண்களை வருத்தும் பெண் பாற் காமத்தை 'அணங்கு' எனப் பெண் பாலால் கூறுவதும், பெண்களை வருத்தும் ஆண் பாற் காமத்தை 'காமன்' என ஆண் பாலால் கூறுவதும் நூல் மரபாகும்.

(க-ரை): ஆராய்ந்தறியும் அறிவில்லாதவர்களுக்கு மட்டுமே பொதுமகளிரின் முயக்கம் மிக்க இன்பத்தைத் தரும் முயக்கமாகும். (918)

9. வரைவுஇலா மாணிழையார் மென்தோள் புரையிலாப் பூரியர்கள் ஆழும் அளறு.

வரைவு இலா, மாண் இழையார், மென்தோள், புரையிலாப் பூரியர்கள், ஆழும், அளறு.

(பொ-ரை): உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வரைமுறை இல்லாமல், விலை கொடுப்பவர்கள் யாரையும் சேர்கின்ற, சிறப்பான அணிகலன்களையுடைய பொதுமகளிரின் மெல்லிய தோள் களானவை, அக்குற்றத்தினை அறியும் அறிவில்லாத கீழ்மக்கள் வீழும் துன்பக்குழை சேற்றுக் குழியாகும்.

வரைவுஇலா - உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வரைமுறை இல்லாத; **மாண்இழையார்** - சிறப்பான அணிகலன்களை அணிந்த பொதுமகளிரின்; **புரையிலா** - குற்றத்தினை அறியும் அறிவில்லாத; **பூரியர்கள்** - கீழ்மக்கள்; **அளறு** - குழைசேற்றுக்குழி.

(க-ரை): பொதுமகளிர், அறிவில்லாத கீழ்மக்கள் வீழ்ந்து அழுந்தும் குழைசேற்றுக் குழியாவர். (919)

10. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் திருநீக்கப் பட்டார் தொடர்பு.

இருமனப் பெண்டிரும், கள்ளும், கவறும், திருநீக்கப்பட்டார், தொடர்பு.

(பொ-ரை): இருவகைப்பட்ட மனத்தையுடைய பொது மகளிரும், கள்ளும், சூதாட்டமும் ஆகிய இவை மூன்றும் செல்வத்தால் நீக்கப்பட்டவரின் நெருங்கிய உறவாகும்.

இருமனம் - ஒருவனோடு புணர்தலும், புணராமையும் ஒரே காலத்தே உடைய மனம்; **பெண்டிர்** - பொது மகளிர்; **கவறும்** - சூதாட்டமும்; **திரு** - செல்வம்; **தொடர்பு** - உறவு.

(க-ரை): பொதுமகளிர், கள், சூதாட்டம் ஆகிய மூன்றினோடும் தொடர்புடையவர்களிடத்தில் செல்வம் சேராது; எப்பொழுதும் வறுமையிலேயே வாடி வருந்துவர். (920)

93. கள் உண்ணாமை

கள் உண்ணாமை என்பது, ஒருவன் அறிவையும் ஆற்றலையும், பெருமையையும், புகழையும், சீரையும் சிறப்பையும், வாழ்வையும், வளத்தையும், உள்ள நலத்தையும், உடல் நலத்தையும் இழக்கக் காரணமாக இருக்கும் கள்ளினை உட்கொள்ளாதிருத்தல் பற்றிக் கூறுதல் எனப்படும்.

1. உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்.

எஞ்ஞான்றும், கள் காதல், கொண்டு ஒழுகுவார், உட்கப் படாஅர், ஒளி இழப்பர்.

(பொ-ரை): எப்பொழுதும் கள்ளின்மீது மிகுந்த விருப்பங் கொண்டு வாழ்பவர்கள், பகைவர்களால் அஞ்சப்பட மாட்டார்கள்; அதுமட்டுமல்லாமல், தமக்கு உள்ள புகழையும் இழந்துவிடுவார்கள்.

எஞ்ஞான்றும் - எப்பொழுதும்; **கட்காதல்** - கள்ளின்மீது மிகுந்த விருப்பங்கொண்டு; **உட்கப்படாஅர்** - பகைவர்களால் அஞ்சப்படமாட்டார்கள்; **ஒளி** - புகழை.

(க-ரை): எப்பொழுதும் கள்ளினை விரும்பி வாழ்பவர் களுக்குப் பகைவர்கள் அஞ்சமாட்டார்கள்; தாமும் புகழை இழப்பார்கள். (921)

2. உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார்.

கள்ளை, உண்ணற்க; சான்றோரால், எண்ணப்பட வேண்டாதார், உணில், உண்க.

(பொ-ரை): கள்ளை யாரொருவரும் உண்ணக்கூடாது; சான்றோர்களால் நன்கு எண்ணப்படுவதை விரும்பாத ஒருவன் உண்ண விரும்பினால், யாரையும் பொருட்படுத்தாமல் உண்ணலாம்.

உணில் - உண்ண விரும்பினால்; **உண்க** - யாரையும் பொருட்படுத்தாமல் உண்ணலாம்.

(க-ரை): கள்ளை யாரொருவரும் உண்ணக்கூடாது; கள் உண்பவர்களைச் சான்றோர்கள் ஒருநாளும் மதிக்கமாட்டார்கள்.(922)

**3. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.**

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; சான்றோர், முகத்துக்களி, மற்று, என்.

(பொ-ரை): என்ன செய்தாலும் பொறுத்துக் கொள்ளும் பெற்ற தாயின் முகத்தின் முன்னே ஒருவன் கள்ளுண்டு மயங்குதல் என்பது, அவளுக்குத் துன்பந் தருவதாகும்; அப்படியிருக்கக் குற்றங்களைக் கடியும் சான்றோர்களின் முகத்தின் முன்னே அவன் கள்ளுண்டு களித்தல், அவர்களுக்கு எப்படி இருக்கும்? பெருந்துன்பம் அல்லவா தரும்!

இன்னாது - துன்பந் தருவதாகும்; **களி** - கள்ளுண்டு களித்தல்.

(க-ரை): எந்தத் தவறு செய்தாலும் பொறுத்துக்கொள்ளும் தாயும், தன் மகன் கள்ளுண்டு மயங்குதலைப் பார்க்கப் பொறுக்க மாட்டாள் என்றால், எந்தத் தவற்றையும் பொறுத்துக்கொள்ளாத சான்றோர்கள், அவன் கள்ளுண்டு களித்தலை எப்படிப் பொறுத்துக் கொள்வார்கள்? பொறுத்துக் கொள்ளவே மாட்டார்கள். (923)

**4. நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்என்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.**

கள் என்னும், பேணாப், பெருங்குற்றத்தார்க்கு, நாண் என்னும் நல்லாள், புறங்கொடுக்கும்.

(பொ-ரை): கள்ளுண்டல் என்னும் பிறரால் விரும்பப்படாத பெருங்குற்றத்தை உடையவர்களுக்கு, நாணம் எனப்படும் நல்ல பெண்ணானவள், முகத்தைக்காட்டாது புறங்காட்டிச் சென்று விடுவாள்.

கள் - கள்ளுண்டல்; **பேணா** - பிறரால் விரும்பப்படாத; **நாண்** - நாணம்; **நல்லாள்** - நல்ல பெண்ணானவள்; **புறம் கொடுக்கும்** - முகத்தைக் காட்டாமல் புறங்காட்டிச் சென்றுவிடுவாள்.

(க-ரை): கள் குடித்தல் என்னும் பெருங்குற்றத்தைச் செய்பவர்களிடத்தில், நாணம் என்ற பண்பு இருக்காது. (924)

**5. கையறி யாமைஉடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.**

பொருள்கொடுத்து, மெய்யறியாமை, கொளல், கையறியாமை, உடைத்தே.

(பொ-ரை): ஒருவன் விலைப் பொருளைக் கொடுத்து, மெய்ம்மறதியைக் கைம்மாறாகப் பெற்றுக்கொள்ளுதல், அவன் செய்வது இன்னதென்று அறியாத அறியாமையை உடையதாகும்.

பொருள்கொடுத்து - விலைப்பொருள் கொடுத்து; **மெய்யறியாமை** - மெய்ம்மறதியை; **கையறியாமை** - செய்வது இன்னதென்று அறியாத அறியாமையை.

(க-ரை): ஒருவன் விலைப் பொருள் கொடுத்து மெய்யறி யாமையைப் பெற்றுக் கொள்ளுதல் என்பது, அவனது அறியாமையால் ஏற்படும் விளைவாகும். (925)

**6. துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்உண் பவர்.**

துஞ்சினார், செத்தாரின் வேறு அல்லர்; கள் உண்பவர், எஞ்ஞான்றும், நஞ்சு உண்பார்.

(பொ-ரை): தூங்குபவர்கள், அறிதலை இழத்தலால், செத்தவர்களைக் காட்டிலும் அப்போதைக்கு வேறுபட்டவர்கள் ஆக மாட்டார்கள்; அவ்வாறே கள்ளை உண்பவர்கள், எந்தக் காலத்திலும், அறிவை இழத்தலால் நஞ்சு உண்பவர்களைக் காட்டிலும் வேறுபட்டவர்கள் ஆகமாட்டார்கள்.

துஞ்சினார் - தூங்குபவர்கள்; **நஞ்சு** - மயக்கத்தையும், மரணத்தையும் உண்டாக்கக்கூடிய நச்சுப்பொருள்.

(க-ரை): தூக்கமானது எப்படிச் செத்தவர்களைப் போல அறிதலை இழக்கச் செய்யுமோ, அப்படியே, கள்ளும் நஞ்சைப்போல அறிவை இழக்கச் செய்யும். (926)

**7. உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ஒற்றிக் கண்சாய் பவர்.**

கள் ஒற்றி, எஞ்ஞான்றும், கண் சாய்பவர், உள்ளூர், உள் ஒற்றி, நகப்படுவர்.

(பொ-ரை): கள்ளைப் பிறர் அறியாமல் மறைந்திருந்து உண்டு, அக்களிப்பால் எப்போதும் தம் கண்கள் சுழன்று அறிவு மயங்குபவர்கள், உள்ளூரில் வாழ்பவர்களால் அவ்உண்மை அறியப்பட்டு, சிரித்து இகழப்படுவார்கள்.

கள்ஒற்றி - கள்ளை மறைந்திருந்து உண்டு; **கண் சாய்பவர்** - அக்களிப்பால் கண்கள் சுழன்று அறிவு மயங்குபவர்கள்; **உள்ளூர்** - உள்ளூரில் வாழ்பவர்கள்; **நகப்படுவர்** - சிரித்து இகழப்படுவார்கள்.

(க-ரை): ஒருவன் பிறர் அறியாமல் மறைந்திருந்து குடித்தாலும், அவனது கண்கள் சுழன்று மயங்குவதைப் பார்ப்பவர்கள், அவனை எள்ளி நகையாடவே செய்வார்கள். (927)

**8. களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.**

களித்து அறியேன், என்பது, கைவிடுக; நெஞ்சத்து, ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.

(பொ-ரை): ஒருவன், தான் கள்ளை எக்காலத்திலும் உண்டு அறிய மாட்டேன் என்று பொய்ம்மொழி கூறுதலை விட்டுவிட வேண்டும்; எனென்றால், உண்டவுடனேயே, அவன் மனத்தில் மறைத்து வைத்திருந்த குற்றமெல்லாம் வெளிப்பட்டுவிடும்.

களித்தறியேன் - தான் கள்ளை எந்தக் காலத்திலும் உண்டு அறியமாட்டேன்; **ஒளித்ததூஉம்** - மனத்தில் மறைத்து வைத்திருந்த குற்றமெல்லாம்; **மிகும்** - வெளிப்பட்டுவிடும்.

(க-ரை): ஒருவன் தான் கள்ளை உண்டதேயில்லை என்று பொய் சொல்லக்கூடாது; ஏனெனில் அவன் உண்டவுடனேயே, மனத்தில் மறைத்து வைத்திருந்த குற்றமெல்லாம் வெளிப்பட்டு விடும். (928)

**9. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.**

களித்தானைக், காரணங், காட்டுதல், கீழ்நீர்க், குளித்தானைத், தீத்துரீஇ, அற்று.

(பொ-ரை): கள்ளுண்டு களிப்பவனை, அது கூடாது, தீமை பயக்கும் என்று காரணங்காட்டித் திருத்த முயலுதல் என்பது, தண்ணீருக்குள் மூழ்கிய ஒருவனைத் தீப்பந்தம் பிடித்துக்கொண்டு தேடுதல் போன்றதாகும்.

களித்தானை - கள்ளுண்டு களிப்பவனை; **காரணங் காட்டுதல்** - அதுகூடாது தீமை பயக்கும் என்று காரணங்காட்டித் திருத்த முயலுதல்; **தீத்துரீஇயற்று** - தீப்பந்தம் பிடித்துக்கொண்டு தேடுவது போன்றதாகும்.

(க-ரை): தண்ணீருக்குள் மூழ்கிய ஒருவனைத் தீப்பந்தம் பிடித்துக்கொண்டு தேடினால், அது எப்படி இயலாததொரு செயலோ, அப்படியே, கட்குடிகாரனை, அது தீமை பயக்கும் என்று காரணம் சொல்லித் திருத்த முயல்வது என்பதும் இயலாததொரு செயலாகும். (929)

**10. கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.**

கள்உண்ணாப், போழ்தில், களித்தானைக் காணுங்கால், உண்டதன் சோர்வு, உள்ளான் கொல்.

(பொ-ரை): கட்குடியன் ஒருவன், தான் கள் உண்ணாதபோது, கள்ளுண்டு மயங்கும் மற்றொருவனைக் காணும் போதாகிலும், தான் அதனை உண்ணும்போது உண்டாகும் மயக்கத்தினை நினைத்துப் பார்க்கமாட்டான் போலிருக்கிறது.

உண்டதன் சோர்வு - தான் உண்ணும்போது உண்டாகும் மயக்கத்தினை; **உள்ளான்கொல்** - நினைத்துப் பார்க்கமாட்டான் போலிருக்கிறது.

(க-ரை): கட்குடியன், தான் கள்ளை உண்ணாதிருக்கும்போது, குடிக்கும் மற்றவன் மயங்கி வீழ்வதைப் பார்க்கும்போது, தனக்கும் அந்த நிலைதானே ஏற்படும் என்பதை நினைத்துப் பார்த்திருந்தால், எதிர்காலத்தில் அவன் குடிக்காமலாவது இருப்பான். (930)

94. சூது

சூது என்பது, ஒருவன் தன்னுடைய செல்வத்தையும், செல்வாக்கையும், குடிப் பெருமையையும், பெரும் புகழையும், நேரத்தையும், நினைப்பையும், மதிப்பையும், மரியாதையையும், அறம் பொருள் இன்பச் சூழல்களையும் இழக்கக் காரணமாக இருக்கும் சூது பற்றிய தீமைகளையும், விளைவுகளையும் கூறுதல் எனப்படும்.

1. வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

வென்றிடினும், சூதினை, வேண்டற்க; வென்றதூஉம், தூண்டில் பொன், மீன், விழுங்கி, அற்று.

(பொ-ரை): ஒருவன், தனக்கு வெல்லும் ஆற்றல் இருந்தாலும், அவன் சூதாடுதலை விரும்பக்கூடாது; ஒருகால் வென்று அவன் அடைந்த பொருளும், இரையினால் மறைக்கப்பட்டுத் தூண்டிலில் இருக்கும் இரும்பினை, மீனானது இரையெனக் கருதி விழுங்குவது போன்றதாகும்.

வென்றிடினும் - தனக்கு வெல்லும் ஆற்றல் இருந்தாலும்; **பொன்** - இரும்பினை; **விழுங்கியற்று** - இரையெனக் கருதி விழுங்குவது போன்றதாகும்.

(க-ரை): வெற்றி பெறுகின்ற வாய்ப்பு இருந்தாலும், ஒருவன் சூதாட்டத்தை விரும்பக்கூடாது; வென்று அப்படியே அவன் பொருளை அடைந்தாலும், அது, இரையெனக் கருதி தூண்டிலிலுள்ள இரும்பினை மீன் விழுங்குவது போன்றதாகும். (931)

2. ஒன்றுஎய்தி நூறுஇழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றுஎய்தி வாழ்வதோர் ஆறு.

ஒன்று எய்தி, நூறு இழக்கும், சூதர்க்கும், நன்றுஎய்தி, வாழ்வதோர், ஆறு, உண்டாம்கொல்.

(பொ-ரை): முதலில் ஒரு பொருளை எதிர்பாராமல் வென்று, வெற்றி பெற்ற பின்னர் மேன்மேலும் வெல்லுவோம் என்ற எண்ணத்தில், நூறு பொருள்களைத் தொடர்ந்து இழக்கும் சூதாடி

களுக்கும், நன்மைகளைப் பெற்று வாழும் ஒரு நல்ல வழி உண்டாகுமோ? உண்டாவதில்லை.

ஒன்று எய்தி - முதலில் ஒரு பொருளை எதிர்பாராமல் வெற்றியின் மூலம் பெற்று; **நன்று எய்தி** - நன்மைகளைப் பெற்று; **ஆறு** - நல்ல வழி.

(க-ரை): முதலில் ஒரு பொருளைப் பெற்றுத், தொடர்ந்து நூறு பொருள்களை இழக்கும் சூதாடிகளுக்கு, நன்மை பெறும் வாழ்வு என்பது என்றும் ஏற்படாது. (932)

3. உருள்ஆயம் ஓவாது கூறின் பொருள்ஆயம்
போஒய்ப் புறமே படும்.

உருள்ஆயம், ஓவாது கூறின், பொருள் ஆயம், போஒய்ப், புறமே படும்.

(பொ-ரை): காய் உருளுகின்ற சூதாட்டப் பணையத்தை இடைவிடாமல், ஒருவன் சொல்லிச் சூதாடுவானேயானால், அவனுடைய செல்வமும், அது வருவதற்குரிய வழியும் அவனை விட்டுப் போய்ப் பிறரிடம் தங்கிவிடும்.

உருள் - காய் உருளுகின்ற சூதாட்டத்தில்; **ஆயம்** - பணையம்; கவறு - சூதாடு கருவி; ஆயம் ஆகுபெயராகக் கவற்றிற்குரிய பணையத்தை உணர்த்தும்; **பணையம்** - போட்டிப் பொருள்; (பந்தயங்கட்டுதல்); **பொருள் ஆயம்** - பொருள் வருவதற்குரிய வழி; **புறமே** - பிறரிடம்; **படும்** - தங்கிவிடும்.

(க-ரை): இடைவிடாமல் ஒருவன் பணையங்கள் (பந்தயங்கள்) பலப்பல கூறி, சூதாடுவானேயானால், அவனுடைய செல்வமும், அது வருவதற்குரிய வழியும் பிறரிடம் போய்த் தங்கிவிடும். (933)

4. சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்
வறுமை தருவதுஒன்று இல்.

சிறுமை, பல செய்து, சீர் அழிக்கும், சூதின், வறுமை, தருவது, ஒன்று இல்.

(பொ-ரை): ஒருவனுக்குத் துன்பங்கள் பலவற்றையும் உண்டாக்கி, உள்ள புகழையும் அழிக்கின்ற சூதாட்டத்தினைப் போல, வறுமையைக் கொடுக்கக்கூடியது வேறொன்றும் இல்லை.

சிறுமை - துன்பங்கள்; **பல** - பலவற்றையும்; **செய்து** - உண்டாக்கி; **சீர்அழிக்கும்** - புகழை அழிக்கின்ற.

(க-ரை): ஒருவனுக்குப் பல துன்பங்களையும் தந்து, அவனது புகழையும் அழிக்கக்கூடிய சூதாட்டமானது, அவனுக்கு மிக்க வறுமையைத் தருவதாகும். (934)

5. கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார்.

கவறும், கழகமும், கையும், தருக்கி, இவறியார், இல்லாகியார்.

(பொ-ரை): சூதாடும் கருவியையும், சூதாடும் இடத்தையும், அதற்குரிய செயல் திறனையும் மேற்கொண்டு கைவிடாதவர்கள், எல்லாப் பொருளும் உடையவராக இருந்தபோதிலும், நாளடைவில் ஏதும் இல்லாதவர்களாகவே ஆகிவிடுவார்கள்.

கவறும் - சூதாடும் கருவியையும்; **கழகமும்** - சூதாடும் இடத்தையும்; **கையும்** - சூதாடுவதற்குரிய செயல் திறனையும்; **தருக்கி** - மேற்கொண்டு; **இவறியார்** - கைவிடாதவர்கள்; **இல்லாகியார்** - இல்லாதவராக ஆகிவிடுவார்கள்.

(க-ரை): சூதாடும் கருவி, சூதாடும் இடம், சூதாடுவதற்குரிய செயல்திறன் ஆகியவற்றை எப்பொழுதும் கைவிடாமலிருப்பவர்கள், எல்லாப் பொருளையும் உடையவராக இருந்தபோதிலும், நாளடைவில், ஏதொன்றும் இல்லாதவராக ஆகிவிடுவார்கள். (935)

6. அகடுஆரார் அல்லல் உழப்பர்சூது என்னும்
முகடியான் மூடப்பட் டார்.

சூது என்னும், முகடியான், மூடப்பட்டார், அகடு ஆரார், அல்லல் உழப்பர்.

(பொ-ரை): சூதாட்டம் என்று சொல்லப்படுகின்ற வறுமையால் விழுங்கப்பட்டவர்கள், வயிறு நிறைய உணவும் உண்ண மாட்டார்கள்; அதுமட்டுமல்லாமல், துன்பத்திலும் உழன்று கொண்டிருப்பார்கள்.

முகடியான் - வறுமையால்; **முகடி** - 'மூதேவி'; வறுமை; வறுமையை 'மூத்தாள்' அல்லது 'மூதேவி' என்பதும், செல்வத்தை 'இளையாள்' அல்லது 'திருமகள்' என்பதும் நூல் மரபு; **அகடு** - வயிறு; **ஆரார்** - உணவு உண்டு நிறையப் பெறாதவர்கள்; **அல்லல்** - துன்பம்; **உழப்பர்** - வருந்துவர்.

(க-ரை): சூது என்னும் வறுமையால் விழுங்கப்பட்டவர்கள், வயிறார உண்ணவும் முடியாது; அதுவல்லாமல் துன்பத்திலும் உழலுவார்கள். (936)

7. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

காலை, கழகத்துப் புகின், பழகிய செல்வமும், பண்பும், கெடுக்கும்.

(பொ-ரை): நற்பணிபுரிய வேண்டிய காலமெல்லாம், ஒருவன், சூதாடுமிடத்தில் புகுந்து கழிப்பானாகில், அச்செயல், தொன்றுதொட்டு வந்த அவனுடைய செல்வத்தையும், அவனுடைய நற்பண்புகளையும் கெடுத்துவிடும்.

காலை - நற்பணிபுரிய வேண்டிய காலமெல்லாம்; **கழகத்து** - சூதாடுமிடத்தில்; **புகின்** - புகுந்து கழிப்பானாகில்; **பழகிய** - தொன்றுதொட்டு வந்த.

(க-ரை): ஒருவன் காலமெல்லாம் சூதாடுமிடத்திலேயே கழிப்பானாகில், அவனது பழம் பெருஞ் செல்வமும், நற்பண்புகளும் கெட்டொழியும். (937)

8. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது.

சூது, பொருள் கெடுத்துப், பொய்மேற்கொளீஇ, அருள் கெடுத்து, அல்லல், உழப்பிக்கும்.

(பொ-ரை): சூதாடுதலானது, ஒருவனுடைய பொருளையும் அழித்து, அவனைப் பொய்யையும் மேற்கொள்ளச் செய்து, அவனது அருள் பண்பையும் கெடுத்து, அவனைத் துன்பத்தில் உழல வைத்துவிடும்.

அருள்கெடுத்து - அருள்பண்பைக் கெடுத்து; **அல்லல்** - துன்பம்.

(க-ரை): சூதானது ஒருவனுடைய பொருளை அழிக்கும்; பொய்யை மேற்கொள்ளும்படிச் செய்யும்; அருட்பண்பைக் கெடுக்கும்; அவனைத் துன்பத்தில் உழல வைத்துவிடும். (938)

9. உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்.

ஆயம் கொளின், உடை, செல்வம், ஊண், ஒளி, கல்வி என்று ஐந்தும், அடையாவாம்.

(பொ-ரை): ஒருவன் சூதாட்டத்தினை விரும்பி மேற் கொள்வானேயானால், அவனைப் புகழும், கல்வியும், செல்வமும், உணவும், உடையும் என்று சொல்லப்படும் இவ்வைந்தும் சேராவாம்.

ஆயம்கொளின் - சூதாட்டத்தினை விரும்பி மேற் கொள்வானேயானால், **அடையாவாம்** - சேராவாம்.

(க-ரை): சூதாடும் ஒருவனுக்குப் புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை என்று சொல்லப்படும் ஐந்தும் கிடைக்கப்பெறா. (939)

**10. இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர்.**

இழத்தொறூஉம், காதலிக்கும், சூதேபோல், உயிர், துன்பம், உழத்தொறூஉம், காதற்று.

(பொ-ரை): ஒருவன் பொருளினை இழக்கின்ற போதெல்லாம், அதன்மேல் மேலும் மேலும் விருப்பங் கொள்ளுகின்ற சூதாட்ட மானது, உயிரானது துன்பத்தினை உடம்பினால் நுகரும் போதெல்லாம், அவ்வுடம்பின் மீது மேலும் மேலும் விருப்பங் கொள்வது போன்றதாகும்.

இழத்தொறூஉம் - பொருளினை இழக்கும் போதெல்லாம்; **காதலிக்கும்** - விருப்பங் கொள்ளுகின்ற; **உழத்தொறூஉம்** - துன்பத்தை நுகரும் போதெல்லாம்; **காதற்று** - விருப்பங்கொள்வது போன்றதாகும்.

(க-ரை): உயிரானது துன்பத்தினை உடம்பால் நுகரும் போதெல்லாம் எப்படி அதன் மீது மேன்மேலும் விருப்பங் கொள்ளச் செய்கின்றதோ, அப்படியே சூதாட்டமும், பொருளை இழக்கும் போதெல்லாம், அதனிடத்து மேன்மேலும் விருப்பங்கொள்ளச் செய்கிறது. (940)

95. மருந்து

மருந்து என்பது, ஒருவருக்கு நோய் வருவதற்கான காரணங்களையும், அந்த நோய் வராமல் தடுத்துக் காக்கும் முறைகளையும், மருத்துவ முறைகளையும், நோய் தீர்க்கும் மருந்தையும் பற்றிக் கூறுதல் எனப்படும்.

**1. மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.**

நூலோர், வளிமுதலா, எண்ணிய மூன்று, மிகினும், குறையினும், நோய் செய்யும்.

(பொ-ரை): மருத்துவ நூலோர்கள் காற்று (வாதம்), சூடு (பித்தம்), நீர் (கவம்) என்று எண்ணிக்கூறிய மூன்றும் ஒருவரது உடம்பில் ஏற்ற அளவில் நில்லாமல் மிகுந்தாலும், குறைந்தாலும் அவை நோயை உண்டாக்கும்.

நூலோர் - மருத்துவ நூலோர்கள்; **வாதம்** - காற்று; **பித்தம்** - சூடு; **கவம்** - நீர்; **நோய் செய்யும்** - நோயினை உண்டாக்கும்.

(க-ரை): மருத்துவ நூல் வல்லுநர்கள் கூறியுள்ள காற்று, சூடு, நீர் என்ற மூன்றும் ஒருவரது உடம்பில் அளவோடு இல்லாமல், மிகைப்பட்டாலும், குறைந்தாலும், அதனால் நோய் உண்டாகும்.
(941)

**2. மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.**

அருந்தியது, அற்றது, போற்றி, உணின், யாக்கைக்கு, மருந்து என, வேண்டாவாம்.

(பொ-ரை): ஒருவன், தான் முன்னர் உண்ட உணவானது, நன்கு செரித்துவிட்ட தன்மையைத் தெளிவாக அறிந்து கொண்ட பிறகு, தக்க அளவு உண்பானேயானால், அவனுடைய உடம்புக்கு, மருந்து என்ற ஒன்று வேண்டியதில்லை.

அருந்தியது - முன்னர் உண்ட உணவானது; **அற்றது** - நன்கு செரித்துவிட்ட தன்மையை; **போற்றி** - தெளிவாக அறிந்துகொண்டு; **உணின்** - பிறகு தக்க அளவு உண்பானேயானால்; **யாக்கைக்கு** - உடம்புக்கு.

(க-ரை): ஒருவன் தான் உண்ட உணவானது, நன்கு செரித்து விட்டதை அறிந்துகொண்ட பிறகு தக்க அளவு உண்பானேயானால், அவனது உடம்புக்கு மருந்து என்பது வேண்டியதே இல்லை. (942)

3. அற்றால் அளவு அறிந்து உண்க அஃதுஉடம்பு
பெற்றான் நெடிதுஉய்க்கும் ஆறு.

அற்றால், அளவு அறிந்து, உண்க; உடம்பு பெற்றான், நெடிது உய்க்கும், ஆறு.

(பொ-ரை): ஒருவன், தான் முன்பு உண்ட உணவு செரித்த பிறகு, செரிக்கக்கூடிய அளவினை அறிந்துகொண்டு உண்ண வேண்டும்; உடம்பினைப் பெற்ற ஒருவன், நீண்ட காலம் அவ்வுடம்பினைக் காப்பாற்றி வாழ வைக்கக்கூடிய வழியும் அதுவேயாகும்.

அற்றால் - முன்பு உண்ட உணவு செரித்த பிறகு; **அளவு** - செரிக்கக்கூடிய அளவினை; **நெடிது** - நீண்ட காலம்; **உய்க்கும்** - காப்பாற்றி வாழ வைக்கக்கூடிய; **நெறி** - வழி.

(க-ரை): உண்ட உணவு செரித்த பிறகு, செரிக்கக்கூடிய அளவினை அறிந்து, ஒருவன் உண்ண வேண்டும்; அந்த முறைதான் அவனது உடம்பை நீண்ட காலம் வாழ வைக்கும். (943)

4. அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

அற்றது, அறிந்து, மாறல்ல, கடைப்பிடித்து, துவரப் பசித்து, துய்க்க.

(பொ-ரை): ஒருவன், தான் முன்பு உண்ட உணவு செரித்ததை அறிந்துகொண்டு, உடம்பிற்கு மாறுபாடு இல்லாத உணவைக் குறியாகக்கொண்டு, மிக நன்றாகப் பசித்த பிறகு உண்ண வேண்டும்.

அற்றது - முன்பு உண்ட உணவு செரித்ததை; **மாறு அல்ல** - உடம்பிற்கு மாறுபாடு இல்லாத உணவை; **கடைப்பிடித்து** - குறியாகக்கொண்டு; **துவர** - மிக நன்றாக; **துய்க்க** - உண்ண வேண்டும்.

(க-ரை): ஒருவன், தான் முன்பு உண்ட உணவானது, நன்றாகச் செரித்ததை அறிந்துகொண்டு, உடம்பிற்கு ஒத்துவரக்கூடிய உணவை நன்றாகப் பசித்த பிறகு உண்ண வேண்டும். (944)

**5. மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.**

மாறுபாடு இல்லாத உண்டி, மறுத்து, உண்ணின், உயிர்க்கு, ஊறுபாடு இல்லை.

(பொ-ரை): உடம்பிற்கு மாறுபாடு இல்லாத ஒத்துவரக் கூடிய உணவாக இருந்தபோதிலும், அது அளவிற்கு மீறும்போது, அதனை மறுத்துச், செரிக்கும் அளவிற்கு மட்டுமே ஒருவன் உண்டால், அவனுடைய உயிர் வாழ்க்கைக்கு, நோய்களினால் துன்பம் ஏற்படுதல் என்பது இல்லையாகும்.

மாறுபாடு - உடம்பிற்கு மாறுபாடு; **மறுத்து** - அளவிற்கு மீறும்போது மறுத்து; **உண்ணின்** - செரிக்கும் அளவுக்கு மட்டுமே உண்டால்; **உயிர்க்கு** - உயிர் வாழ்க்கைக்கு; **ஊறுபாடு** - நோய்களினால் துன்பம் ஏற்படுதல் என்பது.

(க-ரை): ஒருவன், தன் உடம்பிற்கு ஒத்துவரக்கூடிய உணவையே உண்டு, அளவுக்கு மீறாமல் பார்த்துக்கொண்டு, செரிக்கும் அளவிற்கு மட்டுமே தொடர்ந்து உண்டு வந்தால், அவனுக்கு நோய்களினால் துன்பம் எதுவும் ஏற்படாது. (945)

**6. இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்.**

இழிவுஅறிந்து, உண்பான்கண், இன்பம்போல், கழிபேர் இரையான்கண், நோய் நிற்கும்.

(பொ-ரை): உண்ணும் அளவில் சிறிது குறைய உண்பதே நல்லதாகும் என்று அறிந்து உண்பவனிடம் காணப்படும் இன்பமானது, நீங்காது நிற்பதுபோலவே, மிகப்படியான உணவை உண்பவனிடம் காணப்படும் நோயும் நீங்காது நிற்கும்.

இழிவு - உண்ணும் அளவில் சிறிது குறைய உண்பதே நல்ல தென்று; **கழிபேர்** - மிகப்படியான; **இரையான்கண்** - உண்பவனிடம்.

(க-ரை): எப்பொழுதும் குறைந்த அளவு உணவு உண்பவனிடம் எப்படி இன்பம் நிலைத்து நிற்குமோ, அப்படியே மிகப்படியான உணவை உண்பவனிடம் நோய் நிலைத்து நிற்கும். (946)

**7. தீயள வன்றித் தெரியான் பெரிதுஉண்ணின்
நோய்அள வின்றிப் படும்.**

தெரியான், தீ அளவு இன்றிப், பெரிது உண்ணின், நோய், அளவுஇன்றிப், படும்.

(பொ-ரை): ஒருவன் தன் உடம்பின் தன்மையையும், அதற்கேற்ற உணவையும், காலத்தையும் ஆராய்ந்து பார்க்காமல், தன் வயிற்றின் செரிக்கும் சூட்டின் அளவையும் அறியாமல், அதற்கும் மிகவாக எதனையும் அவன் உண்பானாகில், அவனிடத்தே நோய்களானவை அளவுகடந்து வளரும்.

தெரியான் - தன் உடம்பின் தன்மையையும், அதற்கேற்ற உணவையும், காலத்தையும் ஆராய்ந்து பார்க்காமல்; **தீயளவன்றி** - வயிற்றில் செரிக்கும் சூட்டின் அளவையும் அறியாமல்; **பெரிது** - மிகவாக; **அளவின்றி** - அளவுகடந்து; **படும்** - வளரும்.

(க-ரை): ஒருவன் தன் உடம்பின் தன்மை, உணவு, காலம் ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்காமல், வயிற்றுப்பசியின் அளவுக்கு மீறி உண்ணுவானேயானால், அவனிடம் நோய்கள் பலவும் வளரும். (947)

8. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

நோய்நாடி, நோய்முதல்நாடி, அது தணிக்கும் வாய்நாடி, வாய்ப்பச், செயல்.

(பொ-ரை): ஒரு நோயாளியின் நோயினை, அதன் குறிகளால் இன்னதென்று அறிந்து, நோய் வருவதற்கான அடிப்படைக் காரணத்தையும் ஆராய்ந்தறிந்து, அந்த நோயினைத் தீர்க்கும் வழியினை அறிந்து, அவ்வழியில் பிழைபடாமல் மருத்துவம் செய்ய வேண்டும்.

நோய் - நோயாளியின் நோயினை; **நாடி** - குறிகளால் இன்னதென்று அறிந்து; **நோய்முதல்** - நோய் வருவதற்கான அடிப்படைக் காரணத்தை; **தணிக்கும்** - தீர்க்கும்; **வாய்** - வழியினை; **வாய்ப்ப** - அவ்வழியில் பிழைபடாமல்; **செயல்** - மருத்துவம் செய்ய வேண்டும்.

(க-ரை): நோயாளியின் நோயையும், அதற்கான காரணத் தையும், அதனைப் போக்கும் வழியினையும் ஆராய்ந்தறிந்து, அந்த வழியில் பிழைபடாமல் மருத்துவம் செய்தல் வேண்டும். (948)

9. உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்.

கற்றான், உற்றான் அளவும், பிணி அளவும், காலமும், கருதிச் செயல்.

(பொ-ரை): மருத்துவ நூல்களைக் கற்றவன், நோயாளியின் தன்மையையும், நோயின் அளவையும், மருத்துவஞ் செய்வதற்கு ஏற்ற காலத்தையும், மருத்துவ நூல் நெறியால் நன்கு எண்ணிப்பார்த்து மருத்துவம் செய்ய வேண்டும்.

உற்றான் - நோயாளியின்; **அளவும்** - தன்மையையும்; **பிணி அளவும்** - நோயின் அளவையும்; **காலமும்** - மருத்துவஞ் செய்வதற்கு ஏற்ற காலத்தையும்; **கருதி** - மருத்துவ நூல் நெறியால் எண்ணிப் பார்த்து; **செயல்** - மருத்துவம் செய்ய வேண்டும்.

(க-ரை): நோயாளியின் தன்மை, பிணியின் அளவு, மருத்துவம் செய்வதற்குரிய காலம் ஆகியவற்றையெல்லாம் மருத்துவ நூல் கற்றவன், முறைப்படி எண்ணிப்பார்த்து, மருத்துவம் செய்ய வேண்டும். (949)

10. உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்என்று
அப்பால்நாற் கூற்றே மருந்து.

உற்றவன், தீர்ப்பான், மருந்து, உழைச்செல்வான், என்று, அப்பால், நாற்கூற்றே, மருந்து.

(பொ-ரை): நோயாளி, நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருத்துவனுக்கு அருகில் இருந்து உதவி செய்பவன் என்ற அந்த நான்கு வகைப்பாடுகளை உடையதே மருத்துவ முறையாகும்.

உற்றவன் - நோயாளி; **தீர்ப்பான்** - நோய் தீர்க்கும் மருத்துவன்; **உழைச்செல்வான்** - மருத்துவனுக்கு அருகில் இருந்து உதவி செய்பவன்; **அப்பால் நாற்கூற்றே** - என்ற அந்த நான்கு வகைப்பாடுகளை உடையதே; **மருந்து** - மருத்துவ முறையாகும்.

(க-ரை): நோயாளி, மருத்துவன், மருந்து, உதவி செய்பவன் என்ற நான்கு வகைக் கூறுபாடுகளைக் கொண்டதே மருத்துவ முறையாகும். (950)

96. குடிமை

குடிமை என்பது, ஒருவர் தாம் பிறந்த குடியின் சிறப்பையும், செல்வாக்கையும், புகழையும், பெருமையையும், தகுதியையும், திறமையையும் வளர்த்து, அதனை உயர்ந்த நற்குடியாக ஆக்குவதற்கு முயலுதல், அதன் தன்மைகளைக் கூறுதல் எனப்படும்.

**1. இற்பிறந்தார் கண்ணல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.**

செப்பமும், நாணும், இல்பிறந்தார் கண், அல்லது, இயல்பாக, ஒருங்கு இல்லை.

(பொ-ரை): நடுவு நிலைமையும், நாணமும் ஆகிய இரு பண்புகளும், உயர்ந்த குடியில் பிறந்தவர்களிடத்தில் அல்லாமல், மற்றவர்களிடத்தில் இயல்பாகவே ஒருசேர அமைவது என்பது இல்லை.

செப்பமும் - நடுவுநிலைமையும்; **இற்பிறந்தார்கண்** - உயர்ந்த குடியில் பிறந்தவர்களிடத்தில்; **ஒருங்கு** - ஒருசேர; **இல்லை** - மற்றவர்களிடத்தில் இல்லை.

(க-ரை): நடுவுநிலைமை, நாணம் என்ற இரண்டு பண்புகளும், உயர்ந்த குடியில் பிறந்தவர்களிடத்தில் மட்டுந்தான், ஒருசேரக் காணப்பட முடியும்; மற்றவர்களிடத்தில் அவற்றை இயல்பாகக் காண முடியாது. (951)

**2. ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.**

குடிப்பிறந்தார், ஒழுக்கமும், வாய்மையும், நாணும், இம்மூன்றும், இழுக்கார்.

(பொ-ரை): உயர்ந்த குடியில் பிறந்தவர்கள், நல்லொழுக்கமும், உண்மையும், நாணமும் ஆகிய இந்த மூன்றிலும் தமது நிலை தவறி ஒருபோதும் நடக்கமாட்டார்கள்.

குடிப்பிறந்தார் - உயர்ந்த குடியில் பிறந்தவர்கள்; **இழுக்கார்** - நிலை தவறி நடக்கமாட்டார்கள்.

(க-ரை): உயர்ந்த குடியில் பிறந்தவர்கள், ஒழுக்கம், வாய்மை, நாணம் ஆகிய மூன்று பண்புகளிலிருந்தும் நிலை தவறி ஒருபோதும் நடக்க மாட்டார்கள். (952)

3. நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.

வாய்மைக் குடிக்கு, நகை, ஈகை, இன்சொல், இகழாமை, நான்கும், வகை என்ப.

(பொ-ரை): எக்காலத்திலும், ஒழுக்கந் தவறாத நற்குடியில் பிறந்தவர்களுக்கு முகமலர்ச்சியும், ஈகைப்பண்பும், இனிய சொற்களைக் கூறுதலும், பிறரை இகழாதிருத்தலும் ஆகிய இந்த நான்கு வகையான பண்புகளும் உரிய தன்மைகளாகவே இருக்கும் என்று கூறுவார்கள் அறிவுடையோர்கள்.

வாய்மைக்குடிக்கு - ஒழுக்கந் தவறாத குடியில் பிறந்தவர்கள்; **நகை** - முகமலர்ச்சி.

(க-ரை): நற்குடியில் பிறந்த உயர்ந்தவர்களுக்கு முக மலர்ச்சி, ஈகை, இன்சொல், இகழாமை ஆகிய நான்கு வகைப் பண்புகளும், உரிய தன்மைகளாக விளங்கக்கூடியனவாகும். (953)

4. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

அடுக்கிய, கோடி பெறினும், குடிப்பிறந்தார், குன்றுவ, செய்தல் இலர்.

(பொ-ரை): அடுக்கிய பலகோடிப் பொருள்களைப் பெறுவதாக இருந்தாலும், உயர்ந்த குடியில் பிறந்தவர்கள், தமது ஒழுக்கம் குன்றுவதற்குக் காரணமான செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

அடுக்கிய கோடி - அடுக்கிய பலகோடிப் பொருள்களை; **குன்றுவ** - ஒழுக்கம் குன்றுவதற்குக் காரணமான செயல்களை; **செய்தல் இலர்** - செய்ய மாட்டார்கள்.

(க-ரை): பலகோடிப் பொருள்களைப் பெறுவதாக இருந்தாலும், உயர்ந்த குடியில் பிறந்தவர்கள், ஒழுக்கக் குறைவான செயல்களை ஒருபோதும் செய்யமாட்டார்கள். (954)

5. வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று.

பழங்குடி, வழங்குவது, உள்வீழ்ந்தக் கண்ணும், பண்பின், தலைப்பிரிதல், இன்று.

(பொ-ரை): தொன்றுதொட்டு வந்த உயர்ந்தகுடியில் பிறந்தவர்கள், தாங்கள் கொடுக்கும் பொருளின் அளவு முன்பு இருந்ததைவிட வறுமையின் காரணமாகக் குறைந்துவிட்ட போதிலும், தமது பண்பிலிருந்து நீங்கமாட்டார்கள்.

பழம் - தொன்றுதொட்டு வந்த; **குடி** - உயர்ந்த குடியில் பிறந்தவர்கள்; **வழங்குவது** - தாங்கள் கொடுக்கும் பொருளின் அளவு; **உள் வீழ்ந்தக் கண்ணும்** - முன்பு இருந்ததைவிட வறுமையின் காரணமாகக் குறைந்துவிட்ட போதிலும்; **தலைப் பிரிதல் இன்று** - நீங்கமாட்டார்கள். 'முன் தோன்றிய மூத்தகுடி' என்று வெண்பா மாலையிலும் (கரந்தை 14), 'பதியெழலறியாப் பழங்குடி' என்று மலைபடு கடாத்திலும் (479), 'பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய புகார்' என்று சிலப்பதிகாரத்திலும் (1:15) வருவதைக் காணலாம்.

(க-ரை): தாம் கொடுக்கும் ஈகைப் பொருளின் அளவு குறைந்துவிட்ட போதிலும், தொன்றுதொட்டு வந்த உயர்ந்த குடியில் பிறந்தவர்களின் நற்பண்பு ஒருபோதும் நீங்காது. (955)

6. சலம்பற்றிச் சால்பில செய்யார்மாசு அற்ற
குலம்பற்றி வாழ்தும் என்பார்.

மாசுஅற்ற, குலம்பற்றி, வாழ்தும், என்பார், சலம்பற்றிச், சால்புஇல, செய்யார்.

(பொ-ரை): குற்றமற்ற உயர்ந்த குடிப்பண்புக்கு ஏற்ப வாழ்கின்றோம் என்று கருதி வாழ்பவர்கள், வஞ்சனை கொண்டு, தமது பெருந்தன்மைக்குப் பொருந்திவராத செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

மாசுஅற்ற - குற்றமற்ற; **குலம் பற்றி வாழ்தும்** - உயர்ந்த குடிப் பண்புக்கு ஏற்ப வாழ்கின்றோம்; **என்பார்** - என்று கருதி வாழ்பவர்கள்; **சலம் பற்றி** - வஞ்சனைகொண்டு; **சால்புஇல** - பெருந்தன்மைக்குப் பொருந்திவராத செயல்களை.

(க-ரை): உயர்ந்த குடிப்பண்புக்கு ஏற்ப வாழ்க்கையை நடத்துபவர்கள், வஞ்சனையால், தமது பெருந்தன்மைக்குப் பொருந்திவராத செயல்களை ஒருபோதும் செய்யமாட்டார்கள். (956)

7. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.

குடிப்பிறந்தார், கண்விளங்கும், குற்றம், விசும்பின், மதிக்கண், மறுப்போல், உயர்ந்து.

(பொ-ரை): உயர்ந்த குடியில் பிறந்தவர்களிடம் காணப்படும் குற்றம் மிகச் சிறியதாகவே இருந்தாலும், அது வானத்தில் உள்ள திங்களிடத்தில் காணப்படும் களங்கத்தினைப் போன்று, ஓங்கி நின்று வெளிப்படையாகவே தோற்றமளிக்கும்.

விசும்பின் - வானத்தில் உள்ள; **மதிக்கண்** - திங்களினிடத்தில்; **மறுப்போல்** - காணப்படும் களங்கத்தினைப் போன்று; **உயர்ந்து விளங்கும்** - ஓங்கி நின்று வெளிப்படையாகத் தோற்றமளிக்கும்.

(க-ரை): வானத்திலுள்ள திங்களிடத்தில் காணப்படும் களங்கம் எப்படி வெளிப்படையாக எல்லோர்க்கும் தெரியும்படியாகத் தோற்றம் அளிக்கிறதோ, அப்படியே உயர்ந்த குடியில் பிறந்தவர் களிடம் காணப்படும் சிறு குற்றமும் எல்லோர்க்கும் தெரியும் படியாகவே வெளிப்படையாகத் தோற்றமளிக்கும். (957)

8. நலத்தின்கண் நார்இன்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

நலத்தின்கண், நார்இன்மை, தோன்றின், அவனைக், குலத்தின்கண், ஐயப்படும்.

(பொ-ரை): நல்ல உயர்ந்த குடியில் பிறந்த ஒருவனின் நற்பண்புகளுக்கிடையே அன்பற்ற தன்மையானது காணப்பட்டால், அவன் உயர்குடியில் பிறந்தவன்தானா என்று உலகத்தார் ஐயங்கொள்ளும்படி நேரிடும்.

நலத்தின்கண் - நல்ல உயர்ந்தகுடியில் பிறந்த ஒருவனிடம்; **நார் இன்மை** - அன்பற்ற தன்மை; **தோன்றின்** - காணப்பட்டால்.

(க-ரை): நற்குடியில் பிறந்த ஒருவனின் நல்ல பண்புகளுக் கிடையே அன்பற்ற தன்மை காணப்பட்டால், அவனது உயர்ந்த குடிப்பிறப்புப் பற்றியேகூட உலகத்தார் ஐயப்படுவார்கள். (958)

9. நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

நிலத்தில் கிடந்தமை, கால் காட்டும்; குலத்தில் பிறந்தார், வாய்ச்சொல், காட்டும்.

(பொ-ரை): ஒரு நிலத்தினுடைய இயல்பை அங்கே விளையக் கூடிய பயிரின் முளையானது இன்னதென்று காட்டிவிடும்; அதுபோல, ஒரு குடியின் இயல்பை, அக்குடியில் பிறந்த ஒருவரது வாயிலிருந்து வரும் சொற்களானவை, இன்ன தன்மையது என்று காட்டிவிடும்.

நிலத்தின் - நிலத்தினுடைய; **கிடந்தமை** - இயல்பை; **கால்** - விளையும் பயிரின் முளை; **குலத்தில்** - குடியில்; **காட்டும்** - காட்டிவிடும்.

(க-ரை): ஒரு நிலத்தின் இயல்பை எப்படி அதில் முளைக்கும் பயிர் முளையின் தன்மை உணர்த்திவிடுமோ, அப்படியே ஒரு குடியின் இயல்பை அக்குடியில் பிறந்த ஒருவரின் வாயிலிருந்து வரும் சொற்களானவை உணர்த்திவிடும். (959)

10. நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின் வேண்டுக யார்க்கும் பணிவு.

நலம் வேண்டின், நாணுடைமை, வேண்டும், குலம் வேண்டின், யார்க்கும் பணிவு, வேண்டுக.

(பொ-ரை): ஒருவன் நலத்தை விரும்புவானேயானால், அவன் நாணம் உடையவனாக இருக்க வேண்டும்; உயர்ந்த குடியை விரும்புவானேயானால், அவன் எல்லோரிடத்திலும் பணிவு உடையவனாக இருக்க வேண்டும்.

குலம் வேண்டின் - உயர்ந்த குடியை விரும்புவானேயானால்; **யார்க்கும்** - எல்லோரிடத்திலும்; **பணிவு** - பணிவுடையவனாக இருக்க வேண்டும்.

(க-ரை): ஒருவன் நலத்தை விரும்பின் அவன் நாணம் உடையவனாகவும், நல்ல உயர்ந்த குடியை விரும்பின் எல்லோரிடத்திலும் பணிவு உடையவனாகவும் இருக்க வேண்டும். (960)

97. மானம்

மானம் என்பது, தன்னிலையில் தாழாமையும், தாழ்ந்த விடத்து உயிர் வாழாமையும் ஆகிய பண்பினைக் கொண்டு ஒருவன் தனது நிலையில் திரியாமல் இருத்தல் பற்றிக் கூறுதல் எனப்படும்.

**1. இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்.**

இன்றிஅமையாச் சிறப்பின, ஆயினும், குன்ற வருப, விடல்.

(பொ-ரை): செய்யாவிட்டால், தான் உயிர்வாழ முடியாது என்ற நிலையில் சிறப்புடைய செயல்கள் என்றாலும், தனது குடிப்பெருமைக்குத் தாழ்வு உண்டாகும் செயல்களை ஒருவன் எப்போதும் விட்டுவிடுதல் வேண்டும்.

இன்றி - செய்யாவிட்டால்; **அமையா** - தான் உயிர் வாழ முடியாத; **சிறப்பின** - சிறப்பையுடைய செயல்கள்; **ஆயினும்** - என்றாலும்; **குன்ற வருப** - தனது குடிப்பெருமைக்குத் தாழ்வு உண்டாக்கக்கூடிய செயல்களை; **விடல்** - விட்டுவிடுதல் வேண்டும்.

(க-ரை): ஒருவன் கட்டாயம் செய்து தீர வேண்டிய செயல்கள் என்றாலும், தனது குடிப்பெருமைக்குத் தாழ்வு உண்டாக்கக்கூடிய செயல்களைச் செய்யாது விட்டுவிட வேண்டும். (961)

**2. *சீரினும் சீர்அல்ல செய்யாரே சீரொடு*
பேராண்மை வேண்டு பவர்.**

சீரொடு, பேராண்மை, வேண்டுபவர், சீரினும், சீர் அல்ல, செய்யாரே.

(பொ-ரை): புகழோடு, பேராண்மை கொண்டு போற்றும் மானத்தையும் காப்பாற்ற விரும்புகின்றவர்கள், அப்புகழைத் தேடும் போதும் தம் குடிப் பெருமைக்குத் தகாத இழி செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

சீரொடு - புகழோடு; **பேராண்மை** - பேராண்மை கொண்டு போற்றும் மானத்தை; **வேண்டுபவர்** - காப்பாற்ற விரும்புகின்ற வர்கள்; ***சீரினும்*** - புகழ் தேடும்போதும்; ***சீர்*** - தமது குடிப்

பெருமைக்கு; **அல்ல** - தகாத இழி செயல்களை; **செய்யார்** - செய்யமாட்டார்கள்.

(க-ரை): புகழையும், மானத்தையும் காப்பாற்ற விரும்பு கின்றவர்கள், அப்புகழைத் தேடும்போதும்கூட, தம் குடிப் பெருமைக்குத் தகாத இழிசெயல்களைச் செய்ய மாட்டார்கள். (962)

3. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

பெருக்கத்து, பணிதல் வேண்டும்; சிறிய சுருக்கத்து, உயர்வு வேண்டும்.

(பொ-ரை): ஒருவருக்குச் செல்வம் பெருகி வளமுள்ளவராக இருக்கும்போது, பிறரிடம் அவர் பணிவாக நடந்துகொள்ள வேண்டும்; சிறிய அளவிற்குச் செல்வம் குறைந்து, வறுமையுற்றவராக இருக்கும்போது, பிறரிடம் அவர் மிக உயர்வாக நடந்துகொள்ள வேண்டும்.

பெருக்கத்து - செல்வம் பெருகி வளமுற்றவராக இருக்கும் போது; **சிறிய சுருக்கத்து** - செல்வம் குறைந்து வறுமையுற்றவராக இருக்கும்போது.

(க-ரை): ஒருவர், தம்முடைய செல்வ நிலையில் பிறரிடம் பணிவாக நடந்துகொள்ள வேண்டும்; வறுமையுறும் நிலையில் பிறரிடம் உயர்வாக நடந்துகொள்ள வேண்டும். (963)

4. தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

மாந்தர், நிலையின், இழிந்தக்கடை, தலையின், இழிந்த, மயிர் அனையர்.

(பொ-ரை): உயர்ந்த குடியில் பிறந்தவர்களாக இருந்தாலும், மக்கள் தமது உயர்ந்த நிலையிலிருந்து தாழ்ந்து போவார்களேயானால், அவர்கள் தலையிலிருந்து உதிர்ந்த மயிருக்கு ஒப்பானவர்கள் ஆவார்கள்.

மாந்தர் - மக்கள்; **நிலையின்** - தமது உயர்ந்த நிலைமை யிலிருந்து; **இழிந்தக் கடை** - தாழ்ந்து போவார்களேயானால்; **அனையர்** - ஒப்பானவர்கள் ஆவார்கள்.

(க-ரை): ஒருவரது தலையிலிருந்து உதிர்ந்த மயிரானது எப்படி இகழப்படுவதாகுமோ, அப்படியே உயர்ந்த குடியில் பிறந்தவர் களும் தாழ்ந்த நிலைக்குச் சென்றால், இகழப்படுபவர்கள் ஆவார்கள். (964)

5. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்.

குன்றின் அனையாரும், குன்றுவ, குன்றி அனைய, செயின், குன்றுவர்.

(பொ-ரை): மலைக்குன்றுபோல் உயர்ந்த நிலையில் பெருமை உள்ளவர்களும், தாழ்வுக்குக் காரணமான செயல்களை, ஒரு குன்றிமணி அளவு செய்தாலும், தாழ்ந்து போய்விடுவார்கள்.

குன்றின் - மலைக்குன்று போல்; **அனையாரும்** - உயர்ந்த நிலையில் பெருமை உள்ளவர்களும்; **குன்றுவ** - தாழ்வுக்குக் காரணமான செயல்களை; **குன்றி அனைய** - குன்றி மணி அளவு; **செயின்** - செய்தாலும்; **குன்றுவர்** - தாழ்ந்துபோய் விடுவார்கள்.

(க-ரை): மலைபோன்று உயர்ந்தவர்களாக இருந்தாலும், குன்றிமணி அளவுக்குத் தாழ்வான செயல்களைச் செய்வார்களே யானால், அவர்கள் அந்த அளவிலேயே தாழ்ந்து போய்விடுவார்கள். (965)

6. புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை.

இகழ்வார்பின் சென்று, நிலை, புகழ் இன்றால், புத்தேள் நாட்டு உய்யாதால், மற்று என்?

(பொ-ரை): மானத்தைவிட்டு ஒருவன் தன்னை இகழ்பவர்களின் பின்னே சென்று நிற்கின்ற நிலையானது, இவ்வுலகில் புகழினையும் தராது; புகழுலகத்தில் அவன் பெயரையும் செலுத்தாது; வேறு என்ன பயன்தான் ஏற்படும்? ஒரு பயனும் ஏற்படாது.

புகழ் - இவ்வுலகில் புகழினையும்; **இன்றால்** - தராது; **புத்தேள் நாட்டு** - புகழுலகத்தில்; **உய்யாது** - அவன் பெயரையும் செலுத்தாது.

(க-ரை): ஒருவன் தன் மானத்தைவிட்டுத் தன்னை இகழ்பவர்களின் பின்னே சென்று நிற்பானேயானால், அவனுடைய

புகழ் இவ்வுலகத்திலும் ஏற்படாது; அவனுடைய பெயர் புகழுலகத்திலும் இடம் பெறாது. (966)

7. ஒட்டார்பின் சென்றுஒருவன் வாழ்தலின் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று.

ஒருவன், ஒட்டார்பின், சென்று, வாழ்தலின், அந்நிலையே, கெட்டான், எனப்படுதல், நன்று.

(பொ-ரை): ஒருவன், தன்னோடு இணக்கமில்லாதவர்களின் பின்சென்று உயிர் வாழ்வதைக் காட்டிலும், அவ்வாறு செய்யாத நிலையில் நின்று அழிந்தான் என்று புகழப்படுதல் நல்லது.

ஒட்டார் - தன்னோடு இணக்கமில்லாதவர்கள்; **வாழ்தலின்** - உயிர் வாழ்தலைக்காட்டிலும்; **அந்நிலையே** - அவ்வாறு செய்யாத நிலையில் நின்று; **கெட்டான்** - அழிந்தான்; **எனப்படுதல்** - என்று புகழப்படுதல்; **நன்று** - நல்லது.

(க-ரை): ஒருவன் தன்னோடு இணக்கமில்லாதவர்களின் பின்னே சென்று உயிர் வாழ்வதைக் காட்டிலும், அவ்வாறு செய்யாமல் அவன் அழிந்துபோதல் நல்ல பெயரைத் தருவதாகும். (967)

8. மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை பீடுஅழிய வந்த இடத்து.

பெருந்தகைமை, பீடு அழிய, வந்த இடத்து, ஊன் ஓம்பும், வாழ்க்கை, மற்று மருந்தோ?

(பொ-ரை): உயர்ந்த குடிப்பிறப்பின் பெருமை மிகுந்த மானமானது கெடவந்த காலத்தில், உயிரை விடாது, உடம்பைக் காக்கும் வாழ்க்கையானது, இறவாமல் ஒருவனைக் காக்கும் மருந்து ஆகுமோ? ஒருபோதும் ஆகாது.

பெருந்தகைமை - உயர்ந்த குடிப்பிறப்பின்; **பீடு** - பெருமை மிகுந்த மானமானது; **ஊன் ஓம்பும்** - உயிரை விடாது உடம்பைக் காக்கும்; **மருந்தோ** - இறவாமல் காக்கும் மருந்து ஆகுமோ?

(க-ரை): உயர்ந்த குடியில் பிறந்த ஒருவனின் மானம் கெட வந்த காலத்தில், உயிரை விடாது, உடம்பை மட்டும் காப்பது என்பது, ஒருபோதும் இறவாமல் இருத்தலைக் காக்க வல்லதன்று. (968)

9. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர்நீப்பர் மானம் வரின்.

மயிர்நீப்பின், வாழாக் கவரிமா அன்னார், மானம் வரின், உயிர் நீப்பர்.

(பொ-ரை): தனது மயிர்த் தொகுதியில் ஒரு மயிர் நீங்கினாலும், உயிரை வைத்துக் கொண்டிராத கவரிமான் போன்ற இயல்புடையவர்கள், தாம் உயிர் விடுவதனாலேயே மானம் நிலைக்குமானால், தமது உயிரையும் விட்டுவிடுவார்கள்.

கவரிமா அன்னார் - கவரிமான் போன்ற இயல்புடையவர்கள்; **மானம்வரின்** - தாம் உயிர்விடுவதனாலேயே மானம் நிலைக்கு மானால்; **உயிர் நீப்பர்** - உயிரையும் விட்டுவிடுவார்கள்.

(க-ரை): உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் தமது உயிரை விட்டால் மானம் நிலைக்கும் என்று தெரிந்தால், மானத்தைக் காப்பாற்ற உயிரையும் விட்டுவிடுவார்கள். (969)

10. **இளிவரின் வாழாத மானம் உடையார்**
ஒளிதொழுது ஏத்தும் உலகு.

இளிவரின், வாழாத, மானம் உடையார், ஒளி, உலகு, தொழுது, ஏத்தும்.

(பொ-ரை): தமக்கு ஓர் இழிவு நேர்ந்தால், உயிர் வாழ விரும்பாத மானம் உடையவர்களின் புகழை, உலகத்தார், எப்போதும் வணங்கிப் போற்றுவார்கள்.

இளிவரின் - தமக்கு ஓர் இழிவு நேர்ந்தால்; **ஒளி** - புகழை; **உலகு** - உலகத்தார்; **தொழுது** - வணங்கி; **ஏத்தும்** - போற்றுவார்கள்.

(க-ரை): தமக்கு ஓர் இழிவு ஏற்பட்டால், உயிர்வாழ விரும்பாத மானம் உடையவர்களின் புகழை, உலகத்தார் என்றும் போற்றிப் புகழவே செய்வார்கள். (970)

98. பெருமை

பெருமை என்பது, செயற்கரிய செயல்களைச் செய்தல், செருக்கு இல்லாதிருத்தல், பிறர்மீது குற்றங்கூறாது இருத்தல் போன்ற நற்பண்புகளால் சிறந்த பெரியோர்களது தன்மைகளைக் கூறுதல் எனப்படும்.

1. ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இளியொருவற்கு
அஃதுஇறந்து வாழ்தும் எனல்.

ஒருவற்கு, ஒளி, உள்ள வெறுக்கை; ஒருவற்கு, இளி, அஃது இறந்து, வாழ்தும், எனல்.

(பொ-ரை): ஒருவற்குப் புகழ் என்பது, செயற்கரிய செய்வோம் என்று அவர் கருதும் ஊக்க மிகுதியேயாகும்; ஒருவற்கு இழிவு என்பது, அந்த ஊக்கம் இல்லாமலேயே உயிர் வாழலாம் என்று எண்ணுதலாகும்.

ஒளி - புகழ் என்பது; **வெறுக்கை** - ஊக்க மிகுதியேயாகும்; **இளி** - இழிவு; **அஃதுஇழந்து** - அந்த ஊக்கம் இல்லாமலேயே; **வாழ்தும்** - உயிர்வாழ்வோம்; **எனல்** - என்று எண்ணுதலாகும்.

(க-ரை): ஒருவர், தாம் செயற்கரிய செய்வோம் என்று அவர் கொள்ளும் ஊக்க மிகுதியே அவருக்குப் புகழாகும்; அவ்வூக்கம் இல்லாமலேயே உயிர்வாழ்வோம் என்று அவர் எண்ணுவது அவருக்கு இழிவாகும். (971)

2. பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

எல்லா உயிர்க்கும், பிறப்பு, ஒக்கும்; செய்தொழில், வேற்றுமையான், சிறப்பு ஒவ்வா.

(பொ-ரை): எல்லா மக்களுக்கும் பிறப்பு என்பது ஒரு தன்மையானதாகத்தான் இருக்கும்; ஆனாலும்கூட, அவரவர்கள் செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு என்ற வேறுபாடுகளின் சிறப்புத் தன்மைகள், ஒப்பாக அமைவதில்லை.

எல்லா உயிர்க்கும் - எல்லா மக்களுக்கும்; **ஒக்கும்** - ஒரு தன்மையானதாக இருக்கும்; **செய்தொழில்** - அவரவர் செய்கின்ற தொழில்களின்; **வேற்றுமையான்** - உயர்வு தாழ்வு என்ற

வேறுபாடுகளின்; **சிறப்பு** - சிறப்புத் தன்மைகள்; **ஒவ்வா** - ஒப்பாக அமைவதில்லை.

(க-ரை): பிறப்பு என்பது, எல்லா மக்களைப் பொறுத்தும் ஒரு தன்மையானதாகத்தான் இருக்கும்; ஆனால், சிறப்புத் தன்மைகள், அவரவர்கள் செய்கின்ற தொழில்களின் உயர்வு, தாழ்வு வேறுபாடு களைப் பொறுத்து, ஒரே தன்மையனவாக அமைவதில்லை. (972)

3. மேல்இருந்தும் மேலல்லார் மேல்அல்லர் கீழ்இருந்தும்
கீழ்அல்லார் கீழல் லவர்.

மேல்இருந்தும், மேல் அல்லர், மேல்அல்லார்; கீழ் இருந்தும், கீழ்அல்லவர், கீழ்அல்லார்.

(பொ-ரை): உயர்ந்த நிலையில் இருந்தாலும், மேலான செயல்களைச் செய்யாமல் சிறியவரானவர்கள், மேலான பெரியோர்களாக ஒருநாளும் ஆகமாட்டார்கள்; தாழ்ந்த நிலையில் இருந்தாலும், இழிவான செயல்களைச் செய்யாமல், அரிய செயல்களைப் புரிந்து பெரியவரானவர்கள், தாழ்வான சிறியவராக மாட்டார்கள்.

மேல் இருந்தும் - உயர்ந்த நிலையில் இருந்தும்; **மேல்** - மேலான செயல்களை; **அல்லார்** - ஆக மாட்டார்கள்; **கீழ் இருந்தும்** - தாழ்ந்த நிலையில் இருந்தாலும்; **கீழ் அல்லர்** - இழிவான செயல்களைச் செய்யாமல் அரிய செயல்களைச் செய்து பெரியவரானவர்கள்; **கீழ் அல்லார்** - சிறியவராக மாட்டார்கள்.

(க-ரை): உயர்ந்த நிலையில் இருந்தாலும், தாழ்வான செயல்களைச் செய்யும் பெரியவர்கள் சிறியவராவார்கள்; தாழ்ந்த நிலையில் இருந்தாலும், அரிய செயல்களைச் செய்யும் சிறியவர்கள் பெரியவராவார்கள். (973)

4. ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டுஒழுகின் உண்டு.

ஒருமை மகளிரே போலத், தன்னைத்தான், கொண்டு ஒழுகின், பெருமையும் உண்டு.

(பொ-ரை): உறுதியான ஒரே மனத்தைக்கொண்ட கற்புடைய பெண்களைப் போல, ஒருவன் தன் நிலையில் வழுவாமல், தன்னைத்தானே காத்துக்கொண்டு நடப்பானேயானால், அவனுக்குப் பெருமையும் தானே வந்து சேரும்.

ஒருமை மகளிரே போல - உறுதியான ஒரே மனத்தைக் கொண்ட கற்புடைய பெண்களைப் போல; **ஒழுகின்** - நடப்பானே யானால்; **உண்டு** - தானே வந்து சேரும்.

(க-ரை): தன்னிலையில் வழுவாமல் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் கற்புடைய பெண்களுக்கு எப்படிப் பெருமை வந்து சேருகிறதோ, அப்படியே தன்னிலையில் வழுவாமல், தன்னைத்தானே காத்துக்கொண்டு ஒருவன் நடப்பானேயானால், அவனுக்கும் பெருமை தானே வந்து சேரும். (974)

5. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

பெருமை உடையவர், அருமை உடைய செயல், ஆற்றின், ஆற்றுவார்.

(பொ-ரை): பெருமைப் பண்பு உடைய பெரியோர்கள், எப்போதும், செய்வதற்கு அரிய செயல்களை, அவற்றிற்கு உரிய வழியில் நன்கு செய்துமுடிக்க வல்லவர்களாவார்கள்.

பெருமை - பெருமைப்பண்பு; **ஆற்றின்** - செயல்களைச் செய்வதற்கு உரிய வழியில்; **ஆற்றுவார்** - செய்து முடிக்கக் கூடியவர்களாவார்கள்.

(க-ரை): பெருமைக்குரிய பெரியோர்கள் செயற்கரிய செயல்களை, ஏற்ற வழியில், செய்து முடிக்கக் கூடியவர்கள் ஆவார்கள். (975)

6. சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.

பெரியாரைப், பேணிக்கொள்வேம், என்னும் நோக்கு, சிறியார், உணர்ச்சியுள், இல்லை.

(பொ-ரை): பெரியோர்களைப் போற்றி, அவர்களைத் தம் வழிகாட்டிகளாகக் கொள்ளுவோம் என்னும் கருத்து, சிறியவர்களின் உணர்வின்கண் இருப்பது இல்லை.

பேணி - போற்றி; **கொள்வேம்** - தம் வழிகாட்டிகளாகக் கொள்ளுவோம்; **நோக்கு** - கருத்து; **உணர்ச்சியுள்** - உணர்வின்கண்.

(க-ரை): பெரியோர்களைப் போற்றி, அவர்களைத் தமக்கு வழிகாட்டிகளாகக் கொள்ளும் எண்ணம், பொதுவாகச் சிறியவர் களிடத்தில் இருப்பதில்லை. (976)

**7. இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
சீரல் லவர்கண் படின்.**

சிறப்புந்தான், சீர் அல்லவர்கண் படின், இறப்பே புரிந்த, தொழிற்றாம்.

(பொ-ரை): சிறப்பானவைகள்கூட, பெருமைக்குத் தகுதியற்ற கீழ்மக்களிடத்தில் போய்த் தங்கிவிடுமானால், அவர்கள், செருக்கினால் அளவு கடந்துபோகும் செயல்நிலையை அவர்களிடம் உண்டாக்கிவிடும்.

சீர் - பெருமைக்கு; **அல்லவர்** - தகுதியற்ற கீழ் மக்களிடத்தில்; **படின்** - போய்த் தங்கிவிடுமானால்; **இறப்பே புரிந்த** - செருக்கினால் அளவு கடந்து போகும்; **தொழிற்றாம்** - செயல் நிலையை அவர்களிடம் உண்டாக்கிவிடும்.

(க-ரை): சிறப்புக்களானவை தப்பித் தவறிக் கீழ் மக்களிடத்தில் சென்று தங்கிவிடுமேயானால், அதனால் அவர்களுக்கு அளவு கடந்த செருக்கு ஏற்பட்டுவிடும். (977)

**8. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.**

பெருமை, என்றும் பணியுமாம்; சிறுமை, தன்னை வியந்து, அணியுமாம்.

(பொ-ரை): பெருமை படைத்தவர்கள் தமக்குச் சிறப்புகள் உண்டாகும்போதுகூட, மிகப் பணிவாகவே எல்லோரிடத்திலும் நடந்துகொள்வார்கள்; சிறுமையுடையவர்கள், பிறர் பொருட்படுத்தா விட்டாலும், தம்மைத்தாமே புகழ்ந்துகொண்டு, சிறப்பித்துக் கொள்ளுவார்கள்.

பெருமை - பெருமை படைத்தவர்கள்; **சிறுமை** - சிறுமை யுடையவர்கள்; **அணியுமாம்** - சிறப்பித்துக் கொள்வார்கள்.

(க-ரை): பெருமையுடையவர்கள் எப்பொழுதும் எல்லோரிடத் திலும் பணிவாகவே நடந்துகொள்வார்கள்; சிறுமை யுடையவர்கள் தம்மைத்தாமே புகழ்ந்துகொண்டு சிறப்பித்துக் கொள்வார்கள்.(978)

**9. பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.**

பெருமை, பெருமிதம் இன்மை; சிறுமை, பெருமிதம், ஊர்ந்துவிடல்.

(பொ-ரை): பெருமைப் பண்பு என்பதாவது, ஒருவர் செருக்கு இல்லாமல் இருப்பதாகும்; சிறுமைப்பண்பு என்பது, காரணம் எதுவும் இல்லாதபோதும், செருக்கினை உள்ளத்தில் ஏந்திக்கொண்டு நடத்தலாகும்.

பெருமை - பெருமைப்பண்பு; **பெருமிதம்** - செருக்கு; **சிறுமை** - சிறுமைப்பண்பு; **ஊர்ந்துவிடல்** - உள்ளத்தில் ஏந்திக் கொண்டு நடத்தல்.

(க-ரை): பெருமைப் பண்புக்கு அடையாளம் ஒருவர் செருக்கு இல்லாமல் இருப்பதாகும்; சிறுமைப் பண்புக்கு அடையாளம், ஒருவர் செருக்கினோடு இருத்தலாகும். (979)

10. அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

பெருமை, அற்றம், மறைக்கும் சிறுமைதான், குற்றமே, கூறிவிடும்.

(பொ-ரை): பெருமைப் பண்புடையவர்கள், பிறருடைய குற்றங்களையெல்லாம் மறைத்துப் பேசுவார்கள்; சிறுமைப் பண்புடையவர்கள் பிறருடைய குற்றங்களை மட்டுமே சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

பெருமை - பெருமைப் பண்புடையவர்கள்; **அற்றம்** - பிறருடைய குற்றங்களை; **சிறுமை** - சிறுமைப் பண்புடையவர்கள்.

(க-ரை): பெருமைப் பண்பு கொண்டவர்கள், பிறருடைய குற்றங்களை மறைத்து, அவர்களுடைய் நற்பண்புகளை மட்டும் பேசுவார்கள்; சிறுமைப் பண்பு உடையவர்கள், பிறருடைய நற்பண்புகளையெல்லாம் மறைத்து, அவர்களுடைய குற்றங்களை மட்டுமே கூறிக் கொண்டிருப்பார்கள். (980)

99. சான்றாண்மை

சான்றாண்மை என்பது, ஒருவர் நற்பண்புகள் பலவற்றையும் கொண்டிருந்து, அவற்றை அவர் ஆளுந் தன்மையைப்பற்றிக் கூறுதல் எனப்படும்.

1. கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

கடன்அறிந்து, சான்றாண்மை, மேற்கொள்பவர்க்கு, நல்லவை எல்லாம், கடன் என்ப.

(பொ-ரை): தமக்குக் கடமையானவை இவை இவை என்று அறிந்து, சான்றாண்மையை மேற்கொண்டு நடப்பவர்களுக்கு நல்லவையெல்லாம் இயல்பான கடமையாகவே அமையும் என்று அறிவுடையோர் கூறுவர்.

கடன் - தமக்குக் கடமையானவை இவை இவை என்று; **கடன்** - கடமையாகவே அமையும்; **என்ப** - என்று கூறுவர் அறிவுடையோர்.

(க-ரை): தமது கடமைகள் இவை என்பதை அறிந்து, சான்றாண்மையை மேற்கொள்பவர்களுக்கு, நல்ல முயற்சிகள் எல்லாம் கடமையாகும் என்று அறிவுடையோர் கூறுவர்.

(981)

2. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று.

சான்றோர் நலனே, குணநலம்; பிற நலம், எந்நலத்து, உள்ளதூஉம், அன்று.

(பொ-ரை): சான்றோர்களுக்கான அழகாவது, நற்பண்புகளினால் ஆன அழகேயாகும்; மற்றைய உடலுறுப்புகள் முதலியவற்றாலான அழகு, எந்த ஓர் அழகினுள்ளும் வைத்து எண்ணப்படும் அழகு ஆகாது.

நலம் - அழகாவது; **குண நலம்** - நற்பண்புகளினால் ஆன அழகாகும்; **பிற நலம்** - மற்றைய உடலுறுப்புகள் முதலிய வற்றாலான அழகு; **எந்நலத்து உள்ளதூஉம்** - எந்த ஓர் அழகினுள்ளும் வைத்து எண்ணப்படும்; **அன்று** - அழகு ஆகாது.

(க-ரை): நற்பண்புகளினால் ஆன அழகே, சான்றோர்க்கான அழகாகும்; மற்ற அழகுகளெல்லாம் குறிப்பிட்டுச் சொல்லப்படும் அழகுகள் ஆகா. (982)

3. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையொடு, ஐந்து, சால்பு ஊன்றிய, தூண்.

(பொ-ரை): அன்புடைமையும், பழி செய்ய நாணுதலும், உலகநடை அறிந்து ஒழுகுதலும், அருள்புரிதலும், உண்மையே பேசுதலும் ஆகிய ஐந்தும், சான்றாண்மை என்னும் மாளிகையைத் தாங்கும் தூண்களாகும்.

ஒப்புரவு - உலக நடை அறிந்து ஒழுகுதல்; **கண்ணோட்டம்** - அருள்புரிதல்; **சால்பு** - சான்றாண்மை; **ஊன்றிய தூண்** - தாங்கும் தூண்கள்.

(க-ரை): அன்பும், நாணும், ஒப்புரவும், கண்ணோட்டமும், உண்மையும் ஆகிய ஐந்தும், சான்றாண்மை என்னும் மாளிகையைத் தாங்கும் தூண்களாகும். (983)

4. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை சொல்லா நலத்தது சால்பு.

நோன்மை, கொல்லா, நலத்தது, சால்பு, பிறர்தீமை, சொல்லா நலத்தது.

(பொ-ரை): நோன்பு நோற்றல் என்பது, எந்த ஓர் உயிரையும் கொல்லாத நலத்தின்பாற்பட்ட செயலாகும்; அதுபோல, சால்பு என்பது பிறர் குற்றங்களைச் சுட்டிச் சொல்லாத நலத்தின்பாற்பட்ட செயலாகும்.

நோன்மை - நோன்பு நோற்றல் என்பது; **தீமை** - குற்றங்களை.

(க-ரை): நோன்பு நோற்றல் என்பது எந்த ஓர் உயிரையும் கொல்லாத அறப்பண்பைக் குறிப்பதாகும்; அதுபோல, சால்பு என்பது பிறர் குற்றங்களைச் சுட்டிச் சொல்லாத அறப்பண்பைக் குறிப்பதாகும். (984)

5. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர் மாற்றாரை மாற்றும் படை.

ஆற்றுவார் ஆற்றல், பணிதல்; அது, சான்றோர், மாற்றாரை, மாற்றும், படை.

(பொ-ரை): ஆற்றலுடையவரின் ஆற்றலாவது பணிவுடன் நடந்து கொள்ளுதலாகும்; அதுவேதான் சான்றோர்கள் தம் பகைவர்களைப் பகைமையிலிருந்து மாற்றுகின்ற கருவியுமாகும்.

ஆற்றுவார் - ஆற்றலுடையவர்கள்; **மாற்றாரை** - பகைவர்களை; **மாற்றும்** - பகைமையிலிருந்து மாற்றுகின்ற; **படை** - கருவியாகும்.

(க-ரை): பணிவுடன் நடந்துகொள்ளுதலே ஆற்றலுடையவர் களின் ஆற்றலாகும்; அதுவேதான் சான்றோர்கள் பகைவர்களின் பகைமையை மாற்றுவதற்குப் பயன்படும் கருவியாகவும் விளங்குவதாகும். (985)

6. சால்பிற்குக் கட்டளை யாதுஎனின் தோல்வி
துலைஅல்லார் கண்ணும் கொளல்.

சால்பிற்குக், கட்டளை, யாது எனின், தோல்வி, துலை அல்லார் கண்ணும், கொளல்.

(பொ-ரை): சால்புக்கு, உரைகல்போல் மதிப்பிடும் கருவி எது என்றால், ஒருவர், தமக்கு ஒப்பாகாத மெலிந்தோரிடத்தில் தோல்வி ஏற்பட்டாலும், அந்தத் தோல்வியை ஏற்றுக்கொள்ளும் பண்பாகும்.

கட்டளை - உரைகல்; **துலை அல்லார் கண்ணும்** - தமக்கு ஒப்பாகாத மெலிந்தோரிடத்திலும்; **கொளல்** - ஏற்றுக் கொள்ளும் பண்பாகும்.

(க-ரை): சால்பை வெளிப்படுத்தும் உரைகல் எது என்றால், ஒருவர் தமக்கு ஒப்பாகாத மெலிந்தவரிடத்திலும், தோல்வி ஏற்பட்டால், தமது தோல்வியை ஒப்புக் கொள்ளுதலாகும். (986)

7. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

இன்னா செய்தார்க்கும், இனியவே, செய்யாக்கால், சால்பு, என்ன, பயத்ததோ?

(பொ-ரை): சான்றோர்கள், தமக்குத் துன்பம் செய்தவர் களுக்கும் நன்மைகளையே திரும்பச் செய்யாவிட்டால், அவர்களது சான்றாண்மையானது, அவர்களுக்கு என்ன பயனைச் செய்ய வல்லதாகும்? ஒரு பயனையும் செய்யாது.

இன்னா செய்தார்க்கும் - தமக்குத் துன்பம் செய்தவர் களுக்கும்; **இனியவே** - நன்மைகளையே; **செய்யாக்கால்** - செய்யாவிட்டால்; **சால்பு** - சான்றாண்மை.

(க-ரை): தமக்குத் துன்பம் இழைத்தவர்களுக்கும் திரும்ப நன்மைகளையே செய்யாவிட்டால், சான்றோர்க்குத் தமது சான்றாண்மையினால் எந்தப் பயனும் உண்டாவதில்லை. (987)

8. இன்மை ஒருவற்கு இளிவன்று சால்புஎன்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

சால்பு என்னும், திண்மை, உண்டாகப் பெறின், ஒருவற்கு, இன்மை, இளிவு அன்று.

(பொ-ரை): சான்றாண்மை என்று சொல்லப்படும் வலிமை யானது ஒருவற்கு ஏற்பட்டுவிட்டால், அவர் வறுமையான நிலையை அடைந்தபோதிலும் அது அவருக்கு இழிவானது ஆகாது.

சால்பு - சான்றாண்மை; **திண்மை** - வலிமையானது; **இன்மை** - வறுமையான நிலையை அடைந்தபோதிலும்; **இளிவு அன்று** - இழிவானது ஆகாது.

(க-ரை): ஒருவருக்குச் சான்றாண்மை என்ற வலிமையானது இருந்துவிட்டால், அவர் வறுமையை அடைந்தபோதிலும், அதனை இழிவுடையதாக யாரும் கருதமாட்டார்கள். (988)

9. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்.

சான்றாண்மைக்கு ஆழி, எனப்படுவார், ஊழி பெயரினும், தாம் பெயரார்.

(பொ-ரை): சான்றாண்மையாகிய கடலுக்கு எடுத்துக்காட்டு என்று சொல்லப்படும் சான்றோர்கள், ஏனைய கடல்களெல்லாம் தடம் புரளும்படியான ஊழிக்காலம் ஏற்பட்டாலும், தாம் மட்டும் மாறுபட மாட்டார்கள்.

சான்றாண்மைக்கு ஆழி - சான்றாண்மையாகிய கடலுக்கு; **எனப்படுவார்** - கரையென்று சொல்லப்படும் சான்றோர்கள்; **ஊழி பெயரினும்** - ஏனைய கடல்களெல்லாம் தடம் புரளும்படியான ஊழிக்காலம் ஏற்பட்டாலும்; **தாம் பெயரார்** - தாம் மட்டும் மாறுபட மாட்டார்கள்.

(க-ரை): சான்றாண்மையாகிய கடலுக்கு எடுத்துக்காட்டு என்று சொல்லப்படும் சான்றோர்கள், ஊழிக்காலத்தில் மற்ற கடல்களெல்லாம் தடம் புரண்டு மாறுபட்டாலும், தாம் மட்டும் எக்காரணம் கொண்டும், எந்த ஒரு காலத்திலும் மாறுபட மாட்டார்கள். (989)

10. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை.

சான்றவர், சான்றாண்மை, குன்றின், இருநிலந்தான், பொறை, தாங்காது மன்னோ.

(பொ-ரை): சான்றாண்மையுடையவர்களின் சால்பு என்னும் பண்பு குன்றிப்போய்விடுமானால், இந்தப் பெரிய நிலவுலகமும்கூட தன் பெருஞ்சுமையைத் தாங்க முடியாமல் போய்விடும்.

சான்றவர் - சான்றாண்மையுடையவர்கள்; **சான்றாண்மை** - சால்பு; **குன்றின்** - குறைந்துபோய்விடுமேயானால்; **இருநிலந்தான்** - இந்தப் பெரிய நிலவுலகமும்கூட; **பொறை** - பெருஞ்சுமையை.

(க-ரை): சான்றோர்களுக்குச் சால்பு குறையாமையும், நிலத்துக்குச் சுமையைத் தாங்குதலும் இயல்பானதால், சான்றோரின் சால்பு குறைந்துபோகும் நிலை ஏற்பட்டால், நிலமும் சுமையைத் தாங்க முடியாத ஒரு நிலைக்குப் போய்விடும் என்று கொள்ள வேண்டும். (990)

100. பண்பு உடைமை

பண்பு உடைமை என்பது, ஒருவர் அன்பு, அருள், ஈவு, இரக்கம், பெருமை, சால்பு போன்ற நற்பண்புகளால் நிறைந்து, உலகத்தார் இயல்பு அறிந்து, அதற்கு ஏற்ப ஒழுகும் தன்மையைக் கூறுதல் எனப்படும்.

**1. எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.**

யார் மாட்டும், எண்பதத்தால், பண்புடைமை, என்னும் வழக்கு எய்தல், எளிது என்ப.

(பொ-ரை): ஒருவர், யாரிடத்திலும் எளிமையாகப் பழகுபவராக இருத்தலானது, பண்பு உடைமை எனப்படுகின்ற நல்ல நெறியினை அடைவதற்கு எளிதானதாக அமையும் என்று நூலறிவுடையோர் கூறுவர்.

யார்மாட்டும் - யாவரிடத்திலும்; **எண்பதத்தால்** - எளிமை யாகப் பழகுபவராக இருத்தலானது; **வழக்கு** - நல்ல நெறியினை; **எய்தல்** - அடைவதற்கு; **என்ப** - என்று நூலறிவுடையோர் கூறுவர்.

(க-ரை): ஒருவர், யாவரிடத்திலும் எளிமையாகப் பழகுவாரே யானால், பண்புடைமை என்னும் நல்ல தன்மையைப் பெற, அதுவே எளிதான வழியாகும். (991)

**2. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புஉடைமை என்னும் வழக்கு.**

அன்புடைமை, ஆன்ற குடிப்பிறத்தல், இவ்விரண்டும், பண்புடைமை, என்னும் வழக்கு.

(பொ-ரை): ஒருவர் எல்லோரிடத்திலும் அன்புடையவராக இருத்தலும், உலகத்தோடு பொருந்தி ஒழுகக்கூடிய நற்குடியைச் சேர்ந்தவராக இருத்தலும் ஆகிய இந்த இரண்டும், பண்புடைமை என்று கூறப்படும் நன்னெறியாகும்.

ஆன்ற - உலகத்தோடு பொருந்தி ஒழுகக்கூடிய; **குடிப்பிறத்தல்** - நற்குடியைச் சேர்ந்தவராக இருத்தல்; **வழக்கு** - நன்னெறியாகும்.

(க-ரை): ஒருவர் அன்புடையவராக இருத்தலும், உயர்ந்த குடியைச் சேர்ந்தவராக இருத்தலும் பண்புடைமையாகும் என்று கருதப்படும். (992)

3. உறுப்புஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால் வெறுத்தக்க
பண்புஒத்தல் ஒப்பதாம் ஒப்பு.

மக்கள் ஒப்பு, உறுப்பு ஒத்தல், அன்றால்; வெறுத்தக்க, பண்பு ஒத்தல், ஒப்பதாம் ஒப்பு.

(பொ-ரை): மக்கள் ஒத்திருக்கிறார்கள் என்பது, அவர்கள் உடம்பு உறுப்புகளால் ஒத்திருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது அன்று; பொருந்தத்தக்க பண்புகளால் அவர்கள் ஒத்திருப்பதே, கொள்ளத்தக்க ஒப்பாகும்.

மக்கள் ஒப்பு - மக்கள் ஒத்திருக்கிறார்கள் என்பது; **உறுப்பு ஒத்தல்** - உடம்பு உறுப்புகளால் ஒத்திருக்கிறார்கள்; **வெறுத்தக்க** - பொருந்தத்தக்க.

(க-ரை): மக்கள் ஒருவரோடொருவர் ஒத்திருக்கிறார்கள் என்பது, அவர்களின் உடம்பு உறுப்புகள் ஒத்திருத்தலைக் கொண்டு கணக்கிடுவதன்று; அவர்கள் பண்புகளால் ஒத்திருந்தால்தான், ஒத்த தன்மையர் என்று கொள்ள முடியும். (993)

4. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

நயனொடு, நன்றிபுரிந்த, பயனுடையார், பண்பு, பாராட்டும், உலகு.

(பொ-ரை): நீதியையும், நன்மையையும் விரும்புபவர்களாகிப், பிறர்க்கும் தமக்கும் பயனைக் கருதுபவர்களுடைய உயர்ந்த பண்புகளை, உலகத்தார் போற்றிக் கொண்டாடுவார்கள்.

நயனொடு - நீதியையும்; **நன்றி** - நன்மையையும்; **புரிந்த** - விரும்புபவர்களாகி; **பயனுடையார்** - பிறர்க்கும் தமக்கும் பயனைக் கருதுபவர்களுடைய; **பண்பு** - உயர்ந்த பண்புகளை; **உலகு** - உலகத்தார்.

(க-ரை): நீதியையும், நன்மையையும் விரும்பிப் பிறர்க்கும் தமக்கும் பயனுடையவர்களாக விளங்குபவர்களின் நல்ல பண்புகளை உலகத்தார் எப்போதும் பாராட்டிப் போற்றுவார்கள். (994)

**5. நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புஉள பாடறிவார் மாட்டு.**

நகையுள்ளும், இகழ்ச்சி, இன்னாது; பாடறிவார் மாட்டு, பகையுள்ளும், பண்பு உள.

(பொ-ரை): விளையாட்டின் கண்ணுங்கூட ஒருவரை இகழ்தல் என்பது, துன்பத்தினைத் தருவதாகும்; உலக இயல்புகளை நன்கு அறிந்து நடக்கும் நல்லவர்களிடத்திலே பகைமையுணர்ச்சி தோன்றும் காலத்திலும்கூட, இனிய பண்புகள் இருக்கவே செய்யும்.

நகையுள்ளும் - விளையாட்டின் கண்ணுங்கூட; **இகழ்ச்சி** - இகழ்தல் என்பது; **இன்னாது** - துன்பத்தினைத் தருவதாகும்; **பாடறிவார்மாட்டு** - உலக இயல்புகளை நன்கு அறிந்த நல்லவர்களிடத்திலே; **பகையுள்ளும்** - பகைமையுணர்ச்சி தோன்றும் காலத்திலும்கூட.

(க-ரை): விளையாட்டாகக்கூட ஒருவரை இகழ்தல் என்பது, எப்பொழுதும் துன்பந்தரும்; பண்புடையவர்கள், பகைவர்களாக இருந்தாலும் பகைவர்களிடத்திலும் பண்புடனேதான் நடந்து கொள்வார்கள். (995)

**6. பண்புஉடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.**

பண்பு உடையார்ப் பட்டு, உலகம் உண்டு; அது இன்றேல், மண்புக்கு, மாய்வது, மன்.

(பொ-ரை): பண்புடையவர்களிடத்திலே இருந்து வருவதால், உலகியல் நடப்பானது எப்போதும் நிலைபெற்று இயங்கி வருகின்றது; அவ்வாறு பண்புடையவர்களிடத்தில் இல்லையானால், அந்த உலகியல் நடப்பு மண்ணிலே புகுந்து மாய்ந்து போய்விடுவது உறுதியாகும்.

உலகம் - உலகியல் நடப்பானது; **உண்டு** - இருந்து வருவதால் எப்போதும் நிலைபெற்று இயங்கி வருகின்றது; **இன்றேல்** - அவ்வாறு இல்லையானால்; **அது** - அந்த உலகியல் நடப்பு; **மண்புக்கு** - மண்ணில் புகுந்து.

(க-ரை): உலகியல் நடப்பு பண்புடையவர்களால் இயங்கி வருவதால், அது நிலைபெற்று இருக்கின்றது; இல்லையானால், அந்த உலகியல் நடப்பு மண்ணோடு மண்ணாய் மறைந்துபோய்விடும். (996)

**7. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்.**

மக்கட் பண்பு இல்லாதவர், அரம்போலும், கூர்மையரேனும், மரம் போல்வர்.

(பொ-ரை): மக்களுக்கே உரிய ஒழுக்கப் பண்பு இல்லாதவர்கள், அரத்தின் கூர்மையைப் போல அறிவுக்கூர்மை உடையவர்களாக இருந்தபோதிலும், ஓரறிவுயிரான மரத்தைப் போன்றவர்களே ஆவார்கள்.

மக்கட்பண்பு - மக்களுக்கே உரிய ஒழுக்கப்பண்பு; **அரம் போலும்** - அரத்தின் கூர்மையைப்போல; **கூர்மையரேனும்** - அறிவுக்கூர்மை உடையவர்களாக இருந்தாலும்.

(க-ரை): மக்களுக்கே இருக்க வேண்டிய ஒழுக்கப் பண்பு இல்லாதவர்கள், எவ்வளவுதான் சிறந்த அறிவுக்கூர்மையுடையவர் களாக இருந்தபோதிலும், பிறர் இயல்பு அறிந்து ஒழுக முடியாத மரத்திற்கு ஒப்பானவர்களே ஆவார்கள். (997)

**8. நண்புஆற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்புஆற்றா ராதல் கடை.**

நண்பு, ஆற்றாராகி, நயமில, செய்வார்க்கும், பண்பு, ஆற்றாராதல், கடை.

(பொ-ரை): தம்மோடு நட்புச் செய்துகொள்ள முடியாதவர் களாய், நன்மையல்லாத தீயவற்றைச் செய்கின்றவர்களிடத்திலும், தாம் பண்பு உடையவர்களாய் நடந்து கொள்ளாதிருத்தலானது, இழிவானதாகும்.

நண்பு ஆற்றாராகி - தம்மோடு நட்புச் செய்துகொள்ள முடியாதவர்களாய்; **நயமில** - நன்மையல்லாத தீயவற்றை; **பண்பு ஆற்றாராதல்** - பண்புடையவர்களாய் நடந்து கொள்ளாதிருத்த லானது; **கடை** - இழிவானதாகும்.

(க-ரை): தம்மோடு நண்பர்களாய் இல்லாமல், தீயவற்றைச் செய்து நடப்பார்களானால், அவர்களிடமும், தாம் பண்புடையவர் களாகவே நடந்துகொள்ள வேண்டும்; அப்படி நடந்துகொள்ளவில்லை என்றால், அது இழிவான ஒரு செயலாகும். (998)

**9. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்.**

நகல்வல்லர், அல்லார்க்கு, மாஇரு, ஞாலம், பகலும், இருள்பாற் பட்டன்று.

(பொ-ரை): பிறருடன் கூடியிருந்து சிரித்து மகிழக்கூடிய திறமையற்றவர்களுக்கு, மிகப்பெரிதாக விளங்கும் இந்த உலக மானது, ஒளிமிகுந்த பகற்காலத்திலுங்கூட, இருளின்கண் கிடப்பதாகவே தோன்றும்.

நகல்வல்லர் அல்லார்க்கு - பிறருடன் கூடியிருந்து சிரித்து மகிழக்கூடிய திறமையற்றவர்களுக்கு; **மாயிரு ஞாலம்** - மிகப் பெரிய உலகமானது.

(க-ரை): பிறருடன் கூடியிருந்து சிரித்து மகிழத் தெரியாதவர் களுக்குப் பகலிலும் இருள் சூழ்ந்திருப்பது போன்ற உணர்வுதான் இருக்கும். (999)

10. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று.

பண்பு இலான், பெற்ற பெருஞ்செல்வம், நன்பால், கலம், தீமையால், திரிந்தற்று.

(பொ-ரை): நற்பண்பு இல்லாத ஒருவன் பெற்ற பெருஞ்செல்வமானது, நல்ல ஆவின்பால் வைக்கப்படும் கலத்தின் குற்றத்தால், அது கெட்டுவிடுவது போன்றதாகும்.

பண்பிலான் - நற்பண்பு இல்லாத ஒருவன்; **நன்பால்** - நல்ல ஆவின்பால்; **கலம்** - வைக்கப்பட்ட கலத்தின்; **தீமையால்** - குற்றத்தால்; **திரிந்தற்று** - கெட்டுவிடுவது போன்றதாகும்.

(க-ரை): தூய்மையற்ற கலத்தில் வைக்கப்படும் நல்ல ஆவின்பால் எப்படி யாருக்கும் பயன்படாமல் கெட்டுப்போகுமோ, அதுபோலவே நற்பண்பு அற்றவனிடம் இருக்கும் பெருஞ் செல்வமும், யாருக்கும் பயப்படாமல் கெட்டுப்போகும். (1000)

101. நன்றியில் செல்வம்

நன்றியில் செல்வம் என்பது, செல்வத்தைச் சேர்த்த ஒருவன், அதனைத் தனக்கும் பயன்படுத்திக்கொள்ளாமல், பிறர்க்கும் பயன்படுத்தாமல் இருக்கும் இயல்பினைப் பற்றிக் கூறுதல் எனப்படும்.

**1. வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுஉண்ணான்
செத்தான் செயக்கிடந்தது இல்.**

வாய்சான்ற, பெரும்பொருள், வைத்தான், அஃதுஉண்ணான், செயக்கிடந்ததுஇல், செத்தான்.

(பொ-ரை): தனது வீடு நிறைய பெருஞ்செல்வத்தைச் சேர்த்து வைத்த ஒருவன், அதனைக்கொண்டு வயிறார உண்டு, அதை நுகரவில்லையானால், அவன் செய்யத்தக்கது என்று வேறொன்றும் இல்லையாதலால், அவன் செத்தவனாகவே கருதப்படுவான்.

வாய் - தனது வீடு முழுவதும்; **சான்ற** - நிறைய; **பெரும் பொருள்** - பெருஞ்செல்வத்தை; **வைத்தான்** - சேர்த்து வைத்த ஒருவன்; **செயக்கிடந்தது இல்** - அவன் செய்யத் தக்கது வேறொன்றும் இல்லையாதலால்; **செத்தான்** - செத்தவனாகவே கருதப்படுவான்.

(க-ரை): பெருஞ்செல்வத்தைக் கொண்ட ஒருவன், அதனை முறைப்படி நுகராதவனாக இருப்பானேயானால், அவன் எதையும் செய்வதற்குத் தகுதியற்றவனாகிச், செத்தவனைப் போலவே கருதப்படுவான். (1001)

**2. பொருளான்ஆம் எல்லாம்என்று ஈயாது இவறும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு.**

பொருளான் ஆம், எல்லாம், என்று, ஈயாது, இவறும், மருளான் ஆம், மாணாப், பிறப்பு.

(பொ-ரை): பொருளால் எல்லாம் ஆகும் என்று எண்ணிப், பிறர்க்கு ஒன்றும் ஈயாமல், இறுக அதனைப்பற்றிக் கொண்டிருக்கும் மயக்கமுடைய ஒருவன், சிறப்பில்லாத பிறவி என்று பிறரால் இகழப்படுவான்.

பொருளான் ஆம் எல்லாம் - பொருளால் எல்லாம் ஆகும்; **என்று** - என்று எண்ணி; **இவறும்** - பொருளைப் பற்றிக் கொண்டிருக்கும்; **மருளான் ஆம்** - மயக்கமுடைய ஒருவன்; **மாணா** - சிறப்பில்லாத; **பிறப்பு** - பிறவி என்று பிறரால் இகழப் படுவான்.

(க-ரை): செல்வத்தால் எல்லாம் இயலும் என்று எண்ணி, யாருக்கும் எதனையும் கொடுக்காமல், அதனை இறுகப்பிடித்து வைத்துக் கொண்டிருக்கும் மயக்கமுடைய ஒருவன், இழிந்த பிறவியாவான் என்று பிறரால் தூற்றப்படுவான். (1002)

**3. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை.**

ஈட்டம் இவறி, இசை வேண்டா, ஆடவர், தோற்றம், நிலக்குப் பொறை.

(பொ-ரை): பொருள் சேர்ப்பது ஒன்றையே பெரிதும் விரும்பி, அதன் பயனாகிய புகழை விரும்பாத மக்கள், பிறந்து வாழ்தல் என்பதே, இந்நிலவுலகிற்குப் பெருஞ்சுமையாக அமையும்.

ஈட்டம் - பொருள் சேர்ப்பது ஒன்றையே; **இவறி** - பெரிதும் விரும்பி; **இசை வேண்டா** - புகழை விரும்பாத; **ஆடவர்** - மக்கள்; **தோற்றம்** - பிறந்து வாழ்தல்; **பொறை** - பெருஞ்சுமையாகும்.

(க-ரை): புகழையும் விரும்பாது, பொருளின் பயனையும் அறியாது வாழும் மக்கள் இருப்பதே நிலவுலகிற்குப் பெருஞ் சுமையாகும். (1003)

**4. எச்சம்என்று என்எண்ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன்.**

ஒருவரால், நச்சப்படாஅ, தவன், எச்சம் என்று, என், எண்ணும் கொல்லோ?

(பொ-ரை): ஒரு பொருளையும் ஈயாமையால் எவரொரு வராலும் விரும்பப்படாத ஒருவன், இறந்த பிறகு எஞ்சி நிற்பது என்று எதை அவன் எண்ணுவானோ? தெரியவில்லை!

நச்சப்படாஅதவன் - ஒரு பொருளையும் ஈயாமையால், எவரொருவராலும் விரும்பப்படாத ஒருவன்; **எச்சம்** - தான் இறந்தபிறகு எஞ்சி நிற்பது; **என் எண்ணுங்கொல்லோ** - எதை எண்ணுவானோ?

(க-ரை): ஒருவன் இறந்த பிறகு எஞ்சி நிற்பது புகழ் ஒன்றேயாகையால், ஒரு பொருளையும் பிறர்க்கு ஈயாதவன் இறந்த பிறகு, அவனுக்கு எதுவும் எஞ்சி நிற்காது. (1004)

**5. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்.**

கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம், இல்லார்க்கு, அடுக்கிய கோடி, உண்டாயினும், இல்.

(பொ-ரை): பிறர்க்குக் கொடுத்து உதவுவதும், தாம் நுகர்ந்து இன்புறுவதும் இல்லாதவர்களுக்கு, மேன்மேலும் அடுக்கிய பலகோடிப் பொருள்கள் உண்டானாலும், அவற்றால், அவர்களுக்குப் பயன் எதுவும் இல்லை.

கொடுப்பதூஉம் - பிறர்க்குக் கொடுத்து உதவுவதும்; **துய்ப்பதூஉம்** - தாம் நுகர்ந்து இன்புறுவதும்; **அடுக்கிய** - மேலும் மேலும் பெருகிய; **கோடி** - பல கோடிப் பொருள்கள்.

(க-ரை): ஒருவனுக்குப், பிறர்க்குக் கொடுத்துதவும் பண்பும், தானே நுகர்ந்து இன்பம் பெறும் பண்பும் இல்லையாயின், அவனிடம் பலகோடி அளவுக்குச் செல்வக் குவியல் இருந்தாலும், அதனால் அவனுக்குப் பலன் ஏதும் ஏற்படப் போவதில்லை. (1005)

**6. ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்குஒன்று
ஈதல் இயல்பிலா தான்.**

பெருஞ்செல்வம், தான்துவ்வான், தக்கார்க்கு, ஒன்றுஈதல், இயல்பு இலாதான், ஏதம்.

(பொ-ரை): செல்வம் படைத்த ஒருவன், தானும் அதனை நுகரமாட்டாதவனாய்த், தகுதி படைத்தவர்களுக்குக் கொடுத்துதவும் பண்பும் இல்லாதவனாய் இருப்பானேயானால், அவன் தன்னுடைய பெருஞ்செல்வத்திற்கே ஒரு நோயாகக் கருதப்படுவான்.

துவ்வான் - நுகரமாட்டாதவனாய்; **தக்கார்க்கு** - தகுதி படைத்தவர்களுக்கு; **ஏதம்** - நோயாவான்.

(க-ரை): செல்வமுடைய ஒருவன் தானும் அதனை நுகராமல், தகுதி படைத்தவர்களுக்கும் ஒன்றும் கொடுத்துதவாமலும் இருப்பானேயானால், அவன் அந்தச் செல்வத்திற்கே ஒரு நோயாக விளங்குவான். (1006)

**7. அற்றார்க்குஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று.**

அற்றார்க்கு, ஒன்று ஆற்றாதான், செல்வம், மிகநலம், பெற்றாள், தமியள், மூத்தற்று.

(பொ-ரை): பொருளேதும் இல்லாத வறியவர்களுக்கு, ஒரு பொருளினையும் கொடுத்தறியாதவனுடைய செல்வம், பயனில்லாமல் வீணாவது என்பது, சிறந்த அழகினைப் பெற்றிருக்கும் பெண்ணொருத்தி யானவள், திருமணம் ஆகாமல் தனித்தே வாழ்ந்து, முதுமை யடைவது போன்றதாகும்.

அற்றார்க்கு - பொருள் ஏதும் இல்லாத வறியவர்களுக்கு; **ஒன்று ஆற்றாதான்** - ஒரு பொருளையும் கொடுத்தறியாத வனுடைய; **மிகநலம்** - சிறந்த அழகினை; **தமியள்** - தனித்தே வாழ்பவள்; **மூத்தற்று** - முதுமையடைவது போன்றதாகும்.

(க-ரை): ஒருவனுடைய வாழ்க்கையின்பத்திற்குரிய மிக அழகான பெண்ணொருத்தி, அவனுக்கும் இன்பம் அளிக்காமல், தானும் இன்பத்தை நுகராமல், திருமணமாகாமல், தனி வாழ்க்கையை நடத்தி முதுமையை அடைந்தால், அவளது அழகால் எப்படி ஒரு பயனும் ஏற்படாதோ, அப்படியே வறுமையாளர்க்குப் பொருள் ஏதும் வழங்காத கருமியின் செல்வமும் பயனற்றதாய்ப் போய்விடும். (1007)

**8. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று.**

நச்சப்படாதவன் செல்வம், நடுஊருள், நச்சுமரம், பழுத்து அற்று.

(பொ-ரை): பிறர்க்கு ஈயாத காரணத்தால் யாரொருவராலும் விரும்பப்படாதவன், செல்வத்தைப் பெற்றிருப்பதானது, ஊரின் நடுவே இருக்கும் நஞ்சினைக் கொண்ட நச்சு மரம் பழுத்திருப்பது போன்றதாகும்.

நச்சப்படாதவன் - பிறரால் விரும்பப்படாதவன்; **நச்சு மரம்** - நஞ்சினைக் கொண்ட நச்சு மரம்; **பழுத்தற்று** - பழுத்திருப்பது போன்றதாகும்.

(க-ரை): ஊரின் நடுவே இருக்கும் நச்சு மரத்தின் பழங்கள், எப்படி எவர்க்கும் பயன்படாவோ, அப்படியே பிறர்க்கு ஈயாத தன்மையைக் கொண்ட செல்வமுடையவனது பொருளும் யாரொருவருக்கும் பயன்படாது. (1008)

9. அன்புஒரீஇத் தற்செற்று அறம்நோக்காது ஈட்டிய ஒண்பொருள் கொள்வார் பிறர்.

அன்பு ஒரீஇத், தற்செற்று, அறம்நோக்காது, ஈட்டிய, ஒண் பொருள், பிறர் கொள்வார்.

(பொ-ரை): ஒருவன், தான் பிறரிடம் அன்பு செலுத்துவதையும் நீக்கி, தான் விரும்புவனவற்றையும் நுகராது, தன்னையும் வருத்திக்கொண்டு, வறியவர்களுக்கு ஈதல் முதலிய அறத்தையும் நினைத்துப் பார்க்காமல் வாழ்வானேயானால், அவன் சேர்த்து வைத்த பெரும் பொருளை மற்றவர் கொள்ளை கொண்டுபோய் அதன் பயனைப் பெறுவார்கள்.

அன்புஒரீஇ - அன்பு செலுத்துவதை நீக்கி; **தற்செற்று** - தன்னையும் வருத்திக்கொண்டு; **ஒண்பொருள்** - பெரும் பொருளை; **கொள்வார்** - கொள்ளை கொண்டுபோய்ப் பயன்பெறுவார்.

(க-ரை): ஒருவன் அன்பும் செலுத்தாமல், தானும் நுகராமல் தன்னையும் வருத்திக்கொண்டு, அறம் செய்தலையும் நினைத்துப் பார்க்காமல் வாழ்ந்தால், அவன் சேர்த்து வைக்கும் பெரும் பொருளைப் பிறர் கொள்ளை கொண்டுபோய் விடுவார்கள். (1009)

10. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி வறங்கூர்ந் தனையது உடைத்து.

சீருடைச் செல்வர், சிறுதுனி, மாரி, வறங்கூர்ந்து, அனையது, உடைத்து.

(பொ-ரை): புகழினையுடைய செல்வர்கள் சிறிது காலம் வறுமையுற்றிருந்தாலும், அது மழை பெய்யாது வறண்டு போனாற் போன்ற தன்மையுடையதாகும்.

சீர் - புகழினையுடைய; **சிறு** - சிறிது காலம்; **துனி** - வறுமை யுற்றிருந்தாலும்; **மாரி** - மழை; **வறங்கூர்ந்து** - வறண்டு போனாற் போன்ற; **உடையது** - தன்மையை உடையதாகும்.

(க-ரை): யாவர்க்கும் பயன்படுபவர்கள் சிறிது காலம் வறுமையுற்றிருந்தாலும், அவர்களது செல்வம், பின்னர் பயன்படும்; ஆனால் பயன்படாதவர்களின் செல்வம் என்றுமே எதற்கும் பயன்படாது. (1010)

102. நாண் உடைமை

நாண் உடைமை என்பது, ஒருவன் பிறர் பழிக்கும் செயல்களையும், அறத்திற்கு ஒவ்வாத செயல்களையும், இழிவான செயல்களையும் செய்ய நாணுதல் எனப்படும்.

1. கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற.

நாணு, கருமத்தால், நாணுதல்; பிற, திருநுதல், நல்லவர், நாணு.

(பொ-ரை): நாணம் என்பது என்னவென்றால், இழிவான செயல்களைச் செய்வதற்கு நாணம் அடைதல் என்பதாகும்; மற்ற வகையில் மனம், மொழி, மெய்களால் ஏற்படும் நாணங்கள், அழகிய நெற்றியையுடைய நல்ல குலப்பெண்களுக்கு இயல்பாக ஏற்படும் நாணம் ஆகும்.

நாணு - நாணம்; **கருமத்தால்** - இழிவான செயல்களைச் செய்வதற்கு; **நாணுதல்** - நாணம் அடைதல்; **திரு** - அழகிய; **நுதல்** - நெற்றியையுடைய; **நல்லவர்** - நல்ல குலப்பெண்கள்.

(க-ரை): ஒருவர் இழிவான செயல்களைச் செய்வதற்கு நாணம் அடைதலே நாணம் என்று சொல்லப்படும்; நல்ல குடியைச் சேர்ந்த பெண்களுக்கு ஏற்படும் நாணங்கள் மனம், மொழி, மெய்களால் ஏற்படும் நாணங்கள் ஆகும். (1011)

2. ஊண்உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறல்ல
நாண்உடைமை மாந்தர் சிறப்பு.

ஊண், உடை, எச்சம், உயிர்க்கு எல்லாம் வேறல்ல; மாந்தர் சிறப்பு, நாண் உடைமை.

(பொ-ரை): உண்ணும் உணவும், உடுக்கும் உடையும் மற்றும் உறையும் உறையுளும், பெறும் உறக்கமும், நுகரும் இன்பமும், காதல் வேட்கையும், மக்களைப் பெறுதலும் போன்ற இவையெல்லாமும் எல்லா மக்களுக்கும் பொதுவாகவே அமைந்திருப்பனவாகும்; பழிக்கு நாணி மானத்தோடு வாழும் நன்மக்களுக்குச் சிறப்பாக இருக்க வேண்டியது நாணம் உடைமையேயாகும்.

ஊண் - உண்ணும் உணவு; **எச்சம்** - உறையுள், உறக்கம், இன்ப நுகர்வு, காதல், பிள்ளைப்பேறு போன்றவைகள்; **மாந்தர்** - நன்மக்களுக்கு; **சிறப்பு** - சிறப்பாக இருக்க வேண்டியது.

(க-ரை): உணவு, உடை, உறையுள், உறக்கம், இன்ப நுகர்வு, காதல் வேட்கை, பிள்ளைப்பேறு போன்றவைகளெல்லாம், எல்லா மக்களுக்கும் பொதுவாக இருப்பனவாகும். ஆனால் பழி நாணி வாழும் நன்மக்களுக்குச் சிறப்பாக இருக்க வேண்டிய பண்பு, நாணம் உடைமையாகும். (1012)

3. ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு.

உயிர்எல்லாம், ஊனைக் குறித்த; சால்பு, நாண் என்னும், நன்மை குறித்தது.

(பொ-ரை): எல்லா உயிர்களும் தத்தம் உடம்புகளைத் தமக்குரிய இருப்பிடமாகக் கொண்டிருக்கின்றன; அதுபோல, சான்றாண்மையானது, நாணம் என்னும் நல்லியல்பைத் தனக்குரிய இருப்பிடமாகக் கொண்டிருக்கின்றது.

ஊனைக்குறித்த உடம்பினை இருப்பிடமாகக் கொண்டிருக்கின்றன; **சால்பு** - சான்றாண்மை; **நன்மை** - நல்லியல்பு; **குறித்தது** - உரிய இருப்பிடமாகக் கொண்டிருக்கின்றது.

(க-ரை): எல்லா உயிர்களும் எப்படித் தத்தம் உடம்புகளையே தமக்குரிய இருப்பிடமாகக் கொண்டிருக்கின்றனவோ, அப்படியே சால்பு என்பதும் நாணம் என்னும் நல்லியல்பையே தனக்குரிய இருப்பிடமாகக் கொண்டிருக்கின்றது. (1013)

4. அணியன்றோ நாண்உடைமை சான்றோர்க்கு அஃதுஇன்றேல்
பிணியன்றோ பீடு நடை.

நாண் உடைமை, சான்றோர்க்கு, அணி அன்றோ? அஃது இன்றேல், பீடு நடை, பிணி அன்றோ?

(பொ-ரை): நாணம் உடைமை என்பது சான்றோர்களுக்கு ஓர் அணிகலன் அல்லவோ? அவ்அணிகலன் அமையாவிட்டால், அவர்களது பெருமிதமான நடையானது, காண்பவர்களுக்கு அருவருக்கத்தக்கதொரு நோயாகவே அமையும் அல்லவா? அமையும் என்றவாறு.

அணியன்றோ - அணிகலன் அல்லவோ?; **பீடு** - பெரு மிதமான; **நோய் அன்றோ** - அருவருக்கத்தக்க நோயாகவே அமையும் அல்லவா?

(க-ரை): நாணம் என்பது சான்றோர்க்கு எப்பொழுதும் ஓர் அணிகலன் ஆகும்; அந்த அணிகலன் அமையாவிட்டால், அவர்களுக்குப் பெருமிதநடை வராது; அவர்களது போக்கு அருவருக்கத்தக்கதாகவே அமையும். (1014)

**5. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு.**

பிறர்பழியும், தம் பழியும், நாணுவார், உலகு, நாணுக்கு, உறைபதி, என்னும்.

(பொ-ரை): பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு வரும் பழியையும், ஒன்றுபோல எண்ணி, நாணுகின்றவர்களை, உயர்ந்தோர்கள் நாணம் என்னும் பண்பிற்கான உறைவிடம் என்று கூறுவார்கள்.

நாணுக்கு - நாணம் என்னும் பண்பிற்கு; **உறைபதி** - உறைவிடம்; **உலகு** - உயர்ந்தோர்கள்; **என்னும்** - என்று கூறுவார்கள்.

(க-ரை): பிறர்க்கு ஏற்படும் பழியையும், தமக்கு ஏற்படும் பழியையும் ஒன்றுபோல் எண்ணுபவர்களே நாணம் என்ற பண்பிற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்கள் ஆவார்கள். (1015)

**6. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.**

மேலாயவர், நாண்வேலி, கொள்ளாது, மன்னோ, வியன் ஞாலம், பேணலர்.

(பொ-ரை): உயர்ந்தோர்கள் நாணம் என்ற வேலியைத் தமக்குப் பாதுகாப்பாகச் செய்துகொள்ளாமல், இந்தப் பரந்த உலகை ஒருபோதும், தமக்குப் பாதுகாப்பாகக் கொள்ள மாட்டார்கள்.

மேலாயவர் - உயர்ந்தோர்கள்; **நாண்வேலி** - நாணம் என்ற வேலியை; **வியன்ஞாலம்** - இந்தப் பரந்த உலகை; **பேணலர்** - தமக்குப் பாதுகாப்பாகக் கொள்ள மாட்டார்கள்.

(க-ரை): உயர்ந்தோர்கள் நாணம் என்ற பண்பைத்தான் தமக்குப் பாதுகாப்பாக எப்பொழுதும் கொள்வார்களேயல்லாமல், இந்தப் பரந்த உலகில் வேறு எதனையும் அவ்வாறு தமக்குரிய பாதுகாப்பாகக் கொள்ளமாட்டார்கள். (1016)

**7. நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர்.**

நாண் ஆள்பவர், நாணால், உயிரைத், துறப்பர், உயிர்ப் பொருட்டால், நாண் துறவார்.

(பொ-ரை): நாணத்தைத் தமக்குரிய பண்பாகக் கொண்டிருப் பவர்கள், நாணத்தைக் காப்பாற்ற வேண்டி, தமது உயிரையும் விட்டுவிடுவார்கள்; தமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டி, நாணத்தை ஒருபோதும் விட்டுவிட மாட்டார்கள்.

நாண் ஆள்பவர் - நாணத்தைத் தமக்குரிய பண்பாகக் கொண்டிருப்பவர்கள்; **நாணால்** - நாணத்தைக் காப்பாற்ற வேண்டி; **உயிர்ப் பொருட்டால்** - உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு.

(க-ரை): நாணத்தை உடைய உயர்ந்தோர்கள், எந்த ஒரு நிலையிலும், உயிரை விட்டேனும் தமது நாணத்தை நிலைநாட்டிக் கொள்ளத் தயங்க மாட்டார்கள். (1017)

**8. பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.**

பிறர், நாணத்தக்கது, தான் நாணான், ஆயின், அறம், நாணத் தக்கது, உடைத்து.

(பொ-ரை): பிறர் நாணத்தக்க பழிக்கு, ஒருவன், தான் நாணாமல் இருப்பானேயானால், அறமானது, நாணமுற்று, அவனைவிட்டு நீங்கிவிடும் தன்மை ஏற்படும்.

நாணத்தக்கது - நாணத்தக்க பழி; **அறம்** - அறமானது; **நாணத்தக்கது உடைத்து** - நாணமுற்று அவனை விட்டு நீங்கிவிடும் தன்மை ஏற்படும்.

(க-ரை): பிறர் நாணி ஒதுக்கும் பழிக்கு, ஒருவன் நாணம் அடையாதவனாய் இருப்பானேயானால், அவனிடம் அறப்பண்பு அறவே இருக்காது. (1018)

**9. குலம்சுடும் கொள்கை பிழைப்பின் நலம்சுடும்
நாண்இன்மை நின்றக் கடை.**

கொள்கை பிழைப்பின், குலம் சுடும்; நாண்இன்மை, நின்றக் கடை, நலம் சுடும்.

(பொ-ரை): ஒருவன் ஒழுக்கம் தவறுவானாயின், அது, அவனது குடிப்பிறப்பை மட்டும் கெடுக்கும்; அவன் நாணம் இல்லாதவனாக நிலைத்து நிற்பானேயானால், அது அவனுடைய நலங்கள் அனைத்தையும் கெடுக்கும்.

கொள்கை - ஒருவனின் ஒழுக்கம்; **பிழைப்பின்** - தவறுமேயானால்; **குலம்** - குடிப்பிறப்பை; **சுடும்** - கெடுக்கும்; **நாண் இன்மை** - நாணம் இல்லாமை; **நின்றக்கடை** - நிலைத்து நிற்பானேயானால்.

(க-ரை): ஒருவனது ஒழுக்கக் கேடு குடிப்பிறப்பை மட்டும் குலைக்கும்; ஆனால், நாணக்கேடு அவனது நலங்கள் அனைத்தையும் அழிக்கும். (1019)

10. நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று.

அகத்து, நாண் இல்லார், இயக்கம், மரப்பாவை, நாணால், உயிர், மருட்டியற்று.

(பொ-ரை): மனத்தின்கண் நாணம் இல்லாதவர்கள், உலகில் இயங்கி வருதல் என்பது, மரத்தினால் செய்த பாவை, தன்னைக் கட்டிய கயிற்றினால் இயங்கி, உயிருள்ளதுபோல மயக்குந் தன்மையை ஒத்ததாகும்.

அகத்து - மனத்தின்கண்; **இயக்கம்** - உலகில் இயங்கி வருதல் என்பது; **நாணால்** - கயிற்றினால்; **உயிர் மருட்டியற்று** - உயிருள்ளது போல மயக்கும் தன்மையை ஒத்ததாகும்.

(க-ரை): நாணம் இல்லாதவன் உலகில் நடமாடுவது என்பது, கயிற்றால் இயங்கும் மரப்பாவை உயிருள்ளதுபோல, மயக்கும் தன்மைக்கு ஒப்பானதாகும். (1020)

103. குடிசெயல் வகை

குடிசெயல் வகை என்பது, ஒருவன் தான் பிறந்த குடியின் அல்லது தன்னைச்சார்ந்த குடிமக்களின் பெருமை, புகழ், சீர், சிறப்பு, செல்வாக்கு போன்றவற்றை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்படும் திறம் பற்றிக் கூறுதல் எனப்படும்.

**1. கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்.**

ஒருவன் கருமம் செய கைதூவேன், என்னும் பெருமையின், பீடுடையது, இல்.

(பொ-ரை): ஒருவன், தன் குடியை உயர்த்தும்பொருட்டுத் தான் மேற்கொண்ட செயலைச் செய்துமுடிக்காமல் விடமாட்டேன் என்னும் முயற்சியாகிய பெருமையைப் போல, ஒருவனுக்குப் பெருமை யுடையது, வேறு எதுவும் இல்லை.

கருமம் - குடியை உயர்த்தும்பொருட்டு மேற்கொண்ட செயலை; **செய** - செய்து முடிக்காமல்; **கைதூவேன்** - விடமாட்டேன்; **பெருமையின்** - முயற்சியாகிய பெருமையைப் போல; **பீடு** - பெருமை.

(க-ரை): ஒருவன் தன் குடியை எப்பாடுபட்டேனும் உயர்த்தியே தீருவேன் என்று மேற்கொள்ளும் முயற்சியைவிட அவனுக்குப் பெருமை தருவது வேறொன்றும் இல்லை. (1021)

**2. ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.**

ஆள்வினையும், ஆன்றஅறிவும், என இரண்டின், நீள்வினையால், குடி நீளும்.

(பொ-ரை): விடாமுயற்சியும், நிறைந்த அறிவும் என்ற இரண்டினையும் கொண்டு, ஓய்வில்லாமல் ஒருவன் செய்கின்ற செயலால், அவனது குடியானது உயர்வடையும்.

ஆள்வினையும் - விடாமுயற்சியும்; **ஆன்ற அறிவும்** - நிறைந்த அறிவும்; **நீள்வினையால்** - ஓய்வில்லாமல் செய்கின்ற செயலால்; **குடி நீளும்** - குடி உயர்வடையும்.

(க-ரை): விடாமுயற்சியோடும், நிறைந்த அறிவோடும், ஒருவன் இடையறாது பாடுபட்டு வருவானேயானால், அவனது குடியானது உயர்வடையும். (1022)

**3. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.**

குடிசெய்வல், என்னும், ஒருவற்குத், தெய்வம், மடிதற்றுத், தான் முந்துறும்.

(பொ-ரை): எனது குடியை நான் உயரச் செய்வேன் என்று, அதற்கான செயல்களில் ஈடுபடும் ஒருவனுக்கு, இயற்கை அறிவாற்றலானது, தன் சோம்பலைப் போக்கிக்கொண்டு, அதாவது மிக்க முனைப்பார்வத்தோடு முன்வந்து நிற்கும்.

தெய்வம் - இயற்கை; இயற்கையாற்றல்; இயற்கை அறிவு; உண்மை அறிவு; **மடிதற்றுதல்** - சோம்பலைப் போக்கிக் கொண்டு நிற்றல்.

(க-ரை): ஒருவன் தன் குடியை உயர்வடையச் செய்யும் பெருமுயற்சியில் ஈடுபடுவானேயானால், அவனுக்கு முனைப்பு அறிவாற்றல் ஏற்பட்டு, அவனது செயல் எளிதில் கைகூடும். (1023)

**4. சூழாமல் தானே முடிவுஎய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு.**

தம்குடியைத், தாழாது, உஞற்றுபவர்க்குச், சூழாமல், தானே முடிவு எய்தும்.

(பொ-ரை): தமது குடியை உயர்த்துவதற்கான செயல்களைக் காலந்தாழ்த்தாமல், விரைந்து செய்ய முற்படுபவர்கள், அவற்றைச் செய்து முடிக்கும் விதத்தினை ஆராய்வதற்கு முன்னரே, அந்தச் செயல்கள் நிறைவேறிவிடும்.

தாழாது - காலந்தாழ்த்தாமல்; **உஞற்றுபவர்க்கு** முயலுகின்றவர்களுக்கு; **சூழாமலே** - செய்து முடிக்கும் விதத்தினை ஆராயாமலே; **முடிவு எய்தும்** - நிறைவேறிவிடும்.

(க-ரை): தம் குடியை உயர்த்துவதற்குப் பெருமுயற்சி செய்பவர்கள், மேற்கொள்ளும் செயல்கள் விரைவில் முடியும் என்பது உறுதி. (1024)

**5. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.**

குற்றம் இலனாய்க், குடிசெய்து வாழ்வானை, உலகு, சுற்றமாச் சுற்றும்.

(பொ-ரை): குற்றமற்றவனாய் இருந்து, தன்குடியை உயரச் செய்து, சிறப்புற வாழ்கின்ற ஒருவனைத் தம்முடைய உறவினனாகக் கொள்ள வேண்டி, உலகத்தார் தாமே வலியச் சென்று அவனைச் சூழ்ந்துகொள்வார்கள்.

உலகு - உலகத்தார்; **சுற்றமா** - தமக்கு ஏற்ற உறவினனாகக் கொள்ள வேண்டி; **சுற்றும்** - சூழ்ந்துகொள்வார்கள்.

(க-ரை): குற்றமற்றவனாகவும், தன் குடியை உயரச் செய்பவனாகவும் வாழ்கின்ற ஒருவனை, உலகத்தார் எல்லாம், தமக்குரிய உறவினனாகப் போற்றி அவன் உடனிருந்து மகிழ விரும்புவார்கள். (1025)

**6. நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.**

நல்ஆண்மை என்பது, ஒருவற்குத், தான் பிறந்த, இல் ஆண்மை ஆக்கிக் கொளல்.

(பொ-ரை): ஒருவனுக்கு நல்ல ஆண்மைத்தன்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது எதுவென்றால், அவன், தான் பிறந்த குடியை ஆளும் சிறப்பைத் தனக்குரியதாக ஆக்கிக் கொள்ளுதலாகும்.

நல்லாண்மை - நல்ல ஆண்மைத்தன்மை; **இல்லாண்மை** - தான் பிறந்த குடியை ஆளும் சிறப்பை; **ஆக்கிக் கொளல்** - தனக்குரியதாக ஆக்கிக் கொளல்.

(க-ரை): ஒருவன் தனது குடியை உயர்த்தி, அதனை ஆளும் தன்மையே அவனது ஆண்மைச் சிறப்பைக் குறிப்பதாகும். (1026)

**7. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.**

அமரகத்து, வன்கண்ணர் போலத், தமரகத்தும், பொறை, ஆற்றுவார், மேற்றே.

(பொ-ரை): போர்க்களத்தில் போரைத் தாங்கும் பொறுப்பு வலிமையுடைய வீரர்களிடமே உள்ளது போல, நற்குடியில்

பிறந்துள்ள உற்றாரைத் தாங்கி நடத்தவல்ல பொறுப்பும், அக்குடியைப் பேணும் வல்லாரிடமே உள்ளது.

அமரகத்து - போர்க்களத்தில்; **வன்கண்ணார்** - வலிமையுடைய வீரர்களிடத்தில்; **தமரகத்து** - நற்குடியில் பிறந்த உற்றாரை; **ஆற்றுவார் பொறை** - தாங்கி நடத்தவல்ல பொறுப்பு; **மேற்றே** - மேலதே; சார்ந்ததே.

(க-ரை): ஒரு படையில் வீரர்கள் பலர் இருந்தாலும், தம் மேல் வரும் பகைப்படையைத் தாங்கும் பொறுப்பு, எப்படி வலிமை யுடையவர்களுக்கே இருக்கின்றதோ, அப்படியே ஒரு குடியை உயரச்செய்யும் பொறுப்பும், அக்குடிப் பிறந்தார் பலரினும் வல்லவர்களுக்கே உரியதாகும். (1027)

8. குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து மானம் கருதக் கெடும்.

குடிசெய்வார்க்குப், பருவம் இல்லை; மடி செய்து, மானம், கருதக் கெடும்.

(பொ-ரை): தம்குடியை உயரச் செய்ய வேண்டும் என்று முயல்பவருக்குக் கால வரையறை என்பது இல்லை; ஆகையால், ஒருவர் சோம்பலையும் மேற்கொண்டு, தன் போக்கில் தாழ்ந்துகொண்டு இருப்பாரேயானால், அவரது குடியானது கெட்டுப் போய்விடும்.

பருவம் இல்லை - காலக் கட்டுப்பாடு இல்லை; **மடி செய்து** - சோம்பலை மேற்கொண்டு; **மானம் கருதல்** - தன் போக்கில் தாழாமல் இருத்தல்; **கெடும்** - கெட்டுப் போய்விடும்.

(க-ரை): தன் குடியை உயர்த்த வேண்டும் என்று முயலுபவன் சோம்பலைக் கொள்ளாமல், தன் போக்கில் தாழாமல், காலத்தையும் கருதாமல் செயலாற்ற வேண்டும்; அவனுக்குக் கால வரையறை என்பது இல்லை. (1028)

9. இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக் குற்ற மறைப்பா னுடம்பு.

குடும்பத்தைக், குற்ற, மறைப்பான், உடம்பு, இடும்பைக்கே, கொள்கலம், கொல்லோ.

(பொ-ரை): தனது குடும்பத்திற்கு ஏற்படும் குற்றத்தை வராமல் நீக்கி, அதனைக் காப்பாற்ற முயல்கின்ற ஒருவனுடைய உடம்பானது,

துன்பத்திற்கே உரிய கொள்கலம் போல அமைந்திருக்கும் போலிருக்கிறது.

மறைப்பான் - வராமல் நீக்கி, குடும்பத்தைக் காப்பாற்ற முயல்கின்ற ஒருவனுடைய; **இடும்பைக்கே** - துன்பத்திற்கே; **கொள்கலம்** - பாண்டம்.

(க-ரை): குடி செய்வான், துன்பம் வந்தாலும், எப்போதும் மெய் வருத்தம் பாராமல், குடியை உயர்த்தும் முயற்சியிலேயே தொடர்ந்து ஈடுபடுவான். (1029)

10. இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்துஊன்றும்
நல்லாள் இலாத குடி.

அடுத்து ஊன்றும், நல் ஆள் இலாத குடி, இடுக்கண் கால், கொன்றிட வீழும்.

(பொ-ரை): துன்பம் வரும்போது, உடனிருந்து அதனைத் தாங்கக்கூடிய நல்ல ஆண்மகன் இல்லாத குடியாகிய மரமானது, துன்பமாகிய கோடரி புகுந்து வெட்டும்போது வீழ்ந்து விடும்.

அடுத்து ஊன்றும் - துன்பம் வரும்போது உடனிருந்து அதனைத் தாங்கக்கூடிய; **நல்ஆள்** - நல்ல ஆண்மகனை; **குடி** - குடியாகிய மரம்; **இடுக்கண்** - துன்பமாகிய கோடரி; **கொன்றிட** - புகுந்து வெட்டும்போது; **வீழும்** - வீழ்ந்துவிடும்.

(க-ரை): துன்பத்தைத் தாங்கக்கூடிய நல்ல ஆண்மகன் இல்லாத குடும்பத்தைத் துன்பமானது மிக விரைவில் அழித்துவிடும். (1030)

104. உழவு

உழவு என்பது, உழவுத் தொழிலின் சிறப்பையும், அதன் பயனையும் பற்றிக் கூறுதல் எனப்படும்.

1. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

உலகம், சுழன்றும், ஏர்ப்பின்னது; அதனால், உழந்தும், உழவே தலை.

(பொ-ரை): உலகத்தார் பல தொழில்களையும் செய்து பார்த்து, அலைந்து, திரிந்து, சுழன்று வந்தாலும், இறுதியில், ஏரின் பின்னாலேதான் நிற்க வேண்டி இருக்கின்றது; அதனால், துன்பம் காரணமாக எவ்வளவுதான் வருந்தினாலும், உழவுத்தொழில்தான் சிறந்ததாகத் திகழ்கின்றது.

சுழன்றும் - பல தொழில்களைச் செய்து பார்த்து, அலைந்து திரிந்து, சுழன்று வந்தாலும்; **உலகம் ஏர்ப்பின்னது** - உலகத்தார் இறுதியில் ஏரின்பின்னாலேதான் நிற்க வேண்டியிருக்கின்றது; **உழந்தும்** - துன்பம் காரணமாக எவ்வளவுதான் வருந்தினாலும்; **தலை** - சிறந்ததாகும்.

(க-ரை): உலகத்தார் பல தொழில்களைச் செய்தாலும், உணவின் காரணமாக, உழவுத் தொழிலையே தலையான தொழிலாக ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். (1031)

2. உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

அஃது, ஆற்றாது, எழுவாரை, எல்லாம், பொறுத்து, உழுவார், உலகத்தார்க்கு, ஆணி.

(பொ-ரை): உழவுத் தொழிலினைச் செய்யாமல், பிற தொழில்களில் ஈடுபட்டிருப்போர் அனைவரையும் சேர்த்துத் தாங்க வேண்டியிருப்பதால், உழவர்கள், உலகத்தார் என்று சொல்லப்படும் தேருக்கு, அச்சாணி போன்றவர்கள் ஆவார்கள்.

அஃது - உழவுத் தொழிலினை; **ஆற்றாது** - செய்யாமல்; **எழுவாரை எல்லாம்** - பிற தொழில்களிலெல்லாம் ஈடு

பட்டிருப்போர் அனைவரையும்; **பொறுத்து** - தாங்க வேண்டி யிருப்பதால்; **ஆணி** - அச்சாணி.

(க-ரை): உலகில் எல்லாத் தொழில்களிலும் ஈடுபட்டிருக்கும் எல்லோர்க்கும் உணவு அளித்துக் காப்பாற்ற வேண்டியிருப்பதால், உழவர்கள் உலகத்தார்க்கு அச்சாணியாகக் கருதப்படுபவராவார்கள். (1032)

3. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

உழுது, உண்டு, வாழ்வாரே, வாழ்வார்; மற்று எல்லாம், தொழுது, உண்டு, பின் செல்பவர்.

(பொ-ரை): உழவுத் தொழிலினைச் செய்து, உணவுப் பொருளை ஈட்டி, அதனை உண்டு வாழ்பவர்களே உரிமையோடு வாழ்கின்றவர்கள் ஆவார்கள்; மற்றவர்கள் எல்லோரும் அவ்வுழவுத் தொழில் செய்வோரைப் பின்பற்றி, அவர் தரும் உணவுப்பொருளை உண்டு, அவர்களுக்குப் பின்னே செல்பவர்கள் ஆவார்கள்.

உழுது - உழவுத் தொழிலினைச் செய்து; **உண்டு** - உணவுப் பொருளை ஈட்டி அதனை உண்டு; **தொழுது** - உழவுத் தொழில் செய்வோரைப் பின்பற்றி; **உண்டு** - அவர்தரும் உணவுப் பொருளை உண்டு.

(க-ரை): உழவுத் தொழில்தான் உரிமையுடைய தொழிலாகவும், எல்லோரையும் வாழ்விக்கும் தொழிலாகவும் இருந்து வருகிறது. எனவேதான் அது மற்ற தொழில்களைக் காட்டிலும் சிறப்புமிக்க தொழிலாகிறது. (1033)

4. பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுஉடை நீழ லவர்.

அலகுடை, நீழலவர், பலகுடை, நீழலும், தங்குடைக் கீழ்க், காண்பர்.

(பொ-ரை): உழவுத் தொழிலால் நெற்கதிர்களையுடைய ஈகைப் பண்பு கொண்ட உழவர்கள், பல மன்னர்களது கொற்றக் குடையின் நிழலிலே வாழும் மக்களையெல்லாம் தம் ஈகைக்குடையின் நிழலின்கீழே காண்பார்கள்.

அலகு - உழவுத்தொழிலால் ஆகும் நெற்கதிர்கள்; **நீழலவர்** - ஈகைப் பண்புடையார்; **பலகுடை நீழலும்** - பல மன்னர்களது

கொற்றக்குடையின் நிழலிலே வாழும் மக்களையெல்லாம்; **தங்குடைக் கீழ்** - தமது ஈகைக் குடையின் நிழலின்கீழ்.

(க-ரை): பல மன்னர்களால் ஆளப்படும் குடிமக்கள் ஆனாலும், அவர்கள் எல்லோரும் உழவர்களின் உழவுப் பயனைக் கொண்டே, உயிர் வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.(1034)

5. இரவார் இரப்பார்க்கு ஒன்றுஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

கைசெய்து, ஊண் மாலையவர், இரவார்; இரப்பார்க்குக், கரவாது, ஒன்று ஈவர்.

(பொ-ரை): தம் கைகளினாலேயே உழவுத் தொழிலைச் செய்து, உணவுப்பொருளை விளைவித்து, உண்ணும் இயல்பினையுடைய உழவர்கள், ஒருபோதும் யாரிடமும் இரக்கமாட்டார்கள்; தம்மிடம் இரந்து வருபவர்களிடம், எதையும் ஒளிக்காமல், வேண்டிய அளவு உணவு கொடுப்பார்கள்.

கைசெய்து - தம் கைகளினாலேயே உழவுத் தொழிலைச் செய்து; **ஊண்** - உணவுப்பொருளை உண்ணும்; **மாலையவர்** - இயல்பை உடையவர்கள்; **இரவார்** - இரக்கமாட்டார்கள்; **கரவாது** - ஒளிக்காமல்.

(க-ரை): தாமே உழவுத்தொழிலைச் செய்து, உணவுப் பொருளை விளைவித்து, உண்ணும் உழவர்கள் யாரிடமும் போய் இரக்க மாட்டார்கள்; தம்மிடம் வந்து இரப்பவர்களிடம் அவர்கள் எதையும் ஒளிக்காமல் உணவைக் கொடுப்பார்கள். (1035)

6. உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கும் நிலை.

உழவினார், கைம்மடங்கின், விழைவதூஉம், விட்டேம், என்பார்க்கும், நிலை இல்லை.

(பொ-ரை): உழவர்களுக்கு, உழவுத்தொழிலை, எக்காரணங் கொண்டேனும் செய்ய முடியாத நிலை ஏற்படுமானால், விரும்பப்படுகின்ற எல்லாப் பற்றையும் துறந்துவிட்டோம் என்று கூறிவிடும் துறவிகளுக்கும் நிலைத்த வாழ்வு இல்லாமற் போய்விடும்.

கைம்மடங்கின் - உழவுத் தொழிலைச் செய்ய முடியாத நிலை ஏற்படுமேயானால்; **விழைவதூஉம்** - விரும்பப்படுகின்ற எல்லாவிதப்

பற்றையும்; **விட்டேம்** - விட்டுவிட்டோம்; **என்பார்க்கும்** - என்று கூறும் துறவிகளுக்கும்; **நிலை** - நிலைத்த வாழ்வு இல்லை.

(க-ரை): எக்காரணங் கொண்டாவது உழவுத் தொழில் நடைபெற முடியாத நிலை ஏற்படுமானால், அப்பொழுது துறவிகளின் வாழ்வும்கூட நிலைத்து நிற்காது. (1036)

**7. தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.**

தொடிப்புழுதி, கஃசா உணக்கின், பிடித்து எருவும் வேண்டாது, சாலப்படும்.

(பொ-ரை): உழவன் தன் நிலத்தின் ஒரு பலப்புழுதியைக் கால்பலமாக ஆகுமாறு பலமுறை உழுது, அதனைக் காய விடுவானேயானால், ஒரு பிடி அளவாகிய எருவும் போட வேண்டியதின்றி, அந்நிலத்தின்கண் விளைவித்த பயிரானது செழித்து வளரும்.

தொடிப்புழுதி - அளவில் ஒரு பலப்புழுதி; **கஃசா** - கால்பலம் ஆகுமாறு; **உணக்கின்** - உலரவிட்டால்; **பிடித்து** - ஒரு பிடி அளவாகிய; **சாலப்படும்** - பயிரானது செழித்து வளரும்.

(க-ரை): உழவன் தன் நிலத்தை நன்றாகப் பலமுறை உழுது, புழுதியை உலரவிட்டுப் பயிர் விளைவிப்பானேயானால், அந்தப் பயிர் எரு போட வேண்டிய இன்றியமையாமை இல்லாமலேயே செழித்து வளரும். (1037)

**8. ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றுஅதன் காப்பு.**

ஏரினும், நன்றால், எருஇடுதல்; கட்டபின், நீரினும், நன்று, அதன் காப்பு.

(பொ-ரை): இயல்பாக ஏர் உழுதலைக் காட்டிலும் மிக நல்ல முறையில் எரு இடுதல் வேண்டும்; உழுது எருவிட்டு விதைத்த பயிர்க்குக் களை எடுத்தபின், நீர் பாய்ச்சுவதைக்காட்டிலும், மிக நல்ல முறையில் அந்தப் பயிரைக் காக்க வேண்டும்.

ஏரினும் - ஏர் உழுதலைக் காட்டிலும்; **கட்டபின்** - களைஎடுத்த பின்; **காப்பு** - காத்தல்; பயிரைக்காத்தல் என்பது ஆடு, மாடு, நோய், பூச்சிகள் ஆகியவற்றால் அழிவு ஏற்படாமல் காத்தல்

என்பதாகும். உழுதல், எரு விடுதல், களை எடுத்தல், நீர் பாய்ச்சல், காத்தல் என்னும் ஐந்தும் உழவுக்கு இன்றியமையாதனவாகும்.

(க-ரை): உழவன் நிலத்தை உழுவதோடு, அதற்கு எரு இடுதலில் மிக்க ஆர்வம் காட்ட வேண்டும்; பயிர்க்கு நீர் பாய்ச்சுவதோடு, அந்தப் பயிரைக் காப்பாற்றுவதில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும். (1038)

**9. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்.**

செல்லான், கிழவன், இருப்பின், நிலம், புலந்து, இல்லாளின், ஊடி விடும்.

(பொ-ரை): நிலத்திற்கு உரியவன் நாள்தோறும் நேரில் சென்று நிலத்தைப் பார்க்காமலும், உழவுத் தொழிலுக்கு வேண்டியவை களைச் செய்யாமலும் சோம்பலாக இருந்துவிட்டால், அந்நிலமானது, அவனுடைய மனைவியைப்போல, அவனிடம் வெறுப்புக்கொண்டு, அவனோடு பிணங்கிக்கொள்ளும்.

கிழவன் - நிலத்திற்கு உரியவன்; **செல்லான்** - நாள்தோறும் நேரில் சென்று நிலத்தைப் பார்க்காதவனாய்; **இருப்பின்** - சோம்பலாக இருந்துவிட்டால்; **புலந்து** - அவனிடம் வெறுப்புக் கொண்டு; **ஊடிவிடும்** - அவனோடு பிணங்கிக்கொள்ளும்.

(க-ரை): ஒருவன் தன் மனைவியோடு நல்லுறவு வைத்துக் கொள்ளாவிட்டால், அவள் எப்படி அவனை வெறுத்து, அவனோடு பிணங்கி நின்று வாழ்வாளோ, அப்படியே நிலத்திற்குரிய உழவன், நாள்தோறும் நிலத்தைக் கண்காணிக்காவிட்டால், நிலமும் பாழ்பட்டு விளைவும் குன்றிப் போய்விடும். (1039)

**10. இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்.**

இலம் என்று, அசைஇ, இருப்பாரைக், காணின், நிலம் என்னும், நல்லாள், நகும்.

(பொ-ரை): யாம் ஒரு பொருளும் இல்லாமல் வறியராய் இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, சோம்பலாக இருப்பவர்களைக் கண்டால், நிலமடந்தை என்று சொல்லப்படுகின்ற நல்ல பெண்மணி யானவள் தனக்குள்ளே எள்ளி நகைத்துக் கொள்வாள்.

இலம் - ஒரு பொருளும் இல்லாமல் வறியராய் இருக்கிறோம்; **என்று** - என்று சொல்லிக்கொண்டு; **அசைஇ** - சோம்பலாக; **நல்லாள்** - நல்ல பெண்மணியானவள்; **நகும்** - தனக்குள்ளே எள்ளி நகைத்துக் கொள்வாள்; நிலத்தை 'நிலமகள்' அல்லது 'நிலமடந்தை' என்று சொல்லுவது நூல் மரபாகும்.

(க-ரை): உழவுத்தொழிலைச் செய்து உண்டு வாழாது, யாம் வறுமையில் வாடுகிறோம் என்று வாளா சொல்லிக்கொண்டு இருப்போரைப் பார்த்து, 'யானிருக்கும்போது உமக்கு என்ன குறை?' என்று கேட்பதுபோல நிலமடந்தை எள்ளி நகையாடுவாள். இதன்மூலம் உழவுத்தொழிலின் சிறப்பு உணர்த்தப்படுகிறது.(1040)

105. நல்குரவு

நல்குரவு என்பது, யாதொரு தொழிலும் செய்யாமை யாலும், நுகரப்படும் பொருள் யாதொன்றும் இல்லாமை யாலும் ஏற்படும் நிலைமையைப் பற்றிக் கூறுதல் எனப்படும்.

1. இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

இன்மையின், இன்னாதது, யாது எனின், இன்மையின், இன்னாதது, இன்மையே.

(பொ-ரை): வறுமையைப்போல ஒருவனுக்குத் துன்பந் தருவது எது என்றால், வறுமையிலும் வறுமையேயாகும்; வேறு எதுவுமில்லை.

இன்மையின் - வறுமையைப்போல; **இன்னாதது** - துன்பம் தருவது; **இன்மையே** - வறுமையே.

(க-ரை): வறுமைக்கு ஒப்பாகத் துன்பந்தரக் கூடியது வறுமையிலும் வறுமையேயாகும்; வேறொன்றை அதற்கு ஈடாகக் கண்டறிவது அரிதாகும். (1041)

2. இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்.

இன்மை, என ஒரு பாவி, இம்மையும், மறுமையும், வரும், இன்றி.

(பொ-ரை): வறுமை என்று சொல்லப்படுகின்ற ஒரு தீயோன், ஒருவனது இற்றைக்கால வாழ்விலும் சரி, அவனது வருங்கால வாழ்விலும் சரி, இடையூறாக வந்து நின்று, இன்பம் இல்லாமல் செய்துவிடுவான்.

இன்மை - வறுமை; **என** - என்று சொல்லப்படுகின்ற; **பாவி** - தீயோன்; பேதை என்றும் பொருள் உண்டு; **இம்மை** - இவ்வாழ்வு; இற்றைக்கால வாழ்வு; **மறுமை** - மறுவாழ்வு; வருங்கால வாழ்வு; இம்மை மறுமை - இப்பிறப்பு மறுபிறப்பு என்பன பொருந்திவரா; அறிவுக்கும் ஏற்புடையது அன்று; பாவி - பாவம் செய்தவன் என்னும் பொருள்பட வராது; அது பொருந்தி வராது.

(க-ரை): வறுமை என்ற கொடியநிலை, சிலரது இளமை, முதுமை ஆகிய எப்படிப்பட்ட வாழ்விலும், வந்து துன்பத்தையே கொடுக்கும். (1042)

**3. தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை.**

நல்குரவு, என்னும் நசை, தொல்வரவும், தோலும், தொகையாகக், கெடுக்கும்.

(பொ-ரை): வறுமை என்று சொல்லப்படும் பேராசையானது, ஒருவரது தொன்றுதொட்டு வருகின்ற குடிப்பண்பையும், அக் குடிக்குரிய புகழ்ச் சொற்களையும் ஒருங்கே கெடுக்கக் கூடியதாகும்.

நல்குரவு - வறுமை; **நசை** - பேராசையானது; **தொல்வரவும்** - தொன்றுதொட்டு வருகின்ற குடிப்பண்பையும்; **தோலும்** - அக்குடி பற்றிய புகழ்ச் சொற்களையும்; **தொகையாக** - ஒருங்கே; **கெடுக்கும்** - கெடுக்கக்கூடியதாகும்.

(க-ரை): வறுமை என்று சொல்லப்படுகின்ற பேராசையானது, ஒருவரது பழங்குடிப் பண்பையும், குடிச் சிறப்பையும் ஒருங்கே கெடுத்துவிடும். (1043)

**4. இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்.**

இன்மை, இற்பிறந்தார், கண்ணேயும், இளிவந்த, சொற்பிறக்கும், சோர்வு தரும்.

(பொ-ரை): வறுமையானது, உயர்ந்த நற்குடியில் பிறந் தோரிடத்திலும்கூட, இழிவான சொற்கள் தோன்றுவதற்குக் காரணமான தளர்ச்சியினை, அவர்களிடத்தில் உண்டாக்கிவிடும்.

இன்மை - வறுமையானது; **இளிவந்த** - இழிவான; **சொற் பிறக்கும்** - சொற்கள் தோன்றுவதற்குக் காரணமான; **சோர்வு** - தளர்ச்சியினை; **தரும்** - உண்டாக்கிவிடும்.

(க-ரை): வறுமையானது, உயர்ந்த நல்ல குடியில் பிறந்தவர் களிடத்தில்கூட, இழிவான சொற்கள் தோன்றுவதற்கு வழி வகுக்கும்; அதற்கான தளர்ச்சியினை, அவர்களிடம் உண்டாக்கிவிடும். (1044)

**5. நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.**

நல்குரவு, என்னும் இடும்பையுள், பல்குரைத் துன்பங்கள், சென்று படும்.

(பொ-ரை): வறுமை என்று சொல்லப்படும் துன்பத்திற்குள், பலவகைப்பட்ட துன்பங்களும் சென்று, அடங்கியிருந்து செயல் படும்.

நல்குரவு - வறுமை; **இடும்பையுள்** - துன்பத்திற்குள்; **பல்குரை** - பலவகைப்பட்ட; **படும்** - அடங்கியிருந்து செயல்படும்.

(க-ரை): வறுமை என்னும் துன்பம் ஒருவற்கு ஏற்பட்டு விட்டால், அந்தத் துன்பம், பல்வேறுபட்ட துன்பங்களுக்கெல்லாம் காரணமாக அமைந்துவிடும். (1045)

6. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

நற்பொருள், நன்கு உணர்ந்து, சொல்லினும், நல்கூர்ந்தார், சொற்பொருள், சோர்வுபடும்.

(பொ-ரை): நல்ல நூல்களின் பொருள் நயங்களைத் தெளிவாக அறிந்து உணர்ந்து சொன்னாலும், வறுமையுற்றவர்களின் சொல்லும் விளக்கமும், கேட்பார் இல்லாமல், பயனற்றுப் போய்விடும்.

நற்பொருள் - நல்ல நூல்களின் பொருள் நயங்களை; **நல்கூர்ந்தார்** - வறுமையுற்றவர்களின்; **சொற்பொருள்** - சொல்லும் விளக்கமும்; **சோர்வுபடும்** - கேட்பார் இல்லாமை காரணமாகப் பயனற்றுப் போய்விடும்.

(க-ரை): வறுமையில் இருக்கும் கற்றறிந்தவர்கள், எவ்வளவுதான் தெளிவாக நூல்களின் பொருள் நயங்களை எடுத்துக் கூறினாலும், அவற்றை எவரும் அக்கறையோடு செவிமடுக்க மாட்டார்கள். (1046)

7. அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

அறம்சாரா, நல்குரவு, ஈன்றதாயானும், பிறன்போல, நோக்கப்படும்.

(பொ-ரை): அறத்தோடு பொருந்தி வராத வறுமை, ஒருவனை அடைய நேர்ந்தால், அவன், அவனைப் பெற்றெடுத்த தாயாராலும் யாரோ ஓர் அயலானைப் போலவே பார்க்கப்படுவான்.

அறம்சாரா - அறத்தோடு பொருந்தி வராத; **நல்குரவு** - வறுமை அடைய நேர்ந்தால்; **நோக்கப்படும்** - பார்க்கப்படுவான்.

(க-ரை): அறநெறியோடு பொருந்தி வராத வறுமை, ஒருவனை வந்து சேருமேயானால், அவனைப் பெற்றெடுத்த அவன் தாயார்கூட மதிக்க மாட்டார். (1047)

8. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு.

நெருநலும், கொன்றது போலும், நிரப்பு, இன்றும், வருவது கொல்லோ?

(பொ-ரை): நேற்றைக்குத் தன்னைக் கொலை செய்வதைப் போலத் துன்புறுத்திய வறுமை, இன்றைக்கும் தன்னிடம் வரக் கூடுமோ? வந்தால் தான் என்ன செய்ய முடியும்? என்று வறியவன் நாள்தோறும் வருந்தவே செய்வான்.

நெருநலும் - நேற்றைக்கும்; **கொன்றதுபோலும்** - தன்னைக் கொல்லுவது போலும்; **நிரப்பு** - துன்புறுத்திய வறுமை; **வருவது கொல்லோ** - வரக்கூடுமோ.

(க-ரை): வறுமையிலே சிக்கி உழலுபவன், தான் வறுமைத் துன்பத்தால் துன்பப்படுவதை நினைந்து, நினைந்து வருந்திக் கலங்குவான். (1048)

9. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது.

நெருப்பினுள், துஞ்சலும் ஆகும்; நிரப்பினுள், யாதொன்றும், கண்பாடு, அரிது.

(பொ-ரை): ஒருவன் நெருப்பின் நடுவில் படுத்துக்கொண்டு, பல்வேறு மருந்து வகைகளின் உதவியினால் தூங்குவதும் செய்யக்கூடும். ஆனால், வறுமையின் சூழலில் அவன் யாதொரு வழியினாலும் தூங்குதல் என்பது முடியாததொரு செயலாகும்.

துஞ்சலும் - தூங்குதலும்; **ஆகும்** - மருந்துகளின் உதவியினால் செய்யவும் கூடும்; **நிரப்பினுள்** - வறுமையின் சூழலில்; **கண்பாடு** - தூங்குதல் என்பது; **அரிது** - முடியாததொரு செயலாகும்.

(க-ரை): ஒருவன் மருந்து வகைகளின் உதவியினால், நெருப்பின் நடுவே படுத்துத் தூங்கினாலும் தூங்குதல் கூடும்; ஆனால், அவன் வறுமையின் சூழலில் சிக்கிக்கொண்டு, தூங்குதல் என்பது, எந்த ஒரு வழியிலும் இயலாததொரு செயலாகும். (1049)

10. துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று.

துப்புரவு இல்லார், துவரத் துறவாமை, உப்பிற்கும், காடிக்கும், கூற்று.

(பொ-ரை): நுகரக்கூடிய பொருள்களைக் கொண்டிராத வறியவர்கள், முற்றும் துறக்கக்கூடியவராக இருந்தும், துறக்காததற்குக் காரணம், அவர்கள் பிறர் வீட்டிலுள்ள உப்பிற்கும், புளித்த கஞ்சிக்கும், ஒரு கேடாக இருப்பதே ஆகும்.

துப்புரவு - நுகரக்கூடிய பொருள்களை; **துவர** - முழுவதுமாக; **துறவாமை** - துறக்காததற்குக் காரணம்; **காடிக்கும்** - புளித்த கஞ்சிக்கும்; **கூற்று** - கேடாக இருப்பதேயாகும்; முற்றுத்துறத்தல் - இறத்தல் என்னும் பொருள்படும்; **கூற்று** - சாவு, கேடு; உயிரையும் உடலையும் கூறுபடுத்துகின்ற சாவுக்குக் கூற்று என்று பெயர்; அதைக் 'கூற்றுவன்' என்றும், 'எமன்' என்றும் கூறுவது நூல் மரபாகும்.

(க-ரை): உண்ண உணவில்லாமல்கூட இருக்கும் வறியவர்கள், சாவாமல் இருத்தல், பிறர் வீட்டிலுள்ள சோற்றுக்குக் கேடாகும்; அவர்கள் சாதலே பொருத்தமுடையதாகும். (1050)

106. இரவு

இரவு என்பது, வறியவராக இருப்பவர்கள், தமக்கு வேண்டியவற்றைப் பிறரிடம் கேட்டுப் பெறுதல் எனப்படும்.

**1. இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி அன்று.**

இரத்தக்கார்க் காணின், இரக்க, கரப்பின், அவர்பழி, தம் பழி, அன்று.

(பொ-ரை): வறியவர்கள், இரப்பதற்கு ஏற்ற தகுதி உடையவர்களைக் கண்டால், அவர்களிடம் இரக்கலாம்; அவர்கள் எதையும் கொடாமல் உள்ளதை மறைப்பார்களானால், அப்படிச் செய்வது, அவர்களுக்குப் பழியாகும்; இரப்பவர்களுக்கு அது பழியாகாது.

இரத்தக்கார்க் காணின் - இரப்பதற்கு ஏற்ற தகுதி உடையவர்களைக் கண்டால்; **இரக்க** - இரக்கலாம்; **கரப்பின்** - அவர்கள் எதையும் கொடாமல் உள்ளதை மறைப்பார்களானால்; **அவர் பழி** - அப்படிச் செய்வது அவர்களுக்குப் பழியாகும்; **தம்பழி அன்று** - இரப்பவர்களுக்கு அது பழி ஆகாது.

(க-ரை): வறியவர்கள் உடையவர்களிடத்தில் இரக்கலாம்; அந்த உடையவர்கள் எதையும் ஈயாமல் மறைப்பார்களேயானால், அதனால், அவர்களுக்குத்தான் பழி ஏற்படும்; இரப்பவர்களுக்குப் பழி ஏதும் ஏற்படாது. (1051)

**2. இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை
துன்பம் உறாஅ வரின்.**

இரந்தவை, துன்பம் உறாஅ, வரின், இரத்தல், ஒருவற்கு, இன்பம்.

(பொ-ரை): ஒருவர் பிறரிடம் இரந்து கேட்டுப் பெற்ற பொருள்கள், தாம் துன்பப்படாமல், அவருக்குக் கிடைக்கப் பெறுமேயானால், அப்படி இரத்தல்கூட, அவருக்கு இன்பம் பயப்பதாகவே இருக்கும்.

இரந்தவை - இரந்து கேட்டுப் பெற்ற பொருள்கள்; **துன்பம் உறாஅ வரின்** - துன்பப்படாமல் கிடைக்கப் பெறுமேயானால்; **இன்பம்** - இன்பம் பயப்பதாகவே இருக்கும்.

(க-ரை): இரக்கப்படும் பொருள்கள் துன்பப்படாமலும், துன்பத்தைத் தராமலும் ஒருவருக்குக் கிடைக்கப்பெறுமேயானால், அவைகூட அவருக்கு இன்பம் அளிப்பதாகவே அமையும். (1052)

3. கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்று
இரப்பும்ஓர் ஏஎர் உடைத்து.

கரப்புஇலா, நெஞ்சின், கடன் அறிவார், முன்நின்று, இரப்பும், ஓர் ஏஎர், உடைத்து.

(பொ-ரை): உள்ளதை மறைக்காமல், ஈயும் மனத்தினையும், கடமையுணர்ச்சியையும் உணர்பவர்கள் முன்நின்று, வறியவர்கள், இரந்து பொருள் கேட்பதும்கூட, ஓர் அழகை உடையதாகும்.

கரப்பிலா - உள்ளதை மறைக்காமல்; **கடன் அறிவார்** - கடமையுணர்ச்சியையும் உணர்பவர்கள்; **இரப்பும்** - இரத்தல்கூட; **ஏஎர்** - அழகினை.

(க-ரை): உள்ளதை ஒளிக்காமல், கொடுக்கும் மனத்தினையும், கடமையுணர்ச்சியையும் கொண்டவர்களிடத்தில், ஒரு வறியவன் இரந்து கேட்டுப் பெறுவதுகூட, தனியான ஓர் அழகைத் தருவதாகும். (1053)

4. இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு.

கரத்தல், கனவிலும், தேற்றாதார் மாட்டு, இரத்தலும், ஈதலே போலும்.

(பொ-ரை): தம்மிடம் உள்ளதை இல்லை என்று கூறி மறைத்தலைக் கனவிலும் அறியாதவர்களிடத்தில், ஒருவர் சென்று இரத்தல்கூட, ஈதலைப் போலவே, இன்பம் பயப்பதாகும்.

கரத்தல் - தம்மிடம் உள்ளதை இல்லை என்று கூறி மறைத்தலை; **தேற்றாதார் மாட்டு** - அறியாதவர்களிடத்தில் ஒருவர் சென்று; **ஈதலே போலும்** - ஈதலைப் போலவே இன்பம் பயப்பதாகும்.

(க-ரை): தம்மிடம் உள்ளதை எந்த ஒரு நேரத்திலும் மறைக்காமல் இருப்பவர்களிடம் சென்று, ஒருவர் இரப்பதுகூட, ஈதலைப் போன்றே, இன்பம் தருவதாக அமையும். (1054)

5. கரப்பிலார் வையகத்து உண்மையான் கண்ணின்று
இரப்பவர் மேற்கொள் வது.

கரப்பிலார், வையகத்து, உண்மையான், கண்நின்று, இரப்பவர், மேற்கொள்வது.

(பொ-ரை): தம்மிடம் உள்ளதை இல்லை என்று மறைத்துக் கூறாத நல்லவர்கள் உலகத்தில் சிலராவது இருப்பதால்தான், அவர் முன்சென்று நின்று இரத்தலை வறியவர்கள் தமது வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

கரப்பு இலார் - தம்மிடம் உள்ளதை இல்லை என்று மறைத்துக் கூறாத நல்லவர்கள்; **உண்மையான்** - சிலராவது இருப்பதால்தான்; **கண்நின்று** - அவர் முன்னே சென்று நின்று; **மேற்கொள்வது** - வழக்கமாக மேற்கொண்டிருக்கின்றனர்.

(க-ரை): உள்ளதை மறைக்காமல் கொடுக்கக்கூடிய பண்புடைய சிலராவது உலகத்தில் இருக்கின்ற காரணத்தினால்தான், வறியவர்கள் அவர்களிடம் சென்று இரத்தலை, வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். (1055)

6. கரப்புஇடும்பை இல்லாரைக் காணின் நிரப்புஇடும்பை எல்லாம் ஒருங்கு கெடும்.

கரப்பு இடும்பை, இல்லாரைக், காணின், நிரப்பு இடும்பை எல்லாம், ஒருங்கு கெடும்.

(பொ-ரை): தம்மிடம் உள்ளதை மறைத்தலாகிய அச்சம் இல்லாதவர்களைக் கண்டால், இரப்பவர்களுக்கு, வறுமையால் உண்டாகக்கூடிய துன்பங்கள் அனைத்தும் ஒருசேரக் கெட்டுப் போகும்.

கரப்பு இடும்பை - தம்மிடம் உள்ளதை மறைத்தலாகிய அச்சம்; **இடும்பை** - அச்சம்; துன்பம், தீமை, நோய், வறுமை என்ற பல பொருள்கள் உள. இங்கு அச்சம் என்பதைக் கொள்ள வேண்டும்; **நிரப்பு இடும்பை** - வறுமைத் துன்பங்கள்; **ஒருங்கு** - ஒரு சேர.

(க-ரை): தம்மிடம் இருப்பதை மறைக்காத பண்புடையவர் களைக் காண நேர்ந்தால், வறியவர்களுக்கு அவர்தம் வறுமைத் துன்பங்கள் எல்லாம் ஒருசேரப் போய்விடும். (1056)

7. இகழ்ந்துஎள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம் உள்ளுள் உவப்பது உடைத்து.

இகழ்ந்து, எள்ளாது, ஈவாரைக், காணின், மகிழ்ந்து உள்ளம், உள்ளுள் உவப்பது, உடைத்து.

(பொ-ரை): தம்மை இழிவாகப் பேசாமலும், ஏளனம் செய்யாமலும் இருக்கும் கொடுப்பவர்களைக் காணும்போது, இரப்பவர்களது மனம் மகிழ்ச்சியடைந்து, உள்ளுக்குள்ளே இன்பம் பெறும் தன்மையை உடையதாகும்.

இகழ்ந்து - இழிவாகப் பேசி; **எள்ளாது** - ஏளனம் செய்யாமல்; **ஈவாரைக்காணின்** - கொடுப்பவர்களைக் காணும் போது; **உள்ளம்** - இரப்பவர்களது மனம்; **உவப்பது** - இன்பம் பெறும்; **உடையது** - தன்மையை உடையதாகும்.

(க-ரை): இழிவாகப் பேசாமலும், ஏளனம் செய்யாமலும் கொடுக்கும் பண்புடையவர்களைக் காணும்போது, வறியவர்கள் மகிழ்ச்சியடைந்து, இன்பம் பெறுவார்கள். (1057)

8. இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று.

இரப்பாரை, இல்லாயின், ஈர்ங்கண்மாஞாலம், மரப்பாவை, சென்று வந்தற்று.

(பொ-ரை): இல்லாமையின் காரணமாக உருவாகும் இரப்பவர்கள் இல்லையானால், குளிர்ந்த பகுதியையுடைய பெரிய உலகத்தில் உள்ளவர்களின் நடமாட்டமானது, உயிரில்லாத மரப்பாவையானது, கயிற்றினால் இயக்கப்பட்டுப் போவதும் வருவதும் ஆகிய தன்மையைப் பெற்றிருப்பது போன்றதாகும்.

ஈர்ங்கண்மாஞாலம் - குளிர்ந்த பகுதியையுடைய பெரிய உலகத்தில் உள்ளவர்களின் நடமாட்டம்; **சென்று வந்தற்று** - போவதும் வருவதும் ஆகிய தன்மையைப் பெற்றிருப்பது போன்றதாகும்.

(க-ரை): இல்லாமையின் காரணமாக உருவாகும் இரப்பவர்கள் இவ்வுலகில் இல்லை என்றால், உலகத்தாரின் நடமாட்டம் கயிற்றினால் ஆட்டப்படும் மரப்பாவை செல்வதும் வருவதும் ஆக இருப்பது போல் அமைவதாகும். (1058)

9. ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை.

இரந்து, கோள் மேவார், இலாஅக் கடை, ஈவார்கண், என், தோற்றம் உண்டாம்?

(பொ-ரை): பொருள் இல்லை என்ற காரணத்திற்காக, இரந்தாவது அதனைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புவோர்கள் இல்லாத இடத்தில், பொருள் கொடுப்பவர்களுக்கு என்ன புகழ் உண்டாகும்? எந்தவிதப் புகழும் உண்டாகாது.

இரந்து - பொருள் இல்லை என்ற காரணத்திற்காக இரந்தாவது; **கோள்** - அதனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்; **மேவார்** - விரும்புவோர்கள்; **இலாஅக்கடை** - இல்லாதவிடத்தில்; **ஈவார்கண்** - கொடுப்பவர்களுக்கு; **என் தோற்றம்** - என்ன புகழ்.

(க-ரை): இரப்பவர்கள் என்று ஒரு சாரார் இல்லாதவிடத்தில் பொருள் கொடுப்பவர்களுக்குப் புகழ் ஏதும் இல்லை. (1059)

10. இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்புஇடும்பை
தானேயும் சாலும் கரி.

இரப்பான், வெகுளாமை, வேண்டும்; நிரப்புஇடும்பை, தானேயும், கரி சாலும்.

(பொ-ரை): இரப்பவன் பொருள் கொடுக்காத எவரிடத்திலும் சினங்கொள்ளாதிருக்க வேண்டும்; பொருளில்லாமை, பிறரிடத்திலும் இருக்கக்கூடும் என்பதை அறிவதற்கு, அவனது வறுமைத் துன்பம் ஒன்றேகூட, தக்க சான்றாக அமையும்.

வெகுளாமை வேண்டும் - பொருள் கொடுக்காத எவரிடத்திலும் சினங்கொள்ளாதிருக்க வேண்டும்; **நிரப்பு இடும்பை** - வறுமைத் துன்பம்; **தானேயும்** - ஒன்றேகூட; **கரி** - சான்றாக; **சாலும்** - அமையும்.

(க-ரை): இரப்பவன் பொருள் கொடுக்காதவரிடத்தில் சினந்து கொள்ளாதிருக்க வேண்டும்; பொருளில்லாமை பிறரிடத்திலும் இருக்கக்கூடும் என்பதற்கு, அவனது வறுமைத் துன்பமே தக்க சான்றாக அமையும். (1060)

107. இரவு அச்சம்

இரவு அச்சம் என்பது, ஒருவன் மானத்தை இழந்து இரப்பதற்கு அஞ்சுதல் எனப்படும்.

1. கரவாது உவந்துஈயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்.

கரவாது, உவந்து, ஈயும், கண்அன்னார் கண்ணும், இரவாமை, கோடிஉறும்.

(பொ-ரை): உள்ளதை மறைக்காமல், உள்ளம் மகிழ்ந்து கொடுக்கும் கண்போல்சிறந்தவரிடத்திலும், ஒருவர் சென்று இரக்காமலிருப்பது அவருக்குக் கோடி மடங்கு நல்லதாகும்.

கரவாது - உள்ளதை மறைக்காமல்; **உவந்து** - உள்ளம் மகிழ்ந்து; **கண் அன்னார் கண்ணும்** - கண் போன்ற சிறந்தவர் களிடத்திலும்; **உறும்** - நல்லதாகும்.

(க-ரை): உள்ளதை மறைக்காது, கொடுக்கக்கூடிய சிறந்த நண்பர்களிடத்திலும், ஒருவர் இரவாமலிருப்பதுகூட, உயர்ந்த செயலாகும்; பெரு முயற்சி செய்து உழைத்துதான், ஒவ்வொருவரும் உயிர் வாழ வேண்டும். (1061)

2. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகு இயற்றி யான்.

உலகு, இரந்தும், உயிர் வாழ்தல் வேண்டின், இயற்றியான், பரந்து கெடுக.

(பொ-ரை): உலகில், ஒருவன் இரந்துதான் உயிர்வாழ வேண்டுமென்றால், குடிமக்களுக்கான பொருளைத் திரட்டித்தரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் நாடாளுபவன், அப்படிக் கடமையைச் செய்யாமையின் காரணமாக இரப்பவரைப் போலவே தானும்எங்கும் அலைந்து திரிந்து கெடுவானாக.

உலகு - உலகில்; **இயற்றியான்** - பொருளைத் திரட்டித்தரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் நாடாளுபவன்; 'இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த வகுத்தலும்' (குறள் - 385) ஆகிய நான்கும் நாடாளுபவனின் பொறுப்புகள் ஆகும்; **பரந்து** - இரப்போரைப்போல அலைந்து திரிந்து; **கெடுக** - கெடுவானாக.

(க-ரை): யாரொருவரும் இரந்துதான் உயிர்வாழ வேண்டும் என்ற நிலையை ஒரு நாட்டில் உருவாக்காமல் இருப்பது, நாடாளுபவனின் முக்கியப் பொறுப்பாகும். (1062)

**3. இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்
வன்மையின் வன்பாட்டது இல்.**

இன்மை இடும்பை, இரந்து தீர்வாம், என்னும் வன்மையின், வான்பாட்டது இல்.

(பொ-ரை): வறுமைத் துன்பத்தை ஒருவன் தன் முயற்சியால் நீக்காமல், இரப்பதன் மூலமாகத் தீர்ப்போம் என்று எண்ணும் மன வன்மையைப் போல, முரட்டுத்தன்மையுடையது வேறொன்றும் இல்லை.

இன்மை இடும்பை - வறுமைத் துன்பத்தை; **தீர்வாம்** - தீர்ப்போம்; **வன்மையின்** - மனவன்மையினைப் போல; **வன்பாட்டது** - முரட்டுத்தன்மையுடையது; **இல்** - வேறொன்றும் இல்லை.

(க-ரை): வறுமைத் துன்பத்தை ஒருவன் தன் முயற்சியால்தான் நீக்க வேண்டுமேயல்லாமல், இரப்பதன் மூலம், பொருள் ஈட்டித் தீர்க்கலாம் என்று கருதுவது, முரட்டுத்தனமான போக்காகும்.(1063)

**4. இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடம்இல்லாக்
காலும் இரவுஒல்லாச் சால்பு.**

இடம் இல்லாக்காலும், இரவு ஒல்லாச் சால்பு, இடமெல்லாம், கொள்ளாத், தகைத்தே.

(பொ-ரை): நுகர்வதற்குப் பொருள் இல்லாத வறுமைக் காலத்திலும், இரந்து வாழ உடன்படாத ஒருவனது சால்புப் பண்பானது, உலகம் முழுவதும் கொள்ளாத அளவுக்கு அவ்வளவு சிறப்பினையுடையதாகும்.

இடம் இல்லாக்காலும் - நுகர்வதற்குப் பொருள் இல்லாத வறுமைக் காலத்திலும்; **இரவு** - இரந்து வாழ; **ஒல்லா** - உடன்படாத; **இடமெல்லாம்** - உலகம் முழுவதும்; **கொள்ளா** - கொள்ளாத அளவுக்கு; **தகைத்தே** - சிறப்பினையுடையதாகும்.

(க-ரை): ஒருவன், தான் வறுமையுற்ற காலத்திலும் இரந்து வாழ வேண்டும் என்று எண்ணாமல் இருக்கும் சிறந்த பண்பை உலகமானது என்றும் போற்றிப் புகழவே செய்யும். (1064)

**5. தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்குஇனியது இல்.**

தாள்தந்தது, தெள்நீர், அடுபுற்கை ஆயினும், உண்ணலின், ஊங்கு, இனியது இல்.

(பொ-ரை): ஒருவன் தன்னுடைய முயற்சியால் பெறக்கூடிய பொருள், தெளிந்த நீர் போன்றிருக்கும் சமைத்த கூழே ஆனாலும், அதனை உண்ணுவதைக்காட்டிலும், அவனுக்கு இனிமை பயப்பது, வேறொன்றும் இல்லை.

தாள் - தனது முயற்சியால்; **தந்தது** - பெறக்கூடிய பொருள்; **தெள் நீர்** - தெளிந்த நீர் போன்ற; **அடுபுற்கை** - சமைத்த கூழ்; **உண்ணலின் ஊங்கு** - அதனை உண்ணுவதைக் காட்டிலும்.

(க-ரை): ஒருவன், தன் முயற்சியால் பெறக்கூடியது கூழ்தான் என்றாலும், அந்தக் கூழைக் குடிப்பதைவிட, இனிமை தருவது, அவனுக்கு வேறு எதுவும் இருக்க முடியாது. (1065)

**6. ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்.**

ஆவிற்கு, நீர் என்று, இரப்பினும், இரவின், நாவிற்கு, இளிவந்தது, இல்.

(பொ-ரை): நீர் வேட்கையால் துன்பப்படும் ஒரு பசுமாட்டிற்கு, அதன் வேட்கையை நீக்க வேண்டி, நீர் வேண்டும் என்று அறப்பண்போடு இரந்து ஒருவன் பிறரைக் கேட்டாலும், அப்படி இரத்தலைக்காட்டிலும், அவனது நாவிற்கு இழிவைத் தருவது வேறொன்றும் இல்லை.

ஆவிற்கு - பசுமாட்டிற்கு; **இரப்பினும்** - இரந்து கேட்டாலும்; **இரவின்** - இரத்தலைக்காட்டிலும்; **இளி** - இழிவை; **வந்தது** - தருவது; **இல்** - வேறொன்றும் இல்லை.

(க-ரை): ஒருவன், பசு மாட்டின் நீர் வேட்கையைப் போக்க வேண்டும் என்பதற்காகப் பிறரைப் பார்த்துத் தண்ணீர் வேண்டும் என்று இரப்பதுகூட, அவனுக்கு இழிவையே தருவதாகும். (1066)

**7. இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பிற்
கரப்பார் இரவன்மின் என்று.**

இரப்பின், கரப்பார், இரவன்மின் என்று, இரப்பாரை எல்லாம், இரப்பன்.

(பொ-ரை): இரக்க வேண்டுமானால், உள்ளதை மறைப்பவர்களிடம் சென்று இரக்க வேண்டாம் என்று இரப்பவர்கள் எல்லோரையும் இரந்து வேண்டிக் கேட்டுக் கொள்வேன் என்று இரத்தலுக்கு அஞ்சுகின்ற ஒருவன் கூறுவான்.

இரப்பின் - இரக்க வேண்டுமானால்; **கரப்பார்** - உள்ளதை மறைப்பவர்களிடம்; **இரவன்மின்** - சென்று இரக்க வேண்டாம்; **இரப்பன்** - இரந்து வேண்டிக் கேட்டுக் கொள்வேன்; இது இரத்தலுக்கு அஞ்சுகின்ற ஒருவனின் கூற்றாக அமைக்கப்பட்டிருக்கிறது.

(க-ரை): ஒருவனுக்கு இரக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டாலும், எக்காரணங்கொண்டும் உள்ளதை மறைப்பவர்களிடம் சென்று, அவன் இரக்கவே கூடாது. (1067)

8. இரவுஎன்னும் ஏமாப்புஇல் தோணி கரவுஎன்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

இரவு, என்னும், ஏமாப்பு, இல், தோணி, கரவு, என்னும், பார்தாக்கப், பக்குவிடும்.

(பொ-ரை): வறுமைக்கடலைத் தாண்ட அமைத்துக்கொண்ட, இரத்தல் என்னும் பாதுகாப்பு இல்லாத மரக்கலமானது, உள்ளதை மறைத்தல் என்னும் கற்பாறையில் மோதுமாயின் பிளந்து போய்விடும்.

இரவு - இரத்தல்; **ஏமாப்பு** - பாதுகாப்பு; **இல்** - இல்லாத; **தோணி** - மரக்கலம்; **கரவு** - உள்ளதை மறைத்தல்; **பார்** - கற்பாறையில்; **தாக்க** - மோதுமாயின்; **பக்குவிடும்** - பிளந்து போய்விடும்.

(க-ரை): இரத்தல் என்னும் பாதுகாப்பற்ற தோணியானது உள்ளதை மறைத்தல் என்னும் பாறையில் போய் மோதுமேயானால், அப்பொழுதே அது உடைந்து பிளந்து போய்விடும். (1068)

9. இரவுஉள்ள உள்ளம் உருகும் கரவுஉள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்.

இரவு உள்ள, உள்ளம் உருகும்; கரவு உள்ள, உள்ளதூஉம், இன்றிக், கெடும்.

(பொ-ரை): இரத்தலின் கொடுமையை நினைக்கும்போது, நெஞ்சானது உருகிவிடுகின்றது. உள்ளதை மறைத்தலின் கொடுமையை நினைக்கும்போது, அவ்வுருகும் தன்மையுமின்றி, நெஞ்சானது அழிந்து போய்விடுகின்றது.

இரவு - இரத்தலின் கொடுமையை; **உள்ள** - நினைக்கும் போது; **கரவு** - உள்ளதை மறைத்தலின் கொடுமையை; **உள்ளதூஉம்** - அந்த உருகும் தன்மையுமின்றி; **கெடும்** - அழிந்துபோய்விடும்.

(க-ரை): இரத்தலின் கொடுமையை நினைத்துப் பார்க்கும் போது, உள்ளமானது உருகிப் போய்விடும்; உள்ளதை மறைத்தலின் கொடுமையை நினைக்கும்போது, அப்படி உருகிய உள்ளம்கூட அழிந்து போய்விடும். (1069)

10. கரப்பவர்க்கு யாங்குஒளிக்கும் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்.

சொல்லாட, இரப்பவர் உயிர், போஒம்; கரப்பவர்க்கு, யாங்கு, ஒளிக்கும், கொல்லோ.

(பொ-ரை): உள்ளதை மறைப்பவர்கள் இல்லை என்று சொல்லியவுடனேயே, இரப்பவரின் உயிரானது போய் விடுகின்றது; ஆனால், உள்ளதை மறைத்து வைத்து, இல்லையென்பவர்களுக்கு மட்டும், உயிரானது பின்னும் இருத்தலால், அவர்களது உயிர் எங்கு போய் ஒளிந்திருக்குமோ? தெரியவில்லை!

சொல்லாட - உள்ளதை மறைப்பவர்கள் இல்லையென்று சொல்லியவுடனே; **கரப்பவர்க்கு** - உள்ளதை மறைத்து வைத்து, இல்லை என்பவர்களுக்கு உயிர்பின்னும் இருத்தலால்; **யாங்கு ஒளிக்கும் கொல்லோ** - உயிர் எங்கு போய் ஒளிந்திருக்குமோ?

(க-ரை): உள்ளதை மறைப்பவர்கள் இல்லை என்று சொல்லியவுடனே, இரப்பவர்களின் உயிர் போய்விடுகிறது; ஆனால் உள்ளதை மறைப்பவர்களின் உயிர், இல்லை என்று சொன்ன பிறகும் போகாமல் இருக்கிறது; இது ஒரு விந்தையான நிலைதான்! (1070)

108. கயமை

கயமை என்பது, யாதொரு நற்பண்பும் இல்லாமல், ஒழுக்கமற்ற, நெறிமுறைகளுக்குக் கட்டுப்படாத, எந்த இழி செயலையும் செய்யக்கூடிய கீழோரது இயல்பைப் பற்றிக் கூறுதல் எனப்படும்.

1. மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்டது இல்.

கயவர், மக்களே, போல்வர்; அவரன்ன ஒப்பாரி, யாம், கண்டதுஇல்.

(பொ-ரை): கீழ்மக்கள், தோற்றத்தால் முழுவதும் நன்மக்களைப் போலவே காணப்படுவார்கள் அவர்களைப் போன்று, பண்புகளால் வேறுபட்டு உடலுருவத்தால் ஒத்துத் தோன்றுகின்ற வேறு இருவகைப் பொருள்களை, யாம் பார்த்ததே இல்லை.

கயவர் - கீழ்மக்கள்; **மக்களே போல்வர்** - தோற்றத்தால் முழுவதும் நன்மக்களைப் போலவே காணப்படுவார்கள்; **ஒப்பாரி** - ஒத்துத் தோன்றுகின்ற.

(க-ரை): கீழ்மக்கள், தோற்றத்தால் மட்டுந்தான் நன்மக்களைப் போன்று ஒத்துக் காணப்படுவார்கள்; பண்பால், கீழ்மக்கள், மக்களாகவே கருதப்படமாட்டார்கள். (1071)

2. நன்றுஅறி வாரின் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவலம் இலர்.

நன்று அறிவாரின், கயவர், திருவுடையர், நெஞ்சத்து, அவலம் இலர்.

(பொ-ரை): நல்லனவற்றை ஆராய்ந்தறியும் நன்மக்களைவிடக், கீழ்மக்களே சிறந்த பேறு உடையவராவார்கள்; ஏனெனில், அந்தக் கீழ்மக்கள் எந்தவொரு நல்லதைப்பற்றியும் தம் உள்ளத்தில் கவலை கொள்ளாதவர்கள்.

நன்று அறிவாரின் - நல்லனவற்றை ஆராய்ந்தறியும் நன்மக்களைவிட; **கயவர்** - கீழ்மக்கள்; **திருவுடையர்** - சிறந்த பேறு உடையராவார்கள்; **அவலம்** - கவலை; **இலர்** - கொள்ளாதவர்கள்.

(க-ரை): நன்மக்கள் எப்பொழுதும் நல்லன பற்றியே சிந்தித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்; ஆனால், கீழ்மக்களோ என்றால், எந்த நல்லதைப்பற்றியும் சிந்திக்காமல், கவலைப் படாமலேயே வாழ்வார்கள்; இந்த வகையில் கீழ்மக்களின் நிலை, வசதியான நிலைதான். (1072)

3. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்.

கயவர், தேவர் அனையர்; அவரும்தாம், மேவன செய் தொழுகலான்.

(பொ-ரை): கீழ்மக்கள் ஒரு வகையில் மேன்மக்களை ஒத்திருப்பவராவார்கள்; ஏனெனில், கீழ்மக்களும், மேன்மக்களைப் போலவே தாம் விரும்புகின்றவற்றைச் செய்தொழுகும் மன உறுதியைப் பெற்றிருக்கிறார்கள்.

தேவர் - உயர்ந்தோர்; மேன்மக்கள்; மேலானவர்; வான்புகழ் கொண்ட உயர்மக்கள்; **மேவன** - விரும்புகின்றவற்றை; **செய் தொழுகலான்** - செய்தொழுகும் மன உறுதியைப் பெற்றிருப்பதால்.

(க-ரை): கீழ்மக்கள் ஒரு வகையில் உயர்ந்தோர்களை ஒத்திருப்பவரேயாவார்கள்; எப்படியென்றால், உயர்ந்தோர்கள் மனஉறுதியோடும், எதிலும் தெள்ளத்தெளிவோடும் இருப்பதால், அவர்கள் விரும்புகின்றவற்றை விரும்பியபடியே செய்யும் ஆற்றல் படைத்தவராவார்கள்; கீழ்மக்கள் எந்தக் கேடான விளைவைப் பற்றியும் கவலைப்படாமல், எதையும் செய்யக்கூடியவர்களாதலால், அவர்களும் விரும்புகின்றவற்றை, விரும்பியபடியே செய்யும் ஆற்றலுடையவராகின்றனர். (1073)

4. அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்.

கீழ், அகப்பட்டி, ஆவாரைக், காணின், அவரின், மிகப்பட்டுச், செம்மாக்கும்.

(பொ-ரை): கீழ்மக்கள், தம்மைக்காட்டிலும் தாழ்ந்த கீழ்த்தரப்பட்டவராய் இருப்பவர்களைக் காண நேர்ந்தால், அவர்களைவிடத் தம்மை, மிக மேம்பாடு உடையவர்களாகக் காட்டி, இறுமாப்புக் கொள்ளுவார்கள்.

கீழ் - கீழ்மக்கள்; **அகப்பட்டி ஆவாரை** - தம்மைக் காட்டிலும் தாழ்ந்த கீழ்த்தரப்பட்டவராய் இருப்பவர்களை; **அகம்** - சுருங்குதல்;

குறைதல்; **பட்டி** - ஒழுக்கமில்லாதவன்; **மிகப்பட்டு** - மிக மேம்பாடு உடையவர்களாகக் காட்டி; **செம்மாக்கும்** - இறுமாப்புக் கொள்ளுவார்கள்.

(க-ரை): கயவர்கள், தம்மைக்காட்டிலும் குறைந்த கீழ் மக்களைக் காண நேர்ந்தால் தாமே அவர்களிடையில் சிறந்து விளங்குவதாக எண்ணி, இறுமாப்புக் கொள்ளுவார்கள். (1074)

5. அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாஉண்டேல் உண்டாம் சிறிது.

கீழ்களது ஆசாரம், அச்சமே; எச்சம், அவா உண்டேல், சிறிது, உண்டாம்.

(பொ-ரை): கீழ்மக்களிடம் சிறிதளவு ஒழுக்கம் காணப் பட்டால், அதற்குக் காரணம் அச்சமேயாகும்; அந்தக் காரணம் இல்லையென்றால், அவர்கள் விரும்பும் பொருள் கிடைக்கும் நிலை ஏற்படுமேயானால், அதற்காகச் சிறிதளவு ஒழுக்கம் ஏற்படக்கூடும்.

கீழ்களது - கீழ்மக்களிடம்; **ஆசாரம்** - ஒழுக்கம்; **எச்சம்** - அந்தக் காரணம் இல்லை என்றால்; **அவா உண்டேல்** - அவர்கள் விரும்பும் பொருள் கிடைக்கக்கூடிய நிலை ஏற்படுமேயானால்; **சிறிது** - சிறிதளவு ஒழுக்கம்; **உண்டாம்** - ஏற்படக்கூடும்.

(க-ரை): கயவர்களிடத்தில் சிறிதளவு ஒழுக்கம் காணப் பட்டால், அதற்குக் காரணம், தமக்குத் தண்டனை கிடைக்குமே என்ற அச்சமேயாகும். அது காரணமாக இல்லை என்றால், அவர்கள் விரும்பும் பொருளைப் பெறுவதற்காகச் சிறிது நேரம், ஒழுக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள். (1075)

6. அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்.

கயவர், தாம் கேட்ட மறை, பிறர்க்கு, உய்த்து, உரைக்கலான், அறை பறை, அன்னர்.

(பொ-ரை): கீழ்மக்களானவர்கள், தாம் கேட்டறியும் மறைத்தற்குரிய செய்திகளைச் சுமந்துகொண்டு போய், ஆங்காங்கு மற்றவர்களிடம் சொல்லுவதால், அவர்கள் அடிக்கப்படும் பறைக்கு ஒப்பானவர் ஆவார்கள்.

கேட்டமறை - கேட்டறியும் மறைத்தற்குரிய செய்திகளை; **உய்த்து** - சுமந்துகொண்டு போய்; **உரைக்கலான்** - ஆங்காங்குச்

சொல்லுவதால்; **அறை** - அடிக்கப்படுகின்ற; **பறை** - பறைக்கு; **அன்னர்** - ஒப்பானவர் ஆவார்கள்.

(க-ரை): கயவர்கள், தாம் கேட்டறியும் மறைத்தற்குரிய அரிய செய்திகளை எடுத்துக்கொண்டு போய் ஆங்காங்குப் பிறரிடம் சொல்லிக்கொண்டே இருப்பதால், அவர்கள் செய்திகளை அடித்துப் பரப்பும் பறைக்கு ஒப்பானவர் ஆவார்கள். (1076)

7. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுஉடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு.

கயவர், கொடிறு, உடைக்கும், கூன்கையர், அல்லாதவர்க்கு, ஈர்ங்கை, விதிரார்.

(பொ-ரை): கீழ்மக்களானவர்கள், தமது முகவாய்க் குறட்டினை, இடித்து உடைக்கும், முடக்கிய கையினையுடைய முரடரல்லாத பிறர்க்குத் தாம் உண்டு ஈரம் படிந்த தமது எச்சிற் கையைக்கூட உதற மாட்டார்கள்.

கொடிறு - முகவாய்க்குறடு; **கூன்கை** - முடக்கிய கை; **ஈர்ங்கை** - உண்டு ஈரம் படிந்த எச்சிற் கையைக்கூட; **விதிரார்** - உதற மாட்டார்கள்; ''செருப்பாலே அடிப்பார்க்குக் கோடிப்பொன் கொடுப்பான்'', ''எச்சில் கையால் காக்கைகூட ஓட்டமாட்டான்'', ''உண்ட கையைக்கூட உதற மாட்டான்'' என்பவையெல்லாம் பழமொழிகள்.

(க-ரை): கயவர்கள், தம்மை உதைத்து அடித்து வருத்து வோர்க்கு வேண்டுமானால், வாரிவாரிக் கொடுப்பார்களே அல்லாமல், மற்றபடி நல்லவர்களாக உள்ளவர்களுக்கு ஏதொன்றையும் ஈய மாட்டார்கள். (1077)

8. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

சொல்லச், சான்றோர், பயன்படுவர், கீழ், கரும்பு போல், கொல்லப், பயன்படும்.

(பொ-ரை): குறைகளைக் கூறிய அளவிலேயே, மேலோர்கள் பிறர்க்குப் பயன்படுவார்கள்; ஆனால், கீழ்மக்களோ என்றால் கரும்பினை நசுக்கிப் பிழிவதுபோல் வருத்தினால்தான் பயன் படுவார்கள்.

சொல்ல - குறைகளைக் கூறிய அளவிலேயே; **கொல்ல** - நசுக்கி வருத்தினால்தான்; **பயன்படும்** - பயன்படுவார்கள்.

(க-ரை): ஒருவர் தம் குறைகளைச் சொல்லிய அளவிலேயே, சான்றோர்கள் அவருக்குப் பயன்படுவார்கள்; ஆனால், கீழ்மக்களை அடித்து வருத்தினால்தான், பிறருக்கு அவர்கள் பயன்படுவார்கள். (1078)

9. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்

கீழ், உடுப்பதூஉம், உண்பதூஉம், காணின், பிறர்மேல், வடுக்காண, வற்றாகும்.

(பொ-ரை): கீழ்மக்களானவர்கள், பிறர் சிறப்பாக உடுத்திக் கொள்வதையும், நன்றாக உண்ணுவதையும் காண்பார்களேயானால், பொறாமை கொண்டு, அத்தகைய பிறர்மீது குற்றம் இல்லையென்றாலும், குற்றங்களைத் தாமே உண்டாக்கிக் காட்டுவதில் வல்லவர்கள் ஆவார்கள்.

உடுப்பதூஉம் - பிறர் சிறப்பாக உடுத்திக் கொள்வதையும்; **உண்பதூஉம்** - நன்றாக உண்ணுவதையும்; **வடுக்காண** - குற்றத்தினை உண்டாக்க; **வற்றாகும்** - வல்லவர்கள் ஆவார்கள்.

(க-ரை): கயவர்கள், பிறர் நன்றாக உடுத்திக் கொள்ளுவதையும், நன்றாக உண்ணுவதையும் காணுவார்களேயானால், மனம் பொறாது, அவர் மீது இல்லாத பொல்லாத குற்றத்தினைச் சுமத்துவதில், திறமையாக ஈடுபடுவார்கள். (1079)

10. எற்றிற்கு உரியர் கயவர்ஒன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து.

கயவர், எற்றிற்கு, உரியர்; ஒன்று, உற்றக்கால், விரைந்து, விற்றற்கு, உரியர்.

(பொ-ரை): கீழ்மக்கள், எதற்கு உரியவராவார்கள்? தமக்கு ஒரு துன்பமோ, குறையோ வந்தடையும்போது, அதைப் போக்குவதற்காகத் தம்மையே விலைபேசி, விரைந்து விற்றுவிடுவதற்கு உரியவர்கள் ஆவார்கள்.

கயவர் - கீழ்மக்கள்; **ஒன்று உற்றக்கால்** - தமக்கு ஒரு துன்பமோ, குறையோ வந்தடையும்போது; **விரைந்து விற்றற்கு** - தம்மையே விலைபேசி விரைவாக விற்றுவிடுவதற்கு.

(க-ரை): கயவர்கள் எதற்குத் தகுதியுடையவர்கள் என்றால், தமக்கு ஒரு துன்பமோ, குறைபாடோ ஏற்பட்டுவிட்டால், உடனே தம்மை விலைபேசிப் பிறரிடம் விற்றுவிடுவதற்கே தகுதியுடையவர்கள் ஆவார்கள். (1080)

109. தகை அணங்கு உறுத்தல்

தகை அணங்கு உறுத்தல் என்பது, தலைமகனானவன், தலைமகளது அழகானது, தன்னை வருத்துதலைப் பற்றிக் கூறுதல் எனப்படும்.

**1. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு.**

கனம்குழை, அணங்குகொல், ஆய்மயில், கொல்லோ, மாதர் கொல், என் நெஞ்சு, மாலும்.

(பொ-ரை): கனத்த காதணிகளையுடைய இப்பெண் வாட்டும் ஓர் அழகின் வடிவோ? அல்லது ஓர் அழகான மயிலோ? அல்லது மங்கையோ? இவள் இன்னவள் என்று அறியமாட்டாமல் என் உள்ளம் மயங்குகிறதே!

கனம் - கனத்த; **குழை** - காதணிகளையுடைய இப்பெண்; **அணங்குகொல்** - வாட்டும் ஓர் அழகின் வடிவோ; **ஆய்மயில் கொல்** - ஓர் அழகான மயிலோ; **மாதர்கொல்** - மங்கையோ; **மாலும்** - மயங்குகிறதே.

(க-ரை): என் கண் எதிரே நிற்கும் பெண் ஓர் அணங்கோ, அல்லது ஓர் ஆய்மயிலோ? அல்லது ஒரு மங்கையோ? எனக்குத் தெரியவில்லையே! என் உள்ளம் மயங்குகிறதே! என்று தலைமகன் புலம்புகிறான். (1081)

**2. நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து.**

நோக்கினாள், நோக்கு, எதிர்நோக்குதல், தாக்கு அணங்கு, தானைக், கொண்டுஅன்னது, உடைத்து.

(பொ-ரை): என்னைப் பார்த்த அழகுமிக்க அப்பெண், நான் அவளை நோக்கியவுடன் அவள் என்னை எதிர்த்து நோக்கியது, தானே நோக்கி வருத்தும் ஓர் அழகின்வடிவம், ஒரு படையையும் உடன் கொண்டு வந்தாற் போன்ற தன்மையையுடையது.

நோக்கினாள் - என்னைப் பார்த்த அழகுமிக்க அப்பெண்; **நோக்கு** - நான் அவளை நோக்கியவுடன்; **எதிர்நோக்குதல்** - எதிர்த்து நோக்கியது; **தாக்கு** - தானே தாக்கி வருத்துகின்ற; **அணங்கு** - அழகின் வடிவம்; **தானை** - படையையும்; **கொண்டு அன்னது** - கொண்டு வந்த தன்மையை.

(க-ரை): என்னைப் பார்த்த அழகான அந்தப் பெண்ணை, நான் நோக்க, அவள் திருப்பி எதிர்நோக்க, அது ஓர் அழகின் வடிவம் படையோடு வந்து என்னைத் தாக்குவது போன்று இருந்தது என்று தலைமகன் எண்ணுகிறான். (1082)

**3. பண்டுஅறியேன் கூற்றுஎன் பதனை இனியறிந்தேன்
பெண்தகையால் பேரமர்க் கட்டு.**

கூற்று என்பதனை, பண்டு அறியேன்; இனி அறிந்தேன், பெண் தகையால், பேர் அமர்க்கட்டு.

(பொ-ரை): சாவு என்ற கூற்று என்பதைப்பற்றி முன்பெல்லாம் கேட்டு அறிந்திருக்கிறேன்; நேரில் கண்டறிந்ததில்லை; இப்பொழுது அறிந்துகொண்டேன்; அது பெண் உருவத்தோடு பெரிய போரினைச் செய்யக்கூடிய கண்களை உடையதாக இருக்கிறது.

கூற்று - சாவு; உயிரையும் உடலையும் கூறுபடுத்துகின்ற ஒன்று கூற்று; அதாவது சாவு; 'கூற்று' என்றும், 'கூற்றுவன்' என்றும் கூறப்படுவது நூல் மரபு; **பண்டு** - முன்பு; **பெண் தகையால்** - பெண் தன்மையோடு; அதாவது பெண் உருவத்தோடு; **பேரமர்க் கட்டு** - பெரிய போரினைப் புரியக்கூடிய கண்களை உடையது.

(க-ரை): சாவு என்ற கூற்றை முன்பெல்லாம் நான் அறியாதிருந்தேன்; இப்பொழுது நேரில் பார்த்துத் தெரிந்து கொண்டேன்; அது பெண் உருவத்தில் வந்து, என்னைச் சண்டைக்கு இழுக்கக்கூடிய கண்களைக் கொண்டதாக இருக்கின்றது என்று, அழகிய பெண்ணைப் பார்த்து மயங்கிய தலைமகன் கூறுகிறான். (1083)

**4. கண்டார் உயிர்உண்ணும் தோற்றத்தால் பெண்தகைப்
பேதைக்கு அமர்த்தன கண்.**

பெண்தகைப் பேதைக்கு, கண், கண்டார், உயிர் உண்ணும், தோற்றத்தால், அமர்த்தன.

(பொ-ரை): பெண்ணுக்குரிய தன்மைகளையெல்லாம் உடைய இந்த இளம் பெண்ணுக்கு உள்ள கண்கள், தம்மைக் கண்டவர்களது உயிரை உண்ணும் தோற்றத்தோடு இருப்பதால், அவை இவளது நல்லியல்புக்கு மாறுபட்ட தன்மையுடையனவாக இருக்கின்றன.

பெண் தகை - பெண்ணுக்குரிய தன்மைகளையெல்லாம் உடைய; **பேதைக்கு** - இந்த இளம் பெண்ணுக்கு; **கண்டார்** - கண்டவரது; **உயிர் உண்ணும்** - உயிரை உண்ணும்; **அமர்த்தன** - இவளது நல்லியல்புக்கு மாறுபட்ட தன்மையுடையனவாக இருக்கின்றன.

(க-ரை): இந்த இளம் பெண்ணின் கண்கள், பார்த்தவர்களது உயிரை உண்ணுகின்றனவாக அமைந்திருப்பதால், இவளது நல்லியல்புகளுக்கு, அவை மாறுபட்டனவாக விளங்குகின்றன என்று தலைமகன் அழகிய பெண்ணின் கண்கள் தன்னை வருத்தி வாட்டுவதைப்பற்றி ஏக்கமுற்றுக் கூறுகிறான். (1084)

5. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து.

மடவரல் நோக்கம், கூற்றமோ? கண்ணோ? பிணையோ? இம்மூன்றும் உடைத்து.

(பொ-ரை): இந்த இளம் பெண்ணின் பார்வை, என்னை வருத்துவதால் கூற்றமோ? என் மீது இரக்கங்காட்டுவதால் கண்ணோ? இயற்கையான மருட்சியையுடையதாக இருப்பதால் பெண் மானோ? யான் அறிவேன் அல்லேன்! ஆனால், அது இம்மூன்றின் தன்மை யையும் உடையதாக இருக்கின்றது!

கூற்றமோ - சாவின் வடிவமோ; உயிர் உடல் ஆகியவற்றைக் கூறுபடுத்துகின்ற, காரணத்தால், கூற்றம் எனப்படும்; 'கூற்றம்' என்பதும், 'கூற்று' என்பதும் நூல் மரபாகும்; **பிணையோ** - பெண் மானோ.

(க-ரை): இந்த இளம் பெண்ணின் பார்வை, எனக்குக் கூற்றமாகவும் படுகின்றது; கண்ணாகவும் தெரிகின்றது; பெண் மானாகவும் தோன்றுகிறது. இந்த மூன்றின் தன்மைகளும் இவளது பார்வையிடத்தில் இருக்கின்றன என்று தலைமகன் கூறுகிறான். (1085)

6. கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்குஅஞர்
செய்யல மன்இவள் கண்.

கொடும் புருவம், கோடா, மறைப்பின், இவள் கண், நடுங்கு அஞர், செய்யல மன்.

(பொ-ரை): இவளது வளைந்த புருவங்கள், கோணாமல் நேராக இருந்து தடுத்து மறைத்திருக்குமேயானால், அப் புருவங்களைக் கடந்து வந்து இவளது கண்கள் எனக்கு நடுக்கத்தைத் தரும் துன்பத்தைச் செய்திருக்க மாட்டா.

கொடும் - வளைந்த; **கோடா** - கோணாமல்; வளையாமல்; **நடுங்கு** - நடுக்கத்தைத் தரும்; **அஞர்** - துன்பத்தினை; **செய்யல** - செய்யமாட்டா.

(க-ரை): இவளுடைய வளைந்த புருவங்கள் வளையாமல் நேராக நின்று தடுத்து மறைத்திருக்குமேயானால், இவளது கண்கள் என்னை நடுங்க வைத்துத் துன்பஞ் செய்திருக்க மாட்டா என்று தலைமகன் கூறுகிறான். (1086)

7. கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்.

மாதர், படாஅ, முலைமேல், துகில், கடாஅக் களிற்றின், மேல், கட்படாம்.

(பொ-ரை): இளம் பெண்ணின் சாயாத கொங்கைகளின்மேல் அணியும் ஆடையானது, மதம் பிடித்த யானையின் மந்தகங்களின் மேல் இட்ட முகபடாம் போன்று இருக்கிறது.

படாஅ - சாயாத; **துகில்** - ஆடையானது; **கடாஅ** - மதம் பிடித்த; **கட்படாம்** - முகபடாம்.

(க-ரை): யானையின் மந்தகங்கள், முகபடாம் போட்ட நிலையில் எப்படிப் புடைத்துத் தோன்றுமோ, அப்படியே இந்த இளம் பெண் ஆடை அணிந்த நிலையில், அவளின் கொங்கைகள் புடைத்து நின்று காட்சியளிக்கின்றன; அவை என் மனத்தை வாட்டுகின்றன என்று தலைமகன் எண்ணி ஏக்கங் கொள்கிறான். (1087)

8. ஒண்ணுதற்கு ஓஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு.

ஞாட்பினுள், நண்ணாரும், உட்கும் என்பீடு, ஒள்நுதற்கு, ஓஒ உடைந்ததே!

(பொ-ரை): போர்க்களத்தில் என்னை நேரில் வந்து எதிர்க்க முடியாத பகைவர்களும் அஞ்சுகின்ற எனது வலிமையானது, இவளது ஒளி பொருந்திய நெற்றியின் அழகு ஒன்றனைக் கண்டவுடனேயே ஆற்றாது, உடைந்து அழிந்துபோய் விட்டதே!

ஞாட்பினுள் - போர்க்களத்தில்; **நண்ணாரும்** - நேரில் வந்து எதிர்க்க முடியாத பகைவர்களும்; **உட்கும்** - அஞ்சுகின்ற; **பீடு** - வலிமையானது; **ஒள்** - ஒளி பொருந்திய; **நுதற்கு ஓஒ** - நெற்றியின் அழகு ஒன்றிற்கே; **உடைந்ததே** - உடைந்து அழிந்துவிட்டதே.

(க-ரை): போர்க்களத்தில் பகைவர்களும் எதிர்க்க அஞ்சுகின்ற என்னுடைய வலிமையானது, இவ்வழகிய பெண்ணின் ஒளி பொருந்திய நெற்றி ஒன்றனைக் கண்டவுடனேயே உடைந்து அழிந்துவிட்டதே! (1088)

9. பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து.

பிணைஏர், மடநோக்கும், நாணும், உடையாட்கு, ஏதில தந்து, அணி எவனோ?

(பொ-ரை): பெண் மானைப் போன்ற மருட்சியான நோக்கினையும், நாணத்தையும் உடைய இவளுக்கு, இயற்கையாகிய இவ்அணிகலன்கள் அமைந்திருக்கச் செயற்கையாகிய வேறு அணிகலன்களைக் கொண்டு வந்து அணிவது என்ன பயன் கருதியோ? ஒரு பயனும் இல்லை.

பிணை - பெண் மானை; **ஏர்** - போன்ற; **மடநோக்கும்** - மருட்சியான நோக்கினையும்; **ஏதில** - செயற்கையாகிய வேறு அணிகலன்களை; **தந்து** - கொண்டு வந்து; **அணிஎவனோ** - அணிவது என்ன பயனைக் கருதியோ?

(க-ரை): இந்த அழகிய பெண்ணிற்குப் பெண்மானைப் போன்ற பார்வையும், நாணமும் இயற்கை அணிகலன்களாக இருக்கும்போது, வேறு செயற்கை அணிகலன்களைக் கொண்டு வந்து இவளுக்கு அணிவது ஏனோ? என்று தலைமகன் இவளது இயற்கை அழகு நலன்களைக் கண்டு வியக்கிறான். (1089)

10. உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று.

நடு நறா, உண்டார்கண் அல்லது, காமம் போல், கண்டார், மகிழ்செய்தல், இன்று.

(பொ-ரை): காய்ச்சி எடுக்கப்பட்ட மதுவானது, உண்டவர் களுக்கு மட்டுமே அல்லாது காமத்தைப் போன்று தன்னைக் கண்டவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தல் இல்லை.

அடு - காய்ச்சி எடுக்கப்பட்ட; **நறா** - மதுவானது; **உண்டார்கண்** - உண்டவர்களுக்கு மட்டுமே; **செய்தல் இன்று** - கொடுத்தல் இல்லை.

(க-ரை): மதுவானது உண்பவர்களுக்கு மட்டுமே மகிழ்ச்சியைக் கொடுக்கும்; காண்பவர்களுக்குக் கொடுக்காது. ஆனால், காமம் அழகிய இளம் பெண்ணை நுகர்வோருக்கு மட்டும் அல்லாமல் காண்பவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். (1090)

110. குறிப்பு அறிதல்

குறிப்பு அறிதல் என்பது, தலைவி, தோழி ஆகியோர் குறிப்பினைத் தலைவனும், தலைவன் தலைவி ஆகியோர் குறிப்பினைத் தோழியும் அறிதல் பற்றிக் கூறுதல் எனப்படும்.

**1. இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து.**

இவள் உண்கண், இருநோக்கு, உள்ளது, ஒருநோக்கு, நோய் நோக்கு, ஒன்று, அந்நோய், மருந்து.

(பொ-ரை): இவளது மையுண்ட கண்களில் இருவகைப்பட்ட நோக்குகள் உள்ளன; ஒரு நோக்கு எனக்குக் காதல் நோயினை உண்டாக்கும் நோக்காகும்; மற்றொரு நோக்கு அந்த நோய்க்கு மருந்தாக அமைவதாகும்.

உண்கண் - மையுண்ட கண்களில்; **உள்ளது** - உள்ளன; **நோய் நோக்கு** - எனக்குக் காதல் நோயினை உண்டாக்கும் நோக்காகும்.

(க-ரை): இந்த அழகிய பெண்ணினுடைய கண்களில், இருவிதப் பார்வைகள் இருக்கின்றன; ஒரு பார்வை எனக்குக் காதல் நோயினைத் தரும் பார்வையாகும்; மற்றொரு பார்வை, அந்த நோயைத் தீர்ப்பதற்கான மருந்தாகப் பயன்படும் பார்வையாகும் என்று தலைமகன் கூறுகிறான். (1091)

**2. கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது.**

கண், களவு கொள்ளும், சிறுநோக்கம், காமத்தில், செம்பாகம், அன்று, பெரிது.

(பொ-ரை): இவளின் கண்கள், களவுத்தன்மையில், நான் காணாமல், என் மேல் நோக்குகின்ற சிறு பார்வையானது, பெறக்கூடிய புணர்ச்சியின்பத்தில் சரிபாதிகூட அன்று; அதனைக்காட்டிலும் பெரிது ஆகும்.

கண் - இவளது கண்கள், **களவு கொள்ளும்** - களவுத் தன்மையில், நான் காணாமல் என் மேல் நோக்குகின்ற; **சிறுநோக்கம்** - சிறு பார்வையானது; **காமத்தில்** - நான் பெறக்கூடிய புணர்ச்சி யின்பத்தில்; **செம்பாகம்** - சரிபாதி.

(க-ரை): நான் காணாதபோது, என்னைக் கள்ளத்தனமாக இந்த அழகிய பெண் பார்க்கும் சிறு பார்வையானது, நினைத்துப் பார்க்கும்போது, பெறக்கூடிய புணர்ச்சியின்பத்தில், பெரும்பகுதிக்கு ஒத்ததாக அமைந்து இருக்கிறது. (1092)

3. நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதுஅவள்
யாப்பினுள் அட்டிய நீர்.

நோக்கினாள், நோக்கி, இறைஞ்சினாள், அஃது, அவள், யாப்பினுள், அட்டிய நீர்.

(பொ-ரை): நான் காணாத நிலையில் என்னை நோக்கியவள், என்னை நோக்கியதால், மனத்தில் ஒன்றை நினைத்து, நாணத்துடன் தலைகுனிந்தாள்; அந்தச் செயலின் குறிப்பு, எங்கள் இருவரிடையே தோன்றிய காதலன்புப் பயிர் வளர அப்பெண், அப்பயிரில் ஊற்றிய நீராக இருந்தது.

நோக்கினாள் - நான் காணாத நிலையில் என்னை நோக்கியவள்; **இறைஞ்சினாள்** - மனத்தில் ஒன்றை நினைத்து நாணத்துடன் தலைகுனிந்தாள்; **யாப்பினுள்** - காதலன்பு பயிர் வளர; **அட்டிய** - ஊற்றிய.

(க-ரை): நான் காணாத நிலையில், அந்த அழகிய பெண் என்னை நோக்கினாள்; அதன் காரணமாக மனத்தில் ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டு, நாணத்துடன் தலைகுனிந்து நின்றாள்; அவளுடைய அந்தச் செயற்குறிப்பு, எங்களுடைய காதலன்பு வளருவதைக் காட்டுவதாக அமைந்திருந்தது என்று தலைவன் கூறுகிறான். (1093)

4. யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

யான்நோக்கும் காலை, நிலம் நோக்கும், நோக்காக்கால், தான்நோக்கி, மெல்ல நகும்.

(பொ-ரை): நான் அவளை உற்று நோக்கும்போது, அவள் தலைகுனிந்து நிலத்தினை நோக்குவாள்; அதனை அறிந்து, நான் அவளை நோக்காவிட்டால், அவள் என்னை நோக்கி மெல்லத் தனக்குள்ளே மகிழ்வாள்.

நிலன் - நிலத்தை; **மெல்ல** மெதுவாக; **நகும்** - தனக்குள்ளேயே மகிழ்வாள்.

(க-ரை): நான் அந்த அழகிய பெண்ணை உற்றுப்பார்க்கும் போது, அவள் தலைகுனிந்து நிலத்தையே பார்ப்பாள்; நான் அவளைப் பார்க்காதபோது, அவள் என்னைப் பார்த்து மெல்லத் தனக்குள்ளேயே மகிழ்வாள். (1094)

5. குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

குறிக்கொண்டு, நோக்காமை, அல்லால், ஒரு கண், சிறக்கணித்தாள் போல, நகும்.

(பொ-ரை): அந்த அழகிய பெண்ணானவள், என் முகத்தை நேராக ஒரு குறிப்பினைக் கொண்டு நோக்கவில்லையேயல்லாமல், ஒரு கண்ணைச் சிறிது சுருக்கிக் கொண்டவள் போல வைத்துக் கொண்டு, என்னை நோக்கித் தனக்குள்ளேயே மகிழ்வாள்.

குறிக்கொண்டு - என் முகத்தை நேராக ஒரு குறிப்பினைக் கொண்டு; **நோக்காமை அல்லால்** - நோக்கவில்லையே அல்லாமல்; **சிறக்கணித்தாள்** - கண்ணைச் சுருக்கியவள்; **நகும்** - என்னை நோக்கித் தனக்குள்ளேயே மகிழ்வாள்.

(க-ரை): அந்த அழகிய பெண், என் முகத்தை நேர்முகமாகப் பார்க்கவில்லையேயல்லாமல், அவள் தனது ஒரு கண்ணைச் சிறிது சுருக்கிக் கொண்டவள்போல் வைத்துக்கொண்டு, என்னைப் பார்த்துத் தனக்குள்ளேயே மகிழ்வாள் என்று தலைமகன் தலைமகளின் உள்ளக் குறிப்பறிந்து மகிழ்கின்றான். (1095)

6. உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும்.

உறாஅதவர் போல், சொலினும், செறாஅர், சொல், ஒல்லை, உணரப்படும்.

(பொ-ரை): தலைவியை அணுகவிடாமல் செய்ய தோழி யானவள், புறத்தே அயலார்போலக் கடுமையான சொற்களைக் கூறினாளாயினும், அவை அகத்தே சினமில்லாதவளாய்க் கூறியுள்ள சொற்கள் என்பதை விரைவில் நான் அறிந்துகொள்ள இயலும்.

உறாஅதவர் போல - புறத்தே அயலார்போல; **சொலினும்** - கடுமையான சொற்களைக் கூறினாலும்; **செறாஅர்** - அகத்தே சினம் இல்லாதவளாய்; **ஒல்லை** - விரைவில்; **உணரப்படும்** - அறிந்து கொள்ள இயலும்.

(க-ரை): என்னைத் தலைவியிடம் அணுகவிடாமல் செய்ய, வெளித்தோற்றத்திற்கு அயலார்போல, தோழியானவள் கடுமையான சொற்களை என்னிடம் கூறினாள் என்றாலும், அவை உள்ளுக்குள்ளே சினங்கொண்டு கூறப்படவில்லை என்பதை நான் விரைவில் அறிந்துகொள்வேன் என்று எண்ணித் தலைமகன் மனஅமைதி பெறுகிறான். (1096)

**7. செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்று உற்றார் குறிப்பு.**

செறாஅச் சிறுசொல்லும், செற்றார்போல், நோக்கும், உறாஅர் போன்று, உற்றார், குறிப்பு.

(பொ-ரை): துன்பம் பயக்காத கடுமையான சொல்லும், புறத்தே பகைவர்போலப் பார்க்கும் சினப் பார்வையும், தொடர்பில்லாதவர் போல வெளியே காட்டி, உள்ளுக்குள்ளே அன்புகொண்டு இருப்பவரின் அடையாளக் குறிப்புகளாகும்.

செறாஅ - துன்பம் பயக்காத; **சிறுசொல்லும்** - கடுமையான சொல்லும்; **செற்றார்போல்** - புறத்தே பகைவர்போல்; **நோக்கும்** - பார்வையும்; **உறாஅர்போன்று** - தொடர்பில்லாதவர் போல வெளியே காட்டி; **உற்றார்** - உள்ளுக்குள்ளே அன்பு கொண்டிருப்பவரின்.

(க-ரை): இந்தத் தோழியினிடத்திலே காணப்படும் துன்பம் தராத கடுமையான சொல்லும், புறத்தே பகைவர் போல் பார்க்கும் பார்வையும், என்னோடு தொடர்பில்லாதார் கூற்றுப்போலத் தெரிந்தாலும், அவை என்னிடம் தலைவி அன்பு கொண்டிருக்கிறாள் என்பதை உணர்த்தும் குறிப்புகளாகும் என்று தலைமகன் கூறுகிறான். (1097)

**8. அசையியற்கு உண்டுஆண்டுஓர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்.**

யான் நோக்கப், பசையினள், பையநகும்; அசையியற்கு, ஆண்டு, உண்டு, ஓர் ஏஎர்.

(பொ-ரை): நான் தோழியின் கடிய சொல்லுக்கு வருந்தித் தலைவியை இரந்து நோக்கியபோது, அவள் என் மீது அன்பும், இரக்கமுங் கொண்டவளாகி, மெல்ல நகைத்து நின்றாள்; துவளுகின்ற தன்மையையுடைய அவளது அந்த நகைப்பினிலே ஒரு நன்மைக் குறிப்பு இருப்பதை உணர்ந்தேன்.

நோக்க - தோழியின் கடிய சொல்லுக்கு வருந்தித் தலைவியை இரந்து நோக்கியபோது; **பசையினள்** - அவள் என் மீது அன்பும், இரக்கமுங் கொண்டவளாகி; **நகும்** - நகைத்து நின்றாள்; **அசையியற்கு** - துவளுகின்ற தன்மையையுடைய அவளது; **ஆண்டு** - அந்த நகைப்பினிலே; **ஏஎர்** - நன்மைக்குறிப்பு; **உண்டு** - இருப்பதை உணர்ந்தேன்.

(க-ரை): தோழியின் கடுமையான சொற்களைக் கேட்டு வருத்தமுற்று, நான் தலைவியை நோக்கினேன்; அவள் என் மீது இரக்கங்கொண்டு மெல்ல நகைத்து நின்றாள்; அவளது நகைப்பினிலே ஒரு நன்மைக்குறிப்பு இருப்பதை உணர்ந்து, நான் மகிழ்ந்தேன் என்று தலைமகன் கூறுகிறான். (1098)

9. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள.

ஏதிலார்போலப், பொதுநோக்கு, நோக்குதல், காதலார் கண்ணே, உள.

(பொ-ரை): வெளித்தோற்றத்தில் முன்பின் அறியாத அயலார் போல, ஒருவரை ஒருவர் பொதுநோக்கம் கொண்டு பார்த்தல் என்பது, உள்ளுக்குள்ளே காதலன்பு கொண்டவர்களிடத்திலே இருக்கும் இயல்பாகும்.

ஏதிலார் - முன்பின் அறியாத அயலார்; **பொதுநோக்கு** - பொது நோக்கங்கொண்டு; **நோக்குதல்** - பார்த்தல் என்பது.

(க-ரை): பொதுவாகக் காதலன்பு கொண்டவர்கள், அதை வெளிக்காட்டாமல், முன்பின் அறியாத அயலார் போல ஒருவரை ஒருவர் பொது நோக்கம் கொண்டு பார்த்துக்கொள்வது என்பது அவர்களது இயல்பு. (1099)

10. கண்ணொடு கண்ணிணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.

கண்ணொடு கண், இணைநோக்கு, ஒக்கின், வாய்ச்சொற்கள், என்ன பயனும், இல.

(பொ-ரை): காதலர் இருவருள், ஒருவரின் கண்களோடு மற்ற ஒருவரின் கண்கள் இரண்டும் நோக்கால் ஒத்திருக்குமேயானால், வெளிப்படையாக அவர்கள் சொல்லும் வாய்ச் சொற்களால், எந்த ஒரு

பயனையும் புதிதாக எதிர்பார்க்க வேண்டியதில்லை; ஒத்த நோக்கே போதுமானது.

இணை நோக்கு - கண்கள் இரண்டும் நோக்கால்; **ஒக்கின்** - ஒத்திருக்குமேயானால்; **வாய்ச்சொற்கள்** - அவர்கள் சொல்லும் வாய்ச் சொற்களால்.

(க-ரை): காதலர்களாக இருப்போரில், ஒருவரின் கண்களோடு மற்ற ஒருவரின் கண்கள் இரண்டும் பார்வையால் ஒத்திருக்குமே யானால், அவர்கள் வெளிப்படையாக வாய்ச்சொற்கள் மூலம் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டியது, அவர்களுக்குள் ஏதொன்றும் இல்லை; ஒத்த நோக்கமே போதுமானது. (1100)

111. புணர்ச்சி மகிழ்தல்

புணர்ச்சி மகிழ்தல் என்பது, தலைமகளின் குறிப்பறிந்து, அவளைப் புணர்ந்த தலைமகன், அப்புணர்ச்சியின் இன்பம் பற்றி மகிழ்ந்து கூறுதல் எனப்படும்.

**1. கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.**

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும், ஐம்புலனும், ஒள்தொடி, கண்ணே, உள.

(பொ-ரை): கண்ணால் கண்டும், செவியால் கேட்டும், வாயால் சுவைத்தும், மூக்கால் முகர்ந்தும், மெய்யால் தீண்டியும் நுகரப் படுகின்ற ஐம்புல இன்பங்களும் ஒளி பொருந்திய வளையல் களையுடைய இவ்வழகிய பெண்ணிடத்தே இருக்கின்றன.

ஒள் - ஒளி பொருந்திய; **தொடி** - வளையல்களையுடைய அழகிய பெண்ணிடத்தே; **உள** - இருக்கின்றன.

(க-ரை): கண்டும், கேட்டும், சுவைத்தும், முகர்ந்தும், தீண்டியும் நுகரக்கூடிய ஐம்புல இன்பங்களும், இந்த அழகிய பெண்ணிடத்திலே இருக்கின்றன என்று இயற்கைப் புணர்ச்சியின் முடிவில் தலைமகன் மகிழ்ந்து கூறுகிறான். (1101)

**2. பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து.**

பிணிக்கு மருந்து, பிறமன், அணி இழை, தன் நோய்க்குத், தானே மருந்து.

(பொ-ரை): நோய்களுக்கு மருந்து, அந்நோய்களினின்றும் வேறுபட்ட பொருள்களாக இருக்கின்றன; அணிகலன்களையணிந்த இவ்வழகிய பெண்ணினால் உண்டான நோய்க்கு அவள் தானே மருந்தாகின்றாள்.

பிணிக்கு - நோய்களுக்கு; **பிற** - அந்நோய்களினின்றும் வேறுபட்ட பொருள்கள்; **மன்** - ஒழியிசை; **அணி இழை** - அணி கலன்களை அணிந்த இவ்வழகிய பெண்.

(க-ரை): பொதுவாக உடல் நோய்களை, வேறு மருந்துகள் தீர்க்க வேண்டியிருக்கின்றன; ஆனால், இந்த அழகிய பெண்ணால்

உண்டான காதல் நோயை, இப்பெண்ணே தீர்க்க வேண்டியிருக்கிறது என்று புணர்ச்சியின்பம் பெற்ற தலைமகன் கூறுகிறான். (1102)

3. தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.

தாமரைக் கண்ணான், தாம் வீழ்வார், மென்தோள், துயிலின், உலகு, இனிதுகொல்?

(பொ-ரை): தாமரை போன்ற கண்ணினையுடைய தலைமகனால் விரும்பப்படும் அழகிய பெண்ணினது மென்மையான தோள்களின்மேல் தலைமகன் துயின்று இன்பம் பெறுவதைக் காட்டிலும், இந்த உலகில், இன்பந்தருவது வேறு ஏதேனும் உண்டோ? எதுவும் இல்லை!

தாமரைக் கண்ணான் - தாமரை போன்ற கண்ணையுடைய தலைமகன்; **தாம் வீழ்வார்** - அவனால் விரும்பப்படும் அழகிய பெண்ணினது; **மென்தோள்** - மென்மையான தோள்களில்; **துயிலின்** - துயிலுவதைக்காட்டிலும்; **உலகு** - இந்த உலகில்; **இனிதுகொல்** - இன்பந்தருவது வேறு ஏதேனும் உண்டோ?

(க-ரை): தலைமகன் தன்னால் விரும்பப்படும் அழகிய பெண்ணினது மென்மையான தோள்களின்மேல் தான் படுத்து உறங்கும்போது பெறும் இன்பத்தைவிட, வேறு சிறந்த இன்பத்தை இந்த உலகில் வேறு எங்கேயும் பெற முடியுமோ என்று தலைமகன் தோழியிடம் வினவுகிறான். (1103)

4. நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்என்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்.

நீங்கின், தெறூஉம், குறுகுங்கால், தண் என்னும், தீ, இவள், யாண்டுப், பெற்றாள்?

(பொ-ரை): அழகான இவளைவிட்டுப் பிரிந்து சென்றால், சுடுகின்றது; இவளை நெருங்கி நின்றால், குளிர்ச்சியாக இருக்கின்றது; இத்தகையதொரு விந்தைக்குரிய நெருப்பை, இவள் எங்கிருந்து பெற்றாளோ? தெரியவில்லை!

நீங்கின் - அழகான இந்தப் பெண்ணை விட்டுப் பிரிந்து சென்றால்; **தெறூஉம்** - சுடுகின்றது; **குறுகுங்கால்** - இவளை நெருங்கி நின்றால் குளிர்ச்சியாக இருக்கின்றது; **தீ** - இத்தகையதொரு வியப்புத்தரும் நெருப்பை; **யாண்டு** - எங்கிருந்து.

(க-ரை): அழகான இவளைவிட்டு நான் பிரிந்து சென்றால், சுடுகின்றது; இவளை நான் நெருங்கி நின்றால், குளிர்ச்சியாக இருக்கிறது; இத்தகையதொரு விந்தை தரும் நெருப்பை இவள் எங்கிருந்து, எப்படித்தான் பெற்றாளோ? தெரியவில்லை. (1104)

5. வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்.

வேட்ட பொழுதின், அவைஅவை, போலுமே, தோட்டார், கதுப்பினாள், தோள்.

(பொ-ரை): விரும்பியபொழுது, விரும்பப்படும் அந்த அந்த பொருள்கள் வந்து, இன்பம் தருவது போலவே, பூக்களை அணிந்த கூந்தலையுடைய இவ்அழகிய பெண்ணின் தோள்களும், இன்பந் தருகின்றன.

வேட்ட பொழுதின் - விரும்பிய பொழுது; **அவை அவை** - விரும்பப்படும் அந்த அந்தப் பொருள்கள் வந்து இன்பந்தருவது; **போலும்** - போலவே; **தோட்டார்** - பூக்களை அணிந்து; **கதுப்பினாள்** - கூந்தலையுடைய இவ்அழகிய பெண்ணின்; **தோள்** - தோள்களும் இன்பந்தருகின்றன.

(க-ரை): நான் விரும்பியபொழுது, என்னால் விரும்பப்படும் பொருள்கள் எல்லாமும் வந்து, எனக்கு இன்பம் தந்தால் எப்படியோ, அப்படியே இந்த அழகிய பெண்ணின் தோள்களும் நான் விரும்பிய இன்பங்களை எனக்குத் தருகின்றன என்று தலைமகன் மகிழ்ந்து கூறுகிறான். (1105)

6. உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்.

உறுதோறு, உயிர்தளிர்ப்பத், தீண்டலால், பேதைக்குத், தோள், அமிழ்தின், இயன்றன.

(பொ-ரை): இந்த அழகிய பெண்ணை, நான் தழுவுந்தோறும், வாடிய என் உயிரானது, தளிர்க்குமாறு தீண்டுவதாலே, இவளுடைய தோள்கள், அமிழ்தத்தினால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

உறுதோறு - இந்த அழகிய பெண்ணை நான் தழுவுந்தோறும்; **தளிர்ப்ப** - தளிர்க்குமாறு; **பேதைக்கு** - இந்த இளமகளின்; **இயன்றன** - செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(க-ரை): இந்த அழகான பெண்ணை நான் தழுவுந்தோறும், இவளது தோள்கள் என் மீது படுவதன் காரணமாக, வாடிய என் உயிரானது புத்துயிர் பெறுகின்றது; அதற்குக் காரணம் இவளது தோள்கள், அமிழ்தத்தால் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று தலைமகன் புணர்ச்சியின்பத்தால் மகிழ்ந்து நயம்படக் கூறுகிறான். (1106)

7. தம்இல் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.

அம்மா, அரிவை, முயக்கு, தம்இல் இருந்து, தமது, பாத்து, உண்டு, அற்றல்.

(பொ-ரை): இந்த அழகிய மாநிறமுடைய பெண்ணை, நான் தழுவிப் பெறும் இன்பமானது, தமக்குரிய இல்லத்தில் வாழ்ந்து கொண்டு, தாம் உழைத்து ஈட்டிய பொருள்களை இல்லாதவர் களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து, அவர்களோடு சேர்ந்து உண்ணும் போது பெறும் இன்பம் போன்றதாக இருக்கின்றது.

அம் - அழகிய; **மா** - மாநிறமுடைய; **அரிவை** - பெண்ணை; **முயக்கு** - தழுவிப் பெறும் இன்பமானது; **இல் இருந்து** - இல்லத்தில் வாழ்ந்துகொண்டு; **தமது** - தாம் சேர்த்து வைத்துள்ள பொருள்களை; **பாத்து** - இல்லாதவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து; **உண்டுஅற்றால்** - அவர்களோடு சேர்ந்து உண்ணும்போது பெறும் இன்பம் போன்றது.

(க-ரை): ஒருவர், தம்முடைய இல்லத்தில் வாழ்ந்துகொண்டு, தாம் உழைத்து ஈட்டிய பொருள்களை, இல்லாதவர்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்து, அவர்களோடு சேர்ந்து உட்கார்ந்து உண்ணும் போது, எப்படிப்பட்ட இன்பத்தைப் பெறுகின்றாரோ, அப்படிப்பட்ட இன்பத்தை நான் இந்த அழகிய பெண்ணைத் தழுவும்போது பெறுகிறேன் என்று புணர்ச்சியின்பம் பெற்ற தலைவன் வியந்து கூறுகிறான். (1107)

8. வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு.

வளி, இடை, போழப் படாஅ, முயக்கு, வீழும், இருவர்க்கு, இனிதே.

(பொ-ரை): காற்று இடையில் நுழைந்து செல்லாதபடி, இறுகத் தழுவும் தழுவலானது, ஒருவரை ஒருவர் விரும்பும் காதலர் இருவருக்கும் இனிமை பயப்பதாகும்.

வளி - காற்று; **இடை** - காதலர் இருவர்க்கும் இடையில்; **போழப்படாஅ** - அறுக்கப்படாதபடி; நுழைந்து செல்லாதபடி; **முயக்கு** - தழுவிப் புணர்தல்; இறுகத்தழுவும் தழுவல்; **வீழும்** - ஒருவரை ஒருவர் விரும்பும்; **இருவர்க்கு** - காதலர் இருவர்க்கும்; **இனிதே** - இனிமை பயப்பதாகும்.

(க-ரை): காதலர் இருவரும் காற்று இடையில் நுழைந்து செல்லாதபடி இறுகத் தழுவி இன்பம் பெறுதலானது, அவர்கள் இருவர்க்கும் இனிமை தருவதாகும். (1108)

9. ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்.

ஊடல், உணர்தல், புணர்தல், இவை, காமம் கூடியார், பெற்ற பயன்.

(பொ-ரை): ஊடிக் கொள்ளுதலும், அதனை ஓர் அளவில் உணர்ந்து நீக்கிக் கொள்ளுதலும், பின்பு புணர்தலும் எனப்படும் இவையே காதல் வாழ்வு நிறைவேறப்பட்ட காதலர்கள் பெறும் பயன்களாகும்.

காமம் கூடியார் - காதல் வாழ்வு நிறைவேறப்பட்ட காதலர்கள்; **பெற்ற பயன்** - பெறும் பயன்களாகும்.

(க-ரை): ஊடல் கொள்ளுதல், பின்னர் உணர்ந்து அதனை நீக்கிக் கொள்ளுதல், பின்பு புணர்தல் ஆகிய இவை காதல் வாழ்வில் வெற்றி பெற்ற காதலர்கள் அடையக்கூடிய பயன்களாகும். (1109)

10. அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.

அறிதோறு, அறியாமை, கண்டற்றால், காமம், செறிதோறும், சேயிழை, மாட்டு.

(பொ-ரை): சிவந்த நிறமுடைய அழகிய அணிகலன்களை யுடைய இந்தப் பெண்ணிடம் நான் இன்பம் நுகருந்தோறும் நுகருந்தோறும் ஏற்படும் காதலின்பமானது, அரிய நூல் பொருள்களைக் கற்று அறிய அறிய, முன்பு அறியாதிருந்தவைகளை யெல்லாம் புதியனவாகக் கண்டறிவது போன்று இருக்கின்றது.

சேய் - சிவந்த நிறமுடைய; **இழைமாட்டு** - அழகிய அணிகலன்களையுடைய இந்தப் பெண்ணிடம்; **செறி தோறும்** - இன்பத்தை நுகருந்தோறும் நுகருந்தோறும்; **காதல்** - காதலன்பானது; **அறிதோறு** - அரிய நூல்பொருள்களைக் கற்று அறிய அறிய; **அறியாமை** - முன்பு அறியாதிருந்தவைகளையெல்லாம்.

(க-ரை): ஒருவர் அரிய நூல்பொருள்களைக் கற்று அறிய அறிய எப்படிப் புதிது புதிதாகப் பொருள் நயங்களைக் கண்டறிவாரோ, அப்படியே நான் இந்த அழகிய பெண்ணிடம் இன்பம் நுகருந் தோறும் நுகருந்தோறும் புதிது புதிதாகக் காதலின்பத்தைப் பெறுகிறேன் என்று தலைமகன் புணர்ச்சியின்பம் பெற்று மகிழ்ந்து கூறுகிறான். (1110)

112. நலம் புனைந்து உரைத்தல்

நலம் புனைந்து உரைத்தல் என்பது, தலைமகனானவன், தலைமகளது சிறப்புகளையெல்லாம் புனைந்துரையால் சிறப்பித்துக் கூறுதல் எனப்படும்.

**1. நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.**

அனிச்சமே, நன்னீரை, வாழி! யாம் வீழ்பவள், நின்னினும், மென், நீரள்.

(பொ-ரை): அனிச்சமலரே! நீ எல்லா மலர்களையும்விட, நல்ல மென்மையான தன்மையைப் பெற்றிருக்கிறாய்! நீ வாழ்வாயாக! என்றாலும், நான் விரும்பும் என் காதலி, உன்னைக்காட்டிலும், மிகவும் மென்மையான தன்மையை உடையவள் ஆவாள்.

அனிச்சம் - அனிச்சமலர்; **நன்னீரை** - நல்ல மென்மையான தன்மையைப் பெற்றிருக்கிறாய்; **வீழ்பவள்** - விரும்பும் என் காதலி; **நின்னினும்** - உன்னைவிட; **மென்** - மென்மையான; **நீரள்** - தன்மையை உடையவள்.

(க-ரை): தலைவன் தன் தலைவியிடம் புணர்ச்சியின்பம் நுகர்ந்தபின்பு, தலைவியைப் பார்த்து நீ அனிச்ச மலரைவிட மிகவும் மென்மை வாய்ந்தவளாவாய் என்று புகழ்ந்து புனைந்து கூறுகிறான். (1111)

**2. மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று.**

நெஞ்சே! இவள்கண், பலர் காணும், பூ ஒக்கும், என்று மலர்காணின், மையாத்தி.

(பொ-ரை): நெஞ்சமே! இவளுடைய கண்கள், பலராலும் பார்க்கப்படும் பூக்களைப் போன்றவை என்று கருதி, மலர்களைப் பார்த்தவுடனேயே நீ மயங்குகின்றாய்! இவளுடைய கண்கள், எல்லா மலர்களைக்காட்டிலும் சிறந்தவை என அறியாத உன்னுடைய அறிவு இருந்தவாறு என்னே!

பலர் காணும் - பலராலும் பார்க்கப்படும்; **பூ ஒக்கும்** - பூக்களைப் போன்றவை; **என்று** - என்று கருதி; **மையாத்தி** - நீ மயங்குகின்றாய்.

(க-ரை): பொதுவாகக் காணப்படும் பூக்களைவிடச் சிறந்தனவாக விளங்கும் தன் தலைவியின் கண்களைப் பூக்களுக்கு ஒப்பாகக் கருதும் தன் மட நெஞ்சைப் பார்த்து இழிவாகக் கூறிக் காதலியின் கண்களைச் சிறப்பித்துக் கூறுகிறான் தலைவன். (1112)

3. முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல்உண்கண் வேய்த்தோ ளவட்கு.

வேய்த் தோளவட்கு, மேனிமுறி, முறுவல்முத்தம், நாற்றம் வெறி, உண்கண்வேல்.

(பொ-ரை): மூங்கில்போலும் தோளினை உடைய என் காதலிக்கு, உடல் நிறமானது தளிர் போன்றது; பற்களானவை முத்துக்கள் போன்றவை; இயற்கை மணமானது நறுமணமாகும்; மையுண்ட கண்களானவை வேல் போன்றவை.

வேய் - மூங்கில்; **மேனி** - உடல்நிறமானது; **முறி** - தளிர் போன்றது; **முறுவல்** - பற்களானவை; **முத்தம்** - முத்துக்கள் போன்றவை; **நாற்றம்** - இயற்கை மணமானது; **வெறி** - நறுமணமாகும்; **உண்கண்** - மையுண்ட கண்கள்; **வேல்** - வேல் போன்றவை.

(க-ரை): நான் கண்ட என் தலைவியின் தோள் மூங்கில் போன்றது; நிறம் தளிர் போன்றது; பல் முத்துப் போன்றது; இயற்கை மணம் நறுமணம்; மையுண்ட கண் வேல் போன்றது என்று தலைவன் தோழிக்கு அடையாளங் கூறுகிறான். (1113)

4. காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாண்இழை கண்ஒவ்வேம் என்று.

குவளை, காணின், மாண்இழை, கண், ஒவ்வேம், என்று, கவிழ்ந்து, நிலன்நோக்கும்.

(பொ-ரை): குவளைப்பூக்கள், காணுகின்ற தன்மையைப் பெற்றிருக்குமேயானால், சிறந்த அணிகலன்களை அணிந்துள்ள இந்தப் பெண்ணின் கண்களுக்குத் தாம் ஒப்பாக மாட்டோம் என்று கருதி, வானத்தை நோக்காது வெட்கித் தலைகுனிந்து நிலத்தையே நோக்கிக் கொண்டிருக்கும்.

குவளை - குவளைப்பூக்கள்; **காணின்** - காணுகின்ற தன்மையைப் பெற்றிருக்குமேயானால்; **மாண் இழை** - சிறந்த அணிகலன்களை அணிந்துள்ள இந்தப் பெண்ணின்; **கண் ஒவ்வேம்** - கண்களுக்கு ஒப்பாக மாட்டோம்; **என்று** - என்று கருதி; **கவிழ்ந்து** - தலைகுனிந்து.

(க-ரை): குவளைப் பூக்களுக்கு மட்டும் காணுகின்ற ஆற்றல் இருக்குமேயானால், இந்த அழகிய பெண்ணின் கண்களைப் பார்த்துவிட்டுத் தாம் இவைகளுக்கு ஒப்பாகமாட்டோம் என்று நாணித் தலைகுனிந்து நிலத்தையே பார்த்துக் கொண்டிருக்கும் என்று தலைவன், தலைவியின் கண்களைப் புகழ்ந்துரைக்கிறான். (1114)

5. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை.

அனிச்சப்பூக், கால்களையாள், பெய்தாள், நுசுப்பிற்கு, நல்ல பறை, படாஅ.

(பொ-ரை): இவளுடைய மென்மையைக் கருதிப் பார்க்காமல் அனிச்சப் பூக்களைக் காம்பு நீக்காமல், இவள் தன் கூந்தலில் வைத்துக் கொண்டாள்; அதனால் இவளது இடைக்குக் கேடு ஏற்பட்டு, அது முரிந்தது; அதன் காரணமாகச் சாவுப்பறையேயன்றி, நல்ல பறை ஒலிக்கமாட்டாத நிலை ஏற்பட்டுவிட்டது.

கால்களையாள் - காம்பு நீக்காமல்; **பெய்தாள்** - இவள் தன் கூந்தலிலே வைத்துக்கொண்டாள்; **நுசுப்பிற்கு** - அதனால், இவளது இடைக்குக் கேடு ஏற்பட்டு, அது முரிந்தது; **நல்ல பறை** - சாவுப்பறையேயன்றி நல்ல பறை; **படாஅ** - ஒலிக்கமாட்டாத நிலை ஏற்பட்டது.

(க-ரை): அனிச்சப்பூக்களைக் காம்பு நீக்காமலேயே, தலைவி, தன் கூந்தலில் வைத்துக் கொண்டதன் காரணமாக, அவளது மிக மென்மையான இடையானது, சுமை தாங்க முடியாமல் முரிந்தது; அதனால், அவள் சாவ நேரிடுமோ என்று தலைவன் அஞ்சி அவளிடம் கொண்டுள்ள அன்பு தோன்ற, அவளது இடையின் மென்மை நயங்கூறி மகிழ்கிறான். (1115)

6. மதியும் மடந்தை முகனும் அறியா பதியின் கலங்கிய மீன்.

மீன், மதியும், மடந்தை முகனும், அறியா, பதியின், கலங்கிய.

(பொ-ரை): வானத்திலுள்ள விண்மீன்கள், திங்களுக்கும் இந்த அழகிய பெண்ணின் முகத்திற்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டறிய முடியாமல், தம் நிலையில் நில்லாமல் கலக்கமுற்றுத் திரிகின்றன.

மீன் - விண்மீன்கள்; **மதியும்** - திங்களுக்கும்; **முகனும்** - முகத்திற்கும்; **அறியா** - உள்ள வேறுபாட்டைக் கண்டறிய முடியாமல்; **பதியின்** - தம் நிலையில் நில்லாமல்; **கலங்கிய** - கலக்கமுற்றுத் திரிகின்றன.

(க-ரை): வானத்திலுள்ள விண்மீன்கள் திங்களுக்கும், தன் தலைவியின் முகத்துக்கும் வேறுபாடு தெரியாமல் தவிக்கின்றன என்று தலைவன், தலைவியின் முகவழகு பற்றி மகிழ்ந்துரைக்கிறான். (1116)

**7. அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.**

அறுவாய், நிறைந்த, அவிர்மதிக்குப், போல, மாதர் முகத்து, மறு உண்டோ?

(பொ-ரை): முன்பு குறைந்த நிலையிலிருந்து, பின்பு நிறைவுபெற்ற, ஒளி விடுகின்ற திங்களிடம் இருப்பதைப் போல, இந்த அழகிய பெண்ணின் முகத்தில், களங்கம் ஏதேனும் உண்டோ? இல்லையே!

அறுவாய் - முன்பு குறைந்த நிலையில் இருந்து; **நிறைந்த** - பின்பு நிறையப் பெற்று; **அவிர்** - ஒளிவிடுகின்ற; **மதிக்கும் போல** - திங்களிடம் இருப்பதைப்போல; **மறு** - களங்கம்.

(க-ரை): முதலில் குறைந்திருந்து, பின்னர் நிறைவு பெறும் தன்மையையுடைய திங்களிடத்தில், மறு இருப்பதைப் போல, இந்த அழகிய பெண்ணின் முகத்தில் மறு எதுவும் இல்லை என்று தலைவன், தலைவியின் முக நலம் பற்றி வியந்து, மகிழ்ந்து கூறுகிறான். (1117)

**8. மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி.**

மதி, மாதர் முகம்போல், ஒளிவிட, வல்லையேல், காதலை, வாழி!

(பொ-ரை): மதியே! இந்த அழகிய பெண்ணின் முகத்தினைப் போல, ஒளி வீச உன்னால் இயலுமானால், நீயும் இவளைப்போல என்னால் விரும்பப்படுவாய்! அந்நிலையில் நீயும் வாழ்வாயாக!

மாதர் - இந்த அழகிய பெண்ணின்; **ஒளிவிட** - ஒளி வீச; **வல்லையேல்** - உன்னால் இயலுமானால்; **காதலை** - இவளைப் போல் நீயும் என்னால் விரும்பப்படுவாய்.

(க-ரை): தலைவன், மதியைப் பார்த்துத் தன் தலைவியின் முகத்தைப் போல ஒளி வீச அதற்கும் இயலுமேயானால், அதனையும் தான் காதலிக்க முடியும் என்றும், ஆனால் அப்படி ஒளி வீசும் தன்மை அதற்கு இல்லை என்பதை உணர்த்தி, தன் தலைவியின் முகவழகு நலத்தின் சிறப்பை வியந்து, பாராட்டிக் கூறுகிறான். (1118)

9. மலர்அன்ன கண்ணாள் முகம்ஒத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி.

மதி, மலர் அன்ன, கண்ணாள், முகம் ஒத்தியாயின், பலர் காணத், தோன்றல்.

(பொ-ரை): மதியே! மலரினைப் போன்ற கண்களையுடைய இந்த அழகிய பெண்ணினுடைய முகத்தினை, ஒத்திருக்க நீ விரும்புவாயேயானால், பலரும் காணும்படியாகத் தோன்றாது இருப்பாயாக! நான் காணும்படியாக மட்டும் தோன்றுவாயாக!

முகம் ஒத்தியாயின் - முகத்தினை ஒத்திருக்க நீ விரும்புவாயேயானால்; **தோன்றல்** - தோன்றாது இருப்பாயாக.

(க-ரை): தன் தலைவியின் அழகிய முகத்தினைப் போல் ஒத்து விளங்க, மதியும் விரும்புமேயானால், அது பலர் காணும்படித் தோன்றாமல், தான் காணும்படியாக மட்டும் தோன்ற வேண்டும் என்று மதியினைப் பார்த்துச் சொல்லுவது போல் தலைவன், தலைவியின் முகத்தின் சிறப்பைப் போற்றி மகிழ்கிறான். (1119)

10. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

அனிச்சமும், அன்னத்தின் தூவியும், மாதர் அடிக்கு, நெருஞ்சிப் பழம்.

(பொ-ரை): மென்மைத் தன்மையுடைய அனிச்சப்பூவும், அன்னப் பறவையின் மிகச் சிறிய நொய்தான இறகும், இந்த அழகிய பெண்ணின் காலடிகளில் பட்டால், நெருஞ்சி முள் போல அவை துன்பந்தரும்.

அனிச்சமும் - அனிச்சப்பூவும்; **அன்னத்தின் தூவியும்** - அன்னப் பறவையின் மிகச் சிறிய நொய்தான இறகும்; **அடிக்கு** - காலடிகளில் பட்டால்; **நெருஞ்சிப்பழம்** - நெருஞ்சி முள் போன்று துன்பந்தரும்.

(க-ரை): தன் தலைவியின் காலடிகள் அனிச்ச மலர் மீதோ, அன்னப் பறவையின் தூவியின் மீதோ பட்டால்கூட, அவை நெருஞ்சி முள் குத்தும்போது ஏற்படும் துன்பம் தருவதாகும் என்று தலைவன், உடன்போக்குக்கு உரைத்த தோழிக்குச், செல்லும் பாலைவனத்தில் ஏற்படக்கூடிய பெருந் துன்பத்தைச் சுட்டிக் காட்டுகிறான். (1120)

113. காதற் சிறப்பு உரைத்தல்

காதற் சிறப்பு உரைத்தல் என்பது, தலைமகனும், தலைமகளும் புணர்ச்சியின்பம் பெற்ற பின்பு, காதல் சிறப்பின் மிகுதியைக் கூறி மகிழ்தல் எனப்படும்.

1. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வால்எயிறு ஊறிய நீர்.

பணிமொழி, வால் எயிறு, ஊறிய நீர், பாலொடு தேன், கலந்து அற்றே.

(பொ-ரை): பணிந்த மென்மையான இனிய சொற்களை மொழியக்கூடிய, இந்த அழகிய பெண்ணினது தூய வெண்மையான பற்களின் இடையில் சுரந்து வரும் உமிழ்நீரானது, பாலோடு தேனையும் கலந்தாற்போன்ற இனிமை பயப்பதாகும்.

பணி - பணிந்த மென்மையான; **மொழி** - சொற்களை மொழியக்கூடிய; **வால்** - தூய வெண்மையான; **எயிறு** - பற்களின் இடையில்; **ஊறிய நீர்** - சுரந்து வரும் உமிழ் நீர்; **அற்றே** - போன்றது.

(க-ரை): இனிய மொழிகளையும், தூய வெண்மையான பற்களையும்கொண்ட தலைவியின் உமிழ்நீரைச் சுவைக்கும்போது, அது பாலும் தேனும் கலந்தாற்போன்ற இனிமையைத் தருவதாக இருக்கின்றது என்று தலைவன், புணர்ச்சியின்பத்தில் பெற்ற சிறப்பைப்பற்றிக் கூறுகிறான். (1121)

2. உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.

உடம்பொடு, உயிரிடை, என்ன, மற்று, அன்ன நட்பு, மடந்தையொடு, எம்மிடை.

(பொ-ரை): உடம்பிற்கும் உயிருக்கும் இடையிலே எத்தகைய தொடர்பு நிலவுகிறதோ, அத்தகையதோர் இன்றியமையாத நட்புத் தொடர்பு, இந்த அழகிய பெண்ணிற்கும் எனக்கும் இடையிலே நிலவுகிறது.

என்ன - எத்தகைய தொடர்பு நிலவுகிறதோ; **மற்று அன்ன** - அத்தகையதோர் இன்றியமையாத நட்புத் தொடர்பு.

(க-ரை): உடம்புக்கும் உயிருக்கும் எத்தகைய இன்றியமையாத் தொடர்பு இருந்து வருகிறதோ, அதுபோன்றே, தலைவிக்கும் தனக்கும் இடையிலே இன்றியமையாத நட்புத் தொடர்பு இருந்து வருகின்றது என்று புணர்ச்சியின்பம் பெற்ற தலைவன், தன்னுடைய பிரிவைக் கண்டு தலைவி அஞ்சுகிற போது அவளுக்குக் கூறுகிறான். (1122)

**3. கருமணியிற் பாவாய்நீ போதாய்யாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம்.**

கருமணியில் பாவாய்! நீ போதாய்! யாம் வீழும், திருநுதற்கு, இடம், இல்லை!

(பொ-ரை): என் கண்ணின் கருவிழியில் உள்ள பாவையே! நீ அவ்விடம் விட்டுப் போய்விடுவாயாக! என்னால் விரும்பப்படும் அழகிய நெற்றியினை உடைய, இந்த அழகிய பெண்ணானவள், தங்கி இருக்க வேறு இடம் இல்லை.

கருமணியில் - கருவிழியில்; **பாவாய்** - பாவையே; **போதாய்** - அவ்விடம் விட்டு அகன்று போய்விடுவாயாக; **யாம் வீழும்** - என்னால் விரும்பப்படும்; **திரு** - அழகிய; **நுதற்கு** - நெற்றியை உடைய இந்த அழகிய பெண்ணானவள்.

(க-ரை): தன்னுடைய அழகுவாய்ந்த, தன்னால் விரும்பப் படுகின்ற தலைவியானவள், தங்கி இருக்க வேறு இடம் இல்லை என்பதால், தன் கருவிழியில் உள்ள பாவையைப் பார்த்து, அதனை, அந்த இடத்தைவிட்டு அகன்று போகும்படியாகத், தலைவி, தன்னைவிட்டு நீங்கும்போது, அவள் உணர வேண்டித் தலைவன் கூறுகிறான். (1123)

**4. வாழ்தல் உயிர்க்குஅன்னள் ஆயிழை சாதல்
அதற்குஅன்னள் நீங்கு மிடத்து.**

ஆயிழை, உயிர்க்கு, வாழ்தல், அன்னள்; நீங்குமிடத்து, அதற்குச், சாதல், அன்னள்.

(பொ-ரை): ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை உடைய இந்தப் பெண் என்னுடன் சேரும்போது, என் உயிரானது உடம்புடன் கூடி வாழ்வது, எப்படி இன்பமாக இருக்குமோ, அப்படி எனக்கு இன்பமாக இருக்கின்றாள்; அவள் என்னைவிட்டுப் பிரியும்போது, என் உயிரானது உடம்பைவிட்டு நீங்கச் சாதல் எப்படித் துன்பந்தருமோ, அப்படி எனக்குத் துன்பந் தருகின்றாள்.

ஆயிழை - ஆராய்ந்து எடுக்கப்பட்ட அணிகலன்களை யுடையவள்; **உயிர்க்கு வாழ்தல்** - உயிரானது உடம்புடன் கூடி வாழ்வது; **அன்னள்** - எப்படி இன்பமாக இருக்குமோ அப்படி எனக்கு இன்பமாக இருக்கின்றாள்; **அதற்கு சாதல் அன்னள்** - உயிரானது உடம்பைவிட்டு நீங்கச் சாதல், எப்படித் துன்பந்தருமோ, அப்படி எனக்குத் துன்பந்தருகின்றாள்.

(க-ரை): தலைவன் தலைவியைக் கூடும்போது, உயிரும் உடலும் எப்படிக் கூடி உயிரானது இன்பம் அடைகின்றதோ, அப்படித் தானும் இன்பம் அடைவதாகவும், தலைவனை விட்டுத் தலைவி பிரியும்போது, உயிரும் உடலும் பிரிந்து போனால், எப்படித் துன்பம் ஏற்படுகின்றதோ, அப்படித் தானும் துன்பம் அடைவதாகவும் தலைவன் தலைவியைப் புணர்ந்து நீங்கும்போது கூறுகிறான். (1124)

5. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்புஅறியேன்
ஒள்அமர்க் கண்ணாள் குணம்.

ஒள்அமர்க் கண்ணாள், குணம், யான் மறப்பின், உள்ளுவன், மறப்பு, அறியேன்.

(பொ-ரை): ஒளி பொருந்திய விரும்பப்படுகின்ற கண்களை யுடைய இந்த அழகிய பெண்ணின் பண்புகளை நான் மறந்தால் அல்லவா நினைக்க வேண்டி வரும்; ஆனால், நான் அவற்றை மறத்தலை ஒருபோதும் அறியேன்.

ஒள் - ஒளி பொருந்திய; **அமர்** - விரும்பப்படுகின்ற; **கண்ணாள்** - கண்களையுடைய இந்த அழகிய பெண்ணின்; **குணம்** - பண்புகளை; **யான் மறப்பின்** - நான் மறந்தால் அல்லவா; **உள்ளுவன்** - நினைக்க வேண்டிவரும்; **மறப்புஅறியேன்** - ஆனால், நான் அவற்றை மறத்தலை ஒருபோதும் அறியேன்.

(க-ரை): தன் அழகிய தலைவியின் பண்புகளைப் பற்றி எப்போதாவது மறந்தால் அல்லவா அவற்றைப்பற்றி நினைக்க வேண்டி வரும் என்றும், தான் எப்போதும் அவற்றை மறப்பதே யில்லை என்றும், தலைவியை விட்டுப் பிரிந்தபோது, அவளைப்பற்றி நினைத்த துண்டோ என்று கேட்ட தோழிக்குத் தலைவனானவன் கூறுகிறான். (1125)

6. கண்ணுள்ளில் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர்எம் காத லவர்.

எம் காதலவர், கண் உள்ளில், போகார், இமைப்பின், பருவரார், நுண்ணியர்.

(பொ-ரை): என்னுடைய காதலர் எனது கண்ணுக்குள்ளேயே இருக்கிறார்; அதிலிருந்து வெளியே போகமாட்டார்; அவர் அங்கிருப்பதை அறியாமல் நான் கண்ணை மூடி இமைத்தாலும், அவர் வருந்தமாட்டார்; அவர் அவ்வளவு நுட்பமானவர்.

பருவரார் - வருத்தப்பட மாட்டார்; **நுண்ணியர்** - அவர் அவ்வளவு நுட்பமானவர்.

(க-ரை): தன்னுடைய காதலர், தனது கண்ணுக்குள்ளேயேதான் இருப்பார்; அங்கிருந்து வெளியே போகமாட்டார்; நான் கண்ணை மூடி இமைத்தாலும் அதற்காக வருந்தமாட்டார்; அவர் அவ்வளவு நுட்பமான தன்மையைக் கொண்டவர் என்று தலைவி, தோழிக்குத் தலைவனின் சிறப்புப்பற்றிக் கூறுகிறாள். (1126)

7. கண்ணுள்ளார் காதல வராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து.

காதலவர், கண்ணுள்ளார் ஆகக், கரப்பாக்கு, அறிந்து, கண்ணும், எழுதேம்.

(பொ-ரை): என்னுடைய காதலர் என் கண்ணின் உள்ளே இருக்கின்ற காரணத்தால், மை தீட்டினால், அவர் மறையக்கூடும் என்று எண்ணி நான் என் கண்களுக்கு மையும் தீட்டமாட்டேன்.

கரப்பாக்கு அறிந்து - அவர் மறையக்கூடும் என்று எண்ணி; **எழுதேம்** - மையும் தீட்ட மாட்டேன்.

(க-ரை): தன்னுடைய காதலர், தன்னுடைய கண்ணுக் குள்ளேயே இருக்கின்ற காரணத்தால், மை தீட்டினால் அவர் மறையக்கூடும் என்று நினைத்துத் தன் கண்களுக்கு மையும் தீட்டமாட்டேன் என்று தோழிக்குத் தலைவி, தன் தலைவனின் அருமைபற்றிக் கூறி அகமகிழ்கிறாள். (1127)

8. நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து.

காதலவர், நெஞ்சத்தார், ஆக, வேபாக்கு அறிந்து, வெய்து உண்டல், அஞ்சுதும்.

(பொ-ரை): என்னுடைய காதலர், என் நெஞ்சில், எப்பொழுதும் இருக்கின்றாராதலால், அவர் சுடப்பட்டுவிடுவாரோ என்று எண்ணிச் சூடான உணவை உட்கொள்ள நான் அஞ்சுகிறேன்.

வேபாக்கு அறிந்து - சூட்டினாலே அவர் சுடப்பட்டு விடுவாரோ என்று எண்ணி; **வெய்து** - சூடான உணவை; **உண்டல்** - உட்கொள்ளுவதற்கு; **அஞ்சுவதும்** - அஞ்சுகின்றேன்.

(க-ரை): தன் அருமைக் காதலர், தன் நெஞ்சிலேயே எப்பொழுதும் இருக்கின்ற காரணத்தால், அவர் சுடப்பட்டு விடுவாரோ என்று எண்ணிச் சூடான உணவை உட்கொள்ள, அஞ்சுகிறேன் என்று தலைவி, தோழியிடம் தன் தலைவனின் அருமைத் தன்மையைப்பற்றிக் கூறுகிறாள். (1128)

**9. இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் வூர்.**

இமைப்பின், கரப்பாக்கு, அறிவல், அனைத்திற்கே, இவ்வூர், ஏதிலர், என்னும்.

(பொ-ரை): எனது கண்கள் இமைக்குமேயானால் கண்ணுக் குள்ளே இருக்கும் காதலர் மறைவார் என்பதை அறிந்து, நான் இமைக்காமல் இருக்கிறேன்; அந்தத் தன்மைக்கே இவ்வூர் மக்கள், நான் கண் இமையாது இருக்கும்படி என்னை விட்டுவிட்டுப் போய்விட்டார் அன்பில்லாதவர் என்று அவரைக் குறை கூறுகின்றனர்.

கரப்பாக்கு - கண்ணுக்குள்ளே இருக்கும் காதலர் மறைவார் என்பதை; **அறிவல்** - நான் அறிந்து இமையாமல் இருக்கிறேன்; **அனைத்திற்கே** - அந்தத் தன்மைக்கே; **ஏதிலர்** - காதலர் அன்பில்லாதவர்; **என்னும்** - என்று குறை கூறுவார்கள்.

(க-ரை): தனது கண்கள் இமைக்குமேயானால், கண்ணுக் குள்ளேயே இருக்கும் காதலர் மறைந்துவிடுவார் என்று அறிந்து, தான் இமைக்காமல் இருப்பதாகவும், அதற்கே இந்த ஊர் மக்கள் காதலர் அன்பில்லாதவராகப் பிரிந்து போய் இருப்பதுதான் காரணமாகும் என்று குறைகூறுகின்றனர் என்று தலைவனை இயற்பழித்த தோழிக்குத் தலைவி ஆற்றாது கூறுகிறாள். (1129)

**10. உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னும்இவ் வூர்.**

என்றும், உள்ளத்துள், உவந்துஉறைவர்; இவ்வூர், இகந்து, உறைவர், ஏதிலர், என்னும்.

(பொ-ரை): என்னுடைய காதலர், எப்பொழுதும் என் நெஞ்சின் உள்ளே மகிழ்ச்சியுடன் இருந்து கொண்டிருக்கின்றார்; இதனை அறியாத இவ்வூர் மக்கள், அவர் என்னைப் பிரிந்து வாழ்கின்றார்; அவர் அன்பில்லாதவர் என்று பழிதூற்றுகின்றனர்.

உவந்து - மகிழ்ச்சியுடன்; **உறைவர்** - இருந்து கொண்டிருக்கின்றார்; **இகந்து** - காதலர் என்னைவிட்டுப் பிரிந்து; **உறைவர்** - வாழ்கின்றார்; **ஏதிலர்** - அன்பில்லாதவர்; **என்னும்** - என்று பழி தூற்றுகின்றனர்.

(க-ரை): தன் காதலர், தன் உள்ளத்தில், எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறார் என்பதை அறியாத இவ்வூர் மக்கள், அவர் தன்னைவிட்டுப் பிரிந்து போய் வாழ்கின்றார் என்றும், அவர் அன்பில்லாதவர் என்றும் பழி தூற்றுகின்றனர் என்று தலைவனை இயற்பழித்த தோழிக்குத் தலைவி, ஆற்றாது கூறுகிறாள். (1130)

114. நாணுத் துறவு உரைத்தல்

நாணுத் துறவு உரைத்தல் என்பது, தலைவன் தலைவியைக் காண முடியாதபடி சேட்படுத்தப்படும் போதும், தலைவி யானவள் தலைவனைக் காணவொட்டாதபடி அறத்தொடு நிற்றல், இற்செறித்தல் ஆகியவற்றின் மூலம் தடுத்து நிறுத்தப்படும்போதும், காதலர் இருவரும் காதல் மிகுதியால், நாணத்தைத் துறப்பதைப் பற்றித் தோழிக்கு எடுத்துக் கூறுதல் எனப்படும்.

1. காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடல்அல்லது இல்லை வலி.

காமம், உழந்து, வருந்தினார்க்கு, ஏமம், மடல் அல்லது, வலி இல்லை.

(பொ-ரை): காதல் இன்பத்தை நுகர்ந்து, பின்னர் அந்த இன்பம் கிட்டாமல் வருந்துகின்ற ஆண்களுக்குப் பண்டு தொட்டு இருந்து வருகின்ற பாதுகாப்பானது, மடல் மாஊர்தல் அல்லாமல், வலிமையான துணை வேறொன்றும் இல்லை; ஆகவே நானும் அதனைச் செய்வேன்.

காமம் - காதல் இன்பத்தை; **உழந்து** - நுகர்ந்து; **வருந்தினார்க்கு** - வருந்துகின்ற ஆண்களுக்கு; **ஏமம்** - பழங்காலந்தொட்டு இருந்து வருகின்ற பாதுகாப்பு; 'மடலேறுதல்' என்பது 'மடல்மா ஏறுதல்' என்பதன் குறுக்கம். மடன்மா ஏறுதலாவது, தலைவியை அடைய முடியாதபடி தோழி மறுத்தால், தலைவன் 'மடல் மாஏறுவேன்' என்று கூறுவான்; 'மடன் மா கூறும் இடனுமாருண்டே'' (தொல்களவு-11) என்பது இலக்கணம். தலைவன், தலைவியை அடைய முடியா விட்டால், ஊரில் அலர் எழுப்புவதற்காகத் தலைவியின் உருவத்தைப் பனை ஓலையில் எழுதிக்கொண்டு, குதிரை மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு, பலரும் அறியும்படியாகத் தலைவியின் ஊர்த்தெரு வழியே செல்வான். அது காணும் ஊரார் கூடிக்கூடிப் பேசத் தொடங்குவார்கள். அப்படிப்பட்ட அலருக்கு அஞ்சிப் பெற்றோர்கள் அவனுக்கே தம் மகளை மணம் செய்து வைப்பார்கள்; மடல்மா - பனை மடலைத் தாங்கிச் செல்லும் குதிரை; **மடல்** - பனை ஓலை; மா - குதிரை; அலர் - பலர் பழி தூற்றுதல்; மடல்மா என்பதற்குப் பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரை என்பது நடைமுறைக்கும், உலகியலுக்கும் பொருந்தி வராது.

(க-ரை): தலைவியைப் பார்க்கவொட்டாமல் தடுக்கப்பட்ட தலைவன், காதலின்பத்தை இழந்து வருந்துகின்ற ஆண்கள் பழங்காலந்தொட்டுக் கடைப்பிடித்து வருகின்ற பாதுகாப்பான முறையாகிய, மடல்மாஊர்தலைத் தவிர வேறு வழி தனக்கு இல்லை என்று தோழியிடம், ஆற்றானாகி வருந்திக் கூறுகிறான். (1131)

**2. நோனா உடம்பும் உயிரும் மடல்ஏறும்
நாணினை நீக்கி நிறுத்து.**

நோனா, உடம்பும், உயிரும், நாணினை, நீக்கி நிறுத்து, மடல் ஏறும்.

(பொ-ரை): காதலியின் பிரிவால் ஏற்பட்ட துன்பத்தினைத் தாங்க முடியாத எனது உடம்பும், உயிரும், நாணத்தினைத் தொலைவுக்கு நீக்கி நிறுத்தி வைத்துவிட்டு, மடல்மா ஊர்வதற்குத் துணிந்திருக்கின்றன.

நோனா - காதலியின் பிரிவால் ஏற்பட்ட துன்பத்தினைத் தாங்க முடியாத; **நீக்கி நிறுத்து** - தொலைவுக்கு நீக்கி நிறுத்தி வைத்து விட்டு; **மடல்** - மடல்மா; பனை மடலைத் தாங்கிச் செல்லும் குதிரை; **ஏறும்** - ஊர்ந்து செல்லும்.

(க-ரை): தலைவியை விட்டுப் பிரிந்து துன்புறுவதால், தன்னுடைய உடம்பும், உயிரும், நாணத்தை அறவே ஒதுக்கி வைத்துவிட்டு, மடல்மா ஊர்தல் என்ற முடிவுக்கு வந்துவிட்டன என்று தலைவன், நாணத்தையுடைய தலைவனுக்கு மடல் மா ஊர்தல் என்பது முடியாத செயல் என்று கூறிய தோழிக்கு, மறுமொழியாகக் கூறுகிறான். (1132)

**3. நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல்.**

நாணொடு, நல்ஆண்மை, பண்டுஉடையேன்; இன்று, காமுற்றார், ஏறும் மடல், உடையேன்.

(பொ-ரை): நாணத்தையும், நல்ல ஆண்மையையும் முன்பெல்லாம் கொண்டிருந்தேன்; இப்பொழுதோ, காதல் மிகுந்தவர் ஏறுகின்ற மடல்மாவைத்தான் கொண்டிருக்கிறேன்.

பண்டு - முன்பெல்லாம்; **உடையேன்** - கொண்டிருந்தேன்; **இன்று** - இப்பொழுதோ; **காமுற்றார்** - காதல் மிகுந்தவர்; **மடல்** - மடல்மாவை; அதாவது தலைவியின் உருவம் பொறித்த பனை

யோலையை ஏந்திக் குதிரைமேல் உட்கார்ந்து, அலர் தூற்றுவதற்காக ஊர்வலமாக ஊர்ந்து வருவது.

(க-ரை): முன்பெல்லாம் நாணத்தையும், நல்ல ஆண்மை யையும் தான் கொண்டிருந்ததாகவும், இப்பொழுது தலைவியைக் காண முடியாமல் தடுக்கப்பட்டுவிட்டதால், மடல்மா ஊர்தலை மேற்கொண்டிருப்பதாகவும், தலைவன் மடல்மா ஊர்தலை மறுத்த தோழிக்கு, விளக்கம் சொல்லும் முறையில் கூறுகிறான். (1133)

**4. காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை.**

காமக் கடும்புனல், நாணொடு, நல்லாண்மை, என்னும், புணை, உய்க்குமே.

(பொ-ரை): காதல் மிகுதியாகிய கடுமையான வெள்ளம், என்னுடைய நாணம், நல்ல ஆண்மை என்னும் தோணிகளை, என்னைவிட்டுப் பிரித்துக்கொண்டு போய்விடுகின்றது.

புணை - தோணிகளை; **உய்க்குமே** - என்னைவிட்டுப் பிரித்துக்கொண்டு போய்விடுகிறது.

(க-ரை): தன்னுடைய நாணம், நல்ல ஆண்மை என்னும் தோணிகளைக் காதல் மிகுதியாகிய கடுமையான வெள்ளம், தன்னைவிட்டுப் பிரித்து அடித்துக்கொண்டு போய்விடுகின்றது என்று, தலைவியைக் காணவொட்டாதபடி தடுக்கப்பட்ட தலைவன் தோழிக்குக் கூறுகிறான். (1134)

**5. தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர்.**

தொடலைக், குறுந்தொடி, மாலை உழக்கும்துயர், மடலொடு, தந்தாள்.

(பொ-ரை): மணிக்கோவைகளால் தொடுக்கப்பட்ட மேகலையையும், சிறிய வளையல்களையும் அணிந்த இந்த அழகிய பெண்ணானவள், மாலைப்பொழுதில் வருத்தும் துன்பத்தையும், மடல்மா ஊர்தலையும் இப்பொழுது எனக்குத் தந்துவிட்டாள்; முன்பெல்லாம் இவற்றை நான் அறியேன்.

தொடலை - மணிக்கோவைகளால் தொடுக்கப்பட்ட மேகலை; **குறுந்தொடி** - சிறிய வளையல்களை அணிந்த அந்த அழகிய பெண்; **உழக்கும்** - வருத்தும்; **துயர்** - துன்பத்தையும்; **மடலொடு**

- மடல்மா ஊர்தலோடு; அதாவது தலைவியின் உருவம் பொறித்த பனைஓலையை ஏந்திக் குதிரைமேல் உட்கார்ந்துகொண்டு, அலர் தூற்றுவதற்காகச் செல்லுதல்.

(க-ரை): முன்பு தான் அறியாத, மாலைப்பொழுதில் வருத்தும் துன்பத்தையும், மடல்மா ஏறிச் செல்லுதலையும், இப்பொழுது அந்த அழகிய பெண் எனக்குத் தந்துவிட்டாள் என்று, மடல்மா ஏறுதல் எப்படி வந்தது என்று வினாவிய தோழிக்குத் தலைவன், ஆற்றாமையோடு விடை கூறுகிறான்; தலைவிக்குச் சொல்லித் தோழி இவற்றையெல்லாம் நீக்குவாள் என்பது அவன் கருத்து. (1135)

6. மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல்ஒல்லா பேதைக்குஎன் கண்.

பேதைக்கு, என்கண், படல்ஒல்லா; யாமத்தும், மன்ற மடலூர்தல், உள்ளுவேன்.

(பொ-ரை): இளமை பொருந்திய இந்த அழகிய பெண்ணின் காரணமாக, என்னுடைய கண்கள் உறங்காமலேயே இருக்கின்றன; எல்லோரும் உறங்கிக் கொண்டிருக்கின்ற நடு இரவிலும்கூட, உறுதியாக மடல்மா ஏறிச்செல்வதையே, என் உள்ளத்தில் எண்ணிக் கொண்டிருப்பேன்.

பேதைக்கு - இளமைபொருந்திய இந்தப் பெண்ணின் காரணமாக; **படல்ஒல்லா** - தூங்குதலைப் பெறாவண்ணம் இருக்கின்றன; **யாமத்தும்** - எல்லோரும் உறங்கிக் கொண்டிருக்கின்ற நடு இரவிலும்; **மன்ற** - உறுதியாக; **மடலூர்தல்** - மடல்மா ஏறுவதையே; அதாவது, தலைவியின் உருவம் பொறித்த பனை ஓலையை ஏந்திக் குதிரையின் மீது உட்கார்ந்துகொண்டு, அலர் தூற்றும் நோக்கோடு செல்லுதல்; **உள்ளுவேன்** - உள்ளத்தில் எண்ணிக் கொண்டிருப்பேன்.

(க-ரை): தலைவியின் காரணமாகத் தான் உறங்காமலேயே கண் விழித்துக் கொண்டிருப்பதாகவும், நள்ளிரவிலும் கூட மடல்மா ஏறுவதைப் பற்றித்தான் தான் எண்ணிக்கொண்டிருப்பதாகவும், தலைவன், மடல்மா ஊர்வதற்கான பொழுது கழிந்துவிட்டது என்று கூறிய தோழிக்கு, விளக்கந்தந்து, குறை முடிக்குமாறு தோழியைக் கேட்டுக்கொள்கிறான். (1136)

7. கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்
பெண்ணிற் பெருந்தக்கது இல்.

கடல் அன்ன காமம், உழந்தும், மடல்ஏறாப், பெண்ணின், பெருந்தக்கது, இல்.

(பொ-ரை): கடல்போன்று அளவின்றி மிகுந்து காணப்படும் காதல் நோயினால் வருந்தினாலும், மடல்மா ஏற நினையாமல் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டிருக்கும் பெண்ணின் பெருந் தன்மையைப்போல், பெருமைக்குரிய தன்மை பிறிதொன்று இல்லை.

காமம் - காதல் நோயினால்; **உழந்தும்** - வருந்தினாலும்; **மடல் ஏறா** - மடல்மா ஏற நினையாமல்; அதாவது தலைவனின் உருவம் பொறித்த பனை ஓலையை ஏந்திக் குதிரையின் மீது உட்கார்ந்துகொண்டு, ஊர் முழுவதும் ஊர்ந்து செல்ல வேண்டும் என்று நினையாமல்.

(க-ரை): அளவற்ற காதல் நோயினால் வருந்தினாலும், மடல்மா ஏறாமல், துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கும் பெருந்தன்மையைப் பெண்ணினம் கொண்டிருக்கிறது என்பதை ஆற்றமாட்டாத தலைவனுக்குச் சொல்லியிருக்க வேண்டும் என்று, தோழிக்குத் தலைவி கூறுகிறாள். (1137)

**8. நிறைஅரியர் மன்அளியர் என்னாது காமம்
மறைஇறந்து மன்று படும்.**

நிறைஅரியர், மன்அளியர், என்னாது, காமம், மறைஇறந்து, மன்றுபடும்.

(பொ-ரை): பெண்கள் நிறை பண்பு மிகுந்தவர்கள், மிகவும் அன்பு காட்டத்தக்கவர்கள் என்று இரக்கங் கொள்ளாமல், பெண்களின் காதல் நோயானது, அவர்கள் மறைத்து வைத்தாலும், அதனையும் மீறி மன்றத்தில் வெளிப்பட்டு விடுகின்றது.

நிறை அரியர் - நிறை பண்பு மிகுந்தவர்; **மன் அளியர்** - அன்பு காட்டத்தக்கவர்; **என்னாது** - என்று இரக்கம் கொள்ளாமல்; **மறை** - மறைத்து வைத்தாலும்; **மன்று** - மன்றத்தில்; **படும்** - வெளிப்பட்டு விடுகின்றது.

(க-ரை): பெண்கள் நிறை பண்புடையவர்கள், அன்பு காட்டத் தக்கவர்கள்; ஆகவே அவர்களிடம் இரக்கங்காட்ட வேண்டும் என்று கருதாமல், காதல் நோயானது, அவர்கள் மறைத்து வைத்தாலும், அதனையும் மீறிப் பலர் அறிய மன்றத்தில் வெளிப்படவே செய்கின்றது என்று தலைவி, தன் காதல் மிகுதி வெளிப்பட, அறத்தோடு நிற்க வேண்டும் என்பதைக் குறிப்பால் கூறுகிறாள். (1138)

**9. அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு.**

எல்லாரும், அறிகிலார் என்றே, என்காமம், மறுகில், மருண்டு, மறுகும்.

(பொ-ரை): என்னைத்தவிர வேறு யாரும் தன்னை அறியவில்லை என்று நினைத்து, என் காதலானது இவ்வூர்த் தெருக்களில் மயங்கித் திரிகின்றது.

அறிகிலார் - என்னைத்தவிர வேறு யாரும் தன்னை அறியவில்லை; **என்றே** - என்று நினைத்து; **காமம்** - காதலானது; **மறுகில்** - இவ்வூர்த் தெருக்களில்; **மருண்டு** - மயங்கி; **மறுகும்** - திரிகின்றது.

(க-ரை): தலைவியாகிய தன்னைத்தவிர வேறு யாரும் அறியவில்லை என்று கருதித் தன் காதலானது, ஊர் மக்களுக்குத் தெரியும்படியான நிலை ஏற்பட்டுவிட்டது என்பதை உணர்த்துவதன் மூலம், தலைவி தன் காதல் மிகுதியை வெளிப்படுத்தி, இனி அறத்தொடு நிற்க வேண்டிய இன்றியமையாமையை வற்புறுத்துகிறாள். (1139)

**10. யாம்கண்ணிற் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.**

யாம்பட்ட, தாம் படாவாறு, யாம் கண்ணில், காண, அறிவில்லார், நகுப.

(பொ-ரை): நான்படும் துன்பங்களைத் தாம் படாமையால், நான் கண்ணால் பார்க்கும்படியாக, அறிவில்லாதவர்கள் என் எதிரில், என்னைக்கண்டு நகைக்கின்றனர்.

பட்ட - படும் துன்பங்களை; **படாவாறு** - படாமையால்; **நகுப** - என்னைக்கண்டு நகைக்கின்றனர்.

(க-ரை): நான் படும் துன்பங்களைத், தாம் படாமையால், அறிவில்லாதவர்கள் தன்னைக்கண்டு நகைக்கின்றனர் என்று, நகையாடிய தோழியோடு புலந்து தலைவி தனக்குள்ளேயே கூறிக்கொள்கிறாள். (1140)

115. அலர் அறிவுறுத்தல்

அலர் அறிவுறுத்தல் என்பது, களவொழுக்கத்தைப் பற்றி ஊரார் வெளிப்படையாகவே பழித்துப் பேசும் பழிச் சொற்களைத் தலைவியானவள் தோழிக்கும், தோழியானவள் தலைவன், தலைவி ஆகியோர்க்கும் எடுத்துரைத்தல் எனப்படும்.

**1. அலர்எழ ஆர்உயிர் நிற்கும் அதனைப்
பலர்அறியார் பாக்கியத் தால்.**

அலர்எழ, ஆர்உயிர் நிற்கும்; அதனைப், பாக்கியத்தால், பலர் அறியார்.

(பொ-ரை): எம் இருவரின் காதலன்பின் களவொழுக்க நடவடிக்கையானது, ஊரின் கண், பழி தூற்றிப் பேசப்படுகின்ற பேச்சாக உண்டாயிருப்பதனால், எனது அரிய உயிர் நிலைபெற்று நிற்கிறது; இவ்வுண்மையினை, என்னுடைய நல் வாய்ப்பினால் பழி தூற்றுகின்ற பலரும் தெரிந்து கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள்; தெரிந்திருந்தால் பழி தூற்றியிருக்க மாட்டார்கள்.

அலர் - களவொழுக்கம் பற்றி ஊரார் பழிதூற்றிப் பேசுகின்ற பேச்சு; **எழ** - உண்டாயிருப்பதனால்; **ஆர்உயிர்** - அரிய எனது உயிர்; **நிற்கும்** - நிலைத்து நிற்கிறது; **அதனை** - இவ்வுண்மையினை; **பாக்கியத்தால்** - எனது நல்வாய்ப்பினால்.

(க-ரை): தலைவியுடன் தான் கொண்டிருக்கும் களவொழுக்கம் பற்றி, ஊரார் பழிதூற்றிப் பேசுகின்ற காரணத்தால்தான், தன்னுடைய உயிர் நிலைபெற்று நிற்கிறது என்றும், இதனைப் புரிந்துகொள்ளாத ஊரார்தாம் பழிதூற்றித் திரிகின்றனர் என்றும், விரைவில் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யச் சொல்லி வற்புறுத்திய தோழிக்குத் தலைவன் கூறுகிறான். (1141)

**2. மலர்அன்ன கண்ணாள் அருமை அறியாது
அலர்எமக்கு ஈந்ததுஇவ் வூர்.**

மலர்அன்ன, கண்ணாள், அருமை, அறியாது, இவ்வூர், அலர், எமக்கு, ஈந்தது.

(பொ-ரை): மலர்போன்ற கண்களையுடைய என் அழகிய காதலியை, நான் அடைய முடியாத அருமையை அறியாமல்,

இவ்வூரார் எமது களவொழுக்கம் பற்றிப் பழிதூற்றிப் பேசிப் பரப்பியது எனக்கு உதவியாகவே அமைகிறது.

அலர் - களவொழுக்கம் பற்றிப் பழி தூற்றிப் பேசுவது; **ஈந்தது** - உதவியாகவே அமைகிறது; ஊரார் அலர் தூற்றுவது, தலைவனுக்கு உதவியாக அமைவதால், அதனை 'ஈந்தது' என்கிறான்.

(க-ரை): தன்னுடைய அழகிய காதலியைத் தான் அடைய முடியாமல் இருக்கும் அருமையை, ஊரார் அறியாமல் அலர் தூற்றுவதில் ஈடுபட்டிருப்பதானது, தனக்கு விரைவில் திருமணம் ஏற்பட உதவி புரிந்திருக்கிறது என்று தலைவன் தோழிக்குக் கூறுகிறான். (1142)

3. உறாஅதோ ஊர்அறிந்த கௌவை அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து.

ஊர்அறிந்த, கௌவை, உறாஅதோ, அதனைப் பெறா அது, பெற்றன்ன, நீர்த்து.

(பொ-ரை): எங்களது சேர்க்கையைப் பற்றி, ஊரார் அறிந்து, பழி தூற்றிச் சொல்லும் சொல்லானது, அச்சேர்க்கையை நான் பெறாமலிருக்கும் நேரத்தில், பெற்றது போன்ற இன்பம் பயக்கும் தன்மையை உடையதாக இருக்கிறது.

ஊர் அறிந்த - எமது சேர்க்கையைப் பற்றி ஊரார் அறிந்து; **கௌவை** - அலர் தூற்றுதலானது; பழி தூற்றும் சொல்லைச் சொல்லுவது; **உறாஅதோ** - நான் பெறாமலிருக்கும் நேரத்தில்; **பெற்றன்ன** - பெற்றது போன்ற; **நீர்த்து** - தன்மையை உடையது.

(க-ரை): தான், தன் காதலியை அடைய முடியாமலிருக்கும் நேரத்தில், ஊரார் பழிதூற்றிச் சொல்லும் சொல்லானது, தான் பெற முடியாமல் இருக்கும் இன்பத்தைப் பெற்றது போன்ற உணர்வைத் தனக்கு ஏற்படுத்துகின்றது என்று தலைவன் தோழிக்குச் சொல்லித், திருமணத்திற்கு விரைவில் ஏற்பாடு செய்யும்படிக் கூறுகிறான்.
(1143)

4. கவ்வையால் கவ்விது காமம் அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து.

காமம், கவ்வையால், கவ்விது; அதுஇன்றேல், தன்மை இழந்து, தவ்வென்னும்.

(பொ-ரை): எனது காதலானது, இவ்வூரார் கூறுகின்ற அலர் தூற்றும் மொழியால் வளர்ந்து வருகின்றது; அவ்வலர் தூற்றுதல் இல்லையென்றால், அது தன் இன்பம் துய்க்கும் தன்மையை இழந்து, சுருங்கிப் போய்விடும்.

காமம் - காதலானது; **கவ்வையால்** - அலர்தூற்றும் மொழியால்; **கவ்விது** - வளர்ந்து வருகின்றது; **தன்மை இழந்து** - காதலானது தன் இன்பம் துய்க்கும் தன்மையை இழந்து; **தவ்வென்னும்** - சுருங்கிப் போய்விடும்.

(க-ரை): ஊராரின் அலர் தூற்றுதலால், தனது காதல் வளர்ந்து வருகின்றது என்றும், அந்த அலர் தூற்றுதல் இல்லை என்றால், தன்னுடைய காதலானது இன்பம் துய்க்கும் தன்மையை இழந்துவிடும் என்றும், தலைவன் தோழிக்கு உணர்த்தி, வரைவுக்கான முயற்சியை மேற்கொள்ளுமாறு அவளை வற்புறுத்துகிறான். (1144)

5. களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படும் தோறும் இனிது.

கள்உண்டல், களித்தொறும், வேட்டற்றால், காமம், வெளிப் படும் தோறும், இனிது.

(பொ-ரை): கள்ளுண்பவர் கள்ளுண்டலின் மூலம் களிப்பு வெளிப்பட வெளிப்பட, அக்கள்ளுண்பது அவருக்கு இனிமை யாவது போல, ஊராரின் அலர் தூற்றப்பட தூற்றப்பட எனது காதலின்பத்தின் நினைவும் வெளிப்பட்டு, எனக்கு இனிமை பயக்கிறது.

வேட்டற்று - இனிமையாவதைப்போல; **காமம்** காதலின்பத்தின் நினைவு; **இனிது** - இனிமை பயக்கிறது.

(க-ரை): எப்படிக் கள்ளுண்பவருக்குக் கள்ளுண்டலின் மூலம் களிப்பு வெளிப்படுந்தோறும், அப்படிக் கள்ளுண்பது அவருக்கு இனிமை பயக்கிறதோ, அப்படி ஊரார் அலர் தூற்றும் போதெல்லாம், தனக்கும், காதலன்பின் நினைவு வெளிப்பட்டு, இனிமை பயக்கிறது என்று தலைவன், தோழிக்கு விரைவில் வரைவு கடாவிக் கூறுகிறான். (1145)

6. கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று.

கண்டது, மன்உம், ஒருநாள்; அலர், மன்உம், திங்களைப் பாம்பு, கொண்டற்று.

(பொ-ரை): காதலரை நான் கண்டது ஒரே ஒரு நாள்தான்; அதனால் ஊராரால் உண்டாக்கப்பட்ட அலர்தூற்றும் செய்தியானது, திங்களைப் பாம்பு கொள்ளுதல் என்னும் வழக்கத்தையொட்டிய செய்தியைப்போல, ஊரெங்கும் பரவிவிட்டிருக்கிறது.

கண்டது - காதலரை நான் கண்டது; **அலர்** - ஊராரால் உண்டாக்கப்பட்ட அலர் தூற்றும் செய்தியானது; **திங்களைப் பாம்பு கொண்டற்று** - திங்களைப் பாம்பு கொள்ளுதல் என்னும் வழக்கத்தையொட்டிய செய்தியைப் போல; பண்டைக்காலத்தில் திங்களிடத்தில் காணப்படும் களங்கத்தை 'மான்' என்றும், 'முயல்' என்றும், 'மூதாட்டி' என்றும் கூறுவது மரபு பற்றிய வழக்கமாகும். ஞாயிற்றின் ஒளி திங்கள் மீது விழுவதை, உலகம் நேர்கோட்டிற்கு வரும்போது மறைப்பதன் காரணமாக நிழல் ஏற்பட்டுப் பின்னர் அது நீங்கி விடுவதைப் பண்டைக் காலத்தினர், அறிவியல் வளர்ச்சி பெறாத நிலையில், 'பாம்பு விழுங்குவதாகவும்', பின்னர் 'பாம்பு விடுவதாகவும்' கற்பனையாகக் கருதுவதை மரபு பற்றிய வழக்கமாகவே கொண்டிருந்தனர். அந்த வழக்கத்தைத்தான் வள்ளுவர் இக்குறளில் உணர்த்துகின்றார்; **மன்உம்** - அசை.

(க-ரை): தான், தன் காதலரைக் கண்டது ஒரே ஒரு நாள்தான் என்றாலும், அதனை வைத்துக்கொண்டு, ஊர் முழுவதும் அறிய, ஊரார் அலர் தூற்றிவிட்டனர் என்று தலைவி, சிறைப்புறத்தானாக இருக்கும் தலைவனுக்கு, இனிக் களவொழுக்கம் எக்காரணங் கொண்டும் ஆகாது என்றும், விரைவில் தலைவன் தன்னை வரைந்துகொள்ள வேண்டும் என்றும் உணர்த்துகிறாள். (1146)

7. ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்.

இந்நோய், ஊரவர் கௌவை, எருவாக, அன்னை சொல், நீராக, நீளும்.

(பொ-ரை): என்னுடைய இந்தக் காதல் நோயாகிய பயிரானது, ஊராரின் அலர் தூற்றுதலை எருவாகவும், அது கேட்டு அன்னை கூறுகின்ற கடுஞ்சொற்களை நீராகவும் கொண்டு, செழித்து ஓங்கி வளருகின்றது.

இந்நோய் - என்னுடைய இந்தக் காதல் நோயாகிய பயிரானது; **கௌவை** - ஊராரின் அலர்தூற்றுதலை; **சொல்** - கடுஞ்சொற்களை; **நீளும்** - செழித்தோங்கி வளருகின்றது.

(க-ரை): ஊராரின் அலர் எருவாகவும், அதுகேட்டு அன்னை கூறும் கடுஞ்சொற்கள் நீராகவும் பயன்பட்டுத் தன்னுடைய காதல் நோயாகிய பயிரானது, நன்றாகச் செழித்து வளர்கின்றது என்று தலைவி, தலைவன் சிறைப்புறத்தானாக, அவன் கேட்க வேண்டும் என்பதற்காக வரைவு கோரி, தோழியிடம் சொல்லுவது போல் கூறுகிறாள். (1147)

8. நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால் காமம் நுதுப்பேம் எனல்.

கௌவையால், காமம் நுதுப்பேம், எனல், நெய்யால், எரி நுதுப்பேம், என்று அற்றால்.

(பொ-ரை): ஊரார் பழி தூற்றிப் பேசுதல் என்னும் அலரால் காதலுணர்வை அவித்துவிடுவோம் என்று அவர்கள் எண்ணுதலானது, எரிகின்ற தீயினை நெய்யால் அவித்துவிடுவோம் என்று எண்ணுவதைப் போன்றதாகும்.

கௌவையால் - அலரால்; **காமம்** - காதலுணர்வை; **நுதுப்பேம்** - அவிப்போம்; **எனல்** - என்று எண்ணுதல்; **எரி** - எரிகின்ற தீயினை; **என்றற்று** - என்று எண்ணுவதைப் போன்றது.

(க-ரை): எரிகின்ற தீயினை நெய்யால் அவிக்க நினைப்பது எப்படிப்பட்டதோ, அப்படிப்பட்டதுதான் தமது காதலுணர்வை அலரால் அவித்துவிடலாம் என்று ஊரார் நினைப்பதும் ஆகும் என்று தலைவி, சிறைப்புறத்தானாக இருக்கும் தலைவன் கேட்க, வரைவு உணர்த்தித் தோழிக்குக் கூறுகிறாள். (1148)

9. அலர்நாண ஒல்வதோ அஞ்சல்ஓம்பு என்றார் பலர்நாண நீத்தக் கடை.

அஞ்சல் ஓம்பு, என்றார், பலர் நாண, நீத்தக் கடை, அலர் நாண, ஒல்வதோ?

(பொ-ரை): என்னை எதிர்ப்பட்ட அன்று, 'உன்னை விட்டுப் பிரியேன்; நீ அஞ்சுதலை விடுவாயாக!' என்று கூறிய என் காதலரே, பலரும் நாணும்படியாக என்னைவிட்டுப் பிரிந்துசென்றபின், நான் மட்டும் ஊரார் தூற்றும் அலருக்காக நாண முடியுமோ? முடியாது!

அஞ்சல் ஓம்பு - அஞ்சுதலை விடுவாயாக; **என்றார்** - என்று கூறிய என் காதலரே; **நீத்தக்கடை** - என்னைவிட்டுப் பிரிந்து சென்றபின்; **நாண ஒல்வதோ** - நாண முடியுமோ?

(க-ரை): என்னை எதிர்ப்பட்ட அன்று, 'உன்னை விட்டுப் பிரியேன்; நீ அஞ்சுதலை விடுவாயாக' என்று கூறிய என் காதலரே, பலரும் நாணும்படியாக என்னை விட்டுப் பிரிந்து சென்றபின், 'நான் மட்டும் ஊரார் தூற்றும் அலருக்காக நாண வேண்டிய இன்றியமையாமை என்ன இருக்கிறது?' என்று தலைவி, சிறைப் புறத்தானாகத் தலைவன் இருக்க, அவருக்கு அஞ்சிச் செயலாற்ற வேண்டும் என்று அறிவுரை கூறிய தோழிக்குத் திருமணத்தை விரைவுபடுத்த வேண்டியதை உணர்த்திக் கூறுகிறாள். (1149)

10. தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்
கெளவை எடுக்கும்இவ் வூர்.

யாம் வேண்டும், கெளவை, இவ்வூர், எடுக்கும்; தாம் வேண்டின், காதலர், நல்குவர்.

(பொ-ரை): நாம் முன்பே விரும்பிய உடன்போக்குக்குத் துணை செய்யக்கூடிய அலர் தூற்றுதலை, இவ்வூர் மக்கள் தாமே பரப்புகின்றனர்; இனி, நம் காதலரும் நாம் வேண்டி விரும்பினால், அந்த உடன்போக்கை, எளிதில் ஒப்புக்கொள்வார்.

கெளவை - அலர் தூற்றுதலை; **நல்குவர்** - ஒப்புக்கொள்வார்.

(க-ரை): தாம் முன்பே விரும்பியிருந்த உடன் போக்குக்குத் துணை செய்யக்கூடிய முறையிலேயேதான் இவ்வூரார், அலர்தூற்றி வருகின்றனர்; தம் காதலரும், வேண்டிக்கொண்டால், அந்த உடன்போக்கை விரும்பி ஏற்றுக்கொள்வார் என்று தோழியானவள் தலைவிக்குச் சொல்லுவதன் மூலம், அலர் ஏற்பட்டிருப்பதை உணர்த்தி, சிறைப்புறத்தானாக இருக்கும் தலைவன், உடன்போக்கை ஒப்புக்கொள்ளுமாறு அறிவுறுத்துகிறாள். (1150)

116. பிரிவு ஆற்றாமை

பிரிவு ஆற்றாமை என்பது, களவொழுக்கம் ஒழுகிய காதலர்கள், மணம் செய்துகொண்டு, இல்வாழ்க்கை நடத்தும் போது, கல்வி, பொருள், போர் போன்றவற்றின் நிமித்தம் தலைவன் தலைவியைவிட்டுப் பிரிய நேரிடுகையில், தலைவியானவள், பிரிவைப் பொறுக்கமாட்டாமல் வருந்துதல் பற்றிக் கூறுதல் எனப்படும்.

**1. செல்லாமை உண்டேல் எனக்குஉரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை.**

செல்லாமை உண்டேல், எனக்கு உரை; மற்று, நின், வல்வரவு, வாழ்வார்க்கு, உரை.

(பொ-ரை): நீ எம்மைவிட்டுப் பிரிந்து செல்லாத நிலைமையாக இருக்குமேயானால், அதனை மட்டும் என்னிடம் சொல்; அதுவல்லாமல் பிரிந்துசென்று, உன்னுடைய விரைவான வருகையைப் பற்றியதானால், அதனை அதுவரையில் உயிர் வாழ்பவர்க்குச் சொல்.

செல்லாமை - நீ எம்மைவிட்டுப் பிரிந்து செல்லாத நிலைமையாக இருக்குமேயானால்; **வல்வரவு** - விரைவான வருகையைப் பற்றியதானால்; உயிர் வாழ்வார்க்குச் சொல் என்றதற்கு, தலைவன் பிரிந்து போனால், தலைவி உயிர் வாழ்ந்திருக்க மாட்டாள் என்பது பொருள்.

(க-ரை): தலைவனானவன், எம்மைவிட்டுப் பிரிந்து செல்லாத நிலைமை இருக்குமேயானால், அந்தச் செய்தியை அவன் எமக்குச் சொல்லட்டும்; அதுவல்லாமல், அவன் பிரிந்து சென்று, விரைவாக வந்து சேர்தலைப் பற்றிய செய்தியாக இருக்குமேயானால், அதனை அவன், அதுவரை உயிர் வாழ்ந்துகொண்டிருப்போர்க்குச் சொல்லட்டும் என்று தோழியானவள், பிரிவு உணர்த்திய தலைவனிடம், தலைவியின் கூற்றாகப் பிரிவு ஆற்றாமை குறித்துக் கூறுகிறாள். (1151)

**2. இன்கண் உடைத்துஅவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு.**

அவர் பார்வல், இன்கண் உடைத்து, புணர்வு, பிரிவு, அஞ்சும் புன்கண், உடைத்தால்.

(பொ-ரை): முன்பு களவுக்காலத்தில், காதலர் பார்த்த பார்வையானது, புணர்ச்சி குறித்தமையால் எனக்கு இன்ப முடையதாக இருந்தது; இப்பொழுது, புணர்ச்சியிருந்தும் புணர்ச்சியின் தன்மை, அவர் பிரிந்துவிடுவாரோ என்று அஞ்சுகின்ற துன்பத்தினை உடையதாக இருக்கிறது.

பார்வல் - பார்வையானது; **இன்கண் உடைத்து** - இன்பத்தை உடையதாக இருந்தது; **புணர்வு** - புணர்ச்சியிருந்தும் புணர்ச்சியின் தன்மை; **பிரிவு** - பிரிவாரோ; **அஞ்சும்** - அஞ்சுகின்ற; **புன்கண் உடைத்து** - துன்பத்தினை உடையதாக இருக்கிறது.

(க-ரை): களவுக்காலத்தில் காதலரின் நோக்கானது தனக்கு இன்பந்தருவதாக இருந்தது என்றும், இப்பொழுது புணர்ச்சியிருந்தும் அவரின் போக்கு, பிரிவு ஏற்படுமோ என்ற அச்சத்தை உண்டாக்குவதால், அது துன்பந்தருவதாக இருக்கிறது என்றும், தலைவி, தலைவனின் பிரிவைக் குறிப்பால் அறிந்து, தோழிக்குக் கூறுகிறாள். (1152)

**3. அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவுஓர் இடத்துஉண்மை யான்.**

அறிவுடையார் கண்ணும், ஓர்இடத்துப், பிரிவுஉண்மையான், தேற்றம், அரிதுஅரோ.

(பொ-ரை): பிரிதல் துன்பத்தினை அறிந்து, உணரவல்ல காதலரிடத்திலும், ஒரோவழி, பிரிந்துசெல்லுதல் நிகழ்வதால், 'பிரியேன்' என்று அவர் அன்று சொல்லிய சொல்லை, உறுதி செய்வதற்கு முடியாததாக இருக்கின்றது.

அறிவுடையார் கண்ணும் - பிரிதல் துன்பத்தினை அறிந்து உணரவல்ல காதலரிடத்திலும்; **ஓர் இடத்து** - ஒரோவழி; **உண்மையான்** - நிகழ்வதால்; **தேற்றம்** - உறுதி செய்வதற்கு; **அரிது** - முடியாததாக இருக்கின்றது.

(க-ரை): காதலர், பிரிதல் துன்பத்தை உணரக்கூடிய அறிவுடையார்தான் என்றாலும், சில நேரத்தில் அவரது போக்கு பிரிவுக்கு ஆயத்தமாக இருப்பதால், பிரியேன் என்று அவர் அன்று கூறிய சொற்களை உறுதியாக எடுத்துக்கொள்ளுவதற்கில்லை என்று தலைவி, தலைவனின் பிரிவைக்குறிப்பால் அறிந்து, தோழிக்குக் கூறி வருந்துகிறாள். (1153)

4. அளித்துஅஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு.

அளித்து, அஞ்சல், என்றவர், நீப்பின், தெளித்தசொல், தேறியார்க்குத், தவறு உண்டோ?

(பொ-ரை): களவுக்காலத்தில் எதிர்ப்பட்ட அன்று, அன்பினைப்பெய்து, "உன்னைவிட்டுப் பிரியமாட்டேன்! நீ அஞ்சாமல் இரு!" என்று சொல்லிய காதலரே, என்னைவிட்டுப் பிரிந்து செல்வாரானால், அவர் அன்புடன் கூறிய சொல்லினை உண்மை என்று நம்பித் தெளிவடைந்தவர்மேல் குற்றம் ஏதேனும் உண்டோ? இல்லை.

அளித்து - அன்பினைப் பெய்து; **அஞ்சல்** - உன்னைவிட்டுப் பிரியமாட்டேன்; நீ அஞ்சாமல் இரு; **என்றவர்** - என்று சொல்லிய காதலரே; **நீப்பின்** - பிரிந்து செல்வாரானால்; **தெளித்த** - அவர் அன்புடன் கூறிய; **தேறியார்க்கு** - நம்பித் தெளிவடைந்தவர் மேல்.

(க-ரை): அன்று தன்னைப்பார்த்து, 'உன்னைவிட்டு ஒரு நாளும் பிரியமாட்டேன்; அஞ்சாமல் இரு' என்று சொல்லிய காதலரே, சொன்ன சொற்களை மறந்துவிட்டுத் தன்னை விட்டுப்பிரிந்து செல்வாரானால், அவர் கூறிய சொற்களை உண்மை என்று நம்பிய தன் மீது என்ன குற்றம் இருக்க முடியும் என்று தலைவி, தலைவனின் பிரிவைக் குறிப்பால் உணர்ந்து, தோழிக்குச் சொல்லிப் பிரிவைத் தடுக்குமாறு உணர்த்துகிறாள். (1154)

5. ஓம்பின் அமைந்தார் பிரிவுஓம்பல் மற்றுஅவர்
நீங்கின் அரிதால் புணர்வு.

ஓம்பின், அமைந்தார் பிரிவு, ஓம்பல்; மற்று அவர் நீங்கின், புணர்வு, அரிதுஆல்.

(பொ-ரை): எனது உயிரைக் காப்பாற்ற வேண்டுமானால், அதனை ஆள்வதற்கென்று அமைந்த காதலரது பிரிவைத் தடுத்து நிறுத்துவாயாக; அப்படிப் பிரிந்து போவதை நிறுத்தாமல், அவர் பிரிந்து செல்வாரேயானால், பிறகு அவரை நான் கூடுதல் என்பது முடியாததாகும்.

ஓம்பின் - எனது உயிரைக் காப்பாற்ற வேண்டுமானால்; **அமைந்தார்** - எனது உயிரை ஆள என்று அமைந்த காதலரது; **ஓம்பல்** - தடுத்து நிறுத்துவாயாக; **மற்று** - அவ்வாறு பிரிவதை

நிறுத்தாமல்; **புணர்வு** - அவரை நான் கூடுதல் என்பது; **அரிது** - முடியாததாகும்; **ஆல்** - அசை.

(க-ரை): தனது உயிர் காப்பாற்றப்பட வேண்டுமானால், தன் காதலரின் பிரிவை நிறுத்த வேண்டும் என்றும், அப்படி நிறுத்தாமல், அவர் பிரிந்துசெல்வாரேயானால், பிறகு அவர் தன்னைக் கூடுதல் அரிதான ஒன்றாகவே இருக்கும் என்றும், தலைவி, தலைவனின் பிரிவைக் குறிப்பால் உணர்ந்து, தோழிக்குக்கூறி, அந்தப் பிரிவைத் தடுக்க வேண்டி, தன் உயிர் போய்விடக்கூடிய நிலைமையை விளக்குகிறாள். (1155)

6. பிரிவுஉரைக்கும் வன்கண்ண ராயின் அரிதுஅவர்
நல்குவர் என்னும் நசை.

பிரிவுஉரைக்கும், வன்கண்ணர், ஆயின், அவர், நல்குவர், என்னும் நசை, அரிது.

(பொ-ரை): காதலர், தாம் பிரிந்து போவதை நம்மிடம் சொல்லுகின்ற அளவிற்குக் கொடுமையுடையவராக இருப்பாரே யானால், அவர் திரும்பிவந்து, அன்பு காட்டுவார் என்று எண்ணுகின்ற ஆவல் வீணானதாகும்.

அவர் - காதலர்; **வன்கண்ணர்** - கொடுமையுடையவராக; **ஆயின்** - இருப்பாரேயானால்; **நல்குவர்** - திரும்பி வந்து அன்புகாட்டுவார்; **நசை** - ஆவல்; **அரிது** - முடியாததாகும்.

(க-ரை): காதலர் தாம் பிரிந்து போவதை நம்மிடமே உரைக்கின்ற அளவிற்குக் கொடுமை வாய்ந்தவராக இருப்பாரே யானால், அவர் திரும்பிவந்து, தன்னிடம் அன்பு காட்டுவார் என்ற ஆவல், தனக்கு ஏற்பட வழியேயில்லை என்று தலைவி, தலைவனிடம் பிரிவை உணர்த்திய தோழிக்குப் பிரிவு ஆற்றாளாய் இருந்து கூறுகிறாள். (1156)

7. துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை.

துறைவன், துறந்தமை, முன்கை, இறை, இறவா, நின்றவளை, தூற்றாகொல்?

(பொ-ரை): தலைவன் என்னைவிட்டுப் பிரிந்ததை, எனது முன்கையின் மூட்டுவாயிலிருந்து, கழன்றுவிழும் வளையல்களே

பலர் அறியும்படித் தெரிவித்துத் தூற்றுவதுபோல் தெரியாமல் போய்விடுமோ? போய்விடாது!

துறைவன் - தலைவன்; **துறந்தமை** - பிரிந்ததை; **முன்கை இறை** - முன்கையின் மூட்டுவாய்; **இறவா** - நீங்கி, கழன்று.

(க-ரை): தலைவனானவன், தன்னைவிட்டுப் பிரிந்து சென்றதை, தனது முன் கையின் மூட்டுவாயிலிருந்து கழன்றுவிழும் வளையல்களே பலர் அறியும்படித் தெரிவித்துவிடுமே என்று தலைவி, தலைவன் பிரிந்து சென்றதை உணர்த்திய தோழிக்குக் கூறுகிறாள். (1157)

8. இன்னாது இனன்இல்லூர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு.

இனன், இல்ஊர், வாழ்தல், இன்னாது; இனியார்ப் பிரிவு, அதனினும், இன்னாது.

(பொ-ரை): என்னுடைய குறிப்பறியக்கூடிய தோழியரைப் பெற்றில்லாத ஊரில், நான் வாழ்வது என்பது, துன்பந்தருவதாகும்; என்னுடைய பிரிவாற்றாமைக் குறிப்பை அறியக்கூடிய என்னுடைய காதலர், என்னைவிட்டுப் பிரிந்து செல்வது என்பது, அதைக் காட்டிலும் துன்பந்தருவதாகும்.

இனன் இல்ஊர் - குறிப்பறியக்கூடிய தோழியரைப் பெற்றிராத ஊரில்; **இன்னாது** - துன்பந்தருவதாகும்; **இனியார்** - பிரிவாற்றாமைக் குறிப்பை அறியக்கூடிய காதலர்.

(க-ரை): தன்னுடைய இனிய தோழியரைப் பெற்றிராத ஊரில் வாழ்தலே தனக்குத் துன்பந்தருவதாகும் என்றும், தன்னுடைய இனிய காதலர் தன்னைவிட்டுப் பிரிந்து செல்வது அதனைக்காட்டிலும் துன்பந்தருவதாகும் என்றும், தலைவி, தலைவனின் பிரிவை வெளிப்படுத்திய தோழிக்குக் கூறுகிறாள். (1158)

9. தொடின்சுடின் அல்லது காமநோய் போல
விடின்சுடல் ஆற்றுமோ தீ.

தீ, தொடின், சுடின் அல்லது, காமநோய் போல, விடின், சுடல், ஆற்றுமோ.

(பொ-ரை): நெருப்பானது, தன்னைத் தொட்டால்தான் அது சுடுமேயல்லாமல், காதல் நோயைப்போல, அதனைவிட்டு நீங்கினால், சுடுதலைச் செய்யவல்லதாகுமோ? ஆகாது!

தொடின் - தொட்டால்தான்; **சுடின்** - சுடும்; **விடின்** - அதனை விட்டு நீங்கினால்; **சுடல் ஆற்றுமோ** - சுடுதலைச் செய்ய வல்லதாகுமோ; நெருப்பினும் கொடியது காம நோய் என்பது கூறப்படுகிறது.

(க-ரை): நெருப்பானது, அதனைத் தொட்டால்தான் சுடுமேயல்லாமல், அதனைத் தொடாமல் நீங்கிவிட்டால் அது சுடாது என்றும், ஆனால் காதல் நோயோ என்றால், காதலரை விட்டு நீங்கினாலே சுடுகின்றது என்றும், நெருப்பைக்காட்டிலும் காதல் நோய் அவ்வளவு கொடுமையானது என்றும், தலைவியானவள், பிரிவு ஆற்றும்படிக் கூறிய தோழிக்கு மறுமொழியாகக் கூறுகிறாள். (1159)

**10. அரிதுஆற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவுஆற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர்.**

அரிதுஆற்றி, அல்லல் நோய், நீக்கிப் பிரிவுஆற்றி, பின் இருந்து, வாழ்வார், பலர்.

(பொ-ரை): காதலர் பிரிவு உணர்த்தும்போது, அதற்கு உடன்படுதலாகிய செயலைச் செய்து, பிரியும்போது ஏற்படும் துன்ப நோயையும் நீக்கிப், பிரிந்துவிடும்போது, ஆற்றாமைத் துன்பத்தையும் பொறுத்துக்கொண்டிருந்து, பின்னரும் உயிர் வாழக்கூடிய மகளிர் பலர் உலகத்தில் இருக்கக்கூடும்; ஆனால் நான் உயிர் வாழ்வதற்கில்லை!

அரிதுஆற்றி - காதலர் பிரிவு உணர்த்தும்போது, அதற்கு உடன்படுதலாகிய செயலைச் செய்து; **அல்லல்** - துன்பம்; **பலர்** - உலகத்தில் பலராக இருக்கக்கூடும்.

(க-ரை): காதலர் பிரியும்போது, அதற்கு உடன்பட்டு, அதனால் ஏற்படும் துன்பத்தையும் மறந்து, பிரிந்துவிடும்போது ஆற்றாமை யையும் பொறுத்துக்கொண்டு, அதற்குப் பின்னரும் உயிர் வாழும் பெண்கள் பலர் இருக்கக்கூடும் என்றாலும், தான் எக்காரணங் கொண்டும் உயிர் வாழ்தற்கில்லை என்று தலைவி, தோழியானவள் பிரிவு ஆற்றுவிக்கும்போது அவளுக்குக் கூறுகிறாள். (1160)

117. படர்மெலிந்து இரங்கல்

படர்மெலிந்து இரங்கல் என்பது, பிரிவு ஆற்றாளாதவளாகிய தலைவி, தலைவனை எண்ணியெண்ணித் தான் பெறுகின்ற துன்பத்தினை எப்பொழுதும் நினைத்துக் கொண்டே இருத்தலால், உடம்பானது இளைத்து, வருந்திக் கூறுதல் எனப்படும்.

**1. மறைப்பேன்மன் யான்இஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும்.**

யான், நோயை, மறைப்பேன் மன்; இஃதோ, இறைப்பவர்க்கு, ஊற்றுநீர் போல, மிகும்.

(பொ-ரை): நான் காதல் நோயினைப் பிறர்க்குத் தெரியாமல், நாணி, மறைத்துத்தான் வைக்கிறேன்; ஆனால், இந்தக் காதல் நோயோ, தண்ணீர் இறைப்பவர்களுக்கு ஊற்றிலிருந்து நீர் சுரப்பது போல் மேலும் மேலும் மிகுந்து வரவே செய்கிறது.

நோயை - காதல் நோயை; **இஃதோ** - இந்தக் காதல் நோயோ; **இறைப்பவர்க்கு** - தண்ணீர் இறைப்பவர்களுக்கு; **மிகும்** - மிகுந்து வரவே செய்கிறது; **மன்** - அசை.

(க-ரை): தான் காதல் நோயினைப் பிறர்க்குத் தெரியாமல் நாணி மறைக்கத்தான் செய்கிறேன் என்றும், ஆனால், ஊற்று நீர் இறைக்க, இறைக்க எப்படிச் சுரந்து பெருகி வருகின்றதோ, அப்படியே தன்னுடைய காதல் நோயும் மறைக்க, மறைக்க வெளிப்பட்டுத் தோன்றிவிடுகிறது என்றும், தலைவியானவள், காதல் நோயை வெளிப்படுத்துவது தலைவிக்குத் தகாது என்று கூறிய தோழிக்கு, மறுமொழியாகக் கூறுகிறாள். (1161)

**2. கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும்.**

இந்நோயைக், கரத்தலும், ஆற்றேன்; நோய் செய்தார்க்கு, உரைத்தலும், நாணுத், தரும்.

(பொ-ரை): இந்தக் காதல் நோயை, மறைப்பதற்கும், ஆற்றலற்றவளாக இருக்கிறேன்; இந்த நோயை உண்டாக்கிய

காதலருக்குச் சொல்லி அனுப்புதலும், எனக்கு நாணத்தைக் கொடுப்பதாக இருக்கின்றது.

இந்நோயை - இந்தக் காதல் நோயினை; **கரத்தலும்** - மறைப்பதற்கும்; **ஆற்றேன்** - ஆற்றல் அற்றவளாக இருக்கிறேன்; **உரைத்தலும்** - சொல்லி அனுப்புதலும்; தூது அனுப்புதலும்; **நாணுத்தரும்** - நாணத்தைக் கொடுப்பதாக இருக்கின்றது.

(க-ரை): தனது காதல் நோயைத் தன்னால் மறைக்கவும் முடியவில்லை என்றும், பிரிந்து சென்ற காதலருக்கு அதுபற்றிச் சொல்லி அனுப்புவதென்றாலும், அதனைத் தன் நாணம் தடுக்கின்றது என்றும், தலைவி, ஆற்றமாட்டாதவளாய் வருந்தித் தோழியிடம் கூறுகிறாள். (1162)

3. காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனா உடம்பின் அகத்து.

நோனா, என் உடம்பின் அகத்து, உயிர்காவாக், காமமும், நாணும், தூங்கும்.

(பொ-ரை): காதலரின் பிரிவைத் தாங்க முடியாத என்னுடைய உடம்பிலுள்ள உயிரையே ஒரு காவடித்தண்டாகக் கொண்டு, அதன் ஒரு முனையில் தூது செல்லச் சொல்லும் காதல் நோயும், மற்றொரு முனையில் அதனை மறுக்கும் நாணமும் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

நோனா - காதலரின் பிரிவைத் தாங்க முடியாத; **காவா** - காவடித்தண்டாக; **தூங்கும்** - இருமுனைகளிலும் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

(க-ரை): தன் காதலரின் பிரிவைத் தாங்க முடியாமல், வருந்திக் கொண்டிருக்கும் தன் உடம்பிலுள்ள உயிரைக் காதல் நோய் ஒரு பக்கமும், நாணம் மற்றொரு பக்கமும் இருந்து வருத்திக் கொண்டிருக்கின்றன என்று தலைவி, பிரிவு ஆற்றச் சொல்லியும், துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளும்படி கூறியும் வற்புறுத்தும் தோழிக்கு மறுமொழியாய்க் கூறுகிறாள். (1163)

4. காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்.

காமக் கடல் மன்னும், உண்டே, அது நீந்தும், ஏமப் புணை, மன்னும் இல்.

(பொ-ரை): காதல் நோய் என்னிடம் கடல் போலப் பரந்துள்ளது; அதனை நீந்திக் கடந்து செல்லுவதற்கு ஏற்ற பாதுகாப்பான தோணி எதுவும் என்னிடத்தில் இல்லை.

காமக்கடல் உண்டே - காதல் நோயானது என்னிடம் கடல் போலப் பரந்துள்ளது; **ஏமப்புணை** - பாதுகாப்பான தோணி; **இல்** - என்னிடத்தில் இல்லை; **மன்உம்** - அசை.

(க-ரை): காதல் நோயானது தன்னிடத்தில் கடல் போல அமைந்துள்ளது என்றும், அதனை நீந்திக் கடந்து செல்லுவதற்கு ஏற்ற, பாதுகாப்பான தோணிதான் தன்னிடத்தில் இல்லை என்றும், தலைவி தலைவனுக்குத் தூதுவிடாத தோழியை நோக்கிச் சினந்துகொண்டு கூறுகிறாள். (1164)

5. துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர்.

நட்பினுள், துயர்வரவு, ஆற்றுபவர், துப்பின், எவன்ஆவர், மன்கொல்.

(பொ-ரை): இன்பம் செய்வதற்குரிய நட்பாக இருக்கும்போதே துன்பம் வரும்படி செய்யக்கூடியவர், துன்பம் செய்வதற்குரிய பகைமையாக ஆகும்போது, எப்படிப்பட்டவராய் இருப்பாரோ? தெரியவில்லை!

ஆற்றுபவர் - செய்யக்கூடியவர்; **துப்பின்** - பகைமையாக ஆகும்போது; எவனாவர்கொல் ; எப்படிப்பட்டவராய் இருப்பாரோ? **மன்** - அசை.

(க-ரை): தன்னோடு நட்பாக இருக்கும்போதே துன்பம் வரும்படி செய்யக்கூடியவர், பகைமையாக மாறும்போது எப்படி இருப்பாரோ? என்று பிரிவு ஆற்றாமையால் வருந்தும் தலைவி, தோழியிடம் கூறுகிறாள். (1165)

6. இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதுஅடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது.

காமம், இன்பம், கடல், மற்று அஃது, அடுங்கால், துன்பம், அதனில், பெரிது.

(பொ-ரை): காதலினால் வரும் இன்பம் கடல் போலப் பெரியது; மற்றபடி அதுவே, பிரிவின் காரணமாக வருத்தும்போது வரும் துன்பம், அக்கடலைக்காட்டிலும் மிகப் பெரியதாகும்.

காமம் - காதலினால்; **அடுங்கால்** - பிரிவின் காரணமாக வருத்தும்போது.

(க-ரை): காதலினால் வரும் இன்பம் கடல் போல் பெரியது என்றால், காதலரின் பிரிவின் காரணமாக வரும் துன்பம், அந்தக் கடலைவிட மிகப் பெரியதாக இருக்கின்றது என்று தலைவி, இன்பம் பெறுவோர் துன்பம் உறுதல் என்பது உலகியல் இயற்கை என்று கூறிய தோழிக்கு மறுமொழியாகக் கூறுகிறாள். (1166)

7. காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன்.

காமக் கடும்புனல், நீந்திக், கரை காணேன், யாமத்தும், யானே, உளேன்.

(பொ-ரை): காதல் என்னும் கடுமையான வெள்ளத்தை நீந்தியும் அதன் கரையைக் காணாது நான் வருந்துகின்றேன்; நள்ளிரவிலும் யாதோர் உற்ற துணையும் இன்றித் தனித்திருக்கின்றேன்.

கடும்புனல் - கடுமையான வெள்ளத்தை; **யாமத்திலும்** - நள்ளிரவிலும்; **யானே உளேன்** - யாதோர் உற்ற துணையும் இன்றித் தனித்திருக்கின்றேன்.

(க-ரை): காதல் என்னும் கடுமையான வெள்ளத்தை நீந்தியும், தன்னால் அதன் கரையைக் காண முடியவில்லை என்றும், நள்ளிரவிலும் உற்ற துணை யாருமின்றித் தானே தனித்திருக்கின்றேன் என்றும், தலைவி, தன் பிரிவாற்றாமை குறித்து வருந்தித் தோழிக்குக் கூறுகிறாள். (1167)

8. மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்துஇரா
என்னல்லது இல்லை துணை.

மன்உயிர் எல்லாம், துயிற்றி, என்அல்லது, துணை, இல்லை, இரா, அளித்து.

(பொ-ரை): உலகத்தில் நிலைபெற்ற உயிர்களையெல்லாம் தூங்கும்படிச் செய்துவிட்டு, என்னையல்லாமல், வேறு யாரையும் துணையாகக் கொண்டில்லாதிருக்கின்ற இவ்விரவானது மிகவும் இரங்கத்தக்கதாகும்.

மன் - நிலைபெற்ற; **துயிற்றி** - தூங்கச் செய்துவிட்டு; **இரா** - இரவானது; **அளித்து** - மிகவும் இரங்கத்தக்கதாகும்.

(க-ரை): இரவானது உலகத்தில் நிலைபெற்று வாழும் உயிர்களையெல்லாம் தூங்கச் செய்துவிட்டுத் தன்னை மட்டுமே துணையாகக் கொண்டிருக்கிறது; அது மிகவும் இரங்கத்தக்கது என்று தலைவி, பிரிவு ஆற்றாமை மிகுந்தவளாய் வருந்தித் தோழியிடம் கூறுகிறாள். (1168)

**9. கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா.**

இந்நாள், நெடிய கழியும், இரா, கொடியார் கொடுமையின், தாம் கொடிய.

(பொ-ரை): காதலரோடு இன்புற்றிருந்தபோது குறுகியனவாய் இருந்து, அவரது பிரிவு ஆற்றாமையால் துன்பம் அடையும் இப்போது நெடியனவாய்ச் செல்லுகின்ற இரவுகள், என்னைவிட்டுப் பிரிந்து சென்ற அக்கொடியவரின் கொடுமையைக் காட்டிலும் மிகுந்த கொடுமையைச் செய்வனவாகும்.

இந்நாள் - காதலரின் பிரிவு ஆற்றாமையால் துன்பம் அடையும் இப்போது; **நெடிய கழியும் இரா** - நெடியனவாய்ச் செல்லுகின்ற இரவுகள்; **கொடியார்** - என்னைவிட்டுப் பிரிந்து சென்ற கொடியவரின்; **தாம் கொடிய** - அந்த இரவுகள் மிகுந்த கொடுமையைச் செய்வன வாகும்.

(க-ரை): காதலரைவிட்டுப் பிரிந்து, துன்பம் உறும் இப்போது, நெடியனவாய்ச் செல்லுகின்ற இரவுகள், தன்னை விட்டுப் பிரிந்த அக்கொடியவரின் கொடுமையைக்காட்டிலும், மிகுந்த கொடுமையைச் செய்வனவாக இருக்கின்றன என்று தலைவி, பிரிவு ஆற்றாமை காரணமாக வருந்தித் தோழியிடம் கூறுகிறாள். (1169)

**10. உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண்.**

உள்ளம்போன்று, என்கண், உள்வழிச் செல்கிற்பின், வெள்ளநீர், நீந்தல, மன்ஓ.

(பொ-ரை): என்னுடைய மனம்போல என் கண்களானவை, காதலர் உள்ள இடத்திற்கு விரைந்து செல்லக்கூடியனவாக இருக்குமேயானால், கண்ணீராகிய வெள்ளத்தில் அவை நீந்திக் கொண்டிருக்க மாட்டா.

உள்வழி - காதலர் உள்ள இடத்திற்கு; **செல்கிற்பின்** - விரைந்து செல்லக்கூடியனவாக இருக்குமேயானால்; **வெள்ளநீர்** - கண்ணீராகிய வெள்ளத்தில்; **நீந்தல** - நீந்திக் கொண்டிருக்க மாட்டா; **மன் ஓ** - அசை.

(க-ரை): தன்னுடைய மனம் போல, தன் கண்களானவை காதலர் இருக்கும் இடத்திற்கு விரைந்து செல்லக்கூடியனவாக இருக்குமேயானால், கண்ணீராகிய வெள்ளத்தில், தன்னுடைய கண்கள் நீந்தவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டிருக்காது என்று தலைவி, கண்களின் அழகு கெடாமலிருக்க அழ வேண்டாம் என்று அறிவுறுத்திய தோழிக்குக் கூறுகிறாள். (1170)

118. கண் விதுப்பு அழிதல்

கண் விதுப்பு அழிதல் என்பது, தலைவனை விரைவில் காண வேண்டும் என்று விரும்பி, வருந்தும் தலைவி, தன் கண்கள், தன்னுடைய காதலரை விரைந்து காண வேண்டும் என்று வருந்துவதாகக் கூறுதல் எனப்படும்.

**1. கண்தாம் கலுழ்வது எவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது.**

தண்டாநோய், கண் தாம்காட்ட, யாம் கண்டது; தாம் கலுழ்வது, எவன்கொல்ஓ?

(பொ-ரை): இத்தீராத காதல்நோயை நான் அடைந்தது, எனது கண்கள் காதலரை எனக்குக் காட்ட நான் கண்டதால் ஆகும். அன்று எனக்குக் காட்டிய அதே கண்கள், இன்று அவரைக் காட்டும்படி என்னிடம் சொல்லி அழுவது என்ன காரணம் பற்றியோ? அறியேன்.

தண்டாநோய் - தீராத காதல் நோயை; **கண்தாம் காட்ட** - என் கண்கள் எனக்குக் காதலரைக்காட்ட; **யாம் கண்டது** - நான் கண்டதால் ஆகும்; **கலுழ்வது** - அழுவது; **எவன்கொல்** - என்ன காரணம் பற்றியோ?; **ஓ** - அசை.

(க-ரை): தனது கண்கள், காதலரைத் தனக்குக் காட்டிய காரணத்தினால்தான், தீராத காதல் நோயானது தன்னை வந்து சேர்ந்தது என்றும், அப்படி அவரைக்காட்டிய கண்களே அவரைக்காட்டும்படி என்னிடம் சொல்லி அழுவதற்கு என்ன காரணமோ, தெரியவில்லை என்று தலைவி, கண்களானவை தம் அழகை இழப்பதால், அழுகையை நிறுத்திப் பிரிவைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறிய தோழிக்கு மறுமொழியாகக் கூறுகிறாள்.

(1171)

**2. தெரிந்துஉணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன்.**

தெரிந்து, உணரா, நோக்கிய, உண்கண், பரிந்து உணராப், பைதல், உழப்பது எவன்?

(பொ-ரை): மேல் விளைவதை ஆராய்ந்து அறியாமல், அன்று காதலரை நோக்கிய மை தீட்டப்பெற்ற கண்கள், இன்று இத்துன்பம்

தம்மால்தான் வந்தது எனச் சிந்தித்து உணராமல், துன்பப்படுவது எதற்காக? அறியமுடியவில்லையே!

தெரிந்து உணரா - மேல்விளைவதை ஆராய்ந்து அறியாமல்; **நோக்கிய** - அன்று காதலரை நோக்கிய; **உண்கண்** - மை தீட்டப்பெற்ற கண்கள்; **பரிந்து** - நம்மால்தானே வந்தது; **உணரா** - சிந்தித்து உணராமல்; **பைதல் உழப்பது** - துன்பப்படுவது; **எவன்** - எதற்காக.

(க-ரை): பின்னால் விளைவதை நன்கு ஆராய்ந்து பார்க்காமல், அன்று காதலரைப் பார்த்துக் காதலித்த தம் கண்கள், இன்று இவ்வளவு துன்பமும் தம்மால்தானே வந்தது என்று சிந்தித்து உணராமல், துன்பப்படுவதற்கான காரணந்தான் புரியவில்லை என்று தலைவி, பிரிவு ஆற்றாமையைப் பொறுத்துக்கொண்டு, அழாமல் இருக்கும்படி வற்புறுத்திய தோழிக்குக் கூறுகிறாள். (1172)

3. கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்கது உடைத்து.

கதுமெனத், தாம்நோக்கி, தாமே கலுழும்; இது, நகத்தக்கது, உடைத்து.

(பொ-ரை): இக்கண்கள் அன்று காதலரைத் தாமே விரைந்து நோக்கின; இன்று தாமே அழுகின்றன; இந்தச் செய்கையானது, நகைத்து இகழத்தக்க தன்மையை உடையதாக இருக்கின்றது.

தாம் - இக்கண்கள்; **கதுமென** - காதலரை விரைந்து சென்று; **கலுழும்** - அழுகின்றன; **இது** - கண்களின் இந்தச் செய்கையானது; **நக** - நகைத்து இகழத்தக்க; **தக்கது** - தன்மையை உடையதாக இருக்கின்றது.

(க-ரை): தன்னுடைய கண்கள், அன்று காதலரை விரைந்து சென்று நோக்கின என்றும், இன்றோ அவை தாமாகவே அழுது கொண்டிருக்கின்றன என்றும், கண்களின் இந்தச் செய்கையை எண்ணிப் பார்த்தால், நகைத்தற்கு உரியதாக இருக்கிறது என்றும், தலைவி, பிரிவாற்றாமையைப் பொறுத்துக்கொண்டு, அழுகையை நிறுத்துமாறு கூறிய தோழிக்கு, மறுமொழியாகக் கூறுகிறாள். (1173)

4. பெயல்ஆற்றா நீர்உலந்த உண்கண் உயல்ஆற்றா
உய்வில்நோ யென்கண் நிறுத்து.

உண்கண், உயல்ஆற்றா, உய்வுஇல் நோய், என்கண், நிறுத்து, பெயல்ஆற்றா, நீர்உலந்த.

(பொ-ரை): மை தீட்டப்பட்ட கண்கள், நான் பிழைக்க முடியாதபடி, தீராத காதல் நோயை என்னிடம் நிறுத்தி வைத்துவிட்டுத் தாமும் அழமுடியாதபடி, நீர் வற்றிப் போய் இருக்கின்றன.

உண்கண் - மை தீட்டப்பட்ட கண்கள்; **உயல் ஆற்றா** - நான் பிழைக்க முடியாதபடி; **உய்வுஇல் நோய்** - தீராத காதல் நோய்; **என்கண்** - என்னிடத்தில்; **பெயல்ஆற்றா** - அழமுடியாதபடி; **நீர்** - கண்ணீர்; **உலந்த** - வற்றிப்போய் இருக்கின்றன.

(க-ரை): தன்னுடைய கண்கள், தாம் பிழைக்க முடியாதபடி, தீராத காதல்நோயைத் தன்னிடம் நிறுத்தி வைத்துவிட்டுக், கண்கள் தாமும் அழ முடியாதபடி நீர் வற்றிப்போய்க் கிடக்கின்றன என்று தலைவி, அழுவதால் கண்களின் அழகு கெடுகின்ற காரணத்தால், பிரிவாற்றாமையைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறிய தோழிக்குக் கூறுகிறாள். (1174)

**5. படல்ஆற்றா பைதல் உழக்கும் கடல்ஆற்றாக்
காமநோய் செய்தஎன் கண்.**

கடல்ஆற்றாக், காமநோய், செய்த, என்கண், படல் ஆற்றா, பைதல் உழக்கும்.

(பொ-ரை): அன்று, கடலும் தாங்க முடியாத அளவுக்கு எனக்குக் காதல் நோயை உண்டாக்கிய எனது கண்கள், அதன் காரணமாகவோ, என்னவோ இன்று உறங்க முடியாதனவாக ஆகித் துன்பத்தால் வருந்திக் கொண்டிருக்கின்றன.

கடல் ஆற்றா - கடலும் தாங்க முடியாத அளவுக்கு; **படல் ஆற்றா** - உறங்க முடியாதனவாக ஆகி; **பைதல்** - துன்பத்தால்; **உழக்கும்** - வருந்திக் கொண்டிருக்கும்.

(க-ரை): அன்று கடலும் தாங்க முடியாத அளவுக்குத் தனக்குக் காதல் நோயை உண்டாக்கக் காரணமாக இருந்த தனது கண்கள், இன்று தூங்க முடியாதனவாகவாகி வருந்திக் கொண்டிருக்கின்றன என்று தலைவி, அழுகையை நிறுத்திவிட்டுப் பிரிவு ஆற்றாமையைத் தணித்துக் கொள்வாயாக என்று கூறிய தோழிக்கு மறுமொழியாகக் கூறுகிறாள். (1175)

**6. ஓஒஇனிதே எமக்கு இந்நோய் செய்தகண்
தாஅம் இதன்பட் டது.**

எமக்கு, இந்நோய், செய்தகண், தாம், இதன்பட்டது, ஓஒ, இனிதுஏ!

(பொ-ரை): எனக்குக் காதல்நோயை உண்டாக்கி, என்னைத் துன்பத்திற்கு ஆளாக்கிய கண்கள், தாமும் இத்தகைய துன்பத்திற்கு ஆட்பட்டு வருந்துவது மிகவும் நல்லதேயாகும்.

தாம் - தாமும்; **இதன்பட்டது** - இத்தகைய துன்பத்திற்கு ஆட்பட்டு வருந்துவது; **இனிதுஏ** - நல்லதேயாகும்; **'ஓஒ'** - மிகுதி குறிக்கும் இடைச்சொல்.

(க-ரை): தனக்குக் காதல் நோயை உண்டாக்கித் தன்னைத் துன்பத்திற்கு ஆளாக்கியிருக்கும் தன்னுடைய கண்கள் தாமும், அழுது வருந்திக் கொண்டிருப்பதைப் பார்க்க, தனக்கு ஒரு பக்கம் வருத்தம் தீர்ந்தாற்போன்று இருக்கிறது என்று தலைவி, அழுகையை நிறுத்தி, வருந்துதலைப் பொறுத்துக்கொள்ளுமாறு கூறிய தோழிக்குக் கூறுகிறாள். (1176)

**7. உழந்துழந்து உள்நீர் அறுக விழைந்துஇழைந்து
வேண்டி அவர்க்கண்ட கண்.**

விழைந்து, இழைந்து, வேண்டி, அவர்க்கண்ட கண், உழந்து, உழந்து, உள்நீர், அறுக.

(பொ-ரை): அன்று மிகவும் விருப்பப்பட்டு, மனம் நெகிழ்ந்து விரும்பிக் காதலரைக்கண்ட கண்கள், இன்று உறக்கமில்லாத துன்பத்தால் வருந்திக் கண்ணீரும் அற்றுப் போகட்டும்.

விழைந்து - மிகவும் விரும்பி; **இழைந்து** - மனம் நெகிழ்ந்து; **வேண்டி** - விரும்பி; **அவர்** - காதலரை; **உழந்து உழந்து** - உறக்கமில்லாத துன்பத்தால் வருந்தி; **உள்நீர்** - கண்ணீர்; **அறுக** - அற்றுப் போகட்டும்.

(க-ரை): அன்று மிகவும் விரும்பி மனம் நெகிழ்ந்து, காதலரைக் கண்ட கண்கள், இன்று துயிலில்லாத துன்பத்தால், வருந்தி வருந்திக் கண்ணீரும் அற்றுப்போய் விளங்கட்டும் என்று தலைவி, பிரிவு ஆற்றாமையைப் பொறுத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்துகின்ற தோழியிடம் புலந்து கூறுகிறாள். (1177)

**8. பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்
காணாது அமைவில கண்.**

பேணாது, பெட்டார், உளர், மன் ஓ, கண், மற்றவர்க், காணாது, அமைவில.

(பொ-ரை): நெஞ்சினால் என்னை விரும்பாமல், சொல்லினால் மட்டும் விரும்பிய காதலர் இருக்கிறார் என்றால், அவரால் என்ன பயன்? அவரைக் காணாமல், கண்கள் அமைதிப்படுதல் இல்லையே.

பேணாது - உள்ளத்தால் என்னை விரும்பாமல்; **பெட்டார்** - சொல்லினால் மட்டும் விரும்பிய காதலர்; **உளர்** - இருக்கின்றார் என்றால், என்ன பயன்? **அமைவில** - அமைதிப்படுதல் இல்லையே.

(க-ரை): தன்னை நெஞ்சினால் விரும்பாமல், சொல்லினால் மட்டும் விரும்பிய காதலர் இருக்கின்றார் என்றால், அவரால் தனக்கு ஒரு பயனும் இல்லை என்றும், கண்கள் அவரைக் காணாமல் அமைதியுறாமல் இருக்கின்றன என்றும், தலைவி, பிரிவு ஆற்றாமையைப் பொறுத்துக்கொள்ளுமாறு சொல்லிய தோழிக்குக் கூறுகிறாள். (1178)

**9. வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்.**

கண், வாராக்கால், துஞ்சா; வரின் துஞ்சா; ஆயிடை, ஆர் அஞர், உற்றன.

(பொ-ரை): எனது கண்கள் காதலர் வராதபோதும், அவரது வரவினை எதிர்பார்த்துத் தூங்கமாட்டா; அவர் வரும்போதும் அவருடைய பிரிவுக்கு அஞ்சித் தூங்கமாட்டா; ஆதலால், இரு வகையிலும் மிகுந்த துன்பத்தையே அவை நுகர்ந்தன.

வாராக்கால் - வராதபோதும்; **துஞ்சா** - தூங்கமாட்டா; **வரின்** - வரும்போதும்; **ஆயிடை** - ஆக இருவகையிலும்; **ஆர்** - மிகுந்த; **அஞர்** - துன்பத்தை; **உற்றன** - நுகர்ந்தன; அடைந்தன.

(க-ரை): தன்னுடைய கண்கள், காதலர் வராதபோதும் தூங்குவதில்லை; அவர் வரும்போதும் பிரிந்து போய்விடுவாரோ என்று அஞ்சித் தூங்குவதில்லை; ஆக, இருவகைகளிலும் மிகுந்த துன்பத்தையே அவை அடைந்துவருகின்றன என்று தலைவி, பிரிவு ஆற்றாமையைப் பொறுத்துக் கொள்ள வேண்டும், தூங்க வேண்டும் என்று அறிவுறுத்திய தோழிக்குக் கூறுகிறாள். (1179)

**10. மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணா ரகத்து.**

அறைபறை, கண்ணார், எம்போல், அகத்து, மறைபெறல், ஊரார்க்கு, அரிதுஅன்று ஆல்.

(பொ-ரை): அறையப்படும் பறையைப்போல், துன்பத்தை வெளிப்படுத்தும் கண்களை உடைய என்னைப் போன்றவரின் உள்ளத்தில் உள்ள, மறைபொருளான செய்தியை அறிதல் என்பது ஊரார்க்கு அரிதானது அன்று.

அறைபறை - அறையப்படும் பறையைப் போல்; **கண்ணார்** - துன்பத்தை வெளிப்படுத்தும் கண்களை உடைய; **எம்போல் அகத்து** - என்னைப் போன்றவரின் உள்ளத்தில் உள்ள; **மறை** - மறைபொருளான செய்தியை; **பெறல்** - அறிதல் என்பது; **ஆல்** - அசை.

(க-ரை): என் போன்றோர், தம் உள்ளத்தில் எப்படிச் சில துன்பங்களை மறைத்து வைத்தாலும், அவற்றைப் பறை சாற்ற என்றே கண்கள் இருப்பதால், ஊரார் அவற்றை அறிந்துகொள்வதில் கடினம் ஏதும் ஏற்படுவதில்லை என்று தலைவி, காதலரை ஊரார் பழிக்காமல் இருக்க, அவரது கொடுமையை மறைக்க வேண்டும் என்று கூறிய தோழிக்குக் கூறுகிறாள். (1180)

119. பசப்புறு பருவரல்

பசப்புறு பருவரல் என்பது, பிரிவாற்றாமையால் தலைவியின் மேனியின்கண், பசுமை கலந்த பசலை நிற வேறுபாடு உண்டாகி, அதன் காரணமாகத் தலைவி வருந்தி, அதுபற்றித் தோழிக்குக் கூறுதல் எனப்படும்.

1. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்
பண்புயார்க்கு உரைக்கோ பிற.

நயந்தவர்க்கு, நல்காமை, நேர்ந்தேன்; பசந்த, என்பண்பு, யார்க்கு உரைக்கோ, பிற.

(பொ-ரை): என்னை அன்புடன் விரும்பி வேண்டிக் கொண்ட காதலர், பிரிந்து செல்வதற்கு, அன்று நான் உடன்பட்டு இசைந்தேன்; அப்பிரிவுத் துன்பத்தால், பசலை உற்ற என் தன்மையை இன்று நான் எவரிடம் போய் உரைப்பேன்?

நயந்தவர் - என்னை அன்புடன் விரும்பி வேண்டிக்கொண்ட காதலர்; **நல்காமை** - பிரிந்து செல்வதற்கு; **நேர்ந்தேன்** - நான் உடன்பட்டு இசைந்தேன்; **பசந்த** - பசலைஉற்ற; **பிற** - அசை.

(க-ரை): தன்னுடைய காதலர் பிரிந்து செல்வதற்கு அன்று இசைவு அளித்தேன் என்றும், அப்பிரிவாற்றாமையின் காரணமாகத் தன் உடலில் பசலை தோன்றிவிட்டது என்றும், இதனை இன்று தான் எவரிடம் போய்ச் சொல்ல முடியும் என்றும், தலைவி தனக்குள்ளேயே வருந்திக் கூறிக் கொள்கிறாள். (1181)

2. அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்துஎன்
மேனிமேல் ஊரும் பசப்பு.

பசப்பு, அவர்தந்தார், என்னும் தகையால், இவர்தந்து, என் மேனிமேல், ஊரும்.

(பொ-ரை): இந்தப் பசலை நிறமானது, என் காதலர் உண்டாக்கினார் என்ற செருக்கினால், என்னுடைய உடம்பின் மீது ஏறிக்கொண்டு, உடம்பு முழுவதும் பரவிச் செல்கின்றது.

பசப்பு - பசலை நிறமானது; **அவர்** - காதலர்; **தந்தார்** - உண்டாக்கினார்; **தகையால்** - செருக்கினால்; **இவர் தந்து** - ஏறிக்கொண்டு; **ஊரும்** - பரவிச் செல்கின்றது.

(க-ரை): பசலை நிறத்தைத் தனக்குக் காதலர் தந்தார் என்ற பெருமிதத்தின் ஒரே காரனத்தினால், அது உடல் முழுவதும் பரவி நிற்கும் உரிமையைப் பெற்றிருக்கிறது என்று தலைவி, பிரிவாற்றாமை காரணமாகப் பசலை ஏற்பட்டிருப்பதை நினைந்து, வருந்தித் தனக்குள்ளேயே கூறிக் கொள்கிறாள். (1182)

3. சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து.

அவர், நோயும், பசலையும், கைம்மாறா தந்து, நாணும், சாயலும், கொண்டார்.

(பொ-ரை): பிரிகின்றபோது, காதலர் காதல் நோயையும், பசலை நிறத்தையும் எனக்குக் கைம்மாறாகக் கொடுத்துவிட்டு, என்னிடமிருந்து என்னுடைய நாணத்தையும், மேனி அழகினையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்.

நோய் - காதல் நோயையும்; **பசலையும்** - பசலை நிறத்தையும்; **நாணும்** - நாணத்தையும்; **சாயலும்** - மேனி அழகினையும்; **கொண்டார்** - கொண்டு போய்விட்டார்.

(க-ரை): காதலர் தன்னுடைய நாணத்தையும், மேனி அழகையும் எடுத்துக்கொண்டு, அவற்றிற்குக் கைம்மாறாகத் தனக்குக் காதல் நோயையும், பசலையையும் தந்துவிட்டுப் போயிருக்கிறார் என்று தலைவி, அழகும் நாணும் அழியாமல் பிரிவு ஆற்றாமையைத் தாங்கிக்கொள்ள வேண்டும் என்று கூறிய தோழிக்கு மறுமொழியாகக் கூறுகிறாள். (1183)

4. உள்ளுவன் மன்யான் உரைப்பது அவர்திறமால்
கள்ளம் பிறவோ பசப்பு.

யான், அவர்திறமால், உள்ளுவன்; உரைப்பதுமன், பசப்பு, கள்ளம், பிறவோ?

(பொ-ரை): நான் எப்பொழுதும், அவரது நல்லியல்புகளைப் பற்றியே நினைக்கின்றேன்; நான் சொல்லிக் கொண்டிருப்பதும் அவரது நற்பண்புகளைப் பற்றித்தான்; அவ்வாறு இருந்தும், எனக்குப் பசலை வந்ததற்குக் காரணம், வஞ்சனையோ? வேறு எதுவுமோ? தெரியவில்லை.

திறமால் - அவரது நல்லியல்புகளை; **பசப்பு** - பசலை வந்ததற்குக் காரணம்; **கள்ளம்** - வஞ்சனையோ? **பிறவோ** - வேறு எதுவுமோ; **ஆல்** - அசை.

(க-ரை): தான் எப்பொழுதும், காதலரின் நல்லியல்புகளைப் பற்றியே நினைப்பதும், சொல்லுவதுமாக இருந்தும், தனக்குப் பசலை வந்தது எப்படியோ? என்று தலைவி வருந்தித் தோழியிடம் கூறுகிறாள். (1184)

5. உவக்காண்எம் காதலர் செல்வார் இவக்காண்என்
மேனி பசப்புஊர் வது.

எம் காதலர், உவக்காண், செல்வார்; இவக்காண், என் மேனி, பசப்பு, ஊர்வது.

(பொ-ரை): என்னுடைய காதலர், என்னைவிட்டுப் பிரிந்து, சிறிது தொலைவுதான் சென்றிருப்பார் என்றாலும், அதற்குள்ளாகவே இங்கே என் உடம்பில் பசலை நிறமானது படர்ந்து விட்டிருக்கிறதே.

உவக்காண் - உங்கே; அதாவது சிறிது தொலைவே; **இவக்காண்** - இங்கே; அதாவது இந்த இடத்திலே.

(க-ரை): தன்னுடைய காதலர், தன்னைவிட்டுப் பிரிந்து போயிருப்பது சிறிது தொலைவுதான் என்றாலும், இங்கே பசலை நிறமானது தனது உடம்பில் பரவி விட்டிருக்கிறதே என்று தலைவி, காதலர் பிரிந்து சென்றது சிறிது தொலைவாக இருந்தும், அந்தப் பிரிவை பொறுத்துக்கொள்ள முடியாதவளாய் இருக்கிறாயே என்று வினவிய தோழிக்கு, மறுமொழியாகக் கூறுகிறாள். (1185)

6. விளக்குஅற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்குஅற்றம் பார்க்கும் பசப்பு.

விளக்கு அற்றம், பார்க்கும், இருளேபோல், கொண்கன், முயக்கு அற்றம், பார்க்கும், பசப்பு.

(பொ-ரை): விளக்கின் ஒளி குறையும் நேரம் பார்த்துப் படருகின்ற இருளைப்போல, காதலரின் இறுகத் தழுவலானது தளரும் நேரம் பார்த்துப் படர வருகின்றது இப்பசலை நிறம்.

விளக்கு அற்றம் - விளக்கின் ஒளி குறையும் நேரம்; **பார்க்கும்** - பார்த்துப் படருகின்ற; **கொண்கன்** - காதலர்; **முயக்கு அற்றம்** - இறுகத் தழுவலானது தளரும் நேரம்; **பசப்பு** - பசலை நிறம்.

(க-ரை): விளக்கின் ஒளி குறையும் நேரம் பார்த்து, இருளானது எப்படிப் படருகின்றதோ, அப்படியே தன்னுடைய காதலரின் இறுகத் தழுவலானது தளரும் நேரம் பார்த்துப் பசலையானது, தன் மீது படர்ந்து விடுகின்றது என்று தலைவி, பிரிவு ஆற்றாமையைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிய தோழிக்குக் கூறுகிறாள். (1186)

**7. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு.**

புல்லிக்கிடந்தேன், புடை பெயர்ந்தேன்; அவ்வளவில், பசப்பு, அள்ளிக்கொள்வற்றே.

(பொ-ரை): முன்பு ஒரு நாள், காதலரைத் தழுவிக்கிடந்த நான், சிறிது புரண்டு விலகிப்படுத்தேன்; அந்த அளவிலேயே, பசலையானது என்னை முழுவதும் வாரிக்கொள்வது போலப் படரத் தொடங்கிற்று.

புல்லி - காதலரைத் தழுவி; **கிடந்தேன்** - கிடந்த நான்; **புடை பெயர்ந்தேன்** - சிறிது புரண்டு விலகிப்படுத்தேன்; **அள்ளிக் கொள்வற்றே** - என்னை முழுவதும் வாரிக்கொள்வது போல, படரத் தொடங்கிற்று.

(க-ரை): முன்பு ஒரு தடவை காதலரைத் தழுவிக் கிடந்த தான் சிறிது புரண்டு விலகிப் படுத்த காரணத்தாலேயே, பசலையானது உடனே வந்து தன் உடல் முழுவதும் பரவத் தொடங்கிற்று என்று தலைவி, தோழிக்குப் பிரிவை எந்த வகையிலும் பொறுத்துக்கொள்ள இயலவில்லை என்று கூறுகிறாள். (1187)

**8. பசந்தாள் இவள்என்பது அல்லால் இவளைத்
துறந்தார் அவர்என்பார் இல்.**

இவள் பசந்தாள், என்பது, அல்லால், இவளை, அவர் துறந்தார், என்பார், இல்.

(பொ-ரை): 'இந்தத் தலைவியானவள், பொறுத்திருக்காமல், பசலை நிறத்தை அடைந்தாளே!' என்று என்னைப் பழி கூறுகிறார்களேயல்லாமல், 'இவளைவிட்டுக் காதலர் பிரிந்து போய்விட்டாரே!' என்று அவரைக் குற்றங்கூறுபவர்கள் ஒருவரும் இல்லை.

இவள் - இந்தத் தலைவி; **பசந்தாள்** - பசலை நிறத்தை அடைந்தாள்; **அவர்** - காதலர்; **துறந்தார்** - பிரிந்து போய்விட்டார்; **இல்** - ஒருவரும் இல்லை.

(க-ரை): பசலை நிறத்தை அடைந்த தன்னைப் பார்த்து, ஊரார் பழி சொல்லுகிறார்களேயல்லாமல், தன்னைவிட்டுக் காதலர் பிரிந்து போய்விட்ட குற்றத்தைப்பற்றி எவரொருவரும் எதுவும் சொல்லாதிருக்கிறார்களே என்று தலைவி, பசலை நிறத்தைப் பெறக்கூடாது என்று கூறிய தோழிக்குக் கூறுகிறாள். (1188)

**9. பசக்கமன் பட்டாங்குஎன் மேனி நயப்பித்தார்
நன்னிலையர் ஆவர் எனின்.**

நயப்பித்தார், நன்னிலையர், ஆவர், எனின், என்மேனி, பட்டாங்கு; பசக்க, மன்.

(பொ-ரை): பிரிவின் கொடுமையை அறியாத என்னைப் பிரிவிற்கு உடன்படுத்திய காதலர், நல்ல தன்மையை உடையவர்தான் என்றால், என் உடம்பு உண்மையாகவே பசலை நிறத்தைப் பெறுவதாகட்டும்.

நயப்பித்தார் - என்னைப் பிரிவுக்கு உடன்படுத்திய காதலர்; **நன்னிலையர் ஆவர்** - நல்ல தன்மையை உடையவர்தான்; **எனின்** - என்றால்; **பட்டாங்கு** - உண்மையாகவே; **பசக்க** - பசலை நிறத்தைப் பெறுவதாக.

(க-ரை): பிரிவின் கொடுமையை அறியாத தன்னைப் பிரிவுக்கு உடன்படுத்திய காதலர், நல்லவர் ஆகார் என்ற காரணத்தால்தான், நான் பசலை நிறத்தைப் பெற்றது முறையானது ஆகாது என்று தலைவி, பிரிவு ஆற்றியிருக்கும்படி வற்புறுத்திய தோழிக்குக் கூறுகிறாள். (1189)

**10. பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின்.**

நயப்பித்தார், நல்காமை, தூற்றார், எனின், பசப்புஎனப், பேர்பெறுதல், நன்றே.

(பொ-ரை): என்னைப் பிரிவிற்கு உடன்படுத்திச் சென்ற காதலரது அருளற்ற தன்மையை, ஊரார் என் பசலையைப் பார்த்த பிறகும், தூற்ற மாட்டார்கள் என்றால், நான் பசப்பு என்னும் பெயரைப் பெறுதலுங்கூட நல்ல பொருத்தமானதாகும்.

நயப்பித்தார் - பிரிவிற்கு உடன்படுத்திச் சென்ற காதலர்; **நல்காமை** - அருளற்ற தன்மையை; **தூற்றார்** - தூற்றமாட்டார்கள்; **எனின்** - என்றால்; **நன்றே** - நல்ல பொருத்தமானது.

(க-ரை): தன்னைப் பிரிவிற்கு உடன்படுத்திச் சென்ற காதலர் அருளுடையவரல்லர் என்று தூற்றாமலிருப்பார்களேயானால், தன்னைப் பசந்தாள் என்று பெயரிட்டு அவர்கள் அழைப்பது பொருத்தமானதேயாகும் என்று தலைவி, பிரிவு ஆற்றும்படிக் கூறும் தோழிக்குக் கூறுகிறாள். (1190)

120. தனிப்படர் மிகுதி

தனிப்படர் மிகுதி என்பது, தலைவன் அன்பு செலுத்தாமல் இருப்பதாகவும், தலைவி, தான் மட்டுமே அவனிடம் காதலன்பு செலுத்துவதாகவும் நினைத்துத் தனது தனிமைத் துன்பத்தின் மிகுதியைக் கூறி வருந்துதல் எனப்படும்.

1. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழ்இல் கனி.

தாம் வீழ்வார், தம்வீழப் பெற்றவர், காமத்துக், காழ்இல், கனி, பெற்றாரே.

(பொ-ரை): தம்மால் விரும்பப்படுகின்ற காதலரால் விரும்பப் பெற்ற தலைவியரே, காதல் வாழ்க்கையின் பயனாகிய, விதை இல்லாத பழத்தைப் பெற்றவர் ஆவர்.

தாம் வீழ்வார் - தம்மால் விரும்பப்படுகின்ற; **தம் வீழப்பெற்றவர்** - விரும்பப்பெற்ற தலைவியரே; **காமத்து** - காதல் வாழ்க்கையின் பயனாகிய; **காழ் இல்** - விதை இல்லாத; **கனி** - பழத்தை; **பெற்றவர்** - பெற்றவர் ஆவர்.

(க-ரை): உலகில் காதலியரால் விரும்பப்படுகின்ற காதலரால் விரும்பப்படுகின்ற தலைவியரே காதல் வாழ்க்கையின் பயனைச் சிறப்பாகப் பெற்றவராவர் என்று தலைவி, காதலர் விரைவில் வருவார், வந்து இன்பம் தருவார் என்று கூறிய தோழிக்குக் கூறுகிறாள். (1191)

2. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி.

வீழ்வார்க்கு, வீழ்வார், அளிக்கும் அளி, வாழ்வார்க்கு, வானம், பயந்தற்று, ஆல்.

(பொ-ரை): தம்மை விரும்பி வாழும் காதலியருக்கு, அவரை விரும்பும் காதலர் உரிய காலத்தே வந்து, அன்பு செய்தால்தானே, தன்னையே எதிர்பார்த்து வாழ்வார்க்கு, வானம் பருவகாலத்தே மழை பெய்வது போன்றதாகும்.

வீழ்வார்க்கு - தம்மை விரும்பி வாழும் காதலியருக்கு; **வீழ்வார்** - அவரை விரும்பும் காதலர்; **அளிக்கும் அளி** - காலத்தே

வந்து அன்பு செய்தால்தானே; **பயந்தற்று** - பருவ காலத்தே மழை பெய்வது போன்றதாகும்; **ஆல்** - அசை.

(க-ரை): வானமானது பருவகாலத்தே மழை பெய்தல் என்பது, மழையை எதிர்பார்த்து வாழும் மக்களுக்கு எப்படிப் பயனுள்ளதாகுமோ, அப்படியே காதலர் உரிய காலத்தே வந்து தனக்கு அன்பு செய்தால்தானே அது பயனுள்ளதாக இருக்க முடியும் என்று தலைவி, காதலர் விரைவில் வருவார், அன்பு காட்டுவார் என்று கூறிய தோழிக்குக் கூறுகிறாள். (1192)

3. வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே
வாழுநம் என்னும் செருக்கு.

வீழுநர், வீழப்படுவார்க்கு, வாழுநம், என்னும் செருக்கு, அமையுமே.

(பொ-ரை): தம்மால் காதலிக்கப்படுகிற காதலரால், விரும்பப்படும் காதலியருக்குப் பிரிவுத் துன்பம் இருந்தபோதிலும், அவர் மீண்டும் வந்தபின் வாழுவோம் என்னும் பெருமிதம் இருக்கத்தானே செய்யும்.

வீழுநர் - தம்மால் காதலிக்கப்படுகின்ற காதலரால்; **வீழப்படுவார்க்கு** - விரும்பப்படும் காதலியருக்கு; **செருக்கு** - பெருமிதம்; **அமையுமே** - இருக்கத்தானே செய்யும்.

(க-ரை): தனக்குப் பிரிவுத் துன்பம் ஒரு பக்கம் இருந்தபோதிலும், தன்னால் விரும்பப்படுகின்ற காதலர், தன்னை விரும்பி, மீண்டும் அவர் வரும்போது, தான் வாழத்தானே செய்வேன் என்று தலைவி, காதலரின் அருளின்மையை மறைத்தலால் உலகத்தாரின் நன்மதிப்பைப் பெற்றிருக்கிறாய் என்று கூறிய தோழிக்குக் கூறுகிறாள். (1193)

4. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின்.

வீழப்படுவார், தாம், வீழ்வார், வீழப்படாஅர், எனின், கெழீஇயலர்.

(பொ-ரை): முதலில் காதலிக்கப்பட்ட தலைவியரும், அவர் தம்மால் விரும்பப்படுகின்ற காதலரால், பின்னர் விரும்பப்படாதவர் என்று ஆகிவிட்டால், காதலியர் துன்பம் பொருந்தியவர்களாக ஆகிவிடுகின்றனர்.

வீழப்படுவார் - முதலில் காதலிக்கப்பட்ட தலைவியரும்; **தாம்** - தம்மால்; **வீழ்வார்** - விரும்பப்படுகின்ற காதலரால்; **வீழப்படாஅர்** - பின்னால் விரும்பப்படாதவர்; **எனின்** - என்று ஆகிவிட்டால்; **கெழீஇயர்** - காதலியர் துன்பம் பொருந்தியவர்களாக ஆகி விடுகின்றனர்.

(க-ரை): முதலில் தலைவரால் காதலிக்கப்பட்ட தான், பின்னர், அவரால் விரும்பப்படவில்லை என்று நிலை ஏற்படுமேயானால், தான் துன்பத்திற்கு ஆளாவது இயல்புதானே என்று தலைவி, ஆறுதல் கூறிய தோழிக்குக் கூறுகிறாள். (1194)

5. நாம்காதல் கொண்டார் நமக்குஎவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை.

நாம், காதல்கொண்டார், தாம், காதல் கொள்ளாக்கடை, நமக்கு, எவன், செய்பவோ.

(பொ-ரை): என்னால் காதலிக்கப்படும் காதலர், நான் காதல் கொள்வதைப் போன்று, அவர் தாமும் என்னிடத்தில் காதல் கொள்ளாவிட்டால், அவர் எனக்கு என்ன இன்பத்தைச் செய்பவர் ஆவார்.

நாம் காதல் கொண்டார் - என்னால் காதலிக்கப்படும் காதலர்; **தாம் காதல் கொள்ளாக்கடை** - தாமும் என்னிடத்தில் காதல் கொள்ளாவிட்டால்; **நமக்குஎவன்** - எனக்கு என்ன இன்பத்தை; **செய்பவோ** - செய்பவர் ஆவார்.

(க-ரை): தன்னால் விரும்பப்படும் காதலர், தான் அவரிடத்தில் காதல் கொள்வதைப்போன்று அவர் தன்னிடத்தில் காதல் கொள்ளா விட்டால், அவரால் தான் எந்தவித இன்பத்தைப் பெறமுடியும் என்று தலைவி, ஆறுதல் படுத்திய தோழிக்குக் கூறுகிறாள். (1195)

6. ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது.

ஒருதலையான், காமம், இன்னாது; காப்போல, இருதலை யானும், இனிது.

(பொ-ரை): காதல் வேட்கையானது, ஆண் - பெண் இரு பாலருள், ஒருவரிடத்தில் மட்டும் உண்டானால், அது துன்பம் தருவதாக அமையும்; காவடித் தண்டின் சுமைகள்போல, இரண்டு பக்கங்களிலும் ஒத்திருக்குமேயானால், அக்காதலன்பும், இனிமை பயப்பதாக இருக்கும்.

காமம் காதல் வேட்கையானது; **ஒருதலையான்** - ஆண்-பெண் என்ற இருபாலருள் ஒருவரிடத்தில் மட்டும் உண்டானால்; **இன்னாது** - அது துன்பந்தருவதாக அமையும்; **கா** - காவடித் தண்டின் சுமைகள்; **இரு தலையானும்** - இரண்டு பக்கங்களிலும் ஒத்திருந்தால்; **இனிது** - காதலன்பு இனிமை பயப்பதாக இருக்கும்.

(க-ரை): காவடித்தண்டின் சுமைகள் எப்படி இரண்டு பக்கங்களிலும் ஒத்திருந்தால், அது பொருத்தமாக இருக்குமோ, அப்படியே காதலன்பும் ஆண் - பெண் என்ற இரு பாலரிடத்திலும் ஒத்திருக்க வேண்டும்; அவ்வாறின்றி அது ஒரு பாலரிடம் மட்டும் இருக்குமேயானால், துன்பந்தருவதாகத்தான் அமையும் என்று தலைவி, ஆறுதலை வற்புறுத்திய தோழிக்குக் கூறுகிறாள். (1196)

**7. பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான்.**

ஒருவர்கண், நின்று ஒழுகுவான், காமன், பருவரலும், பைதலும், காணான்கொல்.

(பொ-ரை): காதலன்பை நுகர்வதற்குரிய ஆண், பெண் என்ற இரு பாலரிடத்திலும், ஒப்ப நில்லாமல், காதலரிடத்தே நின்று வருத்துகின்ற காமன், என்னுடைய துன்ப மிகுதியையும், பசலை நோயையும் அறியமாட்டானோ?

ஒருவர்கண் - காதலரிடத்தே; **நின்று ஒழுகும்** - நின்று வருத்துகின்ற; **காமன்** - ஆண் பாலாகக் கூறப்படும் காதல்; அதாவது, பெண்பாலை (மகளிரை) வருத்தும், ஆண் பால் (ஆடவரின்) காதலைக் 'காமன்' என்று ஆண் பாலாகச் சொல்லுவதும், ஆண் பாலை (ஆடவரை) வருத்தும் பெண் பால் (மகளிரின்) காதலை, 'அணங்கு' (குறள் - 918, 1081, 1082) என்று சொல்லுவதும் நூல் மரபாகும்; **பருவரலும்** - துன்பமிகுதியையும்; **பைதலும்** - பசலை நோயையும்; **காணான்கொல்** - அறியமாட்டானோ?

(க-ரை): காதலர்கள் இருவரிடத்திலும் ஒப்ப நிற்க வேண்டிய காமன், காதலர் பக்கம் நின்று, என்னை வருத்தித் துன்பத்திற்கும், பசலை நோய்க்கும் ஆளாக்கியிருப்பது, எவ்வாறு முறையானது ஆகும் என்று தலைவி, ஆறுதல் பெறும்படி வற்புறுத்துகின்ற தோழிக்குக் கூறுகிறாள். (1197)

8. வீழ்வாரின் இன்சொற் பெறாஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

வீழ்வாரின், இன்சொல், பெறாஅது, வாழ்வாரின், வன்கணார், உலகத்து, இல்.

(பொ-ரை): தம்மால் விரும்பப்படுகின்ற காதலரிடமிருந்து வரக்கூடிய இனிய சொற்களைப் பெறாமல், பிரிவுத் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு, உயிர் வாழ்கின்ற மகளிர்போல வலிய நெஞ்சம் படைத்தவர்கள், இவ்வுலகத்தில் வேறுயாரும் இல்லை.

வீழ்வாரின் - தம்மால் விரும்பப்படுகின்ற காதலரிடமிருந்து; **வாழ்வாரின்** - உயிர்வாழ்கின்ற மகளிர் போல; **வன் கணார்** - வலிய நெஞ்சம் படைத்தவர்கள்; **இல்** - வேறுயாரும் இல்லை.

(க-ரை): தம்மால் பெரிதும் விரும்பப்படுகின்ற காதலரிடமிருந்து, எதிர்பார்க்கக்கூடிய இனிய சொற்களைப் பெறாமல், பிரிவுத்துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு வாழுகின்ற மகளிரைப் போன்று, மன உறுதி படைத்தவர்கள் உலகத்தில் வேறு யாரும் இருக்க முடியாது என்று தலைவி, தலைவனிடமிருந்து எந்தவொரு தூதுச் செய்தியும் கிடைக்கப்பெறாத நிலையில் கூறுகிறாள். (1198)

9. நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு.

நசைஇயார், நல்கார், எனினும், அவர்மாட்டு, இசையும், செவிக்கு, இனிய.

(பொ-ரை): என்னால் விரும்பப்பட்ட காதலர், என்பால் அன்பில்லாதவராக இப்பொழுது நடந்துகொள்பவராக இருந்த போதிலும், அவரிடமிருந்து வருகின்ற எந்தவோர் இசைவான சொல்லும், எனது செவிகளுக்கு இன்பம் தருவதாகும்.

நசைஇயார் - என்னால் விரும்பப்பட்ட காதலர்; **நல்கார் எனினும்** - என்னிடம் அன்பில்லாதவராக இப்பொழுது நடந்து கொண்ட போதிலும்; **அவர்மாட்டு** - அவரிடமிருந்து; **இசையும்** - எந்தவோர் இசைவான சொல்லும்; **இனிய** - இன்பம் தருவதாகும்.

(க-ரை): தன்னால் விரும்பப்பட்ட காதலர், தன்னிடத்தில் அன்பில்லாதவராக இப்பொழுது நடந்துகொண்ட போதிலும், அவரிடமிருந்து எந்தவோர் இசைவான செய்தி தனக்குக் கிடைக்கப்பெற்றாமலும், அது இன்பம் தருவதாகவே இருக்கும் என்று

தலைவி, பிரிந்துசென்ற தலைவனிடமிருந்து எந்தவொரு செய்தியும் வரப்பெறாத நிலையில் கூறுகிறாள். (1199)

**10. உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு.**

நெஞ்சு, உறார்க்கு, உறுநோய், உரைப்பாய், கடலைச் செறாஅஅய், வாழிய.

(பொ-ரை): நெஞ்சே! அன்பில்லாத காதலருக்கு, நீ உற்ற துன்பத்தை உரைக்கின்றாய். அச்செயலைவிட்டு, உனக்குத் துன்பம் உண்டாக்குகின்ற கடலைத் தூர்க்க முயல்வாயாக! அது எளிது. நீ வாழ்வாயாக!

உறார்க்கு - அன்பில்லாத காதலருக்கு; **உறுநோய்** - நீ உற்ற துன்பத்தை; **உரைப்பாய்** - உரைக்கின்றாய்; **கடலை** - துன்பம் உண்டாக்குகின்ற கடலை; **செறாஅஅய்** - தூர்க்கமுயல்வாயாக.

(க-ரை): அன்பில்லாத காதலருக்குத் தான் உற்ற துன்பத்தை உரைக்கின்றதைக் காட்டிலும், அந்தத் துன்பத்தை நீக்குவதில் ஈடுபடுவது எவ்வளவோ நலம் பயக்கும் என்று, தலைவி, தலைவரிடமிருந்து எந்தவொரு தூதுச் செய்தியும் வராத நிலையில் தன்னுடைய நெஞ்சுக்குத் தானே கூறிக்கொள்கிறாள். (1200)

121. நினைந்தவர் புலம்பல்

நினைந்தவர் புலம்பல் என்பது, தலைவன் பிரிந்திருக்கும் நிலையில், தலைவனும், தலைவியும் முன்பு பெற்ற இன்பத்தினை நினைந்து, தனித்திருந்து, புலம்புதல் எனப் படும்.

1. உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது.

உள்ளினும், தீராப், பெருமகிழ், செய்தலால், கள்ளினும், காமம், இனிது.

(பொ-ரை): முந்தைய நாட்களில் நுகர்ந்த துன்பத்தினைக், காதலியைவிட்டுப் பிரிந்திருக்கும் இந்த நேரத்தில் நினைத்துக் கொண்டாலும், நீங்காத மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்குவதால், உண்டால் மட்டுமே மகிழ்ச்சியைத்தரும் கள்ளைவிட, காதலானது மிக்க இன்பம் கொடுப்பதாக இருக்கின்றது.

உள்ளினும் - இந்த நேரத்தில் நினைத்துக்கொண்டாலும்; **தீரா** - நீங்காத; **பெருமகிழ்** - மிகுந்த மகிழ்ச்சியை; **செய்தலால்** - உண்டாக்குவதால்; **கள்ளினும்** - உண்டால் மட்டும் மகிழ்ச்சியைத் தரும் கள்ளைவிட; **காமம்** - காதலானது; **இனிது** - இன்பம் கொடுப்பதாக இருக்கிறது.

(க-ரை): முந்தைய நாட்களில் தான் நுகர்ந்த இன்பத்தினைப் பிரிவு நேர்ந்திருக்கும் இந்த நேரத்தில் நினைத்துக்கொண்டு பார்த்தால், உண்டால் மட்டுமே மகிழ்ச்சியைத்தரும் கள்ளினைவிட, காதலானது மிகுந்த இன்பத்தைத் தனக்குத் தருவதாக இருக்கிறது என்று தலைவன், தான் தலைவியை மறக்கவில்லை என்பதை நினைவு படுத்திப் பாங்கனுக்குக் கூறுகிறான். (1201)

2. எனைத்துஒன்று இனிதேகாண் காமம்தான் வீழ்வார்
நினைப்ப வருவதுஒன்று இல்.

தாம் வீழ்வார், நினைப்ப, வருவது ஒன்று, இல்; காமம், எனைத்து, இனிதே, ஒன்று, காண்.

(பொ-ரை): தன்னால் விரும்பப்படுகின்ற காதலியைப் பிரிவின்கண் நினைத்துக்கொண்டாலும், அப்படி நினைப்பதால், துன்பம் வருவது ஒன்றுமில்லை; ஆதலால், காதலானது, எந்த

வகையில் பார்த்தாலும் இன்பந்தருகின்ற ஒன்றாகவே இருப்பதைக் காணலாம்.

தாம் - தன்னால்; **வீழ்வார்** - விரும்பப்படுகின்ற காதலியை; **நினைப்ப** - பிரிவின்கண் நினைத்துக்கொண்டாலும்; **வருவது ஒன்று இல்** - துன்பம் வருவது ஒன்றும் இல்லை; **காமம்** - காதலானது; **எனைத்து** - எந்த வகையில் பார்த்தாலும்; **இனிதே** - இன்பந்தருகின்ற.

(க-ரை): தன்னால் விரும்பப்படுகின்ற காதலியைப் பிரிவின்கண் நினைத்துக் கொண்டாலும், அந்த நினைவு துன்பம் ஏதும் தருவதில்லை என்றும், எந்த வகையில் பார்த்தாலும், காதலானது இன்பந்தருவதாகவே இருக்கிறது என்றும், தலைவன், தான் தலைவியை மறக்கவில்லை என்பதை உணர்த்தப், பாங்கனுக்குக் கூறுகிறான். (1202)

3. நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்.

தும்மல், சினைப்பது போன்று, கெடும்; நினைப்பவர் போன்று, நினையார் கொல்.

(பொ-ரை): எனக்குத் தும்மல் உண்டாவது போன்று தோன்றி, உடனே வராமல் அடங்கிவிடுகின்றது; அதற்குக் காரணம், காதலர் என்னை நினைப்பவர் போலக்காட்டி, உண்மையில் நினைக்காமல் இருந்துவிடுவார் போலிருக்கிறது.

தும்மல் - தும்மலானது; **சினைப்பதுபோன்று** - உண்டாவது போலத் தோன்றி; **கெடும்** - வராமல் அடங்கிவிடுகின்றது; **நினைப்பவர்** - காதலர் என்னை நினைப்பவர் போலக் காட்டி; **நினையார்கொல்** - நினைக்காமல் இருந்துவிடுவார் போலிருக்கிறது.

(க-ரை): தனக்குத் தும்மல் வருவதுபோல் தோன்றினாலும், வராமல் நின்றுவிடுகிறது என்றும், அதற்குக் காரணம், காதலர் தன்னை நினைப்பவர்போலக் காட்டி, நினைக்காமல் இருந்து விடுகின்றாரோ என்று, தலைவனை நினைந்து வருந்துகின்ற தலைவி, தோழிக்குக் கூறுகிறாள். (1203)

4. யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத்து எம்நெஞ்சத்து
ஓஒ உளரே அவர்.

எம்நெஞ்சத்து, அவர், ஓஒ, உளரே, அவர் நெஞ்சத்து, யாமும், உளேங்கொல்.

(பொ-ரை): என்னுடைய நெஞ்சில் காதலராகிய அவர், எப்பொழுதும் இருந்துகொண்டேயிருக்கின்றார்; அது போல, அவருடைய நெஞ்சில் நானும் அவ்வாறு இருக்கின்றேனோ? இல்லையோ? தெரியவில்லை.

அவர் - காதலராகிய அவர்; **உளர்** - எப்பொழுதும் இருந்து கொண்டேயிருக்கின்றார்; **உளேங்கொல்** - இருக்கின்றேனோ? இல்லையோ? தெரியவில்லை!

(க-ரை): காதலர் தன்னுடைய நெஞ்சில் எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிறார் என்றும், அதுபோலத் தானும் அவருடைய நெஞ்சில் இருக்கிறேனோ? இல்லையோ? தெரியவில்லையே? என்றும் தலைவனை நினைந்து வருந்துகின்ற தலைவி, தோழிக்குக் கூறுகிறாள். (1204)

**5. தம்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எம்நெஞ்சத்து ஓவா வரல்.**

தம்நெஞ்சத்து, எம்மைக், கடிகொண்டார், எம்நெஞ்சத்து, ஓவா வரல், நாணார்கொல்.

(பொ-ரை): தம்முடைய நெஞ்சில், நான் புகாதபடி காவல் செய்து கொண்டிருக்கும் காதலர், என்னுடைய நெஞ்சில் மட்டும், இடைவிடாது வந்து இருப்பதற்கு, நாண மாட்டார் போலும்.

கடிகொண்டார் - புகாதபடி காவல் செய்து கொண்டிருக்கும் காதலர்; **ஓவா** - இடைவிடாது; **வரல்** - வந்து இருப்பதற்கு; **நாணார்கொல்** - நாணமாட்டார் போலும்.

(க-ரை): தம்முடைய நெஞ்சில் எனக்கு இடங்கொடுக்காமல் இருக்கும் காதலர் மட்டும், என்னுடைய நெஞ்சில் வந்து ஓயாமல் இருப்பதற்கு, அவர் வெட்கப்படவில்லையே! என்று தலைவனை நினைந்து வருந்தும் தலைவி, தோழிக்குக் கூறுகிறாள். (1205)

**6. மற்றியான் என்னுளேன் மன்னோ அவரொடுயான்
உற்றநாள் உள்ள உளேன்.**

மற்றி, யான், என்னுளேன், மன்னோ; அவரொடு, யான், உற்றநாள், உள்ள, உளேன்.

(பொ-ரை): நான் எவ்வாறு உயிர் வாழ்கின்றேன் என்றால், காதலரோடு கூடி இன்புற்றிருந்த நாட்களை நினைத்துக் கொண்டிருப்பதால், நான் இப்பொழுதும் உயிரோடு இருந்து கொண்டிருக்கிறேன்.

என்னுளேன் - எப்படி உயிர் வாழ்கின்றேன் என்றால்; **உற்ற நாள்** - கூடி இன்புற்றிருந்த நாட்களை; **உள்ள** - நினைத்துக்கொண்டு இருப்பதால்; **உளேன்** - இப்பொழுதும் உயிரோடு இருந்து கொண்டிருக்கிறேன்; மன், ஓ - ஒழியிசை.

(க-ரை): தான் உயிரோடு இருந்து கொண்டிருப்பது எவ்வாறு என்றால், காதலரோடு கூடி இன்புற்ற நாட்களை நினைத்துக் கொள்வதால், தன்னால் இப்பொழுதும் உயிர்வாழ முடிகிறது என்று தலைவி, தலைவனது பிரிவால் ஏற்பட்டுள்ள துன்பத்தை மறத்தல் வேண்டும் என்று அறிவுறுத்திய தோழிக்குக் கூறுகிறாள். (1206)

7. மறப்பின் எவனாவன் மற்கொல் மறப்புஅறியேன் உள்ளினும் உள்ளம் சுடும்.

உள்ளினும், உள்ளம்சுடும்; மறப்பு, அறியேன்; மறப்பின், எவன்ஆவன், மன்கொல்.

(பொ-ரை): காதலரின் பிரிவை நான் இப்பொழுது நினைத்துக் கொண்டாலும், எனது உள்ளம் சுடவே செய்கின்றது; அதனால், நான் முன்பு நுகர்ந்த இன்பத்தை மறப்பதே இல்லை; பிரிவு ஆற்ற முடியாத நான், அந்த இன்பத்தை மறந்துவிட்டால், நான் எவ்வாறு உயிர்வாழ முடியும்?

உள்ளினும் - காதலரின் பிரிவை நான் இப்பொழுது நினைத்துக் கொண்டாலும்; **மறப்பு அறியேன்** - முன்பு நுகர்ந்த இன்பத்தை நான் மறப்பதே இல்லை; **மறப்பின்** - அந்த இன்பத்தை நான் மறந்துவிட்டால்; **எவன் ஆவன்** - எப்படி உயிர்வாழ முடியும்; **மன்** - ஒழியிசை; **கொல்** - அசை.

(க-ரை): காதலரின் பிரிவைத் தான் இப்பொழுது நினைத்துக் கொண்டாலும், தனது உள்ளம் சுடுகின்றது என்றாலும், அதனை முன்பு தான் நுகர்ந்த இன்பத்தை நினைவுபடுத்திக் கொள்வதன் மூலம் மறப்பதாகவும், இல்லையென்றால், தான் உயிர் வாழ்வது என்பது கடினமாகிவிடும் என்று தலைவி, தலைவன் பிரிந்ததற்கு வருந்தாமல் அதனை மறத்தல் வேண்டும் என்று கூறிய தோழிக்குக் கூறுகிறாள். (1207)

8. எனைத்து நினைப்பினும் காயார் அனைத்துஅன்றோ காதலர் செய்யும் சிறப்பு.

எனைத்து, நினைப்பினும், காயார்; காதலர், செய்யும், சிறப்பு, அனைத்துஅன்றோ.

(பொ-ரை): நான் காதலரைப்பற்றி எவ்வளவு மிகுதியாக நினைத்தாலும், அதற்காக, அவர் என்மேல் சினங்கொள்ளாமல் இருக்கிறார்; காதலர் எனக்குச் செய்யக்கூடிய சிறப்பான உதவி, அத்தன்மையது அல்லவா?

எனைத்து நினைப்பினும் - காதலரைப்பற்றி எவ்வளவு மிகுதியாக நினைத்தாலும்; **காயார்** - அதற்காக அவர் சினங்கொள்ள மாட்டார்; **செய்யும் சிறப்பு** - செய்யக்கூடிய சிறப்பான உதவி.

(க-ரை): தான் காதலரைப்பற்றி மிகுதியாக நினைப்பதாகவும், அதற்காக அவர் தன் மேல் சினங்கொள்ளாமல் இருக்கிறார் என்றும், அதுவே, அவர் தனக்குச் செய்யக்கூடிய சிறப்பான பேருதவியாகும் என்றும், தலைவி, தலைவன் காதலியின் துன்பம் அறிந்துவந்து இன்பம் தருவார் என்று கூறிய தோழிக்குக் கூறுகிறாள். (1208)

9. விளியும்என் இன்உயிர் வேறல்லம் என்பார் அளியின்மை ஆற்ற நினைந்து.

வேறல்ல, என்பார், அளிஇன்மை, ஆற்ற நினைந்து, என், இன்உயிர், விளியும்.

(பொ-ரை): நாம் இருவரும் வேறுவேறு அல்லர் என்று அன்று சொன்ன காதலர், இன்று இரக்கம் இல்லாதவராக இருத்தலை மிகவும் நினைந்து, என் இனிய உயிரானது, சிறிதுசிறிதாக அழிந்து கொண்டிருக்கின்றது.

அளி இன்மை - இரக்கம் இல்லாதவராக இருத்தலை; **விளியும்** - சிறிது சிறிதாக அழிந்து கொண்டிருக்கின்றது.

(க-ரை): காதலரும் தானும் வேறுவேறு அல்லர் என்று கூறிய காதலர், இன்று இரக்கம் இல்லாதவராக இருக்கிறாரே என்று, தான் நினைக்க நினைக்க, தனது உயிரானது, சிறிது சிறிதாக அழிந்து கொண்டிருக்கிறது என்று தலைவி, பிரிவை ஆற்றியிருக்குமாறு கூறுகின்ற தோழிக்குக் கூறுகிறாள். (1209)

10. விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப் படாஅதி வாழி மதி.

மதி, விடாது, சென்றாரைக், கண்ணினால், காணப், படாஅதி, வாழி.

(பொ-ரை): மதியே! என் நெஞ்சில் இடைவிடாது இருந்து, இப்பொழுது என்னைவிட்டுப் பிரிந்து சென்ற காதலர், தம் கண்களினால், என்னைப்பற்றிய நினைவு தோன்ற அவர் காணும்படியாக, நீ என்றும் மறையாது இருப்பாயாக! அதனால், நீ வாழ்வாயாக!

விடாது சென்றாரை - என் நெஞ்சில் இடைவிடாது இருந்து, இப்பொழுது என்னைவிட்டுப் பிரிந்து சென்ற காதலர்; **படாஅதி** - நீ என்றும் மறையாது இருப்பாயாக; **வாழி** - வாழ்வாயாக.

(க-ரை): தன் நெஞ்சில் என்றும் இருந்து, இப்பொழுது பிரிந்து சென்றுவிட்ட காதலரின் கண்களில், தன்னுடைய நினைவு தோன்றும்படி மதியானது என்றும் மறையாதிருக்க வேண்டும் என்று தலைவி, பிரிவு ஆற்றாது வருந்தும்போது மதியைக் கண்டு கூறுகிறாள். (1210)

122. கனவுநிலை உரைத்தல்

கனவுநிலை உரைத்தல் என்பது, தலைவியானவள் தூங்காமல் தூங்கும்போது, நனவின்கண் ஏற்படும் காதல் மிகுதியால் காணும் கனவினது நிலைமையைப் பற்றித் தோழிக்குக் கூறுதல் எனப்படும்.

1. காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து.

காதலர், தூதொடு, வந்த, கனவினுக்கு, யாதுவிருந்து, செய்வேன் கொல்.

(பொ-ரை): நான் காதலரின் பிரிவால் வருந்தி, உறங்காமல் உறங்கிக் கொண்டிருந்தபோது, காதலர் அனுப்பிய தூதினைக் கொண்டு என்னிடம் வந்த கனவுக்கு, நான் எந்தவகையில் உரிய விருந்து அளிக்கவல்லேன் ஆவேன்.

தூதொடுவந்த - தூதினைக் கொண்டு என்னிடம் வந்த; **யாதுவிருந்து** - நான் எந்தவகையில் உரிய விருந்து; **செய்வேன்** - அளிக்க வல்லேன்.

(க-ரை): பிரிந்து சென்ற காதலர் அனுப்பி வைத்த தூதினைக் கொண்டுவந்த தன் கனவுக்கு, எப்படிப்பட்ட விருந்து கொடுத்து அதனைப்போற்றப் போகிறேன் என்று, தலைவி, தலைவனிடமிருந்து தூதுவரக் கனவில் கண்டதாகத் தோழிக்குக் கூறுகிறாள். (1211)

2. கயலுண்கண் யான்இரப்பத் துஞ்சின் கலந்தார்க்கு
உயலுண்மை சாற்றுவேன் மன்.

கயல்உண், கண், யான் இரப்பத், துஞ்சின், கலந்தார்க்கு, உயல்உண்மை, சாற்றுவேன், மன்.

(பொ-ரை): கயல் மீனைப் போல் உள்ள, மை தீட்டப்பட்ட எனது கண்கள், நான் வேண்டிக் கொள்வதற்கு இணங்கத் துயில் கொள்ளுமானால், அப்போது என் கனவில்வரும் காதலருக்கு, நான் உயிர் பிழைத்திருப்பதன் உண்மைத்தன்மையை எடுத்துரைப்பேன்.

கயல் - கயல் மீனைப்போல உள்ள; **உண்கண்** - மை தீட்டப்பட்ட எனது கண்கள்; **இரப்ப** - நான் வேண்டிக்கொள்வதற்கு இணங்க; **துஞ்சின்** - துயில்கொள்ளுமேயானால்; **கலந்தார்க்கு** -

அப்போது கனவில் வரும் காதலருக்கு; **உயல்** உயிர் பிழைத்திருப்பதன்; **சாற்றுவேன்** - எடுத்துரைப்பேன்.

(க-ரை): தன்னுடைய கண்கள், தன் விருப்பத்திற்கிணங்கத் தூங்குமேயானால், அப்பொழுது தன்னுடைய கனவில் வரும் காதலரிடம் தான் உயிர் பிழைத்திருப்பதன் காரணத்தையெல்லாம் கூறுவேன் என்று தலைவி, தலைவனுக்குத் தூதுவிடக் கருதிய நிலையில் தோழிக்குக் கூறுகிறாள். (1212)

3. நனவினான் நல்கா தவரைக் கனவினான்
காண்டலின் உண்டுஎன் உயிர்.

நனவினான், நல்காதவரைக் கனவினான், காண்டலின், என்உயிர், உண்டு.

(பொ-ரை): நனவுக்காலத்தில் வந்து, என்னிடம் அன்பு காட்டாத காதலரைக் கனவுக் காலத்திலாவது நான் காணுவதால்தான், என்னுடைய உயிரானது இன்னும் நிலைத்திருக்கின்றது.

நனவினான் - நனவுக்காலத்தில் வந்து; **நல்காதவரை** - என்னிடம் அன்பு காட்டாதவரை; **கனவினான்** - கனவுக் காலத்திலாவது; **காண்டலின்** - நான் காணுவதால்தான்.

(க-ரை): நனவுக்காலத்தில், தன் காதலரைக் காண முடியா விட்டாலும், கனவுக்காலத்திலாவது அவரைக் காணுவதற்கான வாய்ப்பு ஏற்படுவதால், தான் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று தலைவி, அவள் ஆற்றாத்தன்மையைச் சொல்லி வருந்திய தோழிக்குக் கூறுகிறாள். (1213)

4. கனவினான் உண்டாகும் காமம் நனவினான்
நல்காரை நாடித் தரற்கு.

நனவினான், நல்காரை, நாடித்தரற்கு, கனவினான், காமம் உண்டாகும்.

(பொ-ரை): நனவுக்காலத்தில் என்னிடம் வந்து, அன்பு காட்டாத காதலரை, அவர் சென்ற இடத்திற்குத் தேடிப்போய், அவரைக் கொண்டு வந்து என்னிடத்தில் தருவதால், கனவால் எனக்குக் காதல் இன்பம் உண்டாகிறது.

நனவினான் - நனவுக்காலத்தில் என்னிடம் வந்து; **நல்காரை** - அன்புகாட்டாத காதலரை; **நாடி** - தேடிப்போய் அவரைக் கொண்டுவந்து; **தரற்கு** - என்னிடம் தருதலால்; **கனவினான்** - கனவினால்; **காமம்** - காதலின்பம்.

(க-ரை): நனவுக்காலத்தில் தன்னிடம் வந்து அன்புச் செலுத்தாத காதலரைத் தேடிக்கண்டு பிடித்துத் தன்னிடம் கொண்டு வந்து தருவதால், கனவினால், தனக்குக் காதல் இன்பம் உண்டாகிறது என்று தலைவி, அவள் பிரிவு ஆற்றாமையைத் தாங்கமாட்டாள் என்று சொல்லி வருந்திய தோழிக்குக் கூறுகிறாள். (1214)

**5. நனவினான் கண்டதூஉம் ஆங்கே கனவும்தான்
கண்ட பொழுதே இனிது.**

நனவினான், கண்டதூஉம், ஆங்கே, கனவும், தான், கண்ட பொழுதே, இனிது.

(பொ-ரை): பிரிவதற்கு முன்பு, நனவின்கண், காதலரைக் கண்டு நுகர்ந்த இன்பம், கண்ட அப்போது இனிமை பயப்பதாகவே இருந்தது. இன்று, கனவின்கண்ணும், காதலரைக்கண்டு நுகரும் இன்பமும் தான் காணும் இப்போதும், இனிமை பயப்பதாகவே இருக்கிறது.

நனவினான் - பிரிவதற்கு முன்பு நனவின்கண்; **கண்டதூஉம்** - காதலரைக்கண்டு நுகர்ந்த இன்பம்; **ஆங்கே** - கண்ட அப்போது இனிமை பயப்பதாக இருந்தது; **கனவும்தான்** - கனவின்கண்ணும்; **கண்டபொழுதே** - காதலரைக் கண்டு நுகர்ந்த இன்பமும், காணும் இப்போதும்.

(க-ரை): முன்பு நனவின்கண் காதலரைக் கண்ட போது, தான் எப்படிப்பட்ட இன்பத்தை நுகர்ந்தேனோ, அப்படிப்பட்ட இன்பத்தைத்தான் அவரைக் கனவின்கண் தான் காணும் இப்போதும் நுகருகிறேன் என்று, தலைவி அவளின் நிலைகண்டு வருந்திய தோழிக்குக் கூறுகிறாள். (1215)

**6. நனவுஎன ஒன்றுஇல்லை ஆயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன்.**

நனவுஎன, ஒன்று, இல்லைஆயின், கனவினால், காதலர், நீங்கலர் மன்.

(பொ-ரை): நனவு என்று சொல்லப்படுகின்ற ஒன்று இல்லாதிருக்குமேயானால், கனவில் வந்து என்னுடன் கூடிய காதலர், என்னைவிட்டுப் பிரியவே மாட்டார்.

என ஒன்று - என்று சொல்லப்படுகின்ற ஒன்று; **கனவினால்** - கனவில்வந்து; **காதலர்** - என்னுடன் கூடிய காதலர்; **நீங்கலர்** - பிரியவே மாட்டார்; **மன்** - ஒழியிசை.

(க-ரை): நனவு என்ற ஒன்று இல்லாதிருக்குமேயானால், கனவில்வந்து தன்னுடன் கூடிய காதலர், தன்னைவிட்டு, ஒருகாலும் பிரியவேமாட்டார் என்று, தலைவி, அவள் பிரிவு ஆற்றாமையைப் பொறுத்துக்கொள்ள மாட்டாள் என்று சொல்லி வருந்திய தோழிக்குக் கூறுகிறாள். (1216)

7. நனவினான் நல்காக் கொடியார் கனவினான்
என்எம்மைப் பீழிப் பது.

நனவினான், நல்காக், கொடியார், கனவினான், எம்மைப், பீழிப்பது, என்.

(பொ-ரை): நனவுக்காலத்தில் வந்து, என்னிடம் அன்பு காட்டாத, கொடுமை வாய்ந்த காதலர், கனவில் மட்டும் அடிக்கடி வந்து என்னை வருத்துவது என்ன காரணத்தினால்?

நனவினான் - நனவுக்காலத்தில் வந்து; **நல்கா** - என்னிடம் அன்பு காட்டாத; **கொடியார்** - கொடுமை வாய்ந்த காதலர்; **கனவினான்** - கனவில்; **பீழிப்பது** - என்னை வருத்துவது.

(க-ரை): நனவுக்காலத்தில் வந்து, தன்னிடம் அன்பு காட்டாத காதலர், கனவில் மட்டும் அடிக்கடி வந்து தன்னை வருத்துவது என்ன காரணம் பற்றியோ? என்று தலைவி, அவளின் ஆற்றாமை கண்டு வருந்திச் சொல்லிய தோழிக்குக் கூறுகிறாள். (1217)

8. துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து.

துஞ்சுங்கால், தோள் மேலராகி, விழிக்குங்கால், விரைந்து, நெஞ்சத்தவர், ஆவர்.

(பொ-ரை): நான் தூங்குகின்றபோது, காதலர் கனவில் வந்து என் தோள்களின் மேல் இருக்கின்றவராய் விளங்கி, நான் விழித்துக் கொள்ளும்போது, அவர் கனவிலிருந்து மறைந்து, விரைந்து வந்து என் நெஞ்சில் உள்ளவராக ஆகிவிடுகின்றார்.

துஞ்சுங்கால் - நான் தூங்குகின்றபோது; **நெஞ்சத்தவர்** - நெஞ்சில் உள்ளவராக; **ஆவர்** - ஆகிவிடுகின்றார்.

(க-ரை): தான் தூங்குகின்றபோது, கனவில்வந்து தனது தோள்களின்மேல் கிடக்கும் காதலர், தான் விழித்துக் கொள்ளும் போது, கனவிலிருந்து மறைந்து, விரைந்து வந்து தனது நெஞ்சில் தங்கிவிடுகின்றார் என்று தலைவி, தலைவனை இயற்பழித்துக் கூறிய தோழிக்குக் கூறுகிறாள். (1218)

**9. நனவினான் நல்காரை நோவர் கனவினான்
காதலர்க் காணா தவர்.**

கனவினான், காதலர்க் காணாதவர், நனவினான், நல்காரை, நோவர்.

(பொ-ரை): கனவின்கண், தம் காதலரைக் கண்டறிய முடியாத மகளிர்தாம், நனவுக்காலத்தில் வந்து அன்பு காட்டாத காதலரை, அன்பில்லாதவர்கள் என்று நொந்துகொள்வார்கள்.

கனவினான் - கனவின்கண்; **காணாதவர்** - கண்டறிய முடியாத மகளிர்தாம்; **நனவினான்** - நனவுக்காலத்தில்; **நல்காரை** - அன்புகாட்டாத காதலரை; **நோவர்** - அன்பில்லாதவர்கள் என்று நொந்துகொள்வார்கள்.

(க-ரை): கனவின்கண் தம் காதலரைக் கண்டறிய முடியாத மகளிர்தாம், நனவுக்காலத்தில் தம்மிடம் அன்புகாட்டாதவர்கள் என்று, தம் காதலரை நொந்துகொள்வார்கள் என்று, தலைவி, தலைவனை இயற்பழித்த தோழிக்குக் கூறுகிறாள். (1219)

**10. நனவினான் நம்நீத்தார் என்பர் கனவினான்
காணார்கொல் இவ்வூ ரவர்.**

இவ்வூரவர், நனவினான், நம்நீத்தார், என்பர், கனவினான், காணார்கொல்.

(பொ-ரை): இந்த ஊரிலுள்ள மகளிர்பலர், நனவினில் நம்மைவிட்டு நம் காதலர் பிரிந்துவிட்டார் என்று கூறுகின்றனர்; அந்தக் காதலர் அம்மகளிர்தம் கனவில் எப்பொழுதும் வருவதைக் காணும் வாய்ப்பை அவர்கள் பெறவில்லை போலும்.

இவ்வூரவர் - இவ்வூரிலுள்ள மகளிர் பலர்; **நனவினால்** - நனவினில்; **கனவினான்** - கனவில் எப்பொழுதும் வருவதை; **காணார் கொல்** - காணும் வாய்ப்பைப் பெறவில்லை போலும்.

(க-ரை): தம் கனவில் தன் காதலர் வருவதைக் காணும் வாய்ப்பைப் பெற முடியாத மகளிர்தாம், நனவினில் தன்னை விட்டுக் காதலர் பிரிந்து போய்விட்டார் என்று குறை கூறிக் கொண்டிருப்பார்கள் என்று தலைவி, தலைவனை இயற்பழித்த தோழிக்குக் கூறுகிறாள். (1220)

123. பொழுது கண்டு இரங்கல்

பொழுதுகண்டு இரங்கல் என்பது, மாலைப்பொழுது வரும்போது, தலைவி, இரங்கி, வருந்துதல் பற்றிக் கூறுதல் எனப்படும்.

1. மாலையோ அல்லை மணந்தார் உயிர்உண்ணும்
வேலைநீ வாழி பொழுது.

பொழுது மாலையோ அல்லை; மணந்தார் உயிர் உண்ணும், வேலை; நீ வாழி!

(பொ-ரை): மாலைப்பொழுதே நீ முன்னைய மாலைப் பொழுதாக இருக்கவில்லை. காதலரை மணந்து கொண்டு பின்னர்ப் பிரிந்து வாழும் மகளிரின் உயிரை உண்ணும் தொழிலை, இப்பொழுது செய்து கொண்டிருக்கிறாய். அதனால், வாழமாட்டாய் என்றாலும், நீ வாழ்வாயாக!

பொழுது - மாலைப்பொழுதே; **மாலையோ அல்லை** - நீ முன்னைய மாலைப்பொழுதாக இருக்கவில்லை; **மணந்தார்** - காதலரை மணம் செய்துகொண்டு பின்னர் பிரிந்து வாழும் மகளிரின்; **வேலை** - தொழிலைச் செய்து கொண்டிருக்கின்றாய்; வாழமாட்டாய் என்ற எதிர்மறைக் கருத்துத்தோன்ற வாழி எனக் கூறப்படுகிறது.

(க-ரை): மாலைப்பொழுது முன்புபோல் இருக்கவில்லை என்றும், காதலரைப் பிரிந்து வாழும் தன்னுடைய உயிரை உண்ணுவதற்கென்றே, இப்பொழுது வந்திருக்கிறது என்றும் தலைவி, பொழுதோடு புலந்து கூறுகிறாள். (1221)

2. புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை.

மருள்மாலை, புன்கண்ணை, நின்துணை, எம்கேள் போல், வன்கண்ணதோ? வாழி!

(பொ-ரை): மயங்கிய மாலைப்பொழுதே! நீயும் என்னைப் போலவே துன்பப்படுகின்றாயே! உன் துணையும், என்னுடைய காதலரைப்போல இரக்கம் அற்றதோ? நீ வாழ்வாயாக!

மருள்மாலை - மயங்கிய மாலைப்பொழுதே; **புன்கண்ணை** - நீயும் என்னைப்போல் துன்பப்படுகின்றாய்; **எம்கேள் போல்** -

என்னுடைய காதலரைப் போல; **வன்கண்ணதோ** - இரக்கம் அற்றதோ; **வாழி** - நீ வாழ்வாயாக.

(க-ரை): மயங்கிய நிலையில் இருக்கும் மாலைப்பொழுதும், தன்னைப்போலவே துன்பப்படுகின்றதோ என்றும், அதனுடைய துணையும் தன்னுடைய காதலரைப் போலவே இரக்கங்காட்ட வில்லையோ என்றும், தலைவி தன்மனத் துயரத்தை மாலைப் பொழுதின் மேலிட்டுக் கூறுகிறாள். (1222)

3. பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித் துன்பம் வளர வரும்.

பனி அரும்பிப், பைதல் கொள், மாலை, துனி அரும்பித், துன்பம், வளர, வரும்.

(பொ-ரை): காதலருடன் நான் கூடியிருந்த நாளெல்லாம், என்முன் நடுக்கங்கொண்டு பசலை நிறத்தோடு வந்த மாலைப் பொழுதானது, இப்போது, நான் உயிர்வாழ முடியாதபடி என்னை வெறுக்கச் செய்து, துன்பமானது மிகும்படி நாளுக்கு நாள் வருகின்றது.

பனிஅரும்பி - என்முன் நடுக்கங்கொண்டு; **பைதல்கொள்** - பசலை நிறத்தோடு வந்த; **துனி அரும்பி** - நான் உயிர்வாழ முடியாதபடி என்னை வெறுக்கச் செய்து.

(க-ரை): காதலருடன் தான் கூடியிருந்த நாளெல்லாம், தன்முன் நடுக்கங்கொண்டு, பசலை பாய்ந்து வந்த மாலைப்பொழுது, இப்பொழுது, என்னுடைய உயிரை வாட்டி வருத்துகின்ற அளவுக்கு, நாளுக்கு நாள் வந்து, என் துன்பத்தைப் பெருக்கிக்கொண்டே இருக்கின்றது என்று தலைவி, பிரிவு ஆற்றும்படிக் கூறிய தோழியிடம் கூறுகிறாள். (1223)

4. காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து ஏதிலர் போல வரும்.

மாலை, காதலர் இல்வழிக், கொலைக்களத்து, ஏதிலர் போல, வரும்.

(பொ-ரை): காதலர் என்னுடன் இருந்தபோது, எனக்கு இன்பம் தந்துவந்த மாலைப் பொழுதானது, என்னுடைய காதலர் என்னுடன் இல்லாதபோது, கொலை செய்கின்ற களத்திற்குக் கொலைஞர்கள் வருவதுபோல, எனது உயிரைக் கொண்டு போவதற்கு என்றே வருகின்றது.

மாலை - காதலர் இருந்தபோது எனக்கு இன்பம் தந்துவந்த மாலைப்பொழுது; **இல்வழி** - என்னுடன் காதலர் இல்லாதபோது; **ஏதிலர்** - கொலைஞர்கள்; **வரும்** - என் உயிரைக் கொண்டு போவதற்கு என்றே வருகின்றது.

(க-ரை): காதலர் தன்னுடன் இருந்தபோது, தனக்கு இன்பம் தந்துவந்த மாலைப் பொழுதானது, காதலரை விட்டுத் தான் பிரிந்திருக்கும்போது, தனது உயிரைக் கொண்டு போவதற்கு என்றே கொலைக்களத்துக் கொலைஞர்கள்போல, வருகின்றது என்று தலைவி, ஆறுதல் அடையும்படியாகக் கூறிய தோழியிடம் கூறுகின்றாள்.
(1224)

**5. காலைக்குச் செய்த நன்றுஎன்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.**

யான், காலைக்குச் செய்த, நன்று, என்கொல்? மாலைக்குச் செய்த, பகை, எவன்கொல்?

(பொ-ரை): அன்றும் இன்றும் என்னை வருத்தாத காலையையும் பார்க்கிறேன்; அன்று என்னை இன்புறுத்தி, இன்று துன்புறுத்துகின்ற மாலையையும் பார்க்கிறேன்; நான் காலைப் பொழுதிற்குச் செய்த நன்மைதான் என்ன? நான் மாலைப் பொழுதிற்குச் செய்த தீமைதான் என்ன?

நன்று - நன்மைதான்; **என்கொல்** - என்ன? **பகை** - தீமைதான்; **எவன்கொல்** - என்ன?

(க-ரை): காதலரைப் பிரிந்திருக்கும் தான், இப்போது துன்பந்தராத காலையையும், துன்பந்தருகின்ற மாலையையும் பார்க்கிறேன் என்றும், தான் காலைக்குச் செய்த நன்மையும், மாலைக்குச் செய்த தீமையும் ஏதொன்றும் இல்லையென்றும், அப்படியிருந்தும் மாலைப்பொழுது மட்டும் வேறுபட்டு இருப்பானேன் என்றும், தலைவி, பிரிவு ஆற்றும்படிக் கூறிய தோழியிடம் கூறுகிறாள். (1225)

**6. மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன்.**

மாலை, நோய் செய்தல், மணந்தார், அகலாத காலை, அறிந்தது இலேன்.

(பொ-ரை): மாலைப் பொழுதானது, இப்படியெல்லாம் துன்பம் செய்யும் என்பதை, என்னை மணஞ்செய்து கொண்ட காதலர், என்னைவிட்டுப் பிரியாதிருந்த காலத்தில் நான் அறிந்துகொள்ள வில்லை.

மாலை - மாலைப்பொழுதானது; **நோய்செய்தல்** - இப்படியெல்லாம் துன்பம் செய்யும் என்பதை; **மணந்தார்** - என்னை மணஞ்செய்து கொண்ட காதலர்; **அகலாத காலை** - என்னை விட்டுப் பிரியாத காலத்தில்.

(க-ரை): மாலையானது தனக்குத் துன்பம் செய்யும் என்பதைக் காதலரோடு பிரியாது வாழ்ந்திருந்த காலத்தில், தான் அறிந்து கொள்ளவில்லை என்று தலைவி, தலைவன் பிரிந்து செல்லுதற்கு உடன்பட்டது ஏன் என்று வினவிய தோழியிடம் கூறுகிறாள். (1226)

7. காலை அரும்பிப் பகல்எல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய்.

இந்நோய், காலை அரும்பிப், பகல் எல்லாம், போதாகி, மாலை மலரும்.

(பொ-ரை): இந்தக் காதல் நோய் என்று சொல்லப்படுகின்ற மலரானது, காலைப்பொழுதில், அரும்பாகத் தோன்றிப் பகற் பொழுதெல்லாம், போது என்னும் பேரரும்பாக முதிர்ந்து, மாலைப்பொழுதில் மலராக மலர்ந்துவிடுகின்றது.

இந்நோய் - இந்தக் காதல் நோய் என்னும் மலரானது; **போதாகி** - பேரரும்பாக முதிர்ந்து.

(க-ரை): இந்தக் காதல் நோய் என்னும் மலரானது, காலையில் அரும்புகிறது; பகலெல்லாம் பேரரும்பாக முதிர்ந்து போது ஆகிறது; மாலைதான் மலர்கிறது என்று தலைவி, மாலையில்மட்டும் ஏன் ஆற்றாத தன்மைக்கு ஆளாகிறாய் என்று வினவிய தோழியிடம் கூறுகிறாள். (1227)

8. அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை.

ஆயன்குழல், அழல்போலும், மாலைக்குத், தூதாகி, கொல்லும் படை, போலும்.

(பொ-ரை): முன்பெல்லாம் எனக்கு இனியதாக இருந்த ஆயனது புல்லாங்குழல் இசை, இப்பொழுது, நெருப்புப்போல

சுடுவதாகிய மாலைப்பொழுதிற்குத் தூதுமாகி, என்னைக் கொல்லக்கூடிய கொலைக்கருவியாகவும் ஆகியிருக்கிறது.

ஆயன் - இடையன்; **குழல்** - புல்லாங்குழல்; **அழல்போலும்** - நெருப்புப்போல சுடுவதாகிய; **படை** - கொலைக்கருவியாகவும்; **போலும்** - அசை.

(க-ரை): ஆயனது புல்லாங்குழல் இசையானது முன்பெல்லாம் தனக்கு இனியதாக இருந்தது என்றும், இப்பொழுது மாலைப் பொழுதோடு சேர்ந்து தன்னைச் சுடுவது மட்டுமல்லாமல், தன்னுடைய உயிரையே கொண்டு போய்விடத்தக்கதாக இருக்கிறது என்றும், தலைவி, மாலைப்பொழுதில் மட்டும் ஆற்றாதவளாக ஆவானேன் என்று கேட்ட தோழியிடம் கூறுகிறாள். (1228)

9. பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

மதி மருண்டு, மாலை, படர், தரும்போழ்து, பதிமருண்டு, பைதல், உழக்கும்.

(பொ-ரை): நான் அறிவு மயங்கும்படியாக, மாலைப் பொழுது வந்து எனக்குத் துன்பத்தைத் தரும்போது, இந்த ஊரிலுள்ள என்னைப் போன்ற மகளிரும் என்னைப்போலவே துன்பத்தால் வருந்துவார்கள்.

மதி - அறிவு; **மருண்டு** - மயங்கும்படியாக; **படர்** - துன்பத்தை; **பதி** - இந்த ஊரிலுள்ள என்னைப் போன்ற மகளிரும்; **பைதல்** - என்னைப்போல் துன்பத்தை; **உழக்கும்** - வருந்துவார்கள்.

(க-ரை): தனக்கு அறிவு மயங்கும்படியாக மாலைப் பொழுது எப்படித் துன்பத்தைத் தருகின்றதோ, அப்படியே இந்த ஊரிலுள்ள தன்னைப்போன்ற மகளிர்க்கும், தன்னைப் போலவே துன்பத்தைத் தரும் என்று தலைவி, மாலைப்பொழுதில் மட்டும் மயங்குவதேன் என்று வினவிய தோழியிடம் கூறுகிறாள். (1229)

10. பொருண்மாலை யாளரை உள்ளி மருண்மாலை
மாயும்என் மாயா உயிர்.

மாயா, என் உயிர், பொருள் மாலையாளரை, உள்ளி, மருள்மாலை, மாயும்.

(பொ-ரை): பிரிவுத் துன்பத்தால் இதுவரையில் மாய்ந்து போகாமல் இருந்துவந்த எனது உயிரானது, பொருள் ஈட்டுதலையே

இயல்பாக உடைய காதலரை நினைந்து, மயக்கந்தரும் இந்த மாலைப் பொழுதில் மாய்கின்றது.

மாயா - பிரிவுத் துன்பத்தால் இதுவரையில் மாய்ந்து போகாமல் இருந்துவந்த; **பொருள் மாலையாளரை** - பொருள் ஈட்டுதலையே இயல்பாக உடைய காதலரை நினைந்து; **மருள்மாலை** - மயக்கந்தரும் மாலைப்பொழுதில்; **மாயும்** - மாய்கின்றது.

(க-ரை): பிரிவுத் துன்பத்தால், இதுகாறும், மாய்ந்து போகாமல் இருந்த தன்னுடைய உயிரானது, இப்பொழுது காதலரை நினைந்து மயக்கந்தரக்கூடிய மாலைப் பொழுதில் மாய்ந்து கொண்டிருக்கின்றது என்று தலைவி, மாலைப்பொழுது கண்டு ஆற்றாமற் போவானேன் என்று கேட்ட தோழியிடம் கூறுகிறாள். (1230)

124. உறுப்புநலன் அழிதல்

உறுப்பு நலன் அழிதல் என்பது, பிரிவுத் துன்பத்தினால் தலைவியின் கண், தோள், நெற்றி போன்ற உறுப்புகள் அழகு இழத்தல் பற்றிக் கூறுதல் எனப்படும்.

**1. சிறுமை நமக்கொழியச் சேண்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண்.**

சிறுமை, நமக்கு ஒழியச், சேண்சென்றார், உள்ளி, கண், நறுமலர், நாணின்.

(பொ-ரை): பிரிவுத் துன்பத்தை நம்மிடம் விட்டுவிட்டு, நெடுந்தொலைவு சென்றுள்ள காதலரை, நீ நினைந்து அழுவதால், உன்னுடைய கண்கள், அழகு இழந்து நறுமலர்களுக்கு இப்போது நாணி நிற்கின்றன.

சிறுமை - பிரிவுத் துன்பத்தை; **நமக்கு ஒழிய** - நம்மிடம் விட்டுவிட்டு; **சேண்** - நெடுந்தொலைவு; **சென்றார்** - சென்றுள்ள காதலரை; **உள்ளி** - நீ நினைந்து அழுவதால்; **நாணின** - இப்பொழுது நாணி நிற்கின்றன.

(க-ரை): பிரிவுத் துன்பத்தை நம்மிடம் விட்டுவிட்டு, நெடுந்தொலைவுக்குச் சென்றுள்ள காதலரை நினைந்து நீ அழுவதால், உன்னுடைய கண்கள் அழகு இழந்து, நறுமலர்களே கூடப் பழிக்கும் படியான நிலையை அடைந்துவிட்டிருக்கின்றன என்று தோழி, ஆற்றாமை மிகுதியால் வேறுபட்ட தலைவியிடம் கூறுகிறாள். (1231)

**2. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண்.**

பசந்து, பனிவாரும், கண், நயந்தவர், நல்காமை, சொல்லுவ போலும்.

(பொ-ரை): பசலை நிறம் அடைந்து, நீர் சொரிகின்ற உன்னுடைய கண்கள், நம்மால் விரும்பப்பட்ட காதலரது அன்பு செய்யாமையைப் பிறர்க்குச் சொல்லுவன போன்று இருக்கின்றன.

பசந்து - பசலை நிறம் அடைந்து; **பனிவாரும்** - நீர் சொரிகின்ற; **நயந்தவர்** - நம்மால் விரும்பப்பட்ட காதலரது; **நல்காமை** - அன்பு

செய்யாமையை; **சொல்லுவபோலும்** - சொல்லுவன போன்று இருக்கின்றன.

(க-ரை): பசலை நிறத்தை அடைந்து நீரைப் பொழிகின்ற உன்னுடைய கண்கள், காதலரது அன்பு செய்யாத தன்மையைப் பிறர்க்குச் சொல்லுவன போன்று இருக்கின்றன என்று தோழி, ஆற்றாமை மிகுதியால் துன்பமுறும் தலைவியிடம் கூறுகிறாள். (1232)

3. தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்.

மணந்த நாள், வீங்கிய தோள், தணந்தமை, சால, அறிவிப்ப, போலும்.

(பொ-ரை): காதலரை மணந்த நாட்களில், இன்பத்தால் பூரிப்படைந்த உன்னுடைய தோள்கள், அவர் பிரிந்தமை மிகவும் விளங்கும்படி பிறர்க்கு உணர்த்துவன போன்று மெலிந்திருக்கின்றன.

மணந்த - காதலரை மணந்த; **வீங்கிய தோள்** - இன்பத்தால் பூரிப்படைந்த தோள்கள்; **தணந்தமை** - காதலர் பிரிந்தமை; **சால** - மிகவும் விளங்கும்படி; **அறிவிப்ப போலும்** - உணர்த்துவன போன்று மெலிந்திருக்கின்றன.

(க-ரை): திருமணம் புரிந்த நாட்களில் இன்பத்தால் பூரிப்படைந்த உன்னுடைய தோள்கள், இப்பொழுது உன் காதலர் பிரிந்தமையைப் பிறர்க்கு உணர்த்துவன போல மிகவும் மெலிந்திருக்கின்றன என்று தோழி, பிரிவாற்றாமையால் வாடிடும் தலைவியிடம் கூறுகிறாள். (1233)

4. பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

துணைநீங்கித், தொல்கவின், வாடிய, தோள், பணைநீங்கிப், பைந்தொடி, சோரும்.

(பொ-ரை): துணைவர் நீங்கியதால் பழைய இயற்கை அழகை இழந்து வாடும் உன்னுடைய தோள்கள், தமது பருத்த தன்மையும் கெட்டுப்போய் மெலிந்து, பசிய பொன்வளையல்களும் கழன்று விழுகின்றன.

தொல் - பழைய; **கவின்** - இயற்கை அழகு; **வாடிய** - இழந்து வாடிய; **பணை** - தமது பருத்த தன்மை; **நீங்கி** - கெட்டுப்போய்

மெலிந்து; **பைந்தொடி** - பசிய பொன்வளையல்கள்; **சோரும்** - கழன்று விழுகின்றன.

(க-ரை): காதலர் பிரிந்து சென்றுவிட்டதால், உன்னுடைய தோள்கள் பழைய இயற்கை அழகையும் இழந்து, வாட்டமுற்றுப் பருத்திருந்த தன்மையும் இழந்துபோய், மெலிந்து, உன்னுடைய பொன் வளையல்களும் கழன்று விழுகின்றன என்று தோழி, பிரிவாற்றாமையால் வருந்தும் தலைவியிடம் கூறுகிறாள். (1234)

5. கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு தொல்கவின் வாடிய தோள்.

தொடியொடு, தொல்கவின், வாடிய, தோள், கொடியார், கொடுமை, உரைக்கும்.

(பொ-ரை): வளையல்களும் கழன்றுவிழ, தம் முன்னைய இயற்கை அழகினையும் இழந்து விளங்கும் உன்னுடைய தோள்கள், கொடுமை மிகுந்த காதலரின் கொடுந்தன்மையைப் பிறர்க்கு எடுத்துரைப்பனவாக இருக்கின்றன.

தொடியொடு - வளையல்கள் கழன்று விழ; **தொல்கவின் வாடியதோள்** - பழைய இயற்கை அழகினையும் இழந்த தோள்கள்; **கொடியார்** - கொடுமை மிகுந்த காதலரின்.

(க-ரை): வளையல்களும் கழல, பழைய அழகினையும் இழந்து மெலிந்து காணப்படும் உன்னுடைய தோள்கள், காதலரின் கொடுந்தன்மையைப் பிறர்க்கு எடுத்துரைப்பனவாக இருக்கின்றன என்று தோழி பிரிவாற்றாமையால் அழகு இழந்து, மெலிந்து காணப்படும் தலைவியிடம் கூறுகிறாள். (1235)

6. தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக் கொடியர் எனக்கூறல் நொந்து.

தொடியொடு, தோள்நெகிழ, அவரைக், கொடியர், எனக்கூறல், நொந்து, நோவல்.

(பொ-ரை): என் வளையல்கள் கழலவும், தோள்கள் மெலிவடைந்து வாடவும் ஆன நிலையைக் காண்போர், காதலரைக் கொடுமையானவர் என்று குறிப்பிட்டுக் கூறுவதைப் பொறுக்க முடியாமல் நான் வருந்தித் துன்புறுகிறேன்.

அவரை - காதலரை; **கொடியர்** - கொடுமையானவர்; **எனக்கூறல்** - என்று குறிப்பிட்டுக் கூறுவதை; **நொந்து** - பொறுக்க முடியாமல்; **நோவல்** - வருந்தித் துன்புறுகிறேன்.

(க-ரை): தன்னுடைய வளையல்கள் கழலுவதையும், தோள்கள் மெலிந்து வருவதையும் பார்ப்பவர்கள், தன்னுடைய காதலர் கொடுமையானவர் என்று கூறுவதைக் கேட்கத் தன்னால் பொறுக்க முடியவில்லை என்றும், தான் மிகவும் வருந்தித் துன்புறுவதாகவும் தலைவி, பிறரோடு சேர்ந்து தலைவனை இயற்பழித்த தோழியிடம் கூறுகிறாள். (1236)

7. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்குஎன்
வாடுதோள் பூசல் உரைத்து.

நெஞ்சே! கொடியார்க்கு, என் வாடு தோள், பூசல் உரைத்து, பாடு பெறுதியோ?

(பொ-ரை): நெஞ்சே! என் கொடிய காதலருக்கு எனது வாடிய தோள்களால் உண்டாகும் ஆரவாரத்தை எடுத்துக்கூறி, நீ மேம்பாடு அடையமாட்டாயோ?

கொடியார்க்கு - கொடிய காதலருக்கு; **பூசல்** - ஆரவாரத்தை; **உரைத்து** - எடுத்துக்கூறி; **பாடு** - மேம்பாட்டை; **பெறுதியோ** - அடையமாட்டாயோ?

(க-ரை): தன்னுடைய காதலரின் பிரிவால் தனது தோள்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களையெல்லாம் அவருக்கு எடுத்துச் சொல்லித் தன் நெஞ்சு எப்படியேனும் ஆறுதல் பெற வேண்டும் என்று தலைவி, இயற்பழிப்புப் பொறாதவளாய்த் தன் நெஞ்சிடம் கூறுகிறாள். (1237)

8. முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

முயங்கிய, கைகளை, ஊக்கப், பைந்தொடிப், பேதை, நுதல், பசந்தது.

(பொ-ரை): காதலியை இறுகத் தழுவிய கைகளை நான் சிறிது தளர்த்தவே, அந்தச் சிறிய பிரிவையும் பொறுக்க முடியாமல் பசுமையான வளையல்களை அணிந்துள்ள அந்த இளம் பெண்ணின் நெற்றியானது, பசலை நிறத்தை அடைந்தது; பிரிவு ஏற்பட்டுள்ள இப்பொழுது என்ன ஆயினளோ?

முயங்கிய கைகளை - காதலியை இறுகத் தழுவிய கைகள்; **ஊக்க** - சிறிது தளர்த்தவே; **பைந்தொடி** - பசுமையான வளையல்களை அணிந்துள்ள; **பேதை** - அந்த இளம் பெண்ணின்; **நுதல்** - நெற்றியானது; **பசந்தது** - பசலை நிறத்தை அடைந்தது.

(க-ரை): தன் காதலியைத் தான் இறுகத் தழுவிக் கைகளைச் சிறிது தளர்த்திய நேரத்திலேயே, அதைத் தாங்க மாட்டாமல் அவளது நெற்றியானது பசலை நிறத்தைப் பெற்றது என்றால், பிரிந்திருக்கும் இப்பொழுது அவள் என்ன ஆயினளோ என்று தலைவன், வினை முடித்து மீளும் நிலையில் முன் நிகழ்ந்தது நினைந்து, தன் மனத்திடம் கூறுகின்றான். (1238)

9. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

முயக்கு இடைத், தண்வளி, போழப், பேதை, பெருமழைக் கண், பசப்புற்ற.

(பொ-ரை): காதலியை இறுகத் தழுவிக் கொண்டிருந்த என் உடலுக்கும், அவளுக்கும் இடையில் குளிர்ந்த சிறுகாற்று ஒன்று நுழையவே, அந்தச் சிறிய இடைவெளியையும் பொறுத்துக்கொள்ள முடியாத அந்த இளம் பெண்ணின் பெரிய குளிர்ச்சியான கண்கள், உடனே பசலை நிறத்தை அடைந்தன.

முயக்குஇடை - காதலியை இறுகத் தழுவிக் கொண்டிருந்த என் உடலுக்கும் அவளுக்கும் இடையில்; **தண்வளி** - குளிர்ந்த சிறு காற்று ஒன்று; **போழ** - நுழையவே; **பேதை** - அந்த இளம் பெண்ணின்; **பெருமழை** - பெரிய குளிர்ச்சியான; **பசப்புற்ற** - பசலை நிறத்தை அடைந்தன.

(க-ரை): தன் காதலியைத் தான் இறுகத் தழுவிக் கொண்டிருந்த போதே, தன் உடலுக்கும் அவளுக்கும் இடையில் குளிர்ச்சியான சிறு காற்று ஒன்று நுழையவே, அந்தச் சிறு இடைவெளியைக்கூடப் பொறுத்துக் கொள்ள முடியாமல், அந்த இளம் பெண்ணின் பெரிய கண்கள் பசலை நிறத்தை எய்தின என்றால், பிரிந்திருக்கும் இந்த நேரத்தில், அவை எவ்வாறு ஆயினவோ? என்று தலைவன், வினை முடித்து மீளும் நிலையில், முன் நிகழ்ந்தது நினைந்து தன் நெஞ்சிடம் கூறுகிறான். (1239)

10. கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு.

ஒள்நுதல், செய்தது, கண்டு, கண்ணின் பசப்போ, பருவரல், எய்தின்று ஏ.

(பொ-ரை): தலைவியின் ஒளி பொருந்திய நெற்றியில் தோன்றிய பசலை நிறத்தைக்கண்டு, அருகிலே இருக்கும் அவளது கண்களின் பசப்பானது துன்பமுறுகிறது.

ஒன்றுதல் - ஒளி பொருந்திய நெற்றியானது; **செய்தது** - பசலை நிறத்தை அடைந்ததை; **பசப்பு** - பசலை நிறமானது; **பருவரல்** - துன்பத்தை; **எய்தின்று** - எய்துகின்றது.

(க-ரை): தலைவனின் பிரிவாற்றாமையைத் தாங்க முடியாமல், தலைவியின் நெற்றியானது பசலை நிறம் அடைந்ததோடு மட்டுமல்லாமல், அவளது கண்களின் பசலை நிறமும் மிகவும் துன்பத்தைத் தருவதாக அமைந்திருக்கிறது என்று தோழி, தலைவியின் உறுப்புகளின் நலன் அழிந்திருப்பதைக் கண்டு கலங்கிக் கூறுகிறாள். (1240)

125. நெஞ்சொடு கிளத்தல்

நெஞ்சொடு கிளத்தல் என்பது, தலைவனின் பிரிவு ஆற்றாமை மிகுதியின் காரணமாகத் தலைவி, தன் நெஞ்சோடு பேசுதல் எனப்படும்.

**1. நினைத்துஒன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து.**

நெஞ்சமே! எவ்வநோய், தீர்க்கும், மருந்துஒன்று, எனைத்து ஒன்றும், நினைத்து, சொல்லாயோ?

(பொ-ரை): நெஞ்சே! எவ்வகையிலும் தீராத இக்காதல் நோயைத் தீர்ப்பதற்குரிய மருந்து ஒன்றனை, எத்தன்மையான ஒன்றாயினும், நீ நினைத்துப் பார்த்து, எனக்குச் சொல்லமாட்டாயா?

எவ்வநோய் - எவ்வகையிலும் தீராத காதல் நோயை; **எனைத்துஒன்றும்** - எத்தன்மையான ஒன்றாயினும்.

(க-ரை): நெஞ்சமே! என்னுடைய தீராத காதல் நோயைத் தீர்ப்பதற்குரிய மருந்து ஒன்றனை, நீ நினைத்துப் பார்த்து எனக்குக் கூறமாட்டாயா? என்று தலைவி, பிரிவு ஆற்றாமை தீரும் வகைநாடித் தன் நெஞ்சையே பார்த்துக் கேட்கிறாள். (1241)

**2. காதல் அவர்இல ராகநீ நோவது
பேதைமை வாழிஎன் நெஞ்சு.**

என் நெஞ்சு! அவர் காதல் இலராக, நீ நோவது, பேதைமை, வாழி!

(பொ-ரை): என் நெஞ்சமே! காதலர் நம்மிடம் காதல் இல்லாதவராக இருக்க, நீ மட்டும் அவரை நினைந்து வருந்துவது அறியாமையேயாகும்! என்றாலும் நீ வாழ்வாயாக!

நோவது - வருந்துவது; **பேதைமை** - அறியாமையாகும்.

(க-ரை): என் நெஞ்சமே! காதலர் நம்மிடம் காதல் இல்லாதவராக இருக்கும்போது, நீ மட்டும் அவரை நினைந்து வருந்துவது அறியாமையாகுமே என்று தலைவி, ஆற்றாமையைத் தணிக்க வழிநாடித் தன் நெஞ்சைப் பார்த்துக் கூறுகிறாள். (1242)

**3. இருந்துஉள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துஉள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல்.**

நெஞ்சே! பைதல்நோய் செய்தார்கண், பரிந்துஉள்ளல், இல், இருந்து, உள்ளி, பரிதல், என்.

(பொ-ரை): நெஞ்சமே! இத்துன்ப நோயினைச் செய்த காதலருக்கு நம்மிடம் இரக்கங்காட்டும் நினைப்பே இல்லையே; நீ மட்டும் இங்கு இருந்துகொண்டு அவரைப்பற்றி எண்ணி வருந்துவதால் என்ன பயன்?

பைதல்நோய் - இத்துன்ப நோயினை; **செய்தார் கண்** - செய்த காதலரிடத்தில்; **பரிந்துஉள்ளல்** - நம்மிடம் இரக்கங்காட்டும் நினைப்பே; **இருந்து** - இங்கே இருந்து கொண்டு; **உள்ளி** - அவரைப்பற்றி எண்ணி; **பரிதல்** - வருந்துதல்; **என்** - என்ன பயன்.

(க-ரை): நெஞ்சமே! இந்தத் துன்ப நோயைச் செய்த காதலருக்கு நம்மிடம் இரக்கங்காட்டும் தன்மை இல்லாதபோது, நீ மட்டும் அவரைப்பற்றி நினைந்து வருந்துவதால் என்ன பயன் ஏற்படப் போகிறது? என்று தலைவி, ஆற்றாமை காரணமாகத் தன் நெஞ்சைப் பார்த்துக் கூறுகிறாள். (1243)

**4. கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவைஎன்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று.**

நெஞ்சே! கண்ணும், கொளச், சேறி, இவை, அவர்க்காணல், உற்று, என்னைத் தின்னும்.

(பொ-ரை): நெஞ்சமே! நீ காதலர்பால் செல்லும்போது, எனது கண்களையும், உடன்கொண்டு செல்வாயாக! இக்கண்கள் அவரைக் காண விரும்பிக் காட்டும்படிச் சொல்லி, என்னைத் தின்பன போல் வருத்திக் கொண்டிருக்கின்றன.

கண்ணும் - எனது கண்களையும்; **கொள** - உடன் கொண்டு; **சேறி** - செல்வாயாக; **இவை** - இக்கண்கள்; **அவர்க்காணல் உற்று** - அவரைக்காண விரும்பி; **தின்னும்** - என்னைத் தின்பனபோல் வருத்துகின்றன.

(க-ரை): நெஞ்சமே! நீ காதலரிடம் செல்லும்போது, எனது கண்களையும் உடன் அழைத்துக்கொண்டு செல்வாயாக என்றும், இல்லையானால், இந்தக் கண்கள் என்னையே தின்பன போல் இருக்கின்றன என்றும், தலைவி பிரிவாற்றாமை காரணமாகத் தன் நெஞ்சை நோக்கிக் கூறுகிறாள். (1244)

**5. செற்றார் எனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம்
உற்றால் உறாஅ தவர்.**

நெஞ்சே! யாம், உற்றால், உறாஅதவர், செற்றார் எனக், கைவிடல், உண்டோ?

(பொ-ரை): நெஞ்சமே! நாம் காதலராகிய அவரிடம் அன்பு கொண்டிருந்தாலும், நம்மிடம் அன்புகொள்ளாத அவர், நம்மை வெறுத்துவிட்டார் என்று எண்ணி, அவரைக் கைவிட முடியுமோ?

உற்றால் - காதலரிடம் அன்பு கொண்டிருந்தாலும்; **உறாஅதவர்** - நம்மிடம் காதல் கொள்ளாத அவர்; **செற்றார்** - நம்மை வெறுத்துவிட்டார்; **என** - என்று எண்ணி.

(க-ரை): நெஞ்சமே! நாம் காதலரிடம் அன்பு கொண்டிருந் தாலும் நம்மிடம் விருப்பங்கொள்ளாத அவர், நம்மை வெறுத்து விட்டார் என்ற முடிவிற்கு வந்து, அவரைக் கைவிட்டுவிட முடியுமோ? என்று தலைவி பிரிவாற்றாமையால் தன் நெஞ்சைப் பார்த்துக் கூறுகிறாள். (1245)

**6. கலந்துஉணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துஉணராய்
பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு.**

என்நெஞ்சு, கலந்து, உணர்த்தும், காதலர்க் கண்டால், புலந்து, உணராய், பொய்க்காய்வு, காய்தி.

(பொ-ரை): என் நெஞ்சமே! அவர் நம்மோடு கூடிக் கலந்திருந்து நமது ஊடலை நீக்குங்காலத்தில், காதலரைக் கண்டுவிட்டால், ஒரு தரமாவது பொய்யாகவேனும் புலந்து, பிறகு புலப்பதை நீக்கிவிடுதல் செய்யாத நீ, இப்பொழுது அவரிடத்தில் பொய்யான வெறுப்புக் கொள்ளுகின்றாய்; இதனால் பயன் என்ன?

கலந்து - நம்மோடு கூடிக் கலந்திருந்து; **உணர்த்தும்** - நமது ஊடலை நீக்குங்காலத்தில்; **பொய்க்காய்வு** - பொய்யான வெறுப்பு; **காய்தி** - கொள்ளுகின்றாய்.

(க-ரை): நெஞ்சமே! காதலர் நம்மோடு கூடிக்கலந்து ஊடலை நீக்குங்காலத்தில், ஒரு தரமாவது பிணங்கிவிடாத நீ, இப்போது அவரிடம் பொய்யான வெறுப்புக் கொள்ளுகின்றாய்; இதனால் பயன் என்ன? என்று தலைவி, தலைவனின் கொடுமையை நினைந்து வெறுக்கின்ற தன் நெஞ்சிடம் கூறுகிறாள். (1246)

**7. காமம் விடுஒன்றோ நாண்விடு நல்நெஞ்சே
யானோ பொறேன்இவ் விரண்டு.**

நல்நெஞ்சே! ஒன்றோ, காமம் விடு, நாண்விடு, இவ்இரண்டு, யானோ, பொறேன்.

(பொ-ரை): நல்ல நெஞ்சமே! ஒன்று காதல் வேட்கையை யாவது விட்டுவிடு; அல்லது நாணத்தையாவது விட்டுவிடு; ஒன்றிற்கொன்று மாறுபட்ட இந்த இரண்டையும் என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

காமம் - காதல் வேட்கையை; **நாண்** - நாணத்தை; **பொறேன்** - பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

(க-ரை): நல்ல நெஞ்சமே! ஒன்று காதல் வேட்கையையாவது விட்டுவிட வேண்டும்; அல்லது நாணத்தையாவது விட்டுவிட வேண்டும்; ஒன்றோடொன்று மாறுபட்டு இருக்கும் இரண்டையும் என்னால் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது என்று தலைவி, ஆற்றாமை மிகுதியால் தன் நெஞ்சிடம் கூறுகிறாள். (1247)

8. பரிந்தவர் நல்கார்என்று ஏங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு.

என் நெஞ்சு, பரிந்தவர், நல்கார், என்று ஏங்கிப், பிரிந்தவர் பின், செல்வாய், பேதை.

(பொ-ரை): என் நெஞ்சமே! பிரிந்து சென்ற காதலர் நம்மீது இரக்கங்கொண்டு அன்பு காட்டவில்லையே என்று ஏங்கிப், பிரிந்து போனவர் பின்னே செல்லுகின்றாய்; அறிவற்ற நீ ஏதும் அறியாய்!

நல்கார் - அன்பு காட்டமாட்டார்; **பேதை** - அறிவற்ற நீ ஏதும் அறியாய்.

(க-ரை): என் நெஞ்சமே! பிரிந்து சென்ற காதலர் நம்மிடம் இரக்கங்கொண்டு அன்புகாட்டவில்லையே என்று எண்ணி, நமது நிலைமையை அவரிடம் விளக்குவதற்காக, அவர்பின்னே, ஏக்கத்துடன் செல்கின்றாய்; உனக்குச் சிறிதேனும் அறிவுத்தெளிவு இருந்தால் அப்படிச் செய்ய மாட்டாய் என்று தலைவி, பிரிவாற்றாமையின்போது தன் நெஞ்சிடம் கூறுகிறாள். (1248)

9. உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
யாருழைச் சேறிஎன் நெஞ்சு.

என் நெஞ்சு, காதலவர், உள்ளத்தார், ஆக, நீ, உள்ளி, யாருழைச், சேறி.

(பொ-ரை): என் நெஞ்சமே! காதலர் உள்ளத்திலேயே உள்ளவராக இருக்கும்போது, நீ அவரை நினைத்துக்கொண்டு இப்போது எவரிடம் வெளியில் தேடிச் செல்கின்றாய்!

உள்ளி - அவரை நினைத்துக்கொண்டு; **யாருழை** - எவரிடம்; **சேறி** - செல்லுகின்றாய்.

(க-ரை): என் நெஞ்சமே! காதலர் உள்ளத்திலேயே குடியிருக்கும்போது, அதனை மறந்துவிட்டு, அவரை நினைத்துக் கொண்டு, வெளியில் தேட எவரிடம் செல்லுகின்றாய் என்று தலைவி, பிரிவாற்றாமையால் தன் நெஞ்சிடம் கூறுகிறாள். (1249)

10. துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா
இன்னும் இழத்தும் கவின்.

துன்னாத், துறந்தாரை, நெஞ்சத்து, உடையேமா, இன்னும், கவின், இழத்தும்.

(பொ-ரை): நம்மைச் சேராது பிரிந்துசென்ற காதலரை மறவாது நெஞ்சத்தில் நினைத்துக்கொண்டிருப்பதால்தான், முன்பு இழந்த தோடல்லாமல், இன்னும் நாம் மிச்சமிகுதி அழகையும் இழந்து அழிய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

துன்னா - நம்மைச் சேராது; **துறந்தாரை** - பிரிந்துசென்ற காதலரை; **கவின்** - அழகை; **இழத்தும்** - இழந்து அழிய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(க-ரை): நம் காதலர் பிரிந்து சென்றபோதே நாம் அழகை இழந்தோம்; அவரைத் தொடர்ந்து நினைத்துக்கொண்டே இருப்பதால் தான், மிச்ச மிகுதியாக இருக்கும் அழகையும் மேலும் இழந்து அழிய வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று தலைவி, பிரிவாற்றாமை யால் வாடும்போது, தன் நெஞ்சிடம் கூறுகிறாள். (1250)

126. நிறை அழிதல்

நிறை அழிதல் என்பது, தலைவி, தன் மனத்தில் மறைத்து வைத்திருக்க வேண்டியவற்றை, வேட்கை மிகுதியால் மறைத்து வைக்காமல், வெளியிடுதல் எனப்படும்.

1. காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்
நாணுத்தாள் வீழ்த்த கதவு.

நாணுத்தாள் வீழ்த்த, நிறை என்னும், கதவு, காமக் கணிச்சி, உடைக்கும்.

(பொ-ரை): நாணம் என்னும் தாழ்ப்பாள் பொருந்திய மன அடக்கம் என்னும் கதவைக் காதல் வேட்கை என்னும் கோடரி உடைத்து விடுகின்றது.

தாள் - தாழ்ப்பாள்; **வீழ்த்த** - பொருந்திய; கோத்த; **நிறை** - மன அடக்கம்; **காமம்** - காதல் வேட்கை; **கணிச்சி** - கோடரி; குந்தாலி.

(க-ரை): நாணம் என்னும் தாழ்ப்பாள் போடப்பட்ட மன அடக்கம் என்னும் கதவைத் தன்னுடைய காதல்வேட்கை என்னும் கோடரி உடைத்தெறிந்துவிடுகின்றது என்று தலைவி, நாணும் நிறையும் அழியாமல் பிரிவு ஆற்றல் வேண்டும் எனக்கூறிய தோழியிடம் கூறுகிறாள். (1251)

2. காமம் எனஒன்றோ கண்ணின்றுஎன் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில்.

காமம், என ஒன்று, ஓ, கண்ணின்று; என் நெஞ்சத்தை, யாமத்தும், தொழில் ஆளும்.

(பொ-ரை): காதல் வேட்கை என்பதான ஒன்று, ஐயகோ! கண்ணோட்டம் இல்லாததாக இருக்கின்றது; அது எனது நெஞ்சத்தை எல்லோரும் தொழிலொழியும் நடு இரவிலுங்கூட, தொழில்படுத்தி அடக்கி ஆளுகின்றது.

காமம் - காதல் வேட்கை; **கண்ணின்று** - கண்ணோட்டம் இல்லாததாக இருக்கின்றது; **யாமத்தும்** - எல்லோரும் தொழில் ஒழியும் நடு இரவிலுங்கூட; **தொழில் ஆளும்** - தொழில்படுத்தி அடக்கி ஆளுகின்றது.

(க-ரை): காதல் வேட்கையானது, பொதுவாகக் கண்ணோட்டம் இல்லாததாக இருக்கின்றது; அது நடு இரவிலுங்கூட என் நெஞ்சத்தை அடக்கி ஆண்டு கொண்டிருக்கிறது என்று தலைவி, நெஞ்சத்திலே ஏற்பட்ட காதல் வேட்கையை நெஞ்சத்தாலே அடக்க வேண்டும் என்று அறிவுரை கூறிய தோழியிடம் கூறுகிறாள். (1252)

3. மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்புஇன்றித் தும்மல்போல் தோன்றி விடும்.

யான், காமத்தை, மறைப்பேன், மன்; குறிப்பு இன்றித், தும்மல்போல், தோன்றிவிடும், ஓ!

(பொ-ரை): நான் இக்காதல் வேட்கையை எனக்குள்ளேயே உறுதியாக மறைத்து வைத்துக் கொள்ளத்தான் கருதுகிறேன்; அது என் எண்ணத்திற்கிணங்க அடக்க முடியாதபடி தும்மலைப்போல், வெளிப்பட்டுத் தோன்றிவிடுகின்றது; ஐயகோ! நான் என் செய்வேன்?

காமத்தை - காதல் வேட்கையை; **குறிப்பு இன்றி** - என் எண்ணத்திற்கிணங்க அடக்க முடியாதபடி; **மன்** - அசை; **ஓ** - ஐயகோ! இரக்கத்தை உணர்த்தும் சொல்.

(க-ரை): இக்காதல் வேட்கையை எனக்குள்ளேயே மறைத்து வைத்துக் கொள்ளத்தான் நான் பெரிதும் முயலுகிறேன்; அடக்க முடியாதபடி தும்மல் தோன்றிவிடுவதைப் போன்று, அதுவும் என்னை அறியாமல் என்னையும் மீறி வெளிப்பட்டு விடுகின்றது என்று தலைவி, காதல் வேட்கையை மகளிர் எப்படியும் அடக்கிக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்திய தோழியிடம் கூறுகிறாள். (1253)

4. நிறையுடையேன் என்பேன்மன் யானோஎன் காமம் மறைஇறந்து மன்று படும்.

யான், நிறையுடையேன், என்பேன், மன்; என்காமம், மறை இறந்து, மன்றுபடும், ஓ!

(பொ-ரை): நான் இதுவரையில், மன அடக்கத்தோடு இருப்பதாகத்தான் எண்ணிக் கொண்டிருந்தேன்; ஆனால், எனது காதல் வேட்கையானது, எனக்குள் மறைந்திருத்தலைக் கடந்துவந்து, பலர் அறிய, பொதுமன்றத்தில் வெளிப்படுகின்றது; ஐயகோ! செய்வதறியேன்.

நிறையுடையேன் - மன அடக்கத்தோடு இருப்பதாகத்தான்; **என்பேன்** - எண்ணிக் கொண்டிருந்தேன்; **காமம்** - காதல் வேட்கையானது; **மறை** - எனக்குள் மறைந்திருத்தலை; **இறந்து** - கடந்து; **மன்று** - பொதுமன்றத்தில்; **படும்** - வெளிப்பட்டு விடுகின்றது; **ஓ** - ஐயகோ! இரக்கத்தை உணர்த்தும் சொல்; **மன்** - அசை.

(க-ரை): நான் காதல் வேட்கையை அடக்கி வைக்க எவ்வளவோ முயன்று பார்த்தேன்; ஆனால், எனது காதல் வேட்கை யானது என்னையும் மீறிப் பலர் அறியும்படிப் பொதுமன்றத்தில் வெளிப்பட்டு விடுகின்றது; நான் என்ன செய்வதென்று எனக்கே புரியவில்லை என்று தலைவி, காதல் வேட்கையை அடக்குமாறு கூறிய தோழியிடம் கூறுகிறாள். (1254)

5. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன்று அன்று.

செற்றார்பின், செல்லாப், பெருந்தகைமை, காமநோய், உற்றார், அறிவது, ஒன்று, அன்று.

(பொ-ரை): தம்மைவிட்டுப் பிரிந்துசென்ற காதலர் பின்னே, தொடர்ந்து செல்லாத பெருந்தன்மையான மன அடக்கப் பண்பானது, காதல் நோய் அடைந்தவர்கள் அறிந்துகொள்ளக்கூடிய தன்மையது அன்று.

செற்றார் - தம்மைவிட்டுப் பிரிந்து சென்ற காதலர்; **பெருந்தகைமை** - பெருந்தன்மையான மன அடக்கப் பண்பானது; **காமநோய்** - காதல் நோய்; **உற்றார்** - அடைந்தவர்கள்.

(க-ரை): தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற காதலர் தன்னை மறந்தாலும், தான் அவரை மறந்துவிட்டு வாழ்வது என்பது இயலாததொரு செயலாகும் என்று தலைவி, காதலர் பற்றிய நினைவை மறந்துவிடுமாறு கூறிய தோழியிடம் கூறுகிறாள். (1255)

6. செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றுஎன்னை உற்ற துயர்.

செற்றவர், பின் சேறல், வேண்டி, என்னை உற்றதுயர், எற்று, அளித்து, அரோ.

(பொ-ரை): என்னைவிட்டுப் பிரிந்து சென்ற காதலர் பின்னே செல்லுவதை விரும்புவதால் என்னை வந்தடைந்த இக்காதல்

வேட்கைத் துன்பமானது எத்தன்மையதாகும் என்றால், அது மிகவும் இரக்கத்தக்கதேயாகும்.

செற்றவர் - என்னைவிட்டுப் பிரிந்து சென்ற காதலர்; **சேறல்** - செல்லுவதை; **வேண்டி** - விரும்புவதால்; **உற்றதுயர்** - வந்தடைந்த காதல் வேட்கைத் துன்பமானது; **எற்று** - எத்தன்மையதாகும் என்றால்; **அளித்து** - அது இரங்கத்தக்கதாகும்; **அரோ** - அசை.

(க-ரை): என்னை விட்டுப் பிரிந்துசென்ற காதலரின் பின்னே செல்லுவதையே விரும்புகின்ற, என்னுடைய காதல் துன்பமானது. அதனுடைய நிலையை எண்ணிப் பார்க்கும்போது, மிகவும் இரங்கத்தக்கதாக இருக்கிறது என்று தலைவி, துயரத்தை மறக்கும்படிச் சொல்லும் தோழியிடம் கூறுகிறாள். (1256)

7. நாண்என ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்.

காமத்தால், பேணியார், பெட்ப, செயின், நாண், என ஒன்று, ஓ, அறியலம்.

(பொ-ரை): பிரிந்து சென்ற, என்னால் விரும்பப்பட்ட காதலர் வந்து நான் காதல் வேட்கையினால் விரும்புகின்றவற்றையெல்லாம் செய்தால், அதுபோது அவரோடு பிணங்க முடியாமையால், நாணம் என்ற ஒன்றையும் நான் அறியமாட்டேன்.

பேணியர் - பிரிந்து சென்ற என்னால் விரும்பப்பட்ட காதலர்; **பெட்ப** - நான் காதல் வேட்கையினால் விரும்புகின்றவற்றை யெல்லாம்; **செயின்** - செய்தால்; **அறியலேம்** - அறியமாட்டேன்; **ஓ** - அசை.

(க-ரை): பிரிந்து சென்ற காதலர், திரும்ப வந்து, நான் விரும்புகின்றவற்றையெல்லாம் செய்யும்போது, அவரோடு பிணங்கிக் கொள்ள முடியாமல், நான் நாணத்தை இழந்து நிற்கிறேன் என்று தலைவி, தோழியிடம் கூறுகிறாள். (1257)

8. பல்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை.

பல்மாயக் கள்வன், பணிமொழி, அன்றோ, நம் பெண்மை, உடைக்கும்படை.

(பொ-ரை): பல சூழ்ச்சிகளையுடைய உள்ளங்கவர் கள்வரான, காதலரின் பணிவான இனிய சொற்கள் அல்லவா பெண்மையாகிய நிறையை அழிக்கும் படைக்கருவிகளாக உள்ளன.

பல்மாய - பல சூழ்ச்சிகளையுடைய; **கள்வன்** - உள்ளங்கவர் கள்வரான காதலரின்; **பணிமொழி** - பணிவான இனிய சொற்கள்; **அன்றோ** - அல்லவா; **பெண்மை** - பெண்மையாகிய நிறையை; **படை** - படைக்கருவிகளாக உள்ளன.

(க-ரை): பல சூழ்ச்சிகளையுடைய கள்வரான காதலரின் பணிவான இனிய சொற்கள்தாம் என்னுடைய நிறை பண்பை அழிக்கும் படைக்கருவிகளாக விளங்குகின்றன என்று தலைவி, தான் மன அடக்கம் இழப்பதற்கான காரணத்தைத் தோழியிடம் கூறுகிறாள். (1258)

9. புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம் கலத்தல் உறுவது கண்டு.

புலப்பல், எனச், சென்றேன்; நெஞ்சம், கலத்தல் உறுவது, கண்டு, புல்லினேன்.

(பொ-ரை): நான் பிணங்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணித்தான், காதலர் இருக்கும் இடத்திற்குச் சென்றேன்; சென்றதும் நெஞ்சம் அவரைக் கண்டவுடன் அடக்கமில்லாமல் அவரோடு கலந்திருப்பதைப் பார்த்து நானும் அவரைத் தழுவிக்கொண்டேன்.

புலப்பல் - பிணங்கிக் கொள்ள வேண்டும்; **என** - என்று எண்ணித்தான்; **கலத்தல் உறுவது** - அவரோடு கலந்திருப்பது; **புல்லினேன்** - நானும் அவரைத் தழுவிக்கொண்டேன்.

(க-ரை): நான் காதலரோடு பிணங்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணித்தான் அவரிடம் சென்றேன். சென்றவுடன் புலத்திற்குக் காரணமாக இருந்த நெஞ்சமே அவரோடு கலத்தற்குக் காரணமாக அமைந்த பிறகு, வேறு வழியின்றி நானும் அவரைத் தழுவி நின்றேன் என்று தலைவி, தன் நிலைமையைத் தோழியிடம் கூறுகிறாள். (1259)

10. நிணம்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ புணர்ந்துஊடி நிற்பேம் எனல்.

நிணம், தீயில்இட்டு அன்ன, நெஞ்சினார்க்கு, புணர்ந்து, ஊடி, நிற்பேம் எனல், உண்டோ?

(பொ-ரை): கொழுப்பைத் தீயிலிட்டால், அது உருகுவதைப் போல, காதலரைக் கண்டால், நிறையிழந்து உருகும் நெஞ்சினை யுடைய, பிரிந்து வாழும் என்னைப்போன்ற மகளிர்க்குக் காதலர் தம்மைக்கூடிப் பிறகு ஊடி நிற்போம் என்பதில் உறுதி உண்டாகுமோ? உண்டாகாது!

நிணம் - கொழுப்பு; **புணர்ந்து** - காதலர் தம்மைக்கூடி; **ஊடி** - புலந்து.

(க-ரை): கொழுப்பைத் தீயிலிட்டால் அது எப்படி உருகுமோ, அப்படியே காதலரைக் கண்டவுடன் நிறையழிந்து உருகும் நான், காதலரைப் புணர்ந்து, பிறகு அவரோடு புலந்துநிற்பது என்பது இயலுவதாகுமோ? என்று தலைவி, தான் காதலரிடம் கொண்டுள்ள காதலன்பு காரணமாக ஏற்படும் இயலாமையைத் தோழியிடம் கூறுகிறாள். (1260)

127. அவர் வயின் விதும்பல்

அவர் வயின் விதும்பல் என்பது, பிரிந்திருக்கும் தலைவனும், தலைவியும், காதல் வேட்கை மிகுதியால் தம்முள் ஒருவரையொருவர் காண விழைதல் எனப்படும்.

1. வாள்அற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாள்ஒற்றித் தேய்ந்த விரல்.

அவர், சென்ற நாள், ஒற்றி, விரல் தேய்ந்த; கண்ணும், வாள் அற்றுப், புற்கென்ற.

(பொ-ரை): காதலர் என்னைவிட்டுப் பிரிந்துசென்ற நாட்களைச் சுவரில் குறியிட்டு, அவற்றைத் தொட்டுத்தொட்டு எண்ணுவதால், என் விரல் தேய்ந்துவிட்டது; அதுமட்டுமல்லாமல், என் கண்களும், அவரது வரவைப் எதிர்பார்த்துப் பார்த்து, ஒளியிழந்து புன்மை அடைந்துவிட்டன.

ஒற்றி - சுவரில் குறியிட்டு; **தேய்ந்த** - தேய்ந்துவிட்டது; **வாள்** - ஒளி; **அற்று** - இழந்து; **புற்கென்ற** - புன்மை அடைந்துவிட்டன.

(க-ரை): காதலர் என்னைவிட்டுப் பிரிந்து சென்றதிலிருந்து அவர் சென்ற நாட்களைச் சுவரில் குறியிட்டு, அவற்றை நாள்தோறும் தொட்டுத்தொட்டு எண்ணுவதால், எனது விரலும் தேய்ந்துவிட்டது; அவரது வரவை எதிர்பார்த்துப் பார்த்து, என் கண்களும் ஒளி இழந்துவிட்டன என்று தலைவி, தலைவனைக் காண வேண்டும் என்ற விழைவால் தோழியிடம் கூறுகிறாள். (1261)

2. இலங்கிழாய் இன்று மறப்பின்என் தோள்மேல்
கலங்கழியும் காரிகை நீத்து.

இலங்குஇழாய்! இன்று மறப்பின், என் தோள், மேல், காரிகைநீத்து, கலம், கழியும்.

(பொ-ரை): விளங்குகின்ற அணிகலன்களையுடைய தோழி! காதலரின் பிரிவால் வருந்துகின்ற நான், இந்த நாட்களில் அவரை மறந்துவிட்டால், என் தோள்கள் மேன்மேலும் அழகினை இழந்து மெலிவடைய அதன் காரணமாக எனது வளையல்கள் கழன்று கீழே விழும்.

இலங்கு - விளங்குகின்ற; **இழாய்** - அணிகலன்களையுடைய தோழி; **இன்று** - இந்த நாட்களில்; **மறப்பின்** - மறந்துவிட்டால்; **மேல்** - மேன்மேலும்; **காரிகை நீத்து** - அழகினை இழந்து மெலிவடைய; **கலம்** - வளையல்கள்; **கழியும்** - கழன்று கீழே விழும்.

(க-ரை): தோழி! காதலரைப் பிரிந்திருக்கின்ற இந்த நேரத்தில், அவரை நான் மறந்துவிட்டால் என்னுடைய தோள்கள் மேலும் அழகினை இழந்து, மெலிந்துபோகும் என்பது மட்டுமல்லாமல், என்னுடைய வளையல்களும் கழன்று கீழே விழும் என்பது உறுதி என்று, தலைவி, ஆற்றாமை மிகுதியின் காரணமாகக் காதலரைச் சிறிது மறக்கும்படிக் கூறிய தோழியிடம் கூறுகிறாள். (1262)

3. உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரன்நசைஇ இன்னும் உளேன்.

உரன்நசைஇ, உள்ளம் துணையாகச், சென்றார், வரன்நசைஇ, இன்னும், உளேன்.

(பொ-ரை): இன்பத்தை விரும்பாமல், வெற்றியை விரும்பித் தமது ஊக்கத்தையே துணையாகக்கொண்டு சென்ற காதலர் திரும்பி வருவதையே விரும்பி இன்னும் நான் உயிரோடு இருந்து கொண்டிருக்கிறேன்.

உரன்நசைஇ - வெற்றியை விரும்பி; **உள்ளம்** - தமது ஊக்கத்தையே; **வரன்நசைஇ** - அவர் திரும்பி வருவதையே விரும்பி; **உளேன்** - உயிரோடு இருந்து கொண்டிருக்கிறேன்.

(க-ரை): இன்பத்தை விரும்பாமல் தாம் பெறப்போகும் வெற்றியை விரும்பிச் சென்ற காதலர், திரும்பி என்னிடம் வருவார் என்ற காரணத்தால்தான் நான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று தலைவி, தன் விழைவு தோன்றத் தோழியிடம் கூறுகிறாள். (1263)

4. கூடிய காமம் பிரிந்தார் வரவுஉள்ளிக்
கோடுகொடு ஏறும்என் நெஞ்சு.

பிரிந்தார், கூடிய காமம், வரவு உள்ளி, என் நெஞ்சு, கோடுகொடு, ஏறும்.

(பொ-ரை): பிரிந்துசென்ற காதலர், கலந்து இன்புறும் காதல் வேட்கையுடனே என்னிடம் திரும்பி வருவதை எண்ணிக் கொண்டிருப்பதால், மனக்குரங்கு கொம்புவிட்டுக் கொம்பு

தாவுதல்போல என் நெஞ்சம் மாறுபட்ட எண்ணங்களில் மாறிமாறித் தாவிக்கொண்டிருக்கிறது.

கூடிய காமம் - கலந்தின்புறும் காதல் வேட்கையுடனே; **வரவுஉள்ளி** - திரும்பி வருவதை எண்ணிக் கொண்டிருப்பதால்; **கோடுகொடு ஏறும்** - மனக்குரங்கு கொம்புவிட்டுக் கொம்பு தாவுதல்.

(க-ரை): பிரிந்துசென்ற காதலர், கூடிக் கலந்தின்புறும் காதல் வேட்கையோடு திரும்பிவருவார் என்று நான் எண்ணிக் கொண்டிருப்பதால், என்னுடைய நெஞ்சமானது மேன்மேலும் எழுச்சியுற்று மாறுபட்ட எண்ணங்களில் மாறிமாறித் தாவிக் கொண்டிருக்கிறது என்று தலைவி, தன் விழைவைத் தோழியிடம் கூறுகிறாள். (1264)

**5. காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்கும்என் மென்தோள் பசப்பு.**

கொண்கனைக், கண்ணாரக், காண்க, மன்; கண்டபின், என்மென்தோள், பசப்பு, நீங்கும்.

(பொ-ரை): எனது காதலரை நான் விரைவில் கண்ணாரக் கண்டு மகிழ்வேனாக! கண்டபிறகு எனது மெல்லிய தோள்களில் உண்டாகிய பசலை நிறமும், தானே நீங்கிவிடும்.

கொண்கனை - கணவரை; **காண்க** - கண்டு மகிழ்வேனாக; **பசப்பு** - பசலை நிறமானது; **மன்** - அசை.

(க-ரை): எனது கணவரை நான் விரைவில் காணும் பேறுபெற்று மகிழ்வேன் என்றும், அப்படி அவரைக் கண்டபிறகு எனது தோளில் உண்டாகியிருக்கும் பசலை நிறமும் நீங்கிவிடும் என்றும், தலைவி, தலைவன் விரைவில் வர இருப்பதால், தலைவி பசலை கொள்ளக்கூடாது என்று கூறிய தோழியிடம் கூறுகிறாள். (1265)

**6. வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட.**

கொண்கன், ஒருநாள், வருக, மன்; பைதல் நோய், எல்லாம் கெட, பருகுவன்.

(பொ-ரை): எனது கணவர் என்றேனும் ஒருநாள் வந்தே தீருவார்; அவர் வந்தால் எனக்குத் துன்பத்தைத் தருகின்ற காதல்

வேட்கை நோய் எல்லாம் நீங்கும்படியாக, நான் முழு இன்பத்தையும் நுகருவேன்.

கொண்கன் - கணவர்; **பைதல்** - எனக்குத் துன்பந்தருகின்ற; **நோய்** - காதல் வேட்கை நோய்; **கெட** - நீங்கும்படியாக; **பருகுவன்** - முழு இன்பத்தையும் நுகருவேன்; **மன்** - அசை.

(க-ரை): எனது கணவர் என்றேனும் ஒரு நாள் வந்தே தீருவார் என்பது என் கருத்து; அப்படி வந்தால் எனக்கு இதுவரையில் துன்பந்தந்து கொண்டிருக்கின்ற காதல் நோயெல்லாம் நீங்கும்படியாக, நான் முழு இன்பத்தையும் அவரிடம் நுகருவேன் என்று தலைவி, தலைவன் விரைவில் வர இருப்பதால், வருந்துதலை ஒழிப்பாயாக என்று கூறிய தோழியிடம் கூறுகிறாள். (1266)

**7. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின்.**

கண் அன்ன, கேளிர், வரின், புலப்பேன் கொல்? புல்லுவேன் கொல், ஓ? கலப்பேன்கொல்?

(பொ-ரை): கண்போன்ற எனது காதலர் திரும்பி வருவாரானால், இதுகாறும் வராது நீட்டித்தமைக்காக, நான் அவரோடு பிணங்கிக்கொள்வேனோ? அவரைக் கட்டித் தழுவிக் கொள்ளுவேனோ? புலத்தல், புல்லுதல் ஆகிய இரு செயல்களையும் சேர்த்துச் செய்வேனோ? தெரியவில்லை!

கேளிர் - எனது காதலர்; **வரின்** - வருவாரானால்; **புலப்பேன் கொல்** - பிணங்கிக் கொள்வேனோ? **புல்லுவேன்கொல்** - கட்டித் தழுவிக்கொள்வேனோ? **கலப்பேன்கொல்** - புலத்தல், புல்லுதல் ஆகிய இரு செயல்களையும் சேர்த்துச் செய்வேனோ?

(க-ரை): என்னுடைய காதலர் திரும்பி வருவாரானால், நான் அவருடன் பிணங்கிக்கொண்டாலும் பிணங்கிக்கொள்வேன்; அவரைக் கட்டித் தழுவினாலும் தழுவிக்கொள்ளுவேன்; புலத்தல், புல்லுதல் ஆகிய இரு செயல்களையும் சேர்த்துச் செய்தாலும் செய்வேன் என்று தலைவி, தலைவன் விரைவில் வரக்கூடும் என்று கூறிய தோழியிடம் கூறுகிறாள். (1267)

**8. வினைகலந்து வென்றுஈக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து.**

வேந்தன், வினை கலந்து, வென்று ஈக; மனைகலந்து, மாலை, விருந்து, அயர்கம்.

(பொ-ரை): வேந்தனானவன், மேற்கொண்ட போரினை விடாமல் செய்து விரைவில் வெற்றி பெறுவானாக; அவன் வென்றால், நானும் மனைவியுமாக ஒன்றுகூடி, அன்று மாலைப் பொழுதே, இன்ப விருந்து நடத்துவோமாக.

வினைகலந்து - மேற்கொண்ட போரினைச் செய்து; **வென்றீக** - விரைவில் வெற்றிபெறுவானாக; **மனைகலந்து** - நானும் மனைவியுமாக ஒன்றுகூடி, **விருந்துஅயர்கம்** இன்பவிருந்து நடத்துவோமாக.

(க-ரை): வேந்தன் மேற்கொண்ட போரினைச் செய்து விரைவில் வெற்றி பெறுவானேயானால், நான் அன்று மாலைப் பொழுதே மனைவியோடு கூடி, விருந்து நடத்துவேன் என்று தலைவன், வினை முடிக்கும் இறுதிக்கட்டத்தில், தனக்குத்தானே கூறிக்கொள்கிறான். (1268)

**9. ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேண் சென்றார்
வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு.**

சேண் சென்றார், வருநாள், வைத்து, ஏங்குபவர்க்கு, ஒரு நாள், எழுநாள் போல், செல்லும்.

(பொ-ரை): நெடுந்தொலைவு பிரிந்து சென்ற காதலர், திரும்பிவரக் குறித்துவைத்த நாளை, மனத்தில் நினைத்துப் பார்த்து வருந்துகின்ற ஒருநாள் கழிவது என்பது, பல நாட்கள் கழிவதுபோல் நெடியதாகத் தோன்றுகின்றது.

சேண் - நெடுந்தொலைவு; **சென்றார்** - பிரிந்துசென்ற காதலர்; **வருநாள்** - திரும்பிவரக் குறித்துவைத்த நாளை; **வைத்து** - மனத்தில் நினைத்துப் பார்த்து; **ஏங்குபவர்க்கு** - வருந்துகின்ற என்னைப்போன்ற மகளிர்க்கு.

(க-ரை): நெடுந்தொலைவுப் பிரிந்து செல்லும் காதலர், திரும்பிவரக் குறித்துவைத்த நாளை, தம் மனத்தில் கொண்டு, நினைத்துப் பார்க்கும் மகளிர்க்கு ஒருநாள் செல்லுவது, பல நாட்கள் நீடித்துச் செல்வதுபோல் தான் தோன்றும் என்று, தலைவி தன் நிலைமையை எண்ணித், தனக்குத்தானே கூறிக்கொள்கிறாள். (1269)

**10. பெறின்என்னாம் பெற்றக்கால் என்னாம் உறின்என்னாம்
உள்ளம் உடைந்துஉக்கக் கால்.**

உள்ளம் உடைந்து, உக்கக் கால், பெறின் என்ஆம்? பெற்றக்கால் என்ஆம்? உறின் என் ஆம்?

(பொ-ரை): காதலியானவள் பிரிவுத் துன்பத்தைத் தாங்காமல், மனம் உடைந்து, நிலை அழிந்துபோய் விடுவாளேயானால், பின்னர் நம்மை அவள் பெறுவதால் என்ன பயன்? அவளை நான் பெற்றுவிடுவதால்தான் என்ன பயன்? பெற்று அவளை மெய்யுறக் கலப்பதால்தான் என்ன பயன்? ஒன்றுமில்லை.

உக்கக்கால் - தன் நிலை அழிந்துபோய் விடுவாளேயானால்; **பெறின்** - நம்மை அவள் பெறுவதால்தான்; **என்ஆம்** - என்ன பயன்; **பெற்றக்கால்** - அவளை நான் பெற்றுவிடுவதனால்; **உறின்** - மெய்யுறக் கலப்பதால்.

(க-ரை): காதலி, பிரிவுத் துன்பத்தைத் தாங்க முடியாமல் தன் நிலையழிந்துவிடுவாளேயானால், பின்னர்ப் போய் அவள் என்னைப் பெறுவதாலோ, நான் அவளைப் பெறுவதாலோ, பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை என்று தலைவன், விரைந்து சென்று தலைவியைக் காண வேண்டும் என்ற எண்ணத்தில் தனக்குள்ளே கூறிக்கொள்கிறான். (1270)

128. குறிப்பு அறிவுறுத்தல்

குறிப்பு அறிவுறுத்தல் என்பது, தலைவன், தலைவியோடு கூடி உறையும்போது, தலைவன், தலைவி, தோழி ஆகியோர் ஒருவர் குறிப்பினை மற்ற ஒருவருக்கு அறிவுறுத்தல் எனப்படும்.

**1. கரப்பினும் கைஇகந்து ஒல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதொன்று உண்டு.**

கரப்பினும், ஒல்லா, கைஇகந்து, உண்கண், உரைக்கல், உறுவது, ஒன்று, உண்டு.

(பொ-ரை): நீ சொல்லாமல் மறைத்தாலும், அதற்கு உடன்படாமல் உன்னையும் மீறி உன்னுடைய மை தீட்டப்பட்ட கண்கள், எனக்குச் சொல்லக்கூடிய செய்தி ஒன்று இருக்கின்றது; அதை நான் அறிவேன்!

கரப்பினும் - நீ சொல்லாமல் மறைத்தாலும்; **ஒல்லா** - அதற்கு உடன்படாது; **கைஇகந்து** - உன்னையும் மீறி; **மை உண்கண்** - உன்னுடைய மை தீட்டப்பட்ட கண்கள்; **உரைக்கல்** - எனக்குச் சொல்லக்கூடிய; **உறுவது ஒன்று** - செய்தி ஒன்று.

(க-ரை): நீ எனக்குச் சொல்லாமல் மறைத்தாலும், உன்னையும் மீறி உன்னுடைய கண்கள் எனக்குச் செய்தி ஒன்றனைச் சொல்ல இருக்கின்றன என்பதை நான் அறிவேன் என்று, தலைவன், பிரிந்துவிடுவானோ என்று கருதி வேறுபாடு கொண்ட தலைவியின் போக்கைக் குறிப்பால் அறிந்துகொண்டு, தலைவியிடம் கூறுகிறான். (1271)

**2. கண்நிறைந்த காரிகைக் காம்புஏர்தோள் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது.**

கண் நிறைந்த, காரிகைக், காம்பு ஏர், தோள், பேதைக்குப், பெண் நிறைந்த, நீர்மை, பெரிது.

(பொ-ரை): என் கண்களை நிறைவு செய்யும் அழகையும், மூங்கில் போன்ற தோள்களையும் உடைய என் காதலிக்குப் பெண்களிடம் நிறைந்துள்ள மடம் என்ற பண்பு, மிக மிகுதியாகவே உள்ளது.

காரிகை - அழகையும்; **காம்புஏர்** - மூங்கிலைப் போன்ற; **பேதைக்கு** - என் காதலிக்கு; **பெண் நிறைந்த** - பெண்களிடம் நிறைந்துள்ள; **நீர்மை** - மடம் என்ற பண்பு.

(க-ரை): அழகான தோற்றத்தையும், மூங்கிலைப் போன்ற தோள்களையும் உடைய என் காதலியிடம் மடம் என்னும் பெண்களுக்குரிய பண்பு நிரம்பவே இருக்கின்றது என்று தலைவன், தலைவி தன் வேட்கையை நாணத்தால் வெளியிடாத நிலையில் தோழியிடம் கூறுகிறான். (1272)

**3. மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன்று உண்டு.**

மணியில், திகழ்தரு, நூல்போல், மடந்தை அணியில், திகழ்வது, ஒன்று, உண்டு.

(பொ-ரை): கோக்கப்பட்ட பளிங்கு மணிக்குள்ளே திகழ்ந்து காணப்படுகின்ற நூலினைப்போல இம்மடந்தையின் அழகுக்குள்ளே திகழும் குறிப்பு ஒன்று இருக்கிறது.

மணியில் - கோக்கப்பட்ட பளிங்கு மணிக்குள்ளே; **திகழ்தரு** - விளங்கிக் காணப்படுகின்ற; **அணியில்** - அழகுக்குள்ளே; **ஒன்று** - ஒரு குறிப்பு; **உண்டு** - இருக்கிறது.

(க-ரை): பளிங்கு மணிக்குள்ளே விளங்கும் நூல் எப்படி வெளியே தெரிகிறதோ, அப்படியே இந்த அழகிய மடந்தையின் மனத்திற்குள்ளே விளங்கும் குறிப்பு ஒன்றும் தெரிகிறது என்று தலைவன், தலைவியின் கருத்தறியும் நோக்கோடு தோழியிடம் கூறுகிறான். (1273)

**4. முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதுஒன்று உண்டு.**

முகை மொக்குள், உள்ளது, நாற்றம் போல், பேதை, நகை மொக்குள், உள்ளது, ஒன்று, உண்டு.

(பொ-ரை): இதழ் விரியாத அரும்பு மொக்குக்குள் மறைந்திருக்கும் நறுமணத்தைப்போல், இந்த இளம் பெண்ணின் வாயிதழ் விரியாமல் நகைக்க முயலும் முகிழ்ப்பினுக்குள் மறைந்திருக்கக்கூடிய குறிப்பு ஒன்று இருக்கிறது.

முகைமொக்குள் - இதழ் விரியாத அரும்பு மொக்குக்குள்; **நாற்றம் போல்** - நறுமணத்தைப் போல; **பேதை** - இந்த இளம்

பெண்ணின்; **நகைமொக்கு** - வாய் இதழ் விரியாமல் நகைக்க முயலும் முகிழ்ப்பினுக்குள்.

(க-ரை): மலராத அரும்பு மொக்குக்குள் எப்படி நறுமணம் இருக்கிறதோ, அப்படியே சிரிக்காத நகைப்புக்குள் குறிப்பு ஒன்று இருக்கிறது என்று தலைவன், தலைவியின் உள்ளக் கருத்தை அறிய வேண்டி, தோழியிடம் கூறுகிறான். (1274)

5. செறிதொடி செய்துஇறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கு மருந்தொன்று உடைத்து.

செறிதொடி, செய்து, இறந்த, கள்ளம், உறுதுயர், தீர்க்கு மருந்து, ஒன்று, உடைத்து.

(பொ-ரை): நெருங்கிய வளையல்களையுடைய என்னுடைய காதலி, என்னை மையல் கொள்ளும்படிச் செய்துவிட்டுச் சென்ற அவளது கள்ளத்தனமான குறிப்பு, என்னுடைய மிகுந்த துயரத்தினை நீக்குகின்ற மருந்து ஒன்றனை உடையதாக இருக்கின்றது.

செறிதொடி - நெருங்கிய வளையல்களையுடைய என்னுடைய காதலி; **கள்ளம்** - கள்ளத்தனமான குறிப்பு; **உறுதுயர்** - என்னுடைய மிகுந்த துயரத்தினை.

(க-ரை): என்னுடைய காதலி என்னை மையல் கொள்ளும் படிச் செய்துவிட்டுச் சென்ற கள்ளத்தனமான குறிப்பு, எனது காதல் வேட்கைத் துயரத்தைப் போக்கும் மருந்தைக் கொண்டிருக்கிறது என்று தலைவன், தலைவியின் கருத்தறியும் நோக்கோடு தோழியிடம் கூறுகிறான். (1275)

6. பெரிதுஆற்றிப் பெட்பக் கலத்தல் அரிதுஆற்றி
அன்பின்மை சூழ்வது உடைத்து.

பெரிது ஆற்றிப், பெட்பக் கலத்தல், அரிது ஆற்றி, அன்பு இன்மை சூழ்வது, உடைத்து.

(பொ-ரை): காதலர் வந்து, என் பிரிவுத் துன்பத்தினை, மிகவும் ஆற்றி, நான் மகிழும்படிக் கூடுகின்ற கலவியானது, அரிதாகிய பிரிவை மீண்டும் செய்து, பின்னர் அன்பில்லாமல் அவர் கைவிட எண்ணுகின்ற குறிப்பை உடையதாக இருக்கிறது.

பெட்பக்கலத்தல் - நான் மகிழும்படி கூடுகின்ற கலவியானது; **சூழ்வது** - அவர் கைவிட எண்ணுகின்ற குறிப்பை; **உடையது** - உடையதாக இருக்கின்றது.

(க-ரை): காதலர் என் பிரிவுத் துன்பத்தை மாற்றி நான் மகிழும்படிக் கூடுவதானது, மீண்டும் அரிய அந்த பிரிவுத் துன்பத்தை அவர் உண்டாக்கி, என்னைக் கைவிட எண்ணுகின்ற குறிப்பை உடையதாக இருக்கின்றது என்று தலைவி, தலைவனின் குறிப்பறிந்து தோழியிடம் கூறுகிறாள். (1276)

**7. தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை.**

தண்ணம் துறைவன், தணந்தமை, நம்மினும், முன்னம், வளை, உணர்ந்த.

(பொ-ரை): குளிர்ந்த நீர்த் துறையை உடைய காதலர், என்னை மெய்யால் கூடியிருந்து, மனத்தால் பிரிந்தமையை நான் உணர்வதற்கு முன்னமேயே குறிப்பால் அறியக்கூடிய முறையில் கழலும் என் வளையல்கள், தெரிந்து கொண்டிருக்கின்றன.

தண்ணம் - குளிர்ந்த; **துறைவன்** - நீர்த் துறையையுடைய காதலன்; **தணந்தமை** - மெய்யால் கூடியிருந்து மனத்தால் பிரிந்தமையை; **உணர்ந்த** - உணர்ந்து கொண்டிருக்கின்றன.

(க-ரை): என் காதலர் உடம்பால் கூடியிருந்து, உள்ளத்தால் பிரிந்தமையை, நான் உணர்வதற்கு முன்னாலேயே எனது கழலும் வளையல்கள் உணர்ந்திருக்கின்றன என்று தலைவி, தலைவனின் குறிப்பறிந்து தோழியிடம் கூறுகிறாள். (1277)

**8. நெருநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து.**

எம் காதலர், நெருநற்றுச் சென்றார், யாமும், எழுநாளேம், மேனி பசந்து.

(பொ-ரை): என்னுடைய காதலர் நேற்றுதான் பிரிந்து சென்றார்; ஆனால், அக்குறிப்பினை முன்கூட்டியே அறிந்த நானும், பல நாட்களாகவே, உடம்பில் பசலை நிறத்தைக் கொண்டிருக்கிறேன்.

நெருநற்று - நேற்றுதான்; **சென்றார்** - பிரிந்து சென்றார்; **பசந்து** - பசலை நிறத்தை அடைய; **எழுநாளேம்** - பல நாட்களாகவே கொண்டிருக்கிறேன்.

(க-ரை): என் காதலர் நேற்றுதான் என்னைவிட்டுப் பிரிந்து சென்றார் என்றாலும், அக்குறிப்பினை முன்கூட்டியே அறிந்த நானும் உடலில் பசலை நிறத்தைப் பல நாட்களாகவே கொண்டிருக்கிறேன் என்று தலைவி, தலைவனின் உள்ளக்குறிப்பினை அறிந்து தோழியிடம் கூறுகிறாள். (1278)

9. தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி அஃதுஆண்டு அவள்செய் தது.

தொடிநோக்கி, மென்தோளும், நோக்கி, அடிநோக்கி, ஆண்டு, அவள் செய்தது, அஃது.

(பொ-ரை): பிரிவினால் வளையல்கள் கழலுமென்று கருதி அவற்றை நோக்கி, அதற்குக் காரணமாக அவளுடைய தோள்களும் மெலியும் என்று கருதி அவற்றையும் நோக்கி, அவை தம்மைக் காக்கக் காதலருடன் நடக்க வேண்டும் என்பதற்காகத் தன் அடிகளையும் நோக்கி, அவ்விடத்தே தலைவி செய்தது உடன்போக்கைக் குறிப்பதாக இருந்தது.

தொடி - தோள் வளையல்களை; **ஆண்டு** - அவ்விடத்தில்; **அவள்** - தலைவி; **அஃது** - உடன்போக்கைக் குறிப்பதாக இருந்தது.

(க-ரை): தலைவி, பிரிவை எதிர்பார்த்துக் கழலும் வளையல் களையும் நோக்கி, மெலிகின்ற தோள்களையும் நோக்கி, நடந்து செல்லக்கூடிய தன் காலடிகளையும் நோக்கியது, அவள் உடன்போக்கை உணர்த்தும் குறிப்பினைக் கொண்டதாக இருந்தது என்று, தோழி, தலைவியின் நிலைமையறிந்து தலைவனிடம் கூறுகிறாள். (1279)

10. பெண்ணினால் பெண்மை உடைத்துஎன்ப கண்ணினால் காமநோய் சொல்லி இரவு.

கண்ணினால், காம நோய் சொல்லி, இரவு, பெண்ணினால், பெண்மை உடைத்து, என்ப.

(பொ-ரை): தலைவி தன் கண்களினால் காதல் வேட்கை நோயைக் குறிப்பால் தெரிவித்து, உடன்போவதற்கு இசைந்து, காதலரை இரத்தல் என்பது, இயல்பாக உள்ள பெண் தன்மைக்கு மேலும் பெண் தன்மையைக் கூடுதலாக உடையதாகும் என்று கூறுவர் அறிந்தோர்.

காம நோய் - காதல் வேட்கை நோயை; **இரவு** - உடன் போவதற்கு இசைந்து இரத்தல்; **என்ப** - என்று கூறுவர் அறிந்தோர்.

(க-ரை): தலைவி, தன் கண்களினால் காதல் வேட்கை நோயைக் குறிப்பால் தெரிவித்தும், உடன் போவதற்கு இசைந்து குறிப்பால் இரந்தும் தன் பெண் தன்மையை வெளிப்படுத்தி யிருக்கிறாள் என்று தோழி, தலைவியின் குறிப்பைத் தலைவனிடம் உணர்த்துகிறாள். (1280)

129. புணர்ச்சி விதும்பல்

புணர்ச்சி விதும்பல் என்பது, தலைவனும் தலைவியும் கூடியின்பம் பெற விழைதல் எனப்படும்.

**1. உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்குஇல் காமத்திற்கு உண்டு.**

உள்ளக் களித்தலும், காண மகிழ்தலும், கள்ளுக்கு இல், காமத்திற்கு உண்டு.

(பொ-ரை): நினைக்கும் அளவில் களிப்பு அடைதலும், காணும் அளவில் மகிழ்ச்சி அடைதலும் ஆகிய இவ்விரண்டும் கள் உண்பவர்களுக்கு இல்லை; காதல் இன்பம் உடையவர்களுக்கு அவை உண்டு.

உள்ள - நினைக்கும் அளவில்; **காண** - காணும் அளவில்.

(க-ரை): நினைக்கும் போதே களிப்பு எய்துதலும், காணும் போதே மகிழ்ச்சி எய்துதலும் ஆகிய இரண்டு தன்மைகளும் கள் உண்பவர்களுக்கு இல்லை; ஆனால் காதல் இன்பம் உடையவர்களுக்கு அவை உண்டு என்று தலைவி, பிரிவுக்குறிப்பினை உணர்த்திய தலைவனோடு புலவாமைக்குக் காரணம் யாது என்று கேட்ட தோழியிடம் கூறுகிறாள். (1281)

**2. தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்.**

காமம், பனைத்துணையும், நிறையவரின், தினைத்துணையும், ஊடாமை, வேண்டும்.

(பொ-ரை): மகளிர்க்குக் காதல் வேட்கையானது, பனையின் அளவைக்காட்டிலும் மிகுதியாகவே தோன்றுமாயினும், அவர்கள் தம் காதலரோடு தினையின் அளவுகூடச் சிறிதும் ஊடாமல் இருக்க வேண்டும்.

காமம் - மகளிர்க்குக் காதல் வேட்கையானது; **பனைத் துணையின்** - பனையின் அளவைக் காட்டிலும்; **தினைத் துணையும்** - தினையின் அளவுகூட; பனை அளவில் பெரிது என்பதற்கும், தினை அளவில் சிறிது என்பதற்கும் எடுத்துக்காட்டு.

(க-ரை): மகளிர்க்கு மிகுதியான அளவுக்குக் காதல் வேட்கை ஏற்பட்டுவிட்டாலும், அப்பொழுது காதலரோடு சிறிதளவுகூட ஊடல் கொள்ளாமல் இருப்பதுதான் முறையாகும் என்று தலைவி, பிரிவுக் குறிப்பு உணர்த்திய பிறகும் தலைவனோடு பிணங்கிக் கொள்ளாமைக்குக் காரணம் யாது என்று வினவிய தோழியிடம் கூறுகிறாள். (1282)

**3. பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமையல கண்.**

பேணாது, பெட்பவே, செய்யினும், கொண்கனைக் காணாது, கண், அமையல.

(பொ-ரை): என்னை விரும்பாமல் விலக்கி வைத்துவிட்டுத் தன் மனம் விரும்புகின்றவற்றையே செய்வாரானாலும், அக்கணவரைக் காணாமல், எனது கண்கள் அமைதி பெறுவதில்லை.

பேணாது - என்னை விரும்பாமல் விலக்கி வைத்துவிட்டு; **பெட்பவே** - தன் மனம் விரும்புகின்றவற்றையே; **கொண்கனை** - கணவனை; **அமையல** - அமைதி பெறுவதில்லை.

(க-ரை): என்னை விரும்பாமல் புறக்கணித்துவிட்டுக் கணவர், தம் விருப்பப்படியே செயல்களையெல்லாம் செய்வார் என்றாலும், அவரை நான் காணாமல் இருக்க முடியாது என்று தலைவி, தலைவனின் பிரிவுக் குறிப்புத் தெரிந்த பின்னரும் அவனோடு ஊடாமல் இருப்பது ஏன் என்று கேட்ட தோழியிடம் கூறுகிறாள். (1283)

**4. ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு.**

தோழி, ஊடற்கண், சென்றேன், மன்; என் நெஞ்சு, அதுமறந்து, கூடற்கண், சென்றது.

(பொ-ரை): தோழியே! நான் காதலருடன் ஊடிக் கொள்ள வேண்டும் என்றுதான் அவரிடம் சென்றேன்; ஆனால், எனது நெஞ்சமோ அவரைக் கண்டதும், அந்த ஊடலினை மறந்துவிட்டு, அவருடன் கூடுவதற்குச் சென்றுவிட்டது.

ஊடற்கண் - காதலருடன் பிணங்கிக் கொள்ள வேண்டும் என்றுதான்; **கூடற்கண்** - அவரோடு கூடுவதற்கு; **மன்** - ஒழியிசை.

(க-ரை): தோழியே! நான் காதலருடன் ஊடிக் கொள்ள வேண்டும் என்று நினைத்துத்தான் அவரிடம் சென்றேன்; ஆனால், என் நெஞ்சத்தால், அவரைக் கண்டவுடன், அவரோடு கூடிக்கொள்ள வேண்டும் என்ற விருப்பந்தான் எனக்கு ஏற்பட்டது என்று தலைவி, தலைவனின் பிரிவு, குறிப்பால் உணர்த்தப்பட்ட பிறகும் அவனை விரும்புவானேன் என்று வினவிய தோழியிடம் கூறுகிறாள். (1284)

**5. எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.**

எழுதுங்கால், கோல்காணாக், கண்ணேபோல், கொண்கன், பழி, கண்டஇடத்து, காணேன்.

(பொ-ரை): கண்களுக்கு மை தீட்டும்போது, தீட்டும் கோலைக் காண முடியாத கண்களைப்போல, கணவருடைய குற்றங்களை, அவரை நேரில் காணும்போது காண முடியாதவளாக ஆகின்றேன்.

எழுதுங்கால் - கண்களுக்கு மை தீட்டும்போது; **கோல்** - தீட்டும் கோலை; **கொண்கன்** - கணவருடைய; **பழி** - குற்றங்களை; **கண்டஇடத்து** - அவரை நேரில் பார்க்கும்போது; **காணேன்** - காண முடியாதவளாக ஆகின்றேன்.

(க-ரை): கண்களுக்கு மை தீட்டும்போது, எப்படித் தீட்டும் கோலை காண முடியவில்லையோ, அப்படியே என் கணவரை நான் நேரில் காணும்போது, அவரது குற்றங்களை என்னால் காண முடிவதில்லை என்று தலைவி, தலைவனோடு தான் ஊட முடியாதவளாய் இருக்கும் தன் இயல்பைத் தோழியிடம் கூறுகிறாள். (1285)

**6. காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை.**

காணுங்கால், தவறாய, காணேன்; காணாக்கால், தவறு, அல்லவை, காணேன்.

(பொ-ரை): காதலரை நேரில் காணும்போது, அவரது தவறுகளையெல்லாம் காண முடியாதவளாக ஆகின்றேன்; அவரை நேரில் காணாதபோது, அத்தவறுகளைத் தவிர, வேறு ஒன்றையும் காண முடியாதவளாக ஆகின்றேன்.

காணுங்கால் - காதலரை நேரில் காணும்போது; **தவறாய** - அவருடைய தவறுகளையெல்லாம்; **காணாக்கால்** - அவரை நேரில்

காணாதபோது; **தவறு அல்லவை** - தவறுகளைத்தவிர வேறு ஒன்றையும்.

(க-ரை): காதலரை நேரில் காணும்போது, அவருடைய தவறுகளை எல்லாம் என்னால் காண முடிவதில்லை; அவரை நேரில் காணாதபோது, தவறுகளைத்தவிர வேறு எதையும் என்னால் காணமுடிவதில்லை என்று தலைவி, தன் இயல்பைத் தோழியிடம் கூறுகிறாள். (1286)

7. உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்துஎன் புலந்து.

உய்த்தல் அறிந்து, புனல் பாய்பவரேபோல், பொய்த்தல் அறிந்து, புலந்து, என்.

(பொ-ரை): வெள்ளம் தம்மை இழுத்துச் செல்லக்கூடும் என்பதை அறிந்திருந்தும், ஓடும் நீரில் பாய்ந்து, விளையாடி இன்புற விழைகின்றவர்களைப்போல, பிணங்குவது பயன்படாது என்பதை நான் அறிந்திருந்தாலும், அவரோடு கூடி இன்புற விழையும் நான், பிணங்குவது என்பது எப்படி முடியும்?

உய்த்தல் - வெள்ளம் இழுத்துச் செல்லக்கூடும் என்பதை; **அறிந்து** - அறிந்திருந்தும்; **பொய்த்தல்** - பிணங்குவது பயன்படாது என்பதை; **புலந்து** - பிணங்கிக் கொள்வதால்; **என்** - பயன் என்ன ஏற்படக்கூடும்?

(க-ரை): வெள்ளம் இழுத்துக்கொண்டு செல்லும் என்பதை அறிந்திருந்த பிறகும் அதில் பாய்ந்தால் எப்படிப்பட்ட நிலையோ, அப்படிப்பட்ட நிலையே காதலரோடு பிணங்கிக் கொள்வதால் பயன் எதுவும் ஏற்படாது என்பதைத் தெரிந்திருந்தும், அவரோடு பிணங்கிக்கொள்வதும் ஆகும் என்று தலைவி, தன் இயல்பைத் தோழியிடம் கூறுகிறாள். (1287)

8. இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்அற்றே கள்வநின் மார்பு.

கள்வ! நின் மார்பு, இளித்தக்க இன்னா, செயினும், களித்தார்க்குக், கள் அற்றே.

(பொ-ரை): உள்ளங்கவர் கள்வரே! உம்முடைய மார்பானது, இழிவினைத் தரத்தக்க துன்பங்கள் பலவற்றைச் செய்தாலும், தன்னை

உண்டு களிப்பவர்களுக்கு மேன்மேலும் விருப்பத்தை உண்டாக்கும் கள்ளினைப்போன்று இருப்பதாகும்.

இளித்தக்க இன்னா - இழிவு தரத்தக்க துன்பங்கள் பலவற்றை; **துன்பங்கள் பல** - நாணின்மை, நிறையின்மை, பண்பின்மை, உயர்வின்மை முதலாயின; **அற்றே** - போன்றதாகும்.

(க-ரை): தலைவரே! உம்முடைய மார்பானது, இழிவு தரத்தக்க துன்பங்கள் பலவற்றைத் தந்தாலும், கள்ளுண்பவர்களுக்கு அதனால் கேடுகள் பல உண்டு என்றாலும், மேலும் மேலும் அது விரும்பப் படுவதைப்போல, தலைவியாலும் விரும்பப்படுகின்றது என்று தோழி, தலைவியின் கூடி முயங்கும் வேட்கையைத் தலைவனிடம் கூறுகிறாள். (1288)

9. மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.

காமம், மலரினும் மெல்லிது; அதன், செவ்வி, தலைப்படுவார், சிலர்.

(பொ-ரை): காதல் இன்பமானது, மலரைக்காட்டிலும் மென்மையான தன்மையை உடையதாகும்; அதனை நயத்தோடு நுகரும் இயல்பினை, அறிந்து செயல்படுபவர்கள் உலகத்தில் ஒரு சிலரேயாவார்கள்.

காமம் - காதல் இன்பமானது; **செவ்வி** - நயத்தோடு நுகரும் இயல்பினை; **தலைப்படுவார்** - அறிந்து செயல்படுபவர்கள்.

(க-ரை): காதல் இன்பமானது, மலரைவிட மென்மையான தன்மையைக் கொண்டதாகும்; அதனை நயத்தோடு நுகரும் இயல்புஅறிந்து செயல்படுவோர் மிகச் சிலரேயாவர் என்று, தலைவன், உணர்த்த உணராமல் ஊடலுற்ற தலைவியின் நிலைபற்றித் தோழியிடம் கூறுகிறான். (1289)

10. கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப்பு உற்று.

கண்ணின் துனித்தே, புல்லுதல், என்னினும், தான், விதுப்பு உற்றுக், கலங்கினாள்.

(பொ-ரை): என்னுடைய காதலி, தன் கண்ணால் மட்டும் சிறிது ஊடியிருந்து, பின்பு அதனையும் மறந்து, கூடி முயங்குவதில்

என்னைக்காட்டிலும் அவள் விரைந்து விரும்பி என்னோடு கலந்துவிட்டாள்.

துனித்தே - பிணங்கியவளாக இருந்து; **புல்லுதல்** - கூடி முயங்குவதில்; **விதுப்புஉற்று** - விரும்பி; **கலங்கினாள்** - என்னோடு கலந்துவிட்டாள்.

(க-ரை): காதலி தன் கண்ணினால் மட்டும் என்னோடு ஊடி இருந்தாள்; பின்னர் அதையும் மறந்து என்னோடு கூடி முயங்குவதில் என்னைவிட அவள் மிகவான விரைவையும், விருப்பத்தையும் காட்டினாள் என்று தலைவன், தலைவியின் காதல் வேட்கையின் விழைவு பற்றித் தோழியிடம் கூறுகிறான். (1290)

130. நெஞ்சொடு புலத்தல்

நெஞ்சொடு புலத்தல் என்பது, கூடி முயங்க விரும்புகின்ற நெஞ்சத்தோடு தலைவன் புலத்தல் பற்றியும், தலைவி புலத்தல் பற்றியும் கூறுதல் எனப்படும்.

1. அவர்நெஞ்சு அவர்க்குஆதல் கண்டும் எவன்நெஞ்சே நீஎமக்கு ஆகா தது.

நெஞ்சே! அவர் நெஞ்சு, அவர்க்கு ஆதல், கண்டும், நீ, எமக்கு ஆகாதது, எவன்?

(பொ-ரை): நெஞ்சமே! என்னுடைய காதலருடைய நெஞ்சமானது, என்னை நினையாமல், அவருக்காகவே இருப்பதைக் கண்டிருந்தும், நீ எனக்காக இருக்காமல் அவரை நினைப்பது என்ன காரணம் பற்றியோ?

அவர்க்கு ஆதல் - அவருக்காகவே இருப்பதை; **கண்டும்** - கண்டிருந்தும்; **ஆகாதது** - இருக்காமல்; **எவன்** - என்ன காரணம் பற்றியோ?

(க-ரை): நெஞ்சமே! என்னுடைய காதலருடைய நெஞ்சமானது அவருக்காகவே இருப்பதை அறிந்திருந்தும் நீ எனக்காக இல்லாமல், அவரையே நினைத்துக் கொண்டிருப்பது எதற்காக என்று தலைவி, தலைவனிடம் தவறு இருப்பதைக்கண்டும், அதற்காக அவரோடு பிணங்கிக் கொள்ளாமல் இருப்பதைப் பார்த்து அதனைக் கேட்கிறாள். (1291)

2. உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச் செறாஅர்எனச் சேறிஎன் நெஞ்சு.

என்நெஞ்சு! உறாஅதவர்க், கண்ட கண்ணும், அவரைச், செறார் எனச், சேறி.

(பொ-ரை): என் நெஞ்சமே! என்னிடம் அன்புகொள்ளாத காதலரைக் காணும்போது, அவர் சினந்துகொள்ளமாட்டார் என்று எண்ணி, அறியாமை காரணமாக அவரிடம் போய்ச் சேருகின்றாயே! இது என்னே விந்தை!

உறாஅதவர் - என்னிடம் அன்பில்லாத காதலர்; **கண்ட கண்ணும்** - காணும்போது; **செறார்** - சினந்து கொள்ளமாட்டார்; **சேறி** - போய்ச் சேருகின்றாயே.

(க-ரை): என் நெஞ்சமே! என்னிடம் அன்புகொள்ளாத காதலரைக் காணும்போது, அவர் சினந்துகொள்ளமாட்டார் என்று கருதி அவரிடம் போய்ச் சேருகின்றாயே! இதைவிட ஓர் அறியாமை இருக்க முடியுமோ? என்று தலைவி, அன்பில்லாத தலைவனோடு பிணங்கிக் கொள்ளாத நெஞ்சைப் பார்த்துக் கேட்கிறாள். (1292)

**3. கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல்.**

நெஞ்சே! நீ பெட்டாங்கு, அவர்பின் செலல், கெட்டார்க்கு, நட்டார், இல், என்பதோ.

(பொ-ரை): நெஞ்சமே! என்னைக் கேளாமல் நீ விரும்பியவாறே காதலரின்பின் செல்வதற்குக் காரணம், கெட்டொழிந்தவர்களுக்கு உலகத்தில் வேறு நண்பர்கள் யாரும் இல்லை என்ற எண்ணமோ? சொல்லுவாயாக!

பெட்டாங்கு - விரும்பியவாறே; **கெட்டார்க்கு** - கெட்டொழிந்தவர்களுக்கு; **நட்டார்** - நண்பர்கள்; **இல்** - உலகத்தில் இல்லை; **என்பதோ** - என்ற எண்ணமோ?

(க-ரை): நெஞ்சமே! என்னைக் கேட்காமல் நீ உன் விருப்பப்படியே காதலரின்பின் செல்லுவதற்குக் காரணம், கெட்டொழிந்தவர்களுக்கு உலகத்தில் நண்பர்கள் எவரும் இருக்கமாட்டார் என்ற எண்ணமோ? என்று தலைவி, தன் காதலரை வெறுத்தொதுக்காத நெஞ்சைப்பார்த்துக் கேட்கிறாள். (1293)

**4. இனிஅன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.**

நெஞ்சே! துனி செய்து, மற்று துவ்வாய் காண், இனி, அன்ன, நின்னொடு சூழ்வார், யார்.

(பொ-ரை): நெஞ்சமே! நீ காதலருடன் பிணங்குதல் செய்து, பிறகு அதன் பயனை நுகரமாட்டாய்; இனிமேல் அத்தகையவற்றைப் பற்றி உன்னோடு கலந்து எண்ணப் போகின்றவர்கள் யார் இருக்கிறார்கள்?

துனி செய்து - காதலருடன் பிணங்குதல் செய்து; **துவ்வாய்** - பிறகு அதன் பயனை நுகரமாட்டாய்; **இனி** - இனிமேல்; **அன்ன** - அத்தகைய நிலைமை பற்றி; **சூழ்வார்** - கலந்து எண்ணப் போகின்றவர்கள்.

(க-ரை): நெஞ்சமே! காதலரோடு நீ ஒரு நாளும் பிணங்கிக் கொள்ளப்போவதில்லை; இந்த நிலையில், இனி நான் உன்னோடு எதை எண்ணி என்ன முடிவுதான் எடுக்க முடியும் என்று தலைவி, தலைவனோடு ஊடிக்கொள்ள விரும்பாத நெஞ்சிடம் கூறுகிறாள். (1294)

**5. பெறாஅமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்
அறாஅ இடும்பைத்துஎன் நெஞ்சு.**

என் நெஞ்சு, பெறாஅமை அஞ்சும், பெறின், பிரிவு அஞ்சும், அறாஅ, இடும்பைத்து.

(பொ-ரை): என் நெஞ்சமானது, பிரிவின்போது காதலரைப் பெற முடியாமையால் அஞ்சியிருக்கும்; அவரைப் பெறும்போது, அவர் பிரிந்துசென்று விடுவாரோ என்று அஞ்சியிருக்கும்; இவ்வாறு அந்நெஞ்சம் நீங்காத துன்பம் உடையதாகும்.

பெறாஅமை - பிரிவின்போது, காதலரைப் பெற முடியாமையால்; **பெறின்** - காதலரைப் பெறும்போது; **பிரிவு** - பிரிந்து சென்றுவிடுவாரோ; **அறாஅ** - நீங்காத; **இடும்பைத்து** - துன்பத்தினை உடையதாகும்.

(க-ரை): என் நெஞ்சமானது பிரிவின்போது காதலரைப் பெற முடியாமல் தவிக்கின்றது; அவரைப் பெறும்போது, அவர் பிரித்துவிடுவாரோ என்று தவிக்கின்றது; எப்பொழுதும் அது துன்பத்தைக் கொண்டதாகவே இருக்கின்றது என்று தலைவி, தூதாக வந்த தோழியிடம் கூறுகிறாள். (1295)

**6. தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததுஎன் நெஞ்சு.**

தனியே இருந்து, நினைத்தக்கால், இருந்தது என் நெஞ்சு, என்னைத், தினிய.

(பொ-ரை): காதலரைப் பிரிந்து தனியே இருந்து கொண்டிருக்கும் நான், அவரது கொடுமைகளைப் பற்றி நினைக்கும் போது, என்னுடன் இருந்துகொண்டிருக்கின்ற என் நெஞ்சமானது, என்னைத் தின்னுவது போன்று துன்பம் செய்கின்றது.

தனியே இருந்து - காதலரைப் பிரிந்து தனியே இருந்து கொண்டிருக்கின்ற நான்; **நினைத்தக்கால்** - அவரது கொடுமைகளைப் பற்றி நினைக்கும் போது; **இருந்தது** - என்னுடன் இருந்து கொண்டிருக்கின்ற; **தினிய** - என்னைத் தின்னுவது போன்று துன்பம் செய்கின்றது.

(க-ரை): என்னுடன் இருந்து கொண்டிருக்கும் எனது நெஞ்சம், நான் தனியே இருந்துகொண்டு காதலரின் கொடுமைகளைப் பற்றி நினைக்கும்போது, உடனே என்னைத் தின்றுவிடுவது போன்று துன்பம் செய்கின்றது என்று தலைவி, தூதாக வந்த தோழியிடம் கூறுகிறாள். (1296)

7. நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சில் பட்டு.

அவர், மறக்கல்லா, என், மாணா, மட நெஞ்சில், பட்டு, நாணும், மறந்தேன்.

(பொ-ரை): காதலரை எவ்வகையிலும் மறக்க முடியாத என்னுடைய சிறப்பில்லாத மட நெஞ்சுடனே கூடி, நான் உயிரினும் சிறந்த நாணத்தையும் மறந்துவிட்டேன்.

மறக்கல்லா - மறக்க முடியாத; **மாணா** - சிறப்பில்லாத; **பட்டு** - கூடி.

(க-ரை): காதலரை மறக்காத, சிறப்பு இல்லாத அறிவற்ற என்னுடைய நெஞ்சுடன் சேர்ந்து நான் என் உயிரினும் மேலான நாணத்தையும் மறந்துவிட்டேன் என்று தலைவி, தலைவனுக்காகத் தூதாக வந்த தோழியிடம் கூறுகிறாள். (1297)

8. எள்ளின் இளிவாம்என்று எண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.

உயிர்க்காதல் நெஞ்சு, எள்ளின், இளிவாம், என்று, எண்ணி, அவர்திறம், உள்ளும்.

(பொ-ரை): உயிரின்மீது காதல்கொண்ட எனது நெஞ்சமானது, என்னை இகழ்ந்து சென்ற காதலரை, நான் இகழ்ந்தால், பின் அது எனக்கே இழிவாகும் என்று எண்ணி, அவருடைய பெருமையையே நினைத்துக் கொண்டிருக்கிறது.

எள்ளின் - இகழ்ந்துசென்ற காதலரை நான் இகழ்ந்தால்; **இளிவாம்** - அது எனக்கே இழிவாகும் என்று; **திறம்** - பெருமையினையே; **உள்ளும்** - நினைத்துக் கொண்டிருக்கும்.

(க-ரை): என்னை இகழ்ந்து பிரிந்துசென்ற காதலரை நான் இகழ்ந்தால், அது, எனக்கே இழிவுதரும் என்று கருதி எனது நெஞ்சமானது அவருடைய பெருமையைப் பற்றியே நினைத்துக்

கொண்டிருக்கும் என்று தலைவி, தலைவனிடமிருந்து தூதுவந்த தோழியிடம் கூறுகிறாள். (1298)

9. துன்பத்திற்கு யாரே துணையாவார் தாம்உடைய நெஞ்சம் துணைஅல் வழி.

துன்பத்திற்கு, தாம் உடைய, நெஞ்சம், துணைஅல் வழி, யாரே துணை ஆவார்.

(பொ-ரை): ஒருவருக்குத் துன்பம் வரும்போது அதை நீக்குவதற்கு, அவருடைய நெஞ்சம் அவருக்குத் துணையாக வராவிட்டால், வேறு யார்தான் துணையாக வருவார்கள்; ஒருவருமில்லை!

துன்பத்திற்கு - துன்பம் வரும்போது அதை நீக்குவதற்கு; **துணை அல்வழி** - துணையாக வராவிட்டால்; **துணை ஆவார்** - துணையாக வருபவர்கள்.

(க-ரை): ஒருவருக்குத் துன்பம் ஏற்படும்போது, அதனை நீக்குவதற்கு அவருடைய நெஞ்சம் அவருக்குத் துணையாக இருக்காவிட்டால், வேறு யார்தான் துணையாக இருப்பார்கள் என்று தலைவி, ஊடல் ஏற்பட்ட போது, மாறுபட்டு விளங்கும் நெஞ்சைப் பற்றித் தோழியிடம் கூறுகிறாள். (1299)

10. தஞ்சம் தமர்அல்லர் ஏதிலார் தாம்உடைய நெஞ்சம் தமர்அல் வழி.

தாம்உடைய, நெஞ்சம், தமர்அல்வழி, ஏதிலார், தமர்அல்லர், தஞ்சம்.

(பொ-ரை): ஒருவருக்கு, உரிமையாகப்பெற்ற அவரது நெஞ்சமே அவருக்கு உறவாகாதபோது, அயலார் உறவில்லாதவராக இருப்பது எளிதேயாகும்.

தமர்அல்வழி - உறவு ஆகாதபோது; **ஏதிலார்** - அயலார்; **தமர் அல்லர்** - உறவில்லாதவராக; **தஞ்சம்** - இருப்பது எளிதாகும்.

(க-ரை): ஒருவருக்கு உரிமையுடையதாக இருக்க வேண்டிய அவரது நெஞ்சமே, அவருக்கு உறவாக இல்லாதபோது, அயலார் உறவில்லாதவராக இருக்கிறார் என்பது வியப்புக்குரியது அன்று எனத் தலைவி, ஊடல் ஏற்பட்டபோது மாறுபாடு கொண்டு விளங்கும் நெஞ்சைப்பற்றித் தோழியிடம் கூறுகிறாள். (1300)

131. புலவி

புலவி என்பது, தலைவனும் தலைவியும் கூடி முயங்க விரும்பாமல், ஒருவரோடொருவர் புலக்கக் கருதிப் புலத்தல் பற்றிக் கூறுதல் எனப்படும்.

1. புல்லாது இராஅப் புலத்தை அவர்உறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது.

புல்லாது, இரா, புலத்தை, அவர்உறும், அல்லல்நோய், சிறிது காண்கம்.

(பொ-ரை): தலைவியே! நீ காதலரை விரைந்து சென்று தழுவாமல், இப்படியே இருந்துகொண்டு பிணங்கிக் கொள்வாயாக; அவர் அடையும் துன்ப நோயினைச் சிறிது நேரம் நாம் காண்போமாக!

புல்லாது - நீ விரைந்துசென்று காதலரைத் தழுவாமல்; **இரா** - இப்படியே இருந்துகொண்டு; **புலத்தை** - பிணங்கியிருப்பாயாக; **உறும்** - அடையும்; **அல்லல்நோய்** - துன்ப நோயினை; **புலவி** - ஊடல்; **புலத்தல்** - ஊடுதல்.

(க-ரை): தலைவி! நீ காதலரை விரைந்து சென்று தழுவாமல் இப்பொழுது இருக்கும் நிலையிலேயே இருந்துகொண்டு, அவரோடு பிணங்கிக் கொள்வாயாக! அவர் அடையும் துன்ப நோயினை நாம் சிறிது நேரம் காண்போமாக! என்று தோழி, தலைவனுக்குத் தூதாக வந்தவிடத்தில், தலைவியிடம் கூறுகிறாள். (1301)

2. உப்புஅமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்.

புலவி, உப்பு, அமைந்து, அற்றுஆல்; அது, சிறிது, நீளவிடல், மிக்குஅற்று, ஆல்.

(பொ-ரை): கலவிக்கு முன்பு உள்ள புலவியானது, உணவில் உப்பு அளவோடு அமைந்திருப்பதைப் போன்றதாகும்; அந்தப் புலவியைச் சிறிதளவு நீட்டித்தாலும், உணவில் உப்பினை மிகுதியாக இடுவது போன்றதாக அமைந்துவிடும்.

புலவி - பிணக்கு; ஊடல்; **உப்பு அமைந்து அற்று** - உணவில் உப்பு அளவோடு அமைந்திருப்பதைப் போன்றதாகும்;

நீளவிடல் - நீட்டித்தாலும்; **மிக்குஅற்று** - உணவில் உப்பினை மிகுதியாக இடுவது போன்றதாகும்; **ஆல்** - அசை.

(க-ரை): கலவிக்கு முன்பு உள்ள புலவியானது, அளவோடு இருக்க வேண்டும் என்றும், அளவுக்கு மீறிடுமேயானால், அது உணவில் அளவோடு போடப்படவேண்டிய உப்பு, அளவுக்கு மீறிய வகையில் போடப்படுவதோடு ஒக்கும் என்றும் தோழி, தலைவனுக்குத் தூதாக வந்து, தலைவியிடம் கூறுகிறாள். (1302)

3. அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.

தம்மைப், புலந்தாரைப், புல்லாவிடல், அலந்தாரை, அல்லல் நோய், செய்துஅற்று ஆல்.

(பொ-ரை): தம்மோடு ஊடிய மகளிரை அவ்வூடல் நீக்கி, அவர்களைத் தழுவாமல் விடுதல் என்பது, முன்பே துன்பத்தால் வருந்தியவரை மேலும் துன்ப நோய்க்கு ஆளாகச் செய்து வருத்துவது போன்றதாகும்.

தம்மை - தம்மோடு; **புலந்தாரை** - ஊடிய மகளிரை; **புல்லாவிடல்** - ஊடல் நீக்கி அவர்களைத் தழுவாமல் விடுதல்; **அலந்தாரை** - முன்பே துன்பத்தால் வருந்தியவரை; **அல்லல் நோய்** - மேலும் துன்பநோய்க்கு; **செய்துஅற்று** - ஆளாகச் செய்து வருத்துவது போன்றதாகும்; **ஆல்** - அசை.

(க-ரை): தம்மோடு பிணங்கி வாழும் மகளிரைப் பிணக்குத் தீர்த்து, அவர்களைக் கூடித் தழுவாமல் விடுதல் என்பது, முன்பே துன்பத்தால் வருந்துகின்றவர்களை மேலும் துன்பத்திற்கு ஆளாக்குவது போன்றதாகும் என்று தோழி, தலைவியைக் காண முடியாமல் பரத்தையிடம் போக விரும்பும் தலைவனிடம் கூறுகிறாள். (1303)

4. ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதல்அரிந் தற்று.

ஊடியவரை, உணராமை, வாடிய, வள்ளி, முதல் அரிந்து, அற்று.

(பொ-ரை): தம்மோடு ஊடிய மகளிரை, ஊடல் தீர்த்துக் கூடாதுஇருத்தல் என்பது, நீரின்றி முன்பே வாடிய கொடியின் அடிப் பகுதியை அறுப்பது போன்றதாகும்.

ஊடியவரை - தம்மோடு ஊடிய மகளிரை; **உணராமை** - ஊடல் தீர்த்துக் கூடாது இருத்தல் என்பது; **வள்ளி** - கொடியை;

முதல் - அதன் அடிப்பகுதியை; **அரிந்து அற்று** - அறுப்பது போன்றதாகும்.

(க-ரை): தம்மோடு ஊடிய மகளிரை அவர்களின் ஊடலைத் தீர்த்து, அவர்களோடு கூடாது இருத்தல் என்பது, நீரின்றி முன்பே வாடிய கொடியின் அடியை அறுப்பது போன்றதாகும் என்று தோழி, தலைவியைக் காணாமல் பிரிந்து போக விரும்பும் தலைவனிடம் கூறுகிறாள். (1304)

5. நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை
பூவன்ன கண்ணார் அகத்து.

நலத்தகை, நல்லவர்க்கு, ஏஎர், பூ அன்ன கண்ணார், அகத்துப் புலத்தகை.

(பொ-ரை): நற்பண்புகளால் சிறந்த நல்ல தலைவர்க்கு அழகாவது, மலர் போன்ற கண்களை உடைய மகளிரின் நெஞ்சில், கலவியின்பத்திற்கு முன் நிகழும் ஊடலின் சிறப்பே ஆகும்.

நலத்தகை - நற்பண்புகளால் சிறந்த; **நல்லவர்க்கு** - நல்ல தலைவர்க்கு; **ஏஎர்** - அழகாவது; **பூ அன்ன** - மலர் போன்ற; **கண்ணார்** - கண்களை உடைய மகளிரின்; **அகத்து** - நெஞ்சில்; **புலத்தகை** - நிகழும் ஊடலின் சிறப்பேயாகும்.

(க-ரை): நல்ல தலைமகனுக்கு அழகாவது, மகளிரின் உள்ளத்தில் கலவியின்பத்திற்கு முன் நிகழும் ஊடலின் சிறப்பைப் பெறுதலேயாகும் என்று தலைவன், தலைவியின் புலவியை நீக்கிக் கூடும்போது தனக்குள்ளே கூறிக் கொள்கிறான். (1305)

6. துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று.

துனியும், புலவியும், இல்லாயின், காமம், கனியும், கருக்காயும் அற்று.

(பொ-ரை): பெரும்பிணக்கும், சிறு பிணக்கும் இல்லாவிட்டால், காதல் வாழ்க்கையானது, மிகப்பழுத்து அழுகிய பழமும், சிறு பிஞ்சாக உள்ள காயும் போலப் பயன்படாமல் போகும்.

துனியும் - பெரும் பிணக்கும்; **புலவியும்** - சிறு பிணக்கும்; **காமம்** - காதல் வாழ்க்கையானது; **கனியம்** - மிகப் பழுத்து அழுகிய பழமும்; **கருக்காயும்** - சிறு பிஞ்சாக உள்ள காயும்.

(க-ரை): காதல் வாழ்க்கையானது பெரும் பிணக்கையும், சிறு பிணக்கையும் கொண்டதாக அமைய வேண்டும்; இல்லாவிட்டால்,

பழுத்து அழுகிய பழம் போலவும், சிறு பிஞ்சுக் காயைப் போலவும் பயன்படாமல் போய்விடும் என்று தலைவன், தலைவியின் பிணக்கைப் போக்கிக் கூடும்போது தனக்குள்ளே கூறிக்கொள்கிறான். (1306)

7. ஊடலின் உண்டுஆங்குஓர் துன்பம் புணர்வது நீடுவது அன்றுகொல் என்று.

புணர்வது, நீடுவது, அன்றுகொல், என்று, ஊடலின், ஆங்கு, ஓர் துன்பம், உண்டு.

(பொ-ரை): கூடி முயங்குவதால் ஏற்படும் இன்பம், இனிமேல் நீட்டிக்காதோ, அன்றி மீண்டும் ஊடல் ஏற்பட்டுவிடுமோ என்று எண்ணி ஏங்குவதால், ஊடியிருத்தல் மூலம் காதலர்க்கு ஒருவகைத் துன்பம் உண்டாகின்றது.

புணர்வது - கூடி முயங்குவதால் ஏற்படும் இன்பம்; **நீடுவது அன்றுகொல்** - நீட்டிக்காதோ அன்றி ஊடல் ஏற்பட்டுவிடுமோ; **என்று** - என்று எண்ணி ஏங்குவதால்.

(க-ரை): கூடி முயங்குவதால் ஏற்படும் இன்பம் நீடிக்குமோ அல்லது மீண்டும் ஊடல் ஏற்பட்டுவிடுமோ என்று எண்ணி ஏங்குவதால், ஊடியிருத்தல்மூலம் காதலர்க்கு ஒருவகைத் துன்பம் உண்டாகின்றது என்று தலைவன், தலைவியின் ஊடலை நீங்கிக் கூடும்போது தனக்குள்ளே கூறிக் கொள்கிறான். (1307)

8. நோதல் எவன்மற்று நொந்தார்என்று அஃதுஅறியும் காதலர் இல்லா வழி.

நொந்தார் என்று, அஃதுஅறியும், காதலர், இல்லா வழி, நோதல், மற்றுஎவன்?

(பொ-ரை): தலைவியானவள், நம் காரணமாக வருந்தினாள் என்று காதல் நோயை அறிந்து, அவ்வருத்தத்தை நீக்குவதற்குரிய காதலர் இல்லாதபோது, வருத்தப்படுவதனால் என்ன பயன் உண்டாகும்?

நொந்தார் - தலைவியானவள் நம் காரணமாக வருந்தினாள்; **அஃது அறிந்து** - காதல் நோயை அறிந்து; **நோதல்** - வருத்தப் படுவதால்; **மற்றுஎவன்** - என்ன பயன் உண்டாகும்.

(க-ரை): தன்னுடைய காதல் நோயை அறிந்து, தன் வருத்தத்தை நீக்குவதற்குக் காதலர் முன்வராத போது, வருத்தப்

படுவதால் பயன் என்ன? என்று தலைவி, தலைவனோடு புலந்து, தனக்குத்தானே கூறிக்கொள்கிறாள். (1308)

9. நீரும் நிழலது இனிதே புலவியும் வீழுநர் கண்ணே இனிது.

நீரும், நிழலது, இனிதே; புலவியும், வீழுநர் கண்ணே, இனிது.

(பொ-ரை): உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத நீர், நிழலைச் சார்ந்திருக்கும்போது இனிமையானதாக இருக்கும்; அதுபோல, கலவிக்கு இன்றியமையாத புலவியும், அன்புடைய காதலர்மாட்டுச் சார்ந்திருக்கும்போது, இனிமையானதாக இருக்கும்.

நிழலது - நிழலைச் சார்ந்திருக்கும்போது; **வீழுநர் கண்ணே** - அன்புடைய காதலர்மாட்டுச் சார்ந்திருக்கும்போது.

(க-ரை): நிழலைச் சார்ந்திருக்கும் நீரானது எப்படி இனிமை பயப்பதாக இருக்குமோ, அப்படியே அன்புடைய காதலரிடத்துச் சார்ந்திருக்கும் புலவியும் இனிமை பயப்பதாக இருக்கும் என்று தலைவி, தலைவனோடு புலந்து தனக்குள்ளே கூறிக்கொள்கிறாள். (1309)

10. ஊடல் உணங்க விடுவாரோடு என்நெஞ்சம் கூடுவேம் என்பது அவா.

ஊடல், .உணங்க, விடுவாரோடு, என் நெஞ்சம், கூடுவேம் என்பது, அவா.

(பொ-ரை): ஊடலினால், நான் மெலிந்து இருக்கவும், அதனை நீக்காமல் என்னை விட்டிருக்கும் காதலருடன், என் நெஞ்சமானது கூடுவோம் என்று எண்ணுவதற்குக் காரணம் அதன் அளவற்ற ஆவலேயாகும்.

உணங்க - நான் மெலிந்து இருக்கவும்; **விடுவாரோடு** - என்னை விட்டிருக்கும் காதலருடன்; **அவா** - அளவற்ற ஆவலாகும்.

(க-ரை): ஊடலின் காரணமாக நான் மெலிந்து இருந்தாலும், அந்த ஊடலை நீக்க முடியாமல், என்னை விட்டுப் பிரிந்திருக்கும் காதலருடன் கூடி வாழ என் நெஞ்சமானது எண்ணுவதற்குக் காரணம், அதன் அடக்கமுடியாத ஆவல்தான் என்று தலைவி, தலைவனோடு பிணக்குக்கொண்டு தனக்குள்ளே கூறிக்கொள்கிறாள். (1310)

132. புலவி நுணுக்கம்

புலவி நுணுக்கம் என்பது, தலைவனும், தலைவியும் இணைபிரியாது இருக்கும்போது, தலைவனிடத்தில் புலத்தற்குக் காரணம் ஏதும் இல்லாதிருந்தும், ஏதோ ஒரு நுண்ணிய காரணம் இருப்பதாகக் காட்டித் தலைவி, தலைவனோடு புலத்தல் எனப்படும்.

1. பெண்இயலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

பரத்த, பெண் இயலார், எல்லாரும், கண்ணின், பொது உண்பர், நின்மார்பு, நண்ணேன்.

(பொ-ரை): பரத்தையரிடம் செல்பவனே! பெண் தன்மை யுடையவர்கள் யாவரும் தங்களுடைய கண்களால், உன்னைப் பொதுப்பொருளாக நினைத்து நுகருகிறார்கள். ஆதலால், உன் மார்பை நான் தழுவ மாட்டேன்.

பரத்த - பரத்தையரிடம் செல்பவனே; **பொது உண்பர்** - உன்னைப் பொதுப்பொருளாக நினைத்து நுகருவார்கள்; **நண்ணேன்** - தழுவமாட்டேன்.

(க-ரை): நீ பரத்தையரிடம் செல்பவனாகவும், பெண்கள் பலரும் உன்னைப் பார்த்துச் சுவைக்கின்றவர்களாகவும் இருக்கின்ற காரணத்தால், நான் உன் மார்பைத் தழுவமாட்டேன் என்று தலைவி, உலா போய்விட்டு வந்து, படுக்கையிலிருந்த தலைவனைப் பார்த்துக் கூறுகிறாள். (1311)

2. ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ்க என்பாக்கு அறிந்து.

ஊடி இருந்தேமா, யாம் தம்மை, 'நீடு வாழ்க', என்பாக்கு அறிந்து, தும்மினார்.

(பொ-ரை): நான் காதலரோடு ஊடி உரையாடாது இருந்தபோது, நான் அவரை "நெடுங்காலம் வாழ்க" என்று வாய் திறந்து வாழ்த்துவேன் என்று கருதி, அவர் வேண்டுமென்றே தும்மினார்.

ஊடி - நான் காதலரோடு புலந்து உரையாடாது இருந்தபோது; **என்பாக்கு அறிந்து** - என்று வாய்திறந்து வாழ்த்துவேன் என்று கருதி; ஒருவர் தும்மும்போது அருகில் இருக்கும் மற்றொருவர் வாழ்த்துதல் என்பது, பண்டைக்காலந் தொட்டு இருந்துவரும் பழக்கமாகும்.

(க-ரை): நான் காதலரோடு பிணக்குக்கொண்டு உரையாடாமல் இருந்தேன்; அப்போது, நான் எப்படியும் அவரை ''நெடுங்காலம் வாழ்க'' என்று வாய்திறந்து வாழ்த்துவேன் என்று நினைத்து, அவர் வேண்டுமென்றே தும்மினார் என்று தலைவி, தலைவனைப் பற்றித் தோழியிடம் கூறுகிறாள். (1312)

3. கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று.

கோட்டுப்பூச், சூடினும், ஒருத்தியைக், காட்டிய, சூடினீர், என்றுகாயும்.

(பொ-ரை): நான் மருதநிலத்துப் பூ அல்லாத, பிற நிலங்களிலுள்ள மரக்கிளைகளில் மலர்ந்த பூக்களினால் ஆன மாலையைச் சூடியிருந்தாலும், ''இதை நீர் உம் காதலி ஒருத்திக்குக் காட்டும் பொருட்டே சூடிக் கொண்டிருக்கிறீர்'' என்று தலைவி சினம் கொள்ளுவாள்.

கோட்டுப்பூ - மரக்கிளையில் மலர்ந்த பூ; **ஒருத்தியைக் காட்டிய** - காதலி ஒருத்திக்குக் காட்டும் பொருட்டு; **காயும்** - சினம் கொள்ளுவாள்.

(க-ரை): நான் பிற நிலத்து மரக்கிளையில் பூத்த பூக்களால் ஆன மாலையைச் சூடியிருந்தாலும், வேறு காதலி ஒருத்திக்கு அதைக் காட்டுவதற்காகவே சூடினேன் என்று காரணம் எதுவும் இல்லாமல், காதலி என்னைச் சினந்துகொள்ளுவாள் என்று தலைவன், தலைவி புலந்து இருப்பதற்குக் காரணம் யாது என்று வினவிய தோழியிடம் கூறுகிறான். (1313)

4. யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று.

யாரினும், காதலம், என்றேனா, யாரினும், யாரினும், என்று ஊடினாள்.

(பொ-ரை): ''யாரைக்காட்டிலும் நான் உன்னிடம் மிக்க காதல் உடையவனாக இருக்கிறேன்'' என்று காதலியிடம் சொன்னபோது,

''யாரைக் காட்டிலும்? யாரைக் காட்டிலும்?'' என்று கேட்டு என்னிடம் ஊடல் கொண்டாள்.

காதலம் - மிக்க காதல் உடையவனாக இருக்கிறேன்; **என்றேனா** - என்று சொன்னபோது.

(க-ரை): ''யாரைக்காட்டிலும் உன்னிடம் மிகுந்த காதல் கொண்டிருக்கிறேன்!'' என்று நான் காதலியிடம் இயல்பாகத்தான் கூறினேன்; அது பொறுக்கமாட்டாமல், அவள், ''யாரைக் காட்டிலும்? யாரைக்காட்டிலும்?'' என்று கேட்டு, என்னிடம் பிணக்குக் கொள்ளத் தொடங்கிவிட்டாள் என்று தலைவன், தலைவி பிணக்கு கொண்டு இருப்பதற்குக் காரணம் என்ன என்று கேட்ட தோழியிடம் கூறுகிறான். (1314)

5. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக் கண்நிறை நீர்கொண்ட னள்.

இம்மைப், பிறப்பில், பிரியலம், என்றேனாக், கண் நிறை, நீர்கொண்டனள்.

(பொ-ரை): ''என்னுடைய இந்த வாழ்க்கையில் இந்த நிலையில் நான் உன்னைவிட்டுப் பிரியமாட்டேன்'' என்று காதலியிடம் இயல்பாகச் சொன்னபோது, வேறு நிலைகளில் நான் பிரிந்துவிடுவேனோ என்று கருதி, கண்கள் நிறைய கண்ணீர் வழிய அழுதாள்.

பிறப்பில் - என்னுடைய வாழ்க்கையில்; **இம்மை** - இந்த நிலையில்; **மறுமை** - வேறு நிலை.

(க-ரை): ''என்னுடைய வாழ்க்கையில் இந்த நிலையில், நான் உன்னைவிட்டுப் பிரியமாட்டேன்'' என்று இயல்பாகத்தான் காதலியிடம் கூறினேன்; அதை அவள் தவறாக எடுத்துக்கொண்டு, வேறு நிலைகளில் நான் பிரிந்துவிடுவேனோ என்று கருதி, கண்களில் நீர் ஒழுக அழுதாள் என்று தலைவன், தலைவி ஊடல் கொண்டு இருப்பதற்கு யாது காரணம் என்று வினவிய தோழியிடம் கூறுகிறான். (1315)

6. உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றுஎன்னைப் புல்லாள் புலத்தக் கனள்.

'உள்ளினேன்', என்றேன், மற்று, 'என் மறந்தீர்', என்று, என்னைப் புல்லாள், புலத்தக்கனள்.

(பொ-ரை): ''பிரிவுக்காலத்தில் உன்னை நான் நினைத்தேன்!'' என்று இயல்பாகத் தலைவியிடம் கூறினேன்; 'மறந்தால் தானே நினைக்க முடியும்! என்னை ஏன் மறந்தீர்' என்று கேட்டு என்னைத் தழுவாதவள் ஆகிப் பிணங்கிக் கொண்டாள்.

உள்ளினேன் - பிரிந்திருந்த காலத்தில் உன்னையே நான் நினைத்தேன்; **புல்லாள்** - என்னைத் தழுவாதவள் ஆகி; **புலத்தக்கனள்** - பிணங்கிக் கொண்டாள்.

(க-ரை): நான் தலைவியைப் பார்த்துப் 'பிரிவுக் காலத்தில் உன்னை நான் நினைத்தேன்!' என்று இயல்பாகத்தான் கூறினேன்; அதனை அவள் குற்றமாக எடுத்துக்கொண்டு, 'மறந்தால்தானே நீர் என்னை நினைக்க முடியும்? என்னை ஏன் மறந்தீர்?'' என்று கேட்டு என்னைத் தழுவாமல் பிணங்கிக்கொண்டாள் என்று தலைவன், தலைவி ஊடல் கொண்டு இருப்பதற்கு என்ன காரணமோ என்று வினவிய தோழியிடம் கூறுகிறான். (1316)

7. வழுத்தினாள் தும்மினே னாக அழித்துஅழுதாள் யார்உள்ளித் தும்மினீர் என்று.

தும்மினேன் ஆக, வழுத்தினாள், அழித்து, யார்உள்ளித், தும்மினீர், என்று அழுதாள்.

(பொ-ரை): நான், தும்மல் வரத் தும்மினேன்; காதலி எப்பொழுதும் போல் என்னை 'நீர் நெடுங்காலம் வாழ்க!' என வாழ்த்தினாள்; அப்படி வாழ்த்தியதை உடனே மாற்றிக்கொண்டு, ''நும் காதலியரில் யார் நினைக்க நீர் தும்மினீர்?'' என்று கேட்டுப் பிணங்கிக்கொண்டு அழுதாள்.

வழுத்தினாள் - என்னை எப்பொழுதும் போல் வாழ்த்தினாள்; **அழித்து** - அப்படி வாழ்த்தியதை மாற்றி; **யார் உள்ளி** - நும் காதலியரில் யார் நினைக்க; **அழுதாள்** - பிணங்கிக்கொண்டு அழுதாள்.

(க-ரை): நான் இயல்பாகத் தும்மினேன்; காதலி எப்பொழுதும் போல் என்னை வாழ்த்தினாள்; அப்படி வாழ்த்தியதை அவள் உடனே மாற்றிக்கொண்டு, ''உம்முடைய காதலியரில் யார் நினைக்கத் தும்மினீர்?'' என்று கேட்டுப் பிணங்கிக்கொண்டு அழத் துவங்கிவிட்டாள் என்று தலைவன், தலைவி புலத்ததற்கு என்ன காரணம் என்று கேட்ட தோழியிடம் கூறுகிறான். (1317)

**8. தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.**

தும்முச், செறுப்ப, நுமர்உள்ளல், எம்மை மறைத்திரோ, என்று, அழுதாள்.

(பொ-ரை): எனக்குத் தும்மல் வந்தபோது, அவளது ஊடலுக்கு அஞ்சி, அதனை நான் அடக்கிக்கொள்ள, ''உம்முடைய காதலியர் உம்மை நினைப்பதை, எனக்குத் தெரியாமல் இருக்க வேண்டித் தும்மலை மறைத்தீரோ?'' என்று பிணங்கிக்கொண்டு அழுதாள்.

தும்மு - எனக்குத் தும்மல் வந்தபோது; **செறுப்ப** - அதனை நான் அடக்கிக்கொள்ள; **நுமர்** - உம்முடைய காதலியர்; **உள்ளல்** - உம்மை நினைப்பதை; **அழுதாள்** - பிணங்கிக்கொண்டு அழுதாள்.

(க-ரை): தலைவியின் ஊடலுக்கு அஞ்சி, நான் எனக்கு வந்த தும்மலை அடக்கினேன்; அதைத் தவறாக எடுத்துக்கொண்டு, ''உம் காதலியர் உம்மை நினைப்பதை எனக்குத் தெரியாமல் இருக்க வேண்டித் தும்மலை மறைத்தீர் அல்லவா?'' என்று கேட்டுத் தலைவி பிணங்கிக்கொண்டு அழுதாள் என்று தலைவன், யாது காரணம் பற்றித் தலைவி ஊடல் செய்து கொண்டிருக்கிறாள் என்று கேட்ட தோழியிடம் கூறுகிறான். (1318)

**9. தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று.**

தன்னை, உணர்த்தினும், பிறர்க்கு, நீர், இந்நீரர், ஆகுதிர், என்று காயும்.

(பொ-ரை): ஊடல் கொண்டிருக்கும் காதலியைப் பணிந்து, நான் அவளது ஊடலைத் தீர்க்க இயல்பாக முயன்றாலும், ''நீர் மற்ற காதலியரிடத்திலும், இவ்வாறுதானே பணிந்து நடக்கும் தன்மையைக் கொண்டிருக்கிறீர்?'' என்று சொல்லிச் சினந்துகொள்ளுகிறாள்.

தன்னை - ஊடல் கொண்டிருக்கும் காதலியை; **உணர்த்தினும்** - பணிந்து நான் ஊடலைத் தீர்க்க முயன்றாலும்; **பிறர்க்கு** - மற்ற காதலியரிடத்திலும்; **இந்நீரர்** - பணிந்து நடக்கும் தன்மையைக் கொண்டிருக்கிறீர்; **காயும்** - சினந்து கொள்கிறாள்.

(க-ரை): ஊடல் கொண்டிருக்கும் காதலியைப் பணிந்து, அவளது ஊடலைத் தீர்க்க நான் முயன்றாலும், ''பிற காதலியரிடத்திலும் நீர் இவ்வாறுதானே நடந்துகொள்ளும் தன்மையைக் கொண்டிருக்கிறீர்!'' என்று சினந்துகொள்ளுகிறாள்

என்று தலைவன், தலைவியின் ஊடலுக்குக் காரணம் யாது என்று கேட்ட தோழியிடம் கூறுகிறான். (1319)

10. நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர் யார்உள்ளி நோக்கினீர் என்று.

நினைத்து இருந்து, நோக்கினும், அனைத்துநீர், யார் உள்ளி, நோக்கினீர், என்று, காயும்.

(பொ-ரை): நான் காதலியின் அழகையே நினைத்து, அவளையே பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தாலும், "என் உடல் அழகையெல்லாம் வேறு எந்தப் பெண்ணினுடைய உடல் அழகுக்கு ஒப்பாக எண்ணிப் பார்க்கிறீர்!" என்று கேட்டுச் சினந்து கொள்ளுகிறாள்.

நினைத்து - நான் காதலியின் அழகையே நினைத்து; **இருந்து நோக்கினும்** - பேசாமல் பார்த்துக்கொண்டிருந்தாலும்; **அனைத்து** - என் உடல் அழகையெல்லாம்; **யார்** - வேறு எந்தப் பெண்ணின் உடல் அழகுக்கு; **உள்ளி** - ஒப்பாக எண்ணி; **காயும்** - சினந்து கொள்கிறாள்.

(க-ரை): நான் காதலியின் அழகையே, பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தாலும், "என் உடல் அழகோடு வேறு எந்தப் பெண்ணின் உடல் அழகை ஒப்பிட்டுப் பார்க்கிறீர்?" என்று கேட்டுச் சினந்துகொள்கிறாள் என்று தலைவன், தலைவி ஏன் பிணக்குக் கொண்டு இருக்கிறாள் என்று கேட்ட தோழியிடம் கூறுகிறான். (1320)

133. ஊடல் உவகை

ஊடல் உவகை என்பது, ஊடலுக்குப் பிறகு அமையும் கூடல் இன்பம், மிகச் சிறந்து காணப்படுவதால், அவ்ஊடலைத் தலைவியும் தலைவனும் மகிழ்ந்து விரும்புதல் எனப்படும்.

1. இல்லை தவறுஅவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர்அளிக்கு மாறு.

அவர்க்குத், தவறு, இல்லை, ஆயினும், ஊடுதல், அவர் அளிக்குமாறு, வல்லது.

(பொ-ரை): காதலரிடம் தவறு ஒன்றும் இல்லை என்றாலும், அவரோடு ஊடுதல் கொள்ளுதல் என்பது, அவர் என்மீது மிகுதியாக அன்பு செலுத்துமாறு செய்ய வல்லதாக இருக்கிறது.

அவர்க்கு - காதலரிடம்; **ஊடுதல்** - பிணக்குச் செய்தல் என்பது; **அளிக்குமாறு** - மிகுதியாக அன்பு செலுத்துமாறு; **வல்லது** - செய்யவல்லதாக இருக்கிறது.

(க-ரை): காதலரிடத்தில் உள்ளபடியே தவறு ஒன்றும் இல்லை என்றாலும், நான் ஊடுதல் கொள்ளுதல் என்பது, அவர் என்னிடம் மிகுதியான அன்பு செலுத்த உதவி செய்வதாக இருக்கிறது என்று தலைவி, காரணமில்லாமல் பிணக்கு கொள்ளுவது பற்றிக் கேட்ட தோழியிடம் கூறுகிறாள். (1321)

2. ஊடலின் தோன்றும் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்.

ஊடலின் தோன்றும், சிறுதுனி, நல் அளி, வாடினும், பாடுபெறும்.

(பொ-ரை): ஊடல் காரணமாக என்னிடம் தோன்றும் சிறு வெறுப்பினால், காதலர் செய்கின்ற நல்ல அன்பு சிறிது குறையும் என்றாலும், பின்பு அது பெருமையையே பெறுகின்றது.

துனி - வெறுப்பினால்; **நல் அளி** - காதலர் செய்கின்ற நல்ல அன்பு; **வாடினும்** - சிறிது குறையும் என்றாலும்; **பாடு பெறும்** - பெருமையையே பெறுகின்றது.

(க-ரை): பிணக்குச் செய்வதன் காரணமாக என்னிடம் தோன்றும் சிறு வெறுப்பினால், காதலர் செலுத்தும் அன்பு சிறிதளவு

குறையும் என்றாலும், பின்பு, அது பெருமை பெறுகின்றது என்று தலைவி, காரணமின்றி ஊடல் கொள்வதுபற்றி வினவிய தோழியிடம் கூறுகிறாள். (1322)

**3. புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீர்இயைந்து அன்னார் அகத்து.**

நிலத்தொடு நீர், இயைந்து, அன்னார் அகத்துப், புலத்தலின், புத்தேள் நாடு, உண்டோ?

(பொ-ரை): நிலத்தோடு நீர் கலந்தாற்போல, அன்புடன் ஒன்று சேர்ந்த காதலரிடத்தில் புலத்தலைவிட, இன்பம் தருகின்ற புதிய மேலான உலகம் ஒன்று உண்டோ? இல்லை!

அன்னார் அகத்து - அன்புடன் ஒன்று சேர்ந்த காதலரிடத்தில்; **புத்தேள் நாடு** - மேலான உலகம்.

(க-ரை): நிலத்தோடு நீர் கலப்பதைப் போன்று, அன்புடன் ஒன்றாய்க் கலந்த காதலரிடத்தில் பிணக்குக் கொள்வதில் ஏற்படும் இன்பத்தைப்போன்று, இன்பம் தரக்கூடிய மேலான உலகம் எதுவும் இருக்க முடியாது என்று தலைவி, காரணமில்லாமல் ஊடல் கொள்வது பற்றிக் கேட்ட தோழியிடம் கூறுகிறாள். (1323)

**4. புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்என்
உள்ளம் உடைக்கும் படை.**

புல்லி, விடாப், புலவியுள், என் உள்ளம், உடைக்கும் படை, தோன்றும்.

(பொ-ரை): காதலரைத் தழுவிப் பின் விடாமலிருப்பதற்குக் காரணமான புலவியினுள்ளேதான், எனது பிணங்கிய உள்ளத்தை உடைக்கவல்ல படைக்கலமே உண்டாகிறது.

புல்லி - காதலரைத் தழுவி; **விடாப்புலவியுனுள்** - விடாதிருப்பதற்குக் காரணமான புலவியினுள்ளேதான்; **படை** - படைக்கலம்; படைக்கலம் என்பது தலைவனது பணிவான எண்ணம், மொழி, நடத்தை முதலியனவாகும்; அவை தலைவியின் புலவி உள்ளத்தை அழிக்கும் தன்மையன.

(க-ரை): நான் காதலரைத் தழுவிப் பின் விடாமலிருப்பதற்குக் காரணமாகப் புலவி அமைகிறது; அந்தப் புலவியினுள்தான் என்னுடைய உறுதியான புலவி உள்ளத்தை உடைக்கும் படைக் கலமும் இருக்கிறது என்று தலைவி, புலவி இனி எதனால் நீங்கும் என்று கேட்ட தோழியிடம் கூறுகிறாள். (1324)

5. தவறுஇலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்தோள்
அகறலின் ஆங்கொன்று உடைத்து.

தவறுஇலர், ஆயினும், தாம் வீழ்வார், மென்தோள், அகறலின், ஆங்கு, ஒன்றுஉடைத்து.

(பொ-ரை): காதலர் தவறு செய்யாதிருந்தாலும், அவரால் விரும்பப்படும் மகளிருடன் ஊடி அவர்தம் மெல்லிய தோள்களை நீங்கியிருப்பதானதுங்கூட, ஓர் இன்பம் ஏற்படக்காரணமாக அமைந்துள்ளது.

தவறுஇலர் ஆயினும் - காதலர் தவறு செய்யாதிருந்தாலும்; **தாம் வீழ்வார்** - அவரால் விரும்பப்படும் மகளிருடன் ஊடி; **அகறலின்** - நீங்கியிருப்பது; **ஆங்கு** - அத்தன்மையானதுகூட; **ஒன்று உடைத்து** - ஓர் இன்பம் ஏற்படக் காரணமாக அமைந்துள்ளது; ஊடுதல் கூடலுக்குக் காரணமாக இருத்தலால் இன்பம் உண்டு என்று உணர்த்தப்படுகிறது.

(க-ரை): ஆடவர் ஒரு தவறும் செய்யாதிருந்தாலும், அவர்களோடு காதலியர் ஊடி இருப்பதுங்கூட ஓர் இன்பம் ஏற்படக் காரணமாக அமைந்துவிடுகிறது என்று தலைவன், ஊடல் நீக்கித் தலைவியைக் கூடிய நிலையில், உவகைமிக்கவனாய்த் தனக்குள்ளே கூறிக்கொள்கிறான். (1325)

6. உணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது.

உணலினும், உண்டது, அறல் இனிது, காமம், புணர்தலின், ஊடல் இனிது.

(பொ-ரை): ஒருவர் மேலும் உண்பதைக்காட்டிலும், முன்பு உண்ட உணவு செரித்தல் இன்பம் தருவதாகும்; அது போல காதல் வாழ்க்கைக்கு மேலும் கூடி முயங்குவதைக்காட்டிலும், ஊடுதல் மூலம் ஏங்கி எதிர்பார்க்கும் காதல் வேட்கை இன்பந்தருவதாகும்.

உணலினும் - மேலும் உண்பதைக்காட்டிலும்; **அறல்இனிது** - செரித்தல் இன்பம் தருவதாகும்; **காமம்** - காதல் வாழ்க்கையானது.

(க-ரை): மேலும் உண்பதைவிட முன்பு உண்ட உணவு செரித்தல் இன்பம் தருவதாகும்; அதுபோலக் காதல் வாழ்க்கையில் கூடி முயங்குவதைவிட, ஊடுதல் மூலம் ஏற்படும் காதல் வேட்கை இன்பம் தருவதாகும் என்று தலைவன், ஊடல் நீங்கித் தலைவியைக்

கூடிய நிலையில், மகிழ்ச்சிப் பெருக்கில் தனக்குள்ளே கூறிக் கொள்கிறான். (1326)

**7. ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும்.**

ஊடலில், தோற்றவர், வென்றார்; அது மன்னும், கூடலில், காணப்படும்.

(பொ-ரை): காதலன், காதலி என்ற இருவருள், ஊடலில் தோற்றவரே வெற்றி பெற்றவர் ஆவார்; அந்த ஆக்கம் ஊடல் முடிந்த பின்னர், கூடி மகிழும்போது காணப்படும்.

ஊடல் - புலத்தல்; **கூடல்** - கூடி முயங்குதல்; **மன்** - ஆக்கம்.

(க-ரை): காதல் வாழ்க்கையில் ஈடுபடும் இருவருள், ஊடலில் தோற்றவரே உண்மையில் வெற்றி பெற்றவர் ஆவார்; அந்த உண்மை ஊடல் முடிந்தபின் கூடி மகிழும்போது காணப்படும் என்று தலைவன், ஊடல் நீக்கித் தலைவியைக் கூடியபோது மகிழ்ச்சிப் பெருக்கில் தனக்குள்ளே கூறிக்கொள்கிறான். (1327)

**8. ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு.**

நுதல் வெயர்ப்பக், கூடலில், தோன்றிய உப்பு, கூடிப், பெறுகுவம், கொல்லோ?

(பொ-ரை): காதலியின் நெற்றி வியர்க்குமாறு அவளைக் கூடி முயங்குவதால் பெறும் இன்பத்தினை மீண்டும் அவள் ஊடல் கொள்வதன் மூலம் நான் பெறுகின்ற வாய்ப்புக் கிடைக்குமோ?

நுதல்வெயர்ப்ப - காதலியின் நெற்றி வியர்க்குமாறு; **கூடலில்** - கூடி முயங்குவதால்; **தோன்றிய** - பெறும்; **உப்பு** - இன்பத்தினை; **ஊடி** - மீண்டும் அவள் ஊடல் கொள்ளுவதன் மூலம்.

(க-ரை): காதலியின் நெற்றியில் வியர்வை தோன்றக் கூடி முயங்குவதிலே அடையும் இன்பத்தை இன்னுமொரு முறை அவள் பிணங்கிக் கொள்வதன்மூலம் நான் பெற முடியுமோ? என்று தலைவன், தலைவியின் ஊடலைப் போக்கிக் கூடி முயங்கும்போது, ஏற்படும் உவகைப் பெருக்கில் தனக்குள்ளே கூறிக்கொள்கிறான். (1328)

**9. ஊடுக மன்னோ ஒளிஇழை யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா.**

ஒளிஇழை, ஊடுக மன்ஓ! இரா, யாம் இரப்ப, நீடுக மன்ஓ!

(பொ-ரை): ஒளி பொருந்திய அணிகலன்களை அணிந்த என் காதலி, என்னோடு ஊடல் கொள்வாளாக! அவ்ஊடலைத் தீர்க்கும் பொருட்டு, நான் அவளிடம் இரந்து நிற்பதற்காக இரவுப் பொழுது இன்னும் நீட்டிப்பதாக!

ஒளி இழை - ஒளி பொருந்திய அணிகலன்களை அணிந்த காதலி; **ஊடுக மன்** - ஊடல் கொள்வாளாக; **இரா** - இரவுப்பொழுது; **யாம் இரப்ப** - நான் இரந்து நிற்பதற்காக; **நீடுக மன்** - நீட்டிப்பதாக.

(க-ரை): என்னுடைய காதலி என்னோடு ஊடல் கொள்வாளாக! இரவுக் காலமானது நான் அவளிடம் இரந்து நிற்பதற்கு ஏற்றவாறு நீட்டித்துச் செல்வதாக! அப்பொழுதுதான் நான் ஊடலின் இன்பத்தை நுகர மிகவான வாய்ப்பு ஏற்படும்! என்று தலைவன், தலைவியின் ஊடலை நீக்கி அவளோடு கூடி முயங்கும்போது, உவகைப் பெருக்கினால் தனக்குள்ளே கூறிக்கொள்கிறான். (1329)

**10. ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்குஇன்பம்
கூடி முயங்கப் பெறின்.**

ஊடுதல், காமத்திற்கு, இன்பம், கூடி முயங்கப் பெறின், அதற்கு இன்பம்.

(பொ-ரை): காதலி ஊடல் கொள்வதானது, காதல் வேட்கை மிகுவதற்குக் காரணமாக இருந்து, இன்பந்தருவதாகின்றது; அவ்ஊடல் தீர்ந்து, கூடி முயங்குதலைப் பெற்றால், அதுவே காதல் வேட்கையை நிறைவேற்றும் இன்பத்தைத் தருவதாகின்றது.

காமத்திற்கு - காதல் வேட்கை மிகுவதற்குக் காரணமாக இருந்து; **அதற்கு இன்பம்** - அதுவே; காதல் வேட்கையை நிறைவேற்றும் இன்பத்தைத் தருவதாகின்றது.

(க-ரை): காதலி ஊடல் கொள்வதானது, காதல் வேட்கை மிகுவதற்குக் காரணமாக இருந்து, இன்பத்தைத் தருகின்றது; பின்னர் கூடி முயங்குதலானது அந்தக் காதல் வேட்கையை நிறைவேற்றும் இன்பத்தைத் தருகின்றது என்று தலைவன், தலைவியின் ஊடலைப் போக்கி அவளோடு கூடி முயங்கும்போது தனக்குள்ளே கூறிக் கொள்கிறான். (1330)

திருக்குறள் முதற்குறிப்பு அகர வரிசை

எண் - குறள் எண்

அஃகாமை	178
அஃகி அகன்ற	175
அகடு ஆரார்	936
அகப்பட்டி	1074
அகர முதல	1
அகலாது அணுகாது	691
அகழ்வாரைத்	151
அகனமர்ந்து ஈதலின்	92
அகனமர்ந்து செய்யாள்	84
அங்கணத்துள்	720
அசையியற்கு	1098
அச்சம் உடையார்க்கு	534
அச்சமே கீழ்களது	1075
அஞ்சாமை அல்லால்	497
அஞ்சாமை ஈகை	382
அஞ்சும் அறியான்	863
அஞ்சுவது அஞ்சாமை	428
அஞ்சுவது ஓரும்	366
அடக்கம் அமரருள்	121
அடல் வேண்டும்	343
அடல் தகையும்	768
அடுக்கிய கோடி	954
அடுக்கி வரினும்	625
அடுத்தது காட்டும்	706
அணங்குகொல்	1081
அணிஅன்றோ	1014
அந்தணர் என்போர்	30
அந்தணர் நூற்கும்	543
அமரகத்து ஆற்றறுக்கும்	814
அமரகத்து வன்	1027
அமிழ்தினும் ஆற்ற	64
அமைந்தது ஆங்கு	474
அரங்கு இன்றி	401
அரம்பொருத	888
அரம்போலும்	997
அரிதரோ	1153
அரிதாற்றி	1160
அரிய என்று	537
அரியகற்று	503
அரியவற்றுள்	443
அருங்கேடன்	210
அருஞ்செவ்வி	565
அருட்செல்வம்	241
அருமறை சோரும்	847
அருமை உடைத்	611
அரும்பயன்	198
அருவினை	483
அருள் அல்லது	254
அருள் இல்லார்க்கு	247
அருள் என்னும்	757
அருளொடும்	755
அருள்கருதி	285
அருள்சேர்ந்த	243
அருள்வெஃகி	176
அலந்தாரை	1303
அலர்எழ	1141
அலர்நாண	1149
அல்லல் அருளாள்	245
அல்லவைதேய	96
அல்லற்பட்டு	555
அவர்தந்தார்	1182
அவர்நெஞ்சு	1291
அவா இல்லார்க்	368
அவா என்ப	361
அவாவினை	367
அவிசொரிந்து	259
அவையறிந்து	711
அவையறியார்	713
அவ்வித்து அழுக்	167
அவ்விய நெஞ்சத்	169
அழக்கொண்ட	659
அழச்சொல்லி	795
அழல்போலும்	1228
அழிவதூஉம்	461
அழிவந்த	807
அழிவினவை	787
அழிவின்றறை	764
அழுக்கற்று	170

அழுக்காறுஅவா	35
அழுக்காறு உடையார்	165
அழுக்காறுடையான்கண்	135
அழுக்காறுஎன	168
அழுக்காற்றின்	164
அளவல்ல	289
அளவளாவுஇல்லா	523
அளவறிந்தார்	288
அளவறிந்து	479
அளவின்கண்	286
அளித்துஅஞ்சல்	1154
அறங்கூறான்	181
அறம்சாரா	1047
அறஞ்சொல்லும்	185
அறத்தாறுஇது	37
அறத்தாற்றின்	46
அறத்தான்வரு	39
அறத்திற்கே	76
அறத்தின் ஊங்கு	32
அறம்பொருள்	501
அறவாழி	8
அறவினை யாதெனில்	321
அறவினையும்	909
அறன்அழீஇ	182
அறனறிந்து ஆன்ற	635
அறனறிந்து மூத்த	441
அறனறிந்து வெஃகா	179
அறனியலான்	147
அறன்இழுக்கா	384
அறனெனப்பட்டதே	49
அறன்ஆக்கம்	163
அறன்ஈனும்	754
அறன்கடை	142
அறன்நோக்கி	189
அறன்வரையான்	150
அறிகிலார்	1139
அறிகொன்று	638
அறிதோறு அறியாமை	1110
அறிந்துஆற்றிச்	515
அறிவு அற்றங்காக்கும்	421
அறிவிலார்தாம்	843
அறிவிலான்	842
அறிவினான்	315
அறிவினுள் எல்லாம்	203
அறிவுஇன்மை	841
அறிவுடையார் ஆவது	427
அறிவுடையார் எல்லாம்	430
அறிவுஉரு ஆராய்ந்த	684
அறுவாய்	1117
அறைபறை	1076
அற்கா இயல்பிற்றுச்	333
அற்றதுஅறிந்து	944
அற்றம் மறைக்கும்	980
அற்றம் மறைத்தலோ	846
அற்றவர் என்பார்	365
அற்றாரைத்	506
அற்றார் அழிபசி	226
அற்றார்க்கு ஒன்று	1007
அற்றால் அளவறிந்து	943
அற்றேம் என்று	626
அனிச்சப்பூக்	1115
அனிச்சமும்	1120
அன்பகத்தில்லா	78
அன்புஅறிவு ஆராய்ந்த	682
அன்புஅறிவு தேற்றம்	513
அன்பிலன்	862
அன்பிலார்	72
அன்பிற்கும்	71
அன்பின் வழியது	80
அன்பின் விழையார்	911
அன்புஈனும்	74
அன்புடைமை - இவ்	992
அன்புடைமை - வேந்	681
அன்பு நாண்	983
அன்பும் அறனும்	45
அன்புற்று அமர்ந்த	75
அன்பு ஒரீஇத்	1009
அன்போடு இயைந்த	73
அன்றறிவாம்	36
ஆகாறு அளவிட்டி	478
ஆகு ஊழால்	371
ஆக்கமும் கேடும்	642
ஆக்கம் அதர்வினாய்ச்	594
ஆக்கம் இழந்தேம்	593

ஆக்கம் கருதி	463
ஆங்கமை	740
ஆபயன் குன்றும்	560
ஆயும் அறிவினர்	918
ஆய்ந்துஆய்ந்து	792
ஆராஇயற்கை	370
ஆவிற்கு நீரென்று	1066
ஆள்வினையும்	1022
ஆற்றாரும்	493
ஆற்றின் அளவறிந்துஈக	477
ஆற்றின் அளவறிந்துகற்க	725
ஆற்றின் ஒழுக்கி	48
ஆற்றின் நிலைதளர்ந்	716
ஆற்றின் வருந்தா	468
ஆற்றுபவர்க்கும்	741
ஆற்றுவார்-இக	891
ஆற்றுவார்-பசி	225
ஆற்றுவார்-பணி	985
இகலான்ஆம்	860
இகலிற்கு எதிர்	858
இகலின் மிகல்	856
இகல் எதிர்	855
இகல் என்ப	851
இகல் என்னும்	853
இகல் காணான்	859
இகழ்ச்சியின்	539
இகழ்ந்து எள்ளாது	1057
இடமெல்லாம்	1064
இடனில் பருவத்தும்	218
இடிக்கும் துணை	447
இடிபுரிந்து எள்ளுஞ்	607
இடிப்பாரை	448
இடுக்கட்படினும்	654
இடுக்கண்கால்	1030
இடுக்கண் வருங்கால்	621
இடும்பைக்கு இடும்பை	623
இடும்பைக்கே	1029
இடைதெரிந்து	712
இணர்ஊழ்த்தும்	650
இணர் எரிதோய்	308
இதனை இதனால்	517
இமைப்பின் கரப்பாக்கு	1129
இமையாரின்	906
இம்மைப் பிறப்பில்	1315
இயல்பாகும்	344
இயல்பினான்	47
இயல்புளிக்	545
இயற்றலும்	385
இரக்க இரத்தக்கார்க்	1051
இரத்தலின்	229
இரத்தலும்	1054
இரந்தும்	1062
இரப்பான் இரப்பாரை	1067
இரப்பாரை	1058
இரப்பான்	1060
இரவார்இரப்	1035
இரவுள்ள	1069
இரவு என்னும்	1068
இருநோக்கு	1091
இருந்துஉள்ளி	1243
இருந்தோம்பி	81
இருபுனலும்	737
இருமனப் பெண்டிரும்	920
இருமை வகைதெரிந்து	23
இருவேறு உலகத்து	374
இருள்சேர்	5
இருள்நீங்கி	352
இலக்கம்	627
இலங்கிழாய்	1262
இலம் என்று அசைஇ	1040
இலம்என்று வெஃகுதல்	174
இலர் பலராகிய	270
இலன் என்னும்	223
இலன் என்று	205
இல்லதென் இல்லவள்	53
இல்லாரை	752
இல்லாளை	905
இல்லாள்கண்	903
இல்லைதவறு	1321
இல்வாழ்வான்	41
இவறலும்	432
இழத்தொறூஉம்	940
இழிவுஅறிந்து உண்	946
இழுக்கல்	415

இழுக்காமை 536
இழைத்தது 779
இளித்தக்க 1288
இளிவரின் 970
இளைதாக 879
இளையார்இன 698
இறந்துஅமைந்த 900
இறந்தவெகுளியின் 531
இறந்தார் 310
இறப்பே புரிந்த 977
இறல் ஈனும் 180
இறுதி பயப்பினும் 690
இறைகடியன் 564
இறைகாக்கும் 547
இற்பிற-கண்அல்லது 951
இற்பிற-கண்ணேயும் 1044
இனத்து ஆற்றி 568
இனம்போன்று 822
இனிஅன்ன 1294
இனியஉளவாக 100
இனைத்துணைத் 87
இனையர் 790
இன்கண் உடைத்தவர் 1152
இன்சொலால் ஈத் 387
இன்சொலால் ஈரம் 91
இன்சொல் இனி 99
இன்பத்துள் இன் 854
இன்பத்துள்-விழை 629
இன்பம் இடையறா 369
இன்பம் ஒருவற்கு 1052
இன்பம் கடல் 1166
இன்பம் விழை-இடு 628
இன்பம் விழை-வினை 615
இன்மை இடும்பை 1063
இன்மை என 1042
இன்மை ஒருவற்கு 988
இன்மையின் இன்னாதது 1041
இன்மையின் இன்னாது 558
இன்மையுள் இன்மை 153
இன்றியமையாச் 961
இன்றும் வருவது 1048
இன்னா எனத்தான் 316
இன்னா செய்தாரை 314
இன்னா செய்தார்க் 987
இன்னாது இரக்கப் 224
இன்னாது இனன் 1158
இன்னாமை இன்பம் 630
ஈட்டம் இவறி 1003
ஈதல் இசைபட 231
ஈத்து உவக்கும் 228
ஈர்ங்கை விதிரார் 1077
ஈவார்கண் 1059
ஈன்றபொழுதின் 69
ஈன்றாள் பசி 656
ஈன்றாள் முகத்தேயும் 923
உடம்பாடு இலாதவர் 890
உடம்பொடு 1122
உடுக்கை 788
உடுப்பதூஉம் 1079
உடைசெல்வம் 939
உடைத்தம் 473
உடைமையுள் 89
உடையர் எனப்படுவது 591
உடையார்முன் 395
உட்கப்படாஅர் 921
உட்பகை 883
உணர்வதுஉடையார் 718
உணலினும் 1326
உண்டார்கண் 1090
உண்ணற்க கள்ளை 922
உண்ணாதுநோற் 160
உண்ணாமை உள்ளது 255
உண்ணாமை வேண்டும் 257
உதவி வரைத்தன்று 105
உப்புஅமைந்து 1302
உயர்வு அகலம் 743
உயிர் உடம்பின் 330
உயிர்ப்ப உளரல்லர் 880
உய்த்தல் 1287
உரம் ஒருவற்கு 600
உரன் என்னும் 24
உரன்நசைஇ 1263
உருவுகண்டு 667
உருள்ஆயம் 933

உரைப்பார் 232
உலகத்தார் 850
உலகத்தோடு ஒட்ட 140
உலகம் தழீஇய 425
உலைவிடத்து 762
உவக்காணெம் 1185
உவந்துறைவர் 1130
உவப்பத் தலைக்கூடி 394
உழந்துழந்து 1177
உழவினார் 1036
உழுதுண்டு 1033
உழுவார் 1032
உழைப்பிரிந்து 530
உளபோல் 574
உளர்எனினும் 730
உளர் என்னும் 406
உளவரை தூக்காத 480
உள்ளக்களித்தலும் 1281
உள்ளத்தார் 1249
உள்ளத்தால் உள்ள 282
உள்ளத்தால் பொய்யா 294
உள்ளம் இலா 598
உள்ளம் உடைமை 592
உள்ளம்போன்று 1170
உள்ளற்க 798
உள்ளியது எய்தல் 540
உள்ளியது எல்லாம் 309
உள்ளினும் 1201
உள்ளினேன்என் 1316
உள்ளுவதுஎல்லாம் 596
உள்ளுவன்உரை 1184
உள்ளுவன்-மறப்பின் 1125
உள் ஒற்றி 927
உறங்குவது 339
உறல்முறையான் 885
உறாஅ தவர்க்கண்ட 1292
உறாஅ தவர்போல் 1096
உறாஅ தோ 1143
உறாஅர்க்கு 1200
உறின்உயிர் 778
உறின்நட்டு 812
உறுதோறு உயிர் 1106
உறுபசியும் 734
உறுபொருளும் 756
உறுப்பு அமைந்து 761
உறுப்பு ஒத்தல் 993
உறுவது சீர் 813
உறைசிறியார் 680
உற்றநோய் நீக்கி 442
உற்றநோய் நோன்றல் 261
உற்றவன் 950
உற்றான் அளவும் 949
ஊக்கம் உடையான் 486
ஊடலில் தோற்றவர் 1327
ஊடலில் தோன்றும் 1322
ஊடலின் உண்டு 1307
ஊடல் உணங்க 1310
ஊடல் உணர்தல் 1109
ஊடற்கண் 1284
ஊடிப்பெருகுவங் 1328
ஊடி யவரை 1304
ஊடிஇருந்தே மாத் 1312
ஊடுக மன்னோ 1329
ஊடுதல் 1330
ஊண் உடை 1012
ஊதியம் என்பது 797
ஊரவர் கௌவை 1147
ஊருணி நீர்நிறைந் 215
ஊழிபெயரினும் 989
ஊழின் பெருவலி 380
ஊழையும் 620
ஊறு ஒரால் 662
ஊனைக்குறித்த 1013
எச்சமென்று 1004
எட்பகவு அன்ன 889
எண்சேர்ந்த 910
எண்ணித்துணிக 467
எண்ணிய எண்ணியாங்கு 666
எண்ணியார் 494
எண்என்ப 392
எண்பதத்தால் 991
எண்பதத்தான் 548
எண்பொருள் 424
எதிரதாக் காக்கும் 429

எந்நன்றி	110
எப்பொருளும் ஓரார்	695
எப்பொருள் எத்	355
எப்பொருள்யார்	423
எய்தற்கு அரியது	489
எரியால் சுடப்	896
எல்லாப் பொருளும்	746
எல்லார்க்கும் எல்லாம்	582
எல்லார்க்கும் நன்றாம்	125
எல்லா விளக்கும்	299
எல்லைக்கண்	806
எவ்வது உறைவது	426
எழுதுங்கால்	1285
எழுபிறப்பும்	62
எழுமை எழுபிறப்பும்	107
எளிதெனஇல்	145
எள்ளாத எண்ணிச்	470
எள்ளாமை	281
எள்ளின் இளிவாம்	1298
எற்றிற்கு உரியர்	1080
எற்றென்று	655
எனைத்தானும் எஞ்ஞான்ற	317
எனைத்தானும் நல்லவை	416
எனைத்திட்பம்	670
எனைத்துணையர்	144
எனைத்து நினைப்பினும்	1208
எனைத்தும் குறுகு	820
எனைத்து ஒன்று	1202
எனைப்பகை	207
எனைமாட்சித்	750
எனைவகையால்	514
என்பிலதனை	77
என்றும் ஒருவுதல்	652
என்ஐமுன்	771
ஏதம்பெரும்	1006
ஏதிலார் ஆரத்	837
ஏதிலார் குற்றம்	190
ஏதிலார் போலப்	1099
ஏந்திய கொள்கையார்	899
ஏமுற்றவரினும்	873
ஏரினும் நன்றால்	1038
ஏரின் உழாஅர்	14
ஏவவும் செய்கலான்	848
ஐந்தவித்தான்	25
ஐயத்தின் நீங்கித்	353
ஐயப்படாஅது	702
ஐயுணர்வு	354
ஒட்டார்பின்	967
ஒண்ணுதற்	1088
ஒண்பொருள்	760
ஒத்ததறிவான்	214
ஒப்புரவினால்வரும்	220
ஒருதலையான்	1196
ஒருநாள் எழுநாள்	1269
ஒருபொழுதும்	337
ஒருமைக்கண்	398
ஒருமைச்செயலா	835
ஒருமை மகளிரே	974
ஒருமையுள் ஆமை	126
ஒலித்தக்கால்	763
ஒல்லும் கருமம்	818
ஒல்லும் வகையான்	33
ஒல்லும் வாய்எல்லாம்	673
ஒல்வது அறிவது	472
ஒழுக்கத்தின் எய்துவர்	137
ஒழுக்கத்தின் ஒல்கார்	136
ஒழுக்கத்து நீத்தார்	21
ஒழுக்கமுடையவர்க்கு	139
ஒழுக்கமும்	952
ஒழுக்கம் உடைமை	133
ஒழுக்கம் விழுப்பம்	131
ஒழுக்காறாக்	161
ஒளியார்முன்	714
ஒளிஒருவற்கு	971
ஒறுத்தாரைஒன்	155
ஒறுத்தார்க்கு	156
ஒறுத்து ஆற்றும்	579
ஒற்றினான் ஒற்றிப்	583
ஒற்றும் உரைசான்ற	581
ஒற்று ஒற்றித்தந்த	588
ஒற்றுஒற்று உணராமை	589
ஒன்றா உலகத்து	233
ஒன்றாக நல்லது	323
ஒன்றாமை	886

ஒன்றானும் 128
ஒன்றெய்தி 932
ஒன்னார்த் 264
ஓஒஇனிதே 1176
ஓஒதல் வேண்டும் 653
ஓதிஉணர்ந்தும் 834
ஓம்பின் அமைந்தார் 1155
ஓர்த்துள்ளம் 357
ஓர்ந்து கண்ணோடாது 541
கடல்அன்ன காமம் 1137
கடல் ஓடா 496
கடன் அறிந்து 687
கடன்என்ப 981
கடாஅ உரு 585
கடாஅக் களிற் 1087
கடிதுஓச்சி 562
கடிந்த கடிந் 658
கடுஞ்சொல்லன் 566
கடுமொழியும் 567
கடைக்கொட்கச் 663
கணைகொடிது 279
கண்களவு 1092
கண்டதுமன்னும் 1146
கண்டார் 1084
கண்டு கேட்டு 1101
கண்ணிற்கு அணிகலம் 575
கண்ணின் துனி 1290
கண்ணின் பசப்போ 1240
கண் உடையர் 393
கண்ணும்கொளச் 1244
கண்ணுள்ளார் 1127
கண்ணுள்ளில் 1126
கண்ணொடுகண் 1100
கண்ணோட்டம் இல் 577
கண்ணோட்டத் 572
கண்ணோட்டம் என்னும் 571
கண்தாம் கலுழ்வது 1171
கண்நிறைந்த 1272
கண்நின்று கண் 184
கதம்காத்துக் 130
கதுமெனத்தாம் 1173
கயலுண்கண் 1212
கரத்தலும் 1162
கரப்பவர்க்கு 1070
கரப்புஇடும்பை 1056
கரப்பிலா நெஞ்சின் 1053
கரப்பிலார்வை 1055
கரப்பினும் 1271
கரவாதுஉவந் 1061
கருமம் சிதையாமல் 578
கருமணியிற் 1123
கருமத்தான் 1011
கருமம்செய 1021
கருவியும் காலமும் 631
கலங்காதுகண்ட 668
கலந்து உணர்த்தும் 1246
கல்லா ஒருவன் 405
கல்லாதமேற் 845
கல்லாதவரின் 729
கல்லாதவரும் 403
கல்லாதான் ஒட்பம் 404
கல்லாதான் சொற்கா 402
கல்லார்ப் பிணிக்கும் 570
கல்லான் வெகுளும் 870
கவறும் கழகமும் 935
கவ்வையால் 1144
கழாஅக்கால் 840
களவினால் ஆகிய 283
களவின்கண் 284
களவென்னும் 287
களித்தறியேன் 928
களித்தானைக் 929
களித்தொறும் 1145
கள்வார்க்குத் 290
கள்உண்ணாப் 930
கறுத்து இன்னா 312
கற்க கசடறக் 391
கற்றதனாலாய 2
கற்றறிந்தார் 717
கற்றாருள் கற்றார் 722
கற்றார்முன் 724
கற்றிலன் ஆயினும் 414
கற்று ஈண்டு 356
கற்றுக்கண் அஞ்சா 686

கனவினான்	1214
கனவினும்	819
காக்க பொருளா	122
காக்கை கரவா	527
காட்சிக்கு எளியன்	386
காணாச் சினத்தான்	866
காணாதான்	849
காணின் குவளை	1114
காணுங்கால்	1286
காண்கமன்	1265
காதலகாதல்	440
காதலர் இல்வழி	1224
காதலர் தூதொடு	1211
காதல் அவரிலர்ஆக	1242
காதன்மை	507
காமக்கடல்	1164
காமக்கடும்-உய்	1134
காமக்கடும்-நீந்	1167
காமக்கணிச்சி	1251
காமமும் நாணும்	1163
காமம் என	1252
காமம் உழந்து	1131
காமம் விடு	1247
காமம் வெகுளி	360
காலத்தினால் செய்த	102
காலம் கருதி	485
காலாழ்களரில்	500
காலை அரும்பிப்	1227
காலைக்குச்	1225
கானமுயல்எய்த	772
குடம்பை	338
குடிசெய்வல்	1023
குடிசெய்வார்க்கு	1028
குடிதழீஇக்	544
குடிபுறங்காத்	549
குடிப்பிறந்தார்	957
குடிப்பிறந்துகுற்	502
குடிப்பிறந்துதன்	794
குடிமடிந்து	604
குடியாண்மை	609
குடியென்னும்	601
குணநலம்	982
குணமென்னும்	29
குணம் நாடிக்	504
குணன் இலனாய்க்	868
குணனும் குடிமை	793
குலம் சுடும்	1019
குழல்இனிது	66
குறிக்கொண்டு	1095
குறித்தது	704
குறிப்பறிந்து	696
குறிப்பிற் குறிப்புணரா	705
குறிப்பிற் குறிப்புணர்	703
குற்றமே காக்க	434
குற்றம் இலனாய்க்	1025
குன்றன்னார்	898
குன்றின் அனையாரும்	965
குன்று ஏறி	758
கூடிய காமம்	1264
கூத்தாட்டு அவைக்	332
கூழும் குடியும்	554
கூறாமை நோக்கிக்	701
கூற்றத்தைக்	894
கூற்றமோ கண்ணோ	1085
கூற்றம் குதித்	269
கூற்றுஉடன்று	765
கெடல்வேண்டின்	893
கெடாஅ வழி	809
கெடுங்காலைக்	799
கெடுப்பதூஉம்	15
கெடுவல்யான்	116
கெடுவாக	117
கெட்டார்க்கு	1293
கேடுஅறியாக்	736
கேடில்விழுச்	400
கேடும்பெருக்கமும்	115
கேட்டார்ப் பிணிக்	643
கேட்டினும்	796
கேட்பினும்	418
கேள்இழுக்கம்	808
கைம்மாறு வேண்டா	211
கையறியாமை	925
கைவேல் களிற்றோடு	774
கொக்குஒக்க	490

கொடியார் கொடுமையின்	1169
கொடியார் - உரை	1235
கொடுத்தலும்	525
கொடுத்தும்	867
கொடுப்பதுஅழுக்	166
கொடுப்பதூஉம்	1005
கொடும்புருவம்	1086
கொடைஅளி	390
கொலைமேற்கொண்	551
கொலையின்	550
கொலைவினையர்	329
கொல்லாநலத்	984
கொல்லாமை	326
கொல்லான்	260
கொளப்பட்டேம்	699
கொளற்கு அரிதாய்க்	745
கொன்றன்ன	109
கோட்டுப்பூச்	1313
கோளில்பொறியின்	9
சமன்செய்து	118
சலத்தால்	660
சலம்பற்றிச்	956
சாதலின்இன்னாத	230
சாயலும் நாணும்	1183
சார்புணர்ந்து	359
சால்பிற்குக்	986
சான்றவர்	990
சிதைவிடத்து	597
சிறப்புஅறிய	590
சிறப்புஈனும் செல்வமும்	31
சிறப்புஈனும் செல்வம்பெ	311
சிறப்பொடு	18
சிறியார்உணர்ச்	976
சிறுகாப்பின்	744
சிறுபடையான்	498
சிறுமைநமக்	1231
சிறுமைபல	934
சிறுமையும்	769
சிறுமையுள்	98
சிறைகாக்கும்	57
சிறைநலனும்	499
சிற்றினம்	451
சிற்றின்பம்	173
சினத்தைப்	307
சினம் என்னும்	306
சீரிடம் காணின்	821
சீரினும் சீர்அல்ல	962
சீருடைச் செல்வர்	1010
சீர்மை சிறப்	195
சுடச்சுடரும்	267
சுவைஒளி	27
சுழலும் இசைவேண்டி	777
சுழன்றும் ஏர்ப்	1031
சுற்றத்தால்	524
சூழாமல்	1024
சூழ்ச்சி முடிவு	671
சூழ்வார்கண்	445
செப்பம்உடை	112
செப்பின்	887
செயற்கரிய செய்	26
செயற்கரிய யாவுள	781
செயற்கை அறிந்த	637
செயற்பால செய்யா	437
செயற்பாலதோரும்	40
செயிரின் தலைப்	258
செய்கபொருளைச்	759
செய்தக்க	466
செய்துஏமஞ்	815
செய்யாமல் செய்த	101
செய்யாமல் செற	313
செய்வானை	516
செய்வினை	677
செருக்கும்	431
செருவந்த	569
செல்லாஇடத்துச்	302
செல்லாமை	1151
செல்லான்	1039
செல்விடத்துக்	301
செல்வத்துள்	411
செல்விருந்து	86
செவிகைப்பச்	389
செவிக்குணவு	412
செவிச்சொல்லும்	694
செவியின்சுவை	420

செவியுணவிற்	413
செறாஅச்சிறு	1097
செறிதொடி	1275
செறிவறிந்து	123
செறுநரைக்	488
செறுவார்க்குச்	869
செற்றவர்பின்	1256
செற்றார் எனக்கை	1245
செற்றார்பின்	1255
சென்றஇடத்	422
சொலல்வல்லன்	647
சொல்லப்பயன்	1078
சொல்லுகசொல்	200
சொல்லுக சொல்லை	645
சொல்லுதல்	664
சொல்வணக்கம்	827
சொற்கோட்டம்	119
ஞாலங்கருதினும்	484
தகுதிஎன	111
தக்காங்கு	561
தக்கார்இனத்	446
தக்கார்தகவிலர்	114
தஞ்சம்தமர்	1300
தணந்தமை	1233
தண்ணந்துறைவன்	1277
தந்தைமகற்கு	67
தந்நலம்	916
தந்நெஞ்சத்து	1205
தமர்ஆகித்தற்	529
தம்பொருள் என்	63
தம்மில் இருந்து	1107
தம்மிற் பெரியார்	444
தம்மின் தம்மக்கள்	68
தலைப்பட்டார்	348
தலையின் இழிந்த	964
தவஞ்செய்வார்	266
தவம் மறைந்து	274
தவமும் தவம்	262
தவறுஇலர்	1325
தள்ளா விளையுளும்	731
தற்காத்துத்	56
தனக்குவமை	7
தனியே இருந்து	1296
தன்குற்றம் நீக்கிப்	436
தன்துணை இன்றால்	875
தன்உயிர்க்கு இன்	318
தன் உயிர்தான்	268
தன் உயிர்நீப்பினும்	327
தன் ஊன்பெருக்	251
தன்நெஞ்சு அறிவது	293
தன்னை உணர்த்தி	1319
தன்னைத்தான் காக்கின்	305
தன்னைத்தான் காதல	209
தாம் இன்புறுவது	399
தாம் வீழ்வார் தம்வீழ	1191
தாம் வீழ்வார்மென்	1103
தாம் வேண்டின்	1150
தார்தாங்கிச்	767
தாளாண்மைஇல்	614
தாளாண்மை என்னும்	613
தாளாற்றித்தந்த	212
தானம் தவம்	19
திறன்அல்ல	157
திறன்அறிந்து	644
தினற்பொருட்டால்	256
தினைத்துணை நன்றி	104
தினைத்துணையாம்	433
தினைத்துணையும்	1282
தீப்பாலதான்	206
தீயவை செய்தார்	208
தீயவை தீய	202
தீயனவன்றித்	947
தீயினால் சுட்ட	129
தீவினையார்	201
துஞ்சினார்செத்	926
துஞ்சுங்கால்	1218
துணைநலம்	651
துப்பார்க்குத்	12
துப்பின் எவனாவர்	1165
துப்புரவு இல்லார்	1050
தும்முச் செறுப்ப	1318
துளியின்மை	557
துறந்தாரின்	159
துறந்தார்க்குத்	263

துறந்தார்க்கும் துவ்	42
துறந்தார்படி	586
துறந்தார் பெருமை	22
துறப்பார்மன்	378
துறைவன்	1157
துனியும் புலவியும்	1306
துன்பத்திற்கு	1299
துன்பம் உறவரினும்	669
துன்புறூஉம்	94
துன்னாத் துறந்	1250
துன்னியார்	188
தூஉய்மை என்	364
தூங்காமை	383
தூங்குக தூங்கிச்	672
தூய்மை துணைமை	688
தெண்ணீர் அடு	1065
தெய்வத்தான்	619
தெய்வந்தொழாஅள்	55
தெரிதலும் தேர்ந்	634
தெரிந்த இனத்	462
தெரிந்து உணரா	1172
தெருளாதான்	249
தெளிவு இலதனைத்	464
தென்புலத்தார்	43
தேரான் தெளிவும்	510
தேரான் பிறனைத்	508
தேவர் அனையர்	1073
தேறற்க	509
தேறினும் தேறா	876
தொகச் சொல்லித்	685
தொடங்கற்க	491
தொடலைக் குறுந்	1135
தொடிநோக்கி	1279
தொடிப்புழுதி	1037
தொடியொடு	1236
தொடின்சுடின்	1159
தொட்டனைத்துஊறும்	396
தொல்வரவும்	1043
தொழுத கையுள்ளும்	828
தோன்றின்	236
நகல்வல்லர்	999
நகுதற்பொருட்டு	784
நகை ஈகை	953
நகையும்உவகை	304
நகையுள்ளும்	995
நகைவகையராகிய	817
நசைஇயார்	1199
நச்சப்படாதவன்	1008
நடுவுஇன்றி	171
நட்டார்குறை	908
நட்டார்க்கு	679
நட்டார்போல்	826
நட்பிற்கு வீற்	789
நட்பிற்கு உறுப்புக்	802
நண்பு ஆற்றாராகி	998
நத்தம்போல்	235
நயந்தவர்க்கு	1181
நயந்தவர் நல்காமை	1232
நயன் இலசொல்லினுஞ்	197
நயனிலன் என்பது	193
நயன்உடையான்	219
நயனொடு நன்றி	994
நயன் ஈன்று	97
நயன்சாரா	194
நலக்குரியார்	149
நலத்தகை	1305
நலத்தின்கண்	958
நலம்வேண்டின்	960
நல்குரவு என்னும்	1045
நல்லவை எல்	375
நல்லாண்மை	1026
நல்லார்கண்	408
நல்ஆறுஎனப்	324
நல்ஆறு எனினும்	222
நல்ஆற்றான்	242
நல்லினத்தின் ஊங்குந்	460
நவில்தொறும்	783
நற்பொருள்	1046
நனவினான் கண்டதூஉம்	1215
நனவினால் நம்	1220
நனவினால் நல்காக்	1217
நனவினால் நல்காத	1213
நனவினால் நல்காரை	1219
நனவு என	1216

நன்மையும் 511
நன்று அறிவாரிற் 1072
நன்றுஆகும் ஆக்கம் 328
நன்றாங்கால் 379
நன்றுஆற்றல் உள்ளுந் 469
நன்றிக்கு வித்தாகும் 138
நன்றி மறப்பது 108
நன்று என்றவற் 715
நன்றேதரினும் 113
நன்னீரை வாழி 1111
நாச்செற்று 335
நாடாது நட்டலிற் 791
நாடு என்ப 739
நாள்தொறும்நாடி 553
நாடோறும் நாடுக 520
நாணாமை 833
நாணால் உயிரைத் 1017
நாணும் மறந் 1297
நாண்என ஒன்றோ 1257
நாணொடு நல் 1133
நாண்அகத்தில்லார் 1020
நாண்என்னும் 924
நாண்வேலி 1016
நாநலம் என்னும் 641
நாம்காதல் 1195
நாள்என ஒன்று 334
நிணம் தீயில் 1260
நிலத்து இயல்பால் 452
நிலத்தில் 959
நிலவரை நீள் 234
நிலைஅஞ்சி 325
நிலைமக்கள் 770
நிலையின் திரியாது 124
நில்லாதவற்றை 331
நிழல்நீரும் 881
நிறைநீர 782
நிறைநெஞ்சம் 917
நிறைமொழி 28
நிறையரியர் 1138
நிறையுடைமை 154
நிறையுடையேன் 1254
நினைத்திருந்து 1320
நினைத்து ஒன்று 1241
நினைப்பவர் 1203
நீங்கான் வெகுளி 864
நீங்கின் தெறூஉம் 1104
நீரும் நிழலது 1309
நீர்இன்று அமையாது 20
நுணங்கிய 419
நுண்ணியநூல் 373
நுண்ணியம் 710
நுண்மாண் 407
நுனிக்கொம்பர் 476
நூலாருள்நூல் 683
நெஞ்சத்தார் 1128
நெஞ்சின் துறவார் 276
நெடுங்கடலும் 17
நெடுநீர் மறவி 605
நெடும்புனலுள் 495
நெய்யால் 1148
நெருநல் உளன் 336
நெருநற்றுச் 1278
நெருப்பினுள் 1049
நோக்கினாள் நோக்கி 1093
நோக்கினாள் நோக்கெதிர் 1082
நோதல் எவன் 1308
நோய்எல்லாம் 320
நோய்நாடி 948
நோவற்க 877
நோனா உடம்பும் 1132
பகச்சொல்லிக் 187
பகல் கருதிப் 852
பகல்வெல்லும் 481
பகுத்துஉண்டு 322
பகைஎன்னும் 871
பகைநட்பாக் 874
பகை நட்பாம் 830
பகை பாவம் 146
பகைமையும் 709
பகையகத்துச் 723
பகையகத்துப் 727
பசக்கமன் 1189
பசந்தாள் 1188
பசப்பெனப் 1190

படல்ஆற்றா	1175
படிஉடையார்	606
படுபயன்	172
படைகுடி	381
படைகொண்டார்	253
பணியுமாம்	978
பணிவுடையன்	95
பணைநீங்கிப்	1234
பண்என்னாம்	573
பண்டுஅறியேன்	1083
பண்பிலான்	1000
பண்புடையார்ப்	996
பதிமருண்டு	1229
பயனில பல்லார்	192
பயன்இல் சொல்	196
பயன்தூக்கார்	103
பயன்தூக்கிப்	912
பயன்மரம்	216
பரிந்தவர் நல்கா	1248
பரிந்து ஓம்பிக் காக்க	132
பரிந்தோம்பிப்	88
பரியதுகூர்ங்	599
பரியினும்	376
பருகுவார்	811
பருவத்தோடு	482
பருவரலும்	1197
பலகுடை நீழலும்	1034
பலசொல்லக்	649
பலநல்ல கற்றக்	823
பல்குழுவும்	735
பல்மாயக் கள்வன்	1258
பல்லவை கற்றும்	728
பல்லார் பகை	450
பல்லார் முனியப்	191
பழகிய செல்வ	937
பழகிய நட்பெவன்	803
பழிமலைத்து	657
பழியஞ்சிப்	44
பழுதுஎண்ணும்	639
பழைமை எனப்	801
பழையம்எனக்	700
பற்றற்ற கண்ணும்	521
பற்றற்ற கண்ணே	349
பற்றுஅற்றேம்	275
பற்றிவிடாஅ	347
பற்றுக பற்றற்றான்	350
பற்றுள்ளம்	438
பனி அரும்பிப்	1223
பாடுபெறுதியோ	1237
பாத்தூண்	227
பாலொடு	1121
பிணிக்கு மருந்து	1102
பிணியின்மை	738
பிணைஏர்	1089
பிரித்தலும்	633
பிரிவு உரைக்கும்	1156
பிழைத்துணர்ந்தும்	417
பிறப்பு என்னும்	358
பிறப்பு ஒக்கும்	972
பிறர்க்கு இன்னா	319
பிறர்நாணத்	1018
பிறர்பழியும்	1015
பிறவிப் பெருங்கடல்	10
பிறன்பழி	186
பிறன்பொருளாள்	141
பிறன்மனை	148
பீலிபெய்	475
புகழ்இன்றால்	966
புகழ்ந்தவை	538
புகழ்பட வாழா	237
புகழ்புரிந்தஇல்	59
புக்கில் அமர்ந்து	340
புணர்ச்சி பழகுதல்	785
புத்தேளுலகத்	213
புரந்தார்கண்	780
புலத்தலின்	1323
புலப்பல்எனச்	1259
புலப்பேன்கொல்	1267
புல்லவையுள்	719
புல்லாது இராஅப்	1301
புல்லிக்கிடந்தேன்	1187
புல்லிவிடாஅப்	1324
புறங்குன்றி	277
புறங்கூறிப்	183

புறத்துறுப்பு	79
புறம்தூய்மை	298
புன்கண்ணை	1222
பெண்இயலார்	1311
பெண்ணில்பெருந்	54
பெண்ணினால்	1280
பெண்ஏவல்	907
பெயக்கண்டும்	580
பெயல்ஆற்றா	1174
பெரிதுஆற்றிப்	1276
பெரிதுஇனிது	839
பெரியாரைப்	892
பெருக்கத்து	963
பெருங்கொடையான்	526
பெருமைஉடை	975
பெருமைக்கும்	505
பெருமைபெரு	979
பெரும்பொருளால்	732
பெறாஅமை	1295
பெறின் என்னாம்	1270
பெறுமவற்றுள்	61
பெற்றாற்பெறின்	58
பேணாதுபெட்டார்	1178
பேணாதுபெட்பவே	1283
பேணாதுபெண்	902
பேதைபெருங்	816
பேதைப்படுக்கும்	372
பேதைமைஎன்ப	831
பேதைமை ஒன்றோ	805
பேதைமையுள்	832
பேராண்மை	773
பொச்சாப்பார்க்கு	533
பொச்சாப்புக்	532
பொதுநலத்தார்	915
பொதுநோக்கான்	528
பொய்படும்	836
பொய்ம்மையும்	292
பொய்யாமைஅன்ன	296
பொய்யாமைபொய்	297
பொருட்பெண்டிர்	913
பொருட்பொருளார்	914
பொருள்அல்லவரைப்	751
பொருள்அல்லவற்றைப்	351
பொருள்அற்றார்	248
பொருள்ஆட்சி	252
பொருளான்ஆம்	1002
பொருள்என்னும்	753
பொருள்கருவி	675
பொருள்கெடுத்துப்	938
பொருள்தீர்த்த	199
பொருள்நீங்கிப்	246
பொருள்மாலை	1230
பொள்ளென	487
பொறியின்மை	618
பொறிவாயில்	6
பொறுத்தல் இறப்பு	152
பொறையொருங்கு	733
போற்றின்	693
மகன் தந்தைக்கு	70
மக்களே போல்வர்	1071
மக்கள் மெய்	65
மங்கலம் என்ப	60
மடலூர்தல்	1136
மடிமடிக்	603
மடிமை குடிமைக்	608
மடியிலா	610
மடியுளாள்	617
மடியைமடியா	602
மடுத்தவாய்	624
மணிநீரும்	742
மணியில் திகழ்தரு	1273
மண்ணொடு இயைந்த	576
மதிநுட்பம்	636
மதியும் மடந்தை	1116
மயிர்நீப்பின்	969
மருந்துஆகித்	217
மருந்துஎன	942
மருந்தோமற்று	968
மருவுக மாசற்றார்	800
மலரன்ன கண்	1142
மலரன்ன முகம்	1119
மலரினும்	1289
மலர்காணின்	1112
மலர்மிசை	3

மழித்தலும் நீட்	280
மறத்தல் வெகுளி	303
மறந்தும் பிறன்	204
மறப்பினும்	134
மறப்பின்	1207
மறம்மானம்	766
மறவற்க மாசற்	106
மறைந்தவை	587
மறைபெறல்	1180
மறைப்பேன்மன்கா	1253
மறைப்பேன்மன்யா	1161
மற்றுயான்	1206
மற்றும்தொடர்	345
மனத்ததுமாசு	278
மனத்தான்ஆம்	453
மனத்தின் அமையா	825
மனத்துக்கண்	34
மனத்துஉளது	454
மனத்தொடு	295
மனநலத்தின்	459
மனநலம் நன்கு	458
மனநலம் மன்	457
மனம்தூயார்க்	456
மனம் தூய்மை	455
மனம் மாணா	884
மனைத்தக்க	51
மனைமாட்சி	52
மனையாளை	904
மனைவிழைவார்	901
மன்னர்க்கு	556
மன்னர்விழைப	692
மன்னுயிர்எல்லாம்	1168
மன்உயிர் ஓம்பி	244
மாதர்முகம் போல்	1118
மாலைநோய்	1226
மாலையோ	1221
மாறுபாடுஇல்	945
மிகச்செய்து	829
மிகல்மேவல்	857
மிகினும்குறை	941
மிகுதியான்மிக்	158
முகத்தான்அமர்ந்	93
முகத்தின் இனிய	824
முகத்தின் முதுக்கு	707
முகநக நட்பது	786
முகம்நோக்கி	708
முகைமொக்குள்	1274
முடிவும்இடை	676
முதல்இலார்க்கு	449
முயக்கிடைத்	1239
முயங்கிய	1238
முயற்சி திருவினை	616
முரண்சேர்ந்த	492
முறிமேனி	1113
முறைகோடி	559
முறைசெய்து	388
முறைப்படச்	640
முற்றுஆற்றி	748
முற்றியும்	747
முனைமுகத்து	749
முன்னுறக்	535
மேல்இருந்தும்	973
மேற்பிறந்தார்	409
மையல் ஒருவன்	838
மோப்பக்குழையும்	90
யாகாவாராயினும்	127
யாம்கண்ணிற்	1140
யாண்டுச்சென்று	895
யாதனின் யாதனின்	341
யாதானும் நாடுஆமால்	397
யாமும் உளேங்கொல்	1204
யாம்மெய்யாக்	300
யாரினும் காதலம்	1314
யான்எனது	346
யான்நோக்குங்	1094
வகுத்தான்	377
வகைமாண்ட	897
வகைஅறச்	495
வகையறிந்துதன்	878
வகையறிந்து வல்லவை	721
வசைஒழிய	240
வசையிலா வண்பயன்	239
வசையென்ப	238
வஞ்சமனத்தான்	271

வருகமன் கொண்கன்	1266
வருமுன்னர்க்	435
வருவிருந்து	83
வரைவுஇலா	919
வலியார்க்கு	861
வலியார்முன்	250
வலியில் நிலைமையான்	273
வழங்குவ	955
வழிநோக்கான்	865
வழுத்தினாள்	1317
வறியார்க்கு ஒன்று	221
வன்கண்குடி	632
வாணிகம் செய்	120
வாய்மை	291
வாராக்கால்	1179
வாரிபெருக்கி	512
வாழ்தல்உயிர்க்	1124
வாழ்வார்க்கு	1192
வாள்அற்றுப்	1261
வாளொடு என்	726
வாள்போல்	882
வான்நின்று	11
வான்உயர் தோற்றம்	272
வான்நோக்கி	542
விசும்பின்	16
விடாஅது	1210
விடுமாற்றம்	689
விண்இன்று	13
வித்துமிடல்	85
வியவற்க	439
விருந்துபுறத்	82
விருப்புஅறாச்	522
விரைந்து	648
விலங்கொடு	410
வில்லேர் உழவர்	872
விழித்தகண்	775
விழுப்புண்	776
விழுப்பேற்றின்	162
விழைதகையான்	804
விழையார்	810
விளக்குஅற்றம்	1186
விளிந்தாரின் வேறு	143
விளியும் என்	1209
வினைகலந்து	1268
வினைக்கண் வினைகெட	612
வினைக்கண் வினையுடை	519
வினைக்கு உரிமை	518
வினைசெய்வார்	584
வினைத்திட்பம்	661
வினைபகை	674
வினையான் வினை	678
வினைவலியும்	471
வீழப்படுவார்	1194
வீழுநர் வீழப்	1193
வீழும் இருவர்க்கு	1108
வீழ்நாள்படா	38
வீழ்வாரின்	1198
வீறுஎய்தி	665
வெண்மை	844
வெருவந்த	563
வெள்ளத்தனைய இடும்	622
வெள்ளத்தனையமலர்	595
வேட்டபொழுதின்	1105
வேட்பத்தாம்	646
வேட்பன	697
வேண்டற்க வெஃகி	177
வேண்டற்க வென்றி	931
வேண்டாமை	363
வேண்டியவேண்டி	265
வேண்டின் உண்டாகத்	342
வேண்டுங்கால்	362
வேண்டுதல்	4
வேல்அன்று	546
வேலொடு	552
வைத்தான்வாய்	1001
வையத்துள்	50

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 11-7-1920இல் நாகப்பட்டினம் மாவட்டம் திருக்கண்ணபுரத்தில் பிறந்தார். தந்தையார் திரு. இராசகோபால்; தாயார் திருமதி மீனாட்சி சுந்தரத்தம்மாள். பள்ளிப் படிப்பைப் பட்டுக் கோட்டையிலும், மேற்படிப்பை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் மேற்கொண்டு தமிழில் எம். ஏ. பட்டம் பெற்றவர். 1972ஆம் ஆண்டில் மதுரை - காமராசர் பல்கலைக் கழகத்தால் மதிப்புறு டாக்டர் பட்டம் வழங்கப் பெற்றவர்.

பள்ளிப் பருவத்திலேயே தன்மதிப்பியக்கத் தொடர்பும், பகுத்தறிவு நெறிப் பற்றும் கொண்டு விளங்கிய நாவலர், அவற்றைத் தம் வாழ்க்கையின் இறுதிவரை வழுவாது கடைப்பிடித்தவர், 1944ஆம் ஆண்டு முதலாகப் பகுத்தறிவுத்தந்தை பெரியாரைத் தலைவராகவும், அறிஞர் அண்ணாவை வழிகாட்டியாகவும் கொண்டு திராவிட இயக்கத்தின் முழுநேரச் செயல் வீரராக அயராது தொண்டாற்றியவர்.

நாவலர் 1962இல் தமிழகச் சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றார். 1967ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா தலைமையில் அமைந்த அமைச்சரவையில் பங்கேற்றார். அடுத்து, கலைஞர் கருணாநிதி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித்தலைவி ஜெயலலிதா ஆகியோர் அமைச்சரவைகளில் பல்வேறு துறைகளுக்குப் பொறுப்பேற்றுப் பணியாற்றியவராவார்.

பொதுவாகத் தமிழ் இலக்கியங்களை - குறிப்பாகப் பாவேந்தர் பாடல்களை அரசியல் மேடையில் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தியதில் நாவலருக்குப் பெரும் பங்கு உண்டு.

நாவலர் சிறந்த பேச்சாளர்; சிந்தனையாளர்; நாடறிந்த எழுத்தாளர்; அரசியல் வாதி; சீர்திருத்தச் செம்மல்; ஒழுக்கம் போற்றியவர்; புகழ் படைத்த நிருவாகி. அறிஞர் அண்ணா அவர்களால் நாவலர் என்றும், நடமாடும் பல்கலைக் கழகம் என்றும் அன்புடன் அழைக்கப்பெற்றவர். இருபதுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சி நூல்களைத் தமிழில் எழுதியவர்.

நாவலர் இயற்றிய திருக்குறள் தெளிவுரை எனும் இந்நூல் தமிழ்கூறு நல்லுலகில் அவர்தம் புகழினை என்றும் நிலை நிறுத்துவதாகும்.